61697

வெளியீடு—23—7—1975]
Issued—23—7—1975]

தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES

# பணித்துறை வெளியீடு

## OFFICIAL REPORT

திங்கட்கிழமை 1975 மார்ச் 17

Monday 17th March 1975

தொகுதி LXVI—எண் 1

Volume LXVI—No. 1

©
தமிழ் நாடு அரசு
1975

GOVERNMENT OF TAMIL NADU
1975

சட்டமன்றப் பேரவைத் துறை
சென்னை-600009.

*Legislative Assembly Department*
*Fort St. George, Madras-600009.*

விலை 50 காசுகள்]
PRICE 50 Paise]

V211, 31 N75
31 N75. 66;2
61697

# Tamil Nadu Legislative Assembly Debates

Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.

17th to 21st March 1975.

VOLUME LXVI (Nos. 1 to 5)

## TABLE OF CONTENTS.


| | PAGES |
|---|---|
| *Monday, 17th March 1975.* | |
| Personnel of the Government of Tamil Nadu ... | i—vi |
| Principal Officers of the Tamil Nadu Legislative Assembly ... ... ... ... | vii |
| List of Members of the Tamil Nadu Legislative Assembly with their Constituencies ... ... | ix—xvi |
| 1. Questions and Answers ... ... ... | 1-20 |
| 2. Points of Order— | |
| (a) Government's advertisement of Chief Minister's reply to an adjournment motion | 20-26 |
| (b) Consideration of Hindu Religious and Charitable Endowments Demand without placing the concerned Audit Report ... ... ... | 42-46 |
| 3. Point of Information— Chief Minister's statement outside the House when the Assembly was in Session regarding Central aid for drought ... ... ... | 26-30 |


A 4—1

*Monday, 17th March* 1975—*cont.*


| | PAGES |
|---|---|
| 4. Adjournment Motion— Deaths due to collapse of Korakkavadi Angalamman Koil Mandapam ... ... | 20–33 |
| 5. Calling Attention— Handlooms stock accumulation and hardships to weavers ... ... ... ... | 33–40 |
| 6. Government Bill— The Tamil Nadu Gaming (Amendment) Bill, 1975 ... ... ... ... | 40 |
| 7. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (*a*) Demand No. 10—Milk Supply Schemes; (*b*) Demand No. 12—Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... | 46–47 |
| (*c*) Demand No. 27—Khadi ... ... | 47–102 |
| 8. Papers laid on the Table ... ... ... | 103 |


*Tuesday, 18th March* 1975.


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 113–138 |
| 2. Speaker's withholding consent to a Privilege Matter in his chamber and communication of the decision to the Member by a letter ... | 138–160 |
| 3. Point of Order— Information Department's advertisement of Chief Minister's reply to an adjournment motion in the newspapers ... ... ... | 161–163 |
| 4. Government Motions— | |
| (*a*) Election to the Committee of Privileges | 163 |
| (*b*) Election to the House Committee ... | 164 |




*Tuesday, 18th March* 1975—*cont.*


| | PAGES |
|---|---|
| 5. Announcements— | |
| (*a*) Election to the Committee of Privileges | 164 |
| (*b*) Election to the House Committee ... | 164–165 |
| (*c*) Motion for Removal of Speaker from office ... | 220–221 |
| 6. Government Bill— The Tamil Nadu Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1975 ... ... ... ... ... | 165 |
| 7. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (*a*) Demand No. 1—Land Revenue Department; (*b*) Demand No. 5—Stamps—Administration; (*c*) Demand No. 47—Compensation of Zamindar; (*d*) Demand No. 11—District Administration | 165–220 |
| 8. Papers laid on the Table ... ... ... | 221 |


*Wednesday, 19th March* 1975


| | |
|---|---|
| 1. Questions and Answers ... ... ... | 237–254 |
| 2. Point of Order— Full utilisation of Question Hour ... ... | 254–255 |
| 3. Adjournment Motion— Chief Minister's statement re. Central aid for drought and consequent hardships to people ... | 255–267 |
| 4. Voting on Demands for Grants for the year 1975-76—*cont.* | |
| (*a*) Demand No. 1—Land Revenue Department; (*b*) Demand No. 5—Stamps—Administration; (*c*) Demand No. 47—Compensation to Zamindars; (*d*) Demand No. 11—District Administration | 267–337 |
| 5. Papers laid on the Table ... ... ... | 337–338 |

*Thursday, 20th March 1975.*


PAGES

1. Questions and Answers ... ... ... 343–369
2. Points of Order—
   (a) Propriety of Speaker's conducting the deliberations of the House while a resolution for his removal from office had been given notice of ... ... ... ... ... 369–373
   (b) Publication of speeches made without Speaker's consent, contrary to the Speaker's direction ... ... ... 373–374
   (c) Correction to answers by Ministers ... 374–375
   (d) Discrepancies in the statistics found in the Budget Estimates and the necessity to place weekly accounts on drought relief expenditures ... ... ... ...377–378
3. Calling Attention—
   Strike in Pugalur Sugar Mills and consequent loss to agriculturists ... ... ... 375–376
4. Voting on Demands for Advance Grants for the year 1975–76 ... ... ... 379–386
5. Announcement—
   The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 ... ... ... 387
6. Government Bill—
   The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 ... ... ... 387
7. Voting on Demands for Grants for the year 1975–76—*cont.*
   Demand No. 17—Education ... ... ... 387–453
8. Papers laid on the Table ... ... ... 453




*Friday, 21st March 1975.*


PAGES

1. Questions and Answers ... ... ... 529–554
2. Felicitations to Indian Hockey Team ... 554–555
3. Point of Order—
   C.I.D.s in Lobbies and consequent difficulties to Press Reporters ... ... ... 555
4. Provision of drinking water facilities in Opposition Pary Members' rooms ... ... ... 555–556
5. Adjournment Motion—
   House Surgeons' strike ... ... 556–560
6. Calling Attention—
   Kerala's ban on coir fibre export and consequent hardships to labourers at Salem 560–562
7. Government Motions—
   (a) Election to the Committee on Estimates 563
   (b) Election to the Committee on Public Accounts ... ... ... ... ... 563
   (c) Election to the Committee on Public Undertakings ... ... ... ... 564
8. Announcements—
   (a) Election to the Committee on Estimates 563
   (b) Election to the Committee on Public Accounts ... ... ... ... 564
   (c) Election to the Committee on Public Undertakings ... ... ... 564–565

Friday, 21st March 1975—*cont.*


| | PAGES |
|---|---|
| 9. Government Bill— | |
| The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 ... ... | 565 |
| 10. Voting on Demands for Grants for the year 1975-76—cont. | |
| Demand No. 17—Education ... ... | 566-646 |
| 11. Papers laid on the Table ... ... ... | 647 |


## தமிழ் நாடு அரசின் ஆளுநரும், அமைச்சரவையும்.

---

### தமிழ் நாடு ஆளுநர்.

**மேதகு திரு. கோதர்தாஸ் காளிதாஸ் ஷா.**

---

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. **மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி** (முதலமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுத் துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், மதுவிலக்கு, ஆயத்துறை.

2. **மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்** (கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்டமன்றம், சுற்றுலா, சுற்றுலா அபிவிருத்திக் கழகம்.

3. **மாண்புமிகு திரு. க. அன்பழகன்** (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுச் சுகாதாரம், மருத்துவம், நகர அமைப்பு.

4. **மாண்புமிகு திரு. என். வி. நடராசன்** (பின்தங்கிய வகுப்பினர் நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பின்தங்கிய வகுப்பினர் நலன், பத்திரப் பதிவு, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராம தான இயக்கங்கள்.

5. **மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்** (பொதுப் பணித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: பொதுப் பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள் உட்பட சிறு பாசனம், நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள்.

6. **மாண்புமிகு திரு. செ. மாதவன்** (உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: உணவு, கூட்டுறவு, வேளாண்மை மறுநிதி உதவி, ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சட்டம், நீதி மன்றங்கள், சிறைச்சாலைகள்.

7. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா (தொழில் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்: தொழில்கள், சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, கம்பெனிகள், மின்சாரம், முசுமதியர் அறக் கட்டளைகள்.

8. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனுர் (வேளாண்மைத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வேளாண்மை, உணவு உற்பத்தி, வேளாண்மைப் பொறியியற் பகுதி, வேளாண்மை பொறியியல் சம்பந்தமான பகுதிகள், வட்டாரக் கூட்டுறவுச் சங்கங்கள், இணைப்பு அளவிலான கழகங்கள் உட்பட்ட மாவட்டச் சங்கங்கள்.

9. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வருவாய்த் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: வருவாய், வருவாய்த் துறை வாரியம், மாவட்ட வருவாய் நிறு வனங்கள், மாவட்டத் துணை ஆட்சி தலைவர்கள், இளைஞர் அணி சேரணி.

10. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உள்ளாட்சித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், குடிநீர் வாரியம்.

11. மாண்புமிகு திரு. க. இராசாராம் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: தொழிலாளர், வீட்டு வசதி, இட வசதிக் கட்டுப்பாடு. எடைகள் அளவைகள் குறித்த சட்டம், புள்ளிவிவரம், வேலை வாய்ப்பும் பயிற்சி அளித்தலும், குடிசை மாற்று வாரியம்.

12. மாண்புமிகு திரு. சி. வி. எம். அண்ணாமலை (சமூக நலத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்: மகளிர்-சிறுவர் நலம் உட்பட சமூக நலம், மீனவர், இரவலர்கள் விடுதி, அனாதை இல்லங்கள், சீர்திருத்தப் பள்ளி களும் கண்காணிப்புப் பணிகளும்.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (வணிக வரித் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்: வணிக வரிகள், சிங்கோனு உட்பட காடுகள், கால் நடை வளர்ப்பு, கடன் கொடுத்தல் குறித்த சட்டம், கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல், சீட்டுகள் குறித்த சட்டம்.



14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப் பார்: போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்கு வரத்து, மோட்டார் வண்டிகள் வரி, எழுதுபொருள்-அச்சுத்துறை, அரசு அச்சகம்.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அற நிலையத் துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அறக் கட்டளைகள், கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில் கள் திட்டம், பால் வழங்குத் துறை, பால்வள முனைப்புத் திட்டங் கள், தமிழ் நாடு பால்வள நிறுவனங்கள், விளம்பரம், பொதுத் தொடர்பு, படச் சுருள் தொழில் நுட்பவியல்.

16. மாண்புமிகு திரு. என். இராசாங்கம் (அரிசன நலத்துறை அமைச்சர்) கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார்: அரிசன நலம், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, பயண அனு மதிச் சீட்டுகள், திரைப்படச் சட்டம்.

## PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU

### GOVERNOR OF TAMIL NADU

HIS EXCELLENCY THIRU KODARDAS KALIDAS SHAH

Members of the Council of Ministers

1. THE HON. DR. M. KARUNANIDHI: (Chief Minister) in-charge of Public, Finance, Planning, General Administration, matters relating to Indian Civil Service Officers and Indian Administrative Service Officers, District Revenue Officers, Police, Elections, Prohibition and Excise.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN: (Minister for Education and Tourism) in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Tourism and Tourist Development Corporation.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN: (Minister for Health) in-charge of Public Health, Medicine and Town Planning.

4. THE HON. THIRU N. V. NATARAJAN: (Minister for Backward Classes) in-charge of Backward Classes, Registration, Ex-Servicemen, Bhoodan and Gramdan.

5. THE HON. THIRU P. U. SHANMUGAM: (Minister for Public Works) in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Ports.

6. THE HON. THIRU S. MADHAVAN: (Minister for Food and Co-operation) in-charge of Food and Co-operation, Agricultural Refinance, Textiles, Yarn, Handlooms, Law, Courts and Prisons.

7. THE HON. THIRU S. J. SADIQ PASHA: (Minister for Industries) in-charge of Industries, Mines and Minerals, Iron and Steel Control, Companies, Electricity and Wa[illegible]

8. THE HON. THIRU Si. Pa. ADITANAR : (Minister for Agriculture) in-charge of Agriculture, Food Production, Agricultural Engineering Wing, Agro-Engineering and Services Co-operative Societies at the Block, District and apex level including the Federation.

9. THE HON. THIRU A. P. DHARMALINGAM : (Minister for Revenue) in-charge of Revenue, Board of Revenue, Districts Revenue Establishment, Deputy Collectors, Youth Service Corps and Prosperity Brigade.

10. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMY : (Minister for Local Administration), in-charge of Municipal Administration, Community Development and Panchayats and Panchayat Unions and Water Board.

11. THE HON. THIRU K. RAJARAM : (Minister for Labour), in-charge of Labour, Housing, Accommodation Control, Legislation on Weights and Measures, Statistics, Employment and Training and Slum Clearance Board.

12. THE HON. THIRU C. V. M. ANNAMALAI : (Minister for Social Welfare), in-charge of Social Welfare including Women's and Children's Welfare, Fisheries, Beggars' Home, Orphanages and Approved Schools and Vigilance Service.

13. THE HON. THIRU O. P. RAMAN : (Minister for Commercial Taxes in-charge of Commercial Taxes, Forest including Cinchona, Animal Husbandry, Legislation on Money Lending, Rural Indebtedness and Legislation on Chits.

14. THE HON. THIRU S. RAMACHANDRAN (Minister for Transport), in-charge of Transport, Nationalised Transport, Motor Vehicles Tax, Stationery and Printing and Government Press.

15. THE HON. THIRU M. KANNAPPAN : (Minister for Religious Endowments), in-charge of Religious Endowments, Khadi and Village Industries and Rural Industries Project, Milk, Operation Flood Project, Tamil Nadu Dairy Development Corporation, Information and Public Relations and Film Technology.

16. THE HON. THIRU N. RAJANGAM : (Minister for Harijan Welfare) in-charge of Harijan Welfare, Indians Oversees and Refugees and Evacuees, Newsprint Control, Passports and Cinematograph Act.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு புலவர் கா. கோவிந்தன், பி.ஓ.எல்., எம்.ஏ.

### பேரவைத் துணைத் தலைவர்

திரு. என். கணபதி, பி.எஸ்.ஸி., பி.எல்.

### மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

1. டாக்டர் க. நாகராசன்.
2. திரு. துரைமுருகன்.
3. திரு. கு. காமாட்சி.
4. திரு. கா. காளிமுத்து.
5. திரு. என். டென்னிஸ்.
6. திரு. கே. கந்தசாமி.

### சட்டமன்றப் பேரவைச் செயலாளர்

திரு. மா. சண்முகசுப்பிரமணியம், பி.ஏ., பி.எல்.

### துணைச் செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி, பி.ஏ., பி.எல்.

### குழு அலுவலர்

திரு. ப. சுப்பராயன், எம். ஏ.

### உதவிச் செயலாளர்கள்

திரு. த. இராதாகிருஷ்ணன்.
திரு. பெஞ்சமின் நெல்சன், பி.ஏ.
திரு. கே. பாலகுரு, பி.ஏ.

### விவாதப் பதிப்பாளர்

திரு. கே. சுந்தரராசன்.

### எஸ்டேட் அதிகாரி

திரு. வி. சீதாராமன். பி.காம்.

## தொகுதிகள் உள்ளிட்ட தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் (அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதி (2) |
|---|---|
| 1 அண்ணாமலை, மாண்புமிகு திரு. சி.வி.எம். (அமைச்சர்). | காஞ்சிபுரம். |
| 2 அபுசாலி, திரு. எம். ஏ. .. .. .. | புவனகிரி. |
| 3 அப்துல் ஜப்பார், திரு. வா. மை .. .. | அரவக்குறிச்சி. |
| 4 அரங்கண்ணல், திரு. இராம. .. .. | எழும்பூர். |
| 5 அரங்கநாயகம், திரு. செ. .. .. | கோயம்புத்தூர்—மேற்கு. |
| 6 அழகமுத்து, திரு. து. ப. .. .. (அரசாங்க தலைமைக் கொறடா). | உப்பிலியப்புரம். |
| 7 அழகர்சாமி, திரு. சோ. .. .. .. | கோவில்பட்டி. |
| 8 அழகுத் தேவர், திரு. எஸ். .. .. | சாத்தூர். |
| 9 அனந்தநாயகி, திருமதி த. ந. .. .. | மயிலாப்பூர். |
| 10 அன்பழகன், மாண்புமிகு திரு. க. (அமைச்சர்). | புரசைவாக்கம். |
| 11 அன்புச்செழியன், திரு. நீ. .. .. | பெரியகுளம். |
| 12 ஆண்டி அம்பலம், திரு. எம். .. .. | மேலூர் வடக்கு. |
| 13 ஆண்டி என்ற குருசாமி, திரு. கு. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் (செ.வ |
| 14 ஆதித்தனார், மாண்புமிகு திரு. சி. பா. (அமைச்சர்). | ஸ்ரீவைகுண்டம். |
| 15 ஆலடி அருணா, திரு. வி. .. .. | ஆலங்குளம். |
| 16 ஆல்டா எம். பௌலர், திருமதி .. | நியமன உறுப்பினர் |
| 17 ஆறுமுகம், திரு. அ. .. .. .. | எடப்பாடி. |
| 18 ஆறுமுகம், திரு. எஸ். .. .. | வீரபாண்டி |
| 19 ஆறுமுகம், திரு. சி. .. .. .. | மதுராந்தகம். |
| 20 இரத்தினசபாபதி, திரு. மு. .. .. | விளாத்திக்குளம் |
| 21 இராசகோபால், திரு. க. மு. .. .. | உத்திரமேரூர். |
| 22 இராசகோபால், திரு. வீ. .. .. | வந்தவாசி |
| 23 இராசமாணிக்கம், திரு. அ. .. .. | நாகப்பட்டினம். |
| 24 இராசமாணிக்கம், திரு. கு. .. .. | ஆடுதுறை. |
| 25 இராசரத்தினம், திரு. டி. .. .. | ஸ்ரீபெரும்புதூர். |
| 26 இராசாராம், மாண்புமிகு திரு. க. .. (அமைச்சர்). | சேலம் 2. |
| 27 இராசு, திரு. ஜே. எஸ். .. .. .. | பெரம்பலூர். (செ.வ.) |
| 28 இராதாகிருட்டிணன், திரு. எம். எஸ். .. | தண்டராம்பட்டு |
| 29 இராமச்சந்திரன், திரு. எம். ஜி. .. | பரங்கிமலை. |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 30 இராமச்சந்திரன், மாண்புமிகு திரு. ச. (அமைச்சர்). | பண்ருட்டி. |
| 31 இராமநாதன், திரு. சி. .. .. | அறந்தாங்கி. |
| 32 இராமலிங்கம், திரு. இரா. .. .. | தூத்துக்குடி. |
| 33 இராமலிங்கம், திரு. செ. .. .. | கடலாடி (செ.வ.). |
| 34 இராமன், மாண்புமிகு திரு. ஓ. பி. (அமைச்சர்). | மேலூர் தெற்கு (செ.வ.). |
| 35 இராமன், திரு. மூ. .. .. .. | கண்டமங்கலம் (செ.வ.). |
| 36 இராஜாங்கம், மாண்புமிகு திரு. என். (அமைச்சர்). .. | குறிஞ்சிப்பாடி (செ.வ.). |
| 37 இராஜாப்பிள்ளை, திரு. வீ. கே. .. .. | கன்னியாகுமரி. |
| 38 இளங்கோவன், திரு. கோ. .. .. | திருவையாறு. |
| 39 இளஞ்செழியன், திரு. வீ. சா. .. .. | விராலிமலை. |
| 40 எட்டியப்பன், திரு. பூ. .. .. .. | பெரணமல்லூர். |
| 41 எட்மண்ட், திரு. க. உரொ. .. .. | திருச்செந்தூர். |
| 42 கணபதி, மாண்புமிகு திரு. என். (பேரவைத் துணைத் தலைவர்). .. | பாபநாசம். |
| 43 கணபதி, திரு. டி. .. .. .. | நாங்குனேரி. |
| 44 கணேசன், திரு. எல். .. .. | ஒரத்தநாடு. |
| 45 கணேசன், திரு. சி. .. .. .. | குற்றாலம். |
| 46 கண்ணப்பன், மாண்புமிகு திரு. மு. (அமைச்சர்). | இணைத்துக்கடவு. |
| 47 கண்ணன், திரு. எம். ஆர். .. .. | பேஸின் பிரிட்ஜ். |
| 48 கதிரவன், திரு. கா. மு. .. .. .. | தென்காசி. |
| 49 கந்தசாமி, திரு. கே. .. .. .. | உசிலம்பட்டி. |
| 50 கந்தசாமி, திரு. கே. பி. .. .. .. | சாத்தான்குளம் |
| 51 கந்தசாமி, திரு. எம். .. .. .. | குளித்தலை. |
| 52 கந்தப்பன், திரு. செ. .. .. .. | திருச்செங்கோடு. |
| 53 கரிவேங்கடம், திரு. மா. வெ. .. .. | பாலக்கோடு. |
| 54 கருணாநிதி, மாண்புமிகு டாக்டர் மு. (முதல் அமைச்சர்). | சைதாப்பேட்டை. |
| 55 கருணாநிதி, திரு. தாழை மு. .. .. | திருவாரூர் (செ.வ.) |
| 56 கருணைநாதன், திரு. சோ. .. .. | கூனூர். |
| 57 கருப்பையா, திரு. ஆ. .. .. .. | கங்கைகொண்டான் (செ.வ.) |
| 58 காசிராமன், திரு. நா. .. .. .. | கும்பகோணம். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 59 காதர் பாஷா என்ற வெள்ளைச்சாமி, திரு. | முதுகளத்தூர். |
| 60 காமாட்சி, திரு. கு. .. .. .. | திருவரம்பூர். |
| 61 கார்த்திகேசன், திரு. வீ. .. .. .. | இராதாபுரம். |
| 62 காவேரிமணியம், திரு. சொ. .. .. | திருப்பரங்குன்றம். |
| 63 காளிமுத்து, திரு. கா. .. .. .. | சிவகாசி. |
| 64 கிட்டப்பா, திரு. என். .. .. .. | மாயூரம். |
| 65 கிருட்டிணன், திரு. நா. .. .. .. | பேரணம்பட்டு (செ. வ.). |
| 66 கிருஷ்ணமூர்த்தி, திரு. வி. .. .. | நெல்லிக்குப்பம். |
| 67 கிருஷ்ணமூர்த்தி, திரு. வ. .. .. | திருச்சிராப்பள்ளி-1. |
| 68 கிருஷ்ணன், திரு. கே. ஆர். .. .. | ஊத்தங்கரை. |
| 69 குப்பல் இராமகிருஷ்ணன், திரு. கே. எஸ். | மதுரை (கிழக்கு). |
| 70 குமாரசாமி, திரு. அ. சே. .. .. | திருக்கோயிலூர். |
| 71 குமாரசாமி, திரு. கே. என். .. .. | பல்லடம். |
| 72 குருசாமி, திரு. நா. வெ. .. .. | ஆண்டிப்பட்டி. |
| 73 கேசவலு, திரு. தே. .. .. .. | கள்ளக்குறிச்சி. |
| 74 கோதண்டராமய்யா, திரு. கே. எஸ். .. | உதனப்பள்ளி. |
| 75 கோபால், திரு. எம். .. .. .. | குன்னத்தூர் (செ. வ.). |
| 76 கோபால், திரு. கே. பி. .. .. .. | கம்பம். |
| 77 கோவிந்தசாமி, திரு. வி. செ. .. .. | காவேரிப்பட்டினம். |
| 78 கோவிந்தராசன், திரு. ஆர். .. .. | கடலூர். |
| 79 கோவிந்தராசன் துரை, திரு. .. .. | கந்தர்வகோட்டை. |
| 80 கோவிந்தன், மாண்புமிகு புலவர் கா. (பேரவைத் தலைவர்). | செய்யாறு. |
| 81 கோவை செழியன், திரு. .. .. | காங்கேயம். |
| 82 சகாதேவன், திரு. எஸ். .. .. | செஞ்சி. |
| 83 சங்குமுத்து தேவர், திரு. ச. .. .. | அம்பாசமுத்திரம். |
| 84 சதாசிவம், திரு. செ. .. .. .. | ஆண்டிமடம். |
| 85 சண்முகசுந்தரம், திரு. அ. ப. .. .. | பொள்ளாச்சி. |
| 86 சண்முகம், மாண்புமிகு திரு. ப. உ. (அமைச்சர்). | திருவண்ணாமலை. |
| 87 சண்முகம், திரு. பெரி. .. .. .. | திருவாடானை. |
| 88 சண்முகம், திரு. மு. .. .. .. | விழுப்புரம். |
| 89 சத்தியமூர்த்தி, திரு. மு. .. .. | புதுக்கோட்டை. |
| 90 சத்தியவாணிமுத்து, திருமதி .. .. | பெரம்பூர் (செ.வ.). |
| 91 சத்தியேந்திரன், திரு. எம்.எஸ்.கே. .. | இராமநாதபுரம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 92 சம்பத், திரு. டி. வி. | செம்பனூர்கோவில். |
| 93 சாதிக் பாட்சா, மாண்புமிகு திரு. எஸ்.ஜே. (அமைச்சர்). | உடுமலைப்பேட்டை. |
| 94 சாரதி, திரு. மா. பா. | வேலூர். |
| 95 சிதம்பரம், திரு. சித. | காரைக்குடி. |
| 96 சிவப்பிரகாசம், திரு. தி. சி. ஆ. | சேரன்மகாதேவி. |
| 97 சிவபெருமாள், திரு. கோ. | அரியலூர். |
| 98 சிறைமீட்டான், திரு. தொ. க. | பரமக்குடி (செ.வ.) |
| 99 சீனிவாசன், திரு. பெ. | விருதுநகர். |
| 100 சீனிவாசன், திரு. தொ. ப. | போளூர். |
| 101 சின்னசாமி, திரு. அ. | செயங்கொண்டம் (செ.வ.) |
| 102 சின்னசாமி, திரு. ஆர். | தர்மபுரி. |
| 103 சின்னசாமி திரு. மு. | மொடக்குறிச்சி. |
| 104 சின்னசாமி, திரு. வ. | எற்காடு (ஆ. வா.) |
| 105 சின்னராசு, டாக்டர் ச. அ. | ஹரூர் (செ. வ.) |
| 106 சின்னவெள்ளையன், திரு. சி. | சேந்தமங்கலம் (ஆ. வா.) |
| 107 சுந்தரம், திரு. ஒ. என். | திண்டுக்கல். |
| 108 சுப்பிரமணியம், திரு. வ. | சிங்காநல்லூர். |
| 109 சுப்பிரமணியம், திரு. எஸ். கே. | சத்யமங்கலம். |
| 110 சுப்பிரமணியம், திரு. கே. எம். | தியாகராயநகர். |
| 111 சுப்பிரமணியன், திரு. மா. | ஈரோடு. |
| 112 சுப்பிரமணியன், திரு. வீ. | உளுந்தூர்பேட்டை. |
| 113 சுப்பு, திரு. க. | ராஜபாளையம். |
| 114 சுப்பையா, திரு. ஆ. கு. | கோட்டூர் (செ. வ.) |
| 115 சுப்பையா, திரு. கே. வி. | ஆலங்குடி. |
| 116 சுப்பையா, திரு. ச. | சங்கரன்கோயில் (செ. வ.) |
| 117 சுப்பையா, திரு. வ. ஆர். | கடயநல்லூர். |
| 118 சுருளிவேல், திரு. மு. | போதிநாயக்கனூர். |
| 119 சுரேந்திரன், திரு. எம். | மேட்டூர். |
| 120 சுவாமிதாஸ், திரு. எ. | பத்மநாபபுரம். |
| 121 செபமாலை, திரு. கோ. | மங்களூர் (செ. வ.) |
| 122 ஜெயராமன், திரு. சி. | சேலம்-1. |
| 123 செல்லத்துரை, திரு. வீ. | ஒமலூர்.(செ. வ.) |
| 124 செல்லையா, திரு. குழ. | பேராவூரணி. |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
|---|---|
| 125 செல்வராஜ், திரு. எம். | விருத்தாசலம். |
| 126 சேதுராமன், திரு. சி. | சிவகங்கை. |
| 127 சோனையா, திரு. த. | மானாமதுரை. |
| 128 சோமசுந்தரம், திரு. ந. | வலங்கைமான் (செ. வ.) |
| 129 சௌடி சுந்தரபாரதி, திரு. எஸ். | அருப்புக்கோட்டை. |
| 130 சௌந்தரபாண்டியன், திரு. பெ. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 131 டென்னிஸ், திரு. என். | கிள்ளியூர். |
| 132 தங்கமணி, திரு. கே. டி. கே. | மதுரை—மேற்கு. |
| 133 தர்மலிங்கம், மாண்புமிகு திரு. அ. பெ. (அமைச்சர்). | திருச்சிராப்பள்ளி-2. |
| 134 தருமலிங்கம், திரு. ந. | ரிஷிவந்தியம் (செ.வ.) |
| 135 தவமணித்தேவர், திரு. வி. | சேடப்பட்டி. |
| 136 திம்மராயக் கவுண்டர், திரு. டி. சி. | நாட்ராம்பள்ளி |
| 137 தியாகராசன், திரு. அ. | திருமயம். |
| 138 தியாகராசன், திரு. இ. எஸ். | திருத்தணி. |
| 139 திருப்பதி, திரு. கு. | மதுரை (சென்ட்ரல்). |
| 140 துரைசாமி திரு. வ. க. | குடியாத்தம். |
| 141 துரைசாமி, திரு. சு. | திருப்பூர். |
| 142 துரைமுருகன், திரு. | காட்பாடி. |
| 143 துரைராஜ், திரு. சு. ம. | திருவள்ளூர் (செ.வ.) |
| 144 தூயமணி, திரு. மே. சி. | மேட்டுப்பாளையம். |
| 145 தேவராசன், திரு. எம். | உதகமண்டலம். |
| 146 தேவேந்திரன், திரு. அ. | நன்னிலம் (செ. வ.) |
| 147 தோப்பூர் திருவேங்கடம், திரு. | கணியம்பாடி. |
| 148 நடராசன், திரு. ஈ. எம். | அந்தியூர். |
| 149 நடராசன், திரு. எஸ். | தஞ்சாவூர். |
| 150 நரசிம்மன், திரு. வ. சி. | ஆரணி. |
| 151 நல்லசாமி, திரு. எஸ். | கரூர். |
| 152 நாகராஜன், டாக்டர் க. | வடமதுரை. |
| 153 நாகலிங்கம், திரு. பா. | பொன்னேரி (செ.வ. |
| 154 நாச்சிமுத்து, திரு. நா. | ஒட்டஞ்சத்திரம். |
| 155 நாச்சியப்பன், திரு. வ. எம். டி. | ஆத்தூர். |
| 156 நாச்சியப்பன், திரு. ந. | சங்கராபுரம். |
| 157 நாராயணசாமி, திரு. மா. வே. | திருவொற்றியூர். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 158 | நெடுஞ்செழியன், மாண்புமிகு டாக்டர் இரா. (அமைச்சர்). | திருவல்லிக்கேணி. |
| 159 | நைனுமலை, திரு. இரா. | ராசிபுரம். |
| 160 | பத்மநாபன், திரு. பொ. | திருநெல்வேலி. |
| 161 | பத்மாவதி, திருமதி. எ. கோ. | முகையூர். |
| 162 | பசந்தாமன், திரு. ஆ. | கடம்பத்தூர். |
| 163 | பரமசிவம், திரு. எம். | தாரமங்கலம். |
| 164 | பலராமன், திரு. என். எஸ். | அரக்கோணம். |
| 165 | பழனிசாமி, திரு. நா. | பொங்கலூர். |
| 166 | பழனிசாமி, திரு. என். கே. | பெருந்துறை. |
| 167 | பழனிசாமி, திரு. மு. | வெள்ளக்கோயில். |
| 168 | பழனிச்சாமி, புலவர் சி. | பழனி (செ.வ.) |
| 169 | பழனியப்பன், டாக்டர் ச. மு. | கோபிசெட்டிபாளையம். |
| 170 | பழனியம்மாள், திருமதி வி. ப. | தாராபுரம். |
| 171 | பழனிவேலன், திரு. க. | வரகூர். |
| 172 | பழனிவேலன், திரு. மு. | நாமக்கல். |
| 173 | பழனிவேலு, திரு. பி. | ஆத்தூர். |
| 174 | பழனிவேல் ராஜன், திரு. | தேனி. |
| 175 | பன்னீர் செல்வம், திரு. எம். | ஆம்பூர் (செ. வ.) |
| 176 | பாண்டுரங்கம், திரு. சி. | செங்கம் (செ. வ.) |
| 177 | பாலகிருட்டிணன், திரு. கு. | மன்னார்குடி. |
| 178 | பாலசுந்தரம், திரு. வை. | அச்சரபாக்கம் (செ.வ.). |
| 179 | பாலையா, திரு. எ. | கொளச்சல். |
| 180 | பெரியசாமி, திரு. கு. | கொடவாசல். |
| 181 | பெரியசாமி, திரு. தி. ஒ. | அவினாசி. |
| 182 | பெருமாள், திரு. செ. | காட்டுமன்னார்கோயில். |
| 183 | பெருமாள், திரு. எ. ஆர். | காரியப்பட்டி. |
| 184 | பொம்மன், திரு. கு. அ. | கூடலூர் (செ. வ.) |
| 185 | பொன் சொக்கலிங்கம், திரு. பி. | சிதம்பரம். |
| 186 | பொன்னப்ப நாடார், திரு. ஆர். | விளவங்கோடு. |
| 187 | பொன்னுமலை, திரு. தி. | பனைமரத்துப்பட்டி. |
| 188 | பொன்னுரங்கம், திரு. எ. எம். | சோளிங்கபுரம். |
| 189 | மணலி கந்தசாமி, திரு. சி. | திருத்துறைப்பூண்டி. |
| 190 | மணியன், திரு. பி. எஸ். | சோழவந்தான். |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதி. (2) |
|---|---|---|
| 191 | மதியழகன், திரு. கே. அ. | ஆயிரம் விளக்கு. |
| 192 | மருதாசலம், திரு. என். | பேரூர் (செ. வ.). |
| 193 | மலைக்கண்ணன், திரு. வீ. | இளையாங்குடி. |
| 194 | மன்னியப்பன், திரு. சி. | கிருஷ்ணகிரி. |
| 195 | மாணிக்கம், திரு. என். | பென்னகரம். |
| 196 | மாணிக்கவாசகம், திரு. இரா. | தொண்டாமுத்தூர். |
| 197 | மாதவன், மாண்புமிகு திரு. செ. (அமைச்சர்). | திருப்பத்தூர். (இராமநாதபுரம் மாவட்டம்), |
| 198 | மாரிமுத்து, திரு. எ. ஆர். | பட்டுக்கோட்டை. |
| 199 | மாரிமுத்து, திரு. மூ. | தலைவாசல் (செ.வ.) |
| 200 | மீனாட்சிசுந்தரம், திரு. மா. | வேதாரண்யம். |
| 201 | முகமது கோதர் முகைதீன், திரு. எஸ். | மேலப்பாளையம். |
| 202 | முத்தமிழ்ச் செல்வன், திரு. வெ. த. | லால்குடி. |
| 203 | முத்து, திரு. வ. | சங்கரி (செ. வ.) |
| 204 | முத்துசாமி, திரு. ப. | வேடசந்தூர். |
| 205 | முத்துச்செல்வன், திரு. பு. செ. | முசிறி. |
| 206 | முத்துவேல், திரு. ந. | வானூர் (செ. வ.) |
| 207 | முத்தையா, திரு. கே. கே. | கடலூர். |
| 208 | முத்தையா, திரு. எம். | ஒட்டப்பிடாரம் (செ. வ.) |
| 209 | முருகையன், திரு. எஸ். | கலசப்பாக்கம். |
| 210 | முனியாண்டி, திரு. ஆ. | நிலக்கோட்டை (செ. வ.) |
| 211 | முனு ஆதி, திரு. மு. | திருப்போரூர். |
| 212 | முனுசாமி, திரு. ரா. ரா. | மேல்மலையனூர். |
| 213 | மொய்தீன், திரு. திருப்பூர் எ. எம். | துறைமுகம் (சென்னை நகரம்). |
| 214 | மோசஸ், திரு. ம. | நாகர்கோயில். |
| 215 | ரங்கநாதன், திரு. கே. | கோயம்புத்தூர் (கிழக்கு). |
| 216 | ராமசாமி, திரு. இ. | வால்பாறை. |
| 217 | ராமசாமி, திரு. ஜி. | திருப்பத்தூர் (வட ஆர்க்காடு மாவட்டம்). |
| 218 | ராமராசன், திரு. வ. க. | பவானிசாகர் (செ. வ.) |
| 219 | இராஜா, திரு. எ. எம். | பவானி. |
| 220 | ராஜாராம், திரு. ஜி. | திண்டிவனம். |
| 221 | ரெத்தினசாமித் தேவர், திரு. மூ. [illegible] ஆ. | திருமங்கலம். |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதி. (2) |
| --- | --- |
| 222 லத்தீப், திரு. எம். எ. | வாணியம்பாடி. |
| 223 வகாப், திரு. கே. எ. | ராணிப்பேட்டை. |
| 224 வடிவேலு, திரு. சீ. க. | தொட்டியம். |
| 225 வடிவேல், திரு. எஸ். | சீர்காழி (செ. வ.) |
| 226 விசுவநாதன், திரு. செ. கோ. | செங்கற்பட்டு. |
| 227 வீராசாமி, திரு. நா. | ஆற்காடு. |
| 228 வெங்கடசாமி, திரு. பி. | ஹோசூர். |
| 229 வெள்ளைத்துரை, திரு. அ. | வாசுதேவநல்லூர். |
| 230 வேதாசலம், திரு. மு. | வண்ணாரப்பேட்டை (சென்னை நகரம்). |
| 231 வேலப்பன், திரு. சி. வே. | கபிலமலை. |
| 232 வேழவேந்தன், திரு. கா. | கும்மிடிபூண்டி. |
| 233 ஜேம்ஸ், திரு. ஜே. | திருவட்டார். |
| 234 ஜோதி வெங்கடாசலம், திருமதி. | ஸ்ரீரங்கம் (செ. வ.) |
| 235 ஹாண்டே, டாக்டர் எச். வி. | பார்க் டவுன் (சென்னை நகரம்). |

பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்கள்:—

1 மாண்புமிகு திரு. என். வி. நடராசன்—அமைச்சர்.

2 மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி—அமைச்சர்.

3 திரு. கோவிந்த் சாமிநாதன்—தலைமை வழக்கறிஞர்.

# தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

**திங்கட்கிழமை, 1975 மார்ச் 17.**

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

*Forensic Science Laboratory, Coimbatore*

* 341 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the, Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that a Regional Forensic Science Laboratory has been opened in Coimbatore recently ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூரிலுள்ள குற்றஞ்சார்ந்த சட்ட அறிவியல் வேதியல் வட்டார ஆய்வுக்கூடம் 2-5-1974-லிலிருந்து செயல்படத் தொடங்கியுள்ளது. இது கோயம்புத்தூர், நீலகிரி, சேலம், தருமபுரி ஆகிய மாவட்டங்களுக்குரிய ஆய்வுக்கூடப் பணிகளைக் கவனிக்கிறது. உடல் உள்ளுறுப்புகள், குடலில் தங்கிய உணவுப் பொருள், குருதி, சிறுநீர் முதலியவற்றைப் பரிசோதனை செய்யும் பணிகளை இது மேற்கொள்கிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தற்போது தமிழகத்தில் வேறு எந்த எந்தப் பகுதிகளில் இதுபோன்ற ஆய்வுக்கூடம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது ? இனிமேல் புதிதாகத் திறப்பதற்கு அரசாங்கம் எதாவது திட்டமிட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இப்பொழுது சென்னையிலுள்ள தலைமை ஆய்வுக்கூடத்திலிருந்து நச்சுப் பொருள் ஆய்வு செய்கின்ற ஒரு பிரிவை மாத்திரம் எடுத்து, கோவையிலும் மதுரையிலும் இரண்டு பிரிவுகளாக அமைத்திருக்கிறோம். திருச்சியிலோ, தஞ்சை மெடிகல் காலேஜை ஒட்டியோ மூன்றாவது இடமாக பிரித்து அமைக்கலாம் என்று அரசிடம் செயற் குறிப்பு இருக்கிறது.

திரு. அ. தேவேந்திரன் : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் வைத்தியக் கல்லூரி இருக்கிற காரணத்தால் தஞ்சையிலோ, திருச்சியிலோ அமைக்கலாம் என்கிற உத்தேசத்தில் இருப்பதாக முதல் அமைச்சரவர்கள் சொன்னார்கள். தஞ்சையிலேயே ஆரம்பிக்கிற முடிவினை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதுதான் நான் முன்பே சொன்னேன். தஞ்சையில் மருத்துவக் கல்லூரி இருப்பதன் காரணமாக அதனையொட்டி ஆரம்பிக்கலாமா என்பதைப் பற்றி அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது.

## சென்னை நகரில் பாதுகாப்புப் பணி.

*342 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை நகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிக்க அரசு ஆலோசித்து வருகிறதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) & (இ) சென்னை மாநகரில் கண்காணிப்புப் பணிக்காக கூடுதலாக காவல் துறைப் பணியாளர்களை நியமிப்பதுபற்றி அரசு அவ்வப்போது பரிசீலித்து, தேவைக்கேற்ப அனுமதி வழங்கி வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற பெரிய பெரிய நகரங்களில் இன்னும் கூடுதலாக காவலர்களை நியமித்தால் கண்காணிப்புப் பணியை விறுவிறுப்பாக்கலாமே, அதை அரசாங்கம் கருத்திற்கொண்டு பெரிய நகரங்களிலாவது கூடுதல் காவலர்களை நியமிக்க அரசு பரிசீலனை செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மூலக் கேள்வி, காவல் துறைப் பணியாளர்களைப் பற்றியது. காவல் நிலையங்களை கூடுதலாக்கினாலும் காவல் துறைப் பணியாளர்களையும்தான் கூடுதலாக்க வேண்டியிருக்கிறது. 1974–75-ம் ஆண்டில், சென்னையில் மாத்திரம் 168 இரண்டாம் நிலை காவலர்கள், 12 முதல் நிலை காவலர்கள், அதற்கேற்ப வேறுபல பணியாளர்களையும் கூடுதலாக நியமிக்க அனுமதி அரசு வழங்கியது. அதைப்போல, மற்ற மாவட்டங்களிலும் தேவைக்கேற்ப அரசு அவ்வப்போது கவனித்து அனுமதிகளை வழங்கிக்கொண்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, மக்கள் தொகை அடிப்படையில் சுமார் 800 மக்கள் தொகைக்கு ஒரு போலீசார் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆனால், நெரிசலுள்ள சென்னை, மதுரை, கோவை போன்ற நகரங்களுக்கு இதிலே வரம்பு ஏதாவது விதிக்கப்பட்டிருக்கிறதா ? இதிலே மாறுதல் ஏதாவது செய்யப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அதிக நெரிசல் சென்னை நகரத்திலே இருக்கும் காரணத்தால், 6—3—1975 நிலவரப்படி, இரண்டாம் நிலை காவலர்கள் 4,097 பேர் இங்கே பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். முதல் நிலை காவலர்கள் 569 பேர். தலைமைக் காவலர்கள் 733 பேர். சப்-இன்ஸ்பெக்டர்கள் 239 பேர். இதற்கேற்ப





னைய அதிகாரிகள், நெரிசல் மிகுந்த சென்னை நகரத்தில் மாத்திரம் பணியாற்றிவருகிறார்கள். இதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மற்ற நகரங்களுக்கும், அந்தந்த நகரங்களினுடைய மக்கள் தொகை, குற்றங்கள் இவற்றின் அடிப்படையில் இந்தப் பணியாளர்கள், காவல் நிலையங்கள் இவைகள் விரிவுபடுத்தப்படுகின்றன.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகரத்தில் புதிதாக ஒரு காவல் நிலையம் ஏற்படுத்துவதற்கான பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா ? அதன்மேல் அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கோவை நகரில் காவல் நிலையம் இருக்கிறது. எந்த இடத்தில் என்று உறுப்பினர் கேட்கவில்லை. அப்படிக் கேட்டாலும் அதற்குத் தனியாகத்தான் விவரங்களைச் சேகரிக்க வேண்டும்.

திரு. கு. காமாட்சி : இந்த காவல் பணியாளர்கள் அதிகமாகத் தேவைப்படுகிறபோது, நம்முடைய மாநிலத்தில் இருக்கின்ற சாரணர் படை, சேரணிப் படை, ஊர்காவல் படை இவைகளையெல்லாம் உபயோகிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் ஈடுபடுகின்ற அதேபோன்ற காரியங்களில் ஈடுபடுத்தாவிட்டாலும், அவர்கள் வேறு பணிகளில் ஈடுபடுத்தப்படுகிறார்கள். பாதுகாப்பு போன்ற காரியங்களுக்கும், கூட்டங்களை ஒழுங்குபடுத்துதல் போன்ற காரியங் களுக்கும் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தத் தொகுதிகளிலிருந்து அவற்றிலே பணியாற்றுகிறவர்கள் அவ்வப்போது எடுத்துக் கொள்ளப்படுகிறார்கள்.

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know from the Hon. Chief Minister the total strength of police force in Madras City including top officers ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, மொத்தமாக இல்லை. தனித் தனியாகச் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் கொஞ்சம் கஷ்டப்பட்டு கூட்டிப் பார்த்துக்கொள்ள வேண்டுகிறேன் :—

| | |
|---|---|
| கமிஷனர் .. .. .. .. .. .. | 1 |
| டெபுடி கமிஷனர்கள் .. .. .. .. | 5 |
| அடிஷனல் டெபுடி கமிஷனர் .. .. .. | 1 |
| உதவி கமிஷனர்கள் .. .. .. .. .. | 23 |
| இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. .. | 71 |
| ரிசர்வ் இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 21 |
| டெபுடி இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. | 19 |
| சப்-இன்ஸ்பெக்டர்கள் .. .. .. .. .. | 239 |

| | |
|---|---|
| ரிசர்வ் சப்-இன்ஸ்பெக்டர்கள் | 71 |
| உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 70 |
| ரிசர்வ் உதவி சப்-இன்ஸ்பெக்டர்கள் | 25 |
| தலைமைக் காவலர்கள் | 753 |
| நாயக்ஸ் | 167 |
| லான்ஸ் நாயக்ஸ் | 155 |
| முதல் நிலை காவலர்கள் | 569 |
| இரண்டாம் நிலை காவலர்கள் | 4,097 |

### *Stock of yarn*

* 343 *Q.*—THIRU N. DENNIS; THIRU N. K. PALANISAMY Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state the total quantity of yarn lying in stock with the Mills in this State as on date, district-wise?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 31—12—1974-ல் மாவட்ட வாரியாக ஆலைகளிலுள்ள நூல் இருப்பு பின்வருமாறு :—

| மாவட்டங்கள். | 180 கிலோ பேல்கள். |
|---|---|
| 1. கோயம்புத்தூர் | 21,134 |
| 2. மதுரை | 5,403 |
| 3. திருநெல்வேலி | 4,595 |
| 4. இராமநாதபுரம் | 5,144 |
| 5. செங்கல்பட்டு | 1,000 |
| 6. சேலம் | 2,866 |
| 7. திருச்சிராப்பள்ளி | 1,474 |
| 8. கன்னியாகுமரி | 983 |
| 9. வடாற்காடு | 647 |
| 10. தென்னாற்காடு | 513 |
| 11. தஞ்சாவூர் | 1,139 |
| | 44,898 |

திரு. என். டென்னிஸ்: சார், சர்ப்ளஸ் ஸ்டாக் ஏற்படாமல் இருக்க அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள், சர்ப்ளஸ் ஆக இருக்கின்றவற்றை கிளியர் செய்ய அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை அறிய விரும்புவதோடு இந்த விநியோக முறையிலே ஏதாவது மாறுதல் தேவையிருக்கிறதா என்பதை அரசு பரிசீலித்திருக்கிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது பொதுவாக அகில இந்தியாவிலே நூலுக்கு ஏற்பட்ட விலையேற்றமும், அதன் விளைவாக அதை வாங்குவதிலே ஏற்பட்ட தாமதத்தினால்தான். ஆகவே, இது நம்முடைய மாநிலத்திற்கு மட்டும் தனியாக ஏற்பட்டதல்ல.

### *Distribution of yarn*

* 344 *Q.*—THIRU N. K. PALANISAMY: Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(*a*) whether any new system for the distribution of yarn for the weavers has been introduced from October 1973; and

(*b*) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ): 1973-ம் ஆண்டு அக்டோபர் மாத முதல் நூல் விநியோகிக்க புதிய திட்டம் எதும் தொடங்கவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, தற்போது நூல் எந்த எந்த அடிப்படையில் நெசவாளர்களுக்கு விநியோகிக்கப்படுகிறது என்கிற விபரத்தை அறியலாமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவு முறையிலே உற்பத்தி செய்யப்படுகிற நூல் நம்முடைய கோ-ஆப்டெக்ஸ் கூட்டுறவுத் தலைமை நிலையத்தின் மூலமாக அங்கங்கே உள்ள டெப்போக்கள் மூலமாக ஒவ்வொரு கூட்டுறவு சங்கத்திற்கும் தேவையான நூல் வழங்கப்படுகிறது.

திரு. எம். சுரேந்திரன்: நூல் ஆங்காங்கே விநியோகம் செய்வதற்கு கூட்டுறவு சேவா கைத்தறியாளர்கள் சங்கங்கள் அமைக்கப்பட்டதே அந்தச் சங்கங்கள் மூலமாக நூல் விநியோகிக்கப்படுகிறதா? அந்தச் சங்கங்களுக்கு ஏதாவது பொறுப்பு அளிப்பதற்காகத்தான் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, அந்த வகையிலே இந்தப் பணியை அவர்களிடம் கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுச் சங்கங்களைத் தவிர தனியார் துறையிலே உள்ளவர்கள் நூல் வாங்குவதற்காக சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் தொடங்கப்பட்டிருக்குமானால் அவற்றின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்ற திட்டத்தைத்தான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று நினைக்கிறேன். நாம் உற்பத்தி செய்கிற நூலில் முதல் உரிமை கூட்டுறவு நெசவாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மீதி வாய்ப்பு அதிலே இருக்குமானால் சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடீஸ் மூலமாகக் கொடுக்கலாமென்று முடிவெடுத்தோம். சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகளை மேலும் வளர்க்கின்ற வாய்ப்புகளை நாம் உருவாக்கியாகவேண்டும்.

[1975 மார்ச் 17

திரு. த. சோணையா : தலைவர் அவர்களே. தமிழ்நாட்டிலே சில நேரங்களில் நூல் தேக்கம் ஆகிவிடுகிறது என்று பெரிய பரபரப்பான செய்திகள் வந்துவிடுகின்றன. இன்னும் சில நேரங்களில் நூல் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது என்று பெரிய பயங்கரமான செய்திகள் வருகின்றனவே, இது சமமான நிலைக்குக் கொண்டுவரப்பட அரசு ஏதாவது திட்டம் வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்முடைய மாநில அரசைப் பொறுத்த வரையில் திட்டவட்டமான ஒரு கொள்கையைச் சொல்லி வருகிறோம். அகில இந்தியாவை எடுத்துக்கொண்டாலும் ஆலைகளிலே உற்பத்தியாகிற நூலில் சுமார் 62½ சதவீதம் கைத்தறியாளர்களுக்குத் தேவைப்படுகிறது. அதை வாங்கி கைத்தறியாளர்களுக்குக் கொடுத்தாலொழிய இந்தக் கஷ்டம் நீடிக்கத்தான் செய்யும்.

திரு. சோ. அழகர்சாமி : கூட்டுறவிலே உள்ள நெசவாளர்களுக்கு நூல் விநியோகம் செய்வதிலே புதிய ஏற்பாடு கொண்டுவருவதற்கு ஏற்பாடு இருக்கிறதா என்று கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பணத்தைக் கட்டித்தான் நூல் எடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் எல்லா மாநிலச் சங்கங்களும் அதை வாங்குவதற்கு காசு இல்லை என்று சொல்கிறார்கள். நூலை கடனாக அவர்களுக்குக் கொடுத்து அதற்குப் பதிலாக துணிகளை வாங்கிக் கொள்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்போது இருக்கிற முறை ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் மத்திய வங்கி பண உதவி செய்து வருகிறது. அந்த அடிப்படையிலேதான் நூல் வாங்கப்படுகிறது. அவர்கள் குறிப்பிட்டதுபோல் தேக்கம் இருப்பதால்தான் இப்படிப்பட்ட நிலைமை இருக்கிறது. இதைப்பற்றி நம்முடைய பிரதம அமைச்சர், நிதியமைச்சர் ஆகியோரிடம் பேசி தென் மாநிலங்களில் உள்ளவர்களுக்கு ரிசர்வ் வங்கி விதிமுறைகளைத் தளர்த்தி—தேக்க நேரத்தில்—அதிக நிதிவசதியைக் கொடுக்கக்கூடிய வாய்ப்பைத் தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

திரு. கே. என். குமாரசாமி : மீடியம் நூல், மீடியம் துணி உற்பத்தி செய்வதற்கு ஏற்ற முறையில் மீடியம் நூல் 80 சதவீதம் ஆலைகளிலே இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது. மீடியம் துணி உற்பத்தியாளர்கள் மீடியம் துணி அதிகமாக உற்பத்திசெய்தால்தான் விலை குறையும். ஆகவே அதைச் செய்வதற்கு ஏற்பாடு செய்வார்களா? தேக்கம் அடைந்திருப்பது ஹைகவுண்ட் நூலா அல்லது லோகவுண்ட் நூலா என்பதையும் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நூல் தேக்கம் என்பது பெரிய பிரச்சினை. அகில இந்திய அளவிலே சில ஆண்டுகளுக்கு அதிகத் தேக்கம் என்று இருக்கிறது, சில ஆண்டுகளுக்கு அதிகப் பற்றாக்குறை என்று இருக்கிறது. தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் கைத்தறித் துணி தேக்கத்தினால் நெசவாளர்கள் அவதிப்படுகிறார்கள். ஆகவே இந்தப் பிரச்சினை நம் முன்னால் இருக்கின்ற ஒன்று அல்ல.



1975 மார்ச் 17]

திரு. எம். சுரேந்திரன் : அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிஸ் அதிகமாக ஊக்குவிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். சந்தானம் கமிட்டியின் சிபாரிசின் பேரிலே தனியார் துறையிலே உள்ள எல்லாக் கைத்தறியாளர்களுக்கும் உதவி செய்யக்கூடிய முறையிலே அந்த நோக்கத்துடன் சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்த வகையிலே பணம் கட்டி அப்படிப்பட்ட சொஸைடிகளை ஆரம்பித்திருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்கு இதுவரையிலே எந்தவிதமான நூலோ சாயமோ விழுதோ அல்லது அச்சோ தரப்படவில்லை என்று புகார்கள் வருகின்றனவே; ஆகவே இந்தக் கஷ்டமான நேரத்தில் இப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்களே; இந்தக் கஷ்டமான நிலைமையைப் போக்குவதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கஷ்டமான நேரத்திலே பணம் இல்லை என்பதுதான் பிரச்சினை; நூல் இல்லை என்பதல்ல. சர்வீஸ் கோவாப்ரேடிவ் சொஸைடிகள் முழுவதும் செயல்படவில்லை என்று சொல்லவில்லை. நெசவாளர்களுக்கு அவர்களுக்குத் தேவைப்படுகின்ற மொத்தத் தேவையை நாமே வாங்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்கிறார்கள்; அதை வாங்கிக்கொடுப்பதற்கு வாய்ப்பு வசதி இல்லை. சிவராமன் குழுவினர் அகில இந்தியாவிலே உற்பத்தியாவதிலே 62½ சதவீதம் கைத்தறி நெசவாளர்களுக்குத் தேவையான நூலாக உற்பத்தி செய்து மாநில அரசாங்கம் அவர்களுக்கு வாங்கிக்கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொல்கிறார்கள். இதைப்பற்றி மத்திய அரசாங்கம்தான் ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசாங்கத்தோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிற மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் இதை எடுத்துச் சொல்லி கவனிக்கச் செய்ய வேண்டும்.

நான் இது சம்பந்தமாக ஒரு மத்திய அமைச்சரைச் சந்தித்துப் பேசினேன். தமிழ்நாட்டிலே எங்களுடைய அரசாங்கம் டேக்கன் ஓவர் செய்திருக்கிற மில்களிலே உற்பத்தியாகிற நூலைக்கூட தமிழ்நாட்டிலே இருக்கிற நெசவாளர்களுக்குக் கொடுப்பதற்கு வழிவகை இருக்கவேண்டுமென்று கேட்டோம். ஆனால் அவர்கள் சொன்னார்கள்; நாங்கள் வோட்டுகளைப் பற்றித்தான் கவலைப்படுகிறோம்; இந்திரா காந்தியின் தலைமைக்கு வெற்றியைப் பெற்றுத் தருவதிலேதான் கவலைப் படுகிறோம்; வோட்டுக்களைப் பெறுவதற்கு எந்த முறையைப் பின்பற்றினால் வோட்டுக்களைப் பெற முடியுமோ அந்த முறையைப் பின்பற்றுவோம் என்று வேடிக்கையாகச் சொன்னார்கள். நல்ல காலம் நான் அதைக் கேட்டபோது அவர் பதில் சொன்னபோது தென்மாநிலங்களைச் சேர்ந்த காங்கிரஸ் அமைச்சர்களும் கூட இருந்தார்கள். இதுபோன்ற பல கோரிக்கைகளை நாம் வைத்திருக்கிறோம். ஆனால் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர்கள் பக்கத்திலே இருக்கிறபோது நல்ல பதில் கிடைக்கும் என்று எதிர்பார்த்தேன்; காங்கிரஸ் அமைச்சர்கள் இருந்தபோதும்கூட அந்த அமைச்சர் வெட்கப்படும்படியான பதிலைச் சொன்னார்கள். தமிழ்நாட்டிலே நாங்கள் எடுத்துக் கொண்டிருக்கின்ற மில்களில் உற்பத்தியாகிற நூலை கைத்தறியாளர்களுக்குக் கொடுப்பதற்குக்கூட எங்கே தடை வந்துவிடுமோ என்ற பயம் இருக்கிறது.

அந்த அமைச்சர் மௌரியா என்பவர்; அந்த அமைச்சர் எப்படி இந்த இலாக்காவை நடத்தப்போகிறார், எதிர்காலத்தில் எப்படி நெசவாளர்களைப் பாதுகாக்கப்போகிறார் என்ற பயம் எனக்கு இருக்கிறது. நண்பர் சுரேந்திரன் அவர்கள்தான் கை கொடுக்கவேண்டும்.

## சத்திரப்பட்டியில் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்.

*345 வினா—திரு. க. சுப்பு: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சத்திரப்பட்டியில் "வீரபாண்டிய கட்டபொம்மன்" நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்குமாறு கோரி அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது?

மாண்புமிகு திரு. பெ. மாதவன்: (அ) வீரபாண்டிய கட்டபொம்மன நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் அமைக்க மதுரையிலுள்ள இராமநாதபுரம் உதவி கைத்தறி இயக்குநருக்கு விண்ணப்பம் வந்தது.

(இ) சங்கம் பதிவு செய்வதற்கு முன்னால் இராமநாதபுரம் மாவட்ட கூட்டுறவு மத்திய வங்கியின் ஒப்புதல் கோரி உதவி இயக்குநர் எழுதியுள்ளார்.

## *Drinking Water Supply for Puthukadai area.*

* 346 *Q.*—THIRU R. PONNAPPA NADAR: Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether there is any proposal to provide drinking water facilities to the Puthukadai Town Panchayat in Munchirai Union, Vilavancode taluk; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) புதுக்கடை, முஞ்சிரை, பார்த்திவபுரம் மற்றும் ஆழங்குளம் ஊராட்சிகளுக்குக் குடிநீர் வழங்க வேண்டி ஆய்வு வேலைகள் செய்யும் பொருட்டு ரூ. 10,800-க்கு ஆய்வு மதிப்பீடு ஒன்றினுக்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் 17-6-1974-ல் ஒப்புதல் அளித்துள்ளது. மேற்கூறிய ஊராட்சிகள் தமது விகிதாச்சார ஆய்வுத் தொகையினை கடந்த ஆண்டு அக்டோபரில்தான் கட்டியுள்ளன. எனவே, ஆய்வு வேலைகளை விரைவில் தொடங்கி முடித்து திட்ட மதிப்பீடு தயாரித்து அனுப்பிவைக்குமாறு தலைமைப் பொறியாளருக்கு குடிநீர் வடிகால் வாரியம் உத்தரவிட்டுள்ளது.





திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, ஆய்வு வேலை தொடங்கியிருக்கிறது என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். இது எப்பொழுது முடிவடையும் என்பதை அறிய விரும்புகிறேன். ஏனென்றால் இது குடிதண்ணீர்ப் பிரச்சினையாக இருப்பதால் அரசாங்கம் அதற்கு அதிகக் கவனம் செலுத்தி விரைவில் நிறைவேற்றிக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, இது குடிதண்ணீர்ப் பிரச்னையானதால் வெகுவிரைவிலே முடிந்துவிடும்.

திரு. என். டென்னிஸ்: தலைவரவர்களே, இதற்கான இன்வெஸ்டிகேஷன் சார்ஜைக் கட்டிப் பல காலமாகிவிட்டது. குடிதண்ணீர்ப் பிரச்னையில் அந்தக் கிராமத்து மக்கள் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சானிடரி கண்டிஷன் மிகவும் மோசமாக இருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற அரசு வழி வகுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, உடனடியாக நிறைவேற்றவேண்டித்தான் அந்த ஆய்வுகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. க. மு. இராசகோபால்: தலைவரவர்களே, குடிதண்ணீர் ஆய்வுக் குழு தேர்ந்தெடுப்பதாகக் கூறுகிறார்கள். அதாவது தண்ணீர் இல்லாத ஊர்களிலேயும் நோய் இருக்கின்ற ஊர்களிலேயும் எடுப்பதாக அறிக்கை வருகிறது. யார் போய் அதைப் பார்க்கிறார்கள், யார் அதற்கு செலக்ஷன் செய்கிறார்கள், கேள்விமுறையில்லாமல் மாவட்ட ஆட்சித் தலைவர் செய்தார், செய்தார் என்ற விளக்கம் வருகிறதே தவிர, என்னுடைய ஊரிலே தண்ணீரே கிடையாது, ஆனால் ஊர் இல்லாத இடத்திலே, தலையில்லைப் பெரும்பாகம் ஊரே கிடையாது; ஆனால் நம்பர் இருக்கிறது, எனவே இதற்கு சரியான முறையில் செய்ய ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அதற்கான துறையிலே, குடிநீர்த் துறையிலே அதிகாரிகளும் இன்னும் ஹெல்த் டிபார்ட்மெண்டிலே இருக்கிறவர்களும் விஷச் சத்து இருக்கிறதா என்று ஆராய்கிறார்கள். தண்ணீர் இருக்கிறதா என்ற ஆய்வை குடிநீர் பொறியியல் துறையிலே இருப்பவர்கள் ஆய்வு செய்கிறார்கள். தண்ணீர் இல்லாத இடத்திலே ஆய்வு செய்வதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அப்படி ஏதேனும் இருந்தால் தனிப்பட்ட முறையிலே குறிப்பு கொண்டுவருவார்களேயானால் அதைப்பற்றி விசாரிக்கலாம்.

திரு. க. உ. எட்மண்ட்: தலைவரவர்களே, ஊராட்சி மன்றங்கள் தண்ணீர் கிடைக்க இன்வெஸ்டிகேஷன் சார்ஜஸ் கொடுக்கிறார்கள். ஆனால் சில பஞ்சாயத்துக்களில் இன்வெஸ்டிகேஷன் செய்த பிறகு அதற்குண்டான ஃபீசிபிலிட்டிஸ்", வாய்ப்பு இல்லை என்று தெரிந்தால்

கொடுக்கப்பட்ட பணம் வீணாகப் போகிறது. ஆகவே இன்வெஸ்டிகேஷன் நடத்தி அதிலே தண்ணீர் கிடைக்கும் கிராமங்களிலே மட்டும் இன்வெஸ்டிகேஷன் சார்ஜ் வாங்க அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, அநேகமாக இப்படிப்பட்ட கேஸ்கள் இதுவரையில் வரவில்லை. அப்படி வருமானால் அதுபற்றி யோசிக்கப்படும்.

## கோட்டூர்—பொங்காளியூர் சாலை.

*347 வினா—திரு. இ. ராமசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா.

பொள்ளாச்சி தாலுக்கா, கோட்டூர்—பொங்காளியூர் வழி தேங்காய்பாறை நெடுஞ்சாலைக்கு தார் போடும் பணி தற்போது எந்நிலையிலுள்ளது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி. தலைவரவர்களே, தார் போடும் பணி முடிவடைந்துள்ளது.

## பொள்ளாச்சி நகராட்சி ஊழியர் குடியிருப்பு.

* 348 வினா டாக்டர் எச் வி. ஹாண்டே: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?

(அ) பொள்ளாச்சி நகரமன்றம் நகராட்சி ஊழியர்களுக்கு வீடு கட்டுவதற்கென நிலம் வாங்கத் தீர்மானித்துள்ளதா?

(இ) ஆமெனில், ஏற்கனவே அரசாங்கம் மூலம் கொடுக்கப்பட்ட நிலத்தினை இதற்கென உபயோகிக்காமல் தற்சமயம் புதிதாக நிலம் வாங்கக் காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) பொள்ளாச்சி நகராட்சிக்கு ஏற்கனவே அரசாங்கத்தின்மூலம் இதற்கென அரசு நிலம் எதுவும் ஒதுக்கப்படவில்லை.

## குடிசைப் பகுதி மாற்றுவாரிய குடியிருப்புகள்.

*349 வினா: டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—?

(அ) குடிசை மாற்றுவாரியத்தால் கொடுக்கப்பட்டுள்ள வீடுகளில் குடியிருப்போர் ஊதியத்திற்கு ஏற்றாற்போல் வாடகை செலுத்த வேண்டுமென ஆணையிடப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் காரணங்கள் யாவை?



மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) ஆம்.

(இ) குடிசைப்பகுதி மாற்று வாரியத்தால் ஒதுக்கீடு செய்யப்படும் குடியிருப்புகளில் தினக்கூலி பெறுபவர்களும், அரசாங்கத்திலோ அல்லது பொது, தனியார் நிறுவனங்களிலோ நிரந்தரமான மாத வருமானம் பெறுபவர்களும் உள்ளனர். இவர்கள் வாரியத்திற்கு செலுத்தும் ரூபாய் 10-லிருந்து ரூபாய் 15-க்குட்பட்ட லைசென்சு தொகையைக் காட்டிலும் அதிகமான வாடகைப்படி தங்கள் அலுவலகங்களில் பெறுகின்ற காரணத்தால் இவர்களுக்கு வீட்டு லைசென்சு தொகை ஊதியத்திற்கேற்ப நிர்ணயம் செய்து வசூலிப்பது நியாயமானதாகக் கருதப்பட்டது.

திரு. எம். சுரேந்திரன்: சார், இந்த வாடகை வசூலிப்பது முதலில் 10 ரூபாய் என்று இருந்தது. மறுபடியும் 15 ரூபாய் என்று ஆக்கப்பட்டது 15 ரூபாய் அளிப்பதால் மின்சார வசதியும் செய்து தரப்படும் என்று சொல்லப்பட்டது. இப்பொழுது வருவாய் அடிப்படையிலே வசூலிப்பதாக சொல்லப்படுகிறது. இந்தக் குடிசைகளிலே இருந்தவர்கள் ஏழைகள் என்பதால் அவர்களுக்கு வேறு வீடுகள் கட்டித் தரப்படுகின்றன. ஆனால் இப்படி ஒவ்வொரு நாளும் வாடகையை உயர்த்திக் கொண்டே போகிறார்கள். அதேநேரத்தில் குடிசை மாற்றுவாரிய வீடுகளில் இருப்பவர்கள் அரிசனங்களாக இருந்தால் அவர்களுக்கும் [illegible] த முறை கையாளப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, குடிசையிலே இருந்தவர்கள் மாற்று மாடி வீடுகளுக்கு வருபவர்களுக்கு வாடகை இல்லை. ஆனால் அரசாங்க அலுவலகங்களிலே பணிபுரிபவர்கள் இந்த வாடகை வீடுகளை வேண்டுமென்று கேட்டு, பியூன்களாகவும், கடைநிலை ஊழியர்களாகவும் இருப்பவர்கள் கேட்டு வந்தால் அவர்கள் அரசாங்கத்திலிருந்து வீட்டு வாடகைப்படி பெறுகிறார்கள்; அவர்களுக்கு 10 சதவீதம் வசூலிக்கப்பட்டு வருகிறது. ஏற்கனவே குடிதண்ணீர், மின்சாரம் இல்லாத வீடுகளுக்கு 10 ரூபாய் வாடகை வசூலிக்கப்பட்டது. குடிதண்ணீர் வசதி மட்டும் செய்து கொடுத்தால் 12 ரூபாய் என்றும்; குடிதண்ணீரும் மின்சாரமும் சேர்த்துக் கொடுத்தால் 15 ரூபாய் என்றும்தான் வசூலிக்கப்படுகிறது. அநேகமாக குடிசை மாற்று வாரியம் சமுதாய சேவை செய்து வருகிறதே தவிர மற்றபடி இலாபநோக்கோடு இந்தக் காரியங்கள் ஆற்றப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல்: தலைவரவர்களே; குடிசை மாற்று வாரியத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கும் வ. உ. சி. நகர் அழகாகவும் நன்றாகவும் இருக்கிறது. ஆனால் அங்கே லைட் வசதி இல்லாமல் இருப்பதால் கிராமங்களில் இருப்பதைப்போல் மினுக் மினுக் என்று இருக்கிறது. இப்படியிருக்கும் இடங்களில் விளக்கு போட்டுத்தர அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, நான் ஏற்கனவே சொன்னதைப்போல 15 ரூபாய் தந்தால் லேட்டும் தருகிறோம்; குடி தண்ணீரும் தருகிறோம். குடிசை மாற்று வாரிய வீடுகளில் வாழ்பவர்களின் வாழ்க்கையின் மேம்பாடு மேலும் உயர்ந்திருக்கிறது என்பதை மட்டும் கனம் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM: Sir, is the Hon. Minister aware of the fact that the Government servants have to pay rent which is equivalent to House Rent Allowance plus 10 per cent of their pay. But the persons who are non-Government servants and who get the same income and who live in the same place have to pay only Rs. 10 or Rs. 15. So, will the Hon. Minister consider the question of deducting only H.R.A. from the Government servants and not 10 per cent of their pay also?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, எச். ஆர். ஏ. என்பது வீட்டு வாடகைப்படி. வீட்டு வாடகைப் படி பெற்றுக்கொண்டு அதற்குமேலும் நான் தர மாட்டேன் என்று சொல்வது நியாயமாகத் தெரியவில்லை. ஆகவே, கடைநிலை ஊழியர்களுக்கு வீட்டு வாடகைப்படி தனியாக வருகிறது. அதைத் தருவதுதான் முறையாக இருக்கும். இல்லாவிட்டால் முறைகேடுகள் நாட்டிலே மலிந்து விடும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. த. சோலையா.—தலைவரவர்களே, குடிசையிலே இருப்பவர்களுக்கு மாடி வீடு கட்டி மாடியிலே ஏற்றி வைத்திருக்கிறீர்கள். அப்படி மாடியிலே இருப்பவர்கள் தங்கள் வீட்டை வாடகைக்கு விட்டு விட்டு வேறொரு குடிசைக்குப் போவதாகச் செய்தி வருகிறதே. அப்படி ஏதாவது அரசுக்கு வந்திருக்கிறதா? இல்லையென்றால் அப்படி வந்தால் அதற்கான நடவடிக்கை எடுப்பதற்கு திட்டங்களை அரசு வைத்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட முயற்சிகள் சிலபேரால் மேற்கொள்ளப்பட்டது உண்மை. ஆனால் இப்பொழுது தவிர்க்கப்பட்டு சரியானபடி கண்காணிக்கப்படுகின்றன.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, குடிசைமாற்று வாரியத் திட்டத்தின் மூலம் கட்டப்பட்ட வீடுகளிலே சாதாரண தினக் கூலிகளும், ஏழை அரிசனங்களும் இருக்கிறார்கள். அவர்களிடம் 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது. அவர்களிடத்திலேயிருந்து வசூலிக்கும் அந்த வாடகையைக் குறைக்க உத்தேசிக்குமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இந்தக் குடிசை மாற்று வாரியத்தால் கட்டப்படும் வீடுகளின் வாடகையைக் கணக்கிட்டு பார்த்தால் கட்டப்படும் 10,000 ரூபாயைக் கணக்குப் போட்டுப் பார்த்தால் அந்த அசலை பார்த்தால் 69 ரூபாய் வருகிறது. 69 ரூபாய் வாடகை வசூலிக்கப்படவேண்டும். ஆகவே 10 ரூபாய்க்கும் குறைவாக



வாடகை என்றால் எப்படி வசூலிப்பது, எப்படி நிர்வகிப்பது என்று எனக்குப் புரியவில்லை. ஆகவே, அந்த வகையிலே நடவடிக்கைகளை மேற்கொள்வது அரசுக்கு இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

* 350 வினா—திரு. என். இட்டப்பா: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா?—

(அ) சென்னை நகரில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் காவல் துறையினருக்கு தவணை திட்டத்தின்கீழ் குடியிருப்புகள் வழங்கிடும் செயற்குறிப்பு உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: (அ) (இ) தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத் தலைவர் காவல் துறையினருக்கு குடிசைப் பகுதி மாற்றுத் திட்டத்தின்கீழ் கட்டப்படும் குடியிருப்புகளை தவணைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு செய்யலாம் என பரிந்துரை செய்தார். அரசு அச்செயற்குறிப்பை ஆய்ந்து, அதனை ஏற்றுக்கொள்ள இயலவில்லை என்று வாரியத் தலைவருக்கு தெரிவித்துள்ளது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, இந்தத் திட்டம் மற்ற மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அப்படிப்பட்ட எண்ணம் தற்பொழுது அரசினிடத்தில் இல்லை.

திரு. தி. பொன்னுமலை: தலைவரவர்களே, சென்னை நகரத்திலே இருப்பதைப்போல கிராமப்புறங்களிலேயும் இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, கிராமப்புறங்களுக்குத் தனியான வீட்டு வசதித் திட்டம் இருக்கிறது. குடிசை மாற்று வாரியம் போன்ற திட்டங்கள் தேவையில்லை. நான் ஏற்கனவே இந்த மன்றத்தில் சொல்லியிருக்கிறேன். 4,000 ரூபாய் வரையிலே அரசு கடன் தருகிறது. 3 சென்ட், 5 சென்ட் நிலம் வைத்திருந்தால் கடன் பெற்று சொந்தத்திலே வீடு கட்டிக் கொள்வதுதான் அவர்களுக்கும் ஏற்றதாக இருக்கும், அரசுக்கும் நல்லதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*Strike in Sathya Studios.*

* 351 Q.—THIRU A. PARANDHAMAN: Will the Hon. the Minister for Labour be pleased to state:

(a) whether it is a fact that the workers of Sathya Studios, Madras were on strike during August 1974; and

(b) if so, the steps taken by the Government to settle the issue?

[1975 மார்ச் 17

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம்.

(இ) நிர்வாகம் 24—8—1974 முதல் கதவடைப்பு செய்தது. அந்த ஸ்டுடியோவை 11—11—1974 முதல் மூடிவிடுவதாக 10—9—1974 அன்று அறிவிப்பு கொடுக்கப்பட்டது. சென்னை 4வது வட்ட தொழிலாளர் துறை அலுவலரும் மற்றும் சென்னை தொழிலாளர் நலத் துறை உதவி ஆணையரும் சமரச பேச்சுவார்த்தைகள் சத்தியா ஸ்டுடியோ நிர்வாகத்தோடு நடத்தினர். நிர்வாகம் 11—11—1974 முதல் ஸ்டுடியோவை மூடிவிட்டது. எனவே நிறுவனத்தை மூடியது பற்றியும், 75 தொழிலாளர்களின் வேலைநீக்கம் மற்றும் 1973-74 ஆண்டுக்கான போனஸ் ஆகிய பிரச்சனைகளை சென்னை தொழில் நடுவர் மன்றத்தின் தீர்ப்புக்கு அரசு அனுப்பியுள்ளது.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, இந்த சத்தியா படப் பிடிப்பு நிலையத்தில் சிலர் உண்ணாவிரதம் இருந்து இறந்து விட்டதாகக் கேள்விப்படுகிறேன். அப்படி உண்ணாவிரதம் இருந்து இறந்த தொழிலாளர்களின் குடும்பத்திற்கு நமது அரசு ஏதாவது உதவி செய்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-30.)

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கனவே சொன்னபடி தமிழக முதல்வர் அவர்கள் அதற்கான உதவிகளைச் செய்திருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : குறிப்பிடப்பட்டிருக்கும் சத்தியா ஸ்டுடியோஸ் இப்போது திறந்திருக்கிறதா ? இயங்கிக்கொண்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அது பற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. கோவை செழியன் : 24—6—1974–ல் சத்தியா ஸ்டுடியோஸ் சம்பந்தமான கன்சிலியேஷன் ஒன்று அரசாங்கத்தால் கூட்டப்பட்டு யூனியன் சார்பில் யாரும் வராததால் அந்த மானேஜ்மெண்ட் அந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட முடியாத நிலைமை ஏற்பட்டது என்பதை அரசு அறியுமா ? அதற்குப் பிறகும் கன்சிலியேஷன் நடந்து கொண்டிருக்கும்போது ஸ்ட்ரைக்கை தொழிலாளர்கள் சட்டவிரோதமாக ஆரம்பித்தது அரசுக்குத் தெரியுமா ? சத்தியா ஸ்டுடியோ விவகாரத்தில் சில அரசியல்வாதிகள் வேண்டுமென்றே . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது முறையல்ல. முதலிலே கேட்ட கேள்வி . . . .

திரு. கோவை செழியன் : செத்ததைப் பற்றிக் கேட்டார்களே, அதை அனுமதித்தீர்களே. உயிரோடு இருக்கும் பிரச்சினையைப் பற்றிக் கேட்கக் கூடாதா ? சத்தியா ஸ்டுடியோ ஸ்ட்ரைக்கில் உண்ணாவிரதம் இருந்து யாராவது இறந்தார்களா ? என்று கேட்கப்பட்டதே



1975 மார்ச் 17]

அதை அனுமதிக்கும்போது இதை ஏன் அனுமதிக்கக்கூடாது ? சபாநாயகர் நீதியோடு நடக்க வேண்டும். ஒருவர் கேள்வி கேட்கிறார், உண்ணாவிரதம் இருந்து யாராவது இறந்தார்களா என்று. அதை அனுமதிக்கிறீர்கள். அதற்கு அமைச்சர் பதில் சொல்கிறார். சத்தியா ஸ்டுடியோவில் நடந்த போராட்டம் அரசியல் ரீதியாக நடத்தப்பட்ட போராட்டம் என்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் இப்போது கேட்ட கேள்வியை அனுமதிக்கிறேன். முதலிலே போட்ட கேள்வி அப்படி அல்ல.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : சத்தியா ஸ்டுடியோஸ் என்பதால் அரசியல் கலக்கத் தேவையில்லை. தற்போது இந்தப் பிரச்சினை நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டு நடுவர் தீர்ப்பு வருகிற வரையில் சூடு, சுவை சேர்க்காமல் இருப்பது நல்லது. அந்த வகையில் நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது என்று தெரிவித்துக் கொள்கிறேன். எல்லாத் தொழிலாளர்களும் கேட்டதுபோல் கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். அந்த வகையில் இதிலே புதுமையான போராட்டங்களுக்கு தேவை எதுவும் இல்லையென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

THIRU B. VENKATASWAMY: May I know from the Hon. Minisrer whether any alternative jobs had been found for these workmen who had been thrown out of employment and who are suffering very much.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தற்போது அப்படிப்பட்ட நடவடிக்கை எதுவும் இல்லை.

திரு. நா. வீராசாமி : சத்தியா ஸ்டுடியோ தொழிலாளர்கள் எதற்காகப் போராட்டம் நடத்தினார்கள் ? சம்பள உயர்வு வேண்டுமென்றால் ஏற்கனவே எவ்வளவு சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தார்கள், எவ்வளவு சம்பள உயர்வு கேட்டார்கள் ? அப்படிக் கேட்ட காரணத்தால் சத்தியா ஸ்டுடியோஸ் மூடப்பட்டிருக்கிறதா ? இந்தப் பிரச்சினைகளின் காரணமாக சத்தியா ஸ்டுடியோஸ் மைசூருக்குக் கொண்டுபோகப்பட இருக்கிறது என்று பத்திரிகைகளில் வருகிற செய்திகள் உண்மையா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்த ஸ்டுடியோ மைசூருக்குப் போகப் போகிறதா என்பது பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். வைக்கப்பட்டிருக்கும் கோரிக்கைகள் — கார்பெண்டர், மெஷின்மேன், 100—10—200. மெஷின் ஹெல்ப்பர், பெயிண்டர் ஹெல்ப்பர் 80—7½—125. வாச்மென் 75—7½—175. எஸ்.பி. பெயிண்டர் 120—10—220. கார்ட்பெண்டர் மேஸ்திரி 200—20—400 என்ற அளவிலே கேட்டிருப்பதாக அவர்கள் கோரிக்கையிலே இருந்து அறியக்கிடக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : சத்தியா ஸ்டுடியோஸ் நிலம் அரசாங்கத்திற்குச் சொந்தமானது என்று கூறப்படுகிறது. அரசாங்கம் அந்த நிலத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்ளுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தனிக் கேள்வி போடவும்.

திரு. கே. ரங்கநாதன் : சத்தியா ஸ்டுடியோஸ் தொழிலாளர்களுக்குச் சொந்தமாக்கப்படும் என்று சொல்லப்பட்டு உறவினர்களுக்குத் தான் சொந்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது உண்மையா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதுபற்றிய தகவல் தற்போது என்னிடத்தில் எதுவும் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : இந்த ஸ்டுடியோவில் பணியாற்றக்கூடிய தொழிலாளர்கள் தங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்று குறிப்பிடுகிறார்கள். அரசாங்கமும் இதுபற்றிக் கவலை கொள்ளவில்லை என்று கூறுகிறார்கள். இது குறித்து அமைச்சர் அவர்கள் கருத்து என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தொழிலாளர்களுக்குத் தகுந்த பாதுகாப்பு தொழிலாளர் நலத்துறை மூலமாக அளிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சொன்னபடி நடுவர் தீர்ப்புக்கு விடப்பட்டிருக்கிறது. தீர்ப்பு வந்தவுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கோவை செழியன் : இந்தத் தொழிலாளர்கள் சம்பந்தமான கன்சிலியேஷனில் தொழிற்சங்கத்தைச் சேர்ந்தவர்கள் 24—6—1974-ல் முக்கூட்டுப் பேச்சுக்கு வரவில்லை என்பது உண்மையா ? இன்றைக்கு ஓர்க்கர்ஸ் கம்பைன்ஸ் என்ற பெயரிலே சத்தியா ஸ்டுடியோ தொழிலாளர்களுடைய பெயரால் லீசுக்கு விடப்பட்டிருப்பதை அரசு அறியுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கனவே சொன்னது போல பிரச்சினைகள் நடுவர் தீர்ப்பில் இருக்கின்றன. லீசுக்கு விடப்பட்டிருக்கிறதா இல்லையா என்ற தகவல் என்னுடைய கவனத்திற்குக் கொண்டுவரப்படவில்லை.

திரு. கு. காமாட்சி : இந்தமாதிரி தொழிலாளர்கள் பிரச்சினையில் முடிவுக்கு வராத ஸ்தாபனங்களை நேஷனலைஸ் பண்ண அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இது நல்ல ஆலோசனை.

## சேலம், கோவை மாவட்டங்களில் பேருந்து உரிமங்கள்

* 354 வினா—திரு. க. சுப்பு : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம், கோவை மாவட்டங்களில் நடப்பு ஆண்டில் காலாவதியாக இருக்கும் பேருந்து உரிமங்கள் எத்தனை ?

(இ) அவற்றில் புதுப்பிக்கப்பட உள்ள உரிமங்கள் எத்தனை ?



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :

| | சேலம் மாவட்டம். | கோவை மாவட்டம். |
|---|---|---|
| (அ) 1974-ம் ஆண்டில் காலாவதியான பேருந்து அனுமதிச் சீட்டுகள். | 253 | 504 |
| (இ) அவற்றில் புதுப்பிக்கப்பட்டவை .. | 229 | 355 |

## உதகை—சென்னை விரைவுப் பேருந்துகள்.

* 355 வினா—திரு. கு. அ. பொம்மன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உதகையிலிருந்து சென்னைக்கு துரித பஸ் விடுவதற்கான செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போதிலிருந்து விடப்படும் ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) தற்போது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கு. அ. பொம்மன் : ஏற்கனவே, சீசன் காலத்தில் சென்னையில் இருந்து உதகைக்கு துரித பஸ் விடப்பட்டிருந்தது நின்றுவிட்டது. மறுபடியும் சீசனுக்கு என்று இல்லாமல் நிரந்தரமாக பஸ் ஓட்ட அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : சீசன் காலத்தில் மறுபடியும் விடப்படும். ஆனால் நிரந்தரமாக விடப்படமாட்டாது.

புலவர் சி. பழனிச்சாமி : சென்னையிலிருந்து பழனிக்கும், பழனியிலிருந்து சென்னைக்கும் காலை, மாலை இரண்டு நேரங்களிலும் பஸ்கள் வந்து போகின்றன. காலையில் வருகிற பஸ் காலையிலேயே திரும்புகிறது. மாலையில் வருகிற பஸ் மாலையிலேயே திரும்புகிறது. இதனால் சில சமயங்களில் பேருந்துகள் இடைவெளியில் நின்று விடுவதோடு கூட தாமதமும் ஆகிறது. ஆகவே, இதைத் தவிர்க்க காலையில் வருகிற பஸ் மாலையில் திரும்பவும், மாலையில் வருகிற பஸ் காலையில் திரும்பவும் ஆன முறையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த விவரம் சரியாக இருக்குமானால் அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசிக்கும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சென்னையிலிருந்து புறப்படுகிற விரைவு வண்டி மதுரை, செங்கோட்டை வழியாக கொல்லத்திற்குப் போகிறதா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : அண்டை மாநிலங்களோடு ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி அண்டை மாநிலங்களில் உள்ள முக்கியமான நகரங்களுக்கு—கேரளத்தில் கொல்லம், கொச்சின், கள்ளிக்கோட்டை, திருவனந்தபுரம் போன்ற பகுதிகளுக்கும், கர்நாடகத்தில் மங்களூர், மைசூர், பெங்களூர் போன்ற முக்கியமான நகரங்களுக்கும் பஸ்கள் மூலம் இணைப்பு ஏற்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு அண்டை மாநிலங்களோடு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது. கேரள மாநிலத்தோடு இன்னும் ஒப்பந்தம் முடிவு பெறவில்லை. ஒப்பந்தம் முடிவு பெற்றவுடன் ஒருவேளை அந்த வழித்தடம் இடம் பெறலாம்.

THIRU B. VENKATASWAMY : Almost all the district headquarters are connected by express service to Madras City. May I know from the Hon. Minister for Transport whether he would consider the question of having an express service from Ooty to Madras since a large number of people are coming to Madras daily from Ooty ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : The main difficulty in our running a through express bus between Ooty and Madras is this The sector between Coimbatore and Ooty is suitable only for a short-wheel based bus whereas between Coimbatore and Madras we can have a long-wheel based bus. So if we want to have a through bus between Madras and Ooty, it may not have sufficient pick up in Ooty area. We must have a change-over at Coimbatore and have a short-wheel based bus. But already the sector Coimbatore-Ooty is well served by Cheran Transport Corporation buses and between Madras and Coimbatore the route is well served by express buses, already.

திரு. எஸ். வடிவேல் : கடந்த 8-ம் தேதி வேதாரண்யத்திற்கு புறப்பட்ட வண்டியை லைட் இல்லை என்ற காரணத்தால் இரண்டரை மணி நேரம் சைதாப்பேட்டையில் நிறுத்தி வைத்தார்கள். லைட் வாங்கக்கூட டிரைவர்கள் கண்டக்டர்களுக்கு அனுமதி கிடையாதா? சென்னையில் வந்து எடுத்துச் செல்ல வேண்டுமென்ற நிலையில் மிகுந்த இடையூறாக இருக்கிறது. தயவுசெய்து இந்தக் குறைபாடுகளைப் போக்கி துரிதமாகப் போக அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு.ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற விவரம் புதிதான விவரம். ஆனால் உண்மையில் விரைவுப்பேருந்துகளை ஆய்வு செய்வதில் ஓரளவுக்கு சிரமைக்கின்ற கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது. அது, ஏற்கெனவே சொன்னபடி அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : சார், உதகைக்குச் செல்கின்ற வசதி உள்ளவர்கள காரில் செல்கிறார்கள். வசதி இல்லாதவர்கள் திண்டாடுகிறார்கள். எனவே, சீசன் காலங்களில் ஏதாவது கன்செஷன் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, கார் வசதி இல்லாதவர்கள் பஸ்ஸில் போகிறார்கள் என்று சொன்னார்கள். பஸ்ஸில் போவதே கன்செஷன்தான்.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there is a long pending request to ply a bus between Madras and Kolar Gold Fields. I have also represented to the Hon. Minister about it. May I know from the Hon. Minister for Transport whether he will think about it ?

THE HON. THIRU S. RAMACHANDRAN : Sir, the difficulty is that it has been notified as the nationalised area by the Government of Karnataka without making even a provision for other State Transport undertakings to run their buses. The Government of Karnataka has been requested to amend their notification so that the buses belonging to other State Governments are not affected and the Karnataka Government is taking action. As soon as they finalise, we will be in a position to connect Kolar Gold Fields, with a bus.

திரு எஸ். நல்லசாமி : தலைவரவர்களே, சென்னை—திருச்சி விரைவு பேருந்துகளை கரூருக்கும் நீட்டிக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்றுக் கொள்ள இயலாமைக்கு வருந்துகிறேன்.

திரு. கோவை செழியன் : தலைவரவர்களே, ஊட்டியிலிருந்து சென்னை கிட்டத்தட்ட 400 கிலோ மீட்டர்கள் இருக்கின்றன. நிறைய பேசஞ்சர்கள் சீசன் காலத்தில் போய் வருகிறார்கள். வசதி உள்ளவர்கள் காரைக் கூட போய் வருகிறார்கள். அந்த பஸ் நீண்ட தூரம் போகின்ற காரணத் தால், அந்த பஸ் ஏர் கண்டிஷன் செய்யப்படுமா? சார்ஜ் கொஞ்சம் அதிகமாக இருந்தாலும் பரவாயில்லை. அத்தகைய யோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அத்தகைய ஒரு யோசனை அரசாங்கத்திடம் உள்ளது.

திரு. ஜெ. ஜெபர்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்திலிருந்து இப்போது அண்டை மாநிலங்களாகிய, கேரளா, மைசூர், ஆந்திரா ஆகிய மாநிலங்களுக்கு நமது பஸ்கள் போய்க் கொண்டிருக்கின்றன. அதேபோல் ஸ்டேட்ஸ் என்ற முறையில் எல்லா மாநிலங்களிலும் ஒன்று போல தொழிலாளிக்கு ஊதியம் கொடுக்கப்படுமா? அப்படிப்பட்ட ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, எல்லா வற்றிற்கும். ஒரே மாதிரியாக இருக்க வேண்டும் என்பதை மாண்புமிகு

உறுப்பினர் ஒத்துக்கொள்வாரானால் நான் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். ஆந்திராவில் கிலோ மீட்டருக்கு 5 பைசா அல்லது 5½ பைசா வசூலிக்கிறார்கள். கர்நாடகத்தில் 4¼ அல்லது 4½ பைசா வசூலிக்கிறார்கள். எல்லாவற்றையும் ஒன்றாக ஆக்கிக் கொள்வதற்குத் தயார் என்றால் இதில் ஆட்சேபணை இல்லை.

திரு. எஸ். வடிவேல்: பேரவைத் தலைவரவர்களே, பல்லவா, சோழன் மற்றுமுள்ள போக்குவரத்துக்களில் டிரைவருக்கும் கண்டக்டருக்கும் ஊக்க போனஸ் கொடுக்கப்படுகிறது. அது போல ஊக்க போனஸ்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உதகையிலிருந்து சென்னைக்கு துரித பஸ் விடப்படுவது பற்றி கேள்வி கேட்கப்பட்டிருக்கிறது. இதில் ஊக்க போனஸ் பற்றி கேள்வி எழுப்புகிறார்கள். அது எந்த முறையில் மூலக் கேள்விக்கு சம்பந்தப்பட்டது?

திரு. எஸ். வடிவேல்: ஓரளவு தொடர்புள்ள கேள்வி என்பதால் தான் கேட்கிறேன். அந்த மாதிரி, ஸ்டேட் டிரான்ஸ்போர்ட் தொழிலாளர்களுக்கும் ஊக்க போனஸ் வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல, அரசு நடத்துகின்ற பேருந்துகளிலுள்ள தொழிலாளர்களிடத்தில் இப்படிப்பட்ட மனக்குறை ஏற்பட்டிருக்கிறது. ஓரளவுக்கு விரைவுப் பேருந்துகள் சரிவர இயங்காமலிருப்பதற்கும் இது ஒரு காரணமாக இருந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி அரசு ஆலோசித்து விரைவில் நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி எண்கள் 352 & 353—அமைச்சர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின் மீது முதலமைச்சர் பேசியதை நாளிதழ்களில் விளம்பரமாக செய்தித் துறை வெளியிட்டுள்ளது குறித்து.

DR. H. V. HANDE: On a point of order, Sir. Under rule 83, sub-rule (3), I raise a very valid point of order in respect of interpretation and enforcement of the rules or such Articles of the Constitution as regulate the business of the House and raise a question which I feel, is within the cognisance of the Speaker. Under this particular clause, I wish to raise this very valid point and I request the Hon. Speaker o very carefully listen to me and give a specific ruling on my point.



Normally, whenever Assembly discussions take place, the proceedings are reported in the newspapers and in the Chamber we have also provided for the Reporters a Reporters Gallery also and they report whatever happens here and they must be correctly reported, and the reporters report correctly also. But yesterday morning, I was rather surprised to see a very, very new thing adopted. This sort of thing has not been seen in any part of India. Even in respect of Parliament Proceedings such a thing has not happened, namely, the speech of the Hon. Chief Minister of our State on the adjournment motion which was raised by us that day had been advertised. In the process of such advertisement, I also was surprised to see that the Chief Minister had 'replied' to the adjournment motion. It was only the Hon. Speaker who wanted it to be explained how the matter came under adjournment motion and each member gave his explanation and the Hon. Chief Minister did not 'reply' but the Hon. Chief Minister also explained. That has been advertised and I do not know whether the Hon. Chief Minister is aware of it. It was published by the Information and Public Relations Department of the Government of Tamil Nadu. Sir, I would like to know whether this has your authority.

Any speech made in the House is not advertised, but it is only reported. That is not advertised anywhere in India. Everywhere, it is only reported and even in the matter of reporting this, the first mistake is the head line is wrong and secondly whenever an advertisement takes place, it shall be advertised properly. The Hon. Speaker has given a number of rulings that whenever something is reported, it should be in such a way that whatever points are mentioned should find a place.. அதற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். நான் அதைக்கூட சொல்லவில்லை. Other members have also spoken and even they do not find a place in that.

Therefore, there are three points. First of all, the caption is wrong; secondly, whatever the Opposition Members have spoken has not found a place and thirdly, there is no precedent for such a thing. And finally, if this is allowed by the Hon. Speaker, it will become a practice for the Information and Publicity Department to spend lavishly thousands of rupees on such a thing. Actually, there was no necessity for such an advertisement. The Hindu and the Express had given and rightly so—banner head lines on the front page and I do not oppose that, it is right, because the Hon. Chief Minister is the most important person. But this sort of advertisement, if that is resorted to, it will open the flood gates hereafter for that department to recklessly spend on similar advertisements.

There is no such case in Lok Sabha. I would like to know on my point of order which I have raised for your consideration–I will sum up and request your considered ruling—I request to know whether the Hon. Speaker is aware of this, whether the Hon. Speaker would allow such things.

இது புது மாதிரியான நிலை. இதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் ஆதரிக்கிறீர்களா? அல்லது உங்களுடைய அனுமதியின் பேரில் தான் இது நடக்கிறதா? இதை தவறு இல்லை என்று கூறுகிறீர்களா? என்பதை உங்கள் தீர்ப்புக்கு விட்டு விடுகிறேன். நீங்கள் என்ன தீர்ப்பு கொடுத்தாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருக்கிறேன். எனது மனதுக்கு இது சரியானதாக இருக்கிற மாதிரி படவில்லை.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: Sir, I would refer to rules 234 and 237. The first says 'an official report of the proceedings of the Assembly shall be published under the supervision of the Secretary and shall be made available to every member'. Then, rule 237 says 'the Speaker may authorize the printing, publication, distribution or sale of any paper, document or report in connection with the business of the House or any paper, document or report laid on the table of the House or presented to the House or a Committee thereof'. So, it must be done with the authority of the Speaker. We would like .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அபீஷியல் ரிபோர்ட்டைப் பற்றி பேச்சு இல்லை. பப்ளிகேஷன் பற்றிச் சொல்லுங்கள் என்று சொல்லுகிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: That is the business of the House. Yes, the Speaker may authorise the printing, publication..........in connection with the business of the House. Now, the reply of the Hon. Chief Minister is part of the business of the House and the Speaker must authorise its publication. Otherwise, it will become almost a mania of all members to do so and I can do so with my photo and it will become almost a commercial venture. Therefore, I would like to know how this speech was permitted to be published with the photo of the Chief Minister as an advertisement in the papers.

That would become a bad precedent for others. So far this has not happened in Tamil Nadu. We want to know, whether this has been permitted and if it has been permitted, whether it was permitted by you or somebody else and whether your authority has been abrogated?

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவரவர்களே, 15-ம் தேதி சி.எம்.சி. மருத்துவ மனை தகராறு காரணமாக இந்த மன்றத்தில் ஒத்தி வைப்பு. தீர்மானத்தின் மீது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த





பதில் உரை விளம்பரமாக கொடுக்கப்பட்டு இருப்பது குறித்து என்னுடைய கட்சியைச் சார்ந்த உறுப்பினர் டாக்டர் ஹாண்டே அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்சினையைக் கிளப்பியிருக்கிறார்கள். அதை விட முக்கியமான காரணம் இதே மக்கள் தொடர்பு விளம்பர இலாகாவிலிருந்து ஒரு புக்-லெட் கூட கொடுத்து இருக்கிறார்கள். வேலூரில் 10 பக்கங்கள் கொண்ட அந்த சிறிய புத்தகம் நேற்றைய தினமே கொடுக்கப்பட்டு இருக்கிறது. 15-ம் தேதி இந்த மன்றத்தில் பதில் சொல்லியிருக்கிறார்கள். 16-ம் தேதி அந்தப் பேச்சு முழுவதும் "வாபேடிம்"—சுருக்கம்கூட அல்ல—முதலமைச்சர் என்ன பேசினாரோ அந்தப் பேச்சை ஒரு வார்த்தை விடாமல் அப்படியே சின்ன புத்தகமாக அச்சு அடித்துக் கொடுத்து இருக்கிறார்கள். இதை மக்கள் தொடர்பு விளம்பர இலாகாதான் செய்து இருக்கிறார்கள். இதற்கும் நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் அனுமதி பெறப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

திரு நா. வீராசாமி: தலைவரவர்களே, இந்தச் சட்ட மன்றத்திலே விவாதிக்கப்படுகிற விவாதங்கள் பத்திரிகைகளில் வெளிவருகிறது. சில பத்திரிகைகள் ஒரு தரப்பு வாதங்களை மட்டும் வெளியிடுகிறார்கள். இரு தரப்பு வாதங்களையும் வெளியிட வேண்டுமென்று தாங்கள் பல முறை தீர்ப்பு கொடுத்து இருக்கிறீர்கள். முதலமைச்சர் அவர்கள் இந்த நாட்டின் முக்கியமான பிரச்சினை பற்றி ஒரு விரிவான அறிக்கையை இந்த மன்றத்தில் வைத்ததற்குப் பின்னால் வேண்டுமென்றே சில பத்திரிகைகள் முழு விவாதத்தையும் வெளியிடாமல் முதலமைச்சரின் பேச்சை 2—3 வரி கூட போடாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை பத்திரிகைகள் மத்தியில் இருப்பதால், ஒரு நாட்டின் முக்கியமான பிரச்சினை குறித்து, அகில இந்திய அளவுக்குப் போய் இருக்கக்கூடிய பிரச்சினை குறித்து, அரசாங்கத்தின் உண்மை நிலையை முதலமைச்சர் அவர்களின் உரையை அரசாங்கத்தின் இலாகா நாட்டு மக்களுக்கு உண்மை நிலையைத் தெரிவிக்கவேண்டுமென்பதற்காக வெளியிடுவதில் என்ன தவறு இருக்கிறது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன இருக்கிறது? உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன என்பதை மாத்திரம் சொல்லுங்கள்.

திரு. நா. வீராசாமி: என்னுடைய பாயிண்ட் ஆப் ஆர்டர் என்னவென்றால் நீங்கள் அப்படி ஒரு தீர்ப்பு கொடுத்து இருக்கிறீர்கள், ஆனால் இந்த மன்றத்தில் அனுமதிக்கப்பட்டு இருக்கும் பல பத்திரிகைகளின் நிருபர்கள் முதலமைச்சர் அவர்கள் அளித்த பதில் உரையை முறைப்படி வெளியிடவில்லை. எதிர்க்கட்சிகள் சார்பில் எடுத்து வைக்கப்பட்ட விவாதங்களை பெரிது படுத்தி, முதலமைச்சர் அவர்கள் சொன்ன பதிலை இப்படி வெளியிடாமல் இருப்பது முறைதானா?

திரு. கோவை செழியன்: நிருபர்களைக் குறை சொல்லிப் பேசலாம

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பத்திரிகையைப் பற்றித்தான் பேசினுர்.

THIRU R. PONNAPPA NADAR: Sir, the point of order that has been raised by the hon. Member, Dr. Hande, requires careful scrutiny Whether the publication of the matter by the Publicity Department is necessary or not, is a matter which will have to be considered.

The C. M. C. issue was a burning issue and various reports have occurred in the Press. On behalf of the Management certain publications were made and on behalf of the Government the Hon. Chief Minister gave his statement. But is it necessary that the whole speech should be reported as such by the Publicity Department is a matter for consideration because the adjournment motion was not admitted. It was only a reply and the Members were given opportunities to explain how it came within the ambit of Rule 42. That was the limited purpose for which the adjournment motion was discussed on the floor of the House.

Now it appears that the whole matter has been discussed threadbare and the speech given by the Hon. Chief Minister has been given full publicity whereas the speeches given by the Opposition Members have not been given due publicity. If it is an official publication from the Assembly Department or from any other Department of the Government, the viewpoints expressed by both the Opposition and the Government should have been published. On the other hand, it only contained the viewpoints of the Government and it suppressed the viewpoints advanced by the Opposition and this does not speak well.

Also, at a time when we are facing drought, should we incur so much expenditure at the expense of the public exchequer and that is a point which will have to be considered. It may be argued that some of the papers are not giving due publicity to the viewpoints of the Government. But it may be stated on behalf of the papers that they do not have sufficient space and that there are other important news to be published which deserve top priority. But we want to know whether this has been done at the behest of the Hon. Speaker or at the behest of the Government.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, வேலூர் மருத்துவ மனை விவகாரம் தமிழக அளவில் இல்லாமல், அகில இந்திய அளவில் பெரிய பிரச்சினையாக ஆக்கப்பட்டு, அதற்கு மிக அதிகமான விளம்பரம் கொடுக்கப்பட்டு. வேலூர் மருத்துவ மனையோடு இந்தச் சர்க்கார் ஒரு போர் தொடுத்திருக்கிறது என்ற அளவிற்கு வட மாநிலங்களில்



உள்ள ஆங்கிலப் பத்திரிகையில் எழுதப்பட்டன. ஒரு நாள் எட்மண்ட் இங்கே கூட "பாட்ரியாட்" என்ற பத்திரிகையைப் படித்துக் காட்டினுர். "மாநில அரசு வேலூர் மருத்துவ மனையோடு போர் தொடுத்திருக்கிறது" என்ற தலைப்பிட்டு பயங்கரமாக அந்தப் பத்திரிகையில் செய்தி போடப் பட்டிருந்தது.

இந்த விவகாரத்தில் யார் யார் தலையிட்டார்கள் என்பதையும், எந்த அளவிற்கு வெளி நாட்டிலிருந்து சில உதவிகள் அங்கு வருவதற்கான வாய்ப்புக் கூறுகள் ஏற்பட்டுள்ளன என்பதையும்; நான் சொன்ன பதிலில் மறைமுகமாகக் குறிப்பிட்டிருந்தேன்.

தமிழ்நாட்டில் உள்ள பத்திரிகைகளைப் பொறுத்த வரையில் இந்து, எக்ஸ்பிரஸ், தினமணி, மற்றும் பல உண்மையான நடுநிலைப் பத்திரிகைகள் நான் சொன்ன தகவல்களை வெளியிடத் தவறவில்லை. ஆனுல் வட மாநிலங்களில் டெல்லியிலும், பம்பாயிலும், கல்கத்தாவிலிருந்தும் வருகின்ற பத்திரிகைகளில் உண்மையான நிலவரங்கள் வரவில்லை. வேலூர் மருத்துவ மனைக்கு "மின்சாரம் தடைப்படுத்தப்பட்டு விட்டது, தண்ணீர் தரப்படவில்லை, சுவரை இடித்து விட்டார்கள்" என்ற இப்படிப்பட்ட செய்திகளே வந்து கொண்டிருந்தன. அதற்காகத்தான் அங்கேயுள்ளவர்களுக்கு உண்மை நிலைமையை விளக்க வேண்டி, ஆங்கிலப் பத்திரிகைகளில் மாத்திரம் அதுவும் வட மாநிலங்களுக்குச் செல்லக் கூடிய இந்து, எக்ஸ்பிரஸ் போன்ற பத்திரிகைகளில் வெளியிடப்பட்டது. கிறிஸ்துவ சமுதாயத்திற்கும், இந்த அரசிற்கும் பெரிய மோதுதல் ஏற்பட்டுவிட்டது போல் அங்கேயுள்ளவர்கள் தவருகக் கருதிக் கொள்ளக் கூடாது என்பதற்காகத் தான் இந்த விளம்பரம் செய்யப்பட்டது.

உண்மையை துல்லியமாக வெளியிட்டிருப்பது சிலருக்குப் பிடிக்காமல் இருக்கலாம். உண்மை உலகத்திற்குத் தெரிய வேண்டும் என்பதற்காகத் தான் அரசாங்கத்தின் சார்பில் செய்தித் துறை அதை விளம்பரப்படுத்தியிருக்கிறது.

திரு. கோவை செழியன்: பாயிண்ட் ஆப் ஆர்டர், சார். பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுகின்ற போது வெளிநாட்டு உதவியோடு இந்த நிறுவனம் சில உதவிகளைப் பெற்று வருகிறது என்கிற மாதிரி சொன்னுர்கள். இந்திய அரசாங்கத்திற்கும் தெரியாமல் வெளிநாட்டு அரசாங்கம் இந்த வேலூர் மருத்துவ மனைக்கு தமிழக அரசுக்கு விரோதமாக ஏதாவது காரியத்தைச் செய்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல ஏதோ சொல்ல வேண்டுமென்றுல் முறை தவறி சொல்வது சரியல்ல.

[1975 மார்ச் 17

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் சென்னை தியாகராயநகர் தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் (கரவொலி) (குறுக்கீடு) ஆம். தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பேசிய பேச்சுக்கு நான் சென்னை புதுப்பேட்டை தெருவிலே நடைபெற்ற ஒரு கூட்டத்தில் பதில் சொன்னேன். சுப்பிரமணியம் நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சாக இருந்தால், அதற்கு நான் சட்டமன்றம் நடக்கும்போது சட்ட சபையில் பதில் சொல்ல வேண்டியது முறை என்று ஹாண்டே அவர்கள் சொல்வதை ஒத்துக் கொள்வேன். சுப்பிரமணியம் பொதுக் கூட்டத்தில் ஒரு கருத்தைச் சொன்னார். அதற்கு மற்றொரு பொதுக் கூட்டத்தில் நான் என்னுடைய கருத்தைச் சொன்னேன்.

இந்த மாநிலத்தின் வறட்சி நிவாரணத்திற்கு மத்திய நிதி உதவி கோரி ரூபாய் 7½ கோடி தருவதாகச் சொல்லி 6½ கோடி ரூபாய் வரை கொடுத்திருக்கிறார்கள். ஒரு பொறுப்புள்ள நிதி அமைச்சர் மத்திய பேரரசிலே வீற்றிருப்பவர் தமிழகத்திற்கு வரும்போது என்னை அழைத்து, நான் ஒரு முதலமைச்சர் என்ற முறையில் பேசுவது ஒன்றும் முரண்பாடான காரியமல்ல, இதற்கு முன்பு நடக்காததுமல்ல, முன்பொரு முறை அவர் வந்தது போல இப்போதும் தலைமைச் செயலகத்திற்குக் கூட வந்து அதிகாரிகளைக் கூட்டி வைத்து ரூபாய் 7½ கோடி என்னவாயிற்று ? எவ்வளவு செலவு செய்திருக்கிறீர்கள் ? வறட்சிப் பணிகள் எப்படி நடைபெற்றிருக்கின்றன ? என்று என்னோடும், தொடர்புடைய அமைச்சர்களோடும் கலந்து பேசி, வேகமாக இந்தப் பணிகள் எப்படி நடைபெற வேண்டும் என்று யோசனை சொல்லி இருந்தால் நான் அதை வரவேற்பேன். இன்னின்ன தவறுகள் நடைபெறுவதாகக் கேள்விப்பட்டேன். அவைகளையெல்லாம் சரிசெய்ய வேண்டும் என்று யோசனை சொல்லியிருந்தால் அதையும் வரவேற்றிருக்கலாம்.

அதற்குப் பதிலாக ஒரு பொதுக் கூட்டத்தில் போய் மத்திய அமைச்சர் ஒருவர் இப்படி "நாங்கள் கொடுத்திருக்கிற பணம் ஒழுங்காகச் செலவு செய்யப்பட்டிருக்கும் என்று நம்புகிறேன். மேற்பார்வையிட அடுத்த மாதம் வரப்போகிறேன்." என்றெல்லாம் பேசுவதும், அதை நான் கண்காணிக்கப் போகிறேன் என்று கூறுவதும், ஏதோ மத்திய அரசில் இருப்பவர்கள் தான் மிகவும் புனிதமான புத்தர்கள், நபிகள், ஏசுநாதர்கள் ; மாநிலத்தில் இருப்பவர்கள் எல்லாம் ஊதாரிகள், ஊழல் பேர்வழிகள் என்று எண்ணிக் கொண்டு பேசுவதும் முறையல்ல.

இந்தப் பிரச்சினை எழுந்த காரணத்தால் இன்னொன்றையும் கூற விரும்புகிறேன். சென்ட்ரல் அசிஸ்டண்ஸ் என்ற பெயரால் நமது ஆண்டுத் திட்டத்திற்கு 41 கோடி ரூபாய் வழங்கப்படுகிறது. 143 கோடி ரூபாய்க்கு ஒப்புதல்தான் வழங்கப்படுகிறது. மத்திய உதவி 41 கோடி என்பதில், 70 சதவிகிதம் கடனாகவும் 30 சதவிகிதம் தான் மானியமாகவும் வழங்கப்படுகிறது. அதற்கு உட்பட்டுத்தான் இப்போது தந்திருக்கின்ற 6½ கோடி ரூபாயும் இருக்கும். "வறட்சிக்காக தனியாக ஒதுக்கப்படுவதில்லை ; திட்டச் செலவில்தான் குறைத்துக் கொள்வோம்" என்று அவர்கள் அழுத்



1975 மார்ச் 17] [டாக்டர் மு. கருணாநிதி]

தந்திருத்தமாகச் சொல்லிவிட்டார்கள். ஆக நடப்பாண்டில் வறட்சிக்காக இப்போது தந்திருக்கின்ற 6½ கோடியில் 70 சதவிகிதம் கடன்; 30 சதவிகிதம் தான் மானியம். இதற்குத்தான் இந்தப் பாடுபடுத்துகிறார்கள்.

இதே நேரத்தில் நாங்கள் கணக்கு காட்ட முடியாது என்று மறுக்கவில்லை. ஆனால் இவர்கள் மட்டுமே கணக்கு காட்ட வேண்டுமென்று கேட்க உரிமை படைத்தவர்களா என்றால் இல்லை. (கரவொலி) ஆனால் இந்த அரசின் மீது மாசு கற்பிக்கப்படுகிறது என்பதற்காக அந்தக் கணக்கைக் காட்டத் தயாராக இருக்கிறேன். அதை இந்த மன்றத்திலும் குறிப்பிட்டிருக்கிறேன். அக்கவுண்டண்ட்-ஜெனரல், ஆடிட்டர்கள் எல்லாம இருக்கிறார்கள். அவர்களை எல்லாம் பார்க்கச் சொல்லலாம். அதிகாரிகளை எல்லாம் கூட்டி ஒரு மாநாடே போட்டு, என்னையும் உட்காரவைத்துக் கொண்டு, ஒரு பொறுப்புள்ள நிதியமைச்சர் செய்திருந்தால், நான் ·னம் மகிழ்ந்து பாராட்டியிருப்பேன்.

பிரம்மானந்த ரெட்டியும் வந்தார்; அவர் உள்துறை அமைச்சர் ; வேலூர் மருத்துவ மனையில் சுமுகமான சூழ்நிலை ஏற்பட்டது பற்றி அறிக்கை விட்டார். "கருணாநிதியுடன் அதிகாரப் பூர்வமாக அல்ல ; தோழமை முறையில் ராஜ்பவனில் பேசினேன் ; வேலூர் விவகாரத்தில் ஒரு நல்ல முடிவை எடுத்திருப்பதற்காக நான் முதலமைச்சருடைய பெருந்தன்மையைப் பாராட்டுகிறேன்; இந்த முடிவிற்கு மகிழ்ச்சி தெரிவிக்கிறேன்" என்று சொல்லியிருக்கிறார். அவர் ரொம்ப பெரிய மனிதர் ; அவ்வளவு பொறுப்போடு மத்திய அமைச்சர்கள் நடந்து கொள்ள வேண்டும் எனபதற்காகத்தான் இதைச் சொன்னேன்.

மேற்பார்வை இடுவோம், கண்காணிப்போம் என்று சந்தேகக் கண்ணோட்டத்தோடு ஒரு மாநில அரசை மிக இழிவான முறையில் நடத்துவதாக இருந்தால் நாமெல்லாம் தமிழர்கள் ; உணவை விட, வயிற்றைவிட மானம் பெரிது என்று மதிப்பவர்கள் ; நாம் அவர்களிடம் கேட்பது பிச்சை அல்ல ; நாம் கொடுத்த வரிப் பணத்திலிருந்து நமக்குத் தரவேண்டிய உரிமையைத்தான் கேட்கிறோம். இதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகத்தான் இனிமேல் உங்களை வறட்சி நிவாரண நிதி கேட்கப்போவதில்லை என்று சொன்னேன். சுப்பிரமணியம் நிதியமைச்சராக இருக்கிறவரை நிச்சயமாக கேட்கமாட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எட்மண்ட் அவர்கள் இந்த விஷயம் குறித்தே உரிமைப் பிரச்சினை என்று கொடுத்திருக்கிறார். அவர்கள் அதைப் பற்றி என்ன சொல்லலாம் என்று எண்ணிக் கொண்டிருக்கிற நேரத்தில் அந்தக் கட்சியில் இருக்கிறவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்றும், கிளாரிபிகேஷன் என்றும் எழுப்பியிருக்கிறார்கள். (திருமதி அனந்தநாயகி எழுந்தார்கள்) நீங்கள் என்ன பாயிண்ட் எழுப்பப் போகிறீர்கள் ?

திருமதி த. ந. அனந்தநாயகி: எல்லோரும் தமிழர்கள்தான் மானம் உடையவர்கள்தான் ; சொன்னவரும் தமிழர்தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தமிழர்கள் என்பதாலேயே எல்லோரும் தமிழ் உணர்ச்சி படைத்தவர்களாக இருப்பதில்லை. மராட்டிய மாநிலத்தில் வறட்சி ஏற்பட்டபோது, 75 கோடி ரூபாய்க்கு மேல் அப்போது மத்திய நிதியமைச்சராக இருந்த திரு. சவான் வழங்கினார். அவர் மராட்டியர் என்று தன்னை மார்தட்டிச்சொல்லிக் கொள்ளலாம். நமக்கு அப்படி இல்லையே! நம்முடைய தலைவிதி இப்படி ஆகிவிட்டது! இதே அனந்தநாயகி அம்மையார் அப்போதே (கிருஷ்ணகிரி தேர்தலின் போது) இவரை (சுப்பிரமணியத்தை) அனுப்பாதீர்கள் என்று சொன்னார்; ஹாண்டேயும் இதே மன்றத்தில் சொன்னார். நான் பாவி; கேட்கவில்லை தவறு செய்துவிட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : (சிரித்துக் கொண்டே) முதலமைச்சர் ரொம்ப டேஞ்சரஸ் மனிதராக இருக்கிறார். நான் எந்த கான்டெக்ஸ்டில் சொன்னேன் என்று பார்க்க வேண்டும். காங்கிரஸ் "ஓ" வில் இருந்தேன்—அது அப்போது சொன்னது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : காங்கிரஸ் "ஓ" வில் இருந்தாலும், "ஆர்" இல் இருந்தாலும் உணர்வுகள் ஒன்றுதான்.

THIRUMATHI JOTHI VENCATACHELLUM : Does the ruling party realise that they have backed a wrong horse ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்களே! நிச்சயமாக அந்தக் குற்றத்தை உணர்கிறோம் (சிரிப்பு).

## (4) ஒத்திவைப்புத் தீர்மானம்.

### கொரக்கவாடி அங்காளம்மன் கோவில் மதில் சுவரும் மண்டபமும் இடிந்ததும், அதனால் ஏற்பட்ட உயிர்ச்சேதமும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக கொரக்கவாடி அங்காளம்மன் கோவில் மதில் சுவரும், மண்டபம் இடிந்து அதனால் 19 பேர்கள்—ஆறு குழந்தைகள் 4 பெண்கள் உள்பட—மரணமடைந்தது குறித்து விவாதிக்க வேண்டுமென்று திரு. கே. டி. கே. தங்கமணி, திரு. ஏ. சுப்பிரமணியம், திரு. என். கே. பழனிசாமி, திரு. ஜே. ஜேம்ஸ், டாக்டர் எச். வி. ஹாண்டே, திரு. ஆர். பொன்னப்ப நாடார் ஆகியோர் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். சுருக்கமாக இதற்கான அவசியத்தை எடுத்துச் சொல்ல திரு. ஆர். பொன்னப்ப நாடாரை அழைக்கின்றேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பேரவைத் தலைவர் அவர்களே' அண்மையில் நடந்த இந்த நிகழ்ச்சியைப் பற்றி இந்த மன்றத்தில் விவாதிக்க வேண்டுமென்பதற்காக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இங்கே ஒரு விபத்து பயங்கரமான முறையில் ஏற்பட்டிருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்திலே நடந்த ஒரு திருவிழா



வின்போது இந்த மாதிரியான நிகழ்ச்சி எதிர்பாராத வண்ணம் நடந்திருக்கிறது. பொதுவாக திருவிழா நேரங்களில் கூட்டம் கூடுகிற நேரத்தில் பொது சேப்டியைக் கண்காணிப்பது பொருத்தமாக இருக்கும். அங்கே காவலர்கள் இருந்தார்கள். சம்பந்தப்பட்டவர்கள் எல்லாம் இருந்தார்கள். இதுபோன்ற மோசமான நிலைமை உருவாகாமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அவர்கள் எடுத்திருக்க வேண்டும். அதிலும் குறிப்பாக சின்னஞ்சிறு குழந்தைகள், பெண்கள் எல்லாம் உயிரிழந்து இருக்கிறார்கள். ஏறத்தாழ 22 பேர்கள் உயிரிழந்து இருக்கிறார்கள். விவரம் பத்திரிகையில் வந்திருக்கிறது. முதலமைச்சர் அவர்களும் ஒரு லட்சம் ரூபாய் தன் பண்டில் இருந்து கொடுத்திருப்பதாக பத்திரிகை வாயிலாகப் பார்த்தேன். உள்ளபடியே இந்த மாதிரி சம்பவங்கள் மேலும் நிகழாமல் இருக்க முன்னெச்சரிக்கையாக இருப்பதே சாலச் சிறந்ததாக இருக்கும் என்ற கருத்தினை நான் இங்கே கூறவிரும்புகிறேன். இந்தச் சம்பவம் எப்படி நடந்தது ? எந்தக் காரணத்தினால் நடந்தது என்பதை அறிவதற்கு எல்லோரும் மிக ஆவலோடு இருக்கிறார்கள். ஆகையால் இந்த மன்றத்தின் இதர நிகழ்ச்சிகளை ஒத்திவைத்து இதைப்பற்றி விவாதிக்க வேண்டுமென்பதற்காகத்தான் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.

DR. H. V. HANDE : Sir, I have given notice that the business ofthe House be adjourned to discuss an urgent matter of public importance namely, the death of at least 6 children and 4 women killed a couple of days ago and on the whole at least 19 persons have been killed. I do not know the exact figure. Probably, right now investigation is going on and the figure may be further increased to 22. There seems to have been a crowd to witness the festival there and about 5,000 people were gathered in that village. Many of them had got up the Mandapam, a dilapidated building and on top of the trees nearby. The point is that this temple was not looked after well and it was in a dilapidated condition. There is also the responsibility of the H.R. & C E. Department to see that the temple buildings are kept in good order. Hearing a sound, the people seemed to have thought that the tree was falling and they rushed outside and there was a collapse of the old building and people got killed.

I am told that the Hon. Chief Minister has given one lakh of rupees from the Chief Minister's Fund to the families of the victims. May I suggest that the quantum of relief may be increased according to casualty list and see that each person gets a little more under this, for, this one lakh may not be sufficient, so that the families of the victims may be rehabilitated.

I know there is no necessity for this adjournment motion but it is only an excuse to bring the matter to the attention of the Government and the Chief Minister and also to elicit more information. Thank you, Sir.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கொரக்காவடி என்னும் கிராமத்தில் அங்காளம்மன் கோவிலில் ஆண்டு தோறும் சிவராத்திரியின் போது பரிவேட்டை திருவிழா நடைபெறுவது வழக்கம். இந்தக் கோயில் அறநிலையத்துறையின் ஆளுகைக்கு உட்பட்டதல்ல. அந்த கிராமத்தில் இருக்கிற மிகச் சிறிய கோயிலாகும்.

இந்தத் திருவிழாவைப் பார்வையிடுவதற்காக கடந்த 13ஆம் தேதி—1975-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ம் தேதி—பிற்பகல் மூன்று மணி அளவில் பக்கத்து கிராமங்களில் இருந்து வந்த மக்கள் இரண்டாயிரம் பேர்களுக்கு மேல் கூடியிருந்தார்கள். இவர்களில் பலர் திருவிழாவைப் பார்ப்பதற்கு கோயிலின் மண்டபத்தின் மீதும், அதன் அருகேயுள்ள சுவர் மீதும் ஏறி உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். பலர் சுவரின் ஓரமாகவும் நின்று திருவிழாவைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். மண்டபத்தின் சுமை அதிகமாகி அதன் காரணமாக அது இடிந்து விழுந்தது. அத்துடன் 8 அடி உயரமுள்ள சுவரும் இடிந்து விழுந்திருக்கிறது.

மண்டபம், சுவர் இவை இடிந்து விழுந்ததன் காரணமாக சம்பவம் நடந்த இடத்திலேயே ஒன்பது ஆண்களும், ஐந்து பெண்களும்—அதாவது ஆண்களில் 4 பெரியவர்களும் 5 குழந்தைகளும், பெண்களில் 3 பெரியவர்களும் 2 குழந்தைகளும் இடிபாடுகளில் சிக்குண்டு அந்த இடத்திலேயே மாண்டு விட்டனர். இறந்து போனவர்களின் அடையாளம் கண்டுபிடிக்கப் பட்டது. மேலும் 34 பேர்கள் காயமடைந்தனர். இந்த 34 பேர்களில் 19 பேர்களுக்குக் கடுமையான காயம் ஏற்பட்டுவிட்டதால் கடலூரிலுள்ள அரசாங்க மருத்துவ மனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்களில் எட்டு வயது சிறுவன் ஒருவன் செல்லும் வழியிலேயே இறந்து விட்டான். மேலும் இரண்டு பேர்களை அவர்களது சொந்தக்காரர்கள் தங்கள் கிராமத்திற்கு எடுத்துச் சென்றவுடன் இறந்து விட்டார்கள். ஆக இந்தச் சம்பவத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கை 17 ஆயிற்று. சம்பவ இடத்தில் 14 பேர்களும், மருத்துவமனைக்கு வரும் வழியில் ஒருவரும், சொந்தக்காரர்கள் தங்கள் கிராமத்திற்கு எடுத்துச் செல்லும்போது இரண்டு பேர்களும் ஆக 17 பேர்கள் இறந்து விட்டார்கள்.

மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 18 பேர்களில் 12 ஆண்களும் 6 பெண்களும் இன்றைக்கு அபாய கட்டத்திலிருந்து தாண்டி தற்போது நல்ல நிலைமையில் குணம் அடைந்து வருகிறார்கள். இந்தக் கோவில் மண்டபம் பழங்காலத்தில் கட்டப்பட்ட மண்டபம் என்று தெரிகிறது.

மேற்படி திருவிழாவிற்கு காவல் துறையினரிடத்தில் பாதுகாப்பு எதுவும் கேட்கவில்லை.

இவ்விபத்தின் தகவலை அக்கிராம மணியக்காரர் 1975 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13-ஆம் தேதி அன்று தொழுதூர் காவல் நிலையத்திற்கு தெரிவித்தார். இந்தத் தகவல் கிடைத்தவுடன் மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை மேல் அதிகாரிகள், மற்ற அதிகாரிகள் சம்பவம்



நடந்த இடத்திற்கு 1975 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 13 -ம் தேதி அன்று மாலை சென்று இருந்தார்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்து இருக்கின்றனர். இந்த திருவிழா ஆண்டு தோறும் மகா சிவராத்திரியின் போது நடைபெறுவது. சிறிய கோவில். ஆண்டுதோறும் நடைபெறுகிற திருவிழாவில் சில நூறு பேர் கூடுவார்கள். இந்த ஆண்டு ஆயிரத்திற்கு மேல் கூடியிருக்கிறார்கள். ஆகவே காவல் துறை பாதுகாப்பு கோரப்படவில்லை. இது பற்றி தெரிவிக்கப்படவில்லை. இப்படி எதிர்பாராமல் நடந்து விட்ட காரணத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு முதலமைச்சருடைய நிதியிலிருந்து உதவி செய்ய வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர் ஒரு வேண்டுகோள் விடுத்து இருந்தார். அதன்படி 1975-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 15-ஆம் தேதி மாலையிலேயே இந்த கோவில் திருவிழாவில் ஏற்பட்ட விபத்தில் உயிர் இழந்த குடும்பத்திற்கு முதலமைச்சர் நிதியிலிருந்து 1 லட்சம் வழங்கப்படும் என்று அறிவித்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த நிதி வழங்குவார் என்று தெரிவித்துக்கொண்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதால் இதன்மீது விவாதம் அவசியம் இல்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு அவையின் நிகழ்ச்சிகளை ஒத்திவைக்கத் தேவை இல்லை என்ற காரணத்தால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

## (5) கவன ஈர்ப்பு.

### கைத்தறித் துணிகள் தேக்கமும், நெசவாளர் பாதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்ததாக, கவன ஈர்ப்புத் தீர்மானம். பேரவை விதி 41-ன் கீழ், தமிழ் நாட்டில் கைத்தறித் துணிகள் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை திரு. பெ. சௌந்தரபாண்டியன், டாக்டர் எச். வி. ஹாண்டே மற்றும் திரு. ஏ. சுப்ரமணியம் அவர்கள் மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ்நாட்டில் கைத்தறித் துணிகள் அதிக அளவில் தேக்கம் ஏற்பட்டுள்ளதால், நெசவாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு உணவு-கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, 1973 ஆம் ஆண்டில், இம்மாநிலத்தில் இதுவரை ஏற்பட்டிராத அளவில், 15 சதவீதத்திலிருந்து 75 சத வீதம் வரை மின்வெட்டு இருந்தது. அதன் விளைவாக. பஞ்சாலைத் தொழில் செய்யும் நூல் உற்பத்தி அதிக அளவில் வீழ்ச்சியடைந்தது. பற்றாக்குறை நிலைமை தொடர்ந்தது. விலை உயர்ந்தது.

1973-74 ஆம் ஆண்டில் பஞ்சாலைத் தொழில் நன்கு வளர்ச்சியடைந்தது எனினும், இந்த செயற்கை விலை ஏற்றம் 1974 ஆம் ஆண்டின் இடைப்பட்ட காலத்திற்குப் பிறகு தொடரவில்லை. 1974 ஆகஸ்ட் திங்கள் தொடக்கத்திலிருந்து—விலைகள் சரிந்ததாலும், ஒருங்கிணைந்து வந்த பல காரணங்களினால் விற்பனை குறைந்ததாலும் இதுவரை ஏற்பட்டிராத ஒரு நிலைமை பஞ்சாலைத் தொழில் மையத்துறை—மையப் பகிர்வுத்துறை இரண்டிலும் எதிர் நோக்க வேண்டியதாயிற்று. இதன் காரணங்கள் பின்வருமாறு :—

(1) வங்கிகள் கடன் கொடுப்பதை நிறுத்தி விட்டன.

(2) பொதுவாக நாட்டில் பணப்புழக்கம் குறைந்து விட்டது.

(3) ஏற்றுமதி மீது இந்திய அரசு கொடுத்து வந்த ஊக்கத் தொகை பெருவாகக் குறைந்து விட்டது. இதன் விளைவால் அயல் நாட்டு வர்த்தகர்களின் தேவைக்குறிப்பாணைகள் குறைந்து விட்டன.

(4) இன்றியமையாப் பொருட்களின் விலைகளில் பொதுவாக ஏற்றம் ஏற்பட்டுள்ளது. மக்களிடம் துணிகள் வாங்கும சக்தி குறைந்துவிட்டது.

ஜவுளி அங்காடியிலிருள்ள நூலின் விலையில் பொதுவாக ஏற்பட்டுள்ள விலையிறக்கத்தால், ரூ. 32 கோடி மதிப்புள்ள துணிகள் இம்மாநிலத்தின் பஞ்சாலைகளில் 1974 நவம்பர் இறுதிவரை விற்பனையாகாமல் இருந்தன. கைத்தறி, விசைத்தறி குறித்த மையப் பகிர்வுப் பிரிவுகளில் முறையே ரூ. 41.64 கோடிக்கும் ரூ. 12.17 கோடிக்கும் துணிகள் இருப்பில் இருந்தன.

இம்மாநிலத்திலுள்ள கைத்தறித் தொழிலைப் பொறுத்தவரை, ஜூலை முதல் அக்டோபர் வரையிலுள்ள கால அளவில் துணி உற்பத்தி அதிகமாக இருக்கும். இந்த இருப்பில் பெரும் பகுதி அக்டோபர்/நவம்பர் தீபாவளி, ரம்ஜான் பண்டிகைக் காலங்களில் வழக்கமாக விற்பனை செய்யப்படும். ஆயினும், 1974-ல் இந்நாட்டிலுள்ள ஏனைய மாநில வணிகர்கள் குறைந்த அளவுக்கே துணிகளை வாங்கினர். மாநிலத்திற்குள்ளேயே விற்பனையும் எதிர்பார்த்த அளவுக்கு இல்லை. அதன் விளைவாக, கூட்டுறவுத்துறையிலும், தனியார் துறையிலும் தீபாவளிப் பண்டிகைக்குப் பின்னரும் அதிக துணிகள் விற்பனையாகாமல் இருப்பில் இருந்தன. இது 1974-ல் காணப்பட்ட வெகு நூதனமான நிகழ்ச்சியாகும். இது கீழ்காணும் விவரங்களிலிருந்து தெரியவரும்.

கையிலிருக்க துணியின் மதிப்பு

| | 30—11—72 | 30—11—73 | 30—11—74 |
|---|---|---|---|
| | | (ரூ. கோடியில்) | |
| கூட்டுறவுத்துறை | ៦.40 | 3.96 | 17.17 |
| தனியார் துறை | 9.75 | 7.68 | 24.47 |



எடுக்கப்பட்ட துயர்தணிப்பு நடவடிக்கைகள்.

கூட்டுறவுத்துறையில், கோஆப்டெக்ஸ் சுமார் ரூ.. 10 கோடி மதிப்புள்ள இருப்பு சேர்ந்திருந்தது. 756 தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 7.17 கோடி மதிப்புள்ள இருப்புகள் சேர்ந்திருந்தன. தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிதிகள், தேங்கிக் கிடக்கும் இருப்புகளில் முடங்கிக் கிடந்தன. தொடர்ந்து உற்பத்தி செய்ய அவர்களுக்கு உடனடியாகத் துயர் தணிப்பு அளிப்பதற்கு தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் கொள்முதல் பாக்கிகளுக்காகவும், அவர்களிடம் தேங்கியுள்ள இருப்புகளைக் கொள்முதல் செய்வதற்காகவும் கொடுக்கப்படுவதற்காக, தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வங்கியிடமிருந்து கோஆப்டெக்ஸ்க்கு ரூ. 3.5 கோடி சிறப்புக் கடன் ஒன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

கிறிஸ்துமஸ், பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, 1974ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 18 ஆம் தேதியிலிருந்து 1975 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 16 ஆம் தேதி வரை ஒரு திங்கள் கால அளவிற்கு சிறப்பு விற்பனை ஏற்பாடு செய்யப்பட்டது. இந்தக் கால அளவில், கோஆப்டெக்ஸ் 20-லிருந்து 25 சதவீதம் வரை தள்ளுபடியும், தொடக்கச் சங்கங்கள் 15-லிருந்து 20 சதவீதம் வரை தள்ளுபடியும் தங்களது நேரடி விற்பனைக்கு அனுமதித்தன. இதில், 5 சதவீதத்தை அரசு, தள்ளுபடித் திட்டத்தின் கீழ் திருப்பியளிக்கும். சிறப்பு விற்பனை ஏற்பாட்டின்போது எடுக்கப்பட்ட சிறப்பு முயற்சிகளின் பலனாக, தேங்கிக் கிடந்த ரூ. 3.5 கோடி மதிப்புள்ள இருப்பை கோஆப்டெக்ஸ் விற்பனை செய்தது; தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அனைத்தும் இந்த மாநிலத்தில் செய்த விற்பனை மூலம் ரூ. 4.10 கோடி மதிப்புள்ள இருப்பை விற்பனை செய்தது.

இருப்புகள் தேங்கிக் கிடந்ததால் தொடக்க நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்பட்ட நிதி இடர்பாடுகளிலிருந்து விடுவித்து உதவியளிக்கும் பொருட்டு, 1974-75 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கத்தை ரூ. 130 லட்சத்திலிருந்து ரூ. 200 லட்சமாக உயர்த்தியதன் மூலம், தள்ளுபடித் திட்டத்தின் கீழ் ரூ. 70 லட்சம் கூடுதல் தொகைக்கு அரசு அனுமதி வழங்கியது; இதனால், தொடக்கச் சங்கங்களுக்கு அரசிடமிருந்து சேரவேண்டிய தள்ளுபடி கோரிக்கை தொகைகள் அனுமதிக்கப்பட்டு, அவர்களுக்குக் கொடுக்கப்பட இயலும். தள்ளுபடி என்பதன்கீழ் தொடக்க சங்கங்களின் பழைய கோரிக்கைகள், அவர்களுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளன. தொடக்கச் சங்கங்கள் நடைமுறை மூல தனத்தைக் கொண்டு தங்களின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலைவாய்ப்பு அளிக்க உதவுகிறது. 1967-68-லிருந்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட தள்ளுபடித் தொகைகள் குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| | | | (ரூபாய்.) |
|---|---|---|---|
| 1967–68 | .. | .. | 64 லட்சம். |
| 1968–69 | ... | .. | 84.65 லட்சம். |
| 1969–70 | ... | .. | 90 லட்சம். |

## மேற்கொண்டும் நிவாரணம் அளிப்பதற்கு மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ள நடவடிக்கைகள் :

தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து மேலும் துணிகளை வாங்குவதற்காக, 1975–76-ஆம் ஆண்டிற்கு ரூ. 450 லட்சத்திற்கு ரொக்கக் கடன் வசதியை உயர்த்துமாறு இந்திய ரிசர்வ் வங்கிக்கு கோ-ஆப்டெக்ஸ் விண்ணப்பித்துள்ளது. ஆனால், 1974–75-ஆம் ஆண்டிற்கு இந்திய ரிசர்வ் வங்கி ரூ. 250 லட்சம் ரொக்கக் கடனை அனுமதித்தது. அதிகமாகக் கடன் வாங்கும் தொகையைக் கொண்டு தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள, வரும் மாதங்களில் அவற்றின் உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து வேலை வாய்ப்பளிப்பதற்கு இயலும் பொருட்டு தேவையான அளவுக்கு அவற்றிடமிருந்து துணிகளை வாங்கக் கருதப்பட்டுள்ளது.

விற்பனை செய்யப்படாமல் தேங்கியுள்ள துணிகளை விற்பனை செய்வதற்காக சென்னையிலும் மாநிலத்திலுள்ள பிற முக்கியமான நகரங்களிலும் பொருட்காட்சிகள் நடத்தப்படும்போது விற்பனை மிகவும் மந்தமாக உள்ள காலமாகிய எப்ரல்; மே திங்களில் ஒவ்வோராண்டும் அனைத்திந்தியக் கைத்தறி இருவார விழாவும் நடத்தப்படுகிறது. தற்போது தேங்கியுள்ள துணியின் நிலையைக் கருத்திற்கொண்டு, நடப்பாண்டில் 1975 ஆம் ஆண்டு மார்ச மாதம் 27 ஆம் தேதி முதல் 1975 ஆம் ஆண்டு எப்ரல் மாதம் 10 ஆம் தேதி வரையிலான 15 நாட்களுக்கு அனைத்திந்தியக் கைத்தறி இருவார விழாவும் பொருட்காட்சிகளும் நடத்தக் கருதப்பட்டுள்ளன.

தீபாவளியை அடுத்துப் பின் தமிழ்நாட்டில் கோ-ஆப்டெக்ஸ், தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றிடம் ரூ. 17.17 கோடி மதிப்புள்ள துணிகள் தேங்கியிருந்ததாக ஏற்கெனவே கூறியுள்ளவாறு, சுமார் ரூ. 6 கோடிக்கு துணிகள் உற்பத்தி செய்யப்பட்டிருந்த போதிலும், 1975 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15-ம் தேதி அன்றுள்ளபடி தேங்கியுள்ள துணிகளின் மதிப்பு ரூ. 16·25 கோடியாகக் குறைந்துள்ளது. ஏனெனில், தேங்கியுள்ள துணிகளை குறைந்த விலைகளில் விற்பனை செய்வதற்கு சிறப்பு விற்பனை இயக்கம் நடத்தி சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. சென்னையிலும், பிற முக்கியமான இடங்களிலும் கைத்தறிப் பொருட்காட்சிகளை நடத்துவதன் மூலமும், சிறப்புத் தள்ளுபடி வழங்குவதன் மூலமும், தேங்கியுள்ள துணிகளின் அளவைக் குறைக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இயலுமென நம்பப் படுகிறது.

## தனியார் துறையிலுள்ள கைத்தறி நெசவாளர்கள்

கைத்தறி நிதி வர்த்தகக் கழகம், தனிப்பட்ட நெசவாளர்களுக்கும் சொந்தத் தறியுடைய நெசவாளர்க்கும் தனது நிதி நிலைமை அனுமதிக்கிற அளவுக்கு அவர்களது நடைமுறை மூலதனத்திற்குக் கடன்கள் வழங்குகின்றது. இக்கழகம் தனியார் துறையிலுள்ள நெசவாளர்களிடமிருந்து துணிகளை வாங்கி அவற்றை விற்பனை செய்து வருகின்றது. இக்கழகம் டில்லியில் விற்பனைக் காட்சி நிலையம் ஒன்றைத் தொடங்கியுள்ளது. சென்னையில் முக்கியமானதோர் இடத்தில் அத்தகைய நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது.

திட்டத்தில் ஒதுக்கியுள்ள உச்சவரம்பு அளவைத் தவிர, ரூ. 3 கோடி
அளவுக்கு நிதியுதவி வழங்குமாறு இந்திய அரசுக்கு இந்த அரசு
எழுதிக்கேட்டுள்ளது. அப்போதுதான், கூட்டுறவுத் துறையின்கீழ் வராத
நெசவாளர்களுக்கு நிதியுதவி அளிக்க இத்தொகையைப் பயன்படுத்திக்
கொள்ளலாம். இது பற்றி இந்திய அரசு பரிசீலனை செய்து வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கைத்தறி துணிக
களின் தேக்கத்தைப் போக்குவதற்காக அண்மையில் மத்திய அரசாங்கத்
திடம் ஏதாவது பேச்சு வார்த்தை நடைபெற்றதா? மத்திய அரசாங்கம்
என்ன பதில் அளித்தது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சம்பந்தமாக அமைச்சர்கள்,
பிரதம மந்திரி சம்பந்தப்பட்டவர்களை சந்தித்து உடனடியாகத் தேவையான
வட்டி இல்லாத கடனை மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென்று
கேட்டுக் கொண்டு இருக்கிறோம். விலைக்கு வாங்கும்போது மாநில அரசும்
மத்திய அரசும் ஒரு குறிப்பிட்ட சதவீதம் குறைத்து விற்கின்ற அளவுக்குச்
சலுகைத் தொகையாக ரிபேட் வழங்க வேண்டுமென்று கேட்டு இருக்
கிறோம். பதில் இது வரையில் வரவில்லை.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவர் அவர்களே, இந்த கைத்தறி
பிரச்சினையைப் பொறுத்த வரையில் அரசாங்கம் ஒரு ரூபாய்க்கு 20 பைசா
கொடுப்பதாக முதலிலே ஒரு அறிவிப்பு தெரிவித்தார்கள். ஆனால் இப்
போது பின்வாங்குவதாகத் தெரிகிறது. குறிப்பாக ஸ்ரீவில்லிபுத்தூர்
தொகுதியில் இருக்கின்ற 9 கோஆபரேட்டிவ் சங்கங்களுக்குப் பணம் வாபஸ்
கொடுக்காமல் கோஆபரேட்டிவ் சங்கங்களுக்குப் பணம் வரவில்லை. ஆகை
யினால் அந்த சங்கத்தைச் சார்ந்த விவசாயிகள் மகஜர்கூட அரசாங்கத்
திடம் கொடுத்த மாதிரித் தெரிகின்றது. இந்த மகஜரில் 20 பைசா
கொடுக்க வேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். வரவேண்டிய பணம்
வரவில்லை. உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு
இருக்கிறார்கள். இது எல்லாம் செய்யவில்லை என்றால் பட்டினிச் சாவு
ஏற்படுகிற பயங்கர சூழ்நிலை இருக்கின்றது. இம்மாதிரியான சூழ்நிலையைத்
தடுக்க அரசாங்கம் ரிபேட் அளிக்க வேண்டும். இந்தத் தொழிலில் ஈடு
பட்டு இருக்கின்ற லக்ஷோப லக்ஷம் நெசவாளர்களுக்கு மறுவாழ்வுத்
திட்டம் ரிலீப் மெஷர், பேமின் ரிலீப் மெஷர் மாதிரி எடுத்து நடத்துவ
தற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ரிபேட் பிரச்சினை தனிப் பிரச்சினை.
ரிபேட் பொறுத்த அளவுக்கு 1967–68-ல் ரூபாய் 64 லட்சம் கொடுத்த நிலை
மாறி 1974–75-ல் 700 லட்சம் கொடுக்கிறோம். ரிபேட் கூடுதலாகக்கொடுத்து
வருகிறது உண்மை. ஆனால் ரிபேட் கொடுக்கலாமா என்பது பிரச்சினை
யாக இருக்கின்றது. மத்திய அரசாங்கத்தைப் பொறுத்த அளவில் ரிபேட்
திட்டம் கூடாது, கொடுக்கக் கூடாது என்று சொல்லி வருகிறார்கள். இப்
போது இருக்கின்ற பிரச்சினை அதிகமாக ரிபேட், கழிவுத் தொகை கோ-
ஆப்டெக்ஸுக்கு அதிகம் இருக்கின்றது. எவ்வளவு தொகை கொடுப்பது
என்பதைவிட பிரதம சங்கம், உற்பத்தி சங்கம் துணிகளை மாநில அரசாங்கம்
வாங்கி விற்கின்ற திட்டம் நிரந்தரமாகப் பின்பற்றப்பட வேண்டுமென்று
அரசாங்கம் கருதுகிறது.





திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, அண்மை
யில் அமைச்சர் அவர்கள், டெல்லி சென்று இருந்த போது நூலின் மீது
தீர்வை விதிப்பது நல்லது என்ற கருத்தை எடுத்துச் சொன்னார்களா? ஒரு
தீர்வை விதிக்க வேண்டுமென்று மத்திய அரசாங்கத்திடம் எடுத்துச்
சொல்லப்பட்டதா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸ்டேட்மெண்டில் இருப்பதைத்
தவிர புதிதாகச் சொல்லக் கூடாது. சப்ளிமெண்டரி கொஸ்சன்ஸ் கேட்ப
தற்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, நெசவாளர்கள்
பாதிக்கப்பட்டு இருக்கின்ற இந்த நேரத்தில் நூலின் மீது தீர்வை
விதிக்கப்பட வேண்டுமென்று கோரியது நியாயமா என்று அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கேட்டாயா என்று கேள்வியை
கேட்டு விட்டு கேட்டதாக ஊகித்துக் கொண்டு நியாயமா என்று கேட்கிறார்
கள். இந்தச் செய்தி எப்படி வந்தது என்று புரியவில்லை. இதைத்தான
முன்பே நல்ல ரீதியில் $62\frac{1}{2}$ சதவிகிதம் நமக்கு வழங்க வேண்டும்
தீர்வை அல்ல, வரி அல்ல, உற்பத்தியில் நாம் வாங்க இருக்கின்ற பண்டு
நெசவாளர்கள் தேவையைப் பார்த்துக் கொடுக்க வேண்டும் என்பது
கோரிக்கை. எக்ஸைஸ் எப்படி வந்தது என்று தெரியவில்லை. அதற்கு
பதில் சொல்லவில்லை. பத்திரிகையில் அப்படிப்பட்ட செய்தி வந்தால்
அது தவறான செய்தி ஆகும்.

(முற்பகல் 10–30)

டாக்டர் எச். வி. ஹாண்டே: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
பதில் கொடுக்கிற நேரத்திலே சரியான வகையிலே விளக்கமாகச் சொல்ல
வில்லை. இதிலே ஈடுபட்டிருக்கக்கூடிய நெசவாளர்கள்—அவர்களுக்கு மறு
வாழ்வுத் திட்டம்—ஃபாமின் ரிலீப் ஃபண்ட் போல—ஏதாவது உண்டா?
வேண்டிய ஏற்பாடுகளை அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது என்று
சொன்னார்கள். அதே நேரத்திலே, இதிலே ஈடுபட்டிருக்கிற நெசவுத்
தொழிலாளர்களுக்கு—ஏனென்றால் ஃபாமின் கண்டிஷன் வரும்—ஃபா
மின் திட்டத்தின் கீழ் முடிந்தால், அல்லது வேறு வழியிலே, ஏதாவது
பரிகாரம் காணுமா? இராமநாதபுரத்திலே ஜாஸ்தி இருக்கிறது. சேலம்
மாவட்டத்திலே ஜாஸ்தி இருக்கிறது. இம்மாதிரியாக வறட்சி இருக்கக்
கூடிய மாவட்டங்களுக்கு மறுவாழ்வுக் குறிப்புகளோ, திட்டங்களோ அர
சாங்கம் வைத்திருக்கிறதா? அப்படி என்றால், என்ன திட்டம் என்று
அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்து கொள்ள முடியுமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்களுடைய கோரிக்கை எல்
லாம் ஒன்றே ஒன்று. நாங்கள் உற்பத்தி செய்கிற பொருள்களை எல்லாம்
உடனே வாங்கிக் கொள்ள வேண்டும். அப்பொழுது எங்களுக்குப் பிரச்
சினை இருக்காது என்பதுதான். நூலைப் பொறுத்த அளவுக்கு, விலையைக்
குறைத்துக் கொடுக்க வேண்டுமென்பது நம்முடைய கோரிக்கையிலே ஒன்

[மாண்புமிகு திரு. செ. மாதவன்] [1975 மார்ச் 17

றுகும். நாம் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருப்பது, ஒவ்வொரு நெசவாளருக்கும் தேவையான நூலை, பவர் லூம் காம்போசிட் மில்லுக்கு என்ன விலைக்கு விற்கிறதோ, அந்த நூலினுடைய விலையை விடக் குறைத்துக் கொடுக்க வேண்டுமென்ற முறையை நாம் மத்திய அரசாங்கத்திடம் கேட்டிருக்கிறோம்.

## (6) அரசினர் சட்ட முன் வடிவு.

## தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1975-ஆம ஆண்டு பந்தய (திருத்த) சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகபபடுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகப் படுத்தப்பட்டிருக்கிறது.

## (7) 1975-76 ஆம் ஆண்டிற்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 97,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

Thiru K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 97,93,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".



1975 மார்ச் 17]

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, கிராமப் பகுதிகளிலும் அரசுப் பால் பண்ணைகள் துவக்க வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க—

நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 97,93,000-ல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.

Thiru B. VENKATASWAMY: Sir, to discuss about the need to extend Milk Supply Schemes to entire Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 97,93,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".

Thiru J. JAMES: Sir, to discuss the necessity to extend the activities of the Dairy Corporation to Kanyakumari district, I move—

"That the allotment of Rs. 97,93,000 under Demand No. 10—Milk Supply Schemes be reduced by Rs. 100".

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, மாதவரம் மற்றும் மதுரையில் உள்ள பால் பண்ணை சிப்பந்திகளின் கோரிக்கைகளைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப் பின்கிழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 97,93,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, கறவை மாடுகளைக் கிராமந் தோறும் வளர்த்துப் பால் பெருக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 10—பால் வழங்கு திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 97,93,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

Mr. SPEAKER: Demand No. 12.......

திரு. கோவை செழியன்: சார், என்னுடைய 393-வது வெட்டுத் தீர்மானம்......

மாண்புமிகு பேரவைத் தலைவர்: என்ன மூவ் பண்ணவேண்டு மென்று ஏற்கெனவே சொல்லிவிட்டால், அதன்படி நாங்கள் செய்வோம். இது பற்றி நீங்கள் முதலில் சொல்லவில்லை.

Mr. SPEAKER: Demand No. 12.... .

2. நடைமுறைக் கேள்விகள்—தொடர்ச்சி.

(ஆ) இந்து சமய அறக்கட்டளைகள் குறித்த ஆடிட் ரிப்போர்ட் பேரவையில் வைக்கப்படாத நிலையில் அத்துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையை அமைச்சர் முன்மொழிய அனுமதிக்கப்படுவது முறையா எனபது குறித்து.

DR. H. V. HANDE: Sir, on a point of order. Before the Hon. Minister moved Demand No. 12, I want to raise a constitutional objection, Article 149 of the Constitution clearly says—

"The Comptroller and Auditor-General shall perform such duties and exercise such powers in relation to the accounts of the Union and of the States as were conferred or exercisable by the Auditor-General of India immediately before the commencement of this Constitution......"

Then Article 151 (2) says—

"The reports of the Comptroller and Auditor-General of India relating to the accounts of a State shall be submitted to the Governor or Rajpramukh of the State, who shall cause them to be laid before the Legislature of the State......"

In this particular context, so far as Demand No. 12 is concerned, the Hon. Minister has forfeited his right to come before the House and move the Demand because the Report of the Auditor-General on the functioning of the Hindu Religious Endowments has not been laid on the table of the House nor has it been sent to us. I have nothing personal against the Hon. Minister but this is a serious constitutional question. It is stated that on the recommendation of the Governor the Demand is moved. At the same time, it is also stated that the report must be submitted to the Governor who shall cause it to be placed on the table of the House through the Hon. Speaker. None of these things have taken place. So, I would like to know whether the Hon. Minister is right in moving this Demand when there is such a constitutional objection.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, செய்யப்படுகின்ற காரியங்கள் அத்தனையும் சரியான முறையிலே கண்காணிக்கப்படுகின்றன. ஆடிட்டர்கள் ஆடிட் செய்கிறார்கள். ரிப்போர்ட்டுகளை கவர்னர் பார்வையிடுகிறார். அரசாங்கம் கணக்கோடு தான் செலவிடுகிறது



DR. H.V. HANDE: My question is a sepecific question and it cannot be lightly brushed aside. The hon. Member, Thiru Ponnappa Nadar is also aware of it. The most important and valid point is that the Report has to be laid on the table of the House. There is no use of saying—

கவர்னர் பார்வையிடுகிறார், ஆடிட் செய்யப்படுகிறது ......

I am not going into the merits of the case. The point is, where is the report. There is no use of trying to console us and we are not here to be consoled. Whether the Hon. Minister can produce any documentary evidence to prove that the report has been laid on the table of the House. Unless this is done, he cannot proceed further. I have raised a constitutional question and I invite the attention of the distinguished lawyers like Thiru Ponnappa Nadar to express their opinion on the matter.

THIRU R. PONNAPPA NADAR: Sir, as regards Audit reports Article 151(2) says—

"The reports of the Comptroller and Auditor-General of India relating to the accounts of a State shall be submitted to the Governor or Rajpramukh of the State, who shall cause them to be laid before the Legislature of the State".

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டேபிளில் பிளேஸ் பண்ண வேண்டு
மென்பது ஒன்றாக இருக்கலாம். அதைப் பண்ணவில்லை என்பதாலே
டிமாண்ட் கேட்க முடியாது என்பது எப்படிச் சரியாக இருக்கும்? அது
வேறு. அதற்கு என்ன முறையோ, அதைச் செய்யுங்கள். ரிப்போர்ட்
வைக்க வேண்டும்; வைக்கவில்லை என்ற வாதம் வேறு. ரிப்போர்ட்
வைக்கவில்லை என்பதற்காக (குறுக்கீடு.) அதற்கு என்ன நடவடிக்கையோ,
(டாக்டர் எச். வி. ஹாண்டே: வயலேஷன்) வயலேஷனுக்கு என்ன
நடவடிக்கையோ அதைச் செய்ய வேண்டும். அதற்காக டிமாண்டே கோர
முடியாது என்பதல்ல. (குறுக்கீடு.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்த டிமாண்டுகளெல்லாம் கவர்ன
ருடைய முன் அனுமதியின் பேரிலேதான் மன்றத்திற்கு வரவேண்டு
மென்ற நியதியிருக்கின்றது. அந்த அடிப்படையிலேதான் இந்த டிமாண்டுகள்
எல்லாம் இந்த மன்றத்திற்கு வருகின்றன. அப்படி வரவில்லை
யென்றால், கவர்னர் பெருமான் அவர்களோ, செக்கரட்டேரியட்டிலோ,
என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள் எனற விவரத்தையாவது இந்த
மன்றத்திலே வைப்பது பொருத்தம் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்பொழுது எழுப்பப்பட்டிருக்கிற
பிரச்சினை அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி சில அறிக்கைகள் வைக்கப்
பட்டிருக்கின்றனவா என்பது. லாண்ட் ரெவினியூ இலாகாவினுடைய
அறிக்கையில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்குக் காண்க

டிட்யூஷன்படி ஒன்றைச் செய்யவில்லையென்பதற்கும், இந்த மானியக் கோரிக்கையை இங்கு எழுப்புவதையும் இரண்டையும் இணைப்பது கூடாது. ரிப்போர்ட் கொடுப்பதற்கு ஒரு முறை இருக்கிறது. அந்த ரிப்போர்ட்டை அசெம்பிளிக்கு அனுப்புகிறோம். அது பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டிக்குப் போகிறது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டி அதைப்பற்றி விவாதிக்கிறது. அதன் மூலமாகவும் அறிக்கை வைக்கப்படுகிறது. இதற்கான அறிக்கையை லேண்ட் ரெவினியூ அறிக்கையோடு சேர்த்துக் கொடுத்திருப்பதாகச் சொல்கிறார்கள். அதை ஆராயலாம். ஆனால், இப்பொழுது எழுப்பப்பட்டிருக்கிற பிரச்சினை வேறு. மானியக் கோரிக்கையை எழுப்புவது வேறு, ரிப்போர்ட் வைப்பது வேறு.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால் கொஞ்சம் வாய்ப்புக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த ஒரு விஷயத்திலே கனம் சபாநாயகர் அவர்களுக்குக் கருத்து வேறுபாடு இருக்காது என்று நினைக்கிறேன். எந்த கான்ஸ்டிட்யூஷனல் புராவிஷனையும் வயலேட் பண்ணுவதற்கு இந்த மன்றத்திற்கு உரிமை கிடையாது. நம்முடைய ரூல்ஸ்கூட கான்ஸ்டிட்யூஷன் விதிகளுக்கு உட்பட்டுத்தான் இருக்கிறது. அதை நம்முடைய லா மினிஸ்டர் கூட ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன்.

We cannot violate any constitutional provision.

கரெக்ட் தானே அது? அடுத்த கேள்வி கான்ஸ்டிட்யூஷனல் புராவிஷன் வயலேட் செய்யப்பட்டிருக்கிறதா என்பது. இந்தக் கேள்விதான் பிரச்னைக்குரியதாக இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், ரெவின்யூ துறையோடு இணைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். எனக்குத் திட்டவட்டமாகத் தகவல் வந்துள்ளது. ஆடிட்டர் அண்ட் காம்ப்ட்ரோலர் ஜெனரலுக்கு எந்தவிதமான அறிக்கையும் இந்தத் துறைபற்றிக் கொடுக்கப்படவில்லை.

It was not submitted. அறிக்கை சப்மிட் செய்தால்தான் கான்ஸ்டிட்யூஷனல் புராவிஷன் பிரகாரம் இந்தத் தொகையை அவர்கள் கோருவதற்கு உரிமை இருக்கிறது. ஆனால், அப்படிச் செய்யவில்லை. ஆகவே அவர்களுக்கு அந்த உரிமை இப்போது இல்லை. இது மிகவும் முக்கியமான பிரச்னையாக இருப்பதால் தாங்கள் ஆழ்ந்து சிந்தித்துத் தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நான் எதிர்க்கட்சியிலே இருக்கிறேன் என்று நினைத்து விட்டுவிடக்கூடாது, முக்கியமான பிரச்னையாக இருப்பதால் கடந்த இரண்டு மூன்று நாட்களாகவே கவலைக்குரிய பிரச்னையாக இது எனக்கு இருக்கிறது.—அதனால்தான் கேட்கிறேன். முக்கியமான பிரச்னையாக இருப்பதால் தங்களுடைய தீர்ப்பைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.





THIRUMATHI T.N. ANANDANAYAKI: On a point of order, Sir, So far as Article 151(2) is concerned, it says that the report of the Comptroller and Auditor-General relating to accounts of a State shall be submitted to the Governor. இந்த அறநிலையத் துறை கணக்குகளும் அக்கவுண்ட்ஸ் ஆப் தி ஸ்டேட் என்பதிலே வருகிறதா? இதுவரைக்கும் இந்தத் துறையின் கணக்குகள் ஆடிட்டர் அண்ட் காம்ப்ட்ரோலருக்குப் போகாமல் இருந்திருக்கிறதா என்பதையெல்லாம் பார்க்க வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதைப்பற்றியெல்லாம் இப்போது பேசவேண்டாம். ரிப்போர்ட் வந்திருக்கிறதா இல்லையா என்பது ஒரு பிரச்னை. வரவில்லையென்றால் அதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யவேண்டும். அது வராமல் இருந்தால் வயலேஷனாக இருக்கலாம்; அதற்கு என்ன செய்யவேண்டுமோ அதைச் செய்யலாம். ஆனால் அதற்காக இந்த டிமாண்டே எடுத்துக்கொள்ள முடியாது என்று விதிமுறைகளில் இல்லை, ஆகவே எடுத்துக்கொள்ளலாம்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI: It is said only in a general way that the report of the Auditor-General relating to the accounts of the State shall be submitted to the Governor.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: ஆளுநர் அவர்களுடைக் பரிவுரையின்பேரில்தான் இந்த கோரிக்கையை நான் எழுப்புகிறேன். கணக்குகள் அத்தனையும் லேண்ட் ரெவின்யூ கணக்குகளோடு சேர்த்து வைக்கப்பட்டுள்ளது. பி.ஏ.சி.யிலும் வைக்கப்பட்டுள்ளது. இதிலே வேறு ஏதாவது அவர்களுக்குச் சந்தேகம் இருந்தால் அவர்கள் பேசுகின்ற போது பேசலாம். ஆளுநர் அவர்களுடைய பரிவுரையின்மேல் தான் இதைக்கோருகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியம் எடுத்துக் கொள்ளப்படக் கூடாது என்று தடையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: ஒரு பிரீசிடண்ட் இருக்கிறது, லோக் சபாவிலே பாண்டிச்சேரிபற்றிய மானியம் வந்தபோது மாண்புமிகு லோக சபை உறுப்பினர் செழியன் அவர்கள் எழுப்பினார்கள், அப்போது அவர்கள் புரசீஜர் சரியல்ல என்று சொன்னபோது ஸ்பீக்கர் அவர்கள், அவர்கள் சொல்லக்கூடிய வாதம் நியாயமான வாதம்என்று ஏற்றுக்கொண்டு அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டுத்தான் இந்தச் சபைக்குக் கொண்டு வரவேண்டுமென்று சொன்னார்கள். அந்த முறையிலேதான் நான் சொல்கிறேன், ஆடிட்டர் அண்ட் காம்ப்ட்ரோலருக்கு அனுப்பவில்லை, அனுப்பக்கூடாது என்று இருக்கிறார்கள். அவர்களுடைய அறிக்கை இங்கே வைக்கப்படவில்லை, ஆகவே அவர்கள் கொண்டுவர உரிமை இல்லை என்றுதான் சொல்லுகிறேன்.

இந்து சமய அறக் கட்டளைகள் குறித்த ஆடிட் ரிப்போர்ட் பேரவையில வைக்கப்படாத நிலையில் அத்துறை சம்பந்தமான மானியக் கோரிக்கையை அமைச்சர் முன்மொழிய அனுமதிக்கப்படுவது முறையா என்பது குறித்து

[1975 மார்ச் 17

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அவர்கள் ஒரு கருத்தை, தவறான கருத்தைச் சொல்லுகிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கவே கூடாது என்று யாரும் சொல்லவில்லை, ஆகவே அப்படிப்பட்ட தவறான கருத்தைச் சொல்லக்கூடாது. எல்லாம் அனுப்பப்பட்டிருக்கிறது என்ற விளக்கத்தை அவர்கள் சொன்னார்கள். முறைப்படி நாம் நடக்காமல் இல்லை, நடந்திருக்கிறோம். ஆனால் அதற்காக மானியக் கோரிக்கையைக் கொண்டுவரக்கூடாது என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் முதலிலேயே சொன்னேன். ஆடிட்டர் ரிப்போர்ட் இங்கே வைககப்பட்டிருக்கிறதா இல்லையா என்பது பிரச்னை அல்ல. வைக்காமல் இருப்பதால் மானியக்கோரிக்கையைக் கொண்டு வரக்கூடாது என்று விதிமுறைகளில் இல்லை, ஆகவே கொணடுவரலாம்.

7. 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(ஆ) நிதிக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு, தமிழ் நாடு, இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,13,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

THIRU K.S. KOTHANDARAMIAH.—Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 1,13,97,000 under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Chartitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the need to constitute an Inquiry Commission to investigate into the irregularities in the working of the Hindu Religious and Charitable Endowments Administration, I move—

"That the allotment of Rs. 1,13,97,000 under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, கோவில் நிர்வாகங்களை ஆராய்ந்து சீர்படுத்த ஓர் உயர்மட்டக் குழு அமைக்க வேண்டிய அவசியம்பற்றி விவாதிக்க—





"நிதிக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,13,97,000-இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும்". என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

திரு. என். மருதாசலம்: தலைவர் அவர்களே, பழனியில் அடிக்கடி கும்பாபிஷேகம் நடப்பதைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைபபின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,13,97,000 இல் ரூ. 100 குறைக்கவேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU K.P. GOPAL: Sir, to discuss about the steps to be taken to prevent the frequent thefts of idols in temples, I move—

"That the allotment of Rs. 1,13,97,000 under Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 be reduced by Rs. 100."

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இப்போது டிரஸ்ட் மூலம் நிர்வகிக்கப்படும் கோவில் உடைமைகள் முழுவதும் அரசுடைய நேரடிப் பார்வையில் எடுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியம்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 12—1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, இந்து, சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 1,13,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானததை நான் முன்மொழிகிறேன்.

(இ) நிதிக் கோரிக்கை எண். 27—கதர்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன்.—

"நிதிக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, காதி போர்டு நிர்வாகத்தைப்பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 57,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: தலைவரவர்களே, தமிழ்நாடு கதர், கிராமக் கைத்தொழில் வாரியததில் தொழில் கூட்டுறவுப் பயிற்சி கொடுக்கப் பட்டவர்களுக்கு வேலைவாய்ப்புக் கொடுக்கப்படாமல் இருப்பது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண். 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப் படுகின்ற ரூ. 57,00,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்.

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the introduction of modern methods for the production of Khadi, I move—

"That the allotment of Rs. 57,00,000 under Demand No. 27—Khadi be reduced by Rs. 100."

THIRU N. DENNIS: Sir, to discuss about the necessity to revive the Kanyakumari District Palmgur Federation, I move—

"That the allotment of Rs. 57,00,000 under Demand No. 27—Khadi be reduced by Rs. 100."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நிதிக் கோரிக்கைகளும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின் விவாதத்திற்கு வருகின்றன.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறை மானியக் கோரிக்கை பால்பண்ணை வளர்ச்சி, தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வளர்ச்சி ஆகியவைபற்றிய குறிப்புகள்* அத்தனையும் மாண்புமிகு அங்கத்தினர்களுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறன. இந்த மூன்று துறைகளிலேயும் கடந்த ஆண்டுகளிலே ஆற்றிய பணிகளையும் அதற்குப்பின்னால் கடந்த ஒரு ஆண்டுக் காலத்தில் ஆற்றியிருக்கிற பணிகளையும் எதிர்காலத்திலே ஆற்றப்போகின்ற பணிகளையும் குறிப்பிட்டு விளக்கம் அளிக்கின்ற முறையிலே குறிப்புகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் அந்தத் துறையின் அதிகாரிகளும் அவர்களுக்குக் கீழே பணியாற்றுகின்ற அலுவலர்களும் எடுத்துக் கொண்ட பெரிய முயற்சியின் காரணத்தினால் கடந்த 6, 7 ஆண்டுக்காலத்தில் 9,600 ஆக இருந்த கோயில்களின் எண்ணிக்கை 20,246 நிலையங்கள் என்ற வகையில் இன்றைக்கு அறநிலையத் துறையின் ஆட்சியிலே கொண்டுவரப்பட்டிருக்கின்றன. அது மட்டுமல்ல வருமானத்தைப் பெருக்கி இருக்கிறோம், திருப்பணி வேலைகள், சமூகத்திற்குப் பயன்படுகின்ற காரியங்கள், நிர்வாகம் சிறந்த முறையிலே செயல்படுவது ஆகியவை எல்லாம் நல்லமுறையிலே ஆற்றப்படுகின்றன. கோயில்களிலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் நீண்ட

* 1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு, இந்து சமய—அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் குறித்த மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களின் உரை இணைப்பு I ஆக 104-112 பக்கங்களில் அச்சிடப்பட்டுள்ளது.



நெடுநாட்களாக நிரந்தரமாக வேலைபாதுகாப்பு இல்லாமல் சம்பள உயர்வு இல்லாமல் இருந்த நிலைமைகளை எல்லாம் மாற்றி கடந்த ஆண்டிலே கோயில் வருமானத்திற்குத் தகுந்தாற்போல் ஒவ்வொரு கோயிலில் உள்ள நிதிவசதியை அனுசரித்து அவர்களுக்குச் சம்பள நிர்ணயம் செய்யப்பட்டு மாதந்தோறும் சம்பள உயர்வு, வேலையிலே பாதுகாப்பு போன்றவை யெல்லாம் செய்து அவர்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்கப் பட்டு இருக்கிறது. அந்த அடிப்படையிலே தமிழ்நாடு அரசாங்க ஊழியர்களுக்குக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் இருக்கிறது. அரசாங்க ஊழியர்கள் மாதந்தோறும் 10 ரூபாய் செலுத்தி, அவர்கள் ஓய்வு பெறுவதற்கு முன்னாலேயே பணிக்காலத்திலேயே இறந்துவிட்டால் அவர்கள் குடும்பத்திற்கு 10 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்ற திட்டம், தமிழ்நாடு அரசாங்கம் ஊழியர்களுக்குச் செய்கின்ற மிகப் பெரிய திட்டமாக இருந்து வருகிறது.

தற்பொழுது மாதந்தோறும் ஒரு ரூபாய் கொடுத்தால் போதும் என்ற திட்டத்தை அரசாங்க ஊழியர்களுக்குச் செயல்படுத்தி வருகிறோம். இந்தத் திட்டம் ஆலய ஊழியர்களுக்குப் பொருந்தாது என்பதால் இதுநாள் வரையில் அதை அவர்களுக்குச் செயல்படுத்த முடியவில்லை. ஆனால் ஆலய ஊழியர்களின் கோரிக்கைக்கிணங்க தனியாக அரசாங்க ஊழியர்களுக்கு அந்த பாதுகாப்புத் திட்டங்கள் இருந்தாலும் ஆலயங்களில் பணிபுரியும் சுமார் 50,000 ஊழியர்களின் எதிர் காலத்திற்குப் பொருந்தும் வகையில் ஆலய ஊழியர்கள் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் என்று தனியாக ஒரு திட்டத்தை உருவாக்கி அந்த ஊழியர்கள் பணிக்காலத்தில் இறக்கும் நேரத்தில் அவர்களது குடும்பத்தைப் பாதுகாப்பதற்காகத் தனி யான திட்டம் தயாரிக்கப்பட்டு, வெகுவிரைவிலே நடைமுறைக்குக் கொண்டு வரப்படும் என்பதை இந்த மன்றத்திலே அறிவித்துக் கொள்வதற்குப் பெருமைப்படுகிறேன். அதுவும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர் களின் பிறந்த நாளான வருகின்ற ஜூன் 3-ஆம் தேதி முதல் அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இதேபோல, கோயில் ஊழியர்கள் அவர்கள் குடும்பத்திலே நடைபெறும் திருமணங்களுக்கு முன்கடன் கொடுத்து உதவ வேண்டும், அதுவும் வட்டியில்லாக் கடனாகக் கொடுக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை நீண்ட நாட்களாக வைத்துக் கொண் டிருந்தார்கள். அந்தக் கோரிக்கையையும் இன்றைக்கு நம்முடைய அறநிலையத்துறையின் சார்பிலே ஏற்றுக் கொண்டு, திருக்கோயில்களில் பணியாற்றும் ஊழியர்கள் தங்கள் திருமணத்திற்கோ அல்லது தங்களைச் சார்ந்தவர்களுக்கோ தங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்கோ-திருமணம் செய்யும்பொழுதோ திருமணக் கடன் தொகையாக நிதிநிலைக்கேற்ப அளிப்பதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. அவ்வாறு அளிக்கப்படும் கடனுக்கு எந்தவிதமான வட்டியும் இல்லாமல் கோயில் களில் திரும்பப் பெறப்படும் என்பதையும் இந்த நேரத்தில் மகிழ்ச்சி யோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கடந்த 1973-74-ஆம் ஆண்டில் கோயில் ஊழியர் களுக்குச் சம்பள நிர்ணயம் செய்தோம். அந்த அடிப்படையில் புதிய

சம்பளத்தைக் கடந்த ஆண்டிலேயிருந்து அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். தற்போது ஏறியுள்ள விலைவாசி, அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பள உயர்வு இவைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த அளவிற்குக் கோயில்களின் சார்பில் கொடுக்க முடியாவிட்டாலும் அந்தந்தக் கோயில்களின் நிதிவசதிக்குத் தகுந்தாற்போல் சில ஊதிய உயர்வைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் வருகின்ற ஏப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து 50,000 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ள கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 5 ரூபாய் ஊதிய உயர்வு தரப்படும். 50,000 ரூபாய்க்கு மேல் இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலே வருவாய் உள்ள கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 10 ரூபாய் ஊதிய உயர்வு தரப்படும். அதேபோல் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ள அனைத்துக் கோயில்களிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 15 ரூபாய் ஊதிய உயர்வு இப்பொழுது இருப்பதை விடக் கூடுதலாக அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மற்றும் இந்தத் துறையின் சார்பில் ஆற்றிவரும் பல வேறு குறிப்புகளையும் கொள்கைக் குறிப்பிலே வைத்திருக்கிறோம். உறுப்பினர்கள் அத்தனைபேரும் நல்ல கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத்துறை கடந்த ஆண்டிலே செய்திருக்கின்ற நல்ல சேவைகளைக் குறிப்பிட்டு எதிர்காலத்திலே போட்டிருக்கின்ற திட்டங்களையும் சொல்லியிருக்கிறோம். அவைகளைக் குறித்துப் புத்தமாகத் தந்திருக்கிறோம். புதிய திட்டமாக பிளாஸ்டிக் பையில் பால் வழங்கும் திட்டத்தை வருகின்ற மார்ச் மாதம் 28-ஆம் தேதி நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் மாதவரம் பால்பண்ணையில் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். அதன் முன்மாதிரியாக உறுப்பினர்கள் அத்தனைபேரும் அந்தப் பாலைப் பார்ப்பதோடு, பருகவும் இன்றைக்கு மாண்புமிகு அவைத் தலைவரவர்களின் அனுமதியைப் பெற்று, பையில் வழங்க இருக்கிறோம். அதைச் சுவைத்துப் பார்த்து நண்பர்களிடத்திலே பாலின் சுவையைப் பற்றிச் சொல்லி (குறுக்கீடு) பால்கோவாவும் தருகிறோம், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்கிறார்கள். எனவே, விவாதத்திலே சூடு இல்லாமல் சுவையோடு நல்ல முன்னேற்றகரமான யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை வழங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

**Dr. H.V. HANDE:** Hon. Speaker Sir, on these three Demands moved by the Hon. Minister, I wish to offer a few points for consideration of the House.

There are three Demands before us. I wish to take up first Milk Projects. I would like to say that as far as the milk project is concerned, and so far as the milk department is concerned, I am very sorry that everal things that should have been looked after well had been ignored



by the department concerned. In 1973 itself, I had brought to notice a number of irregularities to the attention of the Hon. Minister. Bu since then nothing proper seems to have been done specifically to the points raised. I have points to substantiate what I have said.

For instatnce, there is the Madurai Milk Project. In 1971-72, the net loss after charging interest on capital is Rs. 11.16 lakhs. That is the loss that has taken place in this particular project. This is for one year. That is the performance of the Government. Then, as far as the Madras Dairy and Milk Project is concerned, another shocking information is the loss is 0.47 lakhs without charging interest and Rs. 4.79 lakhs after charging interest for one year. This is the quantum of loss sustained by the department.

How is it they do not streamline the functioning of this department? A number of times, my distinguished friend, Mr. Chezhian has said that whenever you start a project, you always start where there is no milch cattle. Milch cattle are available in plenty in Kangayam and if you start the project there, the quantum of milk yield will be more. There should be grazing pastures provided. All these things come under the function of the department. This is as far as inefficiency in administration goes.

There are financial irregularities. The department is replete with financial irregularities. For instance, there is the Cattle Feed Plant. The House will be shocked to know that in the matter of cattle feed plant, in the matter of tenders for the same, there are a lot of irregularities. It has been brought to notice of the public that in the matter of issuing tenders for this plant, the Government invited tenders. A number of people quoted different rates. One company, Larsen and Toubro quoted Rs. 5.96 lakhs. Another company, Valcan Ltd., quoted Rs. 4.67 lakhs. The lowest was still down and I do not have the figures just now. What should they have done? They should have given to the lowest tenderer. But this was given to the highest tenderer for Rs. 5.96 lakhs, not even to the lower one for Rs. 4.67 lakhs. This was given to Larsen and Toubro. Why? What is the meaning of this? How can this happen? This is a financial irregularity of the highest order. What steps the Government has taken to set right the financial irregularity? Who is behind all these things? The Minister and the Government should answer. What is the argument they have advanced for offering this to the highest tenderer?

Orders were issued for starting this cattle feed plant in 1967. It should have been commissioned in 1970. But it was not. It was completed only recently, a few months ago, and why? There was lack of

சம்பளத்தைக் கடந்த ஆண்டிலேயிருந்து அனுபவித்துக் கொண்டு வருகிறார்கள். தற்போது ஏறியுள்ள விலைவாசி, அரசாங்க ஊழியர்களுக்கு அளிக்கப்பட்ட சம்பள உயர்வு இவைகளை அடிப்படையாகக் கொண்டு அந்த அளவிற்குக் கோயில்களின் சார்பில் கொடுக்க முடியாவிட்டாலும் அந்தந்தக் கோயில்களின் நிதிவசதிக்குத் தகுந்தாற்போல் சில ஊதிய உயர்வைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த அடிப்படையில் வருகின்ற எப்ரல் மாதம் 1-ஆம் தேதியிலிருந்து 50,000 ரூபாய்க்குக் குறைவாக வருவாய் உள்ள கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 5 ரூபாய் ஊதிய உயர்வு தரப்படும். 50,000 ரூபாய்க்கு மேல் இரண்டு இலட்சம் ரூபாய் வரையிலே வருவாய் உள்ள கோயில்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 10 ரூபாய் ஊதிய உயர்வு தரப்படும். அதேபோல் இரண்டு இலட்சம் ரூபாய்க்கு மேல் வருவாய் உள்ள அனைத்துக் கோயில்களிலும் பணியாற்றும் ஊழியர்களுக்கு மாதந்தோறும் 15 ரூபாய் ஊதிய உயர்வு இப்பொழுது இருப்பதை விடக் கூடுதலாக அளிக்கப்படும் என்பதை இந்த நேரத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் மற்றும் இந்தத் துறையின் சார்பில் ஆற்றிவரும் பல்வேறு குறிப்புகளையும் கொள்கைக் குறிப்பிலே வைத்திருக்கிறோம். உறுப்பினர்கள் அத்தனைபேரும் நல்ல கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

பால்வளத்துறை கடந்த ஆண்டிலே செய்திருக்கின்ற நல்ல சேவைகளைக் குறிப்பிட்டு எதிர்காலத்திலே போட்டிருக்கின்ற திட்டங்களையும் சொல்லியிருக்கிறோம். அவைகளைக் குறித்துப் புத்தமாகத் தந்திருக்கிறோம். புதிய திட்டமாக பிளாஸ்டிக் பையில் பால் வழங்கும் திட்டத்தை வருகின்ற மார்ச் மாதம் 28-ஆம் தேதி நம்முடைய தமிழக முதலமைச்சரவர்கள் மாதவரம் பால்பண்ணையில் தொடங்கி வைக்க இருக்கிறார்கள். அதன் முன்மாதிரியாக உறுப்பினர்கள் அத்தனைபேரும் அந்தப் பாலைப் பார்ப்பதோடு, பருகவும் இன்றைக்கு மாண்புமிகு அவைத் தலைவரவர்களின் அனுமதியைப்பெற்று, வெளியில் வழங்க இருக்கிறோம். அதைச் சுவைத்துப் பார்த்து நகரமக்களிடத்திலே பாலின் சுவையைப் பற்றிச் சொல்லி (குறுக்கீடு) பால்கோவாவும் தருகிறோம், திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் கேட்கிறார்கள். எனவே, விவாதத்திலே சூடு இல்லாமல் சுவையோடு நல்ல முன்னேற்றகரமான யோசனைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உறுப்பினர்கள் நல்ல கருத்துக்களை வழங்க வேண்டுமென்று பணிவன்போடு கேட்டு விடைபெறுகிறேன்.

**Dr. H.V. HANDE:** Hon. Speaker Sir, on these three Demands moved by the Hon. Minister, I wish to offer a few points for consideration of the House.

There are three Demands before us. I wish to take up first Milk Projects. I would like to say that as far as the milk project is concerned, and so far as the milk department is concerned, I am very sorry that everal things that should have been looked after well had been ignored





by the department concerned. In 1973 itself, I had brought to notice a number of irregularities to the attention of the Hon. Minister. But since then nothing proper seems to have been done specifically to the points raised. I have points to substantiate what I have said.

For instatnce, there is the Madurai Milk Project. In 1971-72, the net loss after charging interest on capital is Rs. 11.16 lakhs. That is the loss that has taken place in this particular project. This is for one year. That is the performance of the Government. Then, as far as the Madras Dairy and Milk Project is concerned, another shocking information is the loss is 0.47 lakhs without charging interest and Rs. 4.79 lakhs after charging interest for one year. This is the quantum of loss sustained by the department.

How is it they do not streamline the functioning of this department? A number of times, my distinguished friend, Mr. Chezhian has said that whenever you start a project, you always start where there is no milch cattle. Milch cattle are available in plenty in Kangayam and if you start the project there, the quantum of milk yield will be more. There should be grazing pastures provided. All these things come under the function of the department. This is as far as inefficiency in administration goes.

There are financial irregularities. The department is replete with financial irregularities. For instance, there is the Cattle Feed Plant. The House will be shocked to know that in the matter of cattle feed plant, in the matter of tenders for the same, there are a lot of irregularities. It has been brought to notice of the public that in the matter of issuing tenders for this plant, the Government invited tenders. A number of people quoted different rates. One company, Larsen and Toubro quoted Rs. 5.96 lakhs. Another company, Valcan Ltd., quoted Rs. 4.67 lakhs. The lowest was still down and I do not have the figures just now. What should they have done? They should have given to the lowest tenderer. But this was given to the highest tenderer for Rs. 5.96 lakhs, not even to the lower one for Rs. 4.67 lakhs. This was given to Larsen and Toubro. Why? What is the meaning of this? How can this happen? This is a financial irregularity of the highest order. What steps the Government has taken to set right the financial irregularity? Who is behind all these things? The Minister and the Government should answer. What is the argument they have advanced for offering this to the highest tenderer?

Orders were issued for starting this cattle feed plant in 1967. It should have been commissioned in 1970. But it was not. It was completed only recently, a few months ago, and why? There was lack of

co-ordination between the Civil Works Department and the Milk Project officials. I wonder whether the Hon. Minister is aware of all these things.

The House will be surprised, shocked to know that the top portion of the concrete had to be chipped off. Even for that, Larsen and Toubro was called in for this. The Civil Works Department constructs and a private company is called upon to chip off the concrete. There has been lack of co-ordination between the departments. A fabulous sum of money was spent. I would like to know why these things have happened? What are the steps taken to rectify the mistake in construction by the Civil Works Department. I would like to know the performance of the plant. I understand that the original capacity of the plant was 80 tons a day. That is, it was envisaged to produce 80 tons of cattle feed per day. Then the installed capacity was changed and it was 40 tons per day. What is the actual production? It is only 3 or 5 tons per day. After spending lakhs and lakhs of rupees, having committed financial irregularities, the capacity is deplorably low. Who is responsible for this?

(முற்பகல் 11-00)

Has the Hon. Minister taken them to task? If the Hon. Minister has not taken them to task, we will have to take the Hon. Minister to task.

Then with regard to the scandal relating to skimmed milk powder, 5.5. M. Tonnes of skimmed milk powder to the value of Rs. 0.68 lakh was damaged and it was sold at a deplorable rate of 0.36 paise per kg. to the Cattle Feed Mixing Plant. Articles like rice spoiled by the Civil Supplies Corporation or the Food Corporation of India are given free to the Government and that has not been accounted for. In spite of that, it is not running at a profit but at a loss.

What about the milk collection? Are we happy about the milk collection and distribution. The milk collection is only 55,000 litres per day but the quantum of milk sold is 110,000 litres per day. How is it possible to sell 110,000 litres when the milk collection is only half of it unless the milk is diluted? I know the milk is diluted. Milk powder and butter oil is mixed in the plant itself under the specific orders of the Government. Last year at about this time for about a fortnight, continuously rotten oil was mixed and there was a bad smell in the milk. A number of telephone calls came from the customers. Why it happened and whether it was investigated and whether responsibility was fixed? All these aspects of the matter have to be considered.

For a long time, cow's milk and buffalo's milk have been kept separately in the Chillery Centres at Baluchetty Chatram, Tindivanam, Ambur,



etc. But when they are brought to Madhavaram together, they get mixed up. But the milk authorities say that cow's milk and buffalo's milk are separate and there is no mix-up. We are not happy over these things.

Then again, a number of lorries were bought for the Government project but they were kept idle for a long time in T.V.S.

Then, last year I brought to the notice of the Hon. Minister a number of irregularities in the Thanjavur District Co-operative Milk Production and Marketing Federation and there was loss due to mismanagement. Till this day, nothing seems to have been done. I do not know what political strength the people connected with it derive. The speeches of Hon. Members are just flouted and they do not bother about it. They feel that whatever Hande might speak, they need not care about it.

So far as Hindu Religious and Charitable Endowments are concerned, I have raised a specific point, namely, that the accounts are not properly scrutinised and they do not come under the purview of the Comptroller and Auditor-General of India. That is my charge. A number of financial irregularities have been committed in various temples. For instance, there is the Kapaleeswarar temple and the trustees of this temple are also trustees of the Karpagambal Kalyana Mandapam. With regard to the construction of the Kalyana Mandapam, one of the trustees was interested in the matter and tender of one gentleman—I do not want to mention his name—who has absolutley nothing to do with the construction at all and who has no experience in that field, was accepted even though it was a higher rate. This person has given a name to his Company, which is a binami one. Regarding this matter a number of petitions were received from a number of organisations and even from Opposition Parties and I tried to investigate the matter. The House would be surprised to know what when we gave the complaint to the Chairman of the H.R.E. Board, he sent it to the Minister who in turn sent it to the trustee. But the trustee says, whatever we may say or do, "nobody can touch or shake me because I have got the political backing". In this connection, I want to point out that the person concerned with the construction has stated that he has got the necessary engineering competency. Whenever construction has to be done, a competency certificate has to be given. Two Engineers have been suspended because they gave a false certificate. Sir, I am not concerned with a particular temple but I am particularly concerned about the expenditure aspect of the matter. Let the Public Accounts Committee examine the accounts.

As reagrds "Deiveega Peravai", what is the work going on there? Who is the head of this institution? A sum of Rs. 15 lakhs is being spent; for what purpose? They are doing only the "vazhipadu" of the

Government. They do not do it in the case of all the members of the ruling party but only those with whom they have good relations like the Hon. Chief Minister. A lot of money is spent on "Vazhipadu". The Government must properly examine their accounts. I am also told that a number of Ambassador and Impala cars are being used by the top people for their luxury. They are answerbale to the House....

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> அறநிலையத் துறையால் செலவழிக்கப்படுகின்ற பணத்திற்கெல்லாம் கணக்கே இல்லை. யார் யாரோ செலவழிக்கிறார்கள், தெய்வீகப் பேரவையில் உள்ளவர்கள் இம்பாலா காரில் செல்லுகிறார்கள் என்றெல்லாம் தவறான தகவலைத் தருகிறார்கள். தவத்திரு குன்றக்குடி அடிகள், மேலவை உறுப்பினர் தெய்வீகப் பேரவையின் தலைவர். தமிழ்நாட்டில் இருக்கும் முக்கியமான மடாதிபதிகள் எல்லாம் அதிலே உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அறநிலையத் துறைக் கணக்குகள், தெய்வீகப் பேரவைக் கணக்குகள் எல்லாம் தணிக்கைக் குழுவால் தணிக்கை செய்யப்படுகின்றன. இந்தத் துறையைப் பொறுத்தவரை வருவாய்த்துறையோடு இணைக்கப்பட்டிருந்தது. கடந்த ஆண்டிலிருந்து வணிக வரித்துறையோடு இணைக்கப்பட்டிருக்கிறது. ஆடிட்டர் ஜெனரல் ஆடிட் செய்து ரெவின்யூ இலாகாவில் கணக்குகள் வைக்கும்போது இந்தத் துறையின் கணக்குகளும் இணைக்கப்பட்டு தேதியன் நம்முடைய பேரவையில் வைத்திருக்கிறார்கள். அதை உறுப்பினர்களுக்கு வழங்கியிருக்கிறார்கள். அதையெல்லாம் சரியாகக் கவனிக்காமல தொடர்ந்து தெய்வீகப் பேரவையைப் பற்றியும், அறநிலையத் துறையைப் பற்றியும் குற்றம் சாட்டுவது இந்த அவையில் சரியாக இருக்காது.

(திரு. என். டென்னிஸ் தலைமை.)

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே:</u> அதற்காகத்தான் நான் அந்த மன்ற உறுப்பினர் பெயரை இழுக்கவில்லை. இழுக்க வேண்டிய தேவையில்லை என்று குறிப்பிட்டேன். இந்த 15 லட்சம் ரூபாய் செலவு செய்யப்பட்டிருக்கின்ற நேரத்தில் முறையாகச் சலவு செய்யப்பட்டிருக்கிறதா ?

(மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் எழுந்து நின்றார்)

நான் முடித்து விடுகிறேன். நீங்கள் உட்காருங்கள், பிறகு பதில் சொல்லுங்கள் How can the Hon Minister speak when I am not yielding.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்:</u> நான் எழுந்து பேச உரிமை கிடையாதா ? அது சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று நிரூபிக்கட்டும். ஏன் மிரட்டுகிறார்?

<u>திரு. கு. காமாட்சி:</u> தலைவரவர்களே, நமது சபையின் மரபே, விளக்கம் அளிப்பதற்கு ஒரு அமைச்சர் எழுந்து எப்போது வேண்டுமானாலும் சொல்லலாம், என்பது. அப்படி ஒரு அமைச்சர் எழுந்திருக்கும்போது,



அவரை, "நீங்கள் உட்காருங்கள், நான் சொல்வதை எல்லாம் சொல்வேன்" என்ற முறையில் பேசுவது சரிதானா என்று அறிய விரும்புகிறேன்.

<u>டாக்டர் எச். வி. ஹாண்டே:</u> தலைவரவர்களே, அதற்கு ஒரு விளக்கம் அளிக்க விரும்புகிறேன். மரபு என்ன என்று சொல்கிறேன். நான் பேசிக் கொண்டிருக்கிறபோது ஒரு விஷயத்தைப்பற்றி, ஒரு கருத்தைப் பற்றி ரெண்டே ரெண்டு வார்த்தை சொன்னேன். அதற்குள் அமைச்சர் அவர்கள் எழுந்து நிற்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட—சீனியர் மினிஸ்டர்கள் எல்லாம்கூட; பேசும்போது குறிப்பு எடுத்துக் கொள்கிறார்கள். நான் யாரையும் குற்றம் சாட்டவில்லை. உறுப்பினர் பேசிய பிறகுதான் அதற்குப் பதில் கொடுக்கிறார்கள். நான் என்னுடைய கருத்தை முடித்து விடுகிறேன். அதற்குப் பிறகு அமைச்சர் அவர்கள் பேசலாம். நான் யீல்ட் செய்கிறேன் என்றுதான் சொன்னேன். பேசுவதற்கே வாய்ப்புத் தரவில்லை என்றால் என்ன செய்வது ?

நான் கேட்பது, இந்த ரூ. 15 லட்சம் எப்படி செலவழிக்கப்பட்டது ? வேண்டுமானால் விவகாரத்தை அமைச்சர் இந்த அவையில் வைக்கட்டும். நான் ஒரு வினா எழுப்புகிறேன். பதினைந்து லட்சம் எப்படி செலவழிக்கப்பட்டது ? ஏதாவது ஒரு குறிப்பு அமைச்சரிடம் இருந்தால் அதைத் தெளிவாக மன்றத்திற்கு இன்றைய தினம், இப்பொழுதே விவாதம் நடைபெறுகின்ற நேரத்தில் தர முடியுமா ? எனது கேள்வி, பதில் கொடுக்கப்படும். ரூபாய் பதினைந்து லட்சம் இப்படி, இப்படி செலவழிக்கப்பட்டது என்று சொல்ல முடியுமா ? அமைச்சர் விளக்கம் கொடுக்க வேண்டாமா ? இந்த அவையில் இந்த இலாக்காவில் அதற்கு நான் ஒரு விளக்கம்கூட சொன்னேன். ஜுடிஷியல் என்றும் எக்ஸிகியூடிவ் என்றும் செபரேட்டாக, தனித் தனியாக வைக்க வேண்டும் என்று பலமுறை விவாதித்திருக்கிறேன். குறிப்புகள் இருக்கின்றன. அதைப் பொறுத்தவரையில் அத்தோடு விட்டு விடுகிறேன்.

Mr. CHAIRMAN [THIRU N. DENNIS]: The hon. Member has already taken 17 minutes.

DR. H. V. HANDE: I will finish within two minutes.

நடைமுறையைப் பொறுத்தவரையில், ஏராளமான முறைகேடுகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இங்கே பல சொல்ல முடியும். ஆதாரங்களை இப்போதுகூட எடுத்துச் சொல்ல முடியும். உதாரணத்திற்கு வேண்டுமானால் ஒரே ஒரு கருத்து........................

In 1973 the Chief Executive Officer ordered the closure of the Khadi Sales Depot at Purasawalkam. It was suddenly closed. But within six months the goods were stolen. I do not know what happened afterwards. But suddenly the depot was opened. Similarly large quantities of cotton had to be obtained from Hyderabad and other places. But, for that, no proper tender was quoted. Nothing of that sort had been done. Lakhs of rupees had been spent but without following proper procedure. Eight times I have got particulars with me. I am prepared

to hand it over to the Hon. Minister. I hope the Hon. Minister will give a satisfactory answer. There has been serious lapse. That is why I would like to submit that we strongly support the cut motions given on behalf of our party to see that the Augean's tables are thoroughly cleaned.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : (நெல்லிகுப்பம்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்திலே இந்து அறநிலையத்துறை சம்பந்தமான விளக்கக்குறிப்பேடுகளை வைத்திருக்கிறார்கள். மற்றத் துறைகளைப்பற்றிப் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தினால் நான் இந்து அறநிலையத் துறையைப் பற்றிப் பேசலாம் என்றிருக்கிறேன். இந்தத்துறை செயல் படக்கூடிய விதம் எப்படி இருக்கின்றது என்பதனை ஆண்டுக்கு ஒருமுறையாகிலும் இந்த மன்றத்தில் விவாதத்தின் மூலமாக அறிந்து மேற்கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்ய முடியும் என்ற கருத்திலேதான் எனது பேச்சினைத் துவக்குகிறேன்.

இந்து மதத்தை, அதனுடைய கோட்பாடுகளை பரப்புவதற்கு என்றே ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் இந்து ரிலிஜியஸ் எண்டோமண்ட் போர்ட். மற்ற மதங்கள்—கிருஸ்துவ மதமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய மதமாக இருந்தாலும் சரி, அதற்கு என்று இந்த அவையில் வந்து பேச வேண்டிய அவசியம், ஓட்டு எடுக்க வேண்டிய அவசியம் இல்லை. அதற்கு என்று அவரவர்களே வைத்திருக்கிறார்கள். ஆனால் நம் நாட்டில் குறிப்பாக, தென் நாட்டில் இந்து அறநிலையம் சம்பந்தமாக நமது மாநில அரசாங்கமானது சிறப்பாகச் செய்து வருகின்றது. மற்ற மாநிலங்களிலிருக்கின்றவர்கள் இங்கு வந்து இங்கே உள்ள கோயில்களில் வழிபாடு செய்வதிலிருந்து இதை உணர முடிகிறது. உலகத்திலேயே இருக்கக் கூடிய மதங்களில் மிகப் பூர்வீகமான மதம் இந்து மதம் தான். மற்ற மதங்கள் அல்ல. மற்ற மதங்களை உண்டாக்கியவர்கள் இன்னார், இன்னார் என்று பெயர் சொல்லலாம். கிறுஸ்துவ மதத்தை உண்டாக்கியவர் ஏசு கிருஸ்து. இஸ்லாமிய மதத்தை உண்டாக்கியவர் நபிகள் நாயகம் என்று சொல்லலாம். புத்த மதத்தை உண்டாக்கியவர் கௌதம புத்தர். ஆனால் இந்து மதத்தை உண்டாக்கியவர் யார்? யாராகிலும் சொல்ல முடியுமா? சரித்திர ஆராய்ச்சியாளர்களைக் கேட்டால்..................

திரு. ஜே. ஜேம்ஸ் : சார், பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் மதப் பிரச்சாரம் செய்கிறாரா? பட்ஜெட்டைப்பற்றிப் பேசுகிறாரா? விவரம் தெரிந்தால் பரவாயில்லை.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி : (நெல்லிக்குப்பம்) தலைவரவர்களே, நான் பேசுவது ஜேம்ஸ் அவர்களுக்குப் புரியாது. நான் பேசுவது சுப்பிரமணியங்களுக்குப் புரியும். லட்சுமணஸ்வாமிகளுக்குப் புரியும். கோவிந்தசுவாமிகளுக்குப் புரியும். நாராயணசுவாமிகளுக்குப் புரியும். கண்ணப்பர்களுக்குப் புரியும். ஆகையால் தான் இந்து ரிலிஜியஸ் எண்டோமெண்ட் டிபேட்டில் பேசுகின்றேன்.



இந்து மதத்தை யார்தான் ஸ்தாபித்தனர்? இந்து மதம்தான் உலகத்திலேயே முதன் முதலில் இருந்தது என்று ஆதாரங்கள் இருக்கின்றன. நாங்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள். திராவிட நாகரீகத்தைப்பற்றி இன்றைய தினம்......................

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் பழைய மதம் இந்து மதம் என்று சொல்கிறார். இந்தியாவில் மதமே இல்லை. ஆரியர்கள் இந்தியாவிற்கு வந்ததற்குப் பிறகுதான் இந்து மதம் ஏற்பட்டது. அதற்கு முன்பு மதம் கிடையாது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): திராவிட நாகரீகம் என்று சொல்லக் கூடிய நாகரீகம் மொகஞ்சாதாரோ, ஹரப்பா என்ற சிந்துவெளியிலுள்ள பகுதியில் இருந்திருக்கும் என்று ஆர். ஜி. பண்டார்க்கர் எழுதியிருக்கிறார். கிருஸ்துபிறப்பதற்கு ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே திராவிட நாகரீகம் ஏற்பட்டது என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. அவர்கள் லிங்கங்களை வைத்து வழிபட்டார்கள் என்று இருக்கிறது. அதற்குப் பிறகு வந்தவர்கள் இந்து சமயம் எல்லாவற்றையும் அழித்தார்கள் என்று சொல்கிறார்கள். நான் சொல்லவில்லை; சரித்திர வல்லுநர் ஆர். ஜி. பண்டார்க்கர் எழுதியிருக்கிறார். கிருஸ்து பிறப்பதற்கு முன்பே, 3, 4 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, இந்த லிங்க வழிபாடு பாரதத்தில் ஏற்பட்டது என்று எழுதியிருக்கிறார். உலகத்திலேயே ஒரே ஒரு மதமாக, இந்து மதம் இருந்த காலம் இருந்திருக்கிறது என்றால் மற்றவர்கள் எல்லாம் குற்றம் காண மாட்டார்கள். எனது அருமை நண்பரும் குற்றம் காணமாட்டார் என்றே கருதுகின்றேன். ஆனால், இந்த இந்து ரிலிஜியஸ் எண்டொமண்ட் போர்டின் நோக்கங்கள் செயல்படக்கூடிய வழி முறைகள் இன்னன்ன என்பதனை, செயல்பாடுகளை, வழிமுறைகளை, இன்னின்ன, என்பதனை எல்லாம் நமது இலாக்கா எடுத்துக்கொண்டு சொல்ல வேண்டும் என்பதுதான் எனது ஆசை. மனிதனுடைய உயிரும் உடைமையும், எங்கும் நிறைந்த, எல்லாம் வல்ல கடவுள்பால் எடுத்துக் சொல்லும் வழிமுறைகள், தான் மதம். அதுதான் மார்க்கம். இஸ்லாமிய சமூகமானாலும் சரி, கிருஸ்துவ சமூகமானாலும் சரி, சீக்கிய மதமானாலும் சரி, எடுத்துப் பார்த்தால், ..........................................

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு உறுப்பினர் மதப் பிரச்சாரம் செய்வதை விடுத்து, இந்த பட்ஜெட் தீர்மானத்தைப்பற்றி தனது கருத்துக்களைக் கூறினால் நலமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

திரு. க.மு. இராசகோபால் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் லிங்க வழிப்பாட்டைப்பற்றி ஏதாவது தெரிந்தால் சொல்லட்டும். லிங்க வழிபாடு என்பது வேறு, ஆண்டவன் வழிபாடு என்பது வேறு. லிங்க வழிபாட்டைப்பற்றி உறுப்பினர் தெரிந்திருப்பாரானால் அவருக்குக் கூறுகிறேன் இந்த அவையிலே அதுபற்றிப் பேசப்படுவதற்கு அதற்குத் தகுதியே கிடையாது.

* * * *

** மாண்புமிகு மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பேரவைத் தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சென்ற ஆண்டு கூட இப்படித்தான் பேசியிருக்கிறார்கள். நம்முடைய அருமை நண்பர் கோவை செழியன் அவர்கள் கூட ஒரு பட்டத்தை அவர்களுக்குக் கொடுத்து இருக்கிறார்கள். "தவத்திரு கிருஷ்ணமூர்த்தி அடிகளார்" என்று பட்டம் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். தொடர்ந்து அந்தப் பாதையில் போகாமல் பட்ஜெட்டில் இருக்கும் சில விஷயத்தைப்பற்றி மட்டும்பேச வேண்டுமென்று யோசனையாக அவருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : எதிர்க்கட்சி நண்பர்கள், அருமை நண்பர்கள் சொல்லும் வேண்டுகோளை நான் புறக்கணிக்கவில்லை. எதற்கும் ரூபாய் பணம் மட்டும் போதாது.

THIRUMATHI T.N. ANANDANAYAKI : Sir, on a point of Order. The hon. Member there spoke about 'Lingam' and "religion'. They are not in good taste in the House. That should be expunged. We strongly object to those words. It is spoken especially when H.R.E. Demand is being discussed.

MR. CHAIRMAN (Thiru N. Dennis): The hon. Member may continue his speech.

திரு. க. மு. இராசகோபால் : அவர் ஆண்டவனைப்பற்றி எடுத்துச் சொல்லும்போது, அதை எடுத்துச் சொல்ல எனக்கும் வாய்ப்பு இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அவர் சொல்வதை அவரே பிறகு திருத்திக் கொள்வார். சேக்கிழார் பெருமான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொல்லியிருக்கிறார்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீர் நாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்".

நம்முடைய நண்பர் தெரிந்து கொள்ள வேண்டும். ஆகையால், இதிலே பேசிப் பிரயோசனம் இல்லை. எல்லோருக்கும் பக்தி என்பது வந்து விடாது. பக்தி என்பது கடையில் வாங்குவது இல்லை. அதற்கான மனப்பக்குவம் வேண்டும். அந்த மனப்பக்குவம் உள்ளவர்களைப்போய் இன்சல்ட் செய்வது என்பது நன்றாக இருக்காது.

திரு. க. மு. இராசகோபால் : யாரையும் புண்படுத்தாமல் பேச வேண்டும். மதத்தின் இதிகாசங்களை அவர் படித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர் உண்மையிலேயே படித்து இருக்கலாம். அவரை விட நிரம்பப் படித்தவர்கள் இருக்கிறார்கள். அவரை சப்ஜெக்ட் பற்றி பேசச் சொல்லுங்கள். அதை விட்டு வேறு பேச வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன்.



திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : உங்களுக்குத் தெரிந்து இருந்தால் வைத்துக் கொள்ளுங்கள். நம்முடைய இந்து மதத்தின் கோட்பாடுகளை மற்ற மற்ற மதங்களில், அவர்களுடைய மதத்தின்கோட்பாடுகளாகக் கடைப்பிடித்து இருக்கிறார்கள். இதில் உண்மை இருக்கிறது. நான் அதிகமாகப் பேசவில்லை.

திரு. கே. எ. வகாப் : தவத்திரு கிருஷ்ணமூர்த்தி அவர்கள் அவருக்குள்ள கருத்தைச் சொல்வதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் மற்ற எல்லா மதங்களையும் ஒப்பிட்டு, பொதுவாக இந்து மதத்திலிருந்துதான் அவர்கள் கோட்பாடுகளை எடுத்துக் கொண்டார்கள் என்று சொன்னால், வெளியே தவறான கருத்துக்களை ஏற்படுத்த ஏதுவாக இருக்கும். அப்படிப்பட்ட கருத்துக்களை, கிருஸ்துவ மதமாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய மதமாக இருந்தாலும் சரி, இந்து மதத்திலிருந்து எடுத்துக்கொண்டார்கள் என்பது போல் பேசுவது அவ்வளவு பொருத்தமாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : ஒருவர் பேசுகிற கருத்து உண்மைக் கருத்தாக இருந்தால் வெளியே தவறாகக் கருத என்ன இருக்கிறது? திரு. கிருஷ்ணமூர்த்தி இருக்கிற உண்மையை எடுத்துக் கூறுகிறார், இதிலே சங்கடப்பட என்ன இருக்கிறது?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): உண்மையான பக்திமானாக இருந்தால், கிருஸ்துவனாக இருந்தாலும் சரி, இஸ்லாமிய மதத்தைச் சேர்ந்தவனாக இருந்தாலும் சரி, எல்லோரும் ஒன்றுதான். ஒரே மனப்பான்மையோடுதான் இருப்பார்கள். மதத்திலே வேறுபாடு கிடையாது. ஏனெனில் நண்பர் சொன்ன மாதிரி; நான் சொல்வதில் உண்மை இருக்கிறது. மறுக்க முடியாது. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்கு முன்னால் தோன்றியது இந்து மதம், யார் ஏற்படுத்தியது என்று யாரால் சொல்ல முடியும். அதை நான் ஒரு உதாரணத்தின் மூலம் சொல்லிக் கொள்கிறேன்

"வேறுபடு சமயமெலாம் புகுந்து பார்க்கின் விளங்கு
பரம்பொருளே நின்விளையாட்டல்லால் மாறுபடுங்கருத்தில்லை
முடிவில் மோன வாரிதியின் நதித்திரள் போல் வயங்கிற்றம்மா"

முடிவின்போது எல்லா மதமும் ஒரே இடத்தில் தான் போய் சேருகிறதோ. எப்படி மலைகளில் இருக்கும் நீர் கடலில் போய் சேருகிறதோ, பெங்கால் கடல், ஜப்பான் கடல், சிங்கப்பூர் கடல், என்று எல்லாமே ஒரே சமுத்திரத்தில் போய் சேருகிறதோ அதேபோல் எல்லா மதமும் ஒரே பரம்பொருளை நாடுவதற்கு வழி காட்டியாக இருக்கின்றன. ஆகையால் நான் சொல்ல விரும்புகிறேன் நம்முடைய இந்து மத அறநிலையம் இந்தக் கருத்துக்களை மாணவர்களிடத்திலும் மக்களிடத்திலும் பரப்புவதற்கு உரிய காரியங்களைச் செய்யுங்கள் அதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து பாருங்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

இன்று என்ன நடக்கிறது. கோவிலே மட்டும் நாம் பார்த்தால் போதும் அதுவும் நம்முடைய நண்பர் ஹாண்டே அவர்கள் சொன்னார்கள். தெய்வீகப் பேரவைபற்றிச் சொன்னார்கள். அதை மிக நல்ல முறையில் பரிசீலிக்க வேண்டும். இன்று கோவில்களைப் பற்றியெல்லாம் சினிமா விளம்பரம் மாதிரி ஆக்கிவிட்டு இருக்கிறார்கள். கோவிலுக்கு விளம்பரம் இருக்கக்கூடாது. இந்தக் கோவிலுக்கு வாருங்கள் முருகன் அருள் பெறுங்கள் என்று இப்படியெல்லாம் போட்டு சொன்னால் பக்தி வளராது. இப்படிப்பட்ட விளம்பரம் செய்யக்கூடிய அளவில் இன்றையதினம் அந்த இலாகா ஈடுபடக்கூடாது என்று நான் சொல்ல விரும்புகிறேன்.

இரண்டாவது எளிமை வேண்டும். இன்றையதினம் இந்த இலாகாவினர் என்ன சொல்கிறார்கள். பொன்னால் தேர் செய்கிறேன்; வைரத்தால் கிரீடம் செய்கிறேன். இதை நண்பர் ஒத்துக்கொள்வார், பலபேர் ஒத்துக் கொள்வார்கள். பொன்னால் தேர் செய்கிறேன்; வைரத்தால் கிரீடம் செய்கிறேன் என்று அந்த மதத்துறையினர் ஈடுபடக்கூடாது. அப்படி ஈடுபடுவது பக்தியை நீங்கள் கெடுக்கிறீர்கள் என்று நான் சொல்லவேண்டும். நேற்றைக்கு முன்தினம் கூட கொரக்கா பொடி கிராமம் கோவில் சுவர் இடிந்து 23 பேர் செத்து மடிந்தார்கள் என்றால், அது தெரியாத்தனத்தால், பக்தியை முறைப்படி தெரிந்து கொள்ளாத காரணத்தால் அவர்கள் செத்து மடிந்து இருக்கிறார்கள். ஆகையால், விளம்பரம் கொடுக்கக் கூடாது. பக்தியில் விளம்பரம் கூடாது. உண்மையான பக்தி இருக்குமானால் அதற்குப் பொன் தேர் தேவையில்லை; வைரக்கிரீடம் தேவையில்லை. நெஞ்சமே கோவில் ஒரு மனிதனுக்கு. பெரிய ஞானிகள் கோவிலுக்குப் போகமாட்டார்கள். ஆகவே, அந்த வழிபாடுகள் எளிமையாக இருக்கவேண்டும். மிகச் சாதாரணமான முறையில் இருக்கவேண்டும். அதற்கு ஆர்ப்பாட்டங்கள் கூடாது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எதிர்க்கட்சியில் உள்ள பலர் நண்பர் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொடங்கியபோது அவருடைய வாதத்தைப் பார்த்து விட்டு ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தின் நோக்கம் மாறி விட்டது போல் எண்ணி இருந்தார்கள். உண்மையான பக்திமான்களை எந்த இடத்தில் வருவார்கள் என்பதை திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டுள்ள பிரச்சினைகளைப் புரிந்து கொண்டு ஆதரிக்க வேண்டும்.

திரு வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ஆகையால் சொல்கிறேன்; பக்தியை மிக எளிமையாக வைத்துக்கொள்வதற்கு இந்தத் துறை முயல வேண்டும். எப்படி இருக்கவேண்டும்; எப்படிப்பட்ட பக்தி இருக்கவேண்டும் என்பதை எல்லாம் திருநாவுக்கரசர் சொல்லியிருக்கிறார். இன்றையதினம் மீனாட்சி அம்மனைப் பார்த்தால்தான் அந்த மாதிரி நகை போட்டுக் கொள்ள வேண்டுமென்று பெண்களுக்குத் தோன்றும். அது உண்மையான பக்தி அல்ல.



1,300 ஆண்டுகளுக்கு முன்பு திருநாவுக்கரசர் பக்தியைப் பற்றிச்சொல்லி யிருக்கிறார். ஆனால் இன்றையதினம் என்ன செய்கிறார்கள்? திருச் செந்தூர், பழனி. திருத்தணியில் பொன் தேர் செய்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் என்ன சொல்லியிருக்கிறார்கள். "சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்; தமிழொடு இசை பாடல் மறந்தறியேன்" என்றுசொல்லி யிருக்கிறார். நிலத்தில் கிடைக்கும் பூவோ, தண்ணீரோ அதை வைத்து பக்தி செய்யுங்கள்; எளிமையாகக் கிடைக்கக்கூடிய பூவைவைத்து பக்தி செய்யுங்கள் என்று சொல்லியிருக்கிறார். இது 1,300 ஆண்டுகளுக்கு முன்பு திருநாவுக்கரசர் சொன்னது மட்டுமல்ல; பகவத் கீதையில் என்ன சொல்லி யிருக்கிறார்கள் என்றால் "யார் எனக்கு மலர், கனி, நீர், இலை முதலியன பக்தியோடு படைக்கிறாரோ; அத்தூய மனதானது அன்பளிப்பை நான் அருந்துகிறேன்" பகவத் கீதை சரியா, இல்லையா? எப்போது எழுதப் பட்டது? என்ற வாதத்திற்குள்ளே நான் போகவிரும்பவில்லை. எளிமை வேண்டும். மதுரை கோவிலில் உட்பிரகாரத்தில் சட்டை போட்டுக்கொண்டு போகக்கூடாது என்று சொன்னோம்; இப்போது சட்டை போட்டுக்கொண்டு போகலாம் என்று அனுமதி செய்து இருக்கிறோம். இங்கேயுள்ள நண்பர்கள் கூடச் சொல்லலாம்; இன்னும் கொஞ்சம் நாள் போனால் செருப்பு போட்டுக் கொண்டு போகக்கூட........................................

திரு. க. மு. இராசகோபால்: என் எண்ணோட்டமே வேறு. நான் பேசிய பேச்சுக்கும் நீங்கள் பேசுகிற பேச்சுக்கும் வேறுபாடு இருக்கிறது.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): ரொம்ப நாள் ஆகும் புரிவதற்கு.

(முற்பகல் 11-30 மணி)

திரு க. மு. இராசகோபால்: ..................ராமலிங்க அடிகள் கூடச் சொல்லி இருக்கிறார்கள்..............................

திரு. வி. கிருஷ்ண மூர்த்தி (நெல்லிக்குப்பம்): அவர் இப்போது பேசவில்லை. தலைவர்அவர்களே அவரை உட்கார வையுங்கள்.

(பல உறுப்பினர்கள் குரல் எழுப்பினர்.)

திரு. எம். சுரேந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர்.

Thiru V. KRISHNAMURTHI (Nellikuppam): I do not want to argue with people like Mr. Rajagopal who do not understand things properly.

திரு. அப்துல் அருணை: கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சட்டை போட்டுக் கொண்டு கோவிலில் போவதை வரவேற்கிறார். இப்போது செருப்பு போட்டுக் கொண்டு கோவிலுக்குப் போக வேண்டுமென்று கேட்கிறாரா?

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): இரண்டையும் நான் வரவேற்கவில்லை. இங்கே கடவுளை தொழுகிற சமயத்திலே நம்முடைய தென்னாட்டிலே சில பழக்க வழக்கத்திலே இங்கே இருக்கின்ற பூசாரிகள் மற்றவர்களை கடவுளைத் தொட அனுமதிப்பது இல்லை. வடநாட்டிலே அப்படிக் கிடையாது. காசிக்கு போனால் லிங்கத்தை கட்டி ஆலிங்கனம் செய்யலாம். தென்னாட்டிலே கோவிலில் இந்த முறையில் இருக்கக் கூடாதா என்று நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

Mr. CHAIRMAN (Thiru N. DANNIS); The hon. Member has already taken 15 minutes.

Thiru V. KRISHNAMURTHI (Nellikuppam) : I will finish in three minutes. I do not want to speak again for I will not come to this Assembly again.

Thiru R. PONNAPPA NADAR : The hon. Membe need not feel so much disappointed.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்): அதற்கு பிறகு இன்னொன்று சொல்லிகொள்ள விரும்புகிறேன். ஆண்டவனை வழிபட வேண்டுமென்றால் நெருக்கமாக இருக்க வேண்டும். பெனாரசில் கங்கையை எடுத்துக் கொண்டு நாம் தண்ணீரை லிங்கத்தின் மேல் ஊற்றி லிங்கத்தை வழிபடுகிறோம். இங்கே இருக்கின்ற சுயநல வாதிகள் கடவுளை வைத்துக் கொண்டு வாழ்க்கை நடத்துகிறார்கள். முதலமைச்சர் இதைக் களைய வேண்டும்.

இரண்டாவதாகச் சொல்லக் கொள்ள விரும்புகிறேன். இன்றைக்கு பக்திக்கு இடையூறு விளைவிக்கக் கூடியவர்கள் நாத்திகர்கள் அல்ல; ஆஸ்திகர்கள் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். எப்படி என்றால் இவர்கள் என்ன சொல்கிறார்கள்—நாம் கொஞ்ச நாளைக்கு முன்பு பார்த்தோமே—தென்கலை வடகலை தகராறு—சில வைஷ்ணவம் தகராறு—யாரோ யானையைக் கொடுத்தார்கள். தென்கலை நாமமா? வடகலை நாமமா என்று சண்டை போடுகிறார்கள். இந்து சமயத்தின் பிறவி எதிரிகளாக இவர்கள் இருக்கிறார்கள். உள்ளபடியே மற்றவர்கள் அல்ல என்பதை இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்னும் ஒரே ஒரு காரணம் இங்கே சொல்லிப் பேச்சை முடித்துக் கொள்ள விரும்புகிறேன். சிலைகளை வைப்பதைப் பற்றி இன்றைய தினம் ரொம்பப் பேர் பேசுகிறார்கள். பிரைம் மினிஸ்டரிலிருந்து பிரம்மானந்த ரெட்டியிலிருந்து நம் சி. சுப்பிரமணியம், நம் கலைஞர் கூட பேசி இருக்கிறார்கள். ராஜராஜ சோழனுக்கு தஞ்சாவூர் பெரிய கோவிலில் சிலை வைப்பது நம்முடைய மாநிலத்தின் கோரிக்கை. இதற்கு இவ்வளவு பெரிய எதிர்ப்பு எதற்கு? திருப்பதியிலே விஜய நகர சக்ரவர்த்தி திருப்பணி செய்தார் என்பதற்காக சிலை வைக்கவில்லையா? இந்தக் கோவிலைக் கட்டிய ராஜராஜ சோழனுடைய சிலை இங்கே வைப்பது எந்த விதத்தில் முரணானது? இதைப் போலதான் ஸ்ரீரங்கத்தை எடுத்துப் பார்த்தாலும், இதைப் போலத்தான் கங்கை கொண்ட சோழபுரத்தைப் பார்த்தாலும் தெரியும். இந்த கோவில் எப்படி இருக்கின்றது. உள்ளே போனால்—போகவே முடியாது... அங்கே இருக்கின்ற விக்ரகங்கள் சிறையிலே வைக்கப்பட்டது போல் இருக்கின்றன. ஆகவே, தமிழகத்தில் இராஜராஜ சோழன் சிலையை தஞ்சை கோவில் உள்ளே வைக்க மத்திய அரசாங்கம் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று கோரி, இந்தத் துறை மேன்மேலும் நல்ல முறையில் திறம்பட செயலாற்ற வேண்டும்; என்னுடைய ஒத்துழைப்பு இதற்கு இருக்கும் என்று கூறிப் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.



திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, லிங்க வழிபாடு பற்றி ஒரு சில கருத்துக்களை திரு. ராஜகோபால் அவர்கள் கூறினார்கள். அதில் சில விரும்பத் தகாத வார்த்தைகள் இருக்கின்றன என்று நான் கருதுகிறேன். அப்படி இருந்தால் அந்த வார்த்தைகளை எல்லாம் ஆத்திகர்கள் மனம் புண்படாத முறையில் சில்வற்றை அவை குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு என். டென்னிஸ்): இந்த வார்த்தைகளை எக்ஸ்பஞ்ஜ் செய்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, தனியாகப் பார்த்து இந்த வார்த்தைகளை நீக்க வேண்டுமே தவிர இல்லை என்றால் இந்தக் கருத்து பொருளிழந்து விடும். பொதுவாக நீக்குவது சரியல்ல. எந்த வார்த்தை என்று பார்த்து நீக்க வேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: லிங்கத்தைப் பற்றி சொன்ன வார்த்தைகளை எக்ஸ்பஞ்ஜ் செய்ய வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. என். டென்னிஸ்): பரிசீலனை பண்ணி எக்ஸ்பஞ்ஜ் செய்கிறேன்.

* THIRU K.M. SUBRAMANIAM: Hon. Chairman, Sir, today we are discussing three important issues or Demands. I consider these three Demands very important, because during the freedom struggle, we were told that once independence was achieved, milk and honey would flow through the streets of India. That was the promise made long ago by our great leaders. But today, we find after 27 years of independence, the milk supply in the country—not only in Tamil Nadu—is very, very poor and many people are not getting enough milk even for sustenance.

[Thiru K. M. Subramniam] [1975 மார்ச் 17

The Hon. Minister started by saying that milk is very important for health. I entirely agree and nobody will dispute that. But are we getting it? We are supplied through the Milk Project 1,11,000 litres of milk to the City of 27 lakhs population. There are the private suppliers also. Still the supply is poor. I do not know when it will be sufficient.

Secondly, nobody has realised that the supply of milk or breeding of cows and buffaloes is an important aspect of our economy. Particularly, so far as rural economy is concerned, it is the best form of cheap self-employment. Sir, unfortunately, neither this Government nor any other Government has given sufficient importance to this self-employment problem.

This does not require any foreign exchange; this does not require experts. Unfortunately, today, we are giving support to collective dairies. There are so many cut motions that every district must have a dairy farm. How can you have it? How can the rural agricultural worker whose per capita income is only Rs. 400 per annum supplement his income? He can do it only by breeding cows and buffaloes and selling milk in his village. So, this is a very important problem. Every pie spent on this problem is well-spent.

So far as supply of milk to the City is concerned, I am very glad that the Government is starting to supply milk in plastic containers. All right. Today, there are many complaints sent to the Daryi Management, of very bad adulteration of milk with water. If I am wrong, I withdraw it. If that is right, I would like to know whether that has been investigated who is responsible for this? It is seen that many bottles come with the top screws loose. They are open. There are a lot of complaints. I hope and trust that these will be looked into. That is one.

Secondly, the minimum supply is only in one bottle of half a litre. We want that the habit of milk consumption should become popular and the poor should take milk. If we really want poor people to take to milk consumption, there should be quarter litre bottles or containers for 45 paise each, so that more and more poor people can take it without difficulty. In slums, if you sell only 90 paise bottles, the people there are not able to buy it, for they have not got the money.

In Bombay, there is no advance payment. Here advance payment has to be made for getting milk on the first day of the month itself. In Bombay, token is given and the person who wants milk has to present it and get the milk paying cash. Here such a system is not followed. I request the Hon. Minister to introduce such a system here also.



1975 மார்ச் 17] [Thiru K. M. Subramaniam]

Another difficulty in Madras City is that every street has got a sort of milk stall and many of these stalls are not licensed. The milk sold at these stalls is very bad and unhygienic. The Corporation authorities should see that they are maintained properly and licences should be given only to those who sell good and pure milk.

I do not know whether I can speak on Animal Husbandry. But one thing is definitley happening. In spite of all the efforts taken by the Government to improve the quality of the animals, animals have not improved. Milkmen are killing calves by denying them the milk. How can we improve the cattle wealth when calves are killed? I request the Hon. Minister to look into this aspect of the matter.

So far as the Hindu Religious and Charitable Endowments Board is concerned, I think I cannot take a political line because I have to speak the truth. As a Hindu, I say that the Hindu Religious and Charitable Endowments Board is working fairly well with some defects. Fortunately, we have a Commissioner, whom I do not know personally—who, I think is doing his duty well. When he comes to the Siva-Vishnu temple in T. Nagar, he never takes even the coconut presented to him. That shows that he is scrupulously honest and that is the impression that he gives. I hope and trust that his services will be utilised by the Board.

So far as "Deiveega Peravai" is concerned, my hon. Friend has stated that it is a barbarous system. Our students are indisciplined; our parents are indisciplined; and generally our people are indisciplined and that is due to their lack of moral sense and faith in god. How can moral sense be created? You must have faith in certain principles. I do not say that God should be decorated in diamonds and God's chariot should be in gold. I only say that man must have faith in God and the Hindu Religious and Charitable Endowments Board must create that faith in God........ (Mr. Chairman sounded the gong) ......

Sir, some hon. Members have been given 40 minutes. If the Chair does not allow me more time, I will resume my seat.

Mr. CHAIRMAN (Thiru N. DENNIS): The hon. Member can take two more minutes.

Thiru K.M. SUBRAMANIAM: So far as temple accounts are concerned, the H.R.E. Audit raises so many objections. As I was the President of Siva-Vishnu Temple Committee, I could say at one time Audit raised 300 objections. Of course it will be a very good thing if the accounts are audited by the Accountant-General.

[Thiru K. M. Subramaniam] [1975 மார்ச் 17

So far as appeals are concerned, I think that power should be taken away form the Commissioner so that he can devote more attention on the administrative side. In the Corporation, we have got the Taxation Appeals Committee and here we can have a judicial officer to hear appeals.

Then I come to the most important point. If the economic condition of the rural people is to be improved and if the rural areas are to be improved, the development of khadi and village industries should take place not on a piece of paper but at the village level. Unfortunately, Sir, to-day we do not understand the value of khadi. Now plastic baskets have replaced the bamboo baskets. Plastic products have replaced the products of the village industries. Village industries are being killed and I hope and trust that serious thought would be given to the development of village industries. A change of policy and a change of heart are very necessary if the village economy has to be improved.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சரவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற இந்த மசோதாவை ஆதரித்து நான் ஒருசில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

அரசு கோயில் கூடாது என்பதற்காக அல்ல, அது கொடியவர்களின் கூடாரமாகக் கூடாது என்ற கொள்கையில் இந்த அரசு இன்றைக்கு அறநிலையத் துறையைப் பொறுத்த வரை எவ்வளவு சிறப்பான காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறது என்பதை இங்கே அளிக்கப்பட்டிருக்கிற குறிப்புகளிலிருந்து நிச்சயமாக உணர்ந்துகொள்ள முடியும் என்று நம்புகிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்தவரை, 1967-க்கு முன்னுள் எத்தனை கோயில்கள் இந்தத் துறையின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தன என்றும் அதற்குப் பின்னுல் கூடுதலாக எத்தனை கோயில்களை இந்தத் துறையின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவந்திருக்கிருர்கள் என்றும் இங்கே இருக்கிற குறிப்பைப் பார்த்து எதிர்க்கட்சிக்காரர்கள் கூட உள்ளபடியே பாராட்டுவார்கள் என்று நம்புகிறேன்.

நடப்பு நிதியாண்டில் 20,000-க்கு மேற்பட்ட, தனியாருக்குச் சொந்தமாக இருந்து கணக்கிலே வராத கோயில்களை இந்தத் துறையின்கீழ் கொண்டுவருகிருேம் என்ற இனிப்பான செய்தியை இங்கு அறநிலையத் துறை அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிருர்கள், உள்ளபடியே அதைப் பாராட்டுகிறேன், வரவேற்கிறேன்.

அறநிலையத் துறையைப் பொறுத்த மட்டில் 1967-க்கு முன்னுல் 9,600 கோயில்கள் இருந்தன, 1967-க்கு பின்னுல் 18,268 கோயில்கள் இருக்கின்றன என்பதைப்பார்க்கும்போது ஒரு காலத்திலே இந்த இயக்கமானது ஆட்சிக்கு வந்தால் இருக்கிற கோயில்களை எல்லாம் இடித்துத்



1975 மார்ச் 17] [திரு. அ. தேவேந்திரன்]

தள்ளிவிட்டு, சினிமா கொட்டகைகளையும், நாடகக் கொட்டகைகளையும் கட்டிவிடுவார்கள் என்று சொன்ன வாதங்கள் எல்லாம் எவ்வளவு பொய்த்துப்போய்விட்டன என்பதை உணர்ந்து கொள்ளலாம்.

"நட்ட கல்லும் பேசுமோ நாதன் ஒன்றிருக்கையில்
சுட்ட சட்டி சட்டுவம் சுவையறிந்து உண்ணுமோ"

என்றிருந்தாலும் கூட, இந்த பொறுப்புக்கு வந்த பின்னுல் இந்த கோயில்களை காப்பாற்றும் பொறுப்பையும், கோயில் ஊழியர்களைக் காப்பாற்றும் பொறுப்பையும் இந்த அரசு எவ்வளவு சிறப்பாக மேற் கொண்டிருக்கிறது என்பதற்கு ஓர் உதாரணமாக வருகிற ஜூன் மாதம் 3-ந் தேதியிலிருந்து அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுகிற குடும்ப நலத் திட்டத்தை கோயில் நிர்வாக ஊழியர்களுக்கும் நீட்டிக்கிருேம் என்ற மகிழ்ச்சியான செய்தியை மிகுந்த கருணையோடு மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவித்திருக்கிருர்கள். அதற்காக தமிழகத்தில் இருக்கிற இந்து சமய பணியாளர் சங்கத்தின் தலைவர் என்ற முறையில் என்னுடைய நன்றியை இந்த நேரத்திலே நான் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்.

ஆண்டவனோடு அதிகமாக நெருங்கி தொடர்பு கொண்டிருந்தாலும் அந்தப் பணியாளர்கள் சுபீட்சமான நிலையில் இல்லை என்பது யாரும் மறுக்க முடியாத உண்மையாகும். நாட்டில் இருக்கிற அத்தனைபேரும் தங்களுக்கு இருக்கிற தொல்லை போகவேண்டுமென்று அற ஆலயத்திற்குப் போகிருர்கள். ஆண்டவனைப் பார்த்து அங்கே வழிபாடு செய்கிருர்கள். இவர்களது வழிபாட்டுக்குக் காரணமாக இருக்கிற ஆலயப் பணியாளர்கள் உள்ளபடியே சுபீட்சமான நிலையில் இல்லை என்ற கருத்துக்கு வேறு கருத்தை யாரும் சொல்ல முடியாது என்றே கருதுகிறேன். அவர்களுடைய பொருளாதார நிலையை உயர்த்த வேண்டும் என்கிற நல்லெண்ணத்தில் ஆண்டுக்கு 50 ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக வருமானமுள்ள கோவில்களில் பணியாற்றும் ஊழியர்கள் 5 ரூ. அதிகமாக சம்பளம் பெறுவார்கள் என்றும், 50 ஆயிரத்தில் இருந்து 2 இலட்சம் ரூபாய் வரை வருமானமுள்ள கோவில்களில் உள்ள பணியாளர்கள் 10 ரூபாய் கூடுதலாக சம்பளம் பெறுவார்கள் என்றும், இரண்டு இலட்சத்திற்கு மேல் எவ்வளவு வருமானம் வந்தாலும் இந்த ஆலயங்களில் பணியாற்றுகிறவர்கள் 15 ரூபாய் அதிகமான சம்பளம் பெறுவார்கள் என்றும் இனிப்பான செய்தியினை அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிருர்கள். அதற்காக அவருக்கும், இந்த அரசுக்கும் நான் பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருக்கோவில்களில் எவ்வளவு திருமணங்கள் நடந்தாலும் அந்தத் திருக்கோவில்களில் பணியாற்றுகிற பணியாளர்கள் தாங்களே திருமணம் செய்துகொள்ளமுடியாமலும், தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்குத் திருமணம் செய்துவிக்க முடியாமலும் பொருளாதார நிலையில் மிகத் தாழ்ந்த நிலையில் இருக்கிற காரணத்தினுல் திருமணத்திற்காக அவர்களுக்கு 200 ரூபாய் வட்டியில்லாக் கடன் அளிக்கப்படும் என்பதாக அறிவித்திருக்கிருர்கள். இதற்காக உள்ளபடியே எனது மனமார்ந்த நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

1973ஆம் ஆண்டு அறநிலைய ஊழியர்களுடைய மாநில 2-வது மகா நாட்டிற்கு தலைமை வகித்த தானைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் அங்கே இருந்த அத்தனை தொழிலாளர் பெருமக்களையும் பார்த்துச் சொன்னார்கள் "இந்த அரசுக்கு ஆஸ்திகத்தில் நம்பிக்கை இருக்கிறதோ இல்லையோ, ஆஸ்திகத்தில் நம்பிக்கை உள்ளவர்களுக்குடைய மனது புண்படாமல் பார்த்துக் கொள்வதில் இந்த அரசுக்கு மிகுந்த அக்கறை உண்டு. அதில் மிகுந்த கவனமாக முனைப்போடு செயல்படவேண்டும். ஏனைய தொழிற் சங்கங்களைப்போல நீங்களும் போராடுவோம், வெற்றி பெறுவோம் என்று ஆரம்பித்துவிடுவீர்களானால் அதன் விளைவாக அறநிலைய வழிபாடுகள் நின்றுவிடக்கூடிய பயங்கரமான நிலை ஏற்படும். அதற்கு நீங்கள் இடமளிக்கக் கூடாது" என்று தெரிவித்தார்கள். இதில் நீங்கள் ஒரு வாக்குறுதியைக் கொடுத்தால்தான் நான் மேலே பேச முடியும் என்று சொல்ல—அறநிலையப் பணியாளர்கள் சார்பிலும் நானும்—அறநிலையப் பணியாளர்களும் சேர்ந்து நிச்சயமாக நாங்கள் போராட்டம் என்கிற நிலைக்குப் போகமாட்டோம், எங்களது நியாயமான கோரிக்கைகளை எழுத்துவடிவில் இந்த அரசுக்கும், சம்பந்தப்பட்ட அமைச்சர், துறையினிடத்தில் தந்து ஆக்கப் பூர்வமான முறையில்தான் செயல்படுவோம் என்ற வாக்குறுதியைத் தந்தோம். அந்த அடிப்படையில் செயல்பட்டு வருகிற எங்களது கருத்துக்களை எல்லாம் இந்த அரசு படிப்படியாக ஏற்று செயல்பட்டு வருகிறதைப் பார்க்கிறபோது உள்ளபடியே எங்களால் நன்றியைத் தெரிவித்துக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை.

இன்னும் நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புவது எல்லாம் அறநிலைய ஆட்சித் துறையில் பணிபுரிகிறவர்கள், அதிகாரிகள் இன்னும் கொஞ்சம் விரைவாகச் செயல்படவேண்டுமென்ற வேண்டுகோளைத் தெரிவித்துக் கொள்ளவிரும்புகிறேன்.

ஒரு அப்பாயிண்ட்மெண்டு என்றாலும், டிசிப்ளினரி ஆக்ஷன் என்றாலும், அறநிலைய பணியாளர்களைப் பொறுத்தவரை போர்ட் ஆப் டிரஸ்டீஸ் தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள். எங்களுடைய வேண்டுகோள் எல்லாம் சஸ்பென்ஷன்—டிஸ்மிஸ் என்பதுபோல் எடுக்கப்படுகிற உத்தரவுகள் எல்லாம் இ. ஓ. அளவிலேயே நின்றுவிடாது—அறநிலையத்துறை டெபுடி கமிஷனர்தான் இது போன்றவர்களை முடிவு செய்யவேண்டுமென்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து அற ஆலயங்களில் பணியாற்றுகிறவர்களுக்குச் சரியாகச் சம்பளம் கொடுக்கப்படுவதில்லை என்கிற உள் நிலவரத்தில் இருப்பதும் நல்லதல்ல. மாதந்தோறும் 5 ஆம் தேதி அல்லது 10 ஆம் தேதிக்குள்—ஏனைய அரசு ஊழியர்களைப்போல—அவர்களுக்குச் சம்பளம் கொடுக்கப்படவேண்டும் என்கிற உத்தரவு பிறப்பிக்கப்படவேண்டும் என்பதை இந்த நேரத்தில் மிகுந்த பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழகத்திலுள்ள ஆலயங்கள் இன்றைக்கு மிகச் சிறப்பாகச் செயலாற்றி வருகின்றன. ஏனைய மாநிலங்களில் இருந்து வருகிற சட்டப்





பேரவைக் குழுக்களைச் சேர்ந்த—அஷ்யூரன்ஸ் கமிட்டி—எஸ்டிமேட் கமிட்டி—மெம்பர்கள் எல்லாம் இங்கு வந்து பல தேவாலயங்களுக்குச் சென்று பார்வையிடுகிறபோது—இந்த மாநிலத்திலுள்ள அறநிலைய ஆட்சித்துறை சிறப்பாகச் செயலாற்றி வருகிறது என்கிற அவர்களது பாராட்டுதல்களை எங்களிடமும், மற்றவர்களிடமும் தெரிவித்துச் சொல்கிறபோது நாங்கள் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறோம். இந்த நிலை தொடர்ந்து மேலும் சிறப்புற அமைவதற்கு வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும் என்று சொல்லி அதற்கு ஆக்கப்பூர்வமான நல்ல கருத்துக்களின் அடிப்படையில் உத்தரவுகள் பிறப்பிக்கப்படவேண்டுமென்று கேட்டு, இந்த மானியத்தை மனப்பூர்வமாக ஆதரித்து என் வார்த்தைகளை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

Thiru B. VENKATASWAMI: Sir, in support of the cut-motion given I want to offer a few remarks regarding Hindu Religous Endowments and Dairy Development.

In the beginning itself I want to point out to the Hon. Minister that there is no proper scheme for development of exotic breed of animals. I do not find any such scheme for the whole of Tamil Nadu. For example, I have been pressing that the Centre should help the State in the development of exotic breed of animals. What we are having is poor quality. But what I find is that in the animals that are imported from outside countries, only animals which are useless there have been imported. How can they give us good breed here? The experience of people who had got those breed from foreign countries is that it is not good. Moreover we waste lot of foreign exchange for importing such breed. How can we have good dairy development with such poor quality breed. There is use in spending lot of money for importing such useless animals.

That is why I say there should be proper co-ordination between Dairy Development and Animal Husbandry. But the two departments are different and each is in charge of a separate Minister and one does not know what happens in the other. Whether we have good exotic breed is not mentioned here in this department for dairy development. But dairy development has come down in priority. What I say is the two should be clubbed together, viz., dairy development and animal husbandry. We must try to import proper breed so that we could raise good exotic breed here, in Tamil Nadu.

For fodder development, there is no scheme. I am sorry to find polythene milk bottles. The Hon. Minister has supplied is milk in polythene bottles. What I say is, we are running short of fodder. We must have good stock of fodder. Animal Husbandry Department must take particular care to see that good exotic breed is raised.

[Thiru B. Venkataswami] [1975 மார்ச் 17

Compared to other States, I feel our Animal Husbandry department performance is poor. Exotic breeds should be imported and distributed to the people so that they may be benefitted. The milk rate is very low. The in-puts have enormously increased.

Groundnut cake and other cattle feed have gone up in price. People cannot maintain animals at low cost. We must offer them better price. Or, Government should supply groundnut cake and other feeds at concessional rates.

It should also be seen that grazing grounds are raised in villages. The existing grazing grounds also should be preserved for the benefit of cattle. We can also raise fodder farms in Panchayats by giving them suitable aid for raising very popular grasses like the Napier grass, Kamadhenu grass which is a very excellent grass. For, this grass raised in one acre of land could feed 10 to 15 animals for the whole year and we can breed very good animals that way. Thus we can have the " White Revolution ".

Finally, I have given a cut motion to discuss about the introduction of dairy development in Dharmapuri district. The Hon. Minister knows that we have the best farm in Hosur and that is the best in India ; the climate is very good and the entire Dharmapuri district is suitable for breeding exotic and other good animals. In these days of drought, that will be a good source for earning subsidiary income by the people of that locality.

Coming to administration, I have given a cut motion regarding the need for separation of administrative and judicial wings. I hope and trust that government would do this separation so that we will have a more clean administration of the department.

Dr. Hande has already stated about audit by the Auditor-General and Local Fund Audit. Not only that, in respect of temple properties and management of religious endowments, it should be a combined Endowment Development, for all religions. Why should there be only a department for Hindus ? There should be a combined one for Christianity, Muslims and Hindus together instead of having one department only for Hindus. There should be a single Department for all religious endowments of the entire Nation. I hope this point will be considered by the Government.

I understand that officers and Turstees for Christian Endowments are appointed by High Court from judicial officers. Why this discrimination ? There can be a combined Department for all religions. This may be considered by the Government.



1975 மார்ச் 17] [Thiru B. Venkataswami.]

Regarding Khadi and Village Industries, I want to stress only one matter. The Match Unit is creating very good opportunities for women folk in rural parts. The unit was closed in Housr last year. The Hon. Minister Mr. Adithanar assured that orders would issue for its reopening. But it has not yet been reopened.

The Agarbathi Unit at Denkanikota is working well and they are sending their products to Bangalore and other parts. They are getting only very low price. Almost all people are engaged in this. It should be helped by the Khadi Department.

Lastly, I request the Government to give new designs in Khadi so that people will be attracted to it, and producers may get more income. Thank you, Sir.

(நண்பகல் 12-00.)

திரு. வெ. ந. முத்தமிழ்ச் செல்வன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற அறநிலையச் சட்ட நிர்வாகம் பற்றிய மானியக் கோரிக்கைமீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தமிழக அரசானது ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்கின்ற அடிப்படையில் இயங்கி வருகிறது. அதனுடைய ஓரங்கமாக, அறநிலையத் துறையானது இன்று இந்தக் கொள்கையினை நடப்பிலே கொண்டுவந்து அறநிலையத் துறையின் மூலமாக நல்ல பல சாதனங்களைப் புரிந்து வருகின்றது. நம்முடைய தமிழகம் என்றால் கோவில்கள் தான் என்பது நமக்குத் தொன்மைச் சிறப்பையும் பெருமையையும் கொடுக்கக் கூடியது.

அந்தக் கோவில்கள் ஆற்றிவந்த பணிகள் இரண்டாகும். சமய அறிவை வளர்த்தலும், சமுதாயப் பணிகளை நிறைவேற்றுவதுமாகும். இந்த இரண்டு பணிகளையும் இன்று நம்முடைய அறநிலைய ஆட்சித் துறையானது மிகச் சிறப்பாகச் செய்து வருகின்ற காரணத்தால், 1967ல் இந்த அறநிலையங்களின் எண்ணிக்கை 9,600ஆக இருந்தது, 1974-75ல் 18,268–ஆக இத்தனை அறநிலையங்கள் இன்று அதனுடைய ஆளுகைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதன் காரணமாக, இதனுடைய வருமானம் 1967ல் ரூ. 4 கோடியாக இருந்தது. இன்று ரூ. 11 கோடி, என், ரூ. 11½ கோடியாகப் பெருகியிருக்கிறது.

ஆனால், இந்த அளவுப் பெருகியிருக்கிறபொழுது, அரசினுடைய மானியம் 1967-ல் ரூ. 3 இலட்சமாக இருந்தது. இந்த ஆண்டு ரூ. 15 இலட்சத்துக்கு வகை செய்யப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையில், கோவில்களுடைய நிர்வாகம், கோவில்கள் வருமானம் முறையாக வளரவேண்டுமென்பதற்காக, கோவில்களுடைய உடைமைகள் பலரால் தனிப்பட்ட முறையில் அனுபவிக்கப்பட்டு வந்ததை இன்று கணக்கெடுத்து, கணக்குக்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். இந்த ஆண்டு புதிதாகக் கண்டுபிடிக்

கப்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை 41,306 ஆகும். இந்த அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு 2,01,343 எக்கராகும். இப்படி கோவில்களுக்குச் சொந்தமான உடைமைகள் பரவலாகத் தனிப்பட்டவர்களாலும் மற்றும் சில அமைப்புகளாலும் அனுபவிக்கப்பட்டு வந்ததை இன்று அறநிலைய ஆட்சிக்கு உட்படுத்தியிருக்கிறார்கள் என்றால் அது மிகவும் பெருமைப்படத்தக்கதாகும்.

ஆனால், இன்று இது நல்லமுறையில் நம்முடைய சமயத்திற்குப் பயன்படவேண்டுமானால், இதனைக் கண்காணிப்பதற்காக நியமிக்கப்படுகின்ற அலுவலர்கள், ஆங்காங்கு நியமிக்கப்படுகின்ற நிர்வாக அலுவலர்கள் போதிய நிலையில் இல்லை. இன்று சாதாரணமாக ஒரு நிர்வாக அலுவலரை எடுத்துக் கொண்டால், 4, 5 கிராமங்களிலே சம்பந்தப்பட்ட கோவில்களுக்கு ஒரு நிர்வாக அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். புதிய கணக்கெடுப்பு எடுத்தபிறகு, 8, 10 கிராமங்களைச் சேர்த்து விடுகிறார்கள்.

ஏற்கனவே நிர்வாகம் சரியாகச் செய்யப்படமுடியாத நிலையில் இருக்கும்போது அந்தக் கோயில்களோடு புதிய கோயில்களையும் சேர்க்கின்ற காரணத்தினால் நிர்வாகம் சரியாகச் செயல்படமுடியாமல் இருக்கிறது. இதற்கான திட்டம் ஒன்று தீட்டப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. சென்ற ஆண்டிலே தமிழ்நாட்டிலே கோயில்களின் எண்ணிக்கையெல்லாம் கணக்கெடுக்கப்பட்டு எவ்வளவு நிர்வாக அதிகாரிகள் நியமனம் செய்யப்படவேண்டுமென்ற திட்டம் தீட்டப்பட்டிருக்கிறது என்று தெரிகிறது. அதை விரைவிலே அமலுக்குக் கொண்டுவந்தால் நிர்வாகம் கோயில்களிலே நல்ல முறையிலே நடைபெறும். அறநிலையத் துறையிலே பொதுவாக சமுதாயப்பணிகளும், சமய அறிவும் வளர்க்கப்படவேண்டுமென்பதுதான் நம்முடைய தலையாய கொள்கையாக இருக்கிறது.

இன்றைய தினம் நாம் சமுதாயத்திலே பார்க்கிறோம். எதிர்காலப் பிரஜைகளாக, குடிமக்களாக வரப்போகின்ற மாணவர்களின் நிலையை எண்ணும்போது வருந்தத்தக்கதாக இருக்கிறது. அதற்குக் காரணம் சமய அறிவு அவர்களிடத்திலே இல்லை. அதற்கான வாய்ப்பு இன்று குறைவாக இருக்கிறது. அறநிலையத் துறையைப் பொறுத்தவரையிலே கோயில் வருமானங்களிலேயிருந்து பல உயர்நிலைப்பள்ளிகள், கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அந்த முறையிலே இந்தத் துறை மாணவர்களுக்கு சமய அறிவு அவர்களுடைய உள்ளத்திலே படியக்கூடிய முறையிலே ஏற்பாடு செய்ய நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். அப்படிச் செய்தால்தான் இன்றைய தினம் சமுதாயத்திலே காணப்படுகிற ஒழுங்கீனங்கள், குறைபாடுகள், ஊழல்கள் இவையெல்லாம் குறைக்கப்படமுடியும். அந்த அளவிற்கு இந்தத் துறையானது மாணவர்களிடையே சமய அறிவை வளர்க்கத் தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்திலே சமயபுரம்; ஸ்ரீரங்கம் ஆகிய இரண்டு பெரிய கோயில்கள் இருக்கின்றன. இரண்டிற்கும் சேர்ந்து ஒரு நிர்வாக அமைப்புதான் இருக்கிறது, ஒரே நிர்வாகத்தின் கீழே இருக்கின்றது. ஸ்ரீரங்கம்



கோயிலுக்கு வருகிற வருமானத்தைவிட சமயபுரம் மாரியம்மன் கோயிலுக்கு அதிக வருமானம் வருகிறது. ஸ்ரீரங்கம் ஒரு புராதன கோயில் ஆகும். இருந்தாலும் சமயபுரம் கோயிலிலே பக்தர்கள் கூட்டம் அதிகமாக வருகிறது. அங்கேதான் இதைவிட வருமானம் அதிகமாக வருகிறது. சமயபுரம் கோயிலிலே பல வசதிகள் செய்யப்பட வேண்டியிருக்கிறது. கோயிலைச்சுற்றி மிக மோசமான நிலைமை இருக்கிறது.

அதிக வருமானமுள்ள சமயபுரம் கோயில் நிர்வாகத்தைத் தனியாகக் கொண்டு வந்தால் பணிகளைச் சிறப்பாகச் செய்யமுடியும். ஸ்ரீரங்கம் சமயபுரம் ஆகிய கோயில் நிர்வாக அமைப்பைப் பிரிக்கவேண்டுமென்று பல ஆண்டுகளாக முயற்சி இருந்தாலும்கூட என்ன காரணத்தாலோ தெரியவில்லை. பிரிக்கப்படவில்லை. இன்றைக்கு அதிகமான வருமானம் ஒரு கோயிலுக்கு வருகிறது, ஆனால் அந்த வருமானம் இன்னொரு கோயிலுக்குச் செலவிடப்படுகிறது. அதிலே தவறு இல்லை, காரணம் நம்முடைய அரசினுடைய கொள்கை அதிகமான வருமானமுள்ள கோயில்களிலிருந்து பணத்தை எடுத்துக் குறைந்த வருமானமுள்ள கோயில்களுக்குச் செலவிடுவது என்பது. ஆகவே, அதிலே தவறு இல்லை, ஆனால் சமயபுரம் கோயிலிலே அதிகமான வருமானம் இருக்கிறது, அந்தக் கோயிலுக்குத் தேவையான வசதிகள் செய்யப்படாமல் இருக்கிறது, அந்த நிர்வாகம் அப்படி இருந்துவருகிறது. ஆகவே தீவிரமாக அரசு கவனித்து சமயபுரம் கோயிலுக்குச் செய்யவேண்டிய வசதிகளைச் செய்யக்கூடிய முறையிலே தனியாக நிர்வாகத்தைப் பிரித்து அந்தப் பகுதியிலே ஒரு கல்லூரி வேண்டுமென்று அந்த வட்டாரத்து மக்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தக் கோயிலின் வருமானத்திலிருந்து ஒரு கல்லூரியையும் ஏற்படுத்திக் கொடுக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த அறநிலைய துறை மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன். வணக்கம்.

திரு சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, முதலாவதாக இந்து சமய அறக்கட்டளைகள் சம்பந்தமாக ஒரே ஒரு கருத்தைச் சொல்லலாம் என்று நினைக்கிறேன.

இந்த கோயில்கள், அறநிலையங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் இவையெல்லாம் ரெண்ட் கன்ட்ரோல் ஆக்டிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கின்றன. அது எதற்காக என்று தெரியவில்லை. அறநிலையங்கள் சம்பந்தப்பட்டவரையில் அங்கங்கே குடியிருக்கக்கூடியவர்கள், சிறு சிறு கடையை வைத்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் சாதாரண ஏழை எளிய மக்கள்தான். சில இடங்களிலே நியாயமான வாடகையாக இருக்கிறது. இந்தச் சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிப்பதன் மூலமாக அதிகமாக யார் ஏலத்திலே எடுக்கிறார்களோ அவர்களுக்குக் கொடுக்கக்கூடிய நிலைமை வருகிறது அப்போது வசதியுள்ளவர்கள் தான் அங்கேபோய் சேரக்கூடிய நிலைமை ஏற்படுகிறது, அது சரியல்ல, இது எந்தவிதமான அறம் என்று தெரியவில்லை. கோயில் கட்டடங்கள் சம்பந்தப்பட்டவரையில் இது பொருத்தமாகவும் தெரியவில்லை. வட்டிக் கடைக்காரன் மாதிரி அதிக லாபம் சம்பாதிக்கக்கூடிய முறை இருப்பது

சரியல்ல. இருக்கக்கூடியவர்களை திடீரென்று வெளியேற்றாமல் இருப்பதற்கு ஒரு கட்டுப்பாட்டைப் கொண்டுவருவதற்குப் பதிலாக இப்படிச் செய்வது சரியல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பால்பண்ணை வளர்ச்சித் துறை சம்பந்தமாகச் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே இரண்டு துறைகள் மூலமாக—பால் வழங்கு நிறுவனம் மூலம் டிபார்ட்மெண்ட் மூலம்—ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. பாலின் அவசியம் என்ன என்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் தெளிவாகக் கூறியிருக்கிறார்கள். இதிலே, சிறு குழந்தைகள் முதல் முதியோர்கள் வரையில் அது முக்கியமான உணவுப்பொருளாக இருக்கிறது. அதிலே ஈடுபட்டிருக்கிற கூட்டுறவுச் சங்கங்கள் திறமையாகச் செயல்படக் கூடிய முறையிலே இல்லாமல் குந்தகம் விளைவிக்கக்கூடிய ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆளுங் கட்சியினரைத் தவிர வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் யாரும், வேறு யாரும் சங்கங்களுக்குப் பொறுப்பிலே வரக்கூடாது என்ற முறையிலே நடந்துகொள்வதால நிர்வாகமே சீர்குலைந்த நிலைமையிலே இருக்கின்றது. அமைச்சரிடத்திலே நேரடியாக இதைப்பற்றிச் சொன்னபோதுகூட என்ன செய்வது கட்சியினர் சொல்லுகிறார்கள். சட்ட மன்ற உறுப்பினர் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் மானாமதுரை கூட்டுறவு பால் பண்ணை இருககிறது. அங்கே இருக்கிற செக்கரட்டரி கே.பி. இராமச்சந்திரன் என்பவர் அங்கே தொடர்ந்து 8 ஆண்டுகளாக இருக்கிறார். பலவிதமான பண மோசடிகள் பணத்தைத் தவறான முறைகளிலே கையாடி வேறுவிதமாக திரும்பச் செலுத்தப்பட்டு குறைகளும் தவறுகளும் நடந்திருக்கின்றன. இது இராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த அமைச்சர் அவர்களுக்கும் தெரியும், நம்முடைய அமைச்சர் அவர்களிடத்திலும் சொல்லியிருக்கிறோம். அவரை அங்கிருந்து மாற்றுவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தாலும்கூட அவரை மாற்றாமல் அங்கேயே போட்டு இருக்கிறார்கள். 8 ஆண்டுகாலமாகத் தொடர்ந்து அங்கேயே இருக்கிறார். பொதுவாக அரசாங்க நடைமுறையிலே 3 ஆண்டுகளுக்குமேலே தொடர்ந்து ஒரு இடத்திலே இருக்கக்கூடாது. ஆனால் 4-6-1964 முதல் இன்று வரை இருந்துகொண்டு இருக்கிறார் அவர். 1968 ஆம் ஆண்டிலே அந்த வட்டாரத்திலேயே சீனியர் இன்ஸ்பெக்டராக பணியாற்றியிருக்கிறார்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, மானாமதுரையிலே பணியாற்றுகின்ற அந்தச் செயலாளர் 10 ஆண்டுகளாகத் தொடர்ந்து இருக்கிறார் என்று சொன்னார்கள். அந்தக் கூட்டுறவு பால் வழங்கு நிறுவனத்திற்கு திரு அழகர்சாமி அவர்கள் கட்சியைக் சேர்ந்தவர் தாம் தலைவராக இருக்கிறார். அவர்தான் சென்ற ஆண்டு விழாவிற்கு என்னை வரவழைத்து அங்கே அவரைப்பற்றிப் புகழ்ந்து பேசினார். இங்கு அவர் தான் இருக்க வேண்டும் என்று சொன்னார். அரசாங்க விதிமுறைகள் இருந்தால்கூட அவற்றைத் தளர்த்தி அவர் அங்கேயே இருக்கக் செய்யவேண்டுமென்று சென்ற ஆண்டுதான் பேசினார்.



ஒரு ஆண்டுக்காலத்திற்குள் என்ன நடந்தது என்று தெரியவில்லை. பல ஊழல்கள் இருப்பதாகச் சொன்னார்கள். என்ன ஊழல் என்று சொன்னால் பதில் சொல்லலாம். ஏதோ அந்த மாவட்டத்து அமைச்சர் திரு. மாதவன் அல்லது சட்டமன்ற உறுப்பினர் சொன்னதாகச் சொன்னார். யாரும் சொல்லவில்லை. அந்தச் சங்கத்தினுடைய தலைவர்தான் சொல்லி அவர் நிறுத்தி வைக்கப்பட்டாரே தவிர வேறு ஒன்றுமில்லை, அந்தச் சங்கத்தின் தலைவரிடமிருந்து அவரை மாற்ற வேண்டுமென்று எந்தக் கோரிக்கையும் வரவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்களுக்கும் மற்றும் முதலமைச்சரவர்களுக்கும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சரவர்களுக்கும், மேற்கொண்டு அதிகாரிகளுக்கும், 18 பக்கங்களைக் கொண்ட புகாரை மெம்பர்களுக்கு அனுப்பியதாகத் தலைவர் சொல்கிறார். 30—12—1974-ல் பீரியட் முடிந்தது. வேறு ஒரு ஆளைப் போட வேண்டுமென்று கேட்டு, அந்த வட்டார டி.ஆர். தகவல் அனுப்பியும்கூட வேறு ஒரு ஆள் நியமிக்கப்படாமல் இருந்து, பிறகு டிரான்ஸ்ஃபர் ஆர்டர் போடப்பட்டது. உடனே அந்தத் தலைவருக்குத் தகவல் போகிறது. 28—1—1975 ஆம் தேதி தகவல் போனவுடன் 31 ஆம் தேதி கிடைக்கிறது டிரான்ஸ்ஃபர் ஆர்டர். உடனே 29 ஆம் தேதி கமிஷனிரிடமிருந்து கன்டினியூ செய்ய வேண்டுமென்று தந்தியின் மூலம் உத்தரவு போகிறது.

இப்படித் தவறாக பலவிதமான கோளாறுகள் இருக்கின்றன என்பதை ஆடிட் செய்தவர்கள்—ஆடிட் செய்த ஜெயராஜ் என்ற ஆடிட்டர் கூட மாண்புமிகு அமைச்சர் திரு ஓ.பி. இராமன் அவர்களின் தலைமையில் கல்யாணம் செய்து கொண்டவர்—அவர் ஆடிட் செய்து கண்டுபிடிக்கப்பட்ட குறைகளை வெளியிடக்கூடாது என்று நிர்ப்பந்தித்து, பயமுறுத்தியும், அவர் அதற்கு ஒப்புக்கொள்ளாமல் இருந்தவுடனே அவர் வேறு ஊருக்கு மாற்றப்படுகிறார். உடனே ரிப்போர்ட் அனுப்பக்கூடாது என்று சொன்னவுடன் அவர்கள் செய்த தணிக்கையை மேலதிகாரிகளுக்கு அனுப்பி இருக்கிறார்கள். பிறகு இவரை மாற்ற வேண்டுமென்று நடவடிக்கைகள் எடுத்ததன் மூலம் கோளாறுகள் பூராவும் மெம்பர்கள் வரையில் தெரிந்துவிடுகிறது. மெம்பர்களுக்குத் தெரிந்தவுடன் அவர்களெல்லாம் 18 பக்கங்கள் கொண்ட பெரிய மகஜரை அத்தனை அமைச்சர்களுக்கும் அனுப்பியிருக்கிறார்கள். அதிகாரிகளுக்கும் அனுப்பியிருக்கிறார்கள், எனக்கும் அனுப்பியிருக்கிறார்கள். நான் சம்பந்தப்பட்ட வரையில் அதை அதிகாரிகளுக்கு மேல் நடவடிக்கைக்காகச் சமர்ப்பித்தேன். தனியாக ஒரு ஸ்பெஷல் ஸ்க்குவாட் ஆடிட் நடத்தப்பட்டது. அந்த ரிப்போர்ட்டும் வந்துவிட்டது. அப்படி வந்தும்கூட தொடர்ந்து அவரையே வைத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயமாகச் செய்ய வேண்டிய நிலைமையேற்றபட்டது.

அந்தப் பண்ணையில் நாள் ஒன்றுக்கு 3,000 லிட்டர் உற்பத்தி செய்து வந்த நிலைமை மாறி இன்றைக்கு ஆயிரம் லிட்டர் அளவிற்குக் குறைந்துவிட்டது. அங்கே 74 பணியாளர்கள் பணியாற்றுகிறார்கள். இப்படிப் பெரிய பெரிய பண்ணைகள் மூடு விழாவிற்குப் போகும் நிலையிலே இருக்கிறது. இதை எதற்காக நான் கூறுகிறேன் என்றால் மாற்றுக்

கட்சிக்காரர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதற்காக இப்படியெல்லாம் மாற்று எண்ணத்தோடு தன்னுடைய கட்சியைச் சேர்ந்த ஆட்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காகத் தவறான நடவடிக்கைகளில் இறங்க வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அதே நேரத்தில், இன்னும் ஒன்றும் இருக்கிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலே போளூர் தாலுக்காவிலே களம்பூர் பால்பண்ணையில் என்னுடைய கட்சியைச் சேர்ந்தவர் தலைவராக வந்தார்கள். அங்கே 100 லிட்டர் உற்பத்தியாகிக்கொண்டிருந்தது. இவர் வந்ததற்குப் பிறகு நாள் ஒன்றுக்கு 2500 லிட்டர் உற்பத்தியாகும் அளவிற்கு வந்தது. அது மட்டுமல்லாமல், மாதவரம் பால்பண்ணைக்கு சுமார் 1,050 லிட்டர் அனுப்பிக்கொண்டு வந்தார்கள். அதிலே வருஷாவருஷம் இலாபத்தோடு இயங்கிக்கொண்டு வந்தது. அந்த வட்டாரத்திலே உள்ள சிலர், உங்கள் கட்சியைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள் என்பதற்காக அந்தப் பால் பண்ணையை சூப்பர்சீட் செய்துவிட்டார்கள். 1974 ஆம் ஆண்டில். அது செய்த பெரிய தவறு அப்படி என்னவென்றால்—சார்ஜ் நோட்டீசிலே இருக்கிறது—மூன்று வருஷங்களுக்குப் பங்குத்தொகையை ரீஃபண்ட் செய்திருக்கிறார்கள். கட்டிடத்தை எஸ்டிமேட்டிற்கு மேலே கட்டியிருக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒன்றுமில்லாத குற்றச்சாட்டுக்களைச் சொல்லி அந்தப் பண்ணை கலைக்கப்பட்டதற்கு ஒரேயொரு காரணம் அங்கே மாற்றுக் கட்சிக்காரர்கள் அதிகாரத்திலே இருக்கிறார்கள் என்பதுதான்.

அதேமாதிரி தமிழ்நாட்டிலே இந்தக் கூட்டுறவு ஸ்தாபனங்களில் இம்மாதிரி செய்து கொண்டு வந்தால் ஒரு கூட்டுறவு ஸ்தாபனம்கூடத் தமிழ் நாட்டிலே இருந்திருக்க முடியாது. எங்கள் மாவட்டத்திலே உள்ள கூட்றடுவு ஸ்தாபனத்திலேயும் இருக்கிறது. சட்டமன்றத்திலேயும் பேசப்பட்டது. இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை. ஏனென்றால் அங்கே ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள் இருப்பதால். எனவே மற்றக் கட்சியைச் சார்ந்தவர்கள் தலைவராக இருக்கிறார்கள் என்பதற்காக இம்மாதிரி செய்யக்கூடாது. அதேமாதிரி களம்பூர் கூட்டுறவு பால் பண்ணையும் கலைக்கப்பட்டு ஸ்பெஷல் ஆபீசரைப்போட்டு இன்றைக்கு சுமார் 100 லிட்டருக்கு மேல் அங்கே கிடைக்கவில்லை—முனபு எறக்குறைய 900 லிட்டருக்கு மேல் கிடைத்துக்கொண்டிந்தது, மாதவரம் பால் பண்ணைக்கு அனுப்பிகொண்டிருந்தார்கள். அது இப்பொழுது குறைந்திருக்கிறது. இப்படி பால் உற்பத்திக்குக் குந்தகம் விளைவிக்கும் முறையில், அந்த மக்களுக்கு ஊக்கம் அளிப்பதற்குப் பதிலாக மாற்றுக் கட்சிக்காரர்கள் அங்கே இருக்கிறார்கள் என்பதற்காக மாவட்ட அமைச்சர் சொல்கிறார். அவர் தலையிடுகிறார் என்பதற்காக சம்பந்தப்பட்ட அமைச்சர் தைரியமாக நடவடிக்கை எடுக்காமல் போவது சரியல்ல. மானாமதுரையிலேயும் அப்படியிருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவரவர்களே, மீண்டும், மீண்டும் மாவட்ட அமைச்சர் சொல்லித்தான் இந்த அமைச்சர் செய்கிறார் என்று சொல்லுவது தவறான கருத்தாகும். எந்த அமைச்சருக்கும், குற்றங்கள் எந்தச் சந்தர்ப்பத்திலே நடந்தாலும் அல்லது தெரிந்தாலும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்குத் தெரியப்படுத்த வேண்டியது கடமை



யாகும். அந்த அடிப்படையில் களம்பூர் பால் வழங்கு சங்கமானாலும், மானாமதுரை சங்கமானாலும்—குற்றங்கள் அதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டு, தனி அதிகாரிகள் நியமிக்கப்பட்டார்கள். களம்பூர் சங்கத்தைப் பொறுத்தவரையிலே. மானாமதுரையைப்பற்றி இப்பொழுது தான் தகவல் சொல்லியிருக்கிறார்கள். இனிமேல் அதைப்பற்றி விசாரிக்க வேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, நானேதான் பெட்டிஷன் கொடுத்து விவரங்களைச் சொல்லிகிட்டு வந்தேன். அந்த அமைச்சரிடத்திலேயே பேசினேன். இப்படிச் செய்திருக்கிறார்கள் என்று நான் சொல்லிய நேரத்தில், அதிகாரிகளிடத்தில் சொல்வதற்கு நான் என் மந்திரியாக இருக்க வேண்டுமென்று சொன்னார்கள். நேரிலேயே நான் வாதாடி விட்டேன். எனவே, நியாயமான முறையில் நடக்க அசெம்பிளியிலே சொல்வதைத் தவிர வேறு வழியில்லை. இனிமேல் இம்மாதிரி நிலைமைகளில் பாரபட்சம் இல்லாமல் நியாயமாகச் செய்ய வேண்டும். அந்த மக்களிடத்திலேயே, யார் தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ அவர்களுக்கு அந்தந்த நிர்வாகத்திலே உரிமை கொடுங்கள். அதுமட்டுமல்லாமல், நிர்வாகத்திலே செல்பவர்கள் அதில் நியாயம் இருக்கிறது என்று தெரிவித்தால் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்பதையும் தெரிவித்து முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்து சமய மானியத்தின்மீது என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கோரிக்கையை முழுவதும் நான் ஆதரித்துக் கூறுவதாக இருக்கிறேன். இந்து சமயப் பணிகள் மனித சமுதாயத்திலே மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்றிருக்கிறது. ஏனென்றால், உலகத்திலே பல நாடுகள் இருக்கின்றன, அமெரிக்கா, ஐரோப்பா போன்ற பல நாடுகளில் பல துறைகளிலே முன்னேறியிருக்கிறார்கள். விஞ்ஞானமானாலும் சரி, வியாபாரமானாலும் சரி, உற்பத்திப் பெருக்கமானாலும் சரி, இப்படிப் பல துறைகளிலேயும் முன்னேறி இருக்கிறார்கள். சந்திரனை எட்டிப்பிடிக்கும் அளவிற்கு முன்னேறியிருக்கிறார்கள். ஆனால் இந்த ஆன்மீகத் துறையை பொறுத்த வரையில் இந்தியாவின் அளவிற்கு அவர்கள் முன்னேற முடியவில்லை என்பது எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட உண்மையாகும். என் இந்த நிலைமையில் இருக்கிறோம், அமெரிக்காவில் உள்ள ஜனங்கள், முன்னேற்றம் அடைந்துள்ள ஜனங்கள், மனது சமாதானம் இல்லாமல், ஏதோ மெஷின் லைப் மாதிரி வாழ்க்கை நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அங்கே உள்ள எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும், இந்திய நாட்டு மக்கள் அனுபவிக்கிற சாந்தமான வாழ்க்கையை அனுபவிக்க முடியவில்லை என்று அவர்களே சொல்லுகிறார்கள். அங்கிருந்து பல பெரியவர்கள் இந்தியாவை நோக்கி வந்திருக்கிறார்கள்.

நம்முடைய அற நிலையத் துறை மூலம் நம்முடைய அரசு எப்படி தன்னுடைய பணியை ஆற்றுகிறது, எப்படி மிகவும் தீவிரமாகப் பணியாற்றுகிறது என்பதை நமக்கு இந்த அறிக்கை விளக்குகிறது. நம்முடைய அற நிலையத் துறையின் பணி, கடவுளுக்கானாலும், கோயில்களுக்கானாலும், நாம் இது வரையில் என்ன செய்தோம் என்பதை உணர்ந்து அந்தப் பணிகளையெல்லாம் செய்த பிறகு வருவாயைப் பெருக்கி அதிலிருந்து

எஞ்சியுள்ள பணத்திலிருந்து சமுதாயத்திற்கு, ஏழைமக்களுக்கு, பொருளாதாரத்தில் கீழ்ப்பட்ட மக்களுக்கு எந்தெந்த உதவிகளைச் செய்ய முடியுமோ, அவைகளை நன்கு அறிந்து பல நல்ல காரியங்களை எந்த அளவிற்குச் சர்க்கார் செய்ய முடியுமோ அந்த அளவிற்குச் செய்திருக்கிறார்கள். பல ஏழைகளுக்குச் செய்யும் திட்டங்களாக 24 திட்டங்களைக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவ்வளவும் உண்மையிலேயே ஜனங்களால் வரவேற்கப்படக்கூடிய திட்டங்களாகும். அதன்படி கல்யாணம் செய்து கொள்ள வசதியில்லாதவர்களுக்கு உதவும் முறையில் கோயில்களில் கல்யாண மண்டபங்கள் கட்டியிருக்கிறார்கள். இம்மாதிரி ஏழைகளுக்கு உதவும் வகையில் 24 திட்டங்களைச் செய்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்து வருவது மிகவும் பாராட்டுவதற்குரிய செய்கையாகும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பக்தியைப் பற்றியெல்லாம் பேசினார்கள், நமக்கு மனம் தான் கோயில் என்று. திருமூலரும்,

"நாடும் நகரமும் நற்றிருக் கோயிலுந்
தேடித் திரிந்து சிவபெரு மான் என்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்மின்"

என்று நெஞ்சைக் கோயிலாகக் கொள்கிறேன் என்று கூறுகின்றார். எஸ்.எஸ்.எல்.சி. படிப்பது என்றால் நேரடியாகப் போக முடியாது, ஒன்றாவது, இரண்டாவது வகுப்புக்களைக் கடந்து தான் செல்ல வேண்டும். ஆகவே, கோயில்களைச் சுற்றி அதற்கான வழி முறைகளை ஆராய்ந்த பிறகு தான் பக்தர்களாக ஆக முடியும். எனவே கோயில்கள் பக்தி செலுத்துவதற்கு இன்றியமையாதவையாக இருக்கின்றன.

(பிற்பகல் 12-30)

இன்றைக்கு ஏராளமான கோயில் நிலங்களை இன்ஸ்பெக்டர்களைப் போட்டு கண்டு பிடித்திருக்கிறார்கள். இதனால் கோயில்களின் வருமானம் பெருகியிருக்கிறது. இதனால் இந்த ஆண்டு ஒரு கோடி ரூபாய்க்கும் அதிகமாக வருமானம் வர வாய்ப்பிருக்கிறது. ஏற்கெனவே, சொன்னதுபோல் அதைச் சமுதாய நலப் பணிகளுக்குப் பயன்படுத்துவது மிகவும் நலமாகும்.

1967-ம் ஆண்டு தேர்தல் வந்த சமயத்தில் "நாங்கள்தான் கோயிலைக் காப்போம்; திராவிட முன்னேற்றக் கழகத்தினர் வந்தால் கோயிலை இடிப்பார்கள்" என்றெல்லாம் பேசினார்கள். ஊர்வலங்கள் நடத்தினார்கள். அப்படி கோயிலையும், கடவுளையும் காட்டி ஓட்டு வாங்க நினைத்தார்கள். ஆனால் இந்த அறிக்கையைப் பார்க்கும்போது நாலைந்து கும்பாபிஷேகங்கள் நடந்திருக்கின்றன. எந்தெந்தக் கோயில்களில் சீர்திருத்தங்கள் செய்ய வேண்டுமோ அந்தச் சீர்திருத்தங்கள் எல்லாம் செய்யப்பட்டிருக்கின்றன. இந்த அரசாங்கத்தின் கொள்கை, தனிப்பட்ட கொள்கை எதுவாக இருந்தாலும் பொதுமக்களின் எண்ணங்களுக்கேற்ப, சட்ட திட்டங்களுக்கேற்ப ஆஸ்திகர்களே புகழக் கூடிய அளவுக்கு இந்த அரசு காரியங்களைச் செய்திருக்கிறது.



முன்பு பேசிய ஹாண்டே அவர்கள் கூடச் சொன்னார்கள். இன்னும் சிலரும் சொன்னார்கள். தெய்வீகப் பேரவையைப் பற்றி மூன்று வரிதான் எழுதியிருக்கிறார்கள். அவர்களுடைய பணிகள், பக்தி மார்க்கத்தில் செய்யும் ஏற்பாடுகள் எல்லாம் பற்றி விஸ்தாரமாகச் சொல்லியிருக்கலாம். பல்வேறு செலவுகளைச் செய்யத் தனியாக இந்து அறநிலைய ஆணையாளர் அவர்களிடம் நிதி இருக்கிறது. அதிலே ஒவ்வொரு கோயிலிலும் எவ்வளவு வருமானம் வருகிறது, வசூலிக்கப்படக்கூடிய தொகை எவ்வளவு, அது எவ்வாறு செலவிடப்படுகிறது என்ற விவரங்கள் கொடுக்கப்பட்டிருந்தால் இன்னும் நன்றாக இருந்திருக்கும்.

தற்போது தெரு ஓரங்களில் நடைபாதைகளில் எல்லாம் சிறு சிறு கோயில்களைக் கட்டி விடுகிறார்கள். அதனால் போக்குவரத்துக்கும் மற்றும் வேறு வகையிலும் பல்வேறு கஷ்டங்கள் ஏற்படுகிற காரணத்தால் அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கிறார்கள். இந்த நிலையைத் தவிர்க்க ஏற்கெனவே நம்முடைய நாட்டில் உள்ள கோயில்களின் கணக்கை சர்வே செய்து கணக்கெடுத்துக்கொண்டு புதிய கோயில்கள் கட்டுவதற்கு அனுமதி அளிப்பதற்கு முன்னால், நகரசபை, அறநிலையத் துறையைக் கலந்து அவர்களின் உத்தரவைப் பெற்றுத்தான் புதிய கோயில்கள் கட்டப்பட வேண்டுமென்று விதிகள் போடவேண்டும். அப்படி உத்தரவு இல்லாமல் கட்டப்படுகிற கோயில்களை ஆரம்பத்திலேயே அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கோயிலுக்கும் டூரிசம் டிப்பார்ட்மெண்ட்டுக்கும் சம்பந்தம் இருக்கிறது. ஏராளமான மக்கள் மீனாட்சி அம்மன் கோயில் போன்ற கோயில்களுக்கு வருகிறார்கள். டூரிசம் டிப்பார்ட்மெண்ட், அறநிலையத் துறை, அரசு மூன்றும் சேர்ந்து அப்படி வருகிறவர்கள் தங்குவதற்காக கட்டடங்கள், மற்ற வசதிகளை எல்லாம் செய்து கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

தற்போது நகரங்களில் முக்கியமாக மக்கள் அரசாங்க பால் பண்ணையைத்தான் நம்பியிருக்கிறார்கள். முன்பெல்லாம் வீடுகளிலே, ஒரு எருமை பசு என்று வைத்திருப்பார்கள். இப்போது அந்த நிலை இல்லை. ஆகவே, அரசு நல்ல பால் சப்ளை செய்ய வேண்டிய பொறுப்பிலிருக்கிறது. ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இருந்து பால் தரும் மாடுகள் வரவழைக்கப்படுவதாகக் கூறியிருக்கிறார்கள். மேலும் அதிகப்படியாகப் பால் தரும் மாடுகளை வாங்கி குறை இல்லாமல் எல்லோருக்கும் பால் விநியோகிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

*திருமதி த. ந. அனந்தநாயகி : கனம் சபாநாயகர் அவர்களே, அறநிலையப் பாதுபாப்பு, பால், காதி எல்லாம் முக்கியமான டிமாண்டுகள். எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்து ஒரு சில நிமிஷங்களில் பேசவேண்டிய கஷ்டத்தில் இருக்கிறேன். எவ்வளவு வேகமாக விஷயங்களைச் சொல்ல முடியுமோ அவ்வளவு வேகமாகச் சொல்ல விரும்புகிறேன்.

அறநிலையங்களை எடுத்துக்கொண்டால், அறநிலையங்கள் வாயிலாக, கோயில்கள் வாயிலாக மக்களிடத்தில் பக்தியைப் பரப்ப வேண்டும். அது தான் முக்கிய இலட்சியம். இன்றைக்கு இருக்கும் அரசு அதை ஒரு வியாபார ஸ்தலமாக மாற்றிக் கொண்டிருக்கிறது. உள்ளே நுழையவே ஒரு ரூபாய். பிறகு ஐந்து ரூபாய், பத்து ரூபாய், பதினைந்து ரூபாய் என்று ஏற்றிக் கொண்டே போகிறது. இப்படிக் கோயில்களை வியாபார ஸ்தலமாக மாற்றி மக்கள் கோயிலுக்குப் போகக்கூடாது என்ற நோக்கத்துடனேயே இப்படி காசை அதிகமாக்கிக் கொண்டிருக்கிறார்களோ என்று தோன்றுகிறது. ஏதோ விலைவாசி ஏறிவிட்டது என்று அர்ச்சனை, அபிஷேகத்திற்குச் சற்று அதிகமான கட்டணத்தை வசூலித்தாலும் பரவாயில்லை.

கோயிலுக்குள் நுழைவதற்கே ஒரு ரூபாய், இரண்டு ரூபாய் என்று சீட்டுப் போட்டு விற்பது முறையல்ல. இந்தச் சீட்டுக்களில் திருட்டுச் சீட்டு எவ்வளவோ ? மருதமலையிலேயே திருட்டுச் சீட்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அந்த அளவுக்கு இன்று கோயில்களை கமர்ஷியல் இன்ஸ்டிடியூஷன்களாக மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். எதற்காக அந்தக் காலத்தில் கோயிலுக்குச் சொத்து வைத்தார்கள்? அதிலிருந்து கோயில் நிர்வாகத்தைக் கவனித்துக்கொள்ள வேண்டும். மக்கள் விருப்பப்பட்டு உண்டியலில் பணம் போடுவார்கள். ஆகவே, கோயில்களை வியாபார ஸ்தலங்களாக நீங்கள் மாற்றிக்கொண்டிருக்கிறீர்கள் என்பதை நான் கடுமையாகச் சொல்ல விரும்புகிறேன்.

பக்தியை வளர்க்கும் காரியங்களுக்கா அந்தப் பணம் செலவழிக்கப்படுகிறது ? அமைச்சர்களின் பிறந்த நாட்களுக்கெல்லாம் அறநிலையத் துறை கோயில் பணத்தைச் செலவு செய்வது முறைதானா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கோயில்களை வியாபார தலங்களாக மாற்றுவதாகச் சொன்னார்கள். அனுமதிச் சீட்டுக்கு நுழைவுக் கட்டணம் எந்தக் காலத்திலிருந்து செயல்பட்டு வருகிறது என்று அம்மையார் அவர்கள் நினைவு கூர்ந்து பார்க்க வேண்டும்.

பிறந்த நாள் விழாவுக்குக் கோயில் பணத்தைச் செலவு செய்ததாகச் சொன்னார்கள். எந்த அமைச்சரின் பிறந்த நாள் விழாவுக்கும் கோயில் பணத்தைச் செலவு செய்யவில்லை. முதலமைச்சரின் பிறந்தநாள் விழா நடைபெறுகிற நேரத்தில் சமுதாயத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்காகச் சில திட்டங்களை அறிவிக்கும்போது அந்தப் பணிக்காகக் கோயில் பணத்திலிருந்து செலவு செய்யப்பட்டிருக்கிறதே தவிர பிறந்த நாள் விழாவுக்காக, ஆடம்பரமாகச் செலவு எதையும் அறநிலையத் துறை செய்யவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அதைத்தான் நான் கடுமையாக ஆட்சேபிக்கிறேன். பிறந்த நாள் விழாவோடு இந்தத் திட்டத்தையும் இணைத்து கோயில் பணத்தை எதற்காகப் பாழாக்குவது? அந்த நிலைமை இருக்கக் கூடாது, மக்கள் மத்தியிலே சமய உணர்வை வளர்க்க இந்தப் பணம் பயன்படுத்தப்பட வேண்டும். "மெய்ன் எய்ம்" அதுதானே? அந்தக் காலத்தில் நுழைவுச் சீட்டு 5 பைசா, 10 பைசா என்று இருந்தது.



இன்று 5 ரூபாய், 10 ரூபாய் என்றல்லவா கேட்கிறார்கள். அந்தக் காலத்தில் இருந்தால் கூட நீங்கள் அதைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்ற கட்டாயம் இல்லை.

இப்படிப்பட்ட காரியங்களின் மூலம் நீங்கள் இந்துக்களின் மனத்தைப் புண்படுத்துகிறீர்கள்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : அம்மையார் அவர்கள் நுழைவுச் சீட்டுக் கட்டணத்தை அதிகபடுத்தியது பற்றிச் சொன்னார்கள். கோயில் திருப்பணிகள் நடக்க பல்லாண்டுகளுக்கு முன்பு இருந்ததை விட இன்று எவ்வளவு அதிகமாகச் செலவாகும் என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும் எங்களைப் போன்ற இந்துக்களுக்கு மனம் புண்படுகிறது என்று சொன்னார்கள். அப்படியானால் நாங்கள் எல்லாம் யார்? வேறு வேறு இந்துக்கள் இருக்கிறார்களா என்பதை அம்மையார் அவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மதத்தில் நம்பிக்கையில்லாத இந்துக்கள் உங்கள் பக்கத்தில் இருக்கிறார்கள். நாங்கள் மதத்தில் நம்பிக்கையுள்ள இந்துக்கள்.

மாண்புமிகு திரு. என். ராஜாங்கம் : இந்துக்கள் என்று சொல்லும்போது எங்களைப் போன்றவர்கள் கணிசமாக இருக்கிறார்கள். நாங்கள் இந்து மதத்தை ஏற்றுக் கொண்டாலும் இந்து மதம் எங்களைப் புறக்கணித்தது. நாங்கள் இந்துக்களாக இருந்தாலும் எங்களைப் புறக்கணித்தார்கள் என்பதுதான் நிலை.

திருமதி த. ந. அனந்தநாயகி : இந்து சமயத்தை ஏற்றுக் கொண்டு நாங்கள் கோயிலுக்குப் போகிறவர்கள். நீங்கள் கோயிலுக்குப் போக வேண்டாமென்று சொல்லுகிறவர்கள். நாங்கள் வழிபாடு செய்பவர்கள், நீங்கள் வழிபாடு செய்யாதவர்கள். கோயிலுக்குப் போகிற வகுப்பைப் புண்படுத்துகிறீர்கள். வழிபடுகிறவர்கள் வழிபடாதவர்கள் இரண்டு பேரையும் ஏற்றுக் கொள்வது இந்துமதம். அதுதான் "இந்து மதத்தின் கிரேட்னஸ்".

திரு. கே. எம். சுப்பிரமணியம் : அனந்தநாயகி அம்மையாரை யாராவது புண்படுத்தினார்களா ?

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆகையால் இன்றைக்கு அறநிலைய பாதுகாப்பு இலாகா கட்டணங்களை உயர்த்தி இருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன். விலைவாசிகள் உயர்ந்திருக்கின்றன என்பதற்காகக் கோயிலுக்குள்ளே போகின்றவர்கள் மீது அத்தனை கட்டணத்தை சுமத்துவது நல்ல வழக்கம் என்று தெரியவில்லை. அதைத் தயவு செய்து மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பாபிஷேகங்கள் அதிகமாக நடைபெறுகின்றன என்று சொன்னார்கள். நன்றாக இருக்கும் கோயில்களுக்கெல்லாம் அடிக்கடி கும்பாபி

ஷேகம் என்கிறார்கள். பின்னால் தான் தெரிகிறது, அது எதற்கு என்று. வசூல் இருக்கிறது, அதனால் என்று. வசூலை மனதில் வைத்துக் கொண்டு 10 ஆண்டுகளுக்கு ஒரு குடமுழுக்கு, ஒரு சில ஆண்டுக்கெல்லாம் மீண்டும் குடமுழுக்கு என்று நடத்துகிறார்கள். ஆனால் எந்தெந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு செய்ய வேண்டுமோ அதற்குச் செய்வதில்லை. உதாரணமாக, திருநெல்வேலியில் கிருஷ்ணாபுரம் என்ற இடத்தில் ஒரு கோயில் இருக்கிறது. கலை அழகு சொட்டக் கூடிய கோயில். மேல் நாடுகளிலிருந்தெல்லாம் வந்து அங்கே உள்ள சிலையைப் பார்த்து பிரமித்து நிற்கிறார்கள். அறநிலையப் பாதுகாப்பு இலாகா அதை எடுத்து அதற்கு கும்பாபிஷேகம் நடத்தக் கூடாதா? அங்கே வௌவால் வாழ்ந்து கொண்டிருக்கிறது.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> எப்போது பார்த்தீர்கள் ?

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> இரண்டு மாதங்களுக்கு முன்பு.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> இந்த வாரம் அக் கோயிலில் திருப்பணி ஆரம்பித்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> நமது அமைச்சர் ரொம்பக் கெட்டிக்காரர். ஏதாவது சொல்லி அப்போதைக்குத் தப்பித்துக்கொள்வார். இப்போது திருப்பணி நடந்துகொண்டிருக்கிறது என்கிறார். சென்ற முறை ஒரு கோயில் இடிந்து போய் விட்டது என்றதற்கு கோபுரம் கட்டப்பட்டது என்றார். ஆனால், இன்னும் அந்தக் கோபுரம் மொட்டை கோபுரமாக நிற்கிறது.

டக் என்று ஆன்ஸர் சொல்லி உட்கார வைப்பதில் பிரயோசனம் கிடையாது. பிரசித்திப் பெற்ற கோயில்கள் எல்லாம் சீரமைக்கப்படுவது கிடையாது. தேவையா, இல்லையா என்று ஆராயாமல், தங்களுக்கு வேண்டிய தர்மகர்த்தாக்கள் இருப்பதாக இருந்தால் அந்தக் கோயிலுக்கு குடமுழுக்கு செய்கிறார்கள். இப்படியெல்லாம் செய்யக்கூடாது என்று வன்மையாகக் கண்டிக்கிறேன். ராஜகோபுரம் கட்டித் தருகிறேன் என்று சொன்னார்கள் 1968–இல். 1968–லிருந்து 1975–க்கு வந்து விட்டோம். இன்னும் ராஜகோபுரத்தைக் கட்டித் தருகிறார்கள். இது மாதிரி பல.

திருக்கோயில் நிகழ்ச்சிகளில் தமிழ்த்தாய் வாழ்த்து வைக்கிறார்கள். இறை வணக்கத்தை ஏன் வைக்கக் கூடாது ? ஏன் இறை வணக்கத்தை சகித்துக் கொள்ள முடியவில்லை. இறை வணக்கத்தைத் தாங்கக்கூடிய சக்தி இல்லாதவர்களுக்கு மந்திரிப் பதவி மாத்திரம் தேவைப் படுகிறதா? தர்மகர்த்தா பதவி தேவைப்படுகிறதா ?

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> இறைவணக்கம் என்றால் எந்த இறைவனை வணங்கிப் பாடுகின்ற இறை வணக்கத்தை வைப்பது ? என்ற பிரச்சினை எழுகிறது. . . .



<u>திருமதி. த. ந. அனந்தநாயகி :</u> எந்தக் கடவுளைப் பற்றியும் பாடலாம். தமிழ்த் தாய் வணக்கம் அங்கே தேவை இல்லை. கடவுள் வணக்கத்தைக் கேட்டால் என்ன, மதிப்பு குறைந்து விடுமா ? அப்படிப்பட்டவர்கள் ஏன் அந்த இலாகாவை நிர்வகிக்க வேண்டும் என்று புரியவில்லை.

ராஜராஜசோழன் சிலையைத் தஞ்சை பெரிய கோயிலில் வைக்க வேண்டும் என்று போராட்டம் நடத்துவோம் என்று புதிதாகப் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். வேலூரில் ஜலகண்டேஸ்வரர் விக்கிரகத்தை பிரதிஷ்டை செய்யலாமே ? ஏன் செய்யவில்லை.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :</u> தலைவரவர்களே, வேலூர் கோட்டையில் உள்ள ஜலகண்டேஸ்வரர் ஆலயத்தில் விக்கிரகத்தை வைப்பதற்கு மத்திய அரசின் அனுமதி வேண்டும். அவர்கள் அனுமதி தர மாட்டோம் என்கிறார்கள். அது தொல் பொருள் ஆராய்ச்சிக் கழகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கிறது. அம்மையாருடைய கட்சியைச் சேர்ந்த முன்னாள் முதலமைச்சர் திரு. பக்தவத்சலம் அவர்கள் அறநிலையத்துறை அமைச்சராக இருந்தபோது மத்திய அரசிடம் அனுமதி கேட்டிருக்கிறார்கள். இன்று வரை அனுமதி கிடைக்கவில்லை. அம்மையாருடைய கட்சியின் செல்வாக்கைப் பயன்படுத்தி அனுமதி வாங்கிக் கொடுத்தால் நாங்கள் சிலையை வைத்துக் கும்பாபிஷேகம் செய்வதற்குத் தயாராக இருக்கிறோம்..

<u>திருமதி த. ந. அனந்தநாயகி :</u> ராஜராஜ சோழன் சிலையை வைப்பதற்காகப் போராடுகிறவர்கள், ஜலகண்டேஸ்வரருக்கும் சேர்ந்து போராடுங்கள்.

அடுத்தாற்போல், பால் என்று எடுத்துக் கொண்டால் இதற்காக ஒரு அலுவலகம் ரூ. 8 ஆயிரம் வாடகை கொடுத்து புரசைவாக்கம் பகுதியில் வைத்திருக்கிறார்கள். ரூ. 8 ஆயிரம் வாடகை என்று சொன்னால் நிர்வாகச் செலவு அதிகப்படும். அந்தச் செலவினால் பால் வாங்குகின்ற மக்கள் அரை லிட்டர் பாலுக்கு 40 காசு என்று அதிகம் தர வேண்டியிருக்கிறது. பாலில் தண்ணீரைக் கலந்து டோண்ட் மில்க் என்று விற்கிறார்கள். தனியார் பாலில் தண்ணீரைச் சேர்த்தால் குற்றம். ஆனால் அரசாங்கமே அதைச் செய்யும்போது தவறு இல்லை, குற்றம் இல்லை.

பெங்களூரிலிருந்து ட்யூபர்குலோசிஸ் வியாதி கொண்ட மாடுகளை கொண்டு வந்திருக்கிறார்கள். விளைவு என்ன ? அந்தப் பாலை காசு கொடுத்து வாங்கி சாப்பிடுகிற மக்களுக்கு வியாதி வந்துவிடும். காரணம் என்ன ? ஒரே ஆபீசர் எல்லாவற்றையும் கவனிக்கிறார். அதற்குப் பதிலாக, ஒரு குழு அமைத்து அதன் கண்காணிப்பில் இவை இருந்தால் சரியாக நடக்கும். பால் துறை நிர்வாகத்திலும் அறநிலைய நிர்வாகத்திலும் கண்காணிப்பு சரியில்லை என்று கூறி இத்துடன் முடித்துக் கொள்கிறேன்.

<u>திரு. ஏ. எம். இராஜா :</u> தலைவரவர்களே, மாண்புமிகு அறநிலையத் துறைஅமைச்சர் கொண்டு வந்துள்ள மானியத்தின் மீது எனது கருத்துக்களைக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த அறநிலையத் துறையைப் பற்றியும் ஆலயங்களைப் பற்றியும் வெகுவாகப் பேசப்பட்டது. கடைசியாகப் பேசிய அம்மையார் குறிப்பிட்டார், ஆலயங்கள் எல்லாம் வியாபார ஸ்தலங்களாக மாற்றப்பட்டு விட்டன, என்று. ஆலயங்களின் வருமானத்தைப் பெருக்கி அற வழிகளில் செலவழிப்பது தவறானதல்ல என்று கூற கடமைப்பட்டிருக்கிறேன். ஆலயங்களிலிருந்து வருகின்ற வருமானத்தை மற்ற நல்ல பல காரியங்களுக்குப் பயன்படுத்துவதில் எந்தத் தவறும் இல்லை. எல்லாம் வல்ல ஆண்டவன், சக்தி வாய்ந்தவன் ஆண்டவன் என்றெல்லாம் சொல்லப் படுகிறது. அப்படிப்பட்ட ஆண்டவனுக்கு நாம் செலவு செய்ய வேண்டுமா? நமது அமைச்சர் கொடுத்திருக்கின்ற கணக்குப்படி, ரூ. 16 கோடி செலவு செய்திருக்கிறார்கள். கோயில் திருப்பணிக்கு இவ்வளவு தேவையா? இவ்வளவு கோயில்கள் தேவையா? வேண்டுமானால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு கோயில் என்று வைத்துக் கொள்ளலாம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள்—ஒவ்வொருவருடைய நெஞ்சத்திலும் ஆண்டவன் இருக்கிறான், என்று. அப்படியானால் இத்தனை கோயில்கள் எதற்கு?

திரு. கே. கந்தசாமி: இறைவனை இதயத்தில் வைத்து வழி படலாம் என்கிறவர்கள் தங்கள் அரசியல் தலைவர்களுக்கு எங்கே பார்த்தாலும் சிலை வைக்கிறார்களே. அவர்கள் உள்ளத்தில் வைத்துப் பூசிக்கக் கூடாதா? (குறுக்கீடு) எல்லாக் கோயில்களுக்கும் முற்றுப்புள்ளி வைக்க விரும்புகிறாரா? மற்ற மதக் கோயில்களைப் பற்றி இப்படிப் பேசுவாரா? இந்துக்களை இளிச்சவாயர்கள் என்று நினைத்துக் கொண்டு எதை வேண்டுமானாலும் பேசுவது என்றால் நாங்கள் கேட்டுக் கொண்டு இருக்க வேண்டுமா? அவைத் தலைவர் இதை அனுமதிக்கிறாரா? (குறுக்கீடு) அரசாங்கம் கோயில்களைப் பாதுகாப்பதற்கென்று ஒரு தனி அமைச்சரையும் எச். ஆர். சி. ஈ. டிபார்ட்மெண்டையும் ஏற்படுத்தியிருக்கிறது. அப்படியிருக்கிறபோது ஒரு ஆளுங்கட்சி உறுப்பினர் இப்படிப் பேசலாமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த விவகாரம் காலையிலிருந்து இருந்து கொண்டிருக்கிறது. பிரச்சினைகள் எழுப்பப்பட்டு வருகின்றன. பேசுகின்றவர்கள் தங்கள் தங்கள் கருத்துக்களைத்தான் கூறுகிறார்கள். அவை ஒரு கட்சியின் கருத்தோ அல்லது இந்த சட்டசபையின் கருத்தோ அல்ல. இருந்தாலும், உறுப்பினர்கள் பேசும்போது மற்றவர்களின் மனத்தைப் புண்படுத்தாதவாறு, மற்றவர்கள் விரும்பாதவற்றையும் அவர்கள் ஏற்றுக் கொள்வது போலப் பேசுவது நல்லது.

திரு. எ. எம். இராஜா: நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன், பேச்சைத் துவக்கும்போது—நான் பேசுபவை எனது கருத்துக்கள் என்று. உறுப்பினர் அதைப் புரிந்து கொண்டிருக்கவேண்டும். ஆத்திகர்களுக்கு மனம் புண் படுகிறது என்று சொல்கிறார்களே, அவர்கள் பேசும்போது நாத்திகர்களாகிய எங்களுக்கு எவ்வளவு மனம் புண் படும் என்பதையும் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

திரு. கே. கந்தசாமி: அரசியல் நிர்ணய சட்டப்படி, இன்னொருவருடைய—மத நம்பிக்கை உடையவர்களின் மனதைப் புண்படும்படி



யாருக்கும் பேச உரிமை இல்லை. ஆகவே, உறுப்பினர் அவர்கள் சட்டசபை மீது நம்பிக்கை உடையவர்கள். ஆகவே, மத நம்பிக்கை உடையவர்கள் மனம் புண்படும்படி பேசக் கூடாது. தலைவரவர்களே, உறுப்பினர் பேசுவது எங்கள் மனத்தைப் புண்படுத்துகிறது. தலைவரவர்கள் எங்களுக்குப் பாதுகாப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எ.எம். இராஜா: தலைவரவர்களே, எனக்கு யாருடைய மனதையும் புண்படுத்தும் நோக்கம் கிடையாது. என்னுடைய கருத்துக்களை நான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கருத்துக்களைச் சொல்லுங்கள். அப்படி சொல்கிற நேரத்தில் மற்றவர்கள் மனம் புண்படாமல் சொல்ல வேண்டும்.

திரு. எ. எம். இராஜா: இன்று புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிற கோவில்கள் ஏறக்குறைய 41,000 கோவில்கள். அவைகளுக்குச் சொந்தமாக 2 லட்சத்து சொச்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இன்னும் இது போக புதிதாகக் கோவில்கள் இருக்கின்றன. அவைகள் எல்லாம் நிறைய வருமானம் பெறும் கோவில்களாக இருக்கின்றன. ஒரு கோவிலுக்கு 6 லட்சம் ரூபாய் கூட வருமானம் வருகிறது. அதைத் தனிப்பட்டவர்கள் தங்களுடைய உபயோகத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். அந்தப் பணத்தை வைத்துக் கொண்டு அவர்கள் அந்தப் பகுதி மக்களைப் பயமுறுத்திக் கொண்டு வருகிறார்கள்.

நாம் இப்போது குளம் குட்டைகளை நாட்டுடமையாக்கிவிட்டோம். அதே கோவில்கள்—எந்தக் கோவிலாக இருந்தாலும்—அதை நாட்டுடமையாக்க வேண்டும். அதற்குண்டான முயற்சிகளை இந்த அவை முடிவதற்குள்ளேயே அமைச்சர் அவர்கள் அறிவித்து, இந்தக் கூட்டம் முடிவதற்குள்ளேயே சட்டம் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இதுபோன்று ஆலயங்களில் இருக்கின்ற சிலைகளைத் திருடிக்கொண்டு போகிறார்கள் என்று சொல்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு கோவிலுக்கும் பாதுகாப்புப் போட்டு இருக்கிறார்கள். இப்படி ஒவ்வொரு கோவில்களுக்கும் தனித்தனியே பாதுகாப்பு போட்டு இருப்பதைவிட, கலையழகு மதிப்புள்ள சிலைகள் எல்லாவற்றையும் ஒரேயிடத்தில் கொண்டு வந்து வைத்து, அதை மியூசியமாக வைத்தால், வந்து பார்த்துச் செல்பவர்களுக்கும் சவுகரியமாக இருக்கும், பாதுகாப்புக் கொடுப்பதற்கும்சுலபமாக இருக்கும். இதை அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தாற்போல், பால் வழங்கு துறை பற்றி ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்லி என் வார்த்தையை முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

பால் வழங்கு துறையைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற சொசைடி, பாலை விற்பனை செய்யும் சொசைடிகளாக இருக்கின்றன. பால்

உற்பத்தி செய்யும் சொசைடிகள் நம்முடைய நாட்டில் இப்போதுதான் உருவாக்கப்பட்டு இருக்கிறது. இப்போது 135 சொசைடிகள் ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்றன. எப்படி நாம் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தினோமோ அப்படியே இந்த வெண்மைப் புரட்சியையும் ஏற்படுத்தி, பால் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். அந்த வகையில் ஒவ்வொரு ஊரிலும் ஒரு பால் உற்பத்தி சொசைடி ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக அந்த சொசைடியில் மெம்பராகத் தகுதியுடையவர்கள் 1 ஏக்கர் 2 ஏக்கர் வைத்திருப்பவர்களாக இருக்க வேண்டும். பால் உற்பத்தியைப் பொறுத்த வரையில் பால் மாடுகள், எருமை ஆகியவைகளை வளர்ப்பதற்கு தீவனங்கள் வாங்கிப் போட்டு வளர்த்தால் பால் நிச்சயமாக வருமானம் உள்ளதாக இருக்காது. அவர்கள் நஷ்டத்திற்கு உள்ளாகும் நிலை ஏற்படும். 1 ஏக்க, 2 ஏக்கர் என்று வைத்து இருப்பவர்களிடம் எருமை மாடு இருக்கும். அதன் தரத்தை உயர்த்துவதற்கும், அவைகளுக்கு புண்ணாக்கு, தவிடு, பருத்திக் கொட்டை போன்றவற்றைக்கடனாகக் கொடுத்து, அவர்கள் கொடுக்கும் பாலிலிருந்து கழித்துக் கொள்ள ஏற்பாடு வேண்டும்.

எருமை மாடு வாங்குவதற்குக் கடன் கொடுக்கப்படுகிறது. ஆனால் அவைகளைத் தவறான வகைக்குப்பயன்படுத்திக் கொள்கிறார்கள். ஆகவே, கடன் கொடுப்பது தவறான கொள்கையாகும். இதன் மூலம் நிச்சயமாகப் பால் உற்பத்தியாகாது. கடன் கொடுக்கும் திட்டத்தைக் கைவிடவேண்டும். கடன் கொடுக்கும் திட்டத்தைக் கைவிட்டால் உண்மையிலேயே பால் உற்பத்தியாளருக்கு ஊக்கம் ஏற்படும். அதன் மூலம் தரமான பால் கிடைக்கும். தரமான பாலுக்கு அதிகமான பணம் தரவேண்டும். மாட்டுத் தீவனம் விலையேறி இருக்கிறது. அந்த விலைக்குத் தகுந்தாற் போல், பால் விலையை உயர்த்தி அளிக்க வேண்டுமென்று கேட்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம் :—தலைவரவர்களே, இந்து சமய அறநிலைய நிர்வாகம், கதர்-கிராம நிர்வாகம், பால்வள நிறுவனம் ஆகிய இந்த மூன்று மானியங்கள் மீது என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

முதலில் சென்ற ஆண்டில் மானியம் வந்த போது, என்னுடைய தொகுதியில் ஸ்ரீரங்கத்திலுள்ள ஸ்ரீரங்கநாதர் கோவில் புதுப்பிக்கப்பட வேண்டுமென்றும், அதற்காக யுனெஸ்கோ அளித்து வந்த உதவித் தொகை நின்று விட்ட காரணத்தால், நம்முடைய அரசு அதற்குக் கொடுக்கிற பணம் குறைவாக இருக்கிறது என்றும், அதனால் அதை அதிகப்படுத்த வேண்டுமென்றும் கூறினேன். இந்த நிதி நிலை அறிக்கையில் அதைப்பற்றி ஒன்றும் காணவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்று ஆலயங்கள் எல்லாம் ஒரு விளம்பரக் கூடமாக ஆகி விட்டது என்று எனக்கு முன்பு பேசிய திருமதி அனந்தநாயகி அம்மையார் கூறிய போது, கனம் அமைச்சர் அவர்கள் இந்த நுழைவுக் கட்டணங்கள்



ஏற்கெனவே என்னுடைய கட்சி ஆட்சியில் இருந்த நேரத்தில் இருந்தது என்று சொன்னார்கள். அதை ஒப்புக்கொள்கிறேன். இன்றைக்கு உதா ரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், திருத்தணி கோவிலை எடுத்துக் கொண்டால் ஆறுபடை வீடுகளில் ஒன்று. அதில்—முருகப்பெருமான் எழுந்தருளிய ஆறுபடை வீடுகளில் ஒன்றான அதில்—1 ரூபாய் நுழைவுக் கட்டணம் என்று ஏற்படுத்தி இருக்கிறார்கள். ஆனால் ஏழைகள் அந்த 1 ரூபாய் கொடுத்த பின்னும் ஆண்டவனை சரிவரத் தரிசிக்க முடியாத நிலை இருக்கிறது என்பதை அரசும் அறியும் என்று நினைக்கிறேன். அதற்கு அபிஷேகம் செய்ய ரூ. 3 என்று முன்பு இருந்தது. இப்போது ரூ. 17 என்று ஆக்கியிருக்கிறார்கள். ஒன்று நான் கூறிக்கொள்ள விரும்பு கிறேன். அரசுக்கு அவர்கள் ஏற்கெனவே இருப்பதைக் குறைக்க இயலாது என்ற நிலை இருக்குமானால், அதைக்குறைக்காவிட்டாலும் கூட, இன்னும் அதை ஏற்றுவதற்கு முயலவேண்டாம் என்று நான் கூறிக் கொள்கிறேன். எல்லாவற்றிற்கும் விலைவாசி ஏறியிருப்பதால், அந்த ஆலயக் கட்டணத் தையும், அபிஷேகக் கட்டணத்தையும், உயர்த்தியிருக்கிறோம் என்று கூறலாம், அதைக் காரணமாக வைத்து ஆலயங்களின் கட்டணங்களை உயர்த்த வேண்டாம்.

இன்று அறங்காவலர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அப்படி நியமிக்கப் படுகிறவர்கள் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும். எந்த அளவுக்கு ஆளும் கட்சியைச் சார்ந்தவர்களுக்கு ஒரு நம்பிக்கை கடவுளிடத்தில் இருக்கிறது என்பதை இன்று நடந்த விவாதத்தின் போது நாம் அறிந்தோம். எனக்கு முன்பு பேசிய அங்கத்தினர் திரு. கிருஷ்ண மூர்த்தி அவர்கள் கூறியதைச் சுட்டிக் காட்டி—மனதிற்குள்ளே கடவுள் இருக்கிறது என்ற அளவுக்கு இருந்தால் போதும் என்று சொன்னார்கள். நாம் அந்த அளவுக்குப் பகுத்தறிவு பெற்று இருக்கிறோமா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது. அந்த அளவுக்கு நாம் வருவதற்கு இந்த ஜென்மம் அல்ல, மறு ஜென்மம் எடுத்தால் கூட இயலாது என்று நான் கூறிக்கொள்கிறேன். (குறுக்கீடு) "இனி பிறவாமல் இருக்க வரம் தரவேண்டும் என்றுதானே வேண்டுகிறோம்" ஆகவே, நாம் அறங் காவலர்கள், டிரஸ்டிகள் போடுவதை வரவேற்கிறோம். எல்லாக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கும் கொடுக்கவேண்டும் என்று சொல்கிறீர்கள். ஆனால் கடவுள் மேல் பக்தி இல்லாதவர்கள், கடவுள் இல்லை என்று சொல்லுகிறவர்கள் இடத்தில் அதைக் கொடுத்தால், கோவிலில் நல்ல முறையில் நிர்வாகம் நடக்குமா என்பதையும் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

(திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன் எழுந்தார்).

மாண்புமிகு பேரவைத் தலைவர் :—அம்மையார் பேசி, அமைச்சர். அவர்கள் பதில் சொல்ல வேண்டும். இப்போது மணி 1 ஆகப்போகிறது. $1\frac{1}{2}$ மணிக்குள் விவாதம் முடிய வேண்டும். நீங்கள் உட்காருங்கள்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்:—நிர்வாகம் சரியாக நடக்கிறதா என்று பார்க்கிறபோது வருத்தமாக இருக்கிறது. குற்றம் சொல்ல வேண்டும், குறை சொல்லவேண்டுமென்பதற்காகச் சொல்லவில்லை. அங்கே அறங் காவலர்களாகப் போடப்படுகிறவர்கள் கோவில் நிர்வாகம் ஒழுங்காக, முறையாக இருக்கவேண்டும் என்ற முறையில் இருக்க வேண்டும். இந்தக்

குறிக்கோளாவது குறைந்தது இருக்க வேண்டும். பக்தி இல்லாவிட்டால் கூட பரவாயில்லை. நிர்வாகம் ஒழுங்காக நடக்கிறதா என்பது முக்கியமானது. அது குறித்து ஒன்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பழமலைநாதர் கோவில் என்று ஒன்று இருக்கிறது. அங்கே அறங்காவலராக இருக்கக்கூடியவர் அதற்குச் சொந்தமாக இருக்கும் ஜெயங்கொண்டாம் தோப்பில் உள்ள இலுப்பை மரத்தை ஏறக்குறைய 18,000—20,000 ரூபாய் மதிப்புள்ளவை—வெட்டி எடுத்து இருக்கிறார்கள். யாரைக் கேட்டுக்கொண்டு எடுத்து இருக்கிறார்கள். அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டா? அரசாங்கம் உத்திரவிட்டிருக்கிறதா? அப்படியில்லையென்றால், அவருக்கு என்ன அதிகாரம் இருக்கிறது அதை வெட்டி விற்பதற்கு? அதோடு, 60,000 ஏக்கர் நிலங்களை, அவர் இஷ்டத்திற்கு வினியோகம் செய்திருக்கிறார்—புறம்போக்கு நிலம் என்று கூறி. அது புறம்போக்கு இல்லை என்று ஆர்.டி.ஓவுக்கு மக்கள் முறையீடு செய்த பிறகு, அது புறம்போக்கு நிலம் இல்லை, கோவிலுக்குச் சொந்தமானது என்பதும் ஊர்ஜிதம் ஆயிற்று.

[பிற்பகல் 1-00]

இப்போது அறங்காவலர்களாகப் போடப்பட்டு உள்ளவர்கள் வேலியே பயிரை மேய்கிற மாதிரி அவர்களே இந்த கோவிலுடைய சொத்துக்களை எல்லாம் இப்படிப் பாழ்படுத்துவார்களேயானால் இது நன்றாக இல்லை. அரசு கவனிக்க வேண்டும். இந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் கவனிக்க வேண்டும்.

மற்றொன்று. சில கேஸ்கள்—இந்து ரிலிஜியஸ் எண்டௌமெண்டில் இருக்கின்ற கோவில்களைச் சேர்ந்த கேஸ்கள்—இந்த கேஸ்கள் முடிவு அடைந்து தீர்ப்பு கூறி வருவதற்குள் ஒரு ஆண்டு, இரண்டு ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிடுகின்றன. எதற்குத் தாமதம் ஆகிறது என்று புரியவில்லை. இருக்கக்கூடிய அபீஷியல்சை பார்த்தால் ஃபுல்லி ஸ்டாப்ட். ஸ்டாபுக்கு ஒன்றும் குறைவு இல்லை. இந்தத் தாமதம் ஏற்படுகிற காரணம் என்ன, நீங்கள் குறிப்பிட்ட வகையில் இந்த இந்த கேஸ் இத்தனை ஆண்டுக்குள்ளே, மாதத்திற்குள்ளே முடிக்க வேண்டுமென்ற உத்தரவை அரசு போட வேண்டும். இல்லாவிட்டால் பல ஆண்டுகள் இழுத்துக்கொண்டே போய் பல ஆண்டுகள் தீர்வு காண இயலாத நிலை ஏற்பட்டு விடும்.

பப்ளிசிட்டி வேண்டாமென்று சொன்னார் நம் மதிப்பிற்குரிய அங்கத்தினர் திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள். கோவில்களுக்குப் பிரசாரம் செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றார். கோவில்களுக்குத்தான் முக்கியமாகப் பிரசாரம் தேவை. எந்த எந்த நேரத்தில் எந்த எந்த திருவிழாக்கள் நடக்கிறது, எங்கே கும்பாபிஷேகம் நடக்கிறது என்று மக்களுக்குத் தெரிவிக்க வாய்ப்பு ஏற்படும். தங்கத்தேர் வைத்து இருக்கிறார்கள். இதற்குக் கூட பழனியில் கட்டணம் கட்டுகிறோம். ரூ. 250



லிருந்து ரூ. 750 வரை உயர்ந்து இருக்கிறது. இதற்கு ஃப்ரியாக விடச் சொல்லுங்கள். இந்த சஜ்ஜெஷனை கொடுத்து இருந்தால் வரவேற்கத் தக்கது. ஆகையினால் இவைகளை அரசு கவனிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பால் விநியோகம் செய்கிறபோது முக்கியமாக பால் புட்டிகளுக்குச் சீல் போடுகிறார்கள். அது தண்ணீர் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த சீல் சரியாக இல்லாத காரணத்தால் பால் நிறுவனத்திலிருந்து பால் வழங்கும் இடத்திற்கு வருவதற்குள்ளாக பல பாட்டில்களில் சீல் இல்லாமல் இருக்கின்றது. இந்த சீல் ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும்.

நந்தனத்தில் பால் விநியோகம் செய்கிற இடத்தில் 12ம் தேதிக்குள்ளே கார்ட் புதிப்பிக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால் இதற்குள் பெண்களும், ஆண்களும், பிள்ளைகளும் கியூவிலே நிற்பது பார்த்தால் கஷ்டமாக இருக்கின்றது. புதுப்பிக்க காலதாமதமாகிறது. இதற்குக் காரணம் போதுமான ஸ்டாப் இல்லாத குறை என்று நினைக்கிறேன். உடனடியாக அந்தத் தேதிக்குள் கார்டுகள் புதுப்பித்து விநியோகம் செய்து விடுவதற்குத் தக்கவாறு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு அதற்கு கனம் அமைச்சர் அவர்கள் முக்கியமாக அந்த கார்ட் புதுப்பிப்பதற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்காள்ள விரும்புகிறேன்.

இந்த காதி அண்ட் விலேஜ் இண்டஸ்ட்ரீஸ் எய்டுக்கு என்னுடைய கட்சி சார்பாக திரு. ஜேம்ஸ் அவர்கள் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தை ஒட்டி இந்த பனை மரம் ஏறக்கூடிய டேப்பர்ஸ்களுக்குக் கொடுக்கக்கூடிய சில சலுகைகள் இருக்கின்றன. அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய சலுகைகள் என்ன என்றால் இந்த கோவாபரேடிவ் சொசைடிகள் மூலமாகக் கொடுக்கக்கூடிய கடன்கள் சரிவரக் கொடுக்கப்படவில்லை என்ற குற்றச்சாட்டை இங்கே கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதை ஒழுங்கான முறையில் கொடுப்பதற்கு அரசு முன் வரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசாங்கம் கொடுக்கின்ற இந்தக் கடன் தொழிலாளர்களுக்கு நல்ல முறையில் கொடுப்பதோடு கடன் கொடுக்கின்ற பணத்தை உயர்த்த வேண்டும். பாம்கர் பெடரேஷன் தேர்தல் முறையில் கன்னியாகுமரியில் அமைக்கப்பட்டது. அந்த பெடரேஷனை சூபர்சீட் செய்து இருக்கிறார்கள். இப்போது அதை எலக்ஷன் முறையில் வைக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாமினேஷன் முறை இல்லாமல் இதைத் தேர்தல் முறையாக வைக்க வேண்டும்.

இந்த மரம் ஏறிகளுக்கு ஆபத்து வந்தால், சிறிய ஆபத்து ஏதாவது ஏற்பட்டால் அவர்களுக்கு ரூ. 100 கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. கனம் மதிப்பிற்குரிய முதலமைச்சரவர்கள் எல்லோருக்கும் தாராளமாக வாரி வழங்கும்போது இவர்களுக்கு மாத்திரம் ஏன் குறைத்து

இருக்கிறார்கள் என்று புரியவில்லை. இதை ரூ. 250க்கும், மேஜர் இன் ஜூரிஸுக்கு இருக்கும் ரூ. 500ஐ 1,000 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். ரூ. 1,000 உயிர் சேதம் அடைந்தவர்களுடைய குடும்பங்களுக்குக் கொடுத்து வருகிறார்கள். உயிர்ச் சேதம் அடைகிறவர் களுக்கு ரூ. 1,000 என்று அசெம்பளியில் கனம் முதலமைச்சர் அவர்கள் அறிவித்து இருக்கிறார்கள். இதை ரூ. 5,000 ஆக்கினால் நலமாக இருக்கும் என்று அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

ஊனம் உற்றோர்களுக்கு ஒரு ஸ்கீம் போட்டு இருக்கிறார்கள். 600 பேர் உடல் ஊனம் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளித்து அவர்களுக்கு ரூ. 40 ஸ்டைபண்ட் கொடுத்து அவர்களை வாழ வைப்பதற்காக. ஸ்கீம் போட்டிருக்கிறார்கள். ஆனால் ஒரு கண்டிஷன் இருப்பதால்— After training they will be absorbed on regular wages in these units, if found suitable—என்று கொடுத்து இருக்கிறது. இந்த ரூ. 40 கொடுத்து பயிற்சி அளித்து 6 மாதத்திற்குப் பிறகு இந்த 600 பேரை அன்சூட்டபிள் என்றால் என்ன ஆகும்? எப்படி அவர்களுக்கு சூட்டபிலிடி நிர்ணயிக்கப் போகிறீர்கள். ஊனம் உற்றவர்கள் என்றால் அவர்கள் குறிப்பிட்டவேலை களுக்கு அன்சூட்டபிள். இந்த டிரெயினிங் பாழாகப் போய்விடும். ரூ. 40 ஸ்டைபண்ட் மாதாமாதம் கொடுத்தது பாழாகிவிடும். 600 பேருக்கு வேலை கிடைக்காமல் போய் விடும். எந்த முறையில் நீங்கள் ஊனம் உற்றவர்களுக்கு உதவி செய்யப் போகிறீர்கள் என்று கேட்டு டிரெயினிங் கொடுப்பதோடு மட்டுமல்லாமல் சூட்டபிலிடி அன்சூட்டபிலிடி என்ற கேள்வி இல்லாமல் அவர்களை எடுத்துக்கொள்வதற்கு முன்வர வேண்டு மென்று கோரி அதற்கு கனம் முதலமைச்சர் பதில் உரையில் கூறும்படி கேட்டுக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அறநிலையத் துறையினுடைய மான்யக் கோரிக்கை மீதும், கிராமக் கைத்தொழில் வாரியக் கோரிக்கை மீதும், பால் விநியோகத் துறை மீதும் உறுப்பினர்கள் சிறந்த யோசனைகளைச் சொல்லி இருக்கிறார்கள்.

ஏற்கெனவே நம்முடைய கோரிக்கைக்குறிப்பிலே மூன்று துறைகளிலும் எந்தெந்த வகைகளிலே எல்லாம் சிறந்த முறையில் பணியாற்றி வருகிறோம் என்பதை உறுப்பினர்களுக்கு நாம் வழங்கி இருக்கிறோம்.

குறிப்பாக, அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் 9,600 ஆக இருந்த கோயில்களின் எண்ணிக்கை புதியதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட கோயில்களோடு சேர்த்து இன்றைக்கு 20,246 கோயில்களை இதுவரையில் நம்முடைய துறையின் ஆட்சிக்குள்ளே கொண்டு வந்திருக்கிறோம் என்பதை யும், அதே போல வருமானம் சுமார் ரூ. 3,99,00,000 ஆக இருந்தது ரூ. 11,69,60,000-க்கு மேல் வந்திருப்பதை இங்கே சொல்ல ஆசைப் படுகிறேன். இந்த வருமானத்திற்கு எல்லாம் காரணம் கோயில்களிலே நுழைவுக் கட்டணம் வைத்திருக்கிறார்கள், கட்டாய வசூல் செய்யப்படுகிறது என்று இப்படி சில குறைகளை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசி இருககின்ற நேரத்தில் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள்.



நுழைவுக் கட்டணத்தைப் பொறுத்தவரையில் கோவிலுக்குள்ளே நுழைந்து செல்ல கட்டணம் செலுத்த வேண்டும் என்ற முறை ஒரே ஒரு கோவிலில், காஞ்சீபுரத்தில் இருக்கின்றது. ஏகாம்பரேஸ்வரர் கோயிலுக் குள்ளே நுழைய வேண்டுமென்றால் 10 பைசா தர வேண்டுமென்ற முறை வைத்து இருக்கிறார்கள். மற்றக் கோயில்களில் விசேஷகாலங்களில் அல்லது குறிப்பாக வழிபாடுகள் நடைபெறுகிற நேரத்தில் மட்டும் இந்தக்கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இன்னும், பெரிய கோயில்களில், இன்னும் அதிக மாக வருமானம் வருகின்ற கோயில்களில் நெருக்கடியான கோயில்களில், இந்தக் கட்டணங்கள் வசூலிக்கப்படுகின்றன. இந்தக் கோயில் களில் பொதுமக்கள் வழிபட ஒரு வழியும் சிறப்புக் கட்டணங்கள் செலுத்தி வழிபடுகிறவர்களுக்கு ஒரு வழியும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அதனால் கோயிலுக்கு வருமானம் வரும். கட்டணம் பற்றி கவலைப் படாதவர்கள் செல்வதற்குத் தனி வழிகள் சௌகரியமாக அமைத்து வசூல் செய்கிறார்கள். கட்டாயமாக உள்ளே போகவேண்டு மென்றால் கட்டணமாகப் பணம் கொடுத்துத்தான் போக வேணடுமென்று சொல்வது வட்டிக்கடை வைப்பது போல் செய்கிறார்கள் என்று சொன்னார் கள். இதற்குத் தெளிவாக குறிப்பிட விரும்புகிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சென்னைக்குப் பக்கத்திலே இருக்கிற கருமாரியம்மன் கோயிலில் கட்டாயமாக நுழைவுக் கட்டணம் வசூல் செய்கிறார்கள். ஒரு ரூபாய் கொடுத்தால்தான் உள்ளே போக முடியும். 10 ரூபாய், 15 ரூபாய் கூடக் கேட்கிறார்கள். ஏதாவது விசேஷ காலங்களில் கட்டணம் வசூல் செய்தால் பரவாயில்லை. ஒப்புக்கொள்ளலாம். சாதாரண காலங்களில்கூட ஒரு ரூபாய், 2 ரூபாய் நுழைவுக் கட்டணம் கேட்கிறார்கள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: வடபழனி இருக்கிறது.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: வடபழனியும் இருக்கிறது; கருமாரியம்மன் கோவிலும் இருக்கிறது. பொதுமக்கள் நின்று வழிபடும் இடங்களில் நீங்களும் நின்று வழிபட்டால் கட்டணம் எதும் இல்லை. ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு அப்பால் சென்று வழிபட வேண்டுமென்றால் கட்டணம் செலுத்த வேண்டும். கட்டணம் செலுத்தித்தான் அங்கே போக வேண்டும். இல்லாவிட்டால் மக்கள் கூட்டம் அளவுக்கு மீறிப் போய், கட்டுப்படுத்த முடியாமல் போய்விடும். கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காகத் தான் அந்தமாதிரி இடங்களில் போய் நின்று வழிபட கட்டணம் வைத் திருக்கிறார்கள்.

காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் கோயிலில் கட்டாயக் கட்டணம் வசூல் செய்வதாகச் சொன்னார்கள். அந்தக் கட்டணம் வருகின்ற ஏப்ரல் 1-ம் தேதி முதல் நீக்கப்பட்டு, பொதுமக்கள் எல்லாம் கட்டணம் இல்லாமல் உள்ளே போகலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள் கிறேன்.

இந்த அறநிலையத் துறையைப் பொறுத்தவரையில் நிர்வாக அலுவலர் கள் போதுமான அளவுக்குக் கிடையாது; ஏராளமான கோயில்களை அற நிலையத் துறையின் நிர்வாகத்தின்கீழ் கொண்டுவந்திருக்கிறார்களே தவிர

போதுமான நிர்வாக அலுவலர்கள் இல்லாமல் நிர்வாகம் முடங்கிக் கிடக்கிறது என்ற கருத்தை மாண்புமிகு உறுப்பினர் முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இப்போது சேர்க்கப்பட்டிருக்கிற புதிய ஆலயங்கள் மட்டுமல்ல; ஏற்கெனவே இருக்கின்ற ஆலயங்களில் எல்லாம் கூடப் போதுமான அளவுக்கு நிர்வாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தற்போது ஒவ்வொரு பகுதியிலும் 10 அல்லது 15 ஆலயங்கள் என்று "குரூப், குரூப்பாக" பிரித்து, சுமார் 500 அலுவலர்கள் இந்த ஆண்டு நியமிக்கப்பட்டு, எல்லா ஆலயங்களும் நல்லமுறையில் நிர்வகிக்கப்பட்டு வருகின்ற ஒரு நிலைமையை வருகின்ற ஆண்டு முதல் செயல்படுத்த இருக்கிறோம். அப்படி வரும்போது நிச்சயமாக இப்போது இருக்கிற சிறிய குறைபாடும் போக்கப்பட்டு, வருவாய் அதிகமாக வருகின்ற வாய்ப்பும் ஏற்படும். அதிகமாக நியமிக்கப்படும் நிர்வாக அதிகாரிகளினால் ஏற்படுகின்ற செலவையும் கூட அதிகமாக வருகின்ற கூடுதல் வருவாயைக் கொண்டு சரிக்கட்டிக்கொள்ள முடியும் என்ற முறையில் இந்தத் துறையைச் சீர்திருத்தம் செய்திருக்கிறோம்.

அதைப்போல, இந்தக் கோயில் வருமானத்தை அதிகப்படுத்தியிருக்கிறோம். 3·99 கோடி ரூபாயாக இருந்ததை இன்றைக்கு சுமார் 11 கோடிக்கு மேல் வருமானம் வருகின்ற கணக்கைக் காட்ட முடிகிறது. இந்த உயர்வு ஏற்பட பல்வேறு வகைகளில் எல்லாம் நிர்வாகத்தைச் சீர்திருத்தி இருக்கிறோம். அந்த அடிப்படையில் தான் கோயில்களுக்குச் சொந்தமான வீடுகளின் வாடகை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது.

நகரில் இருக்கிற பெரிய பெரிய வீடுகள் அல்லது சிறிய கடைகள் இவைகளுக்கு 30, 40, 50 ஆண்டுகளுக்கு முன்னால் வாடகை நிர்ணயம் செய்யப்பட்டது. தற்போது கொஞ்சம் உயர்த்திக் கேட்டாலும் தரத் தயாராக இல்லை. எல்லோருக்கும் அப்பேர்ப்பட்ட நிலை இருக்கும்போது கோயில் வீடுகளுக்கு ஏன் உயர்வு என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள் கேட்டார்கள்.

கோயில்களைப் பொறுத்தவரையில், வருகின்ற வருமானம் தனிப்பட்ட யாருக்கும் அல்ல. கோயில் நிர்வாகத்திற்குச் செலவிட்டது போக மீதிப் பணம் சாதாரண மக்களுக்குப் பயன்படுகிறது. ஆகவேதான் நீண்டநாட்களாகப் பரிசீலனை செய்யப்பட்டு, சென்ற ஆண்டு முதல் கோயில் நிலங்களுக்கு, வீடுகளுக்கு வாடகைச்சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டு, நியாயமான அளவுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை நகரில் இருக்கிற கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சொந்தமான வீடுகள் ஏராளமாக இருக்கின்றன. தனியாருக்குச்சொந்தமாக இருக்கிற அப்படிப்பட்ட வீடுகளுக்கு ஆயிரம் ரூபாய் கூட வாடகை வசூல் செய்வார்கள். இப்படி ஆயிரம் ரூபாய் வாடகை வரக்கூடிய வீட்டிற்கு 100 ரூபாய், 150 ரூபாய்தான் வாடகை கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். வாடகையை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று சொன்னால் தருவதும் இல்லை; காலி செய்யவும் முடியவில்லை. அதனால் இந்து கோயில்கள், கிறிஸ்தவ சர்ச்சுகள், முஸ்லீம் வழிபாட்டிடங்கள் ஆகியவைகளுக்குச் சொந்தமான





வீடுகளுக்கு வாடகைச் சட்டத்திலிருந்து விதிவிலக்குத் தரவேண்டுமென்று கடந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டு, அவைகளுக்கு நியாயமான வாடகை நிர்ணயம் செய்த பிறகு இதே கபாலீஸ்வரர் கோயிலுக்குச் சென்க ஆண்டு வந்த வாடகையை விட சுமார் 50,000 ரூபாய் அதிகமாகவரு மானம் வருகிறது. இந்த ஆண்டும் அதேமாதிரி கூடுதல் வருமானம் கிடைக்கும்.

இதெல்லாம் ஏழை எளிய மக்களைப் பாதிக்காதா என்று கேட்டார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சட்டசபையில் கேள்வி நேரத்தில் இந்தப் பிரச்சனை வந்தபோது கடந்த சட்டமன்றக் கூட்டத்தில் சொன்னார்கள். அப்படி ஏழை எளிய மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அந்த வட்டாரத்தில் நியாயமான வாடகை என்ன வரும் என்று அறிந்து, அதன் அடிப்படையில் வாடகை நிர்ணயிக்கப்பட்டிருக்கிறதே தவிர, ஏராளமான அளவுக்கு வாடகைப் பணம் வாங்கவேண்டுமென்ற கெட்ட எண்ணத் தோடு வாடகை உயர்வு செய்யப்படவில்லை. நியாயமான வாடகை வரக் கூடிய முறையில் எந்த அளவுக்கு உயர்த்த முடியுமோ அந்த அளவுக்கு அந்தவட்டாரத்தில் இருக்கக்கூடிய நிலைமைகளைக் கண்டறிந்து அதன் அடிப்படையில் செய்திருக்கிறோம்.

அடுத்தபடியாக, சமயபுரம் மாரியம்மன் கோயில் நிர்வாகத்தை தனியாகப் பிரிக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் முத்தமிழ்ச் செல்வன் அவர்கள் கேட்டார்கள். நிர்வாக வசதிக்காக இரண்டு கோயில்கள் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறார்கள். மதுரை மீனாட்சியம்மன் கோயில், திருப்பரங்குன்றம் கோயில் ஆகிய இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறார்கள். அதைப்போலவே ஸ்ரீரங்கம் கோயில், சமயபுரம் மாரியம்மன் கோயில் ஆகிய இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து நடத்துகிறார்கள். இந்த நான்கு கோயில்களின் நிர்வாகத்தையும் தனித் தனியாகப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை நீண்டநாட்களாக அந்தந்த வட்டார மக்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். திருப்பரங்குன் றம் கோயிலை எடுத்துக் கொண்டால் வருமானம் அதிகம், நிர்வாகச் செலவு குறைவு. ஆனால், மீனாட்சியம்மன் கோயில் வருமானம் குறைவு, நிர்வாகச் செலவு அதிகம். ஆகவே, திருப்பரங்குன்றம் கோயிலிலிருந்து கிடைக்கும் அதிகப்படி வருமானத்தைத் கொண்டு மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகச் செலவை ஈடுசெய்யும் வகையில் அந்த இரண்டு கோயில்களின் நிர்வாகத் தையும் ஒன்றாகச் சேர்த்து நடத்திக் கொண்டிருக்கிறார்கள்.

அதைப்போலவே சமயபுரம் மாரியம்மன் கோயில் வருமானம் அதிகம், நிர்வாகச் செலவு குறைவாக இருக்கிறது. ஸ்ரீரங்கம் கோயில் வருமானம் குறைவு, நிர்வாகச் செலவு மிக அதிகம். ஆகவே, அந்த இரண்டு கோயில் நிர்வாகத்தையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள். இப்படி இரண்டு கோயில்களின் நிர்வாகத்தையும் சேர்த்து வைத்திருக்கிறார்கள் என்றால், அந்த இரண்டு கோயில்கள் மட்டுமல்ல; அவைகளோடு சேர்ந்த துணைக் கோயில்கள் 10, 15 என்று இருக்கின்றன. அந்தத் துணைக் கோயில்களின் நிர்வாகத்தையும் சேர்த்துப் பார்க்க வேண்டும். ஆகவே, பிரிக்க வேண்டும் என்ற கோரிக்கை நியாயமாக இருந்தாலும், எந்த வகையில் பிரிக்கலாம், எந்த வகையில் பிரித்தால் துணைக்

கோயில்களின் நிர்வாகங்களும் பாதிக்கப்படாமல் இருக்கும் என்பதை எல்லாம் ஆராய்ந்து பார்த்து பின்னர் முடிவு செய்யலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

இன்னொன்றையும் இங்கே சொன்னார்கள். அடிக்கடி கும்பாபிஷேகம் நடக்கிறது என்று சொன்னார்கள். கும்பாபிஷேகம் அடிக்கடி நடைபெற வில்லை என்று குற்றஞ்சாட்டிய காலம் ஒன்று இருந்தது, இப்போது அடிக் கடி கும்பாபிஷேகம் நடக்கிறது என்று திருமதி அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்டார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : அடிக்கடி கும்பாபிஷேகம் நடத்துங்கள்; வேண்டாமென்று சொல்லவில்லை. உண்மையில் பாழடைந்து கிடக்கும் கோயில்களைப் புதுப்பித்து கும்பாபிஷேகம் செய்தால் வரவேற்கிறோம், நன்றாக இருக்கிற கோயில்களில் வசூலுக்காக கும்பாபிஷேகம் நடை பெறுவதை வேண்டாம் என்கிறோம். வேண்டாம் என்று சொல்ல "கான் டக்ஸ்டை" புரிந்துகொள்ள வேண்டும்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கும்பாபிஷேகம் செய்வது கோயில் திருப்பணி என்று நாடு பூராவும் நடக்கிறது. எந்தக் கோயிலில் கும்பாபிஷேகம் என்ற முறையில் தவறு செய்யப்பட்டது, எந்தக் கோயிலில் அடிக்கடி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது என்று சொன்னால் அதற்குப் பதில் சொல்லலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : கருமாரியம்மன் கோயில் 10 வருஷங்களுக்கு முன்னால் கட்டி கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. அப்போதே பிரமாதமாகக் கும்பாபிஷேகம் செய்தோம். 1966–ல் என்று நினைக்கிறேன். இப்போது 'ஜஸ்ட் லாஸ்ட் இயரில்' தான் சில இடங்களைப் புதுப்பித்து, புதுப்பித்து வைத்துக்கொண்டு கும்பாபிஷேகம் செய்தார்கள் நாங்கள் ஏதோ குறைபாட்டைச் சொல்கிறோம் என்றால் பக்தர்கள் ஒன்றும் கண்ணை மூடிக்கொண்டு சொல்லவில்லை; பார்த்து மனம் நொந்துதான் சொல்கிறோம்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பக்தர்கள் எல்லாம் பாராட்டு கிறார்கள். சிலர் இப்படி என்ன கோபத்தினால் சொல்கிறார்கள் என்று தெரியவில்லை. 12 ஆண்டுக்கு ஒருமுறை கும்பாபிஷேகம் நடக்க வேண்டுமென்று பக்தர்கள் சொல்கிறார்கள்; அதற்காகச் செய்கின்றோம். அதல்லாமல் ஏதோ விளம்பரத்திற்காகவோ அல்லது அமைச்சர்கள் கலந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவோ இப்படிச் செய்யவில்லை.

கோயில் நிகழ்ச்சிகளில் தமிழ்த் தாய் வாழ்த்து என் போட வேண்டுமென்று கேட்டார்கள். தமிழ்த் தாய் மீது இவ்வளவு கோபம் இருக்குமென்று எங்களுக்குத் தெரியாது. அமைச்சர்கள் கலந்து கொள்ளும் அரசாங்க நிகழ்ச்சிகளில் தமிழ்த் தாய் வாழ்த்து இசைத்த



பிறகு மற்ற நிகழ்ச்சிகளைத் தொடங்குகிறோம். கோயில்களில் தமிழ்த் தாய் வாழ்த்து இசைத்த பிறகு பக்தி பாடல்கள் போடுகிறார்கள் தமிழ்த் தாய வாழதது இசைப்பதற்கு முன்னால் பக்தி பாடல்கள். போடுகிறார்கள். பின்னாலும் போடுகிறார்கள். அதற்கு பின்னால் நாம் தொடர்ந்து நிகழ்ச்சியை நடத்துகிறோம். அங்கே கட்டாயமாக தமிழ்த் தாய் வாழ்த்து போடப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கோயில்கள் அனைத்தையும் நாட்டுடைமை ஆக்கவேண்டுமென்ற கருத் தினை மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசுகின்ற நேரத்தில் சொன்னார் கள். கோவில்களில் உள்ள சிலைகள் திருட்டுப் போகின்றன, அவற்றைப் பாதுகாக்க தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னார்கள். தமிழ் நாட்டில் இருக்கிற கோயில்கள் அனைத்தும் அரசாங்கத்தின் பாதுகாப்பில் கொண்டுவரப்பட வேண்டும் என்பது தான் நமது நோக்கமாகும். இதற்கென்று சிறப்புப் பணியாளர்களைப் போட்டு செயல்பட்டதன் காரணமாக இவ்வாண்டு 5178 கோவில்கள் அறநிலை யத்துறையின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இதற்காக அனுமதிக் கப்பட்ட 27 கூடுதல் ஆய்வாளர் பதவிகள் மற்றும் அதற்குரிய துணைப் பணியாளர்கள் உதவியினால் இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் சுமார் 20,000 கோயில்களை புதிதாக அறநிலையத்துறையின் ஆளுகைக்குள் கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதி இருக்கிற நிறுவனங்களையும் அற நிலையத்துறையின்கீழ் கொண்டுவர மேலும் சில அதிகாரிகளை அதற் காக நியமித்துமேல் நடவடிக்கைகளை மேற்கொண்டு இருக்கிறோம்.

அதேபோல் கோவில் சம்பந்தமான—தனிப்பட்டவர்கள் வழக்குகள் தீர்க்கப்படாமல் நிலுவையில் இருக்கின்றன—வழக்குகள் தொடர்ந்தாலும் ஆணையர், துணை ஆணையர்கள் இந்தவழக்குகளைச் சீக்கிரமாகத்தீர்ப்பதில்லை என்ற கருத்து திருமதி ஜோதி அம்மாள் அவர்களால் தெரிவிக்கப்பட்டது. அந்தக் குறை விரைவில் நீக்கப்பட்டாக வேண்டுமென்று ஆணையரிடத்தில் தெரிவித்திருக்கிறேன். வழக்குகளை எடுத்துக் கொண்டால் சில நேரங்களில் சம்பந்தப்பட்ட தனியார்களோ தாவா கேட்டுப் பெறுகிறார்கள். சில வழக்குகளில் அது சம்பந்தப்பட்ட ரெக்கார்டுகள் முழுவதும் வந்து சேரு வதில் தாமதமாகிறது. எப்படி இருந்தாலும் ரெக்கார்டுகள் அனைத்தும் பெறப்பட்டு—காலதாமதமாகிக் கிடக்கிற வழக்குகளையாவது உடனடியாகத் தீர்த்தாக வேண்டுமென்று ஆணைகள் பிறபிக்கப்பட்டுள்ளன. விரைவில் அதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்வார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

தென்னாற்காடு மாவட்டத்தில் பழமலைநாதர் கோவில் மரங்களை வெட்டி விட்டது பற்றிச் சொன்னார்கள். யார் வெட்டினார்கள் என்ற விவரம் விசாரணையில் இருக்கிறது. அந்த ஆலய அறங்காவலர்கள் சஸ்பெண்டு செய்யப்பட்டு, அவர்களிடம் விளக்கம் கேட்கப்பட்டுள்ளது, யார் மரத்தைத் திருடியவர்கள், வெட்டியவர்கள் என்ற விவரம் தெரிந்த பிறகு அவர்கள் மீது நடவடிக்கையை மேற்கொள்ளலாம்.

அதேபோல் இன்னும் சில கருத்துக்களைச் சிலர் சொல்லியிருக்கிறார்கள். குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் தம்பி தேவேந்திரன் அவர்கள் ஆலய ஊழியர்களுடைய சம்பளத்தைக் கூட்டிக் கொடுத்திருப்பதற்கும், அவர்களுக்குத் திருமணக் கடன்—வட்டியில்லாக் கடன் வழங்கியிருப்பதற்கும் அரசாங்கத்திற்குப் பாராட்டுதலைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

குடும்பப் பாதுகாப்புத் திட்டத்தைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு ஜூன் 3-ஆம் தேதியில் இருந்து எல்லா ஆலய ஊழியர்களுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிப்புச் செய்யப்பட இருப்பதையும் வரவேற்றுச் சொல்லியிருக்கிறார்கள்.

அதோடு இன்னொரு திட்டம்—நாம் ஆலயங்களில் ஏழைகளுக்கு இலவசமாகவே திருமணம் செய்து வைக்கிறோம். கோவில்களில் பணியாற்றுகிறவர்கள்-அவர்களுக்கு அளிக்க இருக்கிற வட்டியில்லாத் திருமணக் கடன் உதவியைப் பயன்படுத்திக்கொண்டு அவர்கள் பணியாற்றுகிற ஆலயத்தில் நிதி இருந்தால் கடன் உதவியைப் பெற்றும் திருமணம் செய்து கொள்ளலாம். கடன்பெற விருப்பமில்லை என்றால் எங்கெங்கே நாம் இலவசத் திருமணம் செய்து வைக்கிறோமோ அதில் கலந்துகொண்டு தாங்களோ, தங்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்களோ இலவசமாக திருமணம் செய்துகொள்வதற்கும் அவர்களுக்கு இது விஸ்தரிக்கப்படுகிறது. இந்தத் திட்டம் வருகிற ஏப்ரல் மாதத்தில் இருந்து—வசதியுள்ள கோவில்களில் செயல்படத் தொடங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன.

அதேபோல் ராஜராஜசோழன் சிலையைப் பற்றிச் சொன்னார்கள். ஜலகண்டேசுவரர் கோவிலைப்பற்றிச் சொன்னார்கள். இவற்றுக்கான பதிலை அப்போதே தெரிவித்திருக்கிறேன்.

அடுத்தபடியாக கபாலீசுவரர் கோவிலில் கடைகள் கட்டுவதற்கு டெண்டர் கொடுக்கப்பட்டதில் பெரிய ஊழல் நடைபெற்றிருப்பதாக ஒரு பெரிய குற்றம் சாட்டப்பட்டது. இதற்கு 7 பேர் டெண்டர் கொடுத்திருக்கிறார்கள். மிகக் குறைந்த டெண்டர் கொடுத்திருக்கிற ஒருவருக்குத்தான் இந்த வேலை கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர அதிக டெண்டர் கொடுத்தவருக்குக் கொடுக்கப்படவில்லை. டெண்டர் எழுதிக் கொடுத்தவர்கள்—அத்தனை ரெக்கார்டுகளையும் நான் வரவழைத்துப் பார்த்து என் கையில் வைத்துக் கொண்டிருக்கிறேன். யாரோ தவறான தகவலை அவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இதில் தவறு எதுவும் நடக்கவில்லை. இதுபற்றி சந்தேகம் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் கடைகளைப்பற்றிச் சொன்னதாகச் சொன்னார்கள். கற்பகாம்பாள் கல்யாண மண்டபத்தைப்பற்றி நான் பேசியது...

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கல்யாண மண்டபம் கட்டி நீண்ட நாளாகிவிட்டது. நீங்கள் ஜே. அண்டு வி. கன்ஸ்ட்ரக்ஷன் பற்றிச் சொன்னீர்கள். அது இங்கே இருக்கிறது. இதில் தவறுதல் எதுவும் நடைபெறவில்லை. கல்யாண மண்டபம் எதுவும் இப்போது கட்டப்படவில்லை என்று தெரிவித்துக்கொள்கிறேன்.



அடுத்து, பால் வழங்கு துறையைப்பற்றி இங்கே நல்ல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டத்தில் பால்வழங்கு திட்டத்தை விஸ்தரிக்க வேண்டுமென்ற கருத்தைத் தெரிவித்தார்கள். தீவிர பால் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் தர்மபுரியை நாம் எடுத்துக் கொண்டிருக்கிறோம். இப்போது ஆரம்பித்திருக்கிற திட்டம்—தர்மபுரியாக இருந்தாலும், வட ஆற்காடாக இருந்தாலும், மதுரையாக இருந்தாலும்—ஒவ்வொரு பகுதியிலும் பால்வழங்கு நிறுவனம் தன் காரியத்தைத் தொடங்கியிருக்கிறது. நாளடைவில் தர்மபுரி மாவட்டம் முழுவதற்கும் இந்தத் துறையின் திட்டங்கள் விஸ்தரிப்பு நடைபெறும். மற்ற மாவட்டங்களைவிட தர்மபுரி மாவட்டத்தின் இயற்கையும் கால்நடைகளின் வளர்ச்சிக்கும், பால்வழங்கு முறைக்கும் சிறந்ததாக இருக்கிறது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல் வாடகை அதிகமான ஒரு கட்டடத்தில் பால்வழங்கு நிறுவன அலுவலகத்தை வைத்திருக்கிறார்கள், ஏன் அங்கே வைக்க வேண்டுமென்ற கருத்தை திருமதி அனந்தநாயகி அம்மையார் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கட்டடத்தை மாதவரத்தில் வைக்கக் கூடாதா என்றால்—பல்வேறு நிறுவனங்களோடு தொடர்புகொள்ள வேண்டியிருப்பதாலும், போக்குவரத்து வசதியை உத்தேசித்தும் சென்னை நகரின் ஒரு பகுதியில் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு இங்கே அந்தக் கட்டடத்தில் வைத்திருக்கிறோம். இதற்கு மாதத்திற்கு எட்டாயிரம் ரூபாய் வாடகை என்று சொன்னார்கள். அந்தக் கட்டடத்திற்கு நாலாயிரம் தான் வாடகை கொடுத்து அந்தக் கட்டடத்தில் நம் அலுவலகத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம்.

அதேபோல் பால் விற்பனை செய்கிற சங்கங்களாக இவை இருக்கக் கூடாது, பால் உற்பத்தியாளர் சங்கமாக இருக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் குஜராத் மாநிலத்தில் வெற்றிகரமாக நடைபெற்று வருகிற பால்வழங்கு நிறுவனத்தைப் பார்த்து வந்து, அதேமாதிரியான முறையில் இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் இந்தப் பால்வழங்கு வாரியம் அமைக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில்தான் இன்றைக்கு ஒரு 135, 140 சங்கங்களுக்கு மேல் தமிழ்நாட்டில் அமைத்திருக்கிறோம். மதுரை, ராமநாதபுரம் போன்று எல்லா மாவட்டங்களிலும் ஓர் ஆண்டு காலத்திற்குள் ஆயிரத்திற்கும் அதிகமான சங்கங்களை அமைக்க வேண்டுமென்று இந்தத் துறையின் சார்பில் நாம் பல காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம்.

கூட்டுறவுச் சங்கங்களுக்கு சரியாகக் கடன் வழங்குவதில்லை என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை மத்திய கூட்டுறவு வங்கியில் போதுமான நிதி வசதி இருந்தால் பால் வழங்கு சங்கங்களுக்குத் தருவதாகச் சொல்கிறார்கள். அதுவும் கிசர்வ்

பாங்க் கொடுத்திருக்கிற விதிகளின்படி ஓரிடத்தில் கூட்டுறவு நாணயச் சங்கம் இருந்தால் அந்த இடத்தில் அமைக்கப்பட இருக்கிற பால்வழங்கு கூட்டுறவுச் சங்கத்திற்கு அதன் மூலம் தான் கடன் கொடுக்கப்பட வேண்டும் என்கிருர்கள். இந்த இரண்டு சங்கங்களுக்கும் ஒருவரே தலைவராக இருக்கிற இடங்களில் இரண்டும் நல்லமுறையில் செயல்படுகின்றன. இரண்டிற்கும் வெவ்வேறு தலைவர் இருக்கிற இடங்களில் கூட்டுறவு நாணய சங்கத்தில் இருந்து பால்வழங்கு சங்கத்திற்குக் கடன் கிடைக்காத நிலை இருப்பதாகச் சொல்கிருர்கள். இதுபோல இல்லாமல் இங்கும் கடன் கிடைக்க நாம் மத்திய வங்கியின் மூலமாக ஏற்பாடு செய்கிறோம். அதோடு தேசியமாக்கப்பட்ட வங்கிகளின் மூலமாகக் கடனைப் பெற்றுக் கொடுக்கவும் ஏற்பாடு செய்திருக்கிறோம். அரசாங்கத்தின் சார்பில் ஒரு தொகை ஒதுக்கி புதியதாக ஆரம்பிக்கப்படுகிற சங்கங்களுக்கு நிதி வசதி அளிக்கவும் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

பால்வழங்கு துறையைப் பொறுத்தவரையில் எதிர்காலத்தில் இன்னும் சிறப்பான முறையில் பணிசெய்ய சிறந்த முறையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏராளமான திட்டங்களை நாம் வகுத்திருக்கிறோம்.

கடந்த காலங்களில் கால்நடைகளைப் பொறுத்தவரையில் பால்வழங்கு துறையோடேயே சேர்த்துப் பார்த்து வந்திருந்தாலும்—பால்வழங்கு துறை என்று தனியாக அமைக்கப்பட்ட பிறகு இந்தத் துறைக்கென்று கால்நடை மருத்துவர்களும் இருந்தால்தான் சிறந்த முறையில் செயலாற்ற முடியும் என்று கால்நடை மருத்துவர்களையும் போட்டுக் கொண்டிருக்கிறோம். தமிழ் நாட்டின் கால்நடை வளத்தைப் பெருக்க வெளிநாடுகளில் இருந்து தருவிக்கப்படுகிற உயர்ந்த ரக காளைகளின் மூலம் பசு—எருமை இனத்தை மேம்படுத்தவும் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறோம்.

அந்த வகையில் கால்நடைகளின் தரத்தை உயர்த்தவும், உற்பத்தியாகின்ற பாலை விநியோகிக்கவும் சிறந்த முறையில் இந்தத் துறை பணியாற்றி வருகிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு பாலின் விலையைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். பால் விலையை கடந்த ஆண்டுதான் லிட்டருக்கு 10 பைசா உயர்த்த வேண்டுமென்று சொன்னோம். இந்த அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து கொள்முதல் செய்கிறார்கள். இந்த ஓராண்டு காலத்தில் பால் உற்பத்தியாளர்களுக்கு மாட்டுத் தீவனமாக இருந்தாலும், பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, பொட்டாக இருந்தாலும் ஏராளமான அளவு விலை உயர்வு ஏற்பட்டுவிட்ட காரணத்தினால் அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற விலை கட்டுபடியாகவில்லை என்று அரசாங்கத்தினிடமும், பால்வழங்கு கழகத்தினிடமும் தெரிவித்திருக்கிருர்கள். இந்தக் குறையைப் போக்குகின்ற வகையில் மார்ச் 1-ஆம் தேதியில் இருந்து 15 பைசா அளவுக்கு ஏற்றிக்கொடுப்பது என்ற முடிவை அரசாங்கத்தில் இருந்து எடுத்திருக்கிறோம் என்பதை பால் உற்பத்தியாளர்களுக்கு இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.



(பிற்பகல் 1-30)

அப்படி பால் உற்பத்தியாளர்களுக்கு விலையை ஏற்றிக்கொடுக்கும்போது, நிச்சயமாகப் பால் வாங்கிச் சாப்பிடுகிறவர்களுக்கு விலை ஏருமல் இந்த ஆண்டிலே பார்த்துக்கொள்ளலாம் என்கின்ற உத்தரவாதத்தினையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, கதர், கிராமத் தொழில்கள் பற்றி..........

டாக்டர் எச். வி. ஹாண்டே: Cattle Feed Plant-லே பல முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று குற்றம் சாட்டினேன். அதற்கு ஏதாவது பதில் கொடுப்பார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: எந்த முறைகேடும் நடக்க வில்லை. அதற்கென்று 28-ம் தேதியன்று, அதனுடைய உற்பத்தியையும் மாண்புமிகு முதலமைச்சரவர்கள் தொடங்கி வைக்கவிருக்கிருர்கள் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொண்டு, கதர், கிராமத் தொழிலைப் பொறுத்தவரையில்............

Dr. H. V. HANDE: On a point of order, Sir. I strongly object to the Minister's reply. Here is a statement given by the Public Undertakings Committee and it is said therein that Larsen & Toubro quoted Rs. 5.96 lakhs—the highest—and then Valcon quoted Rs. 4.67 lakhs. It has been given to the highest quoted firm. The Committee has asked the department about it. So, I am not talking without basis. What is the Hon. Minister's answer for that?

நடக்கவில்லையென்று சொல்கிறீர்களே, எந்த முறைகேடும் நடைபெற வில்லையென்ருல், அது முறையல்ல. ஆதாரத்தோடு சொல்ல வேண்டும். நான் பாய்ன்ட்டோடுதானே ரெஃபர் பண்ணுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: யார் தவறு செய்திருந்தாலும் மூடி மறைக்கவேண்டிய அவசியமில்லை. யாராக இருந்தாலும் தவறு செய்தவர்கள்மீது நடவடிக்கை எடுக்கிறேன்.

அடுத்து, கதர் கிராமத் தொழில் வளர்ச்சி பற்றி இந்த ஓராண்டுக் காலத்தில், தமிழகத்திலேயிருக்கிற கிராமங்களிலேயுள்ள ஏராளமான மக்கள்............

Dr. H. V. HANDE: I want to know specifically whether he agrees or not.

நீங்கள் ஒத்துக்கொள்கிறீர்களா, இல்லையா? நான் கேட்கிற கேள்வி—மிகச் சாமர்த்தியமாக முறைகேடுகள் நடைபெற்றிருக்கின்றன, இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் பேசுவதற்கு ஒரு முறை இருக்கிறது. நீங்கள் ஒன்றைச் சொன்னீர்கள் அதை அவர் மறுக்கிருர்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: முறையாக இல்லையென்று புரூஃப் கொடுத்திருக்கிறேன். அவர் எப்படி மறுக்க முடியும்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் ஒரு கருத்தைச் சொன்னீர்கள். அந்தக் கருத்தை அமைச்சரவர்கள் மறுக்கிறார்கள். நீங்கள் சொன்னதை வேண்டுமென்றே அமைச்சர் மறுக்கிறார், தவறான தகவல் தருகிறார் என்றால் அதற்கு வேறு முறையிருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: (மாண்புமிகு அமைச்சரைப் பார்த்து) அதற்கு என்ன பதில் கொடுக்கிறீர்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே செய்வது முறையே அல்ல.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: முறைகேடு நடந்திருக்கிறது என்று திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள். அப்படி முறைகேடு நடந்திருந்தால் நடவடிக்கை எடுக்கலாம். வேறு என்ன செய்ய முடியும்?

டாக்டர் எச். வி. ஹாண்டே: அமைச்சருக்குத் தெரியுமா, இல்லையா, நீங்கள் இப்படியா பதில் கொடுப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: டாக்டர் ஹாண்டே, நீங்கள் நடந்து கொள்வது முறையா? நீங்கள் ஒரு கருத்தைச் சொல்கிறீர்கள். அந்தக் கருத்தை அவர் இல்லையென்று சொன்னால், அந்தக் கருத்தை மறுக்க அதற்கு என்ன வழியிருக்கிறதோ, அதைச் செய்ய வேண்டும். நேருக்கு நேராக எழுந்து நின்று கொண்டு ஒத்துக்கொள்கிறீர்களா இல்லையா என்று கேட்பது முறையே அல்ல.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: அடுத்து, கதர்-கிராம கைத் தொழிலைப் பற்றி எடுத்துக் கொண்டால், சிறந்த முறையில், கதராக இருந் தாலும், பனைவெல்லம், எண்ணெய் போன்ற பொருள்களாக இருந் தாலும் தொழிலாளர்களுக்குச் சிறந்த வகையிலே வேலைவாய்ப்புகள் கிடைக்கின்ற வகையில் நாம் வேலைவாய்ப்புகளைக் கொடுக்கிறோம். பனை வெல்லத் தொழிலிலே ஈடுபட்டிருக்கிற தொழிலாளிகள் கள்ளுக் கடைகளை மீண்டும் மூடிய காரணத்தால், ஆயிரக்கணக்கில் வேலை வாய்ப்புகளை இழந்தார்கள். அவர்களுக்கு மறுவாழ்வு தரவேண்டு மென்று, கதர்-கிராமத் தொழில் வாரியத்தினுடைய பணம், அரசாங்கத் தினுடைய பணம் இரண்டையும் சேர்த்து, இன்றைக்கு ரூ. 200 வீதம் உதவி செய்கிறோம். அப்படி சுமார் 30,000 பேருக்கு உதவிகளைச் செய்கிறோம். இந்த ஆண்டு மேலும் 10,000 பேருக்கு உதவி செய்ய வசதியிருக்கிறது. அதற்கான விண்ணப்பங்கள் வரப்பெற்று அதன்பேரிலே நடவடிக்கைகள் எல்லாம் எடுத்திருக்கிறோம். வருகின்ற ஆண்டில் மேலும் 40,000 பேருக்கு பண உதவி செய்ய ஏற்பாடு இருப்ப தால், அதற்கும் திட்டமிடப்பட்டு, அதற்கான ஆக்க பூர்வமான ஏற்பாடு களைச் செய்திருக்கிறோம்.



V211, 31 N75
21 N75-6652

அதைப்போல், மரத்திலேயிருந்து விழுந்து ஊனமுற்றவர்களாக இருந் தாலும், இறந்தவர்களாக இருந்தாலும், அவர்களுக்குத் தொகைகளைக் கூட்டிக் கொடுக்க வேண்டுமென்று அம்மையார் அவர்கள் கேட்டிருக் கிறார்கள்.

விவசாயத்திலே பூச்சி மருந்து அடிப்பவர்கள் இறந்துவிட்டால் ரூ. 1,000 அளிக்கிறோம். கடலிலே மீன் பிடிப்பவர்கள் இறந்துவிட்டால் அவர்களுக்கு ரூ. 1,000 அளிக்கிறோம். அந்த அடிப்படையிலேதான் மரமேறுபவர்கள் கீழே விழுந்து சிறு காயம் ஏற்பட்டால் ரூ. 100-ம், பெரிய காயத்திற்கு, அதற்கான தொகையையும், இறந்துவிட்டால், ரூ. 1,000 என்று அந்த வகையிலே நாம் உதவிகளைச் செய்து, அதன் மூலமாக நூற்றுக்கணக்கானவர்கள் சென்ற ஆண்டு உதவிகளைப் பெற்றிருக் கிறார்கள்.

அடுத்து, சோப்புத் தொழிலாக இருந்தாலும், கையால் செய்யப்படுகிற காகிதத் தொழிலாக இருந்தாலும், தேனி வளர்ப்பாக இருந்தாலும், கிராமத்திலேயிருக்கிற மக்களுக்கு வேலை வாய்ப்பைத் தருவதோடு நம் முடைய உற்பத்தியைப் பெருக்குகின்ற முறையில் இந்தத் துறை சிறந்த முறையில் பணியாற்றுகிறது. தொடர்ந்து சிறந்த முறையில் பணியாற்று கின்ற வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லிய கருத்துக்கள் மனதிலே கொள்ளப்பட்டு, அறநிலையத் துறை, பால்வளத் துறை, கதர்—கிராமக் கைத்தொழில் துறை எ[illegible] செயல்படும் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் [illegible] வெட்டுத் தீர் மானங்களை வற்புறுத்தாமல் நிறைவே[illegible] வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன், வணக்கம்.

61697

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், எம். சுரேந்திரன் ஆகி யோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு என். மருதாசலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவை யின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, பி. வெங்கடசாமி, ஜே. ஜேம்ஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி

" நிதிக் கோரிக்கை எண் 10—பால்வழங்கு திட்டங்கள் என்ற தலைப் பின்கீழ் ரூ. 97,93,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பெ. சௌந்தரபாண்டியன், கே. என். குமாரசாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. என். மருதாசலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமய்யா, பி. வெங்கடசாமி, கே. பி. கோபால் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு, திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 12—1959 ஆம் ஆண்டு, தமிழ்நாடு, இந்து சமய-அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,13,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திரு. என். மருதாசலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, தோல்வியுற்றது.

டாக்டர் எச்.வி. ஹாண்டே, திருவாளர்கள் பி. வெங்கடசாமி, என். டென்னிஸ் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை முன்னுள்ள கேள்வி:

"நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 57,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை காலை 9-00 மணியளவில் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-39 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.



## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'NIL'

### B. *Reports, Notifications and Other Papers.*

@79. The Performance Budget on Port Department 1975-76 (Tamil).

@80. Policy Note on Dairy Development Department 1975-76 (English and Tamil).

@81. Policy Note on Demand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (English and Tamil).

@82. Policy Note on Tamil Nadu Khadi and Village Industries Board, 1975-76 (English and Tamil).

†83. The Indian Ports (Tamil Nadu Amendment) Bill, 1975 (L.A. Bill No. 5 of 1975).

@ Despatched to members on 14—3—75.
† Despatched to members on 15—3—75.

[48-ம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க]

மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

சமயப் பயிர் வளர்ப்பதோடு, சமுதாயப் பணிகளையும் சிறப்பாகச் செய்து வரும் திருக்கோயில்களையும், சமய நிறுவனங்களையும் பல்லாயிரக்கணக்கில் தன்னகத்தே உள்ளடக்கிச் செயல்பட்டு வரும் தமிழக இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் கொள்கைக் குறிப்பினை இப்பேரவையின்முன் வைப்பதிலும், இதன் மூலம் இத்துறை சென்ற ஆண்டில் நிறைவுபடுத்திய பணிகள் குறித்தும், இனி வரும் ஆண்டுகளில் செயல்படுத்திட இருக்கும் திட்டங்கள் குறித்தும் அறிவிப்பதிலும் பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழக இந்து சமய அறநிலையத் துறையின்கீழ் தற்போது 157 திருமடங்களும், 832 குறிப்பான அறக்கட்டளைகளும், 18,268 திருக்கோயில்களும் ஆக 19,257 அறநிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவ்வறநிலையங்களின் ஆண்டு வருவாய் ரூபாய் 11·69 கோடி என மதிப்பிடப்படுகிறது. தமிழ்நாடு குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு சட்டத்தின் செயல்முறையிலிருந்து அரசினால் அளிக்கப்பட்ட விதிவிலக்கின் பயனாக, கட்டடங்களை உடைமையில் கொண்டுள்ள திருக்கோயில்களின் வருவாயினைப் பெருக்க இன்னும் வாய்ப்புகள் இருக்கின்றன. தமிழகத் திருக்கோயில்களுக்கு உரிமையான நிலங்களைக் கண்டறிய நியமிக்கப்பட்ட சிறப்புப் பணியாளர்களின் பணியின் காரணமாக இவ்வாண்டு 5,178 திருக்கோயில்கள் இத்துறையின் ஆளுகையின்கீழ் கொண்டு வரப்பட்டன. இதில் 2,047 திருக்கோயில்கள் வரி விதிக்கக்கூடிய நிறுவனங்கள். இவ்வாண்டு இறுதிக்குள் இன்னும் சுமார் 20,000 புதிய திருக்கோயில்களை அறநிலையத்துறையின் ஆளுகைக்குள், இதற்காக அனுமதிக்கப்பட்ட 27 கூடுதல் ஆய்வாளர் பதவிகள் மற்றும் அதற்குரிய துணைப் பணியாளர்களின் உதவியினால், கொண்டுவரத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்துறையின் ஆளுகைக்குள் சேர்க்கப்பட்ட புதிய நிறுவனங்களினால் நடப்பு விவசாய ஆண்டில் 'சகாயத்தொகை' என்ற தலைப்பின்கீழ் ரூ. 4·22 லட்சம் கூடுதலாக கேட்பு அதிகரித்துள்ளது என்பதனைக் குறிப்பிட விரும்புகிறேன்.

**துறையின் வளர்ச்சியும் தொடர்பணிகளும் :**

திருக்கோயில்கள் என்பவை வெறும் வழிபடும் இடங்களாக மட்டும் அமையாமல், கலை வளர்க்கும் நிலையங்களாய், பிணியகற்றும் மனைகளாய், அறியாமை இருள் நீக்கி ஒளி வழங்கும் இல்லங்களாய்த் திகழ்ந்து சமுதாயப் பணியாற்றும் நற்கூடங்களாய் அமையவே உருவாயின என்னும் உண்மையின் அடிப்படையில் தமிழகத்துத் திருக்கோயில்கள் இத்துறையின் மூலம் ஆற்றிவரும் சிறப்பு மிக்க பணிகள் பலவற்றுள் சிலவற்றினை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன்.

1. 1967-ல் அறநிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை 9,600 என்ற நிலை மாறி, 1974-75-ல் 18,268 ஆக உயர்வு.

2. 1967-ல் அறநிலையங்களில் ஆண்டு வருவாய் ரூ. 3,98,52,754-லிருந்து 1974-75-ம் ஆண்டில் ரூ. 11·69 கோடி ஆக உயர்வு.



3. 1967-ல் தொடங்கி 1974 இறுதிவரை ரூ. 16·5 கோடி செலவில் 4,215 திருக்கோயில்களில் திருப்பணி.

4. திருக்கோயில்களைச் செப்பனிடவும், புதுப்பிக்கவும் ஆண்டு அரசு மானியமாக 1967-ல் ரூ. 3 இலட்சம் இருந்ததனை 1975-76-ல் ரூ. 15 இலட்சமாக உயர்த்தியது.

5. சாதி சமய அடிப்படையில் அல்லாமல் தகுதியின்படி அர்ச்சகர்களை நியமனம் செய்வதனைப் பொறுத்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினைத் திருத்த இந்திய அரசுக்கு வேண்டுகோள் விடுத்திருப்பது.

6. உடல் ஊனமுற்றோர்களுக்கு நிதி உதவி.

7. செவிடர், ஊமையர்களுக்கான பள்ளிகள்—இரண்டு.

8. அனாதைக் குழந்தைகளைப் பராமரிக்க அன்பு இல்லங்கள்.

9. சிறுவர் காப்பகங்கள்—ஐந்து.

10. முதியோர் இல்லங்கள்—மூன்று.

11. ஏழைக் குழந்தைகளுக்கு இலவசமாக பால் வழங்கும் திட்டம்.

12. ஏழை எளியோர்க்கான இலவசத் திருமணங்கள்.

13. ஏழை எளியோர்க்கு உதவிடும் வகையில் கட்டி முடிக்கப்பட்ட திருமண மண்டபங்கள்—79.

14. பணி தொடங்கப்பட்டு விரைவில் முழுமையடைய இருக்கும் திருமண மண்டபங்கள்—128.

15. அறிவு வளர்க்க அறநிலையங்களைச் சார்ந்த நூலகங்கள்—204.

16. சித்த வைத்திய மருத்துவ மனைகள்—23, ஆங்கிலமுறை மருத்துவ மனை—ஒன்று.

17. திருக்கோயில்கள் மூலம் பராமரிக்கப்படும் கலைக்கூடங்கள்—5.

18. இந்து சமய பண்பாட்டுக் கல்லூரி—ஒன்று.

19. கீழ்த்திசை மொழிக் கல்லூரி—ஒன்று.

20. ஆண்களுக்கான கலைக் கல்லூரிகள்—நான்கு.

21. மகளிர் கலைக் கல்லூரி—நான்கு.

22. உயர்நிலை மற்றும் நடுநிலைப் பள்ளிகள்—பதினைந்து.

23. நாதசுவர, ஊமையர்க்கான பள்ளிகள்—இரண்டு.

24. வழிபாட்டுப் பயணிகளுக்குப் பல்வேறு தலங்களில் தங்கும் விடுதிகள்.

25. நியாயமான வருமானத்தை அறநிலையங்கள் பெறும்வகையில் தமிழ்நாடு கட்டடங்கள் (குத்தகை மற்றும் வாடகைக் கட்டுப்பாடு) சட்டத்தின் விதிமுறைகளிலிருந்து சமய நிறுவனங்களுக்குச் சொந்தமான கட்டடங்கள் அனைத்திற்கும் விதிவிலக்களித்துள்ளது.

இவைகளையன்றியில் சிறப்பாக எடுத்துச் சொல்லப்பட வேண்டிய பணிகள் குறித்த குறிப்பினை ஈண்டு குறிப்பிட விரும்புகிறேன். சமயப் பெருமை மிக்க திருக்கோயில்களாக மதிக்கப்பட்டு பெருமையோடு எண்ணப்படும் கீழ்க்காணும் முக்கிய திருக்கோயில்களில் கடந்த ஆண்டில் குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடைபெற்றது:—

(1) அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில், மதுரை.

(2) அருள்மிகு கருமாரியம்மன் திருக்கோயில், திருவேற்காடு.

(3) அருள்மிகு இராமநாதசுவாமி திருக்கோயில், இராமேஸ்வரம்.

(4) அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

குறிப்பிடத்தக்க வகையில் பெருந்தொகை செலவில் மேற்கொள்ளப் பட்டு, நிறைவேறி வரும் திருப்பணிகள் சிலவற்றை ஈண்டு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

(1) அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயில், திருச்செந்தூர்.

(2) அருள்மிகு திருவள்ளுவ நாயனார் நினைவாலயம், மயிலாப்பூர்.

(3) அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்.

(4) அருள்மிகு அருணாசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை.

(5) அருள்மிகு கள்ளழகர் திருக்கோயில், அழகர்கோயில்.

இவ்வாண்டு சிறியனவும் பெரியனவுமாகிய பல திருக்கோயில்கள் நூற்றுக்கணக்கான திருப்பணி வேலைகளை மேற்கொண்டு நிறைவுறும் தருவாயில் இருக்கின்றன. வரும் ஆண்டில் திருக்கோயில்களின் நிதி உதவியுடனும் அரசு நிதி உதவியுடனும் ரூ. 3 கோடி மதிப்பீட்டுத் தொகையில் 1,200 திருக்கோயில்களில் திருப்பணி மேற்கொள்ளப்பட்டு, திருக்கோயில்கள் செம்மையுடன் காப்பாற்றப்படும் முயற்சிகள் மேற் கொள்ளப்பட இருக்கின்றன.

பெருகிவரும் நிதி வாயில்களின் உதவியோடு வழிபடும் மக்களுக் கும், சமுதாயத்தின் கீழ் தட்டில் உள்ள ஏழை எளிய மக்களுக்கும் உதவும் வகையில், மேற்கொள்ளப்பட்ட பணிகளின் முன்னேற்றம் குறித்த சில குறிப்பினை இங்கு வழங்கிட விரும்புகிறேன்:—

1. பழனி நகரில் 108 அறைகள் கொண்ட ரூ. 23 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய தங்கும் விடுதி.

2. திருத்தணி நகரில் 108 அறைகள் கொண்ட ரூ. 13.46 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் புதிய தங்கும் விடுதி.

3. பழனி நகரில் ஆங்கில முறை மருத்துவ மனையின் விரிவாக்கம்.

4. பழனியைச் சுற்றியுள்ள சிற்றூர் வாழ் பொதுமக்களுக்கு உதவிடும் வகையில் "நடமாடும் மருத்துவ மனை".



5. திருச்செந்தூரில் ரூ. 3·5 இலட்ச மதிப்பீட்டில் கண் மருத்துவப் பிரிவும், தாய்—சேய் நலப்பிரிவும் கொண்ட பொது மருத்துவ மனை.

6. நிதி வசதி மிக்க திருக்கோயில்களின் உபரி நிதியில் புதிய சித்த வைத்திய மருத்துவ மனைகள் ஆரம்பித்தல்.

7. ஆண்டு வருவாய் ரூபாய் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட அனைத்துத் திருக்கோயில்களின் மூலம் ஏழைக் குழந்தை களுக்கு இலவசப் பால் வழங்கும் திட்டம்.

கீழ்க்காணும் திருக்கோயில்களின் சார்பில் சித்த வைத்திய மருத்துவ மனைகளை ஆரம்பிக்கும் திட்டம் இருக்கின்றது:—

1. அருள்மிகு மகுடேசுவரர் திருக்கோயில், கொடுமுடி.
2. அருள்மிகு கபாலீசுவரர் திருக்கோயில், மயிலாப்பூர்.
3. அருள்மிகு வரதராசசுவாமி திருக்கோயில், வெங்கம்பூர்.
4. அருள்மிகு அரங்கநாதசுவாமி திருக்கோயில், வடரெங்கம்.

**மலைக் கோயில்களில் வழிபட மின் விசையேற்றப் பொறி அமைத்தல்.**

திருச்சிராப்பள்ளி, மலைக்கோட்டை, அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயில்; செங்கை மாவட்டம், திருக்கழுக்குன்றம், அருள்மிகு வேதபுரீசுவரர் திருக்கோயில்; வட ஆற்காடு மாவட்டம், சோளிங்கபுரம், அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில்; சேலம் மாவட்டம், திருச்செங்கோடு, அருள்மிகு அர்த்தநாரீச்வரர் திருக்கோயில் ஆகிய மலைக்கோயில்களுக்கு மின் விசையேற்றப் பொறி வசதி அளிக்க இத் துறை கருதியுள்ளது. அதனை அமைப்பதற்குரிய மோட்டார் மற்றும் மின்விசைப் பொறி போன்ற முக்கிய பகுதிகள் உள்நாட்டிலே கிடைக் காத காரணத்தினால், ஜப்பானிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டி யுள்ளது. இதற்குத் தேவையான அந்நியச் செலாவணியை அளிக்கக் கோரி, தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் இந்திய அரசினை அணுகி இருக்கின்றோம்.

அடுத்து, 1975-76 ஆம் அண்டில், திருப்பணிக்காக வழங்கப்பட இருக்கும் அரசு மானியம் ரூ. 15 லட்சத்தில், மொத்த மானியமாக கீழ்க்காணும் பெரிய திருக்கோயில்களுக்கு அளிக்கப்படவிருக்கிறது:—

1. அருள்மிகு மாசிலாநாதர் திருக்கோயில், தரங்கம்பாடி, தஞ்சாவூர் மாவட்டம்.

2. அருள்மிகு தியாகராசர் திருக்கோயில், திருவாரூர், தஞ்சாவூர் மாவட்டம்.

3. அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயில், அவிநாசி, கோயமுத்தூர் மாவட்டம்.

4. அருள்மிகு மங்களநாதர் திருக்கோயில், திரு உத்தரகோச மங்கை, இராமநாதபுரம் மாவட்டம்.

5. அருள்மிகு அருணசலேசுவரர் திருக்கோயில், திருவண்ணாமலை, வட ஆற்காடு மாவட்டம்

6. அருள்மிகு நெல்லையப்பர் திருக்கோயில், திருநெல்வேலி.

7. அருள்மிகு வைத்தியநாத சுவாமி திருக்கோயில், மடவாளர் விளாகம், இராமநாதபுரம் மாவட்டம்.

8. அருள்மிகு கூடலழகர் திருக்கோயில், மதுரை நகர், வட்டம் மற்றும் மாவட்டம்.

பல இலட்சக் கணக்கான ரூபாய் மதிப்பீட்டுச் செலவில் மேற் கொள்ளப்பட்ட இத் திருக்கோயில்களின் திருப்பணிப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு திருப்பணிகளைத் தொடங்கி பழம்பெரும் திருக்கோயில்களைக் கண்ணேபோல காத்தல் மட்டுமின்றி, உபரி நிதியிருந்து பல்வேறு சமுதாயப்பணிகளை மேற்கொள்ளல் மட்டுமின்றி இத்துறை தனது கட்டுப் பாட்டிற்குள் இதுவரை சேராத திருக்கோயில்களைக் கண்டறிந்து அவைகளை இத்துறையின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரவும், திருக்கோயில்களின் நில உடைமைகள் உண்மையிலேயே திருக்கோயில்களுக்கு உரியனவாகி அவற்றின் பலன் திருக்கோயில்களையே அடையவுமான வகையில் பல சிறப்புப் பணிகளை மேற்கொண்டுள்ளது. இது பற்றிய விவரங்களை கீழே கொடுக்க விரும்புகிறேன்.

வருவாய்த் துறையிருந்து நியமிக்கப்பட்ட தனிப் பணியாளர்கள் மூலம் திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்கள் பற்றிய ஆய்வு இந்த ஆண்டிலும் தொடர்ந்து நடத்தப்பட்டது. வட ஆற்காடு, சேலம், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்களைப் பொறுத்த வரையில் இப்பணி முடிவுற்றுவிட்டது. மற்ற மாவட்டங்களில் உள்ள எஞ்சிய பணி குறைந்த அளவுப் பணியாளர்களைக் கொண்டு 1—3—1975 முதல் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆய்வுப் பணி முழுவதும் இவ்வாண்டு இறுதிக்குள் முடிவுறும்.

தொடக்க நிலை ஆய்வின் பலனாக 41,306 புதிய நிறுவனங்கள் 201,343 ஏக்கர் நிலங்களைக் கொண்டனவாக இருப்பதைச் சிறப்புப் பணியாளர்கள் கண்டறிந்து தெரிவித்தனர். இதன் அடிப்படையில் இத்துறை மூலம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் குறித்து கீழ்க்காணும் விவரம் பயன்தரத்தக்கதாய் அமையும் என்று கருதுகிறேன்:



| | 1973–74 | 1974–75 | கூடுதல். |
|---|---|---|---|
| 1. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை. | 41,306 | .. | 41,306 |
| 2. மேற்காணும் அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு. | 2,01,343·14 (ஏக்கர்) | .. | 2,01,343·14 (ஏக்கர்) |
| 3. அறநிலையத்துறையின் ஆளுகைக்குள் புதிய அற நிலையங்களைக் கொண்டுவர முதலறிக்கைகள் பெறப்பட்ட நேர்வுகள். | 14,674 | 6,468 | 21,142 |
| 4. மேற்காணும் அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு. | 78,364·83 (ஏக்கர்) | 30,263·13 (ஏக்கர்) | 1,08,627·96 (ஏக்கர்) |
| 5. இத்துறையின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்ட அறநிலையங்களின் எண்ணிக்கை. | 14,079 | 5,178 | 19,257 |
| 6. இத்துறையின் ஆளுகைக்குள் கொண்டு வரப்பட்ட அறநிலையங்களுக்குச் சொந்தமான நிலங்களின் பரப்பளவு. | 44,218·50 (ஏக்கர்) | 18,384·82 (ஏக்கர்) | 62,603·32 (ஏக்கர்) |

மேலும், இத்தனிப் பணியாளர்கள், அற நிலையத் துறையின் ஆளுகைக்குட்பட்ட திருக்கோயில்களுக்குச் சொந்தமான நிலங்களாயிருந்தும் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ள 36,634 நேர்வுகளுக்குரிய 45,863·55 ஏக்கர் பரப்புள்ள நிலத்தினையும், 197 மனை மற்றும் 1,921 சதுர அடி நிலத்தினையும் கண்டறிந்து, தெரிவித்தனர். இவைகளில் 8,763 நேர்வுகளுக்குரிய 47,239 ஏக்கர் பரப்புள்ள நிலத்தை திருக்கோயில்களின் உண்மையான கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளபபட்டுள்ளன. எஞ்சியவற்றையும் திருக்கோயில்களின் நேரடி கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவருவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவையனைத்தும் முழுமையாகத் திருக்கோயில்களின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரப்பெறின், இதன் மூலம் ஆண்டொன்றுக்குத் திருக்கோயில்களுக்குக் கூடுதலாக ஒரு கோடி ரூபாய் அளவிற்கு வருவாய் உயரும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

விலை மதித்தற்கரிய செப்பு, ஐம்பொன் மற்றும் கற்படிவங்கள் தமிழகத்தின் திருக்கோயில்கள் அனைத்தும் காணக்கிடக்கின்றன. இவைகளை கண்ணை போலக் காக்கவும், இவைகளுக்கு எவ்வகையாலும் ஊறு நேரா வண்ணம் நடுக்கவும், இவைகளை கடத்திடா வண்ணம் பாதுகாத்திடவும் அனைத்து முயற்சிகளும் இவ்வாண்டு மேற்கொள்ளப்பட்டன. போதுமான பாதுகாப்பு முயற்சிகளை காவல் துறையும், இந்து சமய அறக்கட்டளைத் துறையும் மேற்கொண்டிருந்தும், ஒரு சில இடங்களில் சிலை திருட்டு நிகழ்ந்துள்ளது. எனினும், பாதுகாப்பு முயற்சிகள் மிகவும் சீரான வகையில் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாண்டு தொடக்கத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் நடத்திய பொங்கல் சுற்றுலா விழாப் பொருட்காட்சியில் இத்துறை பங்குகொண்டு, திருக்கோயில் வடிவில் அரங்கு ஒன்று அமைத்து அதில் ஆறும் நூற்றுண்டு வரையிலான அரிய கலைப்பொருட்கள், வெண்கலப் படைப்புகள், தந்தப் படிமங்கள் முதலியவற்றை அவற்றின் காலகுறிப்போடு வைத்தது. ஆங்கில ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடிய வீரபாண்டிய கட்டபொம்மன் வணங்கி வந்ததாகக் கூறப்படும் திருச்செந்தூர் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி படிவமும் அவற்றில் ஒன்றுகும். தொன்மை வாய்ந்த இக்கலைச் செல்வங்கள் வெளிநாட்டுச் சுற்றுப் பயணிகளை மிகவும் கவர்ந்து அந்நியச் செலாவணியினை ஈட்டித் தருவதால், அவைகளை மிகவும் நுட்பமான ஏற்பாடுகளுடன் பாதுகாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வங்கள்—கன்னியாகுமரி**

1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு மாற்றப்பட்ட ஆட்சிப் பகுதிகளில் இணைக்கப்பட்ட மற்றும் இணைக்கப்படாத தேவஸ்வம் சட்டத்தினை (தமிழ்நாடு சட்டம் 30/1959), 1974 ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் (3–வது திருத்த) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 50/1974) மூலம் நீக்கப்பட்டது. இச் சட்டம் 1—1—1975 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது.



கன்னியாகுமரி மாவட்டத்திலும், திருநெல்வேலி மாவட்டத்தில் செங்கோட்டை வட்டத்திலும் உள்ள பல நிறுவனங்களை நிர்வகித்து வந்த முன்னாள் கன்னியாகுமரி தேவஸ்வம் வாரியம் நீக்கப்பட்டது.

இந்த நிறுவனங்கள் கன்னியாகுமரி தேவஸ்வ வாரியத்தினால் சரிவர மேலாண்மை செய்யப்படவில்லையென்று தெரியவந்ததால் 1959–ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட (தமிழ்நாடு சட்டம் 22/1959) விதிமுறைகளுக்கேற்ப 30/1959 சட்டத்தினைத் திருத்தி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டது. சட்டத்திருத்தத்திற்குப் பின்னர், நாகர்கோயில் உதவி ஆணையாளரை, திருக்கோயில்களின் நிர்வாகத்தினைச் செம்மையுறச் செய்வதற்காக அறங்காவலர் குழுவினை ஏற்படுத்தும் வரை 'தக்காராக' நியமனம் செய்யப்பட்டுள்ளது. இந்த நிறுவனங்களைப் பராமரிப்பதற்காக ஆண்டுதோறும் ரூ. 13,70,000ஐ மானியமாக அரசு அனுமதித்து வருகின்றது.

அடுத்து முன்னாள் புதுக்கோட்டை சமஸ்தானத்தின் நிர்வாகத்தின் கீழிருந்த புதுக்கோட்டை திருக்கோயில்களின் பராமரிப்புக்காக ஆண்டுதோறும் அரசு மானியமாக ரூ. 4 இலட்சம் அனுமதிக்கப்பட்டு வருகின்றது. பொருட்களின் விலை உயர்வு மற்றும் இத்திருக்கோயில்களின் பணியாளர்களின் ஊதியத்தினை உயர்த்தியது ஆகியவற்றின் பயனாக, 1975–76 ஆம் ஆண்டு முதல் அரசு மானியத் தொகையினை ரூ. 4 இலட்சத்திலிருந்து ரூ. 5 இலட்சமாக உயர்த்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதுவன்றி, தமது வழிபாட்டு இல்லத்தைப் பராமரித்து வருவதற்காக புதுக்கோட்டை முன்னாள் மன்னருக்கு ஆண்டுதோறும் ரூ. 6,000 அளிக்கப்பட்டு வருகின்றது.

**'திருக்கோயில்' திங்கள் ஏடு**

1958-ல் தொடங்கப்பட்டு, திங்கள் தோறும் வெளிவரும் 'திருக்கோயில்' இதழ் தமிழ் நாட்டில் மட்டுமன்றி அண்டை அயல் நாடுகளிலும் 7,900 சந்தாதாரர்களை (கடந்த ஆண்டு சந்தாதாரர்களின் எண்ணிக்கை 6,400) கொண்டுள்ளது. இந்து சமய வேதாந்த திருக்கோயில்களின் தொன்மையையும், வரலாற்றையும் சிறந்த முறையில் எடுத்து இயம்பும் இந்த ஏடு சமய இலக்கிய அறிஞர் பெருமக்களின் அறிவார்ந்த கட்டுரைகளைக் கொண்டு கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவரும் வண்ணமும், படிப்போர்க்கு கற்பனை விருந்தளிக்கும் வண்ணமும் வெளிவருகின்றது.

**தெய்வீகப் பேரவை**

கடந்த ஆண்டினைப் போலவே இப்பேரவை மத அடிப்படையில் இளைஞர்கள் போதுமான அறிவு பெறும்வகையில் தனது பணியினை ஆற்றிவருகிறது.

### திருக்கோயில் பணியாளர்கள்

ஒரு இலட்சம் ரூபாய் வருவாய் உள்ள திருக்கோயில் பணியாளர்களுக்கு மட்டும் இதுவரை இருந்து வந்த வருங்கால வைப்பு நிதிச் சலுகையினை ரூ. 10,000ம் மற்றும் அதற்கு மேற்பட்ட வருவாய் உள்ள திருக்கோயில்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. திருக்கோயில் பணியாளர்களுக்கு விடுப்பு வசதிகளை அரசு மேலும் தளர்த்தி இருக்கின்றது. வேலையில்லா இளைஞர்களுக்கு வேலை பெறும் வாய்ப்பினை அதிகரிக்கச் செய்ய வசதி செய்யவும் ஓய்வு பெற்ற அரசு பணியாளர்கள் மறுபடியும் திருக்கோயில்களில் பணியாற்ற நியமனம் பெறுவதனை கட்டுப்படுத்தவும் திருக்கோயில் பணியாளர்களின் நியமன கால வயது வரம்பினை 25 மற்றும் 45 என நிர்ணயித்துள்ளது.

தஞ்சாவூர் சத்திரம் துறையிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்களுக்கு அரசு பணியாளர்களுக்கு அனுமதிக்கப்படுவதனைப்போல ஓய்வூதிய வசதிகளை விரிவாக்கி இருக்கின்றது. சத்திரத்துறையின் நிதிநிலை போதுமானதாயில்லாததனை அனுசரித்து, இதற்காகும் செலவினை அரசு நிதியிலிருந்து கொடுக்கப்படும்.

சமய நெறிமுறைகளில் எவ்வகையிலும் தலையிடாமல் தமிழகத்தின் கலைப்பெட்டகங்களாய் அமைந்துள்ள திருக்கோயில்களின் நலன்களைக் கருத்தில் கொண்டு, அவைகளைப் பேணிக்காக்கும் பெரும் பொறுப்பில் முனைப்போடு செயல்படும் இவ்வரசு தொடர்ந்து இப்பாதையிலேயே நடைபோடும் என்று கூறி, அதற்கு அனைவரின் ஒருமித்த ஆதரவு வேண்டும், வேண்டும் என்று கூறி அமைகிறேன்.

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

---

### செவ்வாய்க்கிழமை, 1975 மார்ச் 18.

---

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்.

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள் 356, 357, 358, 359, 360 பிறகு எடுத்துக்கொள்ளப்படும்

### தெப்பம்பட்டி கண்மாய்

*வினா 361—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மதுரை மாவட்டம், ஆண்டிப்பட்டி ஒன்றியத்தைச் சேர்ந்த தெப்பம்பட்டியில் ஒரு கண்மாய் அமைக்கும் திட்டம் தற்போது எந்த நிலையில் உள்ளது?

(இ) இது குறித்த விவரங்கள் யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இத்திட்டம் தலைமைப் பொறியாளர் (பாசனம்) அவர்களின் பரிசீலனையில் உள்ளது.

(இ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 11·80 இலட்சங்கள். இதனால் 405 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும். எதிர்பார்க்கப்படும் கூடுதல் உணவு உற்பத்தி 305 டன்களாகும்.

### *Adayaru*

* 362 Q.—Thiru N. K. PALANISAMI : Will the Honourable the Minister for Public Works be pleased fo state—

(a) Whether proposals have been formulated by the Public Works Department for beautifying the Adaiyar river margins in Madras City limits ; and

(b) if so, the details thereof?

[1975 மார்ச் 18

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(ஆ) மறைமலை அடிகளார் பாலத்திற்கும் திரு. வி. க. பாலத்திற்கும் இடையேயுள்ள அடையாற்றின் பகுதிக்கு ரூ. 80 லட்சம் செலவில் கரை கட்டி ஒழுங்கு படுத்துவதற்கும், அதே சமயத்தில் அப்பகுதியை அழகு படுத்தி ஆற்றின் இரு மருங்கிலுமுள்ள நிலத்தை மேலும் செவ்விய முறையில் பயன் படுத்துவதற்காக பண்படுத்துவதற்கு மான செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், இந்த திரு. வி. க. பாலம் சிறப்பான முறையிலே அமைந்திருக்கிறது. ஆனால், அதற்குப் பக்கத்திலே உள்ள பாலம் அந்தரத்திலே இருக்கிறதே அதை ஏதாவது மராமத்து செய்வதற்கு அரசாங்கத்திற்கு நோக்கம் இருக்கிறதா? அந்தப் பாலத்தை டெமாலிஷ் பண்ணுவதற்கு ஏதாவது செயற் குறிப்பு உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, அந்த பழைய பாலத்திற்குள் உள்ள இரும்புகள் யாவும் அரசாங்கமே எடுத்துக்கொள்வது என்று தீர்மானித்திருக்கிறது. மாநகராட்சி அதை அரசுக்குக் கொடுத்துவிட வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கொடுத்தால் அதை பொதுப்பணித் துறை எடுத்துக் கொள்வதாக இருக்கிறது. அதற்குப் பிறகுதான் அந்தப் பாலத்தைப்பற்றி யோசிக்கவேண்டும். இப்போது அதை எதுவும் செய்யவேண்டுமானால் அதை இடித்து தரைமட்டமாக்குவதற்கோ அல்லது அந்தப் பாலத்தை அப்புறப்படுத்துவதற்கோ 4 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள். அப்படிச் செய்வதற்காக 4 லட்சம் ரூபாய் செலவழிப்பதைவிட வேறு இடத்தை தேர்ந்தெடுத்து வேறு பாலம் அமைப்பதற்கு முயற்சி செய்யலாமா என்பது யோசிக்கப்படுகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்; இந்த அடையாறின் இரு மருங்குகளையும் செம்மைப்படுத்துவதற்கு மத்திய அரசாங்கம் உதவி செய்கிறதா? அல்லது மாநில அரசாங்கமே முழுத் தொகையையும் ஏற்றுக்கொள்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மத்திய அரசாங்கத்திற்கும் இதற்கும் சம்பந்தமில்லை. மாநில அரசு சொந்தப் பணத்திலேதான் செய்ய இருக்கிறது. அந்த ஆறு ஓடிவருகிறபோது இடையிலே வளைவு வளைவாக இருக்கிற காரணத்தினாலே அப்படிப் பட்ட இடங்களிலே நீர்த்தேக்கம் ஏற்பட்டு அதன் காரணமாக கொசுத் தொல்லைகள் ஏற்படுகின்றன. அதை ஒழுங்குபடுத்திவிட்டால் அதன் விளைவாக இரண்டு பக்கங்களிலும் 200 ஏக்கர் நிலம்—எவ்வளவு என்று உறுதியாக சொல்லமுடியாது—200 ஏக்கர் நிலம் கிடைக்கும் என்று கருதுகிறேன். அப்படிக் கிடைத்தால் அந்த இடத்தினுடைய மதிப்பு அதிகமாக இருக்கும். ஆகவே, வீடுகள் கட்டுவதற்காக அபைமனைகளாகப் பிரித்துக் கொடுத்தால் நாம் செலவுசெய்கிற தொகையை விட அதிகமாக வரலாம் என்று அரசாங்கம் எதிர்பார்க்கிறது.



1975 மார்ச் 18]

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, அடையாற்றின் பக்கத்திலே உள்ள திரு. வி. க. பாலத்திற்குப் பக்கத்திலே உள்ள வீடுகளிலே உட்கார்ந்துக் கொண்டிருக்கும்போது பெரிய வாகனங்கள் போகும்போது அந்த பிரிட்ஜ் அதிர்ச்சியுறுவதாக சொல்லப்படுகிறதே, அதைப்பற்றிய தகவல் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதைப்பற்றிய தகவல் இல்லை.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட சில பாலங்கள் பழைய பாலங்களாக இருக்கின்றன. அதை அரசு எடுத்துவிட்டுப் புதுப் பாலங்கள் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஒவ்வொரு பாலமாக அகலப் படுத்துவதும், விரிவுபடுத்துவதும், செப்பனிடுவதுமாக இருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : சென்னை மாநகராட்சியின் எல்லைக்குள் அமைந்துள்ள அடையாறின் கரையோரத்தில் அமைந்துள்ள புறம் போக்கு நிலங்களை சில தனிப்பட்டவர்கள் தங்களுடைய சொந்த நிலம் என்று போர்டு போட்டு விலைக்கு விற்கப்படும் என்று ஏமாற்றி வருகிறார்களே, அதைப்பற்றி அரசுக்குத் தெரியுமா? தெரிந்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அப்படிப்பட்ட ஏமாற்றுக் காரர்களைப்பற்றி அரசாங்கத்துக்கு தெரியாது. மாண்புமிகு அங்கத்தினர் அவர்களுக்குத் தெரிந்தால், அதை எழுதியனுப்பினால் அதைப்பற்றி விசாரிக்கப்படும்.

திரு. த. சோனையா : தலைவர் அவர்களே, திரு. வி. க. பாலத்திற்கு அருகாமையிலே இருக்கிற அடையாறு மிக விரிந்து அகலமாக இருக்கிறது. எப்படி கூவம் நதியை ஒரு குறிப்பிட்ட அளவிற்குள் கொண்டு செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்தோமோ அதைப் போல் இதையும் செய்து இரண்டு பக்கங்களிலும் அரசுக்கோ அல்லது தனியாருக்கோ அந்த இடங்களில் காடு வளர்ப்பதற்கோ அல்லது மற்றபடி வேறு பயனுள்ள காரியத்திற்கு பயன்படுத்துவதற்கோ அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்த இடத்தை காடு வளர்ப்பதற்கல்ல, வீடு கட்டுவதற்கு கொடுக்கலாமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்.—தலைவர் அவர்களே, இந்த அடையாற்றின் கரைகளை சீர்படுத்தி அழகுபடுத்துவதற்கான பரிசீலனை முடிந்து, மதிப்பீடு தயாரிக்கப் பட்டுவிட்டது என்று அறிகிறேன், அப்படியானால் இந்த வேலைகள் எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதற்காக 80 லட்சம் ரூபாய் செலவு ஆகும் என்று மதிப்பீடு தயாரித்திருக்கிறார்கள். இன்னும் டீடெய்ல்டு எஸ்டிமேட்ஸ் தயாரிக்கப்படவில்லை. தயாரிக்கப்படவேண்டு மென்றும் சொல்லியிருக்கிறோம். அதைப்பற்றி பரிசீலனை முடிந்தபிறகு தொடங்கப்படும்.

திரு. கோவை செழியன்: தலைவர் அவர்களே, அடையாற்றிலே போட் கிளப் ஒன்று இருக்கிறது. அந்த போட் கிளப்பிற்கு வேண்டிய தண்ணீர் ஆழமாக அந்த இடத்தில் இல்லாததால் கரைக்குப் பக்கத்திலே போட்கள் சென்றுவிடுகின்றன. அதையும் ஆழப்படுத்தி, அகலப்படுத்தி விரிவுபடுத்த அரசாங்கத்திடம் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: அதுவும் இதிலே அடங்கும். அந்த போட் கிளப்பிற்கு எந்தவிதமான பாதகமும் இல்லாமல் செய்வதற்கு அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

## காலாம்பட்டிக்கருகில் புதிய குளம்

*363 வினா— திரு. எம். முத்தையா: மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா திருநெல்வேலி மாவட்டம், கோவில்பட்டி தாலுக்கா—காலாம் பட்டிக்கு அருகில் புதிய குளம் ஒன்று ஏற்படுத்தும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இது தல அதிகாரிகளின் ஆய்வில் இருந்து வருகிறது.

திரு. ப. முத்துசாமி: தலைவர் அவர்களே, புதிய குளங்கள், புதிய குட்டைகள் அமைக்கவேண்டுமென்றால் அந்தத் திட்டம் லாபகரமான திட்டமாக இருக்கிறதா என்று பார்த்து செய்யப்படுகிறது. குட்டைத் திட்டமாக இருந்தால் 1,500 ரூபாயும், குளமாக இருந்தால் 3,000 ரூபாயும் விதிக்கப்பட்டிருக்கிறது. அதைக் குளமாக இருந்தால் 5,000 ரூபாய் என்றும், குட்டையாக இருந்தால் 3,000 ரூபாய் என்றும் மாற்றுவதற்கு செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, புதிய திட்டமொன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வரவு-செலவுத் திட்டத்தை அளிக்கும்போது தெரிவித்திருக்கிறார்கள். சிக்கனமான திட்டமா இல்லையா என்று பார்ப்பதைவிட அது எந்தப் பகுதியிலே வருகிறதோ அந்தப் பகுதி பிற்பட்ட பகுதியாக இருக்கிறதா என்று பார்த்து அப்படியிருந்தால் அதை எடுத்துக்கொள்ளலாம் என்று யோசனை தெரிவித்திருக்கிறார்கள். இனிமேல்தான் அரசாங்கம் அதை ஏற்றுக்கொண்டு நடைமுறைக்குக் கொண்டுவரும்.



திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த காலாம் பட்டிக்கு அருகில் குளம் அமைக்கின்ற வேலை நீண்டநெடுங்காலமாக இருக்கிறது. இப்படிப்பட்ட சீரிய திட்டத்திற்கு ஏன் இவ்வளவு கால தாமதம் ஆகிறது? இனிமேலாவது விரைவிலே செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இதுவரையில் சிக்கனமற்ற திட்டம் என்று அதை ஒத்திவைத்திருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின் படி அந்த திட்டத்தை எடுத்துக்கொள்ளலாம், அதற்கு 2.10 லட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. அதை அரசு பரிசீலிக்கும்.

திரு. வி. பழனிவேலு: தலைவர் அவர்களே, புதிய ஏரிகள், புதிய குட்டைகள் கட்டுவதற்கு பொறியாளர்கள் திட்டம் தயாரிக்கிறார்கள். அவர்கள் தயாரிப்பதற்கு எத்தனை நாட்கள், எத்தனை ஆண்டுகள் ஆகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: திட்டம் தயாரிப்பதற்கு எத்தனை ஆண்டுகள், எத்தனை மாதங்கள் என்று கணக்கு இல்லை. இன்வெஸ்டி கேஷன் நடந்து ஆய்வுகள் நடைபெறுவதுதான் இப்பொழுது. முக்கிய மாக தாமதத்திற்குக் காரணம் பணம் பற்றாக்குறையே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது முதலமைச்சர் அவர்கள் சொன்ன ஒரு சிறந்த யோசனையைப்பற்றி சொன்னார்கள். திருநெல்வேலி மாவட்டத்தில், கோவில் பட்டி தாலுக்கா போன்றவை மிகவும் வறட்சியான பகுதிகள் ஆகும். அந்தப் பகுதிகளிலே அதிகமான குளங்களை அமைக்கவேண்டுமென்ற முறையிலே 7,8 வருஷங்களாக பேப்பர்கள் பெண்டிங் ஆக இருக்கிறது. வறட்சிப் பகுதியிலே ஸ்பெஷல் ஸ்கீம் என்ற அடிப்படையிலே இப்படிப்பட்ட கண்மாய்களை துரிதமாக அமைப்பதற்கு அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இப்போதுதான் நிதிநிலை அறிக்கையின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித் திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே அரசு ஆராய்ந்து நிதி வசதிக்கேற்ப எது மிக மிகப் பிற்பட்ட பகுதி என்று பார்த்து அவற்றிற் கெல்லாம் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு யோசிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## அத்யாவசியப் பண்டங்கள் பதுக்கல்

*364 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

1974–75-ம் ஆண்டில் செப்டம்பர் மாதம் முடிய அவசியப் பண்டங்களை பதுக்கியதற்காக எத்தனை பேர் கைது செய்யப்பட்டனர்?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: 625 பேர்கள் அத்தியாவசியப் பண்டங்களை பதுக்கியதற்காக செப்டம்பர் 1974 வரை கைது செய்யப்பட்டனர்.

*365 Q,—THIRU N. K. PALANISAMY : Will the Honourable the Minister for Food and Co-operation be pleased to state :

(a) Whether the Government have taken action against the persons who were involved in the smuggling of rice out of the State during 1971 ; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. செ. மாதவன்.—(அ) ஆம்.

(ஆ) 1971 ஆம் ஆண்டில் இம்மாநிலத்திலிருந்து நெல் அல்லது அரிசி வெளி மாநிலங்களுக்குக் கடத்த முற்பட்ட 1,960 பேர்கள் கைது செய்யப்பட்டனர். 2,155 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு அனைவர் மீதும் வழக்கு தொடரப்பட்டது.

திரு. எல். கிட்டப்பா : தலைவரவர்களே, இந்தப் பதுக்கல் குற்றத்தை மிகக் கடுமையான குற்றமாகக் கருதி, கிரிமினல் குற்றமாகக் கருதி ஏதாவது கடுமையான தண்டனை கொடுக்க அரசு முயற்சியெடுக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்பொழுதே இது போன்ற பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தப் பதுக்கல்காரர்களின் மீதும், கடத்தல்காரர்களின் மீதும் போடப்பட்ட வழக்குகளில் எவ்வளவு வழக்குகளிலே தண்டனைவாங்கித் தரப்பட்டது ? இதன் மூலம் அவர்களிடத்தில் இருந்து எவ்வளவு கடத்திய பொருள்களும், பதுக்கிய பொருள்களும், பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்ற விவரங்களைக் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. செ மாதவன் : வழக்குகளின் இறுதி முடிவு பற்றிய விவரங்கள் என்னிடத்தில் இப்பொழுது இல்லை. ஆனால் பிடிக்கப்பட்ட அரிசியின் அளவு 7,523 குவிண்டால், நெல் 21,852 குவிண்டால்.

திரு. வி. ஆலடி அருணா: தலைவரவர்களே, இப்படி பதுக்கல் செய்பவர்களிடமிருந்து பிடிக்கப்பட்ட பொருள்களை அரசாங்கம் கொள்முதல் அடிப்படையில் பெற்றுக்கொள்கிறதா அல்லது மொத்தத்தையுமே அரசாங்கமே பெற்றுக் கொள்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குக்கேற்றவாறு மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முடிவெடுக்கிறார்கள். சில சமயங்களில் அந்த நெல்லை உடனடியாக நம்முடைய அரசாங்க விலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். சில சமயங்களில் கிரிமினல் வழக்குகளை நீதிமன்றங்களில் போடுகிறார்கள். அப்படிப் போடப்பட்டால் நீதிமன்றம் முடிவுசெய்வது மாதிரி டிஸ்போசல்



செய்கிறார்கள். இப்பொழுது ஆராய்ந்து, அதிக காலதாமதமாகிறது. என்பதால், அவர்களைப் பிடித்தவுடன் அந்த உணவுப் பொருட்களை How to dispose என்பது பற்றி சட்ட இலாகா பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்த பதுக்கல்காரர்களின் மீது வழக்கு போடுவதோடு, அவர்களைப் பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் அவர்களை வீதியில் விலங்கிட்டு அழைத்து வரப்படுகிறதா ? இதேமாதிரி நம்முடைய மாநிலத்திலே நடந்திருக்கிறதா ? அப்படி நடந்திருந்தால் அதே முறையை மற்ற இடங்களிலும் பின்பற்ற உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு செ. மாதவன் : அதைப் போன்ற சில நிகழ்ச்சிகள் நம்முடைய மாநிலத்திலேயும் நடைபெற்றிருக்கிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இப்படி அதிகமாக கடத்தப்படும் பொருட்களை உடனடியாகக் கைப்பற்றி ரசீது போட்டு சர்க்கார் கணக்கில் கொண்டுவரவும், அதற்குத் தகுந்த ப்ராசிகியூஷன் நடவடிக்கை மேற்கொள்ளவும் இப்பொழுது இருக்கின்ற ஸ்குவாட்களை விட அதிக ஸ்குவாட்களை நியமிக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காவல் துறை அதிகாரிகள் அதிகமா என்பதைவிட இப்பொழுதுள்ள நடைமுறை சரியா என்பதுதான் பிரச்னைக்குரியதாக இன்றைக்கு இருக்கிறது. சில சமயங்களில் பிடிக்கப்பட்ட நெல்லை என்ன செய்வது என்று கூட கண்டுபிடிக்க முடியாத அளவிற்கு இருக்கிறது. நீதிமன்றங்களுக்குச் செல்லும் வரையில் அந்தப் பொருட்கள் பாழ்பட்டுவிடும் வாய்ப்பு இருக்கிறது. ஆகவே புதிய முறையில், கடத்தியவர்களிடமிருந்து அந்தப் பொருட்களை உடனடியாகக் கைப்பற்றி பொது மக்களுக்கு விநியோகம் செய்யும் முறையையும், வழக்கு போடுவதற்கு தனி முறையையும் வகுக்க முடியுமா என்பதைப் பரிசீலித்து வருகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், 1971 ஆம் வருஷம் கடத்தப்பட்ட அரிசி சம்பந்தமாக கேஸ் போடப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். அந்த கேஸ் எந்த நிலையில் இருக்கிறது. கேஸ் முடியும் தறுவாயில் இருக்கிறதா ? அந்த கேஸ் நடக்கும்போது அதேமாதிரி சம்பவங்கள் இப்பொழுதும் நடந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார்களே, அது சம்பந்தமான விவரங்களை அறிவிக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஐயாயிரத்துச் சொச்சம் வழக்குகள் இருக்கின்றன. அவர்கள் எந்த வழக்கைப் பற்றி கேட்கிறார்கள் என்று தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், முதல் கேள்வியிலேதான் 1974–75–ம் வருஷத்திலே எத்தனை கேஸ் என்று இருக்கிறது. இரண்டாவது கேள்வியிலே 1971 ஆம் வருஷத்திலே அரிசி கடத்தப்பட்டது சம்பந்தமான கேள்வி, ஆகவே, அதைப்பற்றி போடப்பட்ட கேஸ்களில் இன்றைக்கு நிலைமை என்ன என்று கேட்டேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த வழக்குகள் சுமார் 2,155. 1,960 பேர்கள் கைது செய்யப்பட்டார்கள். எந்த வழக்கைப்பற்றி என்று குறிப்பிட்டுக் கேட்டால் விவரம் சேகரித்துத் தருகிறேன்.

திரு. கே. கந்தசாமி : பேரவைத் தலைவரவர்களே, இன்றையதினம் நாட்டில் ஏற்பட்டுள்ள மிகக் கடுமையான பஞ்ச நேரத்தில், இவ்வளவு வழக்குகள் போடப்பட்டுள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டும், கள்ளக் கடத்தலும் உணவுக் கடத்தல் தொழிலும் அதிகமாக சட்டப் பாதுகாப்பை வைத்து நடத்தப்பட்டு வருகின்றன. மக்களின் உயிரையும் உடைமையையும் பாதுகாப்பதற்காக அரசு உடனடியாகத் தீவிரமாகப் பரிசீலித்து மிகக் கடுமையான தண்டனை விதிப்பதற்குரிய ஆலோசனையைச் செய்து அதை உடனடியாக நிறைவேற்றுவது நல்லது அல்லவா ? அப்படிச் செய்வதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி தொடர்ந்து தவறு செய்பவர்களை, சட்டத்திலேயிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிவகை உள்ளவர்களை நாம் தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் பிடிக்க ஏற்பாடு செய்கிறோம்.

திரு. ந. சோமசுந்தரம் : தலைவரவர்களே, 1971 ஆம் ஆண்டிலிருந்து போடப்பட்ட வழக்குகளில—இப்படி உணவுப் பொருட்களைக் கடத்தியவர்கள் அல்லது பதுக்கியவர்கள் மீது இதுவரையிலே நீதிமன்றங்களிலே அல்லது மாவட்ட ஆட்சித் தலைவர் எடுத்த நடவடிக்கைகளின் மூலம்—எத்தனை வழக்குகளில் அரசாங்கத்துக்கு ஆதாயமாக உத்தரவு வந்திருக்கிறது, அதுமட்டுமல்லாமல், கடத்திய பொருட்களை லாரிகளில் எடுத்துச் செல்லும் பொழுது அந்த லாரிகளைக் கைப்பற்றுவது சம்பந்தமாக நம்முடைய கலைஞர் அவர்கள் ஒரு உத்தரவிட்டிருந்தார்கள் முன்பு, அது இப்பொழுது அமுலில் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : வழக்குகளின் முடிவு பற்றிய தகவல் என்னிடத்தில் இப்பொழுது இல்லை என்று ஏற்கனவே சொன்னேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் கூறியது மாதிரி லாரிகளை நாமே கைப்பற்றலாம் என்ற ஒரு நடவடிக்கையும் அண்மையிலே திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் எடுக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் குறிப்பிட்ட மாதிரி இன்னும் தமிழ் நாட்டின் எல்லையிலேயிருந்து அரிசி ஏராளமாகக் கடத்தப்பட்டு வருகிறது. அதை அவர்கள் இரண்டு விதமாகக் கடத்துகிறார்கள். ஒன்று வாங்கிய பர்மிட்டை வைத்துக்





கொண்டே திரும்பத் திரும்ப எடுத்துச் செல்வது. மற்றொரு முறை பர்மிட் இல்லாமலேயே திருட்டுத்தனமாக எடுத்துச் செல்வது. இந்த இரண்டு முறைகளையும் தடுத்து நிறுத்த வேண்டுமென்றால், இப்படித் தவறு செய்பவர்களைத் தூக்குமேடைக்கு அனுப்ப வேண்டுமென்று சட்டமன்றத்திலேயே தீர்மானம் போட்டு மத்திய அரசுக்கு அனுப்பலாம் என்ற.............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யோசனைவேண்டாம்.

திரு. கோவை செழியன் : அப்படி ஒரு தீர்மானத்தைப் போட்டு அனுப்புமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தீவிரமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற கருத்தில் இந்தக் கேள்வி கேட்கப்படுகின்றது. ஆனால் மாநிலத்திற்கு மாநிலம் விலை ஏற்றத்தாழ்வும், பற்றாக்குறையும் இருக்கும் வரையில் இதுபோன்ற நிலைமை தொடர வாய்ப்புண்டு. நம்முடைய மாநிலத்திலே இந்த ஆண்டு பற்றாக்குறை. ஆகவே வெளியிலே கொண்டு செல்வதற்கு வாய்ப்பு இல்லை. இங்கே அப்படிப்பட்ட அனுமதி கொடுப்பதில்லை. நிரந்தரமாக பரிகாரம் செய்யவேண்டுமென்றால் மாநிலத்திற்கு மாநிலம் செல்லும் உணவுப் பொருட்களின் விநியோகத்தை அரசாங்கமே எடுத்தாலொழிய அதைத் தடுப்பது சாத்தியமில்லை என்று தான் நான் நினைக்கிறேன்.

திரு. மா. பா. சாரதி : தலைவரவர்களே, இந்த கடத்தல் பொருட்களை ஏற்றிச் செல்லும் லாரிகள், கார்கள், வண்டிகள் முதலியவை பறிமுதல் செய்யப்படுகின்றனவா ? அப்படி பறிமுதல் செய்யப்பட்டிருந்தால் எவ்வளவு பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: எவ்வளவு என்ற எண்ணிக்கை என்னிடத்தில் இல்லை. அண்மையிலே திருத்தப்பட்ட சட்டத்தின் மூலம் ஆங்காங்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த லாரிகளின் சொந்தக்காரர்களைத் தடுப்புக் காவல் சட்டத்தின் மூலம் பிடிக்கிறார்கள், லாரிகளையும் பறிமுதல் செய்கிறார்கள்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, அரிசி கடத்தும் வாகனங்களைப் பறிமுதல் செய்வதாக மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சரவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் இரயில்களிலே இன்றைக்கு ஆயிரக்கணக்கான மூட்டைகள் அப்படி வருகின்றன. ஆகவே இரயில்களையும் பறிமுதல் செய்ய அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை.)

திரு. எம். சுரேந்திரன் : சார், அமைச்சரவர்கள் பதில் கூறும்போது இம்மாதிரி கடத்தல் தன்மைகளைப் போக்கவேண்டுமென்றால், உணவுப் பொருட்களின் மொத்த வர்த்தகத்தை அரசாங்கமே எடுப்பதுதான்

மார்க்கம் என்று கூறினார்கள். அப்படிப்பட்ட நல்ல மார்க்கத்தை—அது நல்ல மார்க்கம் என்று தெரிந்திருக்கும் காரியத்தை—ஏன் இந்த அரசு இன்னும் செய்யாமல் இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் கூறியது மாநிலத்துக்கு மாநிலம் உள்ள வணிகத்தைப்பற்றி. அதைப்பற்றி ஏற்கனவே விவாதித்து இருக்கிறோம். அகில இந்திய அளவிலே இது பற்றி முடிவெடுத்து செயல்படுத்துவதுதான் பொருந்தும். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் அதைக் கொள்கை அளவிலே ஏற்றிருக்கிறோம.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், சௌகார்பேட்டையில் ஒரு நிறுவனம் ஹரியானாவிற்கு ஏற்றுமதி செய்வதாகக் கூறப்படுகிறதே, அது பற்றி அரசுக்கு ஏதேனும் தகவல் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் :—இப்பொழுது இங்கேயுள்ள நிறுவனங்கள் எப்படி மற்ற மாநிலத்திலிருந்து அரிசியைக் கொண்டு வந்து அதிக விலைக்கு விற்கலாம் என்று திட்டமிடுவதாகத்தான் தெரிகிறது. நம்முடைய மாநிலத்திலேயிருந்து வெளியே ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்பே இல்லை.

## முதலமைச்சர் பொது நிவாரண நிதி.

*356 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழக முதலமைச்சரின் நிதியிலிருந்து 1974-75-ஆம் ஆண்டில், செப்டம்பர் முடிய எந்தெந்த காரணங்களுக்காக எவ்வளவு நிதி உதவி வழங்கப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : முதலமைச்சர் துயர் தணிப்பு நிதியிலிருந்து 1—4—1974 முதல் 30—9—1974 வரை வழங்கப்பட்ட உதவிகள் குறித்த விவரங்கள் * அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அளித்து இருக்கிற விவர அறிக்கையிலிருந்து நல்ல காரியங்களுக்கு, பாதிக்கப்பட்டவர்களுக்கு நிதி அளித்து இருக்கிறார்கள் என்பது தெரிகிறது. எனவே, முதலமைச்சர் நிதிக்கு பெரிய தொழில் அதிபர்களிடமிருந்து அவர்களுடைய லாபத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் இந்த நிதிக்கு கொடுக்க வேண்டுமென்று கூறுவதற்கு அரசு முற்படுமா ?

* 222—235 பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்படி யாரையும் தரவேண்டுமென்று கட்டாயப் படுத்த முடியாது. ஆனால், இதிலே நல்லெண்ணம் கொண்ட, வள்ளல்தன்மை படைத்தவர்கள் பலர் நிதி அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல, பொதுமக்களும் 5 ரூபாய் 10 ரூபாய் என்ற அளவுக்கு அனுப்பிக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, நம்முடைய மாநிலத்திலே மட்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நிதி வழங்கப்படுகிறதா ? அது மட்டுமின்றி நம்முடைய முதலமைச்சர், நிதியிலிருந்து வெளி மாநிலங்களுக்கும் ஏதாவது நிதி வழங்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரு முறை ராஜஸ்தான் நிவாரண நிதிக்கு ரூபாய் 10,000 அனுப்பப்பட்டது. பிறகு ஆந்திரா துயர் தணிப்பு நிதிக்கு ரூபாய் 10,000 அனுப்பப்பட்டது. கான் அப்துல் கபார் கான் அவர்கள் நிதி திரட்டுவதற்காகத் தமிழ் நாட்டிற்கு வந்தபோது ஒரு இலட்ச ரூபாய் இந்த நிதியிலிருந்து கொடுக்கப்பட்டு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பெங்களூர் தமிழ்ச் சங்கத்திற்குக் கொடுத்திருக்கிறீர்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பங்களா தேஷ் எய்ட் கமிட்டி என்று கமிட்டி தனியாக வைத்து இருந்தார்கள். அதற்கு ரூபாய் 25,000 தரப்பட்டது. பெங்களூர் தமிழ்ச் சங்கத்திற்கு—அவைத் தலைவர் சொன்னார்கள்—அது இந்த நிதியிலிருந்து தரப்படவில்லை. என்னுடைய பிறந்த நாள் அன்று எனக்கு வழங்க்ப்பட்ட நிதியிலிருந்து ரூபாய் 50,000 அவர்களுக்குத் தரப்பட்டது.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்களுடைய நிதியிலிருந்து தரப்படுகிற உதவிகளைப் பாராட்டுகிறேன். அதேபோல், இன்னும் விவசாய வேலைகளில் ஈடுபட்டு இருப்பவர்கள், கூலி வேலை செய்பவர்கள், கட்டிட வேலை செய்பவர்கள், பாறை வெட்டி எடுக்கும் பணியில் ஈடுபட்டு இருப்பவர்கள், அப்படிப்பட்ட ஏழைகளுக்குக் கலைஞர் நிதியிலிருந்து உதவி செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இந்த நிதியே ஏழைகளுக்குக் உதவத்தான் தொடங்கப்பட்ட ஒன்றாகும். அவையில் வைக்கப்பட்டுள்ள குறிப்புக்களைப் பார்த்தால், மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விகளுக்கு எல்லாம் பதில் அடங்கியுள்ளது என்பதை அறிவார்கள்.

திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் நிதி உதவி ஒருமைப்பாட்டுக்கு எடுத்துக்காட்டாக, எல்லா மாநிலங்களுக்கும் நிதி உதவி அளித்து இருக்கிறார்கள். மற்ற மாநிலங்களிலிருந்து, நாம் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற நேரத்தில், அந்த ஒருமைப்பாட்டுக் கொள்கையை ஆதரிக்கும் வகையில் நிதி உதவி வந்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 18

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அது பற்றிய விவரங்கள் இப்போது என்னிடத்தில் இல்லை.

திரு. குப்பல். கே. எஸ். இராமகிருஷ்ணன் : இந்த முதலமைச்சரின் நிதி பல ஏழைகளுக்கும், நல்ல காரியங்களுக்கும் பயன்படுகிறது. இதற்கு நிதி கொடுப்பதற்கு இன்கம்-டாக்சிலிருந்து விதிவிலக்கு உண்டா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இதற்கு நிதி வழங்குவதற்கு வரிவிலக்கு உண்டா இல்லையா என்பது எனக்குத் தெரியாது. ஆனால், முதலமைச்சர் நிதியைப் பொறுத்த வரையில் கடந்த 6-7 ஆண்டுகளில் 56 இலட்சம் ரூபாய்க்கு மேல் முதலமைச்சர் நிதிக்கு பணம் வந்து சேர்ந்து இருக்கிறது. அதிலே 22 இலட்சம் ரூபாய்க்குமேல் நாம் இப்படிப்பட்ட உதவிகளைச் செய்திருக்கிறோம்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவரவர்களே, முதலமைச்சர் நிதியிலிருந்து தொழிலாளர்கள் யாருக்காவது நிறுவனங்களிலிருந்து நீக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறதா, அளிக்கப்பட்டு இருக்கிறதா, அளிப்பதாக வாக்குறுதி செய்யப்பட்டதா, ஆம் என்று சொன்னால், அந்த முறை எதிர்காலத்தில் தொழிலாளர்களுக்குப் பாதகம் ஏற்பட்டால், எல்லா நிறுவனங்களும் முதலமைச்சரிடத்தில் போய்க் கேளுங்கள் என்று சொல்ல மாட்டார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நாட்டின் தொழிலாளர்களுக்கு நிவாரணம் அளிக்க பணம் செலவிடுவது என்பது இன்று நேற்று அல்ல, அறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதே, கோவையில் பாதிக்கப்பட்ட தொழிலாளர்களுக்காக, ஒரு மாதகாலம் அவர்களுக்கு, அவர்கள் வாழவேண்டுமென்பதற்காக ஒரு இலட்ச ரூபாய் அண்ணா அவர்களின் காலத்திலேயே தொழிலாளர்களுக்கு தரப்பட்டது. அதற்குப் பிறகு, நான் முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பிறகு அண்மையில் ஏற்பட்ட கோவை மாவட்ட, தொழிலாளர்கள் போராட்டத்தின்போது ரூபாய் 5 இலட்சம் நிவாரணமாக அளிக்கப்பட்டு இருக்கிறது. தொழிலாளர்களுக்குக் கஷ்டம் வரும் நேரத்தில் இப்படி அரசு உதவி செய்வது, கழக அரசு தனது கடமையாகக் கொண்டு இருக்கிறது. மற்றவர்கள் கேட்க மாட்டார்களா என்று சொல்லி, கொடுப்பதைத் தடுப்பது போல் பேசுவது முறையல்ல.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, முதலமைச்சர் நிதியிலிருந்து வழங்கப்படுகிற இந்தப் பணம் மிகவும் மனிதாபிமானத்தோடு ஏழைகள், தொழிலாளர்கள், பாதிக்கப்படுகிறவர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்படி வழங்கப்படுகிற பணம், முதலமைச்சர் நிவாரண நிதிக்கு எப்படி வந்து சேருகிறது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பணம் அனுப்புகிறார்கள். அதை நம்முடைய நிதி இலாகாவில் அதற்காக தனிப் பிரிவு ஏற்படுத்தி, அந்தப் பணத்தைச் சேர்த்து, அவைகளையெல்லாம்



1975 மார்ச் 18]

ஸ்டேட் பாங்கி, ஹவுசிங் போர்டு, டி. ஐ. ஐ. சி. ஆகியவற்றில் இந்தப் பணத்தை வைத்து இருக்கிறார்கள். அதிலே ஆண்டு தோறும் வட்டி மட்டும் ரூபாய் 45,000—ரூபாய் 50,000 வந்து கொண்டிருக்கிறது.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, சமீபத்தில் சென்னை மாநகரத்தில் இந்தக் கழிவு நீர்க் குழாயில் இறங்கிப் பணியாற்றும் தொழிலாளர்கள் உயிர் இழந்து இருக்கிறார்கள். அவர்களுக்கு கார்ப்பரேஷன் சார்பில் ரூபாய் 500 கொடுக்கப்பட்டிருக்கிறது. முதலமைச்சர் நிதியிலிருந்து ஏதாவது நிதி கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிச்சயமாக அவை எல்லாம் கவனிக்கப்படாமல் போய் இருக்க முடியாது. தரப்பட்டு இருக்கும் என்று கருதுகிறேன். தரப்படாமல் இருந்தால் நிச்சயமாகத் தரப்படும்.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் திட்டங்களான பிச்சைக்காரர்கள் மறுவாழ்வுத் திட்டம், கண்ணொளி வழங்கு திட்டம், சைக்கிள் ரிக்ஷா வழங்கும் திட்டம் ஆகிய பயன் உள்ள திட்டங்களுக்கு இந்த முதலமைச்சர் நிதியிலிருந்து நிதி உதவி வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இல்லை. அவைகளுக்குத் தனியாக நிதி வசூலிக்கப்படுகிறது. அவைகளுக்குத் தனிக் கணக்குகள் வைக்கப்படுகிறது. முதலமைச்சர் நிவாரண நிதி என்பது 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து முதலமைச்சர் நிவாரண நிதி என்ற பெயரால்தான் இத்தகைய நிவாரண காரியங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

திரு. வி. ஆலடி அருணா : தலைவரவர்களே, முதலமைச்சர் நிவாரண நிதிக்குத் தனியாரிடமிருந்து நன்கொடை வருகிறது என்று சொன்னார்கள். அப்படி நன்கொடை தருபவர்கள் அரசாங்கத்திலிருந்து ஏதாவது பிரதி பலன் எதிர்பார்க்க மாட்டார்களா ? அதைத் தவிர்க்கும் வகையில் பட்ஜெட்டிலேயே முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ஒரு குறிப்பிட்ட தொகை ஒதுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இந்த முதலமைச்சர் நிவாரண நிதி எப்படி ஆரம்பமானது என்றால், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பு ஏற்ற நேரத்தில் படத் துறையாளர்கள் நடத்திய விழாவில் இப்படிப்பட்ட யோசனை சொல்லப்பட்டு, படத்துறையாளர்கள், திரைப்படத்துறையாளர்கள் எல்லாம் ஒரு கணிசமான நிதியை அண்ணா அவர்களிடத்தில் ஒப்படைத்தார்கள். அதன் காரணமாகப் படத்துறையாளர்கள் யாருக்கும் எந்தச் சலுகையும் தரப்படவில்லை என்பதை வினா எழுப்பிய மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார்கள். இன்னும் சொல்லப்போனால், முதலமைச்சர் நிதிக்குக் குதிரைப் பந்தயக் கிளப்பிலிருந்துகூட நிதி வழங்கப்பட்டு இருக்கிறது. அவர்களுக்கும் எந்தச் சலுகையும் வழங்கப்படவில்லை என்பதையும், குதிரைப் பந்தயம் ஒழிக்கப்படவிருக்கிறது என்பதையும் மாண்புமிகு உறுப்பினர்கள்

அறிவார்கள். இன்னும் சொன்னால், தொடர்ந்து கூற வேண்டுமானால், 4 ரூபாய் 5 ரூபாய் என்று எல்லாம் கூட இந்த நிதிக்குப் பல்வேறு மாநிலங்களிலிருந்துகூட பொதுமக்கள் நிதி அனுப்பி இருக்கிறார்கள். 15—3—1975 இந்த தேதியில்கூட வஜ்ரேஸ்வரி, புதுடில்லி 10 ரூபாய்க்கு செக்கை இந்த நிதிக்கு அனுப்பி இருக்கிறார்கள். இதே 15—3—1975 அன்று இளைஞர் பண்பாட்டுக் கழகம், தல்லாக்குளம், மதுரையிலிருந்து அனுப்பியிருக்கிறார்கள். இப்படிப் பொதுமக்கள் நிதி அனுப்பி இருக்கிறார்கள். இப்படி நிதி அனுப்பியவர்கள் யாரும், நிதி அனுப்பியிருக்கிறேன் சலுகை கொடுங்கள் என்று கேட்கவில்லை. இப்படித் தனியாக முதலமைச்சர் நிவாரண நிதி என்று ஒதுக்குவதாக இருந்தால், அதற்கு முதலமைச்சர் நிவாரண நிதி என்ற பெயரே இருக்காது.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இந்தியா மீட்டர்ஸ் நிறுவனத்தில் பணியாற்றும் 750 தொழிலாளர்கள் கடந்த 6 மாத காலமாக வேலையில்லாமல் இருக்கிறார்கள். அந்த நிறுவனத்திற்கு மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் கணிசமான தொகை கொடுத்து இருக்கிறார்கள். அதற்குப் பிறகும், அவர்கள் மூடி விட்டு இன்றைக்கு 750 தொழிலாளர்களில், 500 பேருக்கு மேல் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். அப்படிப்பட்ட தொழிலாளர்களுக்கு, இந்த முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து ஏதாவது வழங்க முன் வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தொழிலாளர்களுக்காக மிகுந்த அக்கறையோடு கேள்வி எழுப்பியதற்கு நன்றி செலுத்துகிறேன். கவனிக்கப்படும்.

திரு. ஏ. எம். இராஜா : தலைவரவர்களே, இந்த முதலமைச்சர் நிவாரண நிதி மிக நல்ல காரியங்களுக்குப் பயன்பட்டு வருகிறது. இந்த நிதிக்கு மேலும் பணம் வருவதற்கு வசதிகளை ஏற்படுத்துவதற்கு, இந்த நிதியை வளர்ப்பதற்கு முதலமைச்சர் வீட்டிலும், முதலமைச்சர் அலுவலகத்திலும் ஒரு உண்டியல் வைத்தால், வருகிறவர்கள் அதிலே பணம் போடுவார்கள். ஆகவே இதற்கு முதலமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதை வைத்தால்தான் ரொம்ப கஷ்டம். நண்பர் அருணா கேட்ட கேள்விபோல், ஆபத்தாகப் போய்விடும். இப்படி என்னைப் பார்க்க வருகிறவர்கள் உண்டியலில் பணம் போட்டு விட்டு, முதலமைச்சர் அவர்களைப் பார்த்துவிட்டுத்தான் போவேன், உண்டியலில் பணம் போட்டோம் என்று பிடிவாதம் பிடிப்பார்கள். அது நல்லதல்ல. உள்ளபடியே அது எனக்கு ரொம்பத் தொல்லை கொடுக்கக் கூடியதாக இருக்கும்.

(முற்பகல் 9.30)

திரு.கு. காமாட்சி : முதலமைச்சர் நிதிக்கு நல்ல வள்ளல்கள் எல்லாம் வாரி வழங்குவதாகச் சொன்னார்கள். நம்முடைய நாட்டில் எவ்வளவோ வள்ளல்கள், கொடை வள்ளல்கள், பாரி வள்ளல்கள் எல்லாம் இருக்கிறார்கள். அந்த வள்ளல்களில் ஒரு சிலர் பெயரை அறிவிக்க இயலுமா?



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நிறையப் பேர் இருக்கிறார்கள். எல்லாப் பெயரையும் தர இயலாது. அதற்கு, தனியாக யார் வழங்கினார்கள் என்று கேள்வி கேட்டால் அந்தப் பட்டியலை அவையில் வைக்க இயலும்.

திரு. என். கிட்டப்பா : கடந்த பிப்ரவரி 5-ம் தேதியன்று மாயூரத்தில் மொழிப்போராட்ட வீரர் சாரங்கபாணி மொபாலத்தைத் திறந்து வைத்த போது மொழிப்போராட்டத்தில் உயிர் நீத்த சாரங்கபாணி குடும்பத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிதியிலிருந்து 5,000 ரூபாய் அளித்தார்கள். அதைப்போல் மொழிப் போராட்டத்தில் உயிர்த்தியாகம் செய்த மற்றத் தியாகிகளுக்கும் அளிக்க இயலுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மொழிப்போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் யார் யாருக்கு அப்படிப்பட்ட நிதி அளிக்கப்பட்டிருக்கிறது என்ற கேள்வி வருமானால் அந்த நேரத்தில் விபரமாக விவரங்களைத் தயாரித்துத் தர இயலும்.

*Institute of Management.*

*357 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Honourable the Chief Minister be pleased to State :

(a) whether details have been finalised by the Government in consultation with the 'Planning Commission to set up an Institute of Management ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) மற்றும் (ஆ) சென்னையில் நிர்வாகக் கல்வி நிறுவனம் ஒன்றைத் தொடங்க அரசு முடிவு செய்துள்ளது. தன்னாட்சி அமைப்பாக இந்நிறுவனம் செயல்படும். ஏனைய விவரங்கள் தொகுக்கப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : இந்த நிறுவனம் அமைக்கப்படுவதன் முக்கிய நோக்கம் என்ன? ஆற்ற இருக்கிற பணி என்ன?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அதிகாரிகள் நிர்வாகத்துறையில் (மானேஜ்மென்ட் துறையில்) நல்ல பயிற்சி பெறுவதற்காக இந்த நிறுவனம் உருவாக்கப்பட வேண்டுமென்ற செயற்குறிப்பு இருக்கிறது. இப்படிப்பட்ட நிறுவனங்கள் வேறு சில மாநிலங்களில் மத்திய சர்க்கார் திட்டத்தின் அடிப்படையில் குஜராத், மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் நடைபெற்று வருகிறது.

*Pond Sch mes.*

* 366 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Honourable the Minister for Agriculture be pleased to state :

(a) whether there is any proposal under the consideration of the Government to hand over, the maintenance work of the ponds formed under the Soil Conservation Scheme, to Panchayats ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இத்திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்டு வருகிறது. 681 நீர்க்குட்டைகள் (பெர்குலேஷன் பாண்ட்ஸ்) கட்டப்பட்டுள்ளன.

திரு. சோ. அழகர்சாமி: மண் வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் கேட்கப்பட்ட கேள்விக்கு குளம் குட்டைகள் அமைக்க தனி அதிகாரி நியமிப்பதாகச் சொல்லப்பட்டது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு பி. டபிள்யூ. டி. யில் இருக்கிறதா? ஊராட்சி ஒன்றியங்கள் மூலம் குட்டைகள் அமைக்க தனியாக வறட்சிப் பகுதிக்கு ஸ்பெஷல் ஆபீசர் போட உத்தேசம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நீர்க்குட்டைகள் கட்டுவது வேளாண்மைத் துறையிலுள்ள எஞ்சினியர்கள். டி. பி. ஏ. பி. புரோகிராமில் வறட்சிப் பகுதிகளான இராமநாதபுரம் மாவட்டத்தில் 579 நீர்க் குட்டைகளும், தர்மபுரியில் 25 நீர்க் குட்டைகளும் கட்டப்பட்டுள்ளன.

THIRU B. VENKATASWAMY : Sir, may I know from the Honourable Minister whether the D.P.A.P. programme, it is proposed to drop the ponds scheme? I understand that ponds scheme will not be taken up hereafter. As they are useful, will that be taken up in Dharmapuri and Ramanathapuram districts?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, I have no definite information on the subject. But from what I understand even in the D.P.A.P. only non-irrigation programmes will be dropped and not minor irrigation programmes.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, the Panchayat Unions are already over-burdened with heavy work. They complain of lack of funds. May I know from the Honourable Minister for Agriculture whether these huge number of ponds are kept for maintenance only with the Public Works Department or the Agriculture Department?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Sir, they are handed over after they are constructed, to the Panchayat Unions for maintenance. Therefore, the Panchayat Unions have got only to maintain. There is no special burden on them.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: இந்தக் குட்டை விஸ்தரிப்புத் திட்டத்தை ஏற்கெனவே பஞ்சப் பகுதியாக இருக்கும் திருநெல்வேலி ஜில்லாவில் இருக்கின்ற ராதாபுரம், சங்கரன்கோயில் போன்ற பகுதிகளுக்கு விஸ்தரிக்க அரசாங்கம் திட்டம் வைத்திருக்கிறதா? அப்படி இருந்தால் அந்தத் திட்டத்தின் விவரங்களை அமைச்சர் அவர்கள் தருவார்களா?



மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: திட்டம் இருக்கிறது என்பது தெரியும். திட்டத்தின் விவரங்கள் இப்போது என் கைவசம் இல்லை.

திரு. ஏ. பழனிவேலன்: மிகவும் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட சேலம் மாவட்டத்தில் இம்மாதிரியான குட்டைகளை அதிகமாக ஏற்படுத்த அரசு முன்வருமா? குறிப்பாக ஆத்தூர் வட்டம் மிகமிகக் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. அங்கு இந்தத் திட்டத்தை விரிவுபடுத்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஆலோசனை பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

திரு. கே. கந்தசாமி: குட்டை குளம் விஸ்தரிப்புத் திட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்ட உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் செயல்படுகிறதா? இது பற்றி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொல்லியும் சரிவரச் செயல்படவில்லை. இதிலே அமைச்சர் அவர்கள் நேரடி கவனம் செலுத்தி துரித நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: நான் சொன்னது— வறட்சியால் பல ஆண்டுகளாக ஏற்கெனவே பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு டிரவுட் ப்ரோன் ஏரியாஸ் புரோகிராம், வறட்சியால் பாதிக்கப்பட்டு வருகிற பகுதிகளுக்கு மேம்பாட்டுத் திட்டம் என்ற அடிப்படையில் இராமநாதபுரத்தில் 579 குட்டைகள் கட்டப்பட்டுள்ளன என்று சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உசிலம்பட்டி பகுதி பற்றிச் சொன்னது ஆலோசிக்கப்படும்.

திரு. வை. பாலசுந்தரம்: கிராமப் புறங்களில், குறிப்பாக அரிசனங்கள் வாழ்கின்ற பகுதிகளில் கிணறுகளில் நல்லபடி நீர் கிடைக்காவிட்டால் குளம் குட்டைகளைத்தான் பயன்படுத்துகிறார்கள். அப்படிப்பட்ட இப்படிப்பட்ட குளம் குட்டைகளைத் தேர்ந்தெடுத்து பராமரிப்பு செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் குட்டைகள் குடிநீருக்காகவும் அல்ல; ஆயக்கட்டு பெருகுவதற்கான பாசனத்திற்காகவும் அல்ல. இவை தண்ணீர் தேக்கி வைப்பதன் மூலம் பக்கத்திலுள்ள கிணறுகளில் தண்ணீர் ஊற்று அதிகமாக இருக்கிறது என்று கோவை மாவட்டத்தில் கண்டு பிடிக்கப்பட்டு மற்ற மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கப்பட்டு வருகிறது.

*Servicing Units*

*367 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Honourable the Minister for Agriculture be pleased to state —

(a) whether the Mobile Servicing Units attending to the servicing of sprayers in the villages have been attached to the Agricultural Engineering Workshops in the State ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நடமாடும் பட்டறைகள் தஞ்சை, திருச்சி, மதுரை, நெல்லை, கோவை, சென்னை ஆகிய ஆறு இடங்களில் உள்ளன.

திரு. தி. பொன்னையன் : ஊராட்சி பஞ்சாயத்துக்களில் உள்ள பவர் ஸ்பிரேயர்கள், சாதாரண ஸ்பிரேயர்கள் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குக் கூட வேலை செய்யாமல் பழுதாகி விடுகின்றன. ஆகவே, அவற்றைப் பழுது பார்க்க எல்லா மாவட்டங்களிலும் எல்லா ஊராட்சி ஒன்றியங்களிலும் பட்டறை அமைக்கும் நோக்கம் உண்டா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : ஏற்கெனவே எல்லா வட்டங்களிலும் பட்டறைகள் தேவை என்று அதற்கான திட்டம் மத்திய அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு கொஞ்சம் கொஞ்சமாக நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டு வருகிறது. இந்த வினா நடமாடும் பட்டறைகள் பற்றியது.

திரு. சோ. அழகர்சாமி : நடமாடும் பட்டறைகள் 6-ல் ஒன்று நெல்லை மாவட்டத்தில் இருப்பதாகச் சொன்னார்கள். அது எப்படி எல்லா வட்டங்களுக்கும் சுற்றி வருகிறது. கருவிகளைச் சரி செய்து கொடுக்கிறது என்பது பற்றி ஒன்றும் தெரியவில்லை. அக்ரோ இண்டஸ்ட்ரியல் கோவாபரேட்டிவ் சென்டர்கள் ஆரம்பிக்கப்பட்டு இந்த மாதிரி கிராமங்களிலுள்ள கருவிகளைப் பழுது பார்க்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லி இதுவரை ஒன்றும் செய்யவில்லை. அதைத் துரிதமாகச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நடமாடும் பட்டறைகள் பஞ்சாயத்து யூனியன்களில், பஞ்சாயத்துகளில், அல்லது தனிப்பட்ட விவசாயிகளுடைய கருவிகளைப் பழுது பார்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அக்ரோ என்ஜினியரிங் அல்லது சர்வீஸ் கோவாப்பரேட்டிவ்ஸ் என்பவை மத்திய அரசால் ஒப்புக் கொள்ளப்பட்டு ஒவ்வொரு வட்டத்திலும் அதை ஏற்படுத்த முயற்சி செய்து வருகிறோம். அப்படி ஏற்படுமானால் எல்லா வட்டங்களிலும், கிட்டத்தட்ட எல்லா ஊர்களிலும் இந்த வசதி ஏற்படும்.

Thiru B. Venkataswamy : In the list read out by the Honourable Minister, Dharmapuri District has been left out in introducing the Mobile Servicing Unit. May I know from the Honourable Minister whether the Mobile Servicing Unit to repair and service sprayers will be introduced in Dharmapuri District also?

The Hon. Thiru Si. Pa. Aditanar : I stated that at the moment there are six districts in which the mobile units are in operation. The requiements of Dharmapuri District will be examined.





திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, நடமாடும் தொழில் பட்டறை மதுரை மாவட்டத்தில் மாவட்ட அளவில் இருக்கிறதே தவிர வட்டார அளவில் செல்லம்பட்டி, உசிலம்பட்டி போன்ற வட்டாரங்களில் இல்லை. இருந்தாலும் ஒழுங்காகச் செயல்படவில்லை. அது பற்றி முன்னால் வேளாண்மை அமைச்சரவர்களிடமும் நான் தெரிவித்திருக்கிறேன். உணவுப் பஞ்சம் ஏற்பட்டிருக்கிற இந்த நேரத்தில் அதற்கு உறுதுணையாக இருக்கிற கருவிகளை உடனடியாகப் பழுது பார்த்துக் கொடுப்பதற்கு ஒவ்வொரு பிளாக் அளவிலாவது நடமாடும் தொழில் பட்டறைகள் இருக்க வேண்டும். ஐ.டி.ஐ. பாலிடெக்னிக் போன்றவைகளில் பயிற்சி பெற்றுவிட்டு வேலையில்லாமல் ஏராளமானவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஏதாவது "ஷார்ட் டெர்ம் கோர்ஸ்" கொடுத்து பழுதுபட்ட விவசாயக் கருவிகளை உடனுக்குடன் ரிப்பேர் செய்வதற்கு ஏற்பாடு செய்தால் வேலையில்லாத் திண்டாட்டமும் ஒழியும், விவசாய உற்பத்திக்கும் உறுதுணையாக இருக்கும். ஆகவே, அமைச்சரவர்கள் அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, இந்த நடமாடும் தொழில் பட்டறை மாவட்டத்திற்கு ஒன்று போதாது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன். அதற்காகத்தான் ஒவ்வொரு வட்டாரத்திலும் ஏற்படுத்தியிருக்கிறோம். ரெவின்யூ டிவிஷன் என்ற அளவில் கூட அல்ல. பிளாக் அளவில் ஏற்படுத்தியிருக்கிறோம். மத்திய அரசு உதவியும் அதற்கு இருக்கிறது. எங்காவது வேலை ஒழுங்காக நடக்கவில்லையென்று சொன்னால் அதற்கு உரிய நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, ஒவ்வொரு ஒன்றியத்திலும், ஸ்பிரேயர்கள் சரியாகப் பழுது பார்க்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே நடமாடும் தொழில் பட்டறைகளைத் தவிர ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களுக்கு ஸ்பிரேயர்களைப் பழுதுபார்க்கும் பயிற்சி அளித்து, அவர்கள் பழுதுபட்ட கருவிகளை உடனடியாக ரிப்பேர் செய்வதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஊராட்சி ஒன்றியங்களில் அப்படிப்பட்ட பட்டறைகளைச் செயல்படுத்த இயலாது என்று கருதுகிறேன். செயல்படுத்த இயலுமானால் உள்ளாட்சித் துறை அமைச்சரவர்கள் அதைக் கவனிப்பார்கள்.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, நாட்டில் நடைபெறும் தீவிர சாகுபடித் திட்டத்தில் இந்த மருந்து தெளிப்பான்கள் மிகவும் முக்கியமானவை. ஆனால் ஒவ்வொரு ஒன்றியத்திலும் — உதாரணத்திற்குச் சொல்கிறேன்—30 இருக்கிறது என்றால் அதில் 3 தான் வேலை செய்கிறது. பழுதுபார்க்க இந்த நடமாடும் பட்டறை பெரும்பாலும் காத்திருக்க முடியாது. ஆகவே, இதற்கென்று ஏதாவது தனிப் பிரிவுகள் ஏற்படுத்தி, ஒரு மெஷின் ரிப்பேர் ஆனால் 15 நாட்களுக்குள் பழுது பார்த்துவிட வேண்டுமென்ற விதியை அரசு பிறப்பிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: ஸ்ப்ரேயர்ஸ் இந்த மாதிரி பழுது பார்ப்பதற்கு 15 நாள் கூடத்தாங்காது. ஏனென்றால் அதற்குள் பூச்சிகள் பயிரைச் சாப்பிட்டுவிடும். ஆகவேதான் மாவட்ட அளவில் என்று கூட அல்லாமல் வட்டார அளவில் செயல்படுத்த தீவிர கவனம் செலுத்தப்படுகிறது. இதற்கு மத்திய அரசு உதவி செய்கிறது என்று ஏற்கனவே சொன்னேன். ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒன்று ஏற்படுத்தியிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய வட்டாரத்தில் இல்லையென்றால் ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்யலாம்.

### வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் சம்பளம்

*368 வினா:— திரு. கே. டி. கே. தங்கமணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) பெரியார் திடலில் 1—6—1974 ல் நடைபெற்ற தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் சங்க 4 வது மாநில மாநாட்டில், சம்பள விகிதத்தை மாற்றியமைப்பது குறித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) சம்பளத்தை மாற்றியமைக்குமாறு செய்துகொண்ட வேண்டுகோளை அரசு மறுத்துவிட்டது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இந்தத் தமிழ்நாடு வேளாண்மைத் துறை மேஸ்திரிகள் 6,000 பேர் ஒரே ஸ்தாபனத்தில் இருக்கிறார்கள். அவர்கள் 1—6—1974 செய்யாறு மாநாட்டில் ஒரு தீர்மானத்தைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு வருஷ பயிற்சி பெற்று இந்த வேலை செய்து வருகிறார்கள். அவர்கள் நிலையில் இருக்கக்கூடிய மற்றவர்களுக்கு முதல் கிரேடுக்கு 200 ரூபாய், இரண்டாம் கிரேடுக்கு 150 ரூபாய் என்று வழங்கப்படும்போது இவர்களை ஒரே கிரேடில் வைத்து 130 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய கோரிக்கையைப் பரிசீலனை செய்து, அவர்களுக்கு ஊக்கம் கொடுக்கிற வகையில் மற்றவர்களுக்குக் கொடுக்கும் சம்பள விகிதம் இவர்களுக்கும் கொடுக்கப்பட அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: மொத்தம் 6,000 பேர் என்று சொன்னார்கள். 6,000 பேர் "டெமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரி"களாக இருக்கிறார்கள் என்பது சரியான புள்ளிவிபரம் அல்ல. மொத்தம் 3,294 பேர்கள்தான் இருக்கிறார்கள். இது அவர்கள் சொன்னதில் ஏறத்தாழ பாதி அளவு. அவர்களுடைய சம்பள விகிதத்தை மாற்றி அமைப்பது என்பது ஏன் இயலவில்லை என்றால்,





These demonstration maistries are regarded as last grade Government servants. They are paid the salary appropriate to that grade and they are not given the higher grade because the educational qualification required for demonstration maistries is only ability to read and write.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த வேலையில் சேர்ந்திருக்கிற பலர் எஸ்.எஸ்.எல்.சி. தேறியிருக்கிறார்கள். ஒரு வருஷம் பயிற்சியும் பெற்றிருக்கிறார்கள். ஆகையால் பி.டபிள்யூ.டி. யில் எப்படி சம்பளம் மேஸ்திரிகளுக்குக் கொடுக்கப்படுகிறதோ அதேமாதிரி இவர்களுக்கும் சம்பளம் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: தலைவரவர்களே, பி.டபிள்யூ.டி. மேஸ்திரி அல்லது ஹைவேஸ் மேஸ்திரிகளோடு இவர்களை ஒப்பிடுவது சரியல்ல. அவர்கள் குறைந்தபட்சம் எஸ்.எஸ்.எல்.சி. படித்திருக்க வேண்டும் என்ற கட்டாயம் இருக்கிறது. ஆனால் இந்த டெமான்ஸ்ட்ரேஷன் மேஸ்திரிகள் "லாஸ்ட் கிரேடு கவர்ன்மெண்ட் சர்வெண்ட்" என்ற வகையில் இருக்கிறார்கள். அதை விட உயர்வான நிலை இவர்களுக்குக் கொடுக்க முடியாது; குறைந்த கல்வித்தகுதிதான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி: சார், இவர்கள் செய்யக்கூடிய வேலைக்கும் படிப்புக்கும் சம்பந்தம் இல்லை. இவர்கள் எல்லோருக்கும் ஒரு வருஷ பயிற்சி கொடுக்கப்படுகிறது. செய்கின்ற வேலைகளின் தன்மையில் அல்லது வரன்முறையில் குறைவு இருக்கிறதா என்றால் அதுவும் இல்லை. ஆகவே, இந்தமாதிரியான வேலை செய்கிறவர்களுக்கு குறைந்தபட்சம் ஊதியம் இவ்வளவு கொடுக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். அதை மறுபரிசீலனை செய்து தக்க நடவடிக்கையை அரசாங்கம் எடுக்குமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: இந்தக் கோரிக்கை பல முறை பரிசீலனை செய்யப்பட்டது. அந்த மாநாட்டில் கூட இந்தக் கோரிக்கை தவிர மற்றக் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. இதை ஏற்றுக் கொள்ளாததற்கு என்ன காரணம் என்பதைச் சொன்னேன். இவர்கள் "லாஸ்ட் கிரேடு கவர்ன்மெண்ட் சர்வெண்ட்" தரத்தில் இருக்கிறார்கள். கல்வித் தகுதி குறைவு. "எபிலிட்டி டு ரீட் அண்ட் ரைட்" இருந்தால் போதும். ஆகவே, இவர்களுடைய சம்பளத்தை உயர்த்த இயலவில்லை. உயர்த்திக்கொடுப்பதாக இருந்தால் இவர்கள் தரத்தில் இருக்கிற மற்ற டிபார்ட்மெண்ட் ஊழியர்களுக்கும் இந்த அளவுக்கு உயர்த்திக்கொடுக்க வேண்டியிருக்கும். ஆகவே, இப்போது இருக்கிற சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க இயலாது.

திருநெல்வேலியில் கண்டியாப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் கருத்து கேட்கப்பட்டபோது அவர்கள் முடியாது என்று எழுதி அனுப்பிவிட்டார்கள். மீண்டும் இதை மாநகராட்சி ஆக்கவேண்டுமென்ற கோரிக்கை இருப்பதால் மேலப்பாளையம் நகராட்சி அதற்கு ஒப்புக்கொண்டால் பரிசீலிக்கலாம் என்று நம்முடைய அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. வி. ஆலடி அருணா : தலைவரவர்களே, இந்த மூன்று நகர மன்றங்களையும் இணைத்து மாநகராட்சியாக ஆக்குவதற்கு இதுவரை சம்பந்தப்பட்ட நகர மன்றங்களில் எந்தெந்த நகராட்சிகள் தீர்மானம் போட்டு அனுப்பி இருக்கின்றன? அனுப்பி இருந்தால் எப்போது அனுப்பி வைக்கப்பட்டது? அதன் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவரவர்களே, மாநகராட்சியாக்குவதற்கு பாளையங்கோட்டை நகராட்சி மட்டும் தீர்மானம் போட்டிருக்கிறது. மேலப்பாளையம் இன்னும் தீர்மானம் எதுவும் அனுப்பவில்லை. அதனால் இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

## புதிய உயர்நிலைப் பள்ளிகள்.

*358 வினா—திரு. வி. ஆலடி அருணா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974–75 கல்வி ஆண்டில் புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் திறக்க வேண்டி, பெறப்பட்ட விண்ணப்பங்கள் எத்தனை?

(இ) அவற்றுள் அரசு அனுமதித்தவை எத்தனை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) 105.

(இ) 57.

திரு. வி. ஆலடி அருணா : தலைவரவர்களே, புதிதாக உயர்நிலைப்பள்ளிகள் ஆரம்பிப்பதற்கு வந்த விண்ணப்பங்களில் 50-க்கு மேற்பட்ட விண்ணப்பங்கள் புறக்கணிக்கப்பட்டதற்கு என்ன காரணம்? ஒரு குறிப்பிட்ட தகுதியுள்ள கிராமத்திற்கு, இவ்வளவு எண்ணிக்கை கொண்ட மக்கள் தொகை இருக்கிற கிராமத்திற்கு ஒரு உயர்நிலைப்பள்ளி தொடங்க வேண்டுமென்று திட்டம் வகுத்து, நாடெங்கும் ஒரு குறிப்பிட்ட அளவுக்கு உயர்நிலைப் பள்ளிகளைத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : சென்ற ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 40 உயர்நிலைப் பள்ளிகள் துவக்குவதற்கு நிதி ஒதுக்கீடு செய்தோம். அதன்படி ஆங்காங்கேயிருந்து வருகின்ற மனுக்களை பரிசீலித்து 57 பள்ளிகளுக்கு இடம் அளித்தோம். பல்வேறு நிபந்தனைகள் இருக்கின்றன. 5 எக்கர் நிலப்பரப்பு இடம்—புறம்போக்கு இடமோ அல்லது தனியார் கொடுக்க முன்வந்தால் அந்த இடமோ—தேவை. ரூ. 10 ஆயிரம் கல்வி நிதி என்று முன்பணமும், ரூ. 12,500 முன்பணமும் கொடுக்க முன்வரவேண்டும். பக்கத்தில் 5 மைல் சுற்றளவுக்கு

உயர்நிலைப் பள்ளிகள் இருக்கக் கூடாது. ஏனென்றால் அப்போது அந்தப் பள்ளிகளின் மாணவ மாணவிகளின் எண்ணிக்கை பாதிக்கப்படக் கூடிய நிலை ஏற்படும். ஆசிரியர்களின் எண்ணிக்கையை மாற்றாமல் இருக்க வேண்டிய அவசியம் அப்போதுதான் ஏற்படும். இப்படிப்பட்ட நிபந்தனைகளை நிறைவேற்றுவதாக முன்வந்த 57 பள்ளிகளுக்கு தரப்பட்டிருக்கிறது. அதேபோல $2\frac{1}{2}$ மைலுக்கு ஒரு உயர் துவக்கப்பள்ளி அமைக்கிற கொள்கை அடிப்படையில் ஆங்காங்கே உயர் துவக்கப்பள்ளிகள் அமைக்கப்பட்டு வருகின்றன. உயர் துவக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றை அமைக்கும்போது மேற்கண்ட விதிகளைக் கையாண்டு நிறைவேற்றி வருகிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வை. பாலசுந்தரம் : தலைவரவர்களே, ஒரு உயர்நிலைப் பள்ளி துவங்க வேண்டுமென்றால் ரூ. 25 ஆயிரம் கட்டவேண்டும் என்று அரசு நிபந்தனை விதித்திருக்கிறது. பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வசிக்கிற இடங்களில் இந்த நிபந்தனை மிகவும் கஷ்டத்தைக் கொடுக்கிறது. ஏழை மக்களால் கொடுக்க முடியாது. எனவே, விதியைத் தளர்த்தி, ரூ. 10 ஆயிரம் கட்டினால் போதும் என்று அரசு அறிவிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மிகச் மிகச் சாதாரண ஊர்களில் கூட, அந்தப் பக்கத்து ஊராட்சி ஒன்றியம் மற்றும் எல்லோரும் சேர்ந்து கட்டி பள்ளியைத் துவக்கியிருக்கிறார்கள். அவர்கள் 25 ஆயிரம் கட்டினாலும் கூட, பள்ளிக் கட்டடத்திற்கு ரூ. 2 லட்சம், ஆசிரியர்களின் சம்பளம் ரூ. 1 லட்சம் என்று இப்படி அரசுக்கும் செலவு இருக்கிறது. ரூ. 25 ஆயிரம் கட்ட வேண்டும் என்பது, அந்த மக்களுக்கு ஆர்வம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்; ரூ. 25 ஆயிரம் கட்டுகிறார்கள் என்றால் ஆர்வத்தோடு எடுக்கின்ற முயற்சி அவர்களிடம் இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, ஐந்து மைல் சுற்றளவுக்கு வேறு பள்ளிகள் இருக்கக் கூடாது என்ற புதிய விதியினைப் புகுத்தி இருக்கிறார்கள். இதனால் பல இடங்களில் பள்ளிகள் ஆரம்பமாக இடைஞ்சலாக இருக்கிறது. எம்.ஈ.ஆர்.-ல் இந்த விதியைப் புகுத்தியது நியாயம்தானா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ஐந்து மைல் சுற்று வட்டாரத்திற்குள் ஒரு பள்ளி ஆரம்பிக்கப்படுமானால் பக்கத்திலுள்ள மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை பாதிக்கப்படலாம். மாணவ மாணவியர்களின் எண்ணிக்கை பாதிக்கப்பட்டால் ஆசிரியர்களின் எண்ணிக்கையும் பாதிக்கப்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் அந்தப் பள்ளியிலிருந்து இந்தப் பள்ளிக்கு மாற்ற வேண்டிய அவசியம் போன்றவை எல்லாம் ஏற்படலாம். இந்தக் காரணங்களுக்காகத்தான் அந்த விதி வைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் சென்னையிலேயும் மற்ற மாநகரங்களிலும் ஒரு பள்ளி துவங்க வேண்டுமானால் ஐந்து மைல் சுற்று வட்டாரம் என்ற விதியைக் கணக்கில் வைத்துப் பார்க்க முடியாது. 3 பர்லாங் தூரத்தில் கூட பள்ளிகள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களில்





விதிகள் தளர்த்தப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற இடங்களில், 5 மைலுக்குள் இருந்தால் அந்தப் பள்ளி பாதிக்கப்படும் என்ற காரணத்தால் இந்த விதி இருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

Dr. H. V. HANDE : Is the Hon. Minister aware of the fact that there is a lot of difficulty for students to get admission into high schools especially in urban areas like Madras City. The Hon. Minister has mentioned about the difficulties with regard to starting of new schools. So, will he consider whether it is not possible to give facilities for such of those schools which want to expand their institutions?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இட வசதியோடு வகுப்புகளை நடத்த விண்ணப்பித்தால் அனுமதி அளிக்கப்படுகிறது. இட வசதி இல்லை என்ற காரணத்தால், ஆங்காங்கே வகுப்புகளை ஷிப்ட் சிஸ்டத்தில் வைக்கலாம் என்று குறிப்பிட்டிருக்கிறோம். சென்னையில் சில பள்ளிகள் காலை நேரத்திலும் மாலை நேரத்திலும் நடக்கின்றன. இருக்கின்ற இட வசதியை வைத்துக் கொண்டு அதிகப்படியான மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவரவர்களே, வெங்கடாசலம் பள்ளியை ஹைஸ்கூலாக ஆக்க வேண்டுமென்று ஐந்தாண்டுகளுக்கு முன்பு கொடுத்த மனு என்ன ஆயிற்று என்று அறிய விரும்புகிறேன். இந்த ஆண்டு—1974–75-ல் 52 புதுப்பள்ளிகளைத் திறப்பது என்று சொன்னார்கள். அந்தப் பள்ளியைப் பற்றின விவரம் காணப்படவில்லை. அந்த மனு என்ன ஆயிற்று, என்ன தாமதம், எந்த விதமான பதிலும் இல்லை. காரணம் அறிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் முழு விவரத்தையும் தருகிறேன். அல்லது அம்மையார் கேட்பார்களேயானால் விவரத்தை அறிந்து சொல்கிறேன்.

*359 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு கல்வி—சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருப்புவனம் ஒன்றியம், பழையனூரில் ஓர் உயர்நிலைப் பள்ளி அமைப்பதற்கு அரசிடம் செயற்குறிப்பு உண்டா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. த. சோனையா : தலைவரவர்களே, ஐந்து மைல் சுற்று வட்டாரத்திற்கு ஒரு உயர்நிலைப் பள்ளி என்று விதிமுறைகள் இருக்கின்றன என்று கூறினார்கள். பழையனூர் சுற்று வட்டாரத்தில் ஐந்து மைல்களுக்கு என்ன, 7 மைல்களுக்குள் கூட ஒரு பள்ளி இல்லாத காரணத்தால் அங்கே ஆரம்பப் பள்ளியில் பயின்ற மாணவர்கள் உயர் நிலைப்

பள்ளிக்குச் செல்வதற்கு சிரமப்படுகிருர்கள். ஆகவே, முக்கியமான இந்தப் பிரச்சினையில் அங்கே வாழ்கின்றவர்களின் நிதி வசதி இல்லாத நிலையை கருத்திற் கொண்டு விரைவிலேயே அங்கே ஓர் உயர்நிலைப் பள்ளி அமைக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : 1974–75-ல் ஒரு உயர் நிலைப் பள்ளி துவங்க வேண்டும் என்ற ஒரு கருத்து தெரிவிக்கப்பட்டது. ஆனல் அது இயலவில்லை. காரணம், முதலிலே நான் குறிப்பிட்டபடி நிபந்தனைகளையெல்லாம் நிறைவேற்றத்தக்க சூழ்நிலை அங்கே இல்லை என்று அறிகிறேன். அத்தகைய நிபந்தனைகளை நிறைவேற்றுகின்ற சூழ் நிலை இருக்குமாளுல் பரிசீலிக்கப்படும். திருப்புவனத்திலுள்ள ஒரு உயர் நிலைப் பள்ளியை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து பெண்களுக்கு தனித் தனி வகுப்புகள் 11-வது வகுப்பு வரை தொடங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசினர் மகளிர் கல்லூரி, திண்டுக்கல்.

*360 விளு—திரு. நா. வெ. குருசாமி : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட விளுக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திண்டுக்கல் அரசினர் மகளிர் கல்லூரியில் பணியாற்றுகின்ற ஆசிரியர்களுக்கு தங்கும் விடுதி கட்டும் செயற்குறிப்பு அரசு பரிசீலனை யில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந் தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

(2) ஓர் உரிமைப் பிரச்சினைக்கு பேரவைத் தலைவர் தம் அறையிலேயே அனுமதி மறுத்து அதை எழுப்பிய உறுப்பினர்களுக்கு கடிதம் மூலம் தம் முடிவைத் தெரிவித்தது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, இன்றைக்கு ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் இந்த மன்றத்துக்கு முன்ளுல் கொண்டுவரப்பட வேண்டுமென்று கொடுத்திருந்தேன், அதற்கு, மாண்புமிகு பேரவைத்



தலைவரிடமிருந்து வந்த பதிலில், "The Speaker has withheld consent" என்று மட்டும் குறிப்பிட்டிருக்கிருர்கள். அட்ஜர்ன்மெண்ட் மோஷன், மற்றும் மற்றவைகள் என்று சொன்ளுல், அப்போது நீங்கள் அதற்கு கன்ஸண்ட் வித்ஹோல்ட் பண்ணிவிட்டால் அதைப்பற்றி உடனடியாக எழுப்புவதற்கு அதிகாரம் இல்லை. ஆளுல் ப்ரிவிலேஜ் சம்பந்தமாக நமது விதிகளிலே—கௌல் அண்ட் ஷக்தர் அவர்களுடைய பிராக்டிஸ் அண்ட் ப்ரொஸீஜர் ஆப்ப ார்லிமெண்ட் என்ற புத்தகத்திலே தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிருர்கள்.—

" In giving his consent, the Speaker is guided by the following conditions prescribed for the admissibility of questions of privilege :—

(1) Not more than one question shall be raised at the same sitting.

(2) The question shall be restricted to a specific matter of recent occurrence ; and

(3) The matter requires the intervention of the House. . . ".

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. தங்கமணி அவர்களே, அந்தப் பாராவுக்கு முன் பாராவை தயவு செய்து படியுங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : என்னுடைய பாயின்ட் என்ன என்று சொன்ளுல், 'I am withholding consent' என்று சொன்ளுல், அது ஒரு பிளாங்கட் ஆர்டர் மாதிரி இருக்கிறது. You have to give reasons என்று சொல்வது ப்ரிவிலேஜ் சம்பந்தமாக எப்படிப் பொருந்தும்? ஒரு குறிப்பிட்ட விஷயத்தைப் பற்றி இல்லையா? ரீசண்ட் அக்கரன்ஸ் பற்றி இல்லையா? இந்தச் சபையின் இண்டர்வென்ஷன் தேவை என்று சொல்லவில்லையா? நான் எழுப்பியுள்ள விஷயத்தில் இண்டர்வென்ஷன் தேவை என்று எழுதியிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காரணம் காட்டாமல் வித்ஹெல்ட் என்று சொல்லவில்லை. பிரைமா பேசி கேஸ் இல்லை என்று இருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : அப்படி அல்ல, அது உங்கள் கன்செண்ட் கொடுத்ததற்குப் பிறகு. ஐ ஆம் ஸ்ட்ராங் ஆன் மை கிரவுண்ட்.

" A member may, with the consent of the Speaker, raise a question involving a breach of privilege either of a member or of the House or a Committee thereof,

[திரு. கே. டி. கே. தங்கமணி] [1975 மார்ச் 18

The Speaker is not guided by anything except the three conditions.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்த மூன்றோடு பார்க்கிற நேரத்தில் ப்ரைமா பேசி கேஸ் இல்லை என்று....

திரு. கே. டி. கே. தங்கமணி: ப்ரைமா பேசி கேஸ் இல்லை என்கிற கொஸ்டின் இல்லை.
Prima facie case is another thing. After you give consent to raise, I have to explain whether there is a prima facie case.

என்னுடைய பாயிண்ட் என்னவென்றால் கன்செண்ட் கொடுக்கிறதற்கு உங்களுக்கு ரெஸ்ட்ரிக்ஷன் இருக்கின்றது. மற்ற விஷயங்களில் சொல்கிற மாதிரி கன்செண்ட் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. இதில் முக்கியமான விஷயம் வருகிறது. பாயிண்ட் என்ன என்றால் இண்டர்வென்ஷன் வந்து—
Intervention of the house is necessary.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அப்படி ஒரு நிலைமை வந்தால் எந்தப் ப்ரிவிலேஜ் மேட்டர் மீதும் பேரவைத் தலைவர் தன் அறையிலேயே தீர்ப்பு அளிக்க முடியாது என்ற நிலைமை ஏற்படும்.

திரு. கே. டி. கே. தங்கமணி: சொல்கிற வாதம் ஒப்புக் கொள்வதாக இருந்தால் பேரவைத் தலைவர் தீர்ப்பு அளிக்க வேண்டும். நீங்கள் தீர்ப்பு அளிப்பதாக இருந்தால் காரணம் சொல்ல வேண்டும். கன்செண்ட் கொடுக்கத் தயாராக இல்லை என்பதற்குக் காரணம் சொல்ல வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதுதான் பல முறை சொல்லி இருக்கிறேன். பேரவைத் தலைவர் காரணம் காட்டினார் என்றால், அந்தக் காரணத்தைக் காட்டி அது சரியில்லை என்று வாதிடும் ஒரு நிலைமை உருவாகும். அந்தக் காரணத்தால்தான் அனுமதி மறுக்கும்போது, காரணம் காட்டக் கூடாது என்று பாராளுமன்றத்திலே ஒரு மரபாக மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றது என்று சொல்கிறேன். இருக்கின்ற மரபுகளைத்தானே நான் சொல்ல முடியும்.

THIRU K. T. K. TANGAMANI: Sir, on certain things the Hon. Speaker has got complete discretion. But in regard to privilege motions, the discretion is restricted. By using your discretion it cannot be shut out.

இந்த விஷயத்தைப் பொறுத்தவரையில் What I say is கன்செண்ட் கொடுப்பது கூட It is subject to certain restrictions என்று சொல்கிறேன். நீங்கள் கன்செண்ட் கொடுக்க முடியாது என்று சொல்ல முடியாது. It is a blanket order, எனக்குக் கொடுத்தது.



1975 மார்ச் 18 |

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பிளாங்கெட் ஆர்டர் இல்லை. பிரிவிலேஜ் ரெய்ஸ் பண்ணுகிற அளவுக்கு அதற்கு நான் கன்செண்ட் கொடுக்கிற அளவுக்கு விவரம் இல்லை என்பதைப் பற்றித் தெரிவித்து இருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: அப்படியானால் நீங்கள் பொறுப்பற்ற முறையில் பிரிவிலேஜ் ரூலிங் கொடுத்த மரபு வந்து விடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நம்முடைய 187-வது விதியில் கூட
The right to raise a question of privilege shall be subject to the following restrictions, viz.—(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrance; (ii) A prima facie case of a breach of privilege must be made out.

என்றுதான் இருக்கிறது. நான் இதைத்தான் சொன்னேன்.

இரண்டாவதாக சொல்கிற சமயத்தில் பிரைமா பேசி கேஸ் இல்லை என்று அதனால் கன்செண்ட் வித்ஹோல்ட் பண்ணியிருக்கிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி: விளக்கங்கள் வந்து அது இண்டர்வென்ஷன் ஆஃப் தி ஹவுஸ் என்று கருதிக் கொண்டு கன்செண்ட் வித்ஹோல்ட் பண்ண வேண்டுமென்று தெளிவாக இருக்கின்றது. ஆகவே, எனக்குக் கொடுத்து இருக்கின்ற பிரிவிலேஜ் அளிக்கப்பட வில்லை என்று நாளைக்கு வரக்கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் கன்செண்ட் கொடுக்கவில்லை. பிறகு சொல்லுங்கள்.

THIRU K. T. K. TANGAMANI: Intervention of the House is necessary.
பாராளுமன்றத்தில் ஸ்பீக்கர் பலமுறை ரூலிங் கொடுத்து இருக்கின்றார். நெருக்கடி நிலை ஏற்படும் என்ற காரணத்திற்காக காரணம் காட்ட வேண்டாம் என்ற நிலை மேற்கொள்ளப்பட்டு அப்படி தீர்ப்பு கொடுத்து இருக்கிறார்கள் என்றால் ரெஸ்ட்ரிக்டிவ் அதிகாரம் இருக்கிறது. இதை வைத்து காரணம் சொல்லவில்லை என்றால் அந்தக் காரணம் இருக்குமானால் இந்தக் காரணம் சரியில்லை என்று சொல்லலாம். But what you had done is giving me a blanket order saying 'I am withholding consent'.

கிட்டத்தட்ட மூன்று ஆண்டு காலத்தில் பாராளுமன்றத்தில் 45—46 வருடத்தில் மிகத் தெளிவாக விவாதிக்கப்பட்டு, அதன்படி அமைச்சர் ஒரு விஷயம் சொல்லிவிட்டால் சபையை எப்படி கண்ட்ரோல் பண்ணுவது என்ற வகையில் இந்த அதிகாரம் பிரிவிலேஜ் என்ற உருவத்தில் வருகிறபோது

ஒரு முக்கியமான விஷயம் இந்த ஹவுசுடைய இன்டர்வென்ஷன் தேவை என்று நீங்கள் கருதினால் நாங்கள் அப்போது சில பிரிவிலேஜுகள் கொண்டு வருகிறோம். வேறு எந்த முறையிலும் கொண்டு வரவில்லை. இப்போது உங்களுடைய உத்தரவின் பேரிலே ஒரு பிரிவிலேஜ் மோஷன் . . . . .

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டரை ரெயிஸ் பண்ணுங்கள். அதற்கு மேலே தீர்ப்பு கொடுக்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : I am not raising a point of order. But I am making a submission.

I am making a submission on the basis of the letter I had received wherein you had said " I am withholding consent ". What I want to submit to the Hon. Speaker is that in exercising your discretion, it will have to be exercised in a particular way அதற்கு பலவிதமான ரூலிங்கள் இருக்கின்றன என்று சொல்கிறேன். இனிஷியல் ஸ்டேஜிலே இநத கன்செண்ட் மறுப்பதற்கு சொல்லிய காரணம் இந்த காரணங்கள் சரியில்லை; ஆகையால் ரெஸ்ட்ரிக்ட் பண்ணுங்கள் என்று நான் கேட்கிறேன்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தீர்ப்பு சொல்கிறேன். காரணம் காட்டக் கூடாது. காரணம் காட்டினால் இப்போது நீங்கள் காட்டுகிற காரணம் இந்த வகையில் பொருந்தாது என்று சொல்ல வாய்ப்பு இருக்கும். காரணம் காட்டினால் அந்தக் காரணத்தை வைத்துக்கொண்டு ஒரு குழப்ப நிலை உண்டாகும். ஆகையால் காரணம் காட்டக் கூடாது என்பதில் பாராளுமன்ற முறையை மேற்கொண்டு இருக்கிறோம்.

THIRU R. PONNAPPA NADAR : Sir, I may be permitted to intervene and add a few words regarding this matter. I do not want to introduce the matter that has been disallowed by the Hon. Speaker,. So far as this question of privilege is concerned that is a paramount matter and it will gain precedence over other matters. In this particular matter discretion that has been exercised by the Hon. Speaker is not unfettered, because when it is a matter which affects the entire House, the mover or the Member who has sponsored or tabled this motion should have been at least consulted in the House or in the Chamber of the Speaker and the reasons therefor let known to him.

Sir, it may be argued that the reasons have been recorded, but not communicated. Suffice it for me to say that the procedure adopted is not very happy. So far as the question whether there is a *Prima facie* case or not, that is a matter which requires very careful scrutiny and study and this is an eminently fit case for such study.



I had occasion to talk to Mr. Tangamani regarding this important matter. The Hon. Speaker has given his decision. I do not want introduce the matter in another form. But I should say that we are very much aggrieved and I should say that the House is entitled to know all these matters. In all these matters, unfettered right is not given to the Speaker, absolute right is not given to the Speaker and the Speaker is the officer of the House and as such when important matters like this are decided, it would be better and it would be proper that salient points are considered before embarking upon a decision.

With all respect, I once again appeal to the Hon. Speaker to reconsider this. All of us sitting in the Opposition feel that it is eminently a fit case for reconsideration so that we can have a considered view and this House, and the Members here and the public at large will have an opportunity to know what is the point of privilege that has been raised by the hon. Members. That is my submission, Sir.

DR. H. V. HANDE : Sir, in support of the views expressed by the Leader of the Commuuist Party, I would like to invite your attention to certaion rules in our Assembly Rules. Rules 188 and 189. They clearly specify the point from which the question of *Prima Faeie* starts. And that is what the hon. Member, Mr. Tangamani was also trying to make out.

The question is whether a decision on a privilege motion should be taken in the Sanctum Sanctorum of the Speaker's Chamber, the question whether there is *Prima Facie* case is to be decided inside the four walls of the Assembly or whether it should be decided within the four walls of the Speaker's Chamber has got to be decided. The Speaker's contention is the question whether there is *Prima Facie* case or not should be decided in his Chamber itself; we are trying to make out that it does not start in the Speaker's Chamber, it is not to be decided out of the pen of the Speaker in his Chamber........I will explain.. ..He has to see whether it is in order and if it is not in order, he has to find out why it is not in order and say what are the rasons which prompt the Speaker to say that it is not in order. Now, hon. Member, Mr. Kovai Chezhiyan and Mr. Tangamani, both of them have received identical communication; the same type of letter and the decision is that no ***PrimaFa: case* has been made out.**

Here in the rule it is clear. Rule 188 states, "when a Member has with the consent of the Speaker raised a matter of privilege......". and so then only the question of *Prima Facie* case starts..........I will explain, please hear me. I would like to invite the attention of the Speaker that these rules were framed after a lot of deliberation and the rule makers have provided checks and counter-checks so that the powers of the speaker, as the hon. Member Mr. Ponnappa Nadar rightly pointed out, should not be unfettered. The Speaker, he himself, unto himself- places certain checks and counter-checks so that he will not be tempted to think he has unfettered powers. That is why in the Assembly rules we have checks and counter-checks provided to say that the House is supreme.

I also invite the attention of the Speaker to the fact that only last year or the year before last we amended the rules. According to that, the Hon. Leader of the House comes before the House and makes out a motion "that the Assembly be adjourned SINE DIE' and only after the majority of the Members of the Assembly gives consent to adjourn the House SINE DIE, the Hon. Speaker adjourns the House SINE DIE. Formerly it was not like that. I am only trying to point out that the powers of the Speaker as per the amended rules, are to a certain extent curtailed. That is also a sign of the growth of democratic practice and parliamentary practice. If a *Prima Facie* case can be made out.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : டாக்டர் ஹாண்டே அவர்கள் குறிப்பிட்டபடி பேரவையை "சைனிடை" (sine die) யாக ஒத்தி வைப்பது என்றால் இந்த அவையைக் கேட்டுச் செய்யவேண்டும் என்று விதியிலேயே திருத்தம் செய்யப்பட்டிருக்கிறது. அதைப்போல இந்த பிரிவிலேஜ் மோஷன்களைப் பொறுத்த வரையிலும் இந்த ஹவுசில்தான் டிசைட் பண்ண வேண்டுமென்று விதியில் நீங்கள் திருத்தம் செய்யலாம். அப்படி விதியைத் திருத்திவிட்டால் எனக்கு ஒன்றும் பிரச்சினை இல்லை.

Dr. H. V. HANDE : That is a trend towards which we are progressing. I am only trying to invite the attention of the Hon. Speaker to the rules as they are. That is an indication that the Speaker has no unfettered powers and when it was wide formerly, at a particular point of time, we felt that the Speaker should not have unfettered powers. The Hon. Chief Minister also would agree. At that time, at that particular point of time, it was felt so and the rule makers felt that the powers of the Speaker should be taken away and they have taken away and transferred them to the House.



Similarly, now a very irksome point has come in this particular case, and the hon. Member, Mr. Tangamani has raised a very valid point. I would like to say that a very tricky situation has arisen. This is an important point and we can even decide as to the future method in which we want to dispose of privilege motions...........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதை ரூல்ஸ் கமிட்டியில் செய்யுங்கள்.

Dr. H. V. HANDE : The problem is growing and we all feel that the powers of the Members should be increased and that.... ..........இங்கே ரூல்ஸ் கமிட்டியிலே இதைப்போல பேரவைத் தலைவர் தம் அறையிலேயே ப்ரிவிலேஜ் மோஷன்களை டிஸ் அலவ் பண்ணக்கூடாது என்று விதியிலேயே திருத்தம் செய்வதை ஒத்துக்கொள்கிறேன். என்றாலும் திஹவுஸ் இஸ் சுப்ரீம். இப்போது பிரச்சினை எல்லாம் ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்தால் அதுபற்றி நீங்கள்தான் முடிவு செய்ய வேண்டும். அது உங்கள் அறையிலேயா ? இந்த அவையிலா ? நான் சொல்வது இந்த அவையில்தான் என்பதாகும்.

Mr. SPEAKER : "For some time it was the practice to inform the Members of the reasons for which consent was with held by the Speaker. It was however found that Members tried to argue with the Speaker in the House on the reasons. The practice of stating the grounds on which a notice was disallowed was, therefore, discontinued."

டாக்டர் எச். வி. ஹாண்டே : இது முன்னால். அதற்குப் பிறகு பாராளுமன்றத்தில் கூட இந்த நடைமுறையைத் திருத்திக்கொண்டு விட்டார்கள். ப்ரைமாபேசி கேஸ் இருக்கிறதா இல்லையா என்பதை பேரவைத் தலைவர் முடிவு செய்யவேண்டிய இடம் இந்த அவைதான். இந்தத் திருத்தத்தை ஒட்டித்தான் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த விவரத்திற்குள் நான் செல்ல விரும்பவில்லை. நான் காலையில் பல காரணங்களைக் காட்டி, தங்களிடத்தில் ஒரு ப்ரிவிலேஜ் மோஷன் கொடுத்திருந்தேன். அதற்கு தங்களிடத்தில் இருந்து எனக்கு ஒரு கடிதம் வந்திருக்கிறது.

**The Hon. Speaker has with held his consent.**
என்று மொட்டையாக ஒரு கடிதம் வந்திருக்கிறது. என்னுடைய வாதம் எல்லாம்—நான் அந்தத் தீர்மானத்தின் உள் விவரத்திற்குச் செல்லவில்லை—இந்த மன்றத்திற்கு சில அதாரிட்டிஸ் இருக்கின்றன. அதை யாரும்

(திரு. கோவை செழியன்) [1975 மார்ச் 18

க்வஸ்டின் பண்ண முடியாது. டிமாண்டுகள், மனி பில் சம்பந்தப்பட்ட வரை இந்த மன்றத்தின் ஒப்புதலைப்பெற்றே கொண்டுவர முடியும். அதை யார் மீறினாலும்—அதை யார் க்வஸ்டின் செய்தாலும் அது இந்த மன்றத்தின் உரிமையை மீறியதாகும். நான் தங்களிடம் குறிப்பிட்டது மணி சம்பந்தமான பிரச்சினையாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் என்னுடைய கன்சென்டை வித்ஹோல்டு பண்ணி உங்களுக்கு என் முடிவை அறிவித்துவிட்டேன். நீங்கள் திரும்ப வேண்டுமென்றால்—இன்னின்ன காரணங்களால் அந்த முடிவை ரீகன்சிடர் பண்ண வேண்டுமென்று எனக்கு எழுதிக் கொடுங்கள். அப்போதுதான் தாங்கள் அதைப்பற்றி இந்த அவைக்கு அதைக் கொண்டுவர முடியுமே தவிர இப்போது கொண்டுவர முடியாது.

திரு. கோவை செழியன் : நான் டீடைல்ஸ்களுக்குள் போகவில்லை. ரீகன்சிடர் பண்ணவேண்டும் என்றுதான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படிக் கேட்பதற்கு உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதனை ரீகன்சிடர் பண்ணவும் நான் கடமைப் பட்டிருக்கிறேன். உடனேயே ரீகன்சிடர் பண்ணுங்கள் என்று சொல்வது முடியாது. அதைப்பற்றி தனியாக எழுதிக்கொடுங்கள்.

திரு. கோவை செழியன் : ஒரே ஒரு கருத்து, தயவுசெய்து ரீகன்சிடர் பண்ணுங்கள். என்னுடைய வாதமெல்லாம், டீடெய்ல்சுக்கே போகவில்லை—தயவு செய்து பயந்துகொண்டு அப்படியெல்லாம் சொல்லாதீர்கள் .......... ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எனக்கென்ன பயம் ?

திரு. கோவை செழியன் : இந்த ஹவுசினுடைய அத்தாரிட்டியை க்வஸ்டியன் செய்கிற பிரச்னை இது. ஆகவே, அதைக் காப்பாற்ற வேண்டிய பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. மறுபடியும், இன்றைக்கு இல்லாவிட்டாலும், நாளைக்காவது கொண்டுவர நீங்கள் மறுபரிசீலனை செய்யுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் அதைத்தான் எழுதுங்கள், நான் பார்க்கிறேன்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : So far as Rule 186 is concerned, it says :—

"A matter of privilege must be raised after the questions and before the list of the business for the day is entered upon :"

So, a question of privilege can be just raised in the House ........



1975 மார்ச் 18]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்குப் பின்னால் படியுங்கள் Rule 188 says "When a Member has with the consent of the Speaker...."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : "Consent" does not mean consent obtained in your room. "Consent" can be obtained on the floor of the House. If I raise a point of order, unless the Speaker permits me, or gives me consent, I cannot raise it. A question of privilege............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் சொல்கிறேன், இரண்டு நிலைமைகள் இருக்கின்றன. ஒன்று, நடந்துபோன நிகழ்ச்சியையொட்டி பிரிவிலெஜ் எழுப்பலாம். இன்னொன்று, இந்த அவை நடைபெறுகின்ற நேரத்திலே பிரிவிலேஜ் எழுப்பலாம். நீங்கள் இரண்டையும் எழுப்புவதற்கு முறைகளிருக்கின்றன. நடந்துபோன நிகழ்ச்சியைப் பற்றி பிரிவிலேஜ் எழுப்ப, நீங்கள் நோட்டீஸ் கொடுக்க வேண்டும். அந்த நோட்டீஸை வைத்துக்கொண்டு, பேரவைத் தலைவர் கன்சென்ட் கொடுத்த பிறகு, அவர் அதனை அவையிலே எழுப்ப அனுமதி கொடுத்த பிறகு, எழுப்பவேண்டும். மற்றொன்று, அவையிலே நடப்பதைப் பற்றி, இப்பொழுது இந்தமாதிரி நிகழ்ச்சி நடந்திருக்கிறது ; நான், பிரிவிலேஜ் எழுப்ப வேண்டுமென்று கேட்பது ஒரு முறை. ஆனால், நடந்து போன நிகழ்ச்சியைப் பற்றி எழுப்பும்போது, பேரவைச் செயலாளருக்கு அல்லது பேரவைத் தலைவருக்கு நோட்டீஸ் கொடுத்து, அதற்குப் பேரவைத் தலைவர் அனுமதி கொடுத்தபிறகுதான் எழுப்பவேண்டும்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : There is no provision like that, that is, that notice should be given.

MR. SPEAKER : See Rules 184 and 185. Rule 184 says :—

"A Member wishing to raise a matter of privilege shall before the commencement of the sitting of the day on which he proposes to raise the point, leave with the Speaker a written notice of the matter proposed to be raised ........."

THIRUMATHI T. N. ANANDANAYAKI : "Provided that in respect of.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவையிலே நடைபெறுகிற நிகழ்ச்சியென்றால், அதற்கு நோட்டீஸ் தேவையில்லை, நடந்துபோன நிகழ்ச்சி பற்றியென்றால், நோட்டீஸ் கொடுக்கவேண்டும். நோட்டீஸ் கொடுத்தபிறகு அவையிலே முடிவு செய்யலாம் அல்லது அறையிலே முடிவு செய்யவேண்டும்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நீங்கள் அறையிலேதான் முடிவு செய்யவேண்டுமென்று சொல்வது —It is not a must.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் தனித்தனியாகப் பார்க்க முடியாது. பிரிவிலேஜ் பற்றிய எல்லா விதிகளையும் சேர்த்துத்தான் சொல்ல வேண்டுமே தவிர......

THIRUMATHI T. N. ANANDANAYAKI : It is not a must.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரண்டு நிலைமைகளையும் படியுங்கள். இரண்டு நிலைமைகளையும் சேர்த்துப் பாருங்கள்.

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரிவிலேஜ் சம்பந்தமாக "மே" சொல்லியிருக்கக்கூடிய விஷயங்களை நான் வாசிக்கலாம் என்று நினைக்கிறேன்.

"In the House of Commons, U.K., a complaint of breach of privilege is generally brought before the House without notice. The Speaker, however, permits it to be raised in the House and gives it precedence over the pre-arranged programme of public business only if he is satisfied that : . ."

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நம்முடைய விதிமுறைகள் எப்படி இருக்கின்றன என்றால், நம்முடைய விதிமுறைகள் தெளிவாக இல்லையென்றால்தான் "மே" பார்லிமென்டரி பிராக்டிஸுக்கு நாம் போக வேண்டும். நம்முடைய விதிமுறைகளில் தெளிவாக இருக்கும்போது, நாம் "மே" பார்லிமென்டரி பிராக்டிஸுக்கு போகவேண்டியதில்லை.

திரு. கே. டி. கே தங்கமணி : நம்முடைய விதிமுறைகளை வைத்துக் கொண்டே தாங்கள் எடுக்கக் கூடிய நிலை சரியல்ல என்பது என்னுடைய வாதம்.

"..only if he is satisfied that :

(i) a prima facie case of breach of privilege has been made out; and

(ii) the mattter has been raised at the earliest opportunity. In recent years it has become the regular practice for the Speaker to defer to the next sitting day a ruling on whether a prima facie case of breach of privilege has been made out.





Many motions, more or less affecting privilege, have been brought forward in their turn with other notices of motions ; and on occasions matters to which the Speaker has refused precedence as a matter of privilege have been raised on a motion moved at a later date.."

இதிலே இருப்பது என்ன விவகாரம் என்றால், அதற்குப் பிறகுதான் "ஜெனரல் பிரின்சிப்பில்ஸ்". இந்த ஜெனரல் பிரின்ஸிப்பில்ஸை அடிப்படையிலே வைத்துக் கொண்டு சில விதிகளை வகுக்கின்றோம். அப்படி விதிகளை வகுக்கும் போது அதற்கு உட்பட்டுத்தானிருக்க வேண்டும்.

MR. SPEAKER : "This difference between the procedure of the House of Commons, U.K. and Lok Sabha arises from the fact that comprehensive rules of procedure on the subject of privileges have been embodied in Chapter XX of the Rules of Procedure and Conduct of Business in Lok Sabha while no such detailed provisions are laid down in the Standing Orders of the House of Commons."

அங்கே தெளிவான விதிமுறைகளில்லை. நமக்குத் தெளிவான விதிமுறைகள் இருக்கின்றன. இன்றென்று, நம்முடைய விதிமுறைகளிலே தெளிவில்லாத நேரத்தில் நாம் பிரிட்டிஷ் பார்லிமென்டரி விதிமுறைகளை பின்பற்ற வேண்டுமே தவிர, நம்முடைய விதிமுறைகள் தெளிவாக இருக்கும் போது அது தேவையில்லை. ஆகவே, நீங்கள், "கோட்" பண்ண வேண்டிய அவசியமில்லை. கொடுத்த உடனே, எடுத்துக்கொள்ளலாம் என்று என்ன விதி இருக்கிறது? தெரியவில்லையே.

திரு. கே. டி. கே. தங்கமணி : பிரிவிலேஜ் சம்பந்தமாக என்ன சொல்கிறேனென்றால், "மே"-வில் இருப்பதை. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : "மே"-வுக்கு எப்பொழுது போக வேண்டும்? நம்முடைய விதிமுறைகளில் தெளிவாக இல்லாவிட்டால், "மே"-வுக்குப் போக வேண்டிய அவசியமிருக்கிறது.

இப்பொழுது அதற்கு கன்சென்ட் வித்ஹோல்ட் பண்ணியிருக்கிறேன். உங்களுடைய ஃபீலிங்ஸை எடுத்துக் கொண்டு நீங்கள் காரணத்தைக் காட்டி, மறுபடியும் ரீ-கன்சிடர் பண்ணவேண்டுமென்று எழுதுவீர்களானால் நான் ரீ-கன்சிடர் பண்ணுகிறேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : சார், அப்படியென்றால், முக்கியமான பிரிவிலேஜினுடைய இம்பார்டன்ஸே போய்விடுகிறது. இந்த பிரிவிலேஜை நாளைக்கு எடுக்க வேண்டுமென்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நாளைக்கு எடுக்கிறேன் என்று கூடச் சொல்லவில்லை. நாளைக்கு எடுங்கள் என்று ரீ-கன்சிடர் பண்ணுங்கள் என்று எழுதிக் கொடுத்தால், என்ன முடிவு எடுக்கலாம் என்று நாளைக்குச் சொல்வதாகச் சொன்னேன்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நீங்கள் நாளையென்றால் பரிசீலனை பண்ணவேண்டிய அவசியமே இல்லையென்பது என்னுடைய வாதம். சில சமயங்களில் அம்மாதிரி, மற்ற மோஷன்ஸ் மாதிரி ஒத்திப்போடுகிறார்கள். அதை கிளப்பியவர் ஏற்றுக் கொள்கிறார் என்றால், செய்யலாம். இதனை நான் ஏற்றுக் கொள்ளவில்லை ஒத்திப்போடுவதற்கு. ஒன்று, இன்றைக்கு எடுங்கள், இல்லாவிட்டால் அதனுடைய முக்கியத்துவமே போய்விடுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் கன்செண்ட் வித்ஹோல்ட் பண்ணிவிட்டேன். அதைப்பற்றி நீங்கள் மறுபடியும் எழுப்புவது முறையல்ல. நீங்கள், ரீ-கன்சிடர் பண்ண வேண்டுமென்று எழுதுங்கள். நான் மறுபடியும் பரிசீலனை செய்கிறேன்.

THIRU K. T. K. TANGAMANI : Where is the basis for me to request you to reconsider your decision ?

அதை ரீ-கன்சிடர் பண்ண நீங்கள் என்ன காரணங்கள் சொல்கிறீர்கள் என்று தெரியவில்லை. உங்களுடைய சிந்தனையிலே இருக்கக்கூடிய காரணங்கள் எப்படி எங்களுக்குத் தெரியும்? ஆகவே, "மியர்லி ரீ-கன்சிடர்" பண்ணுங்கள் என்று நாங்கள் எழுதத் தயாராயில்லை. நீங்கள் வேண்டுமானால், இன்ன இன்ன காரணங்களால் மறுக்கப்பட்டது என்று எழுதுங்கள், எழுத்து மூலமாகப் பதில் கொடுங்கள், நாங்கள் பிறகு எழுதுகிறோம். வெறுமனே கன்செண்ட் வித்ஹெல்ட் என்று சொன்னால் நாங்கள் எப்படி எழுதிக்கொடுப்பது?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தங்கமணிக்கெல்லாம் திருப்பித் திருப்பிக் காரணத்தைச் சொல்ல வேண்டியதில்லை; அவர் இவ்வாறு எழுப்புவது முறையல்ல.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நம்முடைய விதிமுறைகளிலே தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. 187-வது விதிமுறை

"The right to raise a question of privilege shall be subject to the following restrictions, viz.:—

(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence ;

(ii) A *prima facie* case of a breach of privilege must be made out."

என்றிருக்கிறது. இவை இரண்டும் இங்கே வருவதற்கு முன்னாலே தாங்கள் நினைத்தால் அங்கே முடிவு செய்யலாம்.

"A *prima facie* case of a breach of privilege must be made out.."

அது முக்கியமான காரணம். ஆகவே, அறையிலேயே சபாநாயகர் அவர்கள் இதைப்பற்றி முடிவு. . .





டாக்டர் எச். வி. ஹாண்டே : அறையிலே என்று விதியில் இல்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அவர் தற்போது அறை என்பதால் அறை என்று சொன்னேன்—சபாநாயகர் என்று வைத்துக் கொள்ளுங்கள். Rule 188 says :

When a member has with the consent of the Speaker raised a matter of privilege......

கன்செண்ட் என்று வருகிறபோதுதான் பிரைமாஃபேஸி கேஸ் வருகிறதா என்பதை அறையிலே முடிவு பண்ணலாம், அல்லது இங்கேகொண்டு வந்து முடிவு பண்ணலாம். மாண்புமிகு அவைத் தலைவர் எடுத்துக்கொண்டிருக்கிற முடிவு, கன்செண்ட் கொடுக்க அவைத் தலைவரே முடிவு காணலாம். இந்த அவையினுடைய கருத்துக்களைக் கேட்டதற்குப் பிறகும் முடிவு செய்யலாம். இங்கே அவையினுடைய கருத்துக்களை கேட்டதற்குப் பிறகு கூட, பிரைமாஃபேஸி கேஸ் இல்லையென்று முடிவு செய்ய அவைக்கும் உரிமை இருக்கலாம். இப்பொழுது செய்திருக்கிற முடிவு, அவைத் தலைவர், தமக்கிருக்கிற விதி முறைகளின்படி தான், கன்செண்ட் வித்ஹெல்ட். என்று கொடுத்திருக்கிறேன் என்று சொல்கிறார்கள்.

(முற்பகல் 10.30)

திரு. க. உரா. எட்மண்ட் : பேரவைத் தலைவர் அவர்களே, உரிமை மீறல் சம்பந்தமான விதிமுறைகள் நம்முடைய சட்ட மன்ற விதிமுறைகள் 184 லிலிருந்து 192 வரையிலே நம்முடைய விதிமுறைகள் புத்தகத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. பேரவைத் தலைவர் அவர்கள், சட்ட மன்ற விதிமுறைகளின் படிதான் நடவடிக்கைகள் நடத்திக்கொண்டு வரப்படுகின்றன என்று சொன்னார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். நான் இந்த நேரத்திலே ஒரு சந்தேகத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். 184வது விதிமுறையிலிருந்து 192 வது விதிமுறை வரையில் உள்ள விதிமுறைகளில் எந்த விதி முறையில் பேரவைத் தலைவருக்கு கொடுக்கப்படுகிற உரிமை மீறல் பிரச்சினையை அவையிலே கிளப்புவதற்கு உண்டான அதிகாரத்தை எடுத்துக்கொள்ளலாம் என்று இருக்கிறது? 185இல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்றால் 'A member may, with the consent of the Speaker, raise'..என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அந்த வாக்கியத்தை எடுத்துவிட வேண்டும் 'with the consent of the speaker' என்ற வரி இல்லாமல் இருந்தால் எழுப்பலாம். எங்கே இருக்கிறது என்று கேட்டீர்களே அது அங்கேதான் இருக்கிறது.

THIRU G.R. EDMUND : 'A member may with the consent of the Speaker, raise a question involving a breach of privilege either of a member or of the House or of a Committee thereof.' என்று இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 'with the consent of the Speaker' என்று போட்டதன் நோக்கம் என்ன?

THIRU G. R. EDMUND: I am not raising that point. The Hon. Speaker is referring to a different point and he is simply referring to the rule....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறையிலே கன்ஸன்டை வித்ஹோல்ட் பண்ணுவதற்கு எங்கே அதிகாரம் என்று கேட்டீர்கள். அந்த அதிகாரம் 'with the consent of the Speaker' என்ற இடத்தில்தான் இருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட்: நீங்கள் அதோடு நிறுத்திக் கொள்கிறீர்கள்.

A member, with the consent of the Speaker, raises a question. But where can he raise it? He can raise it only on the floor of the House and it cannot be raised in the Chamber of the Hon. Speaker.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விதி 184 எதற்காக?

திரு. க. உரொ. எட்மண்ட்: 184 எல்லாம் சேர்ந்துதான் பிரிவிலேஜ மோஷனிலே வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கன்ஸன்ட் இல்லாமல் ஹவுஸிலே எழுப்பலாம் என்று சொல்லிவிட்டால் 184வது விதி எதற்காக?

THIRU G. R. EDMUND: Whatever it is, consent can be given only on the floor of the House and not in the Chamber of the Hon. Speaker நான் சபாநாயகர் அறையிலே ஒரு தீர்மானத்தைக் கிளப்பமுடியாது. தீர்மானத்தைக் கொண்டுவரப்போகிறேன என்றுதான் சொல்லமுடியும் அங்கே. ஆனால் அதைக் கிளப்ப வேண்டிய இடம் சட்டமன்றம்தான். கன்ஸன்ட் ஆப் தி ஸ்பீக்கர் எங்கே வருகிறது என்றால்

when a member moves it in the House. When it is moved in the Chamber, we cannot say either it is moved or raised . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ரெய்ஸ் பண்ணுவதற்கும் மூவ் பண்ணுவதற்கும் வித்தியாசம் இருக்கிறது.





THIRU G.R. EDMUND: I am prepared to go by the meaning of the word "move". Can I move the motion in the Chamber?

தலைவருடைய கன்சன்ட் என்பது உங்களுடைய அறையிலே அல்ல, அவையிலேஎன்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ரூல் 187 இல் நீங்கள் கன்சன்ட் வித்ஹோல்ட் பண்ணுவதற்கு ரெஸ்ட்ரிக்ஷன்ஸ் இருக்கின்றன.

'(i) The alleged breach of privilege must refer to a matter of recent occurrence;

(ii) A *Prima Facie* case of breach of privilege must be made out...."

என்று சொல்லியிருக்கிறார்கள் என்றால்

It is for the mover to convince the Hon. Speaker that a *Prima Facie* case is made out. Without allowing the Member to convince the Hon. Speaker that a *Prima Facie* is made out on the floor of the House, how can he prove that a *Prima Facie* case is made out........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதிலே நீங்கள் எழுப்புகிற சமயத்திலே இன்ன இன்ன காரணங்களுக்காக பிரிவிலேஜ் மோஷன் கொடுக்கிறேன் என்று எழுதிக்கொடுக்கிறீர்கள். அது கன்வின்ஸ் ஆகவேண்டும் ஸ்பீக்கருக்கு.

THIRU G.R. EDMUND: The notice of the privilege motion handed over to the Hon. Speaker in his Chamber is only a charge and it is for the Mover to convince the Hon. Speaker that a *Prima Facie* case is made out..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கொடுக்கிற நோட்டீஸில் கொடுக்கிறீர்கள் அதையெல்லாம் சொல்லியிருக்கிறீர்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட்: அப்படியென்றால் பெரிய கதையே எழுத வேண்டும். பிரிவிலேஜ் மோஷன் நோட்டீஸ் என்றால் அதிலே கதையே எழுதிக் கொடுக்கவேண்டும்.

187வது விதியிலே ஸ்பீக்கர் சுதந்திரமாக விடப்படவில்லை. ஸ்பீக்கர் ஒப்புதல் அளிப்பதற்கு இன்ன இன்ன காரணங்கள் இருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றன. ஒன்று சமீபத்திலே நடந்த சம்பவமாக இருக்கவேண்டும். தற்போது திரு. கோவை செழியன் அவர்களும் திரு. தங்கமணி அவர்களும் பிரிவிலேஜ் மோஷன் கொடுத்திருக்கிறார்கள். முதலிலே சமீபத்திலே நடந்ததா என்று பார்க்கவேண்டும் நீங்கள். இரண்டாவதாக அதிலே பிரைமா பேஸி கேஸ் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இருக்கிறது என்று நிரூபிக்க வேண்டியது நோட்டீஸ் கொடுத்தவர்களுடைய கடமை. அதற்குப் பிறகுதான் நீங்கள் முடிவு கொடுக்க வேண்டும். நீங்கள் முடிவு சொல்வதற்கு முன்னால் அதை நிரூபிக்கின்ற முயற்சியிலே அவர்கள் ஈடுபடுவார்கள், அதற்கு முன்னாலேயே நீங்கள் அனுமதியில்லை என்று சொல்லிவிடமுடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நோட்டீஸ் கொடுக்கிற நேரத்திலேயே நிகழ்ச்சியைச் சொல்லி அந்த நிகழ்ச்சி உரிமை மீறல் நிகழ்ச்சியாக இருக்கிறது என்று காரணங்களைச் சொல்லுகிறார்கள். அதற்குப் பிறகு அனுமதி கேட்கிறார்கள். அந்தக் காரணங்களால் பேரவைத் தலைவர் கன்வின்ஸ் ஆனாரா என்று பார்க்க வேண்டும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நீங்கள் சொல்கிற மாதிரி விதிமுறை இருக்கிறது என்று வைத்துக்கொண்டால் இந்த அவையிலே எந்த உறுப்பினரும் உரிமை மீறல் பிரச்சனையைக் கொண்டு வர முடியாது, கொடுக்க முடியாது.

The Hon. Speaker can withhold consent.

திரு. கே. டி. கே. தங்கமணி : உரிமை மீறல் சம்பந்தமாக சில உறுப்பினர்கள் தாங்கள் ஒன்றும் சொல்லாமலே தவறு நடந்தது என்று எழுப்பியிருக்கிறார்கள். அந்த முறையிலே நான் எழுப்பவில்லை. தாங்கள் சபைக்கு வருகிற நேரத்திலே கொடுக்கலாம், அதற்குப்பிறகு கேள்வி நேரம் முடிந்த பிறகு நான் எழுந்து 'I wish to raise the following matter of privilege' என்று சொன்னால் 'I withhold my consent' என்று சொல்லலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்ட மன்றத்திலே நீண்ட நாட்களாக திரு. தங்கமணி அவர்கள் இருந்திருக்கிறார்கள். நானும் 1962ஆம் ஆண்டிலிருந்து இருக்கிறேன். உரிமை மீறல் பிரச்சினை வருகிற நேரத்திலே கொடுத்தவுடனே பரிசீலனைகூட தேவை இல்லை, இங்கே உடனே எழுப்பலாம் என்ற முறை பின்பற்றப்பட்டு இருக்கிறதா என்று மூத்த தலைவர்கள் சிந்தித்துப் பார்க்கவேண்டும்.

திரு. கே. டி. கே. தங்கமணி : உண்மையிலேயே நான் நேற்று இருந்திருந்தால் உடனே எழுப்பியிருப்பேன். அப்படியில்லாத முறையில் நான் உங்களுக்குச் சந்தர்ப்பம் கொடுத்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று நான் அவையிலே இருந்திருந்தால் எழுப்பியிருப்பேன் என்றால் அந்த நிலைமை நேற்று இருந்து இருக்கலாம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : நோட்டீஸ் இல்லாமல் கன்சண்ட் கொடுப்பீர்கள் என்றால் இப்போது ஏன் கொடுக்கக் கூடாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கன்சண்ட் கொடுத்திருப்பேன் என்று சொல்லவில்லை. நேற்று நீங்கள் எழுப்பியிருந்தால் கொடுத்திருப்பேன் என்று சொல்லவில்லை. நோட்டீஸ் வெய்வ் பண்ணலாம் என்று விதி முறையில் இருக்கிறது.



திரு. கே. டி. கே. தங்கமணி : நேற்று இருந்த சந்தர்ப்பம் இன்று இல்லையா ? ஒரு பிரிவிலேஜ் மேட்டரை எழுப்பியிருக்கிறேன், நேற்று நான் இல்லை என்பதால் இன்றைக்கு அந்தப் பிரச்னையைப் பற்றி எழுப்பக்கூடாதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேற்று செய்யாமல் இருந்ததற்கு இன்றைக்குக் கொண்டு வரமுடியாது.

திரு. கே. டி. கே. தங்கமணி : நேற்று செய்யாமல் இருந்தால் இன்றைக்குச் செய்யலாமென்று விதிமுறை இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : நேற்றைய தினம் வந்திருக்கும் என்றாலுங்கூட அதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறதா என்ற கேள்வி வேறு தனியாக இருக்கிறது. ஆகவே நேற்றைய தினம் வந்திருந்தாலும் உரிமைப் பிரச்சினையாகிவிடும் என்பதல்ல. இரண்டாவது, விதிமுறைகளில் இண்டர்ப்ரட்டேஷன்களில் வேறுபாடுகள், கருத்து வேறுபாடுகளிருந்தால் அதைப் பற்றி விதிக்குழு தீர்மானிக்கின்ற வரையில் இடையிலே சபாநாயகரவர்கள் சொல்கிற இண்டர்ப்ரட்டேஷன்தான், விளக்கம்தான் அவையால் ஏற்றுக்கொள்ளப்படும்.

எனவே, இங்கே ஏற்பட்ட பிரச்சனை விதிமுறைகளுக்கு எப்படி விளக்கம் தருவது என்பது. விதிமுறையின் அடிப்படையில் தாங்கள் சொல்லிய விளக்கம் விதிமுறைகள் திட்டவட்டமாக மாற்றப்படும் வரையில் இந்த அவையைக் கட்டுப்படுத்தும். அதன் பிறகு திரும்பத் திரும்ப தங்கள் கருத்துக்களை உறுப்பினர்கள் விதிமுறைக்கு இலக்கணமாகச் சொல்வது இப்பொழுது பரிசீலிப்பதற்குப் பொருந்தி வராது.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஒரு பிரச்னை சம்பந்தமாக அரை மணி நேரம் விவாதம் நடந்திருக்கிறது. அப்படி வந்திருக்கும்பொழுது சில நேரங்களில் சில பிராக்டீஸ் வந்திருக்கின்றன. இவ்வளவு தூரம் இந்தப் பிரச்சினையைக் கிளப்பிய பிறகு இந்த சிட்டிங்கிலேயே இதற்குத் தெளிவான ரூலிங் தேவை. இல்லையென்றால், பிரிவிலேஜ் மோஷன் என்பது இரண்டு மாதம் கழித்து டிஸ்ஸல்வ் பண்ணி வரலாம். அப்படி சென்ற காலத்தில் வந்திருக்கிறது.

முக்கியமான பிரச்னையாக பிரிவிலேஜ் மோஷன் வரும்பொழுது அதைப் பற்றி உடனடியாகப் பைசல் செய்ய முடியுமா என்பதைப் பற்றித் தாங்கள் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். இதைப்பற்றி கன்சிடர் செய்து ரூலிங் கொடுத்தால் உதவியாக இருக்கும். பல கருத்துக்களை பொறுப்பான உறுப்பினர்கள் இங்கே கிளப்பியிருக்கிறார்கள். நான் ஏதோ வம்பு செய்வதாகத் தாங்கள் கருதக்கூடாது. பிரிவிலேஜ் என்பது ரொம்ப முக்கியமான விஷயம். அந்த வகையிலே அது அரசாங்கத்திலே இருப்பவர்களையும், மற்றும் சிலரையும் கட்டுப்படுத்தும் முறையாக இங்கே நடக்கும் விவாதத்திற்கு உதவிகரமாக இருக்கும். அப்படித் தவறு ஏற்படும் நேரத்தில் 1945–46ஆம் ஆண்டில் பிரிட்டிஷ்

பார்லிமெண்டில் நடந்த சம்பவத்தைப் பார்த்தால் பல விஷயங்கள் இப்படிக் கிளம்பி, பிரிவிலேஜ் சம்பந்தமாக தெளிவான ரூலிங் கொடுத்திருக்கிறார்கள். முக்கியமான தலைவர்கள் பேசியிருக்கிறார்கள். அதையெல்லாம் கன்சிடர் செய்து ஒரு தெளிவான ரூலிங்கை தாங்கள் கொடுக்க வேண்டும். இல்லையென்றால் பிரிவிலேஜ் மோஷன் என்பது சாதாரண மோஷன்களைப் போல் ஆகிவிடும். Privilege motion is an extra-ordinary motion.
எனவே, இந்த பிரிவிலேஜ் மோஷன் வரும்பொழுது எங்களுக்குப் பாதுகாப்பைக் கொடுத்து, சபையின் அந்தஸ்தை உயர்த்தக்கூடிய நிலைமை அந்த இடத்திலே இருக்கின்ற தங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. எனவே, நீங்கள் இதில் அவசரப்பட்டு முடிவெடுக்க வேண்டாம். என்ன பிரிவிலேஜ் மோஷன் என்பதைப் பற்றிச் சொல்வதற்குத் தாங்கள் உதவ வேண்டும். அப்படிச் செய்வதுதான் சரியாக இருக்கும். இன்றைக்கு உங்களுடைய முழு ரூலிங் வேண்டும். இங்கே பலரும் பல கருத்துக்களைச் சொல்லியிருக்கிறோம். முடிவை தாங்கள் சொல்லும் கருத்துதான் கட்டுப்படுத்தும். எனவே, அந்தக் கருத்தைத் தெளிவாகத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை உறுப்பினர்கள் எல்லாம் சேர்ந்து நியமித்தது ரூல்ஸ் கமிட்டி. அதில் சில விதிமுறைகளை வகுக்கிறோம். அந்த விதிமுறைகள் நாமே வகுத்துக்கொண்ட விதிமுறைகள்தான். இப்பொழுது வகுத்துக் கொடுத்திருக்கும் விதிமுறைகளின்படி பேரவைத் தலை[illegible] தன்னுடைய அறையிலேயேகூட அனுமதி மறுப்பதற்கு இடம் இருக்கிறது. [illegible] முறையை ஒட்டித்தான்—நாம் வகுத்துக்கொடுத்த அந்த விதிமுறைகளையொட்டித்தான்—பேரவைத் தலைவர் நடந்துகொண்டிருக்கிறாரே தவிர விதிமுறைகளுக்கு மாறாக நடக்கவில்லை.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். டாக்டர் ஹாண்டே அவர்கள் சொல்லியதைப் போல, "சினைடை"—யாகப் பேரவையை ஒத்திவைப்பதற்கு பேரவைத் தலைவருக்கு முன்பு அதிகாரம் இருந்தது. ஆனால் இப்பொழுது அதற்குத் தீர்மானம் கொண்டுவந்து அது நிறைவேறியதற்குப் பிறகுதான் அவையை அப்படி ஒத்திவைக்க வேண்டுமென்று விதிமுறைகள் மாற்றப்பட்டிருக்கின்றன. அதைப்போல உரிமைப் பிரச்னை பற்றிய தீர்மானம் வரும்பொழுதும் அதை அவையிலே கொண்டுவந்துதான் முடிவு எடுக்க வேண்டும், அறையிலேயே தள்ளிவிடக்கூடாது என்று விதிமுறையை வேண்டுமானால் மாற்றுங்கள். ஆனால் இப்பொழுது வகுத்துள்ள விதிமுறைகளின்படி இந்த முறையைத்தான் பின்பற்ற முடியும்.

இன்னொன்றும் சொன்னார்கள், இவ்வளவு முக்கியமான காரணங்களுக்காகக் கொண்டு வந்தோம் என்று கூறிவந்தீர்கள். அந்தக் காரணங்களைக் கொடுத்து மறுபடியும் இதை ரீ-கன்சிடர் செய்யுங்கள் என்று எழுதுங்கள். அதன்பிறகு அது சம்பந்தமான நிலைமைகள் வரும். ஆனால் இப்பொழுது நான் கொடுத்த தீர்ப்பின்படி, இந்தப் பிரச்னையை எழுப்புவதற்கு அனுமதி தர முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



திரு. கே. டி. கே. தங்கமணி : இருக்கின்ற சிரமங்களைச் சொன்னேன். இந்தமாதிரி ரூலிங்கை ஏற்றுக் கொள்வதில் முறை இருக்காது என்று கருதுகிறேன். ஆகவே, சபையிலேயிருந்து நான் வெளியேறுகிறேன்.

(இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

திரு. க. உரா. எட்மண்ட் : தலைவரவர்களே, இந்த உரிமை மீறல் பிரச்னையின்மீது தாங்கள் கொடுத்த தீர்ப்பு எங்களுக்கு திருப்தி கொடுக்காத நிலையிலேயும், இது உறுப்பினர்களுக்கு இருக்கும் உரிமைகளைப் பறிக்கின்ற வகையிலேயும் இருப்பதால் எங்களுடைய அதிருப்தியைத் தெரிவிக்கும் வகையில் எங்களுடைய கட்சியைச் சேர்ந்தவர்களும் வெளிநடப்பு செய்கிறோம்.

(அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இது முக்கியமான விஷயமாக இருக்கிறது. தங்களை எதிர்த்து வெளிநடப்பு செய்ய வேண்டுமென்ற துரதிருஷ்டமான நிலையில் நாங்கள் சொல்லவில்லை. ஆனால் இது உள்ளபடியே நமது மன்றத்தினுடைய உரிமையைப் பாதுகாப்பதற்குத் தவறி இருக்கிறது என்று நான் கருதுகிறேன். இது நமது அரசியலமைப்புச் சட்டத்திற்குப் புறம்பான ஒரு கருத்து என்பதால் இது சட்ட விரோதமானது என்பதால் நாங்களும் வெளிநடப்பு செய்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[காங்கிரஸ் (அமைப்பு) கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.]

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, வெளிநடப்பு செய்த திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இது சட்டவிரோதமானது என்று சொன்னார்கள். சபாநாயகரின் தீர்ப்பை சட்ட விரோதமானது என்று சொல்லுவதுகூட ஒரு பிரிவிலேஜ். முடிவை வழங்குவதற்கு சபாநாயகருக்கு உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அவரது தீர்ப்பு சட்ட விரோதம் என்று சொன்னால் அதுகூட உரிமை மீறல்தான்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : On a point of Order, Sir, பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு ரூலிங் கொடுங்கள். "With the consent of the speaker" என்று சொன்னால் எப்படி, எழுத்து மூலம் இருப்பதா, ஓரலாகச் சொல்வதா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இரண்டு நிலைமைகள் இருக்கின்றன. எழுத்து மூலம் மறுக்கப்பட்டால் எழுத்து மூலம் தெரிவிக்கிறோம். இங்கே குரல் மூலம் எழுப்பப்பட்டால், அனுமதிக்கவில்லையென்றால் இங்கேயே சொல்கிறோம், அதுதான் நிலைமை.

திரு. எம். சுரேந்திரன்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நேற்று கேள்வி பதிலின்போது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது முடியட்டும்.

திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, இன்றைக்கு எழுப்பப் பட்ட பிரச்சினையை விவாதிக்க வேண்டுமென்று பலபேரும் கேட்ட நேரத்தில் இதைப் பற்றி மீண்டும் கொடுங்கள் என்று தாங்கள் சொல்வதிலிருந்தே தாங்கள் இதை ஒத்துக்கொள்கிறீர்கள் என்றுதான் பொருள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்துக்கொள்வதாகச் சொல்லவில்லை. "ரீ-கன்சிடர்" செய்யலாம் என்றுதான் சொன்னேன்.

திருமதி சத்தியவாணிமுத்து: "ரீ-கன்சிடர்" செய்வதற்குக்கூட அவையிலே சொல்லக்கூடாது, அறையிலேதான் விவரங்களை அளிக்க வேண்டுமென்று நமது சட்டசபை விதிகளில் இல்லை. எனவே, இதை நீங்கள் இன்றைக்கே எடுத்துக்கொண்டிருந்திருக்கலாம். ஆனால் இதில் பிடிவாதமாக இருப்பது முறையல்ல என்பதைச் சொல்லி நானும் வெளிநடப்பு செய்கிறேன்.

(தாழ்த்தப்பட்டோர் முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, உரிமைப்பிரச்னை என்று கொடுக்கும்பொழுது அதை ஒப்புக்கொள்ளலாம் அல்லது தள்ளிவிடலாம் என்ற விதிமுறைகள் இருந்தாலும்கூட, மிக முக்கியமான பிரச்னை அவையிலே எழுப்பப்படும்பொழுது தலைவரவர்கள் அதைப் பார்த்து விவாதித்த பிறகு அதைத் தள்ளலாம். ஆனால் ஒன்றுமேயில்லாமல், அதை எழுப்புவதற்குக்கூட சந்தர்ப்பம் அளிக்காதது சரியான காரியமாக இல்லை. ஆகவே, அம்மாதிரி நடைமுறையைக் கடைபிடிப்பது, உரிமைப் பிரச்சினை கொண்டுவருபவர்களின் உரிமையைப் பறிப்பதாக இருக்கிறது என்ற நிலை ஏற்படுகிறது. எனவே, நாங்களும் இதை எதிர்த்து வெளிநடப்பு செய்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: பாயின்ட் ஆஃப் ஆர்டர் சார்.

மாண்புமிகு பேரவை தலைவர்.—உங்கள் பார்ட்டி வெளியேறுகிறது.

(சிரிப்பு).

(ஆளும் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தார்கள்.)



(3) நடைமுறைக் கேள்வி.

ஓர் ஒத்திவைப்புத் தீர்மானத்தின்மீது முதலமைச்சர் பேசியதை நாளிதழ்களில் விளம்பரமாக செய்தித்துறை வெளியிட்டுள்ளது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்பேரவையில் 15—3—1975 ஆம் நாளன்று எழுப்பப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணை மீது மாண்புமிகு முதல் அமைச்சர் அளித்த விளக்கம் 16—3—1975 நாளைய "இந்து", "இந்தியன் எக்ஸ்பிரஸ்" செய்தித் தாள்களில் விளம்பரமாக வெளியிடப்பட்டிருப்பது குறித்து 17—3—1975-ஆம் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்கள் டாக்டர் ஹாண்டே, திருமதி அனந்தநாயகி, திரு. எட்மண்ட், திரு. பொன்னப்ப நாடார் ஆகியோர் ஒழுங்குப் பிரச்சனை எழுப்பினார்கள்.

அவர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனையில், 15—3—1975-ஆம் நாளன்று எழுப்பப்பட்ட ஒத்திவைப்புப் பிரேரணைமீது, எழுப்ப விரும்பிய உறுப்பினர்கள் விளக்கம் அளித்தது போலவே, முதல்வர் அவர்களும் விளக்கம் அளித்தார்களே தவிர, விவாதத்திற்கு விடை அளிக்க இல்லை. அப்படி இருக்க, அந்த விளம்பரத் தலைப்பு, "முதல் அமைச்சர் அளித்த பதில்" என தலைப்பிட்டிருப்பது தவறான தகவலாகும் என்றும், அவ்விளம்பரத்தில் உறுப்பினர்கள் அளித்த விளக்கம் இடம் பெறவில்லை, இது அவை நடவடிக்கையைத் திரித்து வெளியிட்டதாகும் என்றும் இதுபோல் விளம்பரப்படுத்தும் முறை இதற்கு முன்பு நடந்ததில்லை என்றும் காரணம் கூறப்பட்டது.

விளம்பரத் தலைப்பு **Chief Minister's reply to Adjournment Motion on Christian Medical College Hospital strike in the Tamil Nadu Assembly on 15-3-1975** என்பதாகும். இதில், "ஒத்திவைப்புப் பிரேரணைக்கு முதல் அமைச்சர் பதில்" **Reply to Adjournment Motion** என்றுதான் இருக்கிறதே ஒழிய "ஒத்திவைப்புப் பிரேரணை மீது நடந்த விவாதத்திற்குப் பதில்" **Reply to the debate on the Adjournment Motion** என்று இல்லை.

ஒத்திவைப்புப் பிரேரணை இவ்வவையில் எழுப்பப்பட்டது. உறுப்பினர்கள் விளக்கம், முதல் அமைச்சர் விளக்கம், பேரவைத் தலைவர் தீர்ப்பு ஆகியவற்றை வெளியிட்டிருக்கும் "இந்து" நாளேடு இறுதி வாக்கியமாகிய **after the Chief Minister's reply the Speaker withheld his consent for the motion** என்பதில் முதல்வர் பதில் என்றே கூறியுள்ளது. ஒத்திவைப்புப் பிரேரணைமீது அரசுத் தரப்பில் தரும் விளக்கங்கள் வெறும் விளக்கங்கள்தான் என்றாலும், அதை விடை என்று கூறுவது வழக்கமாகவே வந்துள்ளது. மேலும் 26—2—1975 அன்று இதே சி. எம். சி. மருத்துவமனை பற்றிக் கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்புப்பிரேரணை பற்றி 27—2—1975 நாளிட்ட "இந்து" இதழில்

The Speaker, Mr. K. Govindan withheld consent for the motion after the Chief Minister's reply. என்று— விடை என்றே தான் குறிப்பிடப்பட்டுள்ளது. The Chairman withheld consent to the motion after the Chief Minister's reply. இதே பொருள்பற்றி, மேலவையில் கொண்டுவரப்பட்ட ஒத்தி வைப்புப் பிரேரணைகள் குறித்தும் அதே நாளிதழில் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே, தலைப்பில் பிழை இல்லை.

அவை நிகழ்ச்சிகளையோ, அவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் நிகழ்த்தும் உரைகளையோ வெளியிடும்போது படிப்பவர்கள் உள்ளத்தில் தவறான உணர்வு எழும் வகையில் திரித்து வெளியிடுவதுதான் தவறே ஒழிய, ஓர் உறுப்பினர் பேச்சை வெளியிடாது மற்றவர் பேச்சை மட்டும் வெளியிடுவதை தவறாகக் கொள்வது கூடாது. அனைவர் பேச்சையும் வெளியிட்டுத்தான் தீர வேண்டும் என வற்புறுத்துவது இயலாது. 12—3—1963 அன்று, இப்பேரவையில் அன்றைய தலைவர் ஓர் உரிமைப் பிரச்சனை குறித்து வழங்கிய தீர்ப்பின் ஒரு பகுதியைக் குறிப்பிடுவது பொருத்தமாகும் என்று கருதுகிறேன்.

"....Newspapers do not publish everything that takes place in the House. They select such matters as they consider are of topical importance. As long as there is no *suppressio veri* resulting in *suggestio falsi*. I do not think we should brother much ...."

மேலும், இப்பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஆற்றிய உரைகளை தனியாக அச்சடித்துத் தருமாறு உறுப்பினர்கள் வேண்டுவார்களேயானால், அவர்களிடம் தொகை பெற்றுக் கொண்டு, அச்சடித்துத் தருவது உண்டு. அப்பொழுது அவ்வுறுப்பினர் ஆற்றிய உரை மட்டுமே இடம் பெறும். ஏனைய உறுப்பினர்கள் பேச்சு இடம் பெறுவது இல்லை. ஆகவே, முழு நிகழ்ச்சிகளையும் விளம்பரப்படுத்தவில்லை என்பதும் குற்றமாகாது.

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் இப்பேரவையில் பல்வேறு நிலைகளில் ஆற்றிய சொற்பொழிவுகள் இதற்கு முன்பும் அரசு விளம்பரத்துறை மூலம் வெளியிட்டிருப்பதற்கு நிறைய எடுத்துக் காட்டுகள் உள்ளன. இதுபோலவே, பாரத பிரதமர்களாகிய மாண்புமிகு ஜவஹர்லால் நேரு அவர்களும், இந்திராகாந்தி அம்மையார் அவர்களும் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள் மத்திய அரசுத் துறை மூலம் வெளியிடப்பட்டுள்ளன. ஆகவே, முன்மாதிரி இல்லையென்பதும் சரியல்ல.

சட்டப் பேரவைத் துறை 234,237 விதிகளைச்சுட்டிக்காட்டி வெளியிட பேரவைத்தலைவரின் அனுமதி வேண்டுமே, அது பெறப்பட்டதா என்ற வினவை திருமதி அனந்தநாயகி அவர்கள் எழுப்பினார்கள்.



அவ்விதிகள் பேரவைத் துறை வெளியிடும் வெளியீடுகளுக்கு மட்டுமே பொருந்துவதாகும். மாண்புமிகு உறுப்பினர் யாரேனும் தாம் இம்மன்றத்தில் ஆற்றிய உரையைத் தாமாகவே வெளியிட்டுக் கொள்வதற்கு இவ்விதிகள் பொருந்தா. பேரவைத் துறை வெளியிடும் போது அவ்வுரை ஆற்றிய உறுப்பினருக்கு அளிக்கும் பாது காப்பு அவ்வுரையை அவரே வெளியிட்டுக்கொள்ளும்போது அளிக்கப் படமாட்டாது என்பதல்லாது தாமாகவே வெளியிட்டுக்கொள்ளக் கூடாது என்று ஆணையிட இப்பேரவைக்கோ இப்பேரவைத்தலைவருக்கோ அதிகாரம் இல்லை. இதுகுறித்து சர் எர்ஸ்கின் மே அவர்களின் "பாராளுமன்ற நடைமுறைகள்", பற்றிய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள சில கருத்துகள் இவை.

"..........Although the privilege of freedom of speech protetcs what is said in debate in either House, this privilege does not protect the publication of debate outside Parliament. Nor does an order of the House for their printing and publication confer parliamentary privilege on proceedings published outside Parliament. A Member who publishes his speech made in either House separately from the rest of the debate is responsible for any libellous matter it may contain under the common law rules as to defamation of character.........."

"..........If a Member publishes his speech, his printed statement becomes a separate publication, unconnected with any proceedings in Parliament.........." என்று இருக்கிறது.

எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனைகளை நான் தள்ளுபடி செய்கிறேன்.

## (4) அரசினர் தீர்மானங்கள்.

### (அ) அவையுரிமைக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே "தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 183-வது விதியின் கீழ், 1975-76ஆம் நிதியாண்டிற்கான அவையுரிமைக் குழுவின் உறுப்பினராக இருக்கும்படி, பதினொன்கு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

(5) அறிவிப்புகள்.

(அ) அவையுரிமைக் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவைக்கு ஓர் அறிவிப்பு:

ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ்; அவை யுரிமைக் குழுவிற்கு (Committee of privileges) 14 உறுப்பினர் களைத் தேர்ந்தெடுக்க; வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 1—4—1975 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள் 1—4—1975 ஆம் நாள் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1975ஆம் நாள் புதன் கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது 14-க்கும் மேற்படின் 5—4—1975 ஆம் நாள் சனிக்கிழமை அன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(4) அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 221 (1)-வது விதியின் கீழ் 1975-76ஆம் நிதியாண்டிற்கான அவையினர் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதிமூன்று உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்ற தீர்மானத்தை மூன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டது.

(5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அவையினர் குழுவிற்கு தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு:

ஒற்றை மாற்று வாக்குமுறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் அவையினர் குழுவிற்கு (House Committee) 13 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்



தாள்களை 1—4—1975-ம் நாள் செவ்வாய்க்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டு வோர் செயலாளரிடம் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 1—4—1975 ஆம் நாள், செவ்வாய்க்கிழமை பிற் பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 2—4—1975 ஆம் நாள் புதன்கிழமை காலை 11 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை, நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு அதாவது 13-க்கும் மேற்படின் 5—4—1975 ஆம் நாள் சனிக்கிழமையன்று காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சட்டமன்றப் பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வு அறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

(6) அரசினர் சட்ட முன் வடிவு.

தமிழ்நாடு 1975 ஆம் ஆண்டு, குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் கொடுத்தல்(திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1975 ஆம் ஆண்டு, குத்தகைதாரர்கள் பாதுகாப்பு—நியாயவாரம் கொடுத்தல் (திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி அளிக்கப்பட்டது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இச்சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(7) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத் தை மூன்மொழிகிறேன்:

"நிதிக் கோரிக்கை எண் 1 —நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,94,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU K. P. GOPAL: Sir, to discuss about the necessity of giving priority to landless Harijans and Ex-Servicemen, while assigning poramboke lands, I move—

"That the allotment of Rs. 3,94,63,000 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs.100."

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, வட ஆர்க்காடு மாவட்டம், வந்தவாசி தாலுக்கா, மும்முனி கிராமத்தில் நூற்றாண்டு காலமாக முஸ்லீம்கள் தொழுகை நடத்திவரும் ஈத்ஹா தொழுகை இடத்தை முஸ்லீம் ஜமாத்திற்கே பட்டா செய்வது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,94,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU K.S. KOTHANDARAMIAH: Sir, to discuss about the need to issue pattas to cultivators who have been cultivating poramboke lands for a long time, I move—

"That the allotment of Rs. 3,94,63,000 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100".

THIRU S. VADIVEL: Sir, to discuss about the failure to issue pattas to inam lands in many areas, I move—

"That the allotment of Rs. 3,94,63,000 under Demand No. 1—Land Revenue Department be reduced by Rs. 100".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss about the issue of patta books to all the agriculturists in Tamil Nadu especially in Dharmapuri district, I move—

"That the allotment of Rs. 3,94,63,000 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100".

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் தாலுக்கா, 354 கூவத்தூர் கிராமத்திலுள்ள 22 அரிசனக் குடும்பங்கள் சாகுபடி செய்து வந்த நிலங்களின் குத்தகை தாரர்களாகப் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைக் குறிப்பிட—

"நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 3,94,63,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU P. SOUNDARAPANDIAN: Sir, to discuss the delay in assignment of lands to landless Harijans in the rural areas, I move:—

"That the allotment of Rs. 3,94,63,000 under Demand No. I—Land Revenue Department be reduced by Rs. 100".



(ஆ) நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம்

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 59,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பட வேண்டும்".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy I, move—

"That the allotment of Rs. 59,74,000 under Demand No. 5 Stamps Administration be reduced by Rs. 100".

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 59,74,000 under Demand No. 5—Stamps—Administration be reduced by Rs. 100".

திரு. எம். சுரேந்திரன்: தலைவர் அவர்களே, முத்திரைத்தாள் ஏஜண்டுகள் அதிக விலை வைத்து விற்காமல் பார்த்துக் கொள்வது குறித்து விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 59,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்களை தனியார் மூலம் விற்பனை செய்யாமல் அரசாங்கமே விற்பனை செய்ய வேண்டுமென்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 59,74,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்"

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

THIRU S. VADIVEL: Sir, to discuss the need to modify the present rate of stamp duty, I move—

"That the allotment of Rs. 59,74,000 under Demand No. 5-Stamps—Administration be reduced by Rs. 100".

[1975 மார்ச் 18

இ. நிதிக்கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின் மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,65,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 1,65,94,000 under Demand No. 47—Compensation to Zamindars be reduced by Rs. 100".

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss policy, I move—

"That the allotment of Rs. 1,65,94,000 under Demand No. 47—Compensation to Zamindars be reduced by Rs. 100".

THIRU S. VADIVEL: Sir, to discuss the necessity to stop the compensation to Zamindars, I move—

"That the allotment of Rs. 1,65,94,000 under Demand No. 47—Compensation to Zamindars be reduced by Rs. 100".

(ஈ) நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,28,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

THIRU B. VENKATASWAMY: Sir, to discuss the need to make the non-official as Chairman to the District Development Council I move—

"That the allotment of Rs. 14,28,24,000 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir to discuss the need to make the District Development Council a democratic institution having a non-official as Chairman, I move—

"That the allotment of Rs. 14,28,24 000 under Demand No. 11—District Administration be reduced by Rs. 100".



1975 மார்ச் 18]

[முற்பகல் 11-00]

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, மாவட்ட அலுவலகங்களில் சிகப்பு நாடா முறையை ஒழித்து, காலதாமதத்தை தவிர்ப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,28,24,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. கே. பி. கோபால்: தலைவரவர்களே, சிறு சேமிப்பு மற்றும் ஏனைய அரசாங்க திட்ட வசூல்களில் அதிகாரிகளின் நிர்பந்தத்தை தவிர்ப்பது பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,28,24,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, கிராம அதிகாரிகளை நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கத் தவறியதைப் பற்றி விவாதிக்க—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 14,28,24,000–இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வெட்டுப் பிரேரணைகள் முன் மொழியப்பட்டுள்ளன. மாண்புமிகு வருவாய் துறை அமைச்சர் அவர்கள் முன் மொழிந்துள்ள மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் இன்றைய முக்கியப் பிரச்சனைகளுள் ஒன்றாக, முன்னோடியற்ற வறட்சி நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர்கள் அறிவார்கள். இவ்வறட்சி நிலையை எதிர்த்துப் போராட மாநில அரசு எடுத்துக்கொண்ட வறட்சித் துயர் தணிப்புப் பணிகள் பற்றிய விவரங்களை 25—2—1975 அன்று இவ்வவையில் எடுத்துரைத்திருக்கிறேன். வழக்கமான நடைமுறைகள் தடையாக இல்லாத அளவுக்கு, ஒப்பந்தங்கள், நிதி அதிகாரங்கள் முதலிய செயல் முறைகளை தேவையான அளவுக்குத் தளர்த்தி, வறட்சித் துயர் துடைப்புப் பணிகள் விரைவாக நிறைவேற அரசு வழிவகைகள் செய்துள்ளது.

சிறப்பு வறட்சித் துயர் தணிப்புத் திட்டத்தில் குடிநீர் வழங்கும் பணிக்கு மிகவும் முக்கியமான இடம் அளிக்கப்பட்டு வறட்சியால் பாதிக்கப்படாத பகுதிகளில் கூட குடிநீர் வழங்கும் வேலையை ஏற்று செயற்பட மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதிக்கப்பட்டுள்ளார். வறட்சியால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் என் சுற்றுப் பயணத்தின் போது நான் பார்த்த சில இடங்களில் மண் வளப் பாதுகாப்பு வேலைகளோடு கூட சிறிய மற்றும் நடுத்தர நீர்ப்பாசன உத்திகளுக்கு, மராமத்து மற்றும் சீரமைப்பு, பாதை அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர் வழங்கும் திட்டத்தின் கீழும் சிறு பாசன திட்டத்தின் கீழும் புதிய குளங்கள் அமைக்கும் பணியை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வறட்சி நிவாரணப் பணிகள் முனைப்பாக செய்து முடிப்பதில் தோன்றும் இடர்ப்பாடுகள் அவ்வப்போதே களையப்படுகின்றன. அண்மையில் பழைய வீத அட்டவணையின்படி கிணறு தோண்டும் வேலைகளை ஆரம்பித்த ஒப்பந்தக்காரர்கள் நட்டமடைந்ததன் காரணமாக, வேலையை முடிக்க இயலாத இடங்களில் வீதப் பட்டியலைத் திருத்தி புதிய நியமனங்கள் செய்து வேலையைத் தொடரலாம் என்று உத்திரவிடப்பட்டது ஓர் எடுத்துக் காட்டாகும். சிறப்பு வறட்சித்துயர் தணிப்புத் திட்டங்களை மேற்கொண்டுள்ள வட்டாரங்களில் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஒப்பந்தக்காரர்களுக்கு உடனடியாக பணம் பட்டுவாடா செய்ய வகை செய்ய ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ரூ. 50,000 முன்பணமாக வழங்க மாவட்ட அலுவலர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் அண்மையிலுள்ள அரசு வங்கியில் நடப்பு கணக்கு ஒன்றைத் தொடங்கி செயலாற்ற வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன. மேலும் 1975-76ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தவாறு வறட்சிப் பகுதிகளில் பாசனக் கிணறுகளை ஆழப்படுத்த கிணறு ஒன்றிற்கு ரூ 500 முதல் ரூ. 2,000 வரை விவசாயிகளுக்குத் தக்காவிக் கடனாகக் கொடுக்க ஐந்து கோடி ரூபாய் அளிக்கப்படவிருக்கிறது. வாலாயமாக நடைமுறைகளைத் தளர்த்தியதின் மூலமாக துயர் தணிப்புப் பணிகள் விரைவாக நடைபெற ஏதுவாகும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

சென்ற மாதம் 25ஆம் நாள் அவையில் துயர் தணிப்புப் பணிகளை நான் விளக்கியபோது 17,069 கிராமங்களில் 10,968 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளன என எடுத்துரைத்தேன். இன்றைய நிலைமையின்படி 11,305 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டவையாக அறிவிக்கப்பட்டுள்ளன. அவையில் வைக்கப்பட்டுள்ள கொள்கை விளக்கக் குறிப்பில் கண்டுள்ள எல்லா சலுகைகளும், நிவாரணங்களும் இக் கிராமங்களுக்கும் பொருந்தும். 1974-75ஆம் ஆண்டு வறட்சி நிவாரண ஆணையரால் நிறைவேற்றப்படும் நிவாரணப்பணிக்கு அரசால் மொத்தமாக ரூ. 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதை அங்கத்தினர்கள் அறிவார்கள். 1—3—1975 வரை முடிந்த வார இறுதியில் 41,000 நிவாரண வேலைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் ரூ. 17.08 கோடி ஒப்புதல் அளித்திருக்கிறார்கள். ரூ. 6.31 கோடி பெறுமானமுள்ள பணிகளை நிறைவேற்றியுள்ளனர். ரூ. 5.03 கோடி



மொத்தத் தொகையாக பட்டுவாடா செய்துள்ளனர். சிறப்பு வறட்சித் துயர் தணிப்புப் பணிகளின் கீழ் 15—3—1975ந் தேதி முடிவடைந்த வாரத்தில் மட்டும் செய்யப்பட்ட வேலையின் மொத்த மதிப்பு ரூ. 147 இலட்சம்.

இத்துறை, முன்னோடியற்ற வறட்சித் துயர் தணிப்புப் பணியில் முனைப்பாக தனது கவனத்தைச் செலுத்திய போதிலும் வழக்கமான வருவாய்ப் பணிகளை செயல்படுத்துவதிலும் அது உரிய கவனத்தை அளித்து வந்துள்ளது என்பதை மகிழ்ச்சியோடு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1947ஆம் ஆண்டு முதல் 1967 வரை 20 ஆண்டுகளில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் 2.88 இலட்சம் ஏக்கர்கள். பயனடைந்த மக்களின் எண்ணிக்கை 1,15,000. 1967-68 முதல் 31—1—1975 வரை கழக ஆட்சியில் ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் 7.05 இலட்சம் ஏக்கர்கள். பயனடைந்த மக்களின் எண்ணிக்கை 3.61 இலட்சம். 1—4—1974 முதல் 31—1—1975 மட்டிலும் ஒப்படை செய்யப்பட்ட நிலங்கள் 28,000 ஏக்கர்கள். பயனடைந்த மக்களின் எண்ணிக்கை 17,000. 31—1—1975 வரை அரசுக்குச் சொந்தமான காட்டு நிலமும் மேட்டு நிலமும் ஒப்படை செய்யப்பட்டது 20,000 ஏக்கர்கள். வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 11,000. 15—2—1975 வரை பட்டா விவரக் குறிப்போடு கொடுக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 1,02,29,382.

நிதி நிறுவனங்கள் வழங்கும் பலதரப்பட்ட கடன்களைப் பெற்று பயனடைய தீவிர உட்பிரிவுத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. இத்திட்டம் விவசாயிகள் தங்கள் நிலங்களின் விவசாய உற்பத்தித் திறனை பெருக்க உதவுகிறது. இது நாள் வரை இத்திட்டம் 3,365 கிராமங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. டிசம்பர் 1974 வரை இத்திட்டத்தின் கீழ் எட்டு இலட்சம் தனிப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன.

எல்லாத் துணை வட்டங்களையும் முழு வட்டமாக மாற்றி அமைக்க வேண்டும் என்று அரசு 1971 இல் கொள்கை அளவில் முடிவெடுத்தது. அதன்படி நான்கு துணை வட்டங்கள் முன்னமேயே வட்டங்களாக்கப்பட்டன. அவையின் முன் வைக்கப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில் விவரமாகக் கூறப்பட்டுள்ளபடி, மேலும் 7 துணை வட்டங்கள் 20—3—1975 முதல் வட்டங்களாக விரிவாக்கப்படும். அந்த ஏழு வட்டங்களாவன.—

(1) இராஜபாளையம் ; (2) ஒட்டப்பிடாரம் ; (3) கும்மிடிப்பூண்டி ; (4) பேராவூரணி ; (5) திருவாரூர் ; (6) பண்ருட்டி ; (7) சத்தியமங்கலம். எஞ்சிய எல்லாத் துணை வட்டங்களையும் காலக்கிரமத்தில் வட்டங்களாக அமைப்பது பற்றி அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கிராமக் கணக்குகளை வட்ட அளவில் பல மாவட்டங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டு, அவைகள் நல்ல முறையில் நடைபெற்று வருகின்றன,

[திரு. அ. பெ. தர்மலிங்கம்] [1975 மார்ச் 18

1—7—1974ஆம் தேதி முதல் கோட்ட அளவிலுள்ள அபிவிருத்தி வேலைகளை புதியதாக நியமனம் செய்யப்பட்டுள்ள கோட்ட அபிவிருத்தி அலுவலர்கள் கவனித்து வருகின்றார்கள். ஆகவே, கோட்டாட்சியாளர்கள் இயல்பான வருவாய் சம்பந்தப்பட்ட வேலைகளின் மீது தங்களின் முழுக் கவனத்தையும் செலுத்த ஏதுவாக அமைந்துள்ளது.

பொதுமக்கள் தொடர்புத் திட்டத்தின்—அதாவது எல்லோராலும் அழைக்கப்படும் மனுநீதித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மனுக்களை விரைவாக முடிவு பெறச் செய்வதற்கு தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்துமாறு வருவாய்த் துறை அலுவலர்களுக்கு அரசு அறிவுரைகள் வழங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் நிலச் சீர்திருத்தங்களுக்கான பணிகள் குறிப்பிடத் தக்க அளவில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது குறித்து விரிவான விவரங்கள், வருவாய்த் துறை மானியக் கோரிக்கையின் கொள்கை விளக்க அறிக்கையில் தரப்பட்டுள்ளன. அவ்வறிக்கையும் அவையின் முன் தனியாக வைக்கப்பட்டுள்ளது. நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு கட்டுதல்) சட்டத்தின்கீழ் 1967ஆம் ஆண்டிற்கு முன்னரும் 1967–லிருந்து சனவரி 1975 வரையிலும் ஏற்பட்ட முன்னேற்றம்.—

உபரி நிலமென்று அறிவிக்கப்பட்ட நிலவரப்படி நிலப்பரப்பு (ஏக்கர்)—

(1) 31—3—1967 வரை .. 24,194 ஏக்கர்.

(2) 1—4—1967 முதல் 31—1—1975 வரை 74,459

உடமையாக எடுத்துக்கொள்ளப்பட்ட நிலப்பரப்பு.—

(1) 31—3—1967 வரை .. 16,330 ஏக்கர்

(2) 1—4—1967 முதல் 31—1—1975 வரை 60,959

ஒப்படை செய்யப்பட்ட நிலப்பரப்பு.—

(1) 31—3—1967 வரை .. இல்லை.

(2) 1—4—1967 முதல் 31—1—1975 வரை 54,769 ஏக்கர்.

ஒப்படை செய்யப்பட்டோரின் எண்ணிக்கை.—

(1) 31—3—1967 வரை .. இல்லை.

(2) 1—4—1967 முதல் 31—1—1975 வரை 29,542 ஏக்கர்.

1971ஆம் ஆண்டு தமிழ்நாடு குடியிருப்பு அனுபோகதாரர்கள் (உரிமை வழங்கல்) சட்டத்தின்கீழ் இம்மாநிலத்தில் 31—12—1975 முடிய வழங்கப்பட்ட பட்டாக்களின் எண்ணிக்கை 1,73,748 ஆகும். இதுவல்லாமல், இச்சட்டத்தின் கீழ் விவசாயிகளிடமிருந்தும், விவசாயத் தொழிலாளர்களிடமிருந்தும் குடியிருப்பு நிலத்தின் விலை, கல்விலை, நிலப்பிரிவினை கட்டணம் ஆகியவற்றை வசூலிப்பதை அரசு கைவிட்டுள்ளது. மற்றும் 1969ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் (குத்தகை



1975 மார்ச் 18] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

உரிமைப் பதிவேடுகள் சட்டத்தின் கீழ் 31—12—1974 வரை பதிவு செய்யப்பட்ட குத்தகைதாரர்களின் மொத்த எண்ணிக்கை 3,99,350 ஆகும். இவ்வாறு பதிவு செய்யப்பட்ட நிலங்களின் அளவு 6,03,898 ஆகும்.

1969 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியங்கள் சட்டம் கிழக்குத் தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு நியாய ஊதிய நிர்ணயத்தை வழங்குகிறது. அச் சட்டத்தின் கீழ் திருத்தப்படும் நியாய ஊதியங்கள் குறித்து விசாரிக்க ஒரு—நபர்–குழு (திரு. வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ்.) அமைக்கப் பட்டது. அந்த ஆணைக்குழு தஞ்சை மாவட்ட ஆட்சியாளர் கூட்டிய கூட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முடிவுக்கிணங்க கீழே குறிப்பிட்ட ஊதிய வீதங்களை பரிந்துரைத்தது. இப்பரிந்துரைக்கிணங்க ஊதியங்கள் அவ்வப்போது திருத்தி அமைக்கப்பட்டு இறுதியாக 19—11—1974 இல் திருத்தப் பட்ட ஊதிய வீதங்கள் கீழ்வருமாறு.—

| | |
|---|---|
| பயிரிடும் காலத்தில் எல்லாவிதப் பணிகளிலும் ஈடுபடும் ஆண் தொழிலாளிகளுக்கு. | நாள் ஒன்றுக்கு ரூ. 6 அல்லது 6 லிட்டர் நெல்லும் ரூ. 2.75 தினக் கூலியும். |
| பயிரிடப்படும் காலத்தில் எல்லா விதப் பணிகளிலும் ஈடுபடும் பெண் தொழிலாளிகளுக்கு. | நாள் ஒன்றுக்கு ரூ. 4 அல்லது 5 லிட்டர் நெல்லும் ரூ. 1.50 தினக் கூலியும். |

1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டம் விவர அட்டவணையில் குறிக்கப்பட்டவாறு எழுதப்படும் பத்திரங்கள் மீது, முத்திரைத் தாள் தீர்வை, இம்மாநிலத்தில் வசூலிக்கப்படுகிறது. இந்திய அரசின் அதிகாரப்பட்டியலில் கூறப்பட்ட பத்திரங்கள் நீங்கலாக பதிவு செய்யப்பட்ட மற்ற பத்திரங்களுக்கு ஏற்பட்ட முத்திரைத்தாள் தீர்வையின் மீது 2½ சதவீதம் கூடுதல் மேல் வரி விதிக்கப்படுகிறது. குறிப்பிட்ட சில பத்திரங்களைப் பொறுத்த வரை உள்ளாட்சி மன்ற சட்டங்களின் கீழ் சொத்து பெறுமானத்தில் 5 சதவீதத்திற்கு மேற்படாமல் மேல் வரி ஒன்றும் வசூலிக்கப்பட்டு, உள்ளாட்சி மன்றங்களுக்குக் கொடுக்கப்படுகிறது.

1975—76 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட உரையில் மாண்பு மிகு முதலமைச்சர் அறிவித்தவாறு மேலே கூறப்பட்ட முத்திரைத்தாள் தீர்வையைக் கணக்கிடும் முறையில் வசதி செய்து சீரமைக்கும் பொருட்டு 2½ சதவீத கூடுதல் மேல் வரியை முத்திரைத்தாள் தீர்வையுடன் சேர்த்து கணக்கிடுவது என்றும்; சில சரிக்கட்டுதல்கள் செய்வதென்றும் எண்ணப் பட்டுள்ளது. இந்த சில மாற்றங்களைச் செயல்படுத்த அவசியமான சட்டம் கொண்டு வரப்பட இருக்கிறது.

நிலங்களில் இடையாட்களை ஒழிப்பதற்கான பல்வேறு நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. தமிழ்நாடு 1948 ஆம் ஆண்டு எஸ்டேட் (ஒழிப்பு ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் 0·49 சதுர மைல்கள் விஸ்தீரணமுள்ள ஒரு எஸ்டேட்டும், தமிழ்நாடு 1963 ஆம் ஆண்டு இனும் எஸ்டேட்டுகள் (ஒழிப்பு ரயத்து

வாரியாக மாற்றுதல்) சட்டத்தின் கீழ் 5·07 சதுர மைல்கள் பரப்பளவுள்ள 10 எஸ்டேட்டுகளும் எஞ்சியுள்ளன. இவை தடையாணைகள், பிற சட்ட நடவடிக்கைகள் ஆகியவற்றின் கீழ் உள்ளன.

இதில் அடங்கும் மானியக் கோரிக்கைகள் இப்போது விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. எஸ். வடிவேல் : அவைத் தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் வருவாய்த் துறை மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்கள் சிலவற்றை நான் சொல்ல விரும்புகிறேன்.

குறிப்பாக, பஞ்சம், நிலவரி, குத்தகை, தள்ளுபடி, வறட்சி நிவாரணம் ஆகியவற்றைப் பற்றி முக்கியமாக இந்த மானியம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

வறட்சி நிவாரணம் என்பது, விவசாயத் தொழிலாளர்களுக்கு தஞ்சை மாவட்டத்தில் மாண்புமிகு கார்த்திகேயன் கமிட்டியால் பரிந்துரைக்கப்பட்ட கூலி ரூ. 6 ஆகவும், ரூ. 4 ஆகவும் உயர்த்தி இங்கே குறிப்பு கொடுத்திருக்கிறார்கள். அது கீழ்த் தஞ்சை மாவட்டத்தில் மட்டும் தான் இருக்கிறது என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். ஒரே மாவட்டத்தில் பிறந்து, வளர்ந்து, வேலை செய்பவர்களுக்கு, ஒரு பகுதியில் உள்ளவர்களுக்கு ஒரு கண்ணுக்கு வெண்ணெய்யும், ஒரு கண்ணுக்கு சுண்ணாம்பும் தடவுவதுபோல் இருக்கிறது. மேல் தஞ்சையில் வாழும் விவசாயிகள், ஹரிசன மக்கள், அவர்கள் அந்தக் கூலி வாங்க முடியாமல் இருக்கிறார்கள்.

இன்று சட்டத்தில் இடம் இருக்கிறது என்று சொன்னாலும், இந்த வறட்சியாக உள்ள பகுதியில் உள்ள விவசாயிகள், சாதாரண ஏழை எளிய விவசாயிகள் கூலி ரூ. 3 பெற்று வாழ வேண்டிய நிலையில் இருக்கிறது. படியரிசி ரூ. 10, 9 என்று விற்கிறது. இந்த விலையில் அரிசி வாங்கிச் சாப்பிட்டு அவர்கள் எப்படி வாழ முடியும். (குறுக்கீடு) கோயம்புத்தூரில் இருக்கிறது. அதையே சொல்லிக்கொண்டு இருக்காதீர்கள். பல்வேறு மாவட்டங்களில் இந்த நிலை இருக்கிறது. 3 ரூபாய் கூலி பெற்று ½ படி அரிசி வாங்கி கஞ்சி கூட காய்ச்சிக் குடிக்க முடியாத நிலையில் ஏழை எளிய மக்கள் இருக்கிறார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, குறைந்த பட்சம் ரூ. 8 கூலி ஆண்களுக்கும், ரூ. 6 கூலி பெண்களுக்கும் என்று கொடுத்தால் இன்று ஏற்பட்டு இருக்கும் விலைவாசி உயர்வுக்கும், ஏறிக்கொண்டிருக்கிற விலைவாசிக்கும் இடையே மக்கள் கஷ்டப்பட்டுக்கொண்டு இருப்பதற்கு பரிகாரம் செய்து கொடுத்தது போல் இருக்கும் என்று அரசின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகிறேன்.

(திரு. கு. காமாட்சி—தலைமை)

நிவாரணப் பணிகளுக்காக ஏற்கெனவே ஒதுக்கப்பட்ட ரூ. 10 கோடியைத் தவிர, மேலும் ரூ. 7 கோடி, 1975-76-ல் இயல்பான வேலைகளுக்கு ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து வறட்சி பகுதிகளில் பணிகளுக்காக சம்பந்தப்பட்ட துறைகளால் செலவிடப்பட்டு இருக்கிறது. அந்தப் பத்து கோடி ரூபாயும் ஏற்கெனவே செய்யவேண்டிய வேலைகளை செய்து முடிக்க செல



வழித்தாகிவிட்டது என்று சொல்கிறார்கள். வறட்சியின் நிவர்த்திக்கு செலவழிச்சாச்சு, கிரௌண்ட் வொர்க்கும் நிறுத்தியாச்சு என்று சொல்கிறார்கள். இப்போது 55 கோடி ரூபாய் நிவாரணப் பணிக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். போதுமான அளவுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு அந்தப் பணத்திலிருந்து கிடைக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கிணறுகள் வெட்டுவதை காண்டிராக்டரிடம் கொடுத்துச் செய்கிறார்கள். நடைபெற்ற வேலைகள் சரியான முறையில் இருக்கிறதா என்று பார்த்தால் பல்வேறு வகையில் சரியாக இல்லை. அந்த வேலைகள் சரியாக நடைபெற்றனவா என்பதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பஞ்சாயத்துகளுக்கு முன் பணம் தந்து இந்த வேலைகளைச் செய்யலாம் என்பது என்னுடைய கருத்தாகும். உணவு தானியங்களைப் பொறுத்தவரையில், பஞ்சாயத்து யூனியனிடத்தில் ஒப்படைத்து அதை அளிக்கவேண்டும், அந்த விநியோகிக்கும் பொறுப்பை பஞ்சாயத்து யூனியன் தலைவரோ ஆணையரோ எடுத்துக்கொள்ளலாம் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடிக்கிணறு வெட்டுவதற்காக ரூ. 500 முதல் ரூ. 2,000 வரை கொடுக்கிறார்கள். 2,000 போதாது. அதை 4,000 ஆக உயர்த்தவேண்டும். 4 இடத்திற்குச் சென்று இந்த ரூ. 2,000 கடன் பெறுவதற்குள்ளாக—ஒவ்வொரு அலுவலகத்திற்கும் சென்று வருவதற்குள்ளாக—அவனுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவாகிவிடும். பஞ்சாயத்துகளிடமே பொறுப்பைத் தந்து, சுலபமான முறையில் விவசாயிகள் கடன் வாங்குவதற்கும், கிணறு வெட்டுவதற்கும் உடனடியாக துரித நடவடிக்கை எடுக்கவேண்டும். இதிலே காலதாமதம் கூடாது. இப்படி ஏற்பட்டால் பல பேர் இந்த வறட்சி நேரத்தில் சாகவேண்டியிருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கோடை மழை பெய்து இருப்பதாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள். கோடை மழையால் ஆடுமாடுகளுக்குத்தான் பயன் இருக்கும். ஆகவே, எங்கெங்கே தண்ணீர் இல்லையோ, அங்கெல்லாம் ஆவடியில் இருக்கும் டாங்கிகளை எடுத்துக்கொண்டு போய் போர்க்கால நடவடிக்கையாகக் கருதி குடிநீர் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த மாதிரி முறையில் அரசு பணி இருக்கவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன்.

தரிசு நிலத்தை பல ஏழைகள் பெயரைப் போட்டு, மிராசுதாரர்கள் அனுபவித்துக்கொண்டு இருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொள்ளவேண்டும். அவர்கள் பெயரில் பட்டா இருந்தாலும், சாகுபடி ஆவது பூராவும் மிராசுதாரர்களுக்குப் போகிறது. இதைத் தடுக்கவேண்டும். நீங்கள் ஆழமாகப் பார்த்தால் இது நன்கு தெரியும். என் சொந்த ஊரிலேயே இந்த நிலைமை இருக்கிறது. இதை அரசு தடுக்க சுலபமான முறையில் அந்த நிலத்தை ஏழைகளுக்கு பட்டா செய்து கொடுக்க துரித நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வீட்டுமனை பட்டா கொடுப்பது பற்றி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

அதிலே ஏற்பட்டு இருக்கும் சிக்கலை எடுத்துக்கொண்டால், இன்று அவர்கள் வீடு கட்டி இருப்பது ½ சென்ட், 1 சென்ட் நிலத்தில். அவன் முன்னே கொல்லைக்குப்போய் காய்கறி போடுவான். இப்போது அவனை ½ சென்டிற்குள்ளே அடைத்து வைத்து இருக்கிறார்கள். கார்த்திகேயன் கமிட்டியிடமும் சொன்னோம், அமைச்சர் அவர்களும் பார்த்து இருக்கிறார்கள். அங்கே அந்த மாதிரி நிலை இருக்கிறது. பட்டா கொடுக்கும் விஷயத்தில் கணக்குப்பிள்ளை தயவு வைத்தால் பட்டா வழங்கப்படுகிறது. பல பேருக்கு இன்னும் பட்டா வழங்கப்படவில்லை. குடியிருந்து வரும் பலபேருக்கு பட்டா கொடுப்பதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யவேண்டும்.

ஜமாபந்தி என்று 5-6 நாளைக்கு நடக்கிறது. இது தேவையில்லை. மனுநீதித் திட்டம் என்று ஒரு நாள் போட்டு, அங்கே கொடுக்கும் மனுவும், அப்படியே வீணாகக் கிடக்கிறது.

நிலச்சீர்த்திருத்தத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அன்று தேச விடுதலை இயக்கத்தின் போது, முதல் முழக்கம்—உழுபவனுக்கு நிலம் கொடுக்கவேண்டும்—என்பது காங்கிரஸ் கட்சியின் பிரச்சாரமாக இருந்தது. அந்தக் கொள்கையை எல்லா இடங்களிலும் பரவச் செய்தார்கள். ஆனால் 28 ஆண்டுகளுக்கு பின்னாலும், பல நிலச்சீர்த்திருத்தச் சட்டம் வந்த பினனாலும் உழுபவனுக்கு நிலம் வந்ததா என்றால், இல்லை என்பது என் குற்றச்சாட்டு.

நம்முடைய காங்கிரஸ் கட்சியின் பெரும் தலைவர் காமராஜர் அவர்கள் உழுபவனுக்கு நிலம் கொடுக்கவேண்டுமென்பது காந்தியடிகளின் கொள்கை நான் அதைச் செய்து காட்டுவேன் என்று சொல்லி, ஒரு நபருக்கு 30 ஸ்டான்டர்ட் ஏக்கர் தான் வைத்துக்கொள்ளலாம் என்று சட்டம் கொண்டு வந்தார்கள். ஆனால் இப்படி சட்டம் கொண்டு வரப்போகிறேன் என்று முன்னாலேயே அறிவித்து விட்ட காரணத்தால், பல பேர்கள் பெயர்களை மாற்றி எழுதிக்கொண்டு விட்டார்கள், நிலம் ஒன்றும் மிச்சமில்லை. உபரி நிலம்—அறிவிக்கப்பட்ட நிலமே—98,653 ஏக்கர். ஆனால் பெயர்களை மட்டும் மாற்றி எழுதிக்கொண்டு விட்டதால் அதுவும் கிடைக்கவில்லை. பெரும் தலைவர் காமராஜர் கொண்டு வந்த சட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற நிலத்தில், 54,000 ஏக்கர் உழைக்கும் ஏழைகளுக்காக கிடைத்தது என்று சொன்னார்கள். ஆனால், உண்மை நிலை அப்படியில்லை. பாட்டாளி யாருக்கும் நிலம் கொடுக்கவில்லை என்பதை நான் சொல்லிக் கொள்கிறேன்.

இந்தமாதிரி கலைஞர் காலத்தில் 15 ஏக்கர் என்று பகட்டான விளம்பரம் செய்யப்பட்டதே தவிர பாட்டாளிக்கு நிலம் கொடுக்கிற அளவு செல்லவில்லை என்று குற்றம் சாட்டுகிறேன். காமராஜர் உண்மையிலேயே இதை சரியாக கடைப்பிடித்து இருந்தால் கபிஸ்தலம் மூப்பனார், வலிவலம் தேசிகர் போன்றவர்கள் இவர்கள் பின்னால் நின்று இருக்க முடியாது. தஞ்சை மாவட்ட காங்கிரஸ் தளபதி கபிஸ்தலம் மூப்பனார், கருப்பம்பலம், பூண்டி வாண்டையார், நெடும்பலம் சாமியப்ப முதலியார், வலிவளம் தேசிகர், வடபாதிமங்கலம் போன்றவர்கள் இவர்களுடைய படைத் தளபதிகளாக இருக்கிறார்கள். இவர்கள் ஏழை பங்காளர்களா? நீங்களும்



ஏழைப்பங்காளர்களா? நீங்கள் ஏழைக்கு வாழ்வு அளிக்கவில்லையென்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த மாவட்ட காங்கிரஸ் தளபதி யார்? இவர்கள் என்ன சபர்மதி ஆசிரம வாசிகளா? அல்லது உப்பு சத்தியாக்கிரகவாதிகளா? அல்லது அலிப்பூரிலும் அந்தமானிலும் அஞ்ஞாத வாசம் செய்தவர்களா? பழுத்த நிலப் பிரபுகள் அவர்கள் காலத்திலும் இன்றைக்கு இருக்கின்ற கலைஞர் காலத்திலும் பெரும் நிலப்பிரபுகள் இருக்கின்ற இடத்திலே இருக்கிறார்கள், மாற்றம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது அந்த மாவட்டத்துடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் யார் என்று அவருக்கு தெரியும் என்று நினைக்கிறேன். தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த தாழை மு. கருணாநிதி என்பவர். கலைஞர் ஆட்சியில் மாற்றம் செய்யப்பட்டு இருக்கிறார்.

திரு. எஸ். வடிவேல்: மாற்றம் இல்லை என்று சொல்லவில்லை. உண்மையாக உழைப்பவனுக்கு நிலம் கிடைக்கிற வகையில் இல்லை. கோயில் நிலத்தை எடுத்துக் கொள்ளுங்கள். பகுத்தறிவுப் பாசறையில் வளர்ந்த கழகம் ஆரம்பம் முதல் இன்றைய வரையில் பேசிய பேச்சுக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லை. 4½ லட்சம் ஏக்கர் நிலம் இருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இந்த பகுத்தறிவுப் பாசறை அரசு நடத்துகிற காலத்தில் இதையெல்லாம் செய்யமுடியாமல் வேறு யார் காலத்தில் கொண்டு வரமுடியும்?

இன்னும் கிராமங்களில் பட்டா வழங்கப்படவில்லை. என்னுடைய தொகுதி வைத்தீஸ்வரன் கோவில். இங்குள்ள கொண்டத்தூர், மருவத்தூர், வடபாதி, கற்கோவில் கிராமங்களில் குத்தகை கொடுக்காததால் கோவில் நிலங்கள் விஷயத்தில் கோர்ட்டில் நிறுத்தப்பட்டு இருக்கிறார்கள். இது குத்தகை சாகுபடியாளர்கள் பதிவு சட்டத்தில் கொண்டுவரப்படவில்லை. சட்டம் போடுவதால் ஏழை மக்களுக்கு தெரிவது இல்லை. கிராமத்திலே இருக்கின்ற ஏழை குடியானவர்கள் குத்தகை பதிவுச் சட்டத்தை தெரிந்து கொள்ள முடியாது. 44 லட்சம் என்று குத்தகை பதிவுச் சட்டத்தில் சொல்கிறபோது அத்தனை பேரும் சட்டத்தில் வராமல் குறைவான பேர் பெற்று அதிகமான பேர் நிலம் இழக்கிற நிலையில் இருக்கிறார்கள். கோவில் நிலங்களை அரசு நிச்சயமாக கைப்பற்ற வேண்டும். உழைப்பவனுக்கு நிலம் வழங்க வேண்டும். கோவிலுக்கு பூசை பண்ணுவதற்கு ரூ. 50,000 அரசாங்கம் தரவேண்டும். கேரளாவில் செய்து இருக்கிறார்கள் என்று அதை சொல்வார்கள். கேரளாவில் செய்த மாதிரி செய்துவிடலாம் என்று சொல்லுவார்கள். கேரளாவில் அரசாங்கம் பட்டா அளிக்கிற நிலையில் இருக்கிறது. சுதந்திர மனிதனாக விவசாயியை வாழவைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைக்கு இந்த நிலம் சம்மந்தப்பட்டவரையில் பழனி நெய்க்காரப்பட்டி ஜமீன் பால் பண்ணை பற்றி. இந்த மேய்ச்சல் நிலங்கள் 74-ம் ஆண்டு வரை இருந்தது. 72-ம் ஆண்டிலேயே எடுத்திருந்தால் இன்றைக்கு நிலம் எடுத்து இருக்கலாம், 75-லே நடவடிக்கை எடுத்து

இருக்கின்றது அரசு. இந்த நடுக்காலத்தில் நிலம் விற்று ஆயிற்று. நிலம் உள்ளவர்கள் வாங்கி இருக்கிறார்கள். நீங்கள் என்ன பண்ணப் போகிறீர்கள்? கொடுத்த நிலத்திற்கு முத்திரை குத்தப் போகிறீர்கள். 1972–73 லே அரசு அறிவித்து இருந்தால், நிலம் விநியோகம் செய்திருந்தால் 1,000 பேருக்கு நிலம்கொடுத்து இருக்கலாம். ஜமீன் யாருக்கு விற்று இருக்கிறார்களோ அவர்கள் பேர் இருக்கும். இந்த பட்டியலை சேர்த்து விபரம் சொல்வார்களே தவிர பிரயோசனப்படாது என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பழத் தோட்டம் என்ற பேரிலே பழமுதிர் சோலை தோட்டம் என்று இருக்கிறது. இது நடக்கவில்லை. பழத்தோட்டம் இல்லை. எலுமிச்சம் பழமும் இல்லை. பொட்டையன் பேர் செந்தாமரைக் கண்ணன் என்பது போல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இது சாமி ஊர் போல இருக்கிறது. பழமுதிர் தோட்டம் என்று இல்லை. இன்னும் எதாவது தோட்டம் இருக்கிறதா ?

திரு. எஸ். வடிவேல்: வெங்கடசாமி நாயுடு என்பவர் பண்ணை. இந்தப் பண்ணையிலே பழத்தோட்டம் என்ற பேரிலே நிலம் அதிகமாக இருக்கின்றது. இதை எடுத்துவிடுவார்கள் என்ற பயத்தால் இதை விற்றுக் கொண்டு இருக்கிறார்கள். நீங்கள் என்ன சட்டம் பண்ணினாலும் பெரிய மனிதர்கள் சட்டத்தில் புகுந்து விளையாடுகிறார்கள். சட்ட புத்தகம் அலங்காரமே தவிர சமுதாயத்திற்கு உபயோகம் இல்லை. யோசனை பண்ணணும். ஏழை மக்களுக்கு பயன்படக்கூடிய வகையில், சாதாரண ஏழை குடியானவனுக்கு நிலம் கொடுப்பது பற்றி ஆக்ஷேபனை இல்லை. சட்டத்தில் யார் யார் பேருக்கு எழுதி வைக்கிறார்களோ அவர்களுக்கு முத்திரை குத்துவது நமது வேலை. இதை வேண்டாமென்று சொல்லிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

குன்னியூரைச் சார்ந்த ஏழு கிராமங்கள் இப்படியே அவரிடம் இருக்கின்றது. 15 ஏக்கர் என்று உச்ச வரம்புச் சட்டம் இருந்தாலும் நீங்கள் சட்டம் கொண்டுவந்து இருந்தாலும் ஏழு கிராமங்கள் அப்படியே அவரிடம் இருக்கிறது. எல்லாம் ஏமாற்று வேலை. ஸ்ரீ எம்பெருமாள் என்பதில் சில புள்ளிகளை எடுத்து விட்டால் "எமப்பெருமாள்" என்பது போல சட்டத்திலே ஒரு செக்ஷனிலே போய்விடும். உங்களால் நிலம் எடுக்க முடியவில்லை. பேர்கள் மாறி இருக்கின்றனவே தவிர அந்த நிலை மாறவில்லை என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

கோவில் நிலங்களை கண்டிப்பாக எடுத்தாகவேண்டும். குத்தகை சாகுபடியாளாகள் இரண்டு கோர்ட் போய் விட்டார்கள். வறட்சி முன்னிட்டு சொம்பும் போயிற்று, அரிசியும் போயிற்று, கோவிந்தா; இரண்டு கோட்டுக்குப் போய்க்கொண்டு இருந்தான் குத்தகை சட்டப்படி. அவனுக்கு இந்த வரட்சி முன்னிட்டு தள்ளுபடி பண்ணுவது பற்றி அறிவிப்பு ஒன்றும் இல்லை. ஒரு சமயம் அமைச்சர் அறிவிப்பிலே வருமோ என்று மகிழ்ச்சியோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். இல்லை என்றால் லட்சக்கணக்கான விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாக வேண்டிய நிலை வருகிறது. புத்திசாலித்தனமாக நிலத்தை விட்டு வெளியேற்றுகிற நிலை ஏற்படும். அமைச்சர் பாதிக்கப்பட்டவர்களுக்கு மொத்த நெல் அளக்க வேண்டுமென்று உத்தரவு போடவேண்டும். அப்போதுதான் லட்சக் கணக்கான விவசாயிகள் அவர்களுடைய வாழ்க்கையில் ஓரளவு முன்னுக்கு வர முடியும் என்பதைச் சொல்லி, நான் இந்த அளவோடு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.



* திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள நில வரி மானியக் கோரிக்கையை முழுவதும் வரவேற்று சில கருத்துக்கள் சொல்ல விரும்புகிறேன்.

இன்றைக்கு கழக ஆட்சி பொறுப்பை ஏற்ற பின்னால் இந்த வருவாய்த் துறையும் மாவட்ட நிர்வாகமும் மிகச் சிறப்பாக அமைந்து இருக்கின்றது என்பதை சாதாரணமாக எல்லோரும் ஒப்புக் கொள்வார்கள். இப்போது வறட்சி ஏற்பட்டு, அதன் காரணமாக கழக அரசு தன்னுடைய போர்க்கால நடவடிக்கையை மேற்கொண்டு இயன்ற அளவு மக்கள் துயரைத்துடைக்க நடவடிக்கை எடுத்து இருக்கின்றது. ஏறக்குறைய வாரத்திற்கு ஒருகோடி ரூபாய் என்ற அளவுக்கு மாவட்டங்களிலெல்லாம் இத்தகைய பணி வெகு வேகமாக நடந்து கொண்டு இருக்கின்ற நேரத்தில் நமக்கு அரசியல் சூழ்நிலை காரணமாக 1976-ல் எதிர் பார்க்கிற தேர்தல் காரணமாக தமிழ் நாட்டுக்கு துரோகம் இழைக்கிற வகையில் சில குரல்கள் வருவதை இந்த நேரத்தில் எண்ணிப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

1969-லே ஏற்பட்ட வறட்சி காலத்தில் நமக்கு கொடுக்கப்பட்ட உதவியும் அந்த நேரத்தில் நம் மேல் காட்டப்பட்ட அனுதாபமும் கூட இன்று ஏற்பட்டு இருக்கின்ற வறட்சி நிலையில் ஏற்படாமல் இருக்கின்றது. ரூ. 50 கோடிக்கு ஒதுக்கீடு செய்து திட்டமிட்டு கழக அரசு இன்றைக்கு தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டு இருக்கும் போது உறுதுணையாக மத்திய அரசு இல்லை என்ற குற்றச் சாட்டை இங்கே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன் நேற்றைக்குக் கூட பாராளுமன்றத்தில் தமிழகச் சார்பில் இந்த மத்திய அரசுடைய நிதி மந்திரிக்கு கண்டனம் தெரிவிக்கப்பட்டது. அவர் அப்படி பேசியிருப்பது சரியில்லை என்று சொல்லப்பட்டு இருந்தாலும் நேற்றைக்கு இந்த மாமன்றத்தில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தன்னுடைய கண்டன உரையை ஆற்றி இருந்தாலும் தமிழன் என்கிற முறையில் மிகப் பணிவோடு ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

(முற்பகல் 11-30.)

இன்றைக்கு எப்போதும் இல்லாத வறட்சி ஏற்பட்டு, ஆங்காங்கே மாவட்டங்களில் இருக்கிற மக்கள் எந்த வகையிலே அரசின் உதவி கிடைக்கும் என்று தவித்துக்கொண்டிருக்கும் போது அரசியல் காரணமாக "நாங்கள் வந்து பார்ப்போம், கொடுத்ததற்கு கணக்கு கேட்போம்,

அடுத்த மாதம் வந்து பார்த்த பின்னுல் உதவி செய்யப் பார்ப்போம்" என்று தமிழ் நாட்டிலிருந்து போன ஒரு நிதி அமைச்சர் பேசியது மிகுந்த வருத்தத்தைத் தருகிறது.

நான் இந்த நேரத்தில் கழகத் தலைவர்களிடம் மன்னிப்புக் கேட்டு, ஒன்றைத் தெரிவிக்கிறேன். இப்படிப்பட்ட மத்திய அமைச்சர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தால் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் அதன் தொண்டர்களாகிய நாங்கள் கறுப்புக் கொடி காட்டுவோம்; அவர்கள் கலந்து கொள்கிற நிகழ்ச்சிகளில் மறியல் செய்ய தயாராக இருக்கிறோம். மற்ற மாநிலங்களிலே இருந்து நாடாளுமன்றத்துக்குச் சென்றவர்கள் அமைச்சரானவர்கள் அதிக நிதி ஒதுக்கித் தந்தார்கள். ஆனுல் இந்த மாநிலத்திலிருந்து சென்றவர், தமிழ் மக்களின் உணர்ச்சியை மதிக்காமல் குறிப்பாக வரட்சி அதிகமாகத் தாக்கியிருக்கிற தர்மபுரி மாவட்டத்திலிருந்து போன அமைச்சர் இப்படிப் பேசியது அகில இந்திய பத்திரிகைகளில் வந்து, தமிழ் மக்களுக்கு மாசு ஏற்படுத்தியது எவ்வளவு கேவலமானது என்பதை உணரவேண்டும்.

திரு. எ. சுப்பிரமணியம்: தலைவரவர்களே, மத்திய நிதி அமைச்சர் எந்த ஒரு மாநிலத்தையும் குறிப்பிட்டுப் பேசவில்லை. பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும் இது பொருந்தும் என்று அவர்கள் சொல்லியது இன்றைய பத்திரிகையில் வந்திருக்கிறது. அதைப் பார்த்த பிறகும் பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் இங்கே இப்படிப் பேசுவது முறையா?

திரு. கா. வேழவேந்தன்: அவர் எப்போதும் பேசுகிறுர்; இப்போது மட்டுமல்ல. முதலில் பிரதமர் வந்தபோதும் ஊழியர் கூட்டம் என்று சொல்லிக் கொண்டு தவறுன கருத்தை அங்கே பேசியிருக்கிறுர். அதற்குப் பின்னுலே வந்த பிறகும் அதைக் கோடிட்டு காட்டும் வகையில் ஏதோ தமிழகம் தொடர்ந்து தவறு செய்துவருகிறது என்பதைப் போலவும் அதை அவர்கள் கண்காணிப்பதைப் போலவும் வறட்சி நிவாரணத்திற்கு ஒதுக்கிய பணம் சரியாகச் செலவிடப்பட்டிருக்கிறதா என்று எழுப்பியிருக்கிற கேள்வி மிகத் தவறுனது. இப்போது நாம் கேட்ட தொகையாவது ஒதுக்கப்பட்டிருக்கிறதா என்றுல் அதுவும் இல்லை. நாம் கிட்டத்தட்ட வாரம் ஒரு கோடி ரூபாய் இதற்காக செலவழித்துக் கொண்டிருக்கிறோம். 55 கோடி ரூபாய்க்கு திட்டமிட்டிருக்கிறோம். $7\frac{1}{2}$ கோடி ரூபாய் தருவதாகச் சொல்லி, அதையும் முழுமையாகத் தரவில்லை. அப்படி இருக்கும் போது, அடுத்த மாதம் தமிழகம் வரப்போகிறேன் என்று சொல்லியிருக்கிறுர்.

கடுமையான வறட்சி தாக்கி பல மாதங்கள் ஆகிவிட்டன. இன்னும் அவர் வரும் வரை காத்திருக்க வேண்டுமா? அவர் பார்த்த பின்னுல் தான் பணம் கொடுப்பேன் என்பதைப் போல பேசியிருக்கிறுர்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): அதைப் பற்றி முதலமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறுர்கள். அதனுல் அதை விட்டு விட்டு, வேறு விவரங்களைச் சொல்லுங்கள்.



திரு. நா. வீராசாமி: முதலமைச்சருடைய கருத்தை ஒட்டித்தான் அவர்கள் பேசுகிறுர்கள். முதலமைச்சர் சொல்லிவிட்டால் அந்தக் கருத்தை மீண்டும் சொல்லக்கூடாது என்பது உறுப்பினரின் உரிமையை பறிப்பதாக இருக்கிறது. முதலமைச்சரின் கருத்தை வைத்துத்தான் விவாதமே நடக்கிறது.

திரு. வி. ஆலடி அருணு: சார், பாய்ண்ட் ஆப் ஆர்டர். திரு. வேழவேந்தன் அவர்கள் ஒரு முக்கியமான கருத்தை தீவிரமாக இந்த மன்றத்தில் சொல்லிக் கொண்டிருக்கிறுர்கள். நேற்றைய தினம் மத்திய நிதி அமைச்சர் "தமிழகத்திற்கு மட்டும் நான் சொல்லவில்லை; எந்தெந்த மாநிலங்களில் வறட்சிப் பணிகள் நடைபெறுகின்றனவோ அவைகளை எல்லாம் கண்காணித்து சரியாகப் பார்க்கப்போகிறோம்; தமிழ்நாட்டை மட்டும் கெட்ட எண்ணத்தோடு உள்நோக்கத்தோடு சொல்லவில்லை" என்று சொல்லியிருக்கிறுர்கள். அப்படி அவர்கள் சொன்னது தவறு? அப்படியானுல் கணக்கை காட்டமாட்டோம் என்பது கனம் அங்கத்தினருடைய கருத்தா என்பதை விளக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கா. வேழவேந்தன்: மத்திய நிதி அமைச்சர் இப்போது கூறிய அறிவுரையை அந்தந்த மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டபோது சொல்லியிருக்க வேண்டும். அப்போதெல்லாம் சொல்லாமல் தமிழ்நாட்டுக்கு வந்தபோது மட்டும் சென்னையில் இப்படி பேசியிருக்கிறுர் என்பதற்கு எங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பீகார் போன்ற மாநிலங்கள் வறட்சியால் தாக்கப்பட்டபோது, உத்திரப் பிரதேசம் போன்ற மாநிலங்கள் வறட்சியால் தாக்கப்பட்டபோது, மராட்டியம் வறட்சியால் தாக்கப்பட்டபோது பல கோடி ரூபாய்களை தாராளமாக வழங்கிவிட்டு எதையுமே சொல்லாதவர்கள், இப்போது 100 ஆண்டு காலமாக காணுத வறட்சியால் தமிழ்நாடு பாதிக்கப்பட்டிருக்கும்போது இப்படி அறிவுரை சொல்வது என்றுல்......

திரு. எ. சுப்பிரமணியம்: மத்திய அரசு ஒதுக்கிய பணம் பூராவையும் இன்னும் தரவில்லை என்று சொன்னுர்கள். மாநில அரசும் மாவட்டங்களுக்கு ஒதுக்கிய பணம் பூராவையும் இன்னும் கொடுக்கவில்லை. ஒரு பகுதியை முதலில் கொடுக்கிறோம்; பிறகு ஒரு பகுதியைக் கொடுக்கிறோம். இதுதான் வாடிக்கை. அதைப் போலத்தான் மத்திய அரசும் செய்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): விளக்கங்களை எல்லாம் உங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும்போது சொல்லிக் கொள்ளுங்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி: சார், பாய்ண்ட் ஆப் ஆர்டர். இங்கே இருக்கக்கூடிய அங்கத்தினர்கள் மத்திய அரசு அதைச் செய்யவில்லை; இதைச் செய்யவில்லை என்று சொல்வது, They are rubbing them on the wrong side என்பது

போலாகும். நேற்று பேசும்போது முதலமைச்சர் இனி நிதி வாங்கமாட்டேன் என்று சொன்னார்கள். இது ஊர் மக்கள் சமாச்சாரம்; பொது மக்கள் சமாச்சாரம்; முதலமைச்சர் வீட்டு சமாச்சாரம் அல்ல. கவர்ன்மெண்ட் ஆப் இந்தியா கொடுக்கிற உதவிப்பணம். 4⅓ கோடி தமிழ் மக்களுக்கு கொடுக்கிற பணம் அது. அதை வாங்க மாட்டேன், கேட்க மாட்டேன் என்றால் என்ன அர்த்தம்? அவர்கள் வீட்டு சமாச்சாரமா இது? 150 கோடி கொடுக்கிறார்கள். அதை வாங்க முடியாது என்று எப்படி சொல்லலாம்?

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: இது ஒன்றும் பாயிண்ட் ஆப் ஆர்டர் அல்ல.

<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u>: தலைவரவர்களே, முதலமைச்சர் வீட்டு சமாச்சாரமா என்று கேட்டார்கள். வறட்சிப் பணி என்ற பெயரில் கர்நாடகமும் மராட்டியமும் கோடி கோடியாக கொள்ளையடிக்கிறார்கள் என்று பத்திரிகைகளிலே பார்த்தோம். அப்போது அங்கேபோய் சொல்லாமல் மத்திய நிதி அமைச்சர் இங்கே வந்து சொல்கிறார் என்றால் அதற்கு என்ன அர்த்தம்? இங்கே வந்து அவர் அப்படிச் சொன்னதால் முதலமைச்சர் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னதற்கு பதில் சொல்லியிருக்கிறார்களே தவிர வேறு எந்தக் கருத்தையும் சொல்லவில்லை.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: 150 கோடி தருவதாகச் சொன்னார்கள். அது தவறு.

<u>திரு. எ. ஆர். மாரிமுத்து</u>: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இங்கு பேசியது பற்றி ராஜ்ய சபையிலும், பார்லிமெண்டிலும் விவாதம் நடந்திருக்கிறது. இந்த வறட்சி நிவாரணம் எந்தெந்த மாநிலங்களுக்கு கொடுக்கப்படுகிறதோ அவை எல்லாவற்றிற்கும் சேர்த்துத்தான் சொன்னேன் என்று நிதி அமைசசர் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பிறகும் இப்படிச் சொல்வது சரியா என்பதற்கு தங்களுடைய தீர்ப்பை கேட்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: இங்கே வந்த பின்னால் இதைச் சொன்னார்; அங்கே போன பின்னால் அதைச் சொன்னார். இன்னும் எங்கே போய் என்ன சொல்கிறார் என்பதைப் பார்க்கலாம்.

<u>திரு. எ. ஆர். மாரிமுத்து</u>: இந்தியா முழுவதற்கும் அமைச்சராக இருக்கிறவர் எந்த இடத்தில் வேண்டுமானாலும் எந்தக் கருத்தை வேண்டுமானாலும் சொல்லலாம். எங்கே சொன்னாலும் அது நாடு முழுவதற்கும் தான்.

<u>திரு. துரைமுருகன்</u>: அதை இப்போது மட்டும் ஏன் சொல்ல வேண்டும்? இதற்கு முன்னால் கொடுக்கும் போது சொல்லியிருக்கலாமே. அல்லது இதற்கு முன்னால் மற்ற மாநிலங்களுக்கு கொடுக்கும்போது சொல்லி இருக்கலாமே. இப்போது மட்டும் ஏன் சொல்ல வேண்டும்?





<u>மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்</u>: மத்திய நிதி அமைச்சர் மீண்டும் 20-ந் தேதி வருகிறேன் என்று சொல்லியிருக்கிறாரே, அதற்கு என்ன பொருள்?

<u>திரு. எ. ஆர். மாரிமுத்து</u>: நிதி அமைச்சர் பொறுப்பை வகிக்கும் போது கொடுத்த பணத்திற்கு வேலை நடந்திருக்கிறதா என்பதைப் பார்க்கும் பொறுப்பும் இருக்கிறது. பார்க்கக்கூடாது என்று சொல்கிறீர்களா?

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: ஏற்கனவே சிண்டே அவர்கள் வந்தபோது தகவல் கொடுத்துவிட்டு வந்தார்கள். வறட்சிப் பணிகளைப் பார்க்க வேண்டும் என்று சொன்னார்கள். அதிகாரிகளுடன் அவர்களையும் அழைத்துச் சென்று பார்வையிட்டோம். அதைப்போல சுப்பிரமணியமும் சொல்லியிருக்கலாமே. அவர் சொல்லியிருந்தால் நாங்களே அழைத்துச் சென்று காட்டியிருப்போமே. அவர் இங்கே வருவதாகக் கூட எங்களுக்குத் தகவல் கிடையாது. எதற்கோ வந்துவிட்டு, எங்கோ ஒரு கூட்டத்தில் இந்த மாதிரி சொல்லியிருக்கிறார்கள். அவர் வருவது பற்றி அரசாங்கத்திற்குத் தகவல் கூட கிடையாது.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: அதை எல்லாம் பற்றி ஏற்கனவே பேசி முடிவு செய்யப்பட்டிருக்கிறது. மீண்டும் இப்போது அதைப்பற்றிப் பேசுவது சரியல்ல.

<u>திரு. முனு ஆதி</u>: ஸ்பீக்கர் அப்படி எதுவும் சொல்லவில்லை. ஒன்றும் முடிவு செய்யவில்லை.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: நீங்கள் உட்காருங்கள். (திரு. முனு ஆதி நின்றுகொண்டிருந்தார்) தயவுசெய்து நீங்கள் உட்காருங்கள்; கீழே உட்காருங்கள்.

<u>திரு. முனு ஆதி</u>: நீங்கள் பேசுவது சரியல்ல. உங்களுடைய வார்த்தை சரியல்ல. கீழே உட்கார் என்றால் எப்படி? கீழேயா உட்காருவார்கள்? சீட்டில் உட்காரச் சொல்லுங்கள்.

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u>: நான் தீர்ப்பு கொடுத்துவிட்டேன். கீழே உட்காருங்கள்.

<u>திரு. கே. டி. கே. தங்கமணி</u>: மத்திய நிதி அமைச்சர் பற்றி இங்கே சொல்லப்பட்டது. நிதி அமைச்சர் பேசிய பேச்சு பற்றி நாடாளுமன்றத்தில் எழுப்பியிருக்கிறார்கள். அதற்குப் பிறகு அவர் நிதி அமைச்சராக இருக்கும் வரை நான் தமிழ்நாட்டுக்குப் பணம் கேட்கமாட்டேன் என்று ஒரு முதலமைச்சர் சொல்வது எப்படி பொருத்தமாக இருக்கும்? மத்திய நிதி அமைச்சர் பேசியதைப்பற்றி நாடாளுமன்றத்தில் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். அப்படி இருக்கும் போது அவர் நிதி அமைச்சராக இருக்கும்வரை நான் உதவி கேட்கமாட்டேன் என்று சொல்வது சரியா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : வறட்சி நிதியைப் பொறுத்தவரை, இங்கே ஒன்றைச் சொன்னார். அதற்கு முதலமைச்சர் பதில் சொன்னார். அதைப் பார்த்த பிறகு மத்திய நிதி அமைச்சர் பார்லிமெண்டில் இப்படிச் சொல்லியிருக்கிறார். இன்னும் என்ன சொல்லப் போகிறார் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

திரு. வி. ஆலடி அருணா : இதற்குப் பிறகு தமிழக அரசு தன்னுடைய முடிவைத் திருத்திக் கொண்டிருக்கிறதா என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : மத்திய அமைச்சர் பொறுப்பற்று பேசியிருக்கிறார் என்ற முறையில் இங்கே பேசுவது சரியல்ல. அப்படியானால் முதலமைச்சர் இங்கே பேசியது பொறுப்பற்ற பேச்சு என்று சொல்லமுடியாதா ? மத்திய நிதி அமைச்சர் நாடு பூராவுக்கும் இருக்கிற அமைச்சர். ஒரு மாநிலத்தைப் பார்க்க வேண்டுமென்ற பொறுப்பு அவருக்கு இருக்கிறது. அவர் வருவதாகத் தகவல் வரவில்லை என்று அன்பில் அவர்கள் சொன்னார்கள். அடுத்த மாதம் வருவதாகச் சொல்லியிருக்கிறார்கள். வரும்போது தகவல் வரும். அம்மாதிரி வருவதும் பொறுப்பற்ற செயல், 4 கோடி தமிழ் மக்களுக்கு ஒழுங்காக நிவாரணம் அளிக்கப்படுகிறதா என்பதைப் பார்க்கப்போகிறேன் என்று சொல்வதும் பொறுப்பற்ற பேச்சு என்று சொன்னால் அது எப்படி சரியாகும் ? எல்லோருக்கும் பொறுப்பு இருக்கிறது.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : முதலமைச்சருக்குப் பொறுப்பு இருந்த காரணத்தினால்தான் அப்படி பதில் சொன்னார்கள். பொறுப்போடுதான் அந்தத் தொகை எங்களுக்குத் தேவையில்லை என்று சொன்னார்கள்—தைரியமாகச் சொன்னார்கள். தமிழர்கள் வாழ்வில் தலை குனியக் கூடாது என்ற எண்ணத்தோடு சொன்னார்கள்.

DR. H. V. HANDE : On a point of order, Sir. For a long time I have been trying to catch the eye of the Chairman who is in the Chair right now. I am raising a very, very valid point of order. Hon. Minister Thiru Anbil Dharmalingam in his reply has raised a point whether we should take the money at all from the Centre for drought relief fund and he has also supported the Hon. Chief Minister's stand that we are not going to take money from the Centre. Now it raises a very important point, a constitutional problem. If you say like that, there is one thing—confrontation between the State and the Centre. Generally, it is not done inside this House because even in the Constitution....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : நீங்கள் என்ன பாயிண்ட் ஆப் ஆர்டர் சொல்கிறீர்கள் ?

DR. H. V. HANDE : I am coming to the point of order. I am not making a lengthy speech. It is a little lengthy point of order. I want a ruling on it.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : எவ்வளவு சுருக்கமாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு சுருக்கமாகச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். அதற்குப் பிறகு உங்கள் தீர்ப்பை நான் எதிர் பார்க்கிறேன்.

I would like you to consider my point of order carefully and then give a ruling. I want to know whether it is in order in this House to create a constitutional crisis by confronting with the Centre. That is one part of it.

Secondly, the very Demand for Grant which he has brought in here—the *"manya korikai"* is on the basis that we are going to get Rs.7½ crores. On that basis whether it is in order to discuss a defunct Demand? We have no right to discuss the Demand. Are we in order to discuss the Demand providing for Rs. 7½ crores? After the Rs. 7½ crores theory is expounded, it has been reduced to Rs. 6 crores and the Hon. Chief Minister has stated that he is not going to take any more fund from the Centre for drought relief. It is a very very serious matter. It is not his personal problem. It is a problem of the State. Therefore, I would like the Chair to give a ruling on these two specific points, namely, (1) whether it is in order in this House to create a constitutional crisis by confrontation with the Centre (2); whether it is in order in this House to discuss the Demand which is defunct...I want a ruling on these two points.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. காமாட்சி) இது நடைமுறைக்கு ஒத்தது அல்ல. இது பாயிண்ட் ஆப் ஆர்டர் இல்லை.

Dr. H. V. HANDE : You are not able to give a ruling now, The Chair cannot give a ruling now.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): இது பாயிண்ட் ஆப் ஆர்டரே இல்லை என்கிறேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : நான் டெபனெட்டாக பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பியிருக்கிறேன். உடனே ரூலிங் கொடுக்காவிட்டாலும் பிறகு கொடுக்கலாம். (திரு. நா. வீராசாமி எழுந்திருந்தார்.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : அது பாயிண்ட் ஆப் ஆர்டரே இல்லை என்றுதான் சொன்னேன்.

DR. H. V. HANDE ; If you cannot give a ruling now, you can hold over. I have raised a very difficult problem. 7½ கோடி ருக் கேட்டோம். அதை வாங்கமாட்டோம் என்கிறார்கள்...

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இனிமேல் கேட்கமாட்டோம் என்றுதான் சொன்னார்கள். $7\frac{1}{2}$ கோடிக்கு ஒத்துக்கொண்டுபோனார்கள். $6\frac{1}{4}$ கோடிக்கு வந்திருக்கிறது என்று குறிப்பிட்டோம்.

திரு. நா. வீராசாமி : மத்திய நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் தெருக்கூட்டத்தில் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதற்கு நமது முதலமைச்சர் அவர்களும் ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். (திரு. முனு ஆதி குறுக்கீடு.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): முதலிலேயே நான் அதைச் சொன்னேன். நான் படிக்கவில்லைதான். (திரு. முனு ஆதியைப் பார்த்து) நீங்கள் உட்காருங்கள். இப்போது திரு. வீராசாமி அவர்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்புகிறாரா? க்ளாரிபிகேஷனா?

திரு. நா. வீராசாமி : நான் சொல்ல வந்தது—நம் விதிமுறைகளிலேயே கூட முன்பு தெரிவித்த ஒரு கருத்தை திருத்திக்கொள்ள உரிமை இருக்கிறது. திருத்திக் கொண்டவுடன் அதை ஏற்றுக்கொள்வதும் மரபாக இருக்கிறது. மத்திய நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் சென்னை பொதுக்கூட்டத்தில் தெரிவித்த கருத்துக்கு நமது மதிப்பிற்குரிய முதல்வர் அவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்தவுடன், மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தம் தவறை உணர்ந்து, நமது முதலமைச்சர் அவர்களுடைய கருத்துக்கு ஓரளவு மதிப்புத் தருகிற வகையில்—தாம் முதலில் சொன்னதைத் திரும்பப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நேற்று டெல்லியில் பேசியிருக்கிறார்கள். பொறுப்புள்ள மத்திய நிதி அமைச்சர் முன்பு தான் சொன்ன ஸ்டேட்மெண்டை திருத்திக் கொண்டிருப்பதால் நாம் அந்த விஷயத்தை அப்படியே விட்டுவிடுவதுதான் நல்லது என்று கருதுகிறேன்.

திரு. ஆலடி அருணா : மத்திய நிதி அமைச்சர் திரு. சுப்பிரமணியம் அவர்கள் தமிழ் நாட்டுக்கு வந்தபோது ஏதோ தவறான கருத்தைச் சொன்னார்கள் என்பது போலவும், அதற்கு நமது முதல்வர் அவர்கள் வீராவேசத்துடன் ஒரு முடிவைச் சொன்னவுடன், தம் தவறை அவர் திருத்திக்கொண்டுவிட்டார் என்பது போலவும் சொல்கிறார்களே, அப்படியானால் இந்த அவையிலே தவறான ஒரு முடிவைச் சொன்னவர்கள் தங்களுடைய தவறைத் திருத்திக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இது பாயிண்ட் ஆப் ஆர்டரே இல்லை.



திருமதி சத்தியவாணிமுத்து : திரு. சுப்பிரமணியம் அவர்கள் கூறியவற்றை வைத்து, திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கும் வரை வறட்சிப் பணிக்காக அவர்களிடம் எந்த நிதியையும் வாங்கமாட்டோம் என்று முதல்வர் அவர்கள் சொல்லியிருப்பதன் காரணமாக பெரிய சர்ச்சை எழுந்திருக்கிறது. இன்றைக்கு நாம் வருவாய்த் துறை மானியம் பற்றி—வறட்சிப் பணிகள் பற்றி விவாதிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மத்திய அரசாங்கத்திடம் பணம் வாங்கி வறட்சிப் பணிகளை இவர்கள் செய்யப் போகிறார்களா, மத்திய அரசிடம் இருந்து பணமே வாங்காது மாநில நிதியில் இருந்து செய்யப் போகிறார்களா? இதைப் பற்றி முதலில் தெரிந்து கொண்ட பின்னர்தான் இன்றைய மானியத்தைப் பற்றியே விவாதிக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): ஏற்கனவே முதலமைச்சர் அவர்கள் விளக்கியிருக்கிறார்கள்.

திருமதி சத்தியவாணிமுத்து : என்ன விளக்கி இருக்கின்றார் ?

திரு. ஆலடி அருணா : தமிழகத்திற்கு மத்திய நிதி அமைச்சர் வந்தபோது சொன்ன கருத்தின் அடிப்படையில்தான் நமது முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிவிப்பைச் செய்தார்கள். இன்றைக்கு வேறு சூழ்நிலையே உருவாகியிருக்கிறது. "நான் தமிழகத்திற்கு மட்டும் சொல்லவில்லை. நாடு பூராவுக்கும் சேர்த்துத்தான்—எல்லா மாநிலங்களுக்குமாகத்தான் நான் சொன்னேன்" என்பதாக மத்திய நிதி அமைச்சர் விளக்கியிருக்கிறார். இதற்குப் பிறகு அரசாங்கத்தின் நிலைமை என்ன? அதை விளக்க வேண்டும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): முதலமைச்சர் அவையில் இல்லை. அவர் வந்தவுடன் கேட்கலாம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கேட்கமாட்டோம் என்று சொல்வதற்கும், வாங்க மாட்டோம் என்று சொல்வதற்கும் வித்தியாசம் இருக்கிறது. முதலமைச்சர் குறிப்பிட்டது பற்றி நான் என் பதிலில் விளக்கிக் குறிப்பிடுகிறேன்.

திரு. எ. சுப்பிரமணியம் : சார், ஆன் பாயிண்ட் ஆப் ஆர்டர். முதலமைச்சர் இங்கே பேசும்போது திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிற வரை வறட்சிப் பணிக்காக அவரிடம் பணம் கேட்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): முதலமைச்சர் இப்போது அவையில் இல்லை.

திரு. எ. சுப்பிரமணியம் : அவர் பேசியது ரெக்கார்டில் இருக்கிறது. மத்திய அரசில் எங்கே யார் அமைச்சராக இருக்க வேண்டுமென்று தீர்மானிப்பது மாநில சட்டமன்றத்தைப் பொறுத்தது அல்ல. மத்திய

அரசில் யார் நிதி அமைச்சராக இருப்பது என்பதைத் தீர்மானிக்கிற பொறுப்பு இந்தியப் பிரதமருக்கு—இந்திய பாராளுமன்றத்திற்கு இருக்கிறது. குறிப்பிட்ட ஒருவர் நிதி அமைச்சராக இருக்கிறவரை நான் பணம் பெற மாட்டேன் என்று சொல்வது அந்த ஒருவரை நிதி அமைச்சராக இருக்கக்கூடாது என்று சொல்வது போல நாடாளுமன்றத்தின் உரிமையை பாதிப்பது போல ஆகிவிடாதா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : நமது முதலமைச்சர் அவர்கள் திரு. சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கக் கூடாது என்ற வார்த்தையை உபயோகிக்கவில்லை.

திருமதி சத்தியவாணிமுத்து : முதலமைச்சர் அவர்கள் இனி திரு. சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கும் வரை நான் வறட்சிப் பணிக்காக நிதி கேட்கமாட்டேன் என்று சொல்லியிருக்கிறார். இது ஒருவருடைய தனிப்பட்ட விஷயம் அல்ல. ஒரு வீட்டைப் பொறுத்தது அல்ல. இந்த அவை முடிவு செய்ய வேண்டிய ஒன்று. இருக்கக்கூடிய நிலைமைகளை இந்த அவைக்கு எடுத்துச் சொல்லி, இந்த அவை மத்திய அரசிடம் கேட்கக்கூடாது என்று செய்த முடிவு அல்ல இது. ஏதோ தனிப்பட்ட முறையில் ( * )அவர் சொல்ல அதற்கு நமது முதல்வர் சொனனதாக இருக்கிறதே தவிர வேறு அல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : "வாய்ச் சண்டை" என்ற வார்த்தைகளை எல்லாம் பேச வேண்டாம்.

திருமதி சத்தியவாணிமுத்து : கூறியது சரியல்ல என்பதற்காகத்தான் அதைச் சொன்னேன். அவையிலே இந்த முடிவு எடுக்கட்டும். இந்த அவையிலே அவர் கூறியது சரியா, தவறு? "இனி கேட்கலாமா, வேண்டாமா? வாங்கலாமா, வேண்டாமா?"என்று இந்த அவையிலே பேசி முடிக்கட்டும். அதை விட்டுவிட்டு தனிப்பட்ட முறையிலே சொல்வது சரியல்ல.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. காமாட்சி) மாண்புமிகு அம்மையார் அவர்கள் பேசும்போது "*வாய்ச்சண்டை" என்று சொன்னார்கள். அதில் *,என்பதை அவைக் குறிப்பிலிருந்து எடுத்துவிட ஆணையிடுகிறேன்.

திருமதி சத்தியவாணிமுத்து : அவர்* போலத்தான் ஆரம்பித்திருக்கிறார்.

திரு.க. உரொ. எட்மண்ட் : * என்பதிலே என்ன தவறு இருக்கிறது?

* மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : வார்த்தைகளிலே தவறு இல்லை. எந்த நேரத்திலே எந்த மாதிரி சொல்லலாம் என்று விதிமுறைகள் இருக்கின்றன. அந்த முறையிலேதான், *என்று இந்த நேரத்திலே சொல்வது சரியல்ல.

திரு. கா. வேழவேந்தன் : என்னுடைய நேரத்தை மற்றவர்கள் எல்லாம் அதிகமாக எடுத்துக் கொண்டார்கள். ஆகவே, எனக்கு நியாயமான நேரத்தைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): இன்னும் இரண்டு நிமிடத்திலே முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : நான் இப்பொழுதுதான் தொடங்கியிருக்கிறேன். அதற்குள் மற்றவர்கள் இடையிலே குறுக்கிட்டார்கள். இன்னும் 10 நிமிடம் கொடுங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : நான் அதற்குப் பொறுப்பில்லை. நீங்கள் 5 நிமிடத்தில் முடித்துக் கொள்ளுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : இங்கே, மத்திய ஆளுங்கட்சிக்காரர்களாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி, நம்மீது மோதுகின்ற நேரத்தை அல்லது வாய்ப்பை, இதற்கு எடுத்துக் கொள்வதற்கு பதிலாக, நாம் மத்திய அரசிடம் பணம் பெற முயல வேண்டாமா என்ற நியாயமான கேள்வியைத்தான் கேட்க விரும்புகிறேன்.

இங்கே கூடச் சொன்னார்கள், மராட்டியத்தைச் சேர்ந்த சவாண் அவர்கள், அங்கே வறட்சி ஏற்பட்டபோது ரூ. 50 கோடி கொ(ு)த்தது பற்றி ..

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காம சி) : இந்த டிமாண்டை பற்றி பேசுங்கள்.

திரு. கா. வேழவேந்தன் : உத்திரப் பிரதேசத் )லே வெற்றி பெற்ற பிரதமர் தொகுதிக்கு ரூ. 90 கோடி ஒதுக்கப்பட்டது ஆக, பெரிய அளவு தொகையை மற்ற மாநிலங்களிலே பெறுகின்ற நேரத்தில் நாம் இவ்வளவு சிறிய தொகையைப் பெற எந்த அளவு முயல வேண்டியிருக்கிறதென்பதால், அதிக அளவு தொகை ஒதுக்கச் செய்ய வேண்டுமென்று கூறவே, இதனைத் தெரிவிக்கிறேன

நமது அரசு, வறட்சி நிவாரண வேலைகளை, போர்க்கால வேகத்தில் நடவடிக்கைகளை, விரைவான நடவடிக்கைகளை எடுத்துக் கொண்டிருக்கிறது. முதலில் குடிநீர்ப் பிரச்னைகளைத் தீர்க்க உடனடி, விரைவு நடவடிக்கைகளை எடுத்ததற்கு நான் அமைச்சர்களைப் பாராட்டுகிறேன் குழாய்த் திட்டங்களை வேகமாக நிறைவேற்றியதற்கு நான் பாராட்டு தெரிவிக்கிறேன். அதிலே, குடி நீர் வாரியமும் மாவட்ட கலெக்டர்களும் ஆற்றுகின்ற. பணியை நாம் உண்மையிலே பாராட்டவேண்டும் ஹாண்ட் பம்ப்

*மாண்புமிகு மாற்றுத்தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

போட, போர்கள் எல்லாம் போடப்படுகின்றன. நான் பணிவோடு வேண்டுவதெல்லாம், 60, 70, 100 அடியின் கீழ் உள்ள தண்ணீரை வெளிக் கொணர ஹாண்ட் பம்புகள் எல்லாம் பலயிடங்களில் உபயோகமாக இல்லை. ஆகவே, மோட்டார் வைத்து, மோட்டார், பம்ப் செட்டுகளையும் வைத்து, ஆங்காங்கே குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களென்பதிலே, சில பகுதிகளிலே சில கிராமங்களை விட்டுவிட்டிருக்கிறார்கள் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என்றால், ஒரு வட்டமென்றால், அந்த வட்டம் முழுவதையும் பாதிக்கப்பட்ட பகுதி என்று அறிவித்தால்தான் அங்கே இருக்கிற மக்களுக்குப் பாதகமில்லாமலிருக்கும். ஏனென்றால், ஒரு ஊரில் மழை பொழிந்து, மற்றொரு ஊரில் மழை பொழியவில்லை, ஆகவே, வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை, அந்தந்தப் பகுதியின் வட்டம் முழுவதையும் பாதிக்கப்பட்டவைகளாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பட்டா வழங்குவதைப் பொறுத்தவரையில், சென்னையிலேயிருந்து 32 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள, செங்கல்பட்டு மாவட்ட வீட்டுமனைப் பட்டாக்களை நம்முடைய அரசாங்கம் வழங்குகிறது , நிலமற்ற ஏழைகளுக்கு. அதேபோல், சாகுபடி செய்கிற ஏழை எளியவர்களுக்கு, தகுதி உடையவர்களுக்கு, சாகுபடி நிலப்பட்டா வழங்க வேண்மென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மனு நீதித் திட்டம்பற்றி குறிப்பிட்டிருக்கிறார்கள். அதிலே, மக்களுக்கு நம்பிக்கை வராததற்குக் காரணமே, கொடுக்கப்பட்ட மனுக்களை ரெவின்யூ அதிகாரிகளே பெற்று, மற்ற துறைகளுக்கு கொடுக்கிறார்கள். அதை விடுத்து, ரெவின்யூ துறை அதிகாரிகள் மட்டுமல்லாமல், எல்லா துறை அதிகாரிகளும் பங்கேற்கின்ற முறையில் அத்திட்டத்தைக் கொஞ்சம் விரிவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மனுநீதி திட்டப்பணிகளை மறு பரிசீலனை செய்து, மாவட்ட வளர்ச்சி மன்றங்களில் விவாதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்டங்களைப் பிரிக்கின்ற தன்மையை, இங்கே அமைச்சரவர்கள் கொள்கை விளக்கத்திலே தெரிவித்திருக்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டும். ஏற்கனவே, கிரேட்டர் மெட்ராஸ் என்ற திட்டத்தில் பொன்னேரி, மீஞ்சூர், கும்முடிப்பூண்டி, திருவள்ளூர் பகுதி இவைகளையெல்லாம் சேர்த்திருக்கிறார்கள். செங்கல்பட்டு மாவட்டத் தலைநகரம் காஞ்சிபுரம் ஆனபிறகு, நாங்கள் 80 மைல் தூரம் காஞ்சிபுரத்திற்குப் போக வேண்டியிருக்கிறது. ஆகவே, செங்கல்பட்டு மாவட்டத்தை எப்படியும் இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்ற கருத்தையும் நான் இங்கே தெரிவிக்க விரும்புகிறேன். மொத்தத்திலே, இந்த வருவாய்த் துறை சிறப்பாகப் பணியாற்றுகிறது., அதனுடைய பணிகளைப் பாராட்டி அமைகிறேன். நன்றி , வணக்கம்.





திரு. முனு ஆதி: தகுதி வாய்ந்த தற்காலிகத் தலைவரவர்களே:

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): இந்த சீட்டிலே உட்கார்ந்திருப்பவர்களை தலைவரவர்களே என்றால் போதும் — தற்காலிகத் தலைவர் என்று சொல்லவேண்டிய அவசியமில்லை. யார் உட்கார்ந்தாலும் தலைவர்தான்.

திரு. முனு ஆதி: தலைவரவர்களே, இந்த மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன் கொடுத்திருப்பதோ 10 நிமிடங்கள்தான். ஆகவே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்ற குறைகளை நிவர்த்தி செய்ய அவற்றைக் குறித்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நிலவள வங்கியின் மூலமாகக் கிணறு ஆழப்படுத்தவும், ஆயில் இன்ஜின் வாங்கவும் உடனடியாகக் கடன் கொடுக்கப்படும், கவனிக்கப்படும் என்று முதலமைச்சரவர்கள் தன்னுடைய பட்ஜெட் உரையில் சொன்னார்கள். இதுவரையிலே, யாருமே பெற்றதாகத் தெரியவில்லை. அதிலே உள்ள குறைபாடு என்னவென்றால், 300 அடி, சில இடங்களில் 600 அடி, சில இடங்களில் 900 அடி இடைவெளி இருக்கவேண்டும் ஒரு கிணறுக்கும் மற்றொரு கிணறுக்கும் என்பதுதான்.

திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற பகுதிகளில் 1,000 அடி தள்ளித்தான் கிணறு எடுக்கவேண்டும் என்ற நிபந்தனையிருக்கிறது. செங்கல்பட்டில் 300 அடி தூரமிருக்கவேண்டுமென்ற நிபந்தனையிருக்கிறது. 1 ஏககர் 2 ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்கள் கிணறு எடுக்க வேண்டுமானால் சில இடங்களில் 150 அடி இடைவெளியில்தான் முடியும். அதிக ஊற்றிருக்கக்கூடிய சில இடங்களுமிருக்கின்றன. ஆகவே, அதிக தூரம் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையால் கடன் வாங்கமுடியாமல் தவிக்கிறார்கள். நானும் கேட்டிருக்கிறேன், இன்னும் கிடைக்கவில்லை — கடன் கேட்டால், 300 அடி தள்ளியிருக்க வேண்டும் என்பது போன்ற சில சட்டதிட்டங்களைச் சொல்கிறார்கள். சட்டதிட்டங்களிருக்கட்டும். 300 அடி, 600 அடி என்றில்லாமல் கிணறு வெட்டினால் ஊற்று வருமா என்ற பொது நோக்கத்தோடு பார்த்தால்தான் வறட்சியைச் சமாளிக்கமுடியும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சரவர்கள் 60,000 பம்ப் செட்டுகளுக்கு மின் இணைப்பு தருவோமென்று சொன்னார்கள். இப்பொழுதே 60 சதவிகிதம் மின் வெட்டு இருக்கிறது. ஏற்கனவே, பம்ப் செட் வைத்தவர்கள், 2 ஆண்டு, 3 ஆண்டுகளாகியும் மின் இணைப்புப் பெறாமலிருந்து கொண்டிருக்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால், ஒயர் இல்லை, கிளாம்ப் இல்லை, போஸ்ட் இல்லை என்று நிச்சயமாகச் சொல்கிறார். முதலமைச்சர் என்ன சொல்லிவிடுகிறார். தர்மசங்கடத்திலே எங்களை மாட்டி விடாதீர்கள், எங்களிடம் சாதனங்களில்லையென்று சொல்கிறார்கள். சாதனங்களில்லையென்றால் எப்படி மின் இணைப்பு கொடுக்க முடியும்? எப்படி விவசாயம்

பெருக முடியும்? நடைமுறையில் மின்னியக்கச் சாதனங்கள் இல்லாமலிருக்கிறார்கள். சீப் இன்ஜினீயரைப் பார்த்துக் கேட்டால், யாருக்கு முறையாகக் கிடைக்கவேண்டுமோ, அதனைத் தங்களுக்கு வேண்டியவர்களுக்குக் கொடுத்து விடுகிறார்கள். தமிழ் நாட்டிலே விவசாயிகள் மின் இணைப்புகளை உடனடியாகத் தந்தாலொழிய வறட்சி நிவாரண வேலைகளை விரைவுபடுத்த முடியாது. உண்மையிலே, நடைமுறையிலே இருக்கிற விவசாயிகளுடைய வேதனையை நான் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்து, வறட்சி நிவாரண வேலைகள் நடக்கின்றன. மத்திய அமைச்சர், மாநில அமைச்சர் என்ற விவகாரத்திற்கு நான் போகவில்லை. அந்த வேலைகள் எல்லாம் முறையாக நடக்கின்றனவா என்று பார்க்க மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே, சர்வகட்சியினர் கொண்ட குழு போடச் சொன்னோமே, ஏன் போடவில்லை? கவர்னர் கூட அண்மையிலே வறட்சிப் பகுதிகளைப் போய்ப் பார்த்திருக்கிறார் — பத்திரிகையில் பார்த்தேன். 15 பேர் வேலை செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் 150 பேர் மஸ்டர் ரோலில் போடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிவாரண வேலைகளை, மாவட்ட ஆட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு சர்வ கட்சியினரைக் கொண்ட குழுக்களைப் போட்டுச் செய்தால், கட்சிக்காரர்கள் காண்ட்ராக்ட்களை எடுத்துக்கொண்டு, அதிகாரிகளை மிரட்டி கொண்டு பில் போட முடியாது. ஆகவே, மாவட்ட அளவில் அப்படி செய்தால்தான் சரியாக இருக்கும். அதைவிட்டுவிட்டு, எவ்வளவு செலவு செய்தாலும், எவ்வளவு தந்தாலும், 40 சதவிதத்திலிருந்து 50 சதவிதம் லீக்கேஜ். அதிலே சந்தேகம் வேண்டாம்.

(நண்பகல் 12–00)

பட்டா கொடுக்கிறேன் என்று சொல்கிறார்கள். தாம்பரம் பகுதியில் 10,000 குடிசைகள் இருக்கின்றன. அங்கே உள்ள ஏழை மக்களுக்கு பட்டா கொடுக்கவேண்டுமென்று சொல்லி ஏறத்தாழ 25 ஆண்டுகளாக மறைந்துவிட்ட கம்யூனிஸ்ட் தலைவர் ஜீவானந்தம் அவர்கள் தலைமையில் போராடியிருக்கிறோம். நகராட்சி எல்லைக்குள் ஐந்தரை சென்ட் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால் 3 சென்டாவது கொடுக்க வேண்டுமென்று முடிவு எடுத்திருந்தாலும்கூட இதுவரையிலே அங்கே பட்டா தரப்படவில்லை.

ஏரி வேலை நடக்கிறது என்று சொல்கிறார்கள். என்னுடைய தாலுகாவிலே எங்கே நடக்கிறது? ஏரி வேலைகள் நடைபெறும்போது சம்பந்தப்பட்ட சட்ட மன்ற உறுப்பினருக்கு இந்த இடத்தில் உங்கள் தொகுதியில் ஏரி வேலை நடக்கிறது என்று எழுதி அனுப்பினீர்களா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அவர்கள் தொகுதியிலே எந்தப் பகுதியிலே எந்த ஏரியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.? அப்படி அவர்கள் சொல்லி எடுத்துக்கொள்ளப் படவில்லை என்று சொன்னால் அதை எடுத்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யலாம்.





திரு. முனு ஆதி: சட்ட மன்ற உறுப்பினர் சொன்னால்தான் எடுத்துக் கொண்டிருக்கிறார்களா? அல்லது இலாகா அதிகாரிகள் போய்ப் பார்த்து உண்மையாகவே இந்த ஏரி பழுதான ஏரி, பழுதான குளம் என்று சொல்லி எடுத்துக்கொள்ளவில்லையா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: சட்ட மன்ற உறுப்பினர்
கள் சொன்னாலும் எடுத்துக்கொள்ளப்படும்.

திரு. முனு ஆதி: நான் சொல்லவேயில்லை என்று வைத்துக்கொள்ளுங்கள். சொன்னாலும் எடுத்திருக்கமாட்டீர்கள். அண்ணா தி.மு.க. காரன் சொல்லிவிட்டான் எடுக்காதே என்று சொல்லிவிடுவீர்கள். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கொடுத்த பட்டியல்படி எங்கு எங்கே எந்த எந்த ஏரிவேலைகள் நடக்கின்றன என்று அந்த அந்த சட்ட மன்ற உறுப்பினர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவருவீர்களானால் நாங்கள் கண்காணிப்பதற்கு வசதியாக இருக்கும். எங்கே வேலை நடக்கிறது என்றே எங்களுக்குத் தெரியாது.

போன சட்ட மன்றக் கூட்டத்திலேதான் ஒரு சட்டம் கொண்டுவந்தோம், ஒலிபெருக்கியெல்லாம் இரவு பத்து மணிக்குமேல் பயன்படுத்தக்கூடாது என்று. ஆனால் என்ன நடக்கிறது. அமைச்சர் என்றால் 12 மணி, மாவட்டம் என்றால் 12 மணி, எம். எல். ஏ. என்றால் 11 மணி உள்ளூர்க் காரர் என்றால் 10 மணி இப்படி. உங்களுக்குள் டிகிரி வைத்து போஸ்டுக்குத் தகுந்தமாதிரி வைத்துக்கொள்கிறீர்கள்.........

திரு. நா. வீராசாமி: உறுப்பினர் தவறான தகவலைக் கொடுக்கிறார். சமீபத்திலே ஆவடியிலே நடைபெற்ற ஒரு கூட்டத்திலே எதுவரையிலும் பேசினார் என்று எனக்குத் தெரியும். ஆனால் அங்கேயே நான் அதற்கு முந்தின நாள் பேசிய போது 10 மணிக்கு மேலேயும் பேசச்சொன்னார்கள், நான் 10-05 க்கே முடித்து விட்டேன். ஆகவே இப்படி தி.மு.க.–காரர்கள் எங்கே பேசினாலும் சரியான நேரத்திற்குக் முடிக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. முனு ஆதி: நண்பர் வீராசாமி அவர்கள் சட்டத்தைக் காப்பாற்றும் சத்திய கீர்த்தியாக இருக்கலாம். நான் தவறான தகவலைக் கொடுக்கவில்லை. அதற்கு முன்னால் 11 மணி வரை பேசியிருக்கிறார்கள் என்று எஸ். ஐ. யிடம் காட்டித் தான் நான் பேசினேன், இல்லாவிட்டால் குரல்வளையைப் பிடித்திருப்பார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு கு. காமாட்சி): மானியத்தைப் பற்றிப் பேசுங்கள்....

திரு. முனு ஆதி: ஒலிபெருக்கியும் டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்ட்ரேஷனில் வருகிறது. நாங்கள் 10 மணிக்கு மேலே பேசினால் குரல்வளையைப் பிடிக்கிறார்கள். ஆனால் நீங்கள் பேசலாம், மந்திரிகள் பேசலாம் எஸ். ஐ.

பயப்படுகிறார், கிட்டப் போகவே மாட்டேன் என்கிறார். நாங்கள் பேசப் போனால் எஸ்.ஓ. சொல்கிறார். எங்கள் ஊர் எம்.எல்.ஏ. யைப் பற்றிப் பேசாதீர்கள் என்று..........

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதையெல்லாம் போலீஸ் மானியத்தில் பேசுங்கள்.

திரு. முனு ஆதி : போலீஸ் மானியத்தில் இடம் கிடைக்கிறதோ இல்லையோ பேசிவிடுகிறேன். அதனால்தான் இதை டிஸ்ட்ரிக்ட் அட்மினிஸ்டிரேஷனில் எடுத்துக்கொண்டு பேசுகிறேன். புறம்போக்கு நிலங்களிலே குடியிருக்கிறவர்களுக்கு எல்லாம் உடனடியாக பட்டா வழங்கப்படவேண்டும் எவ்வளவு ஆடம்பரமாக நீங்கள் பட்டா கொடுத்தாலும் அதைப்பற்றி எங்களுக்குச் கவலையில்லை. பட்டாக்களை கொடுத்தால் போதும், நடைமுறையிலே கொடுத்தாக வேண்டும்.

மின்சார இலாகா மிக மிக அவசியம். அரசாங்கமே எடுத்துக்கொண்டாலும் பரவாயில்லை. மனுபோட்டு 3 ஆண்டுகள் ஆகியும் இன்னும் மின்சாரம் கிடைக்கவில்லை. ஒரு அடி வொயர் கேட்டால்கூட அவர்கள் இல்லை என்கிறார்கள். அவர்கள் சரியாகச் செயல்பட ஏற்பாடு செய்ய வேண்டும் 300, 200, 500 அடி என்று எல்லாம் விதிமுறைகள் கிணறுகள் வெட்ட. வைததிருக்கிறார்கள், அதைத் தளர்த்த வேண்டும். கடன் கொடுக்கும் போது தாய் பத்திரம் வேணடும் 50 ஆண்டுகளுக்கு முன்னால் இருக்கிற மூலப் பத்திரம் கொண்டுவா என்றெல்லாம் கேட்கிறார்கள் எங்கே போவார்கள் விவசாயிகள், ஆகவே அதையெல்லாம் தளர்த்த வேண்டும்.

கோடை காலத்திலே விவசாயத் துறை அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், யூரியா, சல்பேட், மிக்ஷர், காம்ப்ளெக்ஸ் எல்லாம் கேட்கிற அளவிற்கு கொடுக்கிறேன் என்று சொன்னார்கள். நான்கூட இரண்டு ஏக்கர் பயிர் வைத்திருககிறேன், எனக்குக் கொடுக்கவில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

திரு. முனு ஆதி : எங்களுடைய ரெவின்யூ அமைச்சர் சொல்வதையெல்லாம் செய்வார் என்ற நம்பிக்கை இருக்கிறது அவர் செய்யக்கூடியவர் மீதி அமைச்சராக இருந்தால் நான் ஐந்து நிமிடத்தில் முடித்துவிட்டு உட்கார்ந்துவிடுவேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. காமாட்சி): இன்னும் 8 பேர்கள் பேசவேண்டியிருககிறது.

திரு முனு ஆதி : எங்கள் கட்சியிலே நான் ஒரே ஆள்தான் பேசுகிறேன். இன்றைக்கு 20 நிமிடம் எனக்கு என்று எங்கள் தலைவர் சொன்னார். முடித்து விடுகிறேன்.



குடி நீர் பஞ்சம் கிராமங்களிலே அதிகமாக இருக்கிறது. யூனியன் மூலமாகக் கொடுக்கப்படுகிற பணத்திலே அதற்குத் தகுந்தவாறு 10 கிணறுகள்தான் போட முடிகிறது, மற்ற இடங்களில் தண்ணீர் கிடைக்கவில்லை. அதுகூட 10 கிணறுகளும் மாவட்டம் எந்த இடத்தை சிபாரிசு செய்கிறாரோ அந்த இடத்திலேதான்............

திரு. சி. ஆறுமுகம் : திரு. முனு ஆதி அவர்கள் பேசும்போது தொடர்ந்து மாவட்டம் மாவட்டம் என்று பேசிக் கொண்டிருக்கிறார். அவர் இருக்கிற மாவட்டத்தின் செயலாளர் நான்தான். என்ன தவறு என்று சொல்லவில்லை. தவறு இருந்தால்...........

திரு. முனு ஆதி : டிமான்டே மாவட்டந்தான். உங்களைப் பற்றிதான் ஏன் பேசுகிறேன். உங்களுக்கு ஏன் குத்துது? ஏற்கெனவே எடுக்கப்பட்ட கிணறுகளை தூர்வார ஏற்பாடுகளைச் செய்யுங்கள். பணம் இல்லாமல் கிணறுகள் தூர் வாரப் படாமல் இருக்கின்றன. அதிகமாகப் பணம் ஒதுக்கி கிணறுகளைத் தூர்வார வேண்டும். கால்நடைகளுக்குக்கூட தண்ணீர் இல்லை. மனுஷனுக்காவது எங்கேயாவது தண்ணீர் கிடைத்துவிடும். கால்நடைகளுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே குளங்களைத் தூர் வார வேண்டும். இதையெல்லாம் அரசாங்கமே நேரடியாகச் செய்ய வேண்டும். பி.டபிள்யூ.டி. வாட்டர் அண்ட் டிரைனேஜ் போர்டு இவையெல்லாம் குடிநீர் வசதியைப் பெருக்கித்தர ஏற்பாடு செய்யவேண்டும்.

பட்டா கொடுக்க முன்வாருங்கள். எங்கள் பகுதியில் 3,000 குடிசைவாசிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு பட்டா கொடுங்கள். நம்முடைய ரெவின்யூ அமைச்சர் அவர்கள் எங்கிருந்தாவது ஒரு 50 கோடி ரூபாய் வாங்கி மின்சார இலாகாவிற்குக் கொடுக்க வேண்டும். அப்படிக் கொடுத்தால்தான் அவர்கள் வயர், இளாம்ப், போஸ்ட் எல்லாம் வைத்து இருப்பார்கள். பம்பு செட்டுகளுக்குக் கனெக்ஷன் விரைவிலே கொடுப்பார்கள். கடன்கள் கொடுப்பதற்காக இருக்கிற விதிகளை சிறுசிறு நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு கிணறுகள் வெட்டுவதற்கு இத்தனை அடி என்று நிபந்தனை இருப்பதை தளர்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விவசாயிகளுக்கு நிலவள வங்கிகள் மூலமாகக் கடன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : கிணறுகளை ஆழப்படுத்துவதற்கு 500 முதல் 2,000 ரூபாய் வரை கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அறிவித்து இருக்கிறார்கள். தக்காவிக் கடன்கள் என்ற முறையிலே வழங்கப்படுகின்றன.

திரு. முனு ஆதி : யாரிடம் கேட்பது கடன், மாவட்ட ஆட்சித் தலைவரிடமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : யூனியன் மூலமாக அப்ளை பண்ண வேண்டும்,

திரு. சி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே; மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இந்த சபையிலே சமர்ப்பித்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து ஒன்றிரண்டு கருத்துக்களைச் சொல்ல கடமைப் பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய நம்முடைய நண்பர் ஆதி அவர்கள் மன திலே என்ன ஆசை நீண்ட நாட்களாக இருந்ததோ அதை வைத்து மாவட்டம் மாவட்டம் என்று திரும்பத் திரும்பச் சொன்னார்கள்.

திரு. முனு ஆதி: கனம் ஆதி, மாண்புமிகு ஆதி என்று ஏதாவது மரியாதையாகச் சொல்ல வேண்டும்; நண்பர் ஆதி என்றால் எப்படி? வெளியிலே பேசுகிற மாதிரி இங்கே பேசவேண்டாம்.

திரு. சி. ஆறுமுகம்: இன்றைக்கு செங்கற்பட்டு மாவட்டத்திலே பஞ்சத்தாலே பாதிக்கப்பட்டிருக்கிற பகுதிகளிலே எல்லாம் வேகமாக காரியங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. எங்கள் மாவட்டத்து மக்கள் நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே நாலரை கோடி வேண்டுமென்று தீர்மானத்தைப் போட்டு அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். நாலரைக் கோடிக் குக் குறையாமல் தொகையைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். செங்கற்பட்டு மாவட்டத்திலே கடலோரப் பகுதியாக இருக் கிற பகுதி ஆரம்பாக்கத்திலிருந்து மரக்காணம் வரையிலும், அங்கே குடி நீர் பஞ்சம் இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். அங்கே கடலோரப் பகுதிகள் என்று சொல்லும் பொழுது ஒரு பக்கத்திலே பக்கிங்காம் கேனாலும் ஒரு பக்கத்திலே கடலாகவும் இருப்பதால் குடிதண்ணீருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கிறது. எனவே; பாலாற்றிலிருந்து தண்ணீர் எடுத்து வந்து அந்தப் பகுதி மக்களுக்கு வழங்க முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள் கிறேன். இதை நான் தெரிவிப்பதற்குக் காரணம் என்ன வென்றால், மற்ற ஊர்களிலெல்லாம் கிணறு எடுத்தால் தண்ணீர் கிடைப்பதற்கு ஏதுவாக இருக்கும். ஆனால் கடலோரப் பகுதிகளில் கிணறு எடுத்தால் உப்புத் தண்ணீர்தான் கிடைக்கும். வாஞ்ச் என்று ஒன்று இருக்கிறது. கடலோரங்களில் மண்ணைத் தோண்டினால் தண்ணீர் கிடைக்கும். அதைப் பற்றி அதிகாரிகளிடத்தில் தெரிவித்தால், அதற்கு அவர்கள் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்று தெரிவிக்கிறார்கள். அப்படிப்பட்ட வாஞ்சுகளை, ஏற்படுத்திக் கொடுத்தால் உதவிகரமாக இருக்கும் என்பதையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், கடலோரப் பகுதிகளில் குளங்களை ஏற்படுத்தவும் சட்டம் இடம் கொடுக்கவில்லை என்றும் சொல்கிறார்கள். நிலவள வங்கிகள் மூலம் உதவுவதற்கு நாம் உலக வங்கியிடமிருந்து பணம் வாங்குகிறோம். அதி காரிகளுக்கும் தெரியும். கடலோரத்திலிருந்து ஆறு மைல்களுக்குள் ளாகக் கிணறு தோண்டினால் கடல் தண்ணீர்தான் வரும் என்று. அதை நாங்களும் ஒத்துக் கொள்கிறோம். ஆனால் தனிப்பட்ட முறையில் கிணறும் எடுக்கக் கூடாது. குளத்தையோ வாஞ்சையோ சீரமைக்கவும் கூடாது



என்று சட்டத்தை போட்டிருப்பதால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பாதிக் கப்படுகிறார்கள். ஆகவே, இது சம்பந்தமாக உடனடியாக நட வடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, செங்கற்பட்டு மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க வேண்டு மென்ற கருத்தை எங்கள் கட்சியைச் சார்ந்த திரு. வேழவேந்தன் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்தக் கருத்தை நானும் ஆதரிக்க கடமைப்பட்டிருக்கிறேன். நிர்வாகச் சீர்திருத்தத்தைக் கருதி, ஆரம் பாக்கத்திலேயிருந்து தொழுப்பேடு வரையில் ஒரு மாவட்ட ஆட்சித் தலைவர் போக வேண்டுமென்றால் இரண்டு நாட்கள் ஆகும். அதைக் கருதி, உடனடியாக அந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதற்கு அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்றே மதுராந்தகம் தாலுக்காவையும் இரண்டாகப் பிரிக்க வேண்டும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். அதில் இப்பொழுது 400 ரெவின்யூ கிராமங்களும், 40, 50 ஹேம்லெட் கிராமங்களும் இருக் கின்றன. 400 கிராமங்களுக்கு ஒரு தாசில்தார் வேலை பார்ப்பது என்பது எவ்வளவு கடினம் என்பதை வருவாய்த் துறை அதிகாரிகள் கவனிக்க வேண்டும். எனவே, அதை இரண்டாகப் பிரித்தால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில் வருவாய்த் துறையின் காரியங்கள் வேகமாக இருந்தாலும்கூட, நான் நம்முடைய வருவாய்த்துறை அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வதெல்லாம், வருவாய்த்துறையை சீர மைக்க வேண்டும். அதற்குக் காரணம் என்னவென்றால், நாங்கள் இன் றைக்குக் கொடுக்கும் காகிதத்தை நாளைக்குக் கேட்டால் இல்லை என்று சொல்கிறார்கள். பொதுவாகவே வருவாய்த் துறையில் முழுக்க முழுக்க ஒரு சீரமைப்பை நாம் ஏற்படுத்தியாக வேண்டும். அப்பொழுதுதான் மக்களுக்கு வேகமாகக் காரியங்களை ஆற்ற முடியும். இன்றைக்கு நாங்கள் கொடுக்கும் காகிதத்தை நாளைக்கு வரும் தாசில்தார் இல்லை என்று சொல்லிவிடுகிறார் அல்லது ஆர்.டி.ஓ.வைக் கேட்டால் எனக்குத் தெரியாது என்று சொல்கிறார். எனவே மாவட்ட வருவாய்த்துறை சீரமைப்புக் குழு என்ற ஒரு குழுவைப் போட்டு, இதைப் பற்றி பரிசீலித்து ஒவ்வொரு மாவட்டத்தைப் பற்றிய முடிவையும் அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரே கொடுக்க வேண்டும் என்று செய்ய வேண்டும். ஏனென்றால் வருவாய்த் துறை தலைமை அலுவலகத்திற்கு வந்தால் மிகவும் கடினம். சட்டம் தெரிந்தவர்கள், சட்டமன்ற உறுப்பினர்களே வருவாய்த் துறை தலைமை அலுவலகத்திற்குப் போய் வருவது கடினமாக இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை)

ஆகவே, கிராமங்களிலுள்ள சாதாரண மக்கள் பட்டாவைக் கலெக்டரிடத் திலேயிருந்து வாங்கினால், உடனே பணக்காரர்கள் வருவாய்த் துறைக்கு வந்து ஸ்டே வாங்கிக் கொண்டு போய்விடுகிறார்கள். பிறகு பட்டா வாங்கியவன் தீர்ந்து விட்டான். அவனுக்கு ரெவின்யூ போர்டே தெரியாது.

[திரு. சி. ஆறுமுகம்] [1975 மார்ச் 18

ரெவின்யூ போர்டை எடுக்க வேண்டுமென்ற ஆலோசனையும் இருக்கிறது. நிர்வாகத்தையொட்டி, மக்களுக்கு நாம் எந்த அளவிற்கு வேகமாகக் காரியங்களை ஆற்ற வேண்டுமென்ற கொள்கையிருந்தாலும், அந்தக் கொள்கைக்கு வருவாய்த் துறை தலைமை ஸ்தாபனம் தடையாக இருக்கிறது. அதை மாற்றியமைப்பதற்கு அரசு முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய தலைவாவர்களே, இங்கே கொண்டு வரப்பட்டிருக்கும் வருவாய்த் துறை மானியத்தின் பேரில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்ல நான் முன்வந்துள்ளேன்.

வருவாய்த் துறை என்பது நாட்டிலேயிருக்கின்ற எல்லாத் துறைகளையும் விட அதிக அதிகாரம் வாய்ந்த ஒரு துறையாகும். இந்தத் துறைதான் எல்லா நிர்வாகத்தையும், எல்லாத் துறைகளின் நிர்வாகத்தையும் மேல் நிலையில் இருந்து ஆட்சி செய்யும் ஒரு துறை. இந்தத் துறை எந்த அளவிற்கு வேகமாகச் செயல்படுகிறதோ அந்த அளவிற்கு மக்களுக்கு நல்லதைச் செய்ய முடியும். எந்த அளவிற்கு இதிலே குறைபாடுகள் காணப்படுகின்றனவோ அந்த அளவிற்கு விரிவான அளவில் நாட்டிலே குறைபாடுகள் இருக்கும் நிலை ஏற்படும். ஆகையால், இந்த வருவாய்த் துறை ஒழுங்கான முறையிலே நல்ல முறையிலே சீரமைக்கப்பட வேண்டுமென்று பல்வேறு நேரங்களில் பல்வேறு உறுப்பினர்களால் பேசப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் எப்படி இருந்ததோ அதிலே எந்த விதமான மாறுதலும் இல்லாமல் ஒட்டு மொத்தமாக அப்படியிருந்து வரும் ஒரு நிலையைத்தான் நாம் பார்க்கிறோம். "அட்மினிஸ்ட்ரேடிவ் ரிஃபார்ம்ஸ் கமிஷன்" போட்டு பல சிபாரிசுகள் செய்யப்பட்டிருந்தாலும் கூட அந்தச் சிபார்சுகளும் எந்த அளவிற்கு அமல் ஆக்கப்பட்டிருக்கிறது என்று சொல்ல முடியவில்லை. அநேகமாகப் பல சிபார்சுகள் அமலாக்கப்படவில்லை என்று தான் கருதுகிறேன். அப்படியே எல்லா சிபார்சுகளும் அமல்படுத்தப்பட்டாலும் கூட பெரிய சீர்திருத்தத்தை இதில் பார்த்துவிட முடியுமா என்றால் பார்க்க முடியாது என்ற நிலையைத்தான் நாம் பார்க்கிறோம்.

இன்றைக்கு நாம் சுதந்திர நாட்டிலே இருக்கிறோம். சுதந்திரம் அடைந்து பல ஆண்டுகள் ஆகிவிட்டன என்றாலும் இன்றைக்கு இந்தத் துறையைப் பொறுத்த வரையில் நிலைமை எப்படி இருக்கிறது? கீழ் நிலையிலே உள்ள விவசாயிகளிடத்திலே தொடர்புடையது இந்தத் துறை. அந்த விவசாயிகளை அந்த அதிகாரிகள் எப்படி நடத்துகிறார்கள் என்று பார்த்தால் கொஞ்சம் கூட மரியாதையோடு நடத்துவதில்லை, கீழ்மட்டத்திலேயிருந்து மேல் நிலை வரை. இன்னும் பல இடங்களில் ஒத்த நிலையில் கூட உட்கார வைத்துப் பேசக் கூடிய நிலையைக் கூடப் பார்க்க முடியவில்லை. சாமான்ய மனிதர்களின் ஆட்சி என்று அடிக்கடி இந்த ஆட்சியிலே உள்ளவர்கள் சொல்கிறார்களே தவிர, அந்தச் சாமானிய மனிதனுக்கு ஒரு மரியாதை இல்லாத நிலைமை இந்தத் துறையைப் பொறுத்த வரையில் இருக்கிறது.



1975 மார்ச் 18] [திரு. ஏ. ஆர். மாரிமுத்து]

விவசாயிகள் வந்தால், வருகின்றவர்களின் கோரிக்கை என்ன என்று விசாரித்து, மனுவை வாங்கிக்கொண்டு, உண்டு அல்லது இல்லை என்று சொல்லும் அளவிற்குக் கீழ் நிலையிலே உள்ள நிர்வாக அமைப்பு இல்லை. தாலுக்கா ஆபிசிற்கு ஒரு விவசாயி சென்றால், அவனுக்கு ஒரு மரியாதை கொடுத்து அவனுக்கு என்ன குறை என்று விசாரிக்கும் நிலையில் மரியாதை கொடுக்கப்படவில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஏதோ பழைய காலத்தில், இடுப்பிலே வேஷ்டியைக் கட்டிக்கொண்டு வெளியே நின்று கொண்டிருப்பார்கள். பெட்டிஷன் பெட்டிஷன் என்று சொன்னவுடன் பெட்டிஷனைக் கொடுப்பார்கள். அதைப் போன்ற நிலை இருக்கிறது இன்றைக்கு. வருகின்ற விவசாயியை நாற்காலி போட்டு உட்கார வைத்து—காரியம் செய்து தருவது அல்லது இல்லை என்பது வேறு விஷயம்—விசாரிக்க வேண்டும். உடனே காரியத்தைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. நிர்வாகத்திலே சிரமங்கள் இருக்கலாம், வந்தவுடனேயே குறைகளை நிவர்த்தித்துக் கொடுக்க முடியும் என்று சொல்ல வில்லை. ஆனால் அந்தச் சாதாரண மனிதனுக்கு எந்த அளவிற்கு இந்த அரசிலே மரியாதை இருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளக் கூடிய இடமாகத்தான் அது இருக்கிறது.

அடுத்து, இங்கே நிர்வாக தாமதத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய திரு. ஆறுமுகம் அவர்கள் கூட அதைப் பற்றி குறிப்பிட்டார்கள். நிர்வாகத் தாமதம் என்று சொல்லும் இந்த "ரெட் டேப்பிசம்" நாடு பூராவும் பரவலாக இருக்கிறது. இதை எப்படிப் போக்குவது? அதுதான் பெரிய பிரச்னையாக நாடு பூராவும் இருக்கிறது. சிலர் சில கண்ணோட்டத்தோடு இதைப்பார்க்கிறோம். ரெட் டேப்பிசம் என்பதை ஒத்துக்கொள்ளமால் சிலபேர் வேறு கண்ணோட்டத்தோடு பார்க்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சரவர்கள் பொது விவாதத்திற்குப் பதில் கூறிய பொழுது மத்திய அரசாங்கத்திலிருந்து பதில் வரவில்லை என்பதற்கு ஒரு ஜாபிதாவைக் கூடப் படித்தார்கள், ஏழெட்டுக் கடிதங்கள் எழுதியும் பதில் வரவில்லை, காலதாமதம் ஆகிறது என்று சொல்லி தேதிகளை யெல்லாம் குறிப்பிட்டார்கள். ஆகவே சுயாட்சி வேண்டுமென்று குறிப் பிட்டார்கள். சுயாட்சிக்கும் இந்தத் தாமதத்திற்கும் சம்பந்தமே இல்லை. எந்த சுயாட்சி வந்தாலும், இது நிர்வாகத் தாமதத்தினாலே ஏற்படு கின்ற விளைவு. எப்படி மத்திய அரசாங்கத்திலே வருவதற்குத் தாமத மாக ஆகிறது என்று சொல்லி சுயாட்சி வேண்டுமென்று கேட்கிறார்களோ அதிகாரங்கள் வேண்டும் என்று கேட்கிறார்களோ அதே நிலைமைகள் இந்த மாநிலத்திற்குள்ளேயும் இருக்கிறது, இல்லை என்று சொல்ல முடியாது. ஆயிரக்கணக்கான உதாரணங்களைச் சொல்ல முடியும்.

10, 15 ஆண்டுகளாகக் கூட முடிவு செய்யப்படாமல் இருக்கும் கோரிக்கைகள், பேப்பர்கள்மீது முடிவு இல்லாமல் தாமதமாகும் நிலைமைகள் இருக்கின்றன. ஆகவே, மாவட்ட ரீதியிலே கொஞ்சம் பிரித்துக் கொடுங்கள், சுயாட்சி கொடுங்கள் என்று கேட்பது சரியா? இதைத்தான்

[திரு. ஏ. ஆர். மாரிமுத்து] [1975 மார்ச் 18

ஒத்திருக்கிறது மாநில சுயாட்சி வேண்டும் என்று கேட்பதும். மாவட்டத்
திற்குள் நிர்வாகத்திற்குச் சுயாட்சி வேண்டுமெனறு கேட்டால் எவ்வளவு
பொருத்தமோ அதுபோலத்தான் இப்பொழுது மாநிலத்திலேயிருந்து
கொடுக்கப்பட்டிருக்கின்ற கோரிக்கைகள் பற்றித் தாமதமாகிறது, ஆகவே
மாநில சுயாட்சி கேட்பதும் இருக்கும் என்பதை இதனோடு ஒப்பிட்டுப்
பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

ஆகவே, நிர்வாகத் தாமதத்தைக் குறைக்க வேண்டுமென்பது ரொம்ப
நாட்களாகக் கூறப்படும் ஒன்று. "ரெட் டேப்பிசம்" என்ற வார்த்தை
பிரிட்டிஷார் காலத்திலிருந்தே ஏற்பட்ட வார்த்தை, இன்று நேற்று
வந்தது இல்லை. ஆனால் இன்றுவரையில் அந்த நிலைமையில் விமோ
சனம் ஏற்படவில்லை. ஆகவே, எந்தெந்த அதிகாரிகளுக்கு இன்னின்ன
வரையிலே, இன்னின்ன காரியங்களைப் பொறுத்தவரையில் அவர்களே
முடிவு செய்து கொள்ள வேண்டிய அளவிற்குப் பொறுப்பைக் கொடுக்க
வேண்டும். அவர்களுக்கு இப்பொழுது "ரெஸ்பான்சிபிலிட்டிசே" இல்லை.
எதையெடுத்தாலும் எனக்கு என்ன என்று சொல்கிறார்கள். கலெக்
டரிடம் போய் ஒன்றைக் கேட்டால், கலெக்டர் அதைப்பற்றி முடிவு சொல்ல
முடியாது. "through the proper Channel" தான் வர முடியும்.
கலெக்டரைக் கேட்டால் அவர் தாசில்தாரிடம் கேட்பார். தாசில்தார்
ரெவின்யூ இன்ஸ்பெக்டரிடம் கேட்க வேண்டுமென்று சொல்வார்.
ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கணக்குப் பிள்ளையினிடத்தில் கொடுப்பார்.
கடைசியாகக் கணக்குப் பிள்ளை கொடுப்பதை வாங்கி அதே வரிசையில்
கொடுப்பார்கள். என் கலெக்டரே நேரடியாகத் தாசில்தாரைக் கேட்கக்
கூடாது. எனவே, இந்த மாதிரியான முறைகளை மாற்றினால் "ரெட்
டேப்பிசம்" குறையும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எந்த அதிகாரிகள் எந்த மட்டத்தில் முடிவு எடுக்க வேண்டுமென்று
ரெஸ்பான்சிபிலிட்டி பிக்ஸ் பண்ண வேண்டும். அதிகாரிகள் சில விஷ
யங்களில் நமக்கு என் வம்பு என்று நினைத்து பொறுப்பைத் தள்ளி
விடக்கூடிய நிலை இருக்கிறது. இதனால் பத்து ஆண்டுகள், பதினைந்து
ஆண்டுகள், இருபது ஆண்டுகள், முப்பது ஆண்டுகள், நாற்பது ஆண்டுகள்
என்று காலதாமதமாகக் கூடிய நிலை இருக்கிறது. ஆகவே, ஒவ்வொரு
அதிகாரிக்கும் இந்த இந்த வகையில் முடிவு கட்ட வேண்டுமென்று
பொறுப்பைக். கொடுக்க வேண்டும். அடிப்படையிலே இப்போது இருக்கும்
அமைப்பு முறையை மாற்ற வேண்டும். அந்த வாதத்தை நான் இப்
போது எடுத்துப் பேச விரும்பவில்லை. இப்போது இருக்கின்ற நிலையிலே
என்ன செய்வது என்று சொல்ல விரும்புகிறேன்.

வில்லேஜ் ஆபீசர்ஸ் இருக்கிற முறையில் மாறுதல் செய்ய முடியாது.
அவரைப் பற்றிக் குறை சொன்னால் நாளைக்கு அவரிடம் போய்த்தான்
நிற்க வேண்டுமென்ற நிலை. நிலத்தை அளக்க வேண்டும் ; பட்டா குறித்து
வாங்கவேண்டும்; ஆகவே, வில்லேஜ் ஆபீசரை எதிர்த்துக்கொண்டு அவன்
அந்தக் கிராமத்தில் இருக்க முடியாது. ஆகவே, வில்லேஜ் ஆபீசர்களை முழு
நேர ஊழியர்களாக மாற்ற வேண்டுமென்று அட்மினிஸ்ட்ரேட்டிவ் ரிபார்ம்ஸ்
கமிஷன் சிபாரிசு கூடச் செய்யப்பட்டது. அது இதுவரை ஏற்றுக் கொள்ளப்
படவில்லை, என் இதுவரை அதைச் செய்யவில்லை என்று தெரியவில்லை,



1975 மார்ச் 18] [திரு ஏ. ஆர். மாரிமுத்து]

அப்படிச் செய்தால் பல குறைபாடுகள் நீங்கும். அவர்களும் 50 ரூபாய்
சம்பளத்தில் நாங்கள் எப்படிக் குடும்பம் நடத்துவது என்று கேட்கி
றார்கள். அதற்கு மேல் விரிவாகச் சொல்ல விரும்பவில்லை. ஆகவே,
அவர்களை முழு நேர ஊழியர்களாக மாற்றினால் இந்தக் குற்றங்குறைகள்
குறைய வழி ஏற்படும். அதே சமயத்தில் அவர்கள் மேல் குற்றங்
குறைகள் இருந்தால் சுட்டிக்காட்டப்பட்டு நடவடிக்கை எடுக்கவும் வாய்ப்பு
ஏற்படும்.

நில அடமானத்தைப் பற்றி அமைச்சர் அவர்கள் உறுதி கூறியிருக்
கிறார்கள். 7 லட்சம் ஏக்கருக்கு மேல் அசைன் செய்யப்பட்டிருக்கிறது;
முன்பு 2 லட்சந்தான். உண்மைதான். நிலத்தை அடமானம் செய்து
கொடுத்து விடுவதன் மூலம் மட்டும் எதிர்பார்க்கும் முன்னேற்றத்தை
அடைந்து விட முடியாது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
உணர்ந்து கொள்ள வேண்டும். என்னுடைய அனுபவத்தில் பார்க்கும்
போது அடமானம் கொடுக்கப்பட்ட நிலங்கள் பூராவும் வாங்கியவர்களி
டத்தில் இருக்கிறதா என்பது சந்தேகம்; ஒரு பகுதி இருக்கலாம், பெரும்
பகுதி மாற்றப்பட்டிருக்கும். பினாமி டிரான்சாக்ஷன்ஸ் அதிகமாக இருக்
கிறது. நான் அதிகாரியாக இருக்கலாம், பெரிய மனிதனாக இருக்கலாம்,
அப்படி இருந்தால் ஐந்தாறு பேர் பேரில் பட்டா வாங்கி விடுகிறார்கள்.
அதிருஷ்டவசமாக மாண்புமிகு அமைச்சர் அன்பில் அவர்கள் கீழே
இருந்து, கிராமத்தில் இருந்து வந்தவர்கள். அவர்களுக்கு நான் இதைப்
பற்றியெல்லாம் அதிகமாக விளக்க வேண்டாம். எவ்வளவு தவறுகள்
நடக்கின்றன என்பது அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

அசைன்மெண்ட் செய்து கொடுத்தது அவரவர்கள் கையில் இருக்
கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். ஜென்யுவினாக சில பேர் வைத்
திருந்தாலும் அவர்கள் சாகுபடி செய்கிறார்களா என்று பார்க்கவேண்டும்.
எல்லோருக்கும் அசைன்மெண்ட் கிடைத்தாலும் சாகுபடி செய்ய சக்தியுள்ள
வர்களாக இருக்க மாட்டார்கள். நாலைந்து வருஷம் நிலத்தைப் பண்
படுத்துவதில் நஷ்டம் ஏற்பட்ட பிறகுதான் சாகுபடிக்கு வசதியாக இருக்
கும். அரசாங்கத்திலிருந்து நிலத்தைப் பண்படுத்தக் கொடுக்கப்படுகிற
லோனை அவர்கள் சாப்பிட்டு விடுகிறார்கள். நிலம் அப்படியே இருந்து
விடுகிறது. ஆகவே, கடனை அவர்கள் கையில் கொடுக்காமல் நிலத்தை
சாகுபடிக்கு ஏற்றவாறு பண்படுத்தி அவர்களிடத்தில் கொடுக்க வேண்டும்.
அதற்கான காஸ்ட்டை அவர்களிடம் வாங்கிக் கொள்ளலாம்.

பத்து வருஷம் நிலத்தில் பாடுபட்டிருப்பான். கணக்குப்பிள்ளை திடீ
ரென்று பி. எம். ஓ. அவர்களுக்குப் போடாமல் வேறு யாருக்காவது
போட்டு விடுவார். ஒரத்தநாடு தாலூகாவில் பரவத்தூரில் பத்து பேர்
10 ஆண்டுகளாக சாகுபடி செய்து வந்தார்கள். இரண்டு ஆண்டுகளுக்கு
முன்னால் அவர்களுக்கு பி. எம். ஓ. கொடுக்காமல் வேறு யாருக்கோ
அசைன்மெண்ட் போடப்பட்டிருக்கிறது. இது எப்படி என்றே தெரிய
வில்லை. ஒரத்தநாடு தென்னமர் தாலூகாவில் 50 அம்பலகாரர்கள்
17 வருஷம் நிலத்தில் பாடுபட்டு வந்தும் அவர்களுக்கு அசைன்மெண்ட்
டைக்கவில்லை. அதிகாரிகள் இப்படிப்பட்ட தவறுகளை நிறையச் செய்

கிறார்கள். இப்போது இருக்கிற டி. ஆர். ஓ. விடமும், தாசில்தாரிடமும் எடுத்துக் கூறியதன் பேரில், 'நியாயம் இருக்கிறது, செய்கிறோம்' என்று கூறியிருக்கிறார்கள். அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறார்கள். அரை எக்கர் நிலம் வீதம் நூற்றுககணக்கான விவசாயிகளுக்குக் கொடுக்கிறார்கள். முயற்சி செய்து அதை வாங்க அவர்களுக்குத் தெரியவில்லை. வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிறார்கள்.

காம்பேக்டாக 500 எக்கர் 800 எக்கர், 1,000 எக்கர் என்று இருந்தால் அசைன்மெண்ட் கொடுக்காமல் காலனியாக செய்து கூட்டு முறையில் சாகுபடி செய்ய முயற்சி செய்ய வேண்டும். வாழசேரி வில்லேஜ், தாமரபாக்கம் வில்லேஜ் ஆகியவற்றில் இரண்டாயிரம் எக்கர் நிலம் தரிசாக இருக்கிறது. அந்த காட்டை காலி பண்ணவேண்டும். இன்னும் செய்யவில்லை. சாதாரண மக்களை வெட்டிக் கொண்டு போகச் சொன்னால் கூட வெட்டிக்கொண்டு போயிருப்பார்கள். ஏலத்திற்கு விட்டதில் பெரிய தொகை கிடைத்ததாகவும் தெரியவில்லை. புறம்போக்கு நிலம். நஞ்சை சாகுபடி செய்யும் நிலம். அதை சாகுபடி செய்ய சர்விஸ் கோவாப்பரேட்டிவ் மூலம் முயற்சிகளைச் செய்ய வேண்டும்.

இப்போது நஞ்சை, புஞ்சை என்று நிலங்களை கிளாசிபிக்கேஷன் செய்யும் முறையில் சில மாறறங்கள் செய்ய வேண்டும். புதிதாகப் பாசன வசதி; தண்ணீர் வசதி பெற்ற நஞ்சை என்ற பிரிவுகள் எல்லாம் இருக்கக் கூடாது. நஞ்சை, புஞ்சை என்ற இரண்டு வகையிலே நிர்ணயிக்க வேண்டும். விவசாயிகளுக்கு வரி விதிக்கும்போது ஒரு எக்கருக்கு 10 ரூ. 15 ரூ. என்று ரவுண்டாக போட்டு விடுங்கள். செஸ். சர்சார்ஜ், பஞ்சாயத்து யூனியன் செஸ் என்று என்னென்னவோ போடுவதைப்பற்றிக் கணக்குப் பார்க்கும் போது எனக்கே புரியாது கேட்பதை கொடுத்து விடுகிற நிலையில் என்ன கணக்கு வழக்கை வைக்க முடியும்? இந்த வரி விதிப்பு ஒரே மாதிரியாக தெளிவாக இருக்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அடுத்தபடியாக விவசாயிகளுக்குக் கொடுத்திருக்கிற பாஸ் புத்தகங்களைப் பற்றி சில கூற விரும்புகிறேன். அதில் எல்லா விவரங்களும் கொடுக்கப் படவில்லை. பாஸ் புத்தகம் எப்படி இருக்க வேண்டுமென்றால்; சொத்து விவரம் பூரா இருக்க வேண்டும். ஆந்திராவில் ஒரு உத்தரவு போட்டிருக்கிறார்கள். நிலமில்லாத விவசாயிகளுக்கு நிலம் கொடுப்பதில் பிரபரன்ஸ் என்றார்கள். என்ன ஆயிற்று என்றால், சொத்து உள்ளவர்கள் கூட சொத்து இல்லை என்று வாங்கிக்கொண்டு போய் விட்டார்கள். இங்கேயும் அப்படிப்பட்ட முடிவு எடுக்க வேண்டி வரும். அப்போது நிர்வாக முறைக்கு சுலபமாக இருக்கும். சொத்து விவரங்களோடு; வீடு போன்ற இதர சொத்து பற்றிய விவரங்களும் அந்த பாஸ் புத்தகத்தில் இருக்க வேண்டும். அப்படிச் செய்தால், ஏழை விவசாயிகளுக்கு நல்லது செய்ய உதவியாக இருக்குமென்று கூற விரும்புகிறேன்.

நிலச் சீர்திருத்தச் சட்டத்தில் ஓட்டை இருக்கிறது. தி.மு.க. சர்க்கார் வந்த பிறகு 30 எக்கர் என்றார்கள், பிறகு 30-லிருந்து 15 என்றார்கள். எல்லாம் சேர்த்து உபரி 98 ஆயிரம் எக்கர் இருக்கிறது. 50, 70 ஆயிரம்





கொடுத்திருக்கிறார்கள். இந்த அசைன்மெண்டில், வசதி உள்ளவர்கள் எல்லாம் அசைன்மெண்ட் வாங்கி இருக்கிறார்கள் என்று பேசப்படுகிறது. குறிப்பிட்டு யாரையும் நான் கூற விரும்பவில்லை. ஆகையால் அதைப் பரிசீலனை பண்ண வேண்டும். உபரியை எடுத்து ஏழைகளுக்குக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாட்டின் அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமானது துண்டு துண்டு நிலங்களை எல்லாம் ஒன்று சேர்ப்பது ஆகும். 1957-லிருந்து சொல்லிக்கொண்டு வருகிறார்கள். டெல்லிக்குக்கூட நமது ரெவின்யூ அதிகாரிகள் போய் வந்திருக்கிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். மத்திய சர்க்கார் என்றாலும் கூட மாநில சர்க்காரும் சிந்தனை பண்ண வேண்டும். இதை விடச் சிறந்த முறை இருக்க முடியாது. நேஷனலைஸ் பண்ணுவது என்பது அடுத்த ஸ்டெப். அக்ரிகல்ச்சர் கமிஷன் மெம்பர் வந்து, பல மாநிலங்களில் இது அமலாகிக் கொண்டு வருகிறது. ஆனால் தமிழ் நாட்டில் சரியாக செயல்பட வில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஏன்? என்ன சங்கடம்? மக்கள் விரும்ப மாட்டார்கள் என்பதாக மாநில அரசு ஒரு ரிப்போர்ட் கொடுத்திருப்பதாகக் கேள்விப் படுகிறேன். அது தப்பு, மக்கள் நிச்சயம் விரும்புவார்கள். செயலில் அது எப்படி இருக்கும் என்பது தெரியாத காரணத்தால் அதை வெறுக்கலாம். ஆனால் நடை முறைப்படுத்திப் பார்த்தால் அதற்கு மக்கள் மேன்மேலும் ஆதரவு அளிப்பார்கள். விளைச்சல் பெருகும். தேசத்தின் நன்மையைக் கருத்திற் கொண்டு பார்த்தால் அது மிகவும் சிறந்த திட்டம். நான் ஒரு விவசாயி என்ற முறையில் சொல்கிறேன். பல மாநிலங்களில் அந்த முறையில் உற்பத்தியைப் பெருக்கியிருக்கிறார்கள். நம்மால் ஏன் பெருக்கமுடியாது?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 20 நிமிடங்கள் எடுத்துச் கொண்டிருக்கிறீர்கள். சீக்கிரம் முடியுங்கள்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: இதோ; முடித்துவிடுகிறேன். இன்னும் ஒன்றிரண்டு விஷயங்கள் தான்.

நிலங்கள் தரிசாக கிடக்கின்றன. தரிசாக போடுவதை குற்றம் என்று ஆக்க வேண்டும். நிலத்தை சொந்தமாக வைத்துக்கொண்டு அதை சாகுபடி செய்யவில்லை என்றால் அதைக் குற்றம் என்று அறிவிக்க வேண்டும் அப்போது தான் நிலங்கள் தரிசாக ஆக்காமல் தடுக்க முடியும். தரிசாக போடுவதற்கு எவருக்கும் உரிமை கிடையாது.

கிராம சொத்துகளுக்கு உச்ச வரம்பு போட்டிருக்கிறீர்கள். நகர சொத்துக்கு உச்ச வரம்பு தேவை. கிராமத்திலுள்ளவர்கள் கேட்கிறார்கள் எங்கள் சொத்துக்கு உச்ச வரம்பு என்கிறீர்களே; நகரத்தில் வைத்துக் கொண்டிருக்கிற சொத்துக்கு உச்ச வரம்பே கிடையாதா? எப்போது கொண்டு வரப்போகிறீர்கள்? என்று நம்மால் பதில் சொல்ல முடியவில்லை. நகர்ப்புற சொத்துக்கு உச்ச வரம்பு கொண்டு வர முயற்சிக்க வேண்டும். பார்க்கிறோமே, ஒரு கிரவுண்ட், இரண்டு கிரவுண்ட் என்று வைத்துக்கொண்டிருந்தால் பரவாயில்லை. ஐந்து எக்கர் நிலத்தை வைத்துக்கொண்டு அதில்

ஒரு மாளிகையைக் கட்டி வைத்துக்கொண்டிருக்கிறார்கள். நாம் குடிசை மாற்று வாரியம் என்று வைத்துக்கொண்டு பல அடுக்கு மாடிக் கட்டிடங்களைக் கட்டிக்கொண்டிருக்கிறோம். எனவே, நகர்ப்புற சொத்துக்கு உச்ச வரம்பு கொண்டு வருவது பற்றி கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, மனைக்கட்டுகள். மத்திய சர்க்கார் மனைக்கட்டுகள் வழங்குகிற ஒரு திட்டத்தை வைத்திருந்தார்கள். சில இடங்களில் வழங்கினார்கள். பின்னர் கை விட்டு விட்டார்கள் என்று தெரிகிறது. மத்திய சர்க்கார் பண்ணவில்லை என்றால் அதை மாநில சர்க்கார் பண்ணுவதில் தவறில்லை. சில மாநிலங்களில் செய்து கொண்டிருக்கின்றனர். நிறுத்தவில்லை. எனவே, மத்திய அரசு நிறுத்தினாலும் மாநில அரசு தனது நிதியிலிருந்து இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே; வருவாய்த்துறை மானியத்தின் மீது பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள சில முக்கியமான விஷயங்களைக் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். குறிப்பாக; அம்பாசமுத்திரம் பகுதி உபரி பகுதியாக கணக்கிடப்பட்டுள்ளதால் அப்பகுதியில் சில இடங்கள் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அம்பாசமுத்திர பகுதியில் கடையம் யூனியன் பகுதி சேர்ந்திருப்பதால் கடையம் பகுதி பாதிக்கப்படுகிறது. அப்பகுதி ஒரு மானாவரிப் பகுதி. எனவே, கடையம் பகுதி மக்கள் அடைய வேண்டிய நன்மையை சரிவர அடைய முடியவில்லை, எனவே, இதற்கு நிவாரணம் காண வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடையம் பகுதி நான்கைந்து ஆண்டுகளாக வறட்சிப் பகுதியாக இருந்து வருகிறது. தற்போது வறட்சி நிவாரண வேலையில் கீழ்க்கடையம் பகுதி சேர்க்கப்படவில்லை. மேலும் கீழ்க்கடையம் பகுதியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று மாவட்ட ஆட்சித் தலைவர் அரசுக்கு எழுதி இருப்பதாகத் தெரிகிறது. அதை இந்த வறட்சி நிவாரண வேலையில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, விக்கிரமசிங்கபுரம் பஞ்சாயத்து பகுதியில் குடியிருப்பு சட்டம் அமுல் படுத்தப்படவில்லை. அந்த பகுதியில் குடியிருப்புச் சட்டத்தை அமுல் படுத்த வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். மேலும் பிச்சை கட்டளை, பிள்ளையன் கட்டளை என்று திருவாடுதுறை போன்றவர் அனுபோகத்தில் உள்ள குடியிருப்பு மனைகள் இருக்கின்றன. விக்கிரமசிங்கபுரம் ஒரு மலைப்பகுதியாக இருக்கிறது என்று அரசு கணக்கிட்டிருக்கிறார்கள். ஒன்றாவது வார்டு மட்டும்தான் மலைப்பகுதி, மற்ற வார்டுகள் எல்லாம் மலைப்பகுதியை சேர்ந்தவைகள் இல்லை. மற்ற வார்டு பகுதிகளை குடியிருப்புப் பாதுகாப்பு சட்டத்தின் மூலம் அமுல் படுத்த முடியவில்லை. இப்பகுதியில்



குடியிருப்பவர்களை அப்புறப்படுத்துகிறார்கள். இதை நான் பல தடவை இந்த மன்றத்தில் தெரிவித்திருக்கிறேன். தயவு செய்து 1-வது வார்டை தவிர மற்ற பகுதிகளில் இந்த பாதுகாப்பு சட்டத்தை அமல் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடையம் யூனியன் பகுதியில் கிணறுகள் ஆழமாக வெட்டப்பட்டும் தண்ணீர் கிடைப்பதில்லை. தண்ணீர் கிடைக்காமல் அப்பகுதி மக்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். நீண்ட காலமாக கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்கப்படாமல் மக்கள் அவதிப் படுகிறார்கள். எனவே, தயவு செய்து கிணறுகளுக்கு மின் இணைப்புக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அம்பாசமுத்திரம் பகுதியில் குளங்கள் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுக்கு பல தடவை தெரிவித்திருந்த போதிலும் கூட குளங்களில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. கேட்டால், எங்களுக்கு அதிக அதிகாரங்கள் இல்லை என்று சொல்லுகிறார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் பல இனும் கிராமங்கள் இருக்கின்றன. வெந்திபுரம், கோடாரங்குளம், பொட்டல்புதூர் போன்ற கிராமங்கள் இனும் கிராமங்களாக இருக்கின்றன. இனும் ஒழிப்புச் சட்டத்தின்கீழ் எடுத்துக் கொள்ளப்பட்ட பின்பும் புறம்போக்கு நிலங்களை இன்னும் பஞ்சாயத்தில் ஒப்படைக்கவில்லை. அதனால் பஞ்சாயத்து வேலைகள் எதுவும் செய்ய முடியவில்லை. குழாய் கிணறுகூட வெட்ட முடியவில்லை. பெரும் பிரச்னையாக இருக்கிறது. ரோடு போட முடியவில்லை. இந்த மாதிரி நிலைமை நீண்டகாலமாக இருக்கிறது என்பதை நான் தங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

இனும் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்த பின்னாலும், இனும் நிலத்தில் பயிர் செய்து வந்த விவசாயிகள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த நிலத்திலிருந்து வெளியேற்றப்பட்ட விவசாயிகளுக்கு இன்னும் அந்த நிலத்தை மீட்டுக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அரசு இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இனும் நிலங்களில் பயிரிடும் விவசாயிகள் மீது கேஸ் போடுகிறார்கள். விவசாயிகளுக்குத் தெரியாமல் இன்ஜங்ஷன் ஆர்டர் ஒரு தலைபட்சமாக வாங்கி வந்து விடுகிறார்கள். இந்த மாதிரியான நிலைமை மாறவேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனும் ஒழிப்புச் சட்டம் கொண்டு வந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகியும் இன்னும் சரிவர பயன்படுத்தவில்லை. கிராமங்களில் இருக்கும் புறம்போக்கு நிலங்களையெல்லாம் பஞ்சாயத்திடத்தில் ஒப்படைக்கவில்லை. இதனால் பஞ்சாயத்து அபிவிருத்து வேலைகளைச் சரிவர செய்ய முடிய

வில்லை. இனும் கிராமத்தில் இருக்கும் நிலையங்களையெல்லாம் சர்வே செய்து, புறம்போக்கு நிலங்களை உடனடியாக பஞ்சாயத்திடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, இனும் கிராமங்களில் இருக்கும் விவசாய மக்களால் இந்த அரசு செய்யும் அத்தனை நன்மைகளையும் அடையமுடியவில்லை. லோன் வாங்க முடியவில்லை. உரக்கார்டு வினியோகம் செய்வதில்கூட சங்கடங்கள் ஏற்படுகின்றன. மேற்படி கிராமத்தில் நிலச்சீர்திருத்த சட்டத்தால் ஏக்கர்கள் சரிவர கணக்கு எடுக்காததால் எத்தனை விவசாயிகள் பயிர் செய்கிறார்கள் எத்தனை உரக் கார்டுகள் வினியோகிக்கப்பட வேண்டுமென்று கணக்கு சொல்ல முடியவில்லை. அதனால் விவசாய மக்கள் கஷ்டப்படுகிறார்கள். இந்த நிலையைப் போக்க வேண்டும்.

செவந்திபுரம் பஞ்சாயத்தில் இனும் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் எடுத்த கிராமத்தில் புறம்போக்கு நிலம், கல்கொறி இருக்கின்றன. அதை யார்யார் எல்லாமோ அனுபவித்துக் கொண்டு இருக்கிறார்கள். வருடம் ஒன்றுக்கு சுமார் 15,000 ரூபாய்க்கு மேல் கோறி குத்தகைக்கு போக கூடியவை. அதைத் தனியாரிடத்தில் ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நீண்ட காலமாக இந்தக் கோரிக்கை இருக்கிறது. ஆகவே, இந்த புறம்போக்கு நிலத்தை ஒப்படை செய்ய அரசு உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தனி தாசில்தார் என்று அமைக்கப்பட்டு குத்தகை உரிமை பதிவு செய்வதற்காக இருக்கிறார். அப்படி பதிவு செய்வதற்காக தாலுக்கா அலுவலகங்களில் உதவி ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் ஏராளமான பேர் மனு செய்தும் இதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. இதையெல்லாம் உடனடியாக கவனித்து அந்த விவசாயிகளுக்குத் தக்க வகையில் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒருபோக நிலங்களையெல்லாம் இருபோக நிலங்களாக மாற்ற வேண்டும். ஏன் என்றால் தாமிரபரணி படுகையில் சுமார் ஆயிரக்கணக்கான நிலங்கள் ஒரு போக சாகுபடியிலிருந்து இருபோக சாகுபடியாக 20 ஆண்டுகளுக்கு மேலாக செய்து வருகிறார்கள். அப்படிப்பட்ட நிலத்தையெல்லாம் உணவு உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கிற வகையில் 2 போக சாகுபடி நிலங்கள் என்று மாற்றி தனித்தீர்வையில் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பாபநாசம், மணிமுத்தாறு அணைக்கட்டின் காரணமாக ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் புஞ்சைக்கு மேல் நஞ்சை சாகுபடி செய்கிறார்கள். சுமார் 20 வருஷத்திற்கு மேலாக செய்கிறார்கள். அதற்கு தண்டத்தீர்வை விதிக்கப்படுகிறது. அவர்களுக்கு ஊக்கம் தரும் வகையில் தனித்தீர்வையின்கீழ் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் நான் எடுத்து வைத்த கருத்துக்களை எல்லாம் தயவு செய்து மனதில் வைத்து, அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.



திரு. ப. முத்துசாமி : தலைவரவர்களே, இங்கே கொடுத்து இருக்கின்ற வருவாய்த்துறை மானியக்கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த வருவாய்த்துறை மானியக் கோரிக்கையில் முதல் பக்கத்திலேயே இன்றைக்கு ஏற்பட்டு இருக்கிற வறட்சி நிலைமை பற்றி குறிப்பிட்டு, அதற்காக தெளிவாக என்னென்ன பணிகள் செய்யப்படுகின்றன என்பதையும், ஏற்பட்ட இடற்பாடுகளை எப்படி களைய முற்பட்டு இருக்கின்றது என்பதையும் இங்கே எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். இந்த வறட்சிப் பணி ஆரம்பித்த நேரத்தில் குறிப்பாக குடிநீர் பிரச்னை தீர்ப்பதற்காக பல நடவடிக்கைகளை எடுத்தார்கள். சிறிய குளங்கள், பெரிய குளங்கள், ஆகியவற்றை மராமத்து செய்யவேண்டுமென்று அந்த இரண்டையும் மாத்திரம் கணக்கிட்டு எடுத்துக்கொண்டு, நாடு பூராவும் இருக்கும் குடிநீர் கிணறுகளை ஆழப்படுத்தும் வேலையை ஆரம்பித்து, அதன் மூலம் கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் திட்டத்தை, ஏழை எளிய மக்கள் பயன்பெறும் வகையில் நம்முடைய அரசு அறிவித்து, மிகத் தீவிரமாக அதைச் செயலில் நடத்தியது என்பதை நாம் அத்தனைபேரும் அறிவோம்.

ஆனல் ஆரம்பத்தில் அரசாங்கம் இவற்றிற்காக் ஒதுக்கிய பணம் போதவில்லை. காரணம், கூலி ரேட்டுகள் கட்டுப்படியாகவில்லை. இதை பல கட்டங்களில், பல நிலையங்களில் எடுத்துக் கூறியதால், இங்கே இப்போது ரேட் ரிவைஸ் செய்து அறிவித்து இருக்கிறார்கள். இருந்தாலும் ஆரம்பத்தில் அரசு வைத்திருந்த கூலி விகிதம் குறைவாக இருந்ததால், ஊராட்சி ஒன்றியங்கள் அதிகமாகக் கூலி கொடுத்து அந்தப் பணியை முடித்து இருக்கிறார்கள். இதனல் அவர்கள் கைவிட்டுப் பணம் அதிகமாக செலவு செய்ய வேண்டியிருந்தது. ஆகவே, இந்த ரிவைஸ்ட் ரேட்டை முதலிலிருந்தே அமுலுக்கு வரும்படி ஆணையிட்டு, அவர்களுக்கு பணம் அந்த அடிப்படையில் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது புதிய குட்டைகள், புதிய குளங்கள் அமைத்தல், போன்ற திட்டங்களை அறிவித்து இருக்கிறார்கள். அதை வரவேற்கிறேன்.

இங்கே பலரும் பேசினார்கள். இந்த சட்டமன்றத்தொடர் கூட்டத்தில் பெரும்பாலான எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இந்த வறட்சியைப்பற்றிப் பேசுகிற நேரத்தில் இந்த அரசு இவ்வளவு தூரம் காரியங்கள் செய்திருந்தபோதிலும் அரசியல் கட்சி காரணமாக தேர்தலுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளும் வகையில் இதைப் பயன்படுத்திக்கொண்டார்கள் என்பதை இந்த அவையில் கண்டோம். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு புறத்தில் வேலைவாய்ப்புத் திட்டத்தில் ஈடுபட்டு இருக்கும் அதிகாரிகள் அல்லது ஈடுபட்டு இருக்கும் ஊராட்சி ஒன்றியங்கள் இவைகள் அந்தப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் தர வேண்டும். அன்றாடம் உழைக்கும் மக்கள் கஷ்டப்பட்டு விவசாய மக்களுக்கு உதவ வேண்டுமென்ற அடிப்படையில் நடவடிக்கை எடுக்கிறார்கள். அவர்கள் ஏதோ இதில் கொள்ளை அடிப்பது போல் பேசுவது நல்லது அல்ல. ஒரு புறத்தில் ஒன்றியங்களுக்கு ரேட் கட்டுப்படியாக வில்லை என்பதால் வேலை செய்யமுடியவில்லை. ஆதனல் வேலை தேங்கிக்கிடக்கிறது. அதனல்

ஏனழைகளுக்குவேலை கொடுக்க முடியவில்லை. இப்படி கூக்குரல் ஒருபுரம் இருக்கிறது. காண்டிராக்டானாலும் சரி, மஸ்டர்ரோல் முறை என்று சொன்னாலும் சரி அதில் கொள்ளையடிக்கிறார்கள் என்று அரசியல் நோக்கத்தோடு சொல்கிறார்கள். நான் எதற்காக இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், ஒரு பழமொழி சொல்வார்கள். "உழுகிற மாட்டை நுகத்தடியில் இடிக்கக்கூடாது" என்று. ஆகவே, அரசு செய்கிற நல்ல காரியங்களை பாராட்டுவதை விட்டு அதை பழி சுமத்துகிற பாணியில் பேசுவது பொருத்தமல்ல என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு இருக்கிற சிரமங்களை எடுத்துச் சொல்கிற நேரத்தில் சில குறைகளைச் சொல்கிறார்கள். நிலவள வங்கி மூலமாக அவர்கள் கடன் வாங்குவதற்கு முடியவில்லை. எல்லாக் கட்சிகாரர்களும் சொன்னார்கள். அது உண்மைதான். அது இந்த அரசின் கையில் இல்லை என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், கூட்டுறவு அமைச்சர் அவர்களும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கிறார்கள். அதற்குப் பிறகுதான் விவசாயிகள் கிணறுகளை ஆழப்படுத்த ரூ. 5 கோடியை அரசு மொத்தமாக ஒதுக்கி, பஞ்சாயத்து ஒன்றியம் மூலமாகக் கொடுக்க வேண்டுமென்று உத்தர விட்டு இருக்கிறார்கள். இதனால் விவசாயிகள் எளிதில் கடன் பெற முடிகிறது என்பதைத் தெரித்துக்கொள்கிறேன்.

இது மாத்திரம் இல்லை. இன்றைக்கு இந்த வறட்சி நிவாரணப் பணியில் பல குட்டை திட்டங்களை எடுத்துக் கொள்ளவேண்டும். வறட்சி பகுதியில் செய்கிற காரியம் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கு பயன் அளிக்கும் என்று இந்த நேரத்தில் தெளிவுபடுத்த விருமபுகிறேன். இது மாத்திரம் இல்லாமல் அந்தப் பகுதியிலே இருக்கின்ற சாலை மராமத்து போன்ற வேலைகளை எடுத்துக் கொள்ளவேண்டும் ஏற்கனவே பட்ஜெட் கூட்டத்தில் குறிப்பிட்டு இருக்கின்றேன். மெட்டல் போடுகிற வேலை, குளம் மராமத்து, புதிய குளம் எடுக்கிற வேலை சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக இந்த ரெவின்யூ பட்ஜெட் பொறுத்தமட்டில் நாம் ஏற்கனவே கிராம அடிப்படையில் இருக்கின்ற அதிகாரி முழு நேர ஊழியர்களாக ஆக்க வேண்டுமென்றும், அவர்கள் அதே சமயத்தில் தவறு செய்கிற நேரத்தில் மாற்றுதல் போன்ற வேறு இடங்களுக்கு மாற்றப்படுகிற நிலை உருவானால்தான் அவர்களுடைய அச்சுறுத்தலை கிராமத்தில் ஒழிக்க முடியும் என்பதை இந்த நேரத்தில் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏன் என்றால் அவர்கள் கிராமத்திலே இருக்கின்ற அதிகாரிகள் சில சமயத்தில் கடமை தவறுகிற நேரத்தில் அதை எடுத்துச் சொல்ல சாதாரண விவசாயிகள் அஞ்சுகிற நிலை இருக்கின்றது. ஆகையினால்தான் அவர்களை முழு நேர ஊழியர்கள் ஆக்கி நிரந்தரமாக மற்ற இலாகாவில் இருக்கின்றது போல அவர்களுக்கு மாற்றுதல் செய்கிற நிலை உருவாக வேண்டும்.

பட்டா மாறுதல் போன்ற பிரச்னைகள், மனுநீதி திட்டங்கள் இவைகள் எல்லாம் நம்முடைய அரசு வந்த பின்னால்—கழக அரசு வந்த பின்னால்—அதிக அளவில் செய்து இருக்கின்றது என்பதை யாரும் றுக்க முடியாது.





மாவட்ட ஆட்சியாளர்கள் போன்றவர்கள் கிராமப்புறங்கள் சென்று ஏழை விவசாயியை சந்தித்து குறைகளை நேரிடையாக கேட்டு அவைகளை திருப்தி செய்கிற முறை நம்முடைய அரசு வந்த பின்னால் உருவாகி இருக்கின்றது என்பதை சாதாரண விவசாயிகள் நிச்சயமாக மறுக்க மாட்டார்கள். ஆனாலும் இன்றைக்கு தாலுகா அளவிலே கிராம அதிகாரிகள் அளவிலே காலதாமதம் ஏற்படுகிறது அதனால் வீணான தொல்லைகள் வருகிறது என்பதை நடைமுறையில் காண்கிறோம் இன்றைக்கு. இதற்கு நான் தாலூக்கா அளவில் கேட்டுக் கொள்வது மக்களுடைய பிரதிநிதியாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட முறை இருக்குமானால் ஊராட்சி மன்றத்தில் குறை நடைபெறுகிறது என்றால் இதை மக்கள் பிரதிநிதிகள் கேட்பார்கள் என்ற அச்சம் அதிகாரிகளுக்கு ஏற்படும். அடுத்த கூடடத்தில் என்ன சொல்வார்களோ என்று அதிகம் செய்து கொடுப்பார்கள். தாலூக்கா அளவிலே தாசில்தார் அளவிலே மக்கள் பிரதிநிதிகள் இடம் பெற வேண்டும்.

அதே மாதிரி டி.டி.சி.யில் என்ன அதிகாரம் இருக்கிறது என்றால் "மியர் அட்வைசரி கபாசிடியில்" இருக்கின்றதே தவிர எந்த அதிகாரமும் இல்லை. இந்த டி.டிசி. போடுகின்ற தீர்மானம் ஊராட்சி மன்ற தலைவர்கள், எம்.எல்.ஏ., எ.பி.க்கள் கூடி செய்கிற ஆலோசனை என்றாலும் செயல்படாத அளவில் இன்றைக்கு இருக்கின்றது. இதைச் செயல் படுத்துகிற அதிகாரம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி இன்றைக்கு பட்டா புத்தகம் கொடுக்கிற பிரச்னை, இதில் இன்னும் சில குறைபாடுகள் இருந்துகொண்டு இருக்கின்றன. அவைகளை சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அது மாத்திரம் இல்லாமல் அடங்கல் எழுதுவது எல்லாம் வீட்டிலே இருந்து கர்ணம் எழுதுகிற காரணத்தால் பல தொல்லைகள் உருவாகின்றன. இந்தக் குறைகளை தீர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த மானிய கோரிக்கையை வரவேற்று என்னுடைய வார்த்தையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. கே. எ. வகாப்: மாண்புமிக்க தலைவர் அவர்களே, வருவாய்த் துறை அமைச்சரால் இங்கே அளிக்கப்பட்டு இருக்கின்ற இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று என்னுடைய கருத்துக்களை சொல்ல முற்படுகிறேன். இன்றையதினம் வருவாய்த் துறையை பொறுத்த வரையில் குறைபாடுகளை கூறுவதற்குக் காரணம் இந்தக் குறைபாடுகளை உடனடியாக அரசு செய்யும் என்ற நம்பிக்கையிலே எடுத்துச் சொல்லப்படுகிறது என்றாலும் கூட குறிப்பாக சில சில விஷயங்களில் இதை தீவிரப்படுத்த நல்ல முறையில் நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள். இந்த முயற்சிக்கு உறுதுணையாக பொது மக்களும் பொது வாழ்விலே இருப்பவர்களும் இருக்க வேண்டிய சூழ்நிலை இருந்தாலும் கூட சில கட்டங்களில் நீண்டகால தாமதம் ஏற்படுவது தவிர்க்க முடியவில்லை என்று குறிப்பிடுகிறேன். இதைப் போக்குவதற்கு அரசாங்கம் தீவிரமாக சில திட்டங்கள் செயல் படுத்தும்போது இதை அடிப்படையாக வைத்து சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இன்றைய தினம் மனு நீதி நாள் ஜமாபந்தி போன்றவைகள் சிறப்பான முறையில் அமுல் நடத்தப்படுகிறது. மக்களுடைய குறைகளை கேட்பதற்காக குற்றம் இழைத்தவன் தன் மகன் என்றாலும் கூட அவனை தேர்க் காலில் இட்டு கொன்ற மனு நீதிச் சோழன் பரம்பரை, புறாவுக்கு இழைத்து விட்ட அநீதிக்கு தன் சதையை அறுத்துக் கொடுத்து அதை அதற்கு ஈடு செய்த சிபி சக்ரவர்த்தியைப் போல் இந்த ஆட்சியில் இருக்கின்ற முதல்வர் அவர்கள், மந்திரிகள் தங்களை அர்ப்பணித்துக் கொண்டு மக்களுக்கு உதவுகிற காரியத்தில் மக்கள் முன்னால் நிற்கின்றார்கள். அப்படிப்பட்ட உதாரணம் அண்மையில் ஏற்பட்டது சி.எம்.சி. தீர்வு விவகாரத்தில் என்று நினைக்கிறேன்.

இப்படிப்பட்ட நடவடிக்கை எடுக்கப்படுகிறபோது கீழ் மட்டத்தில் இருக்கின்ற அதிகாரத் துறையில் சில பல குறைபாடுகள் தவறுகள் ஏற்படுகின்றன. இதை இந்த நேரத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாக இருக்கின்றது. இன்றையதினம் வருவாய் துறையுடைய மிகப் பெரிய சோதனைக்கு உதாரணமாக இருப்பது பட்டா கொடுப்பது. இந்தச் சிறப்பை பற்றி குறிப்பிட கடமைப்பட்டு இருக்கின்றேன். இன்று வீட்டு மனைப் பட்டா அளிக்கப்படுகிறது. இது மாத்திரம் அல்லாமல் சுமார் $7\frac{1}{2}$ இலட்சத்திற்கு மேல் பிரித்து கொடுக்கப் பட்டு இருக்கின்றது என்று எண்ணுகிற போது இந்த மாபெரும் சாதனையை நாட்டில் இன்று உள்ள நிலையில் மக்கள் வரவேற்க கடமைப்பட்டு இருக்கிறார்கள்.

இது மட்டுமல்லாமல் வனத்துறை நிலத்தை எடுத்து 11,000-க்கு மேல் கொடுத்து இருக்கிறார்கள். இன்னும் வனத்துறையில் நிறைய நிலம் இருக்கிறது. பண்படாது இருக்கிறது. அதைப் பயிர் செய்யக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. உணவு பற்றுக்குறை அடிப்படையில் வைத்து வனத் துறையில் பண்படாமல் இருக்கும் நிலங்களை எடுத்து ஏழைகளுக்கு பட்டா வழங்க ஏற்பாடு செய்யவேண்டும். இந்த பட்டா வழங்குவது குறித்து நான் சில கருத்துக்களைச் சொல்லிக்கொள்கிறேன்.

குறிப்பாக, இன்று சமுதாயத்தில் முஸ்லீம்களைப் பொறுத்தவரையில் அவர்கள் ஏழைகளாக இருப்பவர்கள் அதிகம் பேர் இருக்கிறார்கள். இந்த பட்டா கொடுக்கும் விஷயத்தை அவர்கள் அறியாதவர்களாக இருக்கிறார்கள். சில இடங்களில் அவர்கள் பட்டா பெறுகிறார்கள் என்றாலும் அதைப் பெறுவதில் அவர்கள் அதிகம் கஷ்டப்படுகிறார்கள். காலதாமதம் ஆகிறது. கிராமத்தில் இருப்பவர்களில் 100 பேர் ஏழைகளாக இருந்தால் அவர்களில் பாதிப்பேர் வீட்டு மனை இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு மனைப்பட்டா வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு லத்தீப் அவர்கள் நிலப்பட்டா வழங்குவது குறித்து சில கருத்துக்களை வேகமாக எடுத்துச் சொன்னார்கள். அதை அமைச்சர் அவர்கள் மனதில் கொண்டு பட்டா கொடுப்பதில் உள்ள காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டும். இப்படி பட்டா கொடுக்கும் விஷயத்தில் முஸ்லீம்களுக்கு சில இடையூறுகள் இருக்கின்றன. இதை எடுத்துச் சொல்ல முடியாத





சூழ்நிலை இருக்கிறது. இங்கே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முஸ்லீம்கள் எல்லோருக்கும் நிலப்பட்டா கொடுக்க வேண்டுமென்று அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் வந்தவாசி அருகே முன்னியூர் என்ற ஊரில் முஸ்லீம்கள் தொழுகை செய்வதற்காக ஒரு இடத்தை வைத்திருக்கிறார்கள். அந்த பள்ளிவாசல் அருகே உள்ள நிலம் பள்ளிவாசலுக்குச் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு இருந்தோம். அதற்கு வேலி அமைக்கவேண்டுமென்று சொன்னபோது அது புறம்போக்கு நிலம் என்று தெரிந்தது. மூன்று ஆண்டு காலத்திற்கு முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அந்த மனையை பள்ளிவாசலுக்குச் சொந்தமாக்கவேண்டுமென்று மனு கொடுத்தோம். அவர்களும் அது குறித்து விசாரித்து நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், இன்றுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. கலெக்டர்கள் வருகிறார்கள். ஆனால் அது குறித்து விவரம் சேகரித்து, அரசுக்கு அனுப்பாமல் சென்று விடுகிறார்கள். மூன்று ஆண்டு காலமாக அது தாமதமாகி வருகிறது. இது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீட்டு மனை அளிப்பது பற்றி பேச ஆசைப்படுகிறேன். அதிலே சில அரசியல் சூழ்நிலைகள் வந்து புகுந்து விளையாடுகிற தன்மை இருக்கிறது என்று சொல்கிறபோது மன வேதனை அடையவேண்டியவர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்ல, தொழுகை இடம், பள்ளிவாசல் அருகில் இருக்கும் புறம்போக்குகள் பள்ளிவாசலுக்கே கொடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறோம்.

(பிற்பகல் 1-00.)

அதுமட்டுமல்ல, முஸ்லீம்களுடைய கபர்ஸ்தலம் இருக்கக்கூடிய இடங்கள் பெரும்பாலும் புறம்போக்கு நிலமாக இருக்கிறது. அது மட்டுமல்லாமல் முஸ்லீம்கள் தொழுகை நடத்தக்கூடிய இடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே இருக்கின்ற புறம்போக்கு நிலங்களை மக்கள் ஆக்கிரமிப்பு செய்து, வீடு கட்டும் நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட பொது ஸ்தாபனங்கள் இருக்கின்ற இடங்களை அவர்களுக்கே பட்டா செய்து கொடுத்து விட்டால் அதற்கான உத்தரவை போட்டுவிட்டால் இப்படிப்பட்ட சீர்கேடுகள் நடக்காது.

அதுமட்டுமல்ல, வாணியம்பாடி கல்லூரிக்கு அருகில் இருக்கிற புறம்போக்கு நிலங்களை கேட்டு பல்லாண்டு காலமாகியும் இன்னும் அந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படாமல் இருக்கிறது. நாங்கள் கோரிக்கையை கொடுக்கும்போது பரிவோடு உடனே செய்ய வேண்டுமென்று நினைத்தாலும் அங்கே இருக்கக்கூடியவர்கள், மாவட்ட அளவில் இருக்கக்கூடியவர்கள் சரியான முடிவு எடுப்பதில்லை. காலதாமதம் செய்கிறார்கள்.

[திரு. கே. எ. வகாப்] [1975 மார்ச் 18

முஸ்லீம்கள் இடுகாடு விஷயம் பற்றி 2, 3 ஆண்டுகளாக இந்த மன்றத்தில் பேசிக்கொண்டே இருக்கிறோம். பரிசீலிப்பதாக எழுதுகிறார்கள். மாவட்ட கலெக்டருக்குப் போகிறது. விசாரணை செய்கிறார்கள். ஆனால் ரிப்போர்ட் அனுப்புவதில்லை. ஏனென்றால் ஒரு விளக்கம் கேட்டிருக்கிறோம் என்று தாசில்தாருக்கு அனுப்பி வைக்கிறார்கள் ; தாசில்தாரைக் கேட்டால் எல்லா விளக்கங்களும் ஏற்கெனவே கொடுத்து விட்டேன் என்று சொல்கிறார். இப்படி காலதாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக இந்த பிரச்சனையில் உடனடி கவனம் செலுத்த வேண்டுமென்று அரசாங்கத்தை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணப் பணிகளைப்பற்றி பேசினார்கள்.. வறட்சி நிவாரணங்களை நம்முடைய காலிலே நாம் நின்று செய்வோம் என்ற துணிவோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள் என்றால் அதற்கு 4½ கோடி தமிழ் மக்களும் ஒரு முகமாக திரண்டு நிற்கவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது என்றுதான் பொருள். மத்திய அமைச்சர் கூற்றை எல்லாம் இங்கே எடுத்துச் சொன்னார்கள். தெருவிலே நடந்த பொதுக் கூட்டத்தில் என்ன பேசினார், அதற்கு முதலமைச்சர் என்ன பதில் அளித்தார் என்பதுபற்றி நீண்ட விவாதம் நடந்தது. நம்முடைய மத்திய அமைச்சர் நம்மால் அனுப்பபட்டவர். நம்மால் அனுப்பப்பட்டவர் இன்று நம்மையே மறந்துவிட்டார். இது எப்படி இருக்கிறது என்றால், தாய் வீட்டிலிருந்து மாமியார் வீட்டுக்கு சென்ற பிறகு தாய் வீட்டை வெறுக்கின்ற மகள் போல இருக்கிறது. அந்த முறையில் சொல்லாவிட்டாலும் ஒரு அனுபவம் இருக்க வேண்டாமா ? தமிழகம் வறட்சியால் தாக்கப்படுகிறது என்றால் மற்ற மாநிலங்களில் ஏற்பட்ட அனுபவம் இருக்கவேண்டாமா ? அந்த அடிப்படையில் எடுத்துச் சொல்லியிருக்கலாம்.

நேற்றைய பத்திரிகையில் பார்க்கிறோம். தமிழ்நாட்டை மட்டும் சொல்லவில்லை ; பொதுவாக எல்லா மாநிலங்களுக்கும் சொல்லியிருக்கிறேன் என்று அவர் சொன்னதாக இங்கே சொல்கிறார்கள். ஆனால் பத்திரிகைகளைப் பார்த்தால் தமிழ் நாட்டை மட்டும் சொன்னதாக உணர்கிறோம். மற்ற மாநிலங்களிலே இருந்து வந்த நிதி அமைச்சர்கள் அல்லது அமைச்சர்கள் அக்கரையோடு அந்த மாநிலங்களுக்குச் செய்கிறார்கள். அப்படி செய்தாலும் நாம் அதிகமான உதவி தரவேண்டுமென்று சொல்லவில்லை ; நியாயமாக கிடைக்கவேண்டியதை தரக்கூடாதா என்று கேட்கிறோம்.

இங்கே சுட்டிக் காட்டினார்கள். சில மாதங்களுக்கு முன்னால் இந்திரா அம்மையாருக்கு சொந்த மாநிலமான யு.பி-க்கு 90 கோடி ரூபாய்க்குமேல் உதவி செய்யப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். நமக்கு அப்படி முறை தவறி செய்ய வேண்டாம். தமிழ் நாட்டுக்கு நியாயமாக கிடைக்க வேண்டிய உதவியை நன்றி உணர்ச்சியோடு செய்யுங்கள் என்பதைத் தான் தமிழ்நாட்டு மக்கள் சொன்னார்கள். தமிழ் நாட்டு மக்களின் குரலாக முதலமைச்சர் அவர்கள் சவால் விட்டதாக கூறப்பட்டது. அது சவால் அல்ல ; தன்மான உணர்ச்சி என்று எடுத்துக்கொள்ள வேண்டும். அவர்களிடமிருந்து உதவி வராது என்ற சந்தேகத்தில் கூறப்பட்டது,



1975 மார்ச் 18] [திரு. கே.எ. வகாப்]

அவர்களுக்கு பதில் கூறப்பட்டிருக்கிறது என்ற அளவில் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். அவர்கள் உதவியே செய்ய வேண்டியதில்லை என்று எடுத்துக்கொள்ளக்கூடாது.

அவர்கள் நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்டு, நம்முடைய பிரதிநிதியாக இருப்பதுபற்றி தென்னகமே பெருமைப்பட்டது. நிதி அமைச்சராக வந்த போது கட்சி வேறுபாடு இல்லாமல் பெருமைப்பட்டோம். நம்மை சேர்ந்த ஒருவர் நிதிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார் ; இங்கே வளம் கொழிக்கும், நிதி குவியும் என்று நினைத்தோம். ஆனால் இருப்பதும் குறைகிறது என்று சொன்னால் யாரும் வருத்தப்படாமல் இருக்க முடியாது. குறிப்பாக வறட்சிப் பணிகள் சரியாக நடந்து வருகிற இந்த நேரத்தில் இன்னும் சரியாக முடிக்கப்பட வேண்டிய பணிகள் பல இருக்கின்றன. ஒரு மாதத்திற்கு முன்னால் வறட்சி பற்றிய விபரங்கள சேகரிக்கப்பட்ட போது வடாற்காடு மாவட்டத்தில் 100 கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப் பட்டவை என்று அறிவிக்கப்பட்டது. இப்போது இருக்கிற நிலைமை அப்படியல்ல. அநேகமாக எல்லா இடங்களுமே வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

என்னுடைய தொகுதியாகிய ராணிப்பேட்டையில் சில கிராமங்கள் அறிவிக்கப்பட்டன. ஆனால் மொத்தமாக இன்றைக்கு பாதிக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல வந்தவாசியும் இருக்கிறது. செய்யாறில் கொஞ்சம் மழை பெய்துவிட்டால் மற்ற இடங்களில் எல்லாம் வறட்சி தீர்ந்துவிட்டது என்று அர்த்தமல்ல. செய்யாறிலும் வறட்சி இருக்கிறது, காட்பாடியிலும் வறட்சி இருக்கிறது, எல்லா இடங்களிலுமே வறட்சி இருக்கிறது. பொதுவாக வடாற்காடு மாவட்டத்தில் மழை இல்லை ; அங்கே பசுமை புரட்சி இல்லை. நிலத்தடி நீரை எடுத்து ஓரளவு பயன்படுத்தி வருகிறார்கள். அதனால் அங்கே வறட்சி இல்லை என்று எண்ணிவிடக்கூடாது.

அடுத்து, நிர்வாக வசதிக்காக வடாற்காடு மாவட்டத்தை பிரிப்பதாக பேரறிஞர் அண்ணா அவர்கள் இருக்கும்போது ஒரு கருத்து சொல்லப் பட்டது. வடாற்காடு மாவட்டம் ஒரு பெரிய மாவட்டமாக இருக்கிறது. அதனால் வந்தவாசி, செய்யார் வட்டங்களை செங்கற்பட்டு மாவட்டத்துடன் இணைத்துவிட்டால் நிர்வாகத்திற்கு வசதியாக இருக்கும். அதைப்பற்றியும் பரிசீலிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. என்னுடைய தொகுதியில் நவ்லாக் பண்ணை இருக்கிறது. அதற்கு 72 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதற்கு 500 ஏக்கர் நிலம் சொந்தமாக இருக்க வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாட்களாக இருந்துகொண்டிருக்கிறது. 500 ஏக்கர் கொண்ட ஒரு பண்ணையாக அது ஆக்கப்படும் என்று சொல்லி நீண்டநாள்கள் ஆகிவிட்டன. இன்னும் அது நிறைவு செய்யப்படவில்லை ; காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதை உடனடியாகச் செய்ய வேண்டும். அதைச் சேர்ந்த கிராமங்கள் எல்லாம் இருக்கின்றன. அங்கே இருக்கின்ற நிலங்கள் எல்லாம் "ஃப்ரீ ஹோல்டு லான்ட்ஸ்" ஆக இருக்கிறது. அதை ரயத்வாரி நிலமாகச் செய்ய வேண்டுமென்றும், இப்படி பல பணிகளைத் தொடர்ந்து செய்ய வேண்டுமென்றும் கேட்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

***திரு. கே. வி. சுப்பையா :** தலைவரவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சரவர்கள் கொண்டு வந்திருக்கிற இந்த மானியக் கோரிக்கையை முழு மனதோடு வரவேற்று ஒரு சில கருத்துக்களை கூற விரும்புகிறேன்.

இந்த மானியக் கோரிக்கை மீது மாவட்டவாரியாக வறட்சி நிவாரணப் பணிகள் வேறு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைப்பற்றி எல்லாம் எனக்கு முன்னால் பேசிய அங்கத்தினர்கள் சொன்னார்கள்.

புதுக்கோட்டை பகுதியை எடுத்துக்கொண்டால், வறட்சிப் பணிகளைப் பார்க்க வேண்டுமென்று சொன்ன மத்திய அமைச்சர் ஆனாலும் சரி, அதிகாரிகளானாலும் சரி, அவர்கள் புதுக்கோட்டை மாவட்டத்திற்கு வந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு ஒரு சில வேலைகள் தடைப்பட்டு இருக்குமானால் அதற்கு காரணம் அந்தக் கண்மாயில் இருக்கிற தண்ணீரை வடித்துவிட்டால் ஆடு மாடுகளுக்கு தண்ணீர் கிடைக்காது என்பதால் வேலை ஒத்தி வைக்கப்பட்டிருக்கும். அல்லது வெட்டுவதற்கு கடினமாக இருப்பதால் ஒரு சில வேலைகள் தள்ளி வைக்கப்பட்டிருக்கும். மற்றவகையில் அங்கே நல்ல முறையில் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் தனி மாவட்டமாக இருக்கிறது. புதுக்கோட்டை மாவட்டம் ஒரு தனி மாவட்டமாக பிரிக்கப்பட்டும், அங்கே செய்யப்படுகின்ற பணிகள் பற்றி, அல்லது செய்யப்படுகின்ற உதவிகள் பற்றி தனியாக இந்த மாவட்டத்திற்கு இவ்வளவு என்று குறிப்பிடவில்லை. இந்தக் குறிப்பிலே கூட அப்படித் தெரிவிக்கவில்லை என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஒரு வேளை திட்டங்களை தயாரிக்கும்போது இந்த மாவட்டம் திருச்சி மாவட்டத்தோடு சேர்ந்து இருந்ததால் விடுபட்டிருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனி திட்டம், தொழில், வளர்ச்சி என்று தனியாகக் குறிப்பிட்டு பிற்குறிப்பு என்ற வகையில் போட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் ஒரு தனி மாவட்டமாக இருப்பதால் அங்கே பல வேலைகள் தொடங்கப்பட வேண்டும். அதற்கு புதுக்கோட்டை டெவலப்மெண்ட் ஃபண்ட் என்று ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சி நிலை காரணமாக நில வரியையும் மற்ற வரிகளையும், அதைப் போல கடன்களையும் ஒத்தி வைத்திருக்கிறார்கள். ஒத்தி வைத்திருக்கிற கடன்களை மூன்றாண்டு தவணையில் வசூல் செய்யும்படி இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டம் மிகவும் பின்தங்கிய மாவட்டம். அங்கே இருக்கிற மக்கள் விவசாயத்தை நம்பி வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாம் மிகவும் பின்தங்கிய நிலையில் இருப்பதால், அவர்கள் எந்தவித தொழிலும்



இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பகுதி மக்களுக்கு நம்முடைய தமிழக அரசு 1967-க்கு முன்னால் உள்ள கடன்களை ரைட்ஆஃப் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் ஆறுகள் இல்லை. ஆனால் கண்மாய்கள் வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு அதிகமாக அங்கு இருக்கின்றன. புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சி ஏற்பட்டால் விவசாயத்திற்கு வேலையில்லாமல் போகிறது. தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் போகிறது. புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் எல்லாம் பெரும்பாலும் பூமிக்கு அடியில் உள்ள தண்ணீரை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது. அதனால் குழாய்க் கிணறுகளுக்கு கிராக்கி ஏற்பட்டிருக்கிறது, பல இடங்களில். குழாய்க் கிணறுகளைப் போடும்போது ஆர்டிஷியன் வெல்லாக அமைந்துவிடுகின்றதையும் பார்க்கிறோம். ஆகவே இன்னும் அதிகமான அளவுக்கு அந்த மாவட்டத்தில் குழாய்க் கிணறுகளை அமைத்துத் தரவேண்டும் என்பதாகக் கேட்டுக்கொள்கிறேன்.

குழாய்க் கிணறுகளை அமைக்கிறபோது நாற்பதாயிரம், ஐம்பதாயிரம் செலவாவதால் விவசாயிகளால் அந்தச் செலவை ஏற்க முடியாது. அரசாங்கமே குழாய்க் கிணறுகளை அமைக்க வேண்டும். அது வெற்றி பெற்றால் அதற்கான செலவை விவசாயிகளிடம் இருந்து இருபதாண்டுத் தவணையில் வசூல் செய்துகொள்ள வேண்டும். வெற்றி பெறாதுபோனால்—இன்ஷியல் எக்ஸ்பெண்டிச்சர் ஆகிய இரண்டாயிரம், மூவாயிரத்தை விவசாயிகளிடம் வாங்காது தள்ளுபடி செய்து கொடுக்க வேண்டுமென்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல் புதுக்கோட்டை மாவட்டத்தில் திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியன் இருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 103 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதை 3 பஞ்சாயத்து யூனியனாகப் பிரிக்க வேண்டுமென்று தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. இதை முதலமைச்சர் அவர்கள் கவனித்து இந்த திருவரங்குளம் பஞ்சாயத்து யூனியனை மூன்றாகப் பிரிக்க வேண்டும். இன்றைக்கு ஒரு யூனியன் என்ற அடிப்படையில்தான் மற்ற யூனியன்களில் உள்ளது போல ஒவ்வொரு துறைக்கும் ஒவ்வொரு அதிகாரி இருக்கிறார். இதனால் அந்த யூனியனைச் சேர்ந்த எல்லாத் துறை வேலைகளும் பாதிக்கப்படுகின்றன. ஆகவே உடனடியாக 3 யூனியன்களாக இருந்தால் எவ்வளவு அதிகாரிகளைப் போடுவார்களோ அந்த அளவுக்கு அதிகாரிகளைப் போட்டு அங்கே வேலை திறம்பட நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் வறட்சிப் பணிகள் மிக வேகமாக நடைபெறுகின்றன. இரவு நேரங்களில் கூட பெட்ரமாக்ஸ் லைட்டை வைத்துக் கொண்டு வேலை செய்கிறார்கள். அந்த வேலைகள் நடக்கும் இடத்திற்குச் சென்று மேல்பார்வை பார்த்துவர அதிகாரிகளுக்கு ஜீப், வான் வசதிகள் இல்லை. அதனால் அவ்வப்போது சரியான முறையில் சூபரவைஸ் பண்ண முடியவில்லை. ஆகவே இரவு நேரமாக இருந்தாலும் பகல் நேரமாக

[திரு. கே. வி. சுப்பையா] [1975 மார்ச் 18

இருந்தாலும் நடைபெறுகிற இந்தப்பணிகளை சரியான முறையில் சென்று அதிகாரிகள் சூப்ரவைஸ் பண்ணிவர இவர்களுக்கு ஜீப்-வான் வசதி செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேறு துறைகளில் இருந்தாவது இவர்களுக்கு மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதுக்கோட்டை பகுதியில் வறட்சி அதிகமாக இருக்கிற காரணத்தினால் ஆடுமாடுகளை விற்றுவிட்டார்கள். திரும்ப மாடுகள் வாங்குவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்து நாட்களுக்கு முன்னால் பெய்த மழையினால்தான் ஆடுமாடுகளுக்கு கொஞ்சமாவது தண்ணீர் குடிப்பதற்குக் கிடைத்தது. ஆயினும் ஆடுமாடுகளுக்கு இரை கிடைக்கவில்லை. அந்த மாவட்டத்திலுள்ள ஆடு மாடுகளுக்குத் தேவையான தீவனத்தை-வைக்கோல், பொட்டு, கோதுமைத் தவிடு ஆகியவற்றை அந்தப் பகுதிக்குக் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். அந்தப் பகுதியில் இப்போது வைக்கோல் கிடைப்பதே துர்லபமாக இருக்கிறது. ஆகவே உடனடியாக அதிக அளவு வைக்கோல் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, கூத்தன்தெரு, திருவரங்குளம், பொன்னம்பட்டி ஆகிய இடங்களில்-புதுக்கோட்டை ஸ்டேட்டாக இருந்த காலத்திலேயே பலர் வீடுகள் கட்டிக்கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு அந்த நிலங்கள் காட்டு இலாக்காவைச் சேர்ந்தது என்று சொல்லி-ஐம்பது அறுபது ஆண்டுகளாக வீடுகள் கட்டிக்கொண்டு வாழ்ந்து கொண்டிருக்கிறவர்களை எல்லாம் அந்த இடங்களைக் காலி பண்ணச் சொல்லி அந்த வீடுகளை இடிப்போம் என்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுபற்றி கவனம் செலுத்தி அவர்களுக்கே அந்த இடத்தைப் பட்டாசெய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொன்னம்பட்டி, திருவரங்குளம் ஆகிய இடங்களில் சிலோன் அகதிகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் அனைத்தும் செய்து தரப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவர்களுக்கு குடியிருப்பு வசதிகள் செய்துதரப்பட வேண்டும்.

சூரன்விடுதி, ரகுநாதபுரம் ஆகிய இடங்களில் பாலம் இல்லாத காரணத்தினால் ஒரு முறை வெள்ளம் ஒரு பஸ்ஸையே அடித்துக்கொண்டு போய் விட்டது. ஒரு பெண்ணையும் அடித்துக்கொண்டு போய்விட்டது. உடனடியாக அங்கே தேவைப்படுகிற பாலத்தைக் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரம்பக்குடி பகுதியில் ஐம்பது அறுபது நரிக்குறவர்கள் வாசம் செய்கிறார்கள். அவர்கள் விவசாயம் செய்கிறார்கள். விவசாயக் கூலிகளாகவும் பணி செய்கிறார்கள். அரிசனங்களுக்கு வீடுகள் கட்டித்தருவதுபோல் இவர்களுக்கும் வீடுகள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் அரிசனங்களுக்குச் செய்யப்படுகிற பணிகள், கொடுக்கப்படுகிற சலுகைகள் எட்டிப்பார்க்காத நிலைமை



1975 மார்ச் 18] [திரு. கே. வி. சுப்பையா]

தான் இருக்கிறது. அதை கவனித்து ஆவன செய்யவேண்டுமென்று கேட்டு என் உரையை இந்த அளவில் முடித்துக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக சபை முன் வைக்கப்பட்டிருக்கிற ரெவின்யு மானியக் கோரிக்கைகளையும், மாவட்ட வளர்ச்சிப் பணி மானியக் கோரிக்கைகளையும் பார்வர்ட் பிளாக் கட்சியின் சார்பாக முழு மனதுடன் வரவேற்று என்து சில கருத்துக்களைச் சொல்ல முயல்கிறேன்.

இன்று தமிழக அரசு நாட்டில் சரித்திரம் கண்டிராத வறட்சியைச் சந்திக்க வேண்டிய நிலைமையில் அவசர உணர்வுடன் மிக நெருக்கடியான நேரத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிற நிலைமையில் அதற்கு மத்திய அரசு தென்மாவட்ட மக்களது உயிர் உடைமைகளைக் காப்பதில் முயற்சி செய்துக் கொண்டிருக்கிற தமிழக அரசுக்கு உதவிகளைத் தாமே செய்ய முன்வந்திடுக்க வேண்டிய நிலையில் சொல்லப்பட்ட கருத்தைப்பற்றி இங்கே விவாதம் நடந்ததையும் நாம் அறிவோம். Belated attempt என்ற அளவில் நமது அரசு தக்க தருணத்தில் எடுக்க வேண்டிய முயற்சியை சிறுது காலதாமதமாக எடுத்துக் கொண்டதோ என்ற ஐயப்பாடு அறிவிக்கப்பட்டாலும் அதை ஆராய்ச்சி செய்ய உடனடியாக அமைச்சர் பெருமக்களை அனுப்பி அதிகாரிகளை அனுப்பி எடுக்க வேண்டிய சர்வேக்களை புள்ளி விவரங்களை எடுத்து நில வரங்களை நேரில் தெரிந்து ஆக்க பூர்வமான நிவாரணப் பணிகளை எடுத்துக் கொள்வதில் தீவிர முயற்சியைக் காட்டி மக்களது உயிர்களையும் உடைமைகளையும் காப்பாற்றிக்கொடுக்க முன் வந்திடுப்பதை நான் முதலாவதாகப் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேன். என்றாலும் இன்னும் சென்ற தடவை நான் பேசுகின்றபோதே சொன்னேன். மாற்றாந்தாய் மனப்பான்மை ... டீட் மென்டு என்று அப்படி மத்திய அரசு தமிழகத்தை நடத்தாமல் இன்றைக்கு தமிழகத்தை வேறு ஒரு கட்சி ஆண்டுக்கொண்டிருக்கிறது என்று கருதாமல்-கலைஞர் ஆளுகின்றார் என்பதை நோக்காமல்-தமிழ் நாட்டில் உள்ள $4\frac{1}{2}$ கோடி மக்களும் இந்தியர்களும் என்கிற உணர்வோடு இந்திய ஒருமைப்பாட்டை விரும்புகிற நாம் இன்றைக்கு இந்தியத் தென்கோடியில் பஞ்சத்தால் பட்டனியால் வாடுகின்ற மக்களைக் காப்பது நம் கடமை என்ற உணர்வோடு பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் பணிபுரிய வேண்டியதிருக்க அவர்கள் சென்னைக்கு வந்தபோதும் கட்சிக்காரர்களை அழைத்துப் பேசினார்களே தவிர பஞ்சத்தால் பட்டினியால் வாடி வதங்கி செத்துக் கொண்டிருக்கிற பிரதேசத்தை சென்று பார்த்து அங்குள்ள மக்களுக்கு எவ்வித ஆறுதல் மொழியையும் வழங்கவில்லை என்பதை நான் முன்பே சுட்டிக்காட்டினேன்.

அதே உணர்வை வலியுறுத்துகிற அளவிற்குதான் சென்ற வாரம் சென்னைக்கு வந்திருந்த மத்திய நிதி அமைச்சர் திரு சுப்பிரமணியம் அவர்களும் அவர் நமது உறவினர் என்று சொல்வதற்குப் பாத்தியம் இருந்தாலும் கூட அவர் சொன்ன கருத்து நியாயமா என்ற கேள்விக்குறி எழுப்பப்படுகிற அளவிற்கு பேசிவிட்டுச் சென்று விட்டார்.

வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசு கொடுப்பதாக உறுதிமொழி அளித்த 7½ கோடி ரூபாயும் சரியான முறையில் செலவு செய்யப்படும் இதற்கான கணக்குகளும் இருக்கின்றன என்று ரெவின்யு அமைச்சர் மதுரையில் நிருபர்களிடம் பேசுகிறபோது தெரிவித்ததை நான் அறிவித்தேன்.

இன்றைக்கு கடுமையான வறட்சி காரணமாக மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு இல்லை. ஆடுமாடுகள் குடிக்கக் கூடத் தண்ணீர் இல்லாமல் பட்டினியால் செத்துக்கொண்டிருக்கிற நிலையில் ஆயிரம் ரூபாய்க்குப் போகக் கூடிய காளையைக் கூட 500 ரூபாய்க்கு விற்று வருகிறார்கள். உடனடியாக அந்த மாவட்ட கால்நடைகளுக்குப் பாதுகாப்புத் தர வேண்டும். உடனடியாக அரசு அதற்காகக் கடன் தந்தாகவேண்டும். இரண்டாயிரம் ரூபாயில் இருந்து ஐந்தாயிரம் வரை உணவுப் பொருள் வாங்க to purchase fodder crops and to retain them alive என்ற வேண்டுகோளை நமது அரசிடம் விடுத்தோம். நமது அரசும் உடனடியாக சம்சாரிகளுடைய தேவைக்குத் தகுந்தாற்போல குடும்ப அந்தஸ்தை சர்வே செய்து இராமநாதபுரம் மாவட்டத்தில் இருக்கிற ஒவ்வொரு விவசாயிக்கும் தந்தாக வேண்டும். மேலப்பாளையம் சந்தையில் இருந்து இன்றைக்கு கேரளாவிற்கு மாடுகள் விற்கப்படுகின்றன. மழை பெய்து, கால்நடைகள் தேவைப்படுகிறபோது திரும்ப அவற்றை வாங்கிக்கொள்வது இயலாத காரியமாகும். ஆகவேதான் எங்கள் கட்சியின் சார்பாக வேண்டுகோள் விடுத்தோம். திரு. மூக்கையா தேவர் தலைமையில் அறிக்கை கொடுத்தோம். வேண்டுகோள் விடுததோம். அதற்குச் செவி சாய்த்து இந்த அரசு அந்த ம[illegible] உள்ள ஆடுமாடுகளுக்கு தீவனம் கொடுப்பார்களா என்பது கேள்விக் குறியாக இருக்கிறது. இன்னும் அப்படித் தருவதற்கு தக்க ஏற்பாடுகள் செய்யவில்லை என்றே நான் கருதுகிறேன். ஆகவே நமது முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அருள் கூர்ந்து கலந்து பேசி தக்காவி லோனாக கொடுத்துதவ வேண்டும். கிணறுகள் வெட்டுவதற்குக் கூட ஒரு கிணற்றுக்கும் இன்னொரு கிணற்றுக்கும் இடையில் இவ்வளவு தூரம் இருக்க வேண்டும், இல்லையென்றால் கடன் கொடுக்க முடியாது என்கிறார்கள். நஞ்சை நிலம் என்றால் 350 அடி தூரம் அதற்குள் இருந்தால் கொடுக்க இயலாது என்ற ஒரு நிபந்தனையை அகில உலக பாங்குக்காரர்கள் விதித்திருக்கிற காரணத்தால், இந்திய அரசு அந்தக் கடனை வாங்கி நமக்கு வழங்கியிருக்கிற காரனத்தால், நமது கலைஞர் அவர்கள் டெல்லியில் எடுத்துச் சொல்லியும் கூட அந்த நிபந்தனை தளர்த்தப்படாத நிலை தான் இருக்கிறது. அதற்கு நிவாரணமாக, தக்காவி லோன் மாதிரி கடன் கொடுக்க வேண்டுமென்று நாங்கள் வேண்டுகோள் கொடுக்க, மாண்புமிகு கலைஞர் அவர்கள் கருணை கூர்ந்து ரூ. 500 முதல் ரூ. 2,000 வரை உடனடியாக நிவாரணமாகக் கொடுக்க உத்தரவு பிறப்பித்ததை நான், இலட்சக்கணக்கில் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கிற ஏழை விவசாயிகள் சார்பில், அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போல், வாயில்லாப் பூச்சிகளாக இருக்கிற விவசாயிகள் கிராம மக்கள், தங்கள் ஆடுமாடுகள் ஜீவிக்க ஏதாவது கடன் வேண்டுமென்று கேட்கிறார்கள், அதனைக் கொடுக்க வேண்டுமென்று சொல்ல





விரும்புகிறேன். உதாரணத்திற்குச் சொல்ல விரும்புகிறேன். சென்ற வாரம் மழை பெய்தது. அது போதவில்லையென்பது நிதர்சனமாக தெரிந்தாலும், அப்பொழுது நடை பெற்றதைக் கூற விரும்புகிறேன். ஒருவர் ஒரு மாட்டை ரூ. 1,500—க்கு விற்கிறார். மறுநாள் பாதிப் பணம் கொடுத்துவிடுவதாகக் கூறி, முதல் நாள் பாதிப்பணம் கொடுக்கிறார். பாதிப் பணத்தைப் பெற்றுக் கொண்டவுடன், மாட்டை வாங்கியவரிடம் கொடுத்து, அனுப்பிவிடுகிறார். மறுநாள் மழை பெய்கிறது. உடனே மாட்டை விற்றவர், தன்னுடைய நிலத்தில் உழலாமென்பதற்காக; ரூ. 300 கூடத் தருகிறேன்; அந்த மாட்டைத் திருப்பிக் கொடு என்று கேட்டால், ரூ. 3,000 கொடுத்தாலும் திரும்பத் தர முடியாது என்று சொல்கிறார்கள். இது நடந்த உண்மையென்பதை, சட்டப் பேரவைத் தலைவர் மூலமாக, அமைச்சர் பெருமக்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படி, கால்நடைகளைப் பாதுகாப்பதற்கியலாத நிலை ஏற்படும். ஆகவே, அருள் கூர்ந்து, மாடுகளையும் பாதுகாக்க நிதி ஒதுக்கி அவர்களுக்கு உதவவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல், பஞ்ச நிவாரண வேலைகள் நடப்பதை, மதுரை மாவட்டத்திலும் உசிலம்பட்டி, வேடசந்தூர், மானாமதுரை போன்ற பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஓரளவு நடப்பதை, அரசு முயன்று செய்து வருவதை நான் பாராட்டுகிறேன். ஆனால், அந்த வேலைகளைத் தீவிரப்படுத்த வேண்டும், துரிதப்படுத்த வேண்டும். உசிலம்பட்டி, திருமங்கலம் போன்ற பகுதிகளில் குடி தண்ணீர்க் கிணறுகளை ஆழப்படுத்துகின்ற வேலைகள் தாமதமாகத்தான் நடந்து வருகின்றன. வேலைகள் துரிதமாக நடைபெறவில்லையென்பதை நான் வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

உசிலம்பட்டியில் அதிகாரிகள், சம்பந்தப்பட்டவர்கள், தவறு செய்ததால், விஜிலன்ஸ் என்கொயரி நடந்து கொண்டிருக்கிறது என்பதால், 1 வருஷத்திற்கு முன்னால் வாய்க்காலைத் தூர் எடுக்க வேண்டும், கண்மாய் வெட்ட வேண்டும், இருக்கின்ற ரோடுகளைப் புதுப்பிக்க வேண்டுமென்று இருக்கின்ற சம்பந்தப்பட்ட வேலைகளெல்லாம், விஜிலன்ஸ் என்கொயரில் சம்பந்தப்பட்டிருப்பதால் செய்ய முடியாது என்று சொல்கிறார்கள். அந்த என்கொயரியை எவ்வளவு காலத்திற்கு நடத்தப் போகிறார்கள் என்பது எனக்குத் தெரியவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுப்பதை நான் ஒத்துக் கொள்கிறேன். அந்த நடவடிக்கையை விரைவாக எடுக்க வேண்டும். ஆனால், அதற்காக; ஒரு பாவமுமறியாத, ஏழை மக்கள் அவதியுறுமலிருக்க, நிரந்தரமான ரிலீப் கொடுக்கக் கூடிய வேலைகளையும் தாமதப்படுத்துவது, அல்லது செய்யாமல் ஒதுக்கிப் போடுவது, ஒத்திப் போடுவது வேதனைக்குரியது. ஆகவே, அமைச்சர் பெருமகனார் தாமதிக்காமல், கருணை கூர்ந்து, சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்வதோடு மற்ற வேலைகளையும் துரிதமாகச் செய்து ஏழை மக்களைக் காக்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த நேரத்தில், மத்திய அமைச்சருடைய போக்கை, மிக வன்மையாகக் கண்டித்து கலைஞர் அவர்கள் நேற்று ஒன்றைச் சொன்னார்கள். திரு சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய நிதியமைச்சராக இருக்கும்

[திரு. கே. கந்தசாமி] [1975 மார்ச் 18

வரை தமிழகத்திற்கு வறட்சி நிவாரணம் கேட்கமாட்டேன் என்று அவர்கள் தனிப்பட்ட ஹோதாவிலே, அவர்கள் கட்சியின் சார்பாக சொன்னதாக நான் கருதாமல், தமிழகத்தின் காவலனாக, தமிழ் மக்களின், 4½ கோடி மக்களின் காவலனாக, உயிர்க் காவலனாக இருக்கிற கலைஞர் அவர்கள், மக்களின் சார்பாக மிக வேதனையோடு தெரிவித்திருக்கிறார்கள். அதை 4½ கோடி தமிழ் மக்களின் ஒருமித்த கருத்தாவே நான் எடுத்துக் கொண்டு, இந்த மாமன்றத்தின் மூலம் பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக மத்திய அரசாங்கத்திற்குக் கண்டனம் தெரிவிக்க விரும்புகிறேன்.

பங்களா தேஷ் போரில் வெற்றி பெற்ற விழாவில் மதுரையிலே, மத்திய அமைச்சர் ரகுராமையயா அவர்கள் கலந்து கொண்ட விழாவில் கலைஞர் அவர்களுடன் நானும் பங்கு கொண்டேன். அந்த வெற்றி விழாவில் கலந்து கொண்டவர்களில் நானும் ஒருவன். அப்பொழுது நிவாரணம் வேண்டும் தமிழக அரசு என்ன் கொடுக்கப்போகிறது என்று கேட்டபோது, நம் கலைஞர் அவர்கள் ரூ. 10 கோடியை வெற்றிக் காரியங்களுக்காகச் செய்யத் தயாராக இருக்கிறேன் என்று கூறி, வெகு விரைவில் ரூ. 6 கோடி அனுப்பிய கலைஞர் அவர்கள், நாடு நல்வாழ்வு பெற வேண்டுமென்பதற்காக, இரவுபகலாக தன்னை அர்ப்பணித்துக்கொண்டு காரியங்களைச் செய்யும் போது, அவர்கள் ஏதோ, தர்மத்திற்குக் கொடுத்ததைப் போலவும் கொடுப்பதைத் திருடர்கள் கையில் கொடுப்பதைப் போலவும் சொல்வது மிகவும் சிறுபிள்ளைத்தனமாகவும், வேதனை அளிப்பதாகவும், குறிப்பாகத் தமிழர்களுடைய நாணயத்தைப் பாதிக்கக் கூடிய அளவில் மத்திய அமைச்சர் சொல்வாராளுல், அவர் தமிழ் மக்களை, தமிழ்நாட்டைச் சொல்வதாகத்தான் நான் கருதுகிறேன். அவர்கள் வேண்டாமென்று தெரிவித்தால், எதற்காகத் தெரிவித்தார்? நம்மீது சந்தேகம் இருந்தால் அலுவலகம் இருக்கிறது, அதிகாரிகள் இருக்கிறார்கள். நேரடியாக வந்து பணிகளைப் பார்க்கலாம். அதை விட்டுவிட்டு, மக்களுடைய உயிர்களையே அரசியலாக நினைத்துப் பேசுவது மிக வருந்தத்தக்கது. அதை இந்த மன்றத்தின் மூலமாக, சர்வகட்சித் தலைவர்களை அழைத்துப் பேசி, மத்திய அமைச்சருடைய பாராமுகத்துக்கும் இப்பொழுது இருக்கிற உயிர்ப் பிரச்சினைக்கும் உடனடியாக நிவாரணம் அளிக்க முன் வராமல் இருப்பது வேதனைக்குரியது. அதற்குறிய நடவடிக்கை எடுக்க பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு, உங்களுடைய முயற்சிக்கு, இதுவரை செய்த சேவைக்கு பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக தேவையான ஆதரவைத் தெரிவித்து முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

## (5) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

### (இ) பேரவைத் தலைவரை பதவிநீக்கம் செய்ய கொடுக்கப்பட்ட அறிவிக்கை குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. உறுப்பினர்கள் திரு கே. டி. கே. தங்கமணி, திரு எ. ஆர். மாரிமுத்து திரு ஆர். பொன்னப்ப நாடார், திரு ஜி. ஆர். எட்மண்ட், திரு. பி. வெங்கட



1975 மார்ச் 18] [பேரவைத் தலைவர்]

சாமி, திருமதி சத்தியவாணிமுத்து ஆகியோர் பேரவைத் தலைவரை பதவி நீக்கம் செய்வதற்கென ஓர் அறிவிக்கையினை இன்று காலை 11.15 மணிக்குக் கொடுத்துள்ளார்கள்.

இந்த அறிவிக்கை விதிமுறைகளின்படி பேரவை முன் 2-4-1975 அன்று எடுத்துக் கொள்ளப்பட இருக்கிறது என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-27 மணியளவில் ஒத்திவைக்கப்பட்டது.

## (8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### *A. Statutory Rules and Orders*

*'NIL'*

### *B. Reports, Notifications and Other Papers*

%84 Errata to Policy Note o emand No. 12—Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act 1959. (English and Tamil)

% Despatched to Members on 15—3—1975

இணைப்பு

[6ம் பக்கத்தில் 356ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க.]

1—4—1974—லிருந்து 30—9—1974 வரையிலான செலவு குறித்து விவரங்கள்.

| நாள். (1) | தொகை வழங்கப்பட்டவரின் பெயர். (2) | தொகை. (3) ரூ. |
|---|---|---|
| 8—4—1974 .. .. | தஞ்சாவூர் மாவட்டம் சீர்காழி வட்டம் பழைய பாளையத்தைச் சேர்ந்த மகாலிங்கத்தின் மனைவிக்கு வழங்கப்பட்டது. மேற்படி மகாலிங்கம் வேளாண்மை நிலத்திற்கு பூச்சி கொல்லி மருந்து (போலிடால்) தெளித்தபோது இறந்தார். | 1,000·00 |
| 17—4—1974 .. .. | தருமபுரி நகரத்தில் 1—5—1973 அன்று மின்சாரம் பாய்ந்ததனுல் இறந்த திரு. ராஜாமணியின் குடும்பத் தலைவரும் தந்தையுமாகிய திரு. போத்தன் என்பவருக்கு வழங்கப்பட்டது. | 1,000·00 |
| 17—4—1974 .. .. | செங்கற்பட்டு மாவட்டம், சைதாப்பேட்டை வட்டம், ஏராவானூர் கிராமத்தில் 10—5—1973 அன்று நடந்த தீ விபத்தில் உயிரிழந்த 69 பேரின் குடும்பம் ஒவ்வொன்றுக்கும் ரூ. 25 வீதம் தொகை வழங்கியது. | 1,725·00 |
| 24—4—1974 .. .. | தடுவட்டம், டெர்ரஸ் எஸ்டேட் பணியாளர்களுக்கு, அந்த எஸ்டேட் மேலாளர் தலைமறைவாகிவிட்டதால் அவர்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்ட துயர் தனிப்புத் தொகை. | 5,000·00 |
| 25—4—1974 .. .. | குடியாத்தத்தில் 10—3—1974 அன்று நடந்த தீ விபத்தால் பாதிக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் குடும்பங்களுக்குத் துயர் தனிப்புத் தொகை. | 1,001·00 |
| 25—4—1974 .. .. | 1—7—1970 அன்று படைக்கலந்தாங்கிய முதற் பிரிவினருக்குக் கட்டில் விளக்கம் செய்து கொண்டிருந்தபோது, சுரங்கம் வெடித்ததின் காரணமாக ஏற்பட்ட ஒரு விபத்தில் இரு கண்களையும் இரு கைகளையும் இழந்த சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த திரு. மணி என்பவருக்கு வழங்கப்பட்ட தொகை. | 2,000·00 |
| 27—4—1974 .. .. | 23—4—1974 அன்று பகலுணவு உட்கொண்ட பிறகு இரு சிறுவர்கள் மாண்டனர். ஒருவனது பெயர் பெருமாள். அவனுக்கு வயது 6. அவன் பழனிசாமி கவுண்டரது மகன் ஆவான். மற்றொரு சிறுவனின் பெயர் பி. பிரகாஷ். அவனுடைய வயது 9. அவன் பழனிசாமி ஏகாலி என்பவர் மகன் ஆவான். இவ்விரு சிறுவர்களின் பெற்றோர்களுக்கு தொகை வழங்கப்பட்டது. மதுரை மாவட்டம் திண்டுக்கல் வட்டம், செட்டியார்பட்டியிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2,000 என்ற வீதத்தில் இரு குடும்பங்களுக்கும் தொகை அனுப்பப்பட்டது. | 4,000·00 |
| 27—4—1974 .. .. | மதுரை மாவட்டம், உசிலம்பட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கு அருகில் அண்மையில் பெய்த (ஏப்ரல் 1974) மழையின் காரணமாக மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக வழங்கப்பட்ட தொகை. | 30,000·00 |
| 8—5—1974 .. .. | சென்னை சிரணிபுரத்தின் 27—11—1973-ம் நாளன்று ஏற்பட்ட தீ விபத்தில் தீ அணைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தபோது தனது வலது கால் எலும்பு முறிந்துவிட்ட திரு. மணி அவர்களின் மனைவி திருமதி. தனலட்சுமிக்கு வழங்கிய தொகை. | 250·00 |

| நாள் (1) | தொகை வழங்கப்பட்டவரின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 14—5—1974 .. | .. வட ஆற்காடு மாவட்டம், செய்யாறு வட்டம், இருங்கல் கிராமத்தில் 10—9—1973 அன்று மின்னல் தாக்கியதால் இறந்த சுப்பிரமணியத்தின் குடும்பத்தைச் சேர்ந்த சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கிய தொகை. | 500·00 |
| 16—5—1974 .. | .. திருச்சிராப்பள்ளி ரயில்வே நிலையத்தில் 3—7—1972 அன்று நடந்த உழவர் போராட்டத்தில் இடது காலையும், இடது கைவிரல் மூன்றினையும் இழந்த செங்கல்பட்டு (மேற்கு) மாவட்டத்தைச் சேர்ந்த 2548 ஆம் எண் முன்னாள் காவலர் திரு. தசரதனுக்கு வழங்கப்பட்டது. | 5,000·00 |
| 24—5—1974 .. | .. இராமநாதபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர் மம்சாபுரத்தைச் சேர்ந்த அங்கையா, தி. மு. கழகம், திராவிடக்கழகப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறை சென்றது குறித்து மனைவி திருமதி. வெள்ளம்மாளுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000·00 |
| 27—5—1974 .. | .. (அரிசன நல) அனுமனிய தொழிற்சாலைக் கட்டிடங்களுக்கு புயலாலும் மழையாலும் ஏற்பட்ட சேதத்திற்காக கோயம்புத்தூர் மாவட்டம், தேக்கம்பட்டி சத்குரு சமரச சங்கத் தலைவருக்கு வழங்கப்பட்ட தொகை. | 3,000·00 |
| | *மேற்படி தொகைகளை தந்தி வாயிலாக வழங்குதலுக்கு ஏற்பாடு செய்தமைக்கான வங்கி கட்டணங்கள். | 4·00 |





| நாள் (1) | தொகை வழங்கப்பட்டவரின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 31—5—1974 .. | .. திருவள்ளுவர் குருகுல பாடசாலைக்கு (சைதாப்பேட்டை) ஏற்பளிப்பதற்கு முன்பு நிர்வாகத்தினருக்கு ஏற்பட்ட பேணுதல் செலவு பணியாளர் சம்பளம், விடுதிப் பணியாளர் சம்பளம் ஆகியவற்றிற்காக அந்த நிறுவனத்தின் தலைவருக்கு வழங்கப்பட்ட தொகை. | 15,000.00 |
| 13—6—1974 .. | .. 20—10—1973 அன்று விளவங்கோடு, கீழ்க் கோதையாறு என்னுமிடத்தில் மரங்கள் வீழ்ந்தமையால் தாயாரையும் இரண்டு குழந்தைகளையும் இழந்த திரு. நாகப்பனுக்கு வழங்கப்பட்ட தொகை | 1,000.00 |
| 13—6—1974 .. | .. திருவாரூரில் கலைஞர் கருணாநிதி கலைக் கல்லூரி கட்டியபோது சுவர் இடிந்து விழுந்ததால் இறந்த தச்சர் ரங்கநாதன் மனைவி திருமதி. வசந்தாவுக்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |
| 15—6—1974 .. | .. மதுரை, உத்தம பாளையத்தில் (கடலூர் நகரம்) 7—2—1974 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் இறந்த தோழன் பெரிய கருப்பன் தேவரின் சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |
| 18—6—1974 .. | .. தேனாம்பேட்டையில் 19—8—1960 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் வீடு, மனைவி குழந்தையை இழந்த சென்னை சிவசண்முகபுரத்தைச் சேர்ந்த திரு. ஏ. ராஜேந்திரனுக்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |
| 18—6—1974 .. | .. 1—11—1973 அன்று சிதம்பரம் திருநாரையூர் கிராமத்தில் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட கணேச ஆசாரியின் சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |
| 19—6—1974 .. | .. பூனாவில் செயற்கை உறுப்பு பொருத்தப்பட்ட மதுரையைச் சேர்ந்த திரு. எம். ஆர். ரகுபதிக்கு வழங்கப்பட்ட தொகை. | 300.00 |
| 19—6—1974 .. | .. 12—11—1973 அன்று சென்னை பார்த்தசாரதிபுரத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இறந்த மன்னரின் சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |

| நாள். (1) | தொகை வழங்கப்பட்டவர்களின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 26—6—1974 .. .. | மதுரையில் 1974, ஏப்ரல் திங்களில் உசிலம்பட்டி, திண்டுக்கல் ஆகிய இடங்களுக்கருகாமையில் மழையினால் ஏற்பட்ட விபத்துக்களில் இறந்த இரண்டு நபர்களின் குடும்பங்களுக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கேட்டுக்கொண்டவாறு மேற்கொண்டும் ரூ. 2,000 வழங்குதல். | 2,000.00 |
| 15—6—1974 .. .. | *13—3—1973 அன்று (கோடம்பாக்கத்தில்) மின்சாரம் தாக்கி இறந்த மங்களநாதனின் சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |
| 6—7—1974 .. .. | 8—6—1974 அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், பெரம்பலூர் வட்டம், நரிக்குறவர் குடியிருப்பில் உள்ள 4 நரிக்குறவர்கள் மாணிக்கபுரத்திற்கு அருகாமையில் நடந்த லாரி விபத்தில் அந்த இடத்திலேயே இறந்தமைக்காக வழங்கப்பட்ட தொகை. | 3,000.00 |
| 22—7—1974 .. .. | வட ஆற்காடு மாவட்டம், ராமசாமி குப்பத்தைச் சேர்ந்த நாகரத்தினம் செட்டியின் மூத்த மகன் திரு. மோகன் 17—1—1974 அன்று நடந்த ஜல்லிக்கட்டு விழாவில் காளை மாடு தாக்கியதனால் இறந்ததற்காக அவருக்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |
| 25—7—1974 .. .. | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், புத்திரக் கவுண்டன் பாளையத்தில் வசிக்கும் திரு. செல்லன் என்பவரின் மகன் பிறவியிலிருந்தே ஊமையாகவும்; செவிடாகவும் உள்ளான். அவனுக்காக காது கேட்கும் கருவி வாங்குவதற்கென திரு. செல்லனுக்கு வழங்கப்பட்ட தொகை. | 700.00 |



| | | |
|---|---|---|
| 27—7—1974 .. .. | 13—12—1973 அன்று தருமபுரி மாவட்டம்; பென்னாகரம் தாலூகா வட்டம்; வேதனஹள்ளி கிராமத்தில் காட்டு யானை யால் கொல்லப்பட்ட ராமசாமி என்பவரின் மனைவி திருமதி. ராஜம்மாளுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |
| 29—7—1974 .. .. | மதுரை உத்தமபாளையம் வட்டம், கோம்பை கிராமத்தில் 15-1-74-ல் ஏற்பட்ட சச்சரவில் காயமடைந்த 30 அரிசனங்களுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,950.00 |
| 14—8—1974 .. .. | 1974 ஏப்ரலில் மதுரையில் கடும் மழை பெய்தபோது ஏற்பட்ட விபத்தில் காயம் அடைந்து இறந்த திரு. வீரய்யா என்பவரின் சட்டப்படிக்கான வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 2,000.00 |
| 17—8—1974 .. .. | சென்னை, எண். 13/16, பீட்டர்ஸ் சாலையிலுள்ள தாஸ் என்று அழைக்கப்படும் சிவபிரசாத் என்பவர் 18—7—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் இறந்தமைக்காக சட்டப்படிக்கான அவரது வாரிசுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |
| 23—8—1974 .. .. | 15—8—1973 அன்று தஞ்சாவூரில் நடந்த காவலர் விருது அணிவகுப்பைப் பார்த்துக்கொண்டிருக்கும்போது அடுக்குப்படி மேடை (gallary) சரிந்ததினால் வலது கை எலும்புகள் சேதமுற்ற திரு. சந்தானதாஸ் என்பவருக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000.00 |
| 7—9—1974 .. .. | 2—8—1974 அன்று கன்னியாகுமரி மாவட்டம் குலசேகரம் அருகில் ஏற்பட்ட லாரி விபத்தில் இறந்த 11 பேரில் மிக நெருங்கிய உறவினருக்கு வழங்கப்பட்ட தொகை. | 11,000.00 |
| 7—9—1974 .. .. | 29—3—1974, 17—5—1974 ஆகிய நாட்களில் உதகமண்டலத்திலும் குன்னூரிலும் முறையே மின்னல் தாக்கியதாலும் நிலச்சரிவினாலும், இறந்த 7 பேர் காயமடைந்த இரண்டு பேர் ஆகியோரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட தொகை. | 8,000.00 |

| நாள். (1) | தொகை வழங்கப்பட்டவர்களின் பெயர். (2) | தொகை. (3) |
|---|---|---|
| 9—9—1974 .. .. | இறந்த சுதந்திர போராட்ட வீரர் திரு. வாஞ்சி நாதன் அவர்களின் சகோதரர் எஸ். ஆர். கோபால் கிருஷ்ண ஐயர் அவர்களுக்கு வழங்கப்பட்ட தொகை. | 5,000.00 |
| 9—9—1974 .. .. | உசிலம்பட்டி வட்டம், அத்திப்பட்டு கிராமத்தில் 10—5—1974 அன்று மின்னல் தாக்கியதால் இறந்தவரின் மனைவியான திருமதி. மீனாட்சிக்கு வழங்கப்பட்ட தொகை. | 2,000.00 |
| 16—9—1974 .. .. | வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், சாரக்கோட்டை கிராமத்தில் 29—6—1973 அன்று மின்னல் இடி காரணமாக இறந்த குந்தன் குடும்பத்திற்கு வழங்கிய தொகை. | 1,000.00 |
| 18—9—1974 .. .. | 15—9—1974 அன்று ஈரோட்டில் வெள்ளத்தில் ஜட்கா வண்டிச் சொந்தக்காரர் செல்லப்ப கவுண்டரின் மனைவி தனம் மூழ்கி இறந்ததால் அக்குடும்பத்திற்கு வழங்கப்பட்ட தொகை. | 2,000.00 |
| 24—9—1974 .. .. | 11—2—1973 அன்று ஏற்பட்ட தீ விபத்தில் திருவாரூர் "ஆதரவற்ற மாணவர் இல்லத்தின்" கூரை சேதமடைந்ததால் கூரை போடுவதற்கு நிர்வாகி திரு. வெங்கடராமனுக்கு வழங்கப்பட்ட தொகை. | 1,000,00 |
| 21—9—1974 .. .. | 2—8—1974 அன்று கொடைக்கானலில் நிலச்சரிவு காரணமாக இறந்த திரு. சோலை முத்து, பால்சாமி ஆகியோரின் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட தொகை. | 4,000.00 |
| 27—9—1974 .. .. | 1972-ல் தென் மதுரை விரதனூர் கிராமம், வண்டியூர் ஓடையில் வெள்ளம் ஏற்பட்டதால் இறந்த நல்லதங்காள், பொட்டச்சியம்மாள் ஆகியோரின் கணவன்மார்களுக்கும், பவுன் தாயார் தந்தைக்கும் வழங்கப்பட்ட தொகை. | 900.00 |



| | | |
|---|---|---|
| 27—9—1974 .. .. | வட ஆற்காடு மாவட்டம், வந்தவாசி வட்டம், கூடலூர் கிராமத்தில் 9—9—1973 அன்று இடி மின்னல் தாக்குண்டு இறந்த பூங்காவன கவுண்டர் மனைவி திருமதி மணியம்மாளுக்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |
| 28—9—1974 .. .. | சிதம்பரம் வட்டம், மருவக்கரை ஊராட்சி ஒன்றியத்தில் 30-4-74 அன்று, ராமச்சந்திரன் என்பவர் தனது கால்நடைகளுடன் வீடு திரும்பிக்கொண்டிருக்கையில் மின்சாரம் தாக்கி இறந்தமைக்காக அவரது தந்தை திரு. சாம்பசிவத்திற்கு வழங்கப்பட்ட தொகை. | 500.00 |

## DETAILS OF EXPENDITURE FROM 1ST APRIL TO 30TH SEPTEMBER 1974.

| *Date.* (1) | *Name of payee.* (2) | *Amount.* (3) Rs. |
|---|---|---|
| 8th April 1974 .. .. | Payment to the wife of deceased Mahalingam of Pazhayapalayam in Sirkali taluk in Thanjavur district, who died while spraying insecticides (Polydal) in the Agricultural fields. | 1,000·00 |
| 17th April 1974 .. .. | Payment to Thiru Pothan, father and the head of the family of Thiru Rajamani, who died due to electric shock on 1st May 1973 in Dharmapuri Town. | 1,000·00 |
| Do. .. .. | Grant to the 69 victims of fire accident that occurred on 10th May 1973 in Eravanur village, Saidapet taluk, Chingleput district at Rs. 25 each family. | 1725·00 |

| Date. (1) | Name of payee. (2) | Amount. (3) Rs. |
|---|---|---|
| 13th June 1974 .. .. | Payment to Thiru Nagappan, who lost his mother and two children on account of the fall of tree at Lower Kodayar, Vilavancode taluk on 28th October 1973. | 1,000·00 |
| Do. .. .. | Payment to Thirumathi Vasantha, widow, wife of late Ranganathan, Carpenter, who died due to collapse of walls during the construction of Kalaignar Karunanidhi Arts College at Thiruvarur. | 500·00 |
| 15th June 1974 .. .. | Payment to the legal heir of the deceased Thozhan Periakaruppan Thevar, who died in the fire accident on 7th February 1974 (Gudalur Town, Uthamapalayam, Madurai). | 500·00 |
| Do. .. .. | Payment to the legal heir of the deceased Mangalanathan who died due to electric shock on 13th March 1973 at Kodambakkam. | 1,000·00 |
| 18th June 1974 .. .. | Payment to Thiru A. Rajendran, Sivashanmugapuram, Madras who lost his house, wife and child in the fire accident that occured on 19th August 1969 in Teynampet. | 500·00 |
| Do. .. .. | Payment to the legal heir of the deceased Ganesa Achari, who was washed away in the floods in the Valliangal Odai in Thirunaraiyar village, Chidambaram on 1st November 1973. | 1,000·00 |
| 19th June 1974 .. .. | Payment to Thiru M. R. Raghupathy, Madurai, who has an artificial limb fitted at Poona. | 300·00 |



| Date. (1) | Name of payee. (2) | Amount. (3) Rs. |
|---|---|---|
| 19th June 1974 .. .. | Payment to the legal heir of the deceased Mannar who died in the fire accident on 12th November 1973 in Parthasarathipuram, Madras. | 1,000·00 |
| 28th June 1974 .. .. | Payment to the two families of the deceased persons died in the accidents caused on account of rains near Usilampatti and Dindigul in April, 1974 in Madurai accident (further sum of Rs. 2,000 as requested by Collector of Madurai). | 2,000·00 |
| 6th July 1974 .. .. | Payment to four Narikuravas who died on the spot due to a lorry accident near Manickapuram, Narikuravar colony in Perambalur taluk of Tiruchirappalli district on 8th June 1974. | 3,000·00 |
| 22nd July 1974 .. .. | Payment to Nagarathinam Chetty of Ramasanikuppam, North Arcot district whose eldest son Thiru Mohan died in an accident caused by a bull during Jallikattu on 17th January 1974. | 500·00 |
| 25th July 1974 .. .. | Payment to Thiru Chellam for purchase of hearing aid to his daughter who is deaf and dumb by birth residing at Puthiragondanpalayam of Attur taluk, Salem district. | 700·00 |
| 27th July 1974 .. .. | Payment to Thirumathi Rajammal, wife of Ramasamy, killed by wild elephant in Vethanahalli village, Pennagaram Subtaluk, Dharmapuri district on 13th December 1973. | 1,000 |
| 29th July 1974 .. .. | Payment to the 39 injured harijans due to a clash that occurred on 15th January 1974 at Kombai village, Uthamapalayam taluk, Madurai. | 1,950,00 |

| Date. (1) | | Name of the payee. (2) | Amount. (3) Rs. |
|---|---|---|---|
| 14th August 1974 .. | .. | Payment to the legal heir of Thiru Veeriah, who died due to injuries caused in the accident during the heavy rains at Madurai during April 1974. | 2,000·00 |
| 17th August 1974 .. | .. | Payment to the legal heir of Sivaprasad alias Doss, hut No. 13/16, Peters Road, Madras, who died in a fire accident on 18th July 1973. | 1,000·00 |
| 23rd August 1974 .. | .. | Payment to Thiru Santhanadoss whose right hand bones were damaged when he was witnessing the Police Medal parade at Thanjavur due to gallery having collapsed on 15th September 1973. | 1,000·00 |
| 7th September 1974 | .. | Payment to the next of kin of eleven persons died due to lorry accident near Kulasekaram, Kanyakumari district on 2nd August 1974. | 11,000·00 |
| 7th September 1974 | .. | Payment to the families of seven died and two injured in the lightning and landslide at Ooty and Coonoor on 29th March 1974 and 17th May 1974 respectively. | 8,000·00 |
| 9th September 1974 | .. | Payment to Thiru S. R. Gopalakrishna Iyer, brother of late Vanchinathan, freedom fighter. | 5,000·00 |
| 9th September 1974 | .. | Payment to Thirumathi Meenakshi whose husband died due to lightning on 10th May 1974 in Athipattu village, Usilampatti taluk. | [illegible],000·00 |



| | | | |
|---|---|---|---|
| 16th September 1974 | .. | Payment to the family of Kundan, died due to lightning and thunder on 29th June 1973 in Sarakottai village, Wandiwash taluk, North Arcot district. | 1,000·00 |
| 20th September 1974 | .. | Payment to the family of Dhanalakshmi, wife of Chellappa Gounder, Jutka owner, died due to drowning in floods in Erode on 15th September 1974. | 2,000·00 |
| 20th September 1974 | .. | Payment to Thiru Venkataraman, the correspondent of 'Aarooran Manavar Illam' in Thiruvarur for re-roofing the Illam destroyed by fire accident on 11th February 1973. | 1,000·00 |
| 21st September 1974 | .. | Payment to the families of Thiru Solaimuthu and Thiru Paulswamy who died due to landslide at Kodaikanal on 2nd August 1974. | 4,000·00 |
| 27th September 1974 | .. | Payment to the husband of Nallathangal and Pottachiammal and father of Pavunthai who died in floods in Vandiloor Odai, Viruganur village, Madurai South in 1972. | 900·00 |
| 27th September 1974 | .. | Payment to Thirumathi Maniammal, wife of Thiru Poongavana Gounder died due to lightning and thunder in Gudalore town, Wandiwash taluk, North Arcot district on 9th September 1973. | 500·00 |
| 28th September 1974 | .. | Payment to Thiru Sambasivam, father of Ramachandran died due to electrocution in PU. Madavakarai, Chidambaram taluk, at the time of returning home with cattle on 30th April 1974. | 500·00 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## புதன்கிழமை, 1975 மார்ச் 19.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள்-விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 371 மாண்புமிகு கல்வி சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்..............

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி நேரம் முடியட்டும்.

### கைத்தொழில் ஆசிரியர்கள்

*371 வினா : திரு. செ. சதாசிவம் : மாண்புமிகு கல்வி - சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா :
ஓவியம், கைத்தொழில் முதலிய பணிகளிலுள்ள பட்டதாரி ஆசிரியர்கள் பி. டி. ஆசிரியப் பயிற்சி வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்படுவதில்லை என்பது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் ; ஆசிரியப் பயிற்சிக் கல்லூரியில் சேர்வதற்கான தகுதி படைத்தவர்கள் முறைப்படி சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, பலருடைய மனுக்கள் சேர்த்துக்கொள்ள முடியாது என்று திருப்பியனுப்பப்பட்டிருக்கிறதே, அது அரசுக்குத் தெரியுமா ? திருப்பியனுப்பியதற்கு என்ன காரணம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அவர்கள் பொருளாதாரம் எடுத்தவர்களாகவோ, சோஷியாலஜி எடுத்தவர்களாகவோ, ஜியாலஜி எடுத்தவர்களாகவோ, ஸ்டாட்டிஸ்டிக்ஸ் எடுத்தவர்களாகவோ இருந்தால் அவர்கள் பி. டி. படித்து உயர்நிலைப் பள்ளிகளிலே ஆசிரியர்களாகப் பணியாற்றுவதற்கு வாய்ப்பு இல்லை. அது இல்லாமல் மற்றத் துறைகளிலே பட்டம் பெற்றவர்களாக இருந்தால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

*372 வினா: திரு கே. பி. கந்தசாமி: மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) 1973-74-ம் ஆண்டு உயர் தொடக்கப் பள்ளிகளில் கைத்தொழில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டார்களா ?

(இ) ஆம் எனில், எத்தனைபேர், மாவட்டவாரியாக ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். 570 கைத்தொழில் ஆசிரியர்கள் உயர் தொடக்கப் பள்ளிகளில் நியமிக்கப்பட்டனர்.

(இ) அறிக்கை * ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. வெ. ந. முத்தமிழ்ச்செல்வன்: தலைவர் அவர்களே, உயர் தொடக்கப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற கைத்தொழில் ஆசிரியர்களில் பலருக்கு போதிய இடவசதி இல்லாமலும் கைத்தொழில் செய்வதற்கான கருவிகள் வழங்கப்படாமலும் உள்ளன. ஆகவே இப்படிப்பட்ட குறைகளைப் போக்குவதற்கு அரசு ஏதேனும் நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அந்த அந்த பள்ளிகளினுடைய நிலைகளை ஆராய்ந்து அதற்கு ஏற்றபடி வசதி வாய்ப்புக்களைச் செய்ய வேண்டுமென்று பொதுவாகக் கூறப்பட்டிருக்கிறது. தனித்தனியாக ஒவ்வொரு பள்ளிக்கூடத்தின் நிலைமைகளை ஆராய்ந்து தக்கபடி இல்லையென்றால் அதைப்பற்றி அதிகாரிகளிடத்திலே தெரிவித்தால் அவர்கள் அந்தக் குறைகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்வார்கள்.

திரு. தி. பொன்னுமலை: எங்கள் பள்ளிக்கூடத்திலே உயர்துவக்கப் பள்ளியிலே கைத்தொழில ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஆனால், கைத்தொழில் சாமான்கள் இல்லை. அவர்கள் அந்தப் பாடம் சொல்லிக் கொடுப்பதும் இல்லை. ஒன்றும் கிளாஸ், இரண்டாம் கிளாஸ் ஆகிய வகுப்புகளுக்கும் பாடம் சொல்லிக்கொடுக்கிறார்கள். அதுவும் உருப்படியாக இல்லை. ஆகவே இப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட குறைபாடுகளைப்பற்றி ஆங்காங்குள்ள கல்வி அதிகாரிகளிடத்திலோ அல்லது முதன்மை கல்வி அதிகாரிகளிடத்திலோ தெரிவித்தால் அவர்கள் அப்படிப்பட்ட குறைபாடுகளை நீக்குவதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்கள். ஆங்காங்கு தொழிற்பயிற்சி சொல்லிக் கொடுக்கப்பட்டால் அப்படிப்பட்ட இடங்களிலேயெல்லாம் இப்படிப்பட்ட வாய்ப்புக்கள் இருக்கவேண்டுமென்று பொதுவான ஆணை விடப்பட்டிருக்கிறது.

* 339-341ம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



*Moral instruction classes in schools*

373—THIRUMATHI T. N. ANANDANAYAKI: Will the Hon. the Minister for Education and Tourism be pleased to state :

(a) whether it is a fact that imparting moral instruction in the schools has been dispensed with ; and

(b) if so; tne resons therefor ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. வை. பாலசுந்தரம்: தலைவர் அவர்களே, இப்போது மாணவர்களிடையே ஒழுக்கம் அவசியமாகத் தேவைப்படுகிறது. பெரும்பாலான இடங்களிலே மாணவர்களிடத்திலே ஒழுக்கம் கெட்டு வருகிறது என்று வெளியிலே பேசப்படுகிறது. ஆகவே பள்ளிக்கூடங்களிலே வாராவாரம் ஒழுக்கத்தைப்பற்றி மாணவர்களுக்கு அறிவுரைகள் கூறுவதற்கு, அதைப் பற்றி பேசுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இப்போது வாரத்திலே ஒரு பீரியட் ஒழுக்கக் கல்விக்கென்று ஒதுக்கப்படுகிறது. இதிலே ஒழுக்கம் சம்பந்தமான பல்வேறு அறிவுரைகளை ஆசிரியர்கள் வழங்குகிறார்கள். அதுமட்டும் அல்ல, ஒழுக்கநெறியைக் கற்பிக்கக்கூடிய வல்லமைபடைத்த பெரியவர்கள் என்று குறிப்பிடப்பெறுகிறவர்கள் அழைக்கப்பெற்று அவர்களும் மாணவர்களிடையே அறிவுரைகளை வழங்கச் செய்ய ஏற்பாடுகள் நடைபெறுகின்றன.

திரு. பெ. சௌந்திரபாண்டியன்: தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளிலே ஒழுக்க வகுப்பு என்று வைப்பது ஏதோ மாணவர்கள் மத்தியில் ஒழுக்கம் இல்லை என்கிற நிலைமையை ஏற்படுத்தாதா ? ஆகவே, இந்த வகுப்பை வேறு நேரத்திலே வைத்துக் கொள்ளலாம், இப்போது ஒரு பீரியட் வைத்திருப்பதை எடுத்துவிடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இதை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்ற கருத்துத்தான் பலருக்கு இருக்கிறது. ஒழுக்கம் இல்லை என்பதல்ல. ஒழுக்கத்தை சீர்படுத்தவும், ஒழுக்கத்தை மேம்படுத்தவும் இது தேவைப்படுகிறது. ஏற்கெனவே ஒழுக்கத்தின் தரம் குறைந்திருக்கிறது என்று சொல்கிறார்கள். இளமையிற் கல் என்பதற்கு இணங்கவும், தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்பதற்கு இணங்கவும் அடிப்படைக் கல்வி பயிற்றுவிக்கும்போதே ஒழுக்கத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அப்படிச் செய்தால்தான் அவர்களின் எதிர்காலம் செம்மையாக இருக்கும். இப்போது வாரத்திற்கு ஒரு பீரியட் அதற்காக ஒதுக்கப்பட்டு சொல்லித்தரப்படுகிறது.

[1975 மார்ச் 19

THIRU B. VENKATASWAMY : Sir, the present indiscipline among the students is due to non-imparting of moral instruction in the schools. So, may I know from the Hon. Minister whether moral instruction would be imparted every day in primary and higher secondary schools ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பீரியட் என்பது முடியாது. காரணம் மற்ற மற்ற பாடங்களுக்கு இப்போது நேரம் போதவில்லை என்று சொல் கிறார்கள். ஆங்கிலமொழி, கணக்கு, அறிவியல் பாடங்கள் சொல்லிக் கொடுப்பதற்கே நேரமில்லை என்று சொல்லப்படுகிறது. அநேக பள்ளிக் கூடங்களிலே பள்ளி நேரத்திற்கு அப்பாற்பட்ட நேரத்திலே காலையில் வணக்கத்திற்குரிய வகுப்பு என்றோ அல்லது வாழ்த்துக்குரிய வகுப்பு என்றோ அல்லது இறை வணக்கத்திற்குரிய வகுப்பு என்றோ அரை மணி நேரம் முன்னதாக தொடங்கி ஒழுக்க நெறியைக் கற்றுத்தருகின்ற முறையை சில பல பள்ளிகளில் கடைப் பிடித்து வருகிறார்கள்.

THIRUMATHI ALDA M. FOWLER : Sir, may I know if these instructions would include the teaching of good manners and courtesy also because we find nowadays, that youngsters do not know how to give up their seats to grown-ups and how to move out of the way when elders are passing them !

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப் போன்று மாணவர்கள் ஒழுக்க நெறியோடு நடந்து கொள்ள வேண்டும், ஒழுக்கத்தோடு பழக வேண்டுமென்ற வகையிலே இப்படிப்பட்ட ஒழுக்கக் கல்வி போதிக்கின்ற முறை இருக்கின்றது. ஆனால் மதக் கல்வி போதிக்கப்படக் கூடாது என்று தடையிருக்கிறது. பொதுவாக, ஒழுக்கக் கல்விபற்றி போதிக்க லாம். மதக்கல்வி சொல்லித்தர வேண்டுமென்றால் தனியாக வைத்து யார் விரும்புகிறார்களோ அவர்கள் வேறு எங்காவது வைக்கலாம். பள்ளி களைப் பொறுத்தவரையில் மதக் கல்வி போதனை கூடாது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று அவர்களுடைய பழக்கங்கள் நடவடிக்கைகள் சீர்படுத்தப்படுகின்ற வகையிலேதான் இப்போது அறி வுரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

## இந்திய முறை மருத்துவக் கல்லூரி.

*374 வினு—திரு. ஜி. ராமசாமி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப் பாரா?

தமிழ்நாட்டில் மேலும் ஒரு இந்திய மருத்துவக் கல்விக் கல்லூரி தொடங்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இல்லை.



1975 மார்ச் 19]

திரு. மெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நம்முடைய
இந்திய மருத்துவத்தில் பழங்காலச் சிறப்பு இருக்கிறது. ஆகவே
இனிமேலாவது மறுபரிசீலனை செய்து ஒவ்வொரு மாவட்டத்திலேயும்
இதுபோன்ற கல்லூரிகளைத் தொடங்கினால் பொதுமக்களுக்கும் வசதி
யாக இருக்குமே. மேலும் மாணவர்களும் மருத்துவம் படிக்க நிறைய
சேருவார்கள். ஆகவே, அரசாங்கம் அதை மறுபரிசீலனை செய்வதற்
கான வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, ஏற்கெனவே,
ஒரு கல்லூரி பாளையங்கோட்டையில் நடந்து வருகிறது. இன்னொரு
கல்லூரி சென்னையிலே துவக்கப்படலாம் என்று இரண்டு ஆண்டுகளுக்கு
முன்னால் ஒரு எண்ணம் இருந்தது. அதற்குப் போதிய தகுதி பெற்ற
ஆசிரியர்கள் கிடைப்பது கடினம் என்ற காரணத்தினாலேயும், குறைந்த
அளவு 50 இலட்சம் ரூபாயாவது ஒதுக்கினால்தான் ஒரு கல்லூரி தரம்
உள்ளதாக அமையும் என்ற காரணத்தினாலேயும் அந்த முயற்சி கை
விடப்பட்டது. ஆனால் சித்த மருத்துவர்கள் பயிற்சியாலேயும்,
பரம்பரை முறையாலேயும் மருத்துவம் செய்து வருபவர்களுக்கு ஒரு
பயிற்சி வாய்ப்பு என்ற முறையில் பழனி அறங்காவலர் குழுவின் சார்பில்
மூன்று மாதப் படிப்பு அவர்களின் விருப்பத்திற்கேற்ப வழங்கப்படலாம்
என்ற ஆலோசனை வழங்கப்பட்டு, அவர்கள் முயற்சியெடுத்துக்
கொண்டிருக்கிறார்கள். அதற்குப்பிறகு—இப்பொழுதுள்ள பட்டப்படிப்பு
4 ஆண்டுக்காலம், ஒரு ஆண்டுக்காலம் பயிற்சி ஆக 5 ஆண்டுகள் இருக்
கின்றன, 3 ஆண்டுக்கால டிப்ளமா வகுப்பு பயிற்சியை ஆரம்பிக்க
லாமா என்று அறங்காவலர் குழு தொடங்கும் கல்வி நிலையத்தில்
செய்யலாமா என்பதும் ஆராயப்பட்டு வருகிறது. ஒருவேளை அவர்கள்
செய்யக்கூடும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, இப்பொழுது இயற்கை
சிகிச்சை முறை என்பது இந்தியாவிலே இதர மாநிலங்களிலே பல
இடங்களில் நடப்பதாகத் தெரிகிறது. இது சம்பந்தமாகக் கல்லூரி
களும் நடப்பதாகத் தெரிகிறது. ஆனால் நமது மாநிலத்தில் அப்படி
யிருப்பதாகத் தெரியவில்லை. எனவே, இயற்கை வைத்திய முறை
சம்பந்தமாக இங்கே கல்லூரி ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா என்பதை
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, இயற்கை மருத்துவ
முறையை எப்படிக் கையாள வேண்டும், அதற்கு என்ன செய்யலாம்
என்பதைப் பற்றி அறிய ஒரு குழு அருணாசலம் அவர்களின் தலைமையின்
கீழ்—இனிஷியல் எனக்கு நினைவு இல்லை—அவர்கள் காதி முதலியவற்றில்
தொடர்பு உடையவர்கள்—அந்தக் குழு ஆலோசனை வழங்கியுள்ளது.
அது அரசுக்கு இரண்டு திங்களுக்கு முன்னால் வந்திருக்கிறது. பொது
வாக, இன்றைக்கு விஞ்ஞான வளர்ச்சியின் வேகம் வேகமாக இருப்பதனால்,
இருக்கின்ற மனப்பான்மையில் பார்த்தால் இயற்கை மருத்துவம் செய்யப்
படுவது என்பதை மக்கள் உடனே வரவேற்று விட மாட்டார்கள். வசதி

யுள்ளவர்கள், தெளிவு உள்ளவர்கள், வேறு சில வாய்ப்புகள் தங்களுக்கு இருந்தும் பிடிக்கவில்லை என்று கருதுபவர்கள், இப்படிப்பட்ட இவர்கள்தான், யோகம், இயற்கை வைத்தியம் என்ற இப்படிப்பட்ட முறைகளில் ஈடுபாடு காட்டுவார்கள். இருந்தாலும் இயற்றை மருத்துவ முறைக்கு ஒரு சிறப்பிடம் வழங்கப்பட என்ன செய்யலாம் என்பது ஆலோசனையிலே இருக்கிறது.

உணவு பரிசோதனைக் கூடங்கள்

*375 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மக்கள்-நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) உணவுப்பொருளில் உள்ள கலப்படத்தைக் கண்டு அறியும் சோதனைச் சாலைகளை ஏற்படுத்த அரசு உத்தேசித்துள்ளதா?

(இ) ஆம் எனில், எங்கெங்கு ஏற்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, (அ) ஆம்.

(இ) உணவு பகுப்பாய்வுக் கூடங்கள் இரண்டினை, ஒன்று தஞ்சாவூரிலும், மற்றொன்று மதுரையிலும் கட்டுவதற்காக ஒவ்வொன்றிலும் இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் அளவு தொகை 1973 ஆம் ஆண்டில் மாநில அரசால் வழங்கப்பட்டது. அதற்கான வேலைகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இதைத் தவிர மேலும் இரண்டு ஆய்வுக் கூடங்களை (சேலத்திலேயும், பாளையங்கோட்டையிலேயும்) வருகிற ஆண்டில் ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்று அரசினிடத்திலே இருக்கிறது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, குறிப்பாக சென்னை மாநகரத்திலே சில இடங்களில் உணவுப்பண்டங்கள் கலப்படம் செய்யப்பட்டு கலப்படமாகவே விற்கப்படுகிறது. இதனைக் கண்டறிந்து உடனுக்குடன் பரிகாரம் காண்பதற்காக, நடமாடும் நிலையங்களை மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன அந்த வகையிலே உருவாக்கித் திடீர் திடீரென்று சோதனை செய்வதன் மூலம் வெளியூர்களிலேயிருந்து வருகின்ற எங்களைப் போன்றவர்களைப் காப்பாற்றுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாக் கடைகளிலேயும் பண்டங்களை வாங்கியிருக்க மாட்டார்கள் என்று நான் நிச்சயமாக எதிர்பார்க்கிறேன். எல்லாக் கடைகளிலேயும் அப்படி இருப்பதாகக் கூறுவதும் தவறான கருத்து. எத்தனையோயிடங்களில் பொறுப்பை உணர்ந்து நடத்தப்படும் நிலையங்கள்



இருக்கின்றன. ஆனால் கலப்படம் செய்து விற்கப்படும் கடைகளின் மீது நடவடிக்கை எடுக்கும் பொறுப்பு மாநகராட்சியின் சுகாதார அலுவலிடத்தில் இருக்கிறது. குறைகள் இருக்கின்றன என்று எந்த இடத்தைப்பற்றிச் சுட்டிக் காட்டப்பட்டாலும் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். பொதுவாக, இதைத் தீவிரப்படுத்த ஆலோசனை வழங்கப்பட்டிருக்கிறது. அதை மறுபடியும்கூட திரும்பவும் வலியுறுத்த அரசாங்கம் முயற்சிக்கும்.

*Drugs Control Order*

*376 *Q.*—Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Health be please to state :

(*a*) whether the Centre has requested this Government to enforce the Drugs Control Order strictly ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம்.

(இ) போலி குளுகோஸ் மருந்து செலுத்தப்பட்டதால், கான்பூரில் ஏற்பட்ட மரணங்களைப் பற்றிய பத்திரிகைச் செய்திகளை இந்திய அரசு குறிப்பிட்டுக்காட்டி மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு நிர்வாகத்தை வலுப்படுத்தி, மருந்துப் பொருள் கட்டுப்பாட்டு வசதிகளைச் செயற்படுத்துவதற்கான நடைமுறைகளைக் கண்டிப்பாக்குவதன் முக்கியத்துவம் பற்றி வலியுறுத்தி தமிழக அரசுக்குத் தெரிவித்துள்ளது. மேலும், சுகாதார குடும்ப நலத்திட்ட மத்தியக்குழு கூட்டத்தில் இது தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களைச் சுட்டிக் காட்டி, குற்றவாளிகள் பிடிக்கப்படும்போது அவர்கள் குற்றங்களுக்கு அளிக்கக்கூடிய மிகக் கடுமையான தண்டனை விதிக்குமாறு (நீதி மன்றத்தைக்) கேட்டுக் கொள்ள வேண்டுமென்றும் இந்திய அரசு ஆலோசனை தெரிவித்திருக்கிறது.

திரு. என். கே. பழனிசாமி : சார், பல மருந்துகளுக்குப் புதிய பெயர்கள் கொடுத்து அதிகப்படியாக விற்கிறார்கள். அதனால் ரொம்பவும் பாதகமாக இருக்கிறது. அதைக் கட்டுப்படுத்தும் முறையில் மாநில சர்க்கார் என்ன உதவி செய்ய இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, Trade names, brand names என்று போட்டு அதிக விலைக்குக் கொடுக்கிறார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் சொல்கிறார்கள். உண்மையான நிலைமை என்னவென்றால் Trade names கொடுக்கப்பட்ட மருந்துகளை அதிகமான டாக்டர்கள் prescribe செய்கிறார்கள். அந்த மருந்துப் பொருட்களுக்கான prescription தரப்படுவதால் அதிகமான தேவைப்படும் நிலைமையிருக்கிறது. ஆனால் மருத்துவமனைகளிலே வழங்கப்படும் பெரும்பாலான மருந்துகள் generic names மருந்துகளின்

[1975 மார்ச் 19

தன்மையைக் காட்டும் பெயரால் வழங்கப்படுகிறது. அப்படி வழங்கப் படும் மருந்துகள் அதிகமான மருத்துவமனைகளில் அரசாங்க முறையிலே பெரும்பாலும் பயன்படுகிறது. ஆகவே, அந்த வகையிலே கட்டுப்படுத்த முடியும். குறைபாடுகள் இருந்தால் அவ்வப்பொழுது கண்டுபிடிக்கப்படு கிறது.

### *Thengapattinam-Kollengode Boat Service*

* 377 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether the Government have examined the feasibility of operating mechanised boat service in the back waters of Thengapattinam to Kollengode for purposes of transportation ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> இல்லை.

<u>திரு. என். டென்னிஸ் :</u> தலைவரவர்களே, தேங்காப்பட்டிணம் குழித்துறை ஆறு கடலில் சேரும் இடம். ஒரு பக்கத்திலிருந்து மறு பக்கத்திற்குப் போவதற்கான பாலம் இல்லாமல் இருக்கிறது. இப்பொழுது சாதாரண போட் ஓடுகிறது. தேங்காப்பட்டிணத்திலிருந்து கொல்லங்கோடு செல்லும் ஏ.வி.எம். கால்வாயில் மெகானைஸ்ட் போட் விடுவதாக இருந் தால் அது டூரிஸ்ட் சென்டராக ஆகும். போக்குவரத்து வசதியும் அதிகம் இருக்கும். ஆகவே, இதைக் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுக்கப் படுமா ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடும் அந்த வாய்க்கால் முழுவதும் மண்மேடிட்டு இருப்பது என்பது உண்மை. மண் மேடிட்டிருப்பதைச் சுத்தப்படுத்த வேண்டும். மண்ணை அப்புறப்படுத்த வேண்டும். அதற்கு எவ்வளவு செலவாகும் என்பதை ஆராயச் சொல்லியிருக்கிறோம். வாய்க்கால் ஓரமாகப் பாதை ஒன்று போவதால் போக்குவரத்துத் தடைப்படாமல் இருக்கிறது. ஆகவேதான் இவ்வளவு காலமாகத் தள்ளிப் போடப்பட் டிருக்கிறது என்று நான் கருதுகிறேன். இருந்தாலும் தலைமைப் பொறி யாளரிடத்திலே கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. வாய்க்காலைச் சுத்தப் படுத்துவதன் மூலம் பொருளாதார மிச்சம் எவ்வளவு கிடைக்கும் என்று ஆராய்ந்து அறிக்கை தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

### *Velanganni Road*

* 378 *Q.*—THIRU A. RAJAMANICKAM: Will the Hon. the Minister for Public Works be pleased to state whether there is any proposal under the consideration of the Government to convert the present B.T. road from Velanganni Arch to the Church into an asphaltic concrete road ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> இல்லை.



1975 மார்ச் 19]

<u>திரு. அ. இராசமாணிக்கம் :</u> தலைவரவர்களே, அங்கே போக்குவரத்து அதிகமாக இருப்பதால் அந்தச் சாலை அடிக்கடி பழுதுபடுகிறது. ஆகவே மறுபரிசிலனை செய்து அந்தச் சாலையை அமைப்பதற்கு ஆவன செய்யப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, இது ஏனைய மாவட்ட சாலையின்கீழ் வரக்கூடிய ஒன்று. 'Other than road works' அந்தத் திட்டத்தின்கீழ் பணம் சென்ற ஆண்டு ஒதுக்கப்படவில்லை. இதன் முக்கியத்துவத்தை அரசு உணர்ந்திருக்கிறது. சுற்றுலாத் துறை இதை ஏற்க வேண்டுமென்று கேட்டதற்கு, சுற்றுலாத் துறையினர் வேறு பணம் ஒதுக்க இயலாது என்று அந்தத் துறையிலே தெரிவித்திருக் கிறார்கள். இருந்தாலும் அரசாங்கம் அதைப்பற்றி பரிசிலனை செய்கிறது.

### மோகனூர், காட்டுப்புத்தூர் கால்வாய்கள்

*379 <u>வினு—திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) மோகனூர், காட்டுப்புத்தூர் ஆகிய கால்வாய்களை இணைப்பது பற்றி அரசு பரிசிலனை செய்து வருகிறதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன் :</u> தலைவரவர்களே, கோடைகாலத்தில் காட்டுப்புத்தூர் வாய்க்காலில் வரும் தண்ணீர் வரத்து குறைந்துகொண்டே இருக்கிறது. ஆனால் மோகனூர் வாய்க்காலில் எப்பொழுதும் தண்ணீர் வருவது அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த இரண்டையும் இணைத் தால் பல ஆயிரம் ஏக்கர்கள் பயன் அடையும். இருக்கின்ற பயிரிடும் தலத்தையும் பாதுகாக்க முடியுமே. எனவே, இதைப்பற்றி மறுபரிசிலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் :</u> தலைவரவர்களே, இரண்டை யும் இணைத்தால் அந்தத் தண்ணீரைக் கொண்டு அதிக அளவு பாசனத் திற்குக் கொண்டுவரப்படும் என்று சொல்கிறார்கள். ஆனால் காவிரியி லேயே தண்ணீர் எவ்வளவு வர வேண்டுமென்று பிரச்னை இருக்கிறது. எனவே, இதைப்பற்றி இப்பொழுது யோசிப்பதற்கு நேரமில்லை.

### *Import of Wheat*

* 380 *Q.*—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for; Food and Co-operation be pleased to state

[1975 மார்ச் 19

(*a*) the steps taken by the Government to import more wheat from other States ; and

(*b*) the price of wheat imported ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) உபரி மாநிலங்களிலிருந்து கோதுமை இறக்குமதி செய்ய அரசு தடையில்லா சான்றிதழ்கள் வழங்கி வருகிறது.

(இ) அது அம்மாநிலங்களில் அவர்கள் கொடுக்கும் விலையைப் பொறுத்தது.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது கோதுமை வெளி மாநிலங்களிலிருந்து இறக்குமதி செய்ய பல பேருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. சிவில் சப்ளைஸ் மூலமாக விநியோகிக்கப்படும் கோதுமையை விட அவர்கள் கோதுமை குறைவாக விற்கப்படுகிறது என்பதற்குக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதன் விலை அதிகமாக இருப்பது தான் பிரச்சினையே தவிர, விலை குறைவாக இருக்கிறது என்ற பிரச்சினை இல்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : இந்தக் கோதுமை மாவட்டங்களுக்கு எப்படி பகிர்ந்தளிக்கப்படுகிறது ? விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் அந்த மாவட்டத்திற்குத் தேவையான "ஃபுட் பட்ஜட்டை" கேட்டிருக்கிறோம். அந்த அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் மத்திய அரசாங்கம் கொடுக்கிற கோதுமை பிரித்துக் கொடுக்கப்படுகிறது.

திரு. ஆலடி அருணா : வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்வதில், பஞ்சாபில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய தமிழக அரசுக்கு அனுமதி கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. இப்போது வெளி மாநிலங்களில் இருந்து கோதுமை இறக்குமதி செய்ய அனுமதி இருக்கிறது என்று கூறுகிறார்கள். மத்திய அரசாங்கம் கொடுக்கிற 60,000 டன் கோதுமை போதாது என்ற வகையில் தனியாரும், அரசும் தேவையான அளவு கோதுமையை வெளி மாநிலங்களில் இருந்து இறக்குமதி செய்ய முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மாநில அரசுக்கு மத்திய அரசு கோதுமையை ஒதுக்குகிறது. இதைத் தவிர சில மாநிலங்களில் உபரியாகக் கோதுமை இருக்கிறது. அந்தக் கோதுமையைப் பொறுத்த அளவில் நாம் தனியாருக்கு இறக்குமதி செய்ய அனுமதி தருகிறோம். அவர்கள் அந்தந்த மாநில அரசுகளின் அனுமதியையும் பெற்று கோதுமையைக் கொண்டு வருகிறார்கள். கோதுமையைப் பொறுத்த அளவில் அந்தந்த மாநில அரசுகளே அனுமதி அளிக்கலாம். அரிசியைப் பொறுத்த அளவில் மத்திய அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறோம்.



1975 மார்ச் 19]

திரு. எ. ஆர். மாரிமுத்து : தனியாருக்கு பெர்மிட் கொடுக்கப்பட்டதன் மூலம் எவ்வளவு கோதுமை இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெர்மிட் ஏராளமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இப்போது வந்துள்ள தகவல்படி சுமார் 5 பேர்கள் 17,250 டன் கோதுமையும், பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி சொந்த உபயோகத்திற்காக 1250 டன்னும் வாங்கியிருப்பதாகத் தெரிகிறது.

திரு. சோ. அழகர்சாமி : கோதுமையை இறக்குமதி செய்யும்போது தனியாருக்கு என். ஓ. சி. கொடுத்து இறக்குமதி செய்வதற்குப் பதிலாக சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலமாக அரசாங்கமே நேரடியாகக் கோதுமையை இறக்குமதி செய்ய முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நம்மைப் பொறுத்த அளவில் நம்முடைய தேவைக்கு அதிக அளவில் மத்திய அரசு கோதுமையை ஒதுக்கி வருகிறது. எந்த அளவுக்கு மாவட்ட அளவில் நம்மால் இதை விநியோகிக்க முடியும் என்பது ஆழ்ந்து பரிசீலிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். பிற மாநிலங்களில் இருந்து அந்த மாநில அரசுகளின் அனுமதியுடன் யார் யார் எவ்வளவு கோதுமையைக் கொண்டு வந்தாலும் நம்முடைய மாநிலத்தில் பற்றாக்குறை நிலையைக் கணக்கில் எடுத்துக் கொண்டு தேவை என்ற அளவிலே தான் ஏராளமாக 'நோ அப்ஜக்ஷன் சர்டிபிகேட்' கொடுக்கிறோம்.

திரு. நா. வீராசாமி : கோதுமை கிடைக்கிறது என்று சொன்னாலும் நம்முடைய உணவு அமைச்சர் அவர்கள் டில்லி சென்றிருந்த நேரத்தில் "எங்களுக்குக் கோதுமை மட்டும் போதாது, அரிசியும் தேவை. வேண்டுமானால் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய அனுமதி கொடுங்கள் என்று கேட்டதின் பேரில் மத்திய அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்திருக்கிறதா ? இரண்டு, மூன்று தினங்களுக்கு முன் சென்னைக்கு வந்த நிதியமைச்சர் தமிழ்நாட்டுக்கு வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்து கொடுக்கப்படும் என்று சொன்னதைப் பற்றி அரசாங்கத்திற்கு ஏதாவது தகவல் வந்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : உணவு அமைச்சருடைய கடிதத்தில் இருந்தும், பொதுவாக மத்திய அமைச்சரோடு பேசியதிலிருந்தும் அரிசி இறக்குமதியால் அதிகச் செலவாகும். ஆக கோதுமையைத்தான் பயன்படுத்தவேண்டுமென்ற கருத்தைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். இறுதியாக நம்முடைய மாநிலத்திற்கு வெளிநாட்டிலிருந்து அரிசி இறக்குமதி செய்ய முடிவு எடுத்ததாகத் தெரியவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : இப்போது கொடுக்கக் கூடிய கோதுமையைத் தொடர்ந்து எத்தனை மாதத்திற்குக் கொடுப்பதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள் ? அதிகப்படியாக ஒரு லட்சம் டன் கோதுமையும் அரிசியும் கொடுக்கும் நிலைமை இருக்கிறதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கோதுமை 81 ஆயிரம் டன் என்று ஏற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது. இதுபற்றி அவர்களிடத்தில் கேட்டோம். பத்து மாதங்களுக்கு பற்றாக்குறை மாதங்களுக்கு ஒரு திட்டவட்டமான முடிவை முன்கூட்டியே தெரிவித்துவிட்டால் நாங்கள் அதைத் தொடர்ந்து உணவுப் பங்கீட்டு முறையை ஒத்துக் கொள்ள முடியும் என்ற கருத்தை எடுத்துச் சொன்னோம். அதற்கு அவர்கள் உறுதியான பதிலைச்சொல்ல முடியவில்லை. இருப்பைப் பொறுத்து லீன் மந்த்ஸ் ஆக இருந்தாலும் எப்படியும் கொடுப்பதற்கு முயற்சிக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள்.

## திறந்த வெளிச் சிறைச்சாலைகள்

* 381 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் 17—4—1974 அன்று வினா எண் 846-க்கு அளித்த விடையையொட்டி, தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ் நாட்டிலுள்ள எல்லா மாவட்டங்களிலும் திறந்த வெளிச் சிறைச் சாலைகள் அமைத்திடும் செயற் குறிப்பு தற்போது எந்த நிலையிலுள்ளது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : செங்கை, கோவை, தென்னாற்காடு மாவட்டங்களில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் அமைப்பதற்கான செயற் குறிப்புகள் சிறைத் துறைத் தலைவரது பரிசீலனையில் உள்ளன.

முகவை மாவட்டத்தில் இத்திட்டம் தள்ளி வைக்கப்பட்டுள்ளது. இம் மாவட்டங்களின்றி ஏனைய மாவட்டங்களில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஆரம்பிக்கும் திட்டங்கள் தகுதியான அரசு புறம்போக்கு நிலங்கள் கிடைப்பதாயின் சிறைத்துறைத் தலைவர் பரிசீலிப்பார்.

திரு. என். கிட்டப்பா : திறந்த வெளி சிறைச்சாலைகள் தற்போது எங்கெங்கு இருக்கிறது ? அதனால் அரசு எதிர்பார்த்த அளவுக்குப் பலன் கிடைத்துள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தஞ்சை, சேலம், சிங்காநல்லூர் ஆகிய மூன்று இடங்களில் இருக்கின்றன. பொதுவாக அங்கிருக்கும் நில வளத்தையும், நீர் வளத்தையும் பொறுத்த அளவில் நல்ல முறையில் நடைபெறுகிறது. தஞ்சையைப் பொறுத்த அளவில் நல்ல முறையில் நடைபெறுகிறது.





திரு. எம். சுரேந்திரன் : தஞ்சையில் இருக்கும் திறந்தவெளி சிறைச்சாலையில் அங்கிருக்கும் நிலம் முழுவதும் பயன்படுத்தப்படாமல் இருக்கக் காரணம் கிணறு வெட்டவும், மோட்டார் வைக்கவும் வசதி செய்து தரப்படவில்லை என்று அங்கிருப்பவர்கள் சொல்லுகிறார்கள். அது உண்மையா ? அந்த நிலத்தை முழுமையாகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நான் பார்த்தவரை இங்குதான் நல்ல நீர்வளம் அமைந்திருக்கிறது. நல்ல முறையில் பயிர் செய்யப்பட்டு உற்பத்தியைக் காட்டியிருக்கிறார்கள். எல்லா நிலங்களையும் பயன்படுத்தும் அளவுக்கு நீர்வளம் இருக்கிறதா என்று பரிசீலிக்கலாம்.

திரு. செ. அரங்கநாயகம் : சிங்காநல்லூர் திறந்தவெளி சிறைச் சாலையை விரிவுபடுத்தும் திட்டம் இருக்கிறதா ? அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிங்காநல்லூர் ஏற்கெனவே இருக்கிற திட்டந்தான். போதுமான அளவு நீர் வளம் கிடைக்கவில்லை என்பதுதான் உண்மை.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : சிறையில் இருக்கும் ஆயிரக்கணக்கான கைதிகளுக்காகப் பெருந்தொகை செலவழிக்கப்பட்டு வருகிறது. இந்தத் தொகையை ஈடுகட்டக்கூடிய வகையில் நம்முடைய திட்டத்தை மாற்றியமைத்து நிலப் பகுதிகளில் வேலை செய்யச் செய்து உற்பத்தியைப் பெருக்குவது போன்று வேறு பல பணிகளிலும் அவர்களை ஈடுபடுத்தும் திட்டத்தைப்பற்றி அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த நோக்கத்தோடுதான் ஒவ்வொரு சிறையிலும் திட்டமிட வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். வேளாண்மை, தொழில்கள் ஆங்காங்கு தொடங்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. திறந்த வெளி சிறைச்சாலைகள் பெரும்பாலும் வேளாண்மை அடிப்படையிலே திறக்கப்பட வேண்டுமென்றால் அந்த அளவுக்கு நிலப்பரப்புக் கிடைக்க வேண்டும். கிடைக்கின்ற நிலத்திலே பயிர் செய்ய ஓரளவு தண்ணீர் வசதி தேவைப்படுகிறது. தொழிற் துறையிலும் அப்படித் திட்டமிட்டுச் செயல்பட வேண்டுமென்ற கருத்தை அரசாங்கம் ஏற்றுக் கொண்டிருக்கிறது.

## *Emergency Risks Insurance Scheme*

* 382 *Q.*—Thiru N. DENNIS, Thiru G. R. EDMUND, Thiru N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :

(*a*) whether the Emergency Risks Insurance Scheme has been implemented in the Public Undertakings under the control of the Department of Industries in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) அண்ட் (இ)–தமிழ்நாடு சிறு தொழில் கழகம், தமிழ் நாடு கைவினைப் பொருட்கள் வளர்ச்சிக் கழகம், தமிழ்நாடு சர்க்கரை தொழிற்சாலை, தமிழ்நாடு பீங்கான் தொழில் கழகம், தமிழ்நாடு பஞ்சாலைக் கழகத்தால் நிர்வகிக்கப்படும் பஞ்சாலைகள், ஆலங்குளம் தமிழ்நாடு சிமிட்டித் தொழிற்சாலை ஆகியவைகளில் அவசர கால ஆபத்துக்கள் காப்பீட்டுத் திட்டம் நிறைவேற்றப்படுகிறது.

THIRU N. DENNIS : Sir, may I know whether the benefit has been extended to temporary workers ?

The HON. THIRU S. J. SADIQ PASHA: Under the Emergency Risks Insurance Act, the property insurable means, in respest of factories, the whole plant and machinery and materials used in the factory in the production or transmission of motive power and maintenance of plant machinery and buildings. இதிலே தொழிலாளர்கள் வருவதில்லை.

திரு. என். கே. பழனிசாமி : பல இடங்களில் ஆன்டி ஃபயர் ஃபைட்டிங் சாதனங்களை வைத்துக்கொண்டு தண்ணீர் இல்லாமல் இருக்கிறார்கள். திடீரென்று தீ பற்றிக் கொண்டால் எப்படி அதை அணைக்க முடியும் ? ஆகவே, இந்த மாதிரித் தவறுகளுக்குக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா ? விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சரியான முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டியது நம்முடைய கடமை, பொறுப்பு. தவறுகள் ஏற்படும்போது எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸ் திட்டப்படி ஈடு செய்யக் கூடிய முறை இருக்கிறது. இந்தத் திட்டம் மத்திய அரசாங்கத்திலிருந்து கொண்டு வரப்பட்டு நம்முடைய கழகங்களும் பின்பற்றி வருகின்றன.

(முற்பகல் 9–30)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸ் பொதுவாக யுத்த காலத்திலேதான் ஒவ்வொரு நாட்டிலும் அமலில் இருக்கும். ஏறக்குறைய இப்போது யுத்தம் முடிந்து 4 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்றும் இந்த எமர்ஜன்சி ரிஸ்க் இன்ஷூரன்ஸை வணிகர்களும், அரசாங்கத் தொழிற் நிறுவனங்களும், இன்ஷூரன்ஸ் கட்டாயம் செலுத்த வேண்டுமென்று சொல்கிறார்கள். இது குறித்து மத்திய அரசுக்கு மாநில அரசு ஆட்சேபணை தெரிவித்துள்ளதா ? இதோடு நிறுத்திக் கொள்வதற்கு மத்திய அரசுக்கு மாநில அரசு ஆலோசனை கூறுமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் கூறுகிற எமர்ஜன்சி வேறு இந்த எமர்ஜன்சி வேறு. அவர்கள் கூறுவது அரசியல் சட்டப்படி வரும் எமர்ஜன்சி. இது அவசர கால ஆபத்துக்கள் (எமர்ஜன்சி ரிஸ்க் கூட்ஸ் இன்ஷூரன்ஸ் ஆக்ட்) என்ற திட்டத்தின் கீழ் இருக்கிறது. அதற்கான சட்டத்தின் விதிமுறைகள்படி இது அமலாக்கப் படுகிறது.



## திருநெல்வேலியில் பட்டு உற்பத்திப் பண்ணைகள்

* 383 வினா.—திரு. எம். முத்தையா : மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டத்தில் மேலும் புதிய பட்டு உற்பத்திப் பண்ணைகள் ஏற்படுத்தும் திட்டம் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : திருநெல்வேலி மாவட்டத்தில் புதிதாக பட்டு உற்பத்திப் பண்ணை ஆரம்பிக்கும் உத்தேசம் இல்லை.

திரு. எ. ஆர். சுப்பையா : தலைவரவர்களே, குற்றாலத்தில் ஆரம்பிக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆரம்பத்தில், குற்றாலம் செங்கோட்டைதான் பட்டு உற்பத்திக்கு ஏற்ற இடம் என்று அறிவிக்கப்பட்டது. அதற்குரிய முறையில் விரிவாக அந்தத் திட்டத்தைச் செயல்படுத்தவில்லை. அதை உடனடியாகச் செயல்படுத்த அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்கோட்டையில் அந்த பார்ம் அட்மினிஸ்டிரேடிவ் சென்டராக இருந்து வருகிறது. மற்ற விவரங்கள் இப்போது இல்லை.

## *Wages for Plantation Labour*

* 384 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(a) whether it is a fact that the rates of minimum wages for workers of rubber, tea and coffee plantations in the State has been revised ; and

(b) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தோட்டத் தொழிலாளருக்கான குறைந்தபட்ச ஊதிய விகிதங்களைத் திருத்தியமைப்பது குறித்து அவசியமான விசாரணை செய்து மாநில அரசுக்கு ஆலோசனை சொல்வதற்காக, ஒரு குழு 30–5–1974 நாளிட்ட தொழிலாளர் வேலைவாய்ப்புத்துறையின் அரசாணை எண். 427–ன்படி நிறுவப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : சார், ரப்பர் தோட்டத்தில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு எந்தவிதமான குறைந்தபட்ச ஊதியமும் கிடையாது. அந்தப் பணியில் இருப்பவர்களுக்கு அன்–ஸ்கில்ட் ஒர்க்கரை

விடக் குறைவாக—3 ரூபாய்க்கும் குறைவாகக் கொடுக்கிறார்கள். அதே மாதிரி காப்பி பிளான்டேஷன் தோட்டத்தில் கேரளாவில் ரூ. 4.20 என்று சொன்னால், நம்முடைய மாநிலத்தில் ரூ. 3.70 ரூபாய் கொடுக்கப் படுகிறது. ஆகவே, 4 மாதத்திற்கு ஒரு தடவை பரிசீலித்து அவர்களுக்குக் குறைந்த பட்ச ஊதியம் கொடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, ரப்பர் மரத்திலிருந்து தினமும் பால் இறக்க முடியும். காப்பி, டீ, தினம் வருகிற சமாசாரம் இல்லை. 4 மாதத்திற்கு ஒரு குழு அமைத்து பரிசீலிப்பது என்பது சரியாக வராது. அரசு சும்மா இருக்கவில்லை. 12-2-1975-ல் திரு. பார்த்தசாரதி, டெபுடி லேபர் கமிஷனர் தலைமையின்கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, அவர்கள் கொடுத்த பரிந்துரையின் அடிப்படையில் ஒரு ஒப்பந்தம் எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் ஒப்புக்கொண்டு கையெழுத்திடப்பட்டிருக்கிறது. காப்பி, தேயிலைபற்றி அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருக்கிறது. ரப்பர் தோட்டத் தொழிலாளர்கள் பற்றி இன்னும் பிரச்சனை வரவில்லை. ரப்பர் பிரச்சனை வந்த பிறகு, அதற்கான காரியங்களை அரசாங்கம் மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய ஆலோசனை கூட இல்லாமல் அவர்கள் கலந்தார்கள். எல்லா தொழிற்சங்கங்களும் ஒப்புக் கொண்டு ஒரு ஒப்பந்தத்தை நிறைவேற்றி இருக்கிறார்கள். கேரளாவிற்கும், தமிழ்நாட்டிற்கும் உள்ள வித்தியாசத்தைப்பற்றி நாம் வாதிடத் தேவையில்லை.

திரு. எம். சுரேந்திரன் : சார், இந்தக் குழுவிலே யார் யார் இருக்கிறார்கள், இந்தக் குழுவின் ரிப்போர்ட்டை எவ்வளவு நாளைக்குள் சமர்ப்பிக்க வேண்டும், அந்தக் குழு எது பற்றி விசாரிக்க அதிகாரம் அளிக்கப்பட்டு இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அதிலே தொழில் அதிபர்களும், தொழிலாளர் பிரதிநிதிகளும் அடங்கியிருக்கிறார்கள். குழு உறுப்பினர்களின் பட்டியல் பெரிய பட்டியலாக இருக்கிறது. எல்லாத் தொழிற்சங்கத் தலைவர்களும் இருக்கிறார்கள். அதே போல் தொழில் அதிபர்களும் பல பேர் அதிலே அங்கம் பெற்று இருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைவரவர்களே, இந்த மலைத்தோட்டத்தில் பணியாற்றும் தொழிலாளர்களுக்குக் கொடுக்கும் ஊதியம் மிகமிகக் குறைந்த ஊதியம். வாரத்திற்கு 15 ரூபாய்க்கு மேல் கிடைப்பது இல்லை. அவர்களுக்கு அண்டை மாநிலங்களில் குறைந்த விலையில் அரிசி வழங்கப் படுகிறது. ஆகவே, அந்தக் குழு ஆராய்ந்து பார்த்து அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கிற வரையில், குறைந்த விலையில் உணவுப் பொருள் வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நான் ஏற்கெனவே சொன்னது போல், தொழிற் சங்கத் தலைவர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டு இருக்கிறார்கள். யார் யார் அங்கே அங்கம் வகிக்கிறார்கள் என்று சொல்லி விடுகிறேன். (குறுக்கீடு).





மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீண்ட பட்டியலாக இருந்தால் பின்னால் அவைமுன் வைத்துக்கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : மலிவு விலையில் அரிசி தருவது என்பது தோட்டத் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான முறையில் அந்தந்த மாவட்டத்தில் இருக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பொறுப் பேற்றுக்கொண்டு காரியம் ஆற்றுகிறார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

### *Wages for Handloom Weavers*

* 385 *Q.*—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether a representation has been received from the Tamil Nadu State Handloom Weavers' Association in August 1974 in regard to enhancing the wages of handloom weavers ; and

(*b*) if so, the action taken thereon ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் :—

(அ) ஆம்.

(இ) கைத்தறித் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்குக் குறைந்த அளவு ஊதியம் நிர்ணயிக்கப்படுவதற்கென அமைக்கப்பட்ட குறைந்த அளவு ஊதிய ஆலோசனைக் குழுவினுடைய பரிந்துரைகளின் அடிப்படையில் அரசாணை எண். 559, தொழிலாளர் வேலைவாய்ப்புத் துறை, 26-7-74-ன் படி கைத்தறி நெசவாளர்களுக்கான குறைந்த அளவு ஊதிய விகிதங்கள் அண்மையில்தான் அறிவிக்கப்பட்டதால் அவற்றை தமிழ்நாடு கைத்தறி நெசவாளர்கள் சங்கத்தின் கோரிக்கையின் பேரில் இப்போழுது மாற்றி அமைப்பது உசிதமாகாதெனக் கருதப்படுகிறது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த அறிக்கையின்படி நெசவாளர்களில் ஏதாவது தரம் பிரிக்கப்பட்டு இருக்கிறதா ? இன்ன வேலை செய்கிறவர்கள், இன்ன தரம், இன்ன கூலி என்று கூலி நிர்ணயம் செய்து இருக்கிறார்களா, அப்படி அளிக்கப்பட்ட கூலியை அவர்கள் பெறும் வகையில் கட்டாயப்படுத்தக்கூடிய திட்டம் இருக்கிறதா ? அதை எப்படி நடைமுறைக்குக் கொண்டு வந்து நெசவாளர்களுக்கு வேண்டிய உதவிகளை, நெசவாளர்களின் துயர்துடைக்க அரசு நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் :- நெசவாளர்கள் மத்தியில் நிறையத்தரம் இருக்கிறது.

Ordinary variety, Reeds 18 to 20, Reeds, Shuttle 1-6, Pedal 2, two ply varieties, per pair of check varieties, casement, art silk × cotton mixture), art silk..............

எல்லாவற்றிற்கும் தனியாக ரகங்கள் பிரிக்கப்பட்டு, அந்த அளவிலே கூலி நிர்ணயம் செய்யப்படுகிறது. இதுவரையிலும் கூலியை நிர்ணயம் செய்யும் தன்மை இல்லை. அதிலே தொழில் அதிபர்களும் இருக்கிறார்கள். அதேபோல் தொழிலாளர் தலைவர்களும் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் சேர்ந்து கூலி உயர்வைக் கவனித்துக்கொள்கிறார்கள். இது விரைவில் நடைமுறைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விளுக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி(*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. வ. ஆர். மாரிமுத்து: பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அட்ஜொர்ன்மெண்ட் மோஷன் முடிந்த பிறகு சொல்லுங்கள்.

திரு. வ. ஆர். மாரிமுத்து: இப்போது ஸீரோ அவர் இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஸீரோ அவர் இல்லை.

(திரு. எம். சுரேந்திரன், திரு. கோவை செழியன் எழுந்தனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒத்திவைப்புத் தீர்மானம் முடிந்தவுடன் எழுப்புங்கள்.

## 2. நடைமுறைக் கேள்வி

### விளு நேரம் முழுவதையும் விளுக்கள் கேட்கவே பயன்படுத்த அதிக விளுக்கள் எடுத்துக்கொள்வது குறித்து

திரு. கோவை செழியன்: கேள்வி நேரம் குறித்து பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சரி சொல்லுங்கள்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவரவர்களே, 9-முதல் 10-மணி வரை கேள்வி நேரம் என்று ஒதுக்கப்பட்டு இருக்கிறது. இது எங்களுடைய உரிமை. இதிலே கை வைப்பதற்கு யாருக்கும் உரிமை கிடையாது. ஆனால் கேள்வி நேரம் முடிந்து விட்டால் மது



அலுவலுக்குப் போகலாம். அவர்கள் தேர்ந்து எடுக்கிற கேள்விகள் குறைந்த அளவுக்குத் தேர்ந்தெடுக்கிறார்கள். அது ½ மணியில் முடிந்து விடுகிறது. முன்பெல்லாம் நிறையக் கேள்விகள் போட்டு இருப்பார்கள், அவற்றை மெயில் வேகத்தில் எடுத்துக்கொண்டு முடித்து விடுவீர்கள். இப்போது மிகக் குறைந்த கேள்விகளே வருகின்றன. அதுவும் தொகுதி பற்றிய கேள்வியாக வருகிறது. "கும்மிடிப்பூண்டியில் குளம் வெட்டினார்களா" என்று வருகிறது. அப்படிப்பட்ட கேள்விகளுக்கெல்லாம் ஓரே வார்த்தையில் பதில் சொல்லிவிடுகிறார்கள். ஆகவே, பாலிஸி சம்பந்தமான கேள்விகளை அனுமதிக்கவேண்டும். நாளைய தினத்திலிருந்து 10 கேள்விகள் அதிகமாக எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

## (3) ஒத்திவைப்புத் தீர்மானம்

### வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு உதவியை கோரப் போவதில்லை என முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பதிப்பும் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: "Serious situation arising out of Hon'ble Chief Minister's Statement in the House on 17th March 1975 disowning any aid for drought from Centre resutling in suffering the drought affected millions in Tamil Nadu".

என்ற பொருள் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் ஜே. ஜேம்ஸ், கே.டி.கே. தங்கமணி, ஆலடி அருணா ஆகியோர் 41-வது விதியின்கீழ் ஒரு ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி பேரவையை ஒத்தி வைத்து விவாதிக்கக் கூடிய அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைச் சுருக்கமாக மாண்புமிகு உறுப்பினர்கள் விளக்க வேண்டும். திரு. ஆலடி அருணா.....

*திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிலிருந்து இப்போது நிதி அமைச்சராக இருக்கிற திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசில் நிதி அமைச்சராக நீடிக்கிற வரையில் தமிழ் நாடு அரசு நிதி கேட்காது என்ற தீவிரமான முடிவை இந்த மன்றத்தில் வெளியிட்டு இருக்கிறார்கள். இந்தத் தீவிரமான முடிவை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் அவர்கள் வெளியிட்டதன் காரணமாக தமிழகத்தில் இருக்கிற 4½ கோடி மக்கள் மனதிலே ஒரு பெரிய அதிர்ச்சியை உருவாக்கியிருக்கிறது என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புகிறேன்.

நாட்டில் பஞ்சம், பற்றுக்குறை ஆகியவை பருவமழை தவறியதன் காரணமாக ஏற்பட்டு இருக்கிறது. வரலாறு காணாத அளவுக்கு இந்த நிலைமையேற்பட்டிருக்கிறது. எனவே, அரசு தீவிரமான நடவடிக்கைகளை மேற்கொண்டுதான் இந்தப் பஞ்சத்தைச் சமாளிக்க முடியும்,

வறட்சியைப் போக்க முடியும் என்றெல்லாம் நாட்டு மக்களிடையே ஒரு பலமான கருத்தைச் சொல்கிற போது வறட்சி நிவாரணப் பணிக்காக மத்திய அரசிடமிருந்து கையேந்தி வாங்க மாட்டேன் என்ற தீவிரமான முடிவை இந்த மாமன்றத்திலே சொல்வதால் தமிழகத்திற்கு எவ்வளவு பெரிய குந்தகம் ஏற்படுகிறது என்பதை இந்த மன்றத்தில் எடுத்துச் சொல்வது என்னுடைய கடமையாகும்.

மத்திய நிதி அமைச்சர் மாண்புமிகு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசியது பத்திரிகைகளில் வெளிவந்திருக்கிறது, அதுதான் முதலமைச்சரவர்களைப் புண்படுத்தியது, ஆத்திரமூட்டியது, ஆகவே, ஆவேசத்திற்கு ஆளாக்கியது என்று சொல்லக்கூடிய அளவுக்கு இருந்திருக்கும். வறட்சிப் பணிக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களுக்கு 6 இலட்சம் பேர்களுக்குப் பகிர்ந்தளிக்க ரூபாய் $7\frac{1}{2}$ கோடி கேட்டுள்ளனர். முன்பு கொடுக்கப்பட்ட வறட்சிப் பணம் சரியாக மக்களுக்குப் போய் சேரவில்லை ; இப்போது போய் சேருமா என்று பிரதமர் சொன்ன போது இங்குள்ளவர்களுக்குக் கோபம் வந்துள்ளது. இப்போது கொடுக்கிற பணம் மக்களுக்குப் போய்ச் சேர்ந்து, அதற்குரிய சரியான கணக்கை வைத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன், இன்னும் அதிகப் பணம் வேண்டுமென்றால் தருகின்ற கணக்கைப் பார்த்துத்தான் முடிவு செய்ய வேண்டும் என்ற முறையில் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது.

தியாகராய நகர் கூட்டத்தில் மத்திய நிதி அமைச்சர் திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் பேசியது பத்திரிகையில் வந்திருக்கிறது. இப்படி ஒரு மாநில அரசுக்குத் தருகின்ற பணத்துக்குக் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்று ஒரு கருத்தை மத்திய அமைச்சர் வெளியிட்டிருக்கிறார். இதற்கு ஒரு தீவிரமான பதிலை, வேகமான பதிலைக் கட்சி அடிப்படையில் அல்ல ; அரசியல் அடிப்படையில் முதலமைச்சரவர்கள் மறுநாள் ஒரு பொதுக் கூட்டத்தில் சொல்லியிருக்கிறார்கள். மத்திய நிதியமைச்சர் தெருவிலே எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் தெருவிலே பதில் அளித்திருக்கிறார்கள். அது ஒரு பெரிய அரசியல் மோதலாக முடிந்துவிட்டது.

மத்திய அமைச்சரின் கேள்விக்கு முதலமைச்சர் விளக்கம் அளித்தார். ஆனால் அது அரசியல் உட்கோட்டின்மீது கொண்ட மோதலாக முடிந்து விட்டது. அதனால் இந்த மன்றத்திலே வந்து, நிதியை வாங்கமாட்டேன், கையேந்தி நிற்கமாட்டேன் என்று சொல்வதன் மூலம் நம்முடைய திட்டப் பணிகள், ஆக்கப்பூர்வமான வேலைகள் பெரிதும் பாதிக்கப்படும். இந்தக் கருத்தினை வலியுறுத்தி ஒரு முடிவு காண்பதற்காகவே இன்றைய தினம் சர்வகட்சித் தலைவர்கள் எல்லாம் சேர்ந்து இந்தத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறார்கள்.



முதலமைச்சரவர்களின் தீவிரமான இத்தகைய முடிவிற்கு ஏற்கெனவே சர்வ கட்சித் தலைவர்கள் எல்லாம் தங்களுடைய கண்டனத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அதற்குப் பதில் அளிக்கும் வகையில் முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்கார் எங்கெங்கெல்லாமோ கோடிக்கணக்கில் செலவழித்துவிட்டது ; ஆனால் இந்த அரசுக்கு இல்லை என்று சொல்கிறார்கள் என்ற அடிப்படையில் தன்னுடைய கருத்தைவெளியிட்டார்கள்.

கடந்த 5-ந்தேதி என்று கருதுகிறேன். நாடாளுமன்றத்தில் சம்பந்தப்பட்ட மத்திய அமைச்சர் வெளியிட்ட ஒரு கருத்தை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

'The Minister stated that the Centre has provided Rs. 45·04 crores by way of Advance Plan Assistance to six States during 1974–75. This was to be adjusted against the quantum of Central Plan Assistance due to the concerned States. The States getting Advance Plan Assistancefor drought and flood relief were Gujarat Rs. 14·4 crores, Rajasthan Rs. 10·24 crores, Orissa Rs. 7·91 crores, Madhya Pradesh Rs. 6·5 crores, Assam Rs. 4 crores and West Bengal Rs. 2·25 crores என்று 1974–75-ம் ஆண்டுக்குச் வறட்சி நிவாரணப் பணிகளுக்காக மத்திய அரசாங்கம் எந்த அளவுக்குச் செய்திருக்கிறது என்ற தகவலைச் சொல்லியிருக்கிறார்கள். அந்த அடிப்படையில் நமக்கு $7\frac{1}{2}$ கோடி தருவதாகச் சொல்லி 6 கோடி ரூபாய் வரை இதுவரை தந்திருக்கிறார்கள். இது நாம் கூட நமக்கு கீழே இருக்கிற உள்ளாட்சி நிறுவனங்களுக்கு நிதி ஒதுக்குவது போன்றது தான். தொகையை மொத்தமாக ஒரே நேரத்தில் கொடுப்பதில்லை. வேலைகள் எப்படிச் நடக்கின்றன, பணம் எப்படிச் செலவழிக்கப்படுகிறது என்பதைப் பார்த்துதான் கொடுக்கிறோம். அந்த அடிப்படையில் மத்திய அரசு நமக்குத் தந்திருக்கிறது.

மத்திய அரசு கணக்குக் கேட்போம் என்று சொன்னால் எங்களுக்கு மட்டும்தான் அந்தக் கணக்கா என்று கேட்டார்கள். அப்படி மத்திய அரசு இந்த மாநிலத்தை மட்டும் கணக்குக் கேட்டிருந்தால் அது தவறு என்பதை நானும் ஒத்துக்கொள்கிறேன். நேற்று முன்தினம் மத்திய அமைச்சர் பதில் சொன்னபோது கணக்குக் கேட்டது இந்த மாநிலத்திற்கு மட்டுமல்ல ; அது எல்லா மாநிலங்களுக்கும் பொருந்தும் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, கணக்குக் கேட்டது தமிழ் நாட்டுக்கு மட்டுமல்ல ; இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கிற எல்லா மாநிலங்களும் வறட்சிப் பணி கணக்குகளைச் சரியாகக் காட்ட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, தமிழகத்தை மட்டும் அரசியல் நோக்கோடு, ஒரு உள் நோக்கோடு மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் கணக்குக் கேட்டார் என்று நான் கருதவில்லை. அதற்குக் காரணம் நாடாளுமன்றத்தில் திரு. கமலநாதன் அவர்கள் எழுப்பிய கேள்விக்கு சுப்பிரமணியம் அவர்கள் விளக்கமாக ஒரு நல்ல பதிலைச் சொல்லியிருக்கிறார்கள். எனவே, முதலமைச்சர் அந்தத் தீவிரமான முடிவில் இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

258 வறட்சி நிவாரணப் பணிக்குப் மத்திய அரசு உதவியை கோரப் போவதில்லையென முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பாதிப்பும் குறித்து.

[திரு. ஆலடி அருணா] [1975 மார்ச 19

தமிழ் நாட்டிலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கிற நெருக்கடியைத் தீர்ப்ப பதற்கு ஏற்ற பரிகாரம் தேடுவதற்கு ஏராளமான நிதி தேவைப்படுகிறது. இந்த நேரத்தில் நிதி வாங்க மாட்டேன், நிதி பெற மாட்டேன், கையேந்தி நிற்கமாட்டேன், மானம்தான் பெரிது என்று சொன்னால் இது முதலமைச்சருடைய மானத்தைப் பற்றியது அல்ல ; தமிழகத்திலே தவித்துக் கொண்டிருக்கிற மக்கள் நிலையைப் பொறுத்தது. அரசியல் குரோதத்தை மேடையிலே வைத்துக்கொள்ளலாம். அதை மக்கள் பிரச்சினையாக்க வேண்டாம். ஏற்கெனவே தவித்துக்கொண்டிருக்கிற மக்களுக்கு தமிழகத்தின் 4½ கோடி மக்களுக்கு முதலமைச்சருடைய கருத்து பெரிய திகைப்பாக இருக்கிறது. முதலமைச்சருடைய போக்கிலே சந்தேகம் உருவாகியிருக்கிறது. குறிப்பாக வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிற மக்களின் திகைப்பையும் சந்தேகத்தையும் போக்குகின்ற வகையில் ஒரு நீண்ட விவாதத்தை நடத்த இந்த சபையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, மிகத் தீவிரமான ஒரு முடிவினை முதலமைச்சராகிய நான் அறிவித்துவிட்டதாக நம்முடைய நண்பர் ஆலடி அருணா அவர்கள் இவ்வளவு தீவிரமாக முதலமைச்சர் சொல்லக் கூடாது என்று அமைதியான முறையில் கேட்டுக் கொண்டதை நான் உள்ளபடியே பாராட்டுகிறேன். ஏனென்றால் மத்திய அரசு எப்படி எல்லாம் மாநில அரசை வஞ்சிக்கிறது என்பதையும் மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்பதையும் கடந்த இரண்டு, மூன்று மாதங்களுக்கு முன்பு நண்பர் ஆலடி அருணா அவர்கள் பட்டியல் போட்டுக் காட்டினார்கள்.

மத்திய அரசு ஆந்திராவுக்கு எவ்வளவு கொடுத்தது, மாராட்டியத்திற்கு எவ்வளவு தந்தது, வங்கத்திற்கு வழங்கியது எவ்வளவு? ஆனால் தமிழ்நாட்டுக்கு மாத்திரம் மத்திய அரசு எவ்வளவு மாற்றான் தாய் மனப்பான்மையோடு நடந்துகொள்கிறது என்ற பட்டியலை இங்கே வெளியிட்டு ரொம்பத் தீவிரமாக இப்படிப்பட்ட ஒரு அரசியல் சட்டம் இருக்கவே கூடாது ; வங்கக் கடலில் தூக்கி எறிய வேண்டுமென்று அன்றைக்கு இதே அருணா அவர்கள் சொன்னார்கள். அவர் இன்று அந்தத் தீவிரத்திலிருந்து பல படிகள் கீழே இறங்கிவந்து, முதலமைச்சர் தீவிரமாக இருக்கக் கூடாது என்கிற ஒரு விருப்பத்தை—வேண்டுகோள் என்று சொல்லமாட்டேன், நான் யார், என்னை அவர் வேண்டிக்கொள்ள—அவர்களுடைய விருப்பத்தை இங்கே தெரிவித்து இருக்கிறார்கள்.

மத்திய நிதி அமைச்சர் அவர்கள் தெருவிலே பேசியதற்கு முதலமைச்சர் தெருவிலே பதில் சொல்லிவிட்டார். பிறகு இங்கே ஏன் அதைப் பற்றிப் பேசவேண்டுமென்று அருணா அவர்கள் கேட்டார்கள்.

நேற்று முன்தினம் நண்பர் கோவை செழியன் அவர்கள் அது பற்றி இங்கே ஒரு பிரச்சினையை எழுப்பியபோதுதான் நான் இதற்கான பதிலை இந்த மன்றத்தில் சொல்லவேண்டி வந்தது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு உதவியை கோரப் 259 போவதில்லையென முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பாதிப்பும் குறித்து.

[1975 மார்ச் 19] [டாக்டர் மு. கருணாநிதி]

கணக்குக் கேட்கிற நேரத்தில் இப்போது இருக்கிற கணக்கு வழக்கு முறைகள் எவ்வாறு இருக்கின்றன என்பதை நாம் அனைவரும் தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும்.

மத்திய அரசு தருகின்ற வறட்சி உதவித் தொகைக்கு அவ்வப்போது பணம் எவ்வளவு செலவழிந்தது என்பதற்கு மொத்தமாக ஒரு "யுட்டிலிசேஷன் சர்ட்டிபிகேட்", ஒரு அறிவிப்புக் கடிதம்—அதனை மாநிலங்கள் மத்திய அரசுக்கு அனுப்புகின்றன.

அவர்கள் கொடுத்திருக்கிற பணம் எப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்பதற்கான யுட்டிலிசேஷன் சர்ட்டிபிகேட்டினை மாநிலங்கள் மத்திய அரசுக்கு அனுப்புகின்றன. ஆனால் இதிலே தணிக்கை என்பது வேறு விஷயம்.

தணிக்கையைப் பொறுத்தமட்டில் அக்கவுண்டண்ட் ஜெனரல் வறட்சி செலவுகள் உட்பட மாநிலங்களிலே ஏற்படுகின்ற எல்லாச் செலவுகளையும் தணிக்கை செய்கிறார். வறட்சி செலவு மாத்திரமல்ல ; மாநிலத்தில் இருக்கிற எல்லாச் செலவுகளையும்—வறட்சி செலவு உட்பட—அக்கவுண்டண்ட் ஜெனரல் தணிக்கை செய்கிறார்.

அப்படித் தணிக்கை செய்து அவர் தருகிற அறிக்கையினை சட்டசபை பொது கணக்குக் குழு ஆராய்கிறது ; இந்தச் சட்டசபையும் ஆராயக் கடமைப் பட்டிருக்கிறது ; அதன்மீது கருத்துக்கள் கூறுகிற உரிமையைப் படைத் திருக்கிறது. அக்கவுண்டண்ட்-ஜெனரலின் அறிக்கையை டில்லியிலுள்ள ஆடிட்டர் ஜெனரல் ஆப் இந்தியா அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

இதுவே நம்முடைய அரசியல்சட்டத்தில் கணக்கு முறைகளைத் தணிக்கை செய்வதற்கு இப்போது வகுக்கப்பட்டிருக்கிற முறைகள் ஆகும். இந்த முறையைத்தான் நாமும் மற்ற மாநிலங்களும் கடைப்பிடித்து வருகிறோம்.

இப்போது உள்ளதுபோல ஒவ்வொரு தடவையும் வறட்சி நிவாரண நிதியைப் பெற்றுக்கொண்டு, அடுத்த தவணையாக நிதி கேட்பதற்கு முன்பு மாநில அரசு வழக்கமாக அனுப்புகிற யுட்டிலிசேஷன் சர்டிபிகேட்டினை—அந்தக் கடிதத்தை மத்திய அரசுக்கு அனுப்ப நமக்கு எந்தவிதமான தடையும் இல்லை. அதுதான் இன்றைக்கு அரசியல் சட்டத்தில் வகுக்கப் பட்டுள்ள இந்தக் கணக்கு வழக்குகள் முறையும் கூட. அதிலே நமக்கு ஆட்சேபனை கிடையாது. கொடுக்கப்பட்டதொகை எப்படிச் செலவழிந்துள்ளது என்ற கணக்கைப் பார்த்துத்தான் மேற்கொண்டு தொகை தரமுடியும் ; என்று சுப்பிரமணியம் பேசியிருக்கிறார்.

கொடுக்கப்பட்ட ஏழு கோடி ரூபாய் அல்லது ஆறரைக் கோடி ரூபாய் எப்படிச் செலவழிக்கப்பட்டிருக்கிறது என்று கணக்குப் பார்த்து பிறகுத்தான் மேற்கொண்டு தொகை தரமுடியும் என்று அவர் கூறியிருக்கிறார். இப்போது தரப்பட்ட தொகைக்கு அவருடைய கூற்றின் படி, கணக்கு தணிக்கை எல்லாம் பார்க்கப்பட்டு, அந்தத் தணிக்கை எல்லாம் முடிந்து, அறிக்கை எல்லாம் வந்த பிறகுதான்

## 260 வறட்சி நிவாரணப் பணிக்கு மத்திய அரசு உதவியை கோரப் போவதில்லையென முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பாதிப்பும் குறித்து.

[டாக்டர் மு. கருணாநிதி] [1975 மார்ச், 19

மறு உதவி தர முடியும் என்றால், தணிக்கை முடிய எத்தனை மாதம் ஆகுமோ, எத்தனை ஆண்டுகள் ஆகுமோ, சில நேரங்களில் இரண்டு ஆண்டு, மூன்று ஆண்டுகள் கூட தணிக்கை முடிய ஆகிவிடுகிறது. ஆகவே இந்த ஏழு கோடி ரூபாய்க்கான கணக்கு வழக்குகள் எல்லாம் தணிக்கை செய்து, சரியா தவறா என்று தணிக்கையை முடித்து விட்டு, மறுபடியும் கொடுப்பதற்கு அவர் கஜானாவில் கை வைக்கிற நேரத்திற்குள் தமிழ் நாட்டில் வறட்சி எல்லாம் முடிந்து விடும். இதை நாம் மனதில் எண்ணிப்பார்க்க மறந்து விடக்கூடாது. இந்த விவரங்கள் எல்லாம் இந்த மாநிலத்தில் நிதி அமைச்சராக இருந்து இப்போது மத்தியில் நிதி அமைச்சராக இருப்பவருக்குத் தெரியாதா என்றால் தெரியும். இவ்வளவும் தெரிந்து வைத்துக்கொண்டிருக்கிற ஒரு மத்திய நிதி அமைச்சர்—மாநிலத்தில் நிதி அமைச்சர் பொறுப்பேற்றவர்— வேண்டுமென்றே இந்த அரசின் மீது ஒரு மாசு கற்பிக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகின்ற நேரத்தில், "நான் மேற்பார்வை இடுவேன், இப்போது கொடுக்கப்பட்டிருக்கிற பணத்திற்கான கணக்கு எல்லாம் பார்த்து விட்டுத்தான், மேற்கொண்டு தருவேன்" என்றெல்லாம் சொல்வது அவருக்கு இருக்கின்ற நிதி அமைச்சர் என்கின்ற பொறுப்பை ஒரு அரசின் மீது களங்கம் சுமத்த வேண்டுமென்ற முறையில், மாசு கற்பிக்க வேண்டுமென்று, துஷ்பிரயோகம் செய்கிறாரோ, என்றுதான் நாம் எண்ண வேண்டியிருக்கிறது.

உணவுப் பிரச்சினையில் அரசியல் கூடாது என்று மாண்புமிகு மத்திய அமைச்சர் ஜகஜீவன்ராம் அவர்கள் மிகத் தெளிவாகச் சுட்டிக் காட்டி இருக்கிறார்கள். வறட்சிப் பணிகளைப் பார்வையிட வந்த மாண்புமிகு அமைச்சர் ஷிண்டே அவர்கள் இந்த வறட்சி நிவாரணப் பிரச்சினையில் அரசியலே கூடாது என்று தெளிவாகச் சுட்டிக் காட்டியிருக்கிறார்.

ஏன் ? வேலூர் மருத்துவ மனை விவகாரத்தில்கூட அரசியல் கூடாது என்கின்ற வகையில் கவனிக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் பிரம்மானந்த ரெட்டி அவர்கள் தமது கருத்தை மிகப் பெருந்தன்மையோடு வெளியிட்டார்கள்.

ஆனால், திரு. சி. எஸ். மத்திய நிதி அமைச்சர் என்ற முறையில் அவர் வெளியிட்டிருக்கிற இந்தக் கருத்தின்மீது தான் நாம் விமரிசனம் செய்கிறோமே அல்லாமல், சி. எஸ். அவர்களுக்கும் நமக்கும் தனிப்பட்ட எந்தவிதமான விரோதமோ கிடையாது. அவரைத் தன்னிலைப்படுத்தி வெறுப்பான வார்த்தைகளை அவர்மீது சொல்ல வேண்டுமென்ற எண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை அணுகவில்லை என்பதை மாத்திரம் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவர்கள் ராஜ்ய சபாவில், "நான் எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத்தான் சொன்னேன்" என்பதாகக் கூறியதாக ஒரு கருத்தை ஆலடி அருணா அவர்கள் எடுத்துச் சொன்னார்கள். தமிழ்நாட்டு மேடையில்-சொன்னதை எல்லா மாநிலங்களிலும் போய் சொன்னாரா என்றால் இல்லை. இந்த மாநிலத்தில்தான், பொதுக்கூட்டம் போட்டுச் சொல்லி

போவதில்லையென முதலமைச்சர் விடுத்த அறிக்கையும் அதன் விளைவாக மக்கள் பாதிப்பும் குறித்து.

1975 மார்ச், 19] [டாக்டர் மு. கருணாநிதி]

இருக்கிறார். எல்லா மாநிலங்களிலும் கணக்கு வழக்குக் கேட்கட்டும். இப்போது அரசியல் சட்டம் வகுத்திருக்கும் கணக்கு முறைப்படி சொல் லட்டும். நாம் கேட்கின்ற மாநில சுயாட்சி கூட, தமிழ் நாட்டிற்கு மாத்திரமல்ல, எல்லா மாநிலங்களுக்கும் சேர்த்துத் தான் கேட்கிறோம். அதைப் போலவேதான் மாநில உரிமைகளை எல்லா மாநிலங்களுக்கும்தான் கேட்கிறோம். ஆகவே இதில்கூட தமிழ் நாட்டு முதலமைச்சர் என்கின்ற முறையில் எல்லா மாநிலங்கள் சார்பிலே கூட நான் வாதாடக் கடமைப் பட்டிருக்கின்றேன். ஏனென்றால், எல்லா மாநிலங்களிலும் ஒன்றுதான் இந்த மாநிலம். அரசியல் சட்டத்திலே எந்த நடைமுறைக் கணக்கு வழக்குகளைப் பொறுத்து பின்பற்ற வேண்டுமென்று சொல்லப்பட்டிருக் கிறதோ அதன்படி நாம்நடந்து வரும்போது, இப்படிப் பேசுவதானது ம்மைமிகுந்த அடிமைகளாக நடத்துகின்ற ஒரு போக்கினை மத்திய அரசின் நிதி அமைச்சர் பொறுப்பேற்றிருக்கின்ற திரு. சுப்பிரமணியம் கொண்டிருக்கிறாரோ என்ற எண்ணத்தை ஏற்படுத்துகிறது. அந்த மனப்போக்கைத் தான் நாம் வேதனையோடு கண்டிக்கிறோம் என்பதையும் இந்த அவையில் எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

வரும் ஆண்டு மத்திய அரசிடம் நாம் வறட்சி நிவாரணப் பணிக்காகப் பணம் கேட்டிருக்கிறோம். அருணா அவர்கள் சொன்னார்கள், "தமிழ் நாடே அதிர்ச்சி அடைந்திருக்கிறது முதலமைச்சரின் பதிலைக் கேட்டு" என்று. தமிழ்நாடு அதிர்ச்சி அடைந்திருப்பதாக எனக்குத் தெரியவில்லை —சிலர் அதிர்ச்சி அடைந்திருக்கலாம். நான் மறுக்கவில்லை. ஆனால், அப்படிப்பட்ட ஒரு நெருக்கடிக்கு தமிழ்நாட்டை கழக அரசு கொண்டு போய் வைத்து விடாது என்பதற்காக நான் சில விவரங்களைத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவர்கள் குறிப்பிட்டிருக்கிற சர்வ கட்சியைச் சேர்ந்த தலைவர்கள் எல்லாம் கோரிக்கை விடுத்திருக்கிறார்கள் என்பதிலிருந்து இதிலே அச்சமோ, ஐயமோ யாருக்கும் ஏற்படத் தேவையில்லை.

வரும் ஆண்டில் மத்திய அரசிடம் வறட்சி நிவாரணத்திற்காக நாம் கேட்டுள்ள பணத்தை நமது நிதிநிலை அறிக்கையில் வருவாய் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை யாரும் மறந்து விடக் கூடாது. ஆனால், வறட்சிப்பணி செலவுக்கான மொத்தம் ரூபாய் 55 கோடி செலவு ஆகும் என்பதையும் சேர்த்துத்தான் நிதிநிலை அறிக்கையில் கணக்கிட்டு இருக்கிறோம் என்பதுநாம் கொடுத்துள்ள விவரத்தில் இருக்கின்றது. ஆனால், மத்திய அரசிடமிருந்து ரூபாய் 20 கோடி என்ற அளவில் வருவாய் வரும் என்று எடுத்துக் கொண்டு வரவு செலவுத் திட்டம் வைக்கப்பட வில்லை. வறட்சிப் பணி செலவுக்காக மொத்தம் ரூபாய் 55 கோடி செலவினக் கணக்கில் எடுத்துக் கொண்டு வரவு செலவுத் திட்டம் இருந்தது. அதன்படிதான் ரூபாய் 26 கோடி நமக்கு துண்டு விழும் என்று காட்டப் பட்டிருக்கிறது. இந்த 26 கோடி ரூபாய் துண்டு விழுவதை சரிக்கட்டத்தான் 6 கோடிக்கு வரிகளைப் போட்டிருக்கிறோம். மீதம் உள்ள 20 கோடி ரூபாய் துண்டு திட்டங்களுக்காக மத்திய அரசு மேலும் கூடுதலாக இவ்வளவு அளிக்க வேண்டுமென்று மத்திய அரசிடம் நாம் வற்புறுத்தி

இருக்கிறோம். மத்திய அரசு மாநிலங்களிலிருந்து வசூலிக்கின்ற வரி—
பொதுவாக விதிக்கப்பட்டிருக்கிற வரியில் இருந்து நமக்கு மேலும் அதிக
மாகப் பங்கு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். ஆகவே இவைகளை
யெல்லாம் வைத்து இந்த ரூபாய் 26 கோடி துண்டு விழுவதைச்
சரிக்கட்டவும், மேலும் சிக்கன முறைகள், சேமிப்பு மூலம் சரிக்கட்ட
முடியும் என்ற நம்பிக்கையும் இந்த அரசுக்கு இருக்கிறது என்பதை
நான் இங்கே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இப்படிச் சொல்கின்ற காரணத்தால் இந்த ரூபாய் 55 கோடியில்
குறையும் என்றோ, அல்லது இதன் காரணமாகத் திட்டச் செலவுகளிலிருந்
தும் திட்டத்தில் சேராத செலவுகளில் இருந்தும் குறைக்கப்பட்டு வறட்சிப்
பணிகளுக்குச் செலவழிக்கப்படுமா என்ற சந்தேகம் கூட யாருக்கும் எழத்
தேவை இல்லை. திட்டத்தில் இருந்தும் திட்டத்திற்கு அப்பாற்பட்டும் ஒதுக்
கப்பட்டுள்ள ரூபாய் 20 கோடி கிராம வளர்ச்சிப் பணிகளுக்கும் வேலை
வாய்ப்பு அளிப்பதற்கும் பயன்படும் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள
தொகை குறையாது என்கிற மனப்பூர்வமான உறுதியை இந்த மன்றத்
தில் நான் தெரிவித்துக் கொள்கிறேன். (கரவொலி) இப்படிச் செய்
தாலும்கூட, ஓரளவிற்கு நாம் மத்திய சர்க்காரிடம் வறட்சி நிவாரணம்
கேட்டோம் என்றாலும்கூட, ஓரளவிற்கு வறட்சி நிதி தேவைப்படுகிறது,
அவசியம் என்பதை நான் மறுக்கவில்லை. அதை நான் தமிழ்நாட்டுப்
பொது மக்களிடமிருந்தும் எதிர்பார்க்கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட
மக்களுக்கு வறட்சியால் பாதிக்கப்படாத மக்கள் உதவியைச் செய்ய வேண்
டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அதற்கு நண்பர் அருணா
அவர்கள் தந்துள்ள ஒத்தி வைப்புத் தீர்மானத்தின் மூலம் எனது
வேண்டுகோளை இந்த மன்றத்திற்கும், மன்றத்தின் சார்பாகத் தமிழ்
நாட்டு மக்களுக்கும் விடுக்க விரும்புகின்றேன்.

"வறட்சி நிவாரண நிதி அமைப்பு" என்ற ஒரு அமைப்பு பைனான்ஸ்
டிபார்ட்மெண்டில்—நிதி இலாகாவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது. அதற்கு
அனைவரும் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
அமைச்சர்கள் ஒரு மாதச் சம்பளம்—மாதா மாதம் அல்ல—ஒரு மாதச்
சம்பளத்தை வறட்சி நிவாரண நிதிக்காகத் தர வேண்டுமென்று முடிவு
எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாட்டினுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய
ஒரு மாதச் சம்பளத்தைத் தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே இருக்கிற சட்ட மன்ற உறுப்பினர்கள் தங்களுடைய ஒரு
மாதச் சம்பளத்தை (கரவொலி)—ஒத்திவைப்புத் தீர்மானத்தைக்கொண்டு
வந்திருக்கிற அருணா உட்பட—தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
சம்பளம் என்றால், ரூபாய் 200 அல்ல—அதிகப்படுத்தித் தந்திருக்கிற
ரூபாய் 450—அதைத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.
மேலவை உறுப்பினர்களும் தர வேண்டுமென்றும்—இந்த அவையிலி
ருந்து நான் வேண்டுகோள் விடுப்பதைத் தவறாகக் கருதக்கூடாது என்று
கேட்டுக்கொள்கிறேன்.



அரசாங்க அலுவலாளர்களுக்கு இந்த அரசு எவ்வளவோ செய்திருக்
கிறது. அதற்குப் பிரதி உபகாரமாக அல்ல—இந்த நாடும், நாட்டு
மக்கள் கஷ்டப்படுகின்ற நேரம்—அவர்கள்—அரசாங்க அலுவலாளர்கள்
ஆசிரியர்கள் ஒரு நாள் ஊதியத்தை—ஒரு மாதம் அல்ல—ஒரு நாள்
ஊதியத்தை அவர்கள் வழங்க வேண்டுமென்று அவர்களை எல்லாம்
கேட்டுக் கொள்கிறேன்.

தொழிலாளர்கள்பால் இந்த அரசு எவ்வளவு அக்கறை உடையது
என்பதைத் தொழிலாளர்கள் உணருவர். ஆகவே, ஆலைத் தொழி
லாளர்கள் தங்களுடைய ஒரு நாள் ஊதியத்தை வழங்கவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நிறுவனங்கள்—அவர்களும் இந்த நல்ல காரியத்திற்காக
நல்ல நன்கொடையைத் தருவார்கள் என்று நம்புகிறேன். கொடுப்பதாகச்
சொன்னால் மாத்திரம் போதாது. கொடுக்கவும் வேண்டுமென்று தனியார்
நிறுவனங்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே 9 ஆயிரம் பேருந்துகள் ஓடிக்கொண்டிருக்கின்றன.
கார்ப்பரேஷன்களையும் சேர்த்து, தனியார் பேருந்துகளையும் சேர்த்து,
பேருந்து ஒன்றிற்கு ஆயிரம் ரூபாய் என்று தருவார்களானால்; அதுவே
பெரும் தொகையாக அமையும். ஆகவே, அவர்களையும் கேட்டுக் கொள்
கிறேன்.

அந்த வகையில் இந்த வறட்சி நிவாரண நிதிக்காக அனைவரும் பண
உதவியைச் செய்ய வேண்டுமென்று இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு
பதில் கூறும் வகையில் வேண்டுகோள் ஆக விடுத்து, நண்பர் ஆலடி
அருணா அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற இந்த ஒத்திவைப்புத் தீர்
மானத்தை; இந்த என்னுடைய விளக்கத்திற்குப் பிறகு, இந்த
அவையை ஒத்திவைத்து, விவாதிக்க வேண்டிய அவசியம் இல்லை
என்பதைத் தலைவரவர்களே, தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொண்டு
முடித்துக் கொள்கிறேன்.

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, மாண்புமிகு முதல
மைச்சர் அவர்கள் குறிப்பிடுகிறபோது "கணக்குப் பார்த்து விட்டுத்
தான் கொடுப்பேன்" என்று மத்திய அமைச்சர் திரு. சி. எஸ். அவர்கள்
பொதுக்கூட்டத்தில் குறிப்பிட்டதைக் கூறினார்கள். கணக்கைப் பார்ப்பது
என்றால் வவுச்சரைப் பார்த்து கணக்கு சரியா இல்லையா என்று பார்ப்பது
அல்ல. அதற்கு மூன்று ஆண்டுகள் ஆகுமென்றெல்லாம்
கூறினார்கள். அது அப்படி அல்ல. திரு. சி. எஸ். அவர்கள் அப்படிக்
கூறவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அப்படி
அல்ல அவர் சொன்னது, இந்த எழு கோடி ரூபாய்க்கும் கணக்குப்
பார்த்து விட்டுத்தான் மேற்கொண்டு தொகை தரப்படும் என்று சொல்லி
இருக்கிறார்கள். அது எப்படி சாத்தியமாகும்?

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, கணக்குப் பார்ப்பது என்றால் வவுச்சரைப் பார்ப்பது அல்ல. பஞ்சாயத்து, முனிசிபாலிட்டி பகுதிகளில் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்று மத்திய அரசுக்கு நிதி அறிக்கை போகிறது. அந்தப் பகுதியில் பணம் முறையாகச் செலவழிக்கப் பட்டிருக்கிறதா என்று மேலெழுந்தவாரியாகப் பார்ப்பதே தவிர வவுச்சர் முதற் கொண்டு பார்ப்பது என்பதல்ல.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அதைத்தான் சொல்கிறேன். தலைவரவர்களே, அரசியல் ரீதியில் ஒரு அரசாங்கத்தைக் குற்றஞ் சாட்டுவதற்கு தேர்தல் நேரத்தில் அரசியல் லாபம் பெறுவதற்கு கட்சிகள் முயற்சி செய்வதை நான் தவறு என்று சொல்லமாட்டேன். மத்திய அமைச்சர் சி. எஸ். அல்லாமல் வேறொரு அமைச்சரோ, அந்தக் கட்சியைச் சேர்ந்த வேறு யாராவது ஒருவரோ மேடையில் பேசி இருப்பாரேயானால் இந்த அளவுக்கு அதைக் கவலையோடு அணுகியிருக்க மாட்டேன். பெரிதுபடுத்தி இருக்க மாட்டேன். இதை நான் கூறுகிற போது "தவறு நடக்கத்தான் செய்யும், நீ யார் கேட்பதற்கு?" என்று ஆணவத்தோடு கூறவில்லை.

(முற்பகல் 10-00)

மற்றவர்களைப் போன்று அல்லாமல் — பொறுப்புள்ள மத்திய நிதி அமைச்சர் என்னை அழைத்து, தொடர்புள்ள அமைச்சரை அழைத்து அதிகாரிகளை அழைத்து, தலைமைச் செயலகத்தில் ஒரு மகாநாட்டை நடத்தி, "ஏழு கோடி தந்திருக்கிறோம். என்ன என்ன காரியம் நடந்திருக்கிறது? எனக்குச் சில புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளைக் கவனிக்கவேண்டும். இன்னும் சீராகச் செய்யவேண்டும். இன்னும் வறட்சி நிவாரணப் பணியினைத் துரிதப்படுத்தவேண்டும்" என்று அறிவுரை கூறியிருப்பாரேயானால் நிச்சயமாக மத்திய நிதி அமைச்சருடைய அறிவுரையை எடுத்துக்கொள்ளத் தயாராய் இருக்கிறோம். அதைவிட்டுவிட்டு, இதை ஒரு அரசியலாக்கி, ஒரு பொதுக் கூட்டத்தில் அரசாங்கத்தின் மீது கருத்தைத் தெரிவித்தார்களே என்பது தான் எங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆதங்கம்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து: மத்திய நிதி அமைச்சர் தாம் குறிப்பிட்ட கருத்தைப் பற்றிப் பாராளுமன்றத்தில் தெளிவுப்படுத்திச் சொல்லியிருக்கிறார். அவர் அதைச் சொல்லிய பிறகும் என் முதலமைச்சர் தான் சொன்னதைத் திருத்திக் கொள்ள மறுக்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: எந்த மாநிலத்திலும் இப்போது அரசியல் சட்டத்தில் வகுத்துள்ள முறைகளுக்கேற்ப கணக்கு வழக்குகள் சம்பந்தமான முறைகள் இருக்கின்றன. அந்த வகையில் கொடுக்கிற பணத்திற்கு யுடிலிசேஷன் சர்டிபிகேட் கொடுத்தவுடன் பாக்கிப் பணத்தையும் கொடுப்பது வழக்கம். அதற்குப் பிறகுதான் கணக்கு வழக்குகளைப் பார்ப்பார்கள். அதற்கு மாறாக 7 கோடி கொடுத்தேனே, கணக்கைக் கொடு, அதற்குப் பிறகுதான் பாக்கியைத் தருவேன் என்று சொல்வது எந்த மாநிலத்தையும் புண்படுத்துவதாகத்தான் ஆகும்.





திரு. ஏ. ஆர். மாரிமுத்து: நிதி அமைச்சர் சுப்பிரமணியம் குறிப்பிட்டது யுடிலிசேஷன் சர்டிபிகேட் தான் என்று ஏன் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: திரு. ஏ. ஆர். மாரிமுத்து கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு சுப்பிரமணியம் வெளிப்படையாக தாம் குறிப் பிட்டது யுடிலிசேஷன் சர்டிபிகேட்தான் என்று சொன்னார்களானால் அதற்குப் பிறகு அதைப்பற்றி யோசிக்கலாம்.

DR. H. V. HANDE: Sir, there is another problem and I do not know how the Hon. Chief Minister is going to solve it. We are preparing the Budget on a particular basis and we are going to get Rs. 7 crores. In this particular context, it is better that we recast the whole Budget in the light of what the Hon. Chief Minister has stated. I am not support- ing the Hon. Thiru Subramaniam who has adopted a vindictive attitude against our State and we are not here to suppport him.

But in the larger interest of the State, I am making a suggestion. Let us forget personal politics and I would make a fervant and impassioned appeal to the Hon. Chief Minister to forget all these things we should forget and forgive—to consider how to carry on the Budget. We are here to give the money the Hon. Chief Minister wants. ஸ்பீக்கரை கேட்கவில்லை என்றாலும் அவரும் கொடுப்பார்.

In the larger intest of the State, I would appeal to him to recast the Budget in the light of what he has stated now..................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இதனால் பட்ஜெட்டில் எந்த விதமான மாறுதலும் வராது. வறட்சி நிவாரணத்திற்காக மத்திய அரசிடம் நாம் கேட்டுள்ளதை நமது வரவுக் கணக்கில் எடுத்துக்கொள்ள வில்லை. வறட்சி நிவாரணப் பணிக்கான 55 கோடி ரூபாய் நமது வரவுசெலவுத் திட்டத்திலேயே சேர்க்கப்பட்டிருக்கிறது. இதன்படிதான் நமக்கு 26 கோடி துண்டு விழுகிறது. இந்த 26 கோடியைச் சரிசெய்ய என்ன வழியிருக்கிறது என்பதுதான் பார்க்கப்படவேண்டும். இதில் பர்சனல் பாலிடிக்ஸ் வேண்டாம் என்று சொன்னார்கள். இப்போது அங்கே நெருங்கியிருக்கும் திரு. ஹாண்டே அவர்கள் சுப்பிரமணியம் அவர்களிடம் இந்த அறிவுரையைக் கூறவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

திரு. ஆலடி அருணா: தலைவர் அவர்களே, மத்திய நிதி அமைச்சர் அவர்கள் ஏற்கனவே தாம் தமிழக அரசுக்கு மட்டும் சொல்லவில்லை. எல்லா மாநிலங்களுக்கும் பொதுவாகத்தான் சொன்னேன் என்று சொன்ன பிறகும் நமது முதலமைச்சர் அவர்கள் தம்முடைய தீவிரமான முடிவில் இருப்பது நாட்டுக்கும் நல்லதல்ல, வறட்சிப் பணிக்கும் நல்லது அல்ல என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கோவைச் செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, நமது முதலமைச்சர் அவர்கள் பேசும்போது "மத்திய நிதி அமைச்சர் இதைச் சொல்லாது மற்ற அமைச்சர்கள் பேசியிருந்தால்........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: அடிப்படையையே தவருக எடுத்துக்கொள்ளக் கூடாது. நான் அப்படிச் சொல்லவேயில்லை. அண்ணா அவர்கள் சுப்பிரமணியம் அவர்களைப் பற்றி ஒரு முறை சொல்லும்போது சுப்பிரமணியம் ஐந்தும் மூன்றும் எட்டு என்று சொல்வார் அது வரையில் சரி. ஆனால் ஐந்து எப்படி வந்தது என்றால் இரண்டும் ஒன்றும் சேர்ந்து ஐந்து வந்தது என்பார் என்று அண்ணா குறிப்பிட்டார். அப்படி நான் சொல்லாத ஒன்றை எடுத்துக்கொண்டு "மற்ற அமைச்சர்கள் பேசலாம், சுப்பிரமணியம் பேசலாமா ?" என்று நான் சொன்னதாகச் சொல்வது தவறு. ஆளும் காங்கிரஸ் கட்சியில் இருக்கிற மற்ற உறுப்பினர்கள், பேச்சாளர்கள் கட்சியில் இருக்கிற வேறு யாராவது அரசியல் காரணமாகப் பேசினால் எடுத்துக்கொண்டிருக்க மாட்டேன் யாராவது அரசியல் காரணங்களுக்காகப் பேசினால் பொறுத்துக்கொள்ள லாம். ஆனால் பொறுப்பிலே இருக்கிற நிதி அமைச்சர் அப்படிப் பேசியது தான் எங்கள் உரிமையைப் பாதிக்கிறது என்று சொல்கிறேன்.

திரு. கோவை செழியன்: திரு. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிற காரணத்தினால் அவர் கேட்டது மனதைப் புண் படுத்திவிட்டது என்று சொன்னார்கள். காங்கிரஸ் கட்சித் தலைவராக அவர் தெருக்கூட்டத்தில்தான் பேசினார். அதற்கு தி.மு.க. தலைவர் ஒரு தெரு பொதுக்கூட்டத்தில் பதில் அளித்தவுடன் பிரச்சினை தீர்ந்து விட்டது. ஆனால் இந்த மன்றத்தில் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திரு. சுப்பிரமணியம் நிதி அமைச்சராக இருக்கிற வரைக்கும் நான் எந்தவிதமான வறட்சி நிவாரண நிதியும் கேட்கமாட்டேன் என்று சொல்கிறார். மத்திய அரசிடம் இருந்து நமக்கு பல கிராண்டுகள் வருகிறது. இதுவரை அவற்றைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறோம். இந்தமாதிரி சட்டமன்றத்திலே இவர் எழுந்து நமக்கு வரவேண்டிய நியாயமாகக் கொடுக்கவேண்டிய பங்கை திரு. சுப்பிரமணியம் இருக்கிற காரணத்தினால் நாங்கள் வாங்கமாட்டோம் என்று சொல்வது இந்த மன்றத்தின் உரிமையைப் பாதிக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வறட்சி நிதியைப் பொறுத்துத் தான் அவர் சொன்னார். அதைப பொறுத்துத்தான் நானும் பதில் சொல்லியிருக்கிறேன். நாம் எந்த உரிமையையும் விட்டுக்கொடுப்பதாக இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

(திருமதி சத்தியவாணிமுத்து எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: முதலமைச்சர் கொடுத்த விளக்கத் திற்குப் பிறகு நான் இந்த ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுக்க மறுக்கிறேன்.



திரு. எம். சுரேந்திரன்: சார் ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர். இந்த மன்றத்தில் 17 ஆம் தேதி கேள்வி கேட்கிறபோது ஒரு துணைக் கேள்விக்கு திரு மாதவன் அவர்கள் பதில் சொல்கிறபோது மத்திய அமைச்சர் மௌரியா அவர்களைக் கேவலமாக எண்ணும்படியான ஒரு பதிலைக் கூறியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் என்னுடைய கவனத்திற்கு இதை முன்கூட்டிக் கொண்டுவராமல் இதுபோல பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப முடியாது.

திரு. எம். சுரேந்திரன்: நான் நேற்றே இதை எழுப்ப எழுந்திருந்தேன். முடியவில்லை. இன்றைக்கு பாயின்ட் ஆப் ஆர்டர் என்று எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அதைப்பற்றி என்னிடம் எழுதிக் கொடுங்கள். நான் அதைப் பரிசீலிக்கிறேன். அடுத்ததாக மானியக் கோரிக்கைகள்.

## (4) 1975-76-ம் ஆண்டுக்கான நிதிக்கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

(அ) நிதிக்கோரிக்கை எண். 1—நிலவரித்துறை.

(ஆ) நிதிக்கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்.

(இ) நிதிக்கோரிக்கை எண். 47—ஜமீந்தார்களுக்கு இழப்பீடு.

(ஈ) நிதிக்கோரிக்கை எண். 11—மாவட்ட நிர்வாகம்.

Thiru B. VENKATASWAMY: Hon. Speaker, Sir, I thank you for giving me an opportunity to speak on the Demands relating to Land Revenue Department, Stamps-Administration, Compensation to Zamindars and District Administration.

I welcome the idea of giving patta books to the ryots. But at the same time I have to state that in Denkanikotta and Hosur, some ryots have not been given patta books, by the officials concerned. I request the Hon. Minister to look into this. The officers are exploiting the innocent poor ryots in the hope of getting something. In Anjatti firka, in Kallihonda the ryots have not been given patta books. In Hosur town, in Ramnagar area, for people who have built houses 10 years before, the pattas have not been given for the house-sites.

Regarding drought relief works, I want to say that it is being done excellently well. Just now the Hon. Chief Minister had brought some facts regarding drought relief. What I want to say in this connection is that metalling of the road, which is important and which is of permanent value has not been included in drought relief work. That should

be included. Culverts also should be included. Otherwise there will not be any permanent nature in the works. The Hon. Chief Minister has made a plea for more funds for drought relief. I hope he will get good amount and more relief works will be started.

Regarding drinking water I want to state that the position is acute in Hosur. The ladies are waiting in night times near the wells, in queue. The rush is so much for water. You must dig more bore wells. One drum of water costs Rs. 2 and each family in Hosur area is spending Rs. 5 on water alone per day. I request the Hon. Chief Minister to expedite water-supply works there. For the past six months there is no rain and people are suffering a lot. If you dig bore wells, it will go to 150 to 200′ and you may get water-supply throughout.

We are short of fodder .Andhra has had a good crop and they are prepared to supply us 2,000 tonnes of fodder. Mr. Krishnaswami Gounder, President, Farmers' Federation has met our Revenue Minister and requested him to arrange for transport of the same from Andhra to Madras. I hope it will be done and fodder will be distributed to poorer classes of people. I want to say that since we have to increase food output, electric connections may be given to pumpsets. All possible help in this connection should be extended to Hosur and Denkanikotta areas. I want to say in this connection that while saying one village is drought affected in a firka, the adjacent village is omitted. People suffering a lot and they come to us and say 'you have not done justice to us', 'we are suffering'. What I say is let Pagalur, Berigai, etc. in Anjatti firka be declared drought-affected. Let the whole firka be declared drought-affected. I have appealed to the Collector and the Sub-Collector. I request the Hon. Minister to do the needful.

I want to say in this connection that what Mr. C. Subramaniam has said is not in good taste. He should not say 'only after inspecting the drought relief work, I will give further money'. That is not in good taste, especially when good drought relief works are being done. By all means he can inspect the works. But he should not have said that. I request the Hon. C. Subramaniam to withdraw his words. What he has said is politically motivated. We should not play with the lives of people. I object to what he has said. Central Government must feel its responsibility and give us generous aid. At the same time, I request our Hon. Chief Minister also not to insist on his stand of not asking for Central aid for drought relief. Let Mr. Subramaniam withdraw his words first and let our Chief Minister give up his present stand also. Let the issue be amicably settled, so that there would be more money to be spent for drought relief works.

Coming to the other points, District Administration is an important item. Mass contact programme is good, But today it is not



effective and it should be made effective by having the scheme of spot disposals. The two months prescribed is not adhered to. Though a good scheme, the results have not been satisfactory.

At the district level, non-official Chairman should be there just like they have in Andhra Pradesh. As they do in Karnataka, here also village headmen shoud be liable for transfers. All village headmen who create trouble in the locality should be transfered to other parts. Mis-appropriation is common among village headmen and so, strong action should be taken against erring village headmen.

Finally, I want to stress one important matter. I understand that 500 temporary chain-men have been ousted. They have put in five years of service. I understand 10 units are working. These 500 people are overaged and they cannot seek other jobs. Their family is deprived of income and their condition is very bad. I request the Hon. Minister to look into their case sympathetically. Ways and means should be found to see that some employment opportunities are created for these persons. These chain-men will be in demand in taluks. I understand they have all come to represent and meet the Hon Minister. I request that their case may be viewed with sympathy and alternative employments may be provided to them. Thank you, Sir.

திரு. எம். கோபால்: பேரவைத் தலைவரவர்களே, வருவாய்த் துறை மானியத்தின் மீது அதை ஆதரித்து நான் ஒருசில வார்த்தைகளைக் கூற முற்படுகிறேன்.

குறிப்பாக, இந்த மானியத்தின் மூலமாக, எங்களுடைய கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏழை எளிய மக்களுக்குக் குடிமனைப் பட்டாக்களையும் விவசாயப் பட்டாக்களையும் தந்துள்ளார்கள். இன்னும் சொல்லப்போனால், சென்னையிலேயிருந்து 20 மைல்களுக்கு அப்பால்தான் பட்டா கொடுக்கவேண்டுமென்ற ஒரு சட்டம் இருந்தது. அந்தச் சட்டத்தைத் தளர்த்தி, என் தொகுதியைச் சேர்ந்த பாடி, அம்பத்தூர், குனைத்தூர் போன்ற பகுதிகளில் ஆயிரக்கணக்கான பட்டாக்களை வழங்கி இருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் எங்கள் மாவட்டத்திலேயே 43,000 பேருக்குப் பட்டா வழங்கத் திட்டமிட்டுக் கொடுத்து வருகிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நல்ல காரியம் செய்த கலைஞரை நாட்டு மக்களும் நாங்களும் பாராட்டிக் கொண்டே இருக்கிறோம். குறிப்பாகச் சொல்லப்போனால் அரிசன மக்கள் பட்டா என்பதையே கண்ணால் பார்த்தது கிடையாது. அந்த மக்களுக்கெல்லாம் பட்டா வழங்கியுள்ளார் கலைஞர் பெருந்தகை. தற்பொழுது வறண்டுள்ள வறட்சிப் பகுதிகளில் என் தொகுதியைச் சேர்ந்த எல்லா ஏரிகளிலும் அங்குள்ள ஏழை எளிய மக்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுத்து, அந்த மக்கள் வேலை செய்து வருகிறார்கள். அதை நான் பாராட்டுகிறேன், மக்களும் போற்றுகிறார்கள்.

[திரு. எம். கோபால்] [1975 மார்ச் 19

அது மட்டுமல்ல, இன்னும் சொல்லப்போனால், காங்கிரஸ்காரன் காலத்திலிருந்து, வெள்ளையன் ஆண்ட காலத்திலிருந்து செப்பனிடப்படாத தமிழ்நாட்டிலே மிகப் பெரிய ஏரியான, வீராணத்துக்கு அடுத்த பெரிய ஏரியான செம்பரம்பாக்கம் ஏரி செப்பனிடப்பட, கலைஞர் பெருந்தகை சுமார் ரூ. 75 இலட்சம் ஒதுக்கித் தந்து, அப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி உள்ளார்கள். ஆனால், அந்த ஏரியின் ஒரு பகுதியிலே சுமார் ரூ. 7 இலட்சத்திலே கரையை அகலப்படுத்தி உயர்த்தினார்களே தவிர, மற்ற வேலைகள் இன்னும் செய்யப்படவில்லை. அந்த வேலையைச் செய்வதற்கு ரெவினியூ துறை அமைச்சரவர்களையும், குறிப்பாக, பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களையும் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ள நான் ஆசைப்படுகிறேன்.

அடுத்த ஏரியானது, தென் ஏரி. தென் ஏரிக் கால்வாயைச் செப்பனிட சுமார் ரூ. 3 இலட்சம் ஒதுக்கித் தந்து அந்த வேலையை இப்பொழுது எடுத்துக் கொண்டார்கள். அது மட்டும் போதாது. அந்த ஏரியை எந்தக் காலத்திலும் ஆழப்படுத்தியது கிடையாது. கரையை உயர்த்தியது கிடையாது. அந்தத் தென் ஏரியைத் தற்போது, வறட்சியின் பொழுதே எடுத்துக் கொண்டால், அங்குள்ள ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்பு பெற முடியுமென்பதால் அதனைச் செய்ய வேண்டுமென்று தங்கள் மூலமாகக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து படப்பை ஓடையிலிருந்து வரத்துக்கு வருகிற தண்ணீர் வீணாகப் போகிறது. அந்த ஓடையில் சிறு அணையைக் கட்டி, படப்பை ஏரிக்குக் கால்வாய் வெட்டி, தண்ணீரைத் தேக்கினால், 2,000 ஏக்கர் சாகுபடி செய்ய வாய்ப்பு ஏற்படும். மீதமுள்ள தண்ணீரை மணிமங்கலம் ஏரிக்குத் திருப்பி விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மணிமங்கலம் ஏரியினுடைய ஆயக்கட்டு ஏறத்தாழ 5,000 ஏக்கர். அந்த ஏரியை, இந்த வறட்சிக் காலத்திலே ஆழப்படுத்தினால் அங்குள்ள ஏழை அரிசன மக்களுக்கு வேலை வாய்ப்புக் கிடைக்கும். இந்த நேரத்திலே, அப்படிப்பட்ட மிகப் பெரிய ஏரிகளை ஆழப்படுத்தினால், கரையை உயர்த்தினால் அடுத்த ஆண்டிற்கு மட்டுமல்ல, இரண்டு ஆண்டுகளுக்குத் தண்ணீரைத் தேக்கி வைக்க முடியும். ஆகவே, அந்த அளவு கழக அரசு செய்த வேலையை நான் மட்டுமல்ல, மக்களும் பாராட்டுகிறார்கள். இன்னும் சொல்லப் போனால், அரிசன மக்கள் எப்போதுமே பாராட்டுகிறார்கள். போற்றுகிறார்கள். காரணம், கழகத் தலைவர், இந்த மக்களுக்குச் செய்யக் கூடிய நல்ல பல காரியங்களை அந்த மக்கள் மனதிலே பதிய வைத்துக் கொண்டு, கலைஞர் அரசைப் பாராட்டி வருகிறார்கள்.

நான் மற்றொன்றும் சொல்ல ஆசைப்படுகிறேன். இப்பொழுது ஏறத்தாழ 50,000 வில்லேஜ் ஆபீசர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வயதை நிர்ணயிக்க வேண்டும். காரணம், வயதானவர்கள் சென்று ஆங்காங்கு வரியை வசூலிக்க முடியவில்லை. ஆகவே, தற்போதுள்ள 50,000 பேர்களுக்குப் பதிலாக, படித்த, எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாதமோ, இரண்டு மாதமோ பயிற்சி



1975, மார்ச் 19] [திரு. எம். கோபால்]

கொடுத்து, கணக்குப் பிள்ளை வேலை, முனிசீப் வேலை தந்தால் நன்றாக இருக்கும். அவர்கள் தங்கள் பணியைச் சுறுசுறுப்பாகச் செய்வார்கள். அதன் மூலமாக, அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். ஓய்வு பெற்ற பெரியவர்கள் வீட்டில் சௌக்கியமாக இருக்கலாம். அவர்கள் வயதான காலத்திலே கிராமத்திலே வசூல் செய்ய முடியவில்லை. அதன் காரணமாக, மேலதிகாரிகள், அவர்களுக்கு நோட்டீஸ் பிறப்பித்து, சஸ்பெண்ட் செய்வதால், அதைவிட்டு, வேலையில்லாமலிருக்கிற எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாணவர்களுக்கு அந்த வேலையைக் கொடுத்தால் நன்றாக இருக்கும் என்று என் சொந்தக் கருத்தாகச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

இந்த வறட்சி பணிபற்றி, எந்த அளவு நம்முடைய கழக அரசு, குறிப்பாகக் கழகத் தலைவர் அல்லும் பகலும் தூங்காமல் பாடுபட்டுக் கொண்டு, ஆங்காங்கு வறட்சிப் பணி நடைபெறுகிறதா இல்லையா என்று தனியாக ஒவ்வொன்றையும் தெரிந்து கொண்டிருக்கிறார். இப்படிப்பட்ட வறட்சி நேரத்திலே யாரும் தமிழ் நாட்டிலே சாகவில்லை. பட்டினிச் சாவு மற்ற நாடுகளிலே இருப்பதையெல்லாம் நாம் பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால், அந்த அளவு இல்லாமலிருக்க, உடனடியாக மக்களைக் காக்க அல்லும் பகலும் காக்கின்ற அரசு கழக அரசு கழக அரசு என்பதை நான் பெருமையோடு குறிப்பிடுகிறேன். அப்படிப்பட்ட மக்களுக்காகப் பாடுபடுகிற, காப்பாற்றுகிற, காப்பாற்ற எண்ணம் கொண்டிருக்கிற, திட்டம் தீட்டிக் கொண்டிருக்கிற கழகத் தலைவரை ஏனோ தானோ என்று பேசுவது முறையாகாது.

ஆகவே, நாம் சிந்திக்க வேண்டும். இப்படிப்பட்ட பணிகளை யாராவது வரவேற்கிறார்களா என்றால் கிடையாது. அவர்களுக்கு எதிர்க்கத்தான் தெரியுமே தவிர, பாராட்டுவது கிடையாது. ஆனால், பொதுமக்கள் பாராட்டிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, கழக அரசு எந்த அளவு எங்கள் சமுதாய மக்களுக்கு, குறிப்பாக அரிசன மக்களுக்கு, நன்மை செய்ய வேண்டுமோ, அந்த அளவு நன்மை செய்து வருகிறது.

(முற்பகல் 10–30)

இன்னும் சொல்லப் போனால் எந்தக் காலத்திலேயும், காங்கிரஸ் காலத்திலேகூட வீடு கட்டித் தந்தார்கள், 800 ரூபாய்க்கு. ஆனால் கட்டிய எட்டு மாதத்திலே விழுந்து விடும். ஆனால் கழகத் தலைவர் அவர்கள் 3 ஆயிரம் ரூபாயில் நல்ல காங்கிரீட் போட்டு அழகான வீடுகளைக் கட்டித் தருகிறார்கள். இந்திய சர்க்காரோ அல்லது இந்தியாவிலே உள்ள வேறு எந்த மாநில சர்க்காரோ செய்து காட்டாத ஒன்றை நம்முடைய கழகத் தலைவர் அவர்கள் செய்து காட்டுகிறார்கள். அதனால் எங்கள் ஆதி திராவிட மக்கள், அரிசன மக்கள் என்றென்றைக்கும் அவர்களைப் போற்றிக் கொண்டிருப்பார்கள், போற்றிக் கொண்டே இருக்கிறார்கள். நன்றியுடையவர்களாக இருப்பார்கள் என்று கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. ஆ. கு. சுப்பையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையத் தினம் வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற வருவாய்த்துறை மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல முன்வருகிறேன்.

[திரு. ஆ. கு. சுப்பையா] [1975 மார்ச் 19

வருவாய்த் துறை மானியம் சம்பந்தமாகப் பேசுகின்றபோது ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டுமென்று பல ஆண்டுகளாக ஒரு கருத்து இந்த மன்றத்திலேயே சொல்லப்பட்டு வருகிறது. இன்றைய தினம் அரசை ஆளுகின்ற கட்சியினரும் இந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு இந்த அவையிலே சொல்லியிருக்கிறார்கள். ஆனால் என்ன காரணமோ தெரிய வில்லை. அரசுக்கும் மக்களுக்கும் இடையே நந்தியைப் போல் ரெவின்யூ போர்டு இருப்பதன் காரணமாகப் பல்வேறு வேலைகள் உடனடி யாகச் செய்யப்படாமல் இருக்கிறது.

அடுத்தபடியாக, வறட்சி நிவாரணப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இது சம்பந்தமாக போர்டு மெம்பர்கள் விவரங்களைச் சேகரித்துத்தர வேண்டுமென்பது அவசியமில்லாத ஒன்றாகும். அங்கங்கே இருக்கிற கலெக்டர்கள் மக்களிடம் நேரடியாகத் தொடர்பு உடையவர்கள். அவர்கள் ஐ.ஏ.எஸ். படித்தவர்கள். ஆகவே அங்கங்கே இருக்கிற சட்டமன்ற பாராளுமன்ற கூட்டு மன்ற உறுப்பினர்களைக் கலந்து கொண்டு அந்த அந்தப் பகுதிகளிலே எந்த எந்தக் கிராமங்கள் வறட்சியால் பாதிக்கப்பட்டிருக் கின்றன, எந்த எந்தக் கிராமங்களில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று கண்டறிந்து விரைவில் அரசுக்கு அனுப்பி வைத்து விரைவாக அவர்களுக்கு நிவாரண வேலைகளைச் செய்து கொடுக்கமுடியும். ஆனால் ரெவின்யூ போர்டு மெம்பர்களை அனுப்பினால் அவர்கள் இங்கே யிருந்து பந்தாவாக போவது அவர்கள் கிராமம் கிராமமாகப் போகிறார்கள் என்று சொல்ல முடியாது. அப்படி அவர்களால் சென்று பார்க்க முடி யாது. ஏதோ சம்பிரதாயத்திற்காக செல்வது போல் சென்று வருகிறார் கள். அதன்காரணமாகக் காலதாமதம் ஏற்பட்டு அரசாங்கத்திற்குக் கெட்ட பெயர்தான் வருகிறதே தவிர இதை வைத்து சிலர் அரசியல் ஆதாயத் திற்குப் பயன்படுத்துவதற்குத்தான் பயன்படுகிறதே தவிர வேறு ஒன்றும் இல்லை. ஆகவே அது தேவையில்லை. ரெவின்யூ போர்டை எடுத்துவிட வேண்டுமென்று வலியுறுத்திக் கூறுகிறேன்.

கடன் ரத்திவைப்புச் சட்டம் கொண்டு வரப்பட்டு பாஸ் செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் சட்டம் வந்தபோதே அது சம்பந்தமாக எங்கள் கருத்துக்களைத் தெளிவாக எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அரசாங்கத்திட மிருந்து பெற்ற தக்காவிக் கடன்களையும் டிராக்டர்களுக்காக வாங்கிய கடன்களையும் வசூலிக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, கூட்டுறவு நாணயச் சங்கங்களிலிருந்து வாங்கிய கடன் களையும் வசூலிக்க நிர்பந்தப்படுத்துகிறார்கள். இப்படி வசூலிக்கச் சொல் வது நியாயத்திற்குப் புறம்பானது. இதை அரசாங்கம் கவனிக்கவேண்டும். நிலமே விளையாமல் இருக்கும்போது தாங்கள் கொடுக்கவேண்டிய குத் தகை பாக்கிகளையும் வரி பாக்கிகளையும் கொடுக்காமல் ரத்தி வைத்துக் கொண்டிருக்கும் போது தக்காவிக் கடன்களையும் சர்க்கார் கடன்களையும் கேட்பது சரியல்ல. ஆகவே, அவற்றையெல்லாம் இப்போது வசூலிக்க வேண்டாமென்று சொல்ல வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1975 மார்ச் 19] [திரு. ஆ. கு. சுப்பையா]

நம்முடைய அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கத்தைவிட அதிகமாக நிலங் கள் 3 லட்சத்து 61 ஆயிரத்து 121 ஏக்கர் ஒப்படைவு செய்திருக்கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். சுமார் 7 லட்சம் மக்கள் இதனால் பயன்பெற்றிருக்கிறார்கள். லட்சக்கணக்கான ஏக்கர் நிலம் ஒப்படைவு செய்வதற்கான தகுதி பெற்றிருந்தும்கூட, இதுவரை கொடுக்கப்படாமல் இருக்கின்றன. அவற்றையும் விரைவாகக் கொடுப்ப தற்கு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். சட்டத்திலே அதற்கு இடையூறுகள் இருந்தாலும், வெள்ளைக்காரன் காலத்திலே போட்ட விதி முறைகளை இன்னும் வைத்துக் கொண்டிருப்பதால் அவை ஒப்படைவு செய்வதற்குத் தடையாக இருப்பதாலும் அவற்றையெல்லாம் கவனித்து அவற்றை நீக்கி நிலமில்லாதவர்களுக்கு நிலம் கொடுப்பதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்.

நிலம் ஒப்படைவு செய்வது, வீட்டு மனைப் பட்டாக்கள் கொடுப்பது இவற்றிலே அரசாங்கம் தீவிரமாக இருக்க வேண்டும். மனுப் போட்டு பல ஆண்டுகள் ஆகியும் கூட இன்னும் கொடுக்கப்படாமல் நிறைய இருக் கின்றன. தாலுகா ஆபீஸ்களில் மனுக் கொடுத்தால் அது அங்கேயே பைசலாகக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். குடியிருப்பு மனைப் பட்டாக்களை அவசரம் அவசரமாகச் செய்து கொடுப்பதால் 1 சென்ட், 1½ சென்ட், 2 சென்ட், 3 சென்ட் என்று குறைந்த அளவிற்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. அது போதுமானதல்ல. இன்னும் லட்சக்கணக்கான மனைப் பட்டாக்கள் வழங்கப்படாமல் இருக்கின்றன. என்ன காரணம் என்று தெரிய வில்லை. அவர்கள் அதற்காக மனுக் கொடுத்தால் கூட சரியான முறை யிலே கவனித்து பட்டா கொடுக்க மறுத்துக் கொண்டிருக்கிறார்கள். அதனால் ஏதேனும் ஒரு பகுதியிலே பட்டா வழங்கப்படுவதும் இன்னொரு பகுதியிலே பட்டா கிடைக்கவில்லை என்ற நிலைமை இருக்கிறது. அது நியாயமில்லை. சகல பேர்களுக்கும் பட்டா கிடைப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அவர்கள் புழக்கத்திற்குத் தேவையான இடத்தைக் கொடுக்க வேண்டும். 1 சென்ட், 1½ சென்ட் என்று இல்லாமல் குறைந்த பட்சம் 3 சென்ட், 5 சென்டிற்குக் குறையாமல் குடியிருப்பு மனைகளைக் கொடுக்க வேண்டும்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

நிலச் சீர்திருத்தம் சம்பந்தமாகச் சட்டங்களைக் கொண்டு வந்திருக் கிறார்கள். காங்கிரஸ் அரசாங்கம் இருந்தபோது அப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருந்த திரு. ராமையா அவர்கள் சொன்னார்கள்; 30 ஏக்கர் வீதம் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். இதனால் 3 லட்சம் ஏக்கர் உபரி நிலம் கிடைக்கும் என்று சொன்னார்கள். நம்முடைய அரசாங்கம் 15 ஏக்கர் என்று கொண்டு வந்திருக்கிறார்கள். 30 ஏக்கர் என்று கொண்டு வந்தபோதே 3 லட்சம் ஏக்கர் உபரி வரும் என்றால் 15 ஏக்கர் என்று கொண்டு வந்திருப்பதால் குறைந்தது 6 லட்சம் உபரி நிலம் வரவேண்டுமென்று கணக்கு வருகிறது. ஆனால், 98,653 ஏக்கர்தான் உபரியாகக் கிடைத்திருக்கிறது. அதிலே 77 ஆயிரம் ஏக்கர்தான் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். இது எந்த அளவிற்கு சரியாக இருக்கும் என்பதை அரசு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்படிக் குறைந்து வந்ததற்குக் காரணமென்ன? நிலம் எங்கே போயிற்று? நிலம் இருக்கிறது. பினாமியாக எழுதி வைத்திருக்கிறார்கள். அவர்கள் கைவசமே நிலம் இருந்து கொண்டிருக்கிறது. அவர்களே பண்ணைகளை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் சட்டத்தின் பெயரால் அரசாங்கத்தை ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். உபரி நிலம் சரியான முறையிலே ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை. அவர்கள் தஸ்தாவேஜுகளைத் தயார் செய்து ஏதோ ஒரு காலத்திலே குத்தகைக்குக் கொடுத்ததாகவும் பயிர் செய்யக் கொடுத்ததாகவும் ஆதரைஸ்டு ஆபீஸர்கள் மூலமாக ஏற்பாடுகளைச் செய்து கொள்கிறார்கள். இப்படி அரசாங்கத்தை ஏமாற்றி வருகிறார்கள்.

நிலமில்லாத ஏழைகளுக்கு நிலம் கிடைக்கக் கூடிய வகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். நிலச் சொந்தக்காரர்கள் அவர்கள் நிலம் எந்தக் கிராமத்திலே இருக்கிறதோ அந்தக் கிராமத்திலே அவர்கள் இருந்தால்தான் அவர்களுக்குச் சொந்தம். இல்லையென்றால் சென்னை, பம்பாய், கல்கத்தா போன்ற நகரங்களிலே இருப்பார்களேயானால் அந்த நிலம் அவர்களுக்குத் தேவையில்லை என்று கருதிவிட வேண்டும். இப்படிப் பலபேர்கள் நிலங்களை வைத்துக் கொண்டு விவசாய வருமான வரியை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அரசாங்கம் இதைக் கண்காணித்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மனு நீதித் திட்டம் சிறந்த ஒரு திட்டமாகும். தாசில்தார், ஆர்.டி.ஓ. செய்ய வேண்டிய காரியமாக இருந்தால் அவர்களே செய்யவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே திங்கட்கிழமை சென்றால் சந்தைக் கூட்டம் போல் இருக்கிறது. சாதாரணமாக தாசில்தார் அலுவலகத்திலே முடிய வேண்டிய வேலைக்கு கலெக்டரிடத்தில் மனுக் கொடுக்கிறார்கள். அது தேவையில்லை. தாசில்தாரிடத்திலேயே கொடுக்கலாம். கலெக்டரிடத்திலே அந்த மனுவைக் கொடுத்தால் அதனால் காலதாமதம் ஆகிறது. கலெக்டர் அதைத் தாசில்தாருக்கு அனுப்பி அவர் அதை அங்கேயே வைத்துக் கொண்டு பல மாதங்கள் காலதாமதம் செய்யக் கூடிய நிலைமை இருக்கிறது.

இதைச் சுலபமாக்கும் முறையிலே தகுந்த உத்தரவுகளைப் போட்டு, தாசில்தார்கள் செய்யக்கூடிய அதிகாரத்திற்கு உட்பட்ட காரியங்களைத் தாசில்தார்கள்தான் செய்யவேண்டும். அதைப்போல ஆர். டி. ஓக்கள் செய்ய வேண்டிய காரியங்களை அவர்கள்தான் செய்ய வேண்டுமென்ற நிலைமைகளை ஏற்படுத்த வேண்டும். கலெக்டருக்கு காலையிலே 8 மணியிலேயிருந்து மாலை 5 மணி வரை மனுக்களை வாங்குவதுதான் வேலையாக இருக்கிறது. ஆயிரம் மனுக்களைக் கொடுத்தார்கள் என்றால் ஐந்து மனுக்கள் தான் கலெக்டரின் அதிகாரத்திற்கு உட்பட்டதாக இருக்கிறது. மற்றவைகள் ஆர்.டி. ஓக்கள், தாசில்தார்களின் அதிகாரங்களுக்கு உட்பட்டுச் செய்ய வேண்டிய வேலைகளாக இருக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

இம்மாதிரி குறைபாடுகள் இருக்கும் நேரத்தில் சட்டத்தை அமல் படுத்துவதிலும் குறைபாடுகள் உள்ளன. குத்தகைப் பதிவுச் சட்டம் கொண்டு வந்திருக்கிறோம். பினாமியாக குத்தகையை பல பேர்களின் பெயர்களில் எழுதி



வைத்துக்கொண்டிருக்கிறார்கள். யாரிடமோ சாகுபடிக்குக் கொடுத்திருக்கிறார்
கள். நடைமுறையிலே சாகுபடி செய்யக்கூடியவர்கள் வேறு, பதிவு
செய்யப்பட்டிருக்கக்கூடிய நபர்கள் வேறாக இருக்கிறார்கள். இதனால்
கிராமப்புறங்களில் சிக்கல்கள் ஏற்படுகின்றன, கலகங்கள் ஏற்படுகின்றன.
அடிதடி ஏற்படுகிறது. ஆகவே, யார், யார் அந்த நிலத்திலே இருக்கின்றார்
களோ அவர்களுக்குதான் குத்தகைகாரர் என்ற பதிவை பதிவு செய்ய
வேண்டிய நிலைமை இன்றைய தினம் ஏற்பட்டிருக்கிறது என்பதை தஞ்சை
மாவட்டத்துக்காரன் என்ற முறையிலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அங்கேயுள்ள கிராம அதிகாரிகள் தவறான கணக்கை எழுதுகிறார்கள்.
யார் விவசாயம் செய்கிறார்களோ அவர்கள் பெயரால் கணக்கு எழுது
வதில்லை. அந்த முறையிலே தப்பு செய்கிறார்கள். அம்மாதிரி தவறுகள்
இல்லாமல், சர்வே செய்து, பக்கத்து நிலத்திலே உள்ளவர்களைக்கூடக் கேட்
கலாம் யார் அதில் விவசாயம் செய்கிறார்கள் என்று. அம்மாதிரி நிலை
மையில் எழுதும்பொழுது அந்தக் கிராமக் கர்ணம் எழுதும் கணக்கை
அரசாங்கம் ஏற்றுக்கொள்ளக்கூடாது. வேறு நபர்களைப்போட்டு கணக்கு
எடுக்கச் சொல்லி, நேரடியாக சாகுபடி செய்யக்கூடியவர்களுக்கு அந்த
நிலங்களைக் குத்தகை பதிவுசெய்ய வேண்டுமென்று இந்தச்சந்தர்ப்பத்திலே
கேட்டுக் கொள்கிறேன்.

இம்மாதிரி முறையிலே என்னுடைய பலமான கருத்து என்னவென்றால்
ரெவின்யூ போர்டே அவசியமில்லை என்பது. ரெவின்யூ போர்டை ஒழித்து
விட்டு, இருக்கின்ற அதிகாரங்களை பரவலாக்கி, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு
அதிகமான அதிகாரங்களைக் கொடுக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்
சிபாரிசு செய்து அது ரெவன்யூ போர்டுக்கு வந்து அது அங்கே ஆறு
மாதங்கள், இரண்டு வருடங்கள் என்று ஆகிறது. பேப்பரை அங்கேயே போட்டு
வைத்திருந்துவிட்டு பிறகு இங்கே சர்க்காருக்கு, கோட்டைக்கு வருகிறது.
அந்த மாதிரி நிலைமை ஏற்படக்கூடாது, ரெவின்யூ போர்டை அவசியம்
கலைக்க வேண்டும், கீழேயுள்ள மாவட்ட ஆட்சி மன்ற தலைவர்களுக்கு அதிக
அதிகாரங்களை வழங்க வேண்டுமென்று சொல்லி முடித்துக்கொள்கிறேன்.

*திரு. என். கிட்டப்பா: தலைவர் அவர்களே, அவை முன்னுள்ள
வருவாய்த் துறை மானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய வேண்டு
கோளாகச் சில எண்ணங்களையும் வெளியிட நான் சில வார்த்தைகளைச் சொல்
வதற்குக் கடமைப்படுகிறேன்.

நமது முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஏறக்குறைய கால் நூற்
றாண்டுக்கு முன்னாலேயே ஏரோட்டும் மக்களெல்லாம் ஏங்கித் தவிக்கை
யிலே தேரோட்டம் ஏன் உனக்குத் தியாகராசா என்று கேட்டவர்கள் என்
பதில், அவருடைய தலைமையில் ஒரு தொண்டனாக பணியாற்றக்கூடியவன்
என்பதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். அத்தகைய அரசு
இன்றைக்கு நடைபெற்று வரும்பொழுது ஆட்சிப் பொறுப்பில் முதல்வராக
இருந்து காரியங்களை ஆற்றும் அடிப்படையில் ஏங்கித் தவிக்கும் விவசாயப்
பெருங்குடி மக்களுக்குத் தன்னுடைய ஆட்சியில் என்னென்ன காரி
யங்களை அவர்கள் செய்து வந்திருக்கிறார்கள், நன்மைகளைப் புரிந்திருக்
கிறார்கள் என்பதைத் தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்களின்
சார்பாக நன்றியுணர்வோடு சிலவற்றை நான் குறிப்பிடுகிறேன்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியதைப்போல காங்கிரஸ் ஆட்சி காலத்தில் 30 ஸ்டாண்டர்ட் ஏக்கரா என்று நில உச்சவரம்பு சட்டத்தைக் கொண்டுவந்தார்கள். ஆனால், 30 ஸ்டாண்டர்ட் ஏக்கர் தேவையில்லை, 15 ஸ்டாண்டர்ட் ஏக்கர் போதும் என்ற சட்டத்தை நமது கழக ஆட்சி, கலைஞரின் ஆட்சி கொண்டு வந்திருக்கிறது.

அதைப்போலவே, அப்பொழுது உச்சவரம்பிற்கு அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகள், குறிப்பாக கரும்பு தோட்டங்கள், மேய்ச்சல் நிலங்கள் என்ற பெயரால் கொடுக்கப்பட்டவைகளை, அந்த விதிவிலக்குகளை ரத்து செய்து அவைகளையும் உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நமது கழக ஆட்சி முக்கியமாக விவசாயப் பெருங்குடி மக்களுடைய கூலி நிர்ணயம் செய்யப்பட வேண்டுமென்று நடவடிக்கைகள் மேற்கொண்டுள்ளது. காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே பல போராட்டங்களை குறிப்பாக தஞ்சை மாவட்ட விவசாயப் பெருங்குடி மக்கள் நடத்தி வந்திருக்கிறார்கள். இந் தகூலி நிர்ணயத்திற்காக, கணபதியா பிள்ளை கமிஷனை அமைத்தும் தஞ்சை மாவட்டத்தில், தஞ்சாவூர், திருவாரூர் மன்னார்குடி போன்ற இடங்களில் முத்தரப்பு மாநாடுகள் நடத்தியும் விவசாயிகளுக்கான கூலி நிர்ணயத்தை நமது அரசு உருவாக்கிச் சிறப்பாக தந்திருக்கிறது.

குத்தகை உரிமைப் பாதுகாப்புச் சட்டம் என்று கொண்டு வந்து; உழுபவனுக்கே நிலப்பட்டாக்கள் வழங்கக்கூடிய தன்மைகள் அளிக்கப்பட்டிருக்கின்றன. இன்னும் விவசாயிகள்யார், யார் எந்தெந்த இடங்களிலே குடியிருந்து வந்தார்களோ அதை அப்படியே அவர்களுக்குச் சொந்தமாக்கும் நிலை உருவாக்கப்பட்டது. அந்த நிலங்கள் மடங்களுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், மிட்டா மிராசுகளுக்குச் சொந்தமான நிலங்களாக இருந்தாலும் அவைகளையெல்லாம், அவர்கள் குடியிருந்த இடங்களை அவர்களுக்கே உரிமை ஆணை செய்து தந்த நல்ல நிலைமையை நமது கழக ஆட்சியிலேதான் நாம் கண்டோம்.

அதுமட்டுமல்லாமல், 81–ஆம் பசலிக்கான குத்தகை பாக்கியைக் கட்டிவிட்டால் முன்னால் அளிக்க வேண்டிய பாக்கி அத்தனையும் தள்ளுபடி செய்கின்ற சிரிய புரட்சிகரமான சட்டத்தை நமது கழக ஆட்சியில் டாக்டர் கலைஞர் அவர்கள் கொண்டு வந்தார்கள். பல்லாண்டுகாலமாக தஞ்சை மாவட்டத்திலே உழுது பயிரிடுகின்றவர்கள் வயல்களிலே பாடுபடக் கூடியவர்கள் அந்தப் பலன்களை அனுபவிக்க முடியாமல், அப்படி அனுபவிக்க முடியாத நிலையிலே கூட நிலத்தைவிட்டுச் சாரிசாரியாக வெளியேற்றப்பட்டார்கள். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து, ஒவ்வொரு ஆண்டும் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்து சொல்லும் நிலைமையிருந்ததேயொழிய நிரந்தரமான பரிகாரம் இல்லாமலேயே இருந்தது. ஆனால், நமது கழக அரசு அப்படி குத்தகை பாக்கியை ஒத்தி வைப்பதை விட்டு விட்டு 81-ஆம் பசலிக்கான குத்தகையைக் கட்டிவிட்டால் அதற்கு முன்பு எவ்வளவு பாக்கியிருந்தாலும், யாருக்கு இருந்தாலும் மடங்களுக்கு அளிக்க வேண்டியிருந்தாலும், ஆதினங்களுக்கு



அளிக்க வேண்டியிருந்தாலும், மிட்டா மிராசுகளுக்கு அளிக்க வேண்டியிருந்தாலும் அவ்வளவையும் வஜா செய்கிற ரத்து செய்கிற புரட்சிகரமான சட்டத்தைக் கொண்டு வந்து நமது மாண்புமிகு முதல்வரவர்கள் கழக ஆட்சியிலே நிறைவேற்றிக் காட்டி இருக்கிறார்கள்.

இத்தகைய காரியங்களையெல்லாம் செய்து வரும் அடிப்படையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் விவசாயிகள் இன்றையதினம் மிக மிக ஆவலோடு ஒன்றினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள், நில உச்சவரம்புச் சட்டத்தை நமது இந்த மாமன்றத்திலே பல தடவைகள் புனர் ஆலோசனை செய்து முழுமைத்தன்மை வாய்ந்த உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் உண்மையான விவசாயிகளுக்குக் கிடைக்கவேண்டிய நல்ல நன்மைகள் பெரும்பாலும் செய்து வரப்படுகிறது என்றாலும் முழுக்க முழுக்க அவர்களுக்குத் தேவையான காரியங்கள் அனைத்தும் நிறைவேற்றப்பட்டு விட்டதா என்று பார்த்தால் நிறைவேற்றப்படவில்லை என்பதை இன்றைக்கு நமது அரசு உணர்ந்திருக்கிறது என்பதை நாமும் மற்றவர்களைப் போலவே நன்கு அறிவோம். இப்பொழுது ஒரு சட்டத்தை, குறிப்பாக நமது ஆதீனங்கள், மடங்கள், கோயில்கள் இவைகளுக்கெல்லாம் சொந்தமான நிலங்களை அவைகளை உழுது பயிரிடுகின்றவர்களுக்கு, குத்தகைக்குப் பயிரிடுகின்றவர்களுக்கு அவர்களே வாங்கிக் கொள்ளும் 'பர்சேசிங் ரைட்' கொடுக்கப்படுவதற்கான சட்டத்தைக் கொண்டுவர இருக்கிறது என்று பெரும்பாலான விவசாயப் பெருங்குடி மக்கள் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஏறத்தாழ 4½ இலட்சம் ஏக்கரா நிலங்கள் ஆதீனங்களுக்கும், மடங்களுக்கும் சொந்தமாக இருப்பதால் எந்தச் சட்டம் கொண்டுவந்தாலும் ஆதீனங்கள், மடங்கள் இவைகளைத் தழுவாத நிலைமையில், பாதிக்காத நிலைமையில் போய்விடுவதால் அவைகளைத் தொடாத நிலையில் போய்விடுவதால் விவசாயப் பிரச்சினையில் உழவர்களைப் பொறுத்தவரையில் முழுத்தன்மை வாய்ந்ததாக அமையாமல் போய்விடுகிறது என்பதை வருத்தத்தோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

ஒப்பற்ற தலைவர் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1960-ம் ஆண்டில்—20—4—1960-ஆம் தேதி இந்த மாமன்றத்தில் எடுத்துச் சொன்னதை இந்த நேரத்திலே சொல்வது—சுட்டிக் காட்டுவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

"மடாதிபதிகளுடைய துறவு பற்றிக் கொடுக்கப்பட்டிருக்கும் இலக்கணங்களை அமைச்சர் அவர்கள் படிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். பசித்தால் புசித்து, வியர்த்தால் குளித்து, நிழல் கண்ட இடத்தில் படுத்து சைவத் தொண்டு செய்ய வேண்டுமென்று மடாதிபதிகளுக்கு விதி சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது அவர்கள் பசித்தால் புசிக்க வேண்டுமென்று சொல்கிறார்களா என்றால், பல மடாலயங்களில் இருப்பவர்களுக்குப் பசியே எடுப்பதில்லை. அமைச்சர் செய்து வருகின்ற பாவ காரியங்களினால், சாதாரண மக்களுக்கு எடுக்கக்கூடிய பசி கூடத் தெரியாமல் அவர்களுடைய உடல் தழைத்திருக்கிறது. மடாலயங்களுக்கும், அற நிலையங்களுக்கும் பெரியவர்கள் எந்தக் காரணத்தைக் கொண்டு சொத்தை எழுதி வைத்தார்களோ அது இன்றைய தினம் தவறான

காரியத்துக்குப் பயன்படுத்தப்படுகிறது. இப்போது உழவர் பெருங்குடி மக்களைக் கசக்கிப் பிழிய பயன்படுத்துகிறார்கள். அவர்கள் தங்கள் வீட்டில் அழகான ஒரு காளை வளர்த்தாலும் அவர்கள் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. எந்த நேரத்தில் எந்தக் காளை மடாதிபதியின் கண்ணில் படுகிறதோ என்று அஞ்சிக்கொண்டிருக்க வேண்டி யிருக்கிறது. காளை பற்றி மட்டுமல்ல; அழகான கன்னியாக இருந்தாலும்.....................".

அண்ணா அவர்கள் சொன்னது.

"அழகான கன்னியாக இருந்தாலும் எந்த நேரத்தில் அவளுடைய கற்பு சூறையாடப்படும் என்று சொல்ல முடியாது. இந்த மாதிரி நிலையில் இருப்பவர்கள் உள்ள அறநிலையங்களுக்கு ஏன் 200 ஏக்கர் தருகிறீர்கள்? அது இல்லாவிட்டால் விபூதி மாடத்தில் விபூதி இருக்காதா; அது இல்லா விட்டால் வில்வ மரம் வளராதா? அது இல்லாவிட்டால் சைவ நெறி தழைக்காதா? எதற்காக, கோயில்களுக்கும், மடாலயங்களுக்கும் சொத்து இருக்க வேண்டும்? அவர்கள் வணங்குகின்ற சிவனே காவி கட்டிக் கொண்டு, புலித்தோல் போர்த்து இருக்கிறார் என்று பாடுகிறார்கள். இரும்புப் பெட்டியில் 8 லட்சம், கரும்புத் தோட்டத்தில் 10 லட்சம் என்று மனம் இல்லாமல் வைத்துக் கொண்டிருக்கும்போது எதற்காக 200 ஏக்கர் ஒதுக்க வேண்டும்? நீங்கள் மதத்தை வெறுக்கக் கூடிய சர்க்கார் அல்ல, மத ஸ்தாபனங்கள் வைத்திருக்கும் நிலங்கள் விஷயத்தில் அர சாங்கமே நேரடி மேற்பார்வை பார்த்து கிடைக்கக்கூடிய வருவாயிலிருந்து தர்மம் என்பதற்காக ஒதுக்கலாமே தவிர மறுபடியும் மடாதிபதிகள், குத்தகைதாரர்கள் கையில் இந்த நிலங்களை விட்டுவிடும் வாய்ப்பு இந்த முற்போக்கான சட்டத்தில் இடம் பெறக் கூடாது. ஆகையால் மடாலயங்கள், அற நிலையங்கள் ஆகியவைகளுக்கு ஒரு துளியும் நிலம் இருத்தல் ஆகாது என்பதை வலியுறுத்திச் சொல்ல ஆசைப்படுகிறேன்." என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் இந்த மன்றத்திலே எடுத்துச் சொல்லி யிருக்கிறார்கள்.

உழுபவனுக்கே நிலம் சொந்தம் என்ற அடிப்படையில் பேரறிஞர் அண்ணா அவர்களுடைய வழித் தோன்றலாக இன்றையதினம் தமிழகத் தின் நாலரைக் கோடி மக்களின் நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்து கொண்டிருக்கிற முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் அதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று விவசாயப் பெருமக்கள் சார்பாகப் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்தச் சட்டம் இப்போது நிறைவேற்றப்படாவிட்டால் அத்தகைய வாய்ப்பே ஏற்படாது; யார் வந்தாலும் அந்தச் சட்டத்தைக் கொண்டு வர முடியாது; கலைஞர் அவர்களால் மட்டுந்தான் கொண்டுவரமுடியும் என்ற நம்பிக்கை ஆழமாக, அழுத்தமாக இருக்கும் காரணத்தால் அதை நிறைவேற்றித் தரவேண்டுமென்று மிக மிகப் பணிவோடு கேட்டுக்கொள் கிறேன்.



என்னுடைய தொகுதியிலுள்ள பிரச்சினைகள் சிலவற்றை இந்த மானி யக் கோரிக்கை வாயிலாக எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். மாயூரம் நகரத்தில் அண்ணா வீதி என்று இருக்கிறது. அதிலே புறம்போக்கு இடம், காலியாக உள்ள தரிசு மனை 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. எத்தனை அதிகாரிகள் வந்து பார்த்துப் போக முடியுமோ அத்தனை அதிகாரிகள் வந்து போய்க் கொண்டிருக்கிறார்கள். ஆர். ஐ. வருகிறார், தாசில்தார் வருகிறார், ஆர்.டி.ஓ.வுக்குப் பேப்பர் போகிறது, டி.ஆர்.ஓ.-வுக்கு பேப்பர் போகிறது. இப்படி திரும்பத் திரும்பச் சுற்றிக் கொண்டிருக் கிறதே அல்லாமல் அது சென்னைக்கு வரவில்லை. மாயூரம் ஆர்.டி.ஓ. வாக இருப்பவரைப் பற்றி நான் அதிகம் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். அவர் யார் யாருக்கோ வேண்டியவர் என்று சொல்லிக் கொண்டு திரிகிறார். அந்த நிலத்தை எம்.எல்.ஏ.வுக்குக் கேட்கவில்லை, ஏற்கெனவே நிலம் உள்ளவனுக்குக் கேட்கவில்லை. நிலம் இல்லாத வனுக்காகத்தான் கேட்கப்படுகிறது. ஆட்சியின் எண்ணத்தைப் புரிந்து கொண்டு அதிகாரிகள் செயல்பட வேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டத்தான் இதை எடுத்துக் கூறுகிறேன்.

அடுத்து, மாயூரம் தொகுதியில் கடலங்குடி திருமேனியார் கோயில் என்ற பகுதி இருக்கிறது. அங்குள்ள ஒரு இடத்தை கடந்த 3, 4 ஆண்டுகளாகக் கேட்கிறார்கள். பள்ளி வாசலுக்காகக் கேட்கிறார்கள். அதை வேறு எதற்கும் உபயோகிக்க முடியாது. அந்த இடத்தைப் பள்ளிவாசலுக்குக் கொடுக்க வேண்டுமென்பதை இந்துக்களும் ஒத்துக் கொள்ளுகிறார்கள். இந்துக்களும் ஒத்துக்கொள்ளக்கூடிய அந்த நிலத் தைப் பள்ளிவாசலுக்குக் கொடுக்க வேண்டுமென்று தொகுதிவாழ் மக்களின் சார்பாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக, மாவட்டப் பிரிவினை பற்றியெல்லாம் மாண்புமிகு உறுப் பினர்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரை தமிழகத்தில் தலைசிறந்த மாவட்டமாக, தலைமை வகித்து நடத்தக்கூடிய மாவட்டமாகத் திகழ்வதோடு பெரிய மாவட்டமாகவும் திகழ்ந்து கொண்டிருக்கிறது. அந்தத் தஞ்சை மாவட்டத்தை நிர்வாக வசதிக்காக மேலத் தஞ்சை, கீழத் தஞ்சை என்று பிரித்திருக்கிறார்கள். மேலத் தஞ்சைக்குத் தலைநகராக தஞ்சை இருக்கிறது. இந்த மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கும்போது கீழத் தஞ்சை என்று பிரிப்பதற்குப் பதிலாக சோழ மாவட்டம் என்று பெயரிட்டு, அந்த சோழ மாவட்டத்திற்கு தமிழ கத்தை வாட்டுகின்ற துன்பங்கள், துயரங்களைப் போக்கும் வகையில் திறமையாக ஆண்டு வருகிற டாக்டர் கலைஞர் அவர்கள் பிறந்த பகுதியான திருவாரூரைத் தலைநகராகக் கொண்டு ஆரூர்ச் சோழர்–கருணாநிதிச் சோழர் மாவட்டம் என்ற பெயரை இடவேண்டுமென்று பேரவையினைக் கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி வணக்கம்.

**THIRU K. S. KOTHANDARAMIAH**: Hon. Mr. Deputy speaker, Sir, I thank you very much for giving me an opportunity to say a few

words on my cut motions on Demand No.I—Land Revenue Department Demand No. V—Stamps Administration and Demand No. 11—Distict Administration.

At the outset I wish to say that the Revenue Department is the fundamental Department on which the soundness and the strength of the entire Government stand. Though some of the powers of the Revenue Department have been taken away, yet it continues to be the fundamental department and in my opinion, the Revenue Department. should not be weakned. The Revenue Department should be strengthened. Otherwise the entire Government will gradually become weakened and it will create a lot of difficulties.

With regard to the issue of pattas there is a lot of delay in giving pattas. Some three years back the Hon.Chief Minister came to Hosur and distributed about thousand pattas. But there are thousands of people who have been cultivating lands for the last 20 or 30 or 40 years. The father had been cultivating and he had died. The sons are now cultivating. They have spent a lot of money over the lands and improved them. They depend upon the lands for their livelihood. Yet, pattas have not been given to them. The reason is this. The Revenue Inspector and Tahsildars do not prepare correct accounts. They do not prepare the number of pattas to be issued and submit the same to the Government. Therefore there is delay. Even when the Chief Mini[illegible] came and distributed pattas in a village, whereas people have to get 40 to 50 pattas, only 13 or 14 pattas were given. When asked they said that there were so many troubles. There is no trouble. Unless the pattas are given the cultivators have no control or any claim over the lands. They always have a feeling that they have not been given pattas.

Moreover, some of these pattas are joint pattas. Joint pattas have to be sub-divided and if it is not done, it is not possible to give them pass books individually. Without pass books the cultivators will not be able get loans from the Banks and other people. With regard to sub-division if you leave the mater to the pattadars and also to the whims and fancies of the officers there--Tahsildars and Revenue Inspectors—it will take some centuries to get pattas and divide joint pattas.

Some time back when the Revenue Board Member came to Hosur I had a discussion with him. I told him that the Government should take steps and see that the joint pattas are compulsorily sub-divided by the orders of the Government themselves. They can charge the pattadars and ask them to pay some thing. Otherwise, they will not be given the pass books. In one pass book there are number of joint



pattadars and only for one prominent man among them the pass book will be given. So, they begin to quarrel among themselves and they will not be able to get all the benefits.

Therefore, giving of pattas is important and the Government should call for complete details as to how many people are yet waiting to get pattas and give them pattas. Then only they will feel happy.

Moreover when people have not got pattas and they are cultivating lands for so many years, they put in an application statng that thee want certin poramboke lands. What happens is this. The Collector immediately calls the people and says 'if you cultivate mulbery on thr land, we can give pattas'. Then the amount of money and the labout spent on the land will go to dogs and the person becomes a new culeivator and he loses all his claim. Therefore, the Collector should be asked to prepare a correct account of the pattas or the people who are cult-ivating the lands and in the first instance patas should be given to them.

Then, if you ask them to cultivate mulbery and other things, that will be proper.

When mass contact took place, these people came and explained to the Collector. The time will be just half an hour or one hour. Within that short time the Collector will not be able to understand the whole thing and then people also are not satisfied. Therefore, with regard to the issue of pattas, sufficient care should be taken.

With regard to Hosur and Denganikottah taluks, when the Dharmapuri district was formed, subsequent to it, Denganikottah sub-taluk was made into a taluk. At that time what happened is this. The entire area of these two sub-taluks Hosurand Sub-taluk Denganikottah consists of about 1200 square miles. What they did was, they made Denganikottah an abnormal taluk and cut the area of Hosur taluk. The resulty is, Hosur is only 450 square miles and Denganikottah is about 750 square-miles.Denganikottah has got Anchetty area which Malnadu isandishilly It has not developed. Hosur has become small and Denganikottah has become a large area. Moreover some of the villages are very close to Hosur town. Because the taluk Office, Sub-Collector's Office are located at Denganikottah and the Officers are attached to Denganikottah, they have to travel a distance of about 20 to 22 miles.

We have got an army of Officers about 10 to 12 Tahsildars and Revenu Inspectors, Agricultural Officers, Seri-culture Officers all these peopl have to go to Denganikottah from the villages and they claim a lot of travelling allowance. For the last 15 years we are paying a huge amount,

[Thiru K. S. KOTHANDARAMIAH] [1975 மார்ச் 19

as Travelling allowance. On the other hand, if these officers are attached to Hosur Taluk Office, it will be easy for them and they will have to travel only 5 or 6 miles. The travelling allowance will also be less. People have been asking the Government to take away Peddabalagonda Palli and four other villages from the Denganikottah taluk and attach them to Hosur taluk. Myself and the hon. Member Thiru Venkataswamy, both are representing to the Government for the last so many years.

The difficulty is this. We explain the whole thing and we convince the Sub-Collector, we convince the District Collector. By the time they take action, they are transferred. The result is, we will have to begin the whole thing again. Again my request is this. All the villages close to Hosur should be transferred to Hosur Taluk Office area. Similarly certain villages in Kalamangalam Union-Kundumaranapalli, Byramangalam, H. Sethipalli and Bodichipalli should be attached to the Hosur Taluk Office. We have been requesting the State Government for the last ten years to do this, but the matter is still pending. I request, the Goverment to see that all these requests are granted without further delay.

(முற்பகல் 11-00)

As regards village officers, I am very glad that the Government have come forward to grant Rs. 7 or 8 as Dearness allowance for them and I thank them for it But the point is that they are not given proper treatment The Tahsildar and Revenue Inspector treat them with humiliation and they do not thin that the village officers form part of the Revenue Department. So, they come and complain to us and when we take up the matter with the Collector, again these people try to harras them.

Moreover, the village officers are not given stationery pencil, etc. which they require at the time of jamabandhi on a large scale. They alsc asked to purchase them and they have to spend money on that. the jamabandhi work is huge one and the village officers are to spend Rs. 300 to 400. Taxing them in this way must be stopped. After all they get a small amount as salary. Also the village officers prepare accounts till the time of jamabandhi and it has to be done at the firka office and not at the taluk office.

With regard to the District Development Council, we have stated so many times that it should have a non-official as the Chairman and not the Collector. In the neighbouring States like Andhra Predesh, only a non-official is the Chairman. Before the present setup, there, used to be a District Board and it was a democratic institution having a non-official as the President. Now we are having the Collector as the Chairman and he will not be able to take independent view or action to sstisfy the people



1975 மார்ச் 19] [Thiru K. S. KOTHANDARAMIAH]

When we, M.L.A.s go to him, he puts so many questions on our representations and we do not know what has become of them.. Even after two or three months, we do not get proper replies. Therefore, there should be a separate department to look into the representations of M.L.A.s and resolutions passed at the Council. They are piling up and in the meantime the Collector is transferred and another Collector comes and consequently no action is taken on the matter.

With regard to Mass Contact Programme, the officers do not see all the applications received from the people. Only important applications favourable to the officers are brought to the notice of the Collector. Many persons come and complain to us and so the Programme should be recognised in such a way that all the petitions of the people are properly scrutinised.

As regards drought relief, the Collector and the Deputy Collector are doing good things and we have faith in them. But the M.L.A.'s, as representatives of the people, have not been kept informed about the money spent and where it is spent and what is the nature of the scheme for drought relief. We are completely ignored in that regard. Therefore, I appeal to the Government, we have faith in them-to see that with regard to drought relief work M.L.A.'s are given some chance to serve the people. They do not want power and they only want to serve the people. With these words, I conclude my speech.

*திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே, இந்த வருவாய்த் துறை மானியத்தின் மீது பொதுவாக ஒன்றிரண்டு கருத்துக்களை மட்டும் சொல்லி முடித்துக்கொள்ளலாம் என்றிருக்கிறேன்.

நிலம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை உண்டு பண்ணுவதும், பிரச்சினைகளைத் தீர்ப்பதும் வருவாய்த் துறை வேலையாக இருந்து வருகிறது. உச்ச வரம்புச் சட்டமாக இருந்தாலும் சரி சாகுபடியாளர் நிலத்தை யார் பதிவு செய்து கொள்வது என்றாலும் சரி, உச்ச வரம்புக்கு மேலுள்ள மிச்ச நிலத்தை எடுத்து நிலமற்றவர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஏற்பாடாக இருந்தாலும் சரி, இந்தத் துறை தான் அவற்றையெல்லாம் செய்து வருகிறது. இவைகள் சீரான முறையில் நடைபெற்று வருகிறதா என்று மாண்புமிகு அங்கத்தினர்கள்—ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்களானாலும் சரி, எதிர் வரிசையில் உள்ளவர்களானாலும் சரி, எடுத்துப் பேசி, சரியான முறையில் அந்த நடவடிக்கைகள் நடந்து வரவில்லை என்பதை மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள்.

'உச்ச வரம்புக்கு மேல் மிச்சமுள்ள நிலத்தை நிலமற்றவர்களுக்கு விநியோகம் செய்யும் சட்டத்தில் ஒரு தவறு இருக்கிறது. தவறான ஒரு விதி இருக்கிறது. நிலம் சம்பந்தப்பட்ட வரை, யார் சாகுபடி செய்து வந்தார்களோ, அவர்களுக்கே நிலம் உடைமை ஆக்கக் கூடிய ஏற்பாடு

[திரு சோ. அழகர்சாமி] [1975 மார்ச் 19

அது. நிலச்சுவான்தார்கள், அந்த நிலத்தில் வேலை பார்க்கக் கூடியவர்களில் யாரையாவது ஒருவரை பினாமியாக, அவர் சாகுபடி செய்து வருகிறார் என்று எழுதி வைத்துக்கொண்டு ஹார்வெஸ்ட் செய்கிற நேரத்தில் குத்தகை நஷ்ட ஈடு வகைக்கு வந்துவிட்டதாக வைத்துக் கொண்டு அதன் மூலம் பண்ணைகள் பெரும் பண்ணைகளாகவே இருந்து வருகின்றன. அதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு சரியான ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

அதற்கான ஒரு ஆலோசனையையும் கூற விரும்புகிறேன். கேரளாவில் இப்படி ஒரு சட்டம்—விதிமுறை—இருக்கிறது. ஒரு லேண்ட் போர்ட் அமைக்கப்பட்டு அதில் அந்தந்த வட்டாரத்திலுள்ள சகல கட்சிகளைச் சேர்ந்தவர்களும் அதில் மெம்பர்களாக சேர்க்கப்படுவார்கள். அரசின் அதிகாரி ஒருவர் அதன் தலைவராக இருப்பார். அந்தக் குழுவின் ஆலோசனையின் பேரில் உச்ச வரம்பில் மிச்சம் இருக்கிற நிலம் சம்பந்தமாக எந்த மாதிரி விவசாயிகளுக்குத் தருவது போன்ற முடிவுகளை எடுக்கிறார்கள். அந்த மாதிரியான ஒரு போர்டை அமைத்து இந்த அரசும் அதுபோன்ற நடவடிக்கைகளை எடுக்க முன்வந்தால்தான் சட்டத்தின் பலன் மக்களுக்குக் கிடைக்கும் என்பதை இச்சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்தில் செங்கோட்டை தாலுகாவில் ஒரு சமபவம் நடந்திருக்கிறது. அங்கே 50 ஆண்டுகளாக விவசாயிகள் ஒரு நிலத்தில் சாகுபடி குத்தகைக்கு செய்து வருகிறார்கள். இந்த ஆண்டு இந்த நிலம் அந்த சாகுபடியாளர்களுக்குச் சொந்தம் ஆக வேண்டும். ஆனால் அந்த சாகுபடி செய்கிற விவசாயிகளை வெளியேற்ற வேண்டுமென்ற நோக்கத்தோடு செங்கோட்டை தாலுகாவிலுள்ள அந்த குன்னக்குடி என்கிற கிராமத்தில்—சர்வே நம்பர் 25-2—14 ஏக்கர், 15 பேர்கள் விவசாயம் செய்து வருகிறார்கள்—அவர்களுடைய பெயர்களைக் கூடக் கொடுக்கிறேன்; சண்முக நாடார், மாரி முத்து நாடார், குருசாமி நாடார், ஆகியோர் அவர்கள்—அவர்களை வெளியேற்ற வேண்டுமென்று நிலச்சுவான்தார்கள் செயல்பட்டிருக்கிறார்கள். சாகுபடி முடிந்து அறுவடை ஆகி நெல்களத்தில் இருக்கும்போது, அங்கே லெவிக்காக சம்பந்தப்பட்ட தாசில்தார், மற்றும் காவல் துறை அதிகாரிகள் வந்திருக்கிறார்கள். அந்த நேரத்தில், 10, 20 குண்டர்களை, ரௌடிகளைச் சேர்த்துக்கொண்டு,—10—3—1975 அன்று களத்திலுள்ள நெல்லை நிலச்சுவானின் ஆட்கள் எடுத்துச் சென்று விட்டார்கள். அதிகாரிகள் இருந்திருக்கிறார்கள். இருந்தும் அந்த நெல்லை அபகரித்துக்கொண்டு சென்று விட்டார்கள். இதில் தக்க நடவடிக்கை எடுத்து, சாகுபடி செய்து அந்த விவசாயிகளுக்கே அந்த நெல்லைத் திருப்பித் தருவதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, திருச்சி மாவட்டத்தில் பல பகுதிகளில் இனாம் நிலங்களில் கைத்தறி நெசவாளர்கள் குடியிருக்கிறார்கள். அவர்கள் உள்ள நிலத்தில் கூரையைப்போட்டு கொண்டு உட்கார்ந்து இருக்கிறார்கள். இனாம் சட்டத்தில் என்ன சொல்கிறார்கள் என்றால், யார் அந்த நிலத்தில் குடி இருக்கிறார்களோ அவர்களுக்கு அதைப் பட்டா செய்து கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இனாம் ஒழிப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட உடனே,



1975 மார்ச் 19] [திரு. சோ. அழகர்சாமி]

இனாம் ஒழிப்புச் சட்டம் கெஜட்டில் போட்ட உடனேயே, இனாம் ஒழிப்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற நிலத்தை அரசாங்கம் எடுத்துக் கொண்டு இருப்பதால் குத்தகை வசூல் செய்யும் பொறுப்பை அரசாங்கம் எடுத்துக் கொள்ளவேண்டும். சர்க்கார் எடுத்துக்கொண்ட நிலத்திற்கு சர்க்கார் நிலத்தீர்வை வசூலிக்க வேண்டுமென்று இருக்கிறது. அரசாங்கம் இதுவரை அதை வசூலிக்க நடவடிக்கை எடுக்கவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இனாம் மடத்திற்குச் சொந்தமான நிலங்கள் இருக்கின்றன. அதிலுள்ள பனை மரங்களை வெட்டிக் கொண்டு இருக்கிறார்கள். அது இனாம் சட்டத்தின் மூலம் தடுக்கப்படுமா?

பல நிலசீர்திருத்தச் சட்டங்கள் போட்டிருந்தாலும், ரெவின்யூ டிபார்ட்மெண்ட் சரியாக செயல்படாததால், ஆங்காங்கு உள்ள மக்களைக்கொண்டு "லேண்டு போர்டு" அமைத்து அதை மக்கள் கமிட்டியோடு இணைத்து, அவர்களுடைய ஆலோசனைகளைப் பெற்று, அந்தந்த வட்டாரத்தில் செயல்பட வேண்டும். இதைக் கேரளாவில் செய்து இருக்கிறார்கள். அந்த வகையில் இங்கே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படிச் செய்தால் நாம் போட்டிருக்கின்ற சட்டம் சாகுபடியாளர்கள் பதிவு செய்யும் சட்டமாக இருந்தாலும், உச்சவரம்புச் சட்டத்தின் மூலம் கிடைக்கப்பெற்ற மிச்ச நிலத்தை விநியோகிக்கும் சட்டமாக இருந்தாலும் சரி, அது நடைமுறைப்படுத்த வசதியாக இருக்கும். ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் கமிட்டிகளை நியமிக்க அமைச்சர் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. பெரி. சண்முகம் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, வருவாய்த்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகளைச் சொல்ல விரும்புகிறேன்

வறட்சியால் பாதிக்கப்பட்டு இருக்கும் இராமநாதபுரம் மாவட்டத்தில் திருவாடானை வட்டம் மிக மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இங்கே பலரும் சொன்னார்கள். சாதாரணமாக மற்றப் பகுதிகளில் நல்ல மழை பெய்து, நல்ல விவசாயம் நடைபெறுகிற காலத்தில் என்னுடைய வட்டத்தில் ஒரு பகுதி விளைவிற்கு வந்தும், மற்றொரு பகுதியில் விளைவு இல்லாமல் தஞ்சை போன்ற பெரிய மாவட்டங்களுக்குச் சென்று, அங்கே அவர்களுடைய வாழ்க்கையை நடத்தி, ஒரு சில மாதங்கள் கழித்து எங்கள் பகுதிக்கு வருவது நீண்ட நாட்களாக நடந்துவருகிற பழக்கமாகும்.

தற்போது ஏற்பட்டு இருக்கிற இந்த வறட்சிக்காக அரசு அத்தனை நடவடிக்கைகளையும் எடுத்து இருக்கிறது. குறிப்பாக, கண்மாய்க்கள் தூர் எடுத்தல், ஊரணிகளை ஆழப்படுத்துதல், குடிநீர்க் கிணறுகளை வெட்டுதல், குடிநீர் வாரியம் மூலம் அடிகுழாய் அமைத்துக் கொடுத்தல் போன்ற வேலைகள் துரிதமாக, மக்களுக்குப் பயன்படும் அளவுக்கு மிகச் சிறப்பாகச் செய்துதந்து இருக்கிறார்கள். ஆனால், மற்றொரு பகுதியைப் பார்த்தால் கடற்கரைப் பகுதி—சுந்தரபாண்டியபுரம், முத்துராமலிங்கபுரம்—போன்ற பகுதிகளைப் பார்த்தால் அங்கே எவ்வளவு கிணறுகளை அமைத்துக் கொடுத்தாலும் கூட அங்கே தண்ணீர் கிடைப்பது இல்லை. உப்புத்

தண்ணீர்தான் கிடைக்கிறது. ஆகவே, இந்த அடி குழாயைப் போட்டால் சில தினங்களுக்குத் தண்ணீர் கிடைக்கிறது, பிறகு கிடைக்காமல் போய் விடுகிறது. ஆகவே, குறிப்பாக இந்தக் கடற்கரைப் பகுதியில் இருக்கும் மக்களுக்கு—கண்ணங்குடி, திருவாடானை ஒன்றியங்களில்—அடி குழாய் கிணறுகள் நல்ல வகையில் போட்டுக் கொடுக்க வேண்டும், போர் வெல்ஸ் அதிகம் போட்டுத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேலும் நிரந்தரமாக விவசாயிகளுக்குப் பயன்படும் வகையிலும் பெரிய கிணறுகளைக் கட்டிக்கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திச் சொல்லிக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் இருப்பவர்கள் அனைவரும் விவசாயத்தை நம்பியிருக்கிறார்கள். மழை இல்லாத காரணத்தால் விவசாயம் செய்ய முடியாத நிலையில் இருக்கிறார்கள். பெரியார் திட்டத்தை திருவாடானை பகுதிக்கு விஸ்தரிக்கும் நல்ல வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால், எங்கள் பகுதி மக்கள் கொஞ்சம் நிம்மதியான வாழ்க்கை நடத்த முடியும். சென்ற ஆண்டு மாண்புமிகு சட்ட அமைச்சர் அவர்களின் உதவியின் பேரில், பெரியார் கால்வாயிலிருந்து இரண்டு முறை எங்கள் பகுதிக்குத் தண்ணீரை எடுத்துக்கொண்டு இருக்கிறோம். குறிப்பாக தனியாமங்கலம் செக்ஷன் மூலம் 12-வது வாய்க்கால் வழியாக மலம்பட்டி, பிராமணப்பட்டி எரியூர், நரையங்குடி, கருங்குளம், பட்டமங்கலம் வழியாக என் தொகு தியில் உள்ள எழுங்கோட்டை அணை மூலமாக தண்ணீர் 500 ஏக்கரும் மேற்படி அணையிலிருந்து ஐந்துகோட்டை கால்வாய் வழியாக ஐந்து கோட்டை கிராமத்திற்கு இதனால் ஏறத்தாழ 650 ஏக்கரும் பயன்பெறும். ஆகவே, பெரியார் நீர் அந்தப் பகுதிக்கும் விஸ்தரித்துக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் பிழைத்துக்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அந்த அளவில் திருவாடானைப் பகுதிக்குத் தேவையான நல்ல முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

எங்கள் பகுதியில் பல கண்மாய்கள் இருக்கின்றன. அவைகளெல்லாம் பழைய கண்மாய்கள். ஒரு முறை தண்ணீர் நிரம்பினால் விவசாயம் செய்ய முடியாது. இரு முறை நிரம்ப வேண்டும். அப்போதுதான் கதிர் அறுக்கும் அளவில் இருக்கும் பயிர்கள் காய்ந்து போகாமல் இருக்கும். அங்கேயிருக்கும் கண்மாய்கள் ஆழப்படுத்தப்படாமல் இருக்கின்றன. அவை சமதரைகள் போல் இருப்பதால் ஒவ்வொரு விவசாய காலத்திலும் கஷ்டமாக இருக்கிறது. ஆகவே, அந்தக் கண்மாய்களை இந்த நேரத்தில் ஆழப்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வறட்சியால் பாதிக்கப்பட்ட முகவை மாவட்டத்தில், கிழக்கு இராம நாதபுரம், திருவாடானை வட்டத்தில் உள்ள மக்கள் மிகவும் பாதிக்கப் பட்டு, இப்போதே வாழ முடியவில்லை, இன்னும் 7-8 மாதங்கள் எப்படி வாழ்வது என்ற கவலையில் இருக்கிறார்கள். அந்தப் பகுதிக்கு மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் கலைஞர், மற்றும் அமைச்சர்கள் வந்து, அந்த வறட்சி நிவாரணப் பணிகளை உடனடியாகத் தொடங்கு வதற்கு எல்லா வகையான உதவிகளையும் செய்து கொடுத்தமைக்கு





நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். வருகின்ற விவசாய காலத்தில் நல்ல மழை பெய்தாலும், விவசாயம் செய்ய அவர்கள் முயற்சித் தாலும், மாடுகள் வாங்க, விதைகள் வாங்குவதற்கு, மிகவும் கஷ்டப் படுகிறார்கள். ஆகவே, மாடுகள் வாங்க, விதைகள் வாங்க கடன் உதவி செய்தால் அந்தப் பகுதி மக்கள் நல்ல வகையில் வாழ முடியும். இல்லை யென்றால் அவர்கள் வாழ்க்கை மிகவும் மோசமாகி, நிரந்தரமாக நிம்மதி யாக வாழ முடியாத நிலைக்குப் போய்விடும் என்று தெரிவித்துக் கொள் கிறேன்.

ஆகவே, இராமநாதபுரம் மாவட்டம், குறிப்பாக கீழ இராமநாதபுரம், திருவாடானை பகுதிதான் மிகவும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதி என் பதை இங்கே யாரும் உணராதவர்கள் இல்லை. இந்த திருவாடானை வட்டத்திற்கு அந்தப் பகுதி மக்களுக்கு நிவாரண உதவியை இன்னும் சிறப்பாகவும், நிரந்தரமாகவும் நன்மைகள் பெற பல வாய்ப்புகளை இந்தச் சந்தர்ப்பத்திலே நிச்சயமாக செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வருவாய்த் துறையில் பணியாற்றக் கூடிய துணை தாசில்தார்கள், அதே போல கோவாபரேடிவ் துறையிலே பணியாற்றக்கூடிய சப்- ரிஜிஸ்டரார்கள் 1970-ம் ஆண்டுக்கு முன்பாக அவர்கள் மாத ஊதியம் ரூ. 200 பெற்றுக் கொண்டு இருந்தார்கள். 1970-க்கு பின்பு அதே அமைப்பில் உள்ள துணை தாசில்தார் அவர்களுக்கு ரூ. 350 -ம்அதே அமைப்பிலே உள்ள கோவாபரேடிவ் சப்ரிஜிஸ்ட்ரார் ஒருவருக்கு ரூ. 375 ஆக மாற்றி அமைக்கப் பட்டு இருக்கின்றது. இந்த ஒரு அமைப்பிலே இருக்கக் கூடிய அதிகாரிகள் ஒருவருக்கு ரூ. 350 ஆகவும், மற்றவர் களுக்கு ரூ. 375 ஆகவும் இருக்கக் கூடிய இந்த வித்தியாசத்தை முறை யாக இரண்டு பேருக்கும் ஒரே அமைப்பாகச் செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டு என்னுடைய தொகுதி, திருவாடானை தொகுதி யில் சிறப்பான திட்டம், இந்தப் பகுதியில் உள்ள மக்கள் ஓரளவு நிம் மதியாக வாழ வழி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டு இந்த வாய்ப்பு தந்தமைக்கு நன்றி செலுத்துகிறேன். வணக்கம்.

*திரு. பெ. சௌந்தரபாண்டியன் : சட்டப் பேரவைத் தலைவர் அவர் களே, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களால் கொண்டு வரப் பட்டு இருக்கின்ற இந்த மான்ய கோரிக்கைமீது எங்களுடைய கட்சியின் சார்பாகக் கொடுக்கப்பட்டு இருக்கின்ற வெட்டுத்தீர்மானத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்களை இந்த அவையில் சொல்வதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மான்ய கோரிக்கையில் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர் கள் வறட்சிப் பணிகளைப் பற்றி விவரமாக இங்கே எடுத்து உரைத்து இருக்கிறார்கள். வறட்சிப் பணிக்கு நாம் எவ்வளவு தொகை ஒதுக்கினா லும் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயமாக வரவேற்பார்கள். என்னுடைய கருத்து எல்லாம் ஒதுக்கிய தொகையை எந்த அளவுக்கு நாம் செலவழிக்கி றோம் ஒப்படைக்கப்பட்ட பணியை எந்த அளவுக்கு நிறைவேற்றுகின்றோம்,

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 மார்ச் 19

பணிகள் செம்மையாக நடந்து இருக்கின்றனவா, பணம் ஒழுங்காகக் கணக்கிடப்பட்டு செலவழிக்கப்படுகிறதா என்று பல பிரச்சனைகளை இந்த அரசு ஆராய வேண்டும் என்பதுதான்.

நாம் கொடுக்கிற பணம் முறையாக செலவழிக்கப்படும் என்பதில் இந்த அரசாங்கம் கண்ணும் கருத்துமாக இருக்க வேண்டும். ஏன் என்றுல் பல பகுதிகளில் ஏற்கனவே போடப்பட்ட சாலைகளுக்கு பணத்தை ஒதுக்கி இருக்கிறுர்கள் என்கிற குறைபாடுகள் ஏராளமாக இருந்து வருகிறது. ஆகவே அப்படிப்பட்ட சூழ்நிலையில் எப்படிக் கண்காணித்து சீர்படுத்த முடியும் என்பதை மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் சிந்தித்து பரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு வட்டத்திலும் வறட்சிப் பணியை நிறைவேற்றுவதற்காக கொடுக்கின்ற பணத்தை செலவிடுவதற்காக, செய்ய வேண்டிய பணியை உறுதி படுத்துவதற்காக வட்ட அளவில் வறட்சி அதிகாரியை இந்த அரசாங்கம் நியமித்து இருக்கின்றது. இந்த அதிகாரி அங்கே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களை, ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவர்களை, அதிகாரிகளை அழைத்து எந்த எந்த பகுதிக்கு எந்த திட்டத்தை எடுத்துக் கொள்ளலாம் என்று கேட்டு, அதை முடிவு செய்து அதற்காக நிதி ஒதுக்குகிற பொறுப்பினை ஏற்று இருக்கிறுர். இந்த நேரத்தில் சாலை போடுவதற்காக ஏற்கனவே உள்ள சாலையைப் புதிதாக வறட்சிப் பணியில் செய்ய வேண்டுமென்று சிலர் வலியுறுத்தி தொகைகையயும் பெற்று இருக்கிறுர்கள். மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய தொகுதியைப்பற்றி நன்றுகத் தெரிந்து இருக்கின்றது என்ற காரணத்தால் ஒரு உதாரணத்தை மட்டும் சொல்கிறேன். பிள்ளபாளையம் மத்திப்பட்டி சாலையை ஓராண்டுக்கு முன்புகூட பழுது பார்ப்பதற்கு ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து செலவழித்து இருக்கிறுர்கள். ஆனுல் வறட்சி நிதியில் இந்த சாலையை மீண்டும் செப்பனிட நிதி ஒதுக்கம் தேவை என்று கேட்ட நேரத்தில் நான் எவ்வித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. இதை ஏன் சுட்டிக் காட்டுகிறேன் என்றுல் இது போன்ற சாலைகள் பழுது பார்ப்பதற்கு ஒதுக்கப்படுகிற பணம் தேவையற்றது என்து என் கருத்து ஆகும். இங்கே தான் சில தவறுகள் நடக்கின்றன. இப்படிப்பட்ட தவறுகள் நடக்காமல் இருப்பதற்காக மாண்புமிகு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு வட்டத்திற்கும் உள்ள அந்த வறட்சி அதிகாரியுடன் ஒவ்வொரு தொகுதியைச் சார்ந்த சட்ட மன்ற உறுப்பினரையும், ஊராட்சி ஒன்றிய பெரும் தலைவரையும் இன்னும் மக்கள் சார்பாக ஒருவரையும் சேர்ந்த குழு நியமித்து, வேலை ஒழுங்காக நடைபெற்றுள்ளதா? ஒதுக்கிய தொகை முழுமையாக செலவிடப்பட்டு இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு குழு அமைத்தால் உள்ள படியே சொல்கிறேன், வறட்சிப் பணி செம்மையாக நடைபெற ஏதுவாக இருக்கும். இதை இந்த அரசாங்கம் கௌரவம் பார்க்காமல், முதலமைச்சர் அவர்கள் குழு அமைக்கத் தேவை இல்லை என்று சொல்லிவிட்ட காரணத்தால் பிடிவாதம் பிடிக்காமல் நாட்டு மக்களின் நன்மைக்காகவும் இந்த மாமன்றத்தில் நாம் ஒதுக்கி இருக்கின்ற பணம் முறைப்படி செலவழிக்கப்படுகிறதா என்று கண்காணிக்க தயவு செய்து;



1975 மார்ச் 19] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

ரெவின்யூ அமைச்சர், குழு அமைப்பதற்கு இந்த மாமன்றத்தில் நல்ல அறிவிப்பை அறிவிக்க வேண்டும் என்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரசாங்கத்தின் கொள்கையைத் திட்டவட்டமாக அறிவித்து இருக்கிறுர்கள். நிலம் அற்ற ஏழை மக்களுக்கு நிலங்கள் இயன்ற அளவு ஒப்படை செய்து கொடுக்க வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது இந்த அரசாங்கம் என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். பேரறிஞர் அண்ணு பொறுப்பு ஏற்ற பிறகும், இன்றைய முதலமைச்சர் கலைஞர் கருணுநிதி அவர்கள் பொறுப்பேற்ற பிறகும் நிலப் பட்டா வழங்குவதில் நல்ல தீவிரம் காட்டி இருக்கிறுர்கள். இதை உள்ளபடியே நான் வரவேற்கிறேன், இருந்தாலும் சில பல இடங்களில் எப்படிக் குறைபாடுகள் இருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமையாக கருதுகிறேன்.

என்னுடைய தொகுதியிலே ரங்கநாதபுரம் கட்டளை, கீழ மாயனூர், மேல மாயனூர் போன்ற பகுதிகளில் அங்கே இருக்கின்ற ஏழை பின்தங்கிய வகுப்பு மக்கள், ஏழை தாழ்த்தப்பட்ட மக்கள் ஏறத்தாழ 60 குடும்பங்கள் 20 ஆண்டுகாலமாக அங்கே இருக்கின்ற புறம்போக்கு நிலத்தை சீர்திருத்தி, செம்மைபடுத்தி, உழைத்து, பயிரிட்டு அந்த பயனை அனுபவித்து தங்களுடைய குடும்ப வாழ்க்கையை நடத்திக் கொண்டு இருக்கிறுர்கள். இப்படி நடத்திக் கொண்டு இருக்கிறவர்கள், ஒரு ஆண்டல்ல, 2 ஆண்டல்ல, 20 ஆண்டு காலம் இந்த நிலத்தை பயன்படுத்தி ரெவின்யூ நில வரி செலுத்திக் கொண்டு இருக்கிறுர்கள். அப்படிப்பட்ட மக்களை வெளியேற்றுவதற்கு இரண்டு முறை நோட்டீஸ் அனுப்பப்பட்டு இருக்கின்றது. அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் முறையிட்டு விட்டார்கள். அரசாங்கத்திடம் முறையிட்டு விட்டார்கள். ரெவின்யூ அமைச்சரிடம் கூட முறையிட்டு விட்டார்கள். முதலமைச்சரிடம் கூட முறையிட்டு விட்டார்கள். ஆனுல் இது வரையில் அவர்களுக்கு எந்தவிதமான பரிகாரமும் இந்த அரசாங்கம் அளிக்கவில்லை.

ஆகவே, ஒரு பக்கம் நிலத்தை உழைக்கிறவர்களுக்கு உரிமையை வேகமாகக் கொடுத்துக் கொண்டிருக்கிறேம் என்று சொல்லிக் கொண்டு, மறு பக்கம் ஏழை எளியவர்களுக்குத் துன்பம் தருகிறீர்கள். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள மறுக்கிறீர்கள் என்றுல் அவர்களுக்கு நில உரிமையைத் தருகிறேம் என்று சொல்வதில் என்ன நியாயம் இருக்கின்றது என்று அரசாங்கம் எண்ணிப் பார்க்க வேண்டும்.

(முற்பகல் 11-30)

ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல்கள் வராமல் தடுக்க, தக்க நடவடிக்கை எடுத்து, அந்த 60 குடும்பங்களையும் காப்பாற்றுவதற்கு ரெவின்யூ அமைச்சர் அவர்கள் முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு தேவையான கடமையை ஆற்ற வேண்டுமென்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

[திரு. பெ. சௌந்தரபாண்டியன்] [1975 மார்ச் 19

ஏழை எளிய மக்களுக்கு பின் தங்கிய மக்களுக்கு, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டு மனைகள் ஒப்படை செய்து தருவதில் எவ்வளவு வேகமாக இருக்கிறோம் என்பதற்குப் பல புள்ளி விபரங்களைப் பார்க்கிறோம். என்னைப் பொறுத்தவரையில் வீட்டு மனைகள் கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற காலதாமதத்திற்கு காரணம், இப்போது பின்பற்றப்படும் விதி முறைகள் தான். அதனால் ஒரு வீட்டு மனையை கையகப்படுத்தவும் ஒப்படை செய்யவும், உரியவரிடம் உரிய கட்டணத்தைச் செலுத்துவதிலும், நிலத்தைப் பெறுவதிலும் எவ்வளவு காலதாமதம் ஆகிறது என்பதை அரசாங்க குறிப்பேட்டைப் புரட்டிப் பார்த்தால் தெரியும். எனக்குத் தெரிந்தவரை ஒரு வீட்டு மனையை ஒப்படை செய்ய ஏறத்தாழ 10 ஆண்டு கூட ஆகியிருக்கிறது. ஆகவே, சட்டப் பிரச்சனையில் எதாவது சிக்கல் இருந்தால் இந்த அரசு அதையும் மறுபரிசீலனை செய்து, உரிய முறையில் திருத்துவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களே நிலத்தை கையகப்படுத்தும் அதிகாரம் பெற்றவராக இருக்கும் வகையில் இந்த அரசு சட்டத்தில் வழி வகைக் காணவேண்டுமென்று இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாவட்ட நிர்வாகத்தைப் பொறுத்த வரையில் என்னென்ன பிரச்சனைகள் இருக்கின்றன, எப்போது இந்த மாவட்ட நிர்வாகம் தொடங்கப்பட்டது என்பதை எல்லாம் அலசிப் பார்த்து, வேண்டிய சீர்திருத்தம் செய்ய வேண்டியது மிக மிக அவசியம் என்பதை நாம் அத்தனை பேரும் ஒப்புக்கொள்வோம்.

வெள்ளையர் காலத்தில் ஏற்பட்ட நிர்வாக முறைதான் இன்று வரையில் இருந்து கொண்டிருக்கிறது. நிர்வாக சீர்திருத்த கமிஷனால் சொல்லப்பட்டிருக்கிற அத்தனை சிபாரிசுகளையும், அத்தனை கருத்துக்களையும் அலசிப் பார்த்து எதை எதை ஏற்றுக் கொள்ள முடியுமோ அதை உடனடியாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட கலெக்டர்கள் ஏற்கெனவே வெள்ளையர் காலத்தில் ரெவின்யூ கலெக்ட் பண்ணிய காரணத்தால் அவர்களுக்கு கலெக்டர் என்று பெயர் வந்தது. ஆனால் அவர் இப்போது வேளாண்மைத் துறையைக் கண்காணித்துக்கொண்டிருக்கிறார்; பொதுப்பணித் துறையைக் கண்காணித்துக் கொண்டிருக்கிறார்; உள்ளாட்சித் துறையைக் கட்டுப்படுத்திக் கொண்டிருக்கிறார்; இப்படி எல்லா துறைகளும் அவருடைய நிர்வாகத்தின்கீழ், அவருடைய அதிகாரத்தின் கீழ் வந்திருக்கின்றன.

நாம் சொல்கிறோம் அதிகாரம் ஒருவர் கையில் அதிகமாக இருக்கக் கூடாது என்று. அதிகாரத்தை பலருக்கு பங்கிட்டுத் தரவேண்டுமென்பதுதான் இந்த அரசின் கொள்கை. ஆகவே, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு இருக்கிற அதிகாரங்களை நாம் மறு பரிசீலனை செய்து, அதிகாரங்களைப் பரவலாகப் பிரித்துக் கொடுக்க வேண்டும்.

ஒரு குளத்தைத் தேக்க வேண்டுமென்றால் அந்த அதிகாரம் அங்கே இருக்கிற பொதுப்பணித் துறையைச் சேர்ந்த நிர்வாகப் பொறியாளருக்கோ



1975 மார்ச் 19] [திரு. பெ. சௌந்தரபாண்டியன்]

அல்லது சூப்பரண்டிங் எஞ்சினீயருக்கோ அல்லது மேல் மட்டத்தில் இருக்கிற பொறியாளருக்கோதான் இருக்க வேண்டும். (மணியடிக்கப்பட்டது) நான் 10 நிமிடங்கள் தான் பேசியிருக்கிறேன். இன்னும் கொஞ்சம் நேரம் கொடுங்கள்.

<u>மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்</u> : 13 நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள் ; இன்னும் இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுங்கள்.

<u>திரு. பெ. சௌந்தரபாண்டியன்</u> : மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு இருக்கிற அதிகாரங்களை மறுபரிசீலனை செய்து, அந்தந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு உரிய அதிகாரங்களைக் கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்கு மனுநீதித் திட்டத்தை இந்த அரசு ஏற்படுத்தியிருக்கிறது. உள்ளபடியே நான் அதை வரவேற்கிறேன். அதே நேரத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற மனுக்கள், வாங்கப்படுகின்ற குறைபாடுகள் நீக்கப்படுகின்றனவா என்றால் நிச்சயமாகச் சொல்வேன், பல குறைபாடுகள் தீர்க்கப்படவில்லை.

உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், இலங்கையிலிருந்து இங்கே அகதிகளாக வந்திருக்கின்றவர்கள் ஏராளமான மனுக்களை கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் 5,000, 10,000 மனுக்கள் குவிந்து கிடக்கின்றன. வாங்கிய மனுக்கள் பற்றி அதிகாரிகள் எந்தவிதமான பதிலையும் இதுவரை அனுப்பவில்லை. ஆகவே, மக்கள் குறைகளை நாம் மனுக்கள் மூலம் வாங்கும்போது உரிய பதிலை 15 நாட்களுக்குள் அனுப்ப வேண்டுமென்ற ஆணையை இந்த அரசு பிறப்பிக்க வேண்டும். அப்போதுதான் கொடுத்த மனுக்களுக்கு எழுப்பிய கோரிக்கைகளுக்கு என்ன பரிகாரம் கிடைத்தது என்பதைப் புரிந்துகொள்வதற்கு, இந்த அரசின் நிர்வாகத்தை அறிந்துகொள்வதற்கு அவர்களுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இருக்கும். ஆகவே, பெயரளவில் மனுநீதி என்று இல்லாமல் உள்ளபடியே உண்மையான மனுநீதியாக அது அமைய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஏற்கனவே நான் சுட்டிக்காட்டியதைப்போல சின்ன ராதாபுரத்தில் ஏறத்தாழ 40 குடும்பங்கள் 20 முறை மனு கொடுத்தார்கள். அதற்கு எந்தவிதமான பதிலும் இல்லை. இது போன்ற குறைபாடு திருச்சி மாவட்டத்தில் மட்டுமல்ல; தமிழ்நாடு பூராவும் இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற குறைபாடுகள் இல்லாமல் மனுநீதி முறைகளைச் செம்மைபடுத்தி, இந்த அரசு துரிதமான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம அதிகாரிகள்தான் இந்த ரெவின்யூ நிர்வாகத்தில் அடிப்படைச் சிப்பந்திகள். அவர்களுடைய குறைபாடுகளை நாம் ஏற்று, அவர்களை அரசாங்கப் பணியாளர்களாக, நிரந்தரப் பணியாளர்களாக, முழு நேரப் பணியாளர்களாக நியமிப்பதற்கு இந்த அரசு மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும்.

அவர்களுக்கும் குடும்பப் பாதுகாப்பு திட்டத்தை விரிவாக்கியிருக்கிறீர்கள். ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு அந்தத் திட்டம் பொருந்தும் என்று கூறப்பட்டிருக்கிறது. என்னுடைய வேண்டுகோள், இந்த ஜனவரி முதல் தொடங்கினால் எத்தனையோ கிராம அதிகாரிகளின் குடும்பங்கள் பலன் அடையும். ஆகவே, மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் இந்த ஜனவரி முதல் இந்தத் திட்டத்தை கொண்டுவருவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இறுதியாக திருச்சி மாவட்டத்தில் அங்கு இருக்கிற அலுவலகங்களை எல்லாம் ஒரே இடத்தில் வைப்பதற்காக 14 இலட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இந்த அலுவலகம் தற்போது எங்கே கட்டப்படுவதற்கு அரசாங்கம் ஒப்புக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்த வேண்டும். காஜாமலையில் கட்டப்போவதாகச் சொல்கிறார்கள். அங்கு கட்டுவதை விட இப்போது இருக்கிற மாவட்ட ஆட்சித் தலைவரின் அலுவலகத்தின் முன்புறம் ஒரு தோட்டம் இருக்கிறது. அந்தத் தோட்டம் பயிர் எதுவும் இல்லாமல் சும்மா கிடக்கிறது. அங்கே பல அடுக்கு மாடிக் கட்டடத்தைக் கட்டினால் இப்போது இருக்கிற இடத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம்; புதிதாக கட்டுகிற இடத்தையும் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆகவே, இந்தச் சந்தர்ப்பத்தில் மாண்புமிகு ரெவின்யூ அமைச்சரவர்கள் நன்கு ஆலோசித்து, காஜா மலையில் புதிய கட்டடத்தைக் கட்டுவதைவிட இப்போது இருக்கிற இடத்திலேயே கட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகேட்டு, எங்கள் கட்சியின் சார்பாக கொடுத்திருக்கிற வெட்டுத்தீர்மானங்களை வலியுறுத்தியும் ஆதரித்தும் என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி. வணக்கம்.

*திரு. இ. எஸ். தியாகராசன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற மானிய கோரிக்கைகளை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

இன்றைய தினம் தமிழ்நாட்டில் எற்பட்டுள்ள வறட்சியைப் போக்குவதற்காக நம்முடைய அரசு செய்துகொண்டிருக்கிற வறட்சிப் பணிகளை நான் பாராட்டுகிறேன். 54 கோடி ரூபாய் அளவிலே வறட்சிப் பணிகளை தொடங்கியிருக்கிற நம்முடைய அரசுக்கு இன்றைய தினம் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றையதினம் எங்களுடைய செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எக்மோரிலிருந்து செங்கற்பட்டுக்குப் போகிற பாதையில் ஏதோ நிலங்கள் எல்லாம் பச்சை பசேலென்று இருப்பதால் செங்கற்பட்டு மாவட்டம் பூராவும் அப்படித்தான் இருக்கிறதென்று எண்ணிவிடக் கூடாது. அதைப் பார்த்து செங்றபட்டு மாவட்டத்திற்கு நிவாரணம் தேவையில்லை என்று நினைத்துவிடக்கூடாது.

செங்கற்பட்டு மாவட்டம் என்பது எக்மோரிலிருந்து செங்கற்பட்டுவரை போகிற பாதையோடு முடிவடைந்துவிடவில்லை. செங்கற்பட்டு மாவட்டத்தில்தான் திருத்தணிப் போன்ற பாதிக்கப்பட்ட இடங்கள் இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்த விரும்புகிறேன்.



எங்களுடைய செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில் செங்கற்பட்டு மாவட்டத்திற்கு வறட்சி நிவாரணப் பணிகளுக்காக 4½ கோடி ரூபாய் ஒதுக்க வேண்டுமென்றும் அதற்கான கணக்கும் கொடுத்திருக்கிறோம். இன்றையதினம் எங்கள் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற கஷ்டங்களைப் போக்குவதற்கு உடனடியாக 3 கோடி ரூபாயாவது அரசு ஒதுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்றைய தினம் இந்த வறட்சியினால், சிறிய குளங்கள் எல்லாம் வற்றிவிட்டன. அதனால் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர் இல்லை. மனிதர்களுக்குத்தான் தண்ணீர் இல்லை என்றால் ஆடுமாடுகளுக்குக்கூட தண்ணீர் இல்லாத் திண்டாட்டம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எப்படி, குடிதண்ணீருக்கு நிதி ஒதுக்கி பணிகளை மேற்கொள்ளுகிறோமோ அதைப்போல குளம் குட்டைகளையும் ஆழப்படுத்தி, ஆடு மாடுகளுக்கும் தண்ணீர் கிடைக்கும் வகையில் பணிகளை மேற்கொள்ள வேண்டும் அதனால் சிறு குளங்களையும், குட்டைகளையும் செப்பனிடும் பணியையும் வறட்சி நிவாரணப் பணிகளில் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தவிரவும் தமிழகத்திலே வேறு எந்தமாநிலமும் செய்ய முடியாத அளவிற்கு ஏழை எளியவர்களுக்குப் பட்டாக்கள் தரப்பட்டிருக்கின்றன. அதற்காக இந்த அரசை நான் பராட்டுகிறேன். ஆனால் கொடுக்கப்படுகிற பட்டாக்கள் டெம்பரரி பட்டாக்களாகத்தான் வழங்கப்படுகின்றன. அதை நிரந்தரப் பட்டாக்களாக மாற்ற இரண்டாண்டு, மூன்றாண்டுகள் தாமதப்படுகின்றன. இதன் காரணமாக டெம்பரரி பட்டாக்களை வாங்கிக்கொண்டிருக்கிறவர்கள் கூட அதை அனுபவிக்க முடியாத சூழ்நிலை சில இடங்களில் இருக்கின்றன. எனவே யார் யாருக்கு டெம்பரரி பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றனவோ அவற்றை எல்லாம் உடனடியாக நிரந்தரப் பட்டாக்களாக மாற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். பட்டா கொடுப்பதில் எவ்வளவு அக்கறை காட்டுகிறோமோ அதே அளவு அக்கறை கொடுக்கப்பட்ட பட்டாக்களை நிரந்தரமாக்கிக் கொடுப்பதற்கும் எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தபடியாக, திருத்தணி தாலுக்காவில் பல கிராமங்களைத் தொடர்ந்து காட்டு புறம்போக்கு நிலங்கள் இருக்கின்றன. அந்த நிலங்களில் கடந்த இருபதாண்டு முப்பதாண்டு காலங்களாக—ஏழை அரிசனங்களும், சமூகத்தில் மிகவும் பிற்போக்கு நிலையில் உள்ள குடி மக்களும் பயிர் செய்து அனுபவித்து வருகிறார்கள். அவர்களுக்கே அந்த நிலங்கள் பட்டா செய்து வழங்கப்படவில்லை. குறிப்பாக பெருகுமி, வீராணத்தூர் கிராமங்களில் காட்டு புறம்போக்கு நிலங்களை வைத்துக் கொண்டிருக்கிறவர்கள்—அரிஜன மக்கள் அவர்களுக்கே அந்த நிலங்கள் பட்டா செய்து கொடுக்கப்படவேண்டும் என்று பலமுறைகள் கேட்டுக் கொண்டும் இன்னும் செய்து கொடுக்கப்படவில்லை. ஆகவே, கருணை கூர்ந்து நமது அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்துக் காட்டுப் புறம்போக்கு நிலங்களை பல ஆண்டுகளாக அனுபவித்துக் கொண்டு வருகிறவர்களுக்கே அந்தந்த நிலங்களைப் பட்டா செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. இ. எஸ் தியாகராசன்) [1975 மார்ச் 19

அடுத்தபடியாக, நெசவாளர்கள் வாழ்கின்ற கிராமங்களில் இருக்கிற நெசவாளர்களுக்கு வீட்டுமனை அளிக்கப்படவேண்டுமென்று கடந்த முறையும் கேட்டுக்கொண்டேன். என் தொகுதியில் நெசவாளர்கள் வாழ்கின்ற கிராமங்கள் பல இருக்கின்றன. அந்த கிராமங்களில் இருக்கிற புறம் போக்கு நிலத்தில் நெசவாளர்களுக்கு குறைந்த பட்சம் 3 சென்டாவது தரவேண்டும். அது அவர்கள் தங்களுடைய குடியிருப்பைக் கட்டிக்கொள்ள வாய்ப்பாக இருக்கும். அதற்குத் தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்ஜெட் மீது நடைபெற்ற பொதுவிவாதத்திற்குப் பதில் அளிக்கும்போது தக்காவிக் கடன் 5 கோடி ஒதுக்குவதாகச் சொன்னதற்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். நிலவள வங்கியில் இருந்து கிணறு வெட்ட கடன் கொடுக்கிறபோது—480 அடிக்குள் இருக்கிற கிணறு என்றால் கடன் வழங்குவதில்லை. அதனால் பல துன்பங்கள் இருக்கின்றன. தக்காவி லோனை கிணறுகள் வெட்டப் பயன்படுத்தலாம் என்ற முறையில் சொன்னார்கள். இந்த தக்காவி லோனைத் தரும்போது இந்த 480 அடி என்ற கட்டாயம் இருக்கக்கூடாது, இதைத் தெளிவாக்கிவிடவேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எங்களுடைய திருத்தணி வட்டத்தில் பள்ளிப்பட்டு துணை வட்டமாக இருந்துகொண்டிருக்கிறது. பத்துப் பதினைந்து ஆண்டுகளாகவே துணைவட்டமாக இருந்து கொண்டிருக்கிறது. அதை வட்டமாக ஆக்கவேண்டும். அங்கே நிர்வாக கட்டிடங்கள் கட்டித்தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பள்ளிப்பட்டில் துணைக் கருவூலம் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் இன்றைக்கு 26 மைல்களுக்கு அப்பாலுள்ள திருத்தணிக்கு வரவேண்டியிருக்கிறது. ஆகவே பள்ளிப்பட்டில் துணைக் கருவூலத்தை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியில் இந்த ஆண்டு மட்டும் மழை இல்லை என்று இல்லை. கடந்த ஆண்டும் மழை இல்லை. அங்குள்ள மக்கள் மிகவும் துன்பப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். சில கிராமங்களில் கிணற்றில் தண்ணீர் வருகிறது. பயிர்கள் விளைந்திருக்கின்றன என்று சொல்லி மாவட்ட ஆட்சித் தலைவர் இந்த கிராமங்களை வறட்சி நிவாரணப் பகுதிகளில் சேர்த்துக்கொள்ளவில்லை. இதுபோல பத்துப் பதினைந்து கிராமங்கள்தான் இருக்கின்றன. இந்த கிராமங்களுக்கும் நமது நிவாரணப் பணித் திட்டத்தில் பயன் ஏற்படுகிற வகையில் இவற்றைச் சேர்த்துக் கொண்டு, இந்த இடங்களுக்கும் வரி விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டு கொண்டு, பேசுவதற்கு இந்த நல்ல வாய்ப்பை அளித்த தலைவருக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு வா. மை. அப்துல் ஜப்பார்: மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, இந்த மானியத்தின் மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன். முதலாவதாக மாவட்டங்களுடைய அமைப்புபற்றி என் கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.



1975 மார்ச் 19] (திரு. வா. மை. அப்துல் ஜப்பார்)

தற்போதுள்ள மாவட்ட அமைப்புகள் நிர்வாகத்திற்கு ஒத்ததாக, மக்களுடைய வசதிக்கேற்ப அமைந்ததாக இல்லை. எப்போதோ ஒருகாலத்தில் முன்பு நம்மை ஆண்டவர்கள் காலத்தில் ஏற்படுத்தப்பட்ட எல்லைகளாக அமைந்திருக்கின்றன. முன்பே நான் சொன்னதைப்போல இந்த எல்லைகளுக்கு ஒரு புனிதத் தன்மை கிடையாது, இந்த எல்லைகள் மாற்றி அமைக்கப்படவேண்டுமென்ற கோரிக்கை நீண்டநெடுநாளாகச் சொல்லப்படுகிறது. அந்தக் கோரிக்கை கவனிக்கப்படவில்லை. எத்தனையோ மாறுதல் செய்யப்படுகின்றன. ஒரு மாவட்டத்தை இரண்டாகப் பிரிப்பதில் மட்டும் இருக்கிறதே தவிர முழுமையாக மாவட்டங்களின் எல்லைக் கோட்டை மாற்றி அமைக்க—அங்கங்கே உள்ள மக்களின் வசதிக்கேற்ப புதுத் தலைநகரங்களை ஏற்படுத்த முழு அளவில் எந்த கவனமும் செலுத்தப்படவில்லை. இதற்காக ஒரு கமிட்டி என்ற முறையிலாவது அமைக்கவேண்டும். கமிட்டி என்றால் நீண்டகாலம் கொடுக்கப்படுகிறது என்று அர்த்தம்—நீண்டகாலம் ஆகும் என்றாலும் கூட இதுபற்றிச் சரியான முறையில் பரிசீலனை செய்து மாவட்ட எல்லைகளை எல்லாம் மாற்றி அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டும்.

திண்டுக்கல் ஒரு மாவட்டத்தின் தலைநகராக அமையவேண்டுமென்ற கோரிக்கையை இந்தச் சபையிலேயே சொல்லி வருகிறேன். இதுகுறித்தும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்ய வேண்டும்.

தர்மபுரி, இராமநாதபுரம் போன்ற மாவட்டங்கள் பிற்பட்ட நிலையில் இருப்பதை உத்தேசித்து அவற்றுக்கு விசேஷ சலுகை அளிக்கப்படுவதைப் போல நாம் நம்முடைய மாவட்டங்களின் எல்லைகளைப் பிரித்து அமைத்தால் பல இடங்கள் இந்தச் சலுகைகளைப் பெற வசதி ஏற்படும். தொழில் சலுகை பெற வசதியாக இருக்கும். இந்த முறையில் மாவட்டங்களைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தப்படியாக, இப்போதுள்ள ஆட்சிமுறையிலே ஒருசில மாறுதல்கள் செய்யப்படவேண்டும். இந்த மாறுதல்கள் என்னவென்று சொன்னால் இப்போது மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் துணையாக வட்டாட்சியர்கள் இருக்கிறார்கள் . . . . . . . . . .

திரு கு. காமாட்சி: மாண்புமிகு உறுப்பினர் எங்களுடைய மாவட்டத்தைச் சேர்ந்தவர். திடீரென்று திண்டுக்கல்லைத் தலைநகராக்க வேண்டுமென்று கேட்கிறார். திண்டுக்கல்லைத் தலைநகராக்கிக்கொண்டு அந்த மாவட்டத்திற்குச் செல்ல விரும்புகிறாரா?

திரு வா. மை. அப்துல் ஜப்பார்: நான் கூறுவது இன்றைக்கு பள்ளுப்பட்டில் இருந்து திருச்சிக்கு வரவேண்டும்—மாவட்ட தலைநகருக்கு வர வேண்டுமென்றால் 75 மைல்கள் ஆகின்றன. திண்டுக்கல் தலைநகராக இருந்தால் அங்கிருந்து 30 மைல்களுக்குள் அது இருக்கிறது. மக்கள் போவதற்கு வசதியாக இருக்கும். இதில் என்னுடைய விருப்பம் இல்லை. மக்களுடைய வசதியே பிரதானமாக இருக்க வேண்டும். மக்களுடைய போக்குவரத்து வசதியை, நிர்வாக சௌகர்யத்தை எல்லாம் முன்னிட்டு முசிறி, திண்டுக்கல், கரூர் போன்ற இடங்கள் எல்லாம் மாவட்ட எல்லை

சீரான முறையில் மாற்றி அமைக்கப்படுகிற நேரத்தில் மாவட்ட
தலைநகரங்களாக இருக்கக்கூடிய தகுதியைப் பெற்றனவாக இருக்கும்,
மக்களுடைய வசதியைத்தான் பிரதானமாகக் கவனிக்கவேண்டும்.

அதிலும் ஏழை நாட்டு மக்கள் இந்த மக்கள். இந்த மாதிரி
தலைமையகத்திற்கு ஒரு காரியமாகச் செல்வதென்றால், பல சிரமங்களை
யடைகிறார்கள். ஆகவே, தலைமையகங்கள் கூடுமான வரையில் 40
மைலுக்குமேல் போகாமல் அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் என்னு
டைய கோரிக்கை.

அடுத்து, வட்ட ஆட்சியாளர்களுக்குப் பல துணை ஆட்சியாளர்கள்
நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள். இருப்பினும், ஒட்டுமொத்தமாகப் பார்க்
கும் போது, ஒரு விண்ணப்பம் கொடுத்தால், முடிவெடுக்க மாதக்கணக்
கில் காலதாமதம் செய்யப்படுகிறது. ஆட்களை அதிகமாக நியமித்தும்
அந்த விண்ணப்பங்கள் அவ்விடத்தைவிட்டு நகர மறுக்கின்றனவென்
பதைப் பார்க்கும்போது உண்மையிலே வேதனையாகவிருக்கிறது. அதில்
தக்க சீர்திருத்தம் செய்யவேண்டும்.

அடுத்து, நான் தொடர்ச்சியாகச் சொல்வதைப் போல், கர்ணம்,
மணியம்—கிராம அதிகாரிகள் சம்பந்தப்பட்டுத் திட்டவட்டமான முடிவு
எடுக்கவேண்டும். அவர்களைக் கௌரவ ஊழியர்களாக வைத்துக்கொண்டு,
ஒரு குறிப்பிட்ட சம்பளத்தைக் கொடுத்துக்கொண்டு, அவர்கள் செய்
கின்ற அத்தனை காரியங்களையும் பார்த்துக்கொண்டிருப்பது தவறு. தற்
பொழுது அவர்கள் செய்து கொண்டிருக்கின்ற காரியங்களால் மக்கள்
நன்மை அடைய மாட்டார்கள். எப்படி அரசாங்க சிப்பந்திகளை நிரந்தர
மாக வைத்திருக்கிறோமோ, அதைப்போல் இவர்களையும் நிரந்தர சிப்பந்தி
களாக்கவேண்டும். அவர்கள் மீது மக்களிடத்திலிருந்து குற்றம் குறை
கள் வருமானால் அவர்கள் ஒரு இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு
மாற்றப்படவேண்டும். இப்பொழுதுகூடச் சொல்லிவிடலாம், எந்த
கர்ணத்திடம் குறையிருந்தாலும் எங்களுக்கு எழுதி அனுப்பிவையுங்கள்,
நடவடிக்கை எடுக்கிறோம், என்று, ஆனால் நம்முடைய கெட்ட பழக்கம்,
ஒரு அதிகாரி மேல் குற்றம்சாட்டினால், அந்த டிபார்ட்மெண்டினுடையமேலதி
காரி தன்னுடைய டிபார்ட்மெண்ட் அதிகாரியைக் காப்பாற்றுவது என்பது
ஒரு கொள்கையாக, அடிப்படையாக இருந்து வருகிறது. தாசில்தார் அல்
லது கர்ணம் பற்றி புகார் விண்ணப்பம் செய்தால், அந்த அதிகாரிமேல்
நடவடிக்கை எடுப்பதில்லை. அதற்கு மாறாக விண்ணப்பம் கொடுத்தவரே
பாதிக்கப்படுகிறார். இன்னும் சொல்லப்போனால் இது உலகமறிந்தஉண்மை.
இன்று, அடி மட்டங்களிலே, கிராமங்களிலே நடக்கிற மிகப்பெரிய
தவறுக்களுக்குக் காரணங்கள் மணியங்கள், கிராம அதிகாரிகள்தான்.
அவர்கள மக்களிடம் பணத்தைச் சுரண்டிக் கொண்டிருக்கிறார்கள்.
அதிலே சந்தேகமில்லை. நான் குறிப்பிட்ட நபரின்மேல் சொல்லவேண்டிய
தில்லை. எனக்குத் தெரிந்த ஒரு கர்ணம் ஒரு கையெழுத்துக்கு ரூ. 500
வாங்கியிருக்கிறார். கிணறு வெட்டுவதற்கு ஒரு சர்ட்டிஃபிகேட் வேண்டு
மென்றால் ரூ. 500 கேட்கிறார். எங்கள் ஊர் வியாபாரிகள் வெளியூர்
களிலே வியாபாரம் செய்பவர்கள். அவர்கள் மற்ற மாநிலங்களில்
—முஸ்லீம்களாக இருப்பதால்—கைது செய்யப்பட்டு, நீங்கள் பாகிஸ்தான்





காரர்கள் என்று குற்றம் சாட்டப்படுகிறார்கள். அவர்கள் பாகிஸ்தான்
காரர்கள் இல்லை பள்ளப்பட்டிவாசிகள் என்று கர்ணத்தினுடைய கை
யெழுத்துத் தேவை. அதற்கு ரூ. 500 கேட்கிற நிலைமையிருக்கிறது.
ஆகவே, கர்ணங்களுக்குள் அதிகாரங்கள் நிச்சயமாகப் பிடுங்கப்படவேண்
டும். அதாவது அடிமட்ட ஏழை மக்கள் இலஞ்ச ஊழலிலிருந்து தப்பிக்க
வேண்டுமானால் கிராம ஊழியர்கள் நிரந்தர ஊழியர்களாக்கப்பட வேண்டு
மென்ற கோரிக்கையை நான் பலமுறை எழுப்பி இருக்கிறேன். இனிமே
லாவது அதைச் செய்யவேண்டுமென்று வேண்டுகோளை விடுக்கின்றேன்.

மக்களுடைய குறைகளைக் களைய மனுநீதித் திட்டச் சட்டங்களை ஏற்படுத்தி
யிருக்கிறோம். ஆனால், எந்தக் குறிப்பிட்ட தேதியில் வருகிறார்கள்
என்று தெரியப்படுத்துகின்ற விளம்பரங்கள் போதுமான அளவு இல்லை.
மனுநீதித் திட்டத்திற்காக, அதிகாரிகள் வரும்பொழுது பல விண்ணப்
பங்கள் கொடுக்கப்படுகின்றன. ஆனால், அந்த விண்ணப்பங்கள் என்ன
வாகின்றன என்று தெரிவதில்லை. ஆவை சரியாக பைசல் செய்யப்பட
வில்லை. உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமானால்என்னுடையநகரத்திலே,
நத்தம் புறம்போக்கிலே கட்டப்பட்ட வீடுகளுக்கு ஏழை எளிய மக்களுக்குப்
பட்டா கொடுக்கப்படவில்லை, இருபது ஆண்டுகளுக்கு மேலாக அது சம்பந்த
மாகப் பலமுறை மனு செய்யப்பட்டது. நான் சட்டமன்ற உறுப்பினரான
பிறகு, முதலில் அதுபற்றி விண்ணப்பம் கொடுத்தேன். இருபது ஆண்டு
களாகியும்கூட இன்னும் பட்டா கொடுக்கப்படவில்லை. ஓரிரு வசதி படைத்த
வர்கள் வீடு கட்டிக் கொண்டார்கள் என்று சொல்லப்படுகிறது. அவர்
களிடமிருந்து கிரயத்தை வசூல் பண்ணுங்கள். யார் வசதியில்லாதவர்
களோ, அவர்களுக்கு இலவசமாகக் கிரயம் பண்ணுங்கள். வசதி படைத்த
வர்களிடம் இருந்து, அரசாங்கமே ஒரு விலையை நிர்ணயித்து, விலையைப்
பெற்றுக் கொண்டு அதற்குப் பிறகு கிரயம் பண்ணுங்கள். இருக்கிற
வீடுகளைத் தரை மட்டமாக்கிய பிறகு, அவைகளை எமை விட்டு அதற்குப்
பிறகுப் பட்டா கிடைக்குமென்று விஸ்தாரமாகச் சொல்கிறார்கள். ஏழை
நாட்டிலே இருக்கிற வீடுகளை உடைத்துத்தான் செய்யவேண்டுமா? கிர
யத்தை வீடு கட்டியிருக்கிற வசதி படைத்தவர்களிடமிருந்து பெறலாம்.

ஏதேனும் அரசாங்க வசூல்களுக்கோ, நன்கொடைகளுக்கோ வசூலிப்
பது என்றால், கர்ணம், மணியங்களுக்குக் கொடுப்பது என்றால் சரியல்ல
இன்னும் சொல்லப் போனால், நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிற
வர்கள் அவர்கள்தான்.

அதைப்போல் சின்னதாராபுரத்திலேயிருக்கிற வெங்கடபுரத்திலே
1 ஏக்கர் 40 செண்ட் நிலம் ஒரு பகுதியிலிருக்கிறது. அதிலே 90
செண்டைக் கொடுத்து விட்டார்கள். மீதமுள்ள 50 செண்டைப் பக்கத்
திலேயுள்ள மருத்துவமனைக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்கி
றார்கள். ஆனால், மருத்துவமனை அப்படி இடம் வேண்டுமென்று கேட்க
வில்லை. அங்கே 50 குடிசைகளிருக்கின்றன. அவைகளைக் காலி செய்து
கொடுக்க வேண்டுமென்று வம்பு பண்ணுகிறார்கள். காரணம், ஓர் அதிகாரி
எழுதிவிட்டார். அவர் எழுதிவிட்டால் அப்பீலே இல்லை. ஆகவே, வெங்கட
புரத்தில் ஏழை எளியவர்களுக்குக் குடிசை கட்டி வாழ்ந்து வருகின்ற
மக்களுக்குப்புறிதாக யாருக்கும் கொடுக்க வேண்டுமென்று கேட்க

வில்லை—கொடுக்க வேண்டுமென்று கேட்டு—வேண்டுகோளை விடுத்து, இந்த அளவு பேச வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி அமைகிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, வருவாய்த்துறைமானியத்தில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறிக் கொள்கிறேன். எனக்கு முன்பு பேசிய பல மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் இந்த வருவாய்த் துறையிலே, அல்லது வறட்சி நிதியிலே ஊழல் இருக்கிறது, ஊழல் இருக்கிறது என்று சொன்னார்கள். ஊழல் எங்கே இருக்கிறது ? எங்கே கண்டு பிடித்தார்கள் ? யார் ஊழல் செய்தார்கள் என்று ஒன்றும் தெளிவாகச் சொல்லவில்லை. யார் ஊழல் செய்கிறார்களோ அவர்கள்தான் மற்றவர்களைப் பார்த்து ஊழல், ஊழல் என்று சொல்கிறார்கள். நான், கிராமப்புறத்திலே கேள்விப்பட்டிருக்கிறேன். சில பேர் சந்தையிலே திருடிக்கொண்டு ஓடிவிடுவார்கள், தேர்த் திருவிழாவிலே திருடிக் கொண்டு ஓடிவிடுவார்கள். அந்தத் திருடன் எங்கேயாவது ஓரிடத்திலிருந்துகொண்டு மற்றவர்களைப் பார்த்துத் திருடன், திருடன் என்று திசை திருப்புவதைப்போல், ஊழல், ஊழல் என்று ஊழல் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஊராட்சி ஒன்றியங்களிலே பல வேலைகளைச் செய்கிறார்கள். அதற்கு எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். ஓவர்சீர் இருக்கிறார், சூப்பர்வைசர் இருக்கிறார், ஏ.இ. இருக்கிறார், டி.இ. இருக்கிறார். இத்தனை அதிகாரிகளும் அந்த எஸ்டிமேட்டைத் தயாரித்தபின்தான் டெண்டர் விடுகிறார்கள், வேலை செய்கிறார்கள். அங்கே ஊழல் எப்படி நடக்கும் ? என்ன காரணம் ? சாதாரணமாக, இங்கே இருக்கிற மைக் செட்டை எடுத்துக் கொள்வோம். இந்த மைக் செட் இன்ன விலைதான் பெறும் என்று சொல்ல முதலமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதா ? மத்திய அமைச்சருக்கு அதிகாரம் இருக்கிறதா ? இந்த மேஜை இன்ன விலை பெறும், இந்தக் கட்டிடம் இன்ன விலை பெறும் என்று சொல்ல யாருக்கு அதிகாரமிருக்கிறது ? இவை சம்பந்தமாகப் படித்தவர்கள், தெரிந்தவர்கள்தான் எஸ்டிமேட் தயாரிக்கிறார்கள். அந்த முறையிலேதான் வறட்சி நிவாரண வேலைகள் நடக்கின்றன. இதைக்கூட, சாதாரணமாகத் தெரிந்துகொள்ளாமல், ஊழல் ஊழல் என்று சொல்கிறார்கள். இந்த ஆண்டு, நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இல்லாத பஞ்சம் வந்தது. ஆனால், இந்த ஆண்டை எப்படியோ சமாளித்துக் கொண்டாலுங்கூட, அடுத்த ஆண்டுதான் நமக்குக் கடுமையாக, தீவிரமான பஞ்சமிருக்கப் போகிறது.

பெரியவர்கள் சொல்வார்கள், பஞ்சம் வந்தபிறகுதான்—அடுத்த ஆண்டுதான் மிகப் பெரிய கஷ்டம் வருமென்று. மாடுகளுக்குத் தீவனம் கிடைக்காது, குடிக்கத் தண்ணீர் இருக்காது, பொருள்கள் கிடைக்காது. இப்படிப்பட்ட பல கஷ்டங்களெல்லாம் வரும். அந்தக் கஷ்டங்களை நீக்கவேண்டும். சேலம் மாவட்டத்திலே குறிப்பாக பல இடங்களிலே பாண்ட் ஸ்கீம் கிடையாது. பல திட்டங்கள் போடப்பட்டு, எஸ்டிமேட் தயார் செய்யப்பட்டு, 4, 5 ஆண்டுகளாகத் திட்டமிட்டு வேலை செய்தார்கள். இன்னும், துரிதமாக நடக்கவில்லை. ஆங்காங்கிருக்கிற சிறு சிறு குட்டைகளில் எல்லாம், தண்ணீரைத் தேக்கினால்தான், மாடுகளுக்கும் மனிதர்களுக்கும் குடிக்கத் தண்ணீர்



கிடைக்கும். ஆகவே, அப்படிப்பட்ட வேலைகளைச் செய்ய அமைச்சரவர்கள் ஆவன செய்வதை ஆராய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(நற்பகல் 12–00)

இந்தப் பஞ்ச நிவாரண வேலையிலே உடனடியாக அடி கிணறு வெட்டுவதற்கு விவசாயிகளுக்கு லோன் கொடுத்து அவர்களைக் காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே மாவட்ட அபிவிருத்தி மன்றம் கூடுகிறது. எதற்காகக் கூடுகிறோம். எதற்காகக் கலைகிறோம் என்றுகூடத் தெரியவில்லை. நாங்கள் கூட்டங்களிலே கலந்துகொண்டு பல சந்தேகங்களைக் கேட்கிறோம். சொல்கிறோம். கலெக்டர் அவர்கள்தான் அதற்குத் தலைவராக இருக்கிறார்கள். அவருக்குக் கீழே இருக்கிற அதிகாரிகள் அவர்களுக்குத் தகவல்களைத் தருகிறார்கள். அதோடு நின்றுவிடுகிறது. மாவட்ட அபிவிருத்தி மன்றத்திற்கு—மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு பொது பிரதிநிதியைத் தலைவராகப் போட வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறேன்.—பொதுமக்கள் பிரதிநிதி தலைவராக இருந்தால்தான் எதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

குடிநீர் வாரியம் கூடுமானவரையில் கிராமப் பகுதிகளிலே தீவிரமான போரிங் திட்டங்களையெல்லாம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள், என்னுடைய தொகுதியிலே 4 மணி நேரத்திலே ஒரு கை பம்பு போட்டு தண்ணீர் கொடுத்து விட்டார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன், அதுபோல் அங்கே இருக்கிற விவசாயிகளுக்கும் 7" 8" போரிங் போட்டு எல்லாக் கிணறுகளிலும் பம்புசெட்டு வைத்து தண்ணீர் இறைக்காவிட்டால் எதிர்காலம் பாதிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்போது இருக்கிற நிலைமையிலே 100 அடிக்குக் கீழே தண்ணீர் இருக்கிறது, குடிநீருக்காகக்கூட 100 அடி 150 அடி வெட்டித் தண்ணீர் எடுக்கிறோம் என்றால் எதிர்காலத்திலே இன்னும் அதிகமாக ஆழமாக வெட்டினால்தான் தண்ணீர் கிடைக்கும். ஆகவே குடிநீர் வாரியம் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீவிரமாக இதிலே கவனஞ் செலுத்தி 500 அடிக்கு கிணறுகள் வெட்டி நீர் இறைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அப்படிச் செய்தால்தான நிரந்தரமாக தண்ணீர்ப் பஞ்சம் தீருமேயொழிய எத்தனை அணைகட்டுகள் கட்டினாலும் பஞ்சம் தீராது. போரிங் போட்டு பம்புகள் அமைக்கின்ற திட்டத்தைத் தீட்டவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இப்போதே விவசாயிகள் ஆடுமாடுகளையெல்லாம் பாதி விற்றுவிட்டார்கள். அடுத்த ஆண்டு அவர்கள் விவசாயம் செய்ய வேண்டுமானால் மாடு வாங்கினால்தான் உழவு ஓட்டமுடியும், மாடுகளுக்குத் தீவனம் இல்லை, மாடு வாங்கவும் அவற்றிற்குத் தீவனம் வாங்கவும் பணம் இல்லை. ஆகவே அவர்களுக்கு அதற்காகப் பணம் கொடுக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நாங்கள் வருஷம் பூராவும் உழைக்கிறோம். நாள் பூராவும் இரவு பகல் என்று பாராது உழைக்கிறோம், உழைத்து உழைத்துவருவாய்த்துறைக்கு

வருமானத்தைத் தேடித் தருகிறோம். ஆனால் பின்தங்கியோர் பட்டியலில்கூட எங்களைச் சேர்க்கவேயில்லை.

ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு தடவையும் இந்தச் சட்ட மன்றத்திலே எங்களுக்கு குட்டைகள் வேண்டும். குளங்கள் வேண்டும், அணைகள் வேண்டும் என்று கேட்டுக் கொண்டேயிருக்கிறோம் ஆனால இதுவரையில் கவனிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்கத் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் பகுதியிலே திருவணியூற்று ஆறு என்ற ஆறு ஓடுகிறது. அதிலே ஒரு கிலோ மீட்டருக்குத் தோண்டினால் நீர்த் தேக்கம் ஏற்பட்டு விவசாயிகளுக்கு அதிகமான பலனைத் தரும், இப்படிப்பட்ட திட்டங்களை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்குப் பேச வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து விடை பெறுகிறேன். வணக்கம்.

*திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இங்கே சபையின் முன் வைக்கப்பட்டிருக்கிற வருவாய்த்துறை மானியக் கோரிக்கையின்மீது இரண்டொரு கருததுக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இந்த வருவாய்த்துறை என்பது இன்றைக்கிருக்கிற அமைப்பிலே எல்லாத் துறைகளுடனும் சம்பந்தப்படுகிற உறவுகொள்ளுகின்ற ஒரு அமைப்பாக இருக்கிறது என்பதையும் சாதாரண மக்களிடத்திலே தொடர்பு கொண்டிருக்கிற அமைப்பாக இருக்கிறது என்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு அதே நேரத்திலே இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய விசேஷமான வறட்சி நிலைமைகளைச் சரிபார்த்து ஒழுங்குபடுத்தத் தக்க காரியங்களைச் செய்யவேண்டிய பெரும் பொறுப்பிலே இருக்கிறது என்பதையும் கணக்கிலே எடுத்துக் கொண்டு என்னுடைய உரையை ஆற்ற விரும்புகிறேன்.

இதற்கு முன்னாலே முதலமைச்சராகவும் நிதியமைச்சராகவும் இருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே சமர்ப்பித்த வரவு—செலவுத் திட்டத்தின் தொடர்பாகவும் அதே நேரத்திலே ஆளுநர் ஆற்றிய உரையின் தொடர்பாகவும இந்த மானியம் வருகிறது என்பதை எடுத்துக் காட்ட விரும்புகிறேன். ஏன் இதைக் கூறுகிறேன் என்று சொன்னால் வரவு—செலவுத் திட்டம் என்று சொன்னால் இன்ன இன்ன வரவினங்கள் வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன, இன்ன இன்ன இனங்களிலே செலவு செய்வதற்கு இருக்கிறோம் என்று சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையின்மீது தான் மானியக் கோரிக்கைகள் வருகின்றன. ஆனால் இரண்டொரு நாட்களாக நடந்திருக்கிற விவாதங்களைப் பார்க்கிறபோது வரவு—செலவுத் திட்டத்திலே சொல்லப்பட்டிருக்கிற இன்ன இன்ன மாதிரி—வரவு இனம் இருக்கும் என்று சொல்லப்பட்டிருந்தாலும்கூட இப்போது அது எனக்குத் தேவையில்லை என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அப்படி அறிவித்திருக்கிற காரணத்தினால் இந்த வரவு—செலவுத் திட்டம் சபையிலே சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டு மற்றவர்களின் அனுமதியைப் பெறுவது என்பதைவிட ஏதோ முதலமைச்சருடைய இஷ்டத்தைப்போல் அவருடைய ஆசாபாசங்களுக்கு உகந்த முறையிலே அவருடைய விருப்பத்திற்கு உகந்த முறையிலே இருக்கக்கூடிய முறையிலே அமைந்து விடுவது நல்லதல்ல.





மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் ஒரு
தவறான கருத்தைச் சொல்கிறார்கள். ஏதோ வரவு—வைத்துக்கொண்ட
இனத்தை இப்போது வேண்டாம் என்று சொன்னதாகக கூறுகிறார்,
வரவு வைததுக் கொண்ட எந்த இனமும் பட்ஜெட்டிலிருந்து விலக்கப்பட
வில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன் : இன்ன இன்ன இனங்களிலே வரவு வரும்
என்று எதிர்பார்க்கிறார்களோ அதை வரவு என்று வைத்துக்
கொண்டு வரவு—செலவுத் திட்டம் தயாரிக்காவிட்டாலும் எதை எதை
வரவு என்று எடுத்துக் கொள்கிறார்களோ அதை உறுப்பினர்கள் அறிந்து
கொள்வதிலே........அதையும் சேர்த்து பேசப்படுவது இயல்பேயாகும்.

திரு. எம்.ஏ. லத்தீப் : வரவு வைத்துக் கொண்டு திட்டம் தயாரித்
தார்கள் இப்போது வேண்டாம் என்று சொல்கிறார்கள் என்று உறுப்பினர்
அவர்கள் சொன்னார்கள். அப்படி இல்லை என்று மாண்புமிகு முதலமைச்
சர் அவர்கள் சொன்னார்கள். மத்திய அரசாங்கம் மாநில அரசாங்களுக்கு
மானியம் கொடுக்கிறபோது வரவு—செலவுத் திட்டத்திலே சேர்த்துக்
கொண்டுதானே கொடுக்கிறார்கள்; அப்படிச் சேர்த்துக் கொண்டிருக்கும்
போது இப்போது அதைக் கொடுக்க மாட்டேன் என்று எப்படிச் சொல்ல
முடியும், ஒதுக்கிய பணத்தைக் கொடுக்க முடியாது என்று யார்
சொல்ல முடியும் ?

எம். சுரேந்திரன் : நான் திரு. லத்தீப் அவர்களுக்குக் கூறிக்கொள்ள
விரும்புகிறேன். இந்தச் சபையிலே வந்திருக்கிற மானியத்தைப்பற்றிப்
பேசிக்கொண்டு இருக்கிறேன். எனக்குச் சபையிலே இருக்கிற மானியத்தைப்
பற்றிச் சொல்ல வேண்டுமென்பதுதான் நோக்கம்........................

திரு. எம். ஏ. லத்தீப் : நான் கேட்டது—என்னவென்றால்-மத்திய அர
சாங்கம் அல்லது மற்ற நிறுவனங்களிலிருந்து இந்த அரசு பெறுக்
கொண்ட நிதி ஆதாரத்தை வைத்துக்கொண்டு நிதிநிலை அறிக்கை
தயாரிக்கிறது. பிறகு அது வேண்டாம என்று எப்படிச் சொல்லப்படு
கிறது என்று அவர்கள் கேட்டார்கள்—மத்திய அரசின் சார்பில் கொடுக்
கப்படுகிற பணத்திற்கு மத்திய பட்ஜெட்டிலே வழிவகை செய்கிறார்கள்,
அப்படிச் செய்ததற்குப் பிறகு பாராளுமன்றத்திலே இருக்கிற ஒரு பொறுப்
புள்ள அமைச்சர் அதைக் கொடுக்க மாட்டேன் என்று எப்படிச் சொன்
னார்கள் என்றுதான் கேட்டேன். மத்திய அரசாங்கத்திற்கும் மாநில
அரசாங்கத்திற்கும் நிதித்துறையிலே தொடர்ப்பு இல்லை என்று சொல்கி
றார்களா ? கொடுப்பதற்காக வழிவகை செய்துவிட்டு கொடுக்க இருப்பதை
கொடுக்க மாட்டேன் என்று சொல்வதால் மாநில அரசாங்கத்திற்கும்
மத்திய அரசாங்கத்திற்கும் நிதித் துறையிலே தொடர்பு இருக்கிறது
என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் கேட்ட கேள்விக்கு அவர்கள்
பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு எம். சுரேந்திரன்: திரு. லத்தீப் அவர்களுக்கு நான் ஏன்
இவ்வளவு நேரம் கொடுத்தேன் என்றால் ஆளுங்கட்சிக்கு இருக்கிற
அக்கறையைவிட அதிகமான அக்கறை எடுத்துக்கொண்டு பதில் சொல்வார்கள்

என்பதால் தான். முதலமைச்சர் அவர்கள் வரவு வைத்திருக்கிறார்களா இல்லையா என்பது பிரச்னையல்ல இங்கே ஒரு அரசு அரசியல் சட்டப்படி நடக்கவேண்டும், ஜனநாயகக் கோட்பாடுகள் ஜனநாயகப் பண்பாடுகளின்படி நடக்கவேண்டும், வரவுசெலவுத் திட்டமும் அப்படிப்பட்ட விதிமுறைகளுக்கு உட்பட்டுத்தான் கொண்டுவரப்பட வேண்டும். இந்தச் சபையிலே அரசியல் சட்டத்திற்கு விரோதமாகப் பேசலாம் என்று சபாநாயகர் சமீபத்திலே தீர்ப்புத் தந்திருக்கிறார்கள். நான் தர்மநியாயமாக கேட்க விரும்புகிறேன். இங்கே வரவு செலவுத் திட்டத்தில் வருமானம் என்ன என்ன எந்த எந்த வகையில் எதிர்பார்க்கப்படுகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வருமானத்தை இனிமேல் கேட்க மாட்டேன் என்று முதலமைச்சராவர்கள் கூறுகிறார்கள். அப்படிக் கேட்க மாட்டேன் என்றால் அதன் பொருள் என்ன ? வருமானம் வரக்கூடிய இனங்களிலே ஒரு பகுதியை எந்த நேரத்தில் வேண்டுமானாலும் வேண்டாமென்று சொல்லலாம் என்ற எண்ணம்தானே தென்படுகிறது ? அப்படிப்பட்ட எண்ணத்தைத் தென்படுத்துவது சரியானதுதானா என்பது என்னுடைய கேள்வி. இன்னொருவர் எவ்வளவோ சொல்லியிருக்கலாம். அதைப் பற்றிப் பிரச்னை இல்லை. ஆனால் இந்த அவையிலே முதலமைச்சராக இருந்து இந்த அரசை நடத்திச் செல்லக்கூடிய நிலையிலே இருப்பவர்கள் இந்த அவையிலே இந்த மாநிலத்தின் நலன்களுக்காக வரவு செலவுத் திட்டக் கணக்கைச் சமர்ப்பித்திருக்கிறார்கள். இன்றைக்குச் சொல்லலாம் செலவை எழுதவில்லை என்று. அப்படி எழுதவில்லை என்று சொன்னாலும் கூட இந்தந்த இனங்களுக்காக இவ்வளவு வரும் என்று வருவாய்த்துறையிலேயும் கூறப்பட்டிருக்கிறது, ஆளுநர் அவர்களுடைய உரையிலேயும் கூறப்பட்டிருக்கிறது, இப்படிப் பல்வேறு துறைகளிலேயும் கூறப்பட்டதற்குப் பிறகு நான் அதைக் கேட்க மாட்டேன் என்று சொன்னால் அதன் பொருள் என்ன ? அது அரசியலமைப்புச் சட்டத்திற்கு, ஜனநாயகப் பண்பாட்டிற்கு, இந்தச் சட்டசபையின் மரபுகளுக்குப் பொருந்துமா என்பதுதான் என்னுடைய கேள்வியே தவிர வேறு அல்ல.

இந்த முறையிலே பிரச்னைகளை ஆராயும்பொழுது இன்றைக்கு வறட்சி ஏற்பட்டிருக்கிறது, வறட்சிக்காகப் பணம் செலவிடப் போவதாகச் சொல்லப்படுகிறது. 55 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதைச் சரியாக அமல் படுத்த வேண்டுமென்று பலபேரும் பல ஆலோசனைகளைச் கூறியிருக்கிறார்கள், விவாதம் செய்யப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே இது போன்ற நிலைமைகள் ஏற்பட்ட நேரத்தில் மத்திய அரசு 17 கோடி ரூபாய் தந்திருக்கிறது. (குறுக்கீடு) 17 கோடியோ 18 கோடியோ சரியாக தொகை ஞாபகமில்லை. 17 கோடி ரூபாய் என்று கருதுகிறேன் அது தரப்பட்டதாகவும், அந்தப் பணத்திலே பல தவறுகள் நடந்திருப்பதாகவும் சொல்லப்பட்டு, அது இங்கே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்ற ஒன்றாகும். அம்மாதிரித் தவறுகள்....

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, திரும்பத் திரும்ப ஒரு உண்மைக்கு மாறான விஷயத்தைச் சொன்னால் அது உண்மையாகிவிடும் என்று கருதிக்கொண்டு நண்பர் சுரேந்திரன் அவர்கள் பேசுகிறார்கள் என்று கருதுகிறேன். மத்திய அரசு கொடுத்தது தவறாகச் செலவு செய்யப்பட்டதாக இங்கே ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது



என்று இங்கே அவர்கள் சொல்கிறார்கள். அது மிகமிக உண்மைக்கு மாறான தகவல் என்பதை நான் பலமுறை விளக்கம் தந்திருக்கிறேன். மொத்தம் செலவான 18 கோடி ரூபாயில், 14 கோடி ரூபாயை மத்திய அரசு கொடுத்தது. அந்த 14 கோடி ரூபாயில் 11 கோடி ரூபாய் கடன், திரும்ப வாங்கிக்கொள்கிறார்கள். வட்டிக்கடைக்காரர்களைப்போல, திரும்ப வாங்கிக்கொள்கிறார்கள். மீதம் 3 கோடி ரூபாய்தான் மானியம்.

திரு. எம். சுரேந்திரன் நான் சொல்வதெல்லாம் அமைச்சர்கள் ஒப்புக்கொள்கிறார்களா, இல்லையா என்பது அல்ல. ஆளும் கட்சியிலே இருக்கின்ற பலரும்கூட தவறு நடந்திருக்கிறது என்று பேசியிருக்கிறார்கள், வெளியிலேயும் பேசியிருக்கிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: வெளியிலே எவ்வளவோ பேசுகிறார்கள். நண்பருடைய கட்சியைப்பற்றிக்கூட வெளியிலே எவ்வளவோ பேசுகிறார்கள், ஊரிலே பேசுகிறார்கள், உலகத்திலே பேசுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன்: நான் மறுக்கவில்லையே, நான் மறுக்கவில்லை என்பதால் நீங்களும் மறுக்கக் கூடாது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: நாங்கள் சொல்வதில் உண்மை இருக்கிறது என்பதால் நீங்கள் மறுக்கவில்லை. நீங்கள் சொல்வதில் உண்மை இல்லை, ஆகவே நாங்கள் மறுக்கிறோம்.

திரு. எம். சுரேந்திரன்: நான் உங்களைப் பற்றிச் சொல்லும் பொழுது நீங்கள் எங்கள் கட்சியைப் பற்றிச் சொல்லுகிறீர்கள். அது சரியாக இருந்தால் ஒப்புக்கொள்கிறேன். இதைப் போல நீங்களும் செய்திருக்கிறீர்கள். அதுதான் என்னுடைய வாதம். அந்த வகையிலே இந்தக் பிரச்னையை எண்ணிப் பார்க்க வேண்டும். கணக்குப் பார்த்துச் செய்யலாம் என்று சொல்வது சிறந்த முறையிலே, நல்ல முறையிலே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப் புரிந்து கொள்ளக்கூடிய உள்ளம் வரவில்லை என்பதுதானே பொருள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, சுப்பிரமணியம் அவர்கள் நிதியமைச்சர்தானே தவிர அவர் ஒன்றும் கணக்குப்பிள்ளை அல்ல. இங்கே உள்ள அரசு அடிக்கடி கணக்குக் காட்டவேண்டும் என்ற அவசியமில்லை. காலையிலே கூட ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பொழுது பேசிய நேரத்திலேயே விரிவாகச் சொல்லி இருக்கிறேன். இன்றைக்குள்ள அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி கணக்கு வழக்குகள் எப்படிக் காட்டப்பட வேண்டும் என்பதற்கான முறைகள் இருக்கின்றன. அதற்கேற்ப மாநில அரசு கணக்குக் காட்டுவதற்குத் தயாராக இருக்கிறது. கணக்குக் காட்டுவதற்கு ஒன்றும் பயப்படவில்லை. மடியில் கனம் இருந்தால்தானே பயம்? ஆனால் மாநில அரசின் உரிமைகள் பாதிக்கப்படும் வகையில் ஒரு மத்திய நிதியமைச்சர் தவறாகப் பேசுவது சரியில்லை என்பதற்காகத்தான் தமிழக அரசின் சார்பில் அதற்குக் கண்டனம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. கு. காமாட்சி: பாயிண்ட் ஆஃப் ஆர்டர் சார். நான் இப்பொழுது நடக்கின்ற அந்த விவாதத்திற்குள் நுழைய விரும்பவில்லை. பொதுவாக ஒரு மத்திய அமைச்சர், அது யாராக இருந்தாலும், சுப்பிரமணியத்தைப் பற்றி மட்டும் கூறவில்லை, ஒரு மாநிலத்தில் நடைபெறும் பணிகளை அல்லது நடைமுறை விதிகளை மேற்பார்வையிடுவதற்கு அரசியலமைப்புச் சட்டத்திலே இடம் இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, மத்திய அமைச்சர்கள் மிகுந்த பரிவுடன் மாநிலங்களில் நடைபெறுகின்ற காரியங்களைக் கவனிக்க முன் வருவார்களேயானால் அவர்களை இரு கை நீட்டி வரவேற்பதற்கு நமது மாநில அரசு தயாராக இருக்கின்றது. ஆனால் மாநில அரசுகளின் மீது அரசியல் குரோதம் காரணமாகக் களங்கம் சுமத்துவார்களேயானால் அதைக் கண்டிப்பதற்கு மாநில அரசுகளுக்கு உரிமை இருக்கிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவரவர்களே, ஒரு பொதுக்கூட்டத்தில் மத்திய நிதியமைச்சரவர்கள் ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்த மாநிலத்திற்குள்ள அதிகாரத்தின்மீது கை வைக்கக்கூடிய வகையில், ஆக்கிரமிப்பு செய்யக் கூடிய வகையில் பேசியிருக்கிறார்கள். இப்படி பேசுவதற்கு முன்பு மத்திய அரசின் சார்பில் மாநில அரசுக்குக் கடிதம் அனுப்பி விளக்கம் கேட்டிருக்கிறார்களா? அப்படி இல்லாமல் மாநில அரசைப் பற்றி மத்திய அமைச்சர் பொதுக் கூட்டத்திலே பேசியிருப்பார்களேயானால் அதைப் பற்றி மாநில அரசாங்கம் "ப்ரொட்டெஸ்ட்" செய்திருக்கிறதா? என்பதை முதலமைச்சரவர்கள் சொல்ல வேண்டும். மத்திய நிதி அமைச்சர் என்ன ஆடிட்டர் ஜெனரலா அல்லது நிதியமைச்சர் வேலை செய்கிறார்களா? இம்மாதிரிப் பிரச்சினைகளைப் பொதுக்கூட்டத்தில் பேசுவதற்கு அவரை யார் அனுமதித்தார்கள்? இதைப் "ப்ரொடஸ்ட்" செய்து இந்தச் சபையிலேயே ஒரு கண்டனத் தீர்மானத்தை நிறைவேற்ற முதலமைச்சர் நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, அக்கவுண்டண்ட்-ஜெனரல், ஆடிட்டர்-ஜெனரல் இவர்களெல்லாம் இருக்கிறார்கள். மாநில அளவிலும் இருக்கிறார்கள். அகில இந்திய அளவிலேயும் இருக்கிறார்கள். டெல்லியிலேயும் இருக்கிறார்கள். இவர்களெல்லாம் இருக்கிறார்கள் என்பதும் மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் தெரியும். எப்படி கணக்கு வழக்கு காட்டுவதற்கான முறைகள் இருக்கின்றன என்பதும் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படியிருந்தும், அவர்கள் பேசிய கருத்து, மக்களிடத்திலே ஒரு அரசியல் அடிப்படையில் பேசிய கருத்தாகத்தான் அமைந்திருக்கிறது என்பதில் இரண்டுவிதமான கருத்துக்களுக்கு இடமே கிடையாது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் கேட்பதைப் போல் எந்தத் தகவலையும் அவர்கள் கேட்டு நமக்கு அவர்கள் எழுதவில்லை. கணக்கு வழக்குத் தாருங்கள் என்றும் கேட்டதாகத்



தகவல் எதுவும் இல்லை. நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன். நேற்றும் சொல்லியிருக்கிறேன், இன்றும் சொல்லியிருக்கிறேன்; நேற்று முன்தினமும் அதையேதான் குறிப்பிட்டேன். அவர்கள் இங்கேயுள்ள அதிகாரிகளை அழைத்து வைத்து, எல்லா அமைச்சர்களையும் உட்காரவைத்து, எந்தெந்த மாவட்டங்களில் எப்படிப்பட்டப் பணிகள் நடைபெறுகின்றன என்று கேட்டால் அதைச் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறோம், அதனை வரவேற்பதற்குத் தயாராக இருக்கிறோம் இங்கே தவறுகள் நடைபெற்றிருக்கின்றன, அதைச் சீர் செய்யுங்கள் என்று சொன்னால் அதையும் கேட்டு நடப்பதற்குத் தயாராக இருக்கிறோம் என்று நான் பலமுறை சொல்லியிருக்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, அன்புள்ள லத்தீப் அவர்கள் அரசாங்கத்தைக் கேட்க வேண்டிய கேள்வியை நான் பேசும்பொழுது கொண்டு வந்து விட்டு தேவையில்லாத நிலைமைகளை உண்டாக்கி விட்டார்கள் என்று இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். ஆகவே, நான் கூறுவதெல்லாம் இது போன்று ஒரு வருவாய் வரக் கூடியதை, அந்த வருவாயை வேண்டாமென்று சொல்வதற்கு முதல் அமைச்சருக்குத் தகுதி இருக்கிறதா? அவ்வாறு சொல்வதன் மூலம் இது, அதாவது வரவு செலவு மானியக் கோரிக்கை எல்லாம் கேலிக் கூத்தாக்கப்படுகிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, தகுதி இருக்கிறதா என்று கேட்டார். அதை நான் ஆட்சேபிக்கவில்லை. அவர்கள் கேட்கலாம். எனக்குத் தகுதி இருக்கிறதா என்று நண்பர் சுரேந்திரன் அவர்கள் கேட்டதைப் பற்றி நான் வருத்தப்படவில்லை. ஒரு காலத்தில் எனக்குத் தகுதி இருந்தது. மேட்டூருக்கு வந்து சுரேந்திரனுக்காக நான் ஓட்டுக் கேட்டால்தான் ஓட்டு கிடைக்கும் என்ற அளவிற்குத் தகுதி இருந்தது. அதைப்பற்றியெல்லாம் விமர்சிப்பதற்கு நான் இப்பொழுது விரும்பவில்லை. தகுதி இருக்கிறதா என்று கேட்டார்கள். தகுதி மட்டும் அல்ல, எனக்கு உரிமை இருக்கிறது. நான் தனிப்பட்ட கருணாநிதி என்ற முறையில் கேட்கவில்லை. சரியாகவோ தவறாகவோ நாலரைக் கோடி மக்களின், தமிழ் மாநிலத்தின் முதலமைச்சராக இருக்கிறவன் என்ற முறையில், அவர்கள் அத்தனை பேர்களுடைய சார்பிலேயும் கேட்டிருக்கிறேன்.

ஏதோ பட்ஜெட்டில் தவறு நடந்து விட்டது இந்தப் பிரச்சினையால் என்று சொல்வது சரியல்ல. தவறு எதுவும் ஏற்படவில்லை. நான் காலையிலேயே நண்பர் ஆலடி அருணா அவர்கள் கொண்டு வந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தின் பொழுது மிகவும் விளக்கமாகப் பதில் அளித்திருக்கிறேன். பட்ஜெட்டில் எந்தவிதமான தவறும் ஏற்படவில்லை. வறட்சி நிதி கோரியதை வருவாய்க் கணக்கில் முதலில் சேர்த்துக் கொண்டு இப்பொழுது வேண்டாமென்று சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு முடிவு சொல்ல வேண்டும். முடிவு சொல்ல வேண்டும் என்று அவர் வற்புறுத்துகிறார்.

It is a quasi-federation. We have got sovereignty to a certain extent and the Centre has got sovereignty to a certain extent.

அப்படியிருக்கும் பொழுது நம்முடைய மாநில வரவு செலவைப் பற்றிப் பேசுவதற்கு மாநில சட்டசபைக்குத்தான் அதிகாரம் இருக்கிறதே தவிர, சரியாகச் செலவழிக்கப்படுகிறதா இல்லையா என்று கேட்பதற்கு வேறு யாருக்கும் அதிகாரம் இல்லை.

The executive is responsible to the State Legislature. The State Legislature has got Assurance Committee, and the Public Accounts Committee and Estimates Committee to see that the monies are spent properly and to condemn the Government if there is any extravagance or any improper expenditure. So, there is no authority on the part of any Central Minister to question the expenditure of the State Government.

THIRU R. PONNAPPA NADAR : I would like to raise a point of order. You have been pleased to give a ruling stating that we are only a quasi-federation. I am at a loss to understand how that interpretation can be given by the Hon'ble Deputy Speaker, while presiding over this House.

I have the Constitution in my hand and according to Part I—The Union and its Territory—" Article " 1. (1) India, that is Bharat, shall be a Union of States. It is not stated as a quasi federation. True it is, there are certain rights belonging to the States as well as to the Federation. What are the powers, whether the residuary powers rest with the State or with the Centre has also been provided in the Constitution.

Now the ruling that has been given by the Hon'ble Deputy Speaker is that this House is supreme and the Central Government cannot ask for any particulars. That should not be the attitude assumed in the light of the ruling that has been given by the Hon'ble Deputy Speaker. Our rights are defined and financial rights are also defined and within that purview and within the framework and within the Constitution it would be well within the rights of the State as well as the rights of the Centre to co-ordinate and work together, so that there shall not be any confrontation between the State and the Centre, and that should be the primary concern.

I think that it is more or less a confrontation between the Centre and the State and it may not be to the best interests of the Tamilians as a whole. We are discussing a very important matter and I think the feelings have risen high and views have been expressed both by the Opposition as well as by the Chief Minister in this House. I do not



want to raise all those issues in this matter. The question whether we are a quasi-federation or a loose federation or whatever that be does not arise. We are a federation and whether we like it or not, so long as this Constitution remains, we have to accept the Constitution as supreme.

I think the modified view of the learned Deputy Speaker may also be known in the light of the explanation that I have given. I think the view that it is a quasi-federation is not in consonance with the Constitution that is now in force. I would like to have a ruling in this matter.

திரு. ஆலடி அருணா : திரு பொன்னப்ப நாடார் அவர்கள் எழுப்பிய பிரச்சினையை ஒட்டி என்னுடைய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இந்த மாநிலத்தின் வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக இந்த அரசாங்கத்திற்குப் பூரண உரிமை இருக்கிறது. இந்த அவைக்குப் பூரண உரிமை இருக்கிறது. யாரும் மறுக்கவில்லை. இந்த அரசாங்கத்திற்கு அரசியல் சட்டத்தின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தின் கீழ் உள்ளவற்றுக்கு இந்த அரசாங்கத்திற்குப் பூரண உரிமை இருக்கிறது. ஆனால் இந்த அரசாங்கம் எடுக்கும் எந்த முடிவையும், கொள்கை முடிவையும் மற்றவற்றையும் பற்றிக் கருத்துக் கூற அகில இந்திய அடிப்படையில் எல்லோருக்கும் உரிமை இருக்கிறது. அமைச்சருக்கும் உரிமை இருக்கிறது; இந்தியக் குடிமகன் என்ற முறையில் ஒவ்வொருக்கும் உரிமை இருக்கிறது. இதை விமர்சிக்கக்கூடாது என்ற கருத்தைச் சொல்லக் கூடாது. அப்படிச் சொல்லுவது எந்த அடிப்படையில என்று தெரியவில்லை. அப்படிச் சொல்லுவது அடிப்படை உரிமையைப் பாதிப்பதாக இருக்கிறது.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : This is the first time I am hearing a word like that—quasi-federation. A federation can be a loose federation, but............

MR. DEPUTY SPEAKER : I would like to say that the Hon. lady member being a lawyer should have been aware of the Bengal Coal Company case. It has decided on the issue about the federation of the Constitution and the view expressed in that case is that it is a quasi-federation.

THIRU T. N. ANANDANAYAKI : May be Bengal. But so far as Tamil Nadu is concerned, our people are not willing to accept that it is a quasi-federation.

MR. DEPUTY SPEAKER : The question arose whether the property belonging to the State Government can be acquired by the Central Government. Then the learned Judges of the Supreme Court discussed the question and came to the conclusion that our Constitution is a quasi-federation.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Over and above that, I am really surprised to hear the ruling of the Chair that the Hon. Finance Minister at the Centre has no right whatsoever to question. How can it be ? He is a citizen of this country. Any citizen can question how the money is spent here. Not only the legislators, even an ordinary citizen can question. He is a tax payer and he can ask 'have you spent the money all right'?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, the Central Finance Minister did not speak merely as a citizen, but also spoke as Finance Minister of the Central Government stating that he would not give further finance to the State. He has uttered such a word as the Finance Minister of the Centre that he is going to verify the accounts and all that which may not come under his purview, but under the purview of the Auditor-General. By himself he cannot audit anything and as such, his statement is resented here.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

THIRUMATHI T. N. ANANDANAYAKI : I am sorry the Hon. Minister has thoroughly mistaken. I was on the dais when the Finance Minister spoke (interruption by Thiru K. Kamatchi). When he spoke I was sitting in the same platform.

திரு. காமாட்சி அங்கே உட்கார்ந்து கொண்டு ஏன் சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறார் ? நிதியமைச்சர் பேசும்போது நான் மேடையில் இருந்தேன். "பணம் சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று எங்களுக்குப் புகார்கள் வருகின்றன" என்றுதான் சொன்னாரே தவிர, வேறல்ல. I won't give further funds என்று சொல்லவில்லை. அதெல்லாம் latter additions of the Hon. Minister for Health சரியாகச் செலவழிக்கப்படவில்லை என்று புகார்கள் வந்திருக்கின்றன என்று குறிப்பிட அவருக்கு உரிமை இல்லையா ? அவரும் தமிழகத்தைச் சேர்ந்தவர்தான். அவருக்கு உரிமை இல்லையா ? அவரும் தமிழ்நாட்டு பிரஜைதான். He is a Tamilian அவருடைய வரிப்பணமும் இங்கே சேருகிறது. வரி இங்கே கொடுக்காதவராகவே இருந்தாலும் தமிழ்நாட்டில் பிறந்தவருக்குப் பேச உரிமை இருக்கிறது. எதிர்க்கட்சி என்றால் சொல்லத்தான் செய்வார்கள். ஒரேயடியாக அவர் இப்படிச் சொல்லிவிட்டார், சொல்லி விட்டார் என்று சொல்வது சரியல்ல.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டரில் பேசுங்கள்.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Your ruling is not all right. How can you say that he has no right to criticize the Government ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் "நான் மேடையில் இருந்தேன் ; அவர்கள் பேசியது இதுதான்" என்று சொன்னார்கள். ஆனால் பத்திரிகைகளில் அப்படி வரவில்லை. அப்படியானால் பத்திரிகைகள் எல்லாம் ஒன்றாகக் கூடி உட்கார்ந்து ஒரு மாநாடு



போட்டு "நாம் இப்படி ஒரு தவறான செய்தியை வெளியிடுவது" என்று முடிவு எடுத்துக் கொண்டு அவர்கள் வெளியிட்டார்கள் என்று அம்மையார் அவர்கள் கற்பனை செய்து பேசியதாகக் கருதுகிறேன். எல்லாப் பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. இதுவரையிலும் கொடுத்த பணத்திற்குக் கணக்கை வாங்கிக் கொண்டுதான் அதற்கு மேற்கொண்டு பணம் தர முடியும் என்று எல்லாப் பத்திரிகைகளிலும் செய்தி வந்திருக்கிறது.

ஏதோ புகார்கள் வந்திருக்கின்றன, ஆகவே விசாரிக்க வேண்டும், என்றால், எனக்குக்கூட சுப்பிரமணியத்தைப்பற்றி ஆயிரம் புகார்கள் வந்திருக்கின்றன என்றுகூடச் சொல்லிவிடலாம். இப்படிப் பேசிக்கொண்டே போவதா ? புகார், புகார் என்று சொன்னால் யார் வேண்டுமானாலும் யாரைப் பற்றி வேண்டுமானாலும் புகார் சொல்லலாம். ஒரு கட்சியிலுள்ள உறுப்பினர்கள் பேசலாம். சரியாகச் செலவழிக்கவில்லை என்று சொல்லலாம். வறட்சி நிவாரணப் பணிக்காகச் செலவழிக்கின்ற நேரத்தில் எங்கே தவறு நடந்தாலும், தவறு நடக்காமல் இருக்கவேண்டுமென்பதற்காகச் சுட்டிக்காட்டும் பொறுப்பு நாடாளுமன்ற உறுப்பினருக்கு இருக்கிறது; சட்ட மன்ற உறுப்பினருக்கு இருக்கிறது; மேலவை மாநிலங்கள் அவை உறுப்பினர்களுக்கு இருக்கிறது ; இன்னும் சொல்லப்போனால் பொது மக்களுக்கு இருக்கிறது. அப்படிச் சுட்டிக் காட்டும் நேரத்தில் அவை மீது நடவடிக்கை எடுக்கும் கடமை அரசுக்கு இருக்கிறது. அரசு அந்தக் கடமையை செய்ய நிச்சயமாகத் தயாராக இருக்கிறது. தவறுகளில் ஈடுபடுகிறவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள்மீது நடவடிக்கை எடுக்க இந்த அரசு தயங்காது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். ஆகையால் சுப்பிரமணியம் இப்படித்தான் சொன்னார் என்று அம்மையார் அவர்கள் சுப்பிரமணியத்தைக் காப்பாற்றப் புறப்பட்டிருப்பது விந்தையாக இருக்கிறது. அவர் அப்படிப் பேசியதாகப் பத்திரிகைகளில் வந்திருக்கிறது. அவர் பேசியது "இதுவரை கொடுத்த பணத்திற்குக் கணக்கை வாங்கிக் கொண்டுதான் மேற்கொண்டு பணம் தர முடியும். நான் வரப் போகிறேன் ; எல்லாவற்றையும் மேற்பார்வையிடப் போகிறேன்." என்று பேசியிருக்கிறார்.

அப்படிப் பேசியது யார் ? 1969-ஆம் ஆண்டு வறட்சியின் போது பிரதம அமைச்சர் அவர்களை வறட்சிப் பகுதிகளைப் பார்வையிட அழைத்த போது "தமிழ்நாட்டில் வறட்சியே கிடையாது ; எங்கு பார்த்தாலும் பசுமையாக இருக்கிறது" என்று சொன்னவர்–சுப்பிரமணியத்திற்கு எல்லாம் பசுமையாகத்தான் இருக்கும்........

திருமதி த. ந. அனந்தநாயகி : இப்படிச் சொன்னவரை நீங்கள் அப்போது ஆதரித்துப் பாராளுமன்றத்திற்கு அனுப்பினீர்களே, அப்போது இந்த உணர்வு எங்கே போயிற்று ? அன்றைக்கு நான் சொன்னபோது ஏற்றுக் கொள்ளவில்லையே. இனிமேலாவது நான் சொல்லுவதை ஏற்றுக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அப்பா........ அம்மையார் இப்பொழுதாவது ஒத்துக் கொண்டதற்கு நன்றி. அம்மையார் தனியாகச் சொன்னதை முதலமைச்சர் உடைத்துவிட்டதாகச் சொல்லக்கூடாது. சபையில் சொன்னதைத்தான் குறிப்பிட்டேன். தனியாகச் சொன்னதை வெளியில் சொல்லமாட்டேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : உங்களிடத்தில் தனியாக ஒன்றும் சொல்லவில்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : அம்மையார் அவர்கள் கிருஷ்ணகிரி தேர்தலில் சுப்பிரமணியத்தை ஆதரிக்காதீர்கள் என்று அன்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார்கள். சில நேரத்தில்—இது பெண்கள் ஆண்டு—பெண் புத்தி பின்புத்தி என்பார்கள் அது தவறு. இதில் என் ஆண் புத்திதான் பின் புத்தியாகப் போய்விட்டது. அப்போது அம்மையார் சொன்னதைக் கேட்கத் தவறிவிட்டேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் "புகார் வந்தது, உயர்திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்மீது" என்ற கருத்துக்களைச் சொன்னார்கள். அது சம்பந்தமாக மாநில அரசாங்கம் விசாரணை செய்திருக்கிறதா? அப்படி விசாரணை செய்தார்கள் என்றால் முடிவு என்ன? திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்களா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : புகார்கள் என்றால் என்ன என்பதற்கு இலக்கணத்திற்குச் சுருக்கமாகச் சொன்னேன். அவ்வளவு தான். குறிப்பிட்ட புகார்கள் வந்தால விசாரிக்கப் பாராளுமன்றத்தில் இருக்கிறார்கள். அவர்கள் விசாரிப்பார்கள். சுப்பிரமணியம் நேற்று ஒன்று, இன்றைக்கு ஒன்று, நாளைக்கு ஒன்று என்று பேசிக் கொண்டிருப்பதை நீங்கள் எல்லாம் மறந்து விட்டீர்கள் என்று கருதுகிறேன்.

"காமராஜருக்கு 15-ம் தேதிக்குள் கெடு வைக்கிறேன்; அதற்குள் எங்களோடு சேருகிறாரா இல்லையா என்று முடிவு கூற வேண்டும்" என்றார் ஒரு முறை. இரண்டு வாரம் கழித்து வந்த போது நீங்கள் எல்லாம் சூடாகப் பதில சொல்ல ஆரம்பித்தவுடன், "நான் காமராஜருக்கு அப்படித் தவணை வைக்கவில்லை" என்று அறிக்கை விட்டார். இப்போது வந்திருக்கிறபோது "நான் அப்போதே கெடு வைத்தேன் காமராஜருக்கு, நீங்கள் கேட்கவில்லை" என்று சொல்லுகிறார் இப்படி மூன்று முறை மூன்று பேச்சு, அதுதான் சுப்பிரமணியம்.

(பிற்பகல் 12-30)

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நரம்பில்லாத நாக்கு என்பதால் எதை வேண்டுமானாலும் சொல்லலாம் என்று சொல்கிறார்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நரம்பில்லாத நாக்கு யாருக்கு? என்னைச் சொல்கிறீர்களா? அல்லது சுப்பிரமணியம் அவர்களைச் சொல்கிறீர்களா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இதை நான் பெரிதுபடுத்த விரும்பவில்லை. யார் சொல்லியிருக்கிறார்கள் என்பது முதலமைச்சருக்கே நன்றாகத் தெரியும்.



திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, நாக்கில் நரம்பு இல்லை என்பது உண்மை. ஆனால் அதற்கு வரம்பு இருக்கிறது. அவசரமாகப் பேசும்போது சில சமயங்களில் காரிய காரணம் இல்லாமல் மாட்டிக் கொள்வது என்பது ஏற்பட்டு விடுகிறது. சுப்பிரமணியத்தினுடைய பெயரை இந்த பேரவையில் பேசி சலித்து அலுத்து விட்டது. அவர் இங்கே வெள்ளையாகச் சொல்லிவிட்டார். அவரிடம் ஏதோ முழு அதிகாரம் இருப்பது போலவும் இங்கே நடப்பது எல்லாம் அத்தனையும் ஊழல் போலவும் ஏதோ தாங்கள் பார்த்துத்தான் செய்ய வேண்டும். உத்தரவு இடுவேன் என்று, பழைய காலத்து பாளயக்காரர்கள் போலவும், பட்டாக்காரர்கள் போலவும்........ (குறுக்கீடு)

திருமதி. த. ந. அனந்தநாயகி : நவாப்களைப் போலவும் என்றும் சொல்லுங்கள்.........

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : அந்த அம்மா சொல்கிறார்கள். நவாப் போல என்று. இருக்கட்டும். எப்படிப் பார்த்தாலும் இவர் அவர்கள் பாரம்பரியம் இல்லை. அவர் வெள்ளையாகச் சொல்லிவிட்டார். இந்த மாதிரி இருக்கிறது. இனிமேல் விசாரித்துத்தான் உங்களுக்குப் பணம் வழங்குவேன் என்று இங்கே சொன்னார். டெல்லிக்குப் போனார் அங்கே ஆப்பு வைக்க வேண்டியவர்கள் ஆப்பு வைத்தார்கள். உடனே இவர் சொன்னார், "நான் எல்லா மாகாணங்களுக்கும்தான் சொன்னேன். தமிழ்நாட்டிற்கு மட்டும் சொல்லவில்லை" என்று. இது சுப்பிரமணியம் அவர்களுக்கு இயற்கையாக ஏற்பட்ட பண்பாடு. முதலில் ஒன்றைச் சொல்வார். பிறகு ஒன்றைச் சொல்வார். முன்னால் சொன்னதை மாற்றிச் சொல்வார். (குறுக்கீடு) தலைவர் அவர்கள் என்னைப் பேச அனுமதிக்க வேண்டும். அவர்கள் பேசும்போது நான் எழுந்திருப்பதில்லை........ அம்மையார் சொன்னார், "அப்போதே சொன்னோம், வேண்டாம் என்று, ஆனால் அப்போது கேட்கவில்லை. சி. எஸ். அவர்களைத் தேர்ந்தெடுத்தீர்கள்" என்கிறார். எல்லாம் நம்பிக்கைதான்.. இந்த அம்மையாரைத் தேர்ந்தெடுத்ததில் பழைய காங்கிரஸ்காரர்கள் ஏமாறவில்லையா? அதைப்போலத்தான் ஏமாற்றம் என்பது நம்பிக்கையின் பேரில் ஏற்படுகின்ற விளைவு. அதற்கு அவரும் சேர்ந்து ஒப்புக் கொள்கிறார்கள் என்று நினைக்கிறேன். எனவே, இந்தப் பிரச்சினையை இத்தோடு விட்டு விடுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இப்போது..............

திரு. எம். சுரேந்திரன் : சபாநாயகர் அவர்களே, நான் என் பேச்சை முடிக்கவே இல்லையே! ஐந்து நிமிடம் கூடப் பேசவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரை மணி நேரம் ஆகியிருக்கிறது.

திரு. எம். சுரேந்திரன் : அதற்கு நான் பொறுப்பல்லவே. இன்னும் ஐந்து நிமிடங்கள் கொடுத்தால் எனது பேச்சை முடித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி. ஐந்து நிமிடத்தில் முடித்து விடுங்கள். ஏனென்றால் பேரவைத் துணைத் தலைவரிடம் சொல்லிவிட்டுப் போயிருந்தேன். திருவாளர்கள் சௌந்தரபாண்டியன், அழகர்சாமி, சண்முகம், சுரேந்திரன் ஆகியவர்களுக்கு நேரம் இருந்தால் பேச அனுமதி கொடுங்கள் என்று சொல்லிவிட்டுப் போய் இருந்தேன். இப்போதே 12-30 ஆகிவிட்டது. இன்னும் திரு. பொன்னப்ப நாடார் பேச வேண்டும். பிறகு அமைச்சர் பதில் சொல்ல வேண்டும். ஆகவே, ஐந்து நிமிடங்கள் கொடுக்கிறேன். அதற்குள் முடித்து விடுங்கள்.

திரு. எம். சுரேந்திரன் : தலைவரவர்களே, நான் சொல்ல வந்தது, நியாயம் செயல்படுத்தப்படுவதற்கு வருகிற போது இங்கே இருக்கின்ற நமது சட்டம், ஜனநாயகக் கோட்பாடுகள், மரபுகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு வரக் கூடிய போக்குகளுக்கு உட்பட்டு, தகுதி இருக்கிறதா என்று கேட்பதற்குக் காரணம், அந்த அமைப்புக்கு உள்ளே நின்று இந்தக் காரியத்தைச் செயல்படுத்துவதற்குத் தகுதி இருக்கிறதா, தனிப்பட்ட முறையில் அவருக்குத் தகுதி இருக்கிறதா என்று கேட்டால் முதலமைச்சர் அவர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார் என்று கருதுகிறேன். அந்த முறையில் நான் குறிப்பிடுகின்ற போது இந்த வரவு-செலவுத் திட்டமும், மானியமும் எல்லாம் ஒரு கொத்தாக இருக்கின்றது. அது சபையில் விவாதிக்கப்பட்டாலும், ஓட்டு எடுக்கப்பட்டாலும், நிதி இலாக்கா அமைச்சர் அவர்கள் என்ன கருதுகிறார்களோ அதைப்போல நோக்குவதற்கு, நியாயம் கற்பிப்பதற்கு, செலவு செய்யாமல் விட்டு விடுவதற்கு ஆகிய முறைகளிலே நடைமுறையில் இருக்கின்ற வாதங்கள், மற்றும் முதலமைச்சரின் பேச்சு ஆகியவை அமைந்திருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் குறிப்பிட விரும்புகிறேன். ஆகவே, இந்தச் சபையில் இருக்கின்ற உறுப்பினர்களுக்கு இந்தச் சபையிலுள்ள அமைச்சர்கள் சொல்கின்ற வாதத்தை ஏற்று, அதற்கேற்றவாறு சொல்கின்ற மரபாக இருக்கின்ற தன்மையை எடுத்துக் கூறுவது கடமையாக இருக்கிறது என்ற காரணத்தால் இந்தப் பிரச்சினையைச் சபையின் கவனத்திற்கு வைத்திருக்கின்றேன்.

அடுத்தாற்போல், இந்தச் சபையிலுள்ள அமைச்சர்கள் பல நேரங்களில் ஒரு கருத்தினைப் பேசி இருக்கிறார்கள். இங்கே இருக்கின்ற வருவாய்த் துறை வாரியத்தை, ரெவின்யூ போர்டை ஒழிக்க வேண்டுமென்று நம்முடைய பல நண்பர்கள் இங்கே பேசி இருக்கிறார்கள். ரெவின்யூ போர்டு ஒழிக்கப்படும் என்று அமைச்சர்கள் உறுதியாகக் கூறினார்கள். ஆனால், அது ஒழிக்கப்படவில்லை. அதற்குப் பின்னாலும் தொடர்ந்து இருக்கின்றது. அது ஒழிக்கப்படுவதற்கு எந்த நடவடிக்கையும் இதுவரையிலும் இல்லை என்பதை இந்த நேரத்தில் இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன்.

அதேபோல நம்முடைய மாவட்டங்களில் அபிவிருத்தி மன்றங்கள் இருக்கின்றன. இந்த அபிவிருத்தி மன்றங்களில் பல கருத்துக்கள் பேசப்பட்டிருக்கிறதே தவிர ஆனால் பேசப்படுகிற பேச்சு செயலுக்கு வருகின்றதா என்றால், செயலுக்கு வரவில்லை. காரணம், இந்த மன்றம், ஏதோ ஒரு சிபாரிசு செய்கின்ற அமைப்பாக இருக்கிறது. அது சரியானதல்ல. இன்றைக்கு வளர்ந்து கொண்டிருக்கிற வளர்ச்சியை சரியாக மதிப்பிட்டு



ஒழுங்கு செய்ய வேண்டும் என்றால் இதிலே எடுக்கப்படுகின்ற தீர்மானங்கள் முறையாக எடுக்கப்பட்டு, நிறைவேற்றப்படுவதற்கான அதிகாரம் இதில் அமைப்பாக இருப்பது மிகமிக அவசியமான ஒன்றாகும் என்பதை இந்த நேரத்திலே கூறிக் கொள்ளக் கடமைப் பட்டிருக்கிறேன்.

அதேபோல கிராமத்திலிருக்கிற கிராம அதிகாரிகளைப் பரம்பரை பரம்பரையாக வைத்துக் கொள்வது என்ற பழக்கம் இருந்து கொண்டிருக்கிறது. நாம் அந்தப் பழக்கத்தை விட்டுவிடுவதற்குத் தயாராக இல்லை. கிராமக் கணக்குகள், கிராம அமைப்புகள் எப்படி இருக்கின்றன என்பதை பற்றி இங்கே பல நேரங்களில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, கிராம அதிகாரிகள் செயல் திறனைப் பார்த்தால், இங்கே இருக்கிற பல திட்டங்களைப் போடுவதற்கு அடிப்படையாக அவர்கள் அமைந்திருக்கின்ற காரணத்தால் கிராம அதிகாரிகள் பழைய காலத்தைப் போல அல்லாமல் பல சிறப்பான தகுதிகளை உயர்ந்த தகுதிகளைப் பெற்று செயல்படுவதற்கு, மக்களுடன் இணைந்து செயல்படுவதற்கு இருக்க வேண்டும் என்பது ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அப்படிப் பார்க்குமிடத்து, பரம்பரை பாதுகாக்கப்பட வேண்டுமென்ற முறையில் நடந்து வருவது இன்றையத் தேவைக்குப் போதுமானதாக இல்லை. இன்றையத் தேவைக்கேற்ற செயல் திறன் அவர்களிடம் இல்லை. எனவே, அந்த முறையை மாற்றி அமைப்பதில் அதிகக் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்தபடியாக, ஏற்கெனவே இந்த மன்றத்தில் கூறி இருக்கின்றேன்—பல முறை—அது என்னவென்றால், கடிதப் போக்குவரத்து. கடிதப் போக்குவரத்து உடனுக்குடன் நடக்கின்ற ஒரு காரியமாக இருக்க வேண்டுமே தவிர, கடிதம் போடப்பட்டால், விண்ணப்பம் போடப்பட்டால், எப்போது பதில் வருகிறது என்றால், பதில் வருவதற்குள்ளாக எந்தக் குறை, அல்லது எந்தக் காரியத்திற்காக அந்த விண்ணப்பம் அல்லது கடிதம் போடப்பட்டதோ அது முடிந்து போய், சம்பந்தம் இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு விடுகிறது. ஆகவே கடிதப் போக்குவரத்து—விண்ணப்பங்கள் போன்றவைகளுக்கு உடனடியாகப் பதில் கொடுக்க வருவாய்த் துறை தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஜனநாயகப் பண்பாட்டின்படி உழைப்பவர்களுக்கு உயர்வு அளிக்கப்படவேண்டும். திட்டமிட்டு, அதற்காக செலவழிக்கின்ற பணமெல்லாம் இந்த உயர்ந்த நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான். அப்படி நோக்குமிடத்து அங்காங்கே மாவட்டத்திலே இருக்கின்ற அதிகாரிகள்—மாநிலத்தில் இருக்கின்ற, நிர்வாகத்தில் இருக்கின்றவர்கள்—தங்கள் உறுப்பினர்களாக இருக்கின்ற மற்றும் அதிகாரிகள், சிப்பந்திகள் ஆகியோரை அணுகும்போது உழைப்பாளர்களுக்கு சுமுகமான சூழ்நிலை இருக்க வேண்டும்.

அந்த முறையில் பார்க்கின்றபோது ஒரு சாதாரண விவசாயி தன்னுடைய கோரிக்கைக்காக—அதுவும் இந்த வறட்சிக் காலத்தில்—தாலுகா ஆபீசுக்குச் சென்று ஒரு காரியத்தைச் செய்ய வேண்டுமென்றால் அவனுக்கு

சமூகமான சூழ்நிலை இருக்கின்றதா என்று பார்க்கின்ற காலத்திலே, இல்லை என்பதைத்தான் பார்க்க முடிகிறது. அவனுடைய கோரிக்கைகளைக் கொண்டு மதிப்பிடுவதற்குப் பதிலாக அவனுடைய உடைகளைக் கொண்டு மதிப்பிடுகிறார்கள் என்ற நிலையினைப் பார்க்கின்றபோது வேதனையாக இருக்கிறது. அவன் ஒரு விவசாயி—ஓட்டு உரிமை உள்ளவன்—நாட்டிற்கு முன்னேற்றம் ஏற்பட செயல்பட்டுக் கொண்டிருக்கிறவன்—என்ற நிலையிலே பார்க்க வேண்டும். அந்த நிலை ஏற்பட்டால் தான் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்பட வழிவகை ஏற்படும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்தாற்போல நான் எனது வெட்டுத் தீர்மானத்திலே "முத்திரைத் தாள்களைத் தனியார் மூலம் விற்பனை செய்யாமல் அரசாங்கமே விற்பனை செய்ய வேண்டும்" என்று குறிப்பிட்டிருக்கிறேன். எனக்கு அனுபவம் இருக்கிறது. பல இடங்களில் பழைய ஸ்டாம்புகளை அதிகமாகச் சேகரித்து வைத்துக் கொண்டு ஒரு பற்றுக்குறையை ஏற்படுத்தி, அதிக விலைக்கு விற்கிறார்கள். சாதாரண ஸ்டாம்புகளைக் கூட அதிக விலை கொடுத்து வாங்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. பல இடங்களில் இப்படிப் பட்ட நிலை நடந்து கொண்டிருக்கின்றது. இந்தக் காரியங்களை எல்லாம் ஒழுங்குபடுத்தி கவனித்துச் செயலாற்ற வேண்டுமென்று இந்தச் சந்தர்ப் தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இந்தத் துறை எல்லா மாநில அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு செயல்பட வேண்டும். மக்களின் குறைகளைத் தீர்க்கின்ற ஒரு துறையாக இத்துறை இருக்கின்றது. மானியக் கோரிக்கைகளை கணக்கிற்கொண்டு பார்த்தால், பொதுப்பணித் துறைக்கு அடுத்தாற்போல செலவு செய்யக் கூடிய துறையாக இத்துறை இருக்கின்ற காரணத்தால், இத்துறை சிறப்பாகச் செயல்பட வேண்டிய அவசியம் இருக்கின்ற காரணத்தால், என்னுடைய இந்தக் கருத்துக்களை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறேன். இவைகளையெல்லாம் தயவு செய்து இப்போது வருவாய்த் துறை அமைச்சராக இருக்கின்ற அமைச்சர் அவர்கள் கவனத்தில்கொண்டு இத்துறையை மேம்பாடு அடையச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, இந்த மன்றத்திலே என்னுடைய கட்சியின் சார்பாக கொடுத்து இருக்கும் வெட்டுத் தீர்மானங்களை ஆதரித்து ஒரு சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

முதலில் இந்த வறட்சிபற்றி ஓரிரு கருத்துக்களைக் கூறுவது என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். வறட்சியால் நாட்டிலே உள்ள நிலைமைகளைப் பற்றி, அது எவ்வளவு கடுமையாக இருக்கிறது என்பதைப்பற்றி இந்த மன்றத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் நல்ல முறையில் எடுத்துக் கூறியிருக்கிறார்கள். இந்த வறட்சியைப் பற்றி விவாதிப்பதற்கு—நாங்களெல்லாம் விவாதிப்பதற்கு—அந்த ரெவின்யூ போர்டு மெம்பர்களுடைய அறிக்கையை இங்கே வைத்து இருந்தால், எங்களுக்கு எல்லாம் கருத்துச் சொல்வதற்கு வசதியாக இருந்து இருக்கும். அப்படி வைக்கப்படவில்லை.



ஆனால் இங்கே இருக்கும் புள்ளி விவரங்களை வைத்து, பல பகுதிகளில் கடுமையான முறையில் இருக்கின்றது என்பதை அறிகிறோம். இது சம்பந்தமாகப் பல்வேறு அரசியல் பேச்சுக்களும் எழத் தொடங்கியிருக்கின்றன என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் சி. சுப்பிரமணியம் அவர்கள் ஒரு பொதுக் கூட்டத்தில் பேசுகிற நேரத்தில், அது சம்பந்தமாகப் பேசியதையும், அதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் அளித்து இந்த மன்றத்தில் பேசியதைப் பற்றியும் விரிவாகவும், விளக்கமாகவும் இன்று பதில் எல்லாம் கூறியிருக்கிறார்கள். என்னுடைய கட்சியைப் பொறுத்த வரையில் நான் ஒன்றைக் கூற விரும்புகிறேன். மத்திய நிதி அமைச்சராக இருக்கும் உயர்திரு சி.எஸ். அவர்கள், நிதி அமைச்சர் பொறுப் பேற்றுக் கொண்டுள்ள அவர்கள் இன்றுள்ள அரசியல் சட்டத்தின் நெறி முறைகள் படி இந்த மாநிலத்தில் என்னென்ன காரியங்கள் நடைபெறுகின்றன என்று கேட்டு அறிந்து கொள்வதில் ஆட்சேபணை இல்லை. அந்த வரம்பு மீறி பேசி இருக்கிறாரா இல்லையா என்பது இன்று விவாதத்திற்கு உரிய பிரச்சினையாக ஆகியிருக்கிறது. என்னைப் பொறுத்த வரையிலும், இந்த மாநில அரசாங்கமும், மத்திய நிதி அமைச்சரும், இரு சாராரும் தப்பு செய்து இருக்கிறார்கள். ஏனெனில் மத்திய அமைச்சர் இது மாதிரியான முறையில கூறத் தேவையில்லை. அது தேவை அற்றது என்று ஆணித்தரமாகக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். அதே நேரத்தில் மாநில முதலமைச்சர் அவர்கள் நிதி அமைச்சராகவும் இருக்கிறார்கள். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கிற வரையில், மாநிலத்திற்கு வறட்சிக்காக நிதி கேட்கப்போவது இல்லை சொல்லியிருக்கிறார்கள். முதலமைச்சர் அவர்கள் இப்படிச் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்கது அல்ல என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். ஏனெனில், 4½ கோடி மக்களின் பிரதிநிதியாக முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் கூறியிருக்கிறார்கள். நமக்கு இன்னும் அதிக பணம் தேவை. மத்திய அரசாங்கம் அதிகப் பணம் தர வேண்டும். வறட்சிப் பணி செய்வதில் அவர்கள் அரசியலை இணைக்கத் தேவையில்லை. அதைத்தான் எங்கள் கட்சித் தலைவர் காமராஜர் அவர்கள் பல இடங்களிலும், பல கூட்டங்களிலும் கூறிக்கொண்டு வருகிறார்கள். அவர்கள் மெத்த அறிஞராக இருப்பதால் அவர்கள் கூறுகிற கூற்றை நாம் மரியாதையோடு ஏற்றுக்கொள்கிறோம். எது எப்படியாயினும் சரி, இப்போது வறட்சியால் பாதிக்கப்பட்ட ஏழை எளிய மக்களுக்கு, துன்பப்படும் மக்களுக்கு அரசாங்கம் சரியான முறையில், இன்னும் அதிகமான முறையில் உதவிகளை அளிக்கவேண்டும், அப்படி நாம் செய்து கொடுப்பதற்கு உரிமை படைத்தவர்களாக இருக்கிறோம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள் நிதி அமைச்சராக இருக்கலாம். நாளைக்கு வேறு ஒருவர் இருக்கலாம். இந்த உணர்ச்சியோடு கூறுவது தேவையில்லை. இருசாராரும் தப்பு செய்து இருக்கிறார்கள் என்பதை நாம் ஒப்புக்கொள்ள வேண்டுமென்று, இந்த அளவில் கூறி, என்னுடைய கருத்துக்களை வறட்சிப் பணி குறித்துச் சொல்வதற்கு முற்படுகிறேன்.

வறட்சிப் பணியில் பழைய கிணறுகளை ஆழப்படுத்தத் திட்டம் போட்டு இருக்கிறார்கள். புதிதாகக் கிணறு வெட்டுவதற்கும் வழி செய்யவேண்டும். அதிலும் குறிப்பாக இன்று வறட்சிப் பணிக்காக ஒதுக்கியிருக்கும் 10 கோடி போதாது. இன்னும் அதிகப்பணம் வேண்டும். இதற்காக மத்திய சர்க்கார் பணம் தரவேண்டும். எப்படி உத்திரப் பிரதேசத்திற்குக் கொடுத்தார்களோ, எப்படி குஜராத் மாநிலத்திற்குக் கொடுத்தார்களோ, எப்படி மகாராஷ்டிர மாநிலத்திற்குக் கொடுத்தார்களோ, அது மாதிரி தமிழ் நாட்டிற்கும் இப்போது இருக்கும் அசாதாரண நிலையைக் கருத்தில் கொண்டு கொடுக்க வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதே மாதிரி மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி ஒரிரு கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இன்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் பல இடங் களில் அடிக்கடி மாற்றப்படும் நிலைமை இருக்கிறது. உதாரணமாக, புதுக் கோட்டை—புதிதாக ஆரம்பிக்கப்பட்ட ஜில்லாவாக இருக்கிறது. அங்கே முதலாவதாக ஜில்லா கலெக்டராக இருந்தவர் திரு. ராமதாஸ், ஐ.ஏ.எஸ் பிறகு திரு. மயில்வாகனன் என்பவர் வந்தார். இப்போது திரு. நரசிம்மன் என்பவர் கலெக்டராக மாற்றப்பட்டு இருக்கிறார். இப்படிப் புதி தாக அமைக்கப்பட்ட ஜில்லாவில் அடிக்கடி மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாற்றப்படுவதால் அங்கே இருக்கும் நிர்வாக பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குக் கஷ்டமாக இருக்கிறது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடிக்கடி இந்த மாதிரியான மாறுதல் ஏற்படக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்கிறேன். அதே மாதிரி என்னுடைய ஜில்லாவிலும் அடிக் கடி ஜில்லா கலெக்டர் மாற்றப்பட்டுக்கொண்டிருக்கிறார். 6 மாதம் 1 வருஷம் என்று இருந்தால் அதிகம் என்று சொல்கிறார்கள். ஆகையால் அவர்கள் அந்த ஜில்லா பிரச்சினைகளைத் தெரிந்து, அந்த ஜில்லாவில் என்னென்ன மாற்றங்கள் செய்யவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதைச் செய்ய முடியாமல் போய் விடுகிறது. இது ஒரு மோசமான காரியமாக இருக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

ஏதோ நீண்டகாலமாக இருப்பவர்களை, 3 வருஷத்திற்கு ஒரு முறை மாற்றவேண்டுமென்று பல விதிமுறைகள் இருக்கின்றன. ஆனால் ஒரு சில பகுதியில் ஒரு சிலர் நிரந்தரமாக இருந்து வருகிறார்கள். உதாரண மாக உத்தமபாளையத்தில் பல வருஷகாலமாக ஷராப்—15 வருஷத்திற் கும் மேலாக இருந்து கொண்டிருக்கிறார். அங்கே அவர் பல விதமான காரியங்களில் ஈடுபட்டுக்கொண்டு இருக்கிறார்கள் என்ற புகாரும் வந்த வண்ணம் இருக்கிறது. அது சம்பந்தமாக திரு. கே. பி. கோபால் அவர்களும் என்னிடத்தில் சில விவகாரங்களைச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் நீண்ட காலமாக, 15 ஆண்டுக் காலமாக ஒரே இடத்தில் இருப்பது பொருத்தமல்ல என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்கிறேன்.

மாவட்ட நிர்வாகத்தில் பப்ளிக் ரிலேஷன்ஸ் அதிகாரி இருக்கிறார். அவர் என்ன வேலை செய்கிறார் என்று தெரியவில்லை. இப்போது ஆளும் கட்சியின் சாதனைகளை அவர்கள் தொகுத்துப் பட்டியல் போட்டு, பிரசாரம் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்று சொல்கிறார்கள். சில இடங் களில் இப்படிச் செய்கிறார்கள். பல்வேறு இடங்களில் அவர்கள் இருக்





கிறார்களா இல்லையா என்பது எங்களைப் போன்றவர்களுக்குத் தெரிய வில்லை. அங்கே இருக்கும் ஒரு சில அதிகாரிகளை மாறுதல் செய்து இருக்கிறார்கள். இப்போது சிக்கனமாக செலவு செய்யவேண்டுமென்று நினைத்துக்கொண்டிருக்கிற நேரத்திலே, இப்படி மாறுதல் போடுவதால் ஆயிரக்கணக்கான ரூபாய்கள் டி.ஏ. போன்றவற்றிற்குச் செலவிட வேண்டி யிருக்கிறது. ஆகவே, அத்தகைய நிலைமைகளை ஒழிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட எல்லைகளைத் திருத்தி அமைக்கவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கூறிக்கொண்டு இருக்கிறேன். அது குறித்து வெட்டுத் தீர் மானமும் கொடுத்து இருக்கிறேன். கோயம்புத்தூர் ஜில்லாவானது பெரிய ஜில்லாவாக இருக்கிறது. ஈரோடை தலைநகராகக்கொண்டு அதைப் பிரிக்கவேண்டுமென்று பல முறை எடுத்துச்சொல்லியிருக்கிறேன். மறு முறையும் வலியுறுத்திக் கூறிக் கொள்கிறேன். ஈரோடை தலைநகராகக் கொண்டு மாவட்டத்தைப் பிரிக்கிற நேரத்தில், சேலம் பகுதியிலிருந்து சிலவற்றையும் இணைத்துக்கொள்வது பொருத்தமாக இருக்கும் என்ற யோசனையையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமநாதபுரம் ஜில்லா இருக்கிறது. அதுவும் ரொம்ப பெரியதாக இருக்கிறது. அதையும் பிரிக்கவேண்டுமென்று பல முறை பல்வேறு கருத்துக்கள் வந்தது. அதையும் விரைவில் பிரித்துத் தரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருநெல்வேலி ஜில்லாவிலுள்ள இராதாபுரம் தாலுக்காவை கன்னியாகுமரி மாவட்டத்தோடு சேர்க்கவேண்டுமென்று பல முறை எடுத்துச்சொல்லியிருக்கிறேன். அதை கன்னியாகுமரி ஜில்லாவோடு சேர்த் தால் நிர்வாக வசதிக்கும் உகந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய ஜில்லாவில் இருக்கும் பிரச்சனைகள் குறித்தும் சில வற்றைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய ஜில்லாவில் 64-ரெவின்யூ வில்லேஜ் என்ற அடிப்படையில் இருக்கின்றன. அங்கே ரெவின்யூ வில்லேஜ் என்று சொன்னால் 10 சதுர மைல் பரப்பளவும் இருக்கிறது, 50 சதுர மைல் பரப்பளவும் இருக்கிறது. அந்த மாதிரிப் பெரிய ரெவின்யூ வில்லேஜாக இருப்பதை, இரண்டாகப் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ்: பாயின்ட் ஆப் ஆர்டர் சார், எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, அமைச்சர்கள் பேசிக்கொண்டு இருக்கலாமா?

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: பல்வேறு ரெவின்யூ வில்லேஜ் இப்படி இருப்பதால் பிரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாவட்ட அளவிலும் இது குறித்துப் பரிசீலித்து அறிக்கை கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதை உடனடியாகச் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

அங்கே ரெவின்யூ செட்டில்மென்டை பொறுத்தவரையில் சர்வே பற்றி ஒரு சில வார்த்தைகள் கூற விரும்புகிறேன். பத்மனாபபுரம் என்கிற இடத்தில் ஒரு சர்வே அலுவலகம் இருக்கிறது. 31—3—1975 தேதியோடு அதற்கு சாங்ஷன் முடியப்போகிறது என்று சொல்கிறார்கள். மேலும் நடத்திக்கொண்டு போவதற்கு பரிந்துரை வந்திருப்பதாகக் கேள்விப்படுகிறோம்.

இப்போது அங்கே ஸ்கெலிடன் ஸ்டாப் போட்டு மூன்று மாதத்திலே முடித்து விடலாம் என்று திட்டம் இருந்து இருப்பதாகக் கேள்விப் படுகிறேன். இது பொருத்தமற்றது என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன். திருவாங்கூர் ராஜ்யத்துடன் இருந்த காரணத்தால், சர்வே ரிகார்ட்கள் பலதும் அழிக்கப்பட்டு சரியான முறையில் சர்வே பட்டா இல்லை என்று புகார் இருந்து வருகிறது, கம்ப்ளெயிண்ட்ஸ் இருக்கின்றது. இப்போது இருக்கின்ற முனிசிபல் நகரங்களுக்கு சர்வே ஏற்படுத்தவில்லை, சப்டிவிஷன் செய்யவில்லை. பல்வேறு அப்ளிகேஷன்கள் முடங்கி கிடக்கின்றன என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இதே மாதிரி டிரான்ஸ்பர் ஆன போதிலும் பல பத்திரங்கள் அடிப்படையில் டிரான்ஸ்பர் ரெஜிஸ்ட்ரேஷன செய்யப்படாத நிலைமை ஏற்பட்டு இருக்கின்றது. சர்வே இலாகாவுடைய இந்த ஆபீசை இன்னும் ஒரு வருட காலத்திற்கு நீட்ட அதற்கு வேண்டிய ஏற்பாடு செய்தால் பொருத்தமாக இருக்கும் என்று ஆலோசனை கூற விரும்புகிறேன்.

ரயில்வே நிலம் ஆர்ஜிதம் செய்யவில்லை. செய்தார்கள் என்று சொல்லிக் கொண்டு இருக்கிறார்கள். தனியார் நிலங்களுக்கு 4 வருடக் காலமாக லாண்ட் காம்பென்சேஷன் கொடுக்கவில்லை. 72-லே பல நிலங்கள் ஆர்ஜிதம் என்ற அடிப்படையிலே எடுக்கப்பட்டு காம்பென்சேஷன் கொடுக்கவில்லை. 4 வருடக்காலமாக நிலங்கள் பயிர் செய்ய முடியாத நிலைமையில் இருக்கின்றது. மண் போட்டு விட்டார்கள். ஒரு காசு கொடுக்கவில்லை காம்பென்சேஷனாக. இந்தப் பகுதியிலே நிலத்திற்கு விலை அதிகமாக கிடைக்கிறது. குறிப்பாக நஞ்சை நிலத்தில் இப்படி மண்ணைப் போட்டு விட்டால் உணவு உற்பத்தி பாதிக்கப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. பயிர் செய்தலுக்குப் தடங்கல் ஏற்பட்ட காரணத்தால் பாதிக்கப்பட்டவர்கள் அல்லல்படுகிற நிலைமையைப் பார்க்கிறோம். அவர்களுக்கு காம்பென்சேஷன் உடனடியாக வழங்க அரசாங்கம் வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி இந்த பட்டா செய்து கொடுப்பதிலே பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. கல்குளம், விளவங்கோடு இந்த தாலுக்காகளில் பல்வேறு பிரச்னைகள் இருக்கின்றன. பல மனுக்கள் கொடுத்து இருக்கிறார்கள். இன்று ரெவின்யூ இலாகாவில் இருக்கின்ற தாசில்தார் போன்ற அதிகாரிகள் ஒழுங்காகச் செய்யவில்லை என்று புகார் மனு கொடுத்து இருக்கிறார்கள். ஒழுங்காகச்செய்யவேண்டுமென்று தாக்கீது அரசாங்க தரப்பிலே இருந்து கொடுக்க வேண்டும். அப்போதுதான் ஏழைகளுக்கு நிலங்கள் ஒழுங்காகக் கொடுக்க முடியும் என்று சுட்டிக்காட்ட கடமைப் பட்டு இருக்கிறேன்.



அடுத்தபடியாக இந்த வில்லேஜ் அதிகாரிகள் எல்லாம் நிரந்தரப் படுத்துவதைப் பார்த்தேன். 1970-க்கு பிறகு நியமனமானவர்கள், முன்னதாக நியமனம் ஆனவர்கள் என்று இரு கூறாக வைத்து இருக்கிறார்கள். இவர்கள் பயனடையக்கூடிய முறையில் நிரந்தரப் படுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ராணுவத்தினருக்கு நிலம் கொடுக்கிற விஷயம் பற்றி நான் இங்கே கூறவேண்டுமென்று கருதுகிறேன். திருச்சி ஜில்லாவிலே ஒரு மாஜி ராணுவ வீரர்—தங்கவேலுவுக்கு திருச்சி தாலுகா முத்தரசநல்லூர் 199/2-லே 42 நிலத்தை ஒப்படை செய்து கொடுத்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக டீட் ஆப் அசைன்மெண்ட் கையெழுத்து போட்டு அதற்கான பணத்தை சப் டிரெஷரியில் கட்டி விட்டார்கள் 9—10—1973 அன்று சலான் நம்பர் 4007. இப்போது யாரோ ஒருவர் மனுக் கொடுத்து இருக்கின்றார் என்ற காரணம் காட்டி அசைன்மெண்ட் கொடுக்கவில்லை.

'The assignment made in favour of Thiru Thangavelu is therefore cancelled and the case is remitted to the Authorised Officer(Land Reforms), Tiruchirappalli for fresh enquiry and orders.'

டிஸ்ட்ரிக்ட் ரெவின்யூ அதிகாரி அவர்கள் உத்தரவு இடுகின்றார். இவை எல்லாம் அரசாங்கத்திலே நல்ல முறையிலே விசாரணை செய்து இருக்கிறார்கள். முடிந்த பிறகு, பணம் கட்டுவதற்கு, நிலம் கொடுப்பதற்கு எல்லாம் உத்தரவு இடுகின்றார். இதில் ஏதோ நடந்து இருக்கிறது இது சம்பந்தமாக நீதி வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மாஜி ராணுவ வீரர், தேசத்திற்கு அல்லும் பகலும் உழைத்து நாட்டை பாதுகாப்பதிலே ஈடுபட்டு இருந்தவருக்கு இந்த விதமான சுணக்கம் ஏற்படக் கூடாது என்று சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்தபடியாக இந்த ஸ்டாம்ப் கட்டண அளவிலே கூறி வார்த்தையைக் முடித்துக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன். ஸ்டாம்ப் கட்டணம் உயர்த்தப்பட்டு இருக்கிறது. இது சீரமைப்பு என்ற அடிப்படையில் உயர்த்தப்பட்டு இருக்கின்றது. மற்ற முறையிலும் உயர்த்தத் திட்டமிட்டு இருக்கின்றனர். வருவாய் அதிகம் வரும் என்று சொல்கிறார்கள். ஆறு கோடி துண்டு விழுகிறது. இதைச் சரிக்கட்ட ஸ்டாம்ப் கட்டணம் உயர்த்துகிறோம் என்று சொல்கிறார்கள். இந்த உயர்வாலே ஏறத்தாழ 2 கோடி வருவாய் ஒன்று வரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதைவிட அதிகமாக வரும் என்று காண்கிறேன்.

இன்றைய தினம் பல இடங்களில் இந்த நிலங்கள் என்ன விலை நிர்ணயிக்கப்பட வேண்டுமென்று ரெவின்யூ இலாகா நிர்ணயம் செய்து இருக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் அதிகமாக வருவாய் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். எங்கள் பகுதிப் பிரச்னை என்ற முறையில் ஒன்றைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். அதாவது எங்கள் பருதியில் உள்ளவர்கள் அண்மையிலே இருக்கின்ற கேரள மாநிலத்திற்கு சென்று அங்கே இண்டியன் ரெஜிஸ்ட்ரேஷன் ஆக்ட் அமுல் இருக்கின்ற

காரணத்தால் பத்திரம் பதிவு செய்கிறார்கள். பதிவு செய்கிற நேரத்திலே ஏதாவது பிக்டீஷியஸ், போகஸ் அடிப்படையில் ஒரு மரம் ஏதாவது போட்டு விட்டு அங்கே பத்திரம் பதிவு செய்வதற்கு ஏதுவாகக் காரியம் செய்து விடுகிறார்கள். பஞ்சாயத்து ஒன்றியங்கள் வருவாய் வர ஏதுவாக இல்லை. இதனால் பஞ்சாயத்து ஒன்றியங்கள் நிர்வாகம் பாதிக்கப்படுகிறது என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதை எனக்கு முன்பு பேசிய உறுப்பினர் ஜேம்ஸ் கருத்தை ஒரு அளவு எடுத்துக்கூறி இருக்கின்றார். இதை வேண்டிய முறையில் ஆராய வேண்டுமென்று நிர்வாகத்திற்குக் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு நிலச் சீர்திருத்த சட்டங்கள் போடப்பட்டு இருக்கின்றன. குறிப்பாக இந்த டெனன்ஸி ரிகார்ட்ஸ் ஏற்பாட்டில் பல சிக்கல்கள் இருக்கின்றன. கல்டிவேடிங் டெனன்ட்ஸ் ப்ரொடக்ஷன் ஆக்ட் கன்னியாகுமரி ஜில்லாவில் நடைமுறையில் இல்லை என்ற காரணத்தால் அது அங்கே பொருந்தாது என்று தீர்ப்பு ஐகோர்ட்டில் கொடுத்து இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். இது சம்பந்தமாக மசோதா தாக்கல் செய்து இருக்கிறார்கள். இதை விரைவில் சட்டமாக்கித் தீர வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே மாதிரி பல்வேறு சட்டங்கள் இருக்கின்றன. 60 : 40 போன்ற சட்டங்கள் இருக்கின்றன. அவற்றை அந்தப் பகுதியிலே விஸ்தரிக்க வேண்டும். ஏனென்றால் அந்தப் பகுதியிலே ஒரு சட்டம், இந்தப்பகுதியிலே ஒரு சட்டம் என்று இருக்கிறது. இதை ஒருமைப்படுத்துகிற முறையில் ஆராய வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கோருகிறேன்.

கோவில் நிலங்கள் சம்பந்தமாகப் பல்வேறு கருத்துக்கள் எல்லாம் எடுத்துச் சொல்லப்பட்டு இருக்கின்றன. கோவில் நிலங்கள், மடங்கள் நிலங்கள் இருக்கின்றன. உழைக்கிறவர்களுக்கு நிலம் என்ற அடிப்படையில் கொடுக்க வேண்டும் என்ற ஒரு கருத்தை நான் வரவேற்கக் கடமைப்பட்டு இருக்கின்றேன். கோவில், மடங்கள் நிலங்களுக்கு ஒரு உச்ச வரம்பு வைத்து விட்டு அதற்கு மேல் இருக்கின்ற நிலம் உழைக்கிறவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்ற கருத்தை வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏதோ, கோவில்கள், தர்மஸ்தாபனங்கள் இவைகளுக்குக் குந்தகம் விளைவிக்கக் கூடிய அளவில் சட்டம் இயற்ற வேண்டும் என்று நினைக்கவில்லை. இவைகள் முடங்கி கிடக்கிற காரணத்தால் சரியான முறையில் அமல் படுத்தவில்லை. பல ஆயிரக் கணக்கான ஏக்கர் நிலங்களில் இன்று ஏழை விவசாயிகள் உழைத்து பயிர் செய்துகொண்டு இருக்கிறார்கள். இவர்களுக்கு பட்டா செய்து சொந்தமாகக் கொடுப்பதற்கு வேண்டிய சட்டம் உருவாக வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக ரெவின்யூ இலாகாவில் இருக்கின்ற பல்வேறு குறைகள் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டுமென்றால் ரெவின்யூ போர்ட் அபாலிஷ் செய்யப் போகிறோம் என்று இந்த மன்றத்தில் முன்னாள் ரெவின்யூ அமைச்சர் மதிப்பிற்குரிய மதியழகன் அவர்கள் பலமுறை கூறினார்கள். அது ஒரு சூபர் செக்ரடேரியட் மாதிரி இயங்கிக் கொண்டு இருக்கின்றது



என்று பல்வேறு கருத்துக்கள் பலரும் எடுத்துக் கூறினார்கள். அது வேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி இறுதியாக, திட்டவட்டமான முடிவு சொல்வது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாவட்ட அளவிலே இன்று பல்வேறு மனு நீதித் திட்டங்கள் வைத்து இருக்கிறார்கள். பல்வேறு பிரச்னைகளுக்காக மனுக் கொடுக்கிறார்கள். மனுக்கள் உடனடியாக பைசல் செய்து அவர்களுக்கு முடிவு தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன். பல நாட்கள் இவர்கள், வீணாக அலைந்து தாலுகா அலுவலகம், மாவட்ட ஆட்சியாளர் அலுவலகம் என்று சென்று கொண்டு இருக்கின்றார்கள். இந்த மாதிரியான நிலைமையைத் தீர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய கட்சி சார்பாகக் கொடுத்திருக்கும் பல்வேறு வெட்டுத் தீர்மானங்களை வலியுறுத்தி என் வார்த்தையை இத்தோடு முடித்துக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவரவர்களே, இந்த வருவாய்த்துறை மானியத்தில் ஏறத்தாழ 20 அங்கத்தினர்கள் கலந்து கொண்டு, தங்களுடைய கருத்துக்களை எல்லாம் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் எடுத்துச் சொன்ன கருத்துக்களை எல்லாம் மேலும் இந்தத் துறையை விரைவாகவும் நல்ல முறையிலும் செயல்படுத்துவதற்குச் சொன்ன யோசனைகளாக ஏற்றுக்கொண்டு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

இங்கே பேசிய அங்கத்தினர்கள் எல்லாம் குறிப்பாக எல்லாப் பிரச்னைகளைப் பற்றியும் எடுத்துச் சொன்னார்கள். சிறப்பாக வறட்சி நிவாரணப் பணிகளை எடுத்துச் சொல்லும்போது தமிழ்நாட்டிலே இதுவரை தமிழகம் கண்டிராத அளவுக்கு ஏற்பட்டிருக்கிற வறட்சியை பலரும் உணர்ந்திருப்பார்கள். ஆனால் அதேபோல இதைத் தீர்ப்பதற்கு இந்த வறட்சிப் பணிகளை தமிழ்நாட்டு மக்களின் வளர்ச்சிப் பணிகளாகக் கருதி, இன்றைய தமிழக அரசு அதிலும் நம்முடைய முதலமைச்சரவர்கள் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறார்கள். எந்தெந்த இடங்களிலே மக்கள் பாதிக்கப்பட்டதாகக் கேள்விப்படுகிறார்களோ அந்த இடங்களுக்கெல்லாம் சென்று, அவர்களுடைய வளர்ச்சிக்காகப் பல்வேறு தீர்மானங்களைச் செய்து, பல்வேறு திட்டங்களை வகுத்து அவைகளை நிறைவேற்றுவதற்கு அனுமதி அளித்து வந்திருக்கிறார்கள். இதை தமிழகத்தில் இருக்கிற எல்லாக் கட்சிக்காரர்களும், எல்லாத் தரப்பினரும் பாராட்டுகிறார்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.

வறட்சி நிலை இதுவரை இந்த மாநிலத்தில் கண்டிராத அளவுக்கு வாட்டிக் கொண்டிருக்கிறது என்பதையும், அதனால் ஏற்பட்டிருக்கிற துயரங்களைத் தீர்ப்பதில் இந்த அரசு தீவிரமாக ஈடுபட்டிருக்கிறது என்பதையும் அத்தனை பேரும் நன்றாக அறிவார்கள். துயர் தணிப்புப் பணிகளுக்காக 55 கோடி ரூபாய் திட்டத்தைத் தீட்டி; அந்தத் திட்டத்தின் முதல் கட்டமாக 10 கோடி ரூபாயை ஒதுக்கி, அதை இந்த மார்ச் 31-ந் தேதிக்குள் முடித்துவிட வேண்டும்; அடுத்து மக்களுக்கு வேலை கொடுக்க

வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டு, அதுவும் விரைவாக நிறைவேற்றப் பட்டு வருகிறது என்பதையும் அனைவரும் அறிவார்கள். அதற்காக முதல் கட்டமாக 10 கோடி ரூபாய்க்கு முதல்வர் அவர்கள் அனுமதி அளித்தார் கள். அதன் பயனாக தமிழ்நாட்டில் உள்ள 17,069 கிராமங்களில் 11,035 வறட்சியால் பாதிக்கப்பட்ட கிராமங்களாக அறிவிக்கப்பட்டு, மற்ற இடங்களில் பகுதி பகுதியாகப் பல கிராமங்கள் பாதிக்கப்பட்டிருந்தால் அவைகளை யும் பிரித்து பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவித்து அங்கெல்லாம் நிவாரணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகின்றன. இப்படி எந்த எந்தப் பகுதிகள் பாதிக்கப்பட்டிருக்கின்றனவோ அங்கெல்லாம் உடனடியாக நிவாரணம் அளிக்க வேண்டுமென்று சொல்லி விரைவாக உத்தரவு வழங்கப்பட்டிருக்கிறது. அதனால் பாதிக்கப்பட்ட மாவட்டங்கள் எல்லாம் சீரடைந்து வருகின்றன என்பதை நானே நேரில் சென்று பார்த்து வந்திருக்கிறேன். சிறப்பாக இந்த 10 கோடி ரூபாய்க்கான திட்டங்களை வருவாய்த்துறை வாரியத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களும் மற்றும் அதற்கென்று நியமிக்கப்பட்ட அலுவலர் திரு. கார்த்திகேயன் அவர்களும் ஆங்காங்கே சென்று, அவ்வப்போது பார்வையிட்டு, அந்தந்த இடங்களுக்குத் தேவையான பணிகளைச் செய்ய, சட்டங்கள் திருத்தப்பட வேண்டுமென்று இருந்தாலும் சட்டத்தைத் திருத்திக் கொள்கிறோம்; நீங்கள் உடனே வேலையைத் தொடங்குங்கள் என்று உத்தரவிட்டு வந்தி ருப்பதையும் அந்தந்தப் பகுதிகளில் இருக்கிற மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

அதுமட்டுமல்ல, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் முகவை, புதுவை மாவட்டங்களுக்குச் சென்று திரும்புகிற நேரத்தில் (குறுக்கீடு)—புதுவை என்றால் புதுக்கோட்டை—அங்கே இருக்கிற எல்லாக் கட்சிகளைச் சேர்ந்தவர் களும், முதல்வர் அவர்கள் போன இடங்களுக்கெல்லாம் கூடவே வந்து நீண்டகாலமாகக் கவனிக்கப்படாமல் இருந்த பல ஏரி, குளங்களை நேரில் காட்டி அவைகளை எல்லாம் செப்பனிட வேண்டுமென்று கேட்டுக் கொண்ட னர். அதன்படி முகவை மாவட்டத்தில் ஏறத்தாழ 50, 60 ஆண்டு காலமாக முயற்சி எடுக்கப்பட்டும் முடியாமல் போன ராஜசிங்கமங்கலம் கண்மாய் மராமத்துப் பணியை உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று உத்தரவு போட்டார்கள். சமீபத்தில் நான் அங்கே போயிருந்தபோது வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருப்பதைப் பார்த்தேன். அப்போது அங்கே இருக்கிற ஒன்றியத் தலைவர் அவர்களும் மேல்சபை உறுப்பினர் இராமகிருஷ்ண தேவர் அவர்களும் எனக்குப் பாராட்டுத்தெரி வித்தனர்.

அதுமட்டுமல்ல, அங்கே கடந்து செல்ல ஒரு பாலம் தேவை என்று பல ஆண்டுக் காலமாகக் கோரிக்கை விட்டும் கவனிக்கப்படாமல் இருந்தது. அதற்கு 10 லட்சம் ரூபாய் ஒதுக்கி, அந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு அனுமதி அளித்து, இன்றையதினம் வேலை நடந்து கொண்டிருக்கிறது.

இராமநாதபுரம் மாவட்டத்தில் இராமநாதபுரம் கண்மாய் நீண்ட காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது. அந்தக் கண்மாய் பராமரிப்புப் பணியையும் உடனடியாகத் தொடங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு, வேலை துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதைப் போலவே திருப்பத்தூர் கண்மாய் பணியும் நடந்து கொண்டிருக்கிறது.



அதைப்போல் புதுக்கோட்டை மாவட்டத்தில் நீண்டகாலமாக கவனிக்கப் படாமல் இருந்த கபிநாடு கண்மாயை நேரில் பார்வையிட்டு, அதன் சீரமைப்புப் பணிக்காக 12 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டு, பணிகள் உடன டியாகத் தொடங்கப்படுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள்.

இவைகளை எல்லாம் நான் இங்கே எடுத்துச் சொல்வதற்கு காரணம், மனுக்கள் போடப்பட்டுக் கவனிக்கப்படாமல் இருந்து கொண்டிருக்கிறது என்று பல அங்கத்தினர்கள் குறை கூறினார்கள்; அந்தக்கூற்று சரியல்ல என்பதற்காகத்தான் சொல்கிறேன்.

அடுத்தபடியாக, வேலைகள் சரியாக நடைபெறவில்லை; கண்காணிக்கப் படவில்லை என்று இங்கே எடுத்துச் சொன்னார்கள். இப்போது தவறுகள் நடைபெறாமல் கண்காணிப்பதற்குப் பல புதிய முறைகள் புகுத்தப்பட்டி ருக்கின்றன. ஆங்காங்கே வேலை நடைபெறுகின்ற இடங்களில், எந்தெந்த வேலை நடைபெறுகிறது; எவ்வளவு ரூபாய்க்கான வேலை நடைபெறுகிறது, எத்தனை பேர் அந்த வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள், யார் மூலமாக அந்த வேலை நடைபெறுகிறது என்ற விபரங்களை அங்கே இருக்கிற ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், சட்டப் பேரவை உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், ஏன் வரி செலுத்துகின்ற—கேட்க உரிமை பெற்ற ஒவ்வொருவரும் அங்கே சென்று பார்க்கலாம் என்பதற்காக அங்கே பதிவேடு வைக்கப்பட்டிருக்கிறது. பார்வையிடுபவர்கள் தங்களுடைய கருத்துக்களை எடுத்துச் சொல்ல "கம்பிளைன்ட் புக்" வைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் பதிவேட்டைப் பார்த்து, புகார் தெரிவிக்க வேண்டுமானால் அதிலே எழுதி வைக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி: பதிவேடு வைக்கப்பட்டிருப்பதைப் பார்க்கலாம் என்று அமைச்சரவர்கள் சொல்கிறார்கள். அதைவிட, சர்வக் கட்சிக் குழு போடுங்கள்: எல்லோரும் கண்காணிக்க வாய்ப்பு இருக்கும் என்று கேட்டோம். அதைச் செய்ய ஏன் மறுக்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: குழு அமைப்பதில் எங்களுக்கு பயம் ஒன்றும் இல்லை. குழுவிலுள்ள உறுப்பினர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து போய் பார்வையிடுவதில் சில சிக்கல்கள் வரும். அதை நான் அனுபவப் பூர்வமாகப் பார்த்திருக்கிறேன். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் அரிசி வழங்குவதை மேற்பார்வையிடு வதற்காக ஒரு குழு போட்டோம். இராமநாதபுரம் மாவட்டத்தில் அங் கிருக்கிற ஆர்.டி.சி.எஸ். மூலமாகத்தான் அரிசி வழங்க வேண்டுமென்று உத்தரவு போட்டோம். அதை பார்வையிடுகின்ற குழு உறுப்பினர்கள், ஒருவர் அது இல்லை, இது சரியில்லை என்கிறார்; இன்னொருவர் அதுதான் சரி என்கிறார்; எல்லோரும் ஒரே நேரத்தில் பார்வையிட வருவதில்லை ஆகையால்தான் சர்வ கட்சி குழு அமைப்பதில் பயனில்லை என்று சொல்கிறோம்.

குளங்களையும் ஏரிகளையும் தூர் வாரும் வேலையை மதுரையில் ஒரு இடத்தில் ஆயக்கட்டுக்காரர்களுக்குக் கொடுத்தோம். அந்த வேலையைக் பார்வையிட 4 பேர்களை நியமிக்கலாம் என்ற யோசனையைச் சொன்னேன்.

அப்போது ஒரு பெரியவர் பில் வாங்க போக வேண்டுமென்று 4 பேரும் சேர்ந்து போகவேண்டும், பணம் கொடுக்க வேண்டுமென்றாலும் 4 பேரும் இருக்க வேண்டும், 4 பேரும் ஒன்று சேருவது கஷ்டம் : ஒன்று சேர்ந்தாலும் அதனால் செலவு அதிகம் ; அதனால் நஷ்டம்தான் ஏற்படும் ; இதிலே ஒருவர் போனால் போதும் என்றால் மற்ற மூன்றுபேரும் குறை சொல்லுவார்கள் என்று ஏற்படுகின்ற கஷ்டத்தைச் சொன்னார். இதை நான் வேண்டுமென்றே சொல்லவில்லை ; அனுபவ ரீதியாகச் சொல்கிறேன்.

அதுமட்டுமல்ல ; ஊழல் நடக்கிறது என்று சொன்னார்கள். நேற்று கூட மாண்புமிகு உறுப்பினர் முத்துசாமி அவர்கள் அதற்கு விளக்கம் சொன்னார்கள். எதற்கெடுத்தாலும் ஊழல் ஊழல் என்று சொல்வது "முன்னுக்குப் போகிற மாட்டை மூஞ்சியில் இடிப்பது" போல இருக்கும் என்று வேதனையோடு சொன்னார்கள். பொதுப் பணியில் ஈடுபடுகிறவர்களை வேதனையடையச் செய்யக் கூடாது. தவறு இருந்தால் அதைச் சுட்டிக் காட்டலாம். வேண்டாம் என்று சொல்லவில்லை.

வறட்சி நிவாரணப் பணிகளை ஒப்படைப்பதற்குச் சில முறைகளை கையாள்கிறோம். ஊராட்சித் தலைவர், ஊராட்சி ஒன்றியத் தலைவர், சட்டப் பேரவை உறுப்பினர் இவர்களை எல்லாம் கலந்து பேசி, வேலையை மேற்கொள்வதற்கான முறைகளை உருவாக்கியிருக்கிறோம். அதிலே முன்னுரிமை ஆயக்கட்டுதாரர்களுக்கு ஒரு ஏரி தூர் எடுக்க வேண்டுமென்றால் அந்த ஏரி ஆயக்கட்டுதாரர்கள் அந்தப் பணியை கேட்டால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அந்த வகையில் கபிநாடு கண்மாய் சீரமைப்புப் பணி 10 ஆயக்கட்டுதாரர்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ஒழுங்காக வேலை செய்துவருகிறார்கள்.

ஆயக்கட்டுதாரர்கள் யாரும் கேட்கவில்லை என்றால் ஊராட்சித் தலைவர், அல்லது ஊராட்சி ஒன்றியத் தலைவர் சார்பில் கேட்டால் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. அந்த வகையிலும் பல ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பணிகளைச் செவ்வனே செய்துகொண்டிருக்கிறார்கள். அவர்களில் யாருமே ஒரு வேலையை மேற்கொள்ள முன்வரவில்லை என்றால் அந்த வேலை ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்படுகிறது. சில விதிமுறைகளுக்கு உட்பட்டுதான் அவர்களுக்கு விடப்படுகிறது. ஆகவே, யாரும் தவறு செய்ய முடியாது. எங்கே தவறு செய்திருக்கிறார்கள் என்று யாராவது சுட்டிக் காட்டினால் உடனடியாக நடவடிக்கை எடுக்க இந்த அரசு எப்போதும் தயாராக இருக்கிறது.

அதைப்போலவே செய்யப்படுகின்ற வேலைகளுக்கு அங்கே பணம் கொடுப்பதில் தாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். பணம் வழங்குவதில் தாமதம் ஏற்படாமல் இருப்பதற்காக ஊராட்சி ஒன்றியத்தில் பணியாற்றுகின்ற வட்டார வளர்ச்சி அதிகாரிகளுக்கு (பிளாக் டெவெலப்மென்ட் ஆபீசர்ஸ்) தனி உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இன்ன பணியை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று ஊராட்சி ஒன்றியம் தீர்மானம் போட்ட பிறகு, அந்தப் பணி நிறைவேற்றுவதற்கு எடுத்துக்



கொள்ளப்படும். அப்படி எடுத்துக்கொள்கின்ற நேரத்தில் அந்த வேலை 5,000 ரூபாய்க்கு உட்பட்டதாக இருந்தால் வட்டார வளர்ச்சி அதிகாரியே கொடுக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்காக அவருக்கு 5,000 ரூபாய் முன் பணமாகக் கொடுத்து, அவருக்குப் பக்கத்தில் இருக்கிற அரசு வங்கியில் கணக்கு வைத்துக்கொள்ள வேண்டுமென்று சொல்லி, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. அதனால் வேலைகள் தாமதம் இல்லாமல் இன்றையதினம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே இப்போது அந்த பத்து கோடி ரூபாயில் நடைபெற்று வருகிற பணிகளை எல்லாம் நான் நேரிடையாகச் சென்று பார்த்து வந்த பிறகு—ஏறத்தாழ இந்த மாதக் கடைசிக்குள் நாற்பத்து மூவாயிரத் திற்கும் மேற்பட்ட வேலைகள் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றன. நிர்வாகச் சம்பந்தமாக இருந்த சில சிக்கல்களை எல்லாம் அகற்றி மாவட்ட ஆட்சித் தலைவருக்கே இந்த வேலைத் திட்டங்களை எடுத்து நடத்த ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது. பத்தில் இருந்து பதினேழரைக் கோடிக்கான வேலைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. அட்மினிஸ்ட்ரேடிவ் சாங்ஷன், 31—3—75-க்குள்ளாக நமது முதலமைச்சர் அவர்கள் போர்க்கால நடவடிக்கையாக இருக்கட்டும் என்று சொன்ன காரணத்தினாலும்-எட்டரை கோடியில் இருந்து ஒன்பது கோடி வரை இந்த ஆண்டே செலவழிக்க முடியும் என்று அதிகாரிகள் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள்.

அதைப்போலவே இந்தத் திட்டத்தில் குடிதண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுத்து முதலிடம் அளிக்கப்பட வேண்டுமென்பதற்காக-குடிதண்ணீருக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாகவும், ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகவும் அந்தப் பணிகள் துவக்கப்பட்டு-செம்மையாக துரிதமாகத் நடைபெற்று வருகின்றன. வேளாண்மைத் துறையில் பணி புரிகிறவர்களும் விறுவிறுப்பாக—சுறுசுறுப்பாகப் பணியாற்றி வருகிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். குடிதண்ணீர்ப் பிரச்சினையை எப்படியும் தீர்த்துவிட வேண்டுமென்ற எண்ணத்தில் முனைப்பாக இந்தத் திட்டங்களை நிறைவேற்றி வருகிறோம். ஒரு சில அங்கத்தினர்கள் இன்னும் அதிக ஆழமாக பைப்புகளைப் போடவேண்டும் என்று சொன்னார்கள். நானே ஒரு பகுதியில் சென்று பார்த்தபோது 30 அடி ஆழத்தில் போட்டிருந்தபோது நல்ல தண்ணீர் கிடைத்தது. கீழே மேலும் பத்தடி போனவுடன் உப்புத் தண்ணீராக வந்தது என்று சொல்லி, நல்ல தண்ணீர் கிடைத்த மட்டத்திலேயே வைத்திருப்பதாகச் சொன்னார்கள். எந்தந்த இடத்தில் எவ்வளவு அடி ஆழம் போடவேண்டும் என்பதை எல்லாம் அங்குள்ள அதிகாரிகளும் மற்றவர்களும் பார்த்து அதை அமைத்திட வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்ததாக, ஏரி, குளங்கள் தூர் வாரப்படுவது—இப்படி தூர் வாரப்பட்ட பகுதிகளை எல்லாம் நானே சென்று பார்த்தேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒரு குளம் தூர் வாரப்பட்டு இருந்தது. நான் சென்றபோது பலர் மகிழ்ச்சியோடு அதில் குளித்துக்கொண்டிருந்தார்கள். நான்

கேட்டேன், உங்களுக்குத் தண்ணீர் கிடைக்கவில்லையா என்று. அவர்கள் சொன்னார்கள், பல வருஷங்களுக்குப் பிறகு இப்போதுதான் ஐயா நாங்கள் அமிழ்ந்து, வீழ்ந்து குளிக்கிறோம் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார்கள். அந்த முறையில் ஏரி, குளங்கள் தூர் வாரப்படும் பணி பல இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

அதைப்போலவே சாலைகள் அமைத்தல்—இந்தத் திட்டத்தின் கீழ் பல இணைப்புச் சாலைகள் போடப்பட்டிருக்கின்றன. இந்தப் பணியும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. வெறும் மண்சாலையைப் போட்டுவிட்டால் போதுமா ? அடுத்த ஆண்டு மழை பெய்தால் இந்தச் சாலை மண் எல்லாம் அடித்துக்கொண்டு போகப்படுமே என்றார்கள். அதையும் உணர்ந்து, இந்த அரசு உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி—இதுபோல அமைக்கப்படுகிற இணைப்புச் சாலைகளுக்கு உடனடியாக க்ராவல் போட்டுவிடுங்கள்—அவசியம் என்று கருதினால்—என்று அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. சரளை போடுகிற சாலைகளுக்குக்கூட தார் போட்டுக் கொடுத்தால் நல்லது என்று கேட்கிறார்கள். அது அவர்களுக்குள்ள ஆசை. தேவை அதிகரிக்கிறபோது கேட்கிறார்கள். நிதி வசதி பெருகுகிறபோது அவற்றுக்கும் தார் போட்டுக் கொடுக்கலாம். உடனடியாக இப்போது இந்த வறட்சித் திட்டத்தின்கீழ் போடப்படுகிற இணைப்புச் சாலைகளுக்கு அவசியம் என்று கருதினால் க்ராவல் போடச் சொல்லி அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இன்னும் அதிகாரிகள் நியமிப்பது பற்றியும் சொன்னார்கள். எந்தெந்த இடத்தில் என்ன என்ன பணிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன, அந்தப் பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு எந்தெந்த அதிகாரிகளை எங்கெங்கு உடனடியாகப் போடவேண்டும் என்பதை எல்லாம் கலந்து பேசி—ட்ரவுட் ரிலீப் கமிஷனர் தேவையான அதிகாரிகளை எல்லாம் போட்டு வருகிறார்.

திரு. எம். சுரேந்திரன் : நான் ஆளுநர் உரையில் பேசும்போது பாலமலை ரோடைப்பற்றிச் சொன்னேன். அதைக் கவனிப்பதாக அமைச்சர் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு இடத்தைப்பற்றிக் கேட்கப்போனால் நேரம் இல்லை.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, நான் இப்போது பொதுவாகச் சொல்கிறேனே தவிர ஒவ்வொரு இடத்தைப் பற்றியும் சொல்லவில்லை. ஏற்கனவே அவர்கள் என்னிடம் அதைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். கவனிக்கிறேன் என்று சொல்லியிருக்கிறேன். இப்போது அதற்கான உறுதிமொழியை வாங்கப் பார்க்கிறார். நான் அதைப்பற்றிக் கவனிக்கிறேன் என்று அவருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன் முகவை மாவட்டத்திற்கும் புதுக்கோட்டை மாவட்டத்திற்கும் அதிகாரிகள் அதிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். தேவையான அதிகாரிகளை அந்த மாவட்டத்திற்கு நியமிப்பதில் தாமதம் எதுவும் கிடையாது.



வறட்சி நிவாரணப் பணிகளைச் செய்கிற திட்டத்தின்கீழ் இன்னும் சில கிராமங்களைச் சேர்த்துக்கொண்டு செய்ய வேண்டுமென்று சிலர் பேசினார்கள். அவைகளை எல்லாம் கவனித்து–எந்தெந்தக் கிராமங்கள் எங்கெங்கு பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்து எல்லாவிதமான நடவடிக்கைகளையும் எடுத்துக் கொள்ள இந்த அரசு தயாராய் இருக்கிறது என்பதை நான் முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

வறட்சிப் பணிகளைப் பொறுத்தவரையில் இன்றையதினம் நாம் அவற்றைப் பற்றி இங்கே பேசிக்கொண்டிருந்தாலும்—நாம் ஒவ்வொருவரும் நம்முடைய தொகுதிக்குச் செல்கிற நேரத்தில்—அங்குள்ள மக்கள் எப்படி மகிழ்ச்சியோடு அங்கு நடைபெற்றிருக்கிற பணிகளைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைக் காண முடியும்.

நடைபெறுகிற வறட்சிப் பணிகளைப்பற்றி யார் யார் எப்படிப் பேசினாலும் பரவாயில்லை-மக்கள் இன்றைக்கு திருப்தியோடு மகிழ்ச்சியாக இருக்கிறார்கள் என்பதை நான் சொல்ல முடியும். கங்கநாடு கண்மாய் வேலை நடைபெற்ற போது நான் அங்கே போயிருந்தேன். இராமகிருஷ்ண தேவர் கலைஞரை மிகவும் பாராட்டிப் பேசி எங்கள் ஆட்சிக் காலத்தில்கூட இதுபோல சிறப்பாக எந்தப் பணியும் நடைபெற்றதில்லை என்று சொன்னார்கள். நான் அப்போதே அவரிடம் சொன்னேன். " இங்கே நீங்கள் பாராட்டிப் பேசுகிறீர்கள். சட்டசபையில் வந்தால் உங்கள் கட்சிக்காரர்களே வேறு மாதிரிப் பேசுகிறார்களே " என்றேன். " அவர்கள் வேறு சாதிக்காரர்களாக இருப்பார்கள். நான் இருக்கமாட்டேன் " என்றார்.

கண்ணப்பா-வள்ளியப்பா அவர்கள் பாராட்டிச் சொல்லும்போது, எங்கள் ஒன்றியத்திற்கு பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறீர்கள். வறட்சிப் பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றன என்று என்னிடமே தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்கள். "சுப்பிரமணியம் வரப் போகிறாரே, இன்னும் என்ன கேட்கப் போகிறீர்கள்" என்று நான் கேட்டதற்குக் கூட அவரிடம் இதைப்பற்றி எல்லாம் பிரமாதமாகப் சொல்லப் போகிறேன் என்று சொன்னார்கள். என்ன சொல்லப் போகிறீர்கள் என்று கேட்டதற்குக் கூட "இல்லை இல்லை, நாங்கள் செய்யப்படுகிற நல்ல காரியங்களை எல்லாம் பாராட்டித்தான் சொல்வேன்" என்று சொன்னார்கள். இது எல்லாம் விட்ட குறை—தொட்ட குறை உணர்ச்சி என்று சொல்லிவிட்டு வந்தேன். எதற்காகச் சொல்கிறேன் என்றால்—அங்கங்கே போய்ப் பார்க்க வேண்டும். வறட்சிப் பணிகள் மிகவும் சிறப்பாக நடைபெற்று வருவதை ஆங்காங்குள்ள மக்கள் மகிழ்ச்சியோடு பாராட்டுகிறார்கள்.

வெட்டப்பட்ட கிணறுகளை ஆழப்படுத்த நிலவள வங்கிகள் மூலம் பணம் கொடுக்கவில்லை என்று சொன்னதற்குக் கூட உடனடியாக நமது முதலமைச்சர் அவர்கள் தக்காவிக் கடனாக ஐந்து கோடி ஒதுக்கி 500 ரூபாயிலிருந்து 2,000 வரை கடன் வழங்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். ஆக, இப் பணியில் எவ்வளவு முனைப்பாக இருக்கிறார்கள் என்பதற்காகச் சொல்லுகிறேன். கடன் வழங்குவதில் சிக்கல்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இது நீண்ட நாளாக லாண்ட் மார்ட்கேஜ் பாங்க் என்ற பெயரில் இயங்கிக் கொண்டு வந்தபோது இருந்த

குறைகளாகும். இப்போது அந்தக் குறை எல்லாம் நிலவள வங்கிகள் என்ற அமைப்பின் கீழ் களையப்பட்டு விட்டன என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்துடன்தான் நமது முதலமைச்சர் அவர்கள் மின்சார வாரியத்திற்குச் சொல்லி—உடனடியாக—ஏற்கெனவே பம்ப் செட்டை வாங்கி வைத்திருப்பவர்களுக்கு இன்னும் கனெக்‌ஷன் கொடுக்கப்படாமல் இருந்தால்—ஒரு கம்பம் அல்லது இரண்டு கம்பமே போடக்கூடிய தூரம் இருந்தால் அவர்களுக்கு உடனடியாக கனெக்‌ஷன் கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லி அந்தப் பணியினையும் இன்றைக்கு மின்சார வாரியம் சிறப்பாக செய்து கொண்டு வருகிறார்கள்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் ஒரு அறிவிப்பைச் சொன்னார்கள் டீசல் பம்ப் செட்டுகள் வாங்குவதற்கு—முன்னால் கொடுக்கப்பட்டு வந்த சப்சிடி நிறுத்தப்பட்டிருந்தது. இவர்கள் ஆயிரம் ரூபாய் கொடுக்கலாம் என்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். முன்பு கூட டீசல் பம்ப் செட் வாங்கிய பிறகுதான் அந்த ஆயிரம் ரூபாய் கொடுப்பதாக இருந்தது. ஆனால் இப்போது இந்த ஆயிரம் ரூபாய் சப்சிடியை முன்கூட்டியே கொடுத்து விடலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தப் பணிகளை மேற்பார்வையிடுகிற அதிகாரிகளைப் பற்றி பல பேர் குறை சொன்னார்கள். நான் இவற்றை நேரில் சென்று பார்வையிட்டு வருகிற காரணத்தினால் அவர்கள் செய்து வருகிற சிறப்பான பணியினை இந்த இடத்தில் இந்த நேரத்தில் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இதில் முன்னோடியாகவிளங்குகிற திரு கார்த்திகேயன் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு. கே. கந்தசாமி: தலைவரவர்களே, அமைச்சர் பெருமகனார் நல்ல அறிவிப்புகளைத் தெரிவித்தார்கள். அப்படித் தெரிவிக்கின்ற நேரத்தில் விவசாயிகளுக்கு வேண்டிய தக்காவிக் கடன்கள்போல், ஃபாடர் கிராப்ஸ்—கால்நடைத் தீவனங்கள் வாங்கக் கடன் கொடுக்க, ஏற்பாடு செய்வார்களா? முகவை மாவட்டம் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறது கலைஞர் அவர்களின் ஆலோசனையின் பேரில் ஒரு நல்ல அறிவிப்பைச் செய்தால் பெருத்த உதவியாக இருக்கும் என்ற வேண்டுகோள் தெரிவிக்கப்பட்டது. அதற்கும் அறிவிப்பு வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, அதைப் பற்றி, நிதியமைச்சரோடு கலந்து அதற்குப் பிறகுதான் முடிவு சொல்ல முடியுமே தவிர இந்த நேரத்தில் எதையும் அறிவிக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்ட மன்றங்களைப் பற்றி, மாவட்ட நிர்வாகத்தைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். மாவட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்று ஏற்கெனவே ஏ. ஆர். சி. யிலே ஒரு யோசனை கூறப்பட்டு, அது 31–3–1975



வரையில் நிறுத்தி வைக்கப்பட வேண்டுமென்று தேர்தல் ஆணைக்குழுவினுடைய ஆணையின்படி, நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, திருநெல்வேலி, இராமநாதபுரம், மதுரை, தஞ்சை, வட ஆற்காடு, தென் ஆற்காடு, கோயம்பத்தூர் இந்த 7 மாவட்டங்களையும் உடனே பிரிக்கலாம் என்ற யோசனையைக் கூறியிருக்கிறார்கள். இன்னும் சில யோசனைகளைச் சொல்கின்ற வகையில் அப்துல் ஜப்பார் திண்டுக்கல்லைத் தலைநகரமாக ஆக்க வேண்டுமென்று கேட்டார்கள். தலைநகரத்தை அவர்களே தேர்ந்தெடுப்பதால் பல சிக்கல்கள் வருகின்றன. நிர்வாக சம்பந்தமாக, நிர்வாக சௌகரியத்தை முன்னிட்டு, நிர்வாகத்திடம் விட்டு விட்டு, அதற்குப் பிறகு யோசனைகளைச் சொன்னால் நலமாக இருக்கும். இவர் திண்டுக்கல் என்று சொன்னவுடனே, இன்னொருவர் பார்த்து அறவக்குறிச்சி என்று சொல்லி அதற்குப் போராட்டங்கள் என்ற நிலை......

திரு. இ. எஸ். தியாகராசன்: செங்கல்பட்டு மாவட்டத்தையும் அதிலே சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அந்த நேரத்திலே கவனிக்கப்படும். அவற்றையெல்லாம் பிரிப்பதற்குத் தடையாக இப்பொழுது ஆணையிருக்கிற காரணத்தாலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, பிறகு கவனிக்கப்படுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்கே, கட்டிடங்கள் கட்டுவது பற்றி சௌந்திரபாண்டியன் அவர்கள் குறிப்பிட்டார்கள். ஏற்கெனவே காஜா மலையிலே அல்லது பக்கத்திலே இருக்கிற பகுதியிலே மிலிட்டரிக்கு அதாவது, இராணுவத்திற்குச் சொந்தமான இடத்தை வாங்கி, அவர்களும் ஒப்புதல் அளித்து, இப்பொழுது அங்கே கட்டிடம் கட்டுவதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன. இந்த வறட்சியிலே கட்டிடங்கள் அவசியமா என்ற காரணத்தாலே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன.

மேலும் தலைமையலுவலகங்களிலே யிருக்கிற சௌகரியங்கள் சொன்னார்கள். அமைச்சர்களுடைய அறைகளைப் பார்த்தால் தெரியும், எவ்வளவு அசௌகரியங்களிருக்கின்றன என்று. மாவட்ட கலெக்டர் அலுவலகங்களிலுள்ள அசௌகரியங்களை நீக்கத் திட்டம் தயாரிக்கப்பட்டது. ஆனால், வறட்சியின் காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

திரு தி. பொன்னுமலை: நான் ஏற்கெனவே சொன்னதைப் போல், குடிநீர் வாரியத்திலே செய்வதைப் போல போரிங் கிணறுகள் போட இப்பொழுது 400 அடி, 600 அடி, 800 அடி, தோண்டினால் கூடத் தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, போரிங் கிணறுகள் போட்டால், 10 நாள், 5 நாளில் போட்டுவிடலாம், தண்ணீர் கிடைக்கும். ஆகவே, அப்படி போரிங் கிணறுகள் போட ஏற்பாடு செய்தால், உடனடியாக வழி செய்தால், பஞ்சம் தீர வழி ஏற்படும்.

[1975 மார்ச், 19

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : முதல் கட்டம் குடி நீர்ப் பிரச்சினையைச் சமாளிப்பது. அடுத்த கட்டம் விவசாயப் பிரச்சினை. இப் பொழுது அதுவும் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. சில இடங்களில் நானே நேரில் பார்த்தேன். இப்பொழுது வாடிப்பட்டி ஊராட்சி ஒன்றியத்தில் சமுதாயக் கிணறுகள் அமைக்கப்பட்டு சிறந்தமுறையில் அவை உபயொகிக்கப்படுகின்றன. அதுபோல், பல இடங்களில் சமுதாயக் கிணறுகள் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். ஆனால், ரிக்ஸ் கிடைக்கவில்லை. சில இடங்களில் 1,200 அடி, 1,500 அடிகள் வரை துளை போட வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட பகுதிகளுக்கு இந்தப் பணிகளைச் செய்ய முடியவில்லை. ஆகவே, வேளாண்மைத் துறைக்காக உள்ள ரிக்ஸ் இங்கே பயன்படுத்தப்படுகிறது. என்று தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்த கட்டமாக, அவற்றுக்கும் பயன்படுத்தப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாவட்டங்களிலிருந்து வட்டங்களைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றன. அதிலும் எவ்வளவோ கஷ்டங்கள் இருக்கின்றன. இப்பொழுது துணை மாவட்டங்கள் எல்லாம் வட்டங்களாக அறிவிக்கப்பட்டிருக்கின்றன. சென்ற முறையே நான் சொல்லியிருக்கிறேன். இன்னும் பலவற்றைச் சொல்லியிருக்கிறார்கள். அவற்றை யெல்லாம் ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்.

பட்டா வழங்குவதைப் பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அதிலே எல்லோருக்கும் அக்கறை வந்திருப்பதைக் கண்டு நான் மெத்த மகிழ்ச்சி யடைகிறேன். ஒரு காலத்தில் எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன, இப்பொழுது எவ்வளவு வழங்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்த்தால் நிலைமை நன்றாகத் தெரியும்.

திரு சுப்பையா அவர்கள் சென்னார்கள். கொடுப்பதால்தானே அதிகம் கேட்கிறோம். எற்கெனவே இருந்து வந்தது. இப்பொழுது அதிக மாகக் கேட்கிறார்கள். இன்னும் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்தார்கள். அவர்கள் வேண்டுகோள் விடுவதற்கு முன்னாலே இந்தப் பிரச்சினையைத் தீர்த்துவிட வேண்டுமென்றுதான் நாங்கள் நடவடிக்கை எடுக்கிறோம். ஆகவே, அதிலே இருக்கிற சிக்கல் என்ன என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டுமென்று அரசாங்கச் சார்பிலே ஆணையிடப்பட்டிருக்கிறது. அவர்களுடைய ஆலோசனைகளைக் கேட்டு, மேலும், தீவிரப்படுத்த முயற்சி எடுப்போம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனு நீதி நாளைப் பற்றி பலர் பாராட்டினார்கள். அது மனு நீதி நாளா என்று சிலர் கேட்டார்கள். மனு நீதித் திட்டத்திலேயிருக்கிற நன்மையோ, அல்லது இது இல்லாமலிருந்தால் இருக்கிற கஷ்டமோ நகரங்களிலே இருப்பவர்களுக்குத் தெரியாது. கிராமத்திலே அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். ஒரு காலத்தில் ஓதுவானெல்லாம் உழுபவன் தலைக்கடைக்குப் போவான். இடைக்காலத்தில் உழுபவனெல்லாம் ஓது





வான் தலைக்கடைக்குப் போக வேண்டியிருந்தது. அந்த நிலையை மாற்ற, மனுநீதித் திட்டம் கொண்டு வந்து, அதிகாரிகள் நேரடியாகக் கிராமத்திற்குச் சென்று ஒரு வாரத்தில் ஒரு நாள் குறிப்பிட்டிருக்கிறார்கள், அன்றைய தினம் சென்று, பிரச்னைகளைத் தீர்க்கிறார்கள். அப்படி அவர்கள் செல்லும்போது, உடனடியாகக் கொடுக்கப்படுகிற விண்ணப்பத்தில் சிக்கல் இல்லாமலிருக்குமானால், அந்த மனுக்களை அங்கேயே பரிசீலனை செய்து உத்தரவு வழங்குகிறார்கள். ஒரு சில மேல் மட்டத்திலே கவனிக்கப்பட வேண்டுமானால், அவைகள் உரிய இடத்திற்கு அனுப்பப் பட்டு, அங்கு கவனிக்கப்படுகின்றன. ஆகவே, அதில் கிராம மக்கள் பயன்பெற்று வருகிறார்கள்.

பட்டா விஷயத்தைப் பற்றிச் சொன்னார்கள். கிராமத்தில் பட்டா கொடுப்பதைப் பற்றி பலருக்குத் தெரியாது. யார் பெயரில் பட்டா இருக்கிறது என்பது பலருக்குத் தெரியாது. ஆகவே, கவனித்து வழங்க வேண்டியிருக்கிறது. ஒருவருடைய பட்டாவை மற்றொருவருக்குக் கொடுத்துவிட்டால், எவ்வளவு பெரிய இடைஞ்சல் வரும் என்பது கனம் உறுப்பினர்களுக் கெல்லாம் நன்றாகத் தெரியும். ஆகவே, தாமதம் இருந்தாலும் அதைப் போக்க நிச்சயமாக நடவடிக்கை எடுத்துக் கொள்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வருவாய்த் துறை என் பிரிக்கப்படவில்லை, ரெவின்யூ போர்டு கலைக்கப்படும் என்று சொல்லி, என் கலைக்கப்படவில்லை யென்றெல்லாம் கேட்டார்கள். அது சம்பந்தமாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு நடவடிக்கையை எடுத்துக் கொண்டு, எப்படி எப்படி ஜமாபந்தியை ஒழிப் பது என்பது பற்றி எல்லாம் பரிசீலனை செய்யப்படுகிறது. அவைப்பற்றி முடிவு வந்த பிறகு, தெரிவிக்கிறேனென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே, முத்திரைத் தாள் நிர்வாகம் பற்றிச் சொன்னார்கள். முத்திரைத் தாள்களுக்கு ஒருகாலத்தில் கொஞ்சம் தட்டுப்பாடு இருந்தது. முத்திரைத் தாள்கள் நாசிக்கிலிருந்து, அச்சடிக்கப்பட்டு, அனுப்பப்பட்டு வந்தது. அதனாலே தாமதம் ஏற்பட்டது. ஆனால், தாமதத்தைத் தவிர்க்க, ரூ. 500 வரையில் சப்-ரிஜிஸ்ட்ரார் அலுவலகத்தில், வெள்ளைக் கடிதாசியிலே எழுதி வாங்கிக் கொண்டு பதிவு செய்யலாம் என்றிருந் தது. அதற்குப் பிறகு ரூ 6 கோடி பெறுமானமுள்ள முத்திரைத் தாள்கள் வந்திருந்தன. அதுவரை வெள்ளை பேப்பரிலே எழுதி வாங்கிக் கொண்டு ரசீது கொடுக்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டன. அந்த வகையில் தாமதத்தையும் கஷ்டத்தையும் தவிர்க்க உத்தரவு வழங்கப் பட்டது. இப்பொழுது ஸ்டாம்புகள் நிறைய வந்து விட்டன. இனி, அந்தக் கவலை தேவையில்லை யென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : ஸ்டாம்ப் தாள்கள் ரூ. 20, ரூ. 25 டினாமினேஷன்ஸ் நிறைய இருக்கின்றன. ஆனால் ரூ. 1,000 டினாமி னேஷன்ஸ் தாள்கள் இல்லை. ஆகவே, ரூ. 1,000 டினாமினேஷன்ஸ் இல்லாததால், ரூ. 25 டினாமினேஷன்லில் நிறைய வாங்க வேண்டி யிருக்கிறது. ஆகவே, ரூ. 1,000 டினாமினேஷன்லில் ஸ்டாம்ப்தாள்கள் வாங்க வசதி செய்து தரப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1975 மார்ச் 19

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: நான் சிறியவர்களைப் பற்றிப் பேசுகிறேன். அவர்கள் பெரியவர்களைப் பற்றிப் பேசுகிறார்கள்..

<u>திருமதி த. ந. அனந்தநாயகி</u>: ரூ. 1,000 டினாமினேஷன்ஸ் தாள் வெளியிட்டால், பேப்பரை மிச்சப்படுத்தலாம். பெரியவர்களுக்காக நான் சொல்லவில்லை. பேப்பரை மிச்சப்படுத்த வழியிருப்பதால் சொன்னேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: ஆயிரம் ரூபாய்க்கு ஸ்டாம்ப் பேப்பர் வாங்குபவர்கள் எவ்வளவு நிலம் வாங்குபவர்களாக இருப்பார்கள்? இதற்கேற்ற வகையில் எவ்வளவு நிலம் வாங்குவார்கள் என்பதற்காகத்தான் பெரியவர்கள் என்று சொன்னேனே தவிர, சிறியவர்கள், பெரியவர்கள் என்பதற்காகச் சொல்லவில்லை. ஆகவே, இப்பொழுது முத்திரைத் தாளில் கஷ்டங்களில்லை.

இன்னும் பல விளக்கங்களைச் சொல்ல நேரம் இல்லை. உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களின் பேரில் உரிய நடவடிக்கையை எடுக்கிறோம் என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் பல வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறார்கள்.

குறிப்பாக பொன்னப்ப நாடார் அவர்கள் ஒன்றைப் பற்றி எடுத்துச் சொன்னார்கள். அவர் கேட்டிருப்பது பத்மநாபபுரம் ஆஃபீஸை நிறுத்திவிடாதீர்கள் என்று கேட்டார்கள். ஓராண்டுக் காலமாகியும் துரிதமாக வேலை செய்யாத காரணத்தால்தான் மூடிவிடுவோம் என்று சொன்னேன். அதை 1975-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 30-ஆம் நாள் வரையில் நீடித்துக் கொடுத்திருக்கிறோம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். அவர் ஓராண்டுக் காலம் கேட்டார். நாங்கள் 6 மாதக் காலம் கொடுத்திருக்கிறோம்.

இன்னும் ரெயில்வே போடப் போகிறீர்களா, இல்லையா தெரியவில்லையென்று சொன்னார்கள். நிலம் ஆர்ஜிதம் செய்யப்படுகிறது. நிலம் கொடுத்தவர்களுக்கு உடனடியாகப் பணம் கொடுக்கத் துரித நடவடிக்கையை எடுத்து, அதற்கான ஏற்பாடு நடைபெற்று வருகின்றன. விரைவிலே எங்காவது செய்யாமலிருந்து, அவை கவனத்திற்குக் கொண்டு வரப்படுமானால், கவனிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1–30)

அதைப் போலவே திரு. எ. ஆர். மாரிமுத்து அவர்கள் மதுராந்தகத்திலே 3 ஆண்டுக் காலமாக நிலம் ஒப்படைவு செய்யப்படவில்லை என்ற கருத்தைச் சொன்னார்கள்.

குறிப்பிட்ட நில உரிமையாளரான திரு. கிருஷ்ணதாஸ் ரெட்டியார் அந்த நிலத்திற்குள் 22 அரிசன குத்தகைக்காரர்களை நுழையக் கூடாதென செங்கற்பட்டு மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தில் தடை ஆணை பெற்றுள்ளார். இந்த குத்தகை உரிமைப் பதிவு செய்வது பற்றி 22 அரிசன குத்தகைதாரர்களும் கிராமத்தில் அறிவிப்பு வெளியிடப்பட்ட



1975 மார்ச் 19] [திரு. அ. பெ. தர்மலிங்கம்]

போது, 1969-ம் ஆண்டு தமிழ்நாடு வேளாண்மை நிலங்கள் குத்தகை உரிமைப் பதிவேட்டு சட்டத்தின் விதித்துறைகளின் கீழ் மதுராந்தகம் பதிவேடு அதிகாரிக்கு (தனித் தாசில்தார்) விண்ணப்பம் எதுவும் செய்து கொள்ளவில்லை. நீதிமன்றத்தில் பெறப்பட்ட தடை ஆணை, உண்மையான பயிரிடு குத்தகைதாரர்களை இச்சட்டத்தின் 4-எ பிரிவின்கீழ் பதிவு செய்ய தாமாகவே நடவடிக்கை எடுப்பதற்கு பதிவு அதிகாரிக்கு உள்ள உரிமையைப் பாதிக்காது. எனவே தக்க மேல் நடவடிக்கை எடுக்குமாறு வருவாய்த் துறையின் 1974-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5-ஆம் நாளிட்ட குறிப்பாணையில் செங்கற்பட்டு மாவட்ட வருவாய் அதிகாரிக்கு அரசு கட்டளை பிறப்பித்துள்ளது. மேற்படி சட்டத்தின் விதித்துறைகளையொட்டி இந்த வழக்கில் நடவடிக்கை எடுக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் பதிவு அதிகாரிக்கு ஆணை அனுப்பியுள்ளார்.

திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் இராணுவத்தினருக்கு நிலம் கொடுத்துவிட்ட பிறகு அதை வாங்கி இன்னொருவருக்குக் கொடுக்கிறார்கள் என்று குறிப்பிட்டார்கள். பல மனுக்கள் வருகின்றன. இராணுவத்திலே பணியாற்றுகிறவர்களுக்கு என்று நிலம் கொடுக்கப்படுகிற நேரத்திலே சிலர் அவர்களுக்கு நிலம் ஒப்படைவு செய்யப்பட்ட நாளிலிருந்து அதற்குப் பிறகு நாலைந்து ஆண்டுகளாகக்கூட ஒன்றும் செய்யாமல் போட்டு விடுகிறார்கள். நிலம் அவர்களுக்கு ஒப்படைவு செய்யப்பட்ட நாளிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் வேண்டிய கடனோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ பணத்தைப் பெற்று அந்த நிலத்தைச் சீர்திருத்தம் செய்ய வேண்டும், அப்படி அவர்கள் செய்யாவிட்டால் அந்த நிலத்தை எடுத்துக்கொள்வது என்று நிபந்தனை விதித்திருக்கிறார்கள்.

அதைப்போலவேதான் அரிசன மக்களுக்கும், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கும் நிலம் கொடுக்கப்படும்போது 3 ஆண்டு காலத்திற்குள் ஏதாவது செய்ய வேண்டும். அது மட்டுமல்ல. அந்த நிலத்தை பத்து ஆண்டு காலத்திற்கு விற்கக் கூடாது என்று நிபந்தனை போடப்பட்டிருக்கிறது. அப்படியிருப்பதால் இதைப்பற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளோடு கலந்து பேசி எப்படியிருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன். இப்படிச் சிறு சிறு பிரச்சினைகளாக இருந்தாலும் கூட உடனடியாகக் கவனித்து நடவடிக்கை எடுப்பதற்குத் தயாராக இருக்கிறது அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>திரு. வா. மை. அப்துல் ஜப்பார்</u>: கிராம அதிகாரிகள் பற்றி அவர்களை நிரந்தரமாக்குவது பற்றிப் பேசினேன். அதைப் பற்றிய முடிவை அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

<u>மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்</u>: நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசியிருக்கிறேன். அவர்களுடைய சங்கத்தினரும் அதைக் கேட்டிருக்கிறார்கள், இங்கே அங்கத்தினர்களும் அதைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். திரு. ஜப்பார் அவர்கள் பேசும்போதே முதலமைச்சர் அவர்களிடம் பேசி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

தமிழ்நாடு 1970-ம் ஆண்டு கிராம அதிகாரிகள் பணி விதிகள் செயலுக்கு வரத் தொடங்கிய நாளன்று, அதாவது 1970-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 16ஆம் நாளன்று, பணிபுரிந்த கிராம அதிகாரிகள் (கர்ணம் மற்றும் கிராம முன்சீப்) எவருக்கும் மேற்படி விதிகள் பொருந்தா. ஆனால் அவர்களுடைய நியமன விண்ணப்பங்களை கோரப் பட்டு கோட்டாட்சித் தலைவரால் அவர்கள் முறையாக நியமிக்கப்பட்டிருக்க வேண்டும்.

விண்ணப்பங்கள் கோரப்படாமல் நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகளையும் வருவாய் வாரிய நிலை ஆணைகளின்படி தகுதி பெறாத நபர்களையும், 18(பி) விதியின் கீழ் பணியிலிருந்து நீக்கி விட்டு தகுதி வாய்ந்த நபர்களை நியமிக்குமாறு மாவட்ட வருவாய் அதிகாரிகளுக்கு அரசு ஆணை பிறப்பித்தது. அதன்படி, மாவட்ட வருவாய் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க முற்பட்டனர்.

பாதிக்கப்படுவோர் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று தமிழ்நாடு கிராம அதிகாரிகள் சங்கம் முறையிட்டது. அதைப் பரிசீலித்து, 1970 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 16 ஆம் தேதிக்கு முன்னர், ஏற்பட்ட காலியிடங்களில் நியமிக்கப்பட்ட கிராம அதிகாரிகள் அனைவருக்கும் பாதுகாப்பு அளிக்க கருதப்பட்டு, சுமார் இரண்டாயிரம் கிராம அதிகாரிகள் பயன்பெறும் வகையில் விதி திருத்தப்பட முடிவு எடுக்கப்பட்டுள்ளது. ஆனால், வருவாய் வாரிய நிலை ஆணைகளுக்கேற்ப, தகுதி பெற்றவர்களுக்கு மட்டும் தான் இந்தச் சலுகை அளிக்கப்படும்.

விதி திருத்தம் இன்று முதல் 1975-ம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் நாளிலிருந்து அமுலுக்கு வரும்.

திரு ஜப்பார் அவர்கள் திருப்தியடையவில்லை யென்று நினைக்கிறேன். பதினைந்து, இருபது ஆண்டு காலம் டெம்பரரியாகப் பணியாற்றியவர்களாக இருந்தாலும்கூட அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்து இருக்க வேண்டும். தேவையான வயது வரம்பு இருக்க வேண்டுமென்று இருந்தது. ஆனால் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி, அவர்கள் முறைப்படி நியமனம் செய்யப்பட்டிருந்தால் அவர்களை நிரந்தரமாக்கி விடுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. ஆக இருக்க வேண்டுமென்பதல்ல. வயது வரம்பு இருக்க வேண்டுமென்பதல்ல. ஆனால், ஏ,பி இரண்டு பார்ட்களும் பாஸ் செய்திருக்க வேண்டும், அப்படி இருந்தால் ஏற்பாடு செய்யலாம் என்ற முறையிலே இரண்டாயிரம் பேர்களுக்கு இதன் மூலம் நிவாரணம் அளிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திருமதி ஜோதி வெங்கடாசலம்: கனம் அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறபோது இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்குக் கொடுக்கப்பட்ட நிலம் 3 ஆண்டு காலம் பயன்படுத்தப்படவில்லை யென்றால் திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டு மற்றவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். என்னுடைய தொகுதியிலே மூத்தரச நல்லூர் என்ற இடத்திலே தங்கவேலு என்ற ராணுவ உத்தியோகஸ்தருக்கு 1973 ஆம்





ஆண்டு அக்டோபர் மாதம் 19 ஆம் நாளன்று போட்ட ஆணைப்படி நிலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தை அவர்கள் வாங்கி முறைப்படி கிஸ்தி கட்டி அந்த நிலத்தை அவர்களுக்குப் பட்டா செய்து கொடுக்கிறார்கள். அதன் பிறகு அதை எடுத்து டி. ஆர். ஓ. 1974 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 இல் முனியாண்டி என்பவருக்கு அந்த நிலம் திரும்பக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அப்படிக் கொடுத்ததற்குப் பிறகு என்குயரி வைப்பதாக இருக்கிறது என்று தெரிவிக்கிறார்கள். என்குயரி என்றால் கொடுப்பதற்கு முன்னால் அல்லவா செய்திருக்க வேண்டும் என்குயரி கண்டக்ட் பண்ணி அல்லவா அவருக்குக் கொடுக்க வேண்டும். அவருக்கு நிலமில்லை என்று புரூவ் ஆன பிறகு அல்லவா கொடுத்திருக்க வேண்டும். அப்படியில்லாமல் கொடுத்துவிட்ட பிறகு என்குயரி நடத்தப்படும் என்று சொல்லப்படுகிறதே, அதைப்பற்றி அவர்கள் பதில் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கனம் அம்மையார் அவர்கள் சொன்ன மூத்தரசநல்லூர் தங்கவேலுவை நானே பார்த்து வந்திருக்கிறேன். என்னிடம் சொன்னார்கள். அதைப் போல பல இருக்கின்றன. உதாரணத்திற்குத் தஞ்சை மாவட்டத்திலே ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட நிலம் கொடுக்கப்பட்ட நாளிலிருந்து நான்கு ஆண்டுகள் வரையில் ஒன்றும் செய்யாமல் வாங்கியவர் இறந்துவிட்டார். ஆனால் அவருடைய துணைவியார் திருச்சியிலே இருக்கிறார். அவர் மனுப்போட்டிருக்கிறார். இப்படி பல நிலைமைகள் இருக்கின்றன. கனம் அம்மையார் அவர்கள் வைத்திருக்கிற தகவலை என்னிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு ஆண்டில் மழையின்மை காரணமாக பயிர்கள் சேதமடைந்ததால் விவசாயக் குத்தகைதாரர்களுக்குக் குறைந்த அளவு குத்தகை செலுத்துவதற்கோ அல்லது குத்தகைத் தொகையை முழு அளவில் தள்ளுபடி செய்யவோ 1384-ம் பசலியிலும் 1956-ம் ஆண்டு நியாய வாரச் சட்டத்தின்கீழ் நிவாரணம் தேடிக் கொள்ள நீதி மன்றங்கள் தேவைப்படுகின்றன.

ஆகவே ஏற்கனவே கலைக்கப்பட்ட வருவாய் நீதி மன்றங்களை மீண்டும் உடனடியாகச் செயல்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

எனவே இன்னும் இந்தத் துறை சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை பற்றியெல்லாம் கலந்து பேசி நடவடிக்கை எடுப்பதற்கு வருவாய்த் துறை தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்து சம்பந்தப்பட்ட வருவாய் துறை அதிகாரிகளுக்கும் மற்றவர்களுக்கும் பாராட்டுதலைத் தெரிவித்து, வெட்டுப் பிரேரணைகளைக் கொடுத்தவர்கள் நான் அளித்த பதிலுக்குப் பிறகு அவற்றைத் திரும்பப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது. அடுத்து வாக்கெடுப்பு.

திருவாளர் கே. பி. கோபாலன், கே. எ. வகாப், எஸ். வடிவேல் பி. வெங்கடசாமி ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 1க்கு கொடுத்திருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர் கே. எஸ். கோதண்டராமய்யா, ஏ. ஆர். மாரிமுத்து, பெ. சௌந்தரபாண்டியன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

" நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,94,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்.

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பி. வெங்கடசாமி, கே. எ. வகாப், எஸ். வடிவேல் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 5-க்கு கொடுத்திருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திருவாளர்கள் கே. எஸ். கோதண்டராமையா, ஆர். பொன்னப்ப நாடார், எம். சுரேந்திரன் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 59,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை-வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

திருவாளர்கள் பி. வெங்கடசாமி, எஸ். வடிவேல் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் நிதிக் கோரிக்கை எண் 47-க்கு கொடுத்திருந்த அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டனவாகக் கருதப்பட்டன.

திரு. ஆர். பொன்னப்பநாடார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி—

"நிதிக் கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீட்டு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,65,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



நிதிக்கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

நிதிக் கோரிக்கை எண் 11-க்கு திரு. கே. எஸ். கோதண்ட ராமையா, திரு. ஏ. ஆர். மாரிமுத்து ஆகியோர் கொடுத்த வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.

திரு. பி. வெங்கடசாமி, திரு. கே. எ. வகாப், திரு. கே. பி. கோபால் ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பட்டனவாகக் கருதப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி.—

"நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,28,24,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறை வேற்றப்பட்டு கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1 41 மணி அளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

## 5. பேரவையின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

143. Notification issued in G. O. Ms. No. 23, Rural Development and Local Administration, dated the 3rd January 1974, in regard to division of wards and reservation of two seats for Scheduled castes and one seat for woman in the Rasipuram Municipal Council. [*Laid on the table of the House under section* 304 (*d*) *of the Tamil Nadu District Municipalities Act*, 1920 (*Tamil Nadu Act V of* 1920).]

144. Notification issued in G. O. Ps. No. 426, Commercial Taxes and Religious Endowments dated the 10th October 1974 in regard to an amendment to the First Schedule to the Tamil Nadu General Sales Tax Act, 1959. [*Laid on the table of the House under section* 53(5) *of the Tamil Nadu General Sales Tax Act*, 1959 (*Tamil Nadu Act I of* 1959).]

## B. Reports, Notifications and Other Papers.

85. Notification issued in G. O. Ms. No. 595, Commercial Taxes and Religious Endowments dated, the 20th November 1974, in regard to exemption from stamp duty and Registration fees chargeable under the Indian Stamp Act, 1899, in respect of the mortgage deed to be executed by the Southern Structurals, Limited, Madras in favour of the Government of Tamil Nadu.

@ 86. Progress of Education in Tamil Nadu 1975-76 (English and Tamil).

% 87. A Summary of the Perspective Plan for Tamil Nadu 1974-84 (English and Tamil).

% 88. The Perspective Plan for Tamil Nadu 1974-84 (English and Tamil).

---

@ Despatched to members on 17th March 1975.

% Laid on the Table of the House on 18th March 1975.



## இணைப்பு—1.

238-ம் பக்கத்தில் 372 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட விஞவிற்குரிய விடையைக் காண்க.

### நியமிக்கப்பட்ட கைத்தொழில் ஆசிரியர்கள்.

| வரிசை எண்ணும் கல்வி மாவட்டத்தின் பெயரும். | 1973-74 ஆம் ஆண்டு நியமிக்கப் பட்ட கைத்தொழில் ஆசிரியர்களின் எண்ணிக்கை. | | மொத்தம். |
|---|---|---|---|
| | பகுதிநேர ஆசிரியர்கள். | முழுநேர ஆசிரியர்கள். | |
| (1) | (2) | (3) | (4) |
| 1 சென்னை (தெற்கு) .. | .. | 5 | 5 |
| 2 சென்னை (வடக்கு) .. | .. | 6 | 6 |
| 3 சைதாப்பேட்டை .. .. | .. | 40 | 40 |
| 4 செங்கல்பட்டு .. .. | 4 | .. | 4 |
| 5 திருவள்ளூர் .. .. | .. | 25 | 25 |
| 6 காஞ்சிபுரம் .. .. | .. | 7 | 7 |
| 7 விழுப்புரம் .. .. | .. | 15 | 15 |
| 8 கடலூர் .. .. .. | .. | 12 | 12 |
| 9 விருத்தாச்சலம் .. .. | .. | 11 | 11 |
| 10 திண்டிவனம் .. .. | .. | 10 | 10 |
| 11 நாகப்பட்டினம் .. .. | 4 | 2 | 6 |
| 12 தஞ்சாவூர் .. .. | .. | 22 | 22 |

| வரிசை எண்ணும் கல்வி மாவட்டத்தின் பெயரும். | பகுதிநேர ஆசிரியர்கள். | முழுநேர ஆசிரியர்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 13 மாயூரம் | .. | 1 | 1 |
| 14 பட்டுக்கோட்டை | .. | 1 | 1 |
| 15 திருச்சிராப்பள்ளி | .. | 23 | 23 |
| 16 அரியலூர் | .. | 30 | 30 |
| 17 புதுக்கோட்டை | .. | 7 | 7 |
| 18 கரூர் | .. | 15 | 15 |
| 19 திண்டுக்கல் | .. | 9 | 9 |
| 20 மதுரை | .. | 15 | 15 |
| 21 உசிலம்பட்டி | .. | .. | .. |
| 22 பெரியகுளம் | .. | 16 | 16 |
| 23 வேலூர் | .. | 3 | 3 |
| 24 திருவண்ணாமலை | .. | 4 | 4 |
| 25 திருப்பத்தூர் (வடாற்காடு) | .. | 18 | 18 |
| 26 செய்யூர் | .. | 7 | 7 |
| 27 சேலம் | .. | .. | .. |
| 28 நாமக்கல் | .. | 8 | 8 |
| 29 சங்கராதுர்கம் | .. | 30 | 30 |
| 30 தர்மபுரி | .. | .. | .. |
| 31 கிருஷ்ணகிரி | .. | 8 | 8 |
| 32 கோயம்புத்தூர் | .. | 2 | 2 |
| 33 பொள்ளாச்சி | .. | 13 | 13 |



| வரிசை எண்ணும் கல்வி மாவட்டத்தின் பெயரும். | பகுதி நேர ஆசிரியர்கள். | முழுநேர ஆசிரியர்கள். | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 34 ஈரோடு | .. | 7 | 7 |
| 35 கோபிச்செட்டிபாளையம் | .. | 18 | 18 |
| 36 நீலகிரி | .. | 18 | 18 |
| 37 ராமநாதபுரம் (சென்ட்ரல்). | .. | 5 | 5 |
| 38 தேவகோட்டை | .. | 23 | 23 |
| 39 விருதுநகர் | .. | 4 | 4 |
| 40 இராமநாதபுரம் | .. | 7 | 7 |
| 41 திருநெல்வேலி (தெற்கு) | .. | 21 | 21 |
| 42 தூத்துக்குடி | .. | 34 | 34 |
| 43 திருநெல்வேலி (சென்ட்ரல்) | .. | 33 | 33 |
| 44 கோவில்பட்டி | .. | 2 | 2 |
| 45 நாகர்கோவில் | .. | 8 | 8 |
| 46 தக்கலை | .. | 9 | 9 |
| 47 குழித்துறை | .. | 8 | 8 |
| மொத்தம் | 8 | 562 | 570 |

வியாழக்கிழமை, 1975 மார்ச் 20.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

## 1. வினாக்கள்—விடைகள்

### வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

### புளியங்கால் ஓடையின் குறுக்கே பாலம்.

*386 வினா.—திரு. ந. முத்துவேல் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) மரக்காணம் பகுதியில் உள்ள புளியங்கால் ஓடையின் குறுக்கே ஒரு பாலம் கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) திண்டிவனம் வட்டம், மரக்காணம் பகுதியில் உள்ள புளியங்கால் ஓடையைத் தக்க முறையில் அபிவிருத்தி செய்ய தயாரிக்கப்பட்டுள்ள ரூ. 6.5 இலட்சத்திற்கான மதிப்பீட்டில், புளியங்கால் ஓடையின் உள்ளே கடல் நீர் புகாமல் தடுக்கும் பொருட்டு, ரெகுலேட்டருடன் இணைந்த பாலம் ஒன்று கட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

(இ) மதிப்பீடு பரிசீலனையில் உள்ளது.

THIRU K. S. KOTHANDARAMIAH : Sir, there are a number of jungle streams and rivers flowing in various parts of the State, especially in the hilly districts of The Nilgiris and Dharmapuri which stand in the Mysore plateau—a number of rapid streams innumerable in number, flow there. But the Highways Department say that they have no jurisdiction over it. The Panchayat Unions say that they have no funds. May I know from the Hon. Minister for Works whether any special arrangements would be made to see that some causeways or bridges are constructed over those rivers ?

THE HON. THIRU P. U. SHANMUGAM : The hon. Member refers to jungle streams over which we have no jurisdiction. I request the hon. Member to write to me, so that I can refer the matter to the Highways Engineer and see whether these works can be taken up under " Other Road Programmes ".

## மாதவரம்—செங்குன்றம் சாலையில் பாலம்.

* 387 வினா—திரு. மா. வே. நாராயணசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாதவரம்-ரெட்ஹில்ஸ் சாலையில் வடபெரும்பாக்கம் அருகில் சாலையின் குறுக்கே ஓடும் புழலேரி கசிவு நீரின் மீது பாலம் அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

## சந்திர நதியின் குறுக்கே அணை.

* 388 வினா—திரு. தாழை மு. கருணாநிதி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டிணம் வட்டம், திருக்குவளை, ஈசனூர், எட்டுக்குடி போன்ற பல கிராமங்களின் நீர்ப்பாசன வசதிகளை சீர்படுத்தும் வகையில் சந்திர நதி தலைப்பில் ஒரு Bed-dam கட்டுவதற்கான திட்டம் ஏதேனும் ஆய்வில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

## *Land for cement factory at Alankulam.*

* 389 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state :—

(a) the number of farmers who have lost their lands due to acqvsition of the lands for the Tamil Nadu Cement Factory, Alankulam ; and

(b) whether any compensation has been paid to them ?

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : (அ) 1,909.07 எக்கர் நில ஆர்ஜிதத்தின் காரணமாக, 1,604 விவசாயிகள் தங்கள் நிலங்களை இழந்துள்ளனர்.



(இ) மேற்குறிப்பிட்டுள்ள நிலங்களை ஆர்ஜிதப்படுத்தியதற்காக ரூ. 20,74,839.43 ஈட்டுத் தொகையாக அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவர் அவர்களே, ஆயிரம் எக்கருக்கு மேல் அக்வையர் செய்யப்பட்டிருக்கிறது. இவ்வளவு பெரிய தொழிற்சாலை அங்கே ஏற்படும்போது, காம்பன்சேஷன்தான் கொடுக்கப்படுகிறது. ஆல்டர்னேடிவ் சைட்டும் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,295 குடும்பங்களில் 534 குடும்பங்களுக்குப் புது வாழ்வு அளிக்கவேண்டியுள்ளது. எஞ்சிய 761 குடும்பங்கள் சொந்தமான பிற நிலங்கள் கொண்டுள்ளதால் அவர்களுக்குப் புது வாழ்வு அளிக்க வேண்டியதில்லை. பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டு வருகிறது. அலுவலர் 1, மேற்பார்வையாளர்கள் 2, பணியாளர்கள் 6, தொழிற்சாலைத் தொழிலாளர் அல்லாதார் 5, தொழிற்சாலைத் தொழிலாளர்கள் 77, கல் தோண்டும் தொழிலாளர்கள் 194. 254 குடும்பங்களில் 153 குடும்பங்களில் இருப்பவர்களுக்கு வேலைவாய்ப்புத் தகுதி இல்லை என்று சொல்லியிருக்கிறார்கள். மற்ற குடும்பங்களுக்கு வேலை வாய்ப்புக்கான ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : ஆலங்குளம் சிமெண்ட் தொழிற்சாலைக்காகக் கையகப்படுத்தப்பட்ட நிலங்கள் எவ்வளவு ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டன ? ஒரு எக்கருக்கு எவ்வளவு ரூபாய் நஷ்டயீடு வழங்கப்பட்டது ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : 1,909·07 எக்கர் நிலம் ரூ. 20,74,839·43 செலவில் கையகப்படுத்தப்பட்டது. அதில் ஒரு எக்கருக்கு நீதிமன்றம் தீர்ப்பளித்த 4,33,667·48 ரூபாயும் அடங்கும்.

## *Rubber Production.*

* 390 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the quantum of Rubber Production in the State during the calendar years 1972 and 1973 ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இம் மாநிலத்தில் 1971–72-ஆம் ஆண்டில் 5,140 மெட்ரிக் டன்னும், 1972–73 ஆம் ஆண்டில் 5,513 மெட்ரிக் டன்னும் ரப்பர் உற்பத்தி செய்யப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவர் அவர்களே, மாவட்டவாரியான புள்ளி விவரம் அறிய விரும்புகிறேன். அத்துடன், 1974-ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி எவ்வளவாக இருந்தது ? கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்பொழுது ஏகதேசம் பத்தாயிரம் எக்கரில்தான் ரப்பர் பயிரிடப்படுகிறது. ஏகதேசம் ஒரு இலட்சம் எக்கரில் பயிரிட வாய்ப்பு இருக்கிறது.

அண்மையில் அமைச்சர் அவர்கள் இந்த சபையில் கூறும்போது, ஒரு ரப்பர் தொழிற்சாலை ஏற்படுத்துவதாகச் சொன்னார்கள். அது எப்பொழுது ஏற்படுத்தப்படும்? அதற்கான நடவடிக்கை என்ன நிலையில் இருக்கிறது ? அது பெரிய அளவில் செயல்படுத்தப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S.J. SADIQ PASHA : The district-wise registered area under rubber and the number of units in Tamil Nadu at the end of 1972-73 are as follows :

| Name of district. | Area in hectares. |
| --- | --- |
| Kanyakumari district (Thovalai, Kalkulam and Vilavankode). | 10,337 |

In other districts—Madurai, The Nilgiris, Coimbatore, Salem and Tirunelveli districts—Total 10,979 hectares.

இந்த விவரங்கள் இருக்கின்றன.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, அரசாங்க ரப்பர் தோட்டங்களில் உற்பத்தியாகும் ரப்பரை வைத்து ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு ஒரு பரிந்துரை வந்ததே, அது சம்பந்தமாக ஏதாவது முடிவு எடுக்கப்பட்டிருக்கிறதா ? அப்படி அந்தத் தொழிற்சாலை கட்ட எங்கு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது என்ற விவரத்தை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் இரப்பர் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிப்பதற்கான குறிப்பு இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : தலைவரவர்களே, நம் மாநிலத்தில் விளைகின்ற ரப்பர் நமது மாநிலத்திலுள்ள தொழிற்சாலைகளுக்குக் கச்சா ரப்பராகக் கொடுக்கப்படுகின்றதா ? வேறு மாநிலங்களிலுள்ள இரப்பர் டயர் தொழிற்சாலைக்குக் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மொத்த உற்பத்தியில் தமிழ்நாட்டில் 5 சதவிகிதம் தான் உற்பத்தி ஆகிறது.

Out of the total production, 94 per cent is contributed by Kerala and Tamil Nadu's share is approximately 5 per cent. Only in the Kanyakumari district, rubber is cultivated more.

திரு. என். கே பழனிச்சாமி : தலைவரவர்களே, பெருவாரியான உற்பத்தி ஆகக்கூடிய இரப்பர்—ரா-இரப்பர் பூராவும் டன்லப் கம்பெனிக்குக் கொடுக்கப்படுகிறது. அது சாதாரணமாக வெளியில் விற்கின்ற விலையை



விட குறைவாக இருக்கிறது. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ரப்பர் பாக்டரியை ஆரம்பித்தால் அதிகமான இலாபத்தைப் பெறலாம். அடுத்ததாக, இங்கே தொழிற்சாலை ஆரம்பித்து ரா-ரப்பரை உற்பத்திப் பொருளாக ஆக்குவதற்குத் தடையாக மின்சார பற்றுக்குறை இருக்கிறது. ஆகவே, மின்சாரம் கொடுத்து அங்கே தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அங்கே உற்பத்தியாகிற ரப்பர் டெண்டர் மூலமாக விற்பனை செய்யப்படுகிறது. 1970-ஆம் ஆண்டில் மத்திய சர்க்கார் இரப்பருக்கு நிர்ணயித்த விலையை விட வெளி மார்க்கெட்டில் விலை குறைவாக இருக்கிறது. ஆகவே, நிலைமைக்குத் தகுந்தாற்போல அந்த ரப்பரை விற்பனை செய்வதற்கு ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலளிக்கையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் தான் ரப்பர் விளைகிறது என்று சொன்னார்கள். மற்ற மாவட்டங்களில் ரப்பர் விளையவில்லையா ? அப்படியானால் மற்ற மாவட்டங்களில் ரப்பரை விளைவிப்பதற்கு ஆராய்ச்சி செய்து பரிசீலனை செய்யப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னபடி கன்னியாகுமரியில் மட்டும் அல்ல,—டிஸ்ட்ரிக்ட்வைஸாகச் சொல்கிறேன்: மதுரை மாவட்டம், நீலகிரி மாவட்டம், கோவை மாவட்டம், சேலம் மாவட்டம், திருநெல்வேலி மாவட்டம் என்ற இந்த மாவட்டங்களில் விளைகின்ற ரப்பரைப் பற்றி விவரங்கள் தந்திருக்கின்றேன். வட ஆற்காடு பற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, அமைச்சவர்கள் முன்பே ஒரு கேள்விக்குப் பதில் அளித்தார்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமென்று. ஆனால் இப்போது இராமநாதபுரம் மாவட்டத்தில் அந்த தொழிற்சாலை ஆரம்பிக்கப்படப்போவதாகக் கூறியிருக்கிறார்கள். அத்தொழிற்சாலையை, முன்பு அமைச்சரவர்கள் இந்த சட்ட சபையில் கூறியது போல கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது பற்றிய பூரா விவரங்கள் என்னிடம் இப்போது இல்லை. ரப்பர் உற்பத்தியைப் பற்றித்தான் கேள்வி எழுப்பப்பட்டிருக்கிறது. அது பற்றிய விவரங்கள் தான் என்னிடத்தில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போட்டால் அவருடைய கேள்வியிலுள்ள உள் அர்த்தத்தையும் கணக்கில் எடுத்துக்கொண்டு பதில் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : தலைவரவர்களே, அமைச்சரவர்களுடைய பதிலில் நீலகிரி மாவட்டத்தில் ரப்பர் விளைகிறது என்று சொன்னார்கள். அது தனியார் துறையிலா? மேற்கொண்டு அந்த மாவட்டத்தில் இரப்பர் உற்பத்தியைப் பெருக்குவதற்கு திட்டங்கள் அரசின் ஆய்வில் இருக்கின்றனவாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டால் விவரங்களைச் சேகரித்து பதில் அளிக்கிறேன் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவரவர்களே, தமிழ்நாட்டில் உற்பத்தியாகிற ரப்பரைப் பயன்படுத்திக்கொண்டு அரசுத் துறையில் ஒரு டயர் தொழிற்சாலையை அரசு அமைக்க உத்தேசம் உண்டாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, ரப்பர் தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கான குறிப்பு ஒன்று அரசினிடத்தில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, கேரளாவில் இரப்பரைக் கொண்டு ரோடுகள் போடுகின்ற ஒரு திட்டத்தைப் பரிசீலனை செய்து இருக்கிறார்கள். அந்த விவரம் இந்த அரசுக்குத் தெரியுமா? ஆமெனில், நமது மாநிலத்தில் ரப்பர் ரோடுகளை அமைக்க ஆலோசனை இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அது பற்றிய விவரம் எனக்குத் தெரியாது. ஆனால் நமது மாநிலத்தில் கான்கிரீட் ரோடு போடலாம். அதற்கான சிமெண்டு கற்களைக் கொடுக்கிறோம் என்று முன்பு சிமெண்ட் பாக்டரி ஓனர்கள் முன்வந்தார்கள். ஆனால் இன்றையதினம் சிமெண்டிற்கே பற்றாக்குறை ஏற்பட்டு அத்திட்டம் கைவிடப்பட்டது. ரப்பர் ரோடு போடுவது பற்றி எனக்குத் தெரி தெரியாது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, ரப்பர் தொழிற்சாலை ஒன்றை ராமநாதபுரம் மாவட்டத்தில் துவகக இருப்பதாக அமைச்சரவர்கள் சொன்னார்கள். ரப்பர் உற்பத்தியாவது கன்னியாகுமரி மாவட்டத்தில். தொழிற்சாலையை ராமநாதபுரம் மாவட்டத்தில் ஏற்படுத்தினால் அங்கேயிருந்து ரப்பரைக் கொண்டு வருகிற டிரான்ஸ்போர்ட் சார்ஜ் அதிகமாகும். ஆகவே கன்னியாகுமரி மாவட்டத்திலேயே தொழிற்சாலையைத் துவக்க ம றுபரிசீலனை செய்யபடுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையை ஏற்படுத்துவதற்கு மத்திய சர்க்கார் அனுமதி கொடுக்கிறது. அப்படி அனுமதி கொடுத்திருப்பதால் இராமநாதபுரம் மாவட்டத்தில் தொழிற்சாலையை துவக்குவதற்கான குறிப்பு என்னிடத்தில் இருக்கிறது. மற்ற விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்கிறேன்.



திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, ரப்பர் நமது நாட்டில் ஏராளமாக உற்பத்தியாகிறது. இருந்தாலும், ரப்பரிலிருந்து தயாரிக்கப்படுகிற சைக்கிள் டயராக இருந்தாலும் சரி, கார் டயராக இருந்தாலும் சரி, லாரி டயராக இருந்தாலும் சரி இவைகளின் விலைகளெல்லாம் மூன்று மடங்கு, நான்கு மடங்கு ஏறியிருக்கிறது. இதற்கென்ன காரணம்? விலைகளைக் கட்டுப்படுத்துவதற்கு நமது அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, விலைவாசி உயர்விற்குக் காரணம் என்னவெனபது உறுப்பினர்களுக்கு நன்றாகத் தெரியும். இப்போது அவையில் எழுப்பப்பட்டிருக்கிற கேள்வி, ரப்பர் உற்பத்தியைப் பற்றிய பிரச்னை. உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கிற கேள்வி விலையைப் பற்றியது. அதைப் பற்றி தனியாக கேள்வி போட்டால் பதில் அளிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி 391-க்கான விடை அச்சகத்திலிருந்து அச்சாகி வரவில்லை. ஆகவே, அமைச்சரவர்களின் வேண்டுகோளுக்கிணங்க இந்த கேள்வி ஒத்தி வைக்கப்படுகிறது.

### Cultivation in dry lands.

* 392 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Government propose to popularise the results of the field-oriented research on dry farming carried out at the Koilpatti Research Centre; and

(*b*) if so, the details thereof.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : (அ) & (இ): சட்டமன்றப் பேரவை முன் ஒரு விவர அறிக்கை * வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, இந்த விவர அறிக்கையில் நான் கோரிய விவரங்கள் இல்லை. மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளின் பலன் என்ன என்பது தெரியவில்லை. அதை ஸ்டேட்மெண்டாக வைத்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, ஆராய்ச்சியின் பலன, முதலில் குறுகிய கால வித்துக்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. கூடிய வரையில் இந்த Pond Percolation System என்ற அடிப்படையில் பலன்கள் ஆராயப்பட்டு வந்து கொண்டிருக்கிறது.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, விவசாய ஆராய்ச்சிப் பண்ணையில் பணி புரியும் தொழிலாளர்களுக்கு தினசரி கூலி அளிக்கப்படுகிறதா, மாதச் சம்பளமாக கொடுக்கப்படுகிறதா, தினசரி கூலி என்றால் எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்.

---

* 454-ம் பக்கத்தில் இணைப்பு I-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, எந்தப் பண்ணையைப் பற்றி உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள் என்று சரியாகத் தெரியவில்லை. விவசாயப் பண்ணை என்றால், புதுக்கோட்டையில் உள்ள பண்ணையைப் பற்றி என்று நான் கருதுகிறேன். இப்போது கேட்கப்பட்டிருக்கிற கேள்வி ஆராய்ச்சி முடிவுகளை பரப்ப உத்தேசிக்கப்பட்டு இருக்கின்றது என்பது உண்மையா என்பதுதான். தனிக் கேள்வி போட்டால் அங்கே கொடுக்கப்படுகின்ற கூலி பற்றி விவரம் அளிக்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த ஆராய்ச்சியில் மண் வளத்தை பரிசோதிப்பதற்காக தனிப் பிரிவு ஒன்று அங்கே ஏற்படுத்தப்படும் உத்தேசம் இருக்கிறதா ? ஆமெனில் அது பற்றிய விவரங்களை அமைச்சரவர்கள் கூறுவார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, முழு விவரங்கள் என் கையில் இப்போது இல்லை. விவரம் அச்சுக்குப் போயிருக்கிறது. அது வந்தவுடன் நான் இன்னும் முழு விவரங்களையும் கொடுக்க முடியும். மண் வள ஆராய்ச்சிக்கான ஒரு லெபாரேட்டரி ஏற்கெனவே இருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவரவர்களே, பீல்டு ஓரியண்டட் ரிஸர்ச் ஸ்கீம் என்று கூறப்படுகிற இது எத்தனை ஆண்டுகளாக நடந்து வருகிறது ? இதை மேலும் விரிவாக்க அரசுக்கு உத்தேசம் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, தற்போது இந்த ஸ்கீம் கோவில்பட்டியிலும், புதுக்கோட்டை மற்றும் எட்டு கிராமங்களில் இருந்து கொண்டிருக்கிறது. வேறு இடங்களுக்கு விஸ்தரிக்கப்படும் எண்ணம் இப்போது அரசுக்கு இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, வறட்சிப் பகுதியில் எப்படி வேளாண்மை செய்வது, மழை குறைவான பகுதிகளில், தண்ணீர் வசதி இல்லாமலே செய்ய முடியுமா என்ற ஆராய்ச்சி இருக்கிறதா? அப்படி இருந்தால் குறிப்பாக மழை இல்லாத பகுதிகளில் நெல் விளைவிக்கக் கூடிய ஆராய்ச்சி நடத்தப்படுகிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, அந்த ஆராய்ச்சியின் மூலம் மாநிலம் பூராவும் பயனடைகிறது. குறுகிய கால வித்துக்கள் மழை குறைவாக இருக்கும் இடங்களில் விளைவிக்கக் கூடியது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது அத்தோடு இந்த "பெர்குலேஷன் பாண்ட்" என்பது கோவை மாவட்டத்தில் கூட நடைமுறைக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. அந்த ஆராய்ச்சி திட்டத்தை எல்லா பிளாக்குகளுக்கும்,





விஸ்தரிக்கப்பட வேண்டுமென்றால் ஏறத்
எல்லா மாவட்டங்களுக்கும் செலவாகும். மத்திய அரசு கடனாக உதவி
தாழ ரூபாய் 9 கோடி விவரங்களையெல்லாம் வைத்து
கொடுத்துக்கொண்டு வருகிறது. இந்த விஸ்தரிக்கப்பட முடியும். மற்ற
பார்த்துத்தான் மற்ற இடங்களுக்கு தற்போது அரசுக்கு இல்லை.
மாவட்டங்களுக்கு விஸ்தரிக்கின்ற எண்ணம்

THIRU K. S. KOTHANDARAMIAH : May I know whether the field-oriented research now introduced in Koilpatti is successful, whether all the research findings have been implemented and if they had been successful, whether they would be extended to other areas ?

THE HON. THIRU SI. PA. ADITANAR : Regarding the field-oriented research, I answered the previous question stating that there is no proposal before the department to extend it to certain other areas. Research will be conducted only in the Koilpatti block and also in Pudukkottai. The results will be beneficial to the entire State.

கொட்டைப்பாக்கு உற்பத்தி.

* 393 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) நீலகிரி மாவட்டத்தில் கொட்டைப்பாக்கு உற்பத்தியை அதிகப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : (அ) இல்லை.

(இ) வினாவுக்கு இடமில்லை.

* 394 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state the stage at which the development of Arecanut plantation in Peddanaikenpalayam stands at present ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : தலைவரவர்களே, பெத்து நாயக்கன்பாளையத்தில் பாக்குத் தோட்ட வளர்ச்சிக்கான திட்டமேதும் இல்லை. ஆனால் அங்கே பாக்கு அபிவிருத்தி பற்றிய ஆராய்ச்சி மட்டும் நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, நீலகிரி மாவட்டத்தில் தற்போது கொட்டைப்பாக்கு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அங்கே உற்பத்தியாகும் கொட்டைப் பாக்கு வெளிநாட்டிற்கு, வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறதா என்று அறிய விரும்பு

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : மாண்புமிகு உறுப்பினர் ஒரு வேளை மேட்டுப்பாளையத்தைப் பற்றிக் கேட்கிறார்கள் என்று நினைக்கிறேன். மேட்டுப்பாளையம் நீலகிரி மாவட்டத்தில் இல்லை. இது நீலகிரி மாவட்டத்தைப் பற்றிய கேள்வி. அங்கே பாக்கு உற்பத்தியாவதாக என்னிடம் தகவல் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், பொதுவாக பாக்குக்கு அடிக்கடி வியாதி வந்து பெருவாரியான மரங்கள் பட்டுப்போகின்றன. அதுமாதிரி நோய் வராமல் இருப்பதற்கு பிளான்டேஷன் ப்ரொட்டெக்ஷன் ஸ்கீம் வைக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெத்துநாயக்கன்பாளையத்தில் நடைபெற்று வருவது கூட உரம், பூச்சிகொல்லி பற்றிய ஆராய்ச்சியாகும். வேறு சில மாவட்டங்களில் குறிப்பாக கோவை, சேலம், கன்னியாகுமரி, தருமபுரி மாவட்டங்களில் இதற்கான ஆராய்ச்சித் திட்டங்கள் இப்போதும் நடைமுறையில் இருக்கின்றன.

திரு. கு. அ. பொம்மன் : பேரவைத் தலைவரவர்களே, அமைச்சர் பதில் அளிக்கிற நேரத்தில் நீலகிரி மாவட்டத்தில் பாக்கு பயிராவது இல்லை என்று சொன்னார்கள். ஆனால் கூடலூர் வட்டாரத்தில் ஆங்காங்கு பாக்கு பயிரிடுகிறார்கள். சிறுசிறு விவசாயிகள் அங்கே நிறைய நிலங்களில் பயிர் செய்து இருக்கிறார்கள். அங்கே நிறைய நிலங்களில் இப்படி பாக்கு பயிர் செய்து இருப்பதால், அரசாங்கம் ஏதோ பண்ணையை ஏற்படுத்தி இருப்பதாகச் சொல்கிறார்கள். அது மாதிரி அரசுப் பண்ணை ஒன்றை நீலகிரி மாவட்டத்தில் தொடங்கி, பாக்கு பயிரிடுவதற்கு வாய்ப்பு அதிகரித்துத் தர அரசு ஆலோசிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் ஆலோசனையை நிச்சயமாகக் கவனித்து, அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும். ஏனெனில், இதற்கு முன்னாலே கூடலூர் தாலுக்காவில் அரசுப் பண்ணை ஆரம்பிக்க இருந்தோம். அங்கே ஆரம்பிக்காததற்குக் காரணம், அங்கே நிலம் பற்றிய தகராறு ஒன்று சுப்ரீம் கோர்ட்டில் இருந்தது. அதில் அரசுக்குச் சாதகமாக தற்போது தீர்ப்பாகி இருக்கிறது. ஆகவே, அரசு சார்பில் கூடலூர் வட்டத்தில் பாக்கு பயிரிடுவதற்கான அரசுப் பண்ணை ஒன்றை தொடங்க முடியும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, சேலம் மாவட்டத்திலே பெத்துநாயக்கன்பாளையத்திலே ஒரு பாக்குப் பண்ணை தொடங்குவதற்கான திட்டம் இருப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது போல், வாழப்பாடி, சேழுங்காவடி போன்ற இடத்திலும் விஸ்தரிக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : நான் ஏற்கனவே பெத்துநாயக்கன்பாளையத்தில் விஸ்தரிக்கும் திட்டம் இல்லை என்றுதான் கூறி-



னேன். அங்கே ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. குறிப்பாக, சொல்லப் போனால், அந்த ஆராய்ச்சியின் பயனை கண்டறிந்த பின், அதைப்பற்றி விஸ்தரிப்பது பற்றி பரிசீலிக்கலாம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவரவர்களே, பாக்கின் விலை இப்போது மிகவும் குறைவாக இருக்கிறது. அதோடு பாக்கைப் பொறுத்தவரையில், வருமான வரிக்கு 1 ஏக்கருக்கு 6 ஏக்கர் (ஸ்டாண்டர்டு ஏக்கர்) வைத்து இருக்கிறோம். ஆகவே, பாக்கு உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. அரசு பாக்கு உற்பத்தியை இன்னும் விரிவுபடுத்தும் முறையில் விவசாய வருமான வரியிலிருந்து விலக்கு கொடுப்பதற்கு...............

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியை யாரிடத்தில் போடுவது என்பது இல்லையா ? பாக்கு என்ற உடனேயே எல்லாவற்றையும் குறித்து கேட்டு விடுவதா ?

திரு. ஜே. ஜேம்ஸ் : ஆகவே, பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்கும் முறையில், இந்த இடற்பாடுகளையெல்லாம் அகற்ற அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பாக்கு விலை குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். இப்போது குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். எப்போது குறைந்தது என்ற விவரம் என் கைவசம் இப்போது இல்லை. ஆனால் பாக்கு உற்பத்தியை விஸ்தரிக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, பெத்துநாயக்கன்பாளையத்திலும், ஆத்தூரிலும் பாக்கு மரங்கள் காய்ந்து விட்டதால், அங்கே பாக்கு மரங்களை பயிர் செய்ய சிறப்புத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்கு அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பெத்துநாயக்கன்பாளையத்தில் காய்ந்து விட்டதாகச் சொல்கிறார்கள். அது பற்றி என்னிடத்தில் தகவல் இல்லை. அங்கே 10,27,000 மரங்கள் இப்போது இருக்கின்றன என்று எனக்குத் தகவல் இருக்கிறது.

திரு. மு. பழனிவேலன் : தலைவரவர்களே, என்னுடைய தொகுதி பெத்துநாயக்கன்பாளையம் தொகுதியாகும். அங்கே ஏராளமான அளவில் பாக்கு மரங்கள் இந்த கடுமையான வறட்சியால் காய்ந்து சாய்ந்து விட்டன. அப்படிப்பட்ட இடத்திற்கு சிறப்பு ஏற்பாடு செய்து, தண்ணீர் கொடுப்பதற்கு ஏதாவது அரசு செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இது ஆராய்ச்சி பற்றிய தினை, தண்ணீர் கொடுப்பது பற்றி சம்பந்தப்பட்ட துறைக்கு நான் தெரிவிக்கிறேன்.

திரு. கோவை. செழியன் : பேரவைத் தலைவரவர்களே, பங்களா தேஷ் ஏற்பட்ட பிறகு, பங்களா தேஷிலிருந்து ஏராளமான பாக்கு

இங்கே வருவதால், நம்முடைய நாட்டில் பாக்குகள் விலை இறங்கி விட்டதாகச் சொல்கிறார்கள். ஆகவே, பாக்கு தோட்டத்திற்கு-மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட மாதிரி-அதிக வரி இருப்பதால், பல பேர் உற்பத்தி செய்யத் தயங்குகிறார்கள். அதற்கு அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : பாக்கு விலை குறைந்து விட்டது எனறால் அதிகமாக உறபத்தியாகிறது என்று பொருளாக இருக்க முடியும். பாக்கு விலையைப் கட்டுப்படுத்த ஏதாவது முடியுமா என்பதை பரிசீலனை செய்தாக வேண்டும்.

திரு. கே. கந்தசாமி : தலைவரவர்களே, பெத்துநாயக்கன்பாளையத்தில் பாக்கு மரங்கள் கருகி விட்டன, அதற்கு தண்ணீர் தேவை என்று மாண்புமிகு உறுப்பினர் எழுப்பிய வினாவிற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அளித்த பதில் திருப்தியான பதிலாக எனக்குத் தெரியவில்லை. இன்று உற்பத்தி பெருக வேண்டும், அதிகாமன அளவில் எல்லாவற்றையும் உற்பத்திச் செய்ய வேண்டுமென்று சொல்கிறோம். ஆகவே, அந்தப் பகுதிக்கென ஒரு சிறப்புத் திட்டம் எடுத்து-மாண்புமிகு அமைச்சர் சிரமத்தைப் பார்க்காமல் நேரடியாக அந்தப் பகுதிகளுக்குச் சென்று-பார்வையிட்டு-அங்கேயுள்ள சமுதாயக் கிணறுகளை ஆழப்படுத்துதல், மற்ற வகைகளில் தண்ணீர் தருதல் போன்ற வகையில் அந்த மரங்களைப் பாதுகாக்கவேண்டும், அல்லது அதற்கு அரசு வேறு ஏதாவது முயற்சி எடுத்து உதவ வேண்டும். இது குறித்து என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : இந்த வினாவில் ஆராய்ச்சி பற்றி பதில் சொனனேன். ஆனால் அங்கே மரங்கள் காய்ந்து விட்டன என்பதைப் பற்றிய குறிப்பு என்னிடத்தில் தற்போது இல்லை. ஆனால் என்ன நடவடிக்கை எடுக்க முடியும் என்பதை அந்தத் துறை அமைச்சரிடத்திலே, அந்தத் துறையிலே கேட்டு செய்ய முடியும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, என்னுடைய துணைக் கேள்விக்கு பதில் அளிக்கும்போது, நீலகிரி மாவட்டத்தில் தற்போது பாக்கு உற்பத்தியாகவில்லை, அங்கே அதை அதிகப்படுத்தும் உத்தேசமும் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தகவலை அமைச்சருக்கு யார் கொடுத்தது. தவறான தகவல் யார் அனுப்பியது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : யார் கொடுத்தது என்பது எல்லாம் கேட்கக் கூடாது. வேறு ஏதாவது முறையில் கேள்வி போடுங்கள். யார் கொடுத்தது என்று கேட்பது முறையல்ல.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அது தவறான தகவல். ஆகவே சம்பந்தப்பட்டத் துறை................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் : 395, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்.





*Wages for agricultural labourers in Thanjavur district.*

* 395 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(a) whether any settlement was effected by the Collector, Thanjavur on 22nd July 1974 between landlords and Agriculture labourers regarding minimum wage for labourers; and

(b) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) ஆம்.

(இ) அவை முன் விவர அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பாயிண்ட் ஆப் ஆர்டர் இப்போது இல்லை. கேள்வி நேரத்தில் பாயிண்ட் ஆப் ஆர்டர் எழுப்பக்கூடாது.

திரு. என். கே. பழனிசாமி : தலைவரவர்களே, அவை முன் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில் கிழக்குத் தஞ்சை பகுதியில் ஒரு ஏக்கருக்கு 6 லிட்டர் நெல்லும், ரூ. 2.75 ஆண்களுக்கு கூலி என்றும், பெண்களுக்கு 5 லிட்டர் நெல்லும் ரூ. 1.50-ம் கொடுக்க வேண்டுமென்று இருக்கிறது. இது கிழக்குத் தஞ்சைக்கு மட்டும் தானா, அல்லது மற்ற மேல் தஞ்சைக்கும் இது பொருந்துமா ? காரணம் மாநிலம் பூராவும் போட்டிருக்கும் கமிட்டி, இதைவிட குறைவாக பரிந்துரை செய்து இருக்கிறதே, இப்போது ஏறியிருக்கிற விலையேற்றத்தைக் கணக்கில் கொண்டு, இம்மாதிரியான கமிட்டிப் போட்டு, ஆங்காங்கு உண்மையான கூலி என்ன என்பதை ஆராய்ந்து, அதை அளிக்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

[முற்பகல் 9–30]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவர் அவர்களே, கிழக்கு தஞ்சாவூரில் அறிவிக்கப்பட்ட ஊதிய உடன்பாடு இணக்கம் பேச்சு வார்த்தை மூலமும், உடன்பாடு மூலமும், பின்பற்றப்படுவதால் கிழக்குத் தஞ்சையில் இருந்தது போல மேற்கு மாவட்டத்தில் இந்த சட்டம் நடப்பது அவசியம் இல்லை. 1973ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 18 ஆம் தேதி அன்றைக்கு 6 லிட்டர் நெல், ஒரு ரூபாய் 75 காசு அல்லது ரொக்கமாக 4 ரூபாய் என்று இருந்ததை மாற்றி நாள் ஒன்றுக்கு 6 லிட்டர் நெல் ரூ. 2.75 அல்லது ரொக்கமாக 6 ரூபாய் என்றும் மகளிருக்கு நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் 75 காசு அல்லது ரொக்கமாக ரூ. 2.50 என்று இருந்ததை நாள் ஒன்றுக்கு 5 லிட்டர் 1.50 ரூபாய் அல்லது ரொக்கமாக 4 ரூபாய் என்றும் மாற்றப்பட்டுள்ளது. மேலும் இதை மாற்ற தற்சமயம் உத்தேசம் இல்லை என்று இது பற்றி பரிந்துரை செய்தக் கார்த்திகேயன் கமிட்டி தெரிவித்துள்ளது.

---

455-ம் பக்கததில் II இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 20

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற நிலையில் நெல்லும் பணமாக கொடுக்க வேண்டும், பணமாகக் கொடுக்கக் கூடாது என்ற முடிவு எடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை. பரிந்துரை செய்த கார்த்திகேயன் குழு அளித்த அறிக்கையின் மீது மாவட்ட தலைவர் முயற்சி செய்து ஒப்பந்தம் அமுலாக்கப் பட்டு வருகிறது.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது, ஏற்பட்டுள்ள கடுமையான வறட்சி காரணமாக வாழ வழியற்ற ராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் கூலி வேலை செய்ய தஞ்சை மாவட்டம் சென்றால் அங்குள்ள கூலி ஆட்கள் அவர்களை விரட்டி வெளியேற்றுவதாகத் தகவல் வருகிறது..................

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதிலே இந்த கேள்வி வராது.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, இப்போது ஏற்பட்டு இருக்கின்ற உடன்பாடு படி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஊதியத்தில் வித்யாசம் ஏற்படுகிறது. ஒரே வேலைக்கு ஒரே ஊதியம் என்ற அடிப்படையில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வேறுபாடு இருக்கக்கூடாது என்ற அரசியல் சட்ட அடிப்படையை கருத்தில் கொண்டு இந்த அரசாங்கம் இந்த வித்தியாசத்தை மாற்றி ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஒரே கூலி கொடுக்க ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி ஒன்றும் இல்லை.

திரு. என். கே. பழனிசாமி: இந்த கார்த்திகேயன் கமிட்டி ஒரு பரிசீலனை செய்து அங்கு ஏருக்கு ரூ. 5½ நிர்ணயம் செய்து இருக்கிறது. வேறு பக்கத்திலே 25 ரூபாய் என்று இருக்கிறது. இந்த பாகுபாட்டை போக்குகின்ற நிலையில் புனர் பரிசீலனை செய்து இதற்கு நிரந்தரமான ஒரு கூலி நிர்ணயிக்க ஏற்பாடு செய்ய முடியுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது கூலி உயர்வு கொடுக்கப்பட்டு இருக்குமானால் அதை மறுபடியும் குறைப்பதற்கு இல்லை என்று இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பொதுவாக, வேளாண்மைத் துறையைப் பொறுத்த வரையில் ரூ. 5¼ ஏருக்கு ஒரு இடத்திலும், சில இடங்களில் ரூ. 25 இருக்கின்றது என்று சொல்கிறார்கள். ஊருக்கு ஊர், வட்டத்திற்கு வட்டம், மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. கே. எ. வகாப்: தலைவர் அவர்களே, இந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு அறுவடைக்கு மட்டும் இப்படி நெல்லாக கொடுக்கப் படுகிறதா, அல்லது வேறு புஞ்சை பயிர் வைத்தால் நெல்லை கூலியாக கொடுக்க வேண்டுமென்று சொல்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



1975 மார்ச் 20]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, அப்படி ஒன்றும் இல்லை.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இதைச் சொல்லும்போது ஆண்களுக்கும் பெண்களுக்கும் சமமாகக் கூலி தர இயலாது என்றார் வித்யாசத்தைக் குறைக்க அமைச்சர் நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: உரிய நடவடிக்கை எடுத்த பிறகுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கின்றது.

திரு. ஆ. கு. சுப்பையா: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் அதிகமாகக் கூலி கொடுக்கப்பட்டு வருகிறது. மற்ற மாவட்டங்களில் மிக குறைவாக இருக்கின்றது. தஞ்சை மாவட்டத்திற்கு மற்ற மாவட்டங்களி லிருந்து அதிகமாக தொழிலாளர்கள் அதிக ஊதியம் கிடைக்கிற காரணத்தால் அதிகமாக வருகிறார்கள். அதனால் வேலை பாதிப்பு ஏற்படுகிறது. மற்ற மாவட்டங்களில் தொழிலாளர்களுக்கு அதே போல அதிகமாக ஊதியம் கிடைப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, முன்பே குறிப்பிட்டேன். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வித்யாசம் இருக்கும் வட்டத்திற்கு வட்டம் வித்யாசம் இருக்கும். எனவே தஞ்சை கூலியை மற்ற இடங்களுக்கு விஸ்தரிப்பது இயலாத காரியம்.

திரு. கு. காமாட்சி: தலைவர் அவர்களே, இந்தக் கூலி நிர்ணயம் வேலை அடிப்படையிலா அல்லது இன அடிப்படையிலா ? அப்படி பெண்கள் ஆண்களுடைய வேலையான உழுதல், பறம்பு அடித்தல் போன்ற வேலைகள் செய்ய முன் வருவார்களானால் அவர்களுக்கு இந்த கூலி அடிப்படையில் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே வேலை அடிப்படையில் தவிர வேறு எந்த அடிப்படையிலும் இல்லை.

திரு. க. பழனிவேலன்: தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் தாராளமாக தண்ணீர் கிடைக்கிற காரணத்தால் அங்கே நஞ்சை சாகுபடி செய்ய வாய்ப்பு இருக்கிறது. தண்ணீர் இல்லாததால் வெளி மாவட்டங்களில் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்கள் அங்கு சென்று வேலை செய்து கொண்டு இருக்கிறார்கள். வேலை செய்து கூலி நெல் எடுத்துக் கொண்டு வர வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. அதற்கு வகை செய்யப்படுமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: அப்படி கூலி வேலை செய்து அறுவடை செய்த நெல்லைக் கொண்டு வருகிறார்கள் என்று அங்கே யாரிடம் வேலை செய்கிறார்களோ அவர்களிடம் கையெழுத்து

பெற்றுக் கொண்டு வருவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றது. சில தவறுகள் நேர்ந்தபடியால் இப்போது நிறுத்தப்பட்டு இருக்கின்றது.

திரு. அ. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, நம்முடைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள், வேளாண்மைத் துறையிலே கூலிக்கு இருக்கின்றவர்கள் கூலியில் மாவட்டத்திற்கு மாவட்டம் வித்தியாசம் இருப்பதாகத் தெரிவித்தார்கள். தமிழ்நாட்டிலே எல்லா பகுதிகளிலும் ஒரே கூலி நிர்ணயித்து இந்த அரசு கூலி உயர்வு கொண்டு வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இயலாது என்பதை ஏற்கனவே தெரிவித்துவிட்டேன்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, பெரிய இண்டஸ்ட்ரியல் நகரங்களில் பக்கத்திலே இருக்கின்ற பூமிகளுக்கு விவசாயம் செய்யத் தொழிலாளர்கள் கிடைப்பது இல்லை. காரணம், தொழிற்சாலைகளில் அதிக வருமானம் கிடைப்பதால். கோயமுத்தூர், ஈரோடு போன்ற நகரங்களுக்குப் பக்கத்திலே இருக்கின்ற இடங்களில் விவசாயத்திற்கு ஆளே கிடைப்பது இல்லை. இந்த இடங்களில் விவசாயத்தைப் பெருக்குவதற்கு ஏதாவது வழி வகை அரசாங்கம் செய்யுமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தற்சமயம் அப்படி ஒன்றும் இல்லை.

அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள இனாம் நிலங்கள்

* 396 வினா—திரு. ச. சங்குமுத்து தேவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) அம்பாசமுத்திரம் தாலுக்கா இனாம் சிவந்திபுரம், இனாம் சிவந்தி ஈசான மடம் ஆகிய கிராமங்களில் உள்ள இனாம் நிலம் எவ்வளவு?

(இ) அவற்றின் உடைமையாளர்கள் யார் யார்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்:

(அ) இனாம் சிவந்திபுரம் எஸ்டேட்—1.66 சதுர மைல்.
இனாம் ஈசான மடம் எஸ்டேட்—0.16 சதுர மைல்.

(இ) திருவாடுதுறை மடத்தின் ஆதினகர்த்தர்.

திரு. கோவை செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இனாம் நிலங்கள் எல்லாம் விவசாயிகளுக்குப் பட்டா செய்து கொடுக்கப்படும் என்று முதலமைச்சர் வாக்குறுதி தந்தார்கள். இது சம்பந்தமாக சட்டம் தற்போது நிறைவேற்றப்பட்டு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.



மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: இப்போது பல இடங்களில் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சில இடங்களில் கோர்ட்டுக்குச் சென்று, அவர்கள் தடை உத்தரவு வாங்கி இருக்கின்ற காரணத்தால் தடையாக உள்ள பகுதிகளில் அமுலாக்க முடியாமல் இருக்கின்றது.

பெரம்பலூர்—மானாமதுரை சாலை.

* 397 வினா—திரு. கோ. இளங்கோவன்: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டத்தில், தஞ்சை வட்டத்தில், மேகளத்தூர் அருகே வெண்ணாற்றில் அமைந்துள்ள புதிய பாலத்தினை தஞ்சாவூர் சாலை (பெரம்பலூர்-மானாமதுரை) சாலையுடன் இணைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: ஆம்.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, வல்லம் திருகாட்டுப்பள்ளி இணைப்பது போல பாலத்தில் வடக்கு பகுதி பூதலூர் திருக்காட்டுப்பள்ளியை இணைக்கும் திட்டம் 1976ல் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 1975-76-லே இந்த திட்டம் செயல்படுத்தப்பட இருக்கிறது. இதனால் கச்சமங்கலம், மேகளத்தூர் ஊர்களை இந்த திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றப்படுகிறது.

திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, தெற்கு பகுதி இணைத்து வடக்கு பகுதி இணைக்கிற திட்டம் கொடுத்தால் அதை ஏற்றுக் கொள்ள அரசு முன் வருமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவர் அவர்களே, இப்போது இருக்கின்ற திட்டம் சேங்க்ஷன் செய்யப்பட்டதாகும். மேற்கொண்டு திட்டம் பற்றி பிறகு பரிசீலிக்கலாம்.

முத்துப்பேட்டையிலுள்ள தச்சுப்பட்டறை.

* 398 வினா—திரு. மணலி சி. கந்தசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

[1975 மார்ச் 20

(அ) முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட தச்சுப்பட்டறையில் சுமார் ரூ. 20,000 மதிப்புள்ள மரச்சாமான்களும், மரங்களும் காணாமல் போயிருப்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், இது குறித்து அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) ஆம்.

(இ) பொருள்கள் குறைவுக்கு முழுப் பொறுப்பான தச்சுப்பட்டறை போதகர் திரு. ஜி. ஜான்சன் 1974ஆம் ஆண்டு ஜூலை மாதம் 31ம் நாள் முதல் பணியிலிருந்து தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளார். அவர் மீது அதன் தொடர்பாக குற்றக் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. குறைவு ஏற்பட்ட காலத்தில் பணிபுரிந்த தொழில் விரிவாக்க அலுவலர் திரு. கே. கண்ணையனுக்கும் குற்றக் குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கையின் முடிவில் அவர்களிடமிருந்து குறையாயுள்ள பொருட்களின் மதிப்பீட்டுத் தொகையை வசூலிப்பது பற்றியும் ஆணை பிறப்பிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : ஒவ்வொரு நபரிடமிருந்து எவ்வளவு தொகை வசூலிப்பது என்று வரையறை செய்யப்பட்டு இருக்கின்றது. அவர்கள் மீது வழக்கு தொடரப்பட்டு இருக்கின்றது. எந்த நிலையில் இருக்கின்றது என்பதை அமைச்சர் தரப்பிலிருந்து தெரிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இரண்டு பேர்களுக்கும் குற்றக்குறிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அவர்களிடமிருந்து ரிப்ளை வரவில்லை. வந்த பிறகு கிரிமினல் குற்றமா, சிவில் குற்றமா என்று பரிசீலிக்கப்படும். இதுவரையில் 19,338 குறைவு ஏற்பட்டு இருக்கின்றது. மேலே தணிக்கை செய்யப்பட்ட பிறகு எவ்வளவு தொகை, யாரால் என்று சொல்ல முடியும்.

திரு. கே. ஏ. வகாப் : பொதுவாக ஒன்றியங்களிலே இயங்குகின்ற இப்படிப்பட்ட தச்சுப் பட்டறைகளில் மரங்களை வாங்குவதில் சில முறைகேடுகள் இருப்பதால் நான் இந்த நிலைமைகள் ஏற்படுகின்றன. பொதுவான கொள்கையை ஏற்படுத்தி இன்னார்தான் மரத்தை வாங்க வேண்டுமென்ற அடிப்படையை ஏற்படுத்தினால் இப்படிப்பட்ட முறைகேடுகளைத் தவிர்க்க முடியும். அரசு அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இதுவரை அப்படிப்பட்ட யோசனை சொல்லப்படவில்லை. இதுபற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. கு. அ. பொம்மன் : தச்சுப் பட்டறைகளுக்கு மரங்களை வாங்கும்போது வனத் துறையிலிருந்து வாங்கப்படுகிறதா அல்லது தனியார் துறையில் இன்டென்ட் செய்து வாங்கப்படுகிறதா ?



1975 மார்ச் 20]

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : அப்போதைக்கப்போது சவுகரியத்திற்கேற்றபடி செய்யப்படுகிறது. இன்டென்ட் மூலமும் வாங்குகிறார்கள், வன இலாகாவில் ஏலமும் எடுக்கிறார்கள்.

*Housing Schemes.*

*299 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether it is a fact that the Tamil Nadu Housing Board has prepared housing schemes for 1973-74 for each district in the State ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அவை முன் ஓர் அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

திரு. என். கே. பழனிசாமி : மொத்தம் எத்தனை வருஷங்களில் இந்தத் திட்டம் பூர்த்தியாகும் ? மத்திய சர்க்கார் பங்கு என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : இப்போது இதற்கு மத்திய சர்க்கார் பங்கு ஒன்றும் அதிகமாக இல்லை. தொகை ஏராளமாகச் செலவாகிறது. பல நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. 1973-74ம் ஆண்டில் அரசு 287.89 லட்சம் ரூபாய் அளித்திருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் ஒரு கோடி ரூபாய் டிபென்சர் மூலமாக பொதுமக்களிடத்தில் இருந்து பெற்றிருக்கிறோம். ஒரு கோடி 10 லட்சம் வரை அதிகமாக வசூலாயிருக்கிறது. அதையும் வைத்துக் கொண்டு இந்த வேலைகளைத் தொடர்ந்து செய்து வருகிறோம். சில வேலைகளுக்கு நில ஆர்ஜிதம் நடந்து கொண்டிருக்கிறது.

திரு. அ. ஆறுமுகம் : எடப்பாடி தொகுதி நெசவாளர்கள் மிகுந்த தொகுதி. அங்கு இந்தத் திட்டத்தை ஏற்படுத்த வேண்டுமென்று பல முறை கேட்டும் அதற்கான மனு அனுப்பப்பட்டும் நாளது வரை எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு துரிதமாக ஒரு திட்டத்தை நிறைவேற்றி அந்த நெசவாளர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நெசவாளர்களுக்காகப் பல இடங்களில் வீடு கட்டிக் கொடுக்கிறார்கள். ஒவ்வொரு பகுதியாக வீடுகள் கட்டுவது நடைபெற்றுக்கொண்டு வருகிறது. திருச்சி, மதுரை, சேலம் போன்ற பெருநகரங்களில் நெசவாளர்களுக்கான நிலங்கள் ஆர்ஜிதமாகிக் கொண்டிருக்கின்றன. அவையெல்லாம் முடிந்தவுடன் எடப்பாடி எடுத்துக் கொள்ளப்படும்.

---

@456-ம் பக்கங்களில் இணைப்பு III-ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1975 மார்ச் 20

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : விவர அறிக்கையின் 21ம் பக்கத்தில் லோ இன்கம் குரூப் ஹவுஸஸ், கோணம், நாகர்கோயிலில் 64 வீடுகள் என்றும், காஸ்ட் 8.60 லட்சம் என்று விவரங்கள் தரப்பட்டிருக்கின்றன. அதிலே எத்தனை வீடுகள் முடிந்திருக்கின்றன ? எத்தனை வீடுகளில் ஆட்கள் ஆக்குபை செய்திருக்கிறார்கள் ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அந்த விவரக் குறிப்புகள் தற்போது இல்லை. இந்த வீடுகளைத் தற்போது கட்டிக் கொண்டிருக்கிறார்கள். இந்தக் காலனிக்குச் சமீபத்தில் போயிருந்தேன். வேலைகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறன.

திரு. ஜே. ஜேம்ஸ் : எல்லா மாவட்டங்களுக்கும் நிறைய ஐடம்ஸ் இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்திற்கு இதுவரை ஒரே ஒரு திட்டந்தான் காணப்படுகின்றது. இவ்வளவு குறைவாக அந்த மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்டிருக்கக் காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கன்னியாகுமரி மாவட்டம் கடைசியில் இருப்பதால் புறக்கணிக்கப்பட்டிருப்பதாகக் கருதத் தேவையில்லை. அங்கு நிலத்தின் விலை அதிகமாக இருக்கிறது. மதுரையில் தனியாக ஒரு யூனிட் போட்டு தென்பிராந்தியங்கள்—திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற மாவட்டங்களில் அதிகமான வீடுகள் கட்ட வேண்டுமென்று நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. கடந்த இரண்டு, மூன்று ஆண்டு காலமாக திருநெல்வேலி மாவட்டத்தில் அதிகமான வேலைகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. கன்னியாகுமரி மாவட்டத்திற்கும் அது பரவும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

* 400 வினா—திரு. கே. ரங்கநாதன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1973-74ம் ஆண்டில், வீட்டுவசதி வாரியம் கோவை நகரில் எந்தெந்த இடங்களில் புதிய குடியிருப்புகளை உருவாக்கியுள்ளது ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1973-74ம் ஆண்டில் வீட்டு வசதி வாரியம் கோவை நகரில் பீளமேடு, சிராநாயக்கன்பாளையம், கோவை புதூர், ரேஸ்கோர்ஸ் கௌண்டம் பாளையம், தெற்கு பேரூர் சாலை, வடக்கு பேரூர் சாலை, ரெட்பீல்டு, ஒண்டிபுதூர், ஆர். எஸ். புரம், டாட்டாபாத், சாயிபாபா காலனி, பிருந்தாவன் நகர் காலனி ஆகிய இடங்களில் புதிய குடியிருப்புக்களை உருவாக்கியுள்ளது.

திரு. கோவை செழியன் : ஹவுசிங் போர்டு இடம் ஒதுக்குகிறார்கள், விலை நிர்ணயம் செய்கிறார்கள். அந்த நிலச் சொந்தக்காரர்கள் கோர்ட்டுக்குப் போய் அதிக விலை கொடுக்கவேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டால் ஹவுசிங் போர்டு மூலம் நிலம் ஒதுக்கப்பட்டவர்கள் கொடுக்க வேண்டுமென்று அக்ரிமெண்டில் இருக்கிறது. ஏற்கனவே கட்டிய தொகைக்குக் கூட டிபார்ட்மெண்டில் ஒழுங்காகக் கணக்கு வைக்காமல் திருப்பித் திருப்பிக் கேட்கிறார்கள். நானே நிலைமையைச் சொல்லி 50 முறைக்கு மேல் மந்திரியிடம் சொல்லிச் சொல்லி சலித்துவிட்டேன்.



1975 மார்ச் 20]

மாண்புமிகு திரு. க. இராசாராம் : கனம் உறுப்பினரைப் பொறுத்த வரை சிறு பிரச்சினை. வீட்டு வசதி வாரியத்திற்கு எவ்வளவு கட்ட வேண்டுமோ அதை முழுவதும் கட்டாமல் விட்டு விட்டார்கள். அதற்கு வட்டிபோட வேண்டுமென்று முறையில் அதையெல்லாம் சேர்த்துக் கட்ட வேண்டிய நிலை. வீட்டு வசதி வாரியத்தைப் பொறுத்தவரை கணக்கு எல்லாம் அனுப்பச் சொல்லியிருக்கிறேன். கணக்கைப் பார்த்து முழுத் தொகையையும் செலுத்தி விட்டால் நிலம் உங்களுக்குச் சொந்தமாகிவிடும். எந்தப் பிரச்சினையும் அதிலே இல்லை.

திரு. நா. வீராசாமி : விவர அறிக்கையில், அறிஞர் அண்ணா நகரில் 314 வீடுகள் மிடில் இன்கம் குரூப்புக்காகக் கட்டித்தரப்பட இருக்கிறது என்று தரப்பட்டிருக்கிறது. அப்படிக் கட்டித்தரப்படுகிற வீடுகளுக்கு ஹவுசிங் போர்டு கொடுத்திருக்கிற 1—15 என்று தந்திருக்கிற பிளானில்தான் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அந்த பிளானில்தான் கட்டிக் கொடுக்க முடியும் என்று வற்புறுத்துவது தவறு. தங்களுடைய விருப்பத்திற்கேற்றவாறு கட்டுவதற்கு....................................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இதையெல்லாம் மானியத்தில் பேசுங்கள். இது சம்மந்தமாகக் கேள்வியை மட்டும் போடுங்கள்.

திரு. நா. வீராசாமி : அந்த வீடுகளைக் கட்டிக் கொடுக்கும்போது ஹவுசிங் போர்டு பிளான் அல்லாமல் அவரவர்கள் விருப்பத்தின்படி கட்டித்தர அரசு ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நிலத்தை வாங்கி வீடு கட்டிக் கொள்பவர்கள் தங்கள் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்றபடி கட்டிக் கொள்ளலாம், எங்களைக் கட்டித் தரவேண்டுமென்று சொல்லுகிறவர்கள் கொடுக்கப்பட்டிருக்கும் பிளானில் எதையாவது ஒன்றின்படிதான் கட்ட முடியும். 20,000 வீடுகள், 30,000 வீடுகள் என்று மொத்தமாகக் கட்டும்பொழுது ஒவ்வொருவர் விருப்பப்படியும் கட்ட வேண்டுமென்றால்—ஒருவர் முற்றம் வேண்டுமென்பார்; ஒருவர் போர்டிகோ வேண்டுமென்பார்—நடைமுறையில் முடியாது.

திரு. எம். ஏ. லத்தீப் : வீட்டு வசதி வாரியத்தின் மூலமாக வீடுகள் கட்டுவதற்கு சில இடங்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள். எந்த அடிப்படையில் அது தேர்ந்தெடுக்கப்படுகிறது? இரண்டாந்தர முனிசிபாலிட்டி பகுதிகளில்கூட, கிருஷ்ணகிரி முனிசிபாலிடி ஏரியாவைக்கூடத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். ஆனால் வாணியம்பாடியில், பெரு தொழிற்சாலை நகர், ஒரு வீடு கூடக் கட்டப்படவில்லை. அதுபற்றிக் கவனம் செலுத்தப்படாததற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : வேலூரில் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன; திருப்பத்தூரில் கட்டப்படுகின்றன. நடுவில் இருக்கும் வாணியம்பாடி லத்தீப் காரணமாக விடப்பட்டிருக்கிறதோ என்னவோ? நிலங்களை ஆர்ஜிதம் செய்யும்போது நகராட்சிகளும் மாநகராட்சிகளும்

நகரத்திற்கு வெளிப்புறத்தில் இருக்கும் குறைந்த விலை உள்ள நிலங்களை வாங்கிக் கொடுக்க வேண்டும். அந்த வகையில் வாணியம்பாடியில் நிலம் இருக்குமானால், தேவை இருக்குமானால் கட்டிக் கொடுக்கலாம். ஆனால் வாணியம்பாடியில் இருக்கக்கூடிய அதிபர்கள் சொந்தத்தில் பெரிய பெரிய வீடுகளை கட்டிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, தேவை இல்லை என்ற நிலைமை இருக்கலாம். தேவை என்று சொன்னால் வீடுகளைக் கட்டி கொடுக்கத் தயாராக வாரியம் இருக்கிறது.

திரு. சு. துரைசாமி : கொடுக்கப்பட்டிருக்கும் விவர அறிக்கையில் 162, 163 வரிசையில் திருப்பூர், வேலம்பாளையத்தில் 25.59 லட்சம் செலவில் வீடுகள் கட்டத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பது 1973–74-ம் ஆண்டு. இரண்டு ஆண்டு காலம் முடிந்து விட்டது. வேலை இதுவரை துவங்கப்படவில்லை. விரைவாக வேலைகளைத் துவங்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : விரைவாக வேலைகள் நடைபெற நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கு. அ. பொம்மன் : அமைச்சர் கொடுத்த விவர அறிக்கையில் நீலகிரி ஜில்லாவில் ஆறு காட்டேஜ் கட்டப்படுவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. நீலகிரி டூரிஸ்ட் சென்டர், அங்கு இவ்வளவு குறைவாக இருப்பதற்குக் காரணம் என்ன?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : நீலகிரி மாவட்டத்தில் இதுவரை வீடுகளே கட்டப்படாமல் இருந்தது. இப்போது என். ஜி. ஓக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. சுற்றுலா வாரியத்திற்காக உல்லாசக் குடில்கள் கட்டப்பட்டிருக்கின்றன. வீடுகள் கட்டாமல் நீலகிரி மாவட்டதைப் புறக்கணித்து விடவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : சார், அமைச்சரவர்கள் சொல்லும்போது மாநிலத்திற்கு மத்திய அரசு பங்கு குறைவாகத்தான் தருகிறது என்று சொன்னார்கள். இப்போது நாம் ஒதுக்கக்கூடிய பணம் பூராவையும் செலவழித்து விடுகிறோம். உத்தர பிரதேசம், மத்திய பிரதேசம் போன்ற மாநிலங்களுக்கு ஒதுக்கப்படுகின்ற பணம் பூராவும் செலவழிக்கப்படவில்லை. ஆகையால் அப்படி செலவழிக்கப்படாமல் இருக்கிற பணத்தை முழுவதையும் செலவழித்துவிடுகிற நம்முடைய மாநிலத்திற்கு கொடுக்கும்படி இந்த சர்க்கார் கேட்டிருக்கிறதா ? அப்படியானால் அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மத்திய அரசை நாம் பலமுறை கேட்டிருக்கிறோம். இருந்தபோதிலும் நம்முடைய கோரிக்கைக்கு முன்னுரிமை தரப்படவில்லை. ஆகையால் அந்த உதவியை அவர்கள் நமக்கு செய்யவில்லை. ரிசர்வ் பாங்க் மூலம் ஒரு உத்தரவு போட்டு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் உதவி செய்ய வேண்டுமென்று கேட்டபோது, ரிசர்வ் பாங்க் தன்னுடைய பதிலில் அப்படிப்பட்ட





உதவி எதுவும் செய்ய இயலாது என்று தெரிவித்துவிட்டது. அதற்குப் பிறகு "டிபெஞ்சர்" மூலம்—மக்களிடமிருந்து கடன் பெற்று வீடுகளைக் கட்டிக் கொள்கிறோம் என்று கேட்டோம். அதற்கு ஒரு கோடி ரூபாய்க்கு அனுமதி அளித்தார்கள். ஒரு கோடியே பத்து லட்சம் ரூபாய் அந்த வகையில் வந்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு காரியங்கள் செய்து கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். முருகையன் : தலைவரவர்களே, திருவண்ணாமலையில் நான்கு வகையான வீடுகள் கட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அமைச்சரவர்கள் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதற்கான நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறதா ? வேலை தொடங்கப் பட்டிருக்கிறதா ? இதுவரை எத்தனை வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் திருவண்ணாமலையில் இருப்பதால் அடிக்கடி அந்த ஊரில் வீடுகள் கட்டுவதுபற்றி வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். அதற்கான ஏற்பாடுகளை வேகமாக செய்து கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, கோவை மேற்குத் தொகுதியில் பொன்னையராஜபாளையம் என்ற கிராமத்தில் ஒரு தனியாருக்குச் சொந்தமான நிலத்தில் ஏழை மக்கள் சுமார் 100 குடிசைகள் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை அகற்றுவதற்கு இப்போது ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். அதைப்போல அருணாசலம் ரோடு பக்கத்தில் 100 குடிசைகள் போட்டிருக்கிறார்கள். அதையும் அகற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த குடிசைவாழ் மக்களுக்கு எல்லாம் வேறு வீடுகள் கட்டித் தருவதற்கும் அதுவரையில் அவர்களை அப்புறப்படுத்தாமல் இருப்பதற்கும் அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, தற்போது அதுபற்றித் தகவல் இல்லை ; தனிக் கேள்வி போடவும்.

THIRU K. M. SUBRAMANIAM : Sir, is it a fact that 37½per cent grant given before 1967 by the Central Government is included in the Block Grant now given to the Government of Tamil Nadu for the Housing Scheme ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1967-ல் எவ்வளவு பணம் வந்தது என்ற தகவல் இல்லை. தனிக் கேள்வி போடவும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த விபர அறிக்கையில் மத்தியதர வருவாய் உள்ளவர்களுக்கு அதிகமாக வீடு கட்டித் தரப்படவில்லை என்று தெரிகிறது. குறிப்பாக என்னுடைய தொகுதியில் மத்தியதர பிரிவினருக்கு அதிகமாக வீடுகள் கட்டித்தர

வேண்டுமென்று நான் கேட்டேன். அதற்கு நிதி போதுமான அளவுக்கு இல்லை என்று தெரிவித்தார்கள். இவ்வாண்டிலாவது அதற்கு அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? மத்தியதர வகுப்பினர் என்று சொல்லும் போது என்னைப்போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள்கூட வீடு இல்லாமல் இருக்கிறார்கள். இந்தக் குறையைப் போக்க வருகிற 8 மாதங்களுக்குள் வீடு கட்டுவதற்கு விசேஷ திட்டம் ஏதாவது தயாரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மத்தியதர வகுப்பினருக்கு முடிந்த அளவு வீடுகளைக் கட்டிக் கொடுக்கிறோம். குறைந்த வருவாய் காரர்களுக்கு நிறைய வீடுகள் கட்டவேண்டுமென்று வீட்டு வசதி வாரியம் முடிவு செய்திருக்கிறது. நடுத்தர வகுப்பினருக்கு கட்டுவதாக இருந்தாலும் பள்ளிப்பட்டியில் இருப்பதைப் போன்ற வீடுகளை கட்ட இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குப்பல் கே. எஸ். இராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, நெசவாளர்களுக்கு வீடு கட்டும் திட்டம் பற்றி சொன்னார்கள். அவர்கள் 10 சதவிகிதம் அட்வான்ஸ் கட்டினால்தான் வீடு கட்டிக் கொடுக்க முடியும் என்று சொன்னார்கள். இந்த 10 சதவிகிதம் அட்வான்ஸ் கட்டுவதில் அவர்களுக்கு பல கஷ்டங்கள் இருக்கின்றன. ஆகவே, அதை 5 சதவிகிதம் என்று குறைக்க அரசு முற்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அதற்கு தகுந்த வட்டி விகிதத்தில் பணம் வாங்கி காரியங்கள் செய்கிறோம். நெசவாளர்களுக்கு 10,000, 8,000, 7,000, ரூபாயில் வீடுகள் கட்ட பல்வேறு திட்டங்கள் போடப்பட்டிருக்கின்றன. அவர்களிடம் வட்டி 6½ சதவிகிதம் வசூல் செய்கிறோம். நெசவாளர்களுக்கு என்று தனித் திட்டங்கள் போட வேண்டியிருக்கிறது. ஆகவே, பத்தில் ஒரு பங்கு முன்பணமாகத் தருவதில் கஷ்டம் ஒன்றும் இருக்காது.

அப்படித் தந்தால் நிறைய வீடுகளைக் கட்டிக் கொடுக்கலாம். அதற்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நெசவாளர்களிடம் சொல்லி, தகுந்த ஏற்பாடுகளைச் செய்யலாம்.

திரு. கோ. செபமாலை: தலைவரவர்களே, விருத்தாசலம் தாலுகாவில் மங்கலூரில் கிராமத் திட்டத்தின்கீழ் அம்மாதிரியான வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றனவா? அதன் விபரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: கிராம வீடுகள் கட்டுகிற திட்டம் தனித் திட்டமாகும். அதற்கும் இதற்கும் சம்பந்தமில்லை.

திரு. கே. எ. வகாப்: தலைவரவர்களே, மாவட்டவாரியாக வீடு கட்டும் திட்டத்தை எடுத்துக் கொள்ளும்போது தாலுகா தலைநகரங்களில் வீடுகள் கட்டித் தரப்படாமல் இருக்கின்றன. தாலுகா தலைநகரங்களில் மிகுந்த ஜன நெருக்கடி இருக்கிறது. வீடு கட்ட முன் வந்தாலும் 100





வீடுகளுக்கு குறையாமல் கட்டுவதாக இருந்தால் ஹட்கோ மூலம் கட்ட சிபாரிசு செய்கிறோம் என்று சொல்கிறார்கள். ஒரே நேரத்தில் 100 வீடுகள் கட்டுவது என்பது சற்று கடினமாக இருக்கும். ஆகையால் 30, 40 வீடுகள் கட்டுவதாக இருந்தாலும் ஹட்கோ மூலம் தாலுகா தலைநகர்களில் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தற்போது அநேகமாக எல்லா தாலுகா தலைநகர்களிலும் வீடு கட்டும் வேலை தொடங்கியிருக்கிறது. ஹட்கோ கேட்கும் அளவுக்கு நிதி தர முடியுமா என்பது சந்தேகம். நிறைய வீடுகள் கட்ட வேண்டியிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்திருக்கிற இராணிப் பேட்டையில் தொழிலாளர்களுக்கு மட்டும் ஆயிரம் வீடுகள் கட்டப்பட இருக்கின்றன.

திரு. சி. ஆறுமுகம்: தலைவரவர்களே, இந்த வீட்டு வசதி வாரியம் மதுராந்தகம் தாலுகாவில் இதுவரையில் ஒரு வீடு கூட கட்டவில்லை. இனி யாவது அனுதாபத்தோடு இந்தத் திட்டத்தை அங்கும் நிறைவேற்றுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, மகிழ்ச்சியோடு அந்த காரியத்தை செய்வோம்; அனுதாபத்தோடு அல்ல.

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, on page 12 of the Answer Paper placed on the table of the House, a number of schemes have been mentioned but I do not find any scheme for Harur taluk and Hosur taluk. May I know whether there is any fresh proposal to implement the scheme in these two taluks?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, அரூர் தாலுகா வுக்கு ஊத்தங்கரையில் இடுகிறது. ஒசூரில் என்.ஜி.ஓ.-க்களுக்கு அடிக் கல் நாட்டப்பட்டது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும்; அவர்களும் அந்த விழாவிற்கு வந்திருக்கிறார்கள்.

திரு. என். மருதாசலம்: தலைவரவர்களே, கோவையில் வீட்டுவசதி வாரியம் வீடு கட்டிக் கொடுத்திருக்கிறது. ஒரு வீட்டுக்கு 10 ரூபாய் வாடகை வைத்திருக்கிறார்கள். வாடகைக்கு இருப்பவர்கள் அந்த வீட்டை உள் வாடகைக்கு விட்டு விட்டு, அவர்கள் வெளியிடங்களில் வீடு கட்டிக் கொண்டு குடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட வீடுகளை, வீடு இல்லாதவர்களுக்கு கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவரவர்களே, இரண்டொரு இடங்களில் இத்தகைய தவறுகள் நடக்கின்றன. அப்படிப்பட்டவர்களை நீக்கிவிட்டு, வீடு இல்லாதவர்களுக்கு கொடுக்க தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்த இடத்தில் இப்படிப்பட்ட தவறுகள் நடைபெற்றாலும் தக்க நடவடிக்கை எடுக்க அரசு தயாராக இருக்கிறது.

திரு. மா. வே. நாராயணசாமி : தலைவரவர்களே, இங்கே வைக்கப் பட்டிருக்கிற இந்த அறிக்கையில் அம்பத்தூர் நெய்பர்ஹூட் ஸ்கீம் சொல்லப்பட்டிருக்கிறது. அம்பத்தூர் மெட்ராஸ் டிஸ்டிரிக்டில் இல்லை. செங்கற்பட்டில் இருக்கிறது. இருந்தாலும் 6,289.17 ஏக்கர் அந்த ஸ்கீமில் வருகிறது என்று கூறப்பட்டிருக்கிறது. கொரட்டூர் நெய்பர்ஹூட் ஸ்கீமிலிருந்து இதுவரை இருக்கிற இடங்களை சேர்த்து சொல்கிறார்கள் என்று கருதுகிறேன். அப்படி இருந்தாலும் இவ்வளவு பெரிய பகுதி இருப்பதாக தெரியவில்லை. ஆகவே, அமைச்சரவர்கள் அதைப்பற்றி விளக்குவார்களா ?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : அண்ணா நகருக்கு பக்கத்தில் இருக்கிற இடத்திலிருந்து எல்லாவற்றையும் சேர்த்து கணக்கிட்டிருப்பார்கள் என்று கருதுகிறேன். தனிக் கேள்வி போட்டால் விபரம் சேகரித்து பதில் சொல்கிறேன்.

திரு. மு. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் புதிதாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அங்கே அரசு அதிகாரிகள் குடியிருப்பதற்கு வீடு இல்லை. அதைப் போன்று பின்தங்கிய மாவட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : தலைவரவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்திற்கு அதே முறையில் திட்டங்கள் வகுப்பதற்கு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அங்கு நில ஆர்ஜிதம் செய்த பிறகு வேலை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக் குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன, அடுத்து. . . . .

திரு. கோவை செழியன் : சார் பாயிண்ட் ஆப் ஆர்டர். பேரவைத் தலைவரவர்களே, இங்கே நம்முடைய அவையின் முன்னவர் அவர்கள் இருக்கிறார்கள். மிக முக்கியமான ஒரு. . . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பாயிண்ட் ஆப் ஆர்டரா ?

திரு. கோவை செழியன் : பாயிண்ட் ஆப் ஆர்டர் என்று கேட்டால் தானே அனுமதிக்கிறீர்கள். நான் கேட்பது பாயிண்ட் ஆப் கிளாரிபிகேஷன். நேற்று அமைச்சரவைக் கூட்டம் (காபினட் கூட்டம்) நடைபெற்றதாகவும் அதிலே சில முடிவுகளை எடுத்ததாகவும் தெரிகிறது.



நேற்று உயர்நீதி மன்ற பெஞ்சிலே மதுவுக்கு மட்டும் பணம் கூட்டுவதற்கான அரசாங்க உத்தரவை தள்ளியிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சம்பந்தமில்லாத பாயிண்ட் ஆப ஆர்டர்.

(முற்பகல் 10-00)

திரு. கோவை செழியன்: இது லீடோ அவர் — நான் ஏன் கேட்கக்கூடாது ? நீங்க என்ன இப்படி கவர்மெண்டுக்கு சப்போர்ட் பண்ணிக்கொண்டே இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். டாக்டர் ஹாண்டே — உங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டர் என்ன ?

டாக்டர் எச். வி. ஹாண்டே : Sir, on a point of order.

திரு. கோவை செழியன் : * * * * * * *. *

(திரு. கு. காமாட்சி, திரு. சி. ஆறுமுகம், திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் எழுந்திருந்தார்கள்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் எல்லோரும் உட்காருங்கள். பேரவைத தலைவர் அழைக்காமல் யார் எது பேசினாலும் அது அவை நிகழ்ச்சிக் குறிப்பில் ஏறாது. பத்திரிகைகள் அதை வெளியிடக்கூடாது.

## 2. நடைமுறைக் கேள்விகள்.

(அ) பேரவைத்தலைவர் மீது நம்பிக்கையின்மையைத் தெரிவிக்கும் தீர்மான அறிவிக்கை கொடுக்கப்பட்டிருக்கும்போது அவர் பேரவை நிகழ்ச்சிகளை நடத்தலாமா எனபது குறித்து.

DR. H. V. HANDE : Sir, I rise on a point of order. I would like to know from you whether it is in order for the Hon. Speaker to sit in the Chair and conduct the deliberations when there is a motion of No-Confidence against the Hon. Speaker. All the five parties concerned have given a notice of No-Confidence against the Hon. Speaker. When five parties combine together, there is no difficulty at all to bring in such a motion. If one party wants to bring in a motion of No-Confidence against the Hon. Speaker, it may not be able to muster the necessary strength. But here when five parties have brought the motion, it is

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.

easy to muster the strengh of 35 required for it. Of course I mean nothing personal against the Hon. Speaker. The convention of the House, especialy in the interests of parliamentary democracy is that when such a motion is there, it will be better for the Hon. Speaker to vacate his chair and ask the Deputy Speaker to preside and conduct the deliberations hereafter. You have fixed it to be taken on 2nd April. But on that day I find there is Police and Fire Services Demand also on the agenda. We would like to know whether the Hon. Speaker is going to convene the Business Advisory Committee and decide about the date................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் பாயிண்ட் ஆப் ஆர்டருக்கு வாருங்கள்.

DR. H. V. HANDE : My point of order is whether it is in order for and in the interest of setting up of healthy parliamentary conventions, the Hon. Speaker to preside over the deliberations of the House especially when five parties have given a motion of No-Confidence against him. Is it right in the true letter and spirit of parliamen tary democracy ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பொன்னப்ப நாடார் அவர்களை அவர்களுடைய கருத்து என்ன என்பதைச் சொல்ல அழைக்கிறேன்.

THIRU R. PONNAPPA NADAR : So far as our party is concerned we have also joined in the motion expressing want of confidence in the Hon. Speaker. Now, that motion has not yet been admitted. So, it is too early to say anything now. With this submission I want to conclude.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போதைய நிலைமையில் நான் தலைமை வகிக்கலாமா, கூடாதா என்பதைச் சொல்லுங்கள்.

THIRU R. PONNAPPA NADAR : That will have to be studied. We have not come to that stage. But suffice it for me to say that the motion has not yet been admitted and leave has not been asked for. If leave has been granted, such a question may arise for consideration. But now I do not think any point has arisen.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, சபாநாயகர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் என்று ஒரு தீர்மானத்தை சட்ட மன்ற உறுப்பினர்கள் கொடுத்தார்களானால் அது கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து இத்தனை நாட்கள் கழிந்த பின்னர்தான் எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்றே விதி



இருக்கிறது. அப்படி எடுத்துக்கொள்ளப்படுகிறபோதும் அந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்படலாம். தோற்கடிக்கப்படும். தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது சபாநாயகர் தலைமை வகிப்பது கூடாது என்று இருக்கிறதே தவிர — தீர்மானம் கொடுக்கப்பட்ட தேதியில் இருந்தே சபாநாயகர் தலைமை வகிக்கக்கூடாது என்ற பிரச்சினை உலகத்தில் எங்கும் எழுந்தது இல்லை. இங்கே சபாநாயகர் அவர்கள் தலைமை வகிப்பதை கேள்விக்குறியாக்கி எழுப்புவது சட்டசபை அங்கத்தினர்கள் இந்த அவையின் பெருமைக்கு ஏற்ற வகையில் எழுப்புவதாக ஆகாது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்கள் மீது நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொடுத்தால் — 14 நாள் நோட்டீசுக்குப் பிறகு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று அரசியல் அமைப்புச் சட்டமே கூறுகிறது.

Provided that no resolution for the purpose of clause (i.c.) shall be moved unless at least fourteen days' notice has been given of the intention to move the resolution.

என்று தெளிவாக இருக்கிறது. இந்த அவையில் பல தடவை கொடுக்கப்பட்ட போதும் பின்பற்றப்பட்ட மரபும் அதுதான். நம்பிக்கையில்லாத் தீர்மானம் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படும்வரை மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை தாங்க கூடாது என்று இல்லை. அதுவரையில் தலைமைதாங்க அரசியல் அமைப்புச் சட்டம் இடம் கொடுத்திருக்கிறது. நீங்கள் 14 நாள் நோட்டீஸ் வேண்டும் என்பதை வைத்து கணக்குப் பார்த்துத்தான் ஏப்ரல் 2 ஆம் நாள் தேதியை குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதில் சட்டப் பிரச்சினை எதுவும் இல்லை என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

THIRU M. A. LATHEEF : Sir, I endorse the view expressed by the Hon. Leader of the House. So far as our rules are concerned it is very specific. That 14 days notice is incorporated in the Constitution of India. Our rules also support that view. As soon as the motion is taken up for discussion. I mean the No-Confidence Motion, our convention is that the Hon. Speaker will not preisde. That is what our rules also say. Now when sno such thing has arisen, there could not be any objection for your presiding over the sittings of the House today.

திரு. ஆலடி அருணா : எதிர்கட்சிகளின் சார்பில் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தைக் கொடுத்திருக்கிறோம். இந்த நிலையில் அவைத் தலைவர் அவைக்கு தலைமை தாங்கலாமா என்ற பிரச்சினை இருக்கிறது. பொதுவாக நம்பிக்கை இல்லாத தீர்மானத்தை

முன்மொழிந்து விவாதிப்பதற்கு அதை எடுத்துக்கொள்ளுகிற
நேரத்தில் சபாநாயகர் தலைமை தாங்கக்கூடாது என்றிருக்கிறது.
அரசாங்கத்தின் மீது கொண்டுவருகிற தீர்மானத்தை உடனடியாக
எடுத்துக்கொள்ளுகிறோம். அதேபோல உடனடியாக இதை எடுத்துக்
கொண்டுவிட்டால் பிரச்சினை எழுவது இல்லை. பின்னால் இதை
எடுத்துக்கொள்வதாக இருந்தாலும் யார் மீது நம்பிக்கையில்லாத்
தீர்மானம் கொண்டுவரப்பட்டதோ அவர் அந்தப் பிரச்சினை மீது
ஒரு முடிவு ஏற்படுகிற வரையில் தலைமை வகிக்காமல் இருப்பது
நல்ல ஜனநாயக மரபை வளர்க்கத் துணையாக இருக்கும்.
அப்படிச்சொல்வதற்குக் காரணம் அவையில் உள்ள எதிர்
கட்சிக்காரர்கள் எல்லாம் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத
தைக் கொண்டுவந்திருக்கிறார்கள். அப்படி இருக்கிறபோது அவரே
தலைமை வகித்து நடத்துவது நல்லதா என்பதை கவனிக்க
வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நல்லதா என்பது பிரச்சினை
அல்ல, விதிமுறை என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு
உறுப்பினர் சொல்வதைப்போல அது நல்லது அல்ல என்றிருந்தால்
அரசியல் சட்டத்தை உட்கார்ந்து யோசித்து வகுத்துக்கொடுகிற
போதே அந்த வகையில் செய்திருக்க வேண்டும். அவர்கள்
நன்றாக யோசித்து 14 நாட்கள் நோட்டீஸ் இருக்க
வேண்டும் மென்றே சொல்லியிருக்கிறார்கள். அதற்குப் பிறகே
அதைக் கொண்டு வர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்.

At any sitting of the Legislative Assembly, while any resolution for the removal of the Speaker from his office is under consideration, the Speaker, or while any resolution for the removal of the Deputy Speaker from his office is under consideration, the Deputy Speaker, shall not, though he is present, preside and the provisions of clause (2) of Article 180 shall apply in relation to every such sitting as they apply in relation to a sitting from which the Speaker or, as the case may be, the Deputy Speaker, is absent.

இதன்படி அன்று கூட சபாநாயகர் பிரிசைட் பண்ணலாம்.
இந்தத் தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக் கொள்கிறபோது
பேரவைத் தலைவர் மீது என்றால் பேரவைத் துணைத் தலைவரும்
பேரவைத் துணைத் தலைவர் மீது என்றால் பேரவைத் தலைவரும்,தலைமை
தாங்க வேண்டும். யார் மீது கொண்டு வரப்பட்டிருக்கிறதோ அவர் அந்தத்
தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்துக்கொள்கிறபோது தலைமை தாங்கக்
கூடாது என்று அரசியல் அமைப்புச் சட்டத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.
அந்த வகையில் தான் நம்முடைய விதிமுறைகளும் அமைந்
திருக்கின்றன. முன்னாலும் பல தடவைகள் இந்த முறையே
பின்பற்றப்பட்டு வந்திருக்கிறது.





மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தீர்மானத்திற்கு
நோட்டீஸ் கொடுத்தவுடன் நானும், நமது முதலமைச்சர் அவர்
களும் விதிகளைத் தளர்த்தி மறுநாளே எடுத்துக்கொள்ள எதாவது வழி
இருக்கிறதா என்று பார்த்தோம். வழியில்லை. சில தீர்மானங்களை
எடுத்துக்கொள்ள—விதி 244–இன் கீழ் வழி இருக்கிறது—இதை
எடுத்துக்கொள்ள வேறு வழியே இல்லை. அரசியல் அமைப்புச்
சட்டபடி 14 நாள் நோட்டீஸ் தேவை என்றே இருக்கிறது.
அது இல்லையென்று சொன்னால் அடுத்த நிமிஷமே அதை அவையில்
எடுத்துக்கொள்ள வழிவகை செய்யப்பட்டிருக்கும் என்று தெரி
வித்துக்கொள்ளுகிறேன்.

திரு. சி. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்
கோவை செழியன் பேசும்போது *[ * * * * * *
* * * * ] என்று சொன்னதற்கு அவர் விளக்கம்
தரவேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது நிகழ்ச்சியில் இடம்
பெறாது என்று அப்போதே சொல்லிவிட்டேன். அதையொட்டி
இப்போது திரு ஆறுமுகம் எழுப்பியதும் அவை நிகழ்ச்சியில்
இடம் பெறாது என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

(ஆ) பேரவைத் தலைவரின் அனுமதியின்றி பேசப்படும் பேச்சுக்களை
பத்திரிகைகள் வெளியிடக்கூடாது என்ற பேரவைத்தலைவரின் ஆணையை
மீறி சில பத்திரிகைகள் அவற்றை வெளியிடுவது குறித்து.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, நீங்கள் ஒரு நல்ல
தீர்ப்பை வழங்கியிருக்கிறீர்கள் பலமுறை தாங்கள் இந்த மன்றத்திலே
தீர்ப்புகள் வழங்குகிறீர்கள். அந்த தீர்ப்புக்குமேல் பெரிய சக்தி இந்த
உலகத்திலே எதுவும் இல்லை. ஆனால், அப்படி வழங்கப்பட்டதற்கு
பின்னாலே சில பத்திரிகைகள் உங்களுடைய அனுமதியில்லாமலே பேசப்
படுகின்ற பேச்சுக்களை வேண்டுமென்றே இந்த அவையைப்பற்றியும், உறுப்
பினர்களைப்பற்றியும் தவறான எண்ணத்தை உருவாக்க பிரசுரிக்கின்றன.
அதை பலமுறை நான் உங்கள் கவனத்திற்கு கொண்டு வந்திருக்கிறேன்.
அப்படி சில பத்திரிகைகளிலே வந்ததைதங்களிடத்திலே காட்டியிருக்கிறேன்.
அப்படி உங்களுடைய உத்தரவையும் மீறி, "ரூலிங்" கையும் மீறி, வெளி
யிடுகின்ற பத்திரிகைகள் மீது தாங்கள் எதாவது நடவடிக்கை எடுக்கப்
போகிறீர்களா ? அல்லது தாங்கள் கொடுத்த ரூலிங் ஒரு பக்கம்

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக் கிணங்க
அகற்றப்பட்டது.

இருக்கட்டும். அவர்கள் தங்கள் விருப்பத்திற்கு ஏற்றவாறு போட்டுக்
கொ ரு ப்பார்கள் என்றால், அது ஜனநாயகத்திற்கு நல்லதல்ல.
அதற்கு தங்களுடைய ரூலிங் என்ன ?

(டாக்டர் எச். வி. ஹாண்டே எழுந்தார்.)

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அவருடைய பாய்ண்ட் ஆப் ஆர்ட
ருக்கு நான் தீர்ப்பு கொடுக்கிறேன். அதற்குள் நீங்கள் எழுந்து கொள்
கிறீர்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : அந்த பாய்ண்ட் ஆப் ஆர்டரை ஒட்டி
ஒரு பிரச்சினை எழுகின்றது. அதிலே ஒரு சிக்னிபிகன்ஸ் இருக்கிறது,
முக்கியமான ஒன்று இருக்கிறது. அவர்கள் எழுப்பியிருப்பது நியாயம்தான்.
நான் பொதுவாக, இதிலே ஏற்படக்கூடிய ஆபத்தை சொல்லுகிறேன்,
அவைத்தலைவருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். பொதுவாக
பல பத்திரிகைகள் என்று சொல்வதனால், அது பொதுவாக பத்திரிகைகள்
மேலே மாசு கற்பிப்பது போலாகும். ஆகவே, அவர் எழுப்பிய ஒழுங்கு
பிரச்சினையிலே பாய்ண்ட் என்னவென்றால், எந்த பத்திரிகை என்று
திட்ட வட்டமாகக் கூறி, அந்த பத்திரிகை மீது உரிமைப் பிரச்சனை
கொண்டு வருவதுதான் பொருத்தமாக இருக்குமே தவிர, ஜெனரலா
பொதுவாக, இப்படி உங்கள் ஆணையை மீறி வெளியிடுகின்ற பத்திரிகைகள்
மீது என்று சொல்வது பத்திரிகைகளை பொதவாக மாசு கற்பிப்பது என்று
ஆகும். ஆகவே, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்க வேண்டும். தங்கமணி
அவர்கள், பத்திரிகைகளுக்கு பாதுகாப்பு வேண்டுமென்ற முறையில்
தனியார் மசோதா ஒன்றை கொடுத்திருக்கிறார்கள். அதற்கு நீங்கள்
அனுமதி தந்திருக்கிறீர்கள். அதாவது நான் அபிஷியல் பில். இந்த
மாதிரி பத்திரிகைகள் உரிமையைப் பாதுகாக்க கொடுத்திருக்கிறார்கள்.
அதற்கு அனுமதி கொடுத்திருக்கிறீர்கள். ஆகவே, ஒட்டுமொத்தமாக
பொதுவாக, மாண்புமிகு பேரவைத்தலைவர் பத்திரிகைக்காரர்கள்,
"போர்த் எஸ்டேட்" என்ற காரணத்திற்காக, அவர்களுக்கிருக்கிற உரிமைகளை
பாதுகாக்க தீர்ப்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஏற்கனவே வந்தவைப்பற்றி
வேண்டாம். இனி, அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் நடைபெறுமானால், நம்
முடைய விதிமுறைகளின்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ
அது கண்டிப்பாக எடுக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

## (இ) தவறானத் தகவலை பேரவைக்கு அளித்த அமைச்சர்கள் அதைத் திருத்திக்கொள்ளாதது குறித்து.

திரு.பெ. சௌந்தரபாண்டியன் : ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர்,
சார். உறுப்பினர்கள் சில விவரங்களை தெரிந்துகொள்வதற்காகக்
கேள்விகள் எழுப்புகிறோம். அமைச்சரிடம் விவரமிருந்தால் பதில் சொல்ல



லாம். விவரம் இல்லையென்றால் பதில் சொல்லாமல் இருந்துவிடலாம்.
அதற்காக தவறான தகவலை இந்த மன்றத்திற்கு கொடுப்பது முறை
யாகாது. அப்படி கொடுத்திருந்தால், பிறகு திருத்திக்கொள்வதுதான்
இந்த அவையின் மரபாகும். பல அமைச்சர்கள் திருத்திக்கொள்வதில்லை
அதைப் பேரவைத்தலைவர் அனுமதித்துக்கொண்டே இருந்தால், சட்ட
சபையில் தவறான தகவலை பற்றியே பேசிக்கொண்டிருப்பதாகப் பொது
மக்கள் கருத வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகவே, இனிமேல் அவ்வாறு ஏற்
படாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்கிற ஒழுங்கு பிரச்சினையை
எழுப்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : நீங்கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் ?
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரவர்களிடம் நீலகிரி மாவட்
டத்திலே பாக்கு உற்பத்தி இருக்கிறதாவென்று கேட்டார்கள். அது போல்
இல்லை என்று, அமைச்சர் சொன்னார். பொம்மன் அவர்கள் கூடலூரில்
ஒரு பகுதியில் இருக்கிறது என்று சொன்னவுடன், அமைச்சரவர்கள்
பெரிய அளவிலே இல்லையென்று தான் சொன்னதை மாற்றிக்
கொண்டார். ஆகவே, அதிலே ஒன்றும் தவறில்லை.

## (3) கவன ஈர்ப்பு.

### புகலூர் சர்க்கரை ஆலையில் ஏற்பட்டுள்ள வேலை நிறுத்தமும் அதனால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள நட்டமும் குறித்து.

திரு. பெ. சௌந்திரபாண்டியன் : தலைவர் அவர்களே, திருச்சி
மாவட்டம், புகலூர் சர்க்கரை ஆலையில் தொடர்ந்து வேலை நிறுத்தம்
நடைபெற்று வருவதால் பல ஏக்கரா நிலங்களில் உள்ள கரும்பு வாடி
விட்டது பற்றியும் கரும்பு சாகுபடி செய்துள்ள விவசாயிகளுக்குப் பெரும்
நட்டம் ஏற்படும் நிலைமையும் குறித்து அவசர பொது முக்கியமான
காரியத்தை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம் : புகலூர் ஆலையைப் பொறுத்த
வரையில் வேலை நிறுத்தம் நீங்கிப் போய்விட்டது. கரும்பு இப்பொழுது
சர்க்கரை ஆலைக்கு வந்து கொண்டிருக்கிறது. நிலைமை சுமுகமாக
இருக்கிறது.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : தலைவர் அவர்களே, புக
ளூரில் டெக்கான் சர்க்கரை ஆலை, 22—12—74 முதல் 15—2—1975
வரை 55 நாட்களாக நடைபெற்ற வேலை நிறுத்தம் காரணமாக, கரும்பு
அரைக்கவில்லை. 15—2—1975 முதல் மீண்டும் இவ்வாலையில் வேலை
தொடங்கியுள்ளது. பதிவு செய்யப்பட்டுள்ள எல்லா கரும்பையும் இவ்வாலை
அரைத்து விடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வாலை 1—10—74
முதல் 22—12—1974 முடிய 112,000 டன் கரும்பை அரைத்துள்ளது.

இன்னும் 120,000 டன் கரும்பை இந்த ஆலை அரைக்க வேண்டியுள்ளது. இந்த அரைவை வேலை, மே மாதம் மூன்றாவது வாரத்திற்குள் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கரும்பினை உரிய காலத்தில் வெட்டி அரைவைக்குக் கொண்டு வராத காரணத்தால் கரும்பிலே இருக்கிற சாறுகள் அதிகம் வற்றிவிடுகின்றன. ஆகவே, விவசாயிகளுக்குப் பெருத்த நட்டம் ஏற்படக் கூடிய சூழ்நிலையிருக்கிறது. அதற்கான நட்ட ஈட்டை அரைவை முதலாளிகளிடம் வாங்கித்தர அரசாங்கம் ஏதாவது ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் : புதிய பார்கவா கமிட்டியினுடைய ரெக்கமண்டேஷன்படி, இவ்வாறு கரும்பு அந்தக் காலத்தில் தவறி, முன்னாலோ அல்லது பின்னாலோ அரைக்கப்படுமானால் அதற்கு மத்திய அரசாங்கத்தினர் எக்ஸைஸ் டியூட்டி ரிபேட் கொடுக்கிறார்கள். அந்த ரிபேட்டை கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கொடுக்க வேண்டுமென்று இவ்வரசு தெரிவித்துள்ளது.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தச் சர்க்கரை ஆலையில் இதுபோன்ற ஸ்டிரைக்குகள் அடிக்கடி ஏற்படுவதால் விவசாயிகள் பெரும் தொல்லைகளுக்கு ஆளாகிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட சூழ்நிலையில் அரசாங்கம் உடனடியாகத் தலையிட்டு சுமூகமான தீர்வை ஏற்படுத்தி, இனிமேல் பாதிக்காத வகையில் ஏற்பாடு செய்ய செயல் திட்டம் ஏதாவது வைத்திருக்கிறதா என அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. இராசாராம் : தலைவர் அவர்களே, அந்தச் சர்க்கரை ஆலையிலே வேலை நிறுத்தம் ஏற்பட சரியான காரணம் இல்லை. அரசாங்கம் ஏற்கனவே, ரூ. 25 அதிகமாக, மற்ற மாநிலங்களைக் காட்டிலும், சர்க்கரை ஆலைத் தொழிலாளிகளுக்குத் தனியாக ஊதிய உயர்வு தந்திருக்கிறது. அதற்கு மாறாக சில சூழ்நிலைகளையொட்டி புகலூரிலே ஏற்பட்ட வேலை நிறுத்தம் அரசியலன்படி ஏற்பட்டதே தவிர தொழிலாளிகள் பிரச்சினையில் அல்ல. அப்படிப்பட்ட நிலையைத் தொழிலாளிகள் இப்பொழுது உணர்ந்திருக்கிறார்கள். இனிமேல் இவ்வாறு நடக்காது என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : அடுத்து, 1975-76-ம் ஆண்டின் செலவிற்காக முன்பண மானியக் கோரிக்கைகள் (செலவின கணக்கின்) மீது விவாதமும் வாக்கெடுப்பும். விவாதம் இல்லாமலேயே இதை நிறைவேற்றி விடலாம் என்று அலுவல் ஆய்வுக்குழுவில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
........



(ச) வரவு செலவுத் திட்டம் சம்பந்தமாக வழங்கப்பட்ட புத்தகங்களில் உள்ள புள்ளி விவர முரண்பாடு பற்றியும் நிதி ஒதுக்கீடு சட்ட முன் வடிவு நிறைவேற்றப்படும் வரை பேரவைக்கு வறட்சி நிவாரண செலவு பற்றிய வாராந்திர கணக்கு அளிப்பது குறித்தும்.

Dr. H.V. HANDE : I am not going into any discussion. My only point is this ............I am raising a point of order. I do not know whether we can discuss this or not. There are gross irregularities brought to our attention only a couple of days ago. I have brought that to the attention of the Hon. Chief Minister also. There is the Annual Plan for 1975–76. There is the Budget Estimates given in the Budget Memorandum. In a number of pages, and in the Tables also, the figures given do not correspond to each other. There is wide variation between the two figures............

மாண்புமிகு பேரவைத்தலைவர் : பின்னாலே அப்ரோபிரியேஷன் பில் வரும்போது பேசிக்கொள்ளுங்கள்.

டாக்டர் எச்.வி. ஹாண்டே : அதற்குப் பிறகு ஒன்றும் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத்தலைவர் : இப்பொழுது முன்பண மானியக் கோரிக்கை மட்டும்தான் வருகிறதே தவிர நீங்கள் சொல்வதைப் பற்றி பின்னால் பேசிக்கொள்ளலாம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : பிறகு பேசிக்கொள்கிறோம். ஆனால், இப்பொழுது இருக்கக்கூடிய பிரச்சினைகள் எல்லாம் பல குறைபாடுகளிருக்கின்றன. நான் டீடெய்ல்சுக்குப் போகவில்லை. ஆனால், இருப்பதைப் பேரவைத் தலைவருடைய கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

The outlay on large and medium industries is given as Rs. 16·9 crores, in the Annual Plan under Industries; it is given as Rs. 6·2 crores in the Budget Memorandum.

இண்டஸ்ட்ரிஸிலே என்று கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் மெமோரண்டத்திலே ரூ. 6.2 கோடி என்று கொடுத்திருக்கிறார்கள். பட்ஜெட் மெமோராண்டத்திற்கும் annual பிளானுக்கும் வேறுபாடு இருக்கிறது. இரண்டாவது கிட்டத்தட்ட 1/4 பங்கை, 3 மாதங்களுக்காக நாம் வழங்குகிறோம். ஆண்டிற்கு எவ்வளவு என்று பார்த்து, அதிலே 1/4 பங்குதான் வோட் ஆன் அக்கவுண்டுக்கு வாங்கப்படுகிறது. சில விஷயங்கள் இங்கே விட்டுப் போயிருக்கின்றன.

In certain cases, payments and adjustments are usually made at the end of the year. Therefore, they are not given. In certain cases we have to make more demands..............
எல்லாம் என்ன பண்ணியிருக்கிறார்கள்? 1/4 பங்கு என்று, மேத்த

மெட்டிக்கல் கால்குலேஷன் மாதிரி போட்டிருக்கிறார்கள். சிலவற்றிற்குச் செலவையெல்லாம் ஜாஸ்தியாகப் போட வேண்டியிருக்கும். நேற்று கூட ஒரு பாய்ண்ட் எழுப்பப்பட்டிருக்கிறது. வறட்சி நிவாரணத்தைப் பற்றி எப்படி செலவு செய்வது என்று நமக்கு இப்பொழுது இருப்பது–எப்ரல் 10-ந் தேதிக்குப் பிறகு இந்த வோட் ஆன் அக்கவுண்ட் பிரயோஜனம் கிடையாது.

This will hold good until April 10th when we go in for the main Appropriation Bill. My submission is that until then this will be in operation. Therefore, till then a weekly statement on drought relief expenditure may be placed on the table of the House when the Assembly is in session. If the Hon. Speaker would give instructions to the Leader of the House or others concerned, that can be done. It has been done even in Lok Sabha in respect of Vote on Account..........

(Thiru V. Krishnamoorthy stood up)

I am on a point of order.

இந்த இரண்டு பாய்ண்ட்களில் இருக்கக் கூடிய இர்ரெகுலாரிட்டிஸைப் பார்க்க வேண்டும். இன்னொன்று, வீக்லி ஸ்டேட்மெண்ட் ஆப் அக்கவுண்ட்ஸ் வைப்பதற்குத் தாங்கள் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்தால் நல்லதாக இருக்கும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இர்ரெகுலாரிட்டிஸ் இருக்கின்றன என்று சொன்னார்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இருக்கிறது என்று சொல்லவில்லை, இருக்கிறதா வென்று பார்க்க வேண்டும் என்று சொன்னேன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அப்படி இர்ரெகுலாரிட்டிஸ் இருக்குமானால் அதை அப்ரோபிரியேஷன் பில் வரும் போது பார்த்துக்கொள்ளலாம்............

டாக்டர் எச். வி. ஹாண்டே : அப்ரோபிரியேஷன் பில்லுக்குப் பிறகு சட்ட சபைக் கூட்டம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கிறது. உட்காருங்கள். போதிய தொகை கேட்கவில்லை என்று ஒரு கருத்தைச் சொன்னார்கள், மேலும் அதிகமாகச் செலவிட வேண்டியிருக்கும் என்று சொன்னார்கள். நிதி நிலை அறிக்கையில் இருப்பதைவிட அதிகமாகச் செலவிட வேண்டுமானால் அப்படிப்பட்ட நிலையிலேதான் துணை மானியக் கோரிக்கைகள் வருகின்றன. ஆகவே, அதற்கு மேலே பணம் செலவிட வேண்டுமானாலும் அதற்கும் வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





(4) 1975—76-ம் ஆண்டின் செலவிற்கான முன்பண நிதிக் கோரிக்கைகள் (செலவினக்கணக்கின் மீது வாக்கெடுப்பு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கீழ்க்கண்ட தீர்மானத்தைப் பேரவையின் முடிவிற்கு வைக்கிறேன் :—

"முன்பண மானியக் கோரிக்கைகளடங்கிய 20–3–1975 தேதியிட்ட அறிக்கையில் இரண்டாவது வரிசையில் 1 முதல் 57 முடிய எண்ணுள்ள மானியக் கோரிக்கைகள் ஒவ்வொன்றுக்கும் எதிரே நாலாவது வரிசையில் குறிப்பிட்டுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகைகள் 1976–ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிய உள்ள ஆண்டிற்கான செலவுக் கணக்கில் அரசுக்கு வழங்கப்பட வேண்டும்"

டாக்டர் எச். வி. ஹாண்டே : 120 கோடி ரூபாய்க்கு கேட்கிறார்கள், விவாதம் இல்லாமல் எப்படி அவ்வளவு ரூபாயை அனுமதிக்க முடியும், உங்களைக் கேட்கிறேன்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் உட்காருங்கள். என்னை என் கேட்கிறீர்கள், உங்கள் தலைவரைக் கேளுங்கள். அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டுவிட்ட பிறகு இங்கே வந்து என்னை என் கேட்க வேண்டும், உங்கள் தலைவரைக் கேளுங்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவர் அவர்களே, பாயின்ட் ஆப் ஆர்டர் என்று இம்மாதிரி சொல்வது சரியல்ல. அலுவல் ஆய்வுக் குழுவிலே விவாதம் இல்லாமல் எடுத்துக் கொள்ளலாம் என்பதை எல்லாத் தலைவர்களும் ஒத்துக்கொண்டோம். ஆகவே, அதிலே எந்தவிதமான பிரச்னையும் இல்லை. கட்சித் தலைவர் ஏதாவது தப்பாகச் சொன்னால் கட்சி உறுப்பினர்கள் அந்தத் தலைவர் மீது நடவடிக்கை எடுக்கலாம், ஏதோ கணக்குக் கூட்டலில் விடுதல் இருக்கிறது என்று சொன்னார்கள். அதைத் திருத்திக்கொள்வதற்கு அரசாங்கத்திற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பட்டது.

பேரவையினால் நிறைவேற்றப்பட்ட நிதிக் கோரிக்கைகளுக்கான தீர்மானங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நிதிக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

"நிதிக்கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,66,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 2—மாநில ஆயத் தீர்வை.

நிதிக் கோரிக்கை எண் 2 —மாநில ஆயத் தீர்வை என்ற தலைப்பின் கீழ் ரூ. 15,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

[1975 மார்ச் 20

நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 3—மோட்டார் வண்டிகள், சட்டங்கள் நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 19,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும் ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 4—பொது விற்பனை வரிகளும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ.99,53,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத்தாள்கள்–நிர்வாகம்.

"நிதிக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 14,94,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு.

" நிதிக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 46,51,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்ட மன்றம்.

" நிதிக் கோரிக்கை எண் 7—மாநில சட்டமன்றம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 12,40,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 48,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,58,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 10— பால் வழங்குத் திட்டங்கள்.

" நிதிக் கோரிக்கை எண் 10—பால் வழங்குத் திட்டங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 24,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



1975 மார்ச் 20]

நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம்

" நிதிக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 3,57,06,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 12—1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம்

" நிதிக் கோரிக்கை எண் 12—1959-ம் ஆண்டு தமிழ்நாடு இந்து-சமய அறக்கட்டளைகள் சட்டத்தின் நிர்வாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 28,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம்.

" நிதிக் கோரிக்கை எண் 13—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள்.

" நிதிக் கோரிக்கை எண் 14—சிறைச்சாலைகள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,09,74,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை.

" நிதிக் கோரிக்கை எண் 15—காவல் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 6,61,92,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள்.

" நிதிக் கோரிக்கை எண் 16—தீயணைப்புப் பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 53,73,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி.

" நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 29,55,26,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம்.

" நிதிக் கோரிக்கை எண் 18—மருத்துவம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,73,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

[1975 மார்ச் 20

நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம்

"நிதிக் கோரிக்கை எண் 19—பொதுச் சுகாதாரம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 4,06,44,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை

"நிதிக் கோரிக்கை எண் 20—வேளாண்மை என்ற தலைப்பின்கீழ் ரூ. 8,15,87,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம்

"நிதிக் கோரிக்கை எண் 21—மீனளம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 35,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு

"நிதிக் கோரிக்கை எண் 22—கால்நடை வளர்ப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,41,39,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு

"நிதிக் கோரிக்கை எண் 23—கூட்டுறவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,14,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள்

"நிதிக் கோரிக்கை எண் 24—தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 98,62,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனா

"நிதிக் கோரிக்கை எண் 25—சின்கோனா என்ற தலைப்பின்கீழ் ரூ. 18,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும்–துணித்தொழிலும்

"நிதிக் கோரிக்கை எண் 26—கைத்தறியும்–துணித்தொழிலும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 48,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 27—கதர்

"நிதிக் கோரிக்கை எண் 27—கதர் என்ற தலைப்பின்கீழ் ரூ. 14,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேணடும்."

நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன.

"நிதிக் கோரிக்கை எண் 28—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் முதலியன என்ற தலைப்பின்கீழ் ரூ. 7,25,02,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



1975 மார்ச் 20]

நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர்

"நிதிக் கோரிக்கை எண் 29—தொழிற்சாலைகள் உட்பட தொழிலாளர் என்ற தலைப்பின் கீழ் ரூ. 83,78,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன்

"நிதிக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 65,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்".

நிதிக்கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன்

"நிதிக் கோரிக்கை எண் 31—பழங்குடி மக்கள், அரிசனங்கள், முதலியோர் நலன் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,37,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்".

நிதிக் கோரிக்கை எண் 32—பின் தங்கிய வகுப்பினர் நலன்

"நிதிக் கோரிக்கை எண் 32—பின்தங்கிய வகுப்பினர் நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,44,57,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி

"நிதிக் கோரிக்கை எண் 33—வீட்டு வசதி என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,76,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி

"நிதிக் கோரிக்கை எண் 34—நகர்ப்பகுதி வளர்ச்சி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,54,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல்

"நிதிக் கோரிக்கை எண் 35—உணவுப் பொருள் வழங்கல் என்ற தலைப்பின்கீழ் ரூ. 62,26,000-க்கு மேறபடாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம்

"நிதிக் கோரிக்கை எண் 36—பாசனம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,92,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்"

### நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள்

"நிதிக் கோரிக்கை எண் 37—பொதுப் பணிகள்—கட்டடங்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 87,75,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும்

"நிதிக் கோரிக்கை எண் 38—பொதுப்பணிகள்—பணியாளரும், கருவிகளும், இயந்திரச் சாதனங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,15,72,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும்

"நிதிக் கோரிக்கை எண் 39—சாலைகளும், பாலங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,24,84,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப்பணிகள்

"நிதிக் கோரிக்கை எண் 40—சாலைப் போக்குவரத்துப்பணிகள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,02,11,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

"நிதிக் கோரிக்கை எண் 41—இயற்கையின் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,00,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.

"நிதிக் கோரிக்கை எண் 42—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 2,55,99,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 43—பல்வகை

"நிதிக் கோரிக்கை எண் 43—பல்வகை என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,12,83,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."



### நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்—அச்சுத்துறை

"நிதிக் கோரிக்கை எண் 44—எழுதுபொருள்—அச்சுத்துறை என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,48,32,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை

"நிதிக் கோரிக்கை எண் 45—காட்டு வளத்துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 82,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்

"நிதிக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,38,69,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு

"நிதிக் கோரிக்கை எண் 47—ஜமீன்தார்களுக்கு இழப்பீடு என்ற தலைப்பின்கீழ் ரூ. 41,49,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 48—பொதுச் சுகாதாரம், துப்புரவு, நீர் வழங்கல் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 23,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 49—வேளாண்மை குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 13, 48,16,000க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 50—தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 91,18,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

### நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 51—பாசனம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 4,31,45,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்படவேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 52—பொதுப்பணித்துறைக் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 52— பொதுப்பணித்துறைக் கட்டடங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 2,29,63,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 53—சாலைகள்—பாலங்கள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,05,34,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக்கோரிக்கை எண் 54—சாலைப் போக்குவரத்துப்பணிகள் குறித்த மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 54—சாலைப் போக்குவரத்துப்பணிகள் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 49,48,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 55—காட்டுவள மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 62,20,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு

"நிதிக் கோரிக்கை எண் 56—பல்வகை மூலதனச் செலவு என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,90,43,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

கடன்கள், முன்பணங்கள் வழங்கலும், கடனைத் திருப்பிக் கொடுத்தலும்.

நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன் பணங்களும்.

"நிதிக் கோரிக்கை எண் 57—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் என்ற தலைப்பின்கீழ் ரூ. 10,57,79,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."



(5) அறிவிப்பு

தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும் ஆய்விற்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

(6) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, தமிழ் நாடு, 1975-ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின்மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப் பட்டிருக்கிறது.

(7) 1975—76-ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, ஆளுநர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,18,21,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

THIRU N. K. PALANISAMY: Sir, to discuss policy, I move. "That the allotment of Rs. 1,18,21,03,000 under Demand No. 17—Education—be reduced by Rs 100."

[1975 மார்ச் 20

THIRU C. ARANGANAYAKAM: Sir, to discuss the need to give free education to all the poor women students at all levels, I move:

"That the allotment of Rs. 1,18,21,03,000 under Demand No. 17—Education—be reduced by Rs. 100".

THIRU M. A. LATHEEF: Sir, to discuss about the need to establish separate chairs for Islamic studies in all the Univeristies in the State, I move:

"That the allotment of Rs. 1,18,21,03,000 under Demand No. 17—Education—be reduced by Rs. 100."

THIRU K. S. KOTHANDARAMIAH: Sir, to discuss the need to open adequate number of Telugu schools and sections in places where there is need, I move:

"That the allotment of Rs. 1,18,21,03,000 under Demand No. 17—Education—be reduced by Rs. 100".

THIRU R. PONNAPPA NADAR: Sir, to discuss about the necessitys to make legislation for the security of employment of the aided college teachers, I move:

"That the allotment of Rs. 1,18,21,03,000 under Demand No. 17—Education—be reduced by Rs. 100."

திரு. எ. ஆர். மாரிமுத்து: தலைவரவர்களே, பட்டுக்கோட்டையில் கலைக்கல்லூரி ஒன்று ஆரம்பிப்பதற்காக அரசின் அனுமதியோடு தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு, ஓரளவு நிதி வசூலும் செய்து, கல்லூரி ஆரம்பிக்கப்படாமல் உள்ளதைப் பற்றி விவாதிக்க;

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,18,21,03,000-க்கு 100 ரூபாய் குறைக்க வேண்டும்" என்ற வெட்டுத் தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும் வெட்டுத் தீர்மானங்களும் பேரவையின்முன் விவாதத்திற்கு வைக்கப்பட்டிருக்கின்றன.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறையின் பல்வேறு பணிகளைப்பற்றி இங்கே விரிவான ஒரு அறிக்கை * பேரவையின் உறுப்பினர்களுக்கெல்லாம் வழங்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையிலே சென்ற ஆண்டிலே நடைபெற்ற

*477–528ம் பக்கங்களில் இணைப்பு IV-ஆக அச்சிடப்பட்டுள்ளது.



1975 மார்ச் 20] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

பல்வேறு பணிகள் பற்றியும் இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்திலே நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பணிகள் பற்றியும் கூறப்பட்டிருக்கின்றன, ஆகவே அதைப்பற்றி நான் விரிவாக எடுத்துச் சொல்லவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். அதனை இந்த அவையினுடைய நடவடிக்கைக் குறிப்பிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு விவாதத்தைத் தொடங்கலாம் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. எ. சுவாமிதாஸ்: பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது எங்கள் கட்சியின் சார்பிலே கொடுக்கப்பட்டிருக்கிற பல வெட்டுத் தீர்மானங்களையொட்டி பல கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

கல்விக்காக இந்த அரசு, ஒட்டுமொத்தமாகப் பார்த்தால், தொழிற் கல்வி மற்ற எல்லாக் கல்விகளையும் சேர்த்துப் பார்த்தால், ஏறத்தாழ 148 கோடி ரூபாய் செலவழிக்கிறது. எவ்வளவுதான் நாம் அதிகமாகப் பணம் செலவழித்தாலும்கூட தொடக்கப் பள்ளியிலிருந்து கல்லூரிக் கல்வி வரையிலே ஆண்டுதோறும் பலப் பல கல்விக்கூடங்களைத் திறந்து கொண்டிருக்கிறோம். அதனுடைய பயன், விளைவு மொத்தத்திலே இந்த நாட்டிலே எப்படியிருக்கிறது என்று பார்த்தால் இண்டிசிப்ளின், ஒழுக்கச் சிதைவு இருப்பதை மறுக்கமுடியாது.

நாட்டு மக்களிடையே நாம் கொண்டுவரவேண்டிய ஒழுக்கத்தைப் பற்றி நாம் அதிகமாகச் சிந்திக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலே தொடக்கப் பள்ளிகளில் இருந்து உயர்நிலைப்பள்ளி, கல்லூரிகள் வரையிலே பார்த்தால் சிறிய சிறிய காரியங்களுக்காக எல்லாம் ஸ்ட்ரைக் செய்வதைப் பார்க்கிறோம். அதிருப்தியான நிலைமை இருப்பதைப் பார்க்கிறோம். ஒரு ஆசிரியரை மாற்றிவிட்டால்கூட அந்த ஆசிரியர்தான் வேண்டுமென்று மாணவர்கள் அதற்காக ஸ்ட்ரைக் செய்கிறார்கள். ஒரு பள்ளிக்கூட மாணவனை போலீஸார் தாக்கினாலும் அல்லது பேருந்து கண்டக்டரோடு வாக்குவாதம் நடந்தாலும் அதற்காக ஸ்ட்ரைக் நடக்கிறது. இதுவெல்லாம் எதைக் காட்டுகிறது என்றால் இண்டிசிப்ளின் மாணவர்கள் மத்தியிலே இருக்கிறது என்பதைத்தான். அதை எப்படி அகற்றுவது என்று சிந்திக்கவேண்டும். படிக்கின்ற மாணவர்களுக்கு ஒழுக்கக் கல்வி கொண்டு வரவேண்டும். என்.சி.சி., ஏ.சி.சி., ஸ்கவுட் போன்றவற்றை கட்டாயமாக்கவேண்டும்.

அதோடு, ஸ்போர்ட்ஸையும் கட்டாயமாக ஆக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு இருக்கிற நிலையைப் பார்த்தால் பல பள்ளிக்கூடங்களில் விளையாடுவதற்குத் தேவையான இடமே இருக்காது. ஒரு ஹைஸ்கூலை எடுத்துக்கொண்டாலும்கூட பள்ளிக்கூடம்தான் இருக்கிறது, 10 சென்ட் இடம்கூட கிடையாது விளையாடுவதற்கு. டிரில்மாஸ்டர் இருப்பார், இடம் இருக்காது. ஆகவே, இப்படிப்பட்ட நிலைமைகளையெல்லாம் போக்கி என்.சி.சி., ஏ.சி.சி., ஸ்கவுட், ஸ்போர்ட்ஸ் இவற்றையெல்லாம் கண்டிப்பாக மாணவர்களுக்குக் கட்டாயமாக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இவைகளுக்கு எல்லாம் போதிய கட்டடங்கள் கிடையாது. நம்முடைய மெட்ராஸ் சிட்டியை எடுத்துக் கொண்டாலும்கூட சில பள்ளிக்கூடங்களிலே ஒன்றுமுதல் மூன்றுவது வகுப்புவரையிலே ஒரே இடத்திலே வைத்துக் கற்றுக்கொடுக்கிறார்கள். 3 ஆசிரியர்களும் பக்கத்திலே பக்கத்திலே உட்கார்ந்துகொண்டு கற்றுக் கொடுக்கக்கூடிய நிலைமையைப் பார்க்கிறோம்.

(முற்பகல் 10-30.)

போதிய கட்டடங்கள் இல்லை, போதிய இருக்கைகள் இல்லை. இதையெல்லாம் எப்பொழுது சீர்திருத்தப் போகிறோம்? விடுதலை கிடைத்ததிலிருந்து சொல்லிக்கொண்டு வருகிறோம். பொருள் வசதி போதாது, வருவாய் போதாது, கல்விக்காக அதிகமாகச் செலவழிக்க வேண்டுமென்று சொல்லிக்கொண்டே இருக்கிறோமே தவிர, எந்தக் காலத்தில் போதிய கட்டடங்களையும், போதிய இருக்கைகளையும் பிள்ளைகளுக்குக் கட்டிக் கொடுக்கப் போகிறோம்? இன்னும்கூட பரிதாபகரமான முறையில் சில பள்ளிகளிலே கரும்பலகையேகூட இருக்காது. கரும்பலகை இருந்தாலும் சாக்கட்டி வாங்கிக் கொடுக்க மாட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்திலே பல ஆசிரியர்கள் சொல்லியிருக்கிறார்கள். அரசாங்கம் எங்களுக்கு சாக்கட்டி வாங்கிக் கொடுப்பதில்லை, நாங்களேதான் கையிலேயிருந்து செலவு செய்து சாக்கட்டிகள் வாங்கி கரும்பலகையிலே எழுதுகிறோம் என்று சொல்கிறார்கள். இருப்பதற்கு இடமில்லை.

கன்னியாகுமரி மாவட்டத்திலே உள்ள பல பள்ளிகள் ஓலை வேய்ந்த கட்டடங்களிலேதான் நடக்கின்றன. அதையும்கூட ஆண்டுதோறும் செப்பனிடுவதில்லை. கட்டடங்களும் இல்லாமல் இருக்கின்றன. எனவே இது சம்பந்தமாக முன்னுரிமை கொடுத்து அடுத்த ஐந்தாண்டுக் காலத்திற்குள்ளாகவாவது எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடம் கட்டியாக வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். என்னுடைய தொகுதியிலேயே பல பள்ளிகள் கூரைக்கட்டடங்களில் நடக்கின்றன. குறிப்பாக வெட்டுத் தீர்மானத்திலே கூடக் கொடுத்திருக்கிறேன். ஈச்சன்விளை பள்ளிக்கூடத்திற்கு கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று பல ஆண்டுக்காலமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். மொத்தத்தில் தமிழகம் பூராவும் இந்த நிலைமை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கலாம்.

அடுத்தபடியாக, ஆசிரியர்கள் மாணவர்கள் விகிதத்தைப் பொறுத்தவரையில் இப்பொழுது இருப்பதை மொத்தமாகக் கணக்கிட்டுப் பார்க்கிறோம்.

தமிழ்நாட்டிலேயுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களையும் சேர்த்து மொத்த மாணவர்களையும், ஆசிரியர்களையும் கணக்கிட்டு விகிதாச்சாரம் ஏற்படுத்தி 35 : 1 என்று இருக்கிறது. ஆனால் சில பள்ளிக்கூடங்களில் 50 மாணவர்களுக்கு மேற்பட்டுக்கூட இருக்கிறார்கள். ஒரு ஆசிரியருக்கு 50 மாணவர்கள் இருக்கக்கூடிய பள்ளிகளையும் பார்க்கலாம். அந்த நிலை இருக்கக் கூடாது. இப்பொழுதுள்ள சூழ்நிலையில் படித்த பட்டதாரி ஆசிரியர்கள்,





பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மிகுதியாக வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே 30 ; 1 என்று விகிதாசாரத்தைக் கொண்டு வந்தால் படித்த, பயிற்சி பெற்ற ஆசிரியர்களுக்கு காலாகாலத்திலே வேலை கிடைப்பதற்கு வாய்ப்பிருக்கும். எனவே, இப்பொழுதுள்ள விகிதாசார முறையைத் திருத்தியமைத்து எல்லா படித்த ஆசிரியர்களுக்கும் வேலை கொடுக்க நாம் முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இன்னொரு கருத்தையும் கூற விரும்புகிறேன். இப்பொழுது ஆசிரியர் பயிற்சி பெற்றிருப்பவர்கள் தங்களை ஆசிரியர்களாக எப்பொழுது அர்ப்பணித்துக் கொண்டார்களோ அவர்களுக்கு வேலை கட்டாயமாக உண்டு என்ற ஒரு நிலையை ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது சிலர் 23-ஆம் வயதிலே படித்துப் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். ஆனால் 30 வயது வரையிலேயும் அவர்களுக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் இருக்கிறது. பிறகு அவர்கள் 30 வயதைத்தாண்டி விட்டால் அரசாங்கத்திலே வேலை கிடைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் போய்விடுகிறது. வயது தாண்டிவிடுகிறது. அப்படி வயது தாண்டிவிட்டால் பிறகு "எக்செம்ப்ஷன்" வாங்கவேண்டி இருக்கிறது. இப்படியில்லாமல், கேரளாவிலே ஒரு நிலை இருந்து கொண்டிருக்கிறது. அதாவது எப்பொழுது ஒருவர் தன்னுடைய பயிற்சியைப் பெற்று ஆசிரியர் பயிற்சியை முடித்துக் கொண்டாரோ உடனே பப்ளிக் சர்வீஸ் கமிஷனிலே தன்னுடைய பெயரைப் பதிவு செய்து கொண்டு வைத்துக்கொள்ள வேண்டும். அப்படிப் பதிவு செய்து கொண்டுவிட்டால், 40 வயது ஆனாலும்கூட அவருக்கு வேலை நிரந்தரமாகக் கிடைக்கும் என்ற நிலையிருக்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்று தங்களை ஆசிரியர்களாக ஆக்கிக் கொள்கிறார்கள். அதேபோல் பி.ஏ., பி.எஸ்ஸி. படித்தவர்கள் தங்களை ஆசிரியர்களாக ஆக்கிக்கொள்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் வேலை எப்பொழுது கிடைக்கும் என்று காத்திராமல் உடனடியாக தங்கள் பெயரைப் பதிவு செய்து கொண்டால் வயதைப்பற்றிக் கவலையில்லாமல் என்றாவது ஒருநாள் வேலை கிடைக்கும் என்ற திட்டவட்டமான நிலை ஏற்படும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்று அரசாங்க உயர்நிலைப்பள்ளிகளில், 1,000 மாணவர்களுக்கு மேற்பட்டவர்கள் ஒரு பள்ளியிலே இருந்தால் அந்தப் பள்ளிக்கூடத்தின் தலைமையாசிரியர் "கெஜடெட் ஹெட்மாஸ்டர்" என்ற ஒருநிலை கொடுக்கப்படுகிறது. இந்த நேரத்தில் நான் ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது ஆண்டுதோறும் மாணவர்கள் கூடுதலாகிக் கொண்டே வருகிறார்கள். எனவே, உயர்நிலைப்பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் அத்தனைபேரையுமே—அது எந்த உயர்நிலைப்பள்ளியானாலும் — கெஜட்டெட் ஹெட்மாஸ்டர் என்ற முறைக்குக் கொண்டுவருவது நலமாக இருக்கும், முறையாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

உயர் தொடக்கப் பள்ளிகளில் தலைமையாசிரியர்களாக பி.இடி. படித்தவர்களையே போடவேண்டும். அப்படிப்பட்ட நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஏனென்றால் நாங்கள் சிறு குழந்தைகளாக இருந்தபொழுது எங்களுக்கிருந்த பொது அறிவைவிட இன்றைக்குள்ள குழந்தைகளுக்கு

[திரு. ஏ. சுவாமிதாஸ்] [1975 மார்ச் 20

பொது அறிவு அதிகமாக இருக்கிறது. அன்றைக்கு இருந்த எஸ்.எஸ்.எல்.சி. ஸ்டாண்டர்ட் இன்றைக்குள்ள பி.ஏ.,ஸ்டாண்டர்டுக்குச் சமம்.அன்றைக்கிருந்த எஸ்.எஸ்.எல்.சி. ஸ்டாண்டர்ட் இப்பொழுதுள்ள கிராஜுவேட் ஸ்டாண்டர்டுக்குச் சமம். எனவே, ஸ்டாண்டர்ட் இப்படி வருவதால் தொடக்கப் பள்ளிகளிலேயும் பி.இடி., ஆசிரியர்களைப் போட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இங்கே ஆசிரியர்கள் மத்தியிலே பல்வேறுவகைப்பட்ட பிரிவுகள் உள்ளன. தமிழ் ஆசிரியர்கள், பி.டி. ஆசிரியர்கள் என்று பலப்பல பிரிவுகள் உள்ளன. இவர்களில் "ஏ" விங்,- "பி" விங் என்று பிரிக்கும் பொழுது பலப் பல பிரச்சனைகள் எழுகின்றன என்று ஆசிரியர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். பி.இடி. படித்தவர்கள் எங்களுக்குச் சலுகைகள் கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். "பி" விங்கில் இருப்பவர்கள் எங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். "பி" விங்கில் இருப்பவர்களில் 30 சதவீதத்தை கெஜட்டெட் போஸ்ட்களாகச் செய்திருக்கிறார்கள். இருந்தாலும்கூட "பி" விங்கில் வேலை பார்ப்பவர்களுக்கு பல்லாண்டு காலமாக ஹெட்மாஸ்டர் பதவி கிடைக்கவில்லை என்று சொல்கிறார்கள். சில பேர் பி.டி. படித்திருந்தும் இன்னும் ரெகுலரைசேஷன் செய்யவில்லை, பணி முறைப்படுத்தப்படவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இம்மாதிரி பணி முறைப்படுத்தப்படவில்லை என்ற குறைபாடே அரசாங்க ஊழியர்களுக்கு இருக்கக் கூடாது. ஒரு வருஷம் வேலை பார்த்தார் என்றால் உடனே "ரெகுலரைஸ்" செய்ய வேண்டும். அது "ஏ" விங் ஆனாலும் சரி, "பி" விங் ஆனாலும் சரி அவர்களின் பணி முறைப்படுத்தப்பட வேண்டும். அதைக் கட்டாயமாகச் செய்ய வேண்டும். அரசாங்கத்தில் பணியாற்றுபவர்களானாலும் சரி தனியார் பள்ளிகளில் பணியாற்றுபவர்களானாலும் சரி அவர்கள் பணி முறைப்படுத்தப்பட வேண்டும்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஒரு ஸ்கீம் இருந்தது. தனியார் பள்ளிக்கூடத்தில் ஒரு வருஷம் ஒருவருக்கு ஆசிரியர் பதவி கொடுத்துவிட்டால், 10 மாதங்களுக்கு அவருக்குப் பணி கொடுத்துவிட்டால் அவரை ரெகுலரைஸ் செய்ய வேண்டுமென்றிருந்தது. ஆனால் தமிழகத்தில் அப்படியில்லை. அதனால் பல்வேறு சிக்கல்கள் ஏற்படுகின்றன. தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் சட்டமெல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். இதில் தனியார் நடத்தும் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பல குறைபாடுகள் இருக்கின்றன. அவர்களும் வழக்கெல்லாம் தொடர்ந்திருக்கிறார்கள். அதைப்பற்றி விரிவாகச் சொல்ல நான் விரும்பவில்லை. "ஏ"விங்க், "பி" விங்கில் பணியாற்றும் எந்த ஆசிரியரானாலும் அவர் 10 மாதங்கள் வேலை செய்தால் அவர்களின் பணி முறைப்படுத்தப்படுவது ஆட்டோமாட்டிக்காக இயல்பாகவே வர வேண்டும். அப்படிப்பட்ட ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும்.

தமிழாசிரியரைப் பொறுத்த வரையிலும், சில ஆசிரியர்கள் ஏழாண்டுகளாகப்பணி செய்து கொண்டிருந்தாலும், புலவர்களாகப் பணியாற்றியிருந்தாலும் அவர்களதுபணி இன்னும் ரெகுலரைஸ் செய்யப்படவில்லை. நான் போகும்பொழுது என்னிடத்திலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். எனவே, ஒரு வருஷம் வேலை பார்த்தவுடனேயே ரெகுலரைசேஷன்



1975 மார்ச் 20] [திரு. ஏ. சுவாமிதாஸ்]

ஆட்டோமாடிக்காக வர வேண்டும். அதில் எந்தச் சிக்கலும் இருக்கக் கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழாசிரியர்களைப் பொறுத்த வரையில் அவர்கள் தங்களுக்குள்ள இன்னொரு குறைபாட்டையும் சொல்கிறார்கள். ஒரே படிப்பு படித்தவர்கள், ஒரே பட்டம் பெற்றவர்கள், ஒரே குவாலிபிகேஷன் உள்ளவர்கள், ஒரே டிரெயினிங் பெற்றவர்கள்; அவர்களுக்குப் பள்ளியிலே வேலை கொடுக்கும்போது ஃபர்ஸ்ட் கிரேட், செகண்ட் கிரேட் என்று பிரித்து இருக்கிறார்கள். அவர்கள் ஒரே வேலையைத்தான் செய்கிறார்கள். எஸ்.எஸ்.எல்.ஸி. வகுப்பு வரையில் கற்றுக் கொடுக்கிறார்கள். எனவே ஒரே கிரேட்தான் இருக்க வேண்டும். அதற்குப் பிறகு வேண்டுமென்றால் பத்தாண்டுகாலம் கழித்து செலக்ஷன் கிரேட் வருகிறது, அம்மாதிரி வரட்டும். ஃபர்ஸ்ட் கிரேட், செகண்ட் கிரேட் என்ற வேறுபாடில்லாமல் ஒரே கிரேட்தான் இருக்க வேண்டும். அதற்குரிய அமைப்பைக் கொண்டு வரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கமே உதவிகளைக் கொடுத்து வருகிறது. ஏன் அதை அரசாங்கமே நேரடியாக எடுத்து நடத்தக் கூடாது என்று கேட்கிறேன். பஞ்சாயத்து யூனியன்களின்கீழ் ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. அத்தனை பள்ளிக்கூடங்களையும் குறிப்பிட்ட காலத்திற்குள் எடுப்பதற்குத் திட்டம் வகுத்து அந்தப் பள்ளிகளை ஏற்க வேண்டும். அப்படி ஏற்றுக் கொண்டால்தான் பல சிக்கல்களைத் தவிர்க்க முடியும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நிர்வாகத்தைப் பற்றிச் சொல்லும்பொழுது எனக்குத் தெரிந்த அளவிலே கன்னியாகுமரி மாவட்டத்திலே முன்பு ஒரே டி.இ.ஓ.தான் இருந்தார்.அப்படி ஒரேயொரு டி.இ.ஓ. பணியாற்றும்பொழுது அன்றைக்குப் பல சிக்கல்கள் இல்லாமல் ஒரேமாதிரியாக நல்ல முறையில் அட்மினிஸ்ட்ரேஷன் நடந்தது. அதைப் பெருமையாகக் கூடச் சொல்லலாம். ஆனால் இன்றைக்கு கன்னியாகுமரி மாவட்டத்திற்கு 3 டி.இ.ஓ-க்கள் இருக்கிறார்கள். ஒரு சி.இ.ஓ. இருக்கிறார். அப்படியிருந்தும் அந்த ஆபீஸ்களில் நடக்கும் பணிகளில் பல சிக்கல்கள் உள்ளன.

எனக்குத் தெரிந்த விஷயம் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். ஒரு பெண் மெட்டர்னிட்டி லீவ் கேட்டும் 6 மாதங்கள் வரை சாங்க்ஷன் ஆகாமல் இருந்து பிறகு எம்.எல்.ஏ. போய் கேட்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது. நான் போய் சப்தம் போட்டேன். 3 டி.இ.ஓ.க்கள் இருந்தும் ஒரு சி.இ.ஓ. இருந்தும் ஒரு பெண்ணுக்கு மெட்டர்னிட்டி லீவ் சாங்க்ஷன் ஆவதற்கு 6 மாதங்களுக்கு மேல் ஆகிறது என்றால் இதைச் சற்று கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

டைரக்டரெல்லாம் நல்லவர்கள். இப்படி அவர்கள் ரொம்பவும் நல்லதனமாக இருப்பதால்தான் கீழே உள்ளவர்கள் இப்படியிருக்கிறார்களோ

என்ற சந்தேகம்கூடஏற்படுகிறது. மேலேயுள்ளவர்கள் கெட்டிக்காரர்களாக இருந்தும் அவருக்குக் கீழே உள்ள ஊழியர்கள் இப்படிப் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

பெண்கள் பள்ளிக்கூடத்திற்கு தனி டி.இ.ஓ. வைத்திருக்கிறோம். ஆண்கள் பள்ளிக்கூடங்களில் ஆண்கள் ஆசிரியர்களாக இருப்பதைப்போல பெண்களும் ஆசிரியர்களாக இருக்கிறார்கள். பெண்களும் டி.இ.ஓ-க்களாக இருக்கிறார்கள். அவர்கள் பெண்கள் பள்ளிக்கூடத்தைப் போய்ப் பார்க்கட்டுமே, எதற்காக பெண்கள் பள்ளிக்கு என்று தனியாக டி.இ.ஓ. போட வேண்டும். அது நமக்குத் தேவையில்லாதது அல்லவா? அந்தந்த சரகத்தில் இருக்கும் டி.இ.ஓ-க்களுக்கே அந்தப் பள்ளிக்கூடத்தை விட்டு விடலாம். அரசாங்கத்திற்கும் பணச் செலவு குறையும். அதை அரசாங்கம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் ஊரில் பி.இட். கல்லூரி இருக்கிறது. அதிலே 80, 90 பேர் வரை படிக்கிறார்கள். அங்கு அட்மிஷன் கொடுப்பது சரியான முறையில் இல்லை. அது மலையாள ஆதிக்கத்தில் இருக்கும் பள்ளியாக இருக்கும் காரணத்தால் கேரளத்திலிருந்து அதிகமான பேர் வந்து படித்து விட்டுப் போய்விடுகிறார்கள். ஆகவே, அட்மிஷன் கொடுக்கும்போது கலெக்டர் சி.இ.ஓ., கல்லூரி பிரின்சிபால் மூன்று பேர் கொண்ட குழு மூலம் அட்மிஷன் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

மலையாளமோ, தெலுங்கோ படித்த ஆசிரியர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. எங்கள் ஊரில் மலையாளம் படித்த ஆசிரியர்களுக்கு வேலையே கிடையாது. செகண்ட் லாங்வேஜ் மலையாளம்—அதனால் அவர்களுக்கு வேலை இல்லை. அவர்கள் எல்லாம் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள். ஆகவே, மலையாளம், தெலுங்கு படித்த ஆசிரியர்களுக்கு வேலை அளிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

என்னுடைய தொகுதியில் செயின்ட் ஜோசப் உயர் தொடக்கப்பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று விண்ணப்பித்திருக்கிறார்கள். அதற்குப் பக்கத்தில் இருக்கும் பள்ளிக்கூடங்கள் மறுப்புச் சொல்லாமல் இருக்க வேண்டும். யார் எதிர்ப்பு இருந்தாலும் அரசாங்கம் பல இடங்களில் உயர்நிலைப் பள்ளியைத் தொடங்க அனுமதி கொடுத்திருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒரு பெண்கள் உயர்நிலைப்பள்ளி இருக்கிறது. அங்கு ஒரு ஆண்கள் உயர்நிலைப் பள்ளியையும் தொடங்க வேண்டும். அதற்கு அனுமதி தரவேண்டும். நான் சொன்ன பல கருத்துக்களையும் மனதில் வைத்துச் செயல்பட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக்கொள்கிறேன்.

<u>திரு. ஆ. பரந்தாமன் :</u> மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தை வரவேற்று ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.



இந்த ஆண்டு ஏறத்தாழ எல்லாக் கல்விக்கும் சேர்த்து 148 கோடி ரூபாய் நமது அரசு செலவிடப் போகிறது என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் முழு மனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தியத் துணைக் கண்டத்திலேயே மிகச் சிறப்பான முறையில் பணியாற்றுகின்ற தமிழகக கல்வி இலாக்கா எல்லா அறிஞர்களின் பாராட்டுதலையும் பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதிலே சந்தேகம் இல்லை. இவ்வளவு முன்னேற்றங்களைக் கண்டு கொண்டிருக்கும் நாம் வருங்காலத்தில் படிப்பை முடித்து வெளி வருகிற மாணவர்களுக்கு நல்ல எதிர் காலம் இருக்கும் என்று உறுதியளிக்க முடியுமா என்றால், மிக வேதனையோடு குறிப்பிடுகிறேன்—நிச்சயமாக முடியாது என்றுதான் என்னால் சொல்ல முடியும்.

இதற்காகத்தான் பல நேரங்களில் வற்புறுத்தியிருக்கிறேன்—சமுதாயத்தில் ஏற்படுகிற மாற்றங்களுக்கேற்ப இந்தியத் துணைக் கண்டத்திலே இருக்கிற சமுதாயம், சமூகப் பொருளாதாரம் இவைகளிலே மாற்றங்கள் எப்படி இருக்கின்றன என்று கண்டறிந்து அந்த முறையில் அப்படிப்பட்ட புத்தகங்களை மாற்றியமைக்க வேண்டுமென்று வலியுறுத்தியிருக்கிறேன். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள்கூட இரண்டு நாட்களுக்கு முன்னாலே பதில் அளிக்கின்ற நேரத்தில் பாடப் புத்தகங்கள் ஓரளவு மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால் அதைப் பார்க்கின்ற நேரத்தில் முழுமையாக அது அமையவில்லை என்ற கருத்தை இந்த நேரத்தில் நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். இந்தத் தரம் எப்படி இருக்க வேண்டுமென்றால் . . .

'The professional as well as general educational courses should enable the student to understand and appreciate the nature of forces—social, political, economic and technological—which are—ending to transform modern Indian society ...

என்ற அந்த வகையிலேதான் பாடப் புத்தகங்கள் அமைய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். தரத்தைப் பற்றிப் பேசுகிற அதே நேரத்தில் மீண்டும் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன் . . .

Standard should be—

(*a*) dynamic and keep on rising with the demands for the higher levels of knowledge, skills or character which a modernising society makes ; and

(*b*) internationally comparable, at least in those key sectors where such changes are important and necessary.

அந்த வகையிலே நம்முடைய பாடப் புத்தகங்கள் இருக்க வேண்டும். அதற்கு கல்வி இலாகா உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மிக முக்கியமாக நான் சுட்டிக்காட்ட விரும்புவது—இன்றைக்கு முதலாவது வகுப்பில் இருந்து ஐந்தாவது வகுப்பு வரை இருக்கின்ற பிள்ளைகளிலே 61·6 லட்சம் பேர் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே 55·6 லட்சம் பிள்ளைகள்தான் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். 6 லட்சம் பேர் பள்ளிக்குச் செல்லாமல் ஒவ்வொரு ஆண்டும் இருந்து கொண்டிருக்கிறார்கள். 11 வயதிலிருந்து 14 வயது வரை இருக்கும் பிள்ளைகள் ஏறத்தாழ 27·7 லட்சம் பேர் தமிழ்நாட்டில் இருந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களிலே எவ்வளவு பேர் இன்றைய தினம் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று பார்த்தால் வெறும் 14·56 லட்சம் பேர்தான் பள்ளிக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள். இதைப் பார்க்கின்ற நேரத்தில் ஏறத்தாழ 19 லட்சம் பிள்ளைகள் தமிழ்நாட்டில் பள்ளிக்குச் செல்லாமல் இருந்து கொண்டிருக்கிறார்கள். இதிலே வேதனைக்குரியது என்னவென்றால்—இந்த 19 லட்சம் பேர் படிக்காது இருக்கின்றவர்களுடைய எண்ணிக்கையில் 60 சதவிகிதம் ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டில் கூடிக் கொண்டே போகிறது. இதற்கு கல்வி இலாகா என்ன செய்யப் போகிறது என்று கேள்வி கேட்க விரும்புகிறேன்.

அடுத்து, நான் கூறிக் கொள்ள விரும்புவது சென்ற ஆண்டு கூடப் பேசினேன்—

'There is a serios wastage'

என்று பேசியிருக்கிறேன். முதல் வகுப்பில் இருந்து 4-வது வகுப்பு வரை 51·22 ஆக இருந்த வேஸ்டேஜ் இன்றைக்கு 60 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. அது மட்டுமல்ல. இன்றைக்கு பி.யு.சி. வகுப்பில் இருந்து முதலாவது ஆண்டு பட்டப்படிப்புவரை 53 சதவிகிதமாக இருந்த வேஸ்டேஜ் இன்றைக்கு 55 சதவிகிதமாக உயர்ந்திருக்கிறது. எஞ்சினியரிங் கல்லூரியில் 20 சதவிகிதம் வேஸ்டேஜ் இருந்து கொண்டிருக்கிறது. இதை முக்கியமாகக் கவனித்து நமது இலாகா களைய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து நான் சொல்லிக் கொள்ள விரும்புவது,—

The Pre-University Course represents a special case of educational waste.

இன்றையதினம் குறிப்பிட விரும்புகிறேன். இதை அடியோடு எடுத்துவிட வேண்டும்.

'This is a waste both in the case of parents and students'

என்று என்னால் சொல்ல முடியும்.

ஆகவேதான் அண்டர் கிராஜுவேட் கோர்ஸ்களை உருவாக்க வேண்டும். இன்றைக்கு அமெரிக்காவில்—

'Advance Placement Programme,



என்று வைத்திருக்கிறார்கள். இதைத்தான் நீங்கள் முக்கியமாக கவனிக்க வேண்டும். அந்த வகையில் அண்டர் கிராஜுவேட் கோர்சைத் திறக்க வேண்டும். ஹையர் செகண்டரி ஸ்கூலில் ஓராண்டு, இரண்டாண்டைக் கூட்டிக் கொண்டால் கூடப் பரவாயில்லை.

அதே நேரத்தில் நாம் ஒவ்வொரு ஆண்டும் பிள்ளைகளுக்கு விடுமுறை விட்டுக் கொண்டிருக்கிறோம். நான் அதைத் தவறாகச் சொல்லவில்லை. தேசியத் தலைவர்களுடைய பிறந்த நாளிலும், இறந்த நாளிலும் விடுமுறைகள் விட்டுக் கொண்டிருக்கிறார்கள். அது தேவையில்லை என்பது என்னுடைய கருத்து. இதை நான் சொல்லுகிற நேரத்தில் தலைவர்களை குறைத்து மதிப்பிடுவதாகக் கருதவேண்டாம். அவர்கள் பிறந்த நாளிலும், இறந்த நாளிலும் கூட மாணவர்கள் படிக்கின்ற வாய்ப்பைப் பெறுகிறார்கள் என்ற அந்த அடிப்படையில்தான் விடுமுறைகள் தேவையில்லை என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்கு டைரக்டர் ஆப் ஸ்கூல் எஜுகேஷன் என்றுதான் வைத்திருக்கிறார்கள். எலிமெண்டரி எஜுகேஷனுக்கு தனியாக டைரக்டரை நியமிக்க வேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பஞ்சாயத்து யூனியன் நிர்வாகத்திலே இருக்கின்ற எல்லா எலிமெண்டரி ஸ்கூல்களையும்கூட நேரடியாக அரசாங்கம் ஏற்றுக் கொண்டால் பரவாயில்லை என்பது என்னுடைய ஆசை.

நான் மிக முக்கியமாகச் சுட்டிக்காட்ட விரும்புவது—இந்தியத் துணைக் கண்டத்தில் இருக்கும் எல்லா மாநிலங்களையும் பார்க்கிற நேரத்தில் தமிழ்நாட்டிலே இருக்கும் நமது கல்வி இலாகாவிலே, இன்றைக்குப் பல்கலைக் கழகங்கள் எந்த முறையில் அபிவிருத்தியாகி இருக்கின்றன என்று பார்த்தால் இரண்டு மடங்குதான் அதிகமாகியிருக்கிறது இந்த 25 ஆண்டுக் காலத்தில்.

மற்ற மாநிலங்களில் கிட்டத்தட்ட ஐந்து மடங்கு அதிகமாகப் பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. இந்தப் புள்ளி விவரங்களை என்னால் சொல்ல முடியும்.

பீஹாரில் 8 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

குஜராத்திலே 8 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

மத்தியப் பிரதேசத்தில் 10 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

மஹாராஷ்டிரத்தில் 9 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

உத்திரப் பிரதேசத்தில் 11 பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன.

மேற்கு வங்கத்தில் 7 பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

நம்மை விட சிறிய மாநிலமான, குறைந்த ஜனத் தொகை கொண்ட கேரளாவில் நான்கு பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன.

கஜேந்திர கட்கர் கமிட்டி முப்பது அல்லது நாற்பது கல்லூரிகளுக்கு ஒரு பல்கலைக்கழகம் அவசியம் இருந்தாக வேண்டுமென்று சொல்லியிருக்கிறது. இருபத்தைந்து ஆண்டுக்காலத்தில் தமிழ் நாட்டில் மட்டும் இரண்டு மடங்கு அளவிற்குத்தான் பல்கலைக் கழகங்கள் அதிகமாக ஆகியிருக்கிறதென்றால் இதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இங்கே சொல்லியிருக்கிறார்கள். ஒரு பல்கலைக் கழகத்தை ஐந்தாவது ஐந்தாண்டு திட்டத்திலே உருவாக்கவிருக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது போதாது. 183 கல்லூரிகள் தமிழ் நாட்டில் இருந்து கொண்டிருக்கின்றன. இந்த 183 கல்லூரிகளுக்கு ஆறு பல்கலைக்கழகங்கள் இருக்க வேண்டும் என்ற என்னுடைய தாழ்மையான கருத்தை இந்த இலாகாவிற்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதே நேரத்தில் இன்றைக்கு 56 கல்லூரிகள் தான் நேரடியாக அரசாங்கத்தின் நிர்வாகத்தில் இருந்து கொண்டிருக்கின்றன. ஏறத்தாழ 132 கல்லூரிகள் எய்டட் கல்லூரிகளாக இருக்கின்றன. அங்கே பணியாற்றுகிற ஆசிரியர்களுக்கு, பேராசிரியர்களுக்கு நல்ல பாதுகாப்பை நமது அரசாங்கம் உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக தமிழ் வளரவேண்டுமென்று நாம் பாடுபடுகிற அதே நேரத்தில் பிற நாடுகளுடைய தொழில் நுட்ப அறிவை அறிவதற்கு ஒரு சில ஆண்டுகளுக்கு ஆங்கிலத்தையும் படித்தாகவேண்டும். இதைப் பார்க்கின்ற நேரத்தில் ஆங்கிலத்தின் தரம் தமிழ் நாட்டில் மிக மிகக் குறைந்து வருகிறது. இதைப் பற்றி நான் பேசுகிற நேரத்தில் என் சிந்தனை இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று கொண்டிருக்கிறது. ஆங்கிலத்தைத் தாய் மொழியாகக் கொண்ட இங்கிலாந்து நாட்டிலேயே இன்றைக்கு மாணவர்களுக்கு ஆங்கில அறிவு குறைந்து இருக்கிறதென்று 10 நாட்களுக்கு முன்னால் செய்தி வந்திருக்கிறது. இதற்காக லண்டனில் ஒரு கமிட்டியைப் போட்டார்கள். ஆங்கில அறிவை எவ்வாறு அவர்களுக்குப் புகுத்த முடியுமென்று யோசித்தார்கள். ஆகவே நீங்கள் ஆங்கில அறிவைப் பெருக்க முயற்சி எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே நேரத்தில் தமிழ் நாடு வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களுக்கு நாம் சீக்கிரமாகவே விடுமுறை விட இருக்கிறோம். இந்த சம்மர் ஹாலிடேஸிலே கூட மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கவேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

நான் கடைசியாக குறிப்பிட விரும்புவது, திருத்தணிக் கல்லூரியைப் பற்றியது. நான் வேதனையோடு குறிப்பிட விரும்புகிறேன். திருத்தணியிலே இருக்கிற தேவஸ்தானம் ஏறத்தாழ 5 லட்ச ரூபாயை ஒரு ஆண்டிற்கு முன்னாலேயே கட்டி விட்டது. பணம் கட்டி ஒரு ஆண்டு ஆகியும் கூட அங்கே புதிய கட்டிடங்கள் கட்ட முயற்சி எடுக்கப்படவில்லை. இதைப் பற்றிக் கேட்கின்ற நேரத்திலே பி.டபிள்யூ.டி. இதற்கான இடத்தைச் சொல்ல



வில்லை என்று சொல்கிறார்கள். இடத்தை உடனடியாகக் கண்டறிந்து, திருத்தணியில் கல்லூரிக்குப் புதிய கட்டிடங்களை உருவாக்க வேண்டுமென்று கல்வியமைச்சரவர்களை நான் கேட்டுக்கொண்டு, பொதுவாக இந்த மானியத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

திரு. என். கே. பழனிசாமி : கனம் சபாநாயகர் அவர்களே. கல்விக்காக 128 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பதை நான் வரவேற்கிறேன். ஆனால் அதே சமயத்தில் டெக்னலாஜிகல், சயிண்டிபிக் ஆகிய கல்விகளுக்கு மிகவும் குறைவாக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். வீர சுதந்திரப் போராட்டத்தின் போது மாணவர்களும் ஆசிரியர்களும் இந்த கல்வி முறையானது வெறும் கிளார்க்குகளை உற்பத்தி செய்வதற்குண்டான முறையாக இருக்கிறது, இது நம் தேசத்திற்கு உகந்ததல்ல, மக்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க கூடியதல்ல, இந்தக் கல்வி முறையை மாற்ற வேண்டுமென்று தீவிரமாக பங்கு கொண்டார்கள் என்பதும், அந்தப் போராட்டத்திற்குப் பிறகு இது வரை எந்த விதமான மாற்றமும் இல்லை என்பதும் நமக்குத் தெரியும்.

கிடைத்த சுதந்திரம் முதலாளித்துவத்தின் கையில் கிடைத்தவுடனே வெள்ளைக்காரன் சுதந்திர காலத்திற்கு முன் அவனுக்கு வேண்டுமென்று சொல்லப்படுகிற ஆட்களை எப்படித் தயார் செய்தானோ அதே மாதிரி சுதந்திரத்திற்குப் பிறகு முதலாளித்துவ அமைப்பும் அதற்கு வேண்டிய அளவிற்குத் தான் அதாவது ஒரு குறிப்பிட்ட அளவிற்குத் தான் விஞ்ஞான கல்வி போன்றவைகளை கொடுக்கிற நிலையை ஏற்படுத்திக் கொண்டது. இதனால் பெருவாரியான மக்கள் எழுதப் படிக்கத் தெரியாமல் இருக்கிறார்கள் என்பதை வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். நாட்டிலுள்ள 55 கோடி மக்களில் 20 கோடி பேர்கள் தான் சுதந்திரத்திற்குப் பிறகு எழுதப் படிக்க தெரிந்தவர்கள், எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் 35 கோடி பேர்கள் என்ற நிலை இருக்கிறது. சுதந்திரத்திற்குப் பிறகு எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் மிகவும் குறைந்திருக்கிறார்கள் என்று சொன்னால் அது மிகவும் கேவலமான ஒரு நிலைமையாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் கிட்டத்தட்ட 128 கோடி ரூபாய் கல்விக்காகப் பணம் செலவு செய்தும் கூட, ஆறிலிருந்து பதினோறு வயது வரையிலும் 60 சதவீதம்தான் பள்ளிக்கு வருகிறார்கள். 40 சதவீதம் வருவதில்லை. பதினோறு வயதிலிருந்து பதினாறு வயது வரை உள்ள மாணவர்களை எடுத்துக்கொண்டால் மூன்றில் ஒரு பங்கு தான் பள்ளிக்கு வருகிற நிலை இருக்கிறது.

அது மட்டுமல்ல, இன்னும் அப்பர் ஹையர் செகண்டரி ஸ்டேஜை எடுத்துக்கொண்டால், அதாவது பதினாறு வயது முதல் பதினேழு வயது வரை எடுத்துக்கொண்டால், ஐந்தில் ஒரு பங்குதான் பள்ளிக்கு வருகிற

நிலை இருக்கிறது. நாம் பெண்கள் ஆண்களுக்கு சரி நிகர் சமம் என்று சொல்கிறோம். அப்படி அரசியல் சட்டத்திலும் இருக்கிறது. அந்த அளவிற்கு ஆண்களுக்குத் தகுந்த மாதிரி பெண்கள் அதே அளவிற்குப் பள்ளிக்கு வருகிறார்களா என்றால் இல்லை. நிலப்பிரபுத்துவ மனப் பான்மைபடி பெண்கள் படித்து என்ன பண்ணுவது என்ற மனப்பான்மை காரணமாக இந்த நிலை இருக்கிறது.

பிரைமரி எஜுகேஷனைப் பொறுத்த வரை கம்பல்சரியானது என்று அரசியல் சட்டத்தில் இருக்கிறது. ஆனால் அதை நாம் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. அதை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டும். பாடங்களை திருத்தியமைக்கவேண்டும். மாணவர்களுக்கு கொடுக்கப்படும் மதிய உணவை சத்துணவாகவும், பாட புத்தகங்களை இலவசமாகவும், உடுப்புகளை இலவசமாகவும் அவர்களுக்கு நாம் கொடுக்கவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் கிராமப்புறத்தில் இருக்கிற மாணவர்களுக்கு எப்படி நகர்புறத்தில் சிறிய மாணவர்களுக்கு கிண்டர்கார்டன், நர்ஸரி என்று ஏற்படுத்தியிருக்கிறோமோ அதே போல ஏற்படுத்த வேண்டும். அது மட்டுமல்லாமல், மாணவர்கள், ஆசிரியர்களை திரட்டி அவர்களை ஓய்வு நேரங்களில் கிராமங்களுக்குச் சென்று படிப்பு வாசனை இல்லாதவர்களுக்கு படிப்பு சொல்லிக் கொடுக்கக் கூடிய வகையில் ஏற்பாடு செய்தால் கல்வி முறை நன்றாக இருக்கும். யூனிவர்சல் எஜுகேஷன் என்பது அப்போது தான் வெற்றிகரமாக இருக்கும்.

நாட்டில் அத்தனை பேரும் படித்தவர்களாக இருக்கவேண்டும். எல்லோருக்கும் அதற்கு வாய்ப்பு இருக்கவேண்டும். ஆனால் இன்றைக்கு உள்ள நிலைமை பணம் இருக்கிறவர்களுக்கு வாய்ப்பு இருக்கிறது, பணம் இல்லாதவர்களுக்கு படிப்பதற்கும், வேலைக்கும் வாய்ப்பு இல்லை. ஆகவே அடிப்படையான மாற்றம் செய்ய வேண்டும். நாம் ஏதோ சீர்திருத்தங்கள் செய்கிறோமே தவிர எஜுகேஷன் ஸ்டரக்சரிலே, அடிப்படையிலே எந்த வித மாற்றமும் இல்லை. குறிப்பிட்ட செக்ஷனுக்கு மாத்திரம் என்று இப்போதுள்ள நிலைமை இல்லாமல் எல்லோருக்கும் கிடைக்கக் கூடிய வாய்ப்பு இருக்கவேண்டும்.

அது மட்டுமல்ல, இன்றைக்கு கிராமத்தில் இருக்கிற பாட முறை பிரயோசனமில்லாமல் இருக்கிறது. கிராமத்தில் பயிலக்கூடியவர்களுக்கு நவீன விவசாயத்தைப் பற்றி குழந்தை காலம் முதல் போதிக்கக் கூடிய முறையில் கல்வி அமைய வேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு கல்வி பிரயோசனமுள்ளதாக இருக்கும். அவர்கள் ஹையர் செகண்டரி கல்விக்குப் பின்னாலே விவசாயத்தில் சரியான முறையில் ஈடுபட உதவியாக இருக்கும். அப்படிப்பட்ட மாற்றத்தை கல்வியில் கொண்டுவரவேண்டும்.





ஜாப் ஓரியண்டட் ஸ்கீம் என்பது சில கல்லூரிகளில் மட்டும் பரிட் சார்த்தமாக செய்யப்படுகிறது. இன்றைக்கு ஐ.டி.ஐய். பொறுத்த வரை அது இரண்டாங்கெட்டான் நிலைமையில் இருக்கிறது. அதில் பயிலுகிறவர்களை மாணவர்கள் என்று எடுத்துக்கொண்டால் அவர்களுக்கு ஸ்டைபண்டு கிடைக்கும், தொழிலாளர்கள் என்று எடுத்துக்கொண்டால் ஊதியம் கிடைக்கும். இந்த இரண்டும் இல்லாத ஒரு இரண்டாங்கெட்டான் நிலையில் இருக்கிறது என்று தெரிவித்துக் கொள் கிறேன். இவைகளை ஏன் சரியான முறையில் உபயோகப்படுத்தக்கூடாது என்று கேட்கிறேன். இன்றைய தினம் ஜாப் ஓரியண்டட்டாக மட்டும் இருந் தால் போதாது. அது ப்ரொடக்ஷன் ஓரியண்டட்டாகவும் இருக்கவேண்டும்.

டைப் அடிக்கும் கல்வியைப் பொறுத்த வரை, அதைக் கற்றுக் கொள்ளக் கூடிய வாய்ப்பு இருக்கிறதே தவிர, பிராக்டிகலாக செய்யக் கூடிய முறை இல்லை. நகர்ப்புறங்களிலே இந்த கல்வியைக் கற்றுத் தருவதற்கு டெக்னிகல் இன்ஸ்டிட்யூட்கள் ஏராளமாக இருக்கின்றன. என்னுடைய யோசனை இந்த ஸ்தாபனங்களை எல்லாம் ஹைஸ்கூல்களோடு அஃபிலியேட் செய்து விடலாம். மேலும் மாணவர்கள் பிராக்டிகல் டிரெயினிங் பெறக் கூடிய முறையில் இந்த கல்வி அமைய வேண்டும். லோயர் செகண்டரியிலே நவீன விவசாயம் பற்றியும், ஹையர் செகண்டரியிலே ஜாப் ஓரியண்டட் கோர்ஸாக, மேற்சொன்ன கல்வி போன்றவைகள் இருக்கவேண்டும்.

நம்முடைய கல்வி முறையைப் பொறுத்த வரை, பழைய கல்விமுறைதான் இருக்கிறது என்று வருத்தத்தோடு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இன்னமும் கொலம்பஸ் பற்றித் தான் அதிகப் பாடத் திட்டம் இருக்கிறது. தேசியத் தலைவர் பாபு ராஜேந்திரப் பிரசாத் போன்றவர்களைப் பற்றி பத்து வரிகள் தான் பாட புத்தகங்களில் வருகிற நிலை இருக்கிறது. இப்படி பிரயோசனமில்லாத பாடங்கள் தான் நம்முடைய பாட புத்தகங்களில் இருக்கின்றன.

[முற்பகல் 11–00]

இப்போதைய கல்வி முறை மிகவும் பழமையானது. பிரயோசனம் இல்லாதது. சொல்லிக்கொடுக்கும் முறைக்கும் நடைமுறைக்கும் சம்பந்தம் இல்லை. சொல்லிக்கொடுப்பதற்கு விரோதமாக இருக்கிறது. மாணவர் களுக்குப் புரியவில்லை. அவர்களுக்கு திரும்பச் சொல்லும், "ரீசனிங் ஆப் பவர்", "கிரியேடிவ் ஸ்கில்" இல்லை. பி.எஸ்.சி. படித்தாலும் கிளார்க்கு உத்தியோகத்திற்குத்தான் போகவேண்டியிருக்கிறது. அதற்கு அவ்வளவு பணம் செலவழிக்க வேண்டுமா? லாபரேடரி செலவு, புரொ பசர் செலவு, ஆசிரியர்கள் செலவு இவ்வளவு செய்த பின்னால் அவர்கள் கிளார்க் உத்தியோகத்திற்குத்தான் போகவேண்டியிருக்கிறது. எஸ்.எஸ்.எல். சி. படித்தால் கிளார்க் வேலைக்குப் போதும். இது நேஷனல் வேஸ்ட். இவ்வளவு கல்வி கொடுத்தும் பயன் இல்லை என்று சொன்னால், இந்தக் கல்வி முறையில் ஒரு மாற்றம் தேவை. மாற்றி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைய தினம் படித்தால் அவனுக்கு "காரன்டி ஆப் எம்பிளாய்மெண்ட்" கிடையாது. படித்தவர்களால் ஒன்றும் செய்ய முடியாது. தேங்காய் வியாபாரம் கூட செய்ய முடியாது. படித்தால் அதற்கேற்ற உத்தியோகம் காரன்டி இல்லை. இதனால் ஸ்டூடன்ட்ஸ் மத்தியில் ஒரு பெரிய அளவுக்கு கிளர்ச்சி ஏற்பட்டு இருக்கிறது. ஆகவே, ஒரு சாதாரண தகராறு வந்தாலும் காலேஜை இழுத்து மூடிவிடுகிறார்கள். மீறி திறந்தால் பரீட்சை நடந்தால் பூராவும், "மாஸ் காப்பியிங்", பரீட்சை வேண்டாம் என்று சொல்கிறார்கள். அது மாதிரி மாணவர்கள் மத்தியில் வன்முறை ஏற்படுவதற்குக் காரணம், இந்தக் கல்வி முறைதான். இங்கே வேலை இல்லாததற்குக் காரணம், காபிடலிசம், வேலையில்லை என்பது, பை-பிராடக்ட் ஆப் காபிடலிசம். இந்த முதலாளித்துவ முறையே உற்பத்தி குறைவு என்பதாகும். ஆகையால் படித்தவர்களுக்கு வேலை கிடையாது. இந்த முறை நாட்டில் மாற வேண்டுமானால், முதலாளித்துவ முறை மாறாமல் ஒன்றும் செய்ய முடியாது. இந்த மாதிரி முறையை மாற்றி அமைக்கக் கூடிய வகையில் செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பரீட்சை என்று எடுத்துக்கொண்டால், மெமரைஸ் செய்தால் போதும், நான்கு வருஷத்து எஸ்.எஸ்.எல்.சி. குவஸ்சின் பேப்பரை எடுத்துக் கொண்டு படித்தால் போதும். வேறு ஒன்றும் படிக்கத் தேவையில்லை. மற்ற நாடுகளில் இப்படிஇல்லை. ஆன்சரே குவஸ்சினாக இருக்கும். இன்று அகௌண்ட் டெஸ்ட் வைக்கிறோம். அதிலே புக் ரெபர் செய்து பரீட்சை எழுதுகிறார்கள். அந்த மாதிரி முறை சரியானது. அந்த மாதிரி முறை வந்தால் ஆசிரியர்களும் அதிகப்படியான வகையில் சொல்லிக்கொடுக்க வேண்டியிருக்கும், மாணவர்களும் அதிகப்படியாக படிக்கவும் செய்வார்கள். அப்படிச் செய்தால் தான் கல்வி வளரும்.

இப்போது இன்டர்னல் அசெஸ்மெண்ட் கொண்டு வந்து இருக்கிறோம். 2,500 பள்ளிகளில் 250 பள்ளிகளில் தான் கொண்டு வந்து இருக்கிறோம. அதனுடைய பலன் என்ன என்பதை இங்கே அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு இருப்பதில் இல்லை. இதற்கு 30 சதவிதம் என்று வைத்துக் கொள்ளலாம். 3 மாதம், 6 மாதம் என்கிற அளவுக்கு அந்த ஆசிரியர்கள் அந்த மாணவர்களோடு தொடர்பு கொண்டு சொல்லிக்கொடுக்க வேண்டும். அப்படி நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டுமென்றால் கட்டிடங்கள் அதிகப்படுத்த வேண்டும். சிட்டியில் எடுத்துக்கொண்டால் 60–க்கு 40–ல் ஒரு சின்ன கட்டிடத்தில் 4 கிளாஸ் நடத்த வேண்டும். அடுத்த வாத்தியார் சொல்லிக்கொடுப்பது இந்த வாத்தியாருக்குத் தெரியும். இப்படி இருந்தால் எப்படி ஒரு வாத்தியார் இன்டர்னல் அசஸ்மெண்ட் செய்ய முடியும். ஆசிரியர்கள் நேரடியாக மாணவர்களோடு பழகினால் தான் இன்டர்னல் அசஸ்மெண்ட் செய்ய முடியும்.இதை எல்லாம் யோசனை செய்து இன்டர்னல் அசஸ்மெண்ட் வைத்தால் நல்லது. அதைச் சரியான முறையில் செயல்படுத்த வேண்டுமென்றால் அதிகக் கட்டிட வசதி வேண்டும். ஆசிரியர்–மாணவர் 1:20 என்ற முறையில் இருக்க வேண்டும். அந்த வகையில் செய்ய வேண்டும். ஏதோ பணம் வந்தது செலவு செய்தோம் என்று நிலைமையில் இருக்கக்கூடாது.





இன்றைய தினம் இந்தியா பூராவும் 10 வருஷம் பள்ளி, 2 வருஷம் இன்டர்மீடியட், 3 வருஷம் பட்டப்படிப்பு என்று 15 வருஷம் வைத்து இருக்கிறார்கள். ஒரிஸ்ஸா, பீகார் போன்ற மாநிலங்களில் இந்த 15 வருஷப் படிப்பு வைத்திருக்கிறார்கள். கேரளாவில் அதை நடைமுறைக்குக் கொண்டு வந்து இருக்கிறார்கள். நாம் தான் அதிலே பின் தங்கியிருக்கிறோம். நாம் பழைய முறையிலேயே 11 வருஷம், 2 வருஷம் இன்டர், 3 வருஷம் பட்டப்படிப்பு என்று வைத்து இருக்கிறோம். அதை 10 வருஷம் பள்ளிப்படிப்பு, 2 வருஷம் இன்டர், 2 வருஷம் பட்டப்படிப்பு என்ற முறையில் வைக்கலாமா என யோசனை செய்ய வேண்டும்.

எல்லா இடங்களிலும் ஒரே மாதிரியான கல்வி முறை இருந்தால் மாணவர்களுக்கும் மேல் படிப்பு படிக்க வசதியாக இருக்கும். ஒரு மாநிலத்தில் 10 வருஷம், ஒரு மாநிலத்தில் 11 வருஷம் என்று சொன்னால், அவர்கள் 11 வருஷம் படிக்க வேண்டியதை 10 வருஷத்திற்குள் படிக்க வேண்டிய நிலைமை வரும். ஆகவே, அப்படிப்பட்ட நிலை ஏற்படாமல், எல்லா மாநிலங்களிலும் பின்பற்றுகிற அடிப்படையில் இங்கே கல்வி முறை கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பப்ளிக் ஸ்கூல் சிஸ்டம் ஏராளமாக இருக்கிறது. அதை ஏற்படுத்தி, மத்திய சர்க்காரில் ஏற்பட்டு இருக்கும் ஸ்தாபனத்தோடு அபிலியேட் செய்து விடுகிறார்கள். நேஷனல் எடுகேஷன் ரிசர்ஸ்ச் டிரெயினிங் சென்டர் என்று ஒரு அமைப்பு இருக்கிறது. அதில் சேர்ந்து படித்து விட்டு, நேரடியாக பி.ஏ. படிக்கலாம், பி.யு.சி. படிக்கவேண்டியது இல்லை. இப்போது ஐ. ஏ. எஸ். பல பேர் போகிறார்கள். தமிழ்நாட்டிலிருந்து போகிறார்கள். அவர்களெல்லாம் பாஸாகாததற்குக் காரணம் இங்கே எஸ்.எஸ்.எல். சி. வரை, பி. யு. சி.வரை தமிழில் படிக்கிறார்கள், பின்னர் பி. ஏ. ஆங்கிலத்தில் படிக்கிறார்கள், இதனால் அவர்களுடைய ஸ்டான்டர்ட் குறைந்து விடுகிறது, அவர்களுக்கு ஒன்றும் புரிவது இல்லை. ஆகவே, இந்த பப்ளிக் ஸ்கூல் சிஸ்டம், அதற்கு இருக்கும் சிலபஸ் நல்ல சிலபஸ். இப்போது கணக்குப் பாடத்தில் கணம் என்று கொண்டு வந்து இருக்கிறார்கள் இதனால் அவர்களுக்கு என்ன உபயோகம்? நடைமுறையில் அவர்களுக்கு ஒன்றும் தெரிவது இல்லை. நல்ல செட் தியரீஸ் வேண்டும். கணக்கு புதிய முறையில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றால் அதை 3–வது வகுப்பிலிருந்து கொண்டு வரவேண்டும் என்று அர்த்தமா? அவன் அங்கிருந்தே எக்ஸ், ஒய், இஜட் என்று படிக்க வேண்டிய அவசியம் இல்லை. இந்த முறையை மாற்றுங்கள்.

ஸ்கேல் ஆப் பேயை எடுத்துக்கொண்டால், கல்லூரி ஆசிரியர்கள் 17,500 பேர் இருக்கிறார்கள். 150 பிரைவேட் காலெஜ் இருக்கின்றன. 50 சர்க்காரிடத்தில் இருக்கின்றன. அவர்களுக்கு யு. ஜி. சி. பரிந்துரை செய்த சம்பளம் வேண்டுமென்று கேட்கிறார்கள். அதைக்கொடுத்தால் மத்திய சர்க்கார் 80 சதவிகிதம் நமக்கு மானியம் கொடுக்கிறது. அப்படியிருக்கிற போது சர்க்கார் அதை ஏற்க ஏன் தயங்குகிறது என்று எனக்குப் புரிய

[திரு. என். கே. பழனிசாமி] [1975 மார்ச் 20

இன்று கல்லூரிகளில் 3 டயர் சிஸ்டம் இருக்கிறது. பிரின்சிபால், புரொபசர், அசிஸ்டெண்ட் புரபொசர், டியூட்டர் என்று இருக்கிறது. இந்த மாதிரி யு. ஜி. சி. ஸ்கேலை ஏற்றுக்கொண்டால் அவர்களுடைய ஸ்கேல் ஆப் பே உயரும், அவர்களும் நல்ல வகையில் பணியாற்றுவார்கள் என்று சொல்லிக் கொள்கிறேன்.

காலேஜ் ஆசிரியர்களுக்கு நேரடியாக செக் கொடுக்கும் சிஸ்டம் கொண்டு வரவேண்டும். ஏனெனில், தனியார் கல்லூரியில் இருக்கிறவர்களுக்கு பணம் கொடுக்கிற நேரத்தில், அவர்கள் 100 ரூபாய் பிடித்துக் கொண்டு, மீதியைத்தான் ஆசிரியர்களுக்குக் கொடுக்கிறார்கள். அவர்களுக்கு எந்தவிதமான செக்யூரிட்டியும் இல்லை. பல கல்லூரிகளில் டியூட்டர்கள் எந்தவிதமான பிரமோஷன் இல்லாமல் இருக்கிறார்கள். அதையெல்லாம் சீர்திருத்தம் செய்கிற வகையில் மாறுதல் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

[மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.]

இப்போது சின்டிகேட் மெம்பர்களை எடுத்துக்கொண்டால், கல்விக்கும் அவர்களுக்கும் சம்பந்தம் இல்லை. ஆசிரியர் பிரதிநிதிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். அவர்கள் எப்போதோ ஆசிரியர்களாக இருந்து இருப்பார்கள். அந்த பாடி எப்படி இருக்க வேண்டுமென்றால், எலெக்டட் பாடியாக இருக்க வேண்டும். அப்போது தான் மாணவர்கள் பிரச்சனைகள், ஆசிரியர்கள் பிரச்சனைகள் ஆகியவற்றை பற்றி பரிசீலிக்க முடியும். அந்த மாதிரி இருக்கக்கூடிய நேரத்தில் நல்ல நிபுணர்களை அதில் நாமினேஷன் செய்து, அதை ஒரு அடானமஸ் பாடியாக செய்ய வேண்டும். என்னுடைய இதே கருத்தை வைஸ்-சான்சலர் அவர்களும் வலியுறுத்தி இருக்கிறார்கள். இந்த சிலபஸ் தயாரிப்பதில் ஆசிரியர்கள், மாணவர்கள் சேர்ந்து முடிவு எடுத்தால், மாணவர்களுக்கு எந்த அடிப்படையில் கல்வி இருக்கவேண்டுமென்று சொல்வதற்கும், ஆசிரியர்களுக்கும் எந்த விதத்தில் மாணவர்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தால் பயன் அளிக்கும் என்பதையும் கருத்தில் கொண்டு முடிவு செய்ய முடியும். அந்த மாதிரி முறையில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என் பேச்சை முடித்துக் கொள்கிறேன். நன்றி.

புலவர் சி. பழனிச்சாமி : தலைவர் அவர்களே, 1975-76, ஆண்டிற்கான கல்வி மானியக் கோரிக்கையை வரவேற்று எனது ஒரு சில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

"இன்னறுங்கனிச் சோலைகள் செய்தல்,
இனிய நீர்த்தண் சுனைகளியற்றல்,
அன்ன சத்திரம் ஆயிரம் ஆக்கல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
அன்ன யாவினும் புண்ணியங் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே"



1975 மார்ச் 20] [புலவர் சி. பழனிச்சாமி]

என்று பாடிய மகாகவி பாரதியாரின் கூற்றுப்படி இந்த நாட்டின் ஏழை, எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்கள் கல்வி நீரோடையில் சம வாய்ப்புப் பெரும்படியாக உயர்வதற்காக எல்லா வாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்து இருக்கிறார்கள். டாக்டர் நாவலர் அவர்கள் என இங்கே கூறிக் கொள்ள விழைகிறேன். அ மட்டுமல்லாமல் இந்த நம்முடைய வரவு–செலவுத் திட்டத்திலே கல்விக்காக மட்டும் மற்ற பிற துறைகளைக் காட்டிலும் அதிகமாக ஏறத்தாழ 1,40 கோடிக்கு மேல் செலவிட முன் வந்துள்ளது மிகவும் பாராட்டத் தகுந்தது ஒன்றாகும்.

இந்தப் பேரவையிலே "தமிழாய்ந்த தமிழ் மகன் தமிழகத்தின் முதலமைச்சராய் வருதல் வேண்டும்"....என்ற பாவேந்தர் பாரதி தாசனாரின் கூற்றுக்கிணங்க இன்றைக்குத் தமிழாய்ந்த தமிழ் மகனாகவும், தமிழ் உணர்வு நிரம்பப் பெற்றவராகவும் நம்முடைய டாக்டர் கலைஞர் அவர்கள் தமிழகத்தின் முதலமைச்சராய் வீற்று இருக்கின்றார்கள். அது போலவே நம்முடைய கல்வி அமைச்சராக இருக்கின்ற நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் தமிழிலே முதுகலைப் பட்டம் பெற்று நடமாடும் பல்கலைக் கழகமாக இருக்கின்றார். இப்படிப்பட்ட ஒரு நல்ல பொறகாலமாக இருக்கின்ற இந்த நாட்டிலே தமிழுக்கு உயர்வு கிடைக்காது என்று சொன்னால் வேறு எந்தக் காலத்திலும் தமிழுக்கு உயர்வு கிடைக்காது என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

ஆகையால்டாக்டர் கலைஞர், டாக்டர் நாவலர் அவர்கள் இன்று பதவி ஏற்று யால் இருக்கின்ற நேரத்தில் தமிழுக்கும், தமிழ் பேராசிரியர்களுக்கும் நல்ல உயர்வு தரவேண்டுமென்று மிகப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். அதனால் இன்றைய தினம் உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தமிழாசிரியர்கள் நீண்ட காலமாக ஒரு கோரிக்கையை முன்வைத்து உள்ளார்கள். அவர்கள் உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசியர்களாகத் தாங்களும் ஆக வேண்டுமென்று கோரிக்கை விடுத்துக்கொண்டு இருக்கிறார்கள். இது ஒரு நியாயமான கோரிக்கை. மற்ற பி. டி. ஆசிரியர்கள் தான் தலைமை ஆசிரியர்களாக பணியாற்ற தகுதி படைத்தவர்கள், தமிழாசிரியர்கள் தலைமை ஆசிரியர்களாக இருப்பதற்குத் தகுதி இல்லாதவர்கள் என்று சொல்வது தமிழைத் தாழ்த்துவது ஆகும் என்ற எனது தாழ்மையான கருத்தை கூறிக் கொள்ள விழைகிறேன். ஆகவே அருள் கூர்ந்து உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றுகின்ற தமிழாசிரியர்களை பி.டி. ஆசிரியர்களுடைய ஊழியத்தை இணையாக வைத்து தமிழாசிரியர்களுக்கும் தலைமை ஆசிரியர்கள் பதவி கொடுக்க வேண்டும் என்று மிகப் பணிவனபோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பணியாற்றும் பி.டி. ஆசிரியர்கள், இடைநிலை ஆசிரியர்கள் இவர்கள் எல்லாம் வேறு வேறு மாவட்டங்களில் பணியாற்றிக் கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் எல்லாம் தங்களுடைய சொந்த மாவட்டங்களில் பணியாற்றுகிற முறையில், மாறுதல் கேட்டால் மறுக்கப்படுகிறது. அப்படி மறுக்கப்படுகிற போது அவர்கள் தங்களுடைய பணியிலே கொஞ்சம் ஆர்வம் குறைந்து பணியாற்றுகின்ற நிலை ஏற்படுகிற காரணத்தால் அந்தந்த ஆசிரியர்கள் அந்தந்த மாவட்டங்களில் பணியாற்றுகின்ற வாய்ப்பு ஏற்படுத்திக்கொடுக்க வேண்டுமென்று பணிவன்போடு வேண்டி விரும்பி கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்லாமல் இந்த நாட்டிலே தமிழைப் பரப்புவதற்காக தமிழ்த் தொண்டு செய்து வருகின்ற தமிழாசிரியர்கள் உருவாக்குகிற தமிழ்க் கல்லூரிப் பேராசியர்களுக்குப் பல குறைகள் இருந்து கொண்டு வருகின்றன.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI** : Sir, on a point of order, Sir. When the Education Demand is being discussed in this House, I do not find the Hon. Minister for Education in this House.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கல்வி அமைச்சர் அவர்கள் இவ்வளவு நேரம் இங்கே தான் இருந்தார். அம்மையார் அவர்கள் கொஞ்சம் காலதாமதமாக வந்து இருக்கிறார்கள் என்று நினைக்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : நான் காலதாமதமாக வரவில்லை. இது அவர்களுடைய டிமாண்ட்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : உறுப்பினர் பேசிய பேச்சை நான் குறிப்பெடுத்துக்கொண்டு இருக்கிறேன். நீங்கள் பேசினாலும் குறிப்பெடுக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவர் போகிறபோது என்னிடம் சொல்லிக்கொண்டு போனார்.

**THIRUMATHI T. N. ANANDANAYAKI** : Major portion of the budget, amounting to nearly Rs. 118 crores is being allotted for Education and when that Demand is being discussed in the House, the Hon. Minister for Education must be in the House to note the points raised by Hon. Members.

திரு. ஜே. ஜேம்ஸ் : கல்வி அமைச்சர் இல்லை என்றால் சீப் மினிஸ்டர் இருந்தால் பரவாயில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. ஜேம்ஸ் பேசுகிறார் ; அவர் கட்சித் தலைவர் இல்லை. திருமதி அனந்தநாயகி பேசுகிறார் அவர் கட்சித் தலைவர் இல்லை. இரண்டு பேரும் சேர்ந்து சி.பி.ஏ. மீட்டிங்கிற்கு போய் இருக்கிறார்கள். ஆகவே, இதைத் கிளப்புவது சரியில்லை.

திரு. க. உரோ. எட்மண்ட் : நான் இப்போது வந்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : லீடர்ஸ் இருப்பது பற்றி சொல்லவில்லை. லீடர்ஸ் இருக்க வேண்டும் என்று ஆப்ளிகேஷன் இல்லை. எல்லா லீடர்சும் கலந்து கொண்டு சி.பி.ஏ. மீட்டிங் நடக்கிறது.

*புலவர் சி. பழனிச்சாமி : ஆகவே இந்த நாட்டிலே தமிழ் தொண்டு செய்கிற தமிழ்க் கல்லூரி பேராசிரியர்களுக்கும், தமிழ் ஆசிரியர்களுக்கும் ஏற்றம் கொடுப்பதுதான் இந்த நாட்டில் தமிழ் வளர்ப்பதாகும் என்ற கருத்தை நான் இங்கே கூறிக்கொண்டு தமிழ்க் கல்லூரிகளிலே பணி யாற்றுகின்ற தமிழ் பேராசிரியர்களுடைய சில கோரிக்கைகளை நிறை வேற்றிக்கொடுக்கும்படி மிகப் பணிவன்போடு கேட்டுகொள்கிறேன்.



தமிழ்க் கல்லூரியிலே பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கு இன்றைய தினம் இன்னும் குடும்ப நலத் திட்டம் செயல்படுத்தப் படாமல் இருக்கிறது. குடும்பநலத் திட்டம் என்பது இன்றைய தினம் கடை நிலை ஊழியர்களுக்கும் தொடக்கநிலைப் பள்ளி ஆசிரியர்களுக்கும் செயல்படுத்தப் பட்டுகொண்டுவருகிறபோது தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் இன்னும் இந்த குடும்ப நலத் திட்டம் கொடுக்கப் படாமல் இருப்பது வருந்தத் தக்க ஒன்றாகும். இந்த குடும்ப நலத் திட்டத்தை தமிழ்க் கல்லூரி பேராசிரியர்களுக்கும் உடனடியாக நீட்டித்து உதவுமாறு இந்த அரசை நான் மிக விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன். இது மட்டுமல்லாமல் தமிழ் கல்லூரிப் பேராசிரியர்களுக்கும் காலாண்டுத் தொடக்கத்திலிருந்து ஊதிய உயர்வை (Increment) கணக்கிட்டுக்கொடுக்க அரசை உடனடியாக ஆணையிட வேண்டுமென்று மிக பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்க் கல்லூரி பேராசிரியர்களுக்கும், பிற கலைக் கல்லூரி பேராசிரியர்களுக்கும் ஊதியத்தில் மிகவும் ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. இந்த வகையிலே நாம் தமிழைக் கூட தாழ்த்துகிறோமோ என்று எண்ண வேண்டி இருக்கிறது. ஆகவே, பணிவன்போடு வேண்டிக் கேட்டுக் கொள்வது எல்லாம் தமிழ்க் கல்லூரியிலே பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கும் பிற கலைக் கல்லூரியில் பணியாற்றுகின்ற பேராசிரியர்களுக்கும் உள்ள ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும்.

எம். ஏ. படித்த பட்டதாரி ஒருவர் கலைக் கல்லூரியிலே பணியாற்றினால் அவர் தொடக்கத்திலே வாங்குகிற ஊதியம் ரூ. 475 ஆக இருக்கின்றது. இதே எம். ஏ. பட்டம் பெற்றவர்கள் தமிழ் கல்லூரியிலே பேராசிரியர்களாக பணியாற்றினால் அவருக்கு ரூபாய் 400-க்குமேலே ஊதியமாக கொடுக்கப் படுவது இல்லை. ஏன் இந்த முரண்பாடு ? ஒரே கல்வித் தகுதி இருக்கின்ற இந்தப் பேராசிரியர்களுக்கு தமிழ்க் கல்லூரியிலே பேராசிரியர்களாகப் பணியாற்றினால் மட்டும் ஊதிய உயர்வு கொடுக்கப்படாமல் பிற கல்லூரி ஆசிரியர்களுக்கு கொடுத்து இருப்பது நியாயம் அல்ல என்று கூறிக் கொள்கிறேன். ஆகவே அருள் கூர்ந்து இந்த தமிழ்க் கல்லூரிகளிலே முதல்வராக பணியாற்றுகின்றவர்களுக்கு பிற கலை கல்லூரிகளிலே பணியாற்றுகின்ற பி. ஏ., பி. எஸ்ஸி., முதலிய வகுப்புக்கள் இருக்கின்ற முதல் நிலைக் கல்லூரிகளில் உள்ள முதல்வர்களுக்கு கொடுக்கக் கூடிய ஊதியத்தையும் தமிழ்க் கல்லூரியிலே பணியாற்றுகின்ற விரிவுரையாளர்களுக்கும், பிற கலைக் கல்லூரிகளில் பணியாற்றுகின்ற துணைப் பேராசிரியர்களுக்குக் கொடுக்கின்ற ஊதியத்தையும் கொடுக்கவேண்டுமென்று மிகப் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பட்டது)

இடை மறித்ததாலே நேரம் ஆயிற்று. தயவு செய்து 5 நிமிடம் கொடுக்க வேண்டும்.

தொடக்கப்பள்ளிகளிலே இந்த மதிய உணவுத் திட்டத்தை ஆசிரியர்களுக்கு சம்பந்தப்படுத்தி வைத்து கொண்டு இருப்பது தொடக்கக் கல்வியின் வளர்ச்சிக்கு மிகுந்த தடையாக இருக்கின்றது. ஆகவே மதிய உணவுத் வுத் திட்டத்தில் ஆசிரியர்களுக்கு சம்பந்தம் இல்லாமல் அங்காங்கு மதிய

உணவு பையம் ஏற்படுத்தி இதைத் தவிர்க்க வேண்டுமென்று பணிவன் போடு வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்

அடுத்து, மிக முக்கியமான ஒரு வேண்டுகோளை நான் இங்கே கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த நாட்டிலே புத்தர் தோன்றி, மனித சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வே இல்லை என்று ஏறத்தாழ 2500 ஆண்டு களுக்கு முன்னால் போதித்துச் சென்றார். அவருக்குப்பின் இந்த இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற சிந்தனையாளராகத் திகழ்ந்த தந்தை பெரியாரவர்கள் புத்தரைவிட மிக அழுத்தம் திருத்தமாக இந்தக் கருத்தை வலியுறுத்தி வந்தார்கள் என்பதுமட்டுமல்லாமல் ஏறத்தாழ அரை நூற்றாண்டுகளுக்கு மேல் தனது தள்ளாத வயதிலும், சாதியின் பேரால், மதத்தின் பேரால், சாஸ்திர சம்பிரதாயங்களின் பேரால் இந்தத் தமிழ்ச் சமுதாயம் எத்துணை அல்லற்படுகின்றதென்பதை எடுத்துக்காட்டிப் பகுத்தறிவுத் தொண்டு செய்து மறைந்தவராவார்.

ஆகவே, அத்தகு மாமேதை உயிருடன் இருக்கும்போதே அவருக்கு தமது பல்கலைக் கழகங்கள் டாக்டர் பட்டம் கொடுத்துப் பெருமைப் படுத்தியிருக்க வேண்டும்.

எனவே இப்போதாகிலும், தந்தை பெரியாருக்கு நமது பல்கலைக் கழகங்கள் மறைந்ததற்குப்பின் செய்கிற மரியாதையான போஸ்துமஸ் அவார்டு (Posthumous award) கொடுக்க நமது கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று மிகப் பணிவன்போடு விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்

இப்படிப் பெரியாருக்கு டாக்டர் பட்டம் கொடுப்பது பெரியாருக்குப் பெருமை என்று சொல்லமாட்டேன். அதைக் கொடுக்கின்ற பல்கலைக் கழகத்திற்குத்தான் பெருமை என்று கூறிக்கொண்டு இந்த மானியக் கோரிக்கையை ஆதரித்து அமர்கிறேன். வணக்கம்.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த கல்வித் துறை மானியத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இன்றைக்குத் தமிழ் நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சிக்காக இந்த அரசு செய்கின்ற பல்வேறு செலவுகளில் கல்வித் துறை செலவு பெரும் பகுதியாக இருப்பதால் அது நல்லமுறையில் செயல்பட வேண்டுமென்ற அடிப்படையில் என்னுடைய கருத்துக்களை இந்த மாமன்றத்தின் முன் வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நமக்குத் தரப்பட்டிருக்கிற மாநிலத் தொலைநோக்குத் திட்டத்தின்படி 1971-ம் ஆண்டு நபர்வாரி வருமானம் ரூ. 564 என்று சொல்லப்பட்டிருக்கிறது. 1983–84 ஆம் ஆண்டில் 1,308 ரூபாய் என்ற அளவில் அது உயரவேண்டுமென்பதற்கான அடிப்படையிலே திட்டங்கள் போடப்பட்டு வருவதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது.



ஆனால் அதே நேரத்தில் இந்தியாவிலே இருக்கிற பஞ்சாப் மாநிலத்தில், தனி நபர் வருமானம் இன்றைக்கு 1,054 ரூபாயாக இருப்பதற்குக் காரணம் அங்கே இருக்கிற அமைச்சர்களும் முதலமைச்சரும் இருக்கின்ற அதிகாரங்களை வைத்துக்கொண்டு, தம் சொந்தக் காலில் நின்று (Self-sustaining and self-generating economy) என்ற வகையில் செயல்படுகிற காரணத்தால் இன்றைக்குப் பஞ்சாப் மாநிலம் இந்தியாவிலேயே மிகச் சிறந்த மாநிலமாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த முறையிலே நம்முடைய தமிழ் நாட்டின் வருமானம் பெருக வேண்டுமென்றால் கல்வித் துறைக்கு அதிகமான பணம் செலவிடும்போது நல்ல திட்டங்களை வகுத்துச் செலவிட வேண்டும். அதற்கு எங்களைப் போன்றவர்கள், இந்த நாட்டில் இருக்கிற கல்வி நிபுணர்கள் தமிழ் நாட்டு கல்வி வளர்ச்சிக்குச் செலவிடுகின்ற பணத்தில் பெரும்பகுதி தொழில் கல்விக்கு செலவிடப்பட வேண்டுமென்று சொல்கிறார்கள். அதன் நோக்கம் என்னவென்றால் படிக்கின்ற மாணவர்கள் பள்ளியை விட்டு வெளியேறும்போது வாழ்க்கையில் தொண்டாற்றும் உறுதி, வாழ்க்கையில் முன்னேற முடியும் என்ற ஊக்கம், உற்சாகம் வளர வாய்ப்பு ஏற்படுகிறது. ஆகையால் நல்ல வாழ்க்கை வாழமுடியும் என்ற நம்பிக்கை மாணவர்களுக்கு வருகிறது.

இந்த ஒரு காரணம் பற்றி மட்டும் கட்டாயத் தொழிற்கல்வி தர வேண்டுமென்று சொல்லவில்லை; வேறு பல காரணங்களும் இருக்கின்றன. பின் தங்கிய மாணவர்களுக்கு, தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு இன்றையதினம் கல்வியிலே பல சலுகைகள் வழங்கப்படுகின்றன; அதை வரவேற்கிறோம். ஆனால் இப்போதிருக்கின்ற பாட திட்டத்தை மாற்றியமைக்க வேண்டும். இன்றைக்கு இருக்கிற இந்த பாடத் திட்டத்தை உயர்ந்த ஜாதிக்காரர்கள் தங்களுக்குச் சாதகமாக்கிக் கொள்கிறார்கள். இன்றைக்கு இருக்கிற இந்தப் பாடத் திட்டத்தை மாற்றி, தொழில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தால், அப்படி ஏற்படுகிற கல்வித் திட்டம் நிச்சயமாக எல்லா ஜாதிக்காரர்களுக்கும் எல்லா மதத்தவர்களுக்கும் எல்லாப் பிரிவினருக்கும் ஒரு நடுநிலைத் திட்டமாக அமையும்; சமுதாயத்திற்கு நல்ல பயனிருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம் அண்ணாவினுடைய கொள்கையை அப்படியே பின்பற்றுகிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் ஜாதியற்ற, சமயமற்ற, ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை உருவாக்குவதை லட்சியமாகக் கொண்டிருக்கிறோம் என்று சொல்லக்கூடியவர்கள் அதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்களா என்றால் இதுவரை இல்லை என்று துணிந்து சொல்ல முடியும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால் அத்தகைய ஒரு சமுதாயத்தை உருவாக்கும் லட்சியத்தை அடைவதற்காக கடந்த எட்டு ஆண்டு காலத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு இந்த இந்தியத் துணைக் கண்டத்திலே ஒரு காங்கிரஸ் அமைச்சர் அல்லது ஒரு கம்யூனிஸ்ட் கட்சி அமைச்சர் செய்யாத காரியத்தை செய்திருக்கிறார்களா என்றால் இல்லை.

ஏற்றத்தாழ்வற்ற ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்றால் என்னைப் போன்றவர்கள் வேண்டுகோளாக இந்த மன்றத்திலே விடுக்க

[திரு. செ. அரங்கநாயகம்] [1975 மார்ச் 20

விரும்புவது என்னவென்றால், ஜாதியின் பெயரால் சலுகைகள் கூடாது; ஏழ்மையின் அடிப்படையில் எல்லோருக்கும் ஆதரவு காட்ட வேண்டும். (Classless and Casteless Society) என்ற அளவில் வழிவகைகளை இந்த ஆண்டிலிருந்தாவது ஏற்படுத்தி ஒரு அடிப்படையை நீங்கள் அமைக்க வேண்டும். அப்படி அமைத்தால் அது நிச்சயமாக திராவிட முன்னேற்றக் கழக அரசின் முத்திரை பெற்றதாக இருக்கும் என்ற உறுதியைத் தர விரும்புகிறேன். அப்படி எல்லோருக்கும் சலுகைகள் தர முடியவில்லை என்றாலும் இந்த நேரத்தில் பின்தங்கிய நிலையில் இருந்து வருகின்ற பெண் இனத்திற்கேனும் இத்தகைய ஜாதி பாகுபாடற்ற தன்மையில் சலுகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்போது சர்வதேச பெண்கள் ஆண்டு கொண்டாடப்பட்டு வருகிறது. இத்தனை ஆண்டு காலமாக ஆண்களைப் போல தங்களுடைய பெயருக்குப் பின்னாலே செட்டியார் என்றும் நாடார் என்றும் முதலியார் என்றும், ஐயர் என்றும், ஐயங்கார் என்றும், வன்னியர் என்றும், கவுண்டர் என்றும் ஜாதிப் பெயர்களைப் போடாமல் இருந்தவர்கள் பெண்கள். தங்கள் பெயருக்குப் பின்னாலே ஜாதிப் பெயரைப் போடாமல் இருந்தவர்கள் பெண்கள் என்ற காரணத்திற்காக அந்தச் சமுதாயத்திற்குக் காட்டுகிற ஒரு மரியாதையாக ஏழை என்றும் பணக்காரர் என்றும் பாராமல், உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்று பாராமல் ஜாதி மத வேறுபாடு பாராமல் எல்லாப் பெண்களுக்கும் எல்லாக் கட்டங்களிலும் கல்வியை இலவசமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இன்றைக்கு அரசு கல்வித் துறை நிர்வாகத்தில் ஒரு பிரிவை வணிகத் துறை நிர்வாகம்போல் நடத்திக்கொண்டிருக்கிறது. அது தான் தமிழக பாட நூல் நிர்வாகம். அந்த நிர்வாகத்தைப்பற்றி சில வார்த்தைகள் குறிப்பிட விரும்புகிறேன். அந்த நிர்வாகத்தின் மானேஜிங் டைரக்டர் ஒரு முதலியார். உயர்ந்த ஜாதிக்காரரை மானேஜிங் டைரக்டராகப் போட்டிருக்கிறார்கள். அவருக்குக் கீழே எப்படி இருக்கிறது என்றால் அங்கே பணி புரிகிற 118 பேர்களில் 48 பேர்கள் அந்தக் குறிப்பிட்ட ஜாதியைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள். அதைப் பார்க்கும் போது உரிய விகிதாச்சாரம் தாழ்த்தப்பட்டவர்களுக்கு, பின்தங்கியவர்களுக்கு கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்வதெல்லாம் பேச்சளவில் இருக்கிறதே தவிர, பேசுகின்ற பேச்செல்லாம் தவறான நடவடிக்கைகளுக்குப் போடுகின்ற பட்டுத் திரைகளாகத்தான் இருக்கின்றன என்பதை இந்த அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

எல்லாம் தேசியமயம் என்று சொல்லுகிறார்கள்— தேசியமயமாக்க வேண்டுமென்று சொல்லுகிறார்கள். பாட நூல் நிறுவனத்தில் நான்கு பிரிவுகள் செயல்படுகின்றன. பாடங்களைப் பிரிக்கிறோம், அச்சடிக்கிறோம், வெளியிடுகிறோம், விற்பனை செய்கிறோம். இதில் இரண்டை மட்டும் தேசியமயமாக்கிவிட்டு மற்ற முக்கியமான இரண்டை விட்டுவிட்டார்கள். அச்சடிப்பதையும், விற்பனை செய்வதையும் தேசியமயமாக்காததால் அதன் மூலம் கொள்ளையடிக்கிறார்கள்; கொள்ளை லாபம் சம்பாதிக்கிறார்கள், அதற்கு இந்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை என்று இந்த நேரத்தில்நான் குற்றஞ்சாட்டுகிறேன்.



1975 மார்ச் 20] [திரு. செ. அரங்கநாயகம்]

வருஷந்தோறும் வியாபாரம் நடக்கிறது. 1972–73-இல் 2·51 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்து இந்த நிறுவனம் சம்பாதித்து இருக்கிற லாபம் 71·93 லட்சம் ரூபாய். 1973–74-இல் 1·93 கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்து இவர்கள் பெற்றிருக்கிற லாபம் 65 லட்சம் ரூபாய். ஆனால் நமக்கு முன்னால் வைக்கப்பட்டிருக்கிற அறிக்கையில் மக்களுக்கு மலிவான விலையில் பாட நூல்களை விற்பனை செய்கிறோம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அங்கே நடப்பதோ கொள்ளை லாப வியாபாரம்.

இலவசக் கல்வி என்று சொல்லப்படுகிறது. அப்படி இருக்கும்போது இந்த முறையில் அதிக விலை போட்டு, புத்தகங்களை விற்று, இப்படிக் கொள்ளை லாபம் அடிக்க வேண்டுமா? ஏழை மக்களிடமிருந்து கொள்ளை லாபம் சம்பாதிக்க வேண்டுமா என்ற குற்றச்சாட்டை சுமத்துகிறேன்.

அதுமட்டுமல்ல. 56 வட்டார மொத்த விற்பனையாளர்களை வைத்திருக்கிறார்கள். அதில் சிலருக்கு 4 வட்டங்கள், 5 வட்டங்கள் தந்திருக்கிறார்கள். அதனால் தனிப்பட்டவர்கள் நிறைய லாபம் சம்பாதிக்கிறார்கள். அவர்களுக்குத் தருகிற லாப விகிதாச்சாரம் இந்த ஆண்டு 10 சதவிகிதத்திலிருந்து $12\frac{1}{2}$ சதவிகிதமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. எதற்காக இந்த உயர்வு என்று கேட்க விரும்புகிறேன். இந்த ஆண்டு வெளியிடுகிற புதிய புத்தகங்கள் பெருமளவில் இருப்பதால் ஏற்கெனவே இருந்த லாப விகிதாச்சாரப்படி ஒரு நல்ல தொகை அவர்களுக்கு வர இருக்கும்போது லாப விகிதாச்சாரத்தை உயர்த்த வேண்டியது தேவை தானா? தேவையே இல்லை.

அது மட்டுமல்ல, அச்சிடுகின்ற வகையிலும் ஒருவருக்கு உரிமை தந்துவிட்டு, அவர்களுடைய ஸ்தாபனத்துக்கே விற்கின்ற உரிமையையும் தருவதால் வேறுபல ஊழல்களும் நடைபெறுவதற்கு வாய்ப்பு ஏற்படுகிறது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால் ஏசியன் பிரின்டர்ஸ் என்று ஒரு அச்சிடும் ஸ்தாபனம் இருக்கிறது. அந்த ஸ்தாபனத்திற்கு அச்சடிக்கின்ற வேலையைத் தந்திருக்கிறார்கள். அந்த நிறுவனத்தின் சொந்தக்காரர் பழனியப்பா செட்டியார். அந்த நிறுவனத்தின் பெயர் பழனியப்பா அண்ட் கோ என்பது. அவர்களுக்கே விற்கின்ற உரிமையையும் தந்திருக்கிறார்கள். அதனால் என்ன ஏற்படுகிறது என்றால், விற்பனையில் பல தவறுகள் நடக்கின்றன. 1972–73ல் ஏறத்தாழ ரூ, 2·51 கோடிக்கு வியாபாரம் நடக்கிறது. ஆனால் 1973–74 ல் ரூ. 1.93 கோடிக்குத் தான் வியாபாரம் நடக்கிறது. ஆக ஏறத்தாழ அரை கோடி ரூபாய்க்கு மேல் விற்பனை குறைந்திருக்கிறது. அதற்கு ஒரு காரணம் ஒரு சிலர் பழைய புத்தகங்களை வாங்கியிருக்கலாம். இன்னொரு காரணம் அச்சிடுகின்றவரே சர்க்காருக்கு அந்த புத்தகங்களை எல்லாம் தராமல் வேறு விற்பனை நிலையங்கள் மூலம் விற்றிருக்கலாம். இந்தமாதிரியான விற்பனைக்கு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருப்பது இந்தச் சர்க்கார்தான் என்ற குற்றச்சாட்டினை சுமத்துகிறேன்.

(முற்பகல் 11-30).

அதேபோல் நிறுவனத்தினுடைய பணத்தில் ஏறக்குறைய 2 கோடி ரூபாயை பேப்பர் ஸ்டாக் செய்து கொள்வதற்காக இன்வெஸ்ட் செய்திருக்கிருர்கள். எந்தப் பொருளாக இருந்தாலும்—பொருள்களுக்குத் தட்டுப்பாடு இருக்குமாளுல் அதைத் தேக்கி வைத்துக் கொள்வது பதுக்கல் குற்றத்தை இழைப்பதாகத்தான் ஆகும். இது anti-social in character. இதே காரியத்தை சர்க்கார் செய்கிற நேரத்தில் அதை மட்டும் நாம் ஒத்துக் கொள்ளத் தேவையில்லை. பேப்பரை ஸ்டாக் செய்து கொள்வதற்காக 2 கோடி மூலதனத்தை முடக்கியிருப்பதை Public finance has been mismanaged என்கிற அடிப்படையில் இது ஒரு மிஸ் மானேஜ்மெண்டுதான் என்ற கருத்தினை நான் சொல்ல விரும்புகிறேன்.

அதோடு, கல்லூரி புத்தகங்களை அச்சிட்டு விற்பனை செய்துகொண்டிருக்கிருர்கள். தேவையில்லாத புத்தகத்தை எல்லாம் அச்சிட்டு வைத்திருப்பதனுல் அவை விற்பனையாகாமல் தேங்கிக் கிடக்கின்றன. அதோடு ப்ரிண்டிங் ப்ரஸ்ஸே இல்லாத 2 நபர்களுக்கு இந்தப் புத்தகங்களை அச்சிட்டுக் கொடுக்க ஆர்டரைக் கொடுத்திருக்கிருர்கள். Sunrise Printers and Sarathi Printers என்கிற இருவரும் அதை வாங்கி வேறு பிரஸ்ஸில் அச்சிட்டுக் கொடுத்து விட்டு, லாபத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிருர்கள். இவை எல்லாம் நடைமுறைச் சீர்கேடுகள் என்ற முறையில் நான் கூற விரும்புகிறேன்.

பேரவைத் துணைத் தலைவர் அவர்களே நான் தாங்கள் அனுமதியுடன் இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில் வந்துள்ளதை குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். பேப்பருக்காக ரூ. 2 கோடி ஒதுக்கியிருப்பதைச் சொல்லியிருக்கிருர்கள். அதோடு பாடநூல் நிறுவனம் தனக்கென்று ஒரு அச்சகத்தை ஏற்படுத்திக் கொள்ளும் முயற்சியில் ஈடுபடாமல் பத்திரிகையில் விளம்பரம் செய்வதிலும், 59 லட்சம் ரூபாயில் 9 மாடிக் கட்டிடத்தை கட்டிக் கொள்வதிலும் கவனம் செலுத்திக்கொண்டிருப்பது தேசத்திற்கே செய்யப்படுகிற துரோகம் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதோடுகூட பாடநூல் நிறுவனத்தில் வேறு பல சாதிக்காரர்களும் வேலை செய்கிற நேரத்தில் இவர்கள் வேலை செய்ய முடியாத நிலைமையை பெரும்பான்மையான சாதிக்காரர்கள் செய்துகொண்டிருக்கிருர்கள். உதாரணத்திற்கு ஒருவர்—தம்பிராஜ் என்பவர் அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசராக இருக்கிருர். இவருக்கு மேல் செக்ரடரி என்பதாக டெபுடி இன்ஸ்பெக்டர் ஒருவரைக் கொண்டுவந்து போடுகிற நேரத்தில் இவர் சுயமரியாதையோடு அட்மினிஸ்ட்ரேடிவ் ஆபீசராக எப்படிச் செயல்பட முடியும் என்று கேட்கிறேன். மானம், ரோசம் எல்லாம் எல்லோருக்குமே உண்டு. இத்தகைய தவறுகள் பாடநூல் நிறுவனத்தில் நிறைய இருக்கின்றன என்பதை நான் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

திரு. சிட்டிபாபு அவர்களை காலேஜியேட் எஜுகேஷன் டைரக்டராகப் போட்டார்கள். ஸ்கூல் எஜுகேஷன் டைரக்டர் பதவி காலியானவுடன் அங்கிருந்து மாற்றினுர்கள். திரும்ப அங்கே போட்டார்கள். இப்படி குறிப்பிட்ட சில நபர்களுக்கே அந்தந்தப் பதவிகளைத் தருவதற்குப் பதிலாக அந்தந்தத் துறையில் உள்ள சீனியாரிட்டியை வைத்து அங்குள்ள



நல்ல அனுபவம் பெற்றவர்களுக்கே தரும்போதுதான் அங்கங்கே வேலை செய்கின்றவர்களுக்கு நல்ல உற்சாகமும், ஊக்கமும் பிறக்கும் என்ற கருத்தினைச் சொல்ல விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஆசிரியர்களை எடுத்து கொண்டால் " ஏ "விங், " பி "விங் என்று இரண்டு பிரிவுகள் இருக்கின்றன. நகராட்சி பள்ளிகளை எடுத்துக் கொள்கிறபோது "ஸி"விங் என்று கூட வர இருக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்ஞர்கள். இந்த 3 விங்குகளும் தனித்தனியாக இயங்குகிற வரையில் நிர்வாகச் சீர்கேடுகள் ஏற்படத்தான் செய்யும். இந்த மூன்று குதிரை சவாரியை நீண்டநாள் செய்து கொண்டிருக்க முடியாது. இவற்றை எல்லாம் ஒருங்கிணைக்க ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இதுவரையிலும் "ஏ" விங், "பி" விங் ஆகிய இரண்டும் ஒன்ருக இணைய முடியாததற்குக் காரணம் அவற்றை இணைக்கும் பொறுப்பை "ஏ" விங் அதிகாரிகளிடத்தில் கொடுத்து பரிசீலிக்கச் சொன்னதால்தான் "பி" விங் காரர்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டு, இதுவரையிலும் இதற்குத் தீர்வு காண முடியாமல் இருந்தது. இதற்குத் தீர்வு காணவேண்டுமென்ருல் ஆர்பிட்ரேஷனுக்கு—ஒரு ஹைக்கோர்ட் ஜட்ஜை போட்டு—இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

அதேபோல "பி" விங்கைச் சேர்ந்த தலைமை ஆசிரியர்களுக்கு 2-10-1970ல் சம்பளத்தைச் சீர்திருத்தம் செய்த நேரத்தில் சட்டப்படி முன்பு கொடுக்கப்பட்ட 20 அல்லது 30 ஸ்பெஷல் பேயைச் சேர்க்கக்கூடாது என்று உத்தரவைப் பிறப்பித்தார்கள். அந்த ஆர்டர் டிஸ்க்ரிமினேடரியானது என்பது எனனுடைய குற்றச்சாட்டு. அந்த ஆர்டரை வாபஸ் பெறவேண்டும். எல்லா தரப்பினருக்கும் கணக்கிடுவதைப்போல "பி" விங் ஆசிரியர்களுக்கும் கணக்கிடவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

பப்ளிக் லைப்ராரியைப் பற்றிசொல்கிறபோது போதிய பணவசதி இல்லை என்ற குற்றச்சாட்டு வருகிறது. அதற்குக் காரணம் லைப்ராரி செஸ்ஸை வசூல் செய்தவுடன் அதை நகராட்சி மன்றங்கள் உடனடியாக லோகல் லைப்ராரி அத்தாரிடிகளிடம் கொடுக்காது, தாங்களே செலவு செய்துகொண்டுவிடுகிருர்கள். அப்படி உடனடியாகக் கொடுக்கவேண்டுமென்ற கட்டாயம் இப்போது இல்லாத காரணத்திஞல்தான் இதுபோல நடைபெறுகிறது. அப்படியில்லாது லைப்ராரி செஸ்ஸை வசூல் செய்தவுடன் லோகல் லைப்ராரி அத்தாரிடிகளிடம் கொடுத்தால்தான் சர்க்கார் மானியங்கள் ஸ்தலஸ்தாபனங்களுக்கு வரும் என்ற உத்தரவைப்போட்டால்தான் இந்த நிலை திருந்தும். இல்லாவிட்டால் சரிப்படாது, உடனடியாக இதற்கான உத்தரவைப்போட வேண்டும்.

இன்னும் கோவையில் லைப்ராரி நிர்வாகக் கமிட்டி போடப்படாமல் இருக்கக் கூடிய இடங்களில் உடனடியாகப் போட்டு அந்த நிர்வாகத்தைச் சீர்செய்யவேண்டும்.

புத்தகம் தேர்ந்தெடுக்கிற முறையில் கூட இங்கு இருக்கிற இயக்குநர் புத்தகங்களை வாங்கி அனுப்பிவிடுவது என்றில்லாமல் லோகல் தேவைகளைப் பார்த்து அந்தந்த இடத்திற்குத் தேவையான புத்தகங்களை முன்போலவே

அங்கங்கே இருக்கிற கமிட்டிகளை வாங்கிக் கொள்ளலாம் என்ற முறையில் மாறுதல் செய்யப்பட வேண்டும்.

திருச்சியில் பேசுகிற நேரத்தில் மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கோவையில் ஒரு பல்கலைக் கழகமும், திருச்சியில் ஒரு பல்கலைக் கழகமும் ஏற்படுத்துவதற்கான ஆய்வு இருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் கல்வி அமைச்சருடைய அறிக்கையில் அதுபற்றி எந்தவிதமான கருத்தும் இல்லை என்றாலும் அதற்கான முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும். அத்தகைய முயற்சிக்குக் கோவை நகர மக்கள் சார்பாக என் நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூரில் அரசினர் கல்லூரி ஒன்று தேவைப்படுகிறது. அதில் பி.காம். கோர்ஸ், பிஸினஸ் மானேஜ்மெண்டு கோர்ஸ் ஆகிய இரண்டும் அமையக் கூடிய அளவில் அந்தக் கல்லூரியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திருவான்மியூர் பஞ்சாயத்தில் செல்லம்மாள் என்கிற ஆசிரியை பொய் சர்டிபிகேட்டைக் கொடுத்திருக்கிறார்கள். அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிற நிலையில் இன்றைக்கு அது சம்பந்தப்பட்ட ரெக்கார்டுகள் காணாமல் போய்விட்டன என்று தகவல் வந்திருக்கிறது. இதுபோன்ற குற்றச்சாட்டுகளை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இன்று காலை பத்திரிகையில்கூட பி.யூ.சி. வகுப்பில் படித்துக்கொண்டிருக்கிற ஒரு பெண்ணை பரீட்சைக்கு அனுப்ப முடியாது—காரணம் அவர் கர்னாடக மாநிலத்தில் பத்தாண்டு படிப்பில் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவள் என்று சொல்லப்பட்டிருக்கிறது. முதலிலே பி.யூ.சி. அட்மிஷன் கொடுக்காமல் இருந்திருந்தால் சரி, அட்மிஷன் பி.யூ.சி-யில் செய்து கொண்டு—பரீட்சை எழுதுகிற நேரத்தில் பரீட்சைக்கு அனுமதிக்க முடியாது என்று அதிகாரிகள் சொன்ன காரணத்தினால் அந்தப் பெண் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்துகொண்டு அவர்கள் தடை விதித்திருக்கிறார்கள். அந்தப் பெண் பரீட்சை எழுதலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். இது போன்ற தவறுகள் ஏற்படாத அளவிற்கு கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் கவனமாகச் செயல்பட வேண்டுமென்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

திரு. எம்.ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி மானியத்தில் என்னுடைய சில கருத்துக்களைச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஏறத்தாழ 118 கோடி ரூபாய் நாம் நடப்பு ஆண்டில்—வரும் ஆண்டில் கல்விக்காக இந்த மானியத்தின் வாயிலாகக் கோருகிறோம்.

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை.

என ஆன்றோர்கள் சொன்னார்கள்.

கல்வி கேடுகளை எல்லாம் போக்குகின்ற மிகப் பெரிய செல்வமாக இருக்க வேண்டும்.





மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அர்த்தத்தையே மாற்றுகிறீர்களே, கல்வி கேடு இல்லாத செல்வம் என்பதல்லவா பொருள்.

திரு. எம்.ஏ. லத்தீப் : நான் அது ஆன்றோர் மொழி என்பதைச் சொல்லி என் கருத்தைச் சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : புதிய அர்த்தமாக இருந்ததே என்றுதான் கேட்டேன்.

திரு. எம்.ஏ. லத்தீப் : கேடுகளை எல்லாம் அகற்ற வேண்டிய கல்வி—நாட்டில் இருக்கிற கேடுகளை முற்றிலும் செம்மையுற அகற்றியிருக்கிறதா என்று நாம் எல்லாம் ஆய்வுரை செய்கின்ற நிலையில் இருக்கிறோம்.

கல்வி—கல்விக்காக செலவழிக்கப்படுகிற பணம்—எப்படி ஒவ்வொரு துறையிலும் மூலதனம் செய்யும்போது அந்த மூலதனத்தின் வாயிலாக நாம் பெறுகிற பயனைப்பற்றி ஆய்வுரை நடத்துகிறோமோ அதுபோலவே கல்விக்காக நாம் செலவழிக்கிற—முதலீட்டின் வாயிலாக சமுதாயத்திற்குக் கிடைத்த நன்மை என்ற என்ற ஆய்வுரையை ஒவ்வொரு ஆண்டும் நாம் முறையாகச் செய்யவில்லையோ என்ற ஐயப்பாடு நமக்கு எழுகிறது.

(திரு. கு. காமாட்சி தலைமை)

இதைப் போக்குகின்ற வகையில் ஒவ்வொரு ஆண்டும் நாம் செலவழிக்கின்ற மதிப்பீட்டின் வாயிலாக, சமுதாயம் பெறுகின்ற நன்மைகள் என்னவென்பதை நாம் சிந்திக்க வேண்டும். சமுதாயம் அதிகமான நன்மையைப் பெறாவிட்டாலும், நாம் செலவழிக்கின்ற இந்தத் தொகையின் வாயிலாக, தீமையைப் பெறாமல் இருக்க வேண்டும். அதற்கான வாயில்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும்

இன்றைக்கு எல்லோரும் ஒத்துக் கொண்டிருக்கிற உண்மை, ஒழுக்கம் உயர்வதற்குப் பதிலாக, பண்பாடு பெறுவதற்குப் பதிலாக, நம்முடைய எண்ணங்கள் பரந்து விரிந்து உயர்வதற்குப் பதிலாக, குறுகலான எண்ணங்களையும் கொள்கைகளையும் கடைபிடித்து வருகிறார்கள்—பள்ளிகளை, கல்லூரிகளை விட்டு வருபவர்கள் என்பதை உணர்ந்தவர்களாக இருக்கிறோம். ஆகவே, அதைத் தடுக்க என்ன வழிவகைகளைக் காண வேண்டுமென்பதைச் சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இங்கே வழிவகைக் காணவேண்டும். அந்த வழிவகையின் வாயிலாக, இன்றைக்குச் சமுதாயம் தன்னுடைய வரிப் பணத்தால் வருங்காலத்திற்குச் செலவழிக்கின்ற பொழுது அதன் வாயிலாக சமுதாயம் பெறுகின்ற நன்மை என்னவென்பதை நாம் உணர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஒரு பக்கம் நாம் கல்விச்சாலைகளை அதிகப்படுத்துகிறோம். அதிகமான கல்வியை அதிகமான மக்கள் பெறவேண்டுமென்ற நோக்கம் நல்ல நோக்கம்தான். அதிகமான செலவு செய்யவேண்டுமென்பதிலே இரண்டுவிதமான கருத்து இல்லை. ஆனால், படித்த மாணவர்கள் இந்த உலகத்தில் வாழ வேண்டிய முறையில் தேவையானவற்றைக் கற்க வேண்டும்.

[திரு. எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 20

இந்த உலகத்திலே இருக்கக் கூடிய சோதனைகளைச் சந்திக்க கூடிய முறையிலே அவர்கள் முழுமைப்பெற்ற பயிற்சி பெற்று வருகிறார்களா என்றால், இல்லை—நிச்சயமாக இல்லை. படித்தவர்கள், கல்விசாலைகளை விட்டு வெளியே வந்தவுடனே, மிகப் பெரிய சோதனைகளையும் வேதனைகளையும் பெறுகின்றார்கள். அதனை அவர்கள் மட்டும் அனுபவிக்கவில்லை. நாடு அனுபவிக்கிறது ; மக்கள் அனுபவிக்கிறார்கள். அதனால் பல தீமைகள் ஏற்படுகின்றன. சட்டமன்ற உறுப்பினர்கள்கூட ஒவ்வொரு நாளும் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். ஆகவே ஒரு முறை வேண்டும். அந்த முறையோடு கல்வித் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் கல்லூரியிலிருந்தும் மாணவர்கள் வெளியே சென்றால், அவர்கள் கடைசியிலே எந்தக் கல்லூரியிலே, அல்லது பள்ளியிலே படித்தார்களோ, அந்தப் பள்ளிக்கு, அம்மாணவர்களை வேலைக்குத் தன்னாட்சியின் கீழ் எடுத்துக் கொண்ட அமைப்பு, இன்ன இடத்தில், இன்ன வேலை செய்து கொண்டிருக்கிறார் உங்கள் பள்ளி அல்லது கல்லூரி மாணவர் என்று அம்மாணவர்களை வேலைக்கெடுத்தவர்கள், அரசாங்கமாக இருந்தாலும் தனிப்பட்ட நிறுவனமாக இருந்தாலும், தகவலைக் கொடுக்கவேண்டும். அப்படி ஒவ்வொரு துறையும் பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் அல்லது தொழில் கல்வி இயக்குநருக்குத் தகவலைக் கொடுத்து, அதற்குப் பிறகு, அவர்கள் கல்வித் துறைக்கு, படித்து வெளியேறுகின்றவர்கள் இத்தனை பேர் ஒவ்வொரு ஆண்டும், அதில் இத்தனை பேர் வேலை பெற்றிருக்கிறார்கள், இத்தனை பேர் வேலை பெறவில்லை என்று அந்த ஸ்டாட்டிஸ்டிக்ஸை எடுதது, ஒவ்வொரு ஆண்டும் சட்டமன்றத்திலே சமர்ப்பிப்பார்களானால், ஒவ்வொரு ஆண்டும், எத்தனை பேர்கள் வேலை பெறுகிறார்கள், எத்தனை பேர்கள் வேலையில்லாமலிருக்கிறார்கள் என்ற தகவலை நாம் பெற முடியும்.

எம்ப்ளாய்மெண்ட் எக்ஸேஞ்ச் இருக்கிறது. அங்கு படித்தவர்கள் தங்களுடைய பெயர்களைப் பதிவு செய்து எத்தனை ஆண்டுகளாக வேலைக்காகத் தவம் கிடக்கிறார்கள் என்ற தகவலைக் கூட நம்முடைய துறைக்கு அனுப்புவார்களானால், அந்தப் புள்ளி விவரங்களை நம்முடைய சட்டசபையில் வைத்தால், அதைப்பற்றி விவாதித்து, நாட்டிலே உள்ள உண்மையான நிலையையறிந்து, திட்டங்களை வகுக்க உதவியாக இருக்கும். அந்த முறையைக் கையாள வேண்டும். இன்றைக்கு பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட்டில் அதைப்பற்றி தெளிவாக, விரிவாகக் கொடுக்கவில்லை. பெர்ஃபார்மன்ஸ் பட்ஜெட் மூலம் தெரிந்து கொள்ளக்கூடிய நிலையில்லை. ஆகவே, தற்பொழுது, முதலீட்டின் வாயிலாக, சமுதாயம் எந்த அளவு பயன் அடைகிறது என்பதை இந்த அவை தெரிந்துகொள்ள வாய்ப்பில்லாமல் போய் விடுகிறது.

**What is the exact amount ; what is the budgetary provision for education, how much the House has granted for education, and the purpose for which the total grant has been made and the purpose for which it was spent and the accomplishments.**



1975 மார்ச் 20] [திரு. எம். ஏ. லத்தீப்]

அந்த விவரங்களைத் தராமல், அந்த முறைகளைத் தராமல், ஏதோ கல்விக்காகச் செலவிடுகிறோம், ரூ. 118 கோடி செலவழிக்கிறோம் செலவழிக்கிறோம் என்று சொன்னால், நாட்டிலே தீமைகள்தான் அதிகமாகிக் கொண்டிருக்குமே தவிர, உண்மையான நிலைமைகளை இந்த அவை தெரிந்துகொள்ள வாய்ப்பிருக்காது என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே நேரத்தில், இன்றைக்குப் பஞ்சாயத்து யூனியன்களில் இருக்கிற ஸ்கூல்களைப் பற்றி நான் சொல்லாமலிருக்க முடியாது. மற்ற ஸ்கூல்களைப் பற்றி நான் சொல்ல விரும்பவில்லை. பஞ்சாயத்து யூனியன்கள் நடத்துகின்ற ஸ்கூல்களைப் பற்றி மாண்புமிகு கல்வியமைச்சரவர்களுக்கு நன்கு தெரியும். எல்லோருக்கும் தெரிந்த உண்மைதான். பஞ்சாயத்து யூனியன் ஸ்கூல்களுக்கு நாம் செலவழிக்கிற பணம் "Palpable waste, criminal waste, என்றுதான் நான் சொல்ல விரும்புகிறேன். வேஸ்ட் என்று தெரிந்தேசெய்கிறோம். பஞ்சாயத்து யூனியன்களாலே நடத்தப்படுகின்ற 75 சதவீதம் பள்ளிகளிலே வகுப்புகளே நடத்தப்படுவதில்லை. அப்படி யாராவது வகுப்புகள் நடத்தினாலும் கட்டிடங்கள் இருப்பதில்லை, மாணவர்கள் வருவதில்லை. மாணவர்கள் வந்தாலும் ஆசிரியர்கள் வருவதில்லை.

நான், ஒரு பகுதியிலே, காட்டுப் பகுதியிலே, மலைப் பகுதியிலே இருக்கிற ஸ்கூலைப் பார்க்கப் போயிருந்தேன். அந்த ஸ்கூலுக்கு நான் சென்றது 1974-லே. அந்த ஸ்கூல் இன்ஸ்பெக்ஷன் புக்கை எடுத்துப் பார்த்தால் அந்தப் பள்ளிக்கு இன்ஸ்பெக்ஷன்—அதாவது இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸ் 1962-லே வந்திருக்கிறார். 1962-க்குப் பிறகு அந்த ஸ்கூலுக்கு இன்ஸ்பெக்டர் ஆஃப் ஸ்கூல்ஸே வரவில்லை. அவர்கள் வந்து இன்ஸ்பெக்டே செய்யவில்லை. அதோடு போய்விட்டதா என்றால் இல்லை. அந்தப் பள்ளியை எப்பொழுதோ மூடியாகிவிட்டது. அங்கே உள்ளவர்களைப் பார்த்து, இது என்ன கட்டிடம் என்று கேட்டால், எப்பொழுதோ ஒரு பள்ளி நடந்ததாகச் சொல்கிறார்கள் என்று சொன்னார்கள். கடைசியிலே பூட்டை உடைத்து நான் சென்றேன். அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்டரை எடுத்துப் பார்த்தால் (குறுக்கீடு) நான் பூட்டை உடைத்துக் கொண்டுதான் போனேன்.

**I am public man and I am entitled to break all these irregularities**

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர், சார், நண்பர் லத்திப் அவர்கள் ஒரு சிறந்த வழக்கறிஞர். ஒரு பள்ளிக்கூடம் மூடியிருக்கிற சமயத்திலே பர்மிஷனோடுதான் உள்ளே செல்ல வேண்டும், எம்.எல்.ஏ.வாக இருந்தாலும் சரி, மற்றவர்களாக இருந்தாலும் சரி. எப்படி அவர்கள் பூட்டை உடைத்துக்கொண்டு சென்றார்கள் ? அது சட்ட விரோதமான காரியம் அல்லவா ?

திரு. எம். ஏ. லத்தீப் : * * *

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இரண்டு கருத்தும் இல்லாமலிருந்தால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* * *

இரண்டையும் தயவு செய்து நீக்க வேண்டுமென்று கருதுகிறேன்.

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : அதை நீக்கவேண்டிய அவசியமில்லை. பார்மிஷனோடு செல்வதுதான் முறை..........

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : திரு. கிருஷ்ணமூர்த்தி சொன்ன கருத்தையும், திரு. லத்தீப் சொன்ன கடைசிக் கருத்தையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்கவேண்டுமென்று உத்தரவிடுகிறேன்.

திரு. எம். ஏ. லத்தீப் : பெரிய பூட்டு தொங்கிக்கொண்டிருந்தது. சாவி கேட்டால் சாவி இல்லையென்றார்கள். சாவி இல்லை ஆகையினாலே உடைத்துக்கொண்டு செல்ல வேண்டுமென்று சொல்லும்போது பொது மக்கள் இந்தக் கட்டிடம் பல மாதங்களாக மூடப்பட்டிருக்கிறது என்றார்கள். அதிலே பாம்பு இருக்கிறதா, அல்லது தேள் இருக்கிறதா அல்லது கழுதை தூங்கிக்கொண்டிருக்கிறதா என்று கேட்கக் கூடிய நிலையில்தானிருந்தது. வெளியே பூட்டு மட்டும் இருக்கிறது. உள்ளே கழுதை செல்லக்கூடிய நிலையில் சுவர் இருக்கிறது.

அங்கே உள்ளே நுழைந்து பார்க்கும்போது, பெட்டியிலே அட்டெண்டன்ஸ் ரிஜிஸ்தர் வைத்திருக்கிறார்கள். அந்த அட்டன்டென்ஸ் ரிஜிஸ்டரை எடுத்துப் பார்த்தால்—நான் பார்த்தது பிப்ரவரி மாதத்திலே. அதற்கு 15 நாளைக்கு முன்னால் என்ன நடந்திருக்கிறது ?—ஜூன் வரையிலே அட்டெண்டென்ஸ் போடப்பட்டிருக்கிறது. (In the month of February) நான் அதை இன்ஸ்பெக்ட் செய்தால், 1974 ஜூன் வரையிலே அட்டெண்டென்ஸ் போடப்பட்டிருக்கிறது. 4 மாதங்கள் மாணவர்கள் வந்ததாக. கடைசியில் விசாரித்தால், அவர்கள் நகரங்களிலே வியாபாரம் செய்கிறார்கள் என்று சொன்னார்கள்.

நான், இதைக் குற்றச்சாட்டாகச் சொல்லவில்லை. ஆனால், இத்தகைய காரியங்கள் நடைபெறுகின்றன. அதற்குக் காரணம் மலைப் பகுதியிலே இருக்கக்கூடிய பள்ளிகளுக்கு எந்த இன்ஸ்பெக்டரும் செல்வது கிடையாது. அங்கே செல்லக்கூடிய ஒரு சிரமத்தை எடுக்கக்கூடிய மனப் பக்குவம் இல்லை—அப்படிதான் நடந்து கொண்டிருக்கிறது. பல பள்ளிகளிலே அந்த நிலை இருக்கிறது. இதையெல்லாம் போக்க வேண்டுமென்றுதான் நான் அதை எடுத்துச் சொல்ல விரும்புகிறேன். ஆகையினாலே, இந்தப் பஞ்சாயத்து யூனியன்களால் நடத்தப்படுகிற பள்ளிகளை அரசாங்கமே ஏன் எடுத்துக்கொள்ளக் கூடாது ? அவர்களுக்கும் அக்கறையில்லை, இவர்களுக்கும் அக்கறையில்லையென்று இப்படி இருக்கும்போது,

* * * பேரவைத் மாற்றுத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பட்டது.



மக்கள் பணத்தை இப்படி வீண் செய்யவேண்டுமா என்ற கேள்வி கிளழுறது. மக்கள் வரிப் பணத்தின் மூலம் நல்ல பயன் ஏற்படவேண்டுமென்றால், பஞ்சாயத்து யூனியன் மூலமாக எந்த ஸ்கூலும் தேவையில்லை, நீங்களே நடத்துங்கள். உங்கள்மீது நம்பிக்கையிருக்கிறது என்று நான் எடுத்துச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

தனியார் பள்ளிகள்பற்றியும், தனியார் கல்லூரிகள்பற்றியும் பல்வேறு கருத்துக்களை இங்கே எடுத்துச் சொல்கிறார்கள். நான் ஒன்றைத் தெளிவாகச் சொல்ல விரும்புகிறேன். தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் சில குறைபாடுகள் இருக்கலாம், ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அதே நேரத்திலே தனியார் பள்ளிகளிலே கல்லூரிகளிலே இருக்கிற ஒழுக்கம், ஸ்டாண்டர்டு, அங்கு காட்டப்படுகின்ற அக்கறை, அங்கே இருக்கின்ற சிறப்பான சூழ்நிலைகள் மற்ற பள்ளிகளிலே, கல்லூரிகளிலே இருக்கிறதா என்று நீங்கள் கொஞ்சம் பாரபட்சமற்ற முறையிலே பார்ப்பீர்களானால் தெரியும். தனியார் பள்ளிகளிலேயும், கல்லூரிகளிலேயும் உள்ள சிறப்பான உயர்வான கல்வித் தரம், ஒழுக்கம் மற்றவைகளிலே இல்லை. ஒரு சில குறிப்பிட்டவர்கள் தங்களுடைய சமூதாயத்திற்கு மட்டுமல்லாமல் நாட்டுக்கு நன்மை செய்யவேண்டுமென்ற தர்ம சிந்தனையோடு சில பள்ளிகளையும் கல்லூரிகளையும் நடத்தி வருகிறார்கள். அதை எப்படிக் குறைக்க வேண்டும், எப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று சிந்தனை செய்கிறீர்களே தவிர அதைப்பற்றி சிந்தித்து அதை எப்படி சிறப்பாக நடத்த உதவிசெய்வது என்ற மனப் பக்குவம் நமக்கு இல்லையே என்பதை நினைக்கிறபோது நம்மிடத்திலே எங்கே ஜனநாயகப் பண்பாடு குறைந்துவிட்டதோ என்று சிந்திக்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஒரு காலத்திலே கல்விச் செல்வம் போதிய அளவு வழங்கப்படாத நேரத்திலே தனியார்கள் பல்வேறு பள்ளிக்கூடங்களையும் கல்லூரிகளையும் நடத்தினார்கள். நடத்தி வந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குப் போதிய உற்சாகத்தைத் தர வேண்டுமென்ற முறையிலேதான் இந்தக் கருத்தை நான் சொல்லிக்கொள்கிறேன். பள்ளி ஒழுங்குமுறைச் சட்டம் கொண்டுவந்திருக்கிறோம். அது உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது. அதனாலே அதைப்பற்றி நான் விரிவாகப் பேச விரும்பவில்லை ; எங்களுடைய கட்சியின் சார்பில் தோழமைக் கட்சி என்ற முறையிலே இந்த தி.மு.க. ஆட்சியினரால் கொண்டுவரப்பட்ட சில காரியங்களை நாங்கள் எதிர்த்திருக்கிறோம்; எதிர்த்திருக்கிறோம் என்றால் உள்ளப்பூர்வமாக, நேசப்பூர்வமாக அது தேவையில்லை; அது வந்தால் நாட்டிலே குழப்பம் ஏற்படும் என்று எடுத்துச் சொல்கிற முறையிலே அவ்வப்பொழுது தெரிவித்திருக்கிறோம்.

மூன்று முறைகள் அப்படி எதிர்த்திருக்கிறோம். மதுவிலக்கு எடுக்கப்பட்டபோது அதை எதிர்த்தோம்; அது பிறகு என்ன ஆனது என்று உங்களுக்குத் தெரியும், உழுபவனுக்கு நிலம் சொந்தம் என்ற சட்டம் கொண்டுவரப்பட்டபோது நாங்கள் சொல்லியதை நீங்கள் கேட்கவில்லை, அது ஜனாதிபதியிடமிருந்து திரும்பிவந்துவிட்டது. அதைப்போன்றுதான்

[திரு எம். ஏ. லத்தீப்] [1975 மார்ச் 20

பள்ளி ஒழுங்கு முறைச் சட்டம்பற்றி தெளிவாகச் சொன்னேம். அது இப்போது உயர்நீதி மன்றத்திலே இருக்கிறது, என்ன ஆகப்போகிறது என்று பார்ப்போம்.

இப்படி மக்கள் ஜீரணிக்கமுடியாத திட்டங்களைப் போட்டு குழப்பம் ஏற்படுத்தாமல் இருக்கவேண்டுமென்று மீண்டும் நான் கேட்டுக்கொள்கிறேன். தனியார் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் ஒழுங்கீனம் இருக்குமானுல் நீங்கள் தலையிடுங்கள். ஆனுல் வீணுகச் சில சட்டதிட்டங்களைப் போட்டு அவர்களுடைய உற்சாகத்தைக் குறைக்காதீர்கள். யாரோ ஒரு கல்லூரியிலே காண்ட்ரிப்யூஷன் டொனேஷன் வாங்கியிருக்கிருர் என்பதற்காக இப்படி ஒரு திட்டத்தைக் கொண்டுவருவது சரியல்ல. அவர்கள் இன்றைக்கு எந்த நிலைமையிலே இருக்கிருர்கள் என்பதைச் சொல்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

லயோலா கல்லூரிக்கு இந்த ஆண்டிலே சுமார் 8 லட்சம் ரூபாய் நஷ்டம். நியூ காலேஜுக்கு சுமார் 5 லட்சம் ரூபாய் நஷ்டம், வாணியம்பாடி கல்லூரிக்கு 3 லட்ச ரூபாய் நஷ்டம். செயிண்ட் ஜோஸப் கல்லூரி, திருச்சி அதற்கு 7 லட்ச ரூபாய் நஷ்டம் என்ற வகையிலே இருக்கிறது. கிராண்ட் இன் எய்ட் முறையை மாற்றியமைத்து மறைமுகமாக அந்தப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் மூடவேண்டுமென்று நினைக்கிறீர்களா? அந்தப் பள்ளிகளையும் கல்லூரிகளையும் நீங்கள் விரும்பவில்லையென்ருல் தேசியமயமாக்கிவிடுங்கள், ஏற்றுக்கொள்கிறேம். தனிப்பட்டவர்கள் நடத்திக்கொண்டிருக்கிற கல்லூரிகளுக்கும் பள்ளிகளுக்கும் கொடுத்துக் கொண்டிருந்த சலுகைகளை வேண்டுமென்றே குறைக்க வேண்டாம், எடுக்க வேண்டாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு உதாரணத்தைச் சொல்ல விரும்புகிறேன். உங்கள் அனுமதியோடு படிக்க விரும்புகிறேன்.

Grant-in-aid prior to 1972-73 was different. It was expenditure on salaries of staff less fees worked at Government standard was treated as deficit ; and two-thirds of the deficit was given as teaching grant.

But grant in aid from 1972-73 has been expenditure on salaries of staff less fees worked at Government standard is treated as deficit, and 80 per cent of the deficit is given as teaching grant.

In big educational institutions, the colleges which I had mentioned just now, they are losing as per the revised grant in aid from 1972-73. I can give an example. In the New College, Madras the expenditure on salaries of staff, etc. per annum is Rs. 15 lakhs; the fees worked at standard rate is Rs. 3,50,000. Fees actually collected is Rs. 9 lakhs as per grant in aid before 1972–73, the College will be eligible for Rs. 7,66,667 as teaching grant. But from 1972-73, as per the revised code, they will get only Rs. 4,40,000......



1975 மார்ச் 20]

**Mr. DEPUTY SPEAKER**: I want to know from what the hon. Member is reading.

**Thiru M. A. LATHEEF** : I am only referring to my notes.

1972–73 ஆம் ஆண்டிற்கு முன்பாக இருந்த முறையை ஏன் மாற்றினீர்கள்? என்ன காரணம்? நியூ காலேஜுக்கு 3, 4 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. அந்தத் துண்டை அவர்கள் எங்கேயிருந்து கொண்டு வருவார்கள். அந்தத் தலைவர் அவர்களுடைய வீட்டிலிருந்து கொண்டு வருவதா? அதனுடைய செயலாளர் அவருடைய வீட்டிலிருந்து கொண்டு வருவதா? இதன் மூலமாக ஏன் அவர்கள் எல்லாம் அவற்றை நடத்த வேண்டுமென்று நினைத்து மறைமுகமாக அவற்றை மூடிவிட ஏற்பாடு செய்கிறீர்களா? அதற்கு தேசியமயமாக்கிவிடுங்கள், நாங்கள் அதைச் சந்திக்கத் தயாராக இருக்கிறேம். தனிப்பட்டவர்கள் நல்ல காரியங்கள் செய்தால் அதற்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் தாருங்கள், அவர்கள் தவறு செய்வார்களானுல் பிடியுங்கள் நாங்களும் உங்களோடு வருகிறேம். இப்படிச் செய்வது எங்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தையும் மன வருத்தத்தையும் ஏற்படுத்துகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மூன்ருலே சில முறைகள் இருந்தன. அதிலே நோஷனல் என்ற முறையிலே வைத்திருந்தார்கள். அதாவது அவர்கள் பெறுவது ஒன்று, வரவு வைப்பது ஒன்று, கொடுப்பது ஒன்று என்று இருந்தது. இப்போது இருக்கிற அமைப்புப்படி எவ்வளவு வரவு என்று காண்பியுங்கள். எவ்வளவு செலவு என்று காண்பியுங்கள், எவ்வளவு துண்டு விழுகிறது என்று காண்பியுங்கள் என்று கேட்கிறேம். துண்டு விழுவதிலே 80 சத விகிதத்தை நாம் கொடுக்கிறேம். 80 சத வீதமா எவ்வளவு என்பதை நான் நாளை என்னுடைய பதிலின்போது தெளிவாகச் சொல்கிறேன். மீதியை அந்தந்த நிறுவனங்கள் தரவேண்டுமென்ற முறை இருக்கிறது. அப்போது கிடைத்தது இப்போது கிடைக்காமல் இருக்கலாம். அதனுல் லாபம் இல்லை குறைந்துவிட்டது என்று சொல்லலாம். அப்போது கிடைத்தது இப்போது கிடைக்காது சில பேர்களுக்கு. அறக்கட்டளைகள் என்று இருந்தால் அதிலே வருகின்ற வருமானத்தை அவர்கள் தனியாக வைத்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது. உண்மையான கணக்கு வேண்டும், வரவு எவ்வளவு செலவு எவ்வளவு துண்டு விழுவது எவ்வளவு என்று கேட்கிறேம். கேட்டு துண்டு விழுவதிலே 80 சத வீதம் நாம் தருகிறேம். 20 சத வீதம் அவர்கள் தருகிருர்கள். அந்தந்த நிறுவனங்களுக்குத் தனியாகச் சொத்துக்கள் இருந்தால் அதிலே இருந்து வருகின்ற வருமானத்தை இதிலே வரவினத்திலே சேர்த்துக் கொள்ள மாட்டோம், கல்லூரி வரவைத்தான் சேர்த்துக்கொள்வோம், கல்லூரிகள் வளருவதற்கு அவர்கள் அறக்கட்டளைகள் ஏதேனும் வைத்திருந்தால் அதிலேயிருந்து வருகின்ற வருமானத்தை அவர்கள் வைத்துக்கொள்வதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதைத் தெரிவித்திருக்கிறேம்.

திரு எம். ஏ லத்தீப் : துண்டு விழுவதிலே அரசாங்கம் 80 சதவீதம் எடுத்துக்கொண்ட பிறகும் மேற்கொண்டு துண்டுவிழுவதைப் பற்றித்

தான் நான் சொல்கிறேன். ஆகவே முன்பிருந்த முறையைக் கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, சில பள்ளிகளிலே அரபி, பார்ஸி, உருது மொழிகள் போதிக்கப் படுகின்றன. மதரஸே ஆஸம் உயர்நிலைப் பள்ளி அரபி, பார்ஸி, உருது மொழிகள் கற்பிக்கப்பட ஏற்பாடுகள் உள்ள பள்ளியாகும். என்ன நடந்திருக்கிறது? கடந்த ஓராண்டு காலமாக பாரசீக மொழி அங்கேயிருந்து எடுக்கப்பட்டிருக்கிறது. நான் இதைப்பற்றி கல்வித்துறை இயக்குநரிடம் கேட்டுக்கொண்டேன், அவர் உடனே நடவடிக்கை எடுத்தார், என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே ஒரு ஆசிரியரைப் போட வேண்டுமென்று உத்தரவு போட்டார். ஆனால் இன்றையதினம் வரை பெர்ஷியன் முன்ஷி போடப்படவில்லை, 6 மாதம் ஆகியும் பள்ளியில் ஆசிரியர் இல்லாமல் பிள்ளைகள் உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள். நேரங்கள் நெருங்கிக் கொண்டிருக்கின்றன. இதுவரையிலும் ஆசிரியர் போடவில்லை, அங்கேயிருக்கிற தலைமையாசிரியர் ஏதோ ஒரு காரணத்தாலே அப்படிச் செய்துக் கொண்டிருக்கிறார். அரசாங்கம் உத்தரவிட்டும் கூட பாரசீக மொழி ஆசிரியரைப் போடாமல் அவர் கெட்ட நோக்கத்தோடு வேண்டுமென்று இருக்கிறார்.

(நண்பகல் 12.00)

இப்படி நான் சொல்வேன் அந்த ஸ்கூலைப் பொறுத்தவரையில்,

I demand that he should be transferred; he is the most persona non-grata; he is the most cantankerous என்று சொல்வேன். அரசாங்கம் சொல்லி 6 மாதங்கள் ஆகியும் . . . . . .

MR. DEPUTY SPEAKER : 'cantankerous' is not a proper word to use here............

THIRU M. A. LATHEEF : I have used it many times; that is used in Court also. My time is going on......

MR. DEPUTY SPEAKER : That is not proper.

திரு எம். எ. லத்தீப் : ஆகையால் நான் வேண்டிக்கொள்வதெல்லாம் உடனடியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அரபு மொழிக்கு உருது மொழிக்கு போதிய ஆக்கமும் ஊக்கமும் கொடுக்கப்பட வேண்டும். எங்கெங்கு உருது மொழி கற்பிக்கப்படுகிறதோ அந்த இடங்களிலே மட்டும் உருதுமொழி மாணவர்களுக்குத் தமிழ் சொல்லிக் கொடுப்பதில் என்ன கஷ்டம்? "த்ரி லாங்குவேஜ் ஃபார்முலா" வரும் என்று சொல்கிறார்கள். அது எப்படி வரும்? மைனாரிட்டி மக்கள் உருது மொழி பேசுகிறார்கள் தாய்மொழி என்ற நிலையிலே இல்லாமல் தமிழையும் ஆங்கிலத்தையும் படிக்கிறார்கள். அப்படிப்பட்ட மைனாரிட்டி மக்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படுகிறது என்ற முறையிலே இருக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.



THIRU R. PONNAPPA NADAR : Before my friend closes, I would like to raise a point of order. The Hon. Member Thiru Latheef was stating that the M. L. As. had the authority to break open locks and enter the school premises, if it was closed. Are we given such an authority under any law that is now in force? So far as Tamil Nadu is concerned, will it be in order for us to do such things? I would like to have a ruling from the Chair (interruption). The matter requires clarification. With my little knowledge, such a procedure is unknown. The matter will have to be reported to the educational authorities and if locks are to be opened, that will have to be done in the presence of the education1 officers. Some 1 such control should be exercised. That is the reason why I express a doubt whether we are empowered under any law to do like that. That may be just clarified. That is the only submission I would like to make.

THIRU V. KRISHNAMURTHI (Nelli Kuppam): Expunged portions should be restored........

THIRU M. A. LATHEEF : Before the Chair gives a ruling, I want to make a clarification. I never said that any building, whether it is a public building or private building, can be broken open by an M. L. A. or for the matter of that anybody else. What I said was this. If a public building is deserted, is kept deserted for a long time, along with the authority which runs the school—that was what I said—I presume the Panchayat Union School Inspector—some of the officials accompanied the local M. L. A., and when the villagers told that the said school building was kept deserted for more than four years, with the authority of the Officer representing the body which maintains and administers the school, the school building was opened. It is only with the proper authority the school building was opened.....

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : தலைவரவர்களே, அருமை நண்பர் பேசும் சமயத்தில் நான் குறுக்கிட்டேன். ஆனால் எதற்காகவோ சில போர்ஷன்களை எக்ஸ்பஞ்ச் செய்துவிட்டார்கள், எக்ஸ்பஞ்ச் செய்திருக்கக்கூடாது. சாதாரணமாக, நூற்றுக்கணக்கானவர்கள் நண்பர் லத்தீப் அவர்கள் பேசும்பொழுது கேலரியில் உட்கார்ந்து பார்த்துக்கொண்டிருந்தார்கள். ஒரு நிறுவனம் மூடியிருக்கிறது என்றால் அது ஒரு பப்ளிக் இன்ஸ்டிடியூஷனாக ஆகட்டும், ஒரு காலேஜாகட்டும், ஒரு ஹைஸ்கூல் ஆகட்டும், அல்லது எலிமெண்டரி ஸ்கூல் ஆகட்டும், மூடியிருக்கிறது என்றால் அதன் பூட்டை உடைத்துத் திறக்க உரிமை இருக்கிறதா என்றால் யாருக்கும் உரிமையில்லை. நான் பஞ்சாயத்து யூனியன் சேர்மனாக இருக்கிறேன். லத்தீப் போன்றவர்கள் வந்து பூட்டை உடைத்து திறந்திருந்தால் I would have straight-away prosecuted him. ஆகவே, இதற்கு பர்மிஷன் வேண்டும், அதாரிட்டி வேண்டும், கோர்ட் ஆர்டர் செய்ய வேண்டும். பப்ளிக் இன்ஸ்டிட்யூஷனாக இருந்தால் என்ன?

[திரு. வி கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்] [1975 மார்ச் 20

It is a trespass. You have no business, even the Minister does not have any right to open an institution which is locked. அந்த மேனேஜ்மெண்ட் பர்மிஷன் கொடுக்க வேண்டும், அல்லது ஹெட்மாஸ்டர் வந்து திறக்க வேண்டுமே தவிர, பர்மிஷன் இல்லாமல் உள்ளே போனால் பிறகு ரிகார்ட்ஸ் காணோமென்றால் . . . . . . . .

(Thiru M. A. Latheef rose)

Mr. DEPUTY SPEAKER : I will have to give my ruling.

Thiru M. A. LATHEEF : He is saying 'trespass' and all that. What does he know about law ?

Thiru R. PONNAPPA NADAR : That is an insinuation. I object to that. Such an insinuation should not be passed against another member.....

Mr. DEPUTY SPEAKER : Both are M.A.B.Ls.

Thiru M. A. LATHEEF : I am quite right. I am prepared to face prosecution. What he says is....

Mr. DEPUTY SPEAKER : Two lawyers will never agree on a point of law.

Thirumathi JOTHI VENCATACHELLUM : Has any Panchayat Union Chairman got the right to prosecute any M.L.A. under any circumstances ?

Mr. DEPUTY SPEAKER : Before the eyes of law all are equal. Whether he is an M. L. A. or a Minister or an ordinary citizen, all are held as equal before law. So, if an M.L.A. breakes the law, he has no protection, except that during the meeting days he can come and take shelter in the House or in the precincts of the House. Otherwise, he would be certainly taken to task. There is no doubt about it.

Thiru M. A. LATHEEF : Your ruling should not create an impression that I have committed anything wrong. Your ruling must take into consideration what I have already said. I have said already that the building was kept locked for a considerable time and the authority which maintains and runs the institution is authoritatively given the right to break open the institution. That authority accompanied me and with that authority the institution was broken open. Taking into consideration that observation of mine, you must give a ruling and not a flanket ruling which may give an impression that I broke open the leak.



1975 மார்ச் 20]

Mr. DEPUTY SPEAKER : No, no. I never understood the point of order to mean that Mr. Latheef broke open the lock of a particular school and that he should be prosecuted. I am giving a general proposition. Even if he is an M. L. A., he is not protected from being prosecuted or taken to task or being punished under any of the provisions of the law. That is all. The Hon. Member Thiru Latheef has exprssed good faith in taking such action and I do not think that will amount to an offence.

Thiru K. KANDASWAMY : Hon. Mr. Deputy Speaker has stated that any legislator can be prosecuted if he commits an offence. That is true, but without the consent of the Speaker, no prosecution can be launched against a Legislator. Even for a criminal offence, the permission of the Speaker has to be got....

Dr. H. V. HANDE : On a point of order, Sir my learned friend and Advocate friend Mr. Kandaswamy's contention is that any member..

Mr. DEPUTY SPEAKER : May I make a clarification ? Only one thing I will tell you and then you can carry on. The privilege of calling another person as learned friend belongs only to the class of lawyers and nobody else. Being a doctor, you should not call him as a learned friend.

Dr. H. V. HANDE : I will abide by the ruling of the Chair. I would not call him as my learned friend. I would say my friend Mr. Kandaswamy. His point is that an M. L. A. should be prosecuted only with the permission or with the prior consent of the Speaker. With what ever little law that I know, my information is that any member of the Legislature can be prosecuted, if he has committed an offence under the I.P.C. or whatever it is. But the information must be given to the Speaker. But we do not get any permission, as far as prosecution is concerned. The only thing is, information is communicated to the Speaker and the Speaker communicates in turn this information to all the members. Am I right ? Or, I would like to know whether my friend Mr. Kandaswamy is right. I would like to have a ruling from the Chair.

Mr. DEPUTY SPEAKER : Dr. H. V. Hande is perfectly right. Action can be taken against any legislator, but that should be communicated to the Speaker and the Speaker will, in turn, intimate to the House. Mr. Latheef, I will give you two more minutes. You please carry on and finish.

Thiru M. A. LATHEEF : If anybody has transgressed the limits of the law, he will be punished. But I maintain that I have never transgressed any limit of law and I am within my rights.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப் அவர்கள் சொல்லும்பொழுது அவர்கள் பல அதிகாரிகள், மற்றவர்களோடு பூட்டிக் கிடந்த கட்டிடத்தைப் போய் திறந்தேன் என்றுதான் சொல்லுகிறார்களே தவிர, வேறல்ல. ஆகவே, இந்தப் பிரச்சினை பெரிதாகப் போக வேண்டியதில்லை.

திரு எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, அடுத்து, இந்தக் கல்வியைப் பற்றி சீர்திருத்தக் குழு அமைத்திருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அந்தச் சீர்திருத்த குழுவிலே முக்கியமாக இன்றைக்கு மைனாரிட்டிகளின் சில தனித்தன்மைகளையும், பண்பாடுகளையும் காக்கின்ற வகையிலே இந்தச் சீர்திருத்தக் குழுவில் ஆலோசனை சொல்வதற்கு மைனாரிட்டிகளின் சார்பில் யாரையும் இந்த அரசு அமைத்த குழுவில் இடம் பெறச் செய்யாதது பெருத்த ஏமாற்றத்தை அளிப்பதாக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதே மாதிரியாக பாடநூல் குழுவைப் பற்றி ஒரு முக்கியமான ........ (மணியடிக்கப்பட்டது) இது முக்கியமான விஷயம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : முக்கியமான விஷயம் என்றால் ஏன் பின்னால் சொல்கிறீர்கள்?

திரு எம். ஏ. லத்தீப் : பாடநூல் சம்பந்தமாக ஒரு குழு அமைத்திருக்கிறார்கள். இந்தக் குழுவில் எந்த ஒரு முஸ்லீமும் போடப்படாததால், நபிகள் நாயகத்தைப்பற்றியெல்லாம் தவறான கருத்துக்களைப் பாடப் புத்தகங்களில் எழுதிக் கொண்டே வருகிறார்கள். நபிகள் நாயகம் முஸ்லீம்களுக்குக் கடவுள் என்று எழுதியிருக்கிறார்கள் மகானுபாவர்கள். காலேஜிலே புரொபசராக இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் நபிகள் நாயகம் முஸ்லீம்களின் கடவுள் என்று எழுதுகிறார்கள். அதைப் பள்ளியிலே வைத்திருக்கிறோம்.

ஆகையால் இவைகளை எல்லாம் போக்குகின்ற வகையில் பாடநூல் குழுவிலே முஸ்லீம்களுக்கு இடம் அளித்து இத்தகைய குறைபாடுகளை நீக்க அரசு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று சொல்லி 118 கோடி ரூபாய்க்கு நல்ல பல திட்டங்களை வைத்திருப்பதைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன் என்று கூறி, இருக்கின்ற குறைகளைச் சொல்லத்தான் தலைவர் அவர்கள் நேரம் கொடுத்ததால் மற்றவற்றைப் பற்றி விரிவாகச் சொல்ல முடியவில்லை என்று கூறி முடித்துக்கொள்கிறேன்.

திரு. எல். கணேசன் : துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கும் கல்வி மானிய கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்தைச் சொல்ல வாய்ப்புக் கொடுத்தமைக்காக நிரம்ப நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.

“ எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை என்றால்
இங்குள்ளோர் எல்லோரும் நாணிடவும் வேண்டும் ”

என்றார் பாவேந்தர் பாரதிதாசன்.



பாட்டுக்கொரு புலவர் பாரதியார் “ அன்ன சத்திரங்கள் ஆயிரம் கட்டுவது, அறங்கள் பல்லாயிரம் செய்வதைக் காட்டிலும் ஒரு ஏழைக்கு எழுத்தறிவிப்பது சாலச் சிறந்தது ” என்று சொன்னார்.

மிகத் தெளிவாகப் பாவேந்தர் பாரதிதாசன்—

“ என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்று
பன்னருங் கலைஞானத்தால் பராக்கிரமத்தால் அன்பால்
உன்னத இமமலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி
இன்புற்றார் என்று மற்றோர் இயம்பக் கேட்டிடல் என்னாளோ !

என்ற வினாவைத் தொடுத்தார்.

இன்றைய தினம் அந்த மரபு வழி வருகிற மாநில அரசு அந்தக் கொள்கைகளை இதயத்தில் தாங்கி அவற்றை நடைமுறைப்படுத்த ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபடுவதைக் காணும்போது தமிழ் மக்கள் என்ற உணர்வு படைத்தவர்கள் அத்தனை பேரும் மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளவேண்டும்.

கல்வி மானியத்தில் முக்கிய தலைப்பில் “ எண் 277-கல்வி ” என்ற தலைப்பில் ஏறத்தாழ 117 கோடி ரூபாயும், அதைப் போலவே பல்வேறு தலைப்புகளில், தொழில் நுட்பக் கல்வி என்ற தலைப்பிலும், மருத்துவக் கல்வி என்ற தலைப்பிலும், ஏறத்தாழ அத்தனை துறைகளையும் இணைத்து 148 கோடி ரூபாயை இந்த ஆண்டு இந்த அரசு கல்விக்காக ஒதுக்கியிருக்கிறது.

மொத்தம் 538 கோடி ரூபாயில் ஏறத்தாழ இது 30 சதவிகிதம் என்பதைப் பார்த்துப் பெருமைப்படலாம். இந்தியத் துணைக்கண்டத்திலே இருக்கின்ற பல்வேறு மாநிலங்களிலே கல்வித் துறையிலே தமிழகம் முன்னோடியாகச் செயல்பட்டு முன்னணியில் நிற்கிறது என்பதை அத்தனை பேரும் உணர்வார்கள். அதைப் போலவே எல்லாத் துறைகளிலும் அந்த முன்னேற்றத்தை நம்மால் காண முடிகிறது.

ஏறத்தாழ 61.6 இலட்சம் படிக்கின்ற சிறார்கள் தமிழகத்தில் இருக்கிறார்கள். அதிலே 55.06 இலட்சம் பேர்கள் இன்றைய தினம் படித்துக் கொண்டிருக்கிறார்கள். 90 சதவிகிதத்திற்கு மேற்பட்ட இளம் சிறார்கள் தொடக்க நிலைப் பள்ளிக் கல்வியைப் பயின்று கொண்டிருக்கின்றார்கள் என்பது சாதாரணமான செய்தியல்ல.

இடைநிலைக் கல்வியில் 27.7 இலட்சம் பேர் படிக்கவேண்டும். இன்றைய தினம் 14.56 இலட்சம் பேர் படித்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஆண்டு ஒரு இலட்சம் பேரைத் தொடக்க நிலைக் கல்வியிலும், 50,000 பேரை உயர்நிலைக் கல்வியிலும் சேர்ப்பதற்கான முயற்சிகளைச் செய்வதாக உறுதியளிக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே பள்ளிகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. தொடக்கப்பள்ளிகள் 1965–66-ல் இருந்தது 24,641 தான். இன்றைய தினம் 1974–75-ல் 26,797 தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன.

உயர்நிலைப் பள்ளிகள் 2,234 தான் 1965–66-ல் இருந்தன. இன்றைய தினம் அவை 2,882 ஆக உயர்ந்திருக்கின்றன.

அதைப் போலவே ஆசிரியர்களின் எண்ணிக்கை 1965–66-ல் 1,96,690 ஆக இருந்தது இன்றைய தினம் 1974–75-ல் 2,48,220 ஆசிரியர்கள் என்ற அளவுக்கு உயர்ந்திருக்கிறது.

உயர்நிலைக் கல்விக்கு மேல் கல்லூரிகள் என்று வருகிறபோது 1947-ல் இந்த நாட்டில் இருந்த கல்லூரிகளின் எண்ணிக்கை 24. விடுதலை பெற்று 1967 முடிய 20 ஆண்டுகளில் உருவான கல்லூரிகளையு சேர்த்து மொத்தம் 105. ஆகவே, 20 ஆண்டுகளில் அதிகப்படியான கல்லூரிகளின் எண்ணிக்கை 81. 1967-க்குப் பிறகு இன்றைய தினம் வரை 1974–75ல் 183 கல்லூரிகளாக அந்த எண்ணிக்கை உயர்ந்திருக்கிறது. எட்டே ஆண்டுகளில் 78 கல்லூரிகளைத் தமிழக அரசு துவக்கியிருக்கிறது. 20 ஆண்டுகளில் காங்கிரஸ்காரர்கள் உருவாக்கிய கல்லூரிகள் 81 தான் என்பதை நாம் எண்ணிப் பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறோம்.

அதைப் போலவே மாணவர்களின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வளருகிறது என்பதைப் பெருமையோடு சொல்லிக்கொள்ளுகிறேன். 1947-ல் கல்லூரி மாணவர்கள் 17,000 பேர்தான். 19-67-ல் 94,000 பேர் பயின்றார்கள். 20 ஆண்டுகளில் 77,000 பேர்தான் அதிகம். 1974-75-ல் 2 லட்சம் பேர் படிக்கிறார்கள். எட்டே ஆண்டுகளில் 1 லட்சத்து ஆறுயிரம் மாணவர்கள் அதிகம் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

இந்தப் புள்ளி விவரங்களை நான் சொல்லக் காரணம்–எனக்கு நன்றாக நினைவுக்கு வருகிறது. 1967-ல் திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதற்கு முன்னால் ஸ்தாபன காங்கிரஸ்—ஸ்தாபன காங்கிரஸ், இந்திரா காங்கிரஸ், என்று அன்று இல்லை. எல்லாம் ஒன்றாக இருந்த காலத்தில் "கல்விக் கண் கொடுத்தவர் காமராஜ்" என்றார்கள். நான் நன்றியுணர்ச்சியோடு ஏற்றுக்கொள்கிறேன். பின் தங்கியவர்கள், தாழ்த்தப்பட்டவர்கள் கல்வியிலே முன்னேற்றம் அடைய வேண்டுமென்று பாடுபட்டவர் காமராஜர் என்பதிலே கருத்து வேறுபாடு இல்லை.

அதற்கு அடுத்த வரியைச் சொன்னார்கள்–"காமராஜர் பள்ளிகளைத் திறந்தார்; திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் பள்ளிகளை எல்லாம் மூடிவிடுவார்கள்" என்று அன்றைய தினம் பேசினார்கள். அந்தக் காமராஜர் காலத்தில் உருவாக்கப்பட்ட பள்ளிகளின் எண்ணிக்கையைக் காட்டிலும் இன்றைய தினம் அந்தத் துறையில் அதிகமாக உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை மெத்தப் பெருமையோடு சொல்லிக் கொள்வேன்.

அதே நேரத்தில் இன்னொன்றையும் சொல்லிக்கொள்வேன். இந்தத் தாழ்த்தப்பட்ட, பின் தங்கியவர்களுக்கு எல்லாத் துறைகளிலும் தனிச் சலுகை கொடுப்பதை போலவே கல்வியிலும் கொடுக்கிறார்கள். மாணவர்கள் சேருகிறபோது அந்த விகிதாசாரத்தைக் கடைப்பிடிக்கிறார்கள். ஆனால் இந்த நாட்டில் துரதிருஷ்டவசமாக அண்ணாவைப் பற்றிப் பொருள் உணர்த்துவதற்குத் தகுதியற்றவர்கள்—"To give interpretation to Anna" பொருள் உணர்த்துவதற்குத் தகுதியில்லாதவர்கள் கூட, இப்படிப் பிரதிநிதித்துவம் கொடுப்பது அண்ணா அவர்கள் கொள்கைக்கு முரணானது என்று வாதிடுகிறார்கள். அண்ணா அவர்கள் தெளிவாக முதல் பட்ஜெட்டிலேயே கூட அந்தக் கருத்தை வலியுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே அந்தத் துறையில் இன்றைக்கும் நாம் எல்லா வகையிலும் அறிஞர் அண்ணா அவர்களுடைய வழியில் இருந்து வழுவாமல் காரியங்களை ஆற்றி வருகிறோம்.



நான் இந்த நேரத்தில் சில ஆக்கபூர்வமான யோசனைகளை மாண்புமிகு கல்வியமைச்சரிடம் தெரிவித்துக் கொள்வதைக் கடமையாகக் கருதுகிறேன். கல்லூரிகளையும், பள்ளிகளையும் அதிகம் உருவாக்கியிருக்கிறோம். இது முதல் கட்டம். அடுத்த கட்டம்—அவர்களே குறிப்பிட்டது போல்—இனிமேல் நாம் செய்ய வேண்டியது பல்வேறு பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் கட்டடம் இல்லாமல் இருக்கின்றன. அந்த வசதிகளைப் பெருக்கித் தரவேண்டும்.

குறிப்பாகச் சொன்னால் என்னுடைய வட்டத்தில் ஈச்சங்கோட்டை என்ற இடத்தில் பள்ளி இருக்கிறது. அதற்குக் கட்டடம் இல்லை. கீற்றுக் கொட்டகையில் எட்டு ஆண்டுகளாக இருக்கிறது. கல்வியமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறேன். பல்வேறு பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லை. அப்படிப்பட்ட பள்ளிகளுக்குக் கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும், பள்ளிகள், கல்லூரிகளின் வசதிகள் பெருக்கப்பட வேண்டும். செம்மைப்படுத்தப்பட வேண்டுமென்பதிலே கவனம் செலுத்தப்படும் என்ற அறிவிப்பைக் காணுகிறபோது, உண்மையில் சரியான திசை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறோம் என்பதைக் காண மகிழ்ச்சியடைகிறேன்.

தமிழாய்ந்தவர் தமிழக முதல்வராக இருக்கிறார்கள். தமிழாய்ந்தவர் கல்வியமைச்சராக இருக்கிறார்கள். தமிழ் மொழி வளர்ச்சி, நாகரிகம் பண்பாடு, அவற்றைப் பேணிக் காப்பதில் ஊக்கம், உற்சாகம் இவர்களை விட அதிகம் பெற்றிருப்பவர்கள் யாரும் இல்லை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ளவேண்டும். அப்படி இருக்கிற நேரத்தில் உலகப் பல்கலைக் கழகங்களில் எல்லாம் தமிழ் இருக்கை (Tamil Chair) ஏற்படுத்திட வேண்டும். இதிலே, பக்கத்திலே இருக்கும் மாநிலமான பெங்களூர் பல்கலைக் கழகத்தில் தமிழ் இருக்கை (Tamil Chair) இல்லை என்பதை வருத்தத்தோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழின் தொன்மை, சிறப்புக்களை எல்லாம் உலகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் தெரிவிக்க அருள்கூர்ந்து இந்தப் பணியினைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வேன். அதைப் போலவே தமிழ் வளர்ச்சித் துறையை வைத்திருக்கிறோம். அதைப் போலவே தமிழ் வளர்ச்சிக் கழகத்தை வைத்திருக்கிறோம். இவைகளை வைத்து தமிழகத்தில் இது வரையிலே உருவாக்கியிருக்கிற ஒப்பற்ற நூல்களை ஆங்கில மொழியில் மொழி பெயர்த்து உலகமெங்கும் தமிழின் பெருமையை பரவச் செய்கிற முயற்சிகளில் முனைப்போடு ஈடுபட வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய மாண்புமிகு கல்வியமைச்சரவர்கள் பேசியதை நான் சின்னஞ்சிறு மாணவனாக இருக்கிற நேரத்தில், கேட்டிருக்கிறேன். எங்களுடைய உள்ளங்களிலே உணர்ச்சிகளை ஏற்படுத்திய பாட்டு பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள் பாட்டுக்களாகும். இன்றைக்குப் பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் பாட்டைச் சொல்லாமல் கல்வி அமைச்சரவர்கள் கூட்டத்தை முடிப்பதில்லை. அப்படிப்பட்ட பாவேந்தர் பாரதி தாசன் அவர்கள் நூல்களையும், பேரறிஞர் அண்ணு அவர்கள் நூல்களையும் நாட்டுடமையாக்கி எல்லாவற்றையுமே முழுமையாக வெளியிட வேண்டுமென்று மிகப் பணிவன்போடு நான் கேட்டுக் கொள்கிறேன். பாவேந்தர் நூல்களில் பல நூல்கள் எழுதப்பட்டு வெளியிடப்படாமல் இன்றைக்கும் கையெழுத்துப் பிரதிகளாக இருக்கின்றன. நான் கல்வியமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்வது, சென்னைப் பல்கலைக் கழகத்தில் உடனடியாக பாரதிதாசன் நூல்களுக்கு ஆய்வுத் துறையை உருவாக்கித் தரவேண்டும். இதற்குப் பெரிய செலவு, கூட இருக்காது. இப்படிப்பட்ட நல்ல காரியங்களைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

புதிதாக ஒரு பல்கலைக் கழகத்தை துவக்குவதற்கான முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது. தஞ்சை, திருச்சி மாவட்டங்களை இணைத்து மையப் பகுதியான தஞ்சையில் இந்தப் பல்கலைக் கழகத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். தஞ்சையைப் பற்றி எல்லோருக்கும் தெரியும். கலை வளர்ந்த இடம். சோழ சாம்ராஜ்யத்தில் அவர்கள் ஆற்றியிருக்கிற அரும் பணிகள், அவர்தம் காலத்தில் தோன்றியுள்ள உருவாக்கியிருக்கிற புலவர் பெருமக்கள், அவர்கள் உருவாக்கியுள்ள உலாக்கள், பிரபந்தங்கள் ஏராளம். பிற்காலத்தில் ஏற்பட்ட தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் தஞ்சை சோழப் பேரரசு பெரிதும் காரணமாக இருந்திருக்கிறது என்பது அனைவரும் அறிந்த உண்மை. ஆகவே உருவாக்கப்படுகிற பல்கலைக் கழகத்தை தஞ்சையில் உருவாக்கித் தரவேண்டுமென்று மாண்புமிகு கல்வியமைச்சரவர்களைக் நான் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

கீழ்த்திசைக் கல்லூரிகளில் (ஓரியண்டல் காலேஜ்களிலே) ஊதியத்தை அதிகப்படுத்தினார்கள். ஆனால் துரதிர்ஷ்டவசமாக திருவையாற்றில் இருக்கிற கல்லூரியில் உள்ள ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் ஊதியம் உயர்த்தப்படவில்லை. இதில் ஒரே ஒரு சிக்கல்தான் இருக்கிறது. ஊதிய உயர்வு இப்போது எய்டட் ஓரியண்டல் காலேஜ்களுக்குப் பொருந்துவதாக இருக்கிறது. அரசு மானியம் பெறுத இந்தக் கல்லூரிக்கு இவ்வூதிய உயர்வு பொருந்துமா, பொருந்தாதா என்று இந்தப் பிரச்சனை பல ஆண்டுகளாக நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு கல்வியமைச்சரவர்களிடம் இதைப் பற்றி விளக்கமாகக் கூறியிருக்கிறேன். அவர்கள் செய்வதாக ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். அருள் கூர்ந்து ஊதிய உயர்வை நம்முடைய திருவையாறு புலவர் கல்லூரி ஆசிரியர்களுக்கும், பேராசிரியர்களுக்கும் பயனளிக்கிற வகையில் ஒரு சிறிய திருத்தத்தை அரசாணையில்



(ஜி. ஓ. வில்) செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இதற்கு அதிகமாகப் பணம் செலவாகும் என்று இல்லை. ஆகவே, இதைச் செய்து தரவேண்டுமென்று, விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

இன்னொரு குறையைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். தஞ்சை மன்னர் கல்லூரியில், சரபோஜி கல்லூரியில், தொடர்ச்சியாக 2, 3 ஆண்டுகள் பொருளாதாரப் பட்ட மேற்படிப்பு தொடங்க வேண்டுமென்று பல்வேறு கால கட்டங்களில் வற்புறுத்திக் கொண்டிருக்கிறார்கள். இது மிகவும் முக்கியமான கோரிக்கை. தஞ்சை, மாவட்டத்தினுடைய தலை நகரம். அதில் பல்வேறு பட்ட மேற்படிப்புகள் இருக்கின்றன. பொருளாதாரத் துறையில் பட்ட மேற்படிப்பை உருவாக்குவது பெரிய சிரமமான காரியமல்ல. இதற்கு விஞ்ஞான ஆய்வுக் கூடங்கள் தேவையில்லை. அங்கே இருக்கிற பேராசிரியர்கள் தகுதி மிக்கவர்கள். அங்கே பட்ட மேற்படிப்பை உடனடியாகத் துவங்குவது எல்லா வகைகளிலும் பொருத்தமாக இருக்கும். இதைப்பற்றி கல்வியமைச்சரவர்களிடத்தில் தனிப்பட்ட முறையில் கோரிக்கையைக் கொடுத்தபோது ஏற்றுக் கொண்டார்கள். ஆகவே, அவர்கள் அருள் கூர்ந்து இதை உருவாக்கித் தந்திட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக, தமிழ் மொழி, தமிழ் வளர்ச்சி, தமிழ் இன வளர்ச்சி, தமிழ்க் கலாச்சாரம் இவைகளை காக்கின்ற பணிகளில் இன்னும் தீவிரமாகக் கவனம் செலுத்திட வேண்டும். அப்படி கவனம் செலுத்தி, நாம் கொடுத்த நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றச் செய்தால் நாம் சொன்னவைகளைச் செய்தோம் என்ற திருப்தி ஏற்படும் என்று சொல்லி, மானியத்தை வரவேற்று அமைகிறேன். வணக்கம்.

<u>திரு. செ. அரங்கநாயகம்</u> : தலைவரவர்களே, ஆன் எ பாயிண்ட் ஆஃப் கிளாரிபிகேஷன் ; நான் பேசுகிறபோது கல்வித் துறையிலே பொருளாதார அடிப்படையில் எல்லா சமூக மாணவர்களுக்கும் சலுகை தரவேண்டுமென்றும், எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை என்றும் சொன்னேன். இதுபற்றி குறிப்பிட்டுப் பேசுவதுபோல மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் அவர்கள் அண்ணாவினுடைய தம்பி என்று சொல்வதற்குத் தகுதி இல்லாதவர்களெல்லாம் விஷயங்களைச் சொல்லிக் கொண்டிருப்பதாக சொன்னார்கள். என்னைப் போன்றவர்களின் தகுதியை நிர்ணயிக்கக்கூடிய தகுதி அவர்களுக்கு இல்லை என்பதை சொல்கிற அதே நேரத்தில் எங்களுக்கு தரப்பட்டிருக்கிற **Perspective Plan for Tamil Nadu** என்ற புத்தகத்திலிருந்து சிலவற்றைப் படித்துக் காட்ட நான் கடமைப்பட்டிருக்கிறேன். நான் சொல்லிய இந்தக் கருத்துக்களுக்கு அடிப்படையாக இந்த பிளானில் இருக்கிற அறிக்கை ஆதாரவாக இருக்கிறது.

‘The social inequality now existing between different communities can be minimised and eliminated ultimately, only if a new order of society in which class and caste distinctions do not exist, is established and equal opportunity is provided for each and every able-bodied and intelligent citizen to realise his aspirations.... ’

இதிலே நான்காவது பாராவில் சோஷியல் சேஞ்ச் என்பதிே

'The aim is to create a casteless and a classless society. The programme of intensive social education is suggested to orient the children towards healthy social attitudes at the pre-school level. Social change of the right type would accelerate economic development by transforming society into a set of efficient, hard working, and enterprising people devoid of irrational prejudices........'

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விளக்கம் சொல்கிற சமயத்தில் சொற்பொழிவுபோல சொல்லக் கூடாது. உங்களைப்பற்றிச் சொன்னதாக இருந்தால் அதை மட்டும் குறிப்பிட்டுச் சொல்லுங்கள்.

திரு. செ. அரங்கநாயகம் :

'For attaining this end, growth-retarding forces should be identified and action—legal and other— taken to remove the same.... 'இன்னும் ஒரு வரி படித்து விடுகிறேன். 'The use of caste names and appellations should be discouraged. As a first step, Government grants and support may be denied to agencies and institutions named after particular communities and castes.'

இந்த கருத்துக்களெல்லாம் டாக்டர் கலைஞர் அவர்களைத் தலைவராகவும், மாண்புமிகு உறுப்பினர் திரு. மதியழகன் அவர்களைத் துணைத் தலைவராகவும் கொண்ட இந்த அறிக்கையில் இருக்கிறது. இந்தக்குழுக் கருத்துக்களின் அடிப்படையில்தான் அண்ணா அவர்களையும் இணைத்துச் சொன்னேனே தவிர தனிப்பட்ட முறையில் சொன்னதாக நினைக்க வேண்டாம். இந்தக் கருத்துக்களை மறுப்பதாக இருந்தால் சந்தர்ப்பம் வருகிற நேரத்தில் நண்பர் அவர்கள் மறுக்கட்டும்.

THIRU L. GANESAN : Sir, I want to make a personal explanation. I do not refer to the hon. Member. If he takes it as though I am referring to him, I can say only one thing "Guilty conscience needs no accuser". My contention is that what we are doing, is according to the path of Anna. Therefore, as far as we are concerned, to talk of merit especially in unequal circumstances, is nothing but farce and myth.

சமமான சூழ்நிலை இல்லாமல், ஓட்டப் பந்தயத்தில் முன்னாலே சில பேரை ஓட விட்டு, பின்னாலே சில பேரை ஓடவிட்டு, பின்னாலே கடைநிலையில் இருக்கிறவர்களைப் பார்க்கிறபோது, முன்னாலே வருகிறவர்கள் முந்திக் கொண்டவர்கள் என்ற வாதத்தை அண்ணா அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அண்ணா அவர்கள் ஒப்புக் கொண்டதில்லை. அண்ணா சொல்லியிருக்கிறார்கள் " சமமான சூழ்நிலை இல்லாத நேரத்தில் தகுதி அடிப்படை என்று பார்க்காமல் இந்த வேறுபாட்டைக் கருத்தில் கொண்டுதான் 'பின் தங்கியவர்களுக்கு அதிகமாகச் சலுகை கொடுத்திருக்கிறார்கள்", என்று. பின்தங்கியவர்களைத் தூக்கிவிட்டால்தான் சமத்துவத்தை ஏற்படுத்த முடியும். முன்னாலே ஓடிக் கொண்டிருக்கிறவர்களை முன்னாலே ஓட விட்டு, பின்னாலே ஓடிக் கொண்டிருக்கிறவர்களைப் பின்னாலே ஓட விட்டு, சமத்துவத்தை ஏற்படுத்த முடியாது. Equality Creation is impossible.



திரு. இ.எஸ். தியாகராசன் : தலைவரவர்களே, டாக்டர் நாவலர் அவர்கள் கோரியுள்ள கல்வி மானியத்தை ஆதரித்து என்னுடைய கருத்துக்கள் சிலவற்றைச் சொல்லிட விரும்புகிறேன்.

தமிழகத்தின் ஆண்டு பட்ஜெட்டிலே சுமார் 30 பங்கை இன்றைய தினம் கல்வி இலாகாவிற்காக நம்முடைய தமிழக அரசு செலவு செய்கிறது என்பதைத் தமிழகம் மட்டுமல்ல, அகில இந்தியாவுமே பாராட்டுகிற அளவிற்குக் கல்வித்துறை செயல்பட்டு வருகிறது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய ஆண்டு பட்ஜெட்டான 537 கோடி ரூபாயிலே இன்றைய தினம் 144 கோடிவரை கல்விக்காகவும், இந்த மானியத்தைத் தொடர்ச்சியாகக் கொண்டிருக்கிற மற்ற துறைகளிலேயும் செலவு செய்யப்படுவது உண்மையிலேயே பெருமைப்படத்தக்க ஒன்றாகும். ஏழை எளியவர்களையெல்லாம் இந்தக் கல்வித்துறையானது இன்றையதினம் தூக்கி விடுவதற்கு மிகவும் ஒத்துழைக்கிறது, உதவி புரிகிறது என்பதை இந்த நேரத்தில் மறுக்க முடியாது. இன்றையதினம் ஆயிரக் கணக்கான தொடக்கப் பள்ளிகள் இருக்கின்றன. இந்தத் தொடக்கப் பள்ளிகளின் வளர்ச்சிக்காக பல நல்ல திட்டங்களை நம்முடைய அரசு செய்து வருகிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(பிற்பகல் 12-30)

தொடக்கப் பள்ளிகள் சில கிராமங்களில் இருக்கின்றன. அவற்றிற்குக் கட்டிடங்கள் இல்லை. அதற்காக ஏற்கனவே அரசு, "தமிழ்நாடு தொடக்கப் பள்ளி கட்டிட கார்ப்பரேஷன்" என்று அமைப்பதாக டாக்டர் நாவலர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அது எந்த நிலையில் இருக்கிறது என்று தெரியவில்லை. அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். அப்படி ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்படுமானால், சிறுசிறு கிராமங்களில் இருக்கும் துவக்கப் பள்ளிகள் கட்டிடங்களைப் பெறுவதற்கான நல்வாய்ப்பு ஏற்படும் என்பதையும் இந்த நேரத்தில் நினைவூட்டக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

அதேபோன்று உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடங்கள் கட்டுவதற்கான— ஒரு கார்ப்பரேஷன் அமைக்கப்படுமானால், இன்றைய தினம் தமிழகத்தில் அமைக்கப்பட்டிருக்கும் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டிடம் இல்லாத கஷ்டத்தைப் போக்க வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஒவ்வொரு ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கும் ஒரு சில பள்ளிகளுக்குத்தான்—ஒரு பி.டி ஆசிரியரை நியமித்து இருக்கிறார்கள். இது போல் எல்லா ஹையர் எலிமெண்டரி ஸ்கூலுக்கும் ஒரு பி.டி. ஆசிரியர் வீதம் நியமிக்க வேண்டுமென்றும் கட்டாயம் நியமிக்க வேண்டும் என்றும் அரசாங்கம் உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி செய்வதால், அந்தப் பள்ளி மாணவர்கள் சிறந்த கல்வியைப்

பெறமுடியும், அதே நேரத்தில் படித்து பட்டதாரியாக இருந்து, வேலை யில்லாமல் இருக்கும் பி.டி. ஆசிரியர்களுக்கும் வேலைவாய்ப்பு அளித்தது போல் இருக்கும் என்றும் கூறிக்கொள்கிறேன்.

ஹையர் எலிமெண்டரி பள்ளிக்கூடங்கள் சிலவற்றிற்கு உடற்பயிற்சி ஆசிரி யர்களைத் தந்து இருக்கிறார்கள். பல பள்ளிகளுக்குத் தரப்படவில்லை. ஒதுக்கப் பட்டிருக்கும் நிதியாண்டில் 150 ஆசிரியர்களுக்குத்தான் வேலை அளிக்கப்பட இருக்கிறது. இந்த 150 ஆசிரியர்களை வைத்து எல்லாப் பள்ளிக்களுக்கும் உடற்பயிற்சி கொடுக்க முடியுமா? உடற்பயிற்சி ஆசிரியர்களை எல்லாம் பள்ளிகளுக்கும் போட்டு, இளம் சிறுர்களுக்கு இளவயதிலிருந்தே அந்தப் பயிற்சி தர அரசு ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பகல் உணவுத் திட்டம் பற்றி குறிப்பிட விரும்புகிறேன். இந்த மதிய உணவு எல்லா பகுதிகளுக்கும் சரியாகப் போய் சேருவது இல்லை. அங்கே இரண்டு மூன்று வேன்கள்தான் இருக்கின்றன. அதிலே ஒன்று எப்போதும் ரிப்பேராக நின்றுகொண்டு இருக்கிறது. அதனால் அவர்களால் எல்லாப் பகுதிகளுக்கும் அதைக் கொண்டுபோய் சேர்க்க முடிவதில்லை. ஏழை சிறுவர்கள் பகல் உணவு வரும் என்று காத்துக் கொண்டு இருக் கிறார்கள். ஆகவே, இந்த நிலைமையைப் போக்குவதற்காக, இப்படி வேன் மூலம் உணவு சப்ளை செய்யமுடியாத இடங்களுக்கு, அப்படிப் பட்ட கிராமங்களுக்கு, உணவு சப்ளை செய்ய முடியாத கிராமங்களுக்கு, அவர்களையே முன்போல் உணவு தயாரித்துக் கொள்ள அமைச்சர் அவர்கள் வழி வகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வி பெறுவதற்கு நல்ல வாய்ப்பை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளில் தொழில் கல்வி பெற வாய்ப்பு இருக்குமானால், மாணவர்கள் எதிர்காலத்தில் எந்தத் தொழிலுக்குத் தாங்கள் போகவேண்டுமென்று நிர்ணயித்துக் கொள்வதற்கு வாய்ப்பு இருக்கும். ஆகவே, அந்தத் தொழில் கல்வியை எல்லா பள்ளிகளிலும் புகுத்த அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளுக்கு சையன்ஸ் லாபரேடரி கிராண்ட் தருகிறார்கள். 500 மாணவர்கள் உள்ள பள்ளிகளுக்குத்தான் இந்த கிராண்ட் தருகிறார் கள். 300 மாணவர்கள் இருக்கும் பள்ளிகளுக்கும் சயன்ஸ் கிராண்ட் கொடுத்தால், அங்கே படிக்கிற மாணவர்களும் மேல்நிலைப் படிப்புக்குச் செல்கிறபோது வசதியாக இருக்கும். ஆகவே, அரசு குறைந்தது 300 மாணவர்கள் இருக்கும் பள்ளிகளுக்கும் இந்த ஸயன்ஸ் கிராண்ட் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருத்தணிப் பகுதியில், தெலுங்கு ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏற் கெனவே அவர்கள் தெலுங்கில் படித்து இருப்பதால், அவர்களுக்கு வேலை கிடைக்காமல் அவதிப் படுகிறார்கள். அவர்களுக்கு ஏற்ற வேலை கொடுப்பதற்கு அரசு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.



செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் 12,000 பேர் தமிழகத்தில் வேலை இல்லா மல் இருப்பதாகத் தெரிகிறது. என்னுடைய தொகுதியில் சில ஆசிரியர் கள் 1970-71-ம் ஆண்டில் பாஸ் செய்தவர்கள், இன்றையதினமும் வேலையில்லாமல் அவதிப்படுகிறார்கள். அந்த நிலையைப் போக்குவதற்கு அரசு ஏற்கெனவே நடத்தி வந்த "அப்பிரண்டிஸ்" திட்டத்தை மறு படியும் துவக்கி ஆண்டு ஒன்றுக்கு 5,000 பேருக்கு வேலை வாய்ப்பு தரும் நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக் கொள் கிறேன்.

தமிழ் மொழி வளர்ச்சி பற்றி அறிக்கையில் விளக்கமாகச் சொல்லப் பட்டு இருக்கிறது. ஏற்கெனவே தமிழ் வளர்ச்சிக்காக ஒரு தனி வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்றும், அந்த வாரியத்திற்குத் தமிழ் அறிஞர் ஒருவர் தலைவராக இருந்து, தமிழ் மொழி வளர்ச்சியை நல்ல முறையில் செய்ய வேண்டுமென்றும் பல முறை கேட்டு இருக்கிறேன். அதற்கு அரசு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான திருத்தணியில் இருக்கும் கல்லூரிக்கு நல்ல கட்டிடம் கட்டித் தரவேண்டும், பி.ஏ., பட்டதாரி வகுப்பைத் துவக்க வேண்டுமென்று சென்ற ஆண்டே கேட்டேன். அரசு இந்த ஆண்டா வது அதைத் துவக்க முன் வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*THIRU K. M. SUBRAMANIAM: Mr. Speaker, Sir, I welcome the budget amount allotted for Education which is more or less 30 per cent of the State revenues but whether we are getting the yield proper for the investment we make, is the most important point for consideration. Any body who goes through Tamil Nadu will find more students outside the classes than those inside during school hours. There is absolute lack of discipline. Whether it is due to the fault of students, fault of parents, fault of teachers. I am not prepared to enter into any argument today. But, Sir, it is our duty to realise that these are the persons who will have to run the administration of the country, run the Government services and the like, after 10 years. They are the persons who will have to be behind the machinery of the country after 10 years. If the money we are spending is not properly utilised, if the manpower is not properly harnessed what will be the welfare of the country's administration after 10 years is a matter which we will have to seriously consider and rectify if possible.

Coming to the other major points expressed by Mr. Ganesan, I also say that backward communities should come up. Their lot will have to be improved. But what do we find? We have ordi-

nary slum schools, ordinary panchayat schools, ordinary Corporation schools, ordinary management schools and apart from these, we have hundreds of kinder garten schools for higher classes children, wherein even middle-class people, who cannot afford to send their children, do send their children.

So we have created many castes and classes in elementary education, even though our intention is to abolish castes and classes. Many of the elementary schools are not properly managed. Let the Hon. Minister go round and he will see Corporation elementary schools without buildings, with thatched sheds, etc. That is ridiculous. We allot so much of money for education. There is also difference between the methods of teaching and efficiency in these elementary schools and other schools. Under these conditions ordinary boys belonging to the slums and other low classes can never come up to the level of higher classes boys in public examinations, whatever tuition we may offer at a later stage to these boys.

I a . very glad that Tamil is encouraged. But what is happening? You go to any high school: there is suech a great demand for English medium. There are Ministers recommendation letters to the Headmasters and recommendation letters from P.As to Ministers to the headmasters to admit such and such a boy in the English medium class. Parents want English medium. I know in one school there are 96 children in one class of English medium. As per Government rules, unfortunately there is only one classor section whatever be the number of students. The teachers refuse to go to such classes where there are 96 children.

Leaving alone efficiency, they are very much afraid to face such a group of boys. Unless this is rectified, we cannot have good cencation. Let us not be governed by slogans; let us go to the prectical aspects. When parents want English medium and when children of officers are admitted to English medium with pressure and recommendations from Ministers, why not relax the conditions and allow whatever the parents want for their children and allow the schools to have more Engilsh medium classes or have exclusively schools with English medium. Why allow commercialised schools to charge Rs. 35 and 50 for each class People are paying, no doubt. Becaus, they feel that if their children will be better off only if they studied in the English medium classes or schools, In Bombay and Punjab, particularly in Bombay, more than 2 lakhs of puplis are in arintheEnglish medium sections. They say 'we are Maharashtrians'. There are hundreds of commercialised schools in Bombay where the parents pay Rs. 100 and more per month as fees.



Sir, now this Government is a popular Government. Why not they relax the rules so that they could satisfy the parents and make them spend less money on education? Many people are running these commarualised schools. I am myself running one aud I am one of those crimials. I sdmit it. But I am afraid there is no other go. I am fully aware of the difficulties of pareuts. When they come, they say அரிசி விலை ஏறிப் போச்சே பீஸைக் குறைக்கக் கூடாதா?

I am not able to help them. There is a huge demand for English medium schools. Therefore Government will do well to consider relaxing the rules in respect of English medium classes and schools.

(The gong was sound)

Sir, I have not spoken one word unnecessarily. If I am not given a little more time, what is the good of my specialising in Education. The Speaker must be a bit liberal in my case.

In this note, it is said that Tamil is older than Sanskrit. I entirely agree with the Minister with his idea. But Sanskrit is old enough and why not have one school for teaching Sanskrit as the first language, if the parents want it? I do not say that if the parents do not want it, you need have it. But if they demand it, why not allow it in one school. When you can have Tamil, Hindi, Telugu, etc, from out of the National Languages, why not have Sanskrit also if 80 per cent of the parents want it? Why cannot the Government consider this, and help the minority caste. I do not mean to say minority community for this caste is most backward now. It is the most backward now, and it is now paying the penalty for having been forward once. Why should the children suffer for what their grandfathers have enjoyed in the past. Still, cannot this Government consider about my request.

Next is about libraries. The standard of Education has gone very much down; the results of I.A.S. I.P.S. I.T.I. etc. examinations show that our standard has gone down very very low. Now-a-days people are politicalising every thing, including education. Is there one bold leader, political leader, to tell the students, 'Look here, you are all good boys, you should study well, for after ten years, you are going to Government the country'. No. We say, 'March, let us strike'. This is the way we are directing the country.

In the 30's when I was a student, there was a statistics taken. Books sales and book-reading habit, was the highest in Madras. Second came Mysore. Now, in the sale of books, where are we? we do not know. Reading habit has gone down.

I want to refer to one important thing. In the 1919 Municipality Act, there was the property tax along with the educational cess. Then

there was no compulsory education. Now there is compulsory education. The same percentage of collection is going on in Corporations, Municipalities and Panchayats. Now all these bodies have the responsibilities for compulsory education. Now it is the duty of Tamil Nadu Government whatever be the deficit, it must pay the entire cost educatios and get from the Centre who are also responsible for compulsorags eeucation to see that quality of education is improved.

Now we have plenty of schools. But we have no education and that is our biggest defect. I think it is the urgent duty of the Government to see that the future citizens of the country are looked after well by the present generation so that the students of today may grow into good citizens in future. Thank you Sir.

*திரு. டி. கணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி மானியத்தை வரவேற்று என்னுடைய கருத்துகளைச் சொல்ல விரும்புகிறேன்.

உறுப்பினர் லத்தீப் அவர்களும், உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்களும் பஞ்சாயத்து யூனியன் பள்ளிகளைப் பற்றி சில கருத்துகளைச் சொன்னார்கள். லத்தீப் அவர்கள் எங்கேயோ மலைவாசத்தில் உள்ள பள்ளிக் கூடத்தைப் பார்த்தே சொல்லி இருக்கிறார்கள். அங்கங்கே ஓரிரு பள்ளிக் கூடங்கள் நல்ல முறையில் நடத்தப் படாமல் இருக்கலாம். பொதுமக்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள், பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் மேற்பார்வையிட்டு பள்ளிக் கூடங்கள் நல்ல முறையில் இயங்குகின்றன என்று நான் வள்ளியூர் பஞ்சாயத் யூனியன் சேர்மன் என்கிற முறையில் சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன். இதை குறை கூறுவதில் பயன் இல்லை. பஞ்சாயத்து யூனிய்ன் ஆசிரியர்கள் மாற்றத்திற்கு முன் போல் பஞ்சாயத்து யூனியன் சேர்மனுக்கு இருந்த ஒரு உரிமையை, ரைட்டை கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் நான் கேட்டுக் கொள்கிறேன்.

அது மட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சுவாமிதாஸ் அவர்கள் தமிழனாக இருந்து மலயாளம் படித்த ஆசிரியர்களுக்கு பள்ளிக் கூடங்களில் இடமில்லை என்ற ஒரு கருத்தைப் பரப்புகிறார்கள். அதை நான் மறுக்கிறேன். ஏனென்றால் விகிதாச்சார அடிப்படையில் தான் வேலை கொடுக்க முடியுமே தவிர மலையாளம் படித்த எல்லாருக்கும் வேலை கொடுக்க வேண்டும் என்றால் எப்படி முடியும்? எந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்குத்தான் கொடுக்கலாம்.

கல்விக்கு இன்றைக்கு 118 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பள்ளிக் கட்டடங்கள், கல்லூரிக் கட்டடங்கள், கிராமங்களில் ஆசிரியர், ஆசிரியைகள் தங்கியிருக்க குடியிருப்பு வீடுகள், தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமண கடன் போன்ற காரியங்களுக்கு 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவை தவிர அரிசனங்கள், பிற்பட்ட வகுப்பினர் பள்ளிகள், விடுதிகள், படிப்பு உதவித் தொகை, சீர்திருத்தப் பள்ளிகள், தொழில் கல்விக்கு என்று 17 கோடி ரூபாய்





ஒதுக்கியிருக்கிறார்கள். மேலும் மருத்துவக் கல்லூரி, வேளாண்மைக் கல்லூரி· கால்நடை மருத்துவக் கல்லூரிக்கென 7 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். ஆக மொத்தம் 48 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இது தமிழக அரசின் மொத்த வருவாயான 538 கோடி ரூபாயில் பெரும் பகுதியான 33 சதவிகிதமாகும். ஆகவே, மக்களுக்கு கல்வி தர வேண்டிய அவசியத்தையும் அக்கறையையும் நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் டாக்டர் நாவலர் அவர்களும் கல்வித் துறையினரும் உணர்ந்து அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்திருக்கிறார்கள் என்பதை நான் பெருமையாக சொல்ல்லிக் கொள்ள கடமைப்பட்டுள்ளேன்.

அதுமட்டுமல்ல நமது கழக அரசு ஆட்சிக்கு வந்தபிறகு ஆங்காங்கே இருக்கிற பள்ளிக்கூடங்களை எல்லாம் மூடிவிடுவார்கள் என்று அங்கலாய்த்து வந்தவர்களுமுண்டு ஆனால் அதற்கு மாறாக சவாலாகத் தமிழக அரசு 1965–66இல் 24,641 தொடக்கப் பள்ளிகள் இருந்த இடத்தில் 1974–75-இல் 26,797 தொடங்கியுள்ளது. 2,234 உயர்நிலைப்பள்ளிகள் இருந்த இடத்தில்லை இப்போது 2,882 உயர் நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. 92 கல்லூரிகள் இருந்த இடத்தில் இப்போது 183 கல்லூரிகள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. அதுமட்டுமல்லாமல் இன்றைக்குத் தமிழ்நாட்டில் மூன்று பல்கலைக் கழகங்கள் இருக்கின்றன. கஜேந்திரக் கட்கர் குழுவின் பரிந்துரைக்கேற்ப ஒரு பல்கலைக் கழகத்தில் 30 அல்லது 40 கல்லூரிகளுக்கு மேல் இருக்கக்கூடாது என்பதால் அதற்கு ஏற்ப நம்முடைய அரசு கூடுதலாக ஓரிரு பல்கலைக் கழகங்களை ஐந்தாவது திட்டத்தில் தொடங்க விருப்பதை வரவேற்றுப் பாராட்டுகிறேன்.

இந்த சந்தர்ப்பத்தில் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். மதுரை பல்கலைக்கழகத்தில் 77 கல்லூரிகள் அடங்கியிருக்கின்றன. அவற்றில் 26 கல்லூரிகள் திருநெல்வேலி மாவட்டத்திலும் 13 கல்லூரிகள் கன்னியாகுமரி மாவட்டத்திலும் இருக்கின்றன. ஆக, திருநெல்வேலியிலும் கன்னியாகுமரியிலும் மட்டும் ஏறத்தாழ 39 கல்லூரிகள் இருக்கின்றன. ஆகவே, ஐந்தாவது திட்டத்தில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஒரு பல்கலைக் கழகத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இப்போது எல்லாக் கல்லூரிகளிலும் பி.காம், படிப்பதற்கு மாணவர்கள் விரும்புகிறார்கள். ஆகையால் எல்லாக் கல்லூரிகளிலும் அந்தப் படிப்புக்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கல்லூரிகளில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். பெண்கள் மட்டும் படிக்கிறன் கல்லூரிகளில் வேண்டுமானால் ஆண்களைச் சேர்த்துக் கொள்ளக் கூடாது என்ற விதியை வைத்துக் கொள்ளலாம். ஆனால் ஆண்கள் படிக்கின்ற கல்லூரிகளில் பெண்கள் படிக்க வேண்டுமென்று விரும்பினால் அவர்கள் அங்கு படிக்க வாய்ப்பளிக்க வேண்டும். பட்டிக்காடுகளில் அதிக அளவில் பெண்கள் படிக்க முன்வராமல் இருக்கிறார்கள். அவர்கள் பெண்கள் கல்லூரிக்குத்தான் செல்ல வேண்டுமென்றால் தொலை தூரத்திற்குப் போக வேண்டும். செலவில்லாமல் நடந்துபோய் படிக்கும் வாய்ப்

மறுக்கப்படுகிறது. அதனால் அவர்கள் கல்லூரிகளில் படிக்கின்ற வாய்ப்பு இல்லாமல் போய்விடக்கூடும். ஆகவே, கிராமங்கள் அருகாமையில் இருக்கிற ஆண்கள் படிக்கின்ற கள்ளிகுளம் போன்ற கல்லூரிகளில் பெண்கள் படிக்க விருப்பம் தெரிவித்தால் அவர்களுக்கு அதற்குரிய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எங்கள் திருநெல்வேலி மாவட்டத்தில் பாளையங்கோட்டையில் இருக்கிற செயின்ட் ஜான் கல்லூரி, செயின்ட் சேவியர் போன்ற கல்லூரிகளில் 400, 500 மார்க்குகள் எடுத்த மாணவர்களைத்தான் சேர்த்துக் கொள்கிறார்கள். அவர்கள் உயர்நிலைப்பள்ளியில் படித்தவர்களுக்கே இடம் இல்லை என்று சொல்லிவிடுகிறார்கள். இந்த முறையைத் தடுக்க வேண்டும். 10 மைல் வட்டாரத்திற்குள் இருக்கிற மாணவர்கள் எஸ்.எஸ்.எல் சி. தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்கள் எத்தனை மார்க் எடுத்திருந்தாலும் அந்தக் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதற்குத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாணவர்களின் தரத்தினை மதிப்பிடும் முன்னோடித் திட்டம் சில உயர்நிலைப் பள்ளிகளில்தான் இருக்கிறது. இத்திட்டம் ஒழுக்கத்தையும் அக்கரையையும் மாணவர்களிடையே ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே, பாரபட்சமற்ற முறையில் எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் எல்லோரும் பாராட்டும் முன்னோடி திட்டத்தை விரைவில் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

18 வயது நிறைந்த 8-வது வகுப்பு படித்த மாணவர்கள் பல காரணங்களால் அவர்கள் தொடர்ந்து படிக்க முடியாமல் படிப்பை விட்டிருக்கலாம். அப்படிப்பட்டவர்களெல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. தேர்வு எழுதலாம் என்ற ஒரு முன்னோடித் திட்டத்தை வைத்திருக்கிறார்கள். இத்திட்டதை எல்லோரும் புகழ்கிறார்கள். இந்த முறையில் நல்ல முன்னேற்றம் இருப்பதால் இனிமேல் சட்டக் கல்லூரி தேவையா என்பதைச் சிந்திக்கவேண்டும்.

Modern students are super lords to their parents. More so can be said of them now. They are superior to all authorities.

சட்டக் கல்லூரியே எல்லாப் பிரச்சினைகளுக்கும் காரணம் என்பதால் எல்லா மாணவர்களும் தனிப்பட்ட முறையில் சட்டப்படிப்பு படிக்கலாம் என்ற முறையை உருவாக்க விரும்புகிறேன். நானும் சட்டக் கல்லூரியில் படித்தவன்தான். சட்டக் கல்லூரி இல்லாமல் தனியே படிப்பதற்கு இன்றைக்கு வசதி இருக்கிறது. எம்.ஏ. எம்.காம்., படிப்பது போல் அட்வொகேட் சேம்பரில் Research Scholars ஆக இருந்து லா படித்து பரிட்சை எழுதலாம். ஆகவே, சட்டக் கல்லூரி என்று தனியாக வேண்டாம் என்று கருதுகிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டம் பயின்றவர்கள்; சட்டக் கல்லூரியில் படித்தவர்கள். இப்போது அவர்கள் சட்டக் கல்லூரியை மூடிவிட வேண்டுமென்று சொல்லுகிறார்களா அல்லது வேறு யாரும் இனிமேல் சட்டக் கல்லூரியில் படிக்கக் கூடாது என்று சொல்கிறார்களா ? தயவுசெய்து அதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அவர்கள் இன்னொரு கருத்தினையும் கூறினார்கள். அட்வொகேட் சேம்பரிலே சட்டம் படித்தால் போதும் என்று சொன்னார்கள். சேம்பரில் படித்துத் தேரக்கூடிய அளவுக்கு மாணவர்களுக்குத் திறமை இருக்குமா ? அல்லது மாணவர்கள் புரிந்துகொள்கின்ற அளவுக்குச் சொல்லிக்கொடுக்க வழக்கறிஞர்களுக்கு நேரம் இருக்குமா ? அதையும் தெரிவிக்கும்படி கேட்டு கொள்கிறேன்.

திரு. கோவை செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டக் கல்லூரியில் படிப்பதை விட வெளியிலே படிக்கலாம் என்று சொல்கிறார்கள். நான் அதை ஆதரிக்கிறேன். சட்டக் கல்லூரியில் படிக்கின்ற மாணவர்கள் அங்கே போய் யாரும் பாடம் படிப்பதாகத் தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அந்த ஆப்சர்வேஷன் வேண்டாம். இங்கே மாணவர்களைப்பற்றி கிரிட்டிசைஸ் செய்தால் அங்கே மாணவர்கள் நம்மைப்பற்றி கிரிட்டிசைஸ் செய்வார்கள். ஆகவே, மாணவர்களைப் பற்றி கிரிட்டிசைஸ் பண்ண வேண்டாம்.

திரு. கோவை செழியன் : நான் சொல்ல வந்தது, பிரைவேட்டாகப் படித்துத் தேரலாம். மற்ற மாநிலங்களில் அந்த முறை இருக்கிறது. அதைப்போல நாமும் பிரைவேட்டாகப் படித்து சட்ட ஞானம் பெறலாம். சட்டக் கல்லூரியில் இடம் கிடைப்பதும் கஷ்டமாக இருக்கிறது.

திரு. டி. கணபதி : திரு. பொன்னப்ப நாடார் அவர்கள் சட்டக் கல்லூரி இல்லாமல் சட்டம் படிக்க முடியுமா என்ற முறையிலே கேட்டார்கள். ஆப்ரகாம் லிங்கன் கல்லூரியில் சேர்ந்து படிக்கவில்லை. அவர் ஒரு சிறந்த மேதையாக முடிந்தது. எல்லோரும் சட்டக் கல்லூரியில் படித்தால்தான் சட்டத்தில் மேதையாகலாம் என்றில்லை. அட்வொகேட்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தனியாகப் படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று வேண்டுமானால் சொல்லுங்கள். அதற்காக கல்லூரியே வேண்டாமென்று சொல்லாதீர்கள். (திரு. ஆலடி அருணா, திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர் எழுந்தார்கள்)

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, சட்டக் கல்லூரியில் படிக்காமலே மேதையாகலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். அவர்கள் ஒரு சட்டக் கல்லூரியில் படித்த அட்வொகேட்தான். இன்றைக்கு இருக்கிற அட்வொகேட்களில் யார் சட்டக் கல்லூரியில் படிக்காமல் சிறந்து விளங்குகிறார் என்ற விவரத்தை அவர்கள் சொல்வார்களா ?

திரு. துரைமுருகன் : அவர்கள் கருத்து சட்டக் கல்லூரியில் படித்தவர்களை எல்லாம் அவமானப்படுத்துவதாக இருக்கிறது. அதனால் அதை நான் ஆட்சேபிக்கிறேன்.

திரு. டி. கணபதி : இப்போது யார் சிறந்து விளங்குகிறார் என்பது தெரியாது. ஆனால் முன்னால் அமைச்சர் டானியல் தாமஸ் அவர்கள் சட்டக் கல்லூரியில் படிக்காமலேயே பெரிய "லீடிங் லாயராக" இருந்தார்கள்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : நீங்கள் சட்டக் கல்லூரியில் படித்த ஒரு அட்வொகேட். சட்டக்கல்லூரியில் படிக்காமலேயே ஆப்ரகாம் லிங்கன் சிறந்த மேதையாக இருந்தார் என்று சொல்லி, சட்டக் கல்லூரியில் படிக்கிற மாணவர்களைப் பாழாக்க வேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

THIRU K. M. SUBRAMANIAM : The Karnataka University is running postal tuition classes for B.G-L Course.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கணபதி, நீங்கள் அந்த சப்ஜெக்டை விட்டுவிட்டு மற்ற விபரங்களை சொல்லுங்கள்.

திரு. டி. கணபதி : அந்த விஷயத்தை விட்டு விடுகிறேன். அடுத்து, திருநெல்வேலி தென்கல்வி மாவட்ட அலுவலகத்தை சேரன் மகாதேவியில் அமைப்பதாக ஒரு கொள்கை இருப்பதாக அறிகிறேன். இது மிக மிக வருந்தத்தக்கது. ஏனெனில் தென் கல்வி மாவட்டம் நாங்குநேரி, அம்பாசமுத்திரம் என இரண்டு வட்டங்களை உள்ளடக்கியது. நாங்குநேரி வட்டம், நாங்குநேரி, இராதாபுரம், மேலப்பாளையம் என மூன்று சட்ட மன்றத் தொகுதிகளைக் கொண்டது. அதுமட்டுமல்ல 32 உயர்நிலைப் பள்ளிகளையும், 457 தொடக்கப் பள்ளிகளையும் கொண்டுள்ளது. அம்பாசமுத்திரம் வட்டமோ சேரன்மகாதேவி, அம்பாசமுத்திரம் என இரண்டு சட்ட மன்றத் தொகுதிகளையும் 12 அல்லது 13 உயர்நிலை பள்ளிகளையும், 335 தொடக்கப் பள்ளிகளையும் கொண்டுள்ளதுதான்.

இப்போது நெல்லையின் தென் கல்வி மாவட்ட அலுவலகம் பாளையங்கோட்டையில் இருக்கிறது. இரண்டு வட்டங்களுக்கும் சம தூரத்தில் எல்லா வசதிகளையும் கொண்டதாக இருக்கிறது. சேரன்மகாதேவிக்குப் போனால் நாங்குநேரி ஆசிரியர்கள், மாணவர்கள் தூரத்தாலும் வசதியின்மையாலும் கஷ்டப்படுவார்கள். அரசு பரிசீலனை செய்து சேரன் மகாதேவிக்கு அவ்வலுவலகம் போவதை ரத்து செய்ய வேண்டும். ஒன்று பாளையங்கோட்டையில் தொடர்ந்து இருக்க அனுமதிக்க வேண்டும். இல்லையெனில் கூடுதல் உயர்நிலைப் பள்ளிகள், தொடக்கப் பள்ளிகள் இருக்கின்ற நாங்குநேரி அல்லது வள்ளியூரில் இந்த அலுவலகத்தை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1.00)

அடுத்ததாக பள்ளிப் பிள்ளைகள் மருத்துவ சோதனைக்கென வடாறகாடு, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய மாவட்டங்களில் நடமாடும் மருத்துவ வண்டிகள் கல்வித்துறையால் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அதுபோல 1973 நவம்பர் முதல் மத்திய அரசுக் கல்வித்துறை—நேரு இளைஞர் நிலையங்கள்—நான்கை கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் திறந்துள்ளது. மேலும் ஒரு





நிலையம் மதுரைக்கு வர இம்மானியத்தில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. கேர் நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதி உதவியால் நிறுவப்பட்ட சுகாதார முறைப்படி மையச் சமையற்கூட திட்டத்தில் நவீன அடுப்புகளில் சமைக்கப்பட்ட உணவை மாணவர்களுக்கு வண்டிகளில் கொண்டுசெல்ல தென் ஆற்காடு, வட ஆற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் வகை செய்யப்பட்டிருக்கிறது.

இம்முன்னோடித் திட்டங்கள் எல்லாம் பெரிதும் மக்களாலும், மாணவர்களாலும் கவர்ந்து வரவேற்கப்படுகின்றன. ஏனோ 400 மைல், 450 மைல்களுக்கு அப்பாலுள்ள நெல்லை, குமரி மாவட்டங்களை இந்த திட்டங்கள் எட்டிப்பார்ப்பதில்லை. இம் முன்னோடி திட்டங்களும், இன்னும் வேறுபல திட்டங்களும் மதுரைக்குத் தெற்கே வருவதில்லை. இவைகளை நெல்லை மாவட்டத்திற்கும், குமரி மாவட்டத்திற்கும் விரிவுபடுத்த வேண்டுமென்று விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து ஆசிரியர்களுக்கெல்லாம் ஏனைய அரசு ஊழியர்களைப் போன்று பென்ஷன், கிராஜுட்டி, விடுப்புகள் மற்றும் குடும்ப நல திட்டம் சலுகைகளை தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனால் ஆசிரியர்கள் வாழ்வில் மகிழ்ச்சியும் விழிப்பும் உண்டுபண்ணியிருக்கிறது. இச்சலுகைகள் குமரி மாவட்ட ஆசிரியர்களுக்கு கிடைக்கவில்லை என்று சொல்லப்படுகிறது. அவர்களுக்கும் இதை விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, செக்ஸ் எஜூகேஷன்—பாமிலி பிளானிங் பற்றி நம் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் போதிக்க ஏற்பாடு செய்ய வேண்டும். மெடிக்கல் காலேஜில் படிக்கிறவர்கள் மட்டும் அதைத் தெரிந்து கொண்டு பயன் அடைகிறபோது மற்ற கல்லூரிகளில் படிக்கிறவர்களுக்கும் இத்தகைய அறிவு கொடுக்கப்படுவது அவசியமாகிறது. மாண்புமிகு அமைச்சர் டாக்டர் நாவலர் அண்மையில் அமெரிக்காவில் நியூயார்க்கில் போர்டு ஸ்தாபனத்தால் நடத்தும் குழந்தைகள் பள்ளிகளைப் பார்வையிட்டபோது அவர்களுக்கும் கல்வி போதிக்கப்படுவதாக சொல்லியிருக்கிறார்கள். மேல்நாட்டைப் போல நம் நாட்டைச் சேர்ந்தவர்களும் இத்தகைய அறிவு பெற பள்ளிகளில் பின்தங்கி விடக்கூடாது. கல்லூரிகளிலும் செக்ஸ் எஜூகேஷன்—பாமிலி ப்ளானிங் பற்றி போதிப்பது மிக மிக அவசியம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடைசியாக 2,500 இடைநிலை ஆசிரியர்களைக் கடந்த ஆண்டில் நியமித்திருக்கிறார்கள். மேலும் வெளியில் பத்தாயிரக்கணக்கான ஆசிரியர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். உயர் தொடக்கப் பள்ளி கல்வி தரத்தை உயர்த்த, வேலையில்லாத் திட்டத்தைப் போக்க 250 மாணவர்கள் இருந்தால் அங்கு ஒரு பி.டி. தலைமை ஆசிரியரையும், பி.யி.டி. உடற்பயிற்சி ஆசிரியரையும் போட வேண்டும். இன்னும் மாணவர்–ஆசிரியர் விகிதம் 1:35 என்று இருப்பதை 1:30 என்று மாற்றி இடைநிலைப் பள்ளிகளில் அதிக ஆசிரியர்களை நியமிப்பதற்கு வேண்டிய வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணாவின் பொன்மொழி ஒன்று. "இந்நாளில் ஊர் தோறும் ஆசிரியர், ஆசிரியைகள் நிறைய இருக்கிறார்கள். மக்களோடு

மக்களாகப் பழகும் வாய்ப்புள்ளவர்கள், குடும்பக் கட்டுப்பாட்டை நல்ல விதமாக பெற்ரோர்களிடம் சொல்ல வாய்ப்பு உள்ளவர்கள்; தாய்களுக்கு பொறுப்பு இல்லையெனத் தட்டிக்கழிப்பது சரியல்ல. சமுதாயத்தில் ஒரு அங்கம் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். அவர்கள் வாழ்க்கையை வாழ வேண்டாமென்று சொல்லவில்லை. சமுதாயத்திற்கும் கடமைப்பட்டிருக்ருர்கள்" என்று அண்ணு சொன்ன பொன்மொழியை ஞாபகப்படுத்தி முடிக்கிறேன். வணக்கம்.

THIRU K. S. KOTHANDA RAMIAH: Mr. Speaker, Sir, I thank you very much for giving me an opportunity to welcome this Demand (17) which is very important and also to speak in support of my cut motion.

It is a matter of gratification and pride to find that our State stands in the forefront of educational system of the country. It is because we have got a scholar Education Minister and efficient administrative Department and officers. Moreover, we have got a Goverment which is spending crores of rupees for education realising its importance for the uplift of the country and removal of backwardness.

Next, coming to certain defects and drawbacks and grievances-which we see-I wish to say a few words. With regard to duration of the course of studies the total period of years of education is 15 years. But there is a lot of difference between the four Southern States. In Andhrat Mysore and Kerala they have got 10 plus 2 plus 3, in all 15 years. Bu, we have got 11 plus 1 plus 3 years. At least with regard to the four southern States, there must be uniformity. Because students from Tamil Nadu go to Mysore State. Similarly, hundreds of students from Adhra State and border areas come to Madras. Also, people of Kerala come here. Therefore when there is a lot of difference in the duration of the period of study, what happens is when our students go there they suffer and when those students come here they also suffer. So my idea is, either we must convince those three State to adopt our system or we must follow them because they are three States and we can just adjust.

Our Hon. Minister for Education has stated that they are thinking of increasing the duration of P.U.C. to two years and thereby coming on par with the other States. Otherwise, what happens is, students are put to lot of difficulties. In the Brochure given to us by the Government it is stated that the Government are thinking of bringing a uniform pattern of education in line with the other States. I think that in the next education year they will see that the duration of 10 plus 2 plus 3 years is introduced in our State also.





One thing which is worrying all the people-parents and educationists-is indiscipline in schools. It is due to the fact that during all the 20 or 25 years we have spent our time only in bringing the students to the schools. The quantitative side was well looked into, but we did not care for the quality. It is like filling our stomch with all sorts of foodstuffs quantitatively without caring for the quality of food. Then what happens is, we will have to suffer from so many diseases.

Similarly, for the last 20 or 25 years, we have neglected the quality of education with regard to text books, with regard to class rooms, with regard to supply of teaching aids, with regard to checking the teathers' notes—all these things were completely neglected and we did not care for them. When the D.E.O. or the Deputy Inspector of Schools inspected the schools, they would say we are not concerned with the quality. We are concerned with quantity—how many have been enrolled, and how many are yet to be enrolled. On account of this difficulty, we are suffering.

Now, we have realised that the quality is more important than quantity. Quality and quantity should go hand in hand. Otherwise, we cannot have a uniform and progressive educational system. No doubt the Government have taken so many steps to improve the quality of education. But yet there are lot of difficulties. The text books are not well prepared. The books are not prepared by experts. They are written by some people who do not know the subjects. There are lots of complaints. With regard to text books of minority languages, the difficulty is greater. Moreover, the teacher-pupil ratio 1:35 should be reduced. A teacher must have only 25 or 30 students. Of course, it may cost Government much. but the result will be very good.

Moreover the teachers do not have good class rooms, map aids, etc. to improve the standard of education and quality of education. I think we have to look into small things also. We should not think of only big things. Unless we attend to small things we cannot improve our educational system.

With regard to appointment of elementary school teachers the Government are going to sanction the number of teachers this year. My submission is that appointment of teachers should be made only in the Director's office and it should not be left there to Panchayat Unions. If it is left there there are so many difficulties and so many teachers have not been able to get appointments easily. With great difficulty they are getting. Therefore, the best thing is that because they are sanctioning the number of posts, they can decide everything here

[Thiru K. S. Kothandaramaiah] [1975 மார்ச் 20

itself. They can ask the Deputy Inspector of Schools or the D.E.O or the Collector to come here. They can also invite the Panchayat Union Commissioner. They can issue the appointment orders from here itself. Otherwise this thing is causing a lot of trouble. So it is better that everything is done here.

With regard to linguistic minorites, there is a large number of linguisitc minorities in our State and other States also. It is a common thing for the entire country. According to 1961 and 1971 census there are nearly 35 percent of non-Tamil people living in this State. It says that about 35 per cent are non-Tamilians and out of that, 75 per cent form the Telugu majority. So, it will be clear that Telugu people have taken the second place in evey respect and after all, we belong to the Dravidian stock of languages. All these languages should be improved.

Now, the Government have given some facilities with regard to linguistic minorities. The Government are very kind to them. The department is also giving a lot of facilities. Yet there are so many other difficulties also. With regard to teaching of Telugu in southern districts- Ramanathapuram and Tirunelveli etc. there are a lot of Telugu people The total number of Telugu people comes to 40 or 50 lakhs in this State. The Lingistic Minority Commission has made a lot of recommendations. The Central Government and the State Governments have accepted those recommendations. The only difficulty is in implementing all these things. Their implementation is not properly done and they require a lot of concern and care. Every State is saying that they are giving all facilities and not only our State. But some States are giving more facilities and others are not.

With regard to admission of students in schools in Southern districts, I wish to say that in Ramanathapuram district we have opened a Telugu school-Rajapalayam. There are about 300 Telugu boys Telugu teaching is done only after school hours. The difficulty is students come from distant villages and they cannot remain after school hours. So they have to study Telugu within the school hours. Similarly, there are Tamil students in Karnataka and Andhra and they. must also have the same facilities. Otherwise, it will be difficult for them.

I met the Linguistic Minority Commissioner very recently. She is kind and considerate. Then I met also the Education Department people. They say we can only provide for teaching of Telugu and other minority languages after school hours. Therfore, I say it is very difficult and so many pupils will go away without learning Telugu. Though the Government gives permission to teach Telugu and other languages after school hours, the result is not very good and not beneficial to the linguistic minorities. They make a lot of complaints.



1975 மார்ச் 20] [Thiru K. S. Kothandaramaiah]

Therefore, I request the Honourable Minister to evolve a suitable scheme to see that the linguistic minorities have an opportunity to learn their languages within the school hours. Of course, we have got moral teaching which is good. But actually moral teaching is not done. That is only a formal matter. Even in the U.S.A. which is a Christian Country it is not possible to teach morals. As we have got two periods for moral teaching, those two periods can be devoted for the teaching of minority languages in our State. If this is done I think students will learn for two periods in a week in their mother tongue.

Coming to text-books the Government prepare them. But the question is there is long delay in publishing them. Also they are not able to supply text-books for all subjects especially for Science and Mathematics. Moreover there are a number of printing mistakes in these books. Also so far as the Telugu text-books are concerned lessons should be taken from Telugu history, literature and culture, just like cultural lessons are prescribed for Tamil books. The cultural bond between the people of the Telugu State and Telugu people here should not be cut away.

Then, coming to the First and Second Grade Telugu Pandits, the Government have recently ordered that the posts of Second Grade Tamil Pandits would be upgraded into First Grade. When the matter was taken up with the Honourable Minister, he promised to consider. The posts of Second Grade Telugu Pandits also has to be upgraded. But the Department takes a lot of time to come to a decision in regard to these matters. As any delay will cause a lot of difficulties, I request the Honourable Minister and the Department to see that orders are passed immediately......(Mr. Speaker sounded the gong and called the honourable Member Thiru Kaveri Manian to speak).

திரு. சொ. காவேரிமணியம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் டாக்டர் நாவலர் அவர்கள் கொண்டுவந்துள்ள மானியக் கோரிக்கைகளை வரவேற்று, என்னுடைய எண்ணங்கள் சிலவற்றை எடுத்து வைக்க விரும்புகிறேன்.

பொதுவாக, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றதற்குப் பிறகு, இந்த நாட்டினுடைய அடிதளத்திலே இருக்கக்கூடிய தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர், தொழிலாளர்கள், இவர்களுடைய நலனில், அவர்களை முன்னேற்ற வேண்டுமென்பதில் அரசு அதிக அக்கறை கொண்டுள்ளது என்பதை நான் மிகப் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அந்த அடிப்படையில் அவர்களுடைய வறுமையை மட்டும் போக்கினால் நலம் ஏற்பட்டு விடாது. அவர்களுடைய வாழ்வில் இருக்கக்கூடிய அறியாமையையும் போக்க வேண்டுமென்ற நல்ல எண்ணத்தினால்தான் இந்த அரசு சிறந்த பணிகளைக் கடந்த பல ஆண்டுகளாகச் செய்து வருகிறது என்

பதை நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புகிறேன். அதனால்தான்— கடந்த 8 ஆண்டுகளில் ரூ. 44 கோடி ஒதுக்கப்பட்ட இந்த கல்வி மானியத்திற்கு இந்த ஆண்டு ரூ. 118 கோடியை ஒதுக்கியிருக்கிறது இந்த அரசு.

அது மட்டுமல்ல, இந்த ஆண்டு நிதி நிலையில் நமக்கு ஏற்படக்கூடிய செலவினங்களில் இந்த ரூ. 118 கோடி ஏறத்தாழ 22 விழுக்காடு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இன்னும் மற்ற துறைகளையெல்லாம் சேர்த்து ஏறத்தாழ 30 விழுக்காடு இந்த துறைக்கு செலவிடப்ப்படுகிறது என்பதை நான் பெருமையோடு சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய டாக்டர் நாவலர் அவர்கள் நடமாடும் பல்கலைக் கழகம என்ற சிறப்புப் பட்டத்தை பெற்றவர்கள். அதன் காரணமாகத்தான் இந்தத் துறையிலேயிருந்து நல்ல பணிகளைச் செய்து வருகிறார்கள் என்பதை நாம் மனபூர்வமாக உணர்கிறோம்.

அதுமட்டுமல்ல, கல்வியின் தரத்தை எந்த அளவுக்கு உயர்த்த வேண்டுமோ, அதற்காகச் சிறந்த வகையில் இந்த அரசு முயற்சி எடுத்து வருகிறது. அதைப் போலவே, கல்விக் கூடங்களுக்கு தேவைப்படுகின்ற வசதிகள், கல்விக் கூடங்களுக்கு தேவைப்படுகின்ற வசதிகள் மட்டுமல்ல; அந்த கல்வியை போதிக்கக் கூடிய ஆசிரியர்களுக்குத் தேவையான பல நல்ல சூழ்நிலைகளை உருவாக்குவதில் இந்த அரசு சிறந்த திட்டங்களை எல்லாம் உருவாக்கி வருகிறது. சாதாரண உயர்நிலைப் பள்ளி மட்டுமல்ல, தொடக்கப் பள்ளி மட்டுமல்ல, உயர் தொடக்கப் பள்ளி மட்டுமல்ல, பொதுவாக கல்விசாலைகள், கல்லூரிகள் இவைகளிலே பணியாற்றும் ஆசிரியர்கள் அத்தனைப் பேருக்கும் தங்குவதற்கான இடம், மற்றவைகளையெல்லாம் இந்த அரசு இன்றைய தினம் செய்து வருகிறது.

அதே நேரத்தில், இந்த அரசு பல திட்டங்களை உருவாக்கி இருக்கிறது. இன்னும் சில ஆண்டுகளில் தொழில் நுணுக்கப் பல்கலைக்கழகம் அமைவதற்கான நல்ல எண்ணத்தினை இந்த அறிக்கையிலே வெளியிட்டிருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, நான் மிகப் பணிவோடு தெரிவிததுக்கொள்கிறேன். குறிப்பாக நம்முடைய டாக்டர் நாவலர் அவர்களுக்கு மதுரை மாநகரத்தோடு நெருங்கிய தொடர்பு உண்டு. இந்தத் தொழில் நுணுக்கப் பல்கலைக் கழகம் ஆரம்பிக்கின்ற இந்த நேரத்தில் மதுரை மாநகரில் தொழில் நுணுக்கக் கல்லூரி ஏற்படுத்த வேண்டுமென்று நான் மிகப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பல கல்லூரிகள் இன்றைக்கு இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறு இயங்கிக்கொண்டிருக்கின்ற கல்லைலூரிகள் தனியார்த் துறையிலேயிருந்து நடததப்படுகின்றன; அறக் கட்டளைகள் சார்பில் கல்லூரிகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருந்தாலும், என்னதான் அவர்கள் தனியார்த் துறையிலே நடத்தினாலும் அங்கே தெரிந்தோ தெரியாமலோ மத கருத்துக்கள், ஜாதி உணர்வுகள், இன்னும் வேண்டாத சில உணர்ச்சிகள் எல்லாம் எழுப்பப்படுகின்றன, மாணவர்களுடைய உள்ளத்திலே, உணர்வுகளிலே இலேசாக





செலுத்தப்படுகின்றன என்று சொன்னால், அது நிச்சயமாகத் தவறாக இருக்காது என்பதை நான் இந்த நேரததிலே தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவேதான் 183 கல்லூரிகள் இருக்கக்கூடிய இந்தக் காலத்தில், அரசினுடைய **நேரடியான** கவனத்தில் **இருக்கக்கூடியவை 51 தான்.** மற்ற கல்லூரிகளை நாட்டுடைமை அல்லது அரசு நேரடியாக பார்க்கவேண்டுமென்று நான் அவசரமாகச் சொல்லவில்லை. ஆனால், அவற்றிலே இருக்கக்கூடிய மத உணர்வுகள், ஜாதி உணர்வுகள், இவைகளையெல்லாம் தகர்க்க இந்த அரசு தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. இருந்தாலும் முனைப்பாக எடுக்கவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் மூலமாக இந்த நேரத்திலே கூறிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய திருப்பரங்குன்றம் தொகுதியில் தலைநகராக இருக்கின்ற திருப்பரங்குன்றததிலே, மதுரையிலே இருக்கக்கூடிய மீனாட்சி தேவஸ்தானத்தின் சார்பாகப் பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்று துவக்குவதாக இருந்தார்கள். இவ்வாறு துவக்குகின்ற செய்தி கேட்ட பிறகு, அந்தப் பகுதியிலேயிருக்கிற மக்கள் உண்மையிலேயே மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். அந்தக் கோயிலையே தனியாகப் பிரிக்க வேண்டுமென்று, பிரிப்பதற்கான காரணங்களைத் தெளிவாக மக்கள் எடுத்துச் சொன்னபிறகு, அந்தக் காரணங்களைக் கவனிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று அறநிலையத்தார் சொன்னார்கள். அதைக் கேட்ட மக்கள் தளர்ச்சி பெற்றார்கள். அப்படி தளர்ச்சி பெற்றவர்கள் இம்மாதிரியான செய்தி கிடைத்தவுடன் மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள் என்பதை நான் மிக்கப் பணிவோடு அமைச்சர் முன்னாலே தெரிவித்துக்கொள்கிறேன். இதிலே, ஏதாவது சிக்கல் இருந்தாலும் அந்தச் சிக்கலையெல்லாம் தூக்கி எறிந்துவிட்டு அந்தப் பகுதி மக்களுடைய நல்லெண்ணத்திற்கு உறுதுணையாக அந்த வாய்ப்பினைக் கவனத்தில் கொண்டு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே பக்கத்திலே ஒரு பெண்கள் பள்ளி இருக்கிறது. அதை நான் மறுக்கவில்லை. ஆனால், அங்கே எந்த அளவு வசதி வாய்ப்பு படைத்தவர்கள் படிக்கிறார்கள் என்பது தெரிந்த ஒன்று. இன்று அரசாங்கத்தின் சார்பாக ஏற்படுத்தப்படுமானால் குறிப்பாக, தாழ்ததப்பட்டவர்கள் பிற்படுத்தப்பட்டவர்கள், வசதியில்லாதவர்கள் எல்லாம் அங்கே படிக்க வாய்ப்பு இருக்கும். அதற்காகப் பெரும் தொகையை ஒதுக்கிட வேண்டுமென அங்கேயிருக்கக்கூடிய அறங்காவலர் குழு விளக்கியிருக்கிறது என்பதையும் நான் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று மட்டும் கூறி முடிக்கலாம் என்று கருதுகிறேன். குறிப்பாக, நூலகங்களைப் பற்றி இந்த அறிக்கையிலே கூறப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்தில் 13 நூலக ஆணைக் குழுக்கள் பணி புரிகின்றன. அந்த நூலகங்களில் ஏறக்குறைய 3,000 பேர்கள் பணி புரிகிறார்கள் என்பதை நான் மிக பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே நிதி நிலை அறிக்கையில் பேசும்போது இதனை வலியுறுத்தி இருக்கிறேன். இந்த அரசாங்கத்திலே பணி புரிகிற அலுவலாளர்கள் அத்தனை பேருக்கும்

குடும்பப் பாதுக்காப்புத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. அவர்கள் சாதாரண ஊராட்சி மன்றங்களிலே பணிபுரிபவர்களானாலும் சரி, அல்லது வாரியங்களிலே பணிபுரிபவர்களானாலும் சரி, அவர்களுக்கெல்லாம் இந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. முதலில், நூலகங்களில் பணிபுரியும் அந்த 3,000 பேர்கள் அரசு ஊழியர்களாக்கப்பட வேண்டும். அதிலே ஏதாவது சிக்கல் இருக்குமானால், அதை உடனே செய்ய முடியாது என்று அரசு கருதுமானால், இவ்வாறு அவர்களை மாற்றுவதற்கு முன்னால் இந்தக் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் இந்த 3,000 பேருக்கும் விரிவுபடுத்தப் படவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் ஒன்றையும் குறிப்பிட விரும்புகிறேன். நான் 13 ஆணைக் குழுக்கள் என்று சொன்னேன். நேரடியாக தேர்தலிலே போட்டி போட்டு அங்கத்தினர்களாக வருகிறார்கள். அரசாங்கத்தின் சார்பாக சில அங்கத்தினர்கள் நியமிக்கப்படுகிறார்கள். அவர்களையெல்லாம் உள்ளடக்கிய ஒன்றாகத்தான் ஆணைக் குழு இன்று பணியாற்றுகிறது. அந்த ஆணைக் குழுவினுடைய அதிகாரங்கள் கொஞ்சம் கொஞ்சமாக எடுக்கப்படுகின்ற நிலை இருக்கிறது என்பதை மிக வேதனையோடு சொல்லிக்கொள்கிறேன். அவ்வாறு எடுக்கப்படுகிற காரணத்தினால் அந்த மாவட்டங்களிலே இருக்கக் கூடிய ஆணைக் குழுக்கள் சரியாக பணிகளைச் செய்ய முடியவில்லை. உதாரணமாக இதற்காக இணைமானியத்திலே ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலே 25 சதவீதம் என்ற அளவிற்கு அரசாங்கம் புத்தகங்கள் தருகிறது. புத்தகம் தருவதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. நிச்சயம் புத்தகங்கள் வேண்டும். ஆனால், மாவட்டத்திற்கு ஒரு ஆணைக் குழு என்று வைத்துவிட்டு, இங்கே இருந்து 25 சதவீதம் புத்தகமாக தருவது என்றால் என்ன என்ன புத்தகங்கள் வாங்கவேண்டுமென்று அந்த ஆணைக் குழுவிடம் கேட்கவேண்டும், அந்த **மாவட்ட** ஆணைக் குழுவிற்குத் தான் தெரியும், என்ன என்ன புத்தகங்கள் இருக்கின்றன, என்ன என்ன புத்தகங்கள் தேவைப்படுகின்றன என்று. ஆகவே அதைப் பற்றிய ஒரு லிஸ்டை ஒரு பரிந்துரையை அவர்களிடமிருந்து வாங்கினால் அரசாங்கம் அதற்கு பிறகு தகுந்தவாறு புத்தகங்களை அனுப்பினால் பயனுள்ளதாக இருக்கும் என்ற கருத்தினை நான் நம்முடைய கல்வியமைச்சர் மாண்புமிகு டாக்டர் நாவலர் அவர்களுடைய கவனத்திற்கு பணிவன்போடு கொண்டு வருகிறேன். ஏதோ வாசகத்திற்க்காக நான் இதைச் சொல்லவில்லை, கடந்த இரண்டு ஆண்டுகளாக நான் பெற்ற அனுபவத்தின் காரணமாக இந்த உண்மையை எடுத்துச் சொல்கிறேன். இந்த முறையைப் பின்பற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. ஜே. ஜேம்ஸ்: தலைவர் அவர்களே, கல்வி மானியத்தின்மீது எங்கள் கட்சியின் பேரில் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களையொட்டி சில கருத்துக்களைக் கூறவிரும்புகிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு ஏறத்தாழ 118 கோடி ரூபாய் இந்த மாநிலத்தில் கல்வி வகைக்காகச் செலவு செய்வதற்கு மானியக் கோரிக்கையை இங்கே வைத்து, இது இந்த மாநிலத்தின்



மொத்த வருவாயில் ஏறத்தாழ 22 சதவீதம் வருகிறது என்ற புள்ளி விவரங்களைக் கொடுத்திருக்கிறார்கள். 22 சதவீதம் அல்லது 118 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்றால் உண்மையிலேயே இந்தத் தொகை போதுமா என்பதை அரசாங்கம் ஆலோசிக்க கடமைப் பட்டிருக்கிறது. 1967-68 ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சியில் இருந்த நேரம் 24 சதவீதம் கல்விக்காக ஒதுக்கியது. ஆனால் கழிந்த 9 ஆண்டுக் காலமாக நாட்டிலே ஏறியிருக்கிற விலைவாசி மற்றும் பொருளாதார நிலைமைகளை எல்லாம் பார்க்கிறபோது ஒரு வேளை இந்த சதவீதம் ஓரளவிற்குப் பொருத்தமாக இருந்தாலும் இந்த அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்தால், இந்த மாநிலத்திலே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு ஏதாவது வழிவகைகள் செய்யப்பட்டிருக்கிறதா என்று சிந்தித்து பார்க்கவேண்டும்.

விலைவாசியேற்றம், ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் அளிக்கின்ற ஊதியத்தில் கூடுதல் தொகை, டி. ஏ. யில் கூடுதல் தொகை, இம்மாதிரி கொடுக்கப்பட்டதால் ஏறியிருக்கிறதே தவிர கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு பயன்படவில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். 1966 ஆம் ஆண்டிலே ஒதுக்கப்பட்ட நிலைமைக்கும் இன்றைக்கு ஒதுக்கப்பட்டிருக்கிற நிலைமைக்கும் வித்தியாசம் இல்லை என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் சில புள்ளி விவரங்களை கொடுத்திருக்கிறார்கள். 1967-68-ல் 1 லட்சத்து 10 ஆயிரம் மாணவர்கள் பயின்றார்கள் என்றும் இன்றைய தினம் 2 லட்சம் மாணவர்கள் பயில்கிறார்கள் என்றும் கொடுத்திருக்கிறார்கள். இந்த அளவிற்கு மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்திருந்தாலும்கூட மாணவர்களின் கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை என்றுதான் சொல்லவேண்டும். மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கூட சில மாதங்களுக்கு முன்பாக இப்படிப்பட்ட நிலைமையை ஒப்புக்கொண்டு, இந்த மாநிலத்தில் கல்வியின் தரம் உயரவில்லை என்ற வருத்தத்தையும் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆக இந்த அரசு கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு என்ன என்ன வழிகளைச் செய்திருக்கிறது என்று பார்த்தால் எந்தவித முயற்சியையும் அது எடுத்துக்கொள்ளவில்லை என்று குற்றஞ்சாட்டுகிறேன். கல்வியின் தரம் ஏற்கெனவே இருந்ததைவிட இன்றைக்குக் குறைந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் என்ன என்பதை அரசாங்கம் சிந்திக்க வேண்டும். மாணவர்களை பள்ளிகளில் சேர்த்துக்கொள்வதில் நியாயமாக ஒழுங்காக சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தால் கல்வியின் தரம் குறைந்திருக்காது. மாணவர்களை பள்ளிகளில் சேர்க்கும்போது எம். எல். ஏ. போகவேண்டும், அல்லது அமைச்சர் எழுத்து வேண்டும் என்ற சூழ்நிலை இருக்குமானால், அதிலே அரசியல் தலையீடு இந்த அளவிற்கு இருக்குமானால் நிச்சயமாக ஒழுங்கான தரமான மாணவர்களைப் பள்ளிகளில் கல்லூரிகளில் சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை, தரத்தை உயர்த்த வேண்டுமென்று சொன்னால் அதற்குப் பொறுப்பாக இருப்பவர்கள் ஆசிரியர்கள்,

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 20

ஆசிரியர்களை நியமிக்கின்ற முறையிலேயும் பார்த்தால் தரம் உயர்வதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் செய்யவில்லை என்றுதான் தெரிகிறது.

ஆசிரியர்கள் நிச்சயமாக தகுதியடிப்படையில் நியமனம் செய்யப்படுவதில்லை. இரண்டு ஆண்டுக் காலத்திற்கு முன்பு பப்ளிக் சர்வீஸ் கமிஷன் ஆசிரியர்களை நியமிப்பதற்கு விளம்பரம் செய்தது, இண்டர்வியூ எல்லாம் நடந்தது. இரண்டு ஆண்டுகள் ஆகியும் கூட இதுவரையில் நியமனம் செய்யப்படவில்லை, என்ன ஆயிற்று என்று இந்த நிதிநிலை விவாதத்தின் போதாவது சொல்லவில்லையென்றால் நிச்சயமாக வருந்தத்தக்க சூழ்நிலை தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆசிரியர்களை நியமிக்கின்ற முறையில் நேர்மையை இந்த அரசு கையாளவில்லை என்ற குற்றத்தைச் சாட்ட விரும்புகிறேன்.

மாணவர்களின் தரம் குறைகிறது என்று சொன்னால் மாணவர்களிடையே அரசியலை புகுத்தியது தி. மு. க. தான். மாணவர்கள் நிம்மதியாக பாடத்தைப் படித்துக்கொண்டிருந்தார்கள், அப்படி இருந்த மாணவர்களிடையே அரசியலை இவர்கள் புகுத்தியதால் அவர்கள் முழுக்க முழுக்க அரசியலில் இருக்க ஆரம்பித்து விட்டார்கள். எந்தக் கல்லூரியை எடுத்துக் கொண்டாலும் மாணவர்கள் யூனியன் தேர்வு நடைபெறுகிறது, அங்கேயும் அரசியல் வருகிறது. இன்றைக்கும்கூட அதற்கு இந்த அரசுதான் பொறுப்பு என்பதை ஆதாரத்தோடு நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஆசிரியர்களை அது பள்ளிக்கூட ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, கல்லூரி ஆசிரியர்களாக இருந்தாலும் சரி, இட மாற்றம் தேவையற்ற முறையிலே செய்கிறார்கள். ஆண்டு இறுதியிலே மாற்றம் செய்தால் மாணவர்களுக்கு அதனால் தோஷம் வராமல் இருக்கலாம், ஆனால் இடையிலே இடம் மாற்றம் செய்வதால் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள் என்பதை உணருகிறோம். அரசியல் காரணத்திற்காக, பல்வேறு காரணங்களுக்காக ஆசிரியர்களை இடமாற்றம் செய்கிறார்கள், அதைத் தவிர்க்க வேண்டும்.

பள்ளிக் கூடங்களுக்கு கட்டடங்கள் இல்லை, அக்காமொடேஷன் இல்லை, ஆசிரியர்கள் இல்லை என்ற நிலைமையெல்லாம் இருக்கிறது. எனது மாவட்டத்தை எடுத்துக்கொண்டால் அதிகமாக இருக்கிற அரசு பள்ளிக் கூடங்களில் கட்டடங்கள் இல்லை, சில பள்ளிக் கூடங்களிலே தாற்காலிக ஷெட் கூட போடாமல் காற்றிலேயும் மழையிலேயும் குழந்தைகள் இருந்துகொண்டு இருந்தால் மாணவர்களின் தரத்தை உயர்த்ததுவதற்கு இந்த அரசாங்கம் எந்த முறையிலேயும் முயற்சி செய்ய வில்லை என்று தான் தெரிகிறது. அரசாங்கப் பள்ளிக்கூட கட்டடங்கள் கட்டுவதற்கு பணம் ஒதுக்கப்பட்டிருப்பது 14 லட்சம் ரூபாய்தான், இது மிகவும் குறைவான தொகையாகும். நிச்சயமாக கன்னியாகுமரி மாவட்டத்திலே பள்ளிக்கூடங்கள், ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் ஆகியவற்றிற்கு எல்லாம் கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாங்கம் உடனடியாகத் திட்டம் கொண்டுவரவேண்டும்.. ..



1975 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜேம்ஸ், இரண்டு நிமிடங்களில் முடித்துக்கொள்வீர்களா ?

திரு ஜே. ஜேம்ஸ்: முடியாது சார், அதிகமாக நேரம் வேண்டும். ஒன்றரைமணிக்குமேலே பேசுவதே பனிஷ்மெண்ட் மாதிரித்தான்;

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஜேம்ஸ் தொடர்ந்து நாளை பேசுவார். பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணியளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 1.29 மணியளவில் ஒத்தி வைக்கப் பட்டது.

(8) பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

### A. *Statutory Rules and Orders.*

'NIL'

### B. *Reports, Notifications and other Papers.*

*89. The Performance Budgets on School Education, Collegiate Education and Techinical Education 1975-76.

---

* Despatched to Members on 18-3-1975

## இணைப்பு I

[349-ம் பக்கத்தில் 392-ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குறிய விடையைக் காண்க.]

(*b*) The Government propose to popularise the results of the field-oriented research on dry farminy carried out at the Kovilpatti Research Centre through the following methods :—

(i) Cultivation of improved varieties with package of praciecs found to be good for cotton, cumbu, cholam and blackgram is being popularised.

(ii) Digging of new wells, water harvestings, taking soil conservation measures, training odai with checkdam at intervals, so that water can percolate and increase the supply of water in the wells is being popularised, and

(iii) Educating the ryots to take up maintenance of milch animals, sheep and poultry for augmenting their income. Milch animals, sheep poultry are given to farmers on 2/3rd loan and 1/3rd subsidy.

விடை:—கோவில்பட்டி மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தின் மானாவாரி வேளாண்மை பற்றிய களத்தையொட்டிய ஆராய்ச்சி முடிவுகளைப் பரப்ப அரசு பின்வரும் முறைகளைப் பின்பற்றுகிறது.—

(1) பருத்தி, கம்பு, சோளம், மற்றும் உளுந்து ஆகிய பயிர்களுக்கேற்ற கட்டுக்கோப்பு முறைகளையும் உயர்ரக பயிர்களையும் பரப்புதல்,

(2) நீர்நிலைகளைச் செப்பனிடுதல், மண்வளப் பாதுகாப்பு முறைகளைக் கையாளுதல், ஓடைகளின் குறுக்கே ஆங்காங்கு தடுப்பு அணைகளைக் கட்டி நீரோட்டத்தை ஒழுங்கு செய்வதன் மூலம கிணறுகளில் நீர் பெருகச் செய்தல் ஆகிய முறைகளைப் பரப்புதல் மற்றும்,

(3) விவசாயிகள் தங்களது வருவாயைப் பெருக்கிக் கொள்ள கறவை மாடுகள், செம்மறியாடுகள் மற்றும் கோழிப்பண்ணை ஆகியவற்றைப் பராமரிக்கக் கற்றுக்கொடுத்தல். இவற்றிற்காகும் செலவு மூன்றில் இரண்டு பங்கு கடனாகவும் ஒரு பங்கு மானியமாகவும் தரப்படுகிறது.



## இணைப்பு II.

[355-ம் பக்கத்தில் 395 - ஆம் எண்ணுள்ள வெள்ளிக் குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

The Collector of Thanjavur convened a meeting of agriculturists, agricultural labourers and leaders of political parties in the Callector's office, Thanjavur on 22nd July 1974 at which an *ad hoc* agreement was reached in regard to the rates of wages payable to the agricultural workers in East Thanjavur district pending the orders of the Government on the recommendations of the 'One Man Commission' appointed under section 3 of the Commissions of Enquiry Act, 1952 to go into the question of revision of fair wages prescribed under the Tamil Nadu Agricultural Labourer Fair Wages Act, 1969. In the *ad hoc* agreement the following rates of wages have been agreed to be paid to the agricultural babourers during the current cultivation season (Kuruvai).

*Men.*

All kinds of cultivation work .. 6 litres of paddy + Rs. 2·75 or Rs. 6 in cash per day.

*Women.*

All kinds of cultivation work .. 5 litres of paddy + Rs. 1·50 Rs. 4 in cash per day.

*Harvest.*

Six litres of paddy out of every 54 litres of paddy harvested.

The rates have also been approved by the Government.

# இணைப்பு III.

[361-ம் பக்கத்தில் 399 ஆம் எண்ணுள்ள வெள்ளிக்குறியிட்ட வினாவிற்குரிய விடையைக் காண்க]

(*a*) Yes.

(*b*) Details of the various housing schemes prepared by the Tamil Nadu Housing Board for each district during 1973-74 are given below :—

| *Serial number and name of the housing scheme.* | *Area where the construction was proposed.* | *Number of houses sanctioned in 1973-74.* | *Estimated cost.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (RUPEES IN LAKHS.) |
| | MADRAS DISTRICT. | | |
| 1 Higher Income Group ... | Kotturpuram .. .. .. | 27 | 9·23 |
| 2 Middle Income Group (Flats) ... | Besant Nagar .. .. .. | 144 | 30·33 |
| 3 Do. ... | Arignar Anna Nagar .. .. | 40 | 9·20 |
| 4 Middle Income Group (Flats) ... | Arignar Anna Nagar .. .. | 120 | 30·64 |
| 5 Do. ... | Kalaignar Karunanidhi Nagar .. | 80 | 15·80 |
| 6 Middle Income Group (Houses) ... | North Madras Neighbourhood Scheme | 24 | 7·86 |



## இணைப்பு III

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| | MADRAS DISTRICT—cont. | | |
| 7 Middle Income Group (Houses) .. | Arignar Anna Nagar .. .. | 314 | 52·00 |
| 8 Do. .. | Kalaignar Karunanidhi Nagar .. | 7 | 2·59 |
| 9 Do. .. | Besant Nagar .. .. .. | 2 | 0·94 |
| 10 Do. .. | Kotturpuram .. .. .. | 105 | 24·70 |
| 11 Do. .. | Kotturpuram .. .. .. | 75 flats. | 52·37 |
| 12 Do. .. | Kalaignar Karunanidhi Nagar and Ashok Nagar. | 34 | 11·77 |
| 13 Low Income Group (Houses) .. | North Madras Neighbourhood scheme | 33 | 5·67 |
| 14 Do. .. | Arignar Anna Nagar .. .. | 94 | 48·00 |
| 15 Do. .. | Kalaignar Karunanidhi Nagar .. | 4 | 0·78 |
| 16 Do. .. | Indira Nagar .. .. .. .. | 1 | 0·23 |
| 17 Do. .. | Besant Nagar .. .. .. | 1 | 0·10 |
| 18 Do. .. | Kalaignar Karunanidhi Nagar and Ashok Nagar. | 15 | 3·15 |
| 19 Low Income Group (Flats) .. | Arignar Anna Nagar .. .. | 6 | 5·72 |
| 20 Low Income Group (Staff Plots). | Kalaignar Karunanidhi Nagar .. | 15 | 3·37 |

இணைப்பு III

| Serial number and name of the housing scheme. | Area where the construction was proposed. | Number of houses sanctioned in 1973-74. | Estimated cost. (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | MADRAS DISTRICT—*cont.* | | |
| 21 Artisan .. .. .. .. | Arignar Anna Nagar .. .. | 150 | 17·65 |
| 22 Do. .. | Kalaignar Karunanidhi Nagar .. | 45 | 5·85 |
| 23 Do. .. | North Saidapet .. .. .. | 5 | 0·60 |
| 24 Economically Weaker Section (Houses/Flats). | Saidapet .. .. .. .. | 82 | 5·14 |
| 25 Do. .. | Kotturpuram .. .. .. | 72 | 6·41 |
| 26 Do. .. | Arignar Anna Nagar .. .. | 24 in I | 2·41 |
| 27 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (Flats). | Kalaignar Karunanidhi Nagar .. | 220 | 32·48 |
| 28 Do. .. | Foreshore Estate .. .. | 112 | 33·12 |
| 29 Do. .. | Foreshore Estate and Kotturpuram. | 384 | 55·91 |
| 30 Ancillary .. .. .. .. | Arignar Anna Nagar .. .. | 17 shops in ground floor; office in first floor. | 7·23 |
| 31 Do. .. | Shastri Nagar .. .. .. | Ladies Club | 0·58 |
| 32 Do. .. | Indira Nagar .. .. .. .. | 8 Experimental low cost houses | 0·37 |
| 33 Do. .. | Besant Nagar .. .. .. | 1 community centre. | 2·74 |
| 34 Police Quarters .. .. .. | Raja Annamalaipuram .. .. | 234 flats. | 51·50 |
| 35 Land Acquisition .. .. | Egmore Division (R.S. No. 454, etc.) | 66 grounds. | .. |
| 36 Do. .. | (Mylapore village R.S. No. 4255, etc.) | 342 grounds. | .. |
| 37 Do. .. | In S. No. 422 of Mylapore for Tower Block. | 28 grounds. | .. |
| 38 Do. .. | Ambattur Neighbourhood .. .. | 6,289·17 acres. | .. |
| 39 Do. .. | (Mylapore, S. No. 4246, etc. .. | 135 grounds and 1,597 sq. ft. | .. |
| 40 Do. .. | Egmore Division (T.S. No. 236/3, etc.) | 33 grounds. | .. |

இணைப்பு III

| Serial number and name of the housing scheme. | Area where the construction was proposed. | Number of houses sanctioned in 1973–74. | Estimated cost. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (RUPEES IN LAKHS). |
| | MADRAS DISTRICT—*cont.* | | |
| 41 Land Acquisition .. | Mylapore (S. No. 2024) .. .. | 90 grounds. | .. |
| 42 Do. .. | Kodambakkam village .. .. | 109 grounds. | .. |
| 43 Do. .. | Tondiarpet .. .. .. .. | 21 acres. | .. |
| 44 Do. .. | Egmore Division (T.S. No. 355/1) .. | 50 grounds. | .. |
| 45 Do. .. | Mylapore (R.S. No. 4232/2) .. | 60 grounds. | .. |
| 46 Do. .. | Mylapore (4077/3) .. .. .. | 16 grounds. | .. |
| 47 Do. .. | Millers Road .. .. .. .. | 9 grounds. | .. |
| | CHINGLEPUT DISTRICT. | | |
| 48 Economically Weaker Section (Houses/Flats). | Kancheepuram .. .. .. | 40 | 3·74 |
| 49 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (Flats). | Do. .. .. .. | 100 | 8·00 |
| 50 Do. .. | Melamayyan village .. .. .. | 200 special low cost houses. | 19·40 |
| 51 Backward Class Hostels .. | ..Cheyyur .. .. .. .. | 1 | 1·26 |
| 52 Do. .. | Maduravoil .. .. .. .. | 1 | 0·61 |
| 53 Land Acquisition .. .. | St. Thomas Mount Area .. .. | 13 acres. | .. |
| | NORTH ARCOT DISTRICT | | |
| 54 Middle Income Group (Houses) .. | Tirupathur .. .. .. .. | 26 | 7·87 |
| 55 Do. .. | Vellore .. .. .. .. | 20 | 5·50 |
| 56 Low Income Group (Houses) .. | Vellore Neighbourhood Scheme at Sathuvachari, Vellore. | 50 | 11·20 |
| 57 Do. .. | Tirupathur Teachers' Welfare Association. | 61 | 11·20 |
| 58 Do. .. | Tiruvannamalai .. .. .. | 50 | 8·02 |
| 59 Do. .. | Gudiyatham .. .. .. .. | 47 | 7·25 |
| 60 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (Flats). | Ranipet .. .. .. .. | 24 Last Grade Government Servants' Tenements. | 2·22 |

| Serial number and name of the housing scheme. | Area where the construction was proposed. | Number of houses sanctioned in 1973–74. | Estimated cost. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (RUPEES IN LAKHS.) |
| **NORTH ARCOT DISTRICT—*cont.*** | | | |
| 61 Tamil Nadu Government servants' Rental Housing scheme (Flats). | Tirupathur | 24 Last Grade Government Servants' tenements. | 2·47 |
| 62 Do. | Tiruvannamalai | 20 Last Grade Government Servants' tenements. | 1·68 |
| 63 Do. | Vellore | 60 Last Grade Government Servants' tenements. | 6·48 |
| 64 Do. | Vellore | 124 Rental flats. | 22·20 |
| 65 Do. | Tiruvannamalai | 100 Rental flats. | 21·50 |
| 66 Do. | Cheyyar | 2 Rental quarters. | 0·74 |



| | | | |
|---|---|---|---|
| 67 Special Low Cost | Vellore Neighbourhood Scheme Phase. II at Sathuvachari, Vellore. | 100 | 8·40 |
| 68 Do. | Do. | 40 | 4·90 |
| 69 Do. | Do. | 60 | 5·24 |
| 70 Do. | Do. | 20 | 1·67 |
| 71 Do. | Do. | 20 | 2.23 |
| 72 Do. | Do. | 30 | 3·35 |
| 73 Do. | Tiru vannamalai | 22 | 2·05 |
| 74 Do. | Tirupathur | 12 | 1·41 |
| 75 Do. | Kuppammal Colony Nagar at Arkonam. | 20 | 2·72 |
| 76 Do. | Ariyur Spinning Mill at Ariyur | 60 | 4·75 |
| 77 Ancillary | Vellore | 8 Rooms in first floor and Restaurant in Ground floor. | 2·24 |
| 78 Do. | Cheyyar | 5 shops | 0·29 |
| 79 Do. | Kalingur | 4 shops | 0·16 |

| Serial number and name of the housing scheme. | Area where the construction was proposed. | Number of houses sanctioned in 1973–74. | Estimated cost. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (RUPEES IN LAKHS.) |
| | NORTH ARCOT DISTRICT—*cont.* | | |
| 80 Deposit works .. .. .. | Ambur .. .. .. .. | 48 shops .. | 7·39 |
| 81 Slum Improvement/Clearance scheme. | Suryakulam, Vellore .. .. | 270 tenements | 23·41 |
| 82 Land Acquisition .. .. | Sathuvachari, Vellore .. .. | 196 acres .. | .. |
| | SOUTH ARCOT DISTRICT. | | |
| 83 Middle Income Group (Houses) | Vridhachalam .. .. .. | 6 .. | 1.80 |
| 84 Low Income Group (Houses) .. | Do. .. | 15 .. | 3.04 |
| 85 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (Flats). | Chidambaram .. .. .. | 33 .. | 9.25 |
| 86 Do. .. | Ulundurpet .. .. .. .. | 60 .. | 8.05 |
| 87 Special Low Cost .. .. | Cuddalore Public Servants Co-operative Society. | 60 .. | 6.70 |
| 88 Do. .. | Cuddalore Tamil Nadu Elecirtcity Board Employees. | 15 .. | 2.10 |
| 89 Do. .. | Vridhachalam .. .. .. | 50 .. | 6·40 |
| 90 Do. .. | Villupuram Non-Gazetted Government Servants and Last grade Government Servants. | 99 .. | 9·71 |
| 91 Do. .. | Villupuram Tamil Nadu Electricity Board Employees. | 20 .. | 2·82 |
| | SALEM DISTRICT. | | |
| 92 Middle Income Group (Houses) | Murugan Nagar at Mettur .. .. | 31 .. | 7·96 |
| 93 Low Income Group (Houses) .. | Mettur Industrial Chemical Employees. | 60 .. | 9·10 |
| 94 Do. .. | Mettur Murugan Nagar Co-operative Society. | 30 .. | 3·64 |
| 95 Do. .. | Do. .. | 9 .. | 1·47 |
| 96 Do. .. | Salem Periyeri .. | 103 .. | 23·89 |
| 97 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (Flats). | Salem | 124 .. | 23·33 |

| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973-74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| | **SALEM DISTRICT.—*cont.*** | | |
| 98 Special Low Cost | Namakkal | 114 | 11.00 |
| 99 Do. | Kumarapalayam | 63 | 5·60 |
| 100 Do | Ammapet | 18 | 1·46 |
| 101 Do. | Salem | 27 | 2·70 |
| 102 Ancillary | Nehru Nagar facing C.C. Road | 6 | 0·38 |
| 103 Do. | Nehru Nagar Phase IV | 3 | 0,21 |
| 104 Do. | Nehru Nagar Phase III | 4 | 0·34 |
| 105 Do. | Nehru Nagar facing C.C. Road | 6 | 0·38 |
| 106 Slum Improvement/Clearance Scheme. | Nehru Nagar | 252 | 18·40 |



| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973-74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| 107 Do. | Gosha Hospital | 400 | 29·20 |
| 108 Do. | Saidapet | 180 | 13·14 |
| 109 Do. | Gandhi Nagar | 180 | 13·14 |
| 110 Do. | Gunduchetti Eri | 216 | 15·77 |
| 111 Do. | Allikuttai Eri | 360 | 29·00 |
| 112 Land Acquisition | Salem Periyeri | 8 acres. | 15,504 sq. ft. |
| | **DHARMAPURI DISTRICT.** | | |
| 113 Tamil Nadu Government servants' Rental Housing Scheme (Flats). | Dharmapuri Phase III | 48 | 6·89 |
| 114 Do. | Krishnagiri Phase II | 80 | 8·42 |
| 115 Do. | Uthangarai | 40 | 4·87 |
| 116 Special Low Cost | Dharmapuri | 146 | 14·60 |
| 117 Do. | Krishnagiri | 35 | 3·50 |
| 118 Ancillary | Gosha Hospital | 6 | 0·35 |
| 119 Do. | Dharmapuri | 31 | 0·16 |
| 120 Land Acquisition | Do. | 13 acres. | .. |

| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973–74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| **THANJAVUR DISTRICT.** | | | |
| 121 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats). | Tiruvarur .. .. .. .. | 196 .. | 24·13 |
| 122 Do. .. | Kumbakonam .. .. .. | 108 .. | 17·50 |
| 123 Do. .. | Mayuram .. .. .. .. | 72 .. | 12.80 |
| 124 Do. .. | Nagar .. .. .. .. .. | 72 .. | 13·80 |
| 125 Do. .. | Pattukkottai .. .. .. .. | 104 .. | 18·25 |
| 126 Special Low Cost .. .. | Near R .S. College .. .. .. | 122 .. | 11·99 |
| 127 Do. .. | Thanjavur .. .. .. .. | Neighbourhood scheme, Thanjavur 130 acres. .. | 43·55 |
| | .. | 33·80 acres. | 13·80 |



| | | | |
|---|---|---|---|
| 128 Do. .. | Thanjavur Weavers .. .. .. | 160 .. | [illegible] |
| 129 Do. .. | Teachers .. .. .. .. | 22 .. | 2·12 |
| **TIRUCHIRAPPALLIDISTRICT** .. .. | | | |
| 130 Middle Income Group (Houses). | Kalaignar Karunanidhi Nagar, Tiruchirappalli. | Ph. IV-15 Ph. V-20 .. | 5·52 |
| 131 Low Income Group (Houses) | Do. | Ph. III-20 .. Ph. IV-20 Ph. V-20 .. | 3·41 3·90 4·66 |
| 132 Do. .. | .. .. | 32 .. | 2·28 |
| 133 Do. .. | Salai Nagar Colony, Tiruchirappalli | 24 .. | 5·80 |
| 134 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats). | Musiri .. .. .. .. .. | 72 .. | 11·95 |
| 135 Do. .. | Manachanallur .. .. .. | 56 .. | 7·20 |
| 136 Special Low Cost .. .. | Kalaignar Karunanidhi Nagar .. | 50 .. | 5·56 |
| 137 Do. .. | S.M.E.S.C. Colony .. .. | 13 .. | 0·78 |
| 138 Special Low Cost .. .. | Weavers Colony, Woraiyur, Tiruchi.. | 64 | 6·13 |
| 139 Deposit works .. .. .. | Karur .. .. .. .. | 16 Middle Income group | 4·46 |
| 140 Do. .. | Thanjavur Weavers .. .. | 77 Special Low cost | 5·80 |

| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973–74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| | **TIRUCHIRAPPALLI DISTRICT—*cont.*** | | |
| 141 Deposit works .. | Devanga Weavers Society, Tiruchirappalli | 64 | 6·00 |
| | **PUDUKKOTTAI DISTRICT.** | | |
| 142 Tamil Nadu Government Servants' Ren al Housing Scheme (flats). | Pudukkottai .. .. .. .. | 114 | 21·30 |
| | **MADURAI DISTRICT.** | | |
| 143 Middle Income Group (Houses). | Madurai .. .. .. .. | 24 | 7·60 |
| 144 Do. .. | Kodaikanal .. .. .. .. | 10 | 4·23 |
| 145 Low Income Group (Houses) .. | Dindigul .. .. .. .. | 84 | 10·45 |
| 146 Do. .. | Madurai .. .. .. .. | 420 | 33·40 |
| 147 Do .. | Do. .. .. | 216 | 33·70 |



| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973–74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| 148 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats). .. .. | Do. .. .. | 98 | 27·70 |
| | **RAMANATHAPURAM DISTRICT.** | | |
| 149 Low Income Group (Houses) .. | Rajapalayam .. .. .. | 212 | 20·58 |
| 150 Do. .. | Ramanathapuram .. .. .. | 178 | 20·17 |
| 151 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats). | Singampuneri .. .. .. | 62 | 12·35 |
| 152 Land Acquisition .. .. | Rajapalayam .. .. .. | 18·33 acres. | .. |
| 153 Do. .. | Sri-villiputhur .. .. .. | 0·60 acres. | .. |
| 154 Do. .. | Ramanathapuram .. .. .. | 11·91 acres. | .. |
| | **THE NILGIRIS DISTRICT.** | | |
| 155 Special Low Cost .. .. | Gymkana Club, Ooty .. .. | 6 cottages. | 2·47 |
| | **COIMBATORE DISTRICT.** | | |
| 156 Middle Income Group (Houses). | Race course near South India Corporation. | 72 | 19.50 |

| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973-74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| | COIMBATORE DISTRICT—*Cont.* | | |
| 157 Middle Income Group (Houses) | Kovaipudur Batch II .. .. | 30 | 10·20 |
| 158 Low Income Group (Houses) .. | Peelamedu Co-operative Building Society. | 25 | 4·50 |
| 159 Do. .. | Kovaipudur Batch II .. .. | 50 | 7·48 |
| 160 Do. .. | Coimbatore Devanga Weavers Co-operative Society. | 46 | 4·40 |
| 161 Do. .. | Brindavana Nagar .. .. .. | 25 | 3·65 |
| 162 Do. .. | Velampalayam, Tirupur .. .. | 130 | 10·69 |
| 163 Do. .. | Do. .. | 146 | 14·90 |
| 164 Do. .. | Teachers' Colony Low Income Group Batch II Water-Supply, Erode. | 20 | 1·21 |



| Serial number and name of the housing scheme. (1) | Area where the construction was proposed. (2) | Number of houses sanctioned in 1973-74. (3) | Estimated cost. (4) (RUPEES IN LAKHS.) |
|---|---|---|---|
| 165 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats). | District Revenue Officer Bungalow, Race Course. | 24 | 5·50 |
| 166 Do. .. | Kavundampalayam Phase II .. | 90 | 9·50 |
| 167 Do. .. | District Judge Bungalow Red Buildings. | 30 | 8·33 |
| 168 Do. .. | Collector's Bungalow .. .. | .. | 10·80 |
| 169 Do. .. | Conservator of Forests (North) .. | 60 | 15·40 |
| 170 Do. .. | District Forest Officer Bungalow .. | 168 | 30·48 |
| 171 Do. .. | Conservator of Forests (South) .. | 24 | 6·20 |
| 172 Do. .. | District Forest Officer Bungalow, Last Grade Government Servants. | 48 | 4·80 |
| 173 Do. .. | Do. Phase II | 48 | 6·90 |
| 174 Do. .. | Tiruppur Last Grade Government Servants. | 66 | 6·50 |
| 175 Do. .. | Moolapalayam, Erode .. .. | 54 | 9·06 |
| 176 Subsidised Industrial Housing Scheme. | Kankampalayam village, Udamalpet. | 60 | 5·40 |

| *Serial number and name of the housing scheme.* | *Area where the construction was proposed.* | *Number of houses sanctioned in 1973-74.* | *Estimated cost.* |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | COIMBATORE DISTRICT—*Cont.* | | |
| | | | (RUPEES IN LAKHS) |
| 177 Subsidised Industrial Housing Scheme .. | Mettupalayam Road, Karamadai .. | 60 | 5·51 |
| 178 Do. .. | Pollachi Valparai Road .. .. | 90 | 8·01 |
| 179 Do. .. | Seenaickanpalayam .. .. | 114 | 10·65 |
| 180 Special Low Cost .. .. | Ondipudur .. .. .. .. | 162 | 16·61 |
| 181 Do. . | Kovaipudur Batch I .. .. | 25 | 2·68 |
| 182 Do. | North of Perur .. .. .. | 78 | 9·10 |
| 183 Do. | South of Perur .. .. .. | 24 | 3·10 |
| 184 Do. | Kovaipudur Batch II .. .. | [illegible] | 2·68 |
| 185 Do. . | Rayapuram (Harijan) Tiruppur .. | [illegible] | 3·27 |
| 186 Do. .. | Kangayam Road, Perundurai .. | [illegible] | 6·47 |



| | | | |
|---|---|---|---|
| 187 Do. .. | Mettur Road, Bhavani .. .. | 85 | 7·73 |
| 188 Do. .. | Avanashi Road, Annur .. .. | 32 | 3·38 |
| 189 Do. .. | Coimbatore Road, Cheyoor .. | 23 | 2·94 |
| 190 Do. .. | Pollachi, N.G.M. College .. .. | 60 | 8·80 |
| 191 Do. .. | Cheyur Road, Avanashi .. .. | 65 | 7·58 |
| 192 Ancillary .. .. .. | Kovaipudur .. .. .. .. | 24 | 4·30 |
| 193 Slum Improvement/Clearance Scheme. | Vincent Road, Batches I and II .. | 400 | 23·94 |
| 194 Do. | Erode .. .. .. .. | 104 | 7.60 |
| | TIRUNELVELI DISTRICT. | | |
| 195 Low Income Group (Houses) .. | Palayamkottai .. .. .. | 91 | 9·62 |
| 196 Do. .. | Tuckarammalpuram .. .. | 50 | 5·57 |
| 197 Do. .. | Tuticorin .. .. .. .. | 63 | 7·73 |
| 198 Do. .. | Tenkasi .. .. .. | 39 | 3·21 |
| 199 Tamil Nadu Government Servants' Rental Housing Scheme (flats.) | Palayamkottai .. .. .. | 24 | 6·34 |
| 200 Land Acquisition .. .. | Do. | [illegible] acres. | .. |

| Serial number and name of the housing scheme. | Area where the construction was proposed. | Number of houses sanctioned in 1973-74. | Estimated cost. |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | | | (RUPEES IN LAKHS.) |
| KANYAKUMARI DISTRICT. | | | |
| 201 Low Income Group (Houses) .. | Konam, Nagercoil .. .. | 64 | 8·60 |



## இணைப்பு—IV

[388-ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சி.

மானியக் கோரிக்கை 17–கல்வி.

(1975-76 வரவு-செலவு மதிப்பீடு.)

### I. தோற்றுவாய்.

கல்விக்காக 1975-76-ஆம் ஆண்டில் ரூ. 118 கோடி நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. இத் தொகை 1975-76-ல் வருவாய்க் கணக்கில் ஆகும் மொத்தச் செலவான ரூ. 538 கோடியில் ஏறத்தாழ 22 விழுக்காடாகும். வரவு-செலவுத் திட்டத்தில் மற்றெல்லாத் துறைகளைக் காட்டிலும் கல்வித் துறைக்கே அதிகத் தொகை அளிக்கப்பட்டுள்ளது.

2. கல்விக்கான செலவு தொடர்ந்து உயர்ந்து கொண்டே வருகிறது. 1974-75-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும், 1975-76ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும் ஒப்பிட்டு, "277 கல்வி" என்னும் தலைப்பின் கீழ் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்க விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

| | 1974-75 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் கீழ் வாராத செலவினம். | திட்டச் செலவுகள். | மொத்தம். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தொடக்க நிலைக் கல்வி .. .. | 50,76 | 2,31 | 53,07 |
| 2. இடைநிலைக் கல்வி .. .. .. | 34,24 | 2,18 | 36,42 |
| 3. பல்கலைக்கழகக் கல்வி .. .. .. | 9,00 | 1,19 | 10,19 |
| 4. சிறப்புக் கல்வி .. .. .. | 13 | 5 | 18 |
| 5. தேசீய மாணவர் படை விளையாட்டு, முதலியவை .. | 1,18 | 11 | 1,29 |
| 6. பிற இனங்கள் (அகவிலைப் படி உயர்வு) | 3,06 | .. | 3,06 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. .. | 3,62 | 72 | 4,34 |
| மொத்தம்–277. கல்வி. .. | 1,01,99 | 6,56 | 1,08,55 |

| | 1975-76 வரவு-செலவு மதிப்பீடு. | | |
|---|---|---|---|
| | திட்டத்தின் கீழ் வராத செலவினம். | திட்டச் செலவு கள். | மொத்தம். |
| | (5) | (6) | (7) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. தொடக்க நிலைக் கல்வி .. .. | 55,88 | 2,79 | 58,67 |
| 2. இடைநிலைக் கல்வி .. .. .. | 36,86 | 1,92 | 38,78 |
| 3. பல்கலைக்கழகக் கல்வி .. .. | 8,63 | 94 | *9,57 |
| 4. சிறப்புக் கல்வி .. .. .. | 59 | 21 | 80 |
| 5. தேசீய மாணவர் படை, விளையாட்டு முதலியவை. .. | 1,12 | 10 | 1,22 |
| 6. பிற இனங்கள் (அகவிலைப்படி உயர்வு) | 3,31 | .. | 3,31 |
| 7. தொழில் நுட்பக் கல்வி .. | 3,74 | 46 | 4,20 |
| மொத்தம்-277. கல்வி .. .. | 1,10,13 | 6,42 | 1,16,55 |

3. 17-வது மானியக் கோரிக்கையில், " 277. கல்வி " என்ற தலைப்பின் கீழ் ரூ. 117 கோடி ஒதுக்கப்பட்டிருப்பதுடன், பொது நூலகங்கள், தொல்பொருள் ஆராய்ச்சி, அரும் பொருட்காட்சிச் சாலைகள், பிற இனங்கள் ஆகியவற்றிற்கும் கீழ்க் கண்டவாறு நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது :-

*தமிழ் வளர்ச்சி குறித்த சுமார் ரூ. 60 லட்ச செலவு " பல்கலைக்கழகக் கல்வி " என்ற தலைப்பில் இருந்து " சிறப்புக் கல்வி " என்ற தலைப்புக்கு 1975-76-ல் மாற்றப்பட்டு உள்ளதே 1975-76-ல் கல்லூரிக் கல்விக்கான செலவு குறைந்ததுபோலத் தோன்றுவதற்குக் காரணம் ஆகும்.



| | திட்டத்தின் கீழ் வராத செலவினம். | திட்டத்தின் கீழ் வரும் செலவினம். | மொத்தம். |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 277. கல்வி .. | 1,10,13 | 6,42 | 1,16,55 |
| 278. கலை, பண்பாடு. | 18 | 11 | 29 |
| தொல்பொருள் ஆராய்ச்சி. | 5 | 8 | 13 |
| அரும் பொருட்காட்சி சாலைகள். | 8 | 1 | 9 |
| பொது நூலகங்கள் .. | 81 | 7 | 88 |
| 288. சமூகப் பாதுகாப்பும் நலனும்—உடல் ஊனமுற்றோருக்கான பள்ளிகள் முதலியன. | 27 | .. | 27 |
| மொத்த மானியக் கோரிக்கை " 17. கல்வி ". | 1,11,52 | 6,69 | 1,18,21 |

4. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி ஒதுக்கங்கள் தவிர, பள்ளி, கல்லூரிக் கட்டடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பிற கோரிக்கைகளின் கீழ் 1975-76-ல் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம் வருமாறு :—

| | திட்டத்தின் கீழ் வராத செலவு. | திட்டச் செலவு. | மொத்தம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி. | | | |
| (அ) வருவாய்க் கணக்கில் செலவு— | | | |
| 314. சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்கள் .. .. .. | | 75 | 75 |

| (1) | திட்டத்தின் கீழ் வராத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |

பொதுக் கல்வி—தொடர்ச்சி.

| | | | |
|---|---|---|---|
| மானியக் கோரிக்கை 37—பொதுப்பணி— | | | |
| 277. கல்வி—அரசுப் பள்ளிகள் கல்லூரிகளுக்குக் கட்டடங்கள் .. | .. | 4 | 4 |
| 266. தனியார் மற்றும் உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம் .. .. .. .. | 2,87 | .. | 2,87 |
| (ஆ) வருவாய்க் கணக்கின் கீழ் வராத செலவு— | | | |
| 459. பள்ளிக் கல்வித்துறை அலுவலகக் கட்டடங்கள் .. .. .. | 6 | .. | 6 |
| 477. கல்வி, கலைகள், பண்பாடு ஆகிய வற்றிற்கான மூலதனச் செலவு—அரசுப் பள்ளிகள், கல்லூரிகளுக்கு கட்டிடங்கள் .. .. .. .. | .. | 1,37 | 1,37 |
| 483. வீடு கட்டுவதற்கான மூலதனச் செலவு—அரசு உயர்நிலைப்பள்ளி ஆசிரியர் வீடுகள் .. .. .. | .. | 2 | 2 |
| 677. கடன்கள்—தனியார் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக்கடன் .. | 1 | .. | 1 |
| தேசிய கடன் படிப்புதவித் தொகைகள். | 40 | .. | 40 |
| மொத்தம்—பொதுக் கல்வி .. | 3,34 | 2,18 | 5,52 |



| (1) | திட்டத்தின் கீழ் வராத செலவு. (2) | திட்டச் செலவு. (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |

தொழில் நுட்பக் கல்வி.

| | | | |
|---|---|---|---|
| 477. அரசு தொழில் நுட்பக் கல்வி கட்டடங்களுக்கான மூலதனச்செலவு | .. | 15 | 15 |
| 677. தொழில் நுட்பக் கல்வி மாணவர்களுக்குக் கடன்கள் .. .. .. | 12 | .. | 12 |
| மொத்தம்—தொழிற் கல்வி .. | 12 | 15 | 27 |
| மொத்தம்—பொதுக்கல்வியும் தொழிற் கல்வியும் .. .. .. .. | 3,46 | 2,33 | 5,79 |

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் அனைத்தும் கணக்கிற்கொள்ளப்பட்டால் 1975-76-ல் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை ரூ. 124 கோடியாகும்.

5. அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள், விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்கு படிப்புதவித் தொகைகள் முதலியவற்றிற்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள், தொழிற் பயிற்சி நிறுவனங்கள் போன்றவற்றிற் கான செலவுகளும் மேற்படி செலவினங்களின் கீழ் வரா. இப் பல் வகை இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 17 கோடியாகும்.

6. மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றிற்கு, அந்தந்த துறைகளின் கீழ் 1975-76 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத் தம் சுமார் ரூ. 7 கோடி. மேற்கண்ட இரு இனங்களுக்காகும் செலவையும் (ரூ. 17 கோடியும், ரூ. 7 கோடியும்) கணக்கில் கொண்டால், 1974—75-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 148 கோடியாக இருக்கும்.

7. எல்லாத் தலைப்புகளின் கீழும் (277. கல்வி, 477. கல்வி மூலதனச் செலவு, 677. கடன்கள் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1975—76 ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே

கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

| | பொறுப்பேற்ற செலவினம். (1) | 1975–76-ல் புதியதாக ஒப்பளிப்பு வழங்கப்படும் செலவினங்கள். (2) | மொத்தம். (3) |
|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| பொதுக் கல்வி— | | | |
| (1) பள்ளிக் கல்வி .. .. | 4,71 | 92 | 5,63 |
| (2) கல்லூரிக் கல்வி .. | 1,35 +23 | 29 | 1,64 +23 |
| | 6,06 +23 | 1,21 | 7,27 +23 |
| தொழில் நுட்பக் கல்வி .. | 57 | 8 | 65 |
| பொது நூலகங்களும் கலைப் பணிகளும். | 51 +3 | 2 | 53 +3 |

8. இந்த நாட்டில் எழுத்தறிவை ஊட்டுவதிலும், கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகம் ஒன்றாகும். 14 வயது வரை சிறுர் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறி முறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும், வேறுபல மாநிலங்களைக் காட்டிலும், தமிழகம் முன்னணியில் உள்ளது. வரவு, செலவு மதிப் பீட்டில் அனைத்துவகைக் கல்விகளுக்குமான மொத்தச் செலவுத் தொகை ஏறத்தாழ முப்பது விழுக்காட்டுக்கு மேலாகும். பல்வகை நிலைக் கல்வி களும் மேன்மேலும் பரவவேண்டும் என்பதிலும் அவற்றின் தரத்தை மேன்மேலும் சிறக்கச் செய்ய வேண்டும் என்பதிலும் யாருக்கும் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. எனினும், இயலும் இடங்களில் சிக்கனத் தைக் கடைப்பிடித்து கல்விக்காகச் செலவிடப்படும் அனைத்துச் செலவினங் களும் மிகுபயன் தருவனவாக அமையும்படி பார்த்துக் கொள்வதும் இன்றியமையாதது. இதுகுறித்து ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பிட அரசு 1975 சனவரித் திங்களில் ஒரு குழுவை அமைத்துள்ளது.



பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வியின் ஆண்டு வரம்புகள்:

9. கல்வியின் பல்வேறு நிலைகளின் ஆண்டு வரம்புகளில் மாற்றம் செய்வது தேவையா என்பது கடந்த சில ஆண்டுகளாகக் கல்வியாளர்கள் கவனத்தில் உள்ளது. வட இந்திய மாநிலங்களில் பலவற்றுள்—உத்திரப் பிரதேசம், மத்தியப் பிரதேசம், இராசஸ்தானம், பஞ்சாப், அரியானு, மேற்கு வங்காளம் போன்றவற்றில்—14 ஆண்டுகளில் பள்ளிக் கல்வியும் கல்லூரிக் கல்வியும் முடிவடைகின்றன. தென் இந்திய மாநிலங்களாகிய தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் ஆகியவற்றிலும், குசராத், ஒரிசா, பீகார் போன்றவற்றிலும் பள்ளிக் கல்விக்கும் கல்லூரிக் கல்விக்கும் சேர்த்து 15 ஆண்டுகள் ஆகின்றன. 15 ஆண்டு பள்ளி, கல்லூரிப் படிப்பு உள்ள மாநிலங்களிடையேயும் பல்வேறு நிலைக் கல்வி களின் ஆண்டு வரம்புகள் ஒரே மாதிரியாக இல்லை. ஆந்திரப் பிரதேசம், கர்நாடகம், கேரளம் போன்றவற்றில் 10+2+3 என்ற ஆண்டு வரம்பு உள்ளது. பீகாரில் (11+1+12)+3 என்ற ஆண்டு வரம்பும், ஒரிசாவில் (11+1)+3 என்ற வரம்பும் உள்ளன. தமிழ் நாட்டில் பள்ளிக் கல்வி பதினொரு ஆண்டுகள், கல்லூரிகளில் புகுமுக வகுப்பு ஒரு ஆண்டு, பட்டப் படிப்பு மூன்று ஆண்டுகள் என்ற நிலை உள்ளது. (பிற மாநிலங்களில் உள்ள ஆண்டு வரம்புகளைப் பற்றிய விவரங்கள், 1973 டிசம்பரில் மைய அரசுக் கல்வித் துறைக்கு டாக்டர் சுக்லா குழு தந்த அறிக்கையிலிருந்து எடுத்தவை.) நாடு முழுவதும் கல்வியின் பல்வேறு நிலைகளின் ஆண்டு வரம்பு ஒரேமாதிரியாக ஆக வேண்டுமாயின் அதற்காக ஆகக் கூடிய பெருமளவு கூடுதல் செலவை ஏற்க மைய அரசு இசைந்து முன்வர வேண்டும். இதற்கிடையில் 1975 சனவரியில் இவ்வரசு கல்வியாளர்களைக் கொண்ட குழு ஒன்றை அமைத்துள்ளது. இக்குழு இப்பிரச்சினையைத் தீர ஆராய்ந்து தற்பொழுது தமிழ் நாட்டில் உள்ள ஆண்டு வரம்புகளை மாற்றுவது உசிதமா அல்லவா என்பதுகுறித்து அரசுக்கு அறிக்கை அனுப்பும்.

## II. தொடக்கக் கல்வி.

மாணவர் சேர்ப்பு :

1971 ஆம் ஆண்டு மக்கட் தொகைக் கணக்கின்படி தமிழ் நாட்டில் 6—11 வயதுத் தொகுதியைச் சேர்ந்த (1—5 வகுப்புகளில் படிப்பதற் குரிய) சிறுர்களின் எண்ணிக்கை 1974–75-ல் 61.6 இலட்சமாகும். இவர் களில் 90.3 விழுக்காட்டினர் ஆகிய 55.6 இலட்சம் சிறுர்கள் (நான்காவது திட்டக் காலத்திலும் 1974–75 ஆம் ஆண்டிலும் கூடுதலாகச் சேர்க்கப் பட்ட 6.42 இலட்சம் சிறுர்கள் உட்பட) பள்ளிகளில் படித்துக் கொண்டுள் ளனர். 1975–76-ல் இவ்வயதுத் தொகுதியினரில் மேலும் ஒரு இலட்சம் பேரைப் பள்ளிகளில் சேர்ப்பது குறிக்கோள் ஆகும்.

2. 1974–75-ல் 11—14 வயதுத் தொகுதிச் சிறுர்கள் (6—8 வகுப்புகட் குரியவர்) 27.7 இலட்சம் பேர் இருந்தனர். அவர்களில் 52.6 விழுக் காட்டினர் ஆகிய 14.56 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடு தலாகச் சேர்க்கப்பட்ட 2.28 இலட்சம் உட்பட) பள்ளிகளில் படித்து வந் தனர். 1975–76-ல் இவ்வயதுச் சிறுர்களில் மேலும் 50,000 பேரைப் பள்ளிகளில் சேர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## கல்வித் தர உயர்வு :

3. பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் ஆசிரியர்-மாணவர் விகிதம் சீராக இருப்பதற்கு தொடர்ந்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1974 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 1-ஆம் நாளன்று 32,565 தொடக்கப் பள்ளிகளில் (உயர் தொடக்கப் பள்ளிகள் உட்பட) 1,78,766 ஆசிரியர்கள் (நான்காவது திட்டக் காலத்தில் கூடுதலாக நியமிக்கப் பெற்ற சுமார் 25,000 ஆசிரியர்கள் உட்பட) பணியாற்றி வருகின்றனர். அப்பள்ளிகளில் பயின்ற மொத்தச் சிறுர்களின் எண்ணிக்கை 61.14 இலட்சமாகும். தொடக்கப் பள்ளிகளில் ஆசிரியர்-மாணவர் விகிதம் தற்போது 1:35 ஆகும். 1975-76-ல் 6—11 வயதுத் தொகுதிச் சிறுர்கட்காக 400 கூடுதல் இடைநிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர் பணியிடங்களும், 11—14 வயதுத் தொகுதிச் சிறுர்கட்காக 600 கூடுதல் இடைநிலை ஆசிரியர் பணியிடங்களும் ஏற்படுத்தப்படும்.

4. பள்ளிகளில் போதனையின் தரத்தை உயர்த்துவதற்கான சிறப்பு நடவடிக்கையாக, கடந்த சில ஆண்டுகளாக உயர் தொடக்க நிலை (ஹையர் கிரேடு) ஆசிரியர்கள் நியமனம், படிப்படியாக குறைக்கப்பட்டு இடைநிலை ஆசிரியர்களே நியமிக்கப்பட்டு வருகிருர்கள். இடைநிலை ஆசிரியர்களுக்குரிய தகுதி பெற்றிருந்தும் உயர் தொடக்க நிலைப் பதவிகளில் பணி செய்த ஆசிரியர்களுக்குப் பயனளிப்பதற்காக அவர்களுடைய பதவிகளை இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தி, அவர்களை இடைநிலை ஆசிரியர்களாக அமர்த்தும் திட்டம் கடந்த சில ஆண்டுகளாகச் செயல்படுகிறது. இவ்வாறு இதுவரை 37,700 உயர் தொடக்க நிலை ஆசிரியர் பதவிகள் இடைநிலை ஆசிரியர் பதவிகளாக உயர்த்தப்பட்டுள்ளன (1974-75-ல் உயர்த்தப்பட்ட 4,200 பதவிகள் உட்பட).

5. தொடக்கப் பள்ளிகளில் அறிவியல் போதனையின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் பாடத் திட்டங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளன. அறிவியல் சாதனங்கள் வாங்குதற்பொருட்டு ஒவ்வொரு தொடக்கப் பள்ளிக்கும் முன்னூறு ரூபாய்களும் ஒவ்வொரு உயர் தொடக்கப் பள்ளிக்கும் ஆயிரம் ரூபாயும் உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன. இதுவரை இத்திட்டத்தால் 12,720 தொடக்கப் பள்ளிகளும், 3,334 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடைந்துள்ளன. 1975-76-ல் மேலும் 500 தொடக்கப் பள்ளிகளும் 200 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயனடையும்.

6. "ஐக்கிய நாடுகள் பன்ளுட்டுக் குழந்தைகள் நிதி" (யூனிசெப்) உதவியுடன் 1971-72 கல்வியாண்டு முதல் 1973-74 கல்வியாண்டு முடிய சென்னை, செங்கற்பட்டு, தென்னுர்க்காடு மாவட்டங்களில் 50 தொடக்கப் பள்ளிகளிலும் 30 உயர் தொடக்கப் பள்ளிகளிலும் அறிவியல் பாடத்தை பயிற்றுவிக்கும் தரத்தை உயர்த்துவதற்கான முன்னேடித் திட்டமொன்று செயல்பட்டது. 1974-75 முதல் யூனிசெப் உதவியுடன் அத்திட்டம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுமுள்ள 1,550 தொடக்கப் பள்ளிகட்கும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கும் பயனளிக்குமாறு விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்நிறுவனம், ரூபாய் மூன்று இலட்சம் செலவில், 1,550 தொடக்கப் பள்ளிகட்கு அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும், 1,800 உயர் தொடக்கப் பள்ளிகட்கு ரூ. 20 இலட்சம் செலவில் அறிவியல் ஆய்வுக் கருவிகள் அடங்கிய பெட்டிகளையும் இலவசமாக வழங்கியுள்ளது. மேலும், இத்திட்டத்தின்கீழ் ரூ. 10 இலட்சம் செலவில் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு 20 நாட்களும், உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்கட்கு 42 நாட்களும் என்ற அடிப்படையில் 1,550 தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும், 3,600 உயர் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கும் பணியிடைப் பயிற்சியும் தரப்பட்டுள்ளது. இப்பயிற்சிச் செலவிலும் பாதியை யூனிசெப் ஏற்கும்.



7. தொடக்கப் பள்ளிகட்கு இன்றியமையாத நூலகப் புத்தகங்களை வாங்கி வழங்கிட 1974-75-ல் ரூ. 1,00,000 அனுமதிக்கப்பட்டது. 1975-76-ஆம் ஆண்டிலும் ரூபாய் ஒரு இலட்சம் இப்பணிக்குச் செலவிடப்படும்.

8. மாநிலத்திலுள்ள 5,800 உயர் தொடக்கப் பள்ளிகளில் சிலவற்றிலேயே தனியான உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ளனர். எனவே, 1973-74-ல் 195 உடற்பயிற்சி ஆசிரியர்கள் புதிதாக நியமிக்கப்பட்டனர். 1975-76-ல் மேலும் 150 பேர் புதிதாக நியமிக்கப்படுவர்.

9. தாம் வாழுமிடத்திற்கேற்ற பயனுள்ள தொழில்களை மாணவர்கள் கற்றுக் கொள்ளும் பொருட்டும், தொழில் நுணுக்கத்தையும் உற்பத்தித் திறனையும் அறிந்துகொள்ளும் பொருட்டும், தொடக்கப் பள்ளிகளிலும் கைத்தொழிற் பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. மாநிலத்திலுள்ள உயர் தொடக்கப் பள்ளிகளில் சுமார் 4,900 பள்ளிகளில் ஏற்கனவே பகுதி நேர அல்லது முழுநேர கைத்தொழில் ஆசிரியர்கள் உள்ளனர். 1973-74-ல் ஏற்படுத்தப்பட்ட 576 முழுநேரக் கைத்தொழிலாசிரியர்கள் பணியிடங்களும் இதில் அடங்கும். இந்த 576 பணியிடங்களில் நேரிடை நியமனம் வழி ஏறத்தாழ 300 முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டன. முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் நியமனத்திற்கேற்ற தகுதி பெற்றிருந்தும் பகுதி நேரக் கைத்தொழில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்களுக்கு எஞ்சிய பணியிடங்கள் தரப்பட்டன. 1975-76-ல் கூடுதலாக 150 முழுநேரக் கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படும்.

## நண்பகல் உணவுத் திட்டம்.

10. அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் நடைமுறையில் உள்ள நண்பகல் உணவுத் திட்டம், பள்ளிகளில் மாணவர் சேர்க்கையை உயர்த்துவதிலும், மாணவர் தொடர்ந்து பள்ளிக்கு வரும்படி செய்வதிலும் சிறந்த இடத்தைப் பெறுகிறது. இப்பள்ளிகளில் பயில்கின்ற மாணவர் தொகையில் மூன்றில் ஒரு பங்காகிய—மிகவும் ஏழைக் குடும்பங்களிலிருக்கின்ற மாணவர்கள் இத்திட்டத்தால் நற்பயன் பெறுகின்றனர். தொடக்க-உயர் தொடக்க நிலைப் பள்ளிகளில் 1—8 வகுப்புகளில் பயிலும் ஏறத்தாழ 19.58 இலட்சம் மாணவர்களுக்கு இத்திட்டத்தின்கீழ் நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. அரிசன நலத் துறை நடத்திவரும் பள்ளிகளில் பயிலும் சுமார் 1.60 இலட்சம் மாணவரும் இவ்வெண்ணிக்கையில் அடங்குவர். 1975-76-ஆம் ஆண்டில் நண்பகல் உணவுத் திட்டத்திற்காக

ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவிடப்படும். இத்துடன் அமெரிக்க "கேர்" நிறுவனமும் ஆண்டொன்றுக்கு ரூபாய் ஆறு கோடி பெறுமானமுள்ள உணவுப் பொருட்களை இத்திட்டத்திற்கு இலவசமாக உதவி வருகிறது.

11. ஆண்டில் 200 நாட்களுக்கு, ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 6 காசு வீதம் வழங்கப்பட்டு வந்த அரசு உதவித் தொகை 1974–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 1–ஆம் நாள் முதல் 10காச காவும், உள்ளாட்சி நிறுவனங்கள் வழங்க வேண்டிய பங்குத் தொகை 4 காசிலிருந்து 5 காசாகவும் உயர்த்தப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 1.17 கோடி கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது.

12. நவீன அடுப்புகளில் சுகாதார முறைப்படி சமைக்கப்பெற்றுச் சுற்றுப்புறங்களிலுள்ள பள்ளிகட்கு மூடப்பட்ட வண்டிகளில் உணவை எடுத்துச் சென்று வழங்கும் மையச் சமையற் கூடத் திட்டம், செங்கற்பட்டு, தென் ஆற்காடு வட ஆற்காடு, ஆகிய மூன்று மாவட்டங்களிலும் செயல்பட்டு வருகிறது. இம்மாவட்டங்களில் இயங்கி வரும் 97 சமையற் கூடங்களும் "கேர்" நிறுவனத்தாரின் 2 கோடி ரூபாய் நிதியுதவியுடன் நிறுவப்பட்டவையாகும். இம் மாவட்டங்களில் சுமார் 3.75 இலட்சம் மாணவர்கட்கு அவை பகல் உணவு வழங்கி வருகின்றன. மைய சமையற் கூடங்களின்ன்றும் பள்ளிகட்கு உணவை எடுத்துச் சென்று வழங்க 224 டெம்போ உந்து வண்டிகளையும் "கேர்" நிறுவனம் வழங்கியுள்ளது. இவ் வண்டிகளையும், சமையலுக்குத் தேவையான கருவிகளையும் பழுது பார்க்க "கேர்" நிறுவனத்தின் உதவியுடன் தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள விக்கிரவாண்டியில் ரூ. 15 இலட்சம் செலவில் ஒரு பணிமனை நிறுவப்பட்டுள்ளது. அப்பணிமனை தற்போது செயல் பட்டு வருகிறது. தேவையான ஊழியர்களுடன், நிர்வாகப் பொறியாளர் ஒருவர் அப்பணிமனைக்கு பொறுப்பாளராக உள்ளார்.

13. நண்பகல் உணவுத் திட்டத்திற்குத் தேவையான உணவுப் பொருள் களைச் சீராகச் சேமித்து வைப்பதற்காக "கேர்" நிறுவனம் உதவியுடன் ஏறத்தாழ ரூ. 20 இலட்சம் செலவில் 6 வட்டாரக் கிடங்குகள் கட்டப்படடுள்ளன.

## இலவசப் புத்தகங்கள் வழங்குதல்.

14. 1—3 வகுப்புகளில் பயில்வோரும், நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்கு முதல் வகுப்பில் பாடப் புத்தகங்களும் சிலேட்டும், இரண்டு, மூன்று வகுப்புகளில் பாட புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் 12 இலட்சத்திற்கும் அதிகமான மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். 1972–73–ஆம் ஆண்டிலிருந்து பாட நூல்கள் தருவதற்கு ஆகும் செலவினைத் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனமே தனது நிதியிலிருந்து ஏற்றுக் கொண்டுள்ளது. பாட நூல் நிறுவனம் இப்பணிக்காக 1974–75–இல் ஏறத்தாழ ரூ. 20 இலட்சமும் 1975–76–இல் ரூ. 25 இலட்சமும் செலவிடும். முதல் வகுப்பு மாணவர்கட்கு சிலேட்டுகள் வழங்கும் வகையில் 1975–76–இல் ரூ. 2.50 இலட்சத்தை மாநில அரசு செலவிடும்.



## கட்டடங்கள்.

15. பள்ளிக் கட்டடங்கள் கட்டுதற்பொருட்டு உள்ளாட்சி நிறுவனங்கட்கும் தனியார் நிறுவனப் பள்ளிகட்கும் மானியம் வழங்கப்படுகிறது. 1974–75–வரை தொடக்கப்பள்ளி கட்டடம் ஒன்றுக்கான அரசு மானியம் ரூ. 8,000 ஆகவும், பள்ளி நிர்வாகத்தின் குறைந்த அளவுப் பங்குத் தொகை ரூ. 4,000 ஆகவும் இருந்தன. உயர் தொடக்கப் பள்ளிகளைப் பொறுத்தவரை அப்பங்குகள் முறையே ரூ. 13,000 ஆகவும், ரூ. 6,000 ஆகவும் இருந்தன. 1974–75–லிருந்து தொடக்கப்பள்ளி–உயர் தொடக்கப் பள்ளி கட்டட மானியம் ரூ. 10,000/–ரூ. 17,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது: நிர்வாகத்தினர் தர வேண்டிய குறைந்தபட்ச பங்குத் தொகையும் ரூ. 5,000/–ரூ. 8,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1975–76–இல் நகராட்சிப் பள்ளிகள், தனியார் பள்ளிக் கட்டடங்களுக்கு மானியம் தர ரூ. 4 இலட்சமும், அரசினர் தொடக்கப்பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்ட ரூ. 14 இலட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன. 1975–76–இல் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டடங்களுக்காக ரூ 75 இலட்சம் சமுதாய வளர்ச்சித் துறையின் வரவு—செலவுத் திட்டத்தின் கீழ் செலவிடப்படும். இவை தவிர, பரிசுச் சீட்டு வருவாயிலிருந்தும் பள்ளிக் கட்டடங்கள் கட்ட வகை செய்யப்பட்டுள்ளது.

16. ஆசிரியைகள் கிராமப்புறங்களில் தங்கிப் பணியாற்ற ஊக்குவிப்பதற்காக ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியைகட்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டத்தின் கீழ் இதுவரை ஏறத்தாழ 1,600 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் 211 வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

## உள்ளாட்சி மன்றப் பள்ளிகள்.

17. தமிழ் நாட்டிலுள்ள ஏறத்தாழ 32,565 தொடக்கப்பள்ளிகளுள் ஏறத்தாழ 28,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் அமைந்துள்ளன. அவற்றுள் 22,400 பள்ளிகள் (சுமார் 19,200 தொடக்கப் பள்ளிகளும், சுமார் 3,200 உயர் தொடக்கப் பள்ளிகளும்) ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்பட்டு வருகின்றன. ஆரம்பக் கல்விக்காக ஊராட்சி ஒன்றியங்கட்கு மானியம் வழங்குவதற்கான திருத்திய முறைப்படி (ஒரு ரூபாய் நிலவரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம் தொடர்ந்து ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக்கு வழங்கப்படும். 1971 ஆம் ஆண்டு மக்கட் தொகை அடிப்படையில் ஒவ்வொரு வட்டாரத்திலுமுள்ள மக்கள் தொகைக்கு தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு வழங்கும் மானியம் கல்வி நிதிக்குச் செல்கிறது. தொடக்கப் கல்விக்காக ஆகும் செலவில் எஞ்சியதை மாற்றியமைக்கப்பட்ட வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும், ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து கொள்கின்றன.

18. சுமார் 1,400 பள்ளிகளை (சுமார் ஆயிரம் தொடக்கப்பள்ளிகளும், சுமார் நானூறு உயர் தொடக்கப்பள்ளிகளும்) நகராட்சிகள் நடத்தி வருகின்றன. நகராட்சிகள் கல்வி வரி வசூலிப்பதுடன் அவ்வாறு வசூலாகும் தொகையில் பாதிக்கு இணையான தொகையை அரசு மானியமாகவும் பெறுகின்றன. அத்துடன் நகராட்சிகளின் தொடக்கக் கல்விக் கணக்கில் துண்டு விழும் முழுத் தொகையினையும் அரசே ஈடு செய்து வருகின்றது,

## III. உயர்நிலைப் பள்ளிக் கல்வி.

1. 1974–75இல் தமிழ் நாட்டில் 14—17 வயதுத் தொகுதியினர் 22.87 இலட்சம் பேர் இருந்தனர். இவர்களில் 33 விழுக்காட்டினராகிய 7.52 இலட்சம் பேர் (கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாகப் பள்ளிகளிற் சேர்க்கப்பட்ட 1.15 இலட்சம் மாணவர்களையும் சேர்த்து) உயர்நிலைப் பள்ளிகளில் 9—11 வகுப்புகளில் பயின்றனர். இம்மாநிலத்தில் 2,882 உயர்நிலைப் பள்ளிகள் உள்ளன. அவற்றில் பயில்வோர் 16.55 இலட்சம் மாணவர்கள். பணிபுரியும் ஆசிரியர்கள் 69,500 பேர்கள். ஆசிரியர்களுள் ஏறத்தாழ 10,000 ஆசிரியர்கள் கடந்த ஆறு ஆண்டுகளில் நியமனம் பெற்றவர்கள். 1975–76ஆம் ஆண்டில் 14—17 வயது மாணவர்களுள் சுமார் 30,000 மாணவர்களை கூடுதலாகச் சேர்க்கவும் சுமார் 600 பட்டதாரி ஆசிரியர்களைக் கூடுதலாக நியமிக்கவும் கருதப்பட்டுள்ளது.

### (க) கல்வித்தர உயர்வு.

2. புதிய பாடத் திட்டத்தின் கீழ் ஏழாம் வகுப்பிலிருந்தே இயல்பியல், வேதியியல், உயிரியல் ஆகியவை தனித்தனிப் பாடங்களாகக் கற்பிக்கப்படுகின்றன. அறிவியல் ஆய்வுக் கருவிகள் வங்குவதற்கும், ஆய்வுக்கூடங்களை அமைப்பதற்கும், நிதியுதவி அளிக்கும் திட்டம் 1975–76லும் தொடரும். இதுகாறும் 867 உயர்நிலைப் பள்ளிகள் அறிவியற்கூட நிதியுதவியைப் பெற்றுள்ளன. 1975–76இல் மேலும் 11 உயர்நிலைப் பள்ளிகள் இந்நிதியுதவியைப் பெறும். 1974–75 முதல் ஒவ்வொரு பள்ளிக்கும் ஆன செலவுத் தொகை ரூ. 40,000-லிருந்து ரூ. 55,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.ஆய்வுக்கூட கட்டடத்திற்காக ரூ. 37,000-ம் அறிவியல் சாதனங்களுக்காக ரூ. 18,000-ம் செலவிடப்படும். தனியார் உயர்நிலைப்பள்ளிகளும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளும் பெறும் ஆய்வுக்கூட மானியம் ரூ. 40,200 ஆகும். இதில் ரூ. 18,000 கருவிகளுக்காகும். இக்கருவிகளை பள்ளிக் கல்வித்துறை இயக்குநரே விலைக்கு வாங்கி வழங்குகிறார். கட்டடத்திற்கான செலவில் 60 விழுக்காடு அல்லது ரூ. 22,200, இதில் எது குறைவோ அது என்ற அடிப்படையில் ஆய்வுக்கூட கட்டட மானியம் தனியார் மற்றும் நகராட்சி உயர்நிலைப்பள்ளிகளுக்கு அளிக்கப்படுகிறது.

3. இதுகாறும் அறிவியல் ஆய்வுக்கூட வசதியினைப் பெறாத கிராமப்புற உயர்நிலைப்பள்ளிகளில் அறிவியல் கற்பிப்பதற்கு உதவும்வண்ணம் தற்போதுள்ள 17 நடமாடும் அறிவியல் ஆய்வுக்கூட வண்டிகளோடு 1974–75இல் எட்டு வண்டிகளும் 1975–76இல் ஐந்து வண்டிகளும் சேர்க்கப்படும். இதனால் தற்போதுள்ள 48 கல்வி மாவட்டங்களுள் 30 மாவட்டங்களில் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு ஆய்வுக்கூட வண்டி பணிபுரியும் நிலை ஏற்படும்.

4. மாநில அறிவியல் கல்வி நிறுவனம், மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனத்தின் ஒரு பகுதியாக நிறுவப்பட்டுள்ளது. அது அறிவியற் கல்வியின் வளர்ச்சி, அறிவியற் பாடத் திட்டச் சீரமைப்பு, ஆசிரியர் மறுபயிற்சி, ஆய்வுகள், வெளியீடுகள், விரிவுப் பணிகள் ஆகியவற்றைக் கவனித்து வரும். உயிரியல், இயல்பியல், வேதியியல், கணிதம் ஆகியவற்றில் கோடைக் காலப் பயிற்சி வகுப்புகள் 1969-லிருந்து ஆண்டுதோறும் "கல்வி ஆய்வுகள் மற்றும் பயிற்சிக்கான தேசியக் குழு" "பல்கலைக் கழக நிதியுதவிக் குழு" ஆகியவற்றின் உதவியோடு அறிவியல் ஆசிரியர்களும், கணித ஆசிரியர்களும் பயன்பெறும்பொருட்டு நடத்தப்பட்டு வருகின்றன. ஆயிரத்திற்கும் அதிகமான உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் ஏற்கெனவே பயிற்சி பெற்றுள்ளனர். 1975–76-இல் மேலும் ஏறத்தாழ 40 உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் மறுபயிற்சி பெறுவர்.



5. உயர்நிலைப் பள்ளிகளில் நூலக வசதியைப் பெருக்கும் நோக்குடன் பொருத்தமான நூலகப் புத்தகங்கள் வாங்கப்பட்டு பள்ளிகட்கு வழங்கப்படுகின்றன. 1974–75இல் பள்ளி ஒவ்வொன்றிற்கும் ரூ. 500 மதிப்புள்ள புத்தகங்கள் வீதம் 684 உயர்நிலைப் பள்ளிகட்கு நூல்கள் வழங்கப்பட்டுள்ளன. இதுவரை ஏறத்தாழ 2,472 உயர்நிலைப் பள்ளிகள் இத்திட்டத்தால் பயன்பெற்றுள்ளன. 1975–76-ல் ரூ. 85,000 மொத்தச் செலவில் மேலும் 85 அரசு உயர்நிலைப் பள்ளிகள் நூலகப் புத்தகங்களைப் பெறும்.

6. 1974–75-ல் உயர்நிலைப் பள்ளிகளில் ஒலி-ஒளிக் கல்வி வசதிகளை ஏற்படுத்தவும், மாநிலத் திரைப்படச் சேமிப்பு நிலையத்தை முன்னேற்றவும், ரூபாய் ஒரு இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் அதன் அண்மையிலுமுள்ள சுமார் 300 பள்ளிகளில் 1975–76-ல் தொலைக் காட்சிக் கருவிகள் நிறுவப்படக்கூடும்.

7. உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற் பயிற்சி தருவதற்காக பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளை (Comprehensive High Schools) நிறுவுமாறு கோத்தாரி கல்விக் குழு பரிந்துரைத்துள்ளது. வானொலிப் பெட்டிகள் பழுது பார்த்தல், மின் இயக்கிகள் பின்னுதல் (Electric Motor Rewinding), உந்து வண்டி பழுது பார்த்தல் (Motor Mechanism) வேளாண்மைப் பொறியியல், ஆகியவற்றைப் பாட நேரத்திற்குப் புறம்பான வேளைகளில் கற்பிக்கும்வண்ணம் 1974–75-ல் 19 உயர்நிலைப் பள்ளிகள் பல்வகைப் பயிற்சிப் பள்ளிகளாக உயர்த்தப்பட்டன. இத்திட்டம் 1975–76-ல் விரிவாக்கப்பட்டு, மேலும் சில உயர்நிலைப் பள்ளிகளில் அந்தந்த இடங்களின் சூழ்நிலைத் தேவைகட்கு ஏற்ப வெவ்வேறு தொழிற் பயிற்சிகளைத் தொடங்கி அப்பள்ளிகள் பல்வகைப் பயிற்சி தரும் பள்ளிகளாக உயர்த்தப்படும்.

### மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்.

8. சென்னையிலுள்ள மாநிலக் கல்வி நிறுவனம், கல்வி ஆய்வுகள் பயிற்சிக்கான தேசீய மன்றத்திற்கு நிகரான மாநில அமைப்பு ஆகும். அது பள்ளி நிலையில் பணியிடைப் பயிற்சிக்கான பொறுப்பை ஏற்றுள்ளது. பல்வகைப் பணியிடைப் பயிற்சித் திட்டங்களை நிறைவேற்றி வருவதோடு கற்பித்தல் முறைகள், பாடத் திட்ட முன்னேற்றம், ஆகியவற்றில் ஏற்படும் பல்வகைப் பிரச்னைகள் குறித்த ஆய்வுகளையும் நடத்தி வருகிறது. தொடக்கக் கல்வி விரிவுப்பணி மையமொன்று இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்நிறுவனத்தின் பணிகளை விரிவாக்கி கல்வித் துறையில்

ஆராய்ச்சி, பயிற்சி ஆகியவற்றுக்கான சிறந்த நிலையமாக இதனை உருவாக்கும் நோக்கத்துடன் இந்நிறுவனம் 1975 பிப்ரவரி முதல் அரசுத் தேர்வு இயக்குநருடைய நிர்வாகத்தின் கீழ்க் கொண்டுவரப்பட்டுள்ளது.

## உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்கள்.

9. இம்மாநிலத்திலுள்ள 2,882 உயர்நிலைப் பள்ளிகளுள் ஏறத்தாழ 50 விழுக்காடு பள்ளிகள் போதுமான இடவசதியற்றவையாக உள்ளன. 1975—76-ல் அரசு உயர்நிலைப் பள்ளிக் கட்டடங்களுக்கு ரூ. 14 இலட்சம் ஒதுக்கப்பட்டிருப்பதுடன், நகராட்சி மற்றும் உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டட மானியம் வழங்கவும் ரூ. 7 இலட்சம் ஒதுக்கப் பட்டுள்ளது. அரசு (கழக) உயர்நிலைப் பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டவும், அவற்றைப் பழுதுபார்க்கவும் ரூ. 18 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## படிப்பு உதவித் தொகைகள்.

10. தமிழ்நாட்டில் எல்லா நிலைகளிலும் பள்ளிக் கல்வி இலவசமாகும். கிராமப்புறத்தைச் சார்ந்த, கல்வியில் சிறந்த மாணவர்களுக்கு உதவித் தொகைகள் 1971–72 முதல் வழங்கப்படுகின்றன. இத்திட்டத்தின்படி ஆண்டுதோறும் ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் இரண்டு மாணவர்களுக்குப் புதிதாக இவ்வுதவித் தொகைகள் வழங்கப்படுகின்றன. ஒருமுறை உதவித் தொகை பெற்ற மாணவர் பள்ளிக் கல்வியை முடித்து வெளிவரும் வரை இவ்வுதவித் தொகையைப் பெறுவார். இத்திட்டத்திற்கென ஏற்கப்பட்ட பள்ளிகள் ஏதாவது ஒன்றில் மாணவர் படிப்பதாய் இருந்தால், உணவு விடுதியில் தங்கிப் படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 1,000-மும் விடுதியில் தங்காமல் பள்ளிக்கு வந்து சென்று படித்தால் ஆண்டொன்றுக்கு ரூ. 500-ம் உதவித் தொகை வழங்கப்படும். மாணவர் தம் விருப்பப்படி சாதாரண பள்ளியில் சேர்ந்து படித்தாலும் ஆண்டொன்றுக்கு ரூ. 150 வழங்க 1974–75 முதல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இந்த உதவித் தொகையைப் பெறும் மாணவர் எண்ணிக்கை ஆண்டுதோறும் (புதிதாகப் பெறுவோர் உள்பட) சுமார் 2,000 ஆகும். இது தவிர, பர்மா, இலங்கை அகதிகள், முன்னாள் இராணுவத்தினர், தாழ்த்தப்பட்ட இனத்தவர், பழங்குடி மக்கள், தங்கக் கட்டுப்பாட்டினால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள், அரசியல் தியாகிகள் ஆகியோரது குழந்தைகளுக்கும் தாராளமான கல்விச் சலுகைகள் தொடர்ந்து அளிக்கப்பட்டு வருகின்றன.

## நடமாடும் மருத்துவ வண்டிகள்.

11. வட ஆர்க்காடு, மதுரை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, சேலம், தர்மபுரி, கோயம்புத்தூர், நீலகிரி ஆகிய வருவாய்த்துறை மாவட்டங்களில் பள்ளிப் பிள்ளைகளின் மருத்துவச் சோதனைக்கென நடமாடும் மருத்துவ வண்டிகள் இயங்கி வருகின்றன. காலப் போக்கில் பிற மாவட்டங்களுக்கும் இத்திட்டம் விரிவாக்கப்படும்.



## பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள்.

12. பள்ளிகளில் வசதிகளைப் பெருக்கும் நோக்குடன் மக்களது முயற்சியையும் ஆர்வத்தையும் தூண்டும் வகையில் இதுவரை 510 பள்ளிச் சீரமைப்பு மகாநாடுகள் நடத்தப்பட்டு அதன் வழியில் ரூ. 13.05 கோடி மதிப்புள்ள பொருள்கள் பொது மக்களிடமிருந்து பெறப்பட்டுள்ளன. இப்பொழுது அறிவியல் மற்றும் நூலக மேம்பாட்டிற்கான வசதிகளைப் பெறுவதில் நாட்டம் செலுத்தப்படுகிறது. பொது மக்களின் நன்கொடையைக் கொண்டு ஏறத்தாழ 40 இலட்சம் மாணவர்கட்கு ரூ. 2.57 கோடி செலவில் இலவசச் சீருடைகளும் இதுகாறும் வழங்கப்பட்டுள்ளன.

## நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசு ஏற்றல்.

13. பொருளாதாரப் பற்றுக்குறையுடைய நகராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டு வந்த உயர்நிலைப் பள்ளிகள் பதினொன்றினை 1972–73 முதல் 1974–75 வரையுள்ள காலத்தில் அரசு ஏற்றுக் கொண்டுள்ளது. மேலும் மூன்று பள்ளிகளை விரைவில் அரசு எடுத்துக் கொள்ளும். இதுவரை எடுத்துள்ள பள்ளிகளை நடத்த ஆண்டுதோறும் அரசுக்கு சுமார் ரூ. 20 இலட்சம் செலவாகும். 1975–76இல் நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளில் மேலும் ஐந்தை அரசு ஏற்கும்.

## (உ) கல்விச் சூழலை இசைவாக்கல்.

### பாடமுறைத் திருத்தம்.

14. 1974–75ஆம் ஆண்டுடன் 7-ஆம் வகுப்பு முடிய அனைத்து வகுப்புகளிலும் அனைத்துப் பாடங்களிலும் (ஏழாம் வகுப்பில் கணிதம், அறிவியல் தவிர) புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வந்து விட்டது. ஒன்பதாம் வகுப்பில் தமிழுக்கும் புதிய பாடத் திட்டம் 1974–75ஆம் ஆண்டிலேயே வந்து விட்டது. 1975–76-லிருந்து ஏழாம் வகுப்பில் கணிதம், அறிவியல் ஆகிய பாடங்களிலும், எட்டாம் வகுப்பில் எல்லாப் பாடங்களிலும், ஒன்பதாம் வகுப்பில் தமிழ் தவிர ஏனைய பாடங்களிலும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வரும்.

15. ஆங்கிலோ-இந்தியப் பள்ளிகளில் 1—7 வகுப்புகளில் எல்லாப் பாடங்கட்கும் 1974 முதல் புதிய பாடத் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இப்பள்ளிகளில் 8, 9 வகுப்புகளில் புதிய பாடத் திட்டம் 1975இல் நடைமுறைக்கு வரும். பாடத்திட்ட சீர்திருத்தத்தை இடைவிடாது கவனிக்கும் நிலையான அமைப்பாக பாடத்திட்ட மேம்பாட்டுப் பகுதி ஒன்று மாநிலக் கல்வி நிறுவனத்தில் அமைக்கப்பட்டுள்ளது,

### அரசுப் பாடநூல் வெளியீடு.

16. பள்ளிகளுக்கான அரசுப் பாட நூல்களை வெளியிட்டு வழங்கும் பொறுப்பு தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்திடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. தரமான நூல்களை உருவாக்குவதிலும் அவற்றை மலிவு விலையில் விற்ப

திலும் அந்நிறுவனம் நற்பணியாற்றியுள்ளது. 1972–73 முதல் புதிய பாடத் திட்டம் நடைமுறைக்கு வருவதற்கேற்ப, புதிய பாடத்திட்டப்படி புதிய பாட நூல்களை இந்நிறுவனம் அவ்வப்பொழுது வெளிக் கொணருகிறது. 1974–75இல் இந்நிறுவனம் ஏறத்தாழ 207 இலட்சம் பாட நூல் படிகளை அச்சிட்டு வழங்கியுள்ளது.

1975–76இல் ஏறத்தாழ 215 இலட்சம் பாட நூல் படிகளை அச்சிட்டு வழங்கும். 1974–75 ஆண்டு முதல் நமது மாநிலத்தில் சிறுபான்மை மொழிகளாகிய மலையாளம், தெலுங்கு, கன்னடம், உருது ஆகிய மொழிகளில் வரலாறு, புவியியல், கணிதம் போன்ற பாடங்களுக்கும் அரசுப் பாட நூல்களை இந்நிறுவனம் வெளியிடும்.

17. இந்நிறுவன புத்தகங்கள் ஏற்பளிக்கப்பட்ட 58 வட்டார மொத்த விற்பனையாளர் மூலமாகவும், பதிவு செய்யப்பட்ட 811 சில்லறை வியாபாரிகள் மூலமாகவும் மாநிலம் முழுவதும் விற்கப்படுகின்றன. பாட நூல்கள் உரிய காலத்தில் குறிப்பிட்ட விலையில் மாணவர்கட்குக் கிடைக்க இந்நிறுவனம் வகை செய்துள்ளது.

ஆசிரியர் பயிற்சி.

18. இடைநிலை ஆசிரியர்கட்குப் பயிற்சி அளித்திட மாநிலம் முழுவதிலும் தற்போது 106 ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் உள்ளன. இவை தவிர, நர்சரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளிகள் மூன்று, இளஞ்சிறுர் பள்ளி ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் இரண்டு, ஆங்கிலோ-இந்திய ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஒன்று ஆகியவையும் செயல்படுகின்றன.

19. 1973–74இல் 1—3 வகுப்புகளிலும், 1974–75இல் 4—6 வகுப்புகளிலும் கணித பாடத்தில், தரம் உயர்த்தப்பட்ட புதிய பாடத் திட்டம் புகுத்தப்பட்டது. 1973–74இல் 1—5 வகுப்புகளிலும், 1974–75இல் ஆறும் வகுப்பிலும் அறிவியலில் புதிய பாடத் திட்டம் புகுத்தப்பட்டது. 1975–76இல் 7—9 வகுப்புகளிலும் கணிதம், அறிவியல் பாடங்களில் புதிய பாடத் திட்டம் புகுத்தப்படும். பள்ளிகளில் புதிய பாடத் திட்டத்தின்படி இவ்விரு பாடங்களையும் நடத்த் வேண்டிய ஆசிரியர்கட்குப் பணியிடைப் பயிற்சி தேவைப்படுகின்றது. 1972–73இல் ஏறத்தாழ 60,000 தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்குப் பணியிடைப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1973–74, 1974—75 ஆண்டுகளில் உயர் தொடக்க நிலை வகுப்பு ஆசிரியர்கள் 30,000 பேருக்கும், உயர்நிலைப் பள்ளி வகுப்புகளில் பயிற்றுவிக்கும் பட்டதாரி ஆசிரியர்களில் 12,000 பேருக்கும், இந்தப் பணியிடைப் பயிற்சி தரப்பட்டது.

20. தற்பொழுது இம்மாநிலத்தில் ஆங்கில மொழிப் பயிற்சி மையங்கள் ஆறு செயல்பட்டு வருகின்றன. 1974 ஆகஸ்டில் மதுரை மாவட்டம் மேலூரிலும், வடஆர்க்காடு மாவட்டம் வேலூரிலும், திறக்கப்பட்ட இரண்டு மையங்களும் இவற்றில் அடங்கும். 1967–68 முதல் 1974–75 முடிய உள்ள காலத்தில் மொத்தம் 11,773 ஆசிரியர்கள் (1974–75இல் பயிற்சி பெற்ற 1,700 பேர்கள் உட்பட) பயிற்சி அளிக்கப்பட்டனர். இத்திட்டம் 1975–76-லும் தொடர்ந்து செயல்படும். பயிற்சி பெற்ற பட்டதாரி ஆசிரியர்களுக்காக 3 முதல் 5 மாதங்கள் நடைபெறும் நீண்ட காலப் பயிற்சியும், தணிக்கை அலுவலர்கள், பயிற்சி மைய ஆசிரியர்களுக்கான 2 முதல் 4 வாரங்கள் நடைபெறும் குறுகிய காலப் பயிற்சியும் ஆண்டுதோறும் பெங்களூரிலுள்ள மண்டல ஆங்கிலக் கல்வி நிறுவனத்தில் அளிக்கப்பட்டு வருகின்றன. அந்நிறுவனத்தில் இதுகாறும் 349 பட்டதாரி ஆசிரியர்களும், 42 மாவட்டக் கல்வி அலுவலர்களும், 166 பள்ளித் துணைத் தணிக்கை அலுவலர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.



21. அரசினர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆசிரியர்களின் தொழில் தகுதிகளை மேம்படுத்திக் கொள்ள உதவும் வகையில் ஆண்டுதோறும் 10 பட்டதாரி ஆசிரியர்கள் எம். எட், பயிற்சிக்கு அனுப்பப்படுகிறுர்கள். இவ்வாறு இதுகாறும் 60 ஆசிரியர்கள் அனுப்பப்பட்டுள்ளனர். 1975-76-ல் மேலும் 10 பேர் அனுப்பப்படுவர்.

தேர்வுகள்.

22. 1975 பிப்ரவரி வரை பள்ளிக் கல்வி இயக்குநரே அரசுத் தேர்வு ஆணையாளராகவும் இருந்து வந்தார். 1975 பிப்ரவரி முதல் அரசு தேர்வுகளுக்காக தனி இயக்குநர் நியமிக்கப்பட்டுள்ளார். மாணவர் கல்வித் தர ஆய்வுக் குழு, மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் ஆகியவற்றுக்கும் அவரே இயக்குநர் ஆவார். அரசுத் தேர்வு ஆணையாளருக்கு உதவியாக ஒரு செயலர், ஒரு கூடுதல் செயலர், ஒரு முதுநிலைக் கணக்கு அலுவலர் ஆகியோர் உளர். அவர் ஆண்டுதோறும் சுமார் 24 தேர்வுகளை நடத்துகிறுர். அவற்றில், ஆண்டுக்கு ஒரு முறை நடப்பன சில; ஆண்டுக்கு இரு முறை நடப்பன சில. பள்ளியிறுதித் தேர்வு அவற்றில் முதன்மையானதாகும். அது மார்ச்சுத் தேர்வில் 1,200 மையங்களிலும் அக்டோபர் தேர்வில் 150 மையங்களிலும் நடைபெறுகிறது. 1974 மார்ச்சில் நடைபெற்ற பள்ளியிறுதித் தேர்வு எழுதிய 2,21,402 பேரில் 1,12,358 பேர் வெற்றி பெற்றனர். வெற்றி பெற்றவர் விழுக்காடு 51·9 ஆகும். பள்ளியிறுதித் தேர்வு முடிவுகளை விரைவில் அறிவித்தற்பொருட்டு இயந்திரக் கணிப்புப் பொறி பயன்படுத்தப்படுகிறது.

23. மாநிலத்திலுள்ள ஏற்பளிக்கப்பட்ட பள்ளிகளில் எட்டாம் வகுப்பில் தேர்ச்சி பெற்று, 18 வயது நிறைவு பெற்ற அனைவரும் தனிப்பட்ட முறையில் பள்ளியிறுதித் தேர்வில் கலந்துகொள்ள அனுமதித்துள்ளது குறிப்பிடத்தக்க சீர்திருத்தமாகும். படிப்பை முடிக்காமல் நின்று விட்டவர்கள் பிற்காலத்தில் தங்களுக்கு விருப்பமுள்ள வேளையில் தனிப்பட்ட முறையில் கல்வி பயில வசதி செய்ய வேண்டும் என்று மாநிலத் திட்டக் குழு பொதுவாகப் பரிந்துரைத்திருந்தது. அப்பரிந்துரைக்கேற்ப மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கை பெரிதும் வரவேற்கப்பட்டுள்ளது.

24. மாணவர் கல்வித் தரத்தை மதிப்பிடும் முறைகளை மேம்படுத்துவதில் உள்ள பிரச்சினைகளை ஆராய்வதற்காக 1972-73-ல் கல்வித் தர ஆய்வு மாநிலப் பிரிவு தோற்றுவிக்கப்பட்டது. தேர்ந்தெடுத்த 250 உயர்நிலைப் பள்ளிகளில் முன்னேடித் திட்டமாக, மாணவர்களின் திறமையின் அனைத்துக் கூறுகளையும் அந்தந்த ஆசிரியர்களே முழு அளவில் மொத்தமாக மதிப்பீடு செய்யும் திட்டம் ஒன்று 1973-74-ல் தொடங்கப்பட்டது.

அது 1974-75-ல் மேலும் 200 பள்ளிகளுக்கு விரிவாக்கப்பட்டது. முன்னோடித் திட்டத்தில் பெற்ற அனுபவத்தை ஒட்டி மாநிலத்தில் உள்ள பெரும்பாலான உயர் நிலைப்பள்ளிகட்கும் இதனை விரிவாக்கக் கருதப்பட்டுள்ளது.

இளஞ்சிறார் பள்ளிகள்.

25. ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர் சிறுமியருக்கான 40 இளஞ்சிறார் பள்ளிகள் (நர்சரி, கிண்டர்கார்டன், மாண்டிசோரி), தற்பொழுது இம்மாநிலத்தில் கல்வித் துறையின் ஒப்புதலைப் பெற்று நடந்து, அரசு மானியமும் பெற்று வருகின்றன. இவற்றுக்கென மாநில அரசுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 2 இலட்சம் செலவு ஆகிறது. கிராமப்புறங்களில் ஊராட்சி ஒன்றியங்கள் "குழந்தைகள் காப்பகங்களை" நடத்தி வருகின்றன.

கீழ்த் திசைக் கல்விப் பள்ளிகள்.

26. வடமொழி கற்பிக்கும் 12 பள்ளிகளும், அரபு மொழி கற்பிக்கும் 5 பள்ளிகளுமாக, ஏற்பளிக்கப்பட்ட கீழ்த் திசைக் கல்விப் பள்ளிகள் பதினேழு இம்மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. சாதாரண உயர் நிலைப் பள்ளிகளைப் போலவே இப்பள்ளிகளும் அரசு மானியம் பெற்று வருகின்றன.

ஊனமுற்றோர்க்கான பள்ளிகள்.

27. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காகத் தற்பொழுது இம்மாநிலத்தில் 27 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவருக்காக 12 பள்ளிகளும், காது கேட்காத சிறுவர்களுக்காக 14 பள்ளிகளும், தொழுநோயால் வருந்தும் குழந்தைகட்காக 2 பள்ளிகளும், முடமாயுள்ள சிறுவர்களுக்காக ஒரு பள்ளியும் நடைபெற்று வருகின்றன. இப்பள்ளிகளில் ஏறத்தாழ 3,000 பிள்ளைகள் கல்வி பயில்கின்றனர்.

இம்மாநிலத்தில் தனியார் நிர்வாகங்கள் சுமார் 380 அனாதை இல்லங்களை நடத்தி வருகின்றன. அவற்றில் உள்ள சுமார் 67,000 பிள்ளைகள் மாநில அரசின் நிதியுதவி பெறுகின்றன.

கைத்தொழில் பயிற்சி மையங்கள்.

28. தொடக்கப் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு படிப்பை நிறுத்திவிட்ட, 11—14 வயதுத் தொகுதியிலுள்ள சிறுவர்கட்கு கைத்தொழிற் பயிற்சியளிக்க இம்மாநிலத்தில் 6 மையங்கள் இயங்கி வருகின்றன.

வயது வந்தோருக்கான கல்வி.

29. 1975-76-ல் சில மாவட்டங்களில் "இளைஞர் பணி அணியினருடைய" தொண்டைப் பயன்படுத்திக்கொண்டு முதியோர் கல்வி மையங்களை ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. "வேளாண்மைத் தொழிலோடு இணைந்த எழுத்தறிவிப்புத் திட்டம்" கோயமுத்தூர், தஞ்சாவூர், வேலூர், திண்டிவனம், கோயில்பட்டி ஆகிய கல்வி மாவட்டங்களில், ஒரு கல்வி மாவட்டத்துக்கு முப்பது மையங்களில் மேற்கொள்ளப்படும்.



இளைஞர் நிலையங்கள்.

30. 1973 நவம்பர் முதல் மத்திய அரசுக் கல்வித் துறை "நேரு இளைஞர் நிலையங்கள்" நான்கினை தமிழ் நாட்டில் திறந்துள்ளது. இவை கடலூர், வேலூர், சேலம், திருச்சிராப்பள்ளி ஆகிய இடங்களில் செயல்பட்டு வருகின்றன. இவை இளைஞர்கட்குப் பொதுக் கல்வி புகட்டி அவர்களிடையே அறிவியல் மனப்பான்மை வளரச் செய்யும்; பாட்டு, நாடகம் முதலிய கலைத்திறன்களை வளர்க்க உதவும்; போட்டிப் பந்தயங்களையும் உடற்பயிற்சிகளையும் ஊக்குவித்து நடத்தும். விரைவில் இன்னுமொரு இளைஞர் நிலையம் மதுரையில் அமைக்கப்படும்.

விளையாட்டுக்களும், உடற்பயிற்சிக் கல்வியும்.

31. அனைத்துப் பள்ளிகளிலும் உடற் பயிற்சிக் கல்வி கட்டாயமாகும். மாநில விளையாட்டுக் கழகமும் மாவட்ட விளையாட்டுக் கழகங்களும் பள்ளி மாணவரிடைமட்டுமின்றி பொது மக்களிடையேயும் போட்டிகளையும், விளையாட்டுக்களையும் பரப்புவதில் பெரும்பங்கு ஆற்றி வருகின்றன. இதுவரை எட்டு மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன.

சாரணர், சாரணியர் இயக்கங்கள்.

32. தமிழ் நாட்டுச் சாரணர் கழகம் மொத்தம் 73,504 சாரணர்களையும், சாரணியர்களையும் கொண்டுள்ளது. 1974-75-ல் ரூ. 1,13,000 செலவில் மேலும் 14,000 மாணவர்களுக்கு விரிவாக்கப்பட்டது. மாணவனுக்கு ரூ. 40 வீதம் 5,000 மாணவர்கட்கு இலவசச் சீருடை வழங்க ரூ. 2,00,000 அனுமதிக்கப்பட்டது. 1975-76-ம் ஆண்டில் ரூபாய் 60,000 செலவில் மேலும் 7,000 மாணவர்கள் சாரணர்களாகச் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

(ஙு) ஆசிரியர்கள் நலன்.

33. தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்போது ஏறத்தாழ இரண்டரை இலட்சம் ஆசிரியர்கள் பணியாற்றி வருகின்றனர். நிர்வாக வாரியாக ஆசிரியர்கள் விவரங்கள் வருமாறு :—

| பள்ளிகள். | | ஆசிரியர்கள். | ஆசிரியைகள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளிகள் | .. | 69,692 | 40,825 | 110,517 |
| உயர்தொடக்கப் பள்ளிகள் | | 37,037 | 31,212 | 68,249 |
| உயர் நிலைப் பள்ளிகள் | .. | 47,350 | 22,104 | 69,454 |
| மொத்தம் | .. | 1,54,079 | 94,141 | 2,48,220 |

மேலுள்ள 4-வது பத்தியின் எண்ணிக்கை நிர்வாகவாரியாக வருமாறு:—

| பள்ளிகள். | அரசு. | அரசு (கழகம்). | ஊராட்சி ஒன்றியம். |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் | 7,482 | .. | 63,894 |
| உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். | 3,370 | .. | 28,746 |
| உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள். | 6,773 | 30,200 | .. |
| மொத்தம் .. | 17,625 | 30,200 | 92,640 |

| | நகராட்சி. | தனியார் பள்ளி. | மொத்தம். |
|---|---|---|---|
| | (5) | (6) | (7) |
| தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். | 9,870 | 29,271 | 1,10,517 |
| உயர்தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள். | 6,779 | 29,352 | 68,249 |
| உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள். | 4,260 | 28,223 | 69,454 |
| மொத்தம் .. | 20,909 | 86,846 | 2,48,220 |

34. வேறு பல மாநிலங்களைப் போல அல்லாமல், தமிழ் நாட்டில் தனியார் பள்ளி ஆசிரியர்களின் ஊதியச் செலவு முழுவதையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது. இம் மாநிலத்திலுள்ள அனைத்துப் பள்ளி ஆசிரியர்கட்கும் வழங்கும் ஊதியத்தால் ஏற்படும் செலவு 1970-71-ல் ரூ. 55 கோடியாக இருந்தது, 1975-76-ல் சுமார் ரூ. 85 கோடியாக உயரும்.

35. 1974-ஆம் ஆண்டு குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற்ற "தமிழ் நாடு ஏற்பளிக்கப்பட்ட தனியார் பள்ளிகள் (ஒழுங்குபடுத்தும்) சட்டமும்" அதன் கீழ் செய்யப்பட்ட விதிகளும் 1974 டிசம்பர் முதல் நாள் முதல் நடைமுறைக்கு வந்துள்ளன. அவை தனியார் பள்ளி ஆசிரியர் பணி நிலைமைகளுக்கு சட்டப்படி பாதுகாப்பு தருவதோடு, நிர்வாகத்தினர் பள்ளிகளைச் செவ்விய முறையில் நடத்திட ஊக்கமும் அளிக்கும்.



தேர்வுத் தரப் பதவிகள்.

36. பிற துறைகளில் பணியாற்றுகிறவர்களோடு ஒப்பிடும்போது பள்ளி ஆசிரியர்கட்குப் பதவி உயர்வு வாய்ப்பு குறைவு. எனவே உயர்நிலைப் பள்ளிகளில் பத்து ஆண்டுப் பணியினை முடித்த பட்டதாரி ஆசிரியர்கட்கும் முதல் நிலைத் தமிழாசிரியர்கட்கும், பி.டி. தரத்தைச் சார்ந்த பிற சிறப்பு ஆசிரியர்கட்கும் தேர்வு நிலைப் பதவிகளைத் தரும் ஆணை 1—4—1973 முதல் செயலாக்கப்பட்டது. அதன் பிறகு அக்கொள்கையை விரிவுபடுத்தி, எல்லா வகை நிர்வாகங்களின் கீழும் எல்லா வகையான பள்ளிகளிலும் பணியாற்றும் உயர் தொடக்க நிலை—இடை நிலை ஆசிரியர்களும் பத்து ஆண்டுகள் பணியினை முடித்தால் தேர்வு நிலை தரவேண்டும் என்ற ஆணை 1—4—1974 முதல் செயலாக்கப்பட்டுள்ளது.

தமிழாசிரியர்கள்.

37. 1974 சனவரி முதல் நாளுக்குப்பின் செய்யப்படும் தமிழாசிரியர் நியமனங்கள் அனைத்தும் முதனிலைத் தமிழாசிரியர் பதவிகளாக மட்டுமே செய்யவேண்டுமென ஆணை வெளியிடப்பட்டுள்ளது. முதனிலைத் தமிழாசிரியராக நியமிக்கப்படுவதற்குத் தேவையான தகுதிகள் இருந்தும் இரண்டாம் நிலைப் பதவிகளில் இருந்த தமிழாசிரியர்கள் அனைவரும் 1-1-1974 அன்று முதல், முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக இருப்பவர்கள் அந்தத் தேதிக்குப் பின்னர் முதனிலைத் தமிழாசிரியருக்குரிய தகுதியைப் பெறுவராயின் அந்தத் தகுதியை அடையும் நாள்முதல் முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமனம் பெறுவார்கள். வித்வான் அல்லது புலவர் பட்டத்துடன் தமிழாசிரியர் பயிற்சி அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்று, ஆனால் குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி பெறாமையால் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாக உள்ளவர்களும் 1-1-1974 அன்று பத்து ஆண்டுகள் பணி முடித்திருப்பார்களாயின் அந்நாள் முதலும். அதன் பிறகு பத்து ஆண்டுகள் பணி முடித்தால் பத்தாண்டு முடியும் நாளிலிருந்தும், முதனிலைத் தமிழாசிரியராக நியமனம் பெறுவர். புலவர் அல்லது வித்வான் பட்டம் மட்டும் பெற்று, தமிழாசிரியர் பயிற்சி அல்லது இடைநிலை ஆசிரியர் பயிற்சியும் இல்லாது, இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களாகப் பதவியில் இருப்பவர்களும் 1-1-1974 அன்று 15 ஆண்டுகள் பணி முடித்திருப்பின் அந்நாள் முதலும், அதன் பிறகு 15 ஆண்டுகள் பணி முடித்தால், முடித்த அந்த நாளிலிருந்தும், முதனிலைத் தமிழாசிரியர்களாக நியமனம் பெறுவர் எனவும் ஒரு சிறப்புச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இவற்றால் தமிழாசிரியர்கள் பணி நிலைமை உயர்வதோடு தமிழ்ப் பாடம் பயிற்றும் தரமும் உயருமென நம்பப்படுகிறது.

தனியார் பள்ளி, உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

38. மாநில அரசு ஊழியர்களுக்குப் பொருந்தும் தாராள ஓய்வு ஊதிய விதிகள், தனியார் பள்ளிகளிலும் உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகளிலும் பணியாற்றி 1-6-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளிலிருந்து 1-4-1972

அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வு பெறும் ஆசிரியரல்லாத பிற ஊழியர்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளன. அவ்வூழியர்கள் ஓய்வு ஊதியம், பணிக்கொடை முதலியவற்றை மாநில அரசு ஊழியர்கள் பெறுவதற்கு இணையாகப் பெறுவர். அரசு ஊழியர்கள் ஓய்வு பெற்ற பிறகு, ஓய்வூதியம் பெறுவதற்கான இறுதி ஆணை பிறப்பிக்கப்படுதலில் ஏற்படும் காலத்தாழ்வால் அல்லலுறுமலிருக்க தற்காலிக ஓய்வு ஊதியமும், பணிக்கொடையும் பெற ஏற்கெனவே வழி செய்யப்பட்டுள்ளது. 1974 ஏப்ரலில் இவ்விதி தனியார் பள்ளிகள், உள்ளாட்சி நிறுவனப் பள்ளிகள் ஆகியவற்றிலிருந்து ஓய்வுபெறும் ஆசிரியர்களுக்கும், தனியார் பள்ளிகளில் ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கும் கீழ்க்கண்டவாறு விரிவுபடுத்தப் பட்டுள்ளது :—

(1) ஓய்வூதியம்.—தற்காலிக ஓய்வூதியம் ஓய்வுபெறும் நாளிலிருந்து 12 மாதங்கட்கு வழங்கலாம்.

(2) பணிக்கொடை.—80 விழுக்காடு தற்காலிகப் பணிக்கொடையாக வழங்கலாம். இறுதியான ஓய்வு ஊதியம், பணிக்கொடை ஆகியவற்றை வழங்க அதிகாரமுள்ள மாவட்டக் கல்வி அலுவலர்களே இந்த தற்காலிக ஓய்வு ஊதியத்தையும் பணிக்கொடையையும் வழங்கலாம்.

39. ஈட்டிய விடுப்பைப் பணமாகப் பெறுவதற்குரிய உரிமை உட்பட, மாநில அரசு ஊழியர்கட்கான விடுப்பு உரிமைகள் அனைத்தும் தனியார் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்கட்கும் அளிக்கப்பட்டுள்ளன.

40. மாநில அரசு ஊழியர்கட்கான குடும்ப நலத் திட்டம் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்குத் தானுகவே பொருந்தும். அத்திட்டம் தனியார் பள்ளி, உள்ளாட்சி நிறுவனப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப் பட்டுள்ளது. ஆசிரியர்கள் நலத்திறகான தேசீய அமைப்பின் வசூல் நிதியிலிருந்து 1974-75இல் உதவி பெறுவதற்குத் தகுதி வாய்ந்த ஏறத்தாழ 500 ஆசிரியர்களுக்கு சுமார் இரண்டு லட்சம் நிதியுதவியாக வழங்கப்பட்டது.

41. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், தொடக்கப் பள்ளி ஆசிரியர்கள் இருவருக்கும், மாநில அரசு விருதுகள் தொடர்ந்து வழங்கப்படுகின்றன. மதுரை மாவட்டத்திலுள்ள கோடைக்கானலிலும்; நீலகிரி மாவட்டத்திலுள்ள உதகமண்டலத்திலும் உள்ள ஆசிரியர் இல்லங்கள் ஒவ்வொன்றிற்கும் ரூபாய் ஒரு லட்சம் நிதி உதவி தரப்பட்டது. வேறு சில மாவட்டங்களிலும் ஆசிரியர் இல்லங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

"பி" பிரிவு உயர்நிலைப் பள்ளிகள்.

42. முன்னுள் மாவட்டக் கழகப் பள்ளிகளில் 1-4-1970-க்கு முன் பணியிலிருந்து வந்த ஊழியர்களின் ஊழியம் "தமிழ் நாட்டுக் கல்வித் துறைச் சார்பு நிலை ஊழியம் (பி பிரிவு)" எனப் பெயரிடப்பட்டு தனி ஊழியப் பிரிவாக வைக்கப்பட்டுள்ளது. இரு பிரிவு ஊழியர்களது நலத்தையும் கருதி, அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர் நிலைவரை



தனிப் பிரிவாகவே இது அமைக்கப்பட்டுள்ளது. 1-4-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு "பி" பிரிவு பள்ளிகளில் நியமனம் பெறுகின்ற ஆசிரியர்களும் "ஏ" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களும், "ஏ" பிரிவு ஆசிரியர்களாகத் தனியாக வைக்கப்பட்டு அவர்கள் பணி நிலை "தமிழ்நாட்டுக் கல்வித் துறைச் சார்பு நிலை ஊழிய விதிகளின்படி" ஒழுங்கு செய்யப்படும். 1974 அக்டோபர் முதல் "பி" பிரிவு பள்ளிகளில் பணியாற்றும் ஊழியர்களும் மாநில அரசின் பிற ஊழியர்களைப் போன்றே கருவூலங்களில் ஊதியப்பட்டியல் மூலம் ஊதியம் பெறுகின்றனர். அப்பள்ளிகளின் ஊதியச் செலவும், பிற செலவுகளும் இதுவரை "மாவட்ட இடைநிலைக் கல்வி நிதிக் கணக்கிலிருந்து" அந்தந்த முதன்மைக் கல்வி அலுவலரால் செய்யப்பட்டு வந்தன. அக்கணக்குகள் விரைவில் முடிக்கப்படும். புதிய நடைமுறை இவ்வுயர்நிலைப் பள்ளிகளின் நிருவாகத்தை ஒரே சீராக்கும். மாவட்டக் கல்வி அலுவலர்களின் பதவிகளில் ஏற்படும் நிலையான காலி இடங்களில் 30 விழுக்காடு பதவிகளுக்கு இனிமேல் "பி" பிரிவுப் பள்ளிகளில் அரசிதழ் பதிவு பெற்ற தலைமையாசிரியர்களும் தலைமையாசிரியைகளும் பதவி உயர்வு மூலம் நியமனம் பெறத் தகுதியுடையவராவர். "பி" பிரிவு அரசுப் பள்ளிகளில் 1-4-1970 அன்று அல்லது அதற்குப் பிறகு நியமனம் பெற்ற இடைநிலை ஆசிரியர்கள் அதற்கு இணையான பதவிகளிலுள்ள பிற ஆசிரியர்கள், இரண்டாம் நிலைத் தமிழாசிரியர், பிற சிறப்பு ஆசிரியர்கள் ஆகியோருள்ளும் விதிகளின்படி தேவையான தகுதிகள் பெற்றிருந்து, 21-3-1974 அன்று ஓராண்டு காலப்பணி முடித்திருந்தவர்களுடைய நியமனங்களை முறைப்படுத்துமாறு பள்ளிக் கல்வி இயக்குநருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## IV. கல்லூரிக் கல்வி.

இம்மாநிலத்தில் 1947-ம் ஆண்டு 24 ஆகவும், 1961-ல் 59 ஆகவும் 1966-67-ல் 105 ஆகவும் இருந்த கலை, அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974-75-ல் 183 ஆக உயர்ந்துள்ளது. கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கை 1947, 1961 மற்றும் 1966-67 ஆகிய ஆண்டுகளில் முறையே 17,000, 45,000 மற்றும் 94,000 என வளர்ந்து 1974-75-ம் ஆண்டில் 2 இலட்சமாக உயர்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் கடந்த சில ஆண்டுகளில் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) எழுதிய மாணவர்கள், அத் தேர்வில் தேர்ச்சி அடைந்த மாணவர்கள், இம்மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களைச் சார்ந்

துள்ள கல்லூரிகளில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை பற்றிய விவரம் பின்வருமாறு :—

| ஆண்டு. | பள்ளி இறுதித் தேர்வு எழுதிய மாணவர்கள். | பள்ளி இறுதித் தேர்வில் தேறிய மாணவர்கள். | கல்வி யாண்டு. | கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் சேர்ந்த மாணவர்கள். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| ஏப்ரல் 1968 .. | 1,96,272 | 98,181 | 1968-69 | 60,000 |
| அக்டோபர் 1968. | 57,374 | 11,004 | .... | .... |
| ஏப்ரல் 1969 .. | 1,82,829 | 91,794 | 1969-70 | 66,000 |
| அக்டோபர் 1969. | 34,408 | 8,326 | .... | .... |
| மார்ச் 1970 .. | 1,91,853 | 1,03,974 | 1970-71 | 70,000 |
| அக்டோபர் 1970. | 33,572 | 8,192 | .... | .... |
| ஏப்ரல் 1971 .. | 1,93,059 | 1,11,823 | 1971-72 | 76,814 |
| அக்டோபர் 1971. | 25,445 | 6,674 | .... | .... |
| மார்ச் 1972 .. | 2,01,950 | 1,19,122 | 1972-73 | 80,506 |
| அக்டோபர் 1972. | 37,570 | 6,726 | .... | .... |
| மார்ச் 1973 .. | 1,73,686 | 96,903 | 1973-74 | 72,646 |
| அக்டோபர் 1973. | 30,361 | 5,367 | .... | .... |
| மார்ச் 1974 .. | 2,21,402 | 1,12,358 | 1974-75 | 78,625 |
| அக்டோபர் 1974. | 28,104 | 5,482 | .... | .... |
| மார்ச் 1975 .. | 2,30,000 (தோராயமாக) | .. | 1975-76 | .... |

2. நான்காவது திட்டக் காலத்தில் புதிதாக 40 கல்லூரிகளை தொடங்கத் திட்டமிட்டிருப்பினும் அந்த ஐந்து ஆண்டுகளில் 56 கல்லூரிகள் திறக்கப்பட்டன. 1974-75-ம் ஆண்டில் 5 கல்லூரிகள் திறக்கப்பட்டன. இப்பொழுது மொத்தம் உள்ளவை 183 கல்லூரிகள். இம்மா



நிலத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் தேவை ஏறத்தாழ முழுமையாக நிறைவேற்றப்பட்டு விட்டது எனலாம். சில குறிப்பிட்ட நகர்ப்புற கல்லூரிகளில் சேருவதற்கே மாணவர்கள் நெருக்கி முன் வருகின்றனர். ஆனால் கிராமப் பகுதிகளிலுள்ள கல்லூரிகளில் இப்போதே பல இடங்கள் காலியாக இருந்து வருகின்றன. எனவே, புதிய கல்லூரிகளைத் தொடங்க நாம் அனுமதிக்கு முன்னர், தற்போதுள்ள கல்லூரிகளில் உள்ள இடங்கள் அனைத்தையும் நிரப்ப வேண்டியது விரும்பத் தக்கதாகும். தற்போதுள்ள கல்லூரிகளின் எண்ணிக்கையை பெருக்குவதற்குப் பதிலாக கல்லூரிக் கல்வியின் தரத்தை மேம்படுத்த முழுக் கவனத்தைச் செலுத்துவதே சிறந்ததாகும். கல்லூரிக் கல்விக்காகச் செலவு செய்யப்பட்ட தொகை 1967-68-ம் ஆண்டில் ரூபாய் 3.21 கோடியாகவிருந்து 1975-76-ம் ஆண்டில் ரூபாய் 11 கோடியாக (கல்லூரிக் கட்டடச் செலவு உட்பட) உயர்ந்துள்ளது.

3. நமது மாநிலத்தில் தற்போதுள்ள 183 கல்லூரிகளில் 106 கல்லூரிகள் சென்னை பல்கலைக் கழகத்துடனும் 77 கல்லூரிகள் மதுரைப் பல்கலைக் கழகத்துடனும் இணைந்துள்ளன. ஒரு பல்கலைக் கழகத்துடன் இணைந்துள்ள கல்லூரிகள் எண்ணிக்கை 30 அல்லது 40-க்கு மேல் அதிகமாக இருத்தல் கூடாது என்ற கஜேந்திரகட்கர் குழுவின் பரிந்துரையின்படி தமிழ்நாட்டில் மேலும் ஒன்று அல்லது இரண்டு பல்கலைக் கழகங்களைத் துவக்குவதற்கு நியாயம் உண்டு. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் புதிய பல்கலைக்கழகம் ஒன்று தொடங்க வகை செய்யப்பட்டுள்ளது.

4. தற்போதுள்ள 183 கல்லூரிகளில், 51 கல்லூரிகள் அரசால் நேரடியாக நடத்தப்படுகின்றன. ஏனைய 132 கல்லூரிகள் மானியம் பெறும் தனியார் கல்லூரிகளாகும். 1966-67-ம் ஆண்டில் 78 ஆக இருந்த தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை 1974-75-ம் ஆண்டில் 132 ஆக உயர்ந்துள்ளது. 1975-76-ம் ஆண்டில் கல்லூரிக் கல்விக்கான மொத்த செலவுத் தொகையான ரூபாய் 11 கோடியில் தனியார் கல்லூரிகளுக்கு மட்டும் சுமார் ரூபாய் 4 கோடி மானியமாக வழங்கப்படும்.

5. கல்லூரிகளில் பயிலும் மாணவர்களில் பெரும்பான்மையானவர்கள் மானிய உதவி பெறும் தனியார் கல்லூரிகளில்தான் பயின்று வருகிறார்கள் என்பதைக் கீழ்க்கண்ட விவரங்களிலிருந்து அறியலாம் :—

| ஆண்டு. | அரசினர் கல்லூரி. | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | மானியம் பெறும் தனியார் கல்லூரிகள். | மாணவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்.) | மொத்தம் மாணவர் எண்ணிக்கை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1969-70 | 39 | 0.34 | 101 | 1.19 | 1.53 |
| 1974-75 | 51 | 0.54 | 132 | 1.47 | 2.01 |

அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கை தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கையில் பாதியைவிடக் குறைவு. அவற்றில் பயிலும் மாணவர் எண்ணிக்கையும் அப்படியே. எனினும் அரசாங்கக் கோட்பாடான "சமூக நீதியை' செயல் படுத்துவதில் அரசுக் கல்லூரிகளுக்கு முக்கிய பங்கு உண்டு. தனியார் கல்லூரிகளில் ஆகும் அதிகக் கல்விச் செலவை ஏற்க இயலாதவர்களும், சமுதாயத்தில் சமூகம், பொருளாதாரம், கல்வி ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சார்ந்தவர்களும், ஆன மாணவர்களுக்கு அரசுக் கல்லூரிகள் குறைந்த கட்டணத்தில் நல்ல கல்வியை அளிக்கின்றன.

6. இம்மாநிலத்தில் அரசுக் கல்லூரி மாணவர் ஒருவரிடமிருந்து கட்டணம் மூலம் கிடைக்கும் வருவாய், செலவைவிட மிகக் குறைவாகவே உள்ளது என்பதைப் பின்வரும் புள்ளி விவரம் காட்டும். அரசு அவர்களுக்கு எந்த அளவிற்கு உதவித் தொகை அளிக்கிறது என்பது இதிலிருந்து தெளிவாகும்.

| | கல்லூரி புகுமுக வகுப்பு. | | பட்ட வகுப்பு. | | பட்ட மேற்படிப்பு. | |
|---|---|---|---|---|---|---|
| | கலை. | அறிவியல். | கலை. | அறிவியல். | கலை. | அறிவியல். |
| ஆண்டொன்றுக்கு ஒரு மாணவருக்கு ஆகும் செலவு (ரூபாய்). | 380 | 500 | 410 | 600 | 775 | 1,120 |
| ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு மாணவரும் தரும் கட்டணம் (ரூபாய்). | .. | .. | 183 | 183 | அரசுக் கல்லூரிகளில் ரூ. 250. தனியார் கல்லூரிகளில் ரூ. 300–லிருந்து ரூ. 360 வரை. | |

7. ஐந்தாவது திட்டக்காலத்தில் கல்லூரிக் கல்வியின் தரத்தை உயர்த்துவதே அரசுக் கல்லூரிகளின் முக்கிய நோக்கமாகும். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி, இராணி மேரி கல்லூரி ஆகிய இரு முதன்மையான கல்லூரிகளும் பட்ட மேற்படிப்பு நிலையில் குறிப்பிட்ட பாடத் துறைகளில் சிறப்புக் கல்வி தரும் நிலையங்களாக மேம்படுத்தப்படுகின்றன. அறிவியல் கல்வியை வளர்த்திட அரசுக் கல்லூரிகளில் ஆய்வகக் கூட வசதி பெருக்கப்படும். இதற்காக 1974–75 ஆம் ஆண்டில் ரூ. 3.50 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1975–76 ஆம் ஆண்டிற்கும் ரூ. 4 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதிக விலையுள்ள பாடப் புத்தகங்களை வாங்க இயலாதவர்கள் பயன்படுத்துவதற்காக அரசுக் கல்லூரிகளில், தமிழ்ப் பாடப்புத்தகங்கள் உட்பட, அனைத்துப் பாடப் புத்தகங்களும், பொது அறிவிறகான் புத்தகங்களும் சேமித்து வைத்து வழங்கிட 1974–75 ஆம் ஆண்டில் ரூபாய்



ஒரு இலட்சம் செலவிடப்பட்டது. அரசுக் கல்லூரி மாணவர்களின் வசதிக்காக உணவருந்தும் இடம், மிதி வண்டி நிறுத்துமிடம், சிற்றுண்டிச் சாலைகள் ஆகியவற்றை அமைக்க 1974–75-ல் ரூ. 3.35 இலட்சங்களும், 1975–76-ல் ரூ. 3.50 இலட்சங்களும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. கல்லூரிகளில் மாணவர்களின் விளையாட்டுத் திறனை வளர்த்திட, விளையாட்டுத் திடல்களைப் பேணிச் சீர்படுத்துவதற்காகவும் விளையாட்டுச் சாதனங்கள் வாங்குவதற்காகவும் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

8. அரசுக் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பிட்ட துறைகளில் ஆராய்ச்சி செய்து பி.எச்.டி. பட்டம் பெறுவதற்காக பேராசிரியர்கள் அனுப்பப்படுகின்றனர். நிரந்தரமாகப் பணிபுரியும் பேராசிரியர்களைத் தவிர வெளியிலிருந்தும் சில பேராசிரியர்கள் விரிவுரையாற்ற அழைக்கப்படுகின்றனர். சில கல்லூரிகள் நகரிலிருந்து தொலைவில் அமைந்துள்ளதால் அக்கல்லூரி ஆசிரியர்கள் குடியிருப்பு வசதிப் பிரச்னையைத் தீர்க்கும் வகையில் பணியாளர் குடியிருப்பு இல்லங்கள் அந்தந்த கல்லூரி வளைவிற்குள்ளேயே அமைக்கப்பட்டு வருகின்றன. தமிழ் மொழி வாயிலாகக் கல்வி பயிற்றும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புகளும் நடத்தப்பட்டு வருகின்றன. சமீப காலமாக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 2 இலட்சம் இதற்காகச் செலவிடப்பட்டு வருகின்றது.

9. தொடர் கல்வி அளிப்பதில் மாலை நேரக் கல்லூரி வகுப்புகளும் அஞ்சல் முறைப்பாடப்பயிற்சிகளும் பயனுள்ள பணி செய்கின்றன. 1974–75 ஆம் ஆண்டில் மாலை நேரப் புகுமுக வகுப்புகள் அரசுக் கல்லூரிகள் நான்கிலும் மாலை நேரப் பட்டப்படிப்பு வகுப்புகள் அரசுக் கல்லூரிகள் மூன்றிலும் புதிதாகத் துவக்கப்பட்டன. 1974–75 ஆம் ஆண்டு மாலை நேர வகுப்புகள் மொத்தம் 44 கல்லூரிகளில் நடத்தப்பட்டன. ஏறத்தாழ 8,000 மாணவர்கள் அவற்றில் கல்வி பயின்றனர். அஞ்சல் முறைப்பாடப் பயிற்சி மூலமாக இளங்கலை (பி.ஏ.) பட்டப் படிப்பினை மதுரைப் பல்கலைக் கழகம் துவக்கியுள்ளது. அதனை மாணவர்கள் ஆர்வத்துடன் பயன்படுத்துகின்றனர். இத் திட்டம் வந்த பின்னர் மாலை நேரக் கல்லூரிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

## கல்லூரி ஆசிரியர்களின் தகுதி வளர்ச்சி.

10. கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய வீதங்களில் கணிசமான உயர்வுக்கு இரண்டாவது சம்பள ஆணைக் குழு வகை செய்துள்ளது. சிறந்த தகுதியுள்ளவர்கள் ஆசிரியர் தொழிலில் சேர முன்வருவதற்கு இது தூண்டுகோலாக உள்ளது. இது தவிர சாதாரணப் பேராசிரியர்களைவிட உயர்ந்த சம்பள வீதத்தில் அரசுக் கல்லூரிகளில் முதல் நிலைப் பேராசிரியர் பதவிகள் 29 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் 50 விழுக்காடு பதவிகளுக்குத் தற்போதுள்ள பேராசிரியர்கள் பதவி உயர்வு கொடுத்து நியமிக்கப்படுவர். மீதி 50 விழுக்காடு பதவிகள், டாக்டர் பட்டம் பெற்றவர்களிடையே இருந்து நேரடித் தேர்வு நடத்தி நிரப்பப்படும். ஏற்கனவே பணியாற்றும் பேராசிரியர்களை முதல் நிலைப் பேராசிரியர்களாகப் பதவி உயர்வு கொடுக்கும்போது டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு முன்னுரிமை

அளிக்கப்படும். ஏற்கெனவே பணியாற்றும் பேராசிரியர்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு மாதந்தோறும் நூறு ரூபாய் சிறப்பு ஊதியம் கொடுக்கப்படுகிறது.

## படிப்பு உதவித் தொகைகளும், பயிற்சி உதவித் தொகைகளும்.

11. கல்லூரிப் புகுமுகப் படிப்பு அளவில் இலவசக் கல்வி அளிக்கும் ஒரு சில மாநிலங்களில் தமிழ்நாடும் ஒன்றாகும். இத் திட்டத்தினால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூபாய் இரண்டு கோடி செலவாகிறது. இதைத் தவிர 1971–72-ம் ஆண்டு முதல், அரசு மற்றும் தனியார் கல்லூரிகளில் பி.ஏ., பி. எஸ்ஸி. வகுப்புகளில் தமிழ் மூலம் கல்வி பயிலும் மாணவர்கள் ஆண்டொன்றுக்கு ரூ. 180 பயிற்சி உதவித் தொகையும், புகுமுக வகுப்பில் தமிழ் மூலம் பயிலும் மாணவர்கள் ஆண்டுக்கு ரூ. 50 புத்தகப் படியும் பெற்று வருகிறார்கள். இத் திட்டத்தினால் ஒவ்வொரு ஆண்டிலும் அரசுக்கு சுமார் ரூ. 40 இலட்சம் செலவாகிறது. அரசுக் கல்லூரிகளிலும் தனியார் கல்லூரிகளிலும் தமிழைப் பயிற்று மொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை 1974–75-ல் புகுமுக வகுப்பில் 19,542, பட்டப் படிப்பில் 15,839 ஆகும்.

12. வேறு பல திட்டங்களின் கீழும் படிப்புதவித் தொகைகளும் பயிற்சி உதவித் தொகைகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முக்கியமானவை வருமாறு :—

| திட்டம். | மொத்தம் படிப்புதவித் தொகைகள் எண்ணிக்கை. புதியவையும், புதுப்பிக்கப் பட்டவையும். 1973–74. | 1974–75. |
|---|---|---|
| தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டம். | 2,480 | 2,450 |
| ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தேசியப் படிப்புதவித் தொகை. | 264 | 219 |
| தேசியக் கடன்-படிப்பு உதவித் தொகைத் திட்டம். | 5,284 | 2,942 |

தேசியப் படிப்பு உதவித் தொகைத் திட்டத்தின் கீழும் ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கான படிப்புதவித் தொகைத் திட்டத்தின் கீழும், தற்போது ஆகும் அளவுக்குச் செலவை 1974–75 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ந்து செய்து வரும் பொறுப்பை மாநில அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும், அந்தச் செலவுக்கு மேலாகக் கூடுதல் படிப்புதவித் தொகைகள் ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவை மட்டுமே மைய அரசு ஏற்கும் என்றும், மைய அரசு தெரிவித்துள்ளது. இம் முடிவை மறு ஆய்வு செய்து, முன் போலவே முழுச் செலவையும் மைய அரசு தொடர்ந்து ஏற்றுவர வேண்டுமென அவ்வரசிடம் கோரப்பட்டுள்ளது.



உடல் ஊனமுற்றோர், பாதுகாப்புப் படையினரின் குழந்தைகள், பர்மா, இலங்கை அகதிகளின் குழந்தைகள் ஆகியோருக்கான படிப்பு உதவித் திட்டங்களும் செயல்பட்டு வருகின்றன. அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களும், அரிசன நலத் துறை, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை ஆகிய துறைகளிலிருந்து படிப்புதவித் தொகைகள் பெற்று வருகின்றனர்.

13. படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றிற்கு மட்டும் 1975–76 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு சுமார் ரூபாய் ஒரு கோடியாகும்.

## தமிழ் மொழியில் கல்லூரிப் பாட நூல்கள்.

14. தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் தமிழைப் பாடமொழியாகக் கொண்டுள்ள கல்லூரி மாணவர்களுக்காக இது வரையில் 650 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. இந்த 650 புத்தகங்களில் 490 மூலநூல்களாகும். 160 மொழி பெயர்ப்புகளாகும். இந்த வெளியீடுகளில் பலவற்றைப் பாட நூல்களாகவும், குறிப்புப் புத்தகங்களாகவும் மாணவர்கள் பயன்படுத்திடப் பல்கலைக் கழகங்கள் பரிவுரை செய்துள்ளன. தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம், மானிடவியல் முதல் அணுசக்தி அறிவியல் வரை அனைத்துப் பொருள்களையும் பற்றி மேலும் 250 புத்தகங்களை வெளியிடுவதற்கு ஏற்பாடு செய்துள்ளது.

## தேசிய மாணவர் படை.

15. தமிழ்நாடு தேசிய மாணவர் படை 1975 சனவரியில் தேசிய மாணவர் படை விருதைத் தொடர்ந்து நான்காவது முறையாகப் பெற்று வாகை சூடி வந்துள்ளது. தேசிய மாணவர் படையில் தற்போது 52 முதுநிலைப் பிரிவுகளும் (32,000 மாணவ-மாணவியர்), 735 இளநிலைப் பிரிவுகளும் (72,000 மாணவ-மாணவியர்) உள்ளன. இவற்றில் மாணவியர் முதுநிலைப் பிரிவுகள் ஐந்தும் (3,000 மாணவியர்), இளநிலைப் பிரிவுகள் 57-ம் (5,700 மாணவியர்) அடங்கும். தேசிய மாணவர் படைக்கு 1975–76 ஆம் ஆண்டில் மாநில அரசு செலவிடவிருக்கும் தொகை சுமார் ரூ. 95 இலட்சமாகும்.

## தேசியப் பணித் திட்டம்.

16. கல்லூரி மாணவர்கள் நாட்டின் பணியில், குறிப்பாக கல்விப் பணியில், தங்கள் ஓய்வு நேரத்தைச் செலவிட வாய்ப்பு அளிக்கும் நோக்குடன் தேசியப் பணிப் படைத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. இத்

திட்டத்தைச் செயல்படுத்துகிற பல்கலைக் கழகங்கள், ஆண்டொன்றுக்கு மாணவர் ஒருவருக்கு ரூ. 120 என்ற வீதத்தில் மானியம் பெறுகின்றன. இதில் ரூ. 70-ஐ இந்திய அரசும், ரூ. 50-ஐ மாநில அரசும் கொடுக்கின்றன. அண்மை ஆண்டுகளில் சராசரியாக ஒவ்வோர் ஆண்டும் சுமார் 8 இலட்சம் ரூபாய் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. விருப்பமுள்ள கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் இத் திட்டத்தில் பங்கு கொள்கின்றனர். 1974-75 ஆம் ஆண்டில் 8,000 மாணவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்றனர். 1975-76 ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் எண்ணிக்கை 12,000 ஆக உயரும்.

## சட்டக் கல்லூரிகள்.

17. சட்டக் கல்லூரி மாணவர்களின் எண்ணிக்கை 1968-69-ல் 1,045 ஆக இருந்து 1974-75-ல் சுமார் 2,647 ஆக (முறையான பட்டப்படிப்பு வகுப்புகளில் 1,830, மாலை நேரப் பட்டப் படிப்பு வகுப்புகளில் 703, எம்.எல். வகுப்புகளில் 114) உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவு செய்யும்பொருட்டு, மாலை நேர வகுப்புகள் 1966-67-ல் தொடங்கப்பட்டன. மாலை நேரக் கல்லூரி மாணவர்களுக்கான பட்ட மேற்படிப்பு வகுப்புகளும் (எம்.எல்.) 1969-70-ல் தொடங்கப்பட்டன.

1974-75 ஆம் ஆண்டில் மதுரையில் புதிய சட்டக் கல்லூரி திறக்கப்பட்டு 320 மாணவர்கள் முதல் ஆண்டு சட்ட வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.

## V. தொழில் நுட்பக் கல்வி.

1. தொழில் நுட்பக் கல்விக்காக 1974-75-ல் ரூ. 462 இலட்சங்கள் (தொழில் நுட்பக் கல்வி நிலையக் கட்டடச் செலவு போன்றவை உட்பட) ஒதுக்கப்பட்டுள்ளன. இத் துறையின் கீழ் 7 பொறியியற் கல்லூரிகளும், 38 பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் (மூன்று மகளிர் பயிலகங்களும் எட்டு தனித் தொழில் டிப்ளமோக் கல்வியகங்களும் உள்பட), 14 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இன்றைய நிலையில் பட்டப்படிப்புக்காக பொறியியல் கல்லூரிகளில் 1,300 மாணவர்களும், டிப்ளொமாப் படிப்பிற்காகப் பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் 4,800 மாணவர்களும், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகளில் 840 மாணவர்களும் ஆண்டுதோறும் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். மேற்சொன்ன எழு பொறியியற் கல்லூரிகள் தவிர இந்த மாநிலத்தில் கிண்டியிலுள்ள அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி, இந்தியத் தொழில் நுட்பக் கல்வியகம், சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப் பள்ளியில் உள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி ஆகிய ஐந்து பொறியியற் கல்லூரிகளும் உள்ளன. அவை பல்கலைக் கழகப் பிரிவுகளாக இயங்குபவை, அல்லது தன்னுரிமையுள்ளவை ஆகும்.

2. நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத் தொடக்கத்திலிருந்தே தொழில் நுட்பக் கல்விக்காக இருக்கின்ற வசதிகளைச் சீர்செய்து



ஒருமுகப் படுத்துவதிலும், தரத்தை மேம்படுத்துவதிலும்தான் அதிக கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை ஏற்படுத்தவும், தொழில் நிறுவனங்களில் புதிதாகத் தோன்றும் துறைகளிலும், பிரிவுகளிலும் எந்தெந்தப் பயிற்சிகளைப் பெற்றவர்கள் தேவைப்படுகிறார்களோ அந்தந்தப் பயிற்சிகளை அளிக்கவும் தொழில் சம்பந்தப்பட்ட பல புதிய பாடத்திட்டங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன.

## பொறியியல் கல்லூரிகள்.

3. புதிய பல பாடங்களைத் தொடங்கும் திட்டத்தின் கீழ் கிண்டி பொறியியல் கல்லூரியில் "செயல் வகையாய்வு" (Operations Research) என்ற துறையில் பட்ட மேற்படிப்பு டிப்ளோமா வகுப்பு தொடங்கப்படும். அக் கல்லூரியிலே ஆற்றல் மின்னணுவியல் (Power Electronics) என்ற புதிய துறையும் துவக்கப்படவிருக்கிறது.

## பல் தொழில் நுட்பப் பயிலகங்களும் டிப்ளோமா வழங்கும் மற்ற பயிலகங்களும்.

4. பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்படும். சென்னையிலுள்ள மையப் பல் தொழில் நுட்பப் பயிலகத்தில் தொலைப்படப் பொறியியல் டிப்ளொமா மேற்படிப்புத் திட்டம் துவக்கப்படும்.. திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசுப் பல் தொழில் நுட்பப் பயிலகத்தில், மகளிர் பயிலுவதற்காக, மின் அணுவியல் துறையில் ஒரு டிப்ளொமா படிப்பு ஆரம்பிக்கப்படும். மாநிலத்தில் ஏற்கெனவேயுள்ள மகளிர் பயிலகங்களிலுள்ள வசதிகளோடு மேற்சொன்ன ஆண்கள் பயிலகத்திலும் இவ்வாறு மகளிர்க்கான படிப்புத் திட்டங்களைத் தொடங்குவது மகளிர்க்கான வசதிகளை நிறைவாக்கும். சென்னையிலுள்ள மையப் பல் தொழில் நுட்பப் பயிலகத்தில் இப்போதுள்ள "மீன் தொழில் நுட்பம்—கப்பலியக்குமுறை" ஆகிய படிப்பு வேலையிடைக் கல்வி (Sandwich) முறைக்கு மாற்றப்படும். தோல் பதனிடுபவருக்கேற்ற ஒரு தொழிற் படிப்புத் திட்டம் சென்னை, தோல் தொழில் நுட்பப் பயிலகத்தில் தொடங்கப் பட்டுள்ளது. நுண் அலைத் தொடர்பு (Michrowave Communication) என்ற விருப்பப் படிப்பு சென்னையிலுள்ள மகளிர் பல்தொழில் நுட்பப் பயிலகத்தில் துவக்கப்படும். மாமல்லபுரத்திலுள்ள சிற்பப் பயிற்சி நிலையமும், சென்னையிலுள்ள கலைத் தொழில் நுணுக்கக் கல்லூரியும் 1973 ஆகஸ்ட் திங்கள் 1-ம் தேதியிலிருந்து தொழில் நுட்பக் கல்வி இயக்குநரின் கீழ் வந்துள்ளன. அந்தச் சிறப்புப் பயிற்சி நிலையத்தில் இப்பொழுது இருக்கும், "கட்டடம் மற்றும் சிற்பக் கலை"க்கான டிப்ளோமாப் படிப்பு சீர்திருத்தி அமைக்கப்படும். அது டிப்ளோமா வாங்குவதற்கு முன்னால் இரண்டு வருடப் பாடப் படிப்பும், மூன்றாவது வருடம் அதே பாடத்தில் முறையான டிப்ளோமா படிப்பும் கொண்டதாக அமைக்கப்படும். அந்தக் கலைத் தொழில் நுணுக்கக் கல்லூரியில் புகைப்படக் கலை, கல்லச்சுப் பதிப்புக் கலை, பட அச்சு செய் முறை, புத்தகக்கட்டுக் கலை, சிப்பம் கட்டும் கலை (Photography, Lithography, Block Making, Book Binding, Packaging) ஆகிய புதிய பாடங்கள் தொடங்கப்படும்.

5. கல்வியாண்டு 1974-75-லிருந்து திருச்சிராப்பள்ளியிலுள்ள அரசினர் தொழில் நுட்பப் பயிலகத்திலும், பொள்ளாச்சியிலுள்ள நாச்சிமுத்து தொழில் நுட்பப் பயிலகத்திலும், புகுமுகத் தொழில் நுட்ப வகுப்பில் உள்ள எட்டுப் பாடங்களில் இயல்பியல், பொறியியல் வரைபடம் ஆகிய இரண்டு பாடங்கள் மட்டும் எல்லா மாணவர்களுக்கும் தமிழில் கற்பிக்கப் படுகின்றன. இந்த முயற்சியின் மூலம் மாணவர்கள் இரு மொழியிலும் பயிற்சி பெற்று, படிப்பு முடிந்தபின், வாழ்க்கையை நன்முறையில் நடத்திச் செல்லவும் தமிழையும் ஆங்கிலத்தையும் பயன்படுத்தும் திறன் பெறுவர்.

6. நன்கு வளர்ந்த பல்தொழில் நுட்பப் பயிலகங்கள் தாமே புதுக கல்வித் திட்டங்களை வகுக்கவும், இருக்கும் பாடத் திட்டத்தைச் சீர்திருத்தவும், தொழில் நிறுவனங்களுடன் இணைந்து செயல் புரியவும், தாங்கள் விரும்பியவாறு பயிற்சி அளிக்கவும் கற்பிக்கவும் உரிமைகள் வழங்கலாமென்று தொழில் நுட்பப் பயிலகங்களுக்காக அமைக்கப்பட்ட திரு தாமோதரன் குழுவும், மற்றவர்களும் பரிந்துரை வழங்கியுள்ளனர். இந்த முறை ஒன்றிரண்டு பல்தொழில் நுட்பப் பயிலகங்களில் சோதனையாக செயல்படுத்திப் பார்க்கப்படும்.

7. தொழில் நுட்பக் கல்வி இயக்கமே அனைத்து டிப்ளோமாப் படிப்புகளுக்கும் தேர்வுகளையும் நடத்தி வருகிறது. தேர்வு நடத்தும் முறை ஒழுங்கு ஆகியவை முன்னேற்றம் கண்டு வருகின்றன. 1974-ம் ஆண்டு நவம்பரிலிருந்து சில பாடங்களில் "வினா வங்கி" முறை துவக்கப்பட்டுள்ளது. இந்த முறையினால் வினா வங்கியில் விவரித்த வினாக்களின் உதவியோடு மாணவர்கள் அந்தந்தப் பாடம் முழுவதையும் கற்று அறிந்துகொள்ள இயலும். வினா வங்கியிலிருந்து தான் தேர்வுக்கு வினாக்கள் தேர்ந்தெடுக்கப்படுகின்றன. வினா வங்கியானது அந்தந்தப் பாட ஆசிரியர்க்கும் ஒரு துணை யாகும்.

நல்லதொரு கல்வி வளர வேண்டுமென்றால், இந்தியச் சூழ்நிலைக் கேற்பச் சிறந்த பாடப் புத்தகங்களை மலிவான விலையில் வெளியிட வேண்டும். பல்தொழில் நுட்பப் பயிலகங்களுக்கான பாடப் புத்தகங்களை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## தனியார் பொறியியற் கல்லூரிகளும், தொழில் நுட்பப் பயிலகங்களும்.

8. தனியார் பொறியியல் கல்லூரிகளுக்கும் தொழில் நுட்பப் பயிலகங்களுக்கும் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வரும் மானியத் தொகை படிப்படியாக உயர்ந்து வருகிறது. 1968-69-ல் ரூ.48 இலட்சங்கள் அளிக்கப்பட்டதற்கு மாறாக 1975-76-ல் சுமார் ரூ. 1,09 இலட்சங்கள் மானியத் தொகையாக வழங்கப்படவிருக்கிறது. தனியார் பள்ளி மற்றும் தனியார் கல்லூரி ஆசிரியர்கள் ஏற்கனவே தாராள ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெற்று வருகின்றனர். தனியார் பொறியியற் கல்லூரி மற்றும் தொழில் நுட்பப் பயிலகங்களின் ஆசிரியர்களையும் அவ்விதிகளின்கீழ் கொண்டு வந்து அவர்களுக்கும் ஓய்வூதியம் தர அரசு முடிவெடுத்துள்ளது.



## வெளிப்புலப் பேராசிரியர் திட்டம்

9. மாநிலத்திலுள்ள பல உயர் கல்விக் கூடங்களில், சில சிறப்புப் பாடங்களை நடத்த தேர்ச்சிபெற்ற ஆசிரியர்கள் இல்லாமையால் அதற்கென்று 1973-74-ல் " வெளிப்புலப் பேராசிரியர் திட்டம்" தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயற்படுத்தப்பட்டு வருகிறது.

## வணிகவியல் பாடங்களில் தேர்வு

10. தொழில் நுட்பவியல் இயக்குநரே வணிகவியல் பாடங்களான தட்டெழுத்து, சுருக்கெழுத்து, வரவு-செலவு கணக்கியல், வணிகவியல் பயிற்சி, வணிகப் புவியியல், வங்கியியல் முதலியவற்றில் ஆண்டு தோறும் ஏறத்தாழ ஒரு இலட்சம் மாணவர்களுக்குத் தேர்வு நடத்தும் அதிகாரியுமாவார். மேற்கண்ட பாடத்திட்டங்களும், தேர்வு முறைகளும் செம்மையாக்கப்பட்டுள்ளதோடு, இம்மாநிலத்திலுள்ள ஒப்புதலளிக்கப்பட்ட வணிகவியல் பள்ளிகளில் கல்வி கற்பிக்கும் தரமும் உயர்த்தப்பட்டுள்ளது. ஆங்கிலச் சுருக்கெழுத்தில் இடைநிலைத் தேர்வும், தமிழ்த் தட்டெழுத்தில் மிகு விரைவுத் தேர்வும், புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. கடைசித் தேர்வு முடிந்த நாளிலிருந்து மிகக் குறுகிய காலத்தில், அதாவது ஏறத்தாழ பத்து வாரங்களுக்குள், முடிவுகள் வெளியிடப்படுகின்றன. அதன்பின், 15 நாட்களுக்குள் சான்றிதழ்கள் மாணவர்களுக்கு அனுப்பப்படுகின்றன. தமிழ் சுருக்கெழுத்துத் தேர்வு எழுதும் மாணவர்களுக்காக " தமிழ் சுருக்கெழுத்து அகராதி " ஒன்றினைத் தயாரித்து வெளியிடக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்

11. கடந்த சில ஆண்டுகளாகவே, தமிழகத்தில் ஒரு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் துவக்க முனைப்பான முயற்சிகள் செய்யப்பட்டன. ஒற்றை வகைத் (Unitary type) தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த வேண்டுமென்னும் மாநில அரசுக் கோரிக்கைக்குக் கொள்கையளவில் 1975-ம் ஆண்டு சனவரி திங்கள் 15-ம் நாள் அன்று பல்கலைக் கழக மானியக்குழு இசைந்துள்ளது. கிண்டிப் பொறியியற் கல்லூரியுடன் அதையொட்டியமைந்துள்ள மையத் தொழில் நுட்பப் பயிலகங்களைச் சேர்த்து " அறிவியல், தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் " அமைக்கப்படும். கடந்த 180 ஆண்டுகளாக சிறப்பாகச் செயல்படும் கிண்டிப் பொறியியற் கல்லூரியில் தற்பொழுது ஆண்டுதோறும் 400 மாணவர்கள் நான்கு பொறியியல் துறைகளில் பட்டப் படிப்பிற்கும், 100 மாணவர்கள் பதினைந்து துறைகளில் பட்ட மேற்படிப்பிற்கும் சேர்க்கப்படுகின்றனர். பொதுவியல், இயந்திரவியல், மின்னியல், மின்னணுவியல், இரசாயன நுட்பவியல், தோல் நுட்பவியல், நெசவு நுட்பவியல், மீன் தொழில் நுட்பவியல், தோட்டக்கலை, அச்சியல், வணிகவியல் முதலிய பல்வேறு தொழில் நுட்பவியல்களுக்கான டிப்ளொமாப் படிப்புகளையும் மற்ற வேறு பலவகைப் படிப்புகளையும் மையத் தொழில் நுட்பப் பயிலகங்கள் நடத்தி வருகின்றன. கிண்டிப் பொறியியற் கல்லூரி வளாவின் பரப்பளவு 205 ஏக்கரும், மையத்

தொழில் நுட்பப் பயிலகங்கள் வளைவின் பரப்பு 891 ஏக்கரும் ஆகும், பல்கலைக் கழகம் நிறுவுவதற்கான கட்டடங்களும், தேவையான கருவிகளும் இந்த நிறுவனங்களில் உள்ளன,

12. சென்னைப் பல்கலைக் கழகம் நடத்திவரும் "அழகப்ப செட்டியார் தொழில் நுட்பக் கல்லூரி" இரசாயன நுட்பவியல், தோல் நுட்பவியல், நெசவு நுட்பவியல், கட்டடக் கலை, நகரமைப்பியல் ஆகிய துறைகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்புக் கல்விகளை அளித்து வருசிறது. புதிதாக ஏற்படுத்தப்படவிருக்கும் பல்கலைக் கழகம் இந்தக் கல்லூரியையும் ஏற்று நடத்த வேண்டுமென பல்கலைக் கழக மானியக் குழு, ஒரு நிபந்தனை விதித்துள்ளது, சென்னைப் பல்கலைக் கழகத்திடம் இதற்கான ஒப்புதல் கோரப்பட்டுள்ளது. அந்த ஒப்புதலைப் பெற்று, இந்தப் புதிய தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் கூடிய விரைவில் நிறுவப்படும்.

13. இந்நாட்டு அறிவியல் வல்லுநர்களில் வெளிநாடுகளில் பணிபுரிந்து வருபவர்களையும் அழைத்து அவர்கள் திறனையும் பயன்படுத்த முதலமைச்சர் அறிவித்த திட்டம் தொடர்ந்து செயல்படுகிறது. இத்திட்டத்தின்படி, நம் நாட்டிற்கு விடுப்பில் வரும் அறிவியல் அறிஞர்கள் நமது கல்லூரிகளிலும் ஆய்வகங்களிலும் தகுந்த பணிகளில் மாதந்தோறும் ரூபாய் 1,200 அல்லது ரூபாய் 1,800 சிறப்பூதியத்தில் ஆறு மாதம் அல்லது ஓராண்டுக்கு அமர்த்தப்படுகிறார்கள். தற்பொழுது சில அறிஞர்கள் இத்திட்டத்தில் பணியாற்றுகின்றனர். அடுத்த ஆண்டுகளில் மேலும் பலர் இத்திட்டத்தில் பணியாற்ற வருவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

## கணித அறிவியல் நிறுவனம்

14. நடுவண் அரசு, மாநில அரசுகளின் உதவியோடு தன்னுரிமை பெற்ற அமைப்பாக கணித அறிவியல் நிறுவனம் அடையாறு பகுதியில் செயல்படுகிறது. இந்நிறுவனத்துக்கு மாநில அரசு ஆண்டொன்றுக்கு 3·5 லட்சம் மானியமாக அளிக்கிறது. தற்பொழுது இந்நிறுவனம் அடிப்படைக் கணிதத்திலும், கணிதஞ் சார்ந்த இயல்பியலிலும், உயர்தர ஆய்வுநடத்தி வருகிறது. இந்நிறுவனம் அனைத்திந்தியப் பெருமை அடைந்துள்ளது. அதன் பணிகள் சிறக்கும் வகையில் இந்திய அரசு பெருமளவில் அதற்கு உதவி செய்ய முன் வரும் என எதிர்பார்க்கப்படுசிறது.

## III சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம்.

15. குரோம்பேட்டையிலுள்ள சென்னைத் தொழில் நுட்பக் கல்வியகம் 1949-ம் ஆண்டு தொடங்கப்பட்டது. 1969-70 வரை அது தனியார் பொறியியற் கல்லூரியாக இருந்தது. 1969–70-ம் ஆண்டு முதல் அது தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரைத் தலைவராகக் கொண்ட ஒரு ஆட்சிக் குழுவின் நிருவாகத்தின் கீழ் வந்துள்ளது. முற்றிலும் புதிய துறைகளான வானவூர்திப் பொறியியல், உந்து வண்டிப் பொறியியல், மின்னணுப் பொறியியல், கருவிப் பொறியியல் ஆகிய துறைகளில் இந்நிறுவனம் வகுப்பு நடத்துகிறது. அறிவியல் பட்டதாரிகளே இவ்வகுப்புகளில் சேர்க்கப்படுகின்றனர். வானவூர்திப் பொறியியலிலும், மின்னணுப் பொறியியலிலும் இந்நிறு-



வனம் பட்ட மேற்படிப்பு வகுப்புக்களையும் (சென்னைப் பல்கலைக் கழகத்தோடு இணைந்தவை) நடத்துகிறது. இந்நிறுவனத்தை நடத்த ஆண்டுதோறும் ஆகும் நிகரச் செலவு இப்பொழுது ஏறத்தாழ ரூ. 11 இலட்மாகும். இச்செலவில் மூன்றில் இரண்டு பகுதியை நடுவண் அரசும், மூன்றில் ஒரு பகுதியை மாநில அரசும் ஏற்று வந்தன. இந்த விகிதத்தின்படி செலவுத் தொகையை ஏற்றுக்கொள்ள முதலில் 1974-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடியவே மைய அரசு ஏற்று இருந்ததெனினும், அந்நாளுக்குப் பின்னரும் தொடர்ந்து ஏற்றுவருமாறு மைய அரசு வேண்டப்பட்டுள்ளது. அவ்வரசு இசையும் என நம்பப்படுகிறது.

## வட்டாரப் பொறியியற் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

16. திருச்சிராப்பள்ளியிலுள்ள வட்டாரப் பொறியியற் கல்லூரி, மைய அரசும் மாநில அரசும் இணைந்து நடத்தும் நிறுவனமாக 1964–65-ம் ஆண்டு முதல் தொடங்கப்பட்டது. அது தன்னுரிமையுள்ள நிறுவனமாகும். தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சரே அதன் ஆட்சிக் குழுவின் தலைவராவார். தற்பொழுது அக்கல்லூரியில் பொறியியற் பட்ட வகுப்புகளுக்கு ஆண்டு தோறும் 200 மாணவர்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டு வருகின்றனர். கல்லூரியிலுள்ள இடங்களில் பாதி தமிழ் நாட்டு மாணவர்களைக் கொண்டும், பாதி பிற மாநில மாணவர்களைக் கொண்டும் நிரப்பப்படுகின்றன. கல்லூரியை நடத்த ஆகும் தொடரும் செலவில் பாதியை நடு அரசும், பாதியை மாநில அரசும் ஏற்று வருகின்றன. இதனால் மாநில அரசுக்கு ஆண்டுதோறும் ஆகும் செலவு சுமார் ரூ. 14 இலட்சமாகும்.

## VI கலைப் பணிகள்

### இயல் இசை நாடக மன்றம்

1. தமிழ் நாடு இயல் இசை நாடக மன்றம் அரசின் முழு நிதி உதவியுடன் இயங்கிவரும் தன்னாட்சி உரிமையுள்ள ஒரு தனி நிறுவனமாகும். இம்மன்றம், நடனம், நாடகம், இசை ஆகிய கலைகளை வளர்த்திட அரும்பணிகளைச் செய்து வருகின்றது. இந்திய அரசின் கலாச்சார பரிமாற்றுத் திட்டத்தின்கீழ் வெளி நாடுகளிலிருந்து வரும் கலைக் குழுக்களுக்கு வரவேற்பளிப்பதுடன் சிறந்த நாடகங்களின் ஆக்கத்திற்கு ஊக்கமளித்தும், தமிழ் நாட்டிலிருந்து பிற மாநிலங்களுக்கு கலைக் குழுக்கள் செல்ல ஆதரவளித்தும் வருசின்றது. மேலும் இம்மன்றம், சிறந்த கலைஞர்களுக்கு "கலைமாமணி" என்ற பட்டமளித்துச் சிறப்பிக்கின்றது. 1974–75-ம் ஆண்டு முதல், அத்தகைய சிறந்த கலைஞர்களில் பதின்மருக்கு நபருக்கு ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும் அளிக்கப்படுகிறது.

2. குறவஞ்சி, பாகவதமேளம் முதலிய தமிழ் நாட்டின் பண்டைய கலைகளைப் பாதுகாக்கவும், வளர்க்கவும் இம்மன்றம் திட்டங்கள் வகுத்துள்ளது. இம்மன்றம் இவ்வித பாரம்பரியக் கலைகளின் இயங்கும் கண்காட்சிகளை நடத்தவும் கருதி உள்ளது. இம்மன்றம் பாரம்பரிய இசை, நாடகம் ஆகியவற்றின் ஒலி ஒளிப்பதிவுகளின் சேமிப்பு நிலையம் ஒன்றையும் அமைத்து வருகிறது.

[1975 மார்ச் 20

3. மைய அரசும், மாநில அரசும் இணைந்து பொறுப்பேற்று வந்த ஒரு திட்டத்தின்கீழ் வறுமை நிலையில் உள்ள 259 கலைஞர்கள் ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியம் பெற்று வருகிறார்கள். இத்திட்டத்தின்கீழ் மேலும் அதிகக் கலைஞர்களுக்கு ஓய்வு ஊதியம் அளிக்க மைய அரசு மறுத்து விட்டதால், மேலும் அதிகக் கலைஞர்களுக்கு ஓய்வூதியம் கொடுக்கும் பொறுப்பினை மாநில அரசு தானே ஏற்றுக்கொண்டு தன் சொந்த நிதியிலிருந்து ஓய்வூதியம் வழங்கி வருகிறது. இதற்கான மாநில அரசுத் திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 350 கலைஞர்களுக்கு ஓய்வூதியம் அளிக்கப் பட்டுள்ளது. இத்திட்டம் 1975–76-ம் ஆண்டும் தொடரும். அவ்வாண் டில் மேலும் 75 கலைஞர்கள் பயனடைவார்கள் என எதிர்பார்க்கப்படு கின்றது.

4. ஓவியம் முதலிய நுண் கலைகளைப் பேணி வளர்க்க கல்வி அமைச்ச சரின் தலைமையின் கீழ் தமிழ்நாடு ஓவியம் நுண்கலைக்குழு மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது.

அருங்காட்சியகங்கள்

5. சென்னையிலும், புதுக்கோட்டையிலும் அரசு அருங் காட்சியகங்கள் உள்ளன. இவ்வருங்காட்சியகங்களில் சிறந்த சிற்பங்கள், மரச்செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் முதலியவை உள்ளன. இவை தவிர தொல் பொருளியல், மானிடவியல், இயற்கை அறிவியல் ஆகிய துறைகளைச் சார்ந்த பொருள்களும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன. பொது மக்க களும், ஆராய்ச்சி அறிஞர்களும் இவற்றால் பெரும் பயன் அடைந்து வரு கின்றனர். இவ்வருங்காட்சியகங்கள் பொதுமக்களுக்கான அறிவியல் விரி வுரைகளையும் கண்காட்சிகளையும் நடத்தி வருகின்றன. சென்னை அருங் காட்சியகத்தில் "ஜவகர்லால் நேரு குழந்தைகள் இல்லம்" ஒன்று நிறுவப்பட இருக்கிறது. இந்த இல்லத்தில் குழந்தைகளுக்கான அருங் காட்சியகம் ஒன்றும், பொம்மைகள் அருங் காட்சியகம் ஒன்றும் இடம் பெறும். மேலும் கலை, இசை, நடனம் முதலியவற்றில் சிறு குழந்தை கள் தங்களுக்குள்ள திறமைகளை வளர்த்துக் கொள்ளும் வசதிகளும் அந்த இல்லத்தில் இருக்கும்.

தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி

6. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 230 மாணவர்கள் பயிலு கின்றனர். இதில் 22 தலைசிறந்த இசைவாணர்கள் ஆசிரியர்களாகப் பணி புரிந்து வருகின்றனர். இக்கல்லூரியில் வாய்ப்பாட்டு, கருவி இசை, பரத நாட்டியம் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது. இக்கல்லூரி அனைத் திந்திய அளவில் புகழ் பெற்று விளங்குகின்றது. பிற மாநிலங்கள் பலவற்றிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் மாணவர்கள் இக்கல்லூரி யில் பயின்று வருகின்றனர். இக்கல்லூரி 1974–75-ம் ஆண்டில் தனது வெள்ளி விழாவினைக் கொண்டாடியது.

பொது நூலகங்கள்.

7. நூல் நிலையச் சட்டம் ஒன்றை இயற்றி பொது நூலக இயக்கத் திற்குத் தொடர்ந்து ஆதரவளித்துவரும் இந்திய மாநிலங்கள் சிலவற்றில் தமிழ்நாடும் ஒன்றாகும். கன்னிமாரா பொது நூலகம், மாநிலத்தின்



1975 மார்ச் 20]

மைய நூலகமாகும். தற்போது புதுக்கோட்டை கன்னியாகுமரி மாவட் டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்களில் மாவட்டத்திற்கு ஒரு நூலகம் வீதம் மொத்தம் 13 மாவட்ட மைய நூலகங்கள் உள்ளன. 1,441 கிளை நூலகங்களும் உள்ளன. புதுக்கோட்டை மாவட்டத்திற்கு நூலக ஆணைக் குழு அமைக்கப்பட வேண்டியுள்ளது. பொது நூல் நிலையச் சட்டம் இன்னும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு விரிவாக்கப்படவில்லை. இந் நூலகங்களில் ஏறக்குறைய 3,000 பேர் பணிபுரிகின்றனர். மாவட்ட நூலக ஆணைக் குழுக்கள் நடமாடும் நூலகங்கள் போன்ற சிறப்பான நூலகப் பணிகளையும் புகுத்தியுள்ளன.

8. நூலக நிதியின் பெரும்பகுதி வீட்டு வரி, சொத்து வரி ஆகியவற்றின் மீது வசூலிக்கப்படும் நூலக மேல் வரியைக் கொண்டதாகும். 1972ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களிலிருந்து நூலக மேல் வரி ரூபாய்க்கு 3 காசி லிருந்து 5 காசாக உயர்த்தப்பட்டது. இதனால் நூலக ஆணைக் குழுக் களின் வருவாய் பெருகும். 1974–75 ஆண்டில் இவ் ஆணைக்குழுக்கள் நூலக மேல்வரியாக சுமார் ரூ. 70 இலட்சம் பெறும். சென்னை தவிரப் பிற மாவட்டங்களில் உள்ள நூலக ஆணைக் குழுக்கள் நூலக மேல்வரி மூலம் வசூலிக்கப்படும் தொகைக்குச் சமமான இணை மானியத்தை அரசிடமிருந்து பெறுகின்றன. 1973–74ஆம் ஆண்டிலிருந்து அத்தகைய இணை மானியத்தில் 25 விழுக்காடு புத்தகங்களாக கொடுக்கப்படுகிறது. திட்டப் பணிகளின் கீழ் தொடங்கப்பட்ட நூலகங்களுக்கான மானியங்களை அரசு தனி மானியமாக வழங்குகின்றது. 1973–74ஆம் ஆண்டிலிருந்து திட்ட மானியத்தில் 50 விழுக்காடு புத்தகங்களாக கொடுக்கப்படுகின்றது. 1974–75ஆம் ஆண்டில் நான்கு கிளை நூலகங்களுக்குக் கட்டடங்கள் கட்டு வதற்காக (ஒவ்வொன்றுக்கும் ரூ. 45,000 வீதம்) மொத்தம் ரூ. 1,80,000 மானியம் வழங்க ஒப்பளிப்புச் செய்யப்பட்டது. 1975–76ஆம் ஆண்டு பொது நூலகங்களுக்காக மொத்தம் சுமார் ரூ. 88 இலட்சத்தை அரசு செல விடும்.

9. 1972 ஆகஸ்டு முதல் நாளிலிருந்து பொது நூலகங்களுக்காகத் தனியாக இயக்குநர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழ் நாட்டில் நூல கப் பணியில் தற்போதைய அமைப்பை ஆராய்ந்து அதன் சீரமைப்பு மற்றும் மேம்பாட்டிற்கான வழிவகைகள் குறித்து ஆலோசனை கூற, ஐவர் குழு ஒன்றை அரசு நியமித்தது. அக்குழு 1974ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தன் அறிக்கையை அனுப்பியது. அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை

10. தொல்பொருள் ஆராய்ச்சித் துறை சீரான முறையில் செய லாற்றி வருகின்றது. 1975–76ஆம் ஆண்டில் மதுரையிலுள்ள திருமலை நாயக்கர் அரண்மனையும், தஞ்சாவூர் அரண்மனையும் செப்பனிடப்பட்டு மேம்படுத்தப்படும். அண்மையில் சில ஆண்டுகளாக இந்தியக் கலைச் செல்வங்களின் திருட்டு பெருகியுள்ளது. மைய அரசின் உதவியுடன் நாடு முழுவதிலும் உள்ள வெண்கலப் படிமங்கள், சிற்பங்கள், மரச்செதுக்கு வேலைகள், வண்ண ஓவியங்கள் முதலிய தொல்பொருள்கள் யாவற்றை

யும், பதிவு செய்யும் திட்டம் ஒன்று துவங்கப்பட்டுள்ளது. தமிழ் நாட்டில் இப்பணி பதிவு அலுவலர்கள் எழுவரால் கவனிக்கப்படுகின்றது. அவர்கள் சென்னை, கடலூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்பத்தூர் ஆகிய இடங்களில் பணி செய்கின்றனர். அவ்வலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் உதவி புரிய ஓர் இளநிலை எழுத்தரும் ஓர் ஆவண எழுத்தரும், ஒரு கடைநிலை ஊழியரும் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இப்பணி, கலைச்செல்வங்கள், முக்கியமாக வெண்கலப் படிமங்கள் நிரம்பியுள்ள தஞ்சாவூர் மாவட்டத்தில் தீவிரமாக நடைபெறுகிறது. 1973–74 ஆம் ஆண்டு முதுகலை (எம்.ஏ.) பட்டப்படிப்பில் தேறிய மாணவர்களுக்குத் தொல்பொருள் மற்றும் கல்வெட்டு ஆராய்ச்சியில் பயிற்சியளிக்க ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டது. இதில் பயிற்சி பெறுபவர்களுக்கு பட்ட மேற்படிப்புச் சான்றிதழ் ஒன்று அளிக்கப்படுகின்றது. இந்நிறுவன மாணவர்களுள் முதல் அணியினர் பயிற்சியில் தேறி 1974 சூலையில் வெளிவந்தனர். இவ்வகுப்பு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## VII தமிழ் வளர்ச்சி

தமிழ் தொன்மைச் சிறப்பும் புதுமை நலமும் ஒருங்கே அமைந்த மொழி. சமஸ்கிருத மொழியையொத்த அல்லது அதனினும் மிகுந்த தொன்மைச் சிறப்புடைய தமிழ் இன்றும் இந்தியாவில் ஏறத்தாழ நான்கு கோடி மக்களால் பேசப்பட்டு வருவதுடன், இலங்கை, மலேசியா, மொரீசியஸ் தீவுகள், பிஜித் தீவுகள் முதலிய உலகின் பல பாகங்களில் உள்ள பல இலட்சம் மக்களாலும் பேசப்பட்டு வருகின்றது. தமிழ் மொழி, இலக்கியம், கலை ஆகியவற்றை வளர்ப்பதில் தமிழ் நாடு அரசு மிக்க ஈடுபாடு கொண்டுள்ளது. 1974ஆம் ஆண்டு மார்ச்சு திங்களில் சட்டமன்றத்தில் தெரிவித்தபடி, இவ்வரசுச் செலவினங்களுள் தமிழ் வளர்ச்சிக்கு நேரடித் தொடர்புடையவை அனைத்தும் 1975–76ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீட்டில் ஒருங்கிணைக்கப்பட்டு "277. கல்வி— C. தனிவகைக்கல்வி —f. தமிழ் மொழி மற்றும் தமிழ் இலக்கிய வளர்ச்சி" என்ற தனித் தலைப்பின்கீழ் காண்பிக்கப்பட்டுள்ளன. 1975–76ஆம் ஆண்டுக்கான வரவு–செலவு மதிப்பீட்டில் தமிழ் வளர்ச்சிக்கான நிதி ஒதுக்கீடு ரூ. 77 இலட்சங்களாகும். அதில் ரூ. 40 இலட்சம் கல்லூரிகளில் தமிழைப் பாடமொழியாகக் கொண்டு பயிலும் மாணவர்களுக்கு உதவித் தொகையும் புத்தகச் செலவுத் தொகையும் அளிக்கச் செலவிடப்படும். ரூ. 15 இலட்சம் கல்லூரிப் பாட நூல்களைத் தமிழில் கொண்டுவரச் செலவிடப்படும். ரூபாய் 9 இலட்சம் தமிழ் வளர்ச்சி இயக்கத்திற்கும் அதன் பணிகளுக்கும் செலவிடப்படும். பிற காரியங்களுக்காகச் ரூ. 13 இலட்சம் செலவிடப்படும்.

### தமிழ் வளர்ச்சி இயக்குநர்

2. தமிழ் நாட்டில் தமிழை ஆட்சிமொழியாகச் செயல்படுத்தும் கொள்கையை எல்லா மாவட்டங்களிலும் முழு ஆற்றலுடன் நிறைவேற்ற வேண்டுமென்பதில் அரசு மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளது. அரசுச் சட்டங்கள், விதித் தொகுப்புகள், நடைமுறை நூல்கள் ஆகியவற்றின் மொழி பெயர்ப்புப் பணிகள் மிகத் துரிதமாக நடந்து வந்துள்ளன. ஆட்சிச்



சொல்லகராதி, தொழில் நுட்பத் துறைகளுக்கான சிறப்புச் சொற்கள் துணையகராதி ஆகியவை அரசு துறைகளுக்குப் பயன்படும் வகையில் வெளியிடப்பட்டுள்ளன. தமிழை ஆட்சி மொழியாகக் கொள்வதில் ஏற்படும் முன்னேற்றத்தை ஆய்வு செய்வதற்காக மாவட்ட அளவில் தனி ஆய்வுப் பணியாளர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். 1867ஆம் ஆண்டிலிருந்து வெளியிடப்பட்ட தமிழ் புத்தகங்களின் விவரப் பட்டியல் ஒன்று தொகுக்கப்பட்டு வருகின்றது. 1867 முதல் 1910 முடிய வெளியிடப்பட்ட தமிழ் நூல்களின் விவரப்பட்டியல் எட்டுத் தொகுதிகளில் முன்னரே வெளியிடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள தொகுதிகளை வெளியிடும் பணி தொடரும்.

3. ஆதார பூர்வமான தமிழ் நாட்டு வரலாற்றை எழுதுவதற்கு வல்லுநர்கள் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. ஆறு தொகுதிகளுடைய இவ்வரலாற்றின் முதல் நான்கு தொகுதிகள் முடிக்கப்பட்டுள்ளன. அவை விரைவில் வெளியிடப்படும். தமிழில் தரமான நூல்களை வெளிக்கொணரும் நூலாசிரியர்களுக்கு நிதியுதவி அளிக்கும் திட்டம் ஒன்றையும் இத்துறை செயல்படுத்தி வருகின்றது. மேலும் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் உள்ள சித்த மருத்துவம் பற்றிய பனை ஓலைச்சுவடிகளை ஆய்வு செய்து பதிப்பிப்பதற்கும் நிதி உதவி அளிக்கப்படுகின்றது.

4. நாட்டில் உள்ள பல்வேறு பல்கலைக் கழகங்கள் தமிழ் வளர்ச்சிக்கான இருக்கைகள் அமைத்து தமிழ் ஆராய்ச்சிப் பணியை மேற்கொள்ளவும் இத்துறை தாராளமான முறைமானியம் வழங்கி வருகின்றது.

### செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி

5. "செந்தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலி" யைத் தொகுத்து வெளியிடுவதற்காக, தமிழ், திராவிட இன மொழியியலில் சிறந்த அறிஞரான திரு. ஞா. தேவநேயப்பாவாணர் அவர்களை தமிழ்ச் சொற்பிறப்பியல் அகர முதலித் திட்டத்தின் இயக்குநராக அரசு நியமித்துள்ளது. அவர் இத்திட்டத்தின் பணியைத் துவங்கியுள்ளார். இந்நூல் முழு விரிவு வாய்ந்த, திட்டவட்டமான நூலாக அமையும். இது ஏறத்தாழ 12 தொகுதிகளில் வெளிவரும் என்றும், இப்பணி சுமார் நான்கு ஆண்டுகளில் நிறைவேறும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

6. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் 1970ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நிறுவப்பட்டது. தமிழ் ஆராய்ச்சியில் பற்றுள்ள உலக அறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழ்த் துறையிலும் தொடர்புள்ள பிற துறைகளிலும் ஆராய்ச்சியை வளர்ப்பதே இதன் நோக்கமாகும். 1972ஆம் ஆண்டிலிருந்து இந்நிலையம் தமிழ் ஆராய்ச்சி பற்றிய அரையாண்டு ஆராய்ச்சி இதழ் ஒன்றை வெளியிட்டு வருகின்றது. உலக நாடுகளில் உள்ள அறிஞர்கள் பலர் எழுதும் கட்டுரைகள் அவ்விதழில் இடம் பெறுகின்றன. ஆராய்ச்சிக்குப் பயன்படும் வகையில் சிறந்த நூலகம் ஒன்று இந் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ளது. யுனஸ்கோ நன்கொடையாக அளித்துள்ள காட்சி கேள்விச் சாதனத்தின் உதவியுடனும், மொழிப் பயிற்சிக் கூடத்தின் உதவியைக் கொண்டும் வெளிநாட்டு மாணவர்களுக்கு

இந் நிலையம் சிறப்பான முறையில் தமிழ் கற்றுத் தருகிறது. தமிழில் மொழி பெயர்க்கப்பட்டுள்ள பிற அறிஞர்களின் இலக்கியங்களின் பட்டியல் ஒன்றையும், ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தமிழ் இலக்கிய நூல்களின் பட்டியல் ஒன்றையும் இந் நிலையம் வெளியிடத் திட்டமிட்டுள்ளது. இவை தவிர சங்க காலத் தமிழர் சமூக வரலாற்றையும், தமிழ் இலக்கியத்திற்கு ஒரு துணை நூலையும், தமிழ்–ஆங்கில அகராதி ஒன்றையும், இது வெளியிடக் கருதியுள்ளது. தமிழ் இலக்கியத்தில் இலக்கியக் கொள்கைகள் பற்றிய விரிவுரைகளுக்கும் 1974–75ஆம் ஆண்டில் இந் நிறுவனம் ஏற்பாடு செய்தது. அண்மையில் சில ஆண்டுகளாக இந் நிலையம் தமிழ் நாடு அரசிடமிருந்து ஆண்டு தோறும் மூன்று இலட்சம் ரூபாய்கள் அளவில் மானியம் பெற்று வருகின்றது. தற்போது இந்நிறுவனம், அடையாறு மத்தியப் பல்தொழிற் பயிற்சி நிலையக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இந் நிறுவனத்திற்கு நிலையான கட்டடம் ஒன்றைக் கட்டுவதற்காக தற்போது இந் நிறுவனம் இருக்கும் இடத்திற்கு அருகில் ஆறு ஏக்கர் நிலத்தை அரசு ஒதுக்கியுள்ளது.



## இணைப்பு IV-அ.

### பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

| (1) | 1965–66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3) | 1973–74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1974–75. (5) |
|---|---|---|---|---|
| | (சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.) | | | |
| அ. வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறார் மொத்த எண்ணிக்கை— | | | | |
| வயதுத் தொகுதி 6–11— | | | | |
| சிறுவர் | 25·85 | 26·79 | 30·45 | 31·13 |
| சிறுமியர் | 25·64 | 26·58 | 29·79 | 30·44 |
| மொத்தம் | 51·49 | 53·37 | 60·24 | 61·57 |
| வயதுத் தொகுதி 11–14— | | | | |
| சிறுவர் | 11·31 | 11·72 | 13·71 | 14·01 |
| சிறுமியர் | 11·23 | 11·63 | 13·40 | 13·70 |
| மொத்தம் | 22·54 | 23·35 | 27·11 | 27·71 |

இணைப்பு IV-அ.-தொடர்ச்சி.

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| (1) | 1965—66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968—69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3) | 1973—74 (நான்காவது திட்ட முடிவு). (4) | 1974—75. (5) |
|---|---|---|---|---|
| | (சிறுவர், சிறுமியர் எண்ணிக்கை இலட்சத்தில்.) | | | |
| வயதுத் தொகுதி 14-17— | | | | |
| சிறுவர் | 9·33 | 9·67 | 11·31 | 11·56 |
| சிறுமியர் | 9·26 | 9·60 | 11·07 | 11·31 |
| மொத்தம் | 18·59 | 19·27 | 22·38 | 22·87 |
| ஆ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் எண்ணிக்கை— | | | | |
| வயது தொகுதி 6–11— | | | | |
| சிறுவர் | 26·37 | 28·22 | 30·64 | 31·33 |
| சிறுமியர் | 18·74 | 20·96 | 23·74 | 24·27 |
| மொத்தம் | 45·11 | 49·18 | 54·38 | 55·60 |



| | | | | |
|---|---|---|---|---|
| வயதுத் தொகுதி 11–14— | | | | |
| சிறுவர் | 7·21 | 8·00 | 9·10 | 9·30 |
| சிறுமியர் | 3·45 | 4·28 | 5·09 | 5·26 |
| மொத்தம் | 10·66 | 12·28 | 14·19 | 14·56 |
| வயதுத் தொகுதி 14–17— | | | | |
| சிறுவர் | 3·86 | 4·30 | 4·97 | 5·05 |
| சிறுமியர் | 1·65 | 2·07 | 2·42 | 2·47 |
| மொத்தம் | 5·51 | 6·37 | 7·39 | 7·52 |
| இ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்— | | | | |
| 6 முதல் 11 வரை— | | | | |
| சிறுவர் | 102·03 | 105·34 | 100·6 | 100·6 |
| சிறுமியர் | 73·08 | 78·85 | 79·6 | 79·8 |
| மொத்தம் | 87·61 | 92·15 | 90·2 | 90·3 |
| 11 முதல் 14 வரை— | | | | |
| சிறுவர் | 63·78 | 68·23 | 66·3 | 66·4 |
| சிறுமியர் | 30·72 | 36·79 | 37·9 | 38·4 |
| மொத்தம் | 47·31 | 52·57 | 52·3 | 52·6 |

## இணைப்பு IV-அ-தொடர்ச்சி.

### பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள். — தொடர்ச்சி

| விவரங்கள். (1) | 1965—66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) | 1968—69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3) | 1973—74 (நான்காவது திட்ட முடிவு.) (4) | 1974—75. (5) |
|---|---|---|---|---|
| 14 முதல் 17 வரை— | | | | |
| சிறுவர் | 41·38 | 44·48 | 43·9 | 43·8 |
| சிறுமியர் | 17·83 | 21·52 | 21·8 | 22·0 |
| மொத்தம் | 29·65 | 33·05 | 33·0 | 33·0 |
| ச. பள்ளிகளின் எண்ணிக்கை— | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 24,641 | 25,694 | 26,726 | 26,797 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 6,065 | 6·018 | 5,773 | 5,768 |
| உயர்நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப் பள்ளிகள் உட்பட) | 2,234 | 2,513 | 2,823 | 2,882 |
| உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 88,173 | 91,918 | 1,06,332 | 1,10,517 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 59,943 | 62,222 | 66,843 | 68,249 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 48,574 | 54,857 | 65,959 | 69,454 |
| மொத்தம் | 1,96,690 | 2,08,997 | 2,39,134 | 2,48,220 |
| ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்— (ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)— | | | | |
| (1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)— | | | | |
| தொடக்கப் பள்ளிகள் | 27 | 36 | 35 | 35 |
| உயர் தொடக்கப் பள்ளிகள் | 35 | 33 | 33 | 33 |
| உயர்நிலைப் பள்ளிகள் | 31 | 26 | 24 | 24 |
| (2) வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியிலிருந்து நீக்கி)— | | | | |
| தொடக்கப் பள்ளி வகுப்புத் தொகுதி | 37 | 37 | 37 | 35 |
| உயர் தொடக்க நிலை வகுப்புத் தொகுதி | 32 | 33 | 33 | 33 |
| உயர் நிலைப் பள்ளி வகுப்புத் தொகுதி | 32 | 32 | 29 | 29 |

## இணைப்பு IV ஆ.

### கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். (1) | 1965-66 மூன்றாவது திட்ட முடிவு. (2) மார்ச். 1966. | (3) அக். | 1968-69 ஆண்டுத் திட்டங்கள் முடிவு. (4) ஏப்ரல். 1968. | (5) அக். |
|---|---|---|---|---|
| 1. எஸ்.எஸ்.எல்.சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை. | 1,46,592 | 31,327 | 1,96,272 | 57,374 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை .. | 75,270 | 8,128 | 98,181 | 11,004 |
| 3. கல்லூரிப் படிப்புக்குச் சென்ற மாணவர்கள் .. | | 39,507 | | 59,743 |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | | | | |
| (1) புகுமுக வகுப்பு .. .. .. .. | | 39,507 | | 59,743 |
| (2) பி.ஏ. .. .. .. .. .. | | 11,349 | | 28,016 |
| (3) பி.எஸ்சி. .. .. .. .. | | 22,381 | | 33,576 |
| (4) பி.காம். .. .. .. .. .. | | 3,050 | | 4,556 |
| (5) பட்ட மேற்படிப்பு .. .. .. .. | | 2,607 | | 3,624 |
| | | 78,894 | | 1,29,515 |



## இணைப்பு IV-ஆ.

### கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| விவரங்கள். (1) | 1965-66 மூன்றாவது திட்ட முடிவு. (2) மார்ச். | (3) அக். 1966 | 1968-69 ஆண்டுத் திட்டங்கள் முடிவு. (4) ஏப்ரல். | (5) அக். 1968 |
|---|---|---|---|---|
| 5. ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. .. .. | | .. | | 1,509 |
| (2) தனியார் கல்லூரிகள் .. .. .. | | .. | | 5,071 |
| | | 4,932 | | 6,580 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. .. .. | | 21 | | 33 |
| (2) தனியார் .. .. .. .. . | | 71 | | 93 |
| | | 92 | | 126 |

இணைப்பு IV-ஆ—தொடர்ச்சி.
1973—74

கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| விவரங்கள். (1) | நான்காவது திட்ட முடிவு. (6) மார்ச். 1973. | (7) அக். 1973. | 1974-75 (8) மார்ச். 1974. | (9) அக். 1974. |
|---|---|---|---|---|
| 1. எஸ். எஸ். எல். சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை. | 1,93,686 | 30,361 | 2,21,402 | 28,104 |
| 2. அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை | 96,903 | 5,367 | 1,12,358 | 5,482 |
| 3. கல்லூரிப் படிப்புகளுக்குச் சென்ற மாணவர்கள் | 72,646 | | 78,625 | |
| 4. மொத்த மாணவர் எண்ணிக்கை— | 72,646 | | 78,625 | |
| (1) புகுமுக வகுப்பு .. .. .. | 51,698 | | 51,063 | |
| (2) பி. ஏ. .. .. .. .. | 49,057 | | 49,332 | |
| (3) பி. எஸ் சி. .. .. .. | 14,859 | | 15,287 | |
| (4) பி. காம். .. .. .. | 6,993 | | 6,307 | |
| (5) பட்ட மேற்படிப்பு .. .. .. | | | | |
| | 1,95,253 | | 2,00,614 | |



இணைப்பு IV-ஆ—தொடர்ச்சி.

கல்லூரிக் கல்வி—புள்ளி விவரங்கள்—தொடர்ச்சி.

| விவரங்கள். (1) | நான்காவது திட்ட முடிவு. (6) மார்ச். 1973. | (7) அக். 1973. | 1974-75 (8) மார்ச். 1974. | (9) அக். 1974. |
|---|---|---|---|---|
| (5) ஆசிரியர்களின் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசுக் கல்லூரிகள் .. .. | | 2,969 | | 3,383 |
| (2) தனியார் கல்லூரிகள் .. .. | | 7,090 | | 7,416 |
| | | 10,059 | | 10,799 |
| 6. கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. .. | | 51 | | 51 |
| (2) தனியார் .. .. .. | | 127 | | 132 |
| | | 178 | | 183 |

## இணைப்பு IV-இ.

### தொழில் நுட்பக் கல்வி—புள்ளி விவரங்கள்.

| விவரங்கள். | 1965-66 (மூன்றாவது திட்ட முடிவு). | 1968-69 (ஆண்டுத் திட்டகால முடிவு). | 1973-74 (நான்காவது திட்ட முடிவு). | 1974-75. |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| (அ) பொறியியற் கல்லூரிகள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 3 | 4 | 4 | 4 |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 4 | 3 | 3 | 3 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. | 5 | 5 | 5 | 5 |
| மொத்தம் .. | 12 | 12 | 12 | .12 |
| (ஆ) பல்தொழிற் பயிலகங்கள் எண்ணிக்கை— | | | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 16 | 16 | 19* | 19* |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 18 | 18 | 18 | 18 |
| (3) தன்னுரிமையுள்ளவை .. .. .. | 1 | 1 | 1 | 1 |
| மொத்தம் .. | 35 | 35 | 38 | 38 |

* கலை—தொழில் நுணுக்கக் கல்வி நிலையங்கள் மூன்றையும் சேர்த்து.



| விவரங்கள். | 1965-66 | 1968-69 | 1973-74 | 1974-75. |
|---|---|---|---|---|
| (இ) தொழில் நுட்ப உயர்நிலைப்பள்ளிகள்— | | | | |
| (1) அரசு .. .. .. .. .. .. | 11 | 11 | 11 | 11 |
| (2) தனியார் .. .. .. .. .. .. | 4 | 4 | 3 | 3 |
| மொத்தம் .. | 15 | 15 | 14 | 14 |
| (உ) ஆசிரியர்கள் எண்ணிக்கை— | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. .. .. | .. | .. | .. | 515 |
| (2) பல்தொழிற் பயிலகங்கள் .. .. .. | .. | .. | .. | 754 |
| (3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் .. | .. | .. | .. | 66 |
| மொத்தம் .. | .. | .. | .. | 1,335 |
| (ஊ) மாணவர்கள் எண்ணிக்கை— | | | | |
| (1) பொறியியற் கல்லூரிகள் .. .. .. .. | 5,289 | 7,163 | 6,796 | 8,246 |
| (2) பல்தொழிற் பயிலகங்கள் .. .. .. | 10,526 | 12,633 | 10,591 | 11,061 |
| (3) தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் .. | 1,124 | 1,304 | 1,704 | 827 |
| மொத்தம் .. | 16,939 | 21,100 | 19,091 | 20,134 |

## தமிழ் நாடு சட்டமன்றப் பேரவை

வெள்ளிக்கிழமை, 1975 மார்ச் 21.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. நா. கணபதி அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

### 1. வினாக்கள் — விடைகள்.

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்.

#### தலைகுந்தா-சீகூர் சாலை.

*403 வினா.—திரு கு. அ. பொம்மன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டத்திலுள்ள தலைகுந்தா—சீகூர் ரோடை அகலப்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது அதற்கான வேலை தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

#### கூடலூர் பகுதியில் தடுப்பு அணைகள்.

*404 வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், கூடலூர் பகுதியில் தடுப்பு அணைகள் கட்டும் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்.

(இ) நீலகிரி மாவட்டம்-கூடலூர் தாலுகாவில் இரண்டு தடுப்பு அணைகளும், நான்கு அணைக்கட்டுத் திட்டங்களும் வேலை துவங்குவதற்கு தயாரான நிலையில் உள்ளன. இவை தவிர, மேலும் ஐந்து தடுப்பு அணைகளும் மூன்று அணைக்கட்டுத் திட்டங்களும் பரிசீலனையில் உள்ளன.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, இந்தத் தடுப்புச் சுவர்களும், அணைக்கட்டுகளும் எந்தெந்தப் பகுதியில் கட்டுவதற்குத் தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ளது? அதனுடைய மதிப்பீடு எவ்வளவு? அது எந்த வகையில் பயன்படும் என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : நீலகிரி மாவட்டம், கூடலூர் தாலுக்காவில் இவை கட்டப்பட இருக்கின்றன.

The estimated cost of works in respect of two check dams and four anicuts which are ready for execution and five check dams and three anicuts which are under consideration in the Gudalur Taluk of the Nilgiris district are Rs. 3,20,500 and Rs. 4,32,900 respectively.

திரு. ஜி. ராமசாமி : தலைவர் அவர்களே, இப்படி செக் டாம்கள் தமிழ்நாட்டில் எங்கெங்கு நீர் ஓடிக்கொண்டிருக்கிறதோ அங்கெல்லாம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இடத்தைக் குறிப்பிட்டுச் சொன்னால்தான் அதைப்பற்றி அரசாங்கம் பரிசீலனை செய்து பதில் சொல்ல முடியுமே தவிர, பொதுவாகக் கேட்டால் பதில் சொல்ல இயலாது.

திரு. சி. ஆறுமுகம் : நீலகிரி மாவட்டத்தில் தடுப்பு அணைகளும் குறுக்குச் சுவர்களும் கட்டுவதுபற்றி அமைச்சரவர்கள் குறிப்பிட்டார்கள், எல்லா ஆறுகளின் குறுக்கேயும் இப்படிப்பட்ட சுவர்கள் கட்டினால், அதை யொட்டிய பகுதிகளில் உள்ள கிணற்றுக்குத் தண்ணீர் வர வாய்ப்பு இருப்பதால் அது பற்றி நடவடிக்கை எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எல்லா ஆறுகளுக்கும் குறுக்கே அப்படிக் கட்ட இயலாது. அப்படிக் கட்டினால் கீழேயிருக்கும் பாசனங்கள் பாதிக்கப்படும். எங்கெங்கே தடுப்புச் சுவர்கள் இல்லையோ அங்கு கட்ட வேண்டுமானால், அதைப்பற்றி பரிசீலித்துதான் செய்ய வேண்டும். இருக்கிற இடத்தில் எங்காவது பழுது ஏற்பட்டிருந்தால் அதைப்பற்றி அரசாங்கம் யோசித்துச் செய்யும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, கூடலூர் தாலுக்காவில் கட்டவிருக்கும் அணைக்கட்டுகள் எந்த எந்த ஊர்ப்பகுதியில் கட்ட தற்போது திட்டமிடப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : எந்த எந்த ஊர் என்றால், அது நீண்ட பட்டியலாக இருக்கிறது. தனிக் கேள்வி போட்டால் பட்டியலை மேசை மீது வைக்கிறேன்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, கூடலூர் தாலுக்காவில் முதுமலைக்குப் பக்கத்தில் பாண்டியாறு நதியின் குறுக்கே ஒரு அணை கட்டுவதாக செய்தி வெளியாயிற்று. அது எந்த அளவுக்கு உண்மை என்பதை அறியலாமா?



மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப் பார்த்தால் பாண்டியாறு-புன்னம்புழாவைக் குறிப்பிடுகிறாரா என்பது சந்தேகமாக இருக்கிறது. அது வேறு திட்டம். இப்பொழுது மூலக் கேள்வியிலிருந்து எழுவது சிறிய சிறிய ஆறுகளின் குறுக்கே கட்டும் சிறு சிறு அணைத்திட்டங்களாகும்.

திரு. கே. எ. வகாப் : எல்லா ஆறுகளுக்கும் தடுப்பு அணைகள் கட்ட முடியாது என்று சொன்னார்கள். பாலாறு ஒரு மிக முக்கியமான நீருற்று உள்ள ஒரு ஆறு. அதில் சில இடங்களில் கட்ட முயற்சி எடுக்கப்பட வேண்டும். செங்கற்பட்டுக்கு அப்பால் அதன் நீர் கடலில் விழுந்து விடுகிறது. ஆகவே, அதன் மத்தியில் ஒரு தடுப்பு அணை கட்ட அரசுக்கு உத்தேசம் உண்டா? வாலாஜாவுக்குப் பக்கத்தில் ஒரு அணை பழுது பார்க்கப்பட வேண்டுமென்று நானும் சொல்லிக்கொண்டு வருகிறேன். அரசு அதை விரைவு படுத்து முன்வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பாலாற்றில் அடிக்கடி வெள்ளம் வருவது கிடையாது. எப்போதோ சில ஆண்டுகளில் வெள்ளம் வருகிறது. அதன் நீர் கடலில் போய் சேர்ந்து விடுகிறது என்று சொல்வது சரியல்ல என்று கருதுகிறேன். இடையில் நிறைய வாய்க்கால்கள் மூலமாகப் போய் பெரிய ஏரிகளெல்லாம் நிரம்புகின்றன. மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல் ஒரு குறிப்பிட்ட அணைக்கட்டைப் பழுதுபார்க்க வேண்டுமென்பதை அரசாங்கம் யோசித்துக்கொண்டிருக்கிறது. மேற்கொண்டு கட்ட வேண்டியிருக்குமா என்பதைப்பற்றி தெரிய வேண்டும். குறிப்பிட்ட இடத்தைக் குறித்து எழுதினால் அரசு பரிசீலிக்கும்.

திரு. கு. காமாட்சி : தலைவர் அவர்களே, இந்த "செக் டாம்" கட்டி அதிலிருந்து விழுகிற தண்ணீரின் வேகத்தைப் பொறுத்து சிறு சிறு அளவில் மின்சாரம் தயாரிக்கும் திட்டம் ஏதாவது இருக்கிறதா? பஞ்சாபில் நங்கல் ஆற்றில் அம்மாதிரி முறையைக் கையாளுகிறார்கள். அதுபோல் இங்கும் செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மின்சார உற்பத்தி என்பது நீர் ஓடிவரும் வேகத்தைப் பொறுத்திருக்கிறது. நம் நாட்டில் அப்படி வேகமான ஆறு கிடையாது. பஞ்சாபில் குறிப்பிடுவதுபோன்ற இடம் நம் நாட்டில் இல்லை.

## பில்பருத்தி கிராமத்தில் புதிய ஏரி.

*405 வினா.—திரு. எம். சுரேந்திரன் : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டத்தில், பில்பருத்தி கிராமத்தில் ஏரிகட்டும் திட்டத்துக்கு ஆகும் செலவு எவ்வளவு என்று மதிப்பிடப்பட்டிருக்கிறதா?

(இ) ஆம் எனில், இந்த வேலை எப்போது துவங்கப்படும்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: (அ) இத்திட்டத்தின் மதிப்பீடு ரூ. 1.93 இலட்சங்கள்.

(இ) இத்திட்டம் தல அதிகாரிகளின் ஆய்விலுள்ளது.

*Cold Storage Plant.*

*406 Q.—THIRU S. SANGUMUTHU THEVAR :.Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether a Cold Storage Unit has been commissioned by the Tamil Nadu Co-operative Marketing Federation at Salt Cotaurs in Madras City ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) தொடக்க நாள்—1-10-1973.

மொத்தச் செலவு—ரூ. 9.25 லட்சம்.

அரசு உதவி—

கடன்—ரூ. 4,90,600.

உதவித்தொகை—ரூ. 2,94,400

இயந்திர திறனளவு—4,375 கன மீட்டர்.

இந்த குளிர்ப்பதன இயந்திரம் ஆப்பிள், ஆரஞ்சு, உருளைக்கிழங்கு, காய்கறிகள், பால், பால்படு பொருள்கள் ஆகியவற்றைச் சேமித்து வைப்ப தற்கென வடிவமைக்கப்பட்டுள்ளது. நாளொன்றுக்கு 10 டன் உற்பத்தி திறன் கொண்ட பனிக்கட்டித் தயாரிப்பு இயந்திரமும் இதில் உள்ளது.

திரு. ஆர் பொன்னப்ப நாடார்: தலைவர் அவர்களே, இதிலிருந்து கூட்டுறவு நிறுவனத்திற்கு எவ்வளவு வருவாய் வரும் என்ற விவரத்தைச் சொல்வதற்கு முடியுமா? அப்படியிருந்தால், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதிக லாபத்தோடு நடக்கத் தொடங்கப்படவில்லை. 31-12-1974 வரை இதிலிருந்து வருமானம் ஸ்டோரேஜ் இன்கம்—ரூ. 1,44,035·10.

*Weavers affected in Gudiatham fire accident.*

*407 Q.—THIRU K. T. K. TANGAMANI :.Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state—

(a) whether the Relief amount sanctioned to handloom weavers affected by the fire accident in Gudiatham has been distributed;

(b) if so, the details thereof ; and

(c) the details of the societies formed from the relief amount?



The Hon. Thiru S. Madhavan ;

(a) Yes.

(b) Total amount collected by way of contributions from the Prime Minister's Relief Fund and the Tamil Nadu Chief Miinister's Relief Fund and Public donations was Rs. 4,93,270.45. A sum of Rs. 4, 45, 756·96 has been utilised for rehabilitation of the victims of the accident as follows:

| | RS. | P. |
|---|---|---|
| Cash assistance paid to the families of 10 victims who died. | 10,000 | 00 |
| Cost of Rice purchased for feeding the victims. | 5,317 | 50 |
| Cost of 555 Handlooms and equipment supplied. | 97,026 | 00 |
| Share capital, entrance fee and working capital from the new Weavers Co-operative Society. | 95,450 | 00 |
| Cost of 2,040 bundles of yarn distributed to 801 victims. | 2,23,350 | 00 |
| Relief given (a) to 13 persons engaged in warping and sizing and (b) for the purchase of 19 warping machines. | 3,200 | 00 |
| Sundry expenses .. .. .. .. | 11,413 | 46 |
| Total .. | 4,45,756 | 96 |

The balance of Rs. 47,513·49 will be utilised shortly for starting a House Building Society for the benefit of the weavers. A further sum of Rs. 45,360 sanctioned by the State Government as monetary relief was disbursed in cash to 856 victims.

(c) One Society has been formed and another society is under organisation.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, பல்வேறு நபர்கள் வீடு இழந்திருக்கிறார்கள். சொசைட்டி அமைப்பது சம்பந்தமாக 47,000த்துச் சில்லறை ரூபாய் கொடுப்பதாக இருக்கிறது. உடனடியாக அதைத் தொடங்குவதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்யுமா என்பதை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இந்த குடியாத்தம் தீ விபத்து சம்பந்தமாக மிகவும் நல்ல முறையில் நம்முடைய அரசு உதவி செய்கிறது. இருந்தாலும் கூட அதிலே சிலபேர் விடுபட்ட நிலையிலே இருக்கிறார்கள். சங்கம் அமைப்பது பற்றிச் சொன்னார்கள். அந்தச் சங்கங்களுக்கு ஷேர் கேபிடல் கூடச்செலுத்த முடியாமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு, சில காரணங்களால் விடுபட்டிருப்பவர்களுக்கு, அரசாங்கமே ஏற்று சங்கங்கள் அமைக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : 245 நெசவாளர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. இன்னொரு கூட்டுறவுச் சங்கத்திற்கும் திட்டமிடப்பட்டிருக்கிறது.

திரு அ. ஆறுமுகம் : தலைவரவர்களே, இதுபோல் நெசவாளர்களின் வீடுகள் எரிந்துவிட்டால் 80 ரூபாய் கொடுக்கப்படுவதில் உடனடியாக வீடு கட்டிக்கொள்ள முடிவதில்லை. ஆகவே, அரசாங்கத்திலுள்ள புறம் போக்கில் இருக்கின்ற பனை மரங்களை வெட்டிக்கொள்ள அரசு அனுமதிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இது குறிப்பிட்ட ஒரு ஊரிலே நடந்த நிகழ்ச்சி. இதற்கென்று தனியான முயற்சிகளை நாம் எடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, இந்த குடியாத்தம் நெசவாளர்களுக்கு ஏற்பட்ட தீ விபத்தால் பாதிக்கப்பட்ட சொத்தின் மொத்த மதிப்புத் தொகை எவ்வளவு ? அதற்கு பிரதம மந்திரி நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது ? முதலமைச்சரவர்கள் நிதியிலிருந்து எவ்வளவு தொகை அளிக்கப்பட்டிருக்கிறது என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பிரதம மந்திரியிடத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய்; நம்முடைய மாநிலத்திலிருந்து ஒரு இலட்சம் ரூபாய். பல்வேறு உதவியும் செய்திருக்கிறோம். தனிப்பட்ட நபர்களும் உதவி செய்திருக்கிறார்கள்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவரவர்களே, இந்தத் தீ விபத்தின் காரணமாக பலபேர்கள் தங்களுடைய தறிகளையும், வீடுகளையும், நூல்களையும் இழந்திருக்கிறார்கள். அந்த இழப்பை சரிக்கட்டுவதற்காக ஏதாவது டொனேஷன் மூலம் நிதி சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு வாழ்வு அளிக்க எந்த அளவிற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்த விவரங்களை இப்பொழுது தான் விவரமாகச் சொன்னேன். கிட்டத்தட்ட 4 இலட்சத்து 93 ஆயிரம் ரூபாய்க்கு நாம் உதவி செய்திருக்கிறோம்.



காவல்துறை ரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள்.

*401 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு முதலமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

1973-74ஆம் ஆண்டில், தமிழக போலீஸ் இலாகாவிற்கு எடுக்கப்பட்ட ரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்கள் எத்தனை பேர் ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, குற்றப் புலனாய்வுத் துறைக்கு நேரடித் தேர்வு மூலம் சப்-இன்ஸ்பெக்டர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுவதில்லை. சென்னை மாநகரக் காவல் துறையிலும், சரகங்களிலும் பணிபுரியும் சப்-இன்ஸ்பெக்டர்களில் குறிப்பிட்ட சிலரைத் தேர்ந்தெடுத்து இத்துறையில் சேர்த்துக்கொள்ளப் படுகின்றனர். அவ்வகையில் 1973-74-ல் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்களின் எண்ணிக்கை 18.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, அப்படிக் குறிப்பிட்ட முறையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றவர்களுக்கு எந்தவிதமான தகுதிகள் நிர்ணயம் செய்யப்பட்டிருக்கின்றன ? இப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களில் முஸ்லீம்கள் யாராவது இருக்கிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சப்-இன்ஸ்பெக்டர் முஸ்லீமாக இருந்து, தகுதிகளும் இருந்து, இதற்கு வருவதற்கு ஒப்புதலும் அளிப்பார்களேயானால் வருவதற்குத் தடை கிடையாது. அவர்களுக்கு என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கின்ற தகுதி, "ஜெனரல் ரிக்கார்ட்" எப்படி இருக்கிறது என்று பார்க்கப்படுகிறது. "ரிவார்ட்ஸ்" பெற்றிருப்பது; பனிஷ்மென்ட் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்கப்படுகிறது. இவைகளுக்கெல்லாம் மேலாக சி.ஐ.டி. டிபார்ட்மென்டில் வேலை செய்வதற்கு விருப்பம் இருக்கிறதா என்று அறிந்து அவர்கள் அதிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

திரு. நா. வெ. குருசாமி : தலைவரவர்களே, இந்த இரகசிய போலீசார்கள் எதிர்க்கட்சிகளின கூட்டங்களுக்குச் சென்று குறிப்பெடுக்கிறார்கள். அதேபோல் ஆளுங்கட்சிக் கூட்டங்களிலும் சென்று குறிப்பெடுப்பதற்கு ஆவன செய்ய முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அது எப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் இந்தத் துறைக்கு என்ற கேள்வி. அதுபற்றித் தனியான விவரங்கள் கோரினால் விவரம் அளிக்கப்படும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, கிரைம் பிராஞ்சுகளிலே, குறிப்பிட்ட ஆண்டுகள் சேவை செய்துவிட்டு மறுபடியும் ஜெனரல் போலீசுக்கு வருவதற்கு ஏதாவது ஏற்பாடு செய்யப்படுமா ? ஏனென்றால் ஒரு சிலர் ஸ்பெஷல் கேசுக்காகப் போய் பல்லாண்டு

காலமாக அந்தத் துறையிலேயே இருக்கிறார்கள். மறுபடியும் மாற்றம் ஏற்படவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதையும் அனுதாபத் தோடு அரசாங்கம் பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, கிரைம் பிராஞ்சிலேயிருந்து மறுபடியும் இயல்பான இந்தப் பணிக்கு வருவதற்குத் தடை எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவரவர்களே, தேர்ந்தெடுக்கப் படும் இரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு பயிற்சி ஏதாவது அளிக்கப்படுகிறதா ? என்னென்ன பயிற்சி அளிக்கப்படுகிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அவர்களுக்கு என்று சில பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பொதுவாக இப்பொழுது கள்ள நோட்டு போன்றவைகளைக் கண்டுபிடிப்பதற்காக நாசிக்கிலே ஒரு டிரெயினிங் அளிக்கப்படுகிறது. அந்தப் பயிற்சிக்கு செல்கிறார்கள். இந்தியாவில் வேறு சில பகுதிகளில் குற்றப் புலனாய்வுக்காக பயிற்சி அளிக்கப்படும் முகாம் இருக்கிறது. அங்கேயும் பொதுவாக போலீ சாருக்குப் பயிற்சி அளிக்கப்படும் நேரத்தில் இவர்களும் சிறப்பாகப் பயிற்சிகளைப் பெறுகிறார்கள்.

திரு. எம். சுரேந்திரன் : சார்; இந்த இரகசிய போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு மற்ற போலீஸ் சப்-இன்ஸ்பெக்டர்களுக்கு அளிக்கப்படுவதைக்காட்டிலும் விசேஷமான அலவன்ஸ் ஏதாவது தரப்படுகிறதா ? அவர்கள் எங்கு வேண்டுமானாலும் சென்று குற்றங்களை ஆய வேண்டி யிருக்கிறது. எனவே அவர்கள் எங்கே செல்ல வேண்டுமானாலும் செல்வதற்கு பாஸ் அளிக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, குற்றங்களை ஆய்வதற்கான வசதிகள் அனைத்தும் செய்யப்பட்டிருக்கின்றன. சிறப்பாக ஏதாவது ஊதியம் தரப்படுகிறதா என்று கேட்டார்கள். சிறப்பாக, அவர்களை ஊக்கப்படுத்தும் வகையில், எஸ். பி.க்கு 150 ரூபாய் ஸ்பெஷல் பேயும், டி.எஸ்.பி.க்கு 75 ரூபாயும், இன்ஸ்பெக்டருக்கு 50 ரூபாயும், சப்-இன்ஸ்பெக்டருக்கு 25 ரூபாயும், ஹெட்கான்ஸ்டபிளுக்கு 10 ரூபாயும் அளிக்கப்படுகிறது.

திரு. பெ. சீனிவாசன் : தலைவரவர்களே, இந்த கிரைம் பிராஞ்ச் சப்-இன்ஸ்பெக்டர்கள், ஸ்பெஷல் பிராஞ்ச் சப்-இன்ஸ்பெக்டர்கள், இது சம்பந்தமுள்ள அதிகாரிகள் தங்களை இன்னார் என்று பொதுமக்களிடம் அடையாளம் காட்டிக் கொள்ளக்கூடாது என்ற நிபந்தனை ஏதாவது இருக்கிறதா ? உத்தரவு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, அடையாளம் காட்டிக்கொள்ளாமல் இருந்தால்தான் அவர்கள் ஒற்றர்களாக இருக்க முடியும்.



திரு. ஏ. சுவாமிதாஸ் : தலைவரவர்களே, குற்ற இலாக்கா சப்-இன்ஸ்பெக்டர்களைத் தேர்ந்தெடுக்கும்பொழுது நேரடியாக எத்தனை சதவிகிதம் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? அந்த இலாக்காவில் கீழ மட்டத்திலே பணிபுரிபவர்களுக்குப் பதவி உயர்வு கொடுப்பதன் மூலம் எத்தனை சதவிகிதத்தினர் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள் ? மாவட்ட ரீதியாகத் தேர்வு நடைபெறுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் தொடக்கக் கேள்விக்கு அளித்த பதிலிலேயே அதை நான் குறிப்பாகச் சொல்லியிருக்கிறேன். இந்தக் குற்றப் புலன் ஆய்வுத் துறைக்கு நேரடியாக யாரையும் நியமிப்பது இல்லை. ஏற்கனவே உள்ள சப்-இன்ஸ்பெக்டர்களிலிருந்து தேர்ந்தெடுத்து, அங்கிருந்து இந்தத் துறையில் பயன்படுத்திக் கொள்கிறோமே தவிர நேரடியாகத் தேர்வு செய்யவில்லை. மாவட்ட ரீதியாகக் கேட்டார்கள். அதுபற்றித் தனியாகக் கேள்வி கேட்டால், அவையிலே வைக்கின்ற அந்த எட்டிலேதான் அவ்வளவையும் வைக்க முடியும்.

செல்வபுரத்தில் காவல் நிலையம்.

* 402 வினா—திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு முதலமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகரம், செல்வபுரத்தில் காவல் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, போலீஸ் அவுட் போஸ்டாக இருக்கும் அத்தனையையும் ஸ்டேஷன்களாக மாற்ற வேண்டு மென்ற பரிந்துரை போலீஸ் கமிஷன் ரிப்போர்ட்டில் இருந்ததே, அதை எந்த அளவில் அமல் செய்வதற்கு அரசாங்கத்தால் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, பரிந்துரைகள் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. அவுட்-போஸ்ட்களும் ஸ்டேஷன்களாக ஓரளவு மாற்றப்பட்டிருக்கின்றன. இன்னும் முழுமை யாக மாற்றப்படவில்லை.

THIRU P. SEENIVASAN: I am sorry to be alittle out of the way. இப்பொழுதுள்ள போலீஸ் நிலையங்கள் அனைத்திலும்-அவுட் போஸ்ட் தவிர, மற்ற எல்லா ஸ்டேஷன்களிலும்-டெலிபோன் வசதி செய்ய உறுதி கூறியிருப்பது உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : உறுதி கூறியிருக்கிறது. இதிலே அந்த விவரங்கள் இல்லாவிட்டாலும் என்னுடைய நினைவிலிருந்து சொல்கிறேன், சுமார் 500-க்கு மேற்பட்ட நிலையங்களில் தொலைபேசி வைக்கப்பட்டு விட்டதாக அறிகிறேன். சரியான புள்ளிவிவரம் இல்லை.

<u>திரு. கோவை செழியன்</u> : தலைவர் அவர்களே, இப்படிப் புதிதாக அமைக்கப்படும் காவல் நிலையங்களில் பணியாற்றும் காவலர்கள் மற்றும் இன்ஸ்பெக்டர்கள் போன்றவர்களுக்கெல்லாம் குடியிருக்க குவார்ட்டர்ஸ் கட்டி அந்த வசதிகளைச் செய்த பிறகு இந்தக் காவல் நிலையங்களுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறதா ? .அல்லது காவல் நிலையங்களைத் திறந்ததற்குப் பிறகு அவரவர்கள் இஷ்டத்திற்கு எங்கேயாவது குடியிருந்துகொள்ள வேண்டுமென்று விட்டிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : தலைவரவர்களே, இன்றியமையாத இடங்களில் முதலில் தேவைப்படுவது காவல் நிலையங்கள் தானே தவிர காவலர்களுக்கான குடியிருப்புகளாக இல்லை. காவல் நிலையங்களைத் தொடங்கிவிட்டு, பிறகு காவலர்கள் வாடகை வீடுகளிலே குடியிருந்தாலும், பிறகு அவர்களுக்கு வீடுகளை அமைத்துத் தருவதில் அரசு கவனம் செலுத்துகிறது.

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : தலைவரவர்களே, இப்பொழுது பல்வேறு போலீஸ் நிலையங்களில் போதுமான போலீஸ்காரர்களும் இல்லை. சில போலீஸ் ஸ்டேஷன்களில்......................(மணியடிக்கப் பட்டது.)

**Mr. DEPUTY SPEAKER: How is it relevent ?**

<u>திரு. ஜே. ஜேம்ஸ்</u> : இப்பொழுது திறக்கப்போகும் செல்வபுரம் போலீஸ் ஸ்டேஷனுக்கு உடனடியாக சப்-இன்ஸ்பெக்டர் சார்ஜ் எடுக்கும் முறையில் போலீஸ் அதிகாரிகளை நியமிக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : இப்பொழுது திறக்கப்போகின்ற செல்வபுரம் போலீஸ் ஸ்டேஷன் என்று அவராகவே உறுதிப்படுத்துகிறார்கள். செயற்குறிப்பு உண்டா என்ற கேள்விக்கு ஆம் என்பது பதில். கேள்வி கேட்ட உறுப்பினர் அதைப் பற்றிய விவரம் கேட்கவில்லை. ஆகவே, அது பரிசீலனையில் தான் இருக்கிறது. இப்பொழுதே போதுமான காவலர்கள் எல்லா நிலையங்களிலும் இருக்கிறார்கள். சென்னை நகரைப் பொறுத்தவரையில், 1 இன்ஸ்பெக்டர், 1 சப்-இன்ஸ்பெக்டர், 3 அல்லது 4 தலைமைக் காவலர்கள், 40 அல்லது 45 காவலர்கள் இருக்கிறார்கள். மாவட்டங்களிலும்: பிற இடங்களிலும் பொறுத்தவரையில் 1 சப்-இன்ஸ்பெக்டர், 2 தலைமைக் காவலர்கள், 20 அல்லது 25 காவலர்கள் இருக்கிறார்கள்,



<u>திரு. செ. அரங்கநாயகம்</u> : புதிதாகத் திறக்கப்பட இருக்கும் செல்வபுரம் நிர்வாக எல்லைக்குள் பக்கத்தில் அதையொட்டி இருக்கும் குமாரபுரம் பஞ்சாயத்து பகுதிகளும் சேர்க்கப்பட்டு திறப்பதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : என்னிடம் உள்ள விவரப்படி கோவை நகரம் செல்வபுரம் பகுதியில் தனியாகப் போலீஸ் ஸ்டேஷன் அமைக்க வேண்டுமென்று திரு. எஸ். ஏ. இராசமாணிக்கம், எம்.எல்.சி. ஒரு கோரிக்கையை விடுத்திருக்கிறார். அந்தக் கோரிக்கையின்மீது ஐ.ஜி. அவர்களுடைய கருத்து கேட்கப்பட்டது. ஐ.ஜி. அவர்கள் அந்த ஸ்டேஷன் தேவைதான் என்று பரிந்துரை செய்துள்ளார். புதிய குடியிருப்புகள் என்ற அளவுக்கு நிறைய மக்கள் தொகை பெருக்கம் இருக்கிறது. ஆகவே, அது தேவை என்று பரிந்துரைத்துள்ளார். நிதி நிலையை உத்தேசித்து இந்த ஆண்டிலேயே திறக்கலாமா அல்லது கொஞ்சம் தள்ளிப்போடலாமா என்று அரசு யோசித்து வருகிறது.

<u>திரு. என். மருதாசலம்</u> : கோவை செல்வபுரத்தில் ஹவுசிங் யூனிட் போலீஸ் ஸ்டேஷன் திறக்கப்படவேண்டுமென்று அந்தப் பகுதி முஸ்லிம்கள் ஜம்மாவிலிருந்து அரசுக்கு விண்ணப்பம் வந்துள்ளதா ? இதற்கு முன்னாலேயே விண்ணப்பம் எழுதியதற்கு "இல்லை" என்று பதில் அனுப்பியிருக்கிறார்கள். தற்போது அதிகமான கேஸ்கள் அந்தப் பகுதியில் வருவதாலும், பல்வேறு பட்டவர்கள் அதிக அளவில், குடியிருப்பதாலும் உடனடியாக ஒரு போலீஸ் ஸ்டேஷனை அங்கு திறக்க முன்வருவார்களா ?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u> : முதலிலே சொன்ன விடையிலேயே இவை எல்லாம் அடங்கியிருக்கின்றன.

<u>திரு. கே. ஏ. வகாப்</u>; இப்படிப்பட்ட காவல் நிலையங்கள் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகின்றன? மக்கள் தொகையின் அடிப்படையிலா? குற்றங்களின் அடிப்படையிலா? அரசியல் கட்சிகள் நடத்துகிற போராட்டங்களின் அடிப்படையிலா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: மாண்புமிகு உறுப்பினர் கேள்வியாக கேட்ட எல்லா அடிப்படையிலும்.

<u>திரு. தி. பொன்னுமலை</u>: சில கிராமங்களிலே போலீஸ் ஸ்டேஷன்கள் இருக்கின்றனவே தவிர காவலர் இல்லங்கள் இல்லாமல் அவதிப்படுகிறார்கள். ஏற்காடு போன்ற மலைப் பகுதிகளில் குடியிருப்புக்கு வசதிகள் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, அவர்களுக்கு குவார்ட்டர்ஸ் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி</u>: ஏற்கனவே சொன்னேன். காவலர்கள் குடியிருப்புக்காக அரசு கணிசமான தொகையை ஒதுக்கி ஆவன செய்து வருகிறது. படிப்படியாகச் செய்யப்படுகிற காரியங்களில் மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடங்களும் விரைவில் இடம் பெறும்.

திரு. கோ. இளங்கோவன்: சில பகுதிகள் சிற்றூர்களாக இருந்தாலும் நூற்றுக் கணக்கான பயணிகள் நாள்தோறும் வந்து செல்லுகிறார்கள். கல்லணை சிற்றூர்தான். அங்கு பிக்பாக்கட் அடிக்கப்படுகிறது. வழிப்பறி நடைபெறுகிறது. அப்படிப்பட்ட இடங்களிலும் காவல் நிலையங்கள் திறக்க ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு உறுப்பினர் பொதுவாக வகாப் அவர்கள் கேட்டது போல் கேட்கிறார்கள். குற்றங்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு காவல் நிலையங்களைத் திறக்க வேண்டியிருக்கிறது. பிக்பாக்கட்டுகள், வழிப்பறிகள் ஆகியவற்றின் எண்ணிக்கையைக் குறித்து எனக்கு அனுப்புவார்களேயானால் உடனடியாக ஆலோசிக்கப்படும்.

## *Fishing Trawlers Project.*

* 408 *Q.*—THIRU N. K. PALANISAMY :.Will the Hon. the Minister for Industries and Electricity be pleased to state the present stage of the proposal to implement the Fishing Trawlers project at Mandapam ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்தின் கூட்டுத்துறை நிறுவனமாக மண்டபத்தில் நிறுவப்பட்ட "மண்டபம், பெரிய இழுபடகு கட்டும் தளம்" உலர் மீன்துறை, பணிக்களரி முதலியவைகளை எடுத்து, தற்போது தேவையான பழுதுபார்த்தல் பணியை செய்து வருகிறது. வெளிநாட்டு தொழில்நுட்ப உடனுழைப்புடன் இத்திட்டம் செயல்படுத்தப்படவிருக்கிறது. இதற்கு தகுந்த வெளிநாட்டு நிறுவனங்களின் உடனுழைப்பு பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. இந்த கம்பனி, நிதி நிறுவனங்களிடம் தேவைப்படும் உதவிக்காக நடவடிக்கை எடுத்து வருகிறது.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: ஜாப்பனீஸ் கம்பெனியோடு தொடர்பு கொண்டு இதிலே திட்டங்கள் அமைப்பதாகப் பரிந்துரை இருந்ததே, அது எந்த அளவில் செயல்முறைக்கு வந்திருக்கிறது?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : The Project requires foreign technical know-how. Offers have been received from Messrs Imesa, Mexico and other leading firms for supply of technical know-how, basic engineering, etc. Offers are being examined and a final decision on the foreign colloborator will be taken shortly after negotiations with the foreign firm.



## ஸ்கூட்டர் உற்பத்தி

*409 வினா— திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில்—மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1974-ம் ஆண்டு ஆகஸ்ட் மாத அளவில் மதுரை மாவட்டத்தில் ஸ்கூட்டர் தொழிற்சாலை அமைப்பது பற்றி உடன்பாடு ஒன்று ஏற்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) அண்டு (இ): தமிழ்நாட்டில் ஸ்கூட்டர் உற்பத்தி செய்வதற்காக லக்னோவில் உள்ள "ஸ்கூட்டர்ஸ் இந்தியா லிமிடெட்" என்ற நிறுவனத்துடன் "தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்" ஓர் உடன்படிக்கை செய்திருக்கிறது. இங்ஙனம் அமைக்கப்படும் தொழிற்சாலையின் உற்பத்தித்திறன் ஆண்டொன்றுக்கு 30,000 ஸ்கூட்டர்கள்.

திரு. என். கிட்டப்பா: பெரும்பாலும் ஸ்கூட்டர் தேவை பெருகி வருகிறது. ஸ்கூட்டர் தொழிற்சாலை நம்முடைய தமிழகத்திலே முதல் முதலாகத் துவங்கப்பட இருக்கிற இந்த நிலையில் அது தமிழகத்தின் தேவையை நிறைவு செய்வதாக இருக்குமா? அப்படி ஸ்கூட்டர் தொழிற்சாலை நிறுவப்படும்போது "பஜாஜ்", "லாம்ப்பரட்டா" என்று இல்லாமல் தமிழகத்தில் மதுரையில் உருவாக்கப்படுகிற காரணத்தால் தமிழ்ப் பெயர் இட, "பாண்டியன்" என்று பெயரிட ஆவன செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: ஸ்கூட்டர் தொழிற்சாலை ஆரம்பித்த பிறகு அதுபற்றி யோசிக்கலாம். முதலிலே ஸ்கூட்டர் வரட்டும்; பிறகு பெயர் வைக்கலாம்.

திரு. அ. தேவேந்திரன்: இந்தத் தொழிற்சாலை தொழிற்துறையில் மிகவும் பின்தங்கிய மாவட்டமாக இருக்கும் தஞ்சை மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இது ஏற்கனவே மதுரை மாவட்டம் கப்பலூரில் ஆரம்பிப்பதாகக் குறிப்பு இருக்கிறது.

திரு. கே. எ. வகாப்: இந்த ஸ்கூட்டரானது நடுத்தர மக்களுடைய முக்கிய வாகனமாக ஆகிவிட்டது. இப்போது ஸ்கூட்டருக்கு ரிஜிஸ்டர் செய்தால் 10 ஆண்டுகள் ஆகிறது. ஆகவே, தமிழகத்தில் ஸ்கூட்டர் தயாரிக்கப்படும்போது வினியோக முறையை நம்மிடத்தில் வைத்துக் கொண்டு தமிழகத்திற்கு முதலிடம் கொடுக்க அரசு முன்வருமா?

[1975 மார்ச் 21

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தப் பதிலில் ஒரு விளக்கம் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். The proposal is to set up a Scooter Assembling unit ஸ்கூட்டர் அசெம்பிளிங் செய்வதுதான். இந்த நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட பிறகு மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்கள் பரிசீலிக்கப்படும்.

திரு. மு. பழனிவேலன்: திரு. வகாப் அவர்கள் சொன்னது போல் ஸ்கூட்டருக்கு மனுச் செய்தால் 8 வருஷம், 10 வருஷம் ஆகிறது. சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கூட ஸ்கூட்டர் கிடைப்பதில்லை. பெட் ரோல் அதிகமாக விற்கும் காரணத்தால் தொகுதியைச் சுற்றிப் பார்க்க ஸ்கூட்டர் இருந்தால் சுலபமாக இருக்கும். ஆகவே, முன்னுரிமை கொடுத்து சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே.சாதிக் பாட்சா: ஸ்கூட்டரை ஒதுக்கீடு செய்யும் அதிகாரம் மத்திய அரசாங்கத்தைச் சார்ந்தது. ஒதுக்கிய பிறகு விநியோகம் செய்யும் அதிகாரம் மாண்புமிகு ராமச்சந்திரனைச் சேர்ந்தது. அவரைக் கேட்டுப் பெற்றுக் கொள்ளலாம்.

திரு. என். மருதாசலம்: கோவை தொழில் நகரமாக இருப்பதால் ஸ்கூட்டர் தொழிற்சாலையை கோவையில் தொடங்க உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: இந்தத் தொழிற்சாலை மதுரை மாவட்டம் கப்பலூரில் ஆரம்பிப்பதாக முடிவு செய்யப் பட்டிருக்கிறது.

திரு. ஏ. எம். இராஜா: மதுரையில் ஆரம்பிக்கப்பட இருக்கும் ஸ்கூட்டர் தொழிற்சாலையிலிருந்து ஸ்கூட்டர் எப்போது மார்க்கெட்டுக்கு வரும்? விரைவில் மார்க்கெட்டுக்கு வர ஏற்பாடு செய்யப்பட்டிருக் கிறதா? இப்போது விலை அதிகமாக ஏறியிருக்கிறது. விலையைக் குறைத்துக் கொடுக்க அரசு முயற்சி செய்யுமா ?

THE HON. THIRU S.J. SADIQ PASHA: The project is likely to commence production during 1977.

அதுவரை கொஞ்சம் பொறுத்திருக்கவேண்டும்.

(முற்பகல் 9-30)

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கள் குறிப்பிட்ட மாதிரி ஸ்கூட்டருக்கு புக் பண்ணுல் 6 வருஷம், 7 வருஷம் என்று ஆகிறது. ஆகவே அசெம்ப்ளிங் என்பதை விட



1975 மார்ச் 21]

தமிழ் நாட்டிலேயே உற்பத்தி செய்கிற முயற்சிக்கு அரசாங்கமே பப்ளிக் செக்டாரில் ஏதாவது ஏற்பாடு செய்திருக்கிறதா? மேலும் ஸ்கூட்டரை விட மோட்டார் பைக் இருந்தால் கிராமங்களில் போக வசதியாக இருக்கும். எம். எல். ஏக்கள் தங்கள் தொகுதிகளுக்கு ஸ்கூட்டரில் போக முடியாது. மோட்டார் பைக் இருந்தால் அவர்களுக்கு வசதியாக இருக்கும். ஆகவே மோட்டார் பைக் மேன்யூபேக்சர் செய் வதற்கு பப்ளிக் செட்டாரில் தொடங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, ஸ்கூட்டர் செய்கிற அந்த தொழிற்சாலை மத்திய அரசினுடைய பப்ளிக் செக்டாரிலே ஏற்படுத்துவது, என்றும் ஒவ்வொரு மாநிலத்திற்கும் அசெம்பிளிங் யூனிட்டும் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் அசெம்பிளிங் யூனிட் மட்டும் நம் மாநிலத்திற்கு கிடைத்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னபடி கிராமங்களுக்கு ஸ்கூட்டரில் செல்ல முடியாது என்ருல், நம்முடைய முன்னோர்கள் சென்ற மாதிரி மாட்டு வண்டியில் போனுல் நல்ல முறையில் போகும். திரு. கோவை செழியன், காங்கேயம் மாட்டைக் கட்டிக் கொண்டு மாட்டு வண்டியில் போனுல் மிக நன்ருக இருக்கும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; மணப்பாறை மாடு தான் மாட்டு வண்டிக்குப்போ போனது. காங்கேயம் மாட்டிற்குப் பேர் கிடையாது.

THIRU K. S. KOTHANDARAMIAH May I know from the Hon. Minister for Industries and Electricitywhether Government has collected any statistics as to the probable number of scooters required for the State ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA: I have no particulars, Sir.

திரு. கோவை செழியன்: தலைவரவர்களே, மாட்டு வண்டியில் போனுல் வசதியாக இருக்குமென்று அமைச்சரவர்கள் சொன்னுர்கள். ஜெட் விமானம் இருக்கிறது இந்தக் காலத்தில் மாதம் ஒரு காத வழி போகுமே. அந்த நிலையில் மாட்டு வண்டியில் போனுல் என் தொகுதிக்கு நான் இங்கிருந்து போனுல், காசி யாத்திரை போகிற மாதிரி, மாடு தான் மிச்சமாகப் போய்ச் சேரும். ஆகவே மோட்டார் பைக் செய்கிற தொழிற்சாலையை ஏற்படுத்துமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: தலைவரவர்களே, காங்கேயம் மாடுகள் 10 மைல் மணிக்குப் போகும். ஸ்கூட்டர்களில் போனுல் சில வேலைகளில் விபதது ஏற்பட்டு விடுகிறது. மாட்டு வண்டியில் போனுல் விபத்து ஏற்படாது. துணைத் தலைவரவர்கள் மணப்பாரை மாடுகளைப் பற்றிச் சொன்னுர்கள். மணப்பாறை மாடுகள் ஏருக்காகும். காங் கேயம் மாடுகள் வண்டிக்காகும்.

திரு. எம். சுரேந்திரன்: தலைவரவர்களே, ஸ்கூட்டர் தொழிற்சாலையைப் பொறுத்த வரை, ஸ்கூட்டர் லிமிடெட், லக்னோ நிறுவனத்தினுடைய பங்கு எவ்வளவு? நம்முடைய பங்கு எவ்வளவு? மொத்த எஸ்டிமேட் என்ன? 1977-ல் தான் செயலுக்கு வரும் என்று குறிப்பிடப்பட்டதே, இதை விட வேகமாக உற்பத்தியைத் துவங்குவதற்கு, அசெம்பிளிங் தொழிற்சாலையை நடத்துவதற்கு அரசு முயற்சிக்குமாவென்று அறிய விரும்புகிறேன். அதே நேரத்தில் அந்த ஸ்கூட்டருக்கு, அது வேகமாக ஓடும் வாகனமாதலால், வெள்ளம் போல போகிற "வைகை" என்று பெயர் வைக்கப்படுமா வென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA: Sir, as per agreement entered, M/s. Scooters India Ltd., Lucknow will supply that technical know-how for manufacture of scooters which they have acquired from M/s. Innocenti, Milano, Italy.

For the supply of technical know-how, M/s. Scooters India Ltd. have been paid a certain sum by us.

திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, கல்யாணம் ஆகாத இளைஞர்களுக்கு ஸ்கூட்டர் இருந்தால் சீக்கிரம் கல்யாணம் ஆகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது, என்ற காரணத்தினால் அவர்களுக்கு வினியோகத்தில் முன்னுரிமை வழங்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, கல்யாணம் ஆகாத இளைஞர்கள் ஸ்கூட்டருக்காக மாமனாரிடத்தில் பணம் கேட்கக் கூடாது என்று விரும்புகிறோம்.

திரு. தோப்பூர் திருவேங்கடம்: தலைவரவர்களே, இந்த ஸ்கூட்டர் தொழிற்சாலையில் வேலையில்லாத என்ஜினீயர்களுக்கும், பட்டதாரிகளுக்கும், தொழில் நுணுக்கம் தெரிந்தவர்களுக்கும் பங்குகள் தரப்பட்டு அவர்களைப் பங்குதாரர்களாக சேர்த்துக் கொண்டு, கேரளாவில் ஸ்கூட்டர் தொழிற்சாலை நல்ல முறையில் பணியாற்றுகிற அந்த அமைப்பைபோல் இங்கே துவங்குவதைப் பற்றி அரசு ஆலோசிக்குமாவென்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இந்தத் தொழிற்சாலைத் பொதுத்துறையில் ஆரம்பிபிக்கப்பட இருக்கிறது.

திரு. கு. காமாட்சி: தலைவரவர்களே, 1977-ல் தான் இந்த ஸ்கூட்டர் மார்க்கெட்டுக்கு வரும் என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இப்போதே ஸ்கூட்டர் 6, 7 ஆயிரம் ரூபாய் என்று விற்கிறது. 1977-ல் இந்த ஸ்கூட்டர் வெளியில் வந்தால் 10, 12 ஆயிரம் ரூபாய் அளவிற்கு விலை விற்கும். இந்த நிலையில் இந்தத் தொழிற்சாலையை ஆரம்பிப்பதால் அரசுக்கு லாபகரமாக இருக்குமாவென்று அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, முதலிலே லக்னோவிலே அந்த தொழிற்சாலையிலே மேன்யூபேக்சர் முடிவடைய வேண்டும். அவர்கள் எவ்வளவு சீக்கிரமாகச் செய்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் நம் மாநிலத்தில் வேலையைச் துவக்க முடியும். இப்போது நிறைவேற்றப்பட்டுள்ள திட்டப்படி, இந்த விவரப்படி 1977-ல் நடைபெறும்.

திரு. எஸ். ஆறுமுகம்: தலைவரவர்களே, சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் வேண்டுமென்று கேட்கப்பட்டது. மாண்புமிகு போக்குவரத்து அமைச்சரவர்கள் கொள்கையைச் சொன்னார்கள். சட்டத்தில் இடமில்லை என்றார்கள். கார் கொடுக்க முடியும் என்றார்கள். அமைச்சரவை சட்ட மன்ற உறுப்பினர்களுக்கு ஸ்கூட்டர் கொடுக்கலாம் என்ற தீர்மானத்தை நிறைவேற்றுமாவென்று அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை.)

திரு. குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன்: தலைவரவர்களே, ஆந்திராவில் ஸ்கூட்டர் மெஷினில் பாடி கட்டுகிற போது த்ரீ வீலராக பாடி கட்டுகிறார்கள். நம் மாநிலத்தில் அசெம்பிளிங் செய்கிற போது ஃபோர் வீலராக கார் போலச் செய்தால் அதற்கு நல்ல டிமாண்ட் இருக்கும். வசதியாகவும் இருக்கும். அப்படிச் செய்வதற்கான செயற்குறிப்பு ஏதாவது அரசினிடத்தில் இருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, இப்போது இருக்கிற பிரச்சினை ஸ்கூட்டர் தொழிற்சாலையை ஆரம்பிப்பது பற்றியது. ஸ்கூட்டர் தொழிற்சாலையை ஆரம்பித்த பிறகு பாகங்கள், நமக்குக் கிடைத்த பிறகு, ஸ்கூட்டரை அசெம்பளிங் செய்த பிறகு, இரண்டு வீலா, மூன்று வீலா அல்லது நான்கு வீலா என்பது பற்றி பிறகு யோசிக்கலாம்.

திரு. மு. சின்னசாமி: தலைவரவர்களே, மாலை நேரத்தில் ஸ்கூட்டரில் ஜோடியாகப் பல பேர்கள் போவதைப் பார்க்கிற போது 57 வயதான எனக்கே கிளுகிளுப்பு ஏற்படுகிறது. ஆகவே அங்கத்தினர்களுக்கு குதிரை வாங்கிக் கொடுத்து அவர்கள் ஜோடியாக போகிற மாதிரி அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறியவிரும்புகிறேன்.

MR. Deputy Speaker: questi on disallowed

திரு. கே. என். குமாரசாமி: தலைவரவர்களே, இப்போது பெட்ரோல் பிரச்சினை கடுமையாக இருக்கிற காரணத்தினால் புதிதாக காற்றிலே ஓடக் கூடிய கார்களை வெளி நாட்டிலே கண்டுபிடித்திருக்கிறார்கள். அதுமாதிரி நம் நாட்டிலே கண்டு பிடித்து காற்றிலே போகக் கூடியவாறு செய்வதற்கு அமைச்சரவர்கள் முன் வருவார்களாவென்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே இதற்கு நம் பக்கத்து காற்று சக்தியாக இருக்கும். பல்டைம் காற்று பயன்படுமாவென்று தெரியாது காற்றின் மூலமாக ஓட்ட முடியும் என்பதைப் பற்றி பத்திரிகையில் நானும் படித்திருக்கிறேன். இதைப்பற்றி விவரம் என்னிடத்தில் இல்லை.

திரு. கே. ஏ. வகாப் : தலைவரவர்களே, இந்த ஸ்கூட்டருக்கும், சைக்கிளுக்கும் இடையில் மோபேட் என்ற வாகனம் இருக்கிறது. இதை நம்முடைய தொழில் துறையில் இண்டியில் செய்து வருகிறார்கள். இதை விரிவுபடுத்தி ராணிப்பேட்டையிலும் ஆரம்பிக்க குறிப்பு இருக்கிறது. ஆகவே இதை விரிவுபடுத்தி, உற்பத்தி செய்வதற்கு அரசு முன் வருமாமென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, இது ஒரு தனியான தொழிற்சாலை. இது பற்றியும் அரசின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இளைஞர் அணி.

*410 வினா—திரு. எல். கணேசன் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

இளைஞர் அணித் திட்டத்தின் மூலம் இதுவரை எத்தனை பேருக்கு வேலை வாய்ப்புக் கொடுக்கப்பட்டுள்ளது—

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இதுவரை 5,407 பேர் இளைஞர் அணியில் பணிக்கமர்த்தப்பட்டுள்ளனர். நடப்பு ஆண்டில் மேலும் 650 பேரை (400 ஆண் 250 பெண்) பணிக்கமர்த்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

*411 வினா.—திரு. வீ. கே. இராஜாப் பிள்ளை : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா.

(அ) குமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இளைஞர் அணியினர் எண்ணிக்கை என்ன ?

(இ) அவர்களில் 1974-ம் வருடம் நவம்பர் மாதத்தில் எத்தனை பேர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர் ? ஏன் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் இளைஞர் அணித்தொண்டர்களின் எண்ணிக்கை 69. மேலும் 7 ஆண் தொண்டர்கள் அரசு உயர்நிலைப் பள்ளிகளிலும், 32 பெண் தொண்டர்கள் பல்வேறு நிறுவனங்களிலும் மேற்படி மாவட்டத்தில் பணிபுரிகின்றனர்.





(இ) ஊராட்சி ஒன்றியங்களில் பணிபுரியும் 69 ஆண் தொண்டர்களில் 37 தொண்டர்கள் தற்காலிகமாக பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். ஏனெனில் வட்டார வளர்ச்சி அலுவலர்களும் மற்ற அலுவலர்களும் இளைஞர் அணி இயக்குநர் ஆணையின்படி திடீரென்று கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது இத் தொண்டர்கள் தாங்கள் பணிசெய்ய அமர்த்தப்பட்ட கிராமங்களிலேயே காணப்படவில்லை.

* 412 *Q.*—Thiru N. K. PALANISAMY AND Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether a large number of people belonging to the Youth Service Corps were placed under suspension during 1975 for dereliction of duty; and

(*b*) if so, the details of the same ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : —(அ) அண்டு (இ) இளைஞர் அணி இயக்குநரின் ஆணைப்படி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தொண்டர்கள் பணிபுரியும் கிராமங்களுக்குச் சென்ற நவம்பர் திங்களில் பார்வையிடச் சென்ற போது சில தொண்டர்கள் அவர்களது கிராமங்களிலேயே காணப்படவில்லை. அப்படிப்பட்ட 435 ஆண் தொண்டர்கள் தாற்காலிக பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியிலே சேர்த்துக் கொள்ளப்பட்டவர்களுக்கு பப்ளிக் சர்வீஸிலே முன்னுரிமை வழங்குவதற்கு ஆலோசனை இருக்கிறதா ? அதே மாதிரி பல்வேறு நபர்கள் தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்களே அவர்களை மறு முறையும் எடுத்துக் கொள்ள செயற்குறிப்பு இருக்கிறதா? அவர்கள் இத்தனை மணி நேரம் இன்ன இடத்தில் வேலை செய்ய வேண்டுமென்ற திட்டவட்டமான ஆலோசனை ஏதாவது இருக்கிறதா ? இவைகளுக்கான விவரங்களை அமைச்சரவர்கள் தெரிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணி புரிந்த தொண்டர்களுக்கு அவர்களது பணிக்காலம் முடிந்தவுடன் அரசுப் பணிகளில் முன்னுரிமை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. அரசுப் பணிகளுக்கு வயது வரம்பைக் கணக்கிடும்போது இளைஞர் அணியில் தொண்டர்களாகப் பணி புரிந்த இரண்டு ஆண்டுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். இந்த ஆணையில் இளைஞர் அணியில் பணி புரிந்த தொண்டர்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்படும் என்று ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கிறது. இளைஞர் அணியில் சேருகின்ற, தொண்டர்கள், தொண்டர்களாகப் பணியாற்றுகிற போது, கிராமங்கள் மற்றும் ஆங்காங்கே செயல்படவேண்டிய பல்வேறு வேலைத் திட்டங்களைப் பற்றியும் அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்படுகிறது. அவர்கள் கிராமங்களுக்குச் சென்று அந்தந்தப் பகுதிகளிலே பணியாற்றுகின்ற வாய்ப்பு அவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

திரு. ஆ. கு. சுப்பையா : உதவித் தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் சிலர் தற்காலிகமாக பணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். அவ்வாறு செய்யப்பட்டவர்கள் நூற்றுக்கணக்கில் இருப்பதால் மீண்டும் அவர்களுக்கு வேலை கொடுப்பதற்கு அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, 435 பேர்களில் அவர்களுடைய திறன் அறிந்து அவர்களுக்கு வழிவகைகள் செய்து தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு இருக்கிறது.

திரு. மு. சின்னசாமி : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் வேலை செய்யும் நண்பர்கள் 100-க்கு 90 சதவிகிதம் கடமையைச் செய்யாமல் சர்க்கார் பணத்தை ஏமாற்றிக் கொண்டு இருக்கிறார்கள், ஆகவே, இந்தத் திட்டத்தைக் கைவிட அரசு ஆலோசிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, படித்து வேலையில்லாமல் இருக்கும் இளைஞர்களுக்கு வேலை அளிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு தான் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்களில் நம்முடைய முதலமைச்சர் அவர்களால் உருவாக்கப்பட்டது. எனவே, அவர்களைத் திடீரென்று நிறுத்துவதற்கு இப்போது யோசனை இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவரவர்களே, இந்த வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காகத்தான் இளைஞர் அணி ஆரம்பிக்கப்பட்டது என்று நினைக்கிறேன். அந்த அடிப்படையில் அதிலே சேர்த்துக் கொண்டவர்களுக்கு அரசாங்க உத்தியோகத்தில் ஏதாவது முன்னுரிமை கொடுக்கப்பட்டு இருக்கிறதா? இன்னும் பல இளைஞர்கள் படித்தவர்கள் இப்போது வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்களையும் இளைஞர் அணியில் சேர்த்து, அவர்களுக்கும் முன்னுரிமை தந்து அரசாங்க உத்தியோகத்தில் ஏற்றுக்கொள்ளப்படுவார்களா? அவர்கள் சமூதாயத்திற்கு பயன் தரத்தக்க அளவில் அவர்களுக்கு பல பணிகளைத் தந்து அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : சம்பந்தப்பட்ட கேள்வி மீது ஒரு துணைக் கேள்வி போடுங்கள். பெரிய கேள்வியாகப் போடாதீர்கள். ஒரு கேள்விதான் சப்ளிமெண்டரி என்ற முறையில் போடவேண்டும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : ஒரு வாய்ப்புக் கிடைக்கிறது.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, அவர்களுக்கு இப்போது சம்பளம், வேலை என்ற அடிப்படையில் இல்லாது அவர்கள் பணிபுரிகிற காலங்களுக்கு உதவி ஊதியம் அளிக்கப்படுகிறது. அவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிற வரையில் அது அளிக்கப்பட்டு வருகிறது. ஏறத்தாழ 1,800 பேருக்கு மேல் இன்று இந்த அணியில் பணியாற்றிக்கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



திரு. ஆலடி அருணா : தலைவரவர்களே, இளைஞர் அணியில் பணியாற்றுகிறவர்கள் அரசாங்கம் எதிர்பார்த்த அளவுக்கு நல்ல முறையில் பணியாற்றவில்லை என்பது பொது மக்களின் கருத்து. எனவே, அவர்கள் வாழ்க்கைக்குப் பயன்படும் வகையில், அவர்களைத் தொழிற்சாலைகளுக்கு அனுப்பி, தொழில் நுட்ப அறிவு கொடுக்கும் வகையில், அரசு செய்வதற்கு முன் வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்போதே இந்த இளைஞர் அணியில் தொழில் பயிற்சி பெற்றவர்கள், தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்கள் என்று இப்படி பல்வேறு துறைகளைச் சார்ந்தவர்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எல்லாம் ஆங்காங்கு பணிகள் கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு அப்படித் தொழில் நுணுக்கப் பயிற்சி பெற்றவர்களை தொழிற்சாலைகளுக்கு அனுப்பி பணியாற்றச் செய்து, அவர்களுக்கு அங்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது. அதைப் போலவே, சமீபத்தில் அரசாங்கத்திற்குச் சொந்தமான நிறுவனங்களிலும், பல்லவன் டிரான்ஸ்போர்ட் நிறுவனத்திலும் அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்ற ஆணை பிறப்பித்திருக்கிறோம். பட்டதாரிகளாக இருந்தால் அவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் அளிப்பதில் முன்னுரிமை அளிக்கவேண்டுமென்று சொல்கிறோம். ஆசிரியர்களாக இருந்தால் கல்வித் துறையில் முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். அவரவர்கள் தொழில் திறனுக்குத் தகுந்தவாறு முன்னுரிமை வழங்கும் திட்டம் இப்போதே செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திரு. கோ. இளங்கோவன் : தலைவரவர்களே, இளைஞர் அணியில் சேர்ந்தவர்களுக்கு அவர்கள் சக்திக்கு அப்பாற்பட்ட பணிகளைக் கொடுக்கிற காரணத்தால் உரிய இடத்திலிருந்து பணியாற்ற முடியவில்லை என்ற புகார் வருகிறதே, அது சரிதானா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அவர்களின் சக்திக்கு உட்பட்டு பணி வழங்கப்படுகிறது. உதாரணத்திற்குச் சொல்லப்போனால், அவர்கள் பணியாற்றும் கிராமங்களில் எழுதப் படிக்கத் தெரியாதவர்களுக்கு அவர்களுக்கு வாழ வழி செய்வதற்கும், சுகாதாரம் பற்றி எடுத்துச் சொல்வதற்கும், தீண்டாமை ஒழிப்பதற்கும், பொழுது போக்கு வசதிகளைச் செய்து தருவதற்கும் போன்ற இப்படிப்பட்ட வேலை கொடுக்கப்பட்டு வருகிறதே அல்லாமல், அவர்கள் சக்திக்கு அப்பாற்பட்ட வேலை கொடுக்கப்படவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1975 மார்ச் 21

திரு. மு. சத்தியமூர்த்தி : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் தற்காலிக பதவி நீக்கம், இளைஞர் அணியில் இருக்கக்கூடியவர்கள் கிராமங்களில் இல்லாத காரணத்தால்தான், செய்யப் பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். அவர்களுக்கு அளிக்கப்படுகின்ற ஊக்க ஊதியம் குறைவாக இருக்கிற காரணத்தாலும், அடுத்த மாவட்டத்திலிருந்து பணியாற்ற வேண்டிய காரணத்தாலும் அவர்கள் அதிகம் கிராமங் களில் தங்கவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அந்த ஊக்க ஊதியத்தை உயர்த்துவதற்கு அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அதை உயர்த்திக் கொடுக்க உத்தேசம் இல்லை. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்களை அந்தந்த மாவட்டத்திலேயே வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. மேலும் ஊராட்சி ஒன்றியங்களில் வேலை கொடுக்க வேண்டும், அப்படி வேலை கொடுத்தால் செவ்வனே, அவர்கள் வேலையைச் செய்ய முடியும் என்று கூறப்பட்டது. அதையும் அரசு பரிசீலித்து வருகிறது.

திரு. தி. பொன்னுமலை : தலைவரவர்களே, இளைஞர் அணிக்கு வரு கிறவர்கள், பட்டதாரிகள், பி.ஏ. பி.எஸ்.ஸி., எம்.எஸ்.ஸி., படித் தவர்கள். தற்போது கொடுக்கப்படக்கூடிய ஊதியம் போதவில்லை, அத னால் சரியாகப் பணிபுரிய முடியவில்லை என்று சொல்கிறார்கள். ஆகவே, அதை உயர்த்திக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அதே கேள்வியைத்தான் அவரும் கேட்டார்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நான் முதலிலேயே சொன் னேன். அது அவர்களுக்குக் கொடுக்கப்படுகிற சம்பளம் அல்ல. ஊக்க ஊதியம் தான் கொடுக்கப்படுகிறது. அதற்கு மேல் உயர்த்திக் கொடுக்கும் நோக்கம் இந்த அரசுக்கு இல்லை.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, இந்த இளைஞர் அணியில் இருக்கிறவர்களை அரசாங்கப் பணிக்கு எடுத்துக் கொண் டால், பின்னால் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச செல்ல வேண்டுமா? அல்லது அவர்களை எடுத்துக் கொள்கிறபோதே வயது 25—அதற்கு மேற்பட்டு விட் டால்—அந்த வயது வரம்பிற்கு மேலும் அவர்கள் சர்வீஸ் கமிஷன் போக பாதிக்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். அவர்களுக்கு வேலை தேடித்தரும் நிலையத் தில் கூட முன்னுரிமை கொடுக்கப்படுகிறது. சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குப் பின்னால் தான் அவர்களுடைய பணிகளை நிரந்தரமாக்குவதற்கு, ரெகுல் ரைஸ் செய்வதற்கு வழி வகை இருக்கிறது.



(1975 மார்ச் 21

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இளைஞர் அணியில் உள்ள வர்களுக்கு கிராம சேவக் நியமனம் தரலாமா என்பது குறித்து ஒரு செயற்குறிப்பு இருந்தது. அதற்காக அவர்களுடைய வில்லிங்னெஸ் கூட கேட்கப்பட்டது. அப்படி அவர்களை கிராம சேவக்காக நியமனம் செய்வதாக இருந்தால் அவர்கள் பட்டதாரிகளாக இருப்பதால்—அவர்களை "செகன்ட் கிரேடில் அல்ல" "பஸ்ட் கிரேடில்" நியமனம் செய்ய அரசு ஆலோ சிக்குமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, ஒரு 525 பேர்களை கிராம சேவக்குகளாக நியமிககலாம் என்று அரசு யோசித்துக் கொண்டு இருக்கிறது. இப்போது இருக்கிற நிலையில் இந்த ஆண்டு அதைச் செய்வதாக இல்லை என்றாலும் அது பற்றி பரிசீலனை செய்து இருக்கிறோம். அடுத்த ஆண்டு துவங்க யோசனை இருக்கிறது. இப்போது அவர்களுக்கு நியமனம் கொடுப்பது சலுகையே தவிர, முதலிலேயே அவர்களை முதல் தரமாகப் போடுவது என்பது இயலாத காரியம். மாவட் டத்திற்கு மாவட்டம் கிராம சேவக்குகளை மாற்றுவது என்பதே கடினம். ஏனெனில் மாவட்ட சீனியாரிட்டி வைத்து இருக்கிறார்கள். அது இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. தேவேந்திரன் : தலைவரவர்களே, இந்த இளைஞர் அணியில் சேருவதற்கு பி.ஏ., பி.காம். பட்டம் பெற்றவர்கள், பஸ்ட் கிளாசில் பாஸாகி இருந்தால் தான் எடுத்துக் கொள்கிறார்கள் என்று சொல் கிறார்கள். இது உண்மையாக இருக்குமானால், பிற்பட்ட மாணவர்கள் எல்லாம் பஸ்ட் கிளாஸ் வாங்க முடியுமா என்பதையும் அரசு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அங்கே பட்டதாரிகள் தான் தேர்ந்தெடுக்கிறார்களே தவிர, பஸ்ட் கிளாஸா, செகண்ட் கிளாஸா என்று பார்ப்பது இல்லை. அப்படி விதி இல்லை. இதிலே பிற்படுத்தப் பட்ட மாணவர்களுக்குச் சலுகை வழங்கப்பட்டு இருக்கிறது.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, இந்தச் சிறப்பான திட்டம் தமிழ் நாட்டிலே தான் இருக்கிறதா அல்லது வேறு ஏதாவது மாநிலத் தில் இருக்கிறதா? இது பற்றி மத்திய அரசு, இந்த திட்டத்தின்பால் அக்கறை கொண்டு அதற்காக ஏதாவது மானியம் தருகிறார்களா?

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : ஒரே கேள்விக் கேளுங்கள்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தலைவரவர்களே, தமிழ் நாட்டில் இந்தத் திட்டம் 1971-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாள் பேரறிஞர் அண்ணா அவர்கள் பிறந்த நாளன்று துவங்கப்பட்டது. இந்த மாநிலத்திலே தான் முதலில் வழங்கப்பட்டது என்று கருதுகிறேன்.

1975 மார்ச் 21]

பெரியகோட்டையில் குடிநீர் வழங்கு திட்டம்.

*413 வினா—திரு. த. சோனையா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டம், மானாமதுரை ஊராட்சி ஒன்றியம், பெரிய கோட்டைக்குப் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கும் திட்டம் ஏதேனும் ஆய்வி லுள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : ஆம்.

மாயூரம் ஒன்றியத்தில் புதிய பாலங்கள்.

*414 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாயூரம் ஒன்றியம் நெ. 2 கடலங்குடி பஞ்சாயத்தையும் முடி கண்டநல்லூர் பஞ்சாயத்தினையும் இணைத்திடும் பணியில் தெற்கு ராஜன் வாய்க்கால் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். கிட்டப்பா: மாயூரம் ஒன்றியம், கடலங்குடி முடிகண்ட நல்லூர் இடையே ராஜன் வாய்க்கால் குறுக்கே பாலம் வேண்டுமென்ற கோரிக்கை இருந்து வருகிறது. இது குறுகலான பகுதி தான். இந்தப் பாலத்தை ரூ. 15,000, ரூ. 20,000 இல்கட்டி விடலாம் என்று விவரம் தெரிந்தவர்கள் சொல்லுகிறார்கள். இதைமேற் கொள்ள அரசு ஆவன முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: இந்த ஓடக்கரை கொள்ளடக் கரை ராஜன் வாய்க்கால் பாலம் கட்ட வேண்டுமென்று இருக்கின்றது. இதற்கு உறுப்பினர் சொல்வது போல 15 ஆயிரத்தில் கட்ட முடியாது. ஒரு லட்சம் செலவாகும் என்று மதிப்பீடு செய்யப்பட்டு இருக்கின்றது. ஆகையினால் செய்ய வேண்டியது அவசியம். ஆனால், இந்த ஆண்டு பணம் ஒதுக்கீடு குறைவாக இருக்கின்றதால் எடுத்துக் கொள்ள முடியவில்லை.

திரு. ஆ. கு. சுப்பையா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத் தில் அதிகமாக ஆறுகளும், கால்வாய்களும் ஓடிக்கொண்டு இருப்பதால் கிராமத்தில் உள்ளவர்களுக்காக அவசியம் பாலம் கட்ட வேண்டி இருக்கி றது. இந்த அவசியத்தை தஞ்சை மாவட்டத்தில் கவனத்தில் கொண்டு பாலம் கட்டிக் கொடுப்பதற்கு அரசாங்கம் முன் வருமா ?



[1975 மார்ச் 21

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : உறுப்பினர் சொல்வது முழுவதும் உண்மை. பணம் ரூ. 15 லட்சம் கொடுக்கப்பட்டு இருக்கின்றது. மாநிலம் பூராவும் செய்ய வேண்டிய காரணத்தால் இந்த ஆண்டு முடி யாது.

*415 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

மாயூரம் ஒன்றியம், கேசிங்கன் பஞ்சாயத்திலுள்ள காவாள மேட்டி டையும் தாழஞ்சேரியினையும் இணைக்கும் வகையில் பழவாற்றின் குறுக்கே பாலம் அமைத்திடும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : இல்லை.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, இந்த மாயூரம் ஒன்றி யத்தில் பல இடங்களில் குறிப்பாக நந்தனார் பிறந்த மேல்நல்லூரிலும் பேராசிரியரின் சொந்த ஊரான கொண்டத்தூர். பருத்திக்குடி போன்ற இடங்களில், 4. 5 ஆண்டுகளுக்கு முன்னால் வேலை துவங்கப்பட்டு பாலங்கள் கட்டி முடிக்கப்படாமல் பாதியில் நிறுத்தப்பட்டு இருக்கின்றது. இவை களைக் கட்டி முடிக்க அரசு ஆவன செய்யுமா? ஒரு இலட்சம் மதிப்பீடு என்று சொன்னார்கள். வேறு வகையை பயன் படுத்தி அதிலே போகக் கூடிய வண்டிகளிடமிருந்து கொள்ளிடம் பாலத்தில் வசூல் செய்வதுபோல வசூல் செய்ய அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, இந்த பாலத்தை பொறுத்த வரையில் தாழஞ்சேரி வடக்கடை ரோட்டில் இருக்கிறது. 6 லட்சம் தேவை என்று எஸ்டிமேட் போட்டு இருக்கிறார்கள். இதைச் செய்ய வேண்டுமென்ற யோசனை இருந்து வருகிறது. இருந்தா லும், இப்போதுதான பண நெருக்கடி காரணமாக 1975–76-ல் செய்ய முடியவில்லை என்று பதில் தந்து இருக்கிறார்கள்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, மதிப்பீடு மிகுந்த அதிர்ச்சியைத் தந்து இருக்கிறது. பாலம் அமைக்க வேண்டிய இடம் குறுகிய இடம். எந்த வகையில் இந்தப் பாலம் கட்டுவதற்கு அந்த மதிப்பீட்டுத் தொகையினை அதிகாரிகள் மாண்புமிகு அமைச்சரிடம் அறி வித்து இருக்கிறார்கள் எனபதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி : தலைவர் அவர்களே, அகலம் 150அடி இருக்கின்றது. 150அடி அகலத்திற்கு இந்த பகுதியிலே நீரோட்டம் இருக்கின்ற காரணத்தால் அகலம் நீட்டம் கூடுகிற அளவுக்கு பார்க்கிறபோது 6 லட்சத்திற்கு இந்தத் திட்டம் போட்டுத் தந்து இருக்கி றார்கள்.

1975 மார்ச் 21]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு— ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதை குறிக்கும்).

2 இந்திய ஹாக்கி பெடரேஷன் குழுவிற்குப் பாராட்டு.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்திய ஹாக்கி டீம் ஆனது நமது தமிழ் நாட்டுக்கு வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதை வரவேற்று ஒரு பாராட்டுதலைத் தெரிவித்து இருக்கின்றார். அதன் பெடரேஷன் தலைவர் நமது மாநிலத்தைச் சார்ந்த திரு. எம். ஏ. எம். ராமசாமி அவர்கள். ஆகவே இந்த வெற்றியானது தமிழகத்திற்கும் சிறப்பைத் தந்து இருக்கின்றது. கர்நாடக சட்டசபை நேற்றைய தினம் ஹாக்கி வீரர்களைப் பாராட்டி தீர்மானம் நிறைவேற்றி இருக்கின்றது. பஞ்சாப் மாநில முதலமைச்சர் அவர்கள் ஒவ்வொரு அங்கத்தினருக்கும் ரூ. 5,000 வீதம் பரிசளிப்பு அளித்து இருக்கிறார். பாராளுமன்றம் ஹாக்கி விளையாட்டு வீரர்களுக்கு ஒரு பாராட்டைத் தெரிவித்து இருக்கிறது. ஆகவே, நாமும் இந்தப் பாராட்டுதலில் கலந்து கொண்டு இந்த டீமுக்கு பாராட்டு தெரிவிக்க கடமைப்பட்டு இருக்கிறோம். இந்தச் சட்ட மன்றத்தில் இதற்கான ஒரு பாராட்டு தீர்மானம் நிறைவேற்ற கடமைப்பட்டு இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த டீமுக்கு நமது சட்ட மன்றம் வாயிலாக பாராட்டுத் தெரிவிப்பது பொறுத்தமாக இருக்கும் என்று தலைவர் மூலமாக மாண்புமிகு முதலமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.

(திரு. வி. கிருஷ்ணமூர்த்தி எழுந்தார்.)

திரு. பெ. சீனிவாசன்: பாயின்ட் ஆப் ஆர்டர்

There is an announcement in the papers by the International Hockey Federation that donation should not exceed Rs. 400./-.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, இந்திய ஹாக்கி பெடரேஷன் குழுவினர் கோலாலம்பூரில் வெற்றி பெற்றது குறித்து இந்த அவை பாராட்டுதலை தெரிவிக்க வேண்டுமென்ற கருத்தை நண்பர் ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அவை சார்பில் ஒரு தீர்மானம் கூடத் தேவையில்லை. இந்த அவை சார்பில் நாம் அனைவரும் நம்முடைய பாராட்டுதலை நம்முடைய கரவொலி மூலமாக அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்வோம். (கரவொலி) அவர்களுக்குப் பணம் தரவேண்டும் என்று சொன்னார்கள். நேற்றே தரப்பட்டு விட்டது. நேற்றைய தினம் அங்கே பேசிய திருமதி அனந்தநாயகி அவர்கள் பஞ்சாபிலே ரூ. 5,000 தந்து இருக்கிறார்கள். நம்முடைய முதலமைச்சர் பஞ்சாபை வென்று விட வேண்டுமென்று சொன்னார்கள். அப்போது நான் சொன்னேன்



1975 மார்ச் 21] [டாக்டர் மு. கருணாநிதி]

இன்னொரு நாட்டை வெல்ல வேண்டுமே தவிர மாநிலத்திற்கு மாநிலம் வெல்வது ஒருமைப்பாட்டிற்கு உகந்தது அல்ல என்று குறிப்பிட்டு இருக்கிறேன். அந்த ஹாக்கி குழு பெடரேஷனுக்கு குதிரைப் பந்தையக் குழுவினர் நிதி அளிக்கும்போது தமிழகம் சார்பில் வரி விலக்கு அளிக்க வேண்டுமென்று கேட்டார்கள். இதை பெடரேஷனுக்கு வழங்கி இருக்கிறோம். இது பஞ்சாபை விட அதிக ரூபாய் உதவி செய்த்தாக அர்த்தம்.

திரு. சீனிவாசன் குறிப்பிட்டது போல 400 ரூபாய்க்கு மேல் தரக் கூடாது. ஆயிரம் ரூபாய் அவர்களுடைய குடும்ப நிதிக்குத் தரப்பட்டதே தவிர விளையாட்டு வீரர்களுக்கு அல்ல என்று தெரிவித்துக்கொண்டு மீண்டும் ஒரு முறை ஹாக்கி வீரர்களையும் தலைமை வகித்த திரு. ராமசாமி அவர்களையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

3. நடைமுறைக் கேள்வி.

லாபியில் ரகசிய காவல் துறை அதிகாரிகள் நடமாட்டமும் பத்திரிகை நிருபர்கள் செய்தி அனுப்புவதில் ஏற்படும் சிரமமும் குறித்து.

திரு. கோவை செழியன் : தலைவர் அவர்களே, என்னுடைய பாயின்ட் ஆப் ஆர்டர் என்ன வென்றால் சமீப காலமாகவே நம்முடைய சட்ட மன்றத்தினுடைய லாபியிலே குறிப்பாக பத்திரிகை நிருபர்கள் தங்களுடைய செய்திகளைச் சேகரிக்கிற இடத்தில் சி.ஐ.டி. அதிகாரிகள் பக்கத்திலே நின்றுகொண்டு என்ன, யார், யார் எந்தப் பத்திரிகைக்கு செய்தி அனுப்புகிறீர்கள் என்று கேட்டுக் கொண்டு பக்கத்திலே இருப்பதால் மிக கஷ்டப் படுகிறார்கள். சில நேரங்களிலே ஸ்டேட்மென்டை கையிலே எடுத்துக் கொண்டு போகிறார்கள். ஆகவே, இந்த அவை மூலமாக தெரிவித்துக்கொள்கிறேன், அத்தகைய முறைகளை இனிமேலாவது நிறுத்த வேண்டும். அப்படிப்பட்ட சி.ஐ.டி.களை அந்த அறையிலிருந்து விலக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்தமாதிரி நிலை இல்லை. தனிப்பட்ட முறையில் ஏதாவது இருந்தால் அதை என்னிடம் சொன்னால் அதற்கான நடவடிக்கை எடுக்கிறேன்.

4. எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அறையில் குடிதண்ணீர் வசதி செய்து கொடுப்பது பற்றிய வேண்டுகோள்.

திரு. பெ. சீனிவாசன் : தலைவர் அவர்களே எதிர்க் கட்சி உறுப்பினர்கள் இருக்கின்ற அறையில் குடிக்கத் தண்ணீர் வசதி இல்லை. மேலவையில் உறுப்பினர்களுக்குத் தனியாக ஒரு அறை இருக்கிறது.

இந்த மாதிரி ஒரு இடம் இங்கே இல்லை. இருக்கின்ற இடத்தை துப்புரவாக வைத்துக்கொள்ள ஒரு பணியாளரை நியமிக்க வேண்டும். குடிக்கக் தண்ணீர் வேண்டுமென்றால் அசிஸ்டெண்ட் செக்ரடரி அல்லது டெபுடி செக்ரடரி மூலமாகவே செல்ல வேண்டி இருக்கிறது. குடிக்கத் தண்ணீர் வசதி செய்து தர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இதற்குத் தகுந்த ஏற்பாடு செய்கிறோம்.

## 5. ஒத்தி வைப்புத் தீர்மானம்.

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்கள்) வேலைநிறுத்தம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. எ. சுப்பிரமணியம் திரு. ஜே. ஜேம்ஸ் ஆகியோர்.

"The serious situation that has arisen because of the token strike on 18th March 1975 by the House-Surgeons in Government Hospitals throughout the State demanding higher stipends and better job opportunities resulting in serious dislocation of hospital work".

என்ற விஷயத்தைப் பற்றி விவாதிக்க ஒத்திவைப்பு தீர்மானம் கொடுத்து இருக்கிறார்கள். இது எப்படி ஒத்திவைப்புத் தீர்மானங்களுங்கான விதிகளின் கீழ் வரும் எனச் சுருக்கமாக விளக்கும்படி முதலில் திரு. ஜேம்ஸ் அவர்களை அழைக்கிறேன்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, இந்த ஒத்திவைப்பு தீர்மானம் 18—3—1975-ம் நாள் சென்னை நகரத்தில் இருக்கின்ற பல்வேறு மருத்துவ மனைகளில், கோயம்புத்தூர், தஞ்சை போன்ற மருத்துவ மனைகளில் பணி புரிகின்ற உறவுஸ் ஸர்ஜன்கள் தங்களுக்குக் கூடுதலாக அலவன்ஸ் வேண்டுமென்றும் அதிக வேலை வாய்ப்புகள் அளிக்க வேண்டுமென்றும் பல கோரிக்கைகள் வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்து இருக்கிறார்கள்.

(முற்பகல் 10-00.)

மருத்துவர்கள் மருத்துவமனைகளில் இம்மாதிரி வேலை நிறுத்தம் செய்வது தவிர்க்கப்பட வேண்டும் என்றாலும் அவர்களை நாம் வேலை நிறுத்தம் செய்யக்கூடிய அளவுக்கு ஆக்கிவிடக் கூடாது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



அவர்கள் குறைந்த பட்ச சில தேவைகளை, கோரிக்கைகளை வைத்து அரசாங்கத்தில் முறையிட்டால் உடனடியாக அந்தக் கோரிக்கைகளைத் தீர்த்து வைப்பதற்கேற்ற பரிகாரங்களைத் தேடிக் கொடுக்க வேண்டும். உரிய பரிகாரம் காணப்படவில்லை என்றால் இம்மாதிரி வேலை நிறுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாமல் போய்விடும். ஆக, இனிமேலாவது கோரிக்கைகளுக்கு உடனடியாகப் பரிகாரம் தேடித்தர வேண்டும். இன்றையதினம் ஏற்பட்டிருக்கிற இந்த வேலை நிறுத்தத்தினால் எந்த அளவுக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்ற பல்வேறு கருத்துக்களை விவாதிப்பதற்காக பேரவையின் இதர அலுவல்களை ஒத்தி வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே எழுப்பப்பட்டுள்ள இந்தப் பிரச்சினையில் அடங்கியுள்ள முக்கியத்துவத்தை அரசு நன்றாக உணர்ந்திருக்கிறது. ஆனால் அதனுடைய விவரங்களை பேரவை உறுப்பினர்கள் அறிவார்களேயானால் அந்த வேலை நிறுத்தம் எவ்வளவு அவசரப்பட்டு, எந்தவிதமான விளக்கமும் அரசாங்கத்திடம் பெற முயற்சி செய்யாமல், அரசாங்கத்தோடு கலந்து பேசாமல், இப்போது மார்ச் மாதம் என்ற காரணத்தால் இந்த நேரத்தைத் தவிர வேறு நேரம் வாய்ப்பு இராது என்று கருதி 18-ந் தேதி திடீரென்று வேலை நிறுத்தம் நடைபெற்றது என்பதை அவையினர் காணக்கூடும். முதலில் சில விவரங்களைக் கூறுகிறேன்.

மனையக மருத்துவர்கள் (ஹவுஸ் சர்ஜன்ஸ்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு 5—3—1975-ஆம் நாளன்று சில கோரிக்கைகள் அடங்கிய முறையீடு ஒன்றை அனுப்பியிருக்கிறார்கள்.

(1) வேலையின்மைப் பிரச்சினையைத் தீர்த்து வேலையில்லாதுள்ள மருத்துவர்கள் அனைவரையும் உடனடியாகப் பணியில் நியமித்தல் ;

(2) மனையக மருத்துவர்களின் பயிற்சி உதவித் தொகையை திங்களொன்றுக்கு ரூ. 350 ஆக உயர்த்துதல்;

(3) மருத்துவப் பட்ட மேற்படிப்பு மாணவர்களுக்கு திங்களொன்றுக்கு ரூ. 500 பயிற்சி உதவிக் தொகை வழங்கல் என்ற இந்த மூன்று கோரிக்கைகளை அனுப்பியிருக்கிறார்கள்.

மனையக மருத்துவர்கள் 18—3—1975-ஆம் நாளன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்யப் போவதாக 17—3—1975-ஆம் நாளன்று மாலையில் அறிவிப்புக் கொடுத்தனரென்று மருத்துவ மனைகளின் தலைவர்கள் மருத்துவக் கல்வி இயக்குனருக்குத் தெரிவித்தனர். மனையக மருத்துவர்கள் 18—3—1975-ஆம் நாள் முற்பகல் வேலை நிறுத்தம் செய்தனர். 17-ந்தேதி மாலையில் அறிவித்துவிட்டு 18-ம்தேதி முற்பகல் வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் மாணவர்கள் எவ்வளவு பொறுப்புடன் இருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

கிடைத்த தகவல்களிலிருந்து மருத்துவ மனைகள் இயல்பாகச் செயல் பட்டன வென்று தெரிகிறது. புறநிலை நோயாளிகளுக்கும் அகநிலை நோயாளிகளுக்கும் சிகிச்சைப் பணிகள் எவ்விதத் தடங்கலுமின்றி இயல்பான நிலையில் நடைபெற்றன. எவ்விதமான விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் எங்கும் நடைபெறவில்லை.

சென்னையிலுள்ள அரசினர் கஸ்தூரிபாய் காந்தி மகளிர் குழந்தைகள் மருத்துவ மனையில் மொத்தமுள்ள மனையக மருத்துவர்கள் 12 பேரில் 9 பேர் வேலைக்கு வந்தனர். இராயப்பேட்டை மருத்துவ மனையில் அனைவரும் வேலைக்கு வந்தார்கள். வேறுபல மருத்துவ மனைகளில் வரவில்லை.

அரசினர் எப்போதும் அவர்கள் கோரிக்கைகளை பரிவுடன் பரிசீலித்து வந்துள்ளனர். வேலை வேண்டிக் காத்திருக்கின்ற பதிவு பெற்ற மருத்துவர்களின் எண்ணிக்கை 28—2—1975–ஆம் நாளுள்ளபடி 1,203 ஆகும். வேலை வேண்டி இருக்கிற மனையக மருத்துவர் பயிற்சி பெற்றவர்களின் எண்ணிக்கையில் 1972–ம் ஆண்டில் 325 பேரும், 1973–ம் ஆண்டில் 374 பேரும், 1974–ம் ஆண்டில் 308 பேரும் அரசுப் பணிகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். 1975–76ஆம் ஆண்டில் சிவில் சர்ஜன் பதவிகள் ஐந்தும், இன்டரீம் பதவிகள் நாற்பதும் உட்பட சிவில் உதவி மருத்துவர் பதவிகள் 175–க்கு ஒப்பளிப்பு வழங்கிட அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. இது தவிர 1975–76 ஆம் ஆண்டில் இயல்பாகப் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் பதவிக் காலியிடங்கள் ஏறத்தாழ 150 இதில் சேர்க்கப்படவில்லை. இதையும் சேர்த்துக்கொண்டால் ஏறத்தாழ 300–க்கு மேற்பட்டவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கப்படும். வேலையற்றிருக்கும் மருத்துவர்களுக்கு மேலும் வாய்ப்புகள் அளித்திட இயன்ற எல்லா முயற்சிகளையும் அரசு எடுத்து வருகிறது. வேலையற்றுள்ள அனைத்து மருத்துவர்களையும் அரசுப் பணியில் எடுத்துக்கொள்ள அரசிற்கு நிதிநிலை வசதியில்லை.

1974 பிப்ரவரித் திங்களிலிருந்து மனையக மருத்துவர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சி உதவித் தொகை திங்கள் ஒன்றுக்கு 200 ரூபாயிலிருந்து 250 ஆக உயர்த்தப்பட்டது. தவிரவும் அவர்களுக்கு விடுதி உணவு ஈட்டுப் படி மாதம் 25 ரூபாய் வழங்கப்பட்டது. ஆக 275 ரூபாய் திங்கள் ஒன்றுக்கு வழங்கப்பட்டது. தற்போது பயிற்சி உதவித் தொகையை மாதம் ஒன்றுக்கு 350 ரூபாயாக உயர்த்த வேண்டுமென்று மனையக மருத்துவர்கள் விடுத்துள்ள கோரிக்கையை ஏற்றுக் கொண்டால் அரசுக்கு ஏறத்தாழ 10 லட்சம் ரூபாய் கூடுதல் செலவாகும். இப்போதுள்ள வறட்சி நிவாரணப் பணிகள் முதலியவற்றின் விளைவாக ஏற்பட்டுள்ள நிதி இடர்ப்பாட்டில், அரசு இந்தச் செலவினத்தை உடனடியாக ஏற்க வாய்ப்பில்லை.

சென்னை மருத்துவக் கல்லூரியில் தரம் உயர்த்தப்பட்ட நிறுவனங்களில் மேகநோயியல், கதிர்வீச்சு இயல் மருத்துவம், காது–மூக்கு–தொண்டை, உடற்கூறு இயல், உடலியல், நுண்ணுயிரியல் ஆகிய பாடங்கள் பயிலும் பட்ட மேற்படிப்பு மாணவர் ஒவ்வொருவருக்கும் திங்கள் ஒன்றுக்கு



200 ரூபாய் பயிற்சி உதவித் தொகை வழங்கும் முறை உள்ளது. இந்த இடங்களில் உதவி மருத்துவர்கள், முழுநேரச் சம்பளப் பதவிகளில் பணிபுரிவதால் அந்தப் பயிற்சி உதவித் தொகை பொதுவாக யாராலும் பெற்றுக் கொள்ளப்படுவதில்லை ; பெற்றுக்கொள்ளும் அவசியம் ஏற்படவில்லை. மேல் பட்டப் படிப்பு வகுப்புகளிலும், பட்ட மேற்படிப்பு பட்டயத் தகுதி வகுப்புகளிலும் உள்ள 464 இடங்களில் முழு நேரச் சம்பளம் பெறுகின்ற 222 பேர் பணியாற்றுகின்றனர். இதற்கு அரசுக்கு ஏறத்தாழ 28.20 லட்சம் செலவாகிறது. பட்ட மேற்படிப்பு பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் பயிற்சி உதவித் தொகை அளிப்பது என்பது இயலாது. தற்போது மருத்துவ மனைகள் யாவும்—அந்த ஒரு நாள் தவிர முறையாகச் செயல்பட்டு வருகின்றன.

நேற்றையதினம் ஒரு செய்தி கிடைத்தது. அது எந்த அளவுக்கு உண்மை என்று தெரியவில்லை. இன்று மறுபடியும் வேலை நிறுத்தம் செய்வது என்று முடிவு செய்திருப்பதாகச் சொல்கிறார்கள். அரசாங்கத்திற்கு முன்னால் கோரிக்கைகளை எடுத்துச் சொல்லி, பேசி, அதற்குப் பின்னர் நிதித் துறையுடன் கலந்து பேசி, கோரிக்கைகளை எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ள முடியும், அல்லது முடியாது, அதற்கான காரணங்கள் என்ன என்பதையெல்லாம் தீரப் பரிசீலனை செய்து அதன் பின்னர் அவர்களுக்கு திருப்தி அளிக்கவில்லை என்றால் முன்னறிவிப்புக் கொடுத்து வேலை நிறுத்தம் போன்ற முயற்சிகளில் ஈடுபடுவதைப்பற்றி யாரும் குறை சொல்ல மாட்டார்கள். இந்தக் கோரிக்கைகள் சம்பந்தமாக என்னைக்கூட அவர்கள் கலந்து பேசவில்லை. என்னோடு பேச யார் வந்தாலும் அவர்களை வரவேற்க நான் தயாராக இருக்கிறேன். முதலமைச்சர் அவர்களையும் அவர்கள் கண்டு பேசவில்லை. ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு, திடீரென்று வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். அதுவும் பயிற்சி பெறுகின்றவர்கள், பயிற்சியை முடித்தால் தான் பட்டம் பெற முடியும் என்ற நிலையில் இருப்பவர்கள், பதவி கோரி 1,200 பேர் காத்துக்கொண்டிருக்கிற நேரத்தில் இப்படி திடீரென்று வேலை நிறுத்தம் செய்கிறார்கள் என்றால் அவர்களுடைய பொறுப்பினை அவர்கள் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறார்கள் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும்.

எதற்கும் தீர யோசித்து செயல்பட வேண்டும். ஒரு கோரிக்கையை வைத்தால் அதைப் பரிசீலனை செய்து முடிவு செய்வதற்கு உரிய அவகாசம் கொடுக்க வேண்டும். அப்படி எதுவும் செய்யவில்லை. என்னையோ அல்லது முதலமைச்சரையோ யாரும் சந்தித்துப் பேசவில்லை. மாலையில் அறிவிப்புக் கொடுத்துவிட்டு, அடுத்த நாள் காலையில் திடீரென்று அடையாள வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள். மருத்துவ மனைகள் யாவும் இயல்பாக இப்போது நடைபெறுகின்றன. மனையக மருத்துவர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துரைத்து, கலந்து பேசுவதில் நாங்கள் தயக்கம் காட்டவில்லை. ஆகவே, இந்தப் பிரச்சினையில் அவசர முக்கியத்துவம் வாய்ந்த எதுவும் இல்லை என்று கருதுவதால், துணைத் தலைவரவர்களே, இந்த ஒத்தி வைப்புத் தீர்மானம் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சரவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, இந்தப் பிரச்சனை பற்றி அவையை ஒத்திவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை என்பதால், இதற்கு அனுமதி அளிக்க மறுக்கிறேன்.

## 6. கவன ஈர்ப்பு

கேரளாவிலிருந்து வெளி இடங்களுக்கு தென்னை நார் அனுப்புவது தடை செய்யப்பட்டதினால் சேலத்தில் வேலையிழந்த தொழிலாளர்கள் அல்லல் குறித்து.

THIRU V.M. ABDUL JABBAR: Sir, I would like to call the attention of the Hon. Minister for Industries and Electricity to a matter of urgent public importance, namely, the plight of about 3,000 coir rope labourers at Salem losing their job all of a sudden, due to the ban imposed on export of coir fibre by the Kerala Government outside their State.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, தமிழகத்தில் சில மாவட்டங்களில் குறிப்பாக சேலம் மாவட்டத்தில் சூரமங்கலத்திலும், கோவை மாவட்டத்தில் ஈரோடு, சங்கரி, வடஆற்காடு மாவட்டத்தில் வேலூரிலும், கன்னியாகுமரி மாவட்டத்தில் நாகர்கோவிலிலும், தஞ்சை மாவட்டத்தில் கும்பகோணத்திலும், தென்னை நாரிலிருந்து கயிறு திரிக்கும் தொழில் முக்கியமான ஒரு குடிசைத் தொழிலாகும். சூரமங்கலத்தில் மட்டும் இத்தொழில் 30,000 விவசாயிகளுக்கும், 1,000 எழுத்தர் வேலை செய்வோருக்கும், வேலைவாய்ப்புக் கொடுக்கிறது. தொழில் உரிமையாளர் இயந்திர சாதனங்களிலும் மற்றும் தளவாடங்களிலும், பெருமளவில் முதலீடு செய்துள்ளனர்.

கேரள அரசால் 10—11—1974ல் பிறப்பிக்கப்பட்ட கேரள தேங்காய் நார் (ஏற்றுமதிக் கட்டுப்பாடு) ஆணையால், கயிறு திரிக்கும் தொழில் மேற்கூறிய இடங்களில் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று பல முறையீடுகளை இவ்வரசு பெற்றுள்ளது. மேற்கூறிய ஆணை வருவதற்கு முன் ஏற்கனவே ஒப்பந்தத்துக்கு உள்ளானவைகள் தவிர, மற்றபடி, தேங்காய் மட்டைகளையும் தேங்காய் நாரையும் கேரளத்தைவிட்டு வெளியே ஏற்றி அனுப்பாதபடி மேற்கூறிய ஆணை கட்டுப்பாடு செய்கிறது. இந்திய பாதுகாப்பு விதிகளின் படி, இந்த ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. மூலப் பொருள்களாக தொன்றுதொட்டு கேரளாவையே நம்பியுள்ள இம்மாநிலத்துத் தொழில் பிரிவுகள் மேற்கூறிய கட்டுப்பாட்டு ஆணையினால் வேண்டிய அளவு மூலப்பொருள்களைப் பெற இயலவில்லை. அதன் காரணமாக, பெருமளவில் வேலை இழப்பு ஏற்படுவதற்கும் ஆயிரக்கணக்கான குடும்பங்களுக்கு அவதியும் துன்பமும் ஏற்படுவதற்கும் சாத்தியக்கூறு உள்ளது.





பல்லாண்டு காலமாக மூலப்பொருள்களைப் பெறுவதற்கு கேரள மாநிலத்தையே நம்பியுள்ள இம்மாநிலத் தொழிற்சாலைகள், தொழிலாளர்கள் ஆகியோர் நலம் கருதி இம்மாநில முதல்வர் கேரள மாநில முதல்வருக்கு நேர்முகக்கடிதம் ஒன்றை வரைந்து கேரள அரசு மேற்கூறிய ஆணையிலிருந்து தமிழகத் தொழிலுக்கு பொருத்தமான விதிவிலக்கை வழங்க வேண்டும் என்று கேட்டு கொண்டார். பொதுவான விதிவிலக்கு அளிக்க முடியாவிட்டால் தமிழகத் தொழில் தேவைக்கு ஏற்ப நியாயமான ஒதுக்கீடு ஒன்றை சமீப ஆண்டுகளில் கேரளத்திலிருந்து தமிழ்நாட்டுக்குள் கிடைத்த நாரின் அடிப்படையில் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப் பட்டது.

கேரள அரசின் தொழில் அமைச்சரிடமிருந்து பதில் ஒன்றைப் பெறுள்ளது. அதனபடி கேரளத்திலிருந்து வெளி மாநிலங்களுக்கு ஏற்றுமதியான அவர்களின் அளவு பெரிதும் உயர்ந்ததாகும். கேரள மாநிலத்திலேயே, இந் நார்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதாலும், கேரளத்தில் முடங்கிக் கிடக்கும் இக்கயிற்று தொழில் நலம் கருதியும், வெளி மாநிலங்களுக்கு இந்நாருக்கு ஏற்றுமதி கட்டுப்பாடு கொண்டுவரப்பட்டதற்குரிய காரணங்களாகும். இந்த ஏற்றுமதிக் கட்டுப்பாடு குறிப்பிட்ட சிறிது காலத்திற்கு மட்டுமே இருக்கும் என்றும், அவர்கள் கூறியுள்ளார்கள். இத்தடை ஆணைகளும் விரைவில் நீக்கப்படும் என்றும் கூறியுள்ளார்கள். இப்பொருள் பற்றி கேரள அரசுடன் இவ்வரசு மேலும் கடிதத் தொடர்பு கொண்டுள்ளது.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : இந்தக் கட்டுப்பாட்டை கேரள அரசு விதிப்பதற்கு முனபு இம்மாதிரி வேறு மாநிலத்திற்கு நார் ஏற்றுமதி செய்யப்படுவதைத் தடை செய்வதற்கு மத்திய அரசாங்கத்தின் அனுமதியைப் பெற்றிருக்கிறார்களா? நம் மாநிலத்தில் இருந்து வேறு மாநிலங்களுக்கு போகக் கூடாது என்று நமது அரசு முன்பு ஒரு பொருளுக்கு தடைவிதித்தபோது மத்திய அரசு இதுபோல நாம் தடை விதிக்கக் கூடாது, அந்தத் தடையை நீக்க வேண்டும் என்று ஆணை பிறப்பித்ததே —அதுபோல இப்போது கோள அரசு செய்திருப்பது சட்ட விரோதமானது, தேசீய ஒருமைப்பாட்டுக்கு விரோதமானது என்ற அளவில் இந்தத் தடையை நீக்க நம் அரசு மத்திய அரசை அணுகி ஏதேனும் முயற்சி செய்துள்ளதா என்பதை விளக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கேரள மாநில அரசிடம் இருந்து வந்த கடிதத்திலேயே இந்தக் கட்டுப்பாடு தளர்த்தப்படும் என்ற குறிப்பு இருக்கிறது. இப்போது நமது அரசும் இதுபற்றி கேரள அரசோடு தொடர்பு கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்கும் இந்த விவரங்கள் தெரியப் படுத்தப்பட்டு, மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப் படும்.

(1975 மார்ச் 21)

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, இப்போது கேரள அரசாங்கம் விதித்துள்ள தடை தற்காலிகமானதுதான் என்று தெரியப்படுத்தியிருந்தாலும், இதன் காரணமாக இந்தத் தொழிலில் நமது மாநிலத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த தொழிலாளர்கள் 30 ஆயிரம் பேர் வேலை இழக்கிறார்கள். இவர்கள் வேலையிழந்து போன பிறகு—தடை நீங்கி, நார் வந்து இவர்கள் திரும்ப வேலை பெறுவதற்குள் இவர்களது குடும்பங்கள் வறுமையினால் பாதிக்கப்பட்டு மிகுந்த அல்லலுக்கு ஆளாக வேண்டிய நிலைதான் இருக்கிறது. ஆகவே இப்போது உடனடியாக இவர்கள் வேலை இழக்காமல் இருக்க இவர்களுக்கு நார் கிடைப்பதற்கு தமிழகத்திலேயே,—இயந்திரங்கள் உதவிகொண்டு சில இடங்களில் நல்ல நார் தயாரிக்கிறார்களே,—அவர்களுக்கு எல்லாம் தொழில்துறை அமைச்சர் கடன் உதவியோ, மானிய உதவியோ அளித்து அதிக அளவுக்கு நார் உற்பத்தி செய்து அதன்மூலம் இவர்கள் வேலை இழக்காமல் இருப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. THIRU S. J. SADIQ PASHA : To mitigate the hardship experienced by the workers as well as the small manufacturers of coir, it has been suggested that small mechanised de-fibring units may be started in Salem by means of dvances and loans by the Government at Rs. 7,500 for small factories. அதை அடுத்து,

One acre is having about 100 coconut trees and one tree yields about 80 coconuts per year. In Salem district coconut trees are grown in about 7,000 acres. Natural facilities for soaking the fibre are not available in Salem. So, small tanks may have to be constructed for soaking fibre to help the small manufacturers, to make the manufacture of coir self-supporting.

It is understood that the Project Officer, Salem, has addressed the Government through the Director of Industries and Commerce, Madras, to supply fibre through the Central Coir Marketing Industrial Co-operative Society by granting permit to enable them to get fibre from the Kerala Government.

நம்முடைய அரசும் மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப் போல நம் நாட்டிலேயே இயந்திரங்கள் மூலம் நார் உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டு வருகிறது.



(1975 மார்ச் 21)

## 7. அரசினர் தீர்மானங்கள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ் நாடு சட்டமன்றப் பேரவையின் 164வது விதியின்கீழ், 1975-76ஆம் ஆண்டிற்கான மதிப்பீட்டுக் குழுவில் உறுப்பினராக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

## 8. அறிவிப்புகள்.

### (அ) மதிப்பீட்டுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின்கீழ் மதிப்பீட்டுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 7—4—1975 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—4—1975 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவைக் குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னாள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

## 7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

### (ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 173 ஆவது விதியின் கீழ், 1975-76 ஆம் ஆண்டிற்கான பொதுக்கணக்காய்வுக் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்" என்கிற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) பொதுக் கணக்காய்வுக் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ் பொதுக்கணக்காய்வுக் குழுவிற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 7—4—1975, திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975, திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—4—1975, செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை, முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

7. அரசினர் தீர்மானங்கள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே,

"தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 182-ஏ விதியின் கீழ் 1975-76ஆம் ஆண்டிற்கான பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவின் உறுப்பினர்களாக இருக்கும்படி, பதினாறு உறுப்பினர்களை மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் நாளன்று இப்பேரவை தேர்ந்தெடுக்கும்," என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

8. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) பொதுத் தொழில் நிறுவனங்கள் குழுவிற்குத் தேர்தல்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி தேர்தல் நடத்துவதற்கு பேரவைத் தலைவர் வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், பொதுத் தொழில் நிறுவனங்கள் குழு



விற்கு 16 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க வேட்பாளர்கள் நியமனத்தாள்களை 7—4—1975 திங்கட்கிழமை, முற்பகல் 11 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

நியமனத்தாள்கள், 7—4—1975 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 8—4—1975 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்குள் விலகிக்கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்கள் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது பதினாறுக்கு மேற்படுமாயின் 10—4—1975 வியாழக்கிழமை முற்பகல் 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே பேரவை குழுக்கள் கூடும் அறையில் (உறுப்பினர்கள் முன்னுள் ஓய்வறையில்) வாக்கெடுப்பு நடைபெறும்.

9. அரசினர் சட்ட முன்வடிவு.

தமிழ் நாடு, 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/75).

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

தமிழ் நாடு, " 1975 ஆம் ஆண்டு, நிதி ஒதுக்க (செலவினக் கணக்கின் மீது வாக்கெடுப்பு) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 10/75) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று முன்மொழிகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2, 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டன. பிரிவு 1, அட்டவணை, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச் சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்படவேண்டும்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்டமுன்வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

## 10. 1975-76ஆம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு —தொடர்ச்சி.

### நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இப்பொழுது கல்வி மானியத்தின மீது விவாதம் தொடரும். பேசுவதற்கு 16 உறுப்பினர்கள் பெயர் கொடுத்திருக்கிறார்கள். ஒவ்வொருவரும் 7 முதல் 8 நிமிடங்களுக்குள் பேசி முடித்தால்தான், 12½ மணிக்கு அமைச்சர் பேச்சைத் துவங்க வாய்ப்பாக இருக்கும். நேற்றுப் பேசிய ஜேம்ஸ் அவர்கள் இன்றைக்குத் தொடர்ந்து 10 நிமிடங்கள் பேசுவார்.

*திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவரவர்களே, நமது மாநிலத்தில் இலவசக் கல்வித் திட்டம் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது. இது சமதர்மக் கொள்கைக்கு அடிப்படையாக—சமதர்மக் கொள்கையை ஏற்றுக் கொண்டிருக்கிற எந்த அரசும் கைக்கொள்ளவேண்டிய திட்டம். ஆனால், இன்றையதினம் தமிழ் நாடு அரசு அந்தத் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டிருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்தோம். உண்மையிலே இது விரும்பத்தக்கதல்ல. ஏனென்றால், இலவசக் கல்வித் திட்டம் வந்ததன் அடிப்படையில்தான் இன்றைக்கு ஏழைகளுக்கும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் அக இருளை அகற்றி அறிவொளி வீசப்படுகிறது. இந்த இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட்டால் ஏழைகள் கல்வி அறிவு பெற வாய்ப்பில்லாமல் போய்விடும். இன்றைக்கு இலவசக் கல்வித் திட்டத்தைக் கைவிட சில ஆதாரங்களைக் சுட்டிக்காட்டியிருப்பதாகத் தெரிகிறது.

உதாரணமாக, இப்பொழுது பப்ளிக் எக்சாமினேஷனில் தேர்வில் 50 சத விகிதம் தகுதியின் அடிப்படையில் இடம் தந்து, அதாவது மெரிட் அடிப்படையில் இடம் தந்து, அவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்கக் கூடாது என்று முடிவு வருகிறது. அந்த முதல் தகுதியில்லாத மற்ற 50 சதவிகிதத்தினர், இரண்டாந்தரம், மூன்றாம் தரமாக உள்ளவரிடமிருந்து கட்டணம் வசூலிக்க வேண்டும். ஏற்கெனவே மெரிட்டில் சேர்க்கப் படுகின்ற மாணவர்களிடம் வசூலிக்காமலிருப்பதால் ஏற்படுகின்ற இழப்புக்களை, கடைசித் தரப்பினுள்ள மாணவர்களைச் சேர்ப்பதால், அவர்களிடம் வசூலிக்கின்ற கட்டணத்தின் மூலம் காம்பன்சேட் செய்யலாம் என்று கருதுவதாகத் தெரிகிறது.

இந்தக் கொள்கையைக் கைக்கொண்டால் வசதி உள்ளவர்கள்தான் பயனடைவார்கள். காரணம், இப்போதெல்லாம் பணக்காரர்கள் குழந்தைகள்தான் பஸ்ட்கிளாஸ் வாங்குகின்றனர். மூன்றாம் கிளாஸ் வாங்குகிற மாணவர்கள் நன்மை பெற முடியாது. வசதியுள்ள மாணவர்களுக்கு இலவசக் கல்வி அளிக்கின்ற நிலைமைதான் ஏற்பட்டுவிடும். வசதியில்லாத மாணவர்களுக்கு இலவசக்கல்வி பெற வாய்ப்பு இல்லாத கிடைக்காத என்ற அபாயகரமான நிலைமையை இந்த அரசுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அரசு விரும்பினால், வசதி உள்ளவர்களிடமிருந்து பல்வேறு வரிகள்மூலம்



பணம் வசூல் செய்து, இலவசக் கல்வியை அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில், இலவசக் கல்வி அமுலுக்கு வந்தது. வேண்டுமென்றால் எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கைக் கொள்வதா என்று கருதாமல், எங்கள் கொள்கையைத் தொடர்ந்து கடைபிடிக்கப் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு, பட்டப் படிப்பு வரை இலவசக் கல்வி கொண்டு வரவேண்டுமென்ற கொள்கையை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எடுக்கேஷனல் ரிஃபார்ம்ஸ் கமிட்டி என்று ஒரு கமிட்டி அமைத்திருப்பதாக அமைச்சரின் அறிக்கையில் தெரிவிக்கிறார்கள். அந்த கமிட்டிக்கு என்ன என்ன டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸ் என்று கூறவில்லை. கல்விமுறையை 10—2—3 என்ற அடிப்படையில் 15 ஆண்டு கல்விக் காலம் என்று கொண்டு வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், எந்தக் காரணத்தாலும் இலவசக் கல்வியை மறுபரிசீலனை செய்ய அந்தக் கமிட்டிக்கு ரெஃபரன்ஸ் அனுப்பக் கூடாது என்று நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பள்ளிகளை ஏ விங், பி விங், சி விங் என்று பல்வேறு பிரிவுகளாகப் பிரித்து வைத்திருக்கிறார்கள். அவர்களுக்காகப் பல்வேறு ஆணைகள் பிறப்பித்தாலும் இதுவரையில் அந்த ஆணைகள் செயல்படுத்தப்படவில்லை. போர்டு ஸ்கூல்களுக்கு விதிமுறைகள், எம்.இ.ஆர். விதிமுறைகள் பி.எஸ்.எஸ். விதிமுறைகள் இவ்வாறு பல்வேறு விதிமுறைகளிருக்கின்றன. அவை சரியாகச் செயல்படவில்லை. இந்த விதிமுறைகளில் ஆசிரியர்களுக்கு நன்மை பயக்கக் கூடிய விதிமுறைகளின்படி அவர்களுக்கு நன்மை கிடைக்கவில்லை. ஆனால், அவர்களுக்கு தீமை கொடுக்கக்கூடிய விதிமுறைகள்தான் பின்பற்றப்படுகின்றன. ஆகவே, மாநிலத்தில் வேலை செய்கின்ற அனைத்து ஆசிரியர்களுக்கும் ஒரே மாதிரி விதிமுறைகளைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, தமிழைப் பாடமொழியாக இன்றைக்குக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றையதினம், பி.ஏ., பி.எஸ்.ஸி., பி.யூ.சி. மாணவர்களுக்குத் தமிழில் போதிக்கிறோம். அவர்கள் தேர்வு தமிழில் எழுதவில்லையென்றால், அவர்களுக்கு அளிக்கின்ற இந்த ஸ்டைஃபன்டை திரும்பப் பெற்றுக்கொள்ள ஆணை பிறப்பிக்கப்படுகிறது. ஆனால், சட்டக் கல்லூரியில் தமிழில் படிக்கின்ற மாணவர்கள் ஆங்கிலத்தில்தான் பரீட்சை எழுதவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்யப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே, அவர்களுக்கும் தமிழில் பரீட்சை எழுத வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகக் கல்லூரி. ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்படவில்லை. அந்தத் கோரிக்கையை ஏற்றுக் கொள்ளவேண்டுமென்று நீண்ட நாட்களாகக் கல்லூரி ஆசிரியர்கள் அரசாங்கத்தை வற்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இந்த நாட்டில் பல்வேறு மாநிலங்களில் யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் ஆஃப் பே அமுல்படுத்தப்

பட்டிருக்கிறது. நேற்றைக்கு முன்தினம் கூட பாராளுமன்றத்தில், மத்தியக் கல்வி அமைச்சர் யூ.ஜி.ஸி. ஸ்கேல்ஸ் கொடுக்கின்ற மாநிலங்களுக்கு அதில் 80 சதவிகிதம் வரையிலும் மத்திய அரசாங்கம் அளிக்க முன் வந்திருப்பதாகத் தெரிவித்து இருக்கிறார். ஆகவே, இன்னும் காலந் தாழ்த்த வேண்டிய அவசியம் இல்லையென்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களுக்கு இப்பொழுது செக்யூரிட்டி ஆஃப் ஜாப் இல்லாமலிருக்கிறது. தனியார் கல்லூரிகளில் ஆசிரியர்கள் வேலையில் அமர்த்தப் படும்போது, ரூ. 10,000, ரூ. 5,000 என்று கொடுத்து வேலையில் அமர்த்தப்படுகிறார்கள். பிறகு திடீரென வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு செக்யூரிட்டி ஆஃப் ஜாப் இல்லாமலிருக்கிறது. அரசாங்கத்தில் கூட 10 (ஏ) (1) விதியின்கீழ் நியமனம் நடைபெறுகிறது. அந்த ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு இல்லாமலிருக்கிறது. நியமித்து சிறிது காலம் கழித்து அவர்களையும் நீக்கிவிடுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கும் செக்யூரிட்டி ஆஃப் ஜாப் கொடுக்கின்ற வகையில் சட்டம் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் நடத்துகின்ற சில கல்லூரிகள் மோசமாக, வியாபார நோக்கத்தோடு செயல்படுகின்றன. அவற்றை அரசு எடுத்துக்கொள்ள சட்டம் இயற்றப்படவேண்டும். தனியார் நடத்தும் கல்லூரிகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு அரசே நேரடியாகவே சம்பளம் பட்டுவாடா செய்யவேண்டும். இப்பொழுது மானேஜ்மெண்ட் மூலமாகச் சம்பளம் கொடுக்கப்படுவதால், அரசாங்கம் கொடுக்கின்ற சம்பளம் கூட ஆசிரியர்களுக்கு கிடைக்காத அவல நிலை நிலவுகிறது. ஆகவே, அரசாங்கம் அதற்காக ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையில், கிறிஸ்டியன் இன்ஸ்டிட்யூஷன்ஸ் சிறப்பாகச் செயல்படுகின்றன. நல்லமுறையில் இருக்கின்ற கல்லூரிகளுக்கு அரசாங்கம் ஆதரவு கொடுக்க வேண்டும். முறைகெட்டு, எர்ரிங் இன்ஸ்டிட்யூஷன்ஸ்—ஆக இருந்தால் அவற்றை "டேக் ஓவர்" செய்ய அரசாங்கம் சட்டம் கொண்டு வரவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சரவர்களுக்கே தெரியும், இலட்சுமிபுரம் கல்லூரி எந்த முறையில் மோசமாக நடக்கிறதென்று. இப்பொழுதுள்ள நெருக்கடியிலிருந்து அதனைக் காப்பாற்ற வேண்டுமென்றால் அரசாங்கம் அதனை ஏற்றுக் கொள்ளவேண்டும். இல்லாவிட்டால் நிலைமை மோசமாகிவிடும் என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பல்கலைக் கழகங்களுக்கு நாம் எவ்வளவோ மானியம் கொடுக்கின்றோம். அதைக் கண்காணிக்கின்ற முறைகள் அரசாங்கத்திடம் இல்லை.

மதுரை யூனிவர்சிட்டியைப் பொறுத்தவரையில் ஒருசில வசதி படைத்த, பணம் படைத்த நபர்கள் செனட்டுக்கு வந்துவிடுகிறார்கள். அங்கே தேர்வுகள் முறைகேடாக நடக்கின்றன. அந்த சின்டிகேட் செனட் எல்லாம் பணம் படைத்தவர்களுடைய கன்ட்ரோலிலிருக்கின்றன. ஆகவே, அவர்



கள் நினைத்ததைச் செய்ய வசதி இருக்கின்றது. அதனை ஒழுங்கான முறையில், கல்வித் துறையிலுள்ள நிபுணர்கள் வருவதற்கேற்ற முறையில், மாற்றியமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். யூனிவர்சிட்டியிலுள்ள நியமனங்கள் எல்லாம் ஒழுங்காக இல்லை. இப்பொழுதிருக்கிற சட்டத்தின் அடிப்படையிலேயே எல்லா சமுதாயத்தினருக்கும் வேலை வாய்ப்பு கிடைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யவேண்டும்.

அதோடு, கல்லூரியில் மாணவர்கள் தரத்தை நாம் உயர்த்த வேண்டுமென்று சொல்லும்போது, இப்பொழுது டாக்டரேட் பெற்ற ஆசிரியர்களுக்கு ரூ. 100 இன்சென்டிவ் அலவன்ஸாகக் கொடுக்கிறோம். அதையும் அரசாங்கக் கல்லூரி ஆசிரியர்களுக்குத்தான் கொடுக்கிறோம். தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்குக் கொடுப்பதாகத் தெரியவில்லை. டாக்டரேட் படிப்பதைப் போலவே, எம்.லிட்டும் படிக்கிறார்கள். டாக்டரேட்டுக்கு 3 ஆண்டு ரிசர்ச் செய்கிறார்கள், எம். லிட்டுக்கு 2 ஆண்டு ரிசர்ச் செய்கிறார்கள். தீசிஸ் ஒரேவிதமானதுதான். ஆகவே, டாக்டரேட் படித்தவர்களுக்குக் கொடுப்பதைப் போலவே எம்.லிட். படித்தவர்களுக்கும் அலவன்ஸ் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அரசாங்கக் கல்லூரிகளில் பணம் கையாடல் செய்யப்படுகிறது. உதாரணமாக, நாமக்கல்லில் இருக்கிற கலைஞர் கருணாநிதி மகளிர் கல்லூரியில் 1972–73 வரையில் ரூ. 10,16,000 கையாடல் செய்யப்பட்டிருக்கிறது. அதிலும் குறிப்பாக, தமிழ் மீடியம் மாணவர்களுக்கு ஸ்டைஃபண்ட் தொகை அளிப்பதில் ரூ. 8,30,000 கையாடல் செய்யப்பட்டிருக்கிறது.

(முற்பகல் 10.30)

அதுபோல் வவுச்சர் இல்லாமல் பணம் செலவு செய்யப்பட்டிருக்கிறது. ஆகவே, இதை ஒழுங்கான முறையிலே நடத்தாத காரணத்தினால் பல்வேறு அரசுப் பள்ளிகளில் அரசுக் கல்லூரிகளில் இம்மாதிரியான கையாடல்கள் நடந்து கொண்டிருக்கின்றன.

டெக்னிக்கல் எஜூகேஷனைப் பொறுத்தவரையிலே பல்வேறு கல்லூரிகளில் இன்டேக் கெப்பாசிட்டி எவ்வளவு இருக்கிறதோ அந்த அளவுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் இருக்கின்ற நிலையை இந்த பெர்பார்மன்ஸ் பட்ஜட்டிலே நாம் காண்கிறோம். இவ்வளவு பணம் இதற்காக ஒதுக்கப்படுகிறபோது எவ்வளவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டுமோ அந்த அளவு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளாமல் இருப்பது நாட்டிற்கு நஷ்டம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எங்கள் பகுதியிலே உள்ள நாகர்கோவில் பாலிடெக்னிக்கில் 180 தான் இன்டேக் கெப்பாஸிடி என்றாலும்கூட 195 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். ஆக நாகர்கோவில் பாலிடெக்னிக் பள்ளியில் மேலும் சில டிரேட் வகுப்புகள் ஆரம்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன். மேலும் அங்கங்கே உள்ள பாலிடெக்னிக்குகளில் மாணவர்களை எந்த அளவிற்குச் சேர்க்க முடியுமோ அந்த அளவிற்குச் சேர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ஜே. ஜேம்ஸ்] [1975 மார்ச் 21

எஸ்.எஸ்.எல்.சி. பரீட்சைக்கு கட்டணத்தைத் தளர்த்தி இலவசமாக ஆக்க வேண்டும்.

தமிழாசிரியர்களைப் பொறுத்தவரையில் இரண்டு நிலை ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஒரே நிலையாக்க வேண்டுமென்ற கோரிக்கை அவர்கள் விடுத்திருக்கிறார்கள். அரசாங்கம் அதனைக் கவனிக்க வேண்டும்.

தமிழ்மொழி ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் செலக்ஷன் கிரேட் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மலையாளம், இந்தி, தெலுங்கு ஆசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் கொடுக்கப்படவில்லை. அதையும் கொடுக்க வேண்டும்.

செகண்டரி கிரேட் ஆசிரியர்களாக இருக்கிறவர்கள், பட்டம் பெற்றிருந்தால் பி.டி. பட்டம் பெற்றிருந்தால்கூட அதே பள்ளிக்கூடங்களிலே வருகின்ற வேக்கன்ஸிகளில் அவர்களுக்கு புரமோஷன் கொடுக்க மறுக்கிறார்கள். ஆகவே, தகுதி பெற்றவர்களாக இருந்தால், அங்கே வேக்கன்ஸி வந்தால் அவர்களுக்கு புரமோஷன் கொடுக்க வேண்டுமென்று அரசாங்கம் ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அங்கே ஆரம்பப் பள்ளிகள் எல்லாம் அரசாங்கப் பள்ளிகளாக இருக்கின்றன. அங்கே உள்ள பல பள்ளிகளுக்குக் கட்டடங்கள் இல்லை, டெம்பரரி ஷெட் கூட இல்லாமல் இருக்கிறது.

பரம்பு என்ற இடத்திலே உள்ள பள்ளிக்கு டெம்பரரி ஷெட் கூட இல்லை. அதைப்போன்று மஞ்சான்மூடு பள்ளிக்கூடத்திலேயும் டெம்பரரி ஷெட் கூட இல்லாமல் இருக்கிறது.

குலசேகரத்தில் உள்ள உயர்நிலைப்பள்ளியில் 1,300 மாணவர்கள் வரையில் படிக்கிறார்கள். ஆனால் 85 செண்ட் தான் இருக்கிறது, அங்கேயும் கட்டடங்கள் இல்லை, கட்டடங்கள் கட்டித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காட்டாத்துறை, கடயால்மூடு கரையான்மேடு ஆகிய இடங்களிலே உள்ள உயர்நிலைப் பள்ளிகளிலே 1,500, 2,000 மாணவர்கள் வரையில் படிக்கிறார்கள். ஆகவே, அந்தப் பள்ளிகளுக்கும் கட்டட வசதிகளைச் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆத்தூரில் ஒரு கட்டடம் தீவிபத்துக்குள்ளாகியது, உடனடியாக அரசாங்கம் மாற்றுக் கட்டடம் கட்டித்தர ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

டி.சி. அலாட்டட் டீச்சர்ஸ் அன்ட் எய்டெட் ஸ்கூல் டீச்சர்ஸ் இவர்களுக்கு எல்லாம் இதுவரைக்கும் பென்ஷன் வழங்கப்படவில்லை, அவர்களுக்கும் பென்ஷன் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு உரையை முடித்துக்கொள்கிறேன்.



1975 மார்ச் 21]

*திரு. பு. செ. முத்துச்செல்வன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டிருக்கிற கல்வி மானியக் கோரிக்கையை ஆதரித்து எனது கருத்துக்கள் சிலவற்றைக் கூற விழைகிறேன்.

கல்விக்காக நம்முடைய தமிழக அரசு இந்த நிதிநிலை அறிக்கையிலே இந்த ஆண்டு கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பங்கு என்று சொல்லத்தக்க அளவிற்கு 30 சதவீதம் என்று சொல்லத்தக்க அளவிற்கு மானியம் ஒதுக்கிவிருப்பதையும் சிறப்பான முறையிலே கல்வி நிலையங்கள் செம்மையாகப் பணியாற்றி வருவதையும் நாம் கண்கூடாக அறிவோம்.

இந்த வகையிலே இன்று நம் அரசு தோன்றிய பிறகு பேரறிஞர் அண்ணா காலத்திலே உலகத் தமிழ் மாநாட்டை ஆரம்பித்து அதன் வாயிலாகத் திரட்டிய தொகையைக் கொண்டு திருக்குறள் ஆராய்ச்சிப் பிரிவினைப் பல்கலைக் கழகங்களிலே உருவாக்கியிருக்கிறார்கள். அதனையொட்டி தமிழ் மொழிபெயர்ப்புக்காக ஒரு பிரிவை நம்முடைய அரசு உருவாக்கியிருக்கிறது. பாட நூல் நிறுவனத்தை உருவாக்கியிருக்கிறது. இப்படிப் பல நல்ல காரியங்களையெல்லாம் நம்முடைய அரசு நிறைவேற்றியிருக்கிறது.

அத்தனை அரசுப் பள்ளிக்கூடங்களுக்கும் கட்டடங்களைக் கட்டுவதற்காக ஒரு கார்ப்பரேஷனை அமைத்து அதன் வாயிலாக கட்டடங்கள் கட்ட இருப்பது சிறப்புக்குரிய ஒன்று. தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் என்ற அளவிலே மட்டும் இல்லாமல் உயர்நிலைப் பள்ளிகளுக்கும் கட்டடங்களைக் கட்டித் தருவதற்கு இந்த கார்ப்பரேஷன் ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் பல இடங்களில் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. என்னுடைய தொகுதி மாத்திரமல்ல, எங்கள் மாவட்டத்திலே பல உயர்நிலைப் பள்ளிகள் கட்டடங்கள் இல்லாமல் இருக்கின்றன. அடிஷனல் பில்டிங்ஸ் என்று சொல்லத்தக்க அளவிற்கு அடிஷனல் கிராண்ட் ஒதுக்கி ஒவ்வொரு உயர்நிலைப் பள்ளிக்கும் ஒரு கட்டடமாவது கட்டி 3, 4 வகுப்புகளாவது நடத்தக் கூடியவகையிலே ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

என்னுடைய சொந்த ஊரிலே இதுவரையிலும் மேட்சிங் கிராண்ட் மூலமாகத்தான் உயர்நிலைப்பள்ளிக் கட்டடம் கட்டப்பட்டிருக்கிறது. அரசின் சார்பிலே லேபரேட்டரி, விஞ்ஞானக் கூடம் ஒன்று அமைக்கப்படவில்லை, அங்கே பயிலுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை 500-க்குக் குறைவாக இருப்பதால் அந்தக் காரணத்தினால் கட்டப்படவில்லை என்று சொல்லப்படுகிறது. குறைந்த மாணவர்கள் இருக்கின்ற இடங்களில் இப்போதுள்ள மொபைல் லேபரட்டரி மூலம் மாணவர்கள் பயில்கிறார்கள் என்று சொல்லலாம். அதன் வாயிலாக பயில்வதைவிட பள்ளியோடு ஒட்டிய விஞ்ஞான கூடத்திலே மாணவர்கள் பயில்வதுதான் சிறந்ததாக இருக்கும்.

கிராமப் பகுதிகளிலே உள்ள பள்ளிகளைப் பொறுத்தவரையில் மாணவர்களின் எண்ணிக்கைக்கு முக்கியத்துவம் கொடுக்காமல் 300, 350 மாணவர்கள் இருந்தால்கூட லேபரட்டரியைக் கட்டித் தருவதுதான் சிறப்பாக இருக்கும். அப்படிச் செய்ய முடியாவிட்டால்கூட அடிஷனல் பில்டிங்ஸ் கிராண்ட் என்ற முறையிலே 4 வகுப்புகள் நடத்துகின்ற அளவிற்காவது கட்டடங்களைக் கட்டித் தரவேண்டும்.

கிராமப்புறங்களிலே பயில்கின்ற மாணவர்களுக்கு இப்போது படிக்கின்ற மனப்பான்மையை உருவாக்கக்கூடிய சூழ்நிலைமை இல்லாமல் இருக்கிறது. எல்லாச் சுற்றுச்சார்பும் அமைந்திருந்தால்தான் பள்ளி மாணவர்கள் சிறப்பான கல்வியைப் பெறமுடியும் என்ற காரணத்தினாலே கிராமப்புறங்களிலே உள்ள பள்ளிக்கூடங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து கட்டடங்களைக் கட்ட வேண்டும். சரியான நேரத்திலே ஆசிரியர்களை நியமனம் செய்ய வேண்டும்.

முசிரியிலே சென்ற ஆண்டு பெண்கள் உயர்நிலைப்பள்ளியை அரசு ஆரம்பித்திருக்கிறது. அதற்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். அங்கே 3, 4 மாதங்களாக ஆசிரியர்கள் நியமிக்கப்படாமல் இருந்தது. அதன் வாயிலாக அங்கே மாணவியர்கள் சிறப்பான கல்வியைப் பெறமுடியாத சூழ்நிலை இருந்தது. அதற்கு இடம் கொடுக்காத முறையிலே இதுபோன்ற கிராமங்களிலே உள்ள பள்ளிகளில் கல்வி வசதியை மாணவர்கள் பெறத்தக்க அளவிலே ஆசிரியர்களைச் சரியான நேரத்திலே நியமிக்க ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும்.

கல்லூரிகளை எடுத்துக் கொண்டாலும் ஆசிரியர்கள், பேராசிரியர்கள் 3, 4 மாதங்களுக்குப் பிறகு வந்துசேரக்கூடிய நிலைமை இருக்கிறது. அதையெல்லாம் மாற்றி அந்தத் அந்த தருணத்தில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நகரப்புறங்களிலே உள்ள கல்லூரிகளிலும், பள்ளிகளிலும் செய்யப்படுகின்ற வசதிகளைப் போலவே கிராமப்புறங்களிலே முசிரி போன்ற இடங்களிலேயும் சரியான தருணத்திலே பேராசிரியர்களை நியமித்து தக்க பாடத்திட்டங்களை நிறைவேற்றுகின்ற முறையிலே அவர்கள் பயில்கின்ற வகையிலே ஏற்பாடுகளைச் செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முசிரியிலே பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் கல்லூரியை ஏற்படுத்தியிருக்கிறோம். அதற்காக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் டாக்டர் நாவலர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன. அங்கே இரண்டாவது மாடிக் கட்டடம் கட்டுவதற்கு 6 இலட்சத்திற்கு மேல் செலவிலே மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அதைக் கட்டுவதற்காககூட சென்ற ஆண்டு நிதிநிலை திட்டத்தில் 100 ரூபாய் டோக்கன் புரவிஷன் கொடுக்கப்பட்டிருந்தது. அப்படியிருந்தாலும்கூட வேலை துவக்கப்படவில்லை.





மாணவர்கள் விடுதியைப் பொறுத்தவரையில் இதுவரையில் 4½ இலட்சம் ரூபாய் செலவில் விடுதி கட்டப்பட்டது. மேலும் ஒரு மாடி கட்டுவதற்கு 2 இலட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. அதற்கும் வழிவகை காணவேண்டுமென்று தாழ்மையோடு கேட்டுக்கொள்கிறேன்.

பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பெயரிலே திருச்சியிலே ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்கித் தரவேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். ஏற்கனவே நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பெரியார் சிலை திறப்பு விழாவின் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார்கள். அப்போது சட்ட மன்றக் கூட்டம் நடக்கிறபோது அதை இந்த இடத்தில் அறிவிப்பது முறையாக இருக்காது என்ற கருத்தைத் தெரிவித்துவிட்டு வந்தார்கள்.

அதற்கேற்ப இன்றைய தினமாகிலும் அங்கேயொரு பல்கலைக் கழகத்தைத் திருச்சியிலே ஏற்படுத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்பொழுது ஒரு யூனிவர்சிட்டி சென்டர் அங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. முன்பு திருச்சி மாவட்டத்திலே ஒரு மருத்துவக் கல்லூரி வேண்டுமென்றெல்லாம் கேட்டு, ஏறக்குறைய 23 இலட்சம் ரூபாய் வரையில் நிதி வசூலிக்கப்பட்டு அந்தத் தொகையெல்லாம் வேளாண்மை ஆராய்ச்சிப் பிரிவுக்கு, புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொடுத்து ஏற்பாடு செய்யப்பட்டு விட்டது. திருச்சி மாவட்டத்திலே அந்த வேளாண்மை ஆராய்ச்சிக்குரிய வசதிகூட செய்யப்படவில்லை. அங்கேயொரு வேளாண்மைக் கல்லூரி வேண்டுமென்றும் கேட்டோம். அதுவும் கவனிக்கப்பட வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

திருச்சி மாவட்டம் மையமான பகுதியாக இருப்பதால், மதுரையிலே பல்கலைக்கழகம் இருப்பதைப்போன்று, சென்னையிலே பல்கலைக்கழகம் இருப்பதைப்போன்று, சிதம்பரத்தில் அண்ணாமலை யூனிவர்சிட்டி இருப்பதைப் போனறு, அங்கேயும் ஒரு பல்கலைக்கழகத்தைப் பேரறிஞர் அண்ணா அவர்களின் பெயரால் நிறுவ வேண்டுமென்று மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப்பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பிரச்சாரம் செய்யத்தக்க வகையில் பகுத்தறிவுக் கொள்கைப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தி, அதை 'எலக்ட்டிவ் சப்ஜெக்ட்' டாகவோ அல்லது கல்லூரிகளில் மூன்றாம் பகுதியிலுள்ள ஒரு பாடமாகவோ ஏற்பாடு செய்து, எப்படி ஆத்திகர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோமோ அதைப்போன்று நாத்திகர்களுக்கும் முக்கியத்துவம் அளித்து இறைவன் இருக்கின்றானா இல்லையா என்ற சர்ச்சைக்கு இடம் கொடுக்காமல் நல்ல பகுத்தறிவுச் செம்மல்களை உருவாக்குவதற்கு இத்தகைய பிரிவு ஒன்றை கல்லூரிகளிலாவது ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏனென்றால், அமெரிக்கப் பல்கலைக்கழகங்களிலே தந்தை பெரியார் அவர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதுபோன்ற நல்ல சிறந்த ஆராய்ச்சியாளர்களை இங்கேயும் உருவாக்கத் தக்க வகையில் தந்தை பெரியார் அவர்களைப் பற்றி பல்கலைக் கழகத்தில் ஆராய்வதற்கும்,

பேரறிஞர் அண்ணா அவர்களைப் பற்றி ஆராய்வதற்கும், பாரதிதாசன் அவர்களைப் பற்றி ஆராய்வதற்கும் ஆராய்ச்சித் துறைகளைப் பல்கலைக் கழகங்களில் உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்கிறேன்.

இந்த அரசு உருவான பிறகுதான் பகுத்தறிவுக் கொள்கைக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து பாமர மக்களையும் பகுத்தறிவாளர்களாக ஆக்குகின்ற நல்ல நடமாடும் பல்கலைக் கழகமாக நம்முடைய நாவலர் அவர்கள் இருந்து வருகிறார்கள். அவர்களுடைய துறையிலே இப்பொழுது இது போன்ற சீர்திருத்தமான நல்ல பணிகளை உருவாக்கினால் எதிர்காலம் நிச்சயம் நம்முடையதாக இருக்கும் என்பதை மட்டும் தெரிவித்து, வாய்ப்பளித்த தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

<u>திரு. நா. வெ. குருசாமி :</u> தலைவரவர்களே, கல்வி மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய சில கருத்துக்களைக் கூற முற்படுகிறேன்.

குறிப்பாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே 1975-76 ஆம் ஆண்டுக்குக் கல்விக்காக 118 கோடி ரூபாய் செலவு செய்யப்படுகிறது. இப்படிச் செலவு செய்தும் நமது மாநிலத்தின் கல்வியின் தரம் அதிகம் உயர்ந்ததாகத் தெரியவில்லை. ஆகவே, கல்விக்காக நாம் செலவு செய்யும் பணம் நல்ல முறையில் அமையாமல் பயன் அற்றுப் போகிறது.

குறிப்பாக எடுத்துக் கொண்டால் பல் உயர் துவக்கப் பள்ளிகளிலேயும் ஆரம்பப் பள்ளிகளிலேயும் கட்டிட வசதிகள் கிடையாது. 50 சதவிகிதம் கூட பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிட வசதிகள் இல்லாமல், குழந்தைகள் படிப்பதற்கு மரத்தடியிலே பள்ளிகள் நடைபெறுகின்ற அவல நிலைமை தான் இருக்கிறது.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் தமிழகத்திலே அதிகமான பள்ளிகள் இருக்கும் ஒன்றியங்களில் ஒரு ஒன்றியமாக இருக்கிறது. இப்படிப்பட்ட ஒன்றியத்தில் மலைப்பகுதியில் அதிகப் பள்ளிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்தப் பள்ளிகளுக்குக் கட்டிட வசதிகள் இல்லை. இதை நான் கடந்த இரண்டு, மூன்று ஆண்டுகளாக சொல்லிக் கொண்டே வருகிறேன். ஆனால் இந்த அரசு அதற்கு ஒரு கட்டிட வசதியை ஏற்படுத்தச் செய்ய முடியாமல் இருந்து வருகிறது. ஆகவே, இனிமேலாவது எங்களுடைய தொகுதியிலே அதிகமான பள்ளிக் கூடங்கள் இருப்பதால் அங்கு பள்ளிக் கட்டிட வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, உயர்நிலைப் பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் ஏற்படுத்த, இந்த ஆண்டு 11 உயர்நிலைப் பள்ளிகளில் ஏற்படுத்தப் போவதாக இந்த மானியக் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அப்படி ஏற்படுத்தும்பொழுது எங்களுடைய தொகுதியில், குறிப்பாக வெங்கசமுத்திரம், ஜெய மங்கலம், கண்டமனூர் போன்ற பகுதிகளில் உள்ள பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லை. அங்கே ஆய்வுக்கூடங்களை ஏற்



படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் ஒவ்வொரு மாவட்டத்திலும் அறிவியல் ஆய்வுக் கூடங்களை ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப்படுகிறது. அந்த ஆய்வுக்கூட வண்டிகளையாவது ஒவ்வொரு பள்ளிக்கும் எந்தெந்த நேரத்திலே செல்கிறது என்று கூறி அந்த நேரத்தில் அந்த வண்டி போய்ச் சேர்ந்து அந்தப் பள்ளிக் குழந்தைகளுக்கு நல்ல முறையில் அறிவியல் பாடங்களைப் போதிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்தவரையில் கட்டட வசதிகளும் சரிவர இல்லை. குறிப்பாக வெங்க முத்திரம் பள்ளிக்கு கட்டட வசதி இல்லை. அந்தக் கட்டட வசதிக்காக இயக்குநர் அலுவலகத்திலேயும் பரிந்துரை செய்யப்பட்டு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. ஆனால் இதுவரையிலும் அந்தக் கட்டட வசதி ஏற்படுத்தப்படவில்லை. ஆகவே, அங்கே கட்டட வசதி ஏற்படுத்திக் கொடுக்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டியில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மாணவ-மாணவிகள் படிக்கிறார்கள். அங்கு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டேன். இரண்டாண்டுக் காலமாகக் கேட்டுக் கொண்டே இருக்கிறார்கள். ஆனால் அதில் இந்த அரசு கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை. இனியாவது அங்கு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்றை ஏற்படுத்திக் கொடுக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளிலேயிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு நிரந்தர வேலைக்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்ததாகத் தெரியவில்லை. அவர்கள் ஏழைகளாக, நடுத்தெருவில், வீதியில் பிச்சையெடுக்கும் அவல நிலையில் இருக்கிறார்கள். ஓரிரு பணக்காரர்கள் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதற்காக இலஞ்சம் கொடுத்தாவது சேர்ந்துக் கொள்கிறார்கள். இந்த முறைகளில் ஆசிரியர்களை நியமனம் செய்வதிலுள்ள குறைகளைப் போக்குவதற்காக அவர்களை நியமிக்கும் முறையில் மாற்றம் செய்தாக வேண்டும். ஒன்றியங்களில் இந்த முறை இருக்கக் கூடாது. மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாகவோ அல்லது சி. ஈ. ஓ. மூலமாகவோ இந்த முறை இருக்கும் வகையில் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழகத்திலே சென்னைப் பல்கலைக்கழகத்தில் 106 கல்லூரிகளும், மதுரைப் பல்கலைக்கழகத்தில் 77 கல்லூரிகளும் இருப்பதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. குறிப்பாக ஒரு பல்கலைக் கழகத்திற்கு 30, 40 கல்லூரிகளுக்குமேல் போகக் கூடாது என்று கஜேந்திர கட்கர் குழு பரிந்துரை செய்திருப்பதாகக் கூறப்படுகிறது. அந்த முறையில் இன்னும் ஓரிரு பல்கலைக் கழகங்களை ஏற்படுத்தப் போவதாக இருக்கிறது. அப்படி ஓரிரு பல்கலைக்கழகங்களை ஏற்படுத்தும்பொழுது மூதறிஞர் இராஜாஜி அவர்க

ளின் பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தையும் தலைவர் காமராஜர் அவர்களின் பெயரால் ஒரு பல்கலைக்கழகத்தையும் ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

மதுரை மாவட்டத்திலே 1973-74 கல்வி ஆண்டில் பி.இடி., பட்டதாரி ஆசிரியர்கள் சிலர் நிரந்தரம் இல்லாமல் தற்காலிகமாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் 6 மாதம் வேலையிலிருந்து விட்டு, பிறகு நீக்கப்படுகிறார்கள். அவர்கள் மறுபடியும் கேட்கும்பொழுது, சி. ஈ. ஓ. சொல்கிறார், "உங்களுக்கு அடுத்த தேர்வு வரும்பொழுது முதலிடம் கொடுத்து தேர்வு செய்வோம் என்று ஆனால் பிறகு தேர்வு நடைபெறும்பொழுது புதிதாக இருப்பவர்களைத் தேர்ந்தெடுத்துவிட்டு, முன்பு 6 மாதம் வேலை பார்த்தவர்களுக்கு, தற்காலிகமாக வேலை பார்த்தவர்களுக்கு வேலைவாய்ப்பில்லாமல் செய்து விடும் நிலைமையிருக்கிறது. ஆகவே, வருங்காலத்திலாவது, அவர்களுக்கு நிரந்தரமாக வேலை கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, குறிப்பாக அப்ரெண்டிஸ் ஆசிரியர்கள் விஷயத்திலே இந்த மாதிரி முறை இருக்கிறது, அவர்கள் விஷயத்திலும் நல்ல ஏற்பாட்டை செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்னார்க்காடு மாவட்ட நூலக ஆணைக்குழு இன்று வரையில் அமைக்கப்படவில்லை. தி. மு. க. வில் ஏற்பட்ட கோஷ்டி மோதலின் காரணமாக அந்த ஆணைக்குழு சரிவர இயங்காமல் இருக்கிறது. ஆகவே, அங்கே தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவர்களைக் கொண்டு ஆணைக்குழுவை ஏற்படுத்திச் செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சென்னை மாவட்ட நூலக இயக்கம் மிகவும் மோசமான நிலையில் இருக்கிறது. காரணம், மாவட்ட நூலக குழுத் தலைவருக்கும், புதிதாக அமைக்கப்பட்ட நூலகத்துறை இயக்குநருக்கும் தனிப்பட்ட முறையில் உள்ள வருத்தம், தகராறு காரணமாக அது செயல்பட முடியாமல் இருக்கிறது. மேலும், சிக்கன நடவடிக்கை என்று இந்த அரசு கூறிக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்கும்பொழுது நூலக ஆணைக்குழுவிற்குத் தனியாக ஒரு இயக்குநர் போடவேண்டுமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நூலகங்களிலே பெரும்பாலும் தி.மு.க. ஆதரவு ஏடுகள் மட்டுந்தான் அதிகமாக அனுமதிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சிப் பத்திரிகைகளை அங்கு வாங்குவதில்லை. எதிர்க்கட்சிப் பத்திரிகைகளான நவசக்தி, செய்தி, தென்னகம், மக்கள் குரல், சாணக்கியன் போன்ற பத்திரிகைகளையும் நூலகங்களில் வாங்க ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய பேச்சை முடித்துக் கொள்கிறேன்.





*திரு. கோ. இளங்கோவன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் இந்த அவைமுன் வைத்துள்ள மானியக் கோரிக்கையை ஆதரித்து பேசுகின்ற வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

"மலைவாழை அல்லவோ கல்வி—அதை
வாயார உண்ண வாயென் புதல்வி"

என்று பாவேந்தர் அவர்கள் பாடினார்கள்.

அந்தத் தாயின் நிலையில் இருந்து தமிழக அரசு நாட்டு மக்களுக்கு நல்ல கல்வியை வழங்கி வருகிறது. ஆறு வயதுக்கு மேற்பட்டவர்கள், 11 வயதுக்கு உட்பட்டவர்கள் 1974–75 ஆம் ஆண்டில் ஏறத்தாழ 61.6 லட்சம் பேர் இருக்கிறார்கள். அவர்களில் ஏறத்தாழ 90.3 சதவிகிதம் கல்வி பெறுகிற வாய்ப்பினை, வசதியை இந்த அரசு செய்திருக்கிறது. அதற்காக நான் பாராட்டுகிறேன்.

எஞ்சியுள்ள 6 லட்சம் குழந்தைகள்—அவர்களின் கதி என்ன என்று சிலர் கேட்கக்கூடும். அந்த ஆறு லட்சம் குழந்தைகளில் ஒரு லட்சம் குழந்தைகளை மேலும் பள்ளியில் சேர்க்கின்ற முயற்சியில் இந்த அரசு ஈடுபட்டிருக்கிறது. ஊருக்கு 5, 10 என்று வைத்தால் கூட ஏறத்தாழ நாலைந்து லட்சம் ஒதுங்கத்தான் செய்யும்.

சில நேரங்களில் இருக்கின்ற சில விதிமுறைகளின்படி தொடக்கப் பள்ளிகளை உருவாக்க முடிவதில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஒன்று தொடங்கப்பட வேண்டுமென்றால் ஒரு கல் தொலைவிற்குள் தொடங்க முடியாது. அந்த ஊர் மற்ற ஊர்களுக்குச் செல்வதற்குச் சரியான பாதைகளைப் பெறாமல் இருக்கும். இருந்தாலும் கூட நம்முடைய கல்வித் துறை இயக்குநர் கவனத்திற்குக் கொண்டுவரப்படுமானால் அனுமதி உடனே வழங்கப்படுகிறது. அப்படி நான் என்னுடைய ஒன்றியத்தில் ஒரு பள்ளியினைப் பெற்றிருக்கிறேன் என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்கிறேன்.

அடுத்து, கொடுக்கப்பட்டிருக்கும் புத்தகத்தில் பார்க்கிறேன். பள்ளிக் கல்வி என்ற தலைப்பில் வரும்போதெல்லாம் தொடக்கக் கல்வி, உயர் தொடக்கக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி என்று இருக்கும். இந்தக் குறிப்பிட்ட புத்தகத்தில் தொடக்கக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி என்ற இரண்டு பகுதிகள்தான் அமைந்திருக்கின்றன. நாட்டிலே கூட அத்தகைய சூழ்நிலையை உருவாக்க அரசு முன்வருமானால் அது பாராட்டத்தக்கதாகும்.

உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரை ஏறத்தாழ 2,882 பள்ளிகள் இருப்பதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பதினான்கு வயதுக்கு மேற்பட்டச்கள், 17 வயதுக்கு உட்பட்டவர்கள் ஏறத்தாழ 22.87 லட்சம் இருப்பதாகவ

சொல்லப்படுகிறது. அவர்களில் கல்வி பெறுகிறவர்கள் 7.52 லட்சம் பேர் தான். எஞ்சியுள்ளவர்கள் 15.35 லட்சம் பேர். இதனை நாம் கவனத் தில் கொள்ள வேண்டும்.

முன்பெல்லாம் உயர்நிலைப் பள்ளியில் தொழிற் பயிற்சி அளிக்க வேண்டுமென்பதற்காக எஞ்சினியரிங் கோர்ஸ் புகுத்தப்பட்டது. செக்ர டேரியல் கோர்ஸ் கொண்டுவரப்பட்டது. அக்ரிகல்சுரல் கோர்ஸ் நடை முறைப்படுத்தப்பட்டது. இருந்தாலும் பட்டம் காற்றிலே உயரப் பறப்பது போல் பட்டதாரிகள் வாழ்க்கையில் உயர முடியும் என்ற நோக்கத்தோடு மாணவர்கள் அந்தப் பகுதிகளை எடுத்துப் படிக்க முன்வரவில்லை. இப் போது நிலைமையில் மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. அதன் காரணமாகத் தான் உயர்நிலைப் பள்ளிகளில் தொழிற்பயிற்சி அளிக்கப்பட வேண்டு மென்ற கருத்து எல்லோராலும் வலியுறுத்தப்படுகிறது. நமது அரசும் அதனை ஏற்றுக்கொண்டு வானொலிப் பெட்டிகள் பழுதுபார்த்தல், மின் இயக்கிகள் பின்னுதல், உந்து வண்டி பழுதுபார்த்தல், வேளாண்மை பொறியியல் ஆகியவற்றைக் கற்பிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இவை 19 பள்ளிகளில்தான் இடம் பெறும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. இருக்கின்ற பள்ளிகள் 2,882 ஆகும். இந்த 2,882 பள்ளிகளிலும் தொழிற் பயிற்சி அளிக்க முடியுமா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி முடியாமல் போகுமேயானால் 8-வது 9-வது வகுப்பு படித்தவர்களுக்குத் தனியாகத் தொழிற் பயிற்சிப் பள்ளிகளை உருவாக்கி மாணவர்கள் பயில வாய்ப்பினை, வழியினை, நல்கிடவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் பள்ளியின் எண்ணிக்கை உயர்ந்திருப்பதாக ஒத்துக் கொண்டார்கள். எனக்கு முன்பு பேசிய உறுப் பினர் கூட தனது தொகுதியில் பள்ளிகள் அதிகமாகியிருக்கிறது என்று ஒத்துக் கொண்டார்கள். பள்ளியின் தரம் உயர்ந்திருக்கிறதா என்று கேட்டார்கள்.

பள்ளியின் தரம் உயந்து, மாணவர்களின் தரம் உயர்ந்திருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம் சொல்ல ஆசைப்படுகிறேன்.1963 என்று கருதுகிறேன்—நான் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன். அப் போது மாவட்டக் கல்வி அலுவலர் எனது பள்ளிக்கு வந்தார்கள். 10.ஆம்-வகுப்பு அறைக்குள் நுழைந்தார்கள். ஒரு பையனைப் பார்த்து தமிழகத்தின் முதலமைச்சர் யார்?' என்று கேட்டார்கள், பையன் விழித் தான். உடனே, உனக்குத் தெரிந்த அமைச்சர் ஒருவர் பெயரைச் சொல் என்று கேட்டார்கள். அதற்கு உடனே அவன் 'பக்தவத்சலம்' என்று சொன்னான். அதே நேரத்தில் இன்றைய நிலைமை என்ன ? உயர் நிலைப் பள்ளிக்குச் செல்ல வேண்டாம். தொடக்கப்ப ளிக்குச் சென்று 4-ம் வகுப்பு மாணவனைப் பார்த்து 'தமிழகத்தின் முதல்வர் யார்?' என்று கேட்டால் அடக்கம் உடைய பையனாக இருந்தால் 'கலைஞர்' என்று சொல்லுவான்; சற்று அவசரக்காரனாக இருப்பானாகில் 'கருணாநிதி' என்று





சொல்வான்; சற்று துடிப்புள்ளவனாக இருந்தால் 'தி.மு.க.' என்பான். தி.மு.க. என்றால் என்ன என்றால் தி—திருக்குவளை; மு—முத்துவேலர்; க—கருணாநிதி என்பான்.

அந்த அளவிற்கு மாணவர்களுடைய தரம் உயர்ந்திருக்கிறது. மாண வர்களுடைய தரம் உயரக் காரணம் ஆசிரியர்களுடைய தரம் உயர்ந்திருக் கிறது. ஆசிரியர்களுடைய தரம் எவ்வாறு உயர முடிந்தது?

நான் பள்ளியில் ஆசிரியராக இருக்கும்போது எஸ்.எஸ்.எல்.சி. படிக் கும் மாணவனை அடுத்த ஆண்டு என்ன செய்யப் போகிறாய் என்று கேட்டால் தேர்ச்சி பெற்றால் கல்லூரியில் படிப்பேன்; தேர்வு பெறா விட்டால் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிக்குச் செல்வேன் என்பான். நான் அந்த நிலையை எண்ணிப் பார்க்கிறேன். அப்போது லோயர் கிரேடு என்று ஒன்று இருந்தது. அது இப்போது எங்கே போயிற்று? இப் போது ஹையர் கிரேடும் ஒழிக்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் கள் இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்கள், முதல் நிலைத் தமிழாசிரியர் கள் பற்றியெல்லாம் பேசினார்கள். இப்போது இரண்டாம் நிலைத் தமிழா சிரியர்கள் உருவாகும் வாய்ப்பே கிடையாது.

நான் பட்டதாரி ஆசிரியர் பயிற்சிக்குச் சென்ற காலத்தில் அந்தக் கல்லூரியின் இரண்டு கதவுகளும் திறந்து வைக்கப்பட்டிருந்தன. இப் போது பட்டப் படிப்பில் முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றிருந்தால்தான் அந்தக் கல்லூரிக்குச் செல்ல முடியும் என்ற நிலைமை இருக்கிறது. அப்படித் தேர்ச்சி பெற்றவர்களில் கூட ஆண்டுக்குப் 10 பேர் வீதம் எம்.இட். படிக்க அனுப்பப்படுகிறார்கள். இவ்வாறு ஆசிரியர்களின் தரம் உயர்ந்திருக்கிறது; மாணவர்களின் தரம் உயர்ந்திருக்கிறது; கல்வியின் தரம் உயர்ந்திருக்கிறது என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

பேசிய உறுப்பினர்களில் சிலர் ஒரு கருத்தைச் சொன்னார்கள். கல்லூரியைப் பொறுத்தவரை பி.யு.சி. ஒழிக்கப்பட வேண்டுமென்ற கருத் தைச் சொன்னார்கள். அதற்காகச் செலவழிக்கப்படுகிற பணம்— **It is a Criminal waste** என்று சொல்லியிருக்கிறார்கள். அரசு அதை நடைமுறைப்படுத்த முன்வரும்போது அனைவரும் ஒத்துழைப்புத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

(திரு. கு. காமாட்சி தலைமை.)

சுதந்திரத்திற்குப் பிறகு படிப்பவர்கள் விகிதம் குறைந்துவிட்டது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள். புள்ளிவிவரத்தைக் கூறுகிறேன். 1947-ல் 24 கல்லூரிகள்; 1961-ல் 59 கல்லூரிகள்; 1966–67-ல் 105 கல்லூரிகள்; 1974–75-ல் 183 கல்லூரிகள். இதுபோல் கல்லூரிகளைப் பெருக்கிக் கொண்டே போகிறோம். இன்னும் சொல்லப்போனால் நமது கல்வியமைச்சர் அவர்கள் பெருமிதத்தோடு சொல்லிக்கொள்ளுகிறார்கள். இருக்கின்ற கல்லூரிகள் போதுமென்று அதை ஒத்துக் கொள்கிறேன். அதே நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டு கோளும் விடுக்கிறேன். என்னவென்று கேட்டால் தனியார் கல்லூரிகள்

132 இருக்கின்றன; அரசு கல்லூரிகள் 51 தான் இருக்கின்றன. பள்ளிகளைப் பொறுத்தவரை அரசுப் பள்ளிகள் 4 என்றால் தனியார் பள்ளி ஒன்று என்ற வீதத்தில் இருக்கின்றன. கல்லூரிகளைப் பொறுத்தவரை அரசு கல்லூரி 1 என்றால், தனியார் கல்லூரி 3 என்ற வீதத்தில் இருக்கிறது. இங்கும் ஆசிரியர்களுக்குப் பாதுகாப்புத் தேவை. ஆகவே, பள்ளிக்கூடத்திற்குக் கொண்டு வந்த சட்டத்தை கல்லூரிக்கும் விரிவுபடுத்த வேண்டும்.

(முற்பகல் 11-00)

அடுத்தப்படியாக கஜேந்திர கட்கர் குழுவின் பரிந்துரையைப் பற்றிச் சொன்னார்கள். ஏறத்தாழ 183 கல்லூரிகள் இருக்கின்றன. அவற்றில் சென்னை பல்கலைக்கழகத்தைச் சேர்ந்தவை 106, மதுரைப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவை 77. இந்த பரிந்துரையின்படி 30 அல்லது 40 கல்லூரிகள்தான் ஒரு பல்கலைக்கழகத்தில் இருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மேலும் இரண்டொரு பல்கலைக் கழகங்கள் அமைக்கப் படும் என்ற கருத்தினை முதல்வரவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். நாவலர் அவர்களும் சொல்லியிருக்கிறார்கள். சென்னையிலுள்ள பல்கலைக்கழகம், சென்னைக்குப் பயன்படும், செங்கற்பட்டு மாவட்டத்திற்குப் பயன்படும், வட ஆற்காடு மாவட்டத்திற்குப் பயன்படும். தென்னாற்காடு, தஞ்சை, திருச்சி, புதுக்கோட்டை ஆகிய 4 மாவட்டங்களுக்கும் பயன்படக்கூடிய வகையில் பல்கலைக்கழகம் அமைய வேண்டுமென்றால் தஞ்சையில் அமைந்தால் நலமாக இருக்கும். காரணம் அது மையமாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நான் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்ற காரணத்தினால் சொல்லவில்லை. நான் திருச்சி கல்லூரியில் படித்தவன் என்றாலும் கூட, தஞ்சை மையமாக இருக்கிற காரணத்தினால் அங்கே அமைந்தால் சிறப்பாக இருக்குமென்ற காரணத்தினால் அங்கே அமைக்க வேண்டுமென்று சொல்லிக் கொண்டு, கல்வி வளர்ச்சி பெற பாடுபடுகிற அரசைப் பாராட்டி விடை பெறுகிறேன். வணக்கம்.

திரு. ஆ. கு. சுப்பையா: மதிப்பிற்குரிய அவைத் தலைவரவர்களே, இன்றையதினம் மதிப்பிற்குரிய கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற கல்வி மானியத்தின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய அரசு கல்வி மீது, கல்வியினுடைய வளர்ச்சி மீது அதிக அக்கறை கொண்ட அரசாகும். அதன் காரணமாகத் தான் மொத்த வரவு-செலவுத் தொகையில் 118 கோடி ரூபாயை கல்விக்காக ஒதுக்கி இருக்கிறது. இந்தியாவிலேயே எந்த ஒரு மாநிலத்திலும் இவ்வளவு அதிகமான தொகையை கல்விக்காக ஒதுக்கியதில்லை. இவ்வளவு நாம் ஒதுக்குவதற்குக் காரணம் தமிழகத்திலே இருக்கிற மக்களில் பெரும்பகுதியானவர்கள் எழுத்தறிவு இல்லாமல் இருக்கிறார்கள். அவர்களெல்லாம் படித்து அறிவாளிகளாக தமிழகத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக இந்த அதிகமான தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.





நம்முடைய மாநிலத்திலே எடுத்திருக்கிற கணக்கின் பிரகாரம் பார்த்தால் ஏறத்தாழ 6 லட்சம் மாணவ மாணவிகள் இன்னும் பள்ளிகளுக்குச் செல்லாமல் இருக்கிறார்கள். இதற்கு என்ன காரணம் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். பள்ளிக்குச் செல்லாமல் இருக்கக் கூடிய மாணவ மாணவிகளுடைய எண்ணிக்கையைப் பார்க்கிற போது கிராமப் புறங்களிலே ஏழை எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழைந்தைகள்தான் தாழ்த்தப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் குழந்தைகள்தான் இம்மாதிரி பள்ளிகளுக்குச் செல்ல முடியாத நிலைமையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய குழந்தைகளெல்லாம் இன்றைய தினம் மாடு மேய்ப்பது; ஆடு மேய்ப்பது போன்ற தொழில்களில் ஈடுபட்டிருக்கிறார்கள். அந்தக் குடும்பங்களுக்கு வருவாய் குறைவு காரணமாக தங்கள் குழந்தைகளுக்குச் செலவு செய்து படிக்க வைக்க முடியாத நிலையில் அவர்கள் இருக்கிறார்கள். இதன் காரணமாகத்தான் 6 லட்சம் குழந்தைகள் பள்ளிப் படிப்பிற்குத் தகுதியானவர்கள் படிக்காத நிலையில் இருக்கிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சகல பேர்களும் படித்துத்தான் ஆகவேண்டுமென்ற கட்டாயமான ஒரு சட்டத்தை நம்முடைய அரசு இயற்றியாக வேண்டும். கட்டாயப் படிப்புச் சட்டத்தைக் கொண்டு வருவதன் மூலமாக அவர்களுக்குக் கல்வி போதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்பது என்னுடைய கணிப்பாகும். கல்வியினுடைய ஆண்டு வரம்பு இன்றைய தினம் வட மாநிலங்களிலே 14 ஆண்டுகளாக ஆக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாநிலத்திலும் 14 ஆண்டுகளாக ஆக்குவதுதான் சிறந்த முறையாகும் என்று சொல்லிக் கொள்கிறேன். இதற்குக் காரணம் செலவுகள் குறையும். காலம் அனாவசியமான விரயம் ஆகவேண்டிய நிலைமை ஏற்படாது.

டாக்டா சுக்லா குழு சிபாரிசுகளை தமிழ் நாட்டிலே அமுலுக்குக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய தினம் ஆசிரியர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருப்பினும் படித்து பயிற்சி பெற்றவர்கள் இளைஞர்கள் வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் வேலை வாய்ப்பு அளிக்கக்கூடிய முறையிலே ஒரு ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் என்று இப்போது இருப்பதை மாற்றி ஒரு ஆசிரியருக்கு 25 பிள்ளைகள் என்ற ஒரு நிலையை ஏற்படுத்தினால் இன்றையதினம் படித்து வேலையில்லாமல் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு வேலை வாய்ப்பை நாம் அளிக்க முடியும். கிராமப் புறங்களில் கல்வி கற்க வசதியில்லாத குழந்தைகளுக்கு இவர்கள் மூலம் கல்வி கற்றுக் கொடுக்கக் கூடிய ஏற்பாடுகளைச் செய்ய முடியும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

கட்டிடம் கட்டுவதில் ஏற்படுகின்ற ஒரு நிலையைப் பொறுத்த வரை கிராமப்புறங்களில் இன்றைய தினம் அதிகமான உயர்நிலைப். பள்ளிகள் துவக்கப் பட்டிருக்கின்றன. கிராமப்புறங்களில் அப்படி துவக்கப்பட்ட உயர்நிலைப் பள்ளிகள் வலுவான கட்டிடங்களில் நடத்தப்பட வசதி இடையாது; ஆகவே, கூரைக் கட்டிடங்களில் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். இதற்காக அதிகமான நிதிகளை ஒதுக்கியாக வேண்டும். கிராமப் புறங்களிலே வலுவான கட்டிடங்கள் கட்டிக் கொடுக்க அரசாங்கம் கிராமப் புறங்களில் கட்டப்படும் கட்டிடங்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மன்னார்குடியில் அரசினர் கலைக் கல்லூரி நடந்து கொண்டிருக் கிறது. அந்தக் கலைக் கல்லூரிக்கு கட்டிட வசதி போதாது. இப்போதுள்ள கட்டிடம் விஸ்தரிக்கப்பட்ட வேண்டும். இருக்கின்ற கட்டிடத்தில் மேல் மாடி கட்டுவதன் மூலம் அதிக வகுப்புகளை வைத்து நடத்த உதவியாக இருக்கும். இதையும் அமைச்சரவர்கள் கவனத்தில் கொள்ள வெண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரி ஆசிரியர்களெல்லாம் கிளர்ச்சி செய்வதற்கு ஆரம்பித்து இருக்கிறார்கள். பல்கலைக் கழக மானியக் குழுவின் சிபாரிசுகளை 1973-ம் ஆண்டிலிருந்து அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று அந்தக் கோரிக்கையை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையைப் பரிசீலனை செய்து பொதுவாக கல்லூரி ஆசிரியர் களாக இருந்தாலும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்களாக இருந்தா லும், துவக்கப்பள்ளி ஆசிரியர்களாக இருந்தாலும் அதில் எந்த விதமான குறைபாடுகளும் இருக்கக் கூடாது. அவர்கள் கோரிக்கையை தீர்த்து வைப்பதன் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற பிரச்சனைகளை ஒழுங்குபடுத்துவதின் மூலமாக கல்வித் தரத்தை நல்ல முறையில் உயர்த்த முடியும். இல்லையென்றால் அவர்களுக்கு அக்கறை இல்லாத ஒரு நிலை ஏற்பட்டு மாணவர்கள் பெரிய அளவிற்குப் பாதிக்கப் படுவார்கள். ஆகவே ஆசிரியர்களுடைய நலனிலே அக்கறை கொண் டுள்ள அரசு ஆசிரியர்களுக்கு என்னென்ன வசதிகள் தேவையோ அந்த வசதிகளை யெல்லாம் செய்து கொடுத்தாக வேண்டும்.

கிராமப்புறங்களில் ஆசிரியர்கள் குடியிருக்க சிரமப்படுகிறார்கள், காரணம் கிராமப்புறங்களில் வீடு கிடைப்பது கிடையாது. அதுவும் தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்களுக்கு ஆசிரியர் பயிற்சி பெற்றவர்களுக்கு வேலை கிடைப்பது என்பதே குதிரைக்கொம்பாக இருக்கிற நிலையில் அப்படி, அவர்களுக்கு வேலை கிடைத்தாலும் கிராமப்புறங்களில் வீடு கிடைக்காமல் அவர்கள் சிரமப்படுகிறார்கள். ஆகவே, கிராமப புறங்களில் ஆரம்ப ஆசிரியர்களுக்கு வீட்டு வசதி செய்து கொடுக்கக் கூடிய திட்டத்தை நிறைவேற்றினால் அது அவர்களுக்கு உதவிகரமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். ஆசிரியர்களுடைய நலனைப் பேணி பாதுகாக்கக் கூடிய ஒரு நிலையினை கல்வி அமைசரவர்களும் அரசாங்கமும்



எடுத்துக்கொள்ள வேண்டுமென்று செல்லிக்கொண்டு நம் நாட்டுக் கல்வி முறையை மாற்றியமைக்கின்ற தீவிரமான ஒரு ஏற்பாட்டை நாவலர் அவர்கள் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்று நம் நாட்டில் இருக்கிற கல்வி முறையை மந்தை கல்வி முறை என்று செல்கிறார்கள். ஆட்டு மந்தை, மாட்டு மந்தை போல மாணவ மாணவிகளை அடைத்து வைத்து சரியாக போதிக்காத ஒரு நிலை இன்று இருக்கிறது. இதைப் போக்குகின்ற முறையில் கல்வி முறையில் மாற்றத்தை ஏற்படுத்தியாக வேண்டும். சகலத் துறையிலும் அவர்களுக்குக் கற்றுக் கொடுக்கிற ஒரு நிலையை ஏற்படுத்தி ஆரம்பத்திலிருந்தே அவர்களுக்கு கற்றுக் கொடுக்கிற வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். அது மாத்திரம் அல்லாமல் இன்றைக்கு படித்து விட்டால் அவர்களுக்கு எழுத்தர் களாக லாயக்காக இருக்கிறார்களே தவிர மற்ற வேலைகளைச் செய்வதற்கு எந்த விதமான தகுதியும் இல்லாதவர்களாகி விடுகிறார்கள். ஆகவே இதன் காரணமாக லட்சக்கணக்கானவர்கள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பை படித்து முடித்தவுடனே வேலை தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். பட்டப் படிப்பு படித்தவர் களும் வேலை தேடி அலைந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இன்றைக்கு ஒருவர் எழுத்தராக பணியாற்றக்கூடிய நிலையில் கல்வி முறை நம் நாட்டில் இருந்து கொண்டிருக்கிறது. இதை மாற்றியமைத்து கல்வி கற்பவர்கள், கல்வியை போதிப்பவர்கள் அத்தனை பேரும், அது உயர் நிலைப் பள்ளியாக இருந்தாலும் கல்லூரியாக இருந்தாலும், அவர்கள் ஒரு தொழில் செய்வதற்கு லாயக்குள்ளவர்களாக உள்ள நிலையில் கல்வி முறையை மாற்றி அமைப்பதன் மூலமாக வேலையில்லாத நிலையைப் போக்க முடியும். அவர்களை எல்லாம் வேலைகளிலும் ஈடுபடுத்த முடியும். இதற்குரிய திட்டத்தை நாவலர் அவர்கள் தயார் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு உரையை முடித்துக் கொள்கிறேன்.

*THIRUMATHI ALDA M. FOWLER : Mr. Chairman, Sir, before I make a few remarks on the Education Demand, I would like to congratulate the Government on the stupendous work that it does in the field of education towards preparing our State for a fully literate electorate,. This is a very huge task which it does with zeal and enthusiasm and efficiency, and so much of progress has been made.

Today, I am going to draw attention to one fact which usually is dismissed with a few words at the end of my speech.

I want to draw attention to the office of the Inspector. If Anglo-Indian Schools run efficiently, it owes so much to the effective running of the Inspector's Office. So much of the responsibility is carried by that office. The examinations are held. Training school examinations are held in more than one State. The examinations are held, papers are corrected and certificates are issued to successful candidates. Yet,

it is done with one staff member. In the S.S.L.C. Examination which no doubt has two lakhs of candidates, there are 400 staff, as against 2,000 candidates in ours and only one staff. You can judge that for yourselves. Increased staff is urgently required. There is an Examination Board comprising of 9 members and these members are drawn from the various Universities in our State, besides two local members. They are responsible for the high standards that are maintained. So much of responsibility is silently carried by this office, but it is very hard. . . .

<u>திரு. கே. கந்தசாமி</u> : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். தலைவரவர்களே தங்கள் தலைமையில் இங்கே சபை நடந்து கொண்டிருக்கிறபோது, இங்கே ஒரு குட்டி சபை நடத்திக்கொண்டு இருக்கிறார்களே—எங்களுடைய கவனத்தையும் ஈர்க்கிற அளவுக்கு, தொந்தரவு கொடுக்கிற அளவுக்கு இருக்கிறதே; இது முறைதானா ?

<u>மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி)</u> : அது தேவையில்லை. You please carry on.

THIRUMATHI ALDA M. FOWLER : Please do not deduct that time from the time allotted to me.

So, Sir, I think that this Office should be upgraded to that of Deputy Director. When one carries responsibility, one should not beat a willing horse and give him more responsibility. Therefore, I suggest strongly that this post should be upgraded. The difference in remuneration is not much.

I want to pay my debt of gratitude to the Government for all the sanctions that were given and that were recommended by the State Board for Anglo-Indian education. I do it on purpose because I feel that people should know, especially Anglo-Indians should know, parents should know what the Government is doing for them. The 156 boarding grant has been enhanced. The mid-day meals, uniform, fee remission and book allowances have been enhanced and for this I want to express my gratitude. There is, however, one recommendation that has been deferred and that is the recommendation of enhancement of stipend to teacher-training students. When this institution was first formed about more than 60 years ago, the stipend started with Rs. 20. Sir, a long time has passed from that stage till now. The stipend is still Rs. 20 and therefore, I strongly recommend that this should be gone into and the enhancement to Rs. 40 at least should be given.

Teacher-training institutions try to do their best, but no maintenance grant is given to them. It is very hard in these difficult days to keep the standard up and to maintain the teacher-training institution. We have two of them, one in Kerala and one in Madras.





Sir, Anglo-Indian schools are fully aware of the new trends in education. They realise that there is need for adaptation and they are prepared for it. Today they are ready and willing to start schools for drop-out children as an extra curricular piece of work. You and I know that the poverty cycle begins at this point. Therefore, it is at this point that it has to be broken and there must be a concerted effort on the part of all institutions. That is why it is easier to work through schools because they are already organised for the task. We have to bring in all those students who have somehow missed out along the way for various reasons. But that would not be enough. One has to go a step further. One has to institute or include classes in schools for vocational training. I know that the Government is planning on these lines and therefore, our schools must not be left out. We have to be equipped with all that is necessary. Facilities must be given to make us also prepared for going one step further in vocational education. More than that I feel strongly that at least two I.T.I. type of schools should be brought into being, one in Madras and one in the mofussil area, so that our students will not have difficulty in getting admission.

I think, Sir, that I have said all I have to say. I hope that what I have stated which is quite a lot, will be taken seriously and not in the distant future. I would like these ideas to be implemented right now without any further delay. Once more I do thank the Government for all that it has done and we look forward to more encouragement in the future.

<u>திரு. கே. கந்தசாமி</u> : மாண்புமிகு பேரவை தற்காலிகத் தலைவரவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக கொண்டுவரப்பட்டுள்ள கல்வி மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களை. . . . . . . . . . . . .

<u>திரு. கோவை செழியன்</u> : பாயிண்ட் ஆப் ஆர்டர், தற்காலிகத் தலைவர் என்று சொல்லலாமா?

<u>திரு. கே. கந்தசாமி</u> : திருத்திக்கொள்கிறேன். தலைவரவர்களே, இன்று தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள கல்வி மானியத்தை பார்வார்ட் பிளாக் கட்சியின் சார்பாக மனப்பூர்வமாக வரவேற்று பாராட்டுகிற நேரத்தில் கீழ்க்கண்ட எனது சில கருத்துக்களையும் குறிப்பிட விரும்புகிறேன்.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.

என்று வள்ளுவர் கூறியிருக்கிறார். அன்றே கல்வியைக் கற்க வேண்டுமென்று நல்ல முறையில் மிக ஆணித்தரமாக சொல்லி வைத்திருக்கிறார் வள்ளுவர். ஆனால் இன்று என்னவோ கா

[திரு கே. கந்தசாமி] [1975 மார்ச் 21

திருஷ்டவசமாக ஆங்கிலேயர்கள் தங்களுடைய அதிகாரத்தை, ஏகாதிபத்தியத்தை நாட்டில் நிலை நிறுத்த வேண்டுமென்பதற்காக நிர்வாக இயந்திரங்களை செம்மையாக நடத்துவதற்காக வைத்திருந்த அதே கல்வியையே நாம் சில மாற்றங்கள் செய்து வைத்துக் கொண்டு இருக்கிறோம். நாட்டின் மூதறிஞர்கள், நாட்டின் தலைவர்கள் அத்தனைபேரும் கல்வியில் மாற்றம் வேண்டுமென்று கூறுகிறார்களே ஒழிய எப்படி மாற்றம் தேவை என்று ஒருவரும் தெள்ளத் தெளிவாக இதுவரையில் குறிப்பிட்டதாக நான் அறியவில்லை. ஆனால் அவர்கள் சொல்லவில்லை என்ற நிலையோடு இருந்துவிடக்கூடாது என்பது என்னுடைய கருத்து. எப்படி ஒவ்வொரு துறைகளிலும் நிபுணர்கள் அப்படிப்பட்ட ஆராய்ச்சி செய்து, மாற்றங்கள் எதிர்காலத்திற்கு உகந்த முறையில் உருவாக்கி கொள்கிறார்களோ அதே போல் கல்வி நிபுணர்களும் நம் நாட்டிலே ஏற்கனவே உள்ள மாவை தோசை, ஊத்தப்பம் சுடுவது போல கல்வியில் மாற்றம் செய்து 5 ஆண்டுகளில் ஒரு ஆண்டை கல்லூரியில் இருந்து, பிரித்து இரண்டு ஆண்டுகளாக இருந்ததை மூன்று ஆண்டுகள் பிரித்து வைப்பதால் வருஷங்கள் மாறலாம். சில சிலபஸ்கள் மாறலாமே ஒழிய Essence of education and charactor of education are not going to change, என்பது தான் என்னுடைய தாழ்மையான கருத்து ஆகும்.

சிலவற்றை கூட்டி குறைப்பதன் மூலமோ, வருடங்களை முன்னால் சேர்த்து பின்னால் கழித்து இரண்டையும் சமமாக பிரிப்பதன் மூலமோ நாம் எதிர் பார்க்கிற சமுதாய ஏற்றமோ, தேவைப்படுகிற கணிசமான கல்வி மாற்றமோ நாம் அடைய இயலாது. ஆகவே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கலைஞர் அவர்களோடு கலந்து பேசி வெளிநாட்டுக்கு—ஜப்பான் சிறிய நாடாக இருந்தாலும், விடுதலை பெற்று சில காலங்களுக்குள்ளே நவீன இயந்திரங்களை வைத்து இயங்குகிற முறையில், நவீனப் பொருள்களை ஏற்றுமதி செய்கிற அளவுக்கு வளர்ந்து இருக்கின்றது. அப்படிப்பட்ட நாடுகளுக்கு, இன்னமும் மேல் நாடுகளுக்கு கூட அனுப்பி அந்த அறிஞர்களுடைய அறிவை அவர்கள் சேகரித்து வருகின்ற விவரங்களை எல்லாம் தொகுத்து, நம் நாட்டின் மண் வளம், மக்களுடைய மனோநிலை, பொருளாதார வளம் இவைகளை எல்லாம் தொகுத்து எப்படி நம்முடைய எதிர்கால வாரிசுகளை உருவாக்குவது என்ற திட்டம் உருவாக்க முடியும் என்று என்னுடைய கருத்தை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி இல்லாமல் Mere education to produce only raw graduates is not going to solve the problem of unemployment.

நீங்கள் இன்றைக்கு கொடுத்து வருகின்ற கல்வி மூலம் பி.ஏ., பி. எஸ்ஸி. போன்ற படித்த பட்டதாரிகளின் எண்ணிக்கை தான் வளர்ந்து வருகிறது. அகில இந்திய அளவிலே பட்டதாரிகள் வேலையில்லாதவர்கள் 5 லட்சம் இருப்பதாக தெரிகிறது. தமிழகத்தை பொறுத்த அளவில் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் அவர்கள் வாலிப காலத்தில் துடிதுடிப்போடு இருக்கினறவர்கள் தாங்கள் படித்து விட்டு தங்கள் சக்தியை விரயம் செய்து விட்டோம், எதிர்காலத்தில் எப்படி



1975 மார்ச் 21] [திரு. கே. கந்தசாமி]

வாழப் போகிறோம் என்கிற நிலையில் தொய்ந்த நிலையில் காணப்படுகிறார்களே ஒழிய இந்த நாட்டு மக்களுக்காக வாழ முடியும் என்ற நம்பிக்கை இழந்து இருக்கிறார்கள்.

Education should be character-making education. It should mould the future character of the younger generation and also it should infuse self-confidence and self-reliance in the individuals concerned. Otherwise, there is no use for the present system of education at all, என்பது தான் என்னுடைய கருத்து. தன் நம்பிக்கை உள்ளவர்களாக ஒரு தொழிலை எதிர்காலத்தில் செய்து வாழ முடியும் என்ற நம்பிக்கை ஊட்டுவதாக இருக்க வேண்டும். இதற்கு வழிவகை கண்டு ஆக வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

மேல்நாட்டில் கல்வி அந்த அந்த நாடுகளுடைய நிலையைப் புரிந்து, மாணவர்களை பண்பாடுகளோடு இணைந்தவர்களாக ஆக்குகிறார்களே ஒழிய நம் நாட்டில் இருக்கின்ற சிலர் நமக்கு வேண்டாத அமெரிக்க முறையைப் பின்பற்றுகிறார்களே அதுமாதிரி இல்லை. நம் நாட்டில் ஹிப்பீஸ் என்ற முறை வேண்டாத அளவுக்கு நுழைந்து இருக்கிறது. துரதிர்ஷ்டவசமாக இன்றைய இளைஞர்கள் குறிப்பாக தமிழ்நாட்டில் வாழும் இளைஞர்கள் நெஞ்சுரம் உள்ளவர்களாக தோள் வலிமை உள்ளவர்களாக, போர் வீரர்களாக இருக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறபோது அந்தத் தியாகம் செய்ய பண்புள்ளவர்களாக வளர வேண்டிய நிலை உள்ளது.

இன்றைய இளைஞர்களை எப்படி விவரிக்கிறோம்? அவர்களுடைய கவனம் எல்லாம் எக்ஸ்டர்னல் அப்பியரின்ஸில் மேல் தோற்றங்களில் போய் விடுகிறது. சென்சிடிவ் ஆக இருக்கிறார்கள். எமோஷனல் ஆக இருக்கிறார்கள், ரீசனிங் ஆக இல்லை. இதனால் பொறுப்புள்ள பிரஜையாக வாழ முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்று மிக வேதனையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அப்படி படித்து வருகிறவர்கள் சிலர் ரா கிராஜுவேட்டாக வருகிறார்கள். இப்படிப்பட்ட இளைஞர்களுக்கு பஞ்சாயத்து யூனியன்களில் வேலை தரப்படுகிறது. பஞ்சாயத்து அலுவலகங்களில், ஆஸ்பத்திரிகளில் போய் வேலை செய்து வந்தார்கள். சரிவர வேலை செய்யவில்லை. 60, 70 பேர் வேலை இல்லாமல் நீக்கப்படுகிறார்கள். இதற்கெல்லாம் என்ன காரணம்? அந்த வேலைக்கு உரிய ஊதியம் கொடுக்கவில்லை. அவர்களுக்கு கொடுக்கப்படுகின்ற வேலைக்கு எதிர்பார்த்த ஊதியம் தருவது இல்லை.

நம்முடைய நாட்டைப் பொறுத்தவரையில் அளவில் ரூரல் எகானமியாக இருக்கிறோம். கிராமப் புறங்களை மையமாக வைத்து இருக்கிறோம். விவசாயப் பொருளாதாரம் வைத்து இருக்கிறோம். இந்த கிராமிய விவசாய பொருளாதாரத்திற்கு உகந்த முறையில் ஒரு கல்வித் திட்டம் உருவாக்க வேண்டும். இதனால் எதிர்கால சமுதாயம் நிரந்தரமான நிம்மதியான வாழ்க்கை அடைய முடியும்.

படித்தவர்கள் பட்டணக்கரையை நோக்கி போகிறார்களே ஒழிய கிராமங்களுக்கு சென்று, படித்த என்ஜினீர்களும், டாக்டர்களும் கூட வேலை செய்ய மறுக்கிறார்கள். கிராமப்புறங்களை கவர்ச்சி உள்ளதாக ஆக்கு

வதற்கு அதிக சம்பளம் கொடுத்து விவசாயத் துறையில் நிபுணத்துவம் பெறுவதற்காக, விவசாயத்தை புரிந்து செயல் படுத்துவதற்காக அரசு உத்தரவாதம் அளிக்க வேண்டும். பால் பண்ணை போன்றவைகளை வைத்து பட்டதாரிகளை கிராமப் புரங்களுக்கு அனுப்பி லாபகரமாகச் செய்ய உத்தர வாதம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல, கல்வியைப் பொறுத்த அளவிலே பிற்பட்ட மக்களுக்கு அதிக சலுகை................(மணி அடிக்கப்பட்டது).

இரண்டு நாட்களில் கட்சி சார்பில் இன்றுதான் பேசுகிறேன். ஆகவே சில நிமிடங்கள் தருமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

பிற்பட்ட மக்களுக்கு பல நன்மைகள் செய்து வருவதை பலமுறை பாராட்டி இருக்கிறேன். நம்முடைய அரசு வருவதற்கு முன்னால் ஏற்கனவே ஆங்கிலேயர் காலத்தில் கூட டீநோடிபைட் ட்ரைப்ஸ்—குற்றப் பரம்பரை சட்டத்தின் கீழ் கள்ளர், மறவர் போன்றவர்களுக்கு பல சலுகைகள் கல்வி, உத்தியோகத்தில் அளிக்கப்பட்டு வந்தன. இப்போது அரிசன துறைக்கு வந்த பிறகு "டிரனி அப் தி மைனாரிட்டி அகன்ஸ்ட் தி மெஜாரிட்டி"யாக நடந்து கொள்கிற துர்பாக்கிய நிலை காண்கிறோம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள்....

மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கு. காமாட்சி) : ஏற்கனவே பிற்பட்ட நலத் துறை மானியத்தின் போது அதைப் பற்றி பேசி இருக்கிறீர்கள்.

திரு. கே. கந்தசாமி : கல்வி என்று வருகிற போது, அட்மிஷன் வருகிறபோது நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை பாராட்டினேன். இவர்கள் பி.ஏ., பி.எஸ்ஸி., ஹெல்த் இன்ஸ்பெக்டர், ஸ்டாப் நர்ஸ், டெக்னிகல் எஜூகேஷன் என்று வருகிற காரணத்தால் அவர்கள் அட்மிஷனுக்கு போகிறபோது வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கின்றது. அவை

(முற்பகல் 11-30)

களுக்கு அடையாளமாகப் பார்க்கும்போது உதாரணமாகச் சொல்ல வேண்டுமானால் திருநெல்வேலியில் சங்கரன்கோயில், இராமநாதபுரத்தில் முதுகளத்தூர், மதுரையில் உசிலம்பட்டி தாலுகாக்கள் இருக்கின்றன.

**As the people in these areas are essentially denotified tribes, they should be declared as backward classes.** இப்படி சில குறிப்பிட்ட இடங்களை எடுத்துக்கொண்டால், அந்த இடங்களும் மிகவும் பிற்பட்ட பகுதிகளாக இருக்கின்றன ; அங்கே இருக்கின்ற மக்களும் மிகவும் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். அங்கே இருப்பதில் மெஜாரிட்டி இனம் பிற்பட்ட சமுதாயத்தினர். அவர்களுக்கு பயிற்சி பெறுகின்ற இடங்களில் அட்மிஷன் கிடைப்பதற்கும், உத்தியோகங்களில் உரிய விகிதாச்சாரமும் கிடைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால் முக்குலத்தோர் மிகவும் பிற்பட்டவர்களாக இருக்கிறார்கள். தொழில் துறையை எடுத்துக்கொண்டாலும், அல்லது டெக்னிக்கல் எஜுகேஷனை எடுத்துக்கொண்டாலும் வேறு எந்தத்



துறையை எடுத்துக்கொண்டாலும் அதிலே எத்தனை சதவிகிதம் பிற்பட்டோருக்கு—இந்த முக்குலத்தோருக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதைப் பார்த்தால் ரொம்ப குறைந்த சதவிகிதம்தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சரவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

இன்றையதினம் சமுதாயத்தில் இருக்கிற பல அநீதிகளை நீக்கிக் கொண்டிருக்கிறது நம்முடைய கலைஞர் அரசு. அப்படி இருக்கும்போது இந்த சமுதாயத்திற்குக் கிடைக்க வேண்டிய நியாயமான பங்கு இன்று கூட கிடைக்காமல் இருக்கிறது என்பதை மிகுந்த வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன். மற்றவர்களுக்கு கிடைப்பது போன்ற சமூக நீதி மெஜாரிட்டி பிற்பட்ட மக்களுக்கும் கிடைக்க வேண்டும். அதற்கு நம்முடைய கல்வி அமைச்சரவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று மெத்த பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பட்ட பகுதிகளில் மைனாரிட்டியாக இருக்கக்கூடிய முன்னேறிய சமுதாயத்தினர் எல்லா வசதிகளையும் பெற்றுக்கொண்டு, வாழ்க்கையில் மேலும் மேலும் முன்னேறிக் கொண்டிருப்பதால் அவர்களே வேலை வாய்ப்பு போன்றவைகளில் அதிகப் பங்கைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

**In proportion to the population, there is no representation to the majority community which is included in the backward classes.** ஆகவே, அருள் கூர்ந்து அதை கவனிக்க வேண்டும். கள்ளர் ரெக்ளமேஷன் திட்டம் மதுரையில் இருக்கிறது. நூற்றுக்கணக்கான பள்ளிகள் இருக்கின்றன. 50 வருடங்களுக்கு முன்னால் எப்படி இருந்ததோ அதே நிலையில்தான் இன்றைக்கும் அந்த பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அங்கே பணியாற்றுகின்ற ஆசிரியர்கள் சரியாக வேலை செய்வதில்லை என்று அதிகாரிகள் அடிக்கடி புகார்கள் சொல்லிக் கொண்டே இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் லத்தீப் அவர்கள் சொன்னதைப்போல நாங்கள் ஏதாவது ஆலோசனை சொன்னாலும் அவர்கள் கேட்கமாட்டேன் என்கிறார்கள்.

அங்கே கள்ளர் ரெக்ளமேஷனுக்கு ஒரு டிபுடி கலெக்டர் இருக்கிறார். அவர் மற்ற வேலைகளையும் பார்க்க வேண்டியிருப்பதால் பள்ளிகள் எப்படி நடைபெறுகின்றன என்று பார்க்க போதிய அவகாசம் இல்லை. அதனால் அவருடைய கண்காணிப்பு சரியாக இல்லை. (மணியடிக்கப்பட்டது.) இரண்டு நாட்களுக்கும் சேர்த்து எங்கள் கட்சியில் இருந்து நான் ஒருவன் தான் பேசுகிறேன். ஆகையால் தயவுசெய்து எனக்கு கொஞ்சம் நேரம் அதிகமாகத் தாருங்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. கே. கந்தசாமி : கள்ளர் ரெக்ளமேஷன் பள்ளிகளை சரியாகக் கண்காணிக்க நல்ல தரமுள்ள உத்தியோகஸ்தர் ஒருவரை— டி.இ.ஒ. தரத்திலாவது ஒரு தனி அதிகாரியைப் போட வேண்டும். அப்படிப் போடுகின்ற தனி அதிகாரி பள்ளிகளை சரியாக கண்காணித்து, அங்குள்ள

வர்களின் கல்வித் தரத்தை உயர்த்த வேண்டும். அதற்கு ஏற்ற நட வடிக்கை எடுக்க வேண்டுமென்று மிகப் பணிவுடன் கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவைமுன் வைத்திருக்கிற மானியக் கோரிக்கையை ஆதரித்து என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

தொடக்கக்கல்வி, உயர்நிலைக் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் கல்வி, கலைக் கல்வி போன்ற கல்விகளுக்கு 118 கோடி ரூபாய் ஒதுக்கி யிருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே தெரிவிக்கப்பட்டிருக்கிறது அது மட்டுமல்ல. மருத்துவக் கல்விக்கு செலவிடுகின்ற பணம், கால்நடை மருத்துவக் கல்விக்கு செலவிடுகின்ற பணம், பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு செலவிடுகின்ற பணம் இவைகளை எல்லாம் சேர்த்து கணக்கிட்டால் ஏறத்தாழ 350 கோடி ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு கல்விக்காக செலவிடப்படுகிறது. அப்படிச் செலவிடுகின்ற பணத்திற்கு ஏற்ற ரிட்டர்ன் கிடைக்கிறதா என்றால் நாமெல்லாம் வருத்தப்பட வேண்டிய அளவுக்குத் தான் இருக்கிறது.

நான் ஏற்கெனவே 1973-ம் ஆண்டில் கூறியதுபோல அமெரிக்காவை போல, மேற்கு ஜெர்மனியைப் போல, பிரான்சை போல இந்த வகை யிலே நாம் செலவிடுகின்ற பணத்திற்கு என்ன ரிட்டர்ன் கிடைக்கிறது என்று கணக்கிட வேண்டும். நம்முடைய கல்வித் துறை அதற்குரிய கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும்.

இன்றைக்கு நம்முடைய நாட்டில் கல்வி எப்படி அமைந்திருக்கிறது என்றால் இந்த நாட்டுக்கு எது தேவையோ அது இல்லாமல் வேறு ஏதேதோ இடம் பெற்றிருக்கிறது. பொதுவாக அளிக்கப்படுகின்ற கல்வி சமுதாயத்திற்குப் பயன்படக் கூடியதாக இருக்க வேண்டும். இந்த நாட்டிலே நூற்றுக்கு 80 பேர் விவசாயிகளாக இருக்கிறார்கள். ஆகவே, நம்முடைய கல்வியை "அக்ரிகல்சர் ஓரியன்டட் எஜுக்கேஷன்" என்ற முறையில் மாற்றி அமைத்தால் உள்ளபடியே இந்தச் சமுதாயம் நல்ல பலனடையும் என்பதை நான் கூறத் தேவையில்லை.

பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., போன்ற படிப்புகளை முடித்துவிட்ட பின்னால் அந்தக் கல்வி சமுதாயத்திற்கு எந்த அளவுக்குப் பயன்படுகிறது என்பதை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். பி.ஏ., பி.எஸ்ஸி., பி.காம்., எம்.ஏ., படித்த பிறகு அவர்கள் எல்லாம் வேலை தேடி வரும்போது பொதுவாக கிளார்க் வேலைக்குத்தான் வருகிறார்கள். ஆக, அவர்கள் வருகின்ற வேலைக்கும் அவர்களுடைய படிப்புக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை. அவர்களுடைய படிப்புக்கும் வேலைக்கும் தொடர்பு இல்லாத காரணத்தால் அவர்கள் உயர்ந்த படிப்பை படித்துவிட்டு கிளார்க் வேலைக்கு வரும்போது ஒரு டிராப்ட் ஒழுங்காக எழுதத் தெரியவில்லை. அந்த அளவுக்குத்தான் இந்த கல்வி இன்றைக்கு இருந்துகொண்டிருக் கிறது.



அதைப்போல பொறியியல் துறையில் எல்.இ.இ. போன்ற பட்டங்களைப் பெற்று வேலைக்கு வருகிறார்கள். இந்தக்கல்வி எப்படி இருக்கிறது என்றால்; வீட்டிலே "ஃபியூஸ்" போனால் கூட "ஒயர்மென்" தான் வந்து அதை மாற்றிப் போடவேண்டியிருக்கிறது. அந்த அளவுக்குத் தான் பொறியியல் துறை படிப்பு இருக்கிறது. இப்படி ஒவ்வொரு துறையிலும் இருக்கிற படிப்புக்கும் வேலைக்கும் தொடர்பு இல்லாமல் இருப்பதால் நாம் கல்விக்காகச் செலவிடுகின்ற பணத்திற்கு ஏற்ற ரிட்டர்ன் கிடைக்கவில்லை. சமுதாயத்திற்கும் இந்தக் கல்வி பயன்படவில்லை. ஆகவே, சமுதாயத்திற்குப் பயன்படும் வகையில் நம்முடைய கல்வி முறை அமைகின்ற வகையில் கல்வித் திட்டத்தை மாற்றியமைக்க வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய அரசாங்கத்திலிருந்து வெளியிடப்படுகின்ற "தமிழரசு" பத்திரிகையில் விளம்பரம் வருகிறது. அதில் வருகிற விளம்பரத்தைப் பார்த்தால் பல்வேறு துறைகளுக்கு ஆள் தேவை, குறிப்பிட்ட சில துறைகளுக்கு ஆள் இல்லை, குறிப்பாக பிற்பட்ட சமுதாயத்திலிருந்து அல்லது தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலிருந்து ஆள் கிடைக்கவில்லை என்று விளம்பரம் வருகிறது. அதை எண்ணிப்பார்த்து; நாம் கொடுக்கின்ற கல்வி பிற்பட்ட தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினருக்கு வேலை வாய்ப்புகளில் உரிய விகிதாச்சாரம் கிடைக்கத்தக்க வகையில் இருக்க வேண்டும். அதற்கு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள் கிறேன்.

இன்றைக்கு 183 கல்லூரிகள் இங்கே இருக்கின்றன. மேலும் ஒரு பல்கலைக் கழகம் நிறுவப்பட இருக்கிறது. இப்படி புதிதாக அமைக்கப் படுகின்ற தொழில் நுட்ப பல்கலைக் கழகத்திற்கு ஏற்கெனவே நம்முடைய நாட்டில் இருந்த தொழில் மேதை ஜி. டி. நாயுடு அவர்களின் பெயரை வைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல பெரிய வள்ளல் தன்மை கொண்ட பச்சையப்பனார் அவர்கள் இந்தியத் துணைக்கண்டத்திலே எங்கும் இல்லாத அளவுக்கு ஒரு பெரிய அறக்கட்டளையை ஏற்படுத்தியிருக்கிறார்கள். ஏறத்தாழ 50 கோடி ரூபாய் சொத்தினை அந்த அறக்கட்டளைக்கு வைத்திருக்கிறார்கள். ஆகவே அவர்களுடைய பெயரிலும் ஒரு பல்கலைக் கழகத்தை உருவாக்க முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

183 கல்லூரிகளை வைத்துக்கொண்டு 2, 3 பல்கலைக் கழகங்கள் இருந்தால் நிச்சயமாக கண்காணிப்புப் பணிகள் செம்மையாக அமையாது. ஒரு பல்கலைக் கழகத்திற்கு 25 கல்லூரிகள் என்று இருந்தால் அந்த யூனிவர்சிட்டி நல்ல முறையில் கண்காணித்து செயல்பட முடியும். ஆகையால் கல்லூரிகளின் எண்ணிக்கையைப் பொறுத்து; இன்னும் பல பல்கலைக் கழகங்களை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த 4, 5 ஆண்டு காலமாக இந்த அவையில் "வணிகவியல் பாடங்களில் தேர்வு" பற்றி எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லி உள்ளபடியே நான் மகிழ்ச்சியடையக்கூடிய அளவுக்கு இந்த ஆண்டுதான்

அதற்கு தனிக் கவனம் செலுத்தி, இங்கே கொடுத்திருக்கிற அறிக்கையில் தனி பாரா ஒன்று சேர்த்து, அதனுடைய வளர்ச்சி எல்லாம் சொல்லியிருக்கிறார்கள். இந்த வணிகவியல் துறையில் உள்ளபடியே பெரிய மாற்றம் ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டிலே இருக்கக்கூடியவர்கள் பெருமைபடக் கூடிய அளவுக்கு நீண்ட காலமாகச் சொல்லிவந்த பல மாற்றங்கள் எல்லாம் இதிலே செய்யப்பட்டிருக்கின்றன.

ஆனால் இது போதாது. ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சம் மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள். ஏறத்தாழ 5 லட்சம் மாணவர்கள் 1,400 பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெற்று வருகிறார்கள். அதற்கு ஒரு தனி டைரக்டர் நியமிக்க வேண்டுமென்று கூறியிருந்தேன். அதுபற்றி எதுவும் இந்த அறிக்கையில் குறிப்பிடவில்லை. 40 கோடி ரூபாய் செலவிடப்படும் பொதுப் பணித் துறைக்கு 8 தலைமைப் பொறியாளர்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது உள்ளபடியே கல்வித்துறை செம்மையாகச் செயல்பட வேண்டுமென்றால் தனித் தனியாகப் பிரித்து, தனித்தனியாக டைரக்டர்களைப் போட்டால் தான் மேலும் நல்ல வளர்ச்சி அடையும் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. எலிமெண்டரி எஜுகேஷனுக்கு தனி டைரக்டர், ஹையர் எஜுக்கேஷனுக்கு தனி டைரக்டர் என்று இப்படி தனித் தனி டைரக்டர்களைப் போட்டு; தனிக் கவனம் செலுத்தினால் இன்னும் கல்வியின் தரம் உயர வாய்ப்பு ஏற்படும்.

பல தொடக்கப் பள்ளிகள், உயர் தொடக்கப் பள்ளிகள் எப்படி இருந்து வருகின்றன என்பது நமக்கெல்லாம் தெரியும். ஆகையால் இப்போது "டைரக்டர் ஃபார் ஸ்கூல் எஜுக்கேஷன்" என்றிருப்பதை "டைரக்டர் ஃபார் எலிமெண்டரி ஸ்கூல்ஸ், டைரக்டர் ஃபார் ஹையர் ஸ்கூல்ஸ்" என்று பிரித்து செயல்பட வேண்டும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதைப்போலவே இன்றையதினம் கமர்ஷியல் எஜுக்கேஷனைப் பொறுத்தவரை இவ்வளவு மாற்றங்கள் செய்திருந்த போதிலும் தனி டைரக்டர் இருந்தால் இன்றும் சிறப்பாக இருக்கும். ஏற்கெனவே நான் சொன்னமாதிரி பி.ஏ., பி.எஸ்ஸி., எம்.ஏ., படித்துவிட்டு எழுத்தர் வேலைக்கு வருவதை விட இந்த கமர்ஷியல் துறையில் படித்து நல்ல முறையில் வேலை வாய்ப்பு பெற வசதி இருக்கும். இப்போது செக்ரெட்டேரியல் கோர்ஸ் எல்லாம் கூட பள்ளிகளில் இருக்கின்றன. இந்த செக்ரெட்டேரியல் கோர்ஸ் மூலமும் இத்தகையப் பயிற்சிகளைப் பெற முடியும். இப்படி வேலை வாய்ப்புக்கு ஏற்ற கல்வியை பெருமளவில் கற்பிக்க போதுமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். போதிக்கின்ற கல்வி நாட்டுக்குத் தேவையான கல்வியாக இருக்கவேண்டும். அதற்கு நான் தெரிவித்ததைப் போல ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனி டைரக்டர்களைப் போட்டு, சிறந்த பயிற்சியளிக்கின்ற முறையை உருவாக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியைப் தயாரிக்க ஒரு தனிக் குழுவை நியமித்திருக்கிறார்கள். இதில் தமிழ்ச் சுருக்கெழுத்து தெரிந்த உறுப்பினர்கள் நான்கு பேர்கள் தான். குழுவில் உள்ள மொத்த உறுப்பினர்களே 6 பேர்கள் தான். 2 பேர்களுக்குச் சுருக்கெழுத்துத் தெரியாது. அவர்கள் தமிழ் அறிஞர்கள்; இந்த நான்கு பேர்களும் சுருக்கெழுத்து அகராதியை எத்தனை ஆண்டு காலத்தில் தயாரிப்பார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அருள்கூர்ந்து கவனிக்க வேண்டும்.





பல்கலைக் கழகத்தில் ஆங்கில டிக்ஷனரியைத் தயாரித்தார்கள். அதற்கு எவ்வளவு காலம் ஆயிற்று ? எவ்வளவு ரூபாய் செலவழித்தார்கள் என்பதை எல்லாம் கல்வித்துறை செயலாளரைப் போன்றவர்கள் கவனம் செலுத்திப் பார்க்க வேண்டும். அதுவும் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியைத தயாரிக்க நான்கு பேர்களை மட்டும் போட்டுவிட்டு—இது நான்கு பேர்களால் நடக்கக் கூடிய காரியம் அல்ல, அதிலும் ஒருவருக்கு 500 ரூபாய் கொடுத்துவிட்டால் போதும், தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியைத் தயாரிக்க—எத்தனை ஆண்டுகளானாலும் என்று இருந்தால் அதில் அவர்களுக்கு எவ்வளவு அக்கறை இருக்க முடியும் என்பதை கல்வி இலாக்கா ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆகவே பத்து சுருக்கெழுத்து நிபுணர்களையாவது அதில் உறுப்பினர்களாகப் போட்டு ஓராண்டு காலத்திற்குள் அந்தத் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியை அவர்கள் தமிழகத்திற்கு அளிக்கவேண்டும் என்று இந்தப் குழுவை வற்புறுத்த வேண்டுமென்று விரும்புகிறேன். தமிழ்ச் சுருக்கெழுத்தை விரிவுபடுத்தாதவரை என்னதான் தமிழை எல்லாக் கட்டங்களிலும் ஆட்சிமொழியாகக் கொண்டு வர முயற்சித்தாலும் பல சங்கடங்கள் இருக்கும். நம்முடைய அந்த முயற்சி வெற்றி பெறுவதற்கான வாய்ப்பாகத்தான் தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதி வெளிவந்தாக வேண்டும்.

தமிழ்ச் சுருக்கெழுத்து அகராதியைப் பற்றிச் சொல்கிறோம். அதே நேரம் தமிழ்ச் சுருக்கெழுத்துப் புத்தகம் மாணவர்களுக்குக் கிடைக்கிறதா என்றால் இரண்டாண்டு காலமாக இல்லை. அச்சகத்தில் இருக்கிறதா என்றால் அங்கும் இல்லை. உடனடியாக அதை மறுபடியும் அச்சிட்டு கொடுப்பதில் காலதாமதத்திற்கு எங்கே இடம் இருக்கிறது என்று தெரியவில்லை. தமிழ்ச் சுருக்கெழுத்துப் புத்தகம் கிடைக்காத போது மாணவர்களைத் தமிழ்ச் சுருக்கெழுத்துக் கற்றுக் கொள்ளுங்கள் என்று சொல்வது எப்படி முடியும் ? அவர்களால் எப்படிக் கற்றுக்கொள்ள முடியும் என்பதை மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். உடனடியாக தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் அச்சிட்டுக் கொடுப்பதிலும் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வணிக இயல்துறை இலாக்கா நல்லமுறையில் செயல்படுகிறதா என்றால் அங்குள்ளவர்கள் எனக்கு நண்பர்களாக இருந்தாலும் தவறான தகவல்களை இந்த அவைக்குக் கொடுத்துவிடுகிறார்கள். எத்தனை மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள் என்று கேட்டதற்கு 56 ஆயிரம் மாணவர்கள் தேர்வு எழுதுகிறார்கள் என்ற குறிப்பைக் கொடுத்தார்கள். 2 லட்சம் வினாத்தாளைத் தயாரிக்கிறோம் என்று சொன்னார்கள். ஒரு மாணவனுக்கு இரண்டு வினாத்தாள் என்று வைத்தாலும் கூட இந்த 56 ஆயிரம் மாணவர்களுக்கும் ஒரு லட்சத்துப் பன்னிரண்டாயிரம் வினாத்தாள் தான் வரும். இரண்டு லட்சம் வினாத்தாள் வராது. தேர்தல் முடிவை இரண்டு

மாதம் 20 நாட்களில் வெளியிடுவதாகச் சொல்கிறார்கள். ஒரு லட்சம் பேர்கள் தேர்வு எழுதுவதாக வைத்துக் கொண்டாலும், அவர்களது முடிவை அறிவிக்க இரண்டு மாதம் இருபது நாட்கள் தேவையில்லை. குறைந்தது ஒரு மாத காலத்திற்குள்ளாவது இந்த முடிவுகளை வெளியிடுவதற்கான முயற்சிகளை அவர்கள் மேற்கொள்வதற்கு நமது மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்ச் சுருக்கெழுத்தில் வெற்றி பெறுகிறவர்களுக்கு அண்ணா பதக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தோம். "பயனுள்ள சுருக்கெழுத்துத் துறை வளர தமிழக அரசு உதவி செய்யும்", என்ற கருத்தை, சென்னை-தி. நகர்-ஸ்டெனோகிராப்பர்ஸ் கில்டின் ஆண்டு விழாவில். தலைமை வகித்த நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். ஆகவே நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இதில் கவனம் செலுத்தி—போலீஸ்காரர்களுக்கு எல்லாம் அண்ணா பதக்கம் கொடுப்பதைப்போல—தமிழ்ச் சுருக்கெழுத்துத் தேர்வில் முதலிடம் பெற்ற மாணவர்களுக்கு அண்ணா பதக்கம் வழங்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

மேலும் தமிழ்ச் சுருக்கெழுத்து; தமிழ் தட்டெழுத்து; ஆங்கிலச் சுருக்கெழுத்து; ஆங்கில தட்டெழுத்து ஆகிய கமர்ஷியல் எஜுகேஷனை ஊக்குவிப்பதற்காக இன்றைக்கு அரசாங்கமே ஓரிரு இடங்களில் பயிற்சி கொடுக்கிறது. அவற்றில் பிற்பட்ட தாழ்த்தப்பட்ட மாணவர்கள் 150 பேர்கள் தான் சேர முடியும். அரசாங்கமே எல்லா இடங்களிலும் பயிற்சிக் கூடங்களை ஏற்படுத்தாவிட்டாலும் தனியார் பயிற்சிக் கூடங்களில் அரிசன மாணவர்களை பிற்பட்ட சமூக மாணவர்களை நிறையச் சேர்த்துக் கொள்ள வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். ஓரளவு ஏற்படுத்திக் கொடுக்கிறார்கள். என்றாலும் நூறு பேர்கள் விண்ணப்பம் போட்டால் பத்துப் பேர்களே அனுமதிக்கப்படுகிறார்கள். இதன் காரணமாக இந்தத் துறையில் அரிசன மாணவர்கள் பிற்பட்ட மாணவர்கள் அதிக அளவில் பயிற்சி பெற வாய்ப்பில்லை. பல துறைகளில் இந்தப் பதவிகளுக்குரிய விண்ணப்பங்களை இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களிடம் இருந்து கேட்டும் பெறமுடியவில்லை. எம்பிளாய்மெண்டு எக்ஸ்சேன்ஜ்லே இந்தக் குறிப்பைக் கொடுத்திருக்கிறார்கள். பிற்பட்டோர் நலனுக்காகவே உருவாக்கப்பட்ட துறையிலாவது இந்த பிற்பட்ட சமூகத்தைச் சேர்ந்த டைப்பிஸ்ட்-ஸ்டெனோகிராபர்களைப் போட வாய்ப்பு இருக்கிறதா என்றால் இல்லை. இத்துறையில் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பயிற்சி பெறுவதற்கு அரசாங்கம் அவர்களுக்கு ஸ்காலர்ஷிப் கொடுத்து ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது).

கடைசியாக இரண்டே இரண்டு விவரங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். பார்லிமெண்டில் உள்ள நிருபர்களுக்கு 200 ரூபாய் ஸ்பெஷல் அலவன்ஸ் கொடுக்கப்படுகிறது. ஷார்ட்ஹாண்டு ஹையர் கிரேடு கூட இல்லை. ஹை ஸ்பீட் பாஸ் பண்ணிய ரிப்போர்ட்டர்கள் நமது அசெம்பிளி கவுன்சிலில் பணியாற்றி வருகிறார்கள். போலீஸ் துறையில் உள்ள நிருபர்களுக்கு 75 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுக்கப்படுகிறது. அதைப்



போல நமது சட்ட மன்றம்—சட்ட மேலவை நிருபர்களாகப் பணியாற்றுகிறவர்களுக்கும் 75 ரூபாய் ஸ்பெஷல் பே கொடுக்கப்பட வேண்டும். மொத்தமே 25 பேர்கள் தான் இருக்கிறார்கள். இந்த ஸ்பெஷல் பே 75 ரூபாய் கொடுப்பதன் மூலம் ஆண்டு முழுவதற்குமே ரூ. 20,100 தான் செலவாகும். சட்ட மன்ற நிருபர்கள் உறுப்பினர்களுடைய பேச்சுக்களை எல்லாம் நல்ல முறையில் எழுதிக் கொடுக்கிறார்கள். ஏதோ இன்னும் இது தாமதப்படுத்தப்பட்டு வருகிறது. சட்டப் பேரவைத் தலைவர், சட்டப் பேரவைத் துணைத் தலைவர், சட்டமன்றத் தலைவர் ஆகியோர்களை எல்லாம் கூட்டிவைத்து அவர்களது ஆண்டுவிழாவில் சொன்னார்கள். இந்த ஸ்பெஷல் பே ரூ. 75- ஐ வாங்கித் தருவதாக அவர்களும் ஒத்துக்கொண்டார்கள். என்னமோ அரசாங்கத்தில் இது காலதாமதம் ஆகிறது.

<u>மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :</u> இந்த மானியம் கல்வித் துறை சம்பந்தப்பட்டது. அது சட்டப் பேரவைத்துறை மானியத்தின் கீழ் வரும். அந்தத் துறை அதை கவனிக்கவேண்டும். அப்போது ஞாபகப்படுத்த வேண்டும்.

<u>திரு நா. வீராசாமி :</u> தலைவர் அவர்களே; கல்வித்துறை அமைச்சர் அவர்களே, இந்த அவையின் முன்னவராகவும் இங்கே இருக்கிறார்கள். இந்த அவையில் பணிபுரிகிறவர்களை பாதுகாக்கவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். சுருக்கெழுத்துத்துறை பற்றி சொல்லி வருகிற நேரத்தில் அவை முன்னவரின் கவனத்திற்கு இதையும் கொண்டுவந்தேன். சட்டப்பேரவைத் துறை, சட்டமன்றம் ஆகியவற்றில் பணி புரியும் நிருபர்களுக்கும் 75 ரூபாய் ஸ்பெஷல் பேயை அவசியம் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

கடைசியாக, ஒன்றைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் இருந்து—

**Tentative Programme of conducting Government Technical Examinations between the period, July 1974 to December 1975,**

என்று அழகாக அச்சிட்டு ஒரு புத்தகத்தை அனுப்பியிருக்கிறார்கள். இது அக்டோபர் மாதம் 20 தேதிக்கு வந்து சேருகிறது. இது போன்ற குறைகளைத் தவிர்க்க வேண்டும்.

டாக்டர் ஹாண்டே அவர்கள் கூட ஒரு வெட்டுத் தீர்மானத்தை தெரியாமல் கொடுத்திருக்கிறார்கள். தட்டெழுத்து; சுருக்கெழுத்து போன்ற தேர்வுகளுக்கு தனியார் பயிற்சிப் பள்ளிகளில் வாங்கப்படும் கட்டணங்கள் அரசு நிர்ணயித்துள்ள கட்டணத்தைவிட பன்மடங்கு அதிகமாக உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அவருக்கே தெரியும். ஏற்கெனவே எழுநூறு, எண்ணூறு ரூபாய்க்கு விற்ற டைப்ரைட்டிங் மிஷின்கள் இன்றைக்கு 3,500 ரூபாய்க்கு விற்கிறது. ஏற்கெனவே அவர்கள் தட்டெழுத்து மாதம் 3 ரூபாய் வாங்கிகொண்டிருந்தால் இப்போது ஆறேழு ரூபாய் வாங்குகிறார்கள். (டாக்டர் ஹாண்டே எழுந்திருந்தார்).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி): வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார் என்ற கருத்தைச் சொல்லுங்கள். தெரியாமல் கொடுத்திருக்கிறார் என்று சொல்ல வேண்டாம். (டாக்டர் ஹாண்டே எழுந்திருந்தார்.) உங்களுக்காக நான் சொல்லிவிட்டேன்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, நண்பர் வீராசாமி அவர்கள் நான் கொடுத்த வெட்டுத் தீர்மானத்தைப் பற்றிச் சொன்னார்கள்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : நீங்கள் உட்காருங்கள். நான் தான் உங்களுக்காக முதலிலேயே சொல்லிவிட்டேனே.

டாக்டர் எச். வி. ஹாண்டே: அவர் சொன்னதனால் நான் அதை தெளிவுப்படுத்திவிடுகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : நீங்கள் உட்காருங்கள். வேண்டுமானால் உங்கள் துணைத் தலைவர் பேச இருக்கிறார். அவரிடம் சொல்லச் சொல்லுங்கள்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: என்ன அப்சர்டா இருக்கிறது. அவர் சொன்னதற்கு நான் சொல்லிவிடுகிறேன். . . . .

திரு. வி. கிருஷ்ணமூர்த்தி (நெல்லிக்குப்பம்) : அப்சர்டாக இருக்கிறது என்று சொல்லலாமா?

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : அவர் ரொம்ப மூத்த தலைவர். அவர் சொல்கிற வார்த்தை அப்படி இருக்கிறது.

டாக்டர் எச். வி. ஹாண்டே: டைப்ரைடிங் கற்றுக்கொள்ளக்கூடிய மாணவர்களிடம் இவ்வளவுதான் கட்டணம் வாங்கவேண்டுமென்று அரசாங்கம் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தனியார் பயிற்சிக் கூடங்களில் சில இடங்களில் ஏராளமாகப் பணம் வாங்கக் கூடிய நிலைமை இருக்கிறது. இதனால் தட்டெழுத்து கற்றுக்கொள்பவர்களுக்கு பலயிடங்களில் சிரமமாக இருக்கிறது என்பதைத்தான் நான் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர அதைக் கொடுத்திருக்கிறேன். தெரியாத்தனமாகக் கொடுக்கவில்லை என்பதை நான் நண்பர் வீராசாமிக்குத் அறிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, அதைத்தான் நானும் சொன்னேன். ஏழை எளிய மாணவர்களுக்கு இந்த அரசாங்கம் எவ்வளவோ செய்கிறது. ஆனால், தனியார் துறையிலே இவ்வளவு ஃபீஸ் தான் வாங்கவேண்டுமென்று இந்தத் துறை நிர்ணயிக்கவில்லை. (குறுக்கீடு.) டாக்டர் எவ்வளவு பணம் வாங்குகிறார் என்பதைப் பற்றியெல்லாம் நான் கவலைப்படவில்லை. ஆனால், ஒன்றை விளக்கக் கடமைக் பட்டிருக்கிறேன்.



1964-ல் டைப்ரைட்டரினுடைய—தட்டச்சுப் பொறியினுடைய விலை ரூ. 800. இன்றையதினம் தட்டச்சுப் பொறியினுடைய விலை ரூ. 3,500. 1964-ல் ஒரு ரோல் ரிப்பனுடைய விலை ரூ. 9. இன்றைய தினம் ரூ. 40. அப்பொழுது டாக்சியில் தட்டச்சுப்பொறிகளைத் தேர்வுக் கூடத்திற்கு எடுத்துச் செல்லவேண்டுமென்றால் கட்டணம் ரூ. 2. இப்பொழுது கட்டணம் ரூ. 12. இவ்வளவு தூரம் விலைவாசிகள் எல்லாம் ஏறியிருக்கிற நேரத்தில் ரூ. 3 சம்பளத்தை ரூ. 6 ஆக, ரூ 7 ஆக . . . .

திருமதி த. ந. அனந்தநாயகி: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். நண்பர் வீராசாமி என்ன அவர் தொழில் இரகசியத்தையெல்லாம் சொல்கிறாரே.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கு. காமாட்சி) : இது என்ன பாய்ண்ட் ஆப் ஆர்டர்?

திரு. நா. வீராசாமி : பல நேரங்களிலே உறுப்பினர்கள்—நீங்கள்—தொழில் இரகசியத்தைச் சொல்கிறீர்கள். இது என் தொழில்—என் தொழில் இரகசியத்தை நான் சொல்லிவிட்டுப் போகிறேன்.

இந்தக் கல்வித் துறையில் ஏதோ தன்னந்தனியாக ஒரே மனிதன் 4, 5 ஆண்டுகாலமாக இந்தப் பிரச்சினைகளை எடுத்துச் சொல்லி, எடுத்துச் சொல்லி, எப்படியோ நம்முடைய அமைச்சருடைய செவிகளிலே ஏராளமாகப் பாய்ந்து, ஏராளமான சீர்திருத்தங்களைச் செய்திருக்கிறார் என்று சொன்னாலும் இந்த ஆண்டு கல்வியமைச்சர் நான் சொன்ன குறைகளைப் போக்கித் தருவாரானால் 1,400 பயிற்சி நிலையங்கள் 5 இலட்சம் மாணவர் ஆகியோருடைய வாழ்க்கையில் அவர்கள் தனி அக்கறை எடுத்துக் கொண்டவர் ஆவார். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

திரு. என் மருதாசலம் : தலைவர் அவர்களே, இந்த கல்வி மானியத்தின் மீது நான் சில விவரங்களைக் கூற விரும்புகிறேன். கல்வி இலாக்காவிலே இன்றைக்கு தாழ்த்தப்பட்ட மாணவர்கள் ஐ.டி.ஐ.-யிலே படிக்கிறார்கள். ஐ.டி.ஐ.-யிலே படிக்கிறவர்களுக்கு ரூ. 45 கொடுக்கப்படுகிறது. அந்த ரூ. 45 போதாது என்று அதிகப்படியான தொகை கேட்கிறார்கள். ரூ. 100 கேட்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு ரூ. 100-ஐ கல்வி மானியத்திலே ஒதுக்கவேண்டும்.

அடுத்து, பொதுவாக ஹாஸ்டலில் தங்குவதற்கு இடம் கொடுக்கிறார்கள். தங்குவதற்கு இடம் கொடுக்கிறார்களே தவிர, சாப்பாட்டுக்கு எந்தவிதமான வசதியும் கிடையாது. அங்கே, ஹாஸ்டல் கிடையாது. ஆகவே, அரசாங்கம் அந்த இடத்திலே ஹாஸ்டல் ஏற்படுத்தி அவர்களுக்கு வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அது மாத்திரமல்ல, சேலம் மாவட்டத்தில், நாமக்கல்லில் ஒரு தமிழ்க் கல்லூரியிருக்கிறது. அந்தத் தமிழ்க் கல்லூரியானது அங்கிருக்கிற சர்க்கார் கல்லூரியோடு இணைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கல்லூரியில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு ஒரு வருஷமாக இன்னும் சம்பளம்

கொடுக்கப்படவில்லை. ஆகவே, அவர்களுக்கு சம்பளத்தை கொடுக்க அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், ஆசிரியர்களுக்குக் கேரளத்தில் அளிப்பதைப்போல், டி.ஏ., சம்பள உயர்வு ஆகியவை அளிக்க வேண்டும். கேரளத்திலுள்ள செக்கண்டரி கிரேட் ஆசிரியர்களுக்கு 25 வருஷம் சர்வீஸ் ஆனால் ரூ. 535 சம்பளம் கிடைக்கிறது. ஆனால், தமிழ் நாட்டிலிருக்கும் அந்த மாதிரி ஆசிரியர்களுக்கு ரூ. 315 தான் கிடைக்கிறது. ஆகவே, அந்த வித்தியாசத்தைப் போக்கி, கேரளத்தில் கொடுக்கும் சம்பளத்தைப் போல், இங்குள்ள ஆசிரியர்களுக்கு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே மாதிரி, 15 ஆண்டுகளாக வேலை செய்துவந்த ஆசிரியர்கள் பலர் இன்று வேலையில்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆசிரியப் பயிற்சி பெற்றவர்கள் ஏராளமாக இருக்கிறார்கள். அந்த ஆசிரியர்களுக்கு எந்தவிதமான வசதியும் இல்லாமல், பள்ளிக்கூடத்தில் கூட இடம் கிடைக்கவில்லை. இன்றைக்கு வேலை கிடைக்காமல் அவதிப்படும் ஆசிரியர்களுக்கு உடனடியாக வேலை தேடி கொடுப்பதோடு நில்லாமல், அதுவரையில் உதவிப்பணமாவது தர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைக்கு எல்லா வம்சத்தினரும் பாக்வார்டாக அறிவிக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதாவது, இன்றைக்கு வெள்ளாளர்கள் கூட பாக்வார்டாக அறிவிக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். பிராமணர்கள் மட்டும்தான் பாக்வார்ட் ஆகாமலிருக்கிறார்கள். அவர்களையும் ஆக்கிவிட்டால், இந்த நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் அல்லாதவர்களெல்லாம் பாக்வார்டாக இருப்பார்கள். ஆகவே, பாக்வார்டாக இருக்கிறவர்களுக்குப் பதவி உயர்வோ, கல்விச் சலுகைகளோ குறைந்து விடுமோ என்ற அச்சம் எனக்கு ஏற்படுகிறது. ஆகவே, அந்த அச்சத்தைப் போக்கி தாழ்த்தப்பட்டவர்களுடைய நிர்ணயத்திலே கை வைக்காமல், அவர்களுடைய வேலை நிர்ணயத்திலும், கல்வித் தரத்திலும் கை வைக்காமல், அவர்களுக்கு இன்னும் அதிகமாக உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வட ஆற்காடு மாவட்டத்திலே, பேரணம்பட்டு என்ற ஊரிலே இஸ்லாமிய உயர்நிலைப் பள்ளியிருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளியிலே இன்றைக்கு 50,000 பேருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்ற திட்டத்திலே, 3 உபாத்தியாயர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டது. அந்த 3 உபாத்தியாயர்களை இன்றைக்கு விடுமுறை நாளிலே, பெர்மனென்டாக வைக்கவேண்டுமென்ற உத்தரவு வந்தது. அந்த உத்தரவு வந்ததனால், ஒரு உபாத்தியாயரை, எந்தவிதமான காரணமும் சொல்லாமல், வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். எந்தக் காரணத்தாலே நீக்கி இருக்கிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது. அவர் வேறு பள்ளிக்கூடத்திலும் சேர முடியாது. ஆகவே, அதையெல்லாம் போக்கி, அந்த உபாத்தியாயரை அந்தப் பள்ளிக்கூடத்தில் மறுபடியும் வேலையில் சேர்ப்பிக்கவேண்டும், அல்லது, வேறு இடத்தில் சேர்ப்பிக்கவேண்டும். அந்த முறையில் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.





திரு. எம். ஏ. லத்தீப் : மாண்புமிகு உறுப்பினர் மருதாசலம் அவர்கள் இங்கே ஒரு தகவலைத் தருகிறார்கள். ஆசிரியர்கள் ஏற்கெனவே நிரந்தரப்படுத்தப்பட்டவர்களா? நிரந்தரமாக்கப்பட்ட பிறகு, வேலையிலிருந்த ஆசிரியர் நீக்கப்பட்டாரா என்ற விவரத்தைச் சொன்னால் உதவிகரமாக இருக்கும்.

திரு. என். மருதாசலம் : அந்த 3 உபாத்தியாயர்களிலே 2 பேர் நிரந்தரமாக்கப்பட்டார்கள். ஒருவர் நிரந்தரமாக்கப்படவில்லை. அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார்கள். நீக்கியதற்குக் காரணம் காட்டவில்லை.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதனால் வேறு ஒரு பள்ளிக்கூடத்தில் சேர்க்க வழியில்லை. ஆகவே, அந்த நிர்வாகம் செய்தது ரொம்ப மோசமானது என்று தெரிவித்துக் கொள்கிறேன். ஆகவே, அந்த முறையையெல்லாம் நீக்கி, கல்வி மானியத்திலே, உயர்தரக் கல்வியாக இருந்தாலும் சரி, தொடக்கக் கல்வியாக இருந்தாலும் சரி, தொழில் நுட்பக் கல்வியாக இருந்தாலும் சரி, கல்லூரிக் கல்வியாக இருந்தாலும் சரி, தொழில் செய்து வாய்ப்புகள் அளிக்கக்கூடிய அளவிலே இருக்கவேண்டும். அந்த மாதிரி இருந்தால் தான் இன்றைக்குக் கல்வித்தரம் உயரும். இன்றைக்கு நாட்டிலே மக்கள் நல்வாழ்வு வாழ வசதியாக இருக்கும்.

*திரு. கோ. செபமாலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைய தமிழக அரசு கல்வி மானியத்தின்பேரில் விவாதத்தைத் தொடங்கி, தன்னுடைய வரவு செலவை இன்றையதினம் நமது நடமாடும் பல்கலைக் கழகமாகிய கல்வியமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். அதை நான் ஆதரித்து ஒருசில கூற விரும்புகிறேன்.

இன்றையதினம் ரூ. 118 கோடி வரவுசெலவு திட்டத்தைத் தயாரித்து, ஏறக்குறைய தமிழகத்திலுள்ள எல்லா மக்களும் பயன்பெறத்தக்க முறையில் அளித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட திட்டத்தை தமிழக மக்கள் எல்லாம் வரவேற்கிறார்கள். எழுத்தறிவித்தவன் இறைவனாகும் என்ற சொல்லுக்கிணங்க இன்றையதினம் எழுத்தறிவிக்கின்ற கல்வியைக் கொடுத்தவனுக்கும், கல்வியை அளித்தவர்களுக்கும் மேன்மேலும் கல்வியை வளர்க்க வேண்டுமென்றும் இந்த நாட்டின் தேவைகளையும் வருங்காலத்தைச் சீர்படுத்தவும் வருங்காலச் சமுதாயம் இந்த நாட்டை நெருங்கிக் காக்கவும் இளம் சிறுவர்களுக்குத் தொடக்கப் பள்ளி, உயர் நிலைப் பள்ளி, கல்லூரி, ஆக அனைத்திற்குமாகச் சேர்த்து மொத்தம் ரூ. 118 கோடி செலவழிக்க இந்த அரசு நல்லபல திட்டங்களை அளித்ததற்காக வரவேற்று நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். உயர் தொடக்கப் பள்ளியில், தமிழ் ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்றும், உயர் தொடக்கப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிக்கவேண்டுமென்றும் நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. கோ. செபமாலை] [1975 மார்ச் 21

(நண்பகல் 12–00)

உயர்தொடக்கப் பள்ளியிலே மாணவர்கள் நல்ல தமிழை, நல்ல பல விஞ்ஞான கல்வியைப் பெறுகின்ற படிக்கின்ற பக்குவத்தை அடைகிறார்கள். தமிழிலே ஆராய்ச்சி செய்யக்கூடிய நல்ல எண்ணங்கள், கருத்துக்கள் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கக்கூடிய காரணத்தினால் தமிழை மேலும் ஊக்குவிக்கின்ற முறையிலே அந்தக் கருத்துக்களை அவர்கள் பெறக்கூடிய முறையில் சொல்லிக்கொடுக்கக் கூடிய ஆசிரியர்கள் தமிழாசிரியர்கள் இல்லாத காரணத்தினால்—இப்போது எட்டாம் வகுப்பு வரை படித்துவிட்டு சிலர் குடும்ப காரியங்களில் ஈடுபடுகிற நேரத்திலே தமிழை மேலும் கற்றுக் கொள்ளக்கூடிய முறையிலே அறிவை மேலும் வளர்த்துக்கொள்ளக் கூடிய முறையிலே வாய்ப்புக்கள் இல்லாத காரணத்தினாலே—உயர் தொடக்கப் பள்ளிகளிலே தமிழாசிரியர்களை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆசிரியர்–மாணவர் விகிதாசாரம் இன்றைக்கு இருக்கிற நிலைமைப்படி பார்த்தால் ஒரு ஆசிரியருக்கு 40 மாணவர்கள் என்ற நிலை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் 40, 50 மாணவர்கள்கூட சில பள்ளிகளிலே இருக்கிறார்கள். அதிகமான மாணவர்கள் இருப்பதால் பாடம் சொல்லிக்கொடுக்கிற நேரத்திலே மாணவர்களை அடக்குவதற்கும், மாணவர்கள் செய்கின்ற செயல்களைத் திருத்திச் செம்மைப்படுத்தவும் தான் நேரம் இருக்கிறதே தவிர பாடத் திட்டத்தைச் சொல்லிக்கொடுக்க நேரம் இல்லாமல் இருக்கிறது. ஆகவே, ஒரு ஆசிரியருக்கு 30 மாணவர்களுக்கு மேல் இருக்கக்கூடாது என்ற நிலைமையை ஏற்படுத்தவேண்டும். மாணவர்கள் அதிகமாக இருந்தால் ஒரு செக்ஷன் அதிகமாகப் போடக் கூடிய நிலைமையை ஏற்படுத்தவேண்டும்.

தமிழக அரசு அதிகமான மாணவர்கள் விடுதிகளைத் திறப்பதற்கு நம்முடைய கல்வி அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த ஆண்டு 20 பின்தங்கியோர் மாணவர் விடுதிகளும், 20 அரிசன மாணவர்கள் விடுதிகளையும் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. மாணவர்கள் உண்ணவும், நல்ல அறிவை வளர்த்துக்கொள்ளவும் அங்கேயிருந்து பாடங் கற்றுக்கொள்ளவும் 40 உணவு விடுதிகள் கட்ட இருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். சென்ற ஆண்டில் 20 மாணவர்கள் விடுதிகள் கட்டப்பட்டன. தமிழக அரசு இந்த ஆண்டு பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்காகவும், அரிசன மாணவர்களுக்காகவும் இன்னும் சொல்லப் போனால் சமுதாயத்திலே நலிந்து சிதைந்து கிடக்கிற மாணவர்களுக்காக ஹாஸ்டல்களை ஏற்படுத்தி வருகிறது. அதிகப் பின்தங்கியோர்களுக்கு அதிக சலுகைகளைக் கொடுத்து நம்முடைய கல்வியமைச்சர் அவர்கள் நல்ல காரியங்களைச் செய்து வருகிறார்கள். அதற்காக மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப் பாராட்டி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியிலேகூட 3 ஹாஸ்டல்கள்—நான் சட்டமன்றத்திலே ஒரு பின்தங்கிய மாணவர் விடுதியும், 2 அரிசன மாணவர் விடுதியும்– வேண்டுமென்று அரசிடம் பரிந்துரை செய்து வாங்கியிருக்



1975 மார்ச் 21] [திரு. கோ. செபமாலை]

கிறேன். இதைப்போன்று இன்னும் பல நல்ல காரியங்களை நம்முடைய அரசு செய்து இருக்கிறது. நம்முடைய அரசு கேட்ட உடன் ஏழைகளுக்கு வேண்டிய வசதிகளைத் தருகிறது. வயதுவந்த மாணவர்களைப் பள்ளியில் சேர்ப்பதற்கு ஆசிரியர்கள் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் சொல்லியும்கூட சில நேரங்களில்லே தங்களுடைய குடும்பங்களிலே இருக்கிற வறுமையின் காரணமாக பெற்றோர்கள் குழந்தைகளையெல்லாம் அடிமைத் தொழில் செய்வதற்கு, ஆடுமாடுகள் மேய்ப்பதற்கு அனுப்பிவிடுகிறார்கள். அப்படிப்பட்ட நேரத்திலே பள்ளிக்கு வாருங்கள் என்று ஆசிரியர்கள் அவர்களைக் கூப்பிட்டாலும்கூட பெற்றோர்கள் அதற்கு மறுதலிக்கிறார்கள்.

அமைச்சர் பெருமகனார் வயதுவந்த மாணவர்கள் அத்தனை பேர்களும் கட்டாயமாக பள்ளிகளுக்கு அனுப்பப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு கட்டாயக் கல்வியை ஏற்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய மாநிலத்திலே அதிகமாக ஆசிரியர்கள் படித்திருந்தும் இன்னும் வேலைக்குச் செல்வதற்குச் சந்தர்ப்பம் இல்லை. பஞ்சாயத்து யூனியன்களிலே ஆசிரியர்களை நியமிக்கின்றபோது ஆசிரியர்கள் செலக்ஷனுக்கு வருகிறார்கள். அரிசனங்களுக்கு கொடுக்கப்பட வேண்டிய விகிதாசாரம் கொடுக்கப்படவில்லை யூனியன்களிலே. சில இடங்கள் நிரப்பப்படாமல் இருப்பதாக நான் அறிகிறேன். அதை அமைச்சர் அவர்கள் பார்வைக்கோ அல்லது அதிகாரிகளின் பார்வைக்கோ எடுத்துச் செல்கிற நேரத்திலே அதன் மேல் உடனுக்குடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவுத்துக் கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. கே. பி. கோபால்: தலைவர் அவர்களே, கல்வி, கலை, பண்பாடு, சமூகப் பாதுகாப்பு இவற்றிற்கு மொத்தம் 118 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. அதிலே கல்விக் மட்டும் 116 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தொடக்கப் பள்ளிகள், உயர்தொடக்கப் பள்ளிகள் இவைகளுக்காக 58 கோடி 67 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்றால் தொடக்கப் பள்ளிகளில்தான் நாம் அதிகமாகக் கவனம் செலுத்த வேண்டும்.

மாநில அளவிலே தொடக்கப்பள்ளிகள் உயர்தொடக்கப்பள்ளிகள் இவற்றிற்காக தனி இயக்குநர் அமைக்க வேண்டும். மாவட்ட அளவிலே தொடக்கப் பள்ளிகளுக்காக மாவட்ட கல்வி அதிகாரி அமைக்கவேண்டும். தொடக்கப் பள்ளிகளின் கணக்குகளைத் தணிக்கை செய்ய டிபார்ட்மெண்டல் ஆடிட்டர்கள் போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

8–வது வகுப்பிலே பொதுத் தேர்வு நடத்தவேண்டும்.

மேனேஜர்–கம்–டீச்சர் முறையை நீக்க வேண்டும். 6, 7, 8 வகுப்புக்களில் தமிழாசிரியர்களை நியமிக்கவேண்டும்.

[திரு. கே. பி. கோபால்] [1975 மார்ச் 21

இதையெல்லாம் நான் வற்புறுத்துவதற்குக் காரணம் தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் உள்ள நிலைமை கல்வித் துறைக்கே களங்கத்தை விளைவிக்கின்றது மட்டுமல்லாமல், கல்வித் துறையிலே செயலாற்றும் அதிகாரிகளுக்கு சவால்விடும் வகையிலே செயல்படுகின்றன. மாணவர்களின் எண்ணிக்கையை அதிகமாக்கி வருகின்றார்கள், ஆசிரியர்களுக்குக் கொடுக்கக்வேண்டிய ஊதியத்தை சரியாகக் கொடுக்கவில்லை. இதைப் பற்றி மதிப்பிற்குரிய உறுப்பினர் நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி அளித்த மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையிலே 22-வது அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைத் தெளிவாக நான் இங்கே குறிப்பிடுவதற்கு நேரமில்லை. தொடக்கப் பள்ளிகளிலும் உயர்தொடக்கப் பள்ளிகளிலும் அவை எப்படி செயல்படுகின்றன என்று கண்டறிந்து சொல்ல ஒரு தனி கமிட்டி அமைத்து மாநிலம் முழுவதும் பார்த்து வரச்சொல்வதைவிட என்னுடைய மாவட்டத்திலேயுள்ள பெரியகுளம் கல்வி மாவட்டத்தில் உள்ள கம்பர் தனிச் சரகத்தில் உள்ள கூடலூர் வ.வு.சி. பள்ளியைப் பார்த்தாலே போதும் மாநிலம் முழுவதும் உள்ள பள்ளிகளைப் பார்க்கவேண்டியதில்லை.

ஏற்கனவே நான் சொல்லியிருக்கிறேன், தலைமை ஆசிரியர்களுக்கு பணிப் பாதுகாப்பு இல்லாமல் இருக்கிறது. ஆண்டுக்கு ஒரு முறை மாற்றப்படுகிறார்கள். சேமநல நிதி முறையாக கட்டப்படவில்லை. ஆசிரியர்களுடைய பணத்தைப் பிடித்து நிர்வாகத்தினர் கையாடல் செய்திருக்கிறார்கள். 1965–66-ஆம் ஆண்டு சேம நல நிதியை சென்ற ஆண்டுவரை கணக்குக் காட்டாமல் இருக்கிறார்கள். இதைப் பற்றி 13 ஆசிரியர்கள் புகார் கொடுத்தார்கள், ஆனால் அதனுடைய விளைவு அடுத்த 2 மாதங்களுக்கு எந்தவிதமான காரணமுமின்றி அவர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆரம்பக் கல்வி விதி 13(2)(பி) படி அப்படிச் செய்யவேண்டுமென்றால் டெபுடி இன்ஸ்பெக்டரின் முன் அனுமதி வேண்டும். அப்படி முன் அனுமதி வாங்கவில்லை. அதுமட்டுமல்ல, ஆசிரியர்களுக்கு முன் அறிவிப்பு கொடுக்கப்பட வேண்டும், அதுவும் கொடுக்கப்படவில்லை. இப்படி சட்டத்திற்குப் புறம்பான முறையிலே அவர்கள் நீக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த 13 ஆசிரியர்களும் மேல் முறையீடு என்று சென்றால் 2 வருடம் ஆகும். கடைசியில் கீழ்த்துறை ஆசிரியர்களுக்கு நேர்ந்த கதிதான் ஏற்படும் என்று தெரிந்தேதான் அவர்கள் அப்படிச் செய்திருக்கிறார்கள்.

ஸ்டாக் ரிஜிஸ்டர் என்பது மிக முக்கியமானது. அரசு அதற்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். 1967 ஆம் ஆண்டு ஒரு மேஜை ஒரு நாற்காலி கொடுக்கப்பட்டது. மேஜை பள்ளியிலே இருக்கிறது. நாற்காலி வீட்டிலே இருக்கிறது. டெபுடி இன்ஸ்பெக்டர்கள் பள்ளிக்கு வரும்போதுதான் நாற்காலிவீட்டிலிருந்து வரும். பிறகு திரும்பிப் போய்விடும். 1967-ஆம் ஆண்டிலே கொடுக்கப்பட்டதை வைத்தே மீண்டும் 1969–ஆம் ஆண்டில் பெயிண்ட் அடித்து வாங்கியதாகக் கணக்குக் காட்டி மானியத்தை வாங்கி இருக்கிறார்கள். அதைப்போலவே 1972-ஆம் ஆண்டில் செய்திருக்கிறார்கள். 1967, 1969, 1972 மூன்று தடவைகளில் செய்திருக்கிறார்கள். ஏன் என்று என்றால் புரிந்துகொள் முடியவில்லை.



19ı5 மார்ச் 21] [திரு. கே. பி. கோபால்]

இதுபோன்ற மானியம் வரும்பொழுது கவர்மெண்ட் கிராண்ட் என்றால் ஜி. ஜி. என்று போட்டு அந்த வருஷத்தையும் குறிப்பிட வேண்டும். அப்படியிருந்தும் இப்படிப்பட்ட முறைகேடுகள் நடந்திருக்கின்றன.

அது மட்டுமல்லாமல் இந்த நிர்வாகி, மேனேஜர்-கம்-டீச்சர் என்று இருக்கக்கூடாது என்று சொன்னார்கள். அவர்கள் பல ஆண்டுக்காலமாக எக்ஸ்செம்ப்ஷன் வாங்காமல் அந்தப் பள்ளியிலே பணியாற்றியிருக்கிறார்கள். ஹையர் கிரேட் பயிற்சி முடித்த பல ஆசிரியர்கள் இன்றையத் தினம் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். எக்ஸ்செம்ப்ஷன் வாங்க வேண்டுமென்றால் சில விதிமுறைகள் இருக்கின்றன. எம்ப்ளாய்மெண்ட் எக்சேஞ்சுக்கு மனுச் செய்ய வேண்டும். பத்திரிகையிலே விளம்பரம் கொடுக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் தகுதி பெறாத இது போன்ற அன்-குவாலிஃபைட் ஆசிரியர்கள் பணியாற்ற முடியும். அப்படியிருந்தும் பல ஆண்டுகளாக அவர் பணியாற்றுகிறார்.

இது போன்றே, பி. வி. ஐ. அதாவது பரீ-வொக்கேஷனல் இன்ஸ்ட்ரக்ஷன்—தொழிற்பயிற்சி ஆசிரியர்கள் இது வரையில் 12 ஆசிரியர்கள் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் ஒருவருக்குக்கூட முழுத் தகுதி இல்லை.

மாணவர்களின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் ஏற்கெனவே சொன்னேன். மதிப்பீட்டுக் கமிட்டியிலேகூட மாண்புமிகு உறுப்பினர் திரு. நெல்லிக்குப்பம் கிருஷ்ணமூர்த்தி அவர்கள் குறிப்பிட்டார்கள். சென்ற முறையும் குறிப்பிட்டேன். அதை இந்த முறையும் வலியுறுத்திக் கூறிக் கொள்ள விரும்புகிறேன். ஒவ்வொரு மாணவரின் பெயரையும் இரண்டு மூன்று பெயர்களாகப் பதிவு செய்வது, வேறு பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் பெயரைப் பதிவு செய்வது, 6 வயதுக்கு உட்பட்ட 4 வயதுப் பிள்ளைகளின் பெயர்களைக்கூடப் சேர்த்துப் பதிவு செய்வது என்று செய்து 750 பேர் என்று பதிவேட்டில் குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆனால் உண்மையிலேயே அங்கேயிருப்பவர்கள் 300 தான் இருக்கும். இந்த ஆண்டு எடுத்து கொண்டாலும் அக்டோபர் மாதத்தில் "மந்த்லி ஸ்டேட்மெண்ட்" அனுப்பியிருக்கிறார்கள். அதிலே முதலாவது வகுப்பிலே 57 மாணவர்கள் படிப்பதாக, 4 முதல் 8-ம் வகுப்புவரையில் 5 வகுப்புகளில் மொத்த மாணவர்கள் 57 பேர். இதில் 4 வயதுச் சிறார்களைக்கூட சேர்த்திருக்கிறார்கள். இப்படியெல்லாம் மானியம் பெறுவதற்காகச் செய்கிறார்கள். தவறான தகவலைக் கொடுக்கிறார்கள். 'மந்த்லி ஸ்டேட்மெண்ட்" அனுப்பும் பொழுது, அந்தப் பள்ளியிலே ஆசிரியைகளாகட்டும், மாணவிகளாகட்டும், ஒதுங்குவதற்கோ, சிறுநீர் கழிப்பதற்கோ இடமில்லை. ஆனால் அவர்கள் தைரியமாக எழுதுகிறார்கள், விளையாட்டு மைதானம் 6,000 சதுர கெஜம், தோட்டம் 200 சதுர கெஜம் இருக்கிறது என்று. இதைப் பள்ளிக்கூடத்தைப் பார்வையிடச் செல்லுகின்ற அதிகாரிகள் சிறிது பார்த்திருந்தால் தெரியும். அங்கே விளையாட்டு மைதானமும் கிடையாது தோட்டமும் கிடையாது. இந்தப் பள்ளியே ஒரு பிணமியாக நடக்கிறது.

[திரு. கே. பி. கோபால்] [1975 மார்ச் 21

அரசாங்க ஊழியர்களின் காண்டக்ட் ரூல்ஸ்க்கு விரோதமாக, உத்தமபாளையத்தில் சப்-டிரஷரியில் உள்ள ஷெராப் பெயரளவில் தன்னுடைய மனைவியின் பெயரால் வைத்துருக்கிறாரே தவிர அவரேதான் நேரடியாக எல்லாக் காரியங்களையும் செய்கிறார். இந்த அளவிற்கு தவறுகள் நடக்கின்றன என்றால், அதற்கு ஒருசில அதிகாரிகளும் நேரடியாக உடந்தை என்றுகூடச் சொல்ல மாட்டேன்.

நான் ஒரு வெட்டுத் தீர்மானம்கூடக் கொடுத்திருக்கிறேன். வ.உ.சி. பள்ளி பற்றி பாரபட்சமாக நடக்கிறார்கள் என்று. நான் குற்றங்கூற விரும்புவது அதிகாரிகளை அல்ல. ஆனால் அங்குள்ள செக்ஷன் கிளார்க்குகளைக் குற்றம் சாட்ட விரும்புகிறேன். பணி நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மாவட்ட கல்வி அதிகாரிக்கு 1—4—1974-ஆம் தேதி முறையீடு செய்கிறார்கள். மாவட்ட கல்வி அதிகாரி பள்ளித் துணை ஆய்வாளருக்கு 18—4—1974-ஆம் தேதி குறிப்புகளைக் கேட்டு அனுப்புகிறார். குறிப்பு ஒன்றுமே இல்லை. எற்கெனவே நான் குறிப்பிட்டதைப் போல ஆரம்பக் கல்வி அங்கீகார விதி பின்பற்றப்படவில்லை. 3 மாத கால அறிவிப்பு கொடுக்கப்படவில்லை. உத்தமபாளையம் அலுவலகத்தில் உள்ள செக்ஷன் கிளார்க் 7 மாத காலம் கடத்தி 12—11—1974ஆம் தேதி ஒரு குறிப்பை அனுப்புகிறார் மாவட்டக் கல்வி அலுவலகத்திற்குப் போகும்படி. இப்பொழுது தனியார் பள்ளிகளை ஒழுங்குபடுத்தும் மசோதா வந்து விட்டது. 1—12—1974 முதல் அது செயல்பட ஆரம்பித்திருக்கிறது. அதன்படி முறையீடு செய்தால் மாவட்டக் கல்வி அதிகாரி தீர்ப்பு கூறுவதற்கு அதிகாரம் இல்லை. முதன்மைக் கல்வி அதிகாரிக்குத்தான் அதிகாரம் இருக்கிறது. இதைச் சுட்டிக்காட்டி ஆசிரியர்கள் முதன்மைக் கல்வி அதிகாரிக்கு எழுதும்பொழுது முதன்மைக் கல்வி அதிகாரியின் அலுவலகத்திலிருந்து 16—1—1975-ஆம் தேதியிட்ட தபாலில், மேலே முதன்மைக் கல்வி அலுவலரின் கையொப்பம் வாங்கியதற்குப் பிறகு கீழே சேர்க்கப்பட்டிருக்கிறது. இப்பொருள் சம்பந்தமாக மேல் விவரங்களுக்கு மாவட்டக் கல்வி அதிகாரி அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளும்படி விண்ணப்பதாரர் கேட்டுக் கொள்ளப்படுகிறார் என்ற கருத்தில் தபால் வருகிறது.

மாவட்டச் கல்வி அதிகாரிக்கு இது சம்பந்தமாக சட்டப்படி எந்த அதிகாரமும் இல்லை. இதுபோன்ற காரியங்களினால் அந்த ஆசிரியர்கள்.... (மணியடிக்கப்பட்டது). தலைவரவர்களே, சென்ற ஆண்டும் இது சம்பந்தமாக இரண்டு வெட்டுத் தீர்மானங்கள் 480, 481 எண்களில் கல்வி மானியத்திலே குறிப்பிட்டிருந்தேன். இந்த ஆண்டும் 497 முதல் 504 வரையிலேயும், 537, 538, 550, 551 என்று பல வெட்டுத் தீர்மானங்களைக் கொடுத்திருக்கிறேன்.

ஆகவே, நான் கேட்டுக் கொள்வதெல்லாம் அந்தப் பள்ளியை அரசாங்கமே எற்று நடத்த வேண்டும். பதவியில்லாமல் வறட்சியால் வாடும் 13 ஆசிரியர்களுக்கும் உடனடியாக வேலைவாய்ப்பு கொடுக்க வேண்டும். இல்லையென்றால் கீழத்துறை செல்வின் பாப்பா தலைமையாசிரியருக்கு ஏற்பட்ட கதிதான் ஏற்படும். ஆசிரியர் சமுதாயத்தில் பெரும் கொந்தளிப்பு ஏற்படும் என்று கூறி அமர்கிறேன். வணக்கம்.



1975 மார்ச் 21]

*திரு. க. உரொ. எட்மண்ட்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் கொண்டு வந்திருக்கின்ற மானியக் கோரிக்கையின்மீது அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் என்னுடைய கருத்துக்களை இங்கே நான் கூற முன் வந்திருக்கிறேன்.

இந்த ஆண்டுக்குண்டான கல்வித்துறை மானியக் கோரிக்கையில் நம்முடைய கல்வியமைச்சர் நாவலர் அவர்கள் 118 கோடி ரூபாயை இந்தக் கல்வித் துறைக்காக ஒதுக்கியிருப்பதை அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே உளப்பூர்வமாக இல்லாவிட்டாலும் ஓரளவிற்கு நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய ஆட்சி தமிழகத்திலே தோன்றிய பின்னால் நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்கள் கல்வித்துறையிலே எடுத்துக் கொண்ட அக்கறையின் காரணமாக இதற்கு முன்னாலே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தவர்கள் இந்தக் கல்வித் துறைக்காக ஒதுக்கிய பணத்தைவிட இன்றைய தினம் கூடுதலாக ஒதுக்கியிருக்கிறார்கள் என்பதை அறியும் பொழுது அண்ணாவின் வழியிலே வந்த நாங்கள் அதைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

ஆனால், எங்களுடைய கவலையெல்லாம் 118 கோடி ரூபாய் இந்தக் கல்வித் துறைக்காக ஒதுக்கியிருந்தாலும்கூட தமிழ்நாட்டிலே பேரறிஞர் அண்ணா அவர்கள் கண்ட கனவுகளை இன்றையதினம் தொடர்ந்து ஆட்சிப் பொறுப்பிலே இருப்பவர்கள் அவற்றையெல்லாம் நனவாக்க முடியவில்லையே என்பதை அறியும்பொழுது நாங்களெல்லாம் மெத்தவும் வேதனைப்படுகிறோம்.

இன்றையதினம் 118 கோடி ரூபாயைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். நம்முடைய நாவலர் அவர்கள் தன்னுடைய பேச்சிலே சொல்லும்பொழுது, ஆண்டு தோறும் தமிழகத்தைப் பொறுத்த மட்டில் கற்றவர்கள் எண்ணிக்கையின் சதவிகிதம் கூடிக் கொண்டிருக்கிறது என்று சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்த வரையில் கற்றவர்கள் எண்ணிக்கை கூடிக் கொண்டிருக்கிற அதே நேரத்தில் கற்றவர்களிடையே வேலையில்லாத் திண்டாட்டமும் நீடித்துக் கொண்டு இருப்பதையும், கூடிக் கொண்டிருப்பதையும் நான் இந்த நேரத்தில் இங்கே சுட்டிக் காட்டுவதற்குக் கடமைப்பட்டவனாக இருக்கிறேன். இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகாவது கல்வித் துறையிலே ஒரு புரட்சிகரமான மாற்றத்தை உருவாக்க இந்த அரசாங்கம் எந்தவிதமான முயற்சியையும் எடுத்துக் கொள்ளவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக் காட்டாமல் இருக்க முடியவில்லை. இன்றைய தினம் படித்த பட்டதாரிகள் பட்டப் படிப்பை முடித்து விட்டு வெளியே வருகின்றவர்கள் தங்களுடைய படிப்பின் பயனை அவர்கள் அறிய முயலும்பொழுது தங்களுக்குக் கிடைத்திருக்கின்ற பட்டத்தை வைத்துக் கொண்டு வேலை தேடி அலைகின்ற படலத்திலேதான் இன்றையதினம் ஏராளமான மாணவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆகவே, கல்வியின் தரத்தையும், கல்வியின் உபயோகத்தையும் மாற்றியமைக்கின்ற முறையில் அரசாங்கம் ,இனிமேலாவது முயற்சிகளை எடுத்துக் கொள்ளவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட படிப்பை முடித்த பின்னால் அந்தப் படிப்பைப் பயன் படுத்தி யாருடைய உதவியையும் நாடாமல் தாங்களாகவே தங்களுடைய வாழ்க்கை முறைகளை வகுத்துக் கொள்ளக்கூடிய அளவுக்கு இன்றைய தினம் கல்வியின் நிலைமைகள் இருந்தாக வேண்டும். மேல் நாடுகளிலே அதைத்தான் இன்றையத் தினம் புரட்சிகரமான மாறுதலாகச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இன்று எந்த அளவிற்குப் படித்தாலும் சரி; கல்லூரியில் போய்ப் பட்டங்களை வாங்கினாலும் சரி; எம். ஏ., பி. எச்டி. போன்ற உயர்ந்த பட்டங்களை வாங்கினாலும் சரி; அந்தப் பட்டங்களை வைத்துக் கொண்டு வேலை தேடி அலையும் நிர்பபந்தத்திலேதான் இன்றையதினம் நம்முடைய மாணவர்கள் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆக, தொழிற் கல்வி என்ற முறையில் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் எந்த விதமான அக்கறையும் காட்டவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

118 கோடி ரூபாயை ஆண்டு ஒன்றுக்கு இந்தக் கல்விக்காகச் செலவழிக்கிறோம். இந்த 118 கோடி ரூபாயைச் செலவழித்த பின்னால் இந்த நாட்டிலே உள்ள இளைஞர் சமுதாயத்தினர் எத்தனை பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். கல்விக்காகச் செலவழிக்கப்படுகிற பணம் 118 கோடி ரூபாய். நம்முடைய கல்வி அமைச்சர் நாவலர் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் மிகப் பூரிப்போடு சொல்லிக் கொள்வார்கள், பெருமையோடு சொல்லிக் கொள்வார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் இன்றைய தினம் இவ்வளவு பெரிய தொகையைக் கல்விக்காக ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்லிக் கொள்வார்கள்.

ஆனால் இவ்வளவு பெரிய தொகையைக் கல்விக்காக ஒதுக்கிய பின்னும் இன்றையதினம் எத்தனை சதவிகிதம் தமிழக மாணவர்கள் பயன் பெறுகிறார்கள் என்பதைப் எண்ணிப் பார்க்க வேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இனிமேலாவது நாம் அதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

கல்விக்காக 118 கோடி ரூபாயை ஒதுக்கி கல்லூரி புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுத்திருக்கிறோம். ஆனால், இத்தனையையும் கொடுத்தும் உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பு வரை கூடப் படிக்க முடியாமல்—அது கூட அல்ல—8-வது வகுப்புக் கூட படிக்க முடியாமல் நாட்டிலே எத்தனை இளைஞர்கள் அலைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் கவனம் செலுத்திப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இவ்வளவு பணத்தை ஒதுக்கிய பின்னும் கிராமங்களிலே உள்ளவர்கள் 5-வது வகுப்பு கூட படித்து முடிக்கக் கூடிய நிலையில் இல்லை. கையெழுத்துப் போடத் தெரியாதவர்கள்; தமிழ் எழுத்தைப் படிக்கத் தெரியாதவர்கள் 118 கோடி ரூபாய் ஒதுக்கிய பின்னும் ஏராளமாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்ன?



நாம் ஆரம்பப் பள்ளியில் இலவசக் கல்வி கொடுக்கிறோம்; உயர் நிலைப் பள்ளியில் இலவசக் கல்வி கொடுக்கிறோம், கல்லூரியில் புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுக்கிறோம். ஆரம்பப் பள்ளியில், உயர்நிலைப் பள்ளியில், கல்லூரியில் படிக்கக் கட்டணம் கட்டத் தேவையில்லை என்பதைத்தான் புகுத்தியிருக்கிறோமே தவிர, அதற்குத்தான் இந்த ஒதுக்கீடு பயன்படுகிறதே தவிர, வசதியற்ற மாணவர்கள் தங்களுக்குத் தேவையான புத்தகங்கள், துணிமணிகள்; உணவு ஆகியவை கிடைக்க முடியாத அளவுக்கு இருக்கின்ற நிலைமையை மாற்றியிருக்கிறோமா என்றால் நிச்சயமாக இல்லை. வேண்டுமென்றால் வாயாரப் பேசிக் கொள்ளலாம். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே எஸ். எஸ். எல். சி. வரை தான் இலவசக் கல்வி இருந்தது; திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுத்திருக்கிறோம் என்று ஒரு படி கூட்டிச் சொல்வதற்காக; தேர்தலில் பொது மக்களுடைய வாக்குகளைப் பெறுவதற்காகச் சொல்லிக் கொள்ளலாமே தவிர, அதற்காகச் செலவழிக்கப்படுகிற பணத்தினால் ஏற்படுகிற, கிடைக்க வேண்டிய பலன் கிடைக்க வேண்டியவர்களுக்குக் கிடைத்திருக்கிறதா என்றால் இல்லை.

நாட்டிலே மக்கள் கொடுக்கிற வரிப் பணத்திலிருந்து 118 கோடி ரூபாயை இதற்காக ஒதுக்கி அதனால் பலன் பெறுகிறவர்கள் பணக்காரர்களாகத்தான் இருக்கிறார்கள். ஏழை, நடுத்தரக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் பெரும்பாலும் பலன் அடையவில்லை. வறுமையிலே வாடுகின்ற ஏழை, நடுத்தரக் குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளுக்கு வாய்ப்புக் கிட்டுவது இல்லை. புகுமுக வகுப்பில் இலவசக் கல்வி என்றால் அது பணக்காரன் வீட்டுப் பிள்ளைக்கும் கிடைக்கிறது, ஏழை வீட்டுப் பிள்ளைக்கும் கிடைக்கிறது. ஏழை வீட்டுப் பிள்ளைக்குத் தேவையான உணவு, உடை, புத்தகங்கள் அவனுக்குக் கிடைக்கக் கூடிய நிலைமை இல்லை.

இடையிலே கூட முதலமைச்சருக்கும் கல்வியமைச்சருக்கும் இடையிலே ஒரு கருத்து வேறுபாடு இருந்தது. பத்திரிக்கையில் செய்தி வந்தது. கல்வியமைச்சர் அவர்கள் இலவசக் கல்வியை ரத்து செய்தாக வேண்டுமென்ற எண்ணத்தில் இருந்ததாகவும், அந்த எண்ணத்திலிருந்து முதல்வர் அவர்கள் மாறி, இருக்கிற நிலைமை தொடர்ந்து இருக்கவேண்டுமென்று சொன்னதாகவும் பத்திரிக்கையிலே பார்த்தோம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் கல்வி அமைச்சர் அவர்களுக்கும் இடையே ஒரு சிறு தகராறு இருந்ததாகப் பார்த்தோம்.

<u>மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :</u> எனக்கும் கல்வியமைச்சருக்கும் எந்த வேறுபாடும் இல்லை, தகராறும் இல்லை; அதை யாரும் உருவாக்கவும் முடியாது.

<u>திரு. க. உரொ. எட்மண்ட் :</u> அதற்காக மெத்த மகிழ்ச்சியடைகிறேன். இப்படி ஒரு செய்தி பத்திரிக்கையில் அடிபட்டது. நான் சொல்வது—இந்த நிலைமைகளை எல்லாம் மாற்றியமைத்தாக வேண்டும். பெரிய ஆலை முதலாளி மகனுக்கும் இலவசக் கல்வி, ஆலையில் வேலை செய்து வருகிற

தொழிலாளி மகனுக்கும் இலவசக் கல்வி. இது உண்மையில் சோஷலிசம் ஆகாது. அண்ணா சொன்னது—

,ap the rich and pat the poor. You are patting both the rich and the poor, you are feeding both the rich and the poor,

அந்த நிலைமைதான் இருக்கிறது.

அண்ணா சொன்னது அது அல்ல.

அந்த அளவுக்கு நிலைமைகளை இனிமேலாவது மாற்றியமைக்கவேண்டும். இதைச் செய்தால் அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் முழு ஒத்துழைப்புக் கொடுக்கத் தயார். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே முதலாளிகளுக்கெல்லாம் இலவசக் கல்வியை ரத்து செய்து விட்டார்கள் என்று நாங்கள் பிரச்சாரம் செய்வோம். இதிலே கவலை நிச்சயமாக இருக்கத் தேவையில்லை. முதலாளியின் மகன் 20 ரூபாய் கல்லூரிக்கு கொடுத்து வந்தவனிடம் 50 ரூபாய் கூட வாங்கலாம். அதைகொண்டு இன்னொரு ஏழை மாணவனுக்கு பி. ஏ.;எம். ஏ., எதுவரைபடிக்க அவனுக்கு ஆர்வம் இருக்கிறதோ அதுவரை படிக்க இலவசக் கல்வி அவனுக்கு அளிக்கலாம். இதை எந்தக் கட்சி எதிர்த்தாலும் நாங்கள் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறோம்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுக்குச் சலுகைகள் பள்ளிக் கூடங்களில், கல்லூரிகளில் கொடுக்கப்படுகின்றன. அத்தகைய சலுகைகள் உயர்ந்த சாதியில் பிறந்த ஏழை மாணவர்களுக்குக் கிடைப்பதில்லை. இந்த நிலைமை நீடித்தால் என்ன ஆகும்? இப்படியே போனால் என்ன நிலைமை உருவாகும்? இன்னும் 20 ஆண்டுகாலம் கழித்து 50 ஆண்டு காலம் கழித்து இப்போது முன்னேற்றம் அடைந்திருக்கும் சமுதாயம் பின்னுக்குச் செல்ல இப்போது பின்தங்கியவர்கள் முன்னேற்றம் அடைந்திருப்பார்கள்.

திரு. கே. எம். சுப்பிரமணியம்: இப்போதே அந்த நிலைமை வந்தாயிற்று.

திரு. க. உரொ. எட்மண்ட்: இப்போது முன்னேற்றம் அடைந்த சாதி தாழ்த்தப்பட்ட சமுதாயம் என்று ஆகும். வெறும் பொருளாதார அடிப்படையில் மட்டுமல்ல. வேலை வாய்ப்புகளிலும் அரசாங்கத்தில் எத்தனை சத விகிதம் பணியாற்றுகிறார்கள் என்பதை எல்லாம் வைத்துத்தான் இந்த பாகுபாட்டைச் செய்து கொண்டிருக்கிறோம். அரசாங்க உத்தியோகங்களில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு இவ்வளவு சதவிகிதம், பின்தங்கியவர்களுக்கு இவ்வளவு சதவிகிதம் என்று ஒதுக்கியிருக்கிறோம். இந்த நிலைமை கல்வித் துறையில் நீடிக்குமானால் உயர்ந்த சாதியில் உள்ள அறிவுத் திறனுள்ள மாணவர்கள் அவர்கள் சார்ந்த குடும்பம் ஏழ்மையான குடும்பமாக, வறுமையில் வாடும் குடும்பமாக இருக்கிற காரணத்தால், அவர்களுடைய ஆற்றலை, அறிவைப் பயன்படுத்திக் கொள்ள முடியாத நிலை ஏற்பட்டு அவர்கள் எல்லாம் பின்னே தள்ளப்படக்கூடிய நிலைமை உருவாகிக் கொண்டிருக்கிறது. இந்த நிலைமை நீடித்தால் இது காலா காலத்திற்கும் தமிழ் நாட்டில் ஒரு பின்தங்கிய சமுதாயம் எப்போதும் இருந்துகொண்டே இருக்கும் என்ற நிலைமைதான் உருவாகும். கடல் அலையில் பள்ளம் மேடாகவும், மேடு பள்ளமாகவும் மாறிக் கொண்டிருப்பதுபோன்ற நிலைமைதான் ஏற்படும்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: இப்போது முன்னேறிய சமுதாயம் பின்னுக்குப் போய்விடும்; அது தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய சமுதாயமாக ஆகிவிடும் என்ற கவலையை எட்மண்ட் அவர்கள் தெரிவிக்கிறார்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: உண்மைதான். மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஷெட்யூல்ட் காஸ்ட்ஸ், பின்தங்கிய சமூகத்தினருக்கு எஜுகேஷனல் கன்செஷன்ஸ் கொடுக்கிறார்கள். அவர்கள் படிக்கும் வாய்ப்பு கிடைக்கிறது. அரசாங்க உத்தியோகங்களில் அமருகின்ற வாய்ப்புக் கிடைக்கிறது.......................

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தாங்கள் ஏதோ தவறாகச் சொல்லிவிட்டதைப் போல் சௌந்தரபாண்டியன் அவர்கள் மிகவும் தவிக்கிறார். அவர்கள் ஏதோ சொல்ல விரும்புகிறார்கள்.

(பிற்பகல் 12.30.)

திரு. க. உரொ. எட்மண்ட்: இந்தச் சமுதாயத்தில் ஏற்றத்தாழ்வுகளை மாற்ற வேண்டும், சீர்கேடுகளைக் களைய வேண்டுமென்று பெரியார் அவர்கள் காலத்திலிருந்து வைத்திருக்கிறோம். பெரியார் அவர்களே கூட இதைக் கடைசி வரை வைத்திருக்க வேண்டுமென்ற அர்த்தத்தில் சொல்லவில்லை. இந்தச் சமுதாயத்தைக் கை தூக்கிவிட வேண்டும், மற்றச் சமுதாயத்திற்குச் சமமாக இவர்கள் வரவேண்டுமென்று இதை வைத்திருக்கிறார்கள். 50 ஆண்டு காலத்திற்கு வைத்திருக்கிறார்கள் என்றால் அதற்குள் தாழ்தப்பட்டவர்கள் முன்னேறுவார்கள் என்று வைத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம்: தலைவரவர்களே, இந்திய அரசியல் சட்டத்தில் 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை தாழ்த்தப்பட்ட மக்களுடைய நிலை கல்வியில், பொருளாதாரத்தில், சமுதாயத்தில் எப்படி இருக்கிறது என்பதை ஆராய்ந்து நிலைமைகள் சரியாக வருகிற வரை வைத்திருப்பார்கள். இவர்களைத் தூக்கி விடுவதால் மேல் ஜாதிக்காரர்கள் அழிந்து விடுகிறார்கள் என்று சொல்வது தவறு. திரு. சுப்பிரமணியம் அவர்கள் தாழ்த்தப்பட்டவர்கள் மேலே வந்து விட்டார்கள் என்கிறார்கள் அப்படி மேலே வந்துவிட்டால் தாழ்த்தப்பட்டவர்களுக்குச் சலுகை தேவையில்லை. சமுதாயத்தில் முன்னேற்றம் வந்து விட்டால், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு எந்தச் சலுகையும் தேவையில்லை. இந்திய அரசு இதை ஒத்துக்கொண்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணா: தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, பிற்படுத்தப்பட்ட மக்களாக இருந்தாலும் சரி, சுயமரியாதை காலத்தில் எந்தக் கொள்கையைச் சொல்லி வந்தோமோ அதே அடிப்படையில் அரசாங்கம் செயல்படுவதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. திரு. எட்மண்ட் அவர்கள் சொன்ன கருத்தெல்லாம்........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு எட்மண்ட் கருத்திற்கு நீங்கள் என் விளக்கம் தருகிறீர்கள். அவர் விளக்கம் தருவார். நீங்கள் உங்கள் பாலிசியைச் சொல்லுங்கள்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் இது போல் எங்குமே கேள்விப்பட்டதில்லை. உறுப்பினர் ஏதாவது ஒரு கருத்தைச் சொல்லி தலைவர்தான் அந்தக் கருத்தைப் பற்றி விளக்கம் அளிப்பார். ஆனால் இங்கு தலைகீழ் முறையில் தலைவர் ஒரு கருத்தைச் சொல்லி, அவருடைய கருத்திற்கு விளக்கத்தை உறுப்பினர் அளிப்பது வேடிக்கையாக இருக்கிறது.

(திரு. ஆலடி அருணா எழுந்தார்)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நீங்கள் பெயரை ரெஃபர் செய்யாமல் உங்கள் பாலிசியைச் சொல்லுங்கள்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் சொல்வதும் திரு. ஆலடி அருணா அவர்கள் சொல்வதும் ஒன்றேதான். நீங்கள் தான் தவறான கோணத்திலிருந்து புரிந்து கொள்கிறீர்கள். தாழ்த்தப் பட்ட சமுதாயத்தில் உள்ளவர்களுக்கு இப்போது கொடுக்கப்படுகிற சலுகை கொடுக்கப்படக்கூடாது என்று வாதிடவில்லை. இதைத்தான் திரு. அருணா அவர்களும் சுட்டிக் காட்டுகிறார்கள். என்னுடைய நோக்கமெல்லாம், ஒரே சமுதாயத்திற்குச் சலுகை கொடுப்பதன் மூலம், இன்னொரு சமுதாயத்திற்கு வாய்ப்புக்களை மறுப்பதன் மூலம் இன்னும் 50, 100 ஆண்டு காலம் கழித்தும் தொடர்ந்து தாழ்த்தப்பட்ட சமுதாயம் பின் தங்கிய சமுதாயம் என்று ஒன்று இருந்து கொண்டிருக்கிற நிலைமை களைத் தான் இந்த நிலைமைகள் உருவாக்கும் என்பதை சுட்டிக் காட்டு கிறோம்.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, தாழ்த்தப் பட்டவர்கள், பின்தங்கியவர்கள், முன்னேறியவர்கள் எனறு பிரித்துத் தான் நாம் வைத்திருக்கின்றோம். நம்முடைய அருமை நண்பர் திரு. எட்மண்ட் அவர்கள் குறிப்பிடுவது போல இவர்கள் மேலே போய், அவர் கள் கீழே வந்துவிடுவார்கள் என்ற அந்த நிலைமை 100 வருஷத்தில் வருமென்றால் அது வரும்போது சிந்திப்போம். இப்போது கணக்குப் பார்த்தால் மேலே இருப்பவர்கள் மேலேதான் இருந்து கொண்டிருக்கிறார் கள். இன்னும் அவர்கள் கீழே வரவில்லை. எந்தக் கணக்கைப் பார்த் தாலும், எந்தத் துறையைப் பார்த்தாலும், படிப்பில், அறிவில் பார்த் தாலும் மற்ற எல்லாத் துறைகளைப் பார்த்தாலும், முன்னேறியவர்கள் முன்னேறியவர்களாகவே இருக்கிறார்கள். இன்னும் கொஞ்ச காலத்திற்கு இந்த முறையைப் பின்பற்றி, எல்லாம் சமமானதற்குப் பிறகு வேண்டு மானால் அவர்கள் பின்தங்கி விட்டார்கள், அவர்களுடைய உரிமை பாதிக் கப்படுகிறது என்ற நிலைமை வருமானால் அதைப் பற்றி அப்போது யோசிப்பது பொருத்தமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி த. ந. அனந்தநாயகி : தலைவரவர்களே, திரு. எட்மண்ட் அவர்கள் ஏதோ குழப்பத்தில் பேசுகிற மாதிரி எனக்குத் தோன்றுகிறது. பேக்வர்ட் கிளாஸஸ் 31 சதவிகிதம், ஹரிஜன்ஸ் 18 சதவிகிதம் ஆக 49 சதவிகிதம் போக 51 சதவிகிதம் ஃபார்வர்ட் கிளாஸஸுக்குத்தான். ஏதோ 100ல் 128 தாழ்த்தப்பட்டவர்களுக்குக் கொடுக்கிற மாதிரியும்,



முற்போக்கு சமுதாயம் தாழ்த்தப்பட்டு கிடப்பது போலவும் கற்பனை செய்துகொண்டு 'இமாஜினேஷன் ரனனிங் ரயட்' ஆக பேசுகிறார். அவர் இவ்வளவு தூரம் கஷ்டப்படவேண்டாம். உண்மையிலேயே பேக்வார்ட் கிளாஸுக்குச் சலுகைகள் என்றாலும் அவை கிடைத்து விடவில்லை. பிரைவேட் காலேஜில், ஜி. ஓ. வில் 31 சதவிகிதம் என்றாலும் கொடுப்பது கிடையாது. பேக்வார்ட் கிளாஸுக்கு 31 சதவிகிதம், ஹரிஜன்ஸுக்கு 18 சதவிகிதம் போக மீதி 51 சதவிகிதத்தில் புத்திசாலிகளுக்கு இடம் தரக் கூடிய அளவிற்கு வாய்ப்பு இருக்கும்போது தாழ்த்தப்பட்டவர்களுக்கும், பின்தங்கியவர்களுக்கும் எல்லாவற்றையும் கொடுத்து விட்ட மாதிரி ஒரு கன்ப்யூஷனில் அவர் பேசுகிறார்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நான் குழப்பத்தில் பேசவில்லை. ஆளும் காங்கிரஸ் கட்சி உறுப்பினர் திருமதி அனந்த நாயகி அவர்கள் தான் மிகுந்த குழப்பத்தில் இருக்கிறார்கள். என்னுடைய கருத்தெல்லாம் உயர்ந்த சமுதாயத்தில் உள்ளவர்களுக்குக் கல்வியைப் பொறுத்த வரை எந்த விதமான பாதுகாப்பும் இல்லை, எந்த விதமான சலுகைகளும் இல்லை. உயர்ந்த சமுதாயத்தில் இருக்கிறவர்கள் கூட வறு மையில் வாடிக் கொண்டிருக்கிறார்கள். இதை நாம் மறந்து விடக் கூடாது. அந்தச் சமுதாயத்தில் உள்ளவர்களில் தரமுள்ள மாணவர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் பொருளாதார வசதி இல்லாத காரணத்தினாலும், அரசாங்கத்தில் அவர்களுக்குச் சலுகை இல்லாத கார ணத்தினாலும் வறுமையிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். இன்டெலி ஜென்ட் ஸ்டூடண்ட்ஸ், அறிவுள்ள மாணவர்கள், நாட்டிற்குப் பயன்படக் கூடியவர்கள் இந்த நிலைமைகளில் பயன் பெறாமல் போய் விடுகிறார்கள். ஆகவே, என்னுடைய கருத்தெல்லாம் பின்தங்கிய சமுதாயத்திற்குச் சலுகை கொடுப்பதைப்போல முன்தங்கிய சமுதாயத்தை மறந்து விடாமல் அவர் களுடைய பொருளாதார நிலையினால் படிப்பதற்கான வாய்ப்பை இழந்த மாணவர்களுக்குப் பொருளாதார உதவி செய்வதன் மூலம் அந்தச் சமுதா யத்தில் உள்ள திறமையுள்ள மாணவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்று சுட்டிக் காட்டுகிறேன். ஆகவே நான் குழப்பத்தில் பேசவில்லை.

பேசிய இந்திய யூனியன் முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர், அந்த நிலை வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்று சொன்னார்கள். வரும்போது பார்த்துக்கொள்ளலாம் என்பது அரசாங்கத்தினுடைய எண்ணமாக இருக்கக்கூடாது. வருமுன் காப்பவர்களாக இருக்கவேண் டும். 100 ஆண்டு காலம் கழித்து, 200 ஆண்டு காலம் கழித்து, இரண்டு தலைமுறை கழித்து, மூன்று தலைமுறை கழித்து என்ன நிலை மை உருவாகும் என்பதையெல்லாம் பார்த்து இந்தத் துறையிலே இப் பேர்ப்பட்ட இடர்பாடுகள் ஏற்படாவண்ணம் இப்போதுள்ள அரசு செய்ய வேண்டுமென்பதை நான் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன்.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, அவர் முற்போக்கில் உள்ளவர்கள் என்று குறிப்பிட்டாரே, அவர்கள் எந்த அளவிற் குப் பின் தங்கியிருக்கிறார்கள் என்ற புள்ளி விவரத்தைக் கொடுக்கட்டும்.

[திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன்] [1975 மார்ச் 21

முற்போக்கில் இருப்பவர்கள் இப்போதும் முற்போக்கில்தான் இருக்கிறார்கள். இப்படி முற்போக்கில் இருப்பவர்களும், பிற்போக்கில் இருப்பவர்களும் சமமான நிலைக்கு வந்த பிறகு யோசிப்போம் என்றால் என்ன தவறு?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் கணக்கைக் காட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அவரிடம் வந்திருக்க மாட்டார்கள். என்னிடம் வந்திருக்கிறார்கள் நல்ல தேர்ச்சி பெற்று அதிகமான மார்க்குகளை வாங்கித் தேறியவர்கள். பி.யு.சிக்கு மேல் படிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆதாரங்களைக் காட்டவேண்டுமென்றால் ஏராளமாக காட்டத் தயராக இருக்கிறோம். இதைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமூதாயமும், பின் தங்கிய சமூதாயமும்....................

(திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் எழுந்திருந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பேர்களும் நிற்பது சரியல்ல.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, அவரிடம் புள்ளி விவரம் இருக்கிறது என்கிறார். எனக்கு இது முன்பே தெரியும். எந்த கவனத்தின் அடிப்படையில் பேசுகிறார் அவர் என்பதை நான் உணர்கிறேன். எனக்குத் தெரியாமல் அல்ல. அவர் எப்படி மறைத்துச் சொல்லுகிறாரோ அதை நான் மறைத்துச் சொல்லுகிறேன். அவர் பேசுவது விளங்காமல் நான் பேசவில்லை. ஏதோ கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த மாதிரி அவர் ஒரு புதிய கருத்தைச் சொல்கிறார், எனக்கு அது விளங்கவில்லை என்று அர்த்தமில்லை. அவர் சொல்வது எனக்கு விளங்குகிறது. அவர் யாரைச் சொல்லுகிறார், எந்த இனத்திற்கு வக்காலத்து வாங்கிச் சொல்லுகிறார் என்று எனக்குத் தெரிகிறது. நான் தெரிந்து இருக்கிறேன். அது மாத்திரமல்ல. முன் தங்கியவர்களுக்குச் சமமாக பின் தங்கியவர்கள் வரவேண்டுமென்பது இந்த சர்க்கார் எடுத்திருக்கிற நடவடிக்கை. இது தான் சரியான நடவடிக்கை என்பது என்னுடைய வாதம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தனக்குத் தெரியும் என்று மாண்புமிகு பெரியவர் மொய்தீன் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய சமூதாயத்தில் உள்ள முன் தங்கியவர்களுக்காகவும் நான் வாதாடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரே ஒரு திருத்தம். பின் தங்கியவர்கள் என்று சொல்லுகிற மாதிரி முன் தங்யவர்கள் என்று சொல்வதை விட முன்னேறியவர்கள் என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும். பின் தங்கியவர்கள் முன் தங்கியவர்கள் என்று, உறுப்பினர்கள் பேசுகிறார்கள். பின் தங்கியவர்கள், பிற்படுத்தப்பட்டவர்கள், முன்னேறியவர்கள் என்று சொல்லுவது தான் முறை.



1975 மார்ச் 21]

திரு க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இஸ்லாமியர்கள் ஒரே சமுதாயமாக இருந்தாலும் கூட இஸ்லாமியர்களில் பின் தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்ற நிலை இருக்கிறது. அவர்கள் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களிலும் பின் தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்ற நிலை இருக்கிறது. பெரியவர் மொய்தீன் அவர்களுக்கு நான் கண்டிப்பாக சொல்லிக் கொள்கிறேன். அவருடைய சமுதாயத்தில் உள்ள முன்னேறியவர்கள் என்று கருதப்படுவர்களையும் சேர்த்து அவர்களுக்கும் தான் நான் வாதாடுகிறேன்.

MR. DEPUTY SPEAKER :—Your time is up.

THIRU G.R. EDMUND :—I will take another five minutes and finish......

MR. DEPUTY SPEAKER :—No, no......

THIRU G.R. EDMUND :—Mr. Lathef has taken more than 40 minutes. I am Dupty Leader of my Party. No, no ; that is not fair, it is unjust.

MR. DEPUTY SPEAKER :—You should also co-operate..

THIRU G.R. EDMUND :—If I am to stand on my rights, you cannot restrict my time.

MR. DEPUTY SPEAKER :—If you do not co-operate with me how to carrys on ?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, 6, 7 பேர்கள் முஸ்லீம் லீக் கட்சியில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 40 நிமிஷம் எங்களுக்கும் 40 நிமிஷம் தானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏழு பேர் இருக்கிற முஸ்லீம் லீக் கட்சிக்கு 25 நிமிஷம் கொடுக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்று 20 நிமிஷம், நேற்று 18 நிமிஷம் ஆக 38 நிமிஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : நாங்கள் எத்தனை பேர் இருக்கிறோம் என்று பார்க்கவேண்டும். The chair is doing injustice to me......

MR. DEPUTY SPEAKER :—No ; the Chair is doing injustice only to the Ruling Pary ; they are having 164 members..................

THIRU G.R. EDMUND :—I am not concerned with insjustice done to ruling party................

முற்போக்கில் இருப்பவர்கள் இப்போதும் முற்போக்கில்தான் இருக்கிறார்கள். இப்படி முற்போக்கில் இருப்பவர்களும், பிற்போக்கில் இருப்பவர்களும் சமமான நிலைக்கு வந்த பிறகு யோசிப்போம் என்றால் என்ன தவறு?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, நம்முடைய முஸ்லீம் லீக் கட்சியின் தலைவர் கணக்கைக் காட்டவேண்டுமென்று சொல்கிறார்கள். அவரிடம் வந்திருக்க மாட்டார்கள். என்னிடம் வந்திருக்கிறார்கள் நல்ல தேர்ச்சி பெற்று அதிகமான மார்க்குகளை வாங்கித் தேறியவர்கள். பி.யு.சிக்கு மேல் படிக்க முடியாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். ஆதாரங்களைக் காட்டவேண்டுமென்றால் ஏராளமாக காட்டத் தயாராக இருக்கிறோம். இதைத் தான் சொல்லிக்கொண்டிருக்கிறோம். தாழ்த்தப்பட்ட சமுதாயமும், பின் தங்கிய சமுதாயமும்....................

(திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் எழுந்திருந்தார்).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இரண்டு பேர்களும் நிற்பது சரியல்ல.

திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் : தலைவரவர்களே, அவரிடம் புள்ளி விவரம் இருக்கிறது என்கிறார். எனக்கு இது முன்பே தெரியும். எந்த கவனத்தின் அடிப்படையில் பேசுகிறார் அவர் என்பதை நான் உணர்கிறேன். எனக்குத் தெரியாமல் அல்ல. அவர் எப்படி மறைத்துச் சொல்லுகிறாரோ அதை நான் மறைத்துச் சொல்லுகிறேன். அவர் பேசுவது விளங்காமல் நான் பேசவில்லை. ஏதோ கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்த மாதிரி அவர் ஒரு புதிய கருத்தைச் சொல்கிறார், எனக்கு அது விளங்கவில்லை என்று அர்த்தமில்லை. அவர் சொல்வது எனக்கு விளங்குகிறது. அவர் யாரைச் சொல்லுகிறார், எந்த இனத்திற்கு வக்காலத்து வாங்கிச் சொல்லுகிறார் என்று எனக்குத் தெரிகிறது. நான் தெரிந்து இருக்கிறேன். அது மாத்திரமல்ல. முன் தங்கியவர்களுக்குச் சமமாக பின் தங்கியவர்கள் வரவேண்டுமென்பது இந்த சர்க்கார் எடுத்திருக்கிற நடவடிக்கை. இது தான் சரியான நடவடிக்கை என்பது என்னுடைய வாதம்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, எந்த இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று தனக்குத் தெரியும் என்று மாண்புமிகு பெரியவர் மொய்தீன் அவர்கள் சொல்லுகிறார்கள். அவர்களுடைய சமுதாயத்தில் உள்ள முன் தங்கியவர்களுக்காகவும் நான் வாதாடுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, ஒரே ஒரு திருத்தம். பின் தங்கியவர்கள் என்று சொல்லுகிற மாதிரி முன் தங்யவர்கள் என்று சொல்வதை விட முன்னேறியவர்கள் என்று சொல்வது தான் பொருத்தமாக இருக்கும். பின் தங்கியவர்கள் முன் தங்கியவர்கள் என்று, உறுப்பினர்கள் பேசுகிறார்கள். பின் தங்கியவர்கள்; பிற்படுத்தப்பட்டவர்கள், முன்னேறியவர்கள் என்று சொல்லுவது தான் முறை.



திரு க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, இஸ்லாமியர்கள் ஒரே சமுதாயமாக இருந்தாலும் கூட இஸ்லாமியர்களில் பின் தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்ற நிலை இருக்கிறது. அவர்கள் ஒரே மதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்களிலும் பின் தங்கியவர்கள், முன்னேறியவர்கள் என்ற நிலை இருக்கிறது. பெரியவர் மொய்தீன் அவர்களுக்கு நான் கண்டிப்பாக சொல்லிக் கொள்கிறேன். அவருடைய சமுதாயத்தில் உள்ள முன்னேறியவர்கள் என்று கருதப்படுவர்களையும் சேர்த்து அவர்களுக்கும் தான் நான் வாதாடுகிறேன்.

Mr. DEPUTY SPEAKER :—Your time is up.

Thiru G.R. EDMUND :—I will take another five minutes and finish......

Mr. DEPUTY SPEAKER :—No, no......

Thiru G.R. EDMUND :—Mr. Lathef has taken more than 40 minutes. I am Dupty Leader of my Party. No, no ; that is not fair, it is unjust.

Mr. DEPUTY SPEAKER :—You should also co-operate..

Thiru G.R. EDMUND :—If I am to stand on my rights, you cannot restrict my time.

Mr. DEPUTY SPEAKER :—If you do not co-operate with me how to carrys on?

திரு. க. உரொ. எட்மண்ட் : தலைவரவர்களே, 6, 7 பேர்கள் முஸ்லீம் லீக் கட்சியில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் 40 நிமிஷம் எங்களுக்கும் 40 நிமிஷம் தானா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஏழு பேர் இருக்கிற முஸ்லீம் லீக் கட்சிக்கு 25 நிமிஷம் கொடுக்கப்பட்டது. அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இன்று 20 நிமிஷம், நேற்று 18 நிமிஷம் ஆக 38 நிமிஷம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. க. உரொ. எட்மண்ட் : நாங்கள் எத்தனை பேர் இருக்கிறோம் என்று பார்க்கவேண்டும். The chair is doing injustice to me......

Mr. DEPUTY SPEAKER :—No ; the Chair is doing injustice only to the Ruling Pary ; they are having 164 members..................

Thiru G.R. EDMUND :—I am not concerned with insjustice done to ruling party................

[1975 மார்ச் 21

MR. DEPUTY Speaker : That is all right; you finish within five minutes...........

THIRU G.R. EDMUND : If you may compel me to finish like that, even now I will sit down............

Mr. Deputy Speaker: Very good, Sir, you may resume your seat.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* தலைவரவர்களே, நம்முடைய மொய்தீன் அவர்கள் சொன்னார்கள். இஸ்லாமிய சமுதாயத்தில் கூடப் பின் தங்கியவர்கள் இருக்கிறார்கள். போன ஆண்டுகூட நம்முடைய முதலமைச்சர் அவர்கள் உருதுபேசும் முஸ்லீம்களைப் பின் தங்கியோர் பட்டியலில் சேர்த்தார்கள். நான் அவர்களுக்கும் சேர்த்துத்தான் வாதாடுகிறேன். நீங்கள் எதற்காகக் கேட்கவேண்டும், உருதுபேசும் முஸ்லீம்கள் என்ன பின்தங்கியவர்களா? நீங்கள் என் வாதாடவேண்டும். எந்தத் துறையில் அவர்கள் பின்தங்கியிருக்கிறார்கள்..............

(திரு. திருப்பூர் எ. எம். மொய்தீன் எழுந்தார்).

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* நேரம் இல்லை. அவர்கள் 5 நிமிடத்தில் முடிக்கவேண்டும். குறுக்கீடு வேண்டாம்.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* அந்த அளவுக்கு இன்றையதினம் கல்வித் துறைக்காக 118 கோடி ரூபாய். செலவழிக்கிறோம் என்றால், அனைவருக்கும் ஒழுங்கான முறையில் கல்வி கொடுக்கும் வகையில் செலவழிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றையதினம் தமிழகத்தில் 14,000 ஆசிரியர்கள் வேலை இல்லாமல் இருக்கிறார்கள். சில ஆண்டுகாலம் அதற்காக ஆசிரியர் பயிற்சிப் பள்ளியை மூடி வைத்து இருந்தார்கள். இப்போது மீண்டும் திறந்து இருக்கிறார்கள். 14,000 பேருக்கு வேலை இல்லை. இவர்களுக்கு வேலை கொடுப்பதில் என்னென்ன தவறுகள், முறைகேடுகள் இருக்கின்றன? சீனியாரிட்டி படி தான் கொடுக்கவேண்டும், முதலில் யார் பயிற்சி பெற்றார்களோ அந்த அடிப்படையில் தான் கொடுக்கவேண்டுமென்று அரசு ஆணையிட்டு இருக்கிறது. ஆனால் அது எந்த அளவுக்கு நடைமுறைப்படுத்தப் படுகிறது என்று பார்த்தால், நிச்சயமாக அது சரிவர நடைமுறைப்படுத்தப் படவில்லை.

கல்வித் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, உள்ளாட்சித் துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, இன்றையதினம் அது சரியாக இயங்கவில்லை. இந்தப் பள்ளிகள் ஒன்று முழுமையாகக் கல்வித் துறையின்கீழ் வந்து விடவேண்டும், அல்லது இருக்கிற நிலைமைகளில் ஒழுங்காகச் செயல்படவேண்டும். ஊராட்சி ஒன்றியத்தை எடுத்துக்கொண்டால், அங்கே எப்படியிருக்கிறது என்றால், ஆணையருக்கு, பெரும் தலைவருக்கு உத்யோகம் கொடுக்கும் அதிகாரம் இருக்கிறது. ஆகையால் ஊராட்சி ஒன்றியங்களில் ஆசிரியர்கள் நியமனம் எப்படியிருக்கிறது என்றால் அவர்களுக்கு வேண்டி



1975 மார்ச் 21] [திரு. க. உரொ. எட்மண்ட்]

யவர்களை, சொந்தக்காரர்களை நியமனம் செய்து கொள்கிறார்கள். எங்கே ஊழல் இல்லை? வேண்டுமென்றே வேண்டியவர்களுக்கு வேலை கொடுப்பதற்காக, ஊராட்சி ஒன்றியப் பெரும் தலைவரும், ஆணையரும் அங்கே இருக்கும் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி ஒரு மாதமோ, இரண்டு மாதமோ விடுப்பில் போகச்சொல்லி, அந்த இடங்களில் அவர்களை நியமனம் செய்து கொள்கிறார்கள்.

*திரு. எஸ். ஆறுமுகம் :* பாயின்ட் ஆப் ஆர்டர் சார், நான் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவராக இருக்கிறேன். அவர் இப்படிச் சொல்லுவதால் பொதுவாக எல்லா ஒன்றியத்திலும் ஊழல் இருப்பது போல் சொல்லுகிறார்கள். அது பொருத்தமாக இருக்காது என்று சொல்லிக்கொள்கிறேன்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* விளக்கம் சொல்ல இது நேரம் இல்லை.

*திரு. வி. கிருஷ்ணமூர்த்தி :* (நெல்லிக்குப்பம்) எதிர்க்கட்சித் தலைவர் சொல்வதில் நியாயம் இருக்கிறது. ஒரு வேளை அவர் இருக்கும் பகுதியில் தவறு இருந்தால் அவருக்கு நன்றாகத் தெரியும். இருக்கும் 384 பஞ்சாயத்து யூனியன்களிலும் ஒழுங்கீனங்கள் இருப்பதாகப் பேசுவது, அங்கே இருக்கும் ஆணையர், பெரும் தலைவர் சரியாக இல்லை என்று சொல்வது பொருத்தமாக இருக்காது. இப்படிப் பொதுவாகச் சொல்லுவது பொருத்தம் அல்ல. குறிப்பிட்டுச் சொன்னால் பொருத்தமாக இருக்கும்.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* திருநெல்வேலி ஜில்லாவில் இப்படி இருக்கிறது. நான் சொல்லுகிறேன், அரசாங்கத்திற்கு தைரியம் இருந்தால் நடவடிக்கை எடுக்கட்டும். ஆழ்வார்திருநகரி ஒன்றியத்தில் இப்படி நடந்து இருக்கிறது, அடுத்தாற்போல் பாளையங்கோட்டை ஒன்றியத்தில் இப்படி நடந்து இருக்கிறது, அடுத்தாற்போல் திருச்செந்தூர் ஒன்றியத்தில் இப்படி நடந்து இருக்கிறது. ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி ஒரு மாதம், இரண்டு மாதம் விடுப்பில் போகச்சொல்லி, அந்த இடத்தில் புது ஆசிரியர்களை நியமனம் செய்து இருக்கிறார்கள். ரூ. 2,000 கூட வாங்கிக் கொண்டு நியமனம் செய்து இருக்கிறார்கள். விசாரணை வைத்தால் நிரூபிக்கத் தயார். நிரூபிக்கவில்லையென்றால் என்னுடைய பதவியை நான் ராசினாமா செய்யத் தயார். இங்கே இதை ஒரு சவாலாக ஏற்றுக்கொள்ளத் தயார்.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :* சவால் இங்கே விடக் கூடாது.

*திரு. க. உரொ. எட்மண்ட் :* ஏன் இதைச்சொல்லுகிறேன் என்றால் பள்ளித் துறை நிர்வாகம் ஒரே துறையில் இருக்கவேண்டும்.

THIRU V. Krishnamoorthy rose.

MR. DEPUTY SPEAKER : Mr. Krishnamoorthy please resume your seat; there is no time.

**Thiru G.R. EDMUND :** I am not yielding, Sir. I have understood ship point. Probably he wants more particulars from me.

தலைவரவர்களே, நான் இதை எதற்காகச் சொல்கிறேன் என்றால் கல்வித் துறை நிர்வாகம் ஒரே துறையிடத்தில் இருக்க வேண்டும். அதற்காக ஒரு நிர்வாக அமைப்பு இருக்கிறது. மேலே டைரக்டர், சி.இ.ஓ., டி.இ.ஓ. டெபுடி இன்ஸ்பெக்டர் என்று இருக்கிறார்கள். அவர்கள் பள்ளிக்கூடங்களை நிர்வகிக்கட்டும். அது ஊராட்சி ஒன்றியப் பல்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி, உள்ளாட்சித் துறைப் பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி, அவற்றிற்கு டூயல் அட்மினிஸ்டிரேஷன் இருக்கக்கூடாது. இரட்டை நிர்வாகம் இருக்கக்கூடாது. ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு ஆணையரும் இன்ஸ்பெக்ஷன் செய்ய போகிறார், டெபுடி இன்ஸ்பெக்டரும் இன்ஸ்பெக்ஷனுக்குப் போகிறார். அதையெல்லாம் ஒரே துறை நிர்வாகத்தின்கீழ் கொண்டு வாருங்கள்.

திருநெல்வேலி நகரசபைத் தலைவராக இருப்பவர் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர். அவருடைய பெயரை நான் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். யார் அவர் என்று. அந்த நகரசபை ஸ்கூல்களில் என்ன நடக்கிறது என்றால், அவருடைய சொந்த அண்ணன் பிள்ளை வேலை பார்க்கிறான். யாருக்கு சீனியாரிட்டி இருக்கிறதோ அவர்களையெல்லாம் மறந்து விட்டு, அவர்களுடைய சொந்தத் தம்பிக்கு இன்றைய தினம் அங்கே பதவி உயர்வு கொடுத்து இருக்கிறார்கள். இது எதனால் வருகிறது ? அந்தப் பள்ளிக்கூடங்கள் நகரசபைத் தலைவரின் அதிகாரத்திலும், ஊராட்சி ஒன்றியத் தலைவரின் அதிகாரத்தின்கீழும் வருவதால் தான் வருகிறது. அவர்கள் தங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி இப்படிச் செய்கிறார்கள். 1964, 1967-ல் தேறியவர்கள்கூட வேலையில்லாமல் இருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே இடம் கிடையாது. அவர்களுடைய உறவினன் என்ற உடனே இடம் கொடுத்து இருக்கிறார்கள். நீங்கள் வேண்டுமானால் விசாரித்துப் பாருங்கள். உண்மையாக இருந்தால் நடவடிக்கை எடுங்கள், தவறாக இருந்தால் எனக்கு என்ன தண்டனை தந்தாலும் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறேன். இது ஊராட்சி ஒன்றியத்தில் நடக்கிறது, நகரமன்றத்தில் நடக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினர் எட்மண்ட் அவர்கள் சொன்ன அந்தத் தகவலை என்னிடத்தில் எழுதித் தருவார்களானால், தவறு நடந்து இருக்குமானால், நிச்சயமாக அரசின் சார்பில் நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை அறிவிக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : முதலமைச்சரின் உறுதிமொழிக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதைப்போல் சென்னை மாவட்டத்தில் நூலக ஆணைக்குழுவின் தலைவராக இருக்கும் கே. டி. சுந்தரம் (குறுக்கீடு) கே. பி. சுந்தரம் (சிரிப்பு) ஒரு இனிஷியல் தவறானால் அதற்காக இவ்வளவு சிரிப்பா ? தவறு இருந்தால், திருத்திக் கொள்கிறேன். அப்படி கே. டி. என்று சொன்னாலும் மோசம் இல்லை. (குறுக்கீடு) அந்த அளவுக்கு நான் ஆதாரத்தைக் கொண்டு வந்து இருக்கிறேன். நான் இதனை சும்மா



சொல்லவில்லை. பத்திரிக்கையில் வந்திருக்கிறது. ஒரு பத்திரிகை அல்ல, பல பத்திரிகைகளில் வந்து இருக்கிறது. சுதேசமித்திரன், விடிவெள்ளி, நவசக்தி, ஒரு ஆங்கிலப்பத்திரிகையில் வந்து இருக்கிறது. லெட்டர்ஸ் டு தி எடிட்டர் பகுதியில் சமநீதியில் வந்து இருக்கிறது.

இன்னொன்று பப்ளிக் லைப்ரரி சர்வீஸ் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வந்து இருக்கிறது. நவசக்தியில் "நிர்வாக ஆணைக் குழுவில் கொள்ளையோ, கொள்ளை" சோவியத் நூல் சப்ளையில் பயங்கரம், நூல்களை 10 ரூபாய்க்கு வாங்கி ரூ. 30 என்று எழுதும் நிலை, "முத்துசரம்" என்ற பத்திரிகையில் சென்னை நூலக அலுவலகத்தில் அராஜகம், ஊழியர் தாக்கப்பட்டு ரத்த காயம், அரசு சென்னை நூலக அலுவலகங்களில் மக்கள் பணம் கொள்ளை அடிக்கும் வரம்பு மீறிய செயல்கள், இப்படியெல்லாம் வந்திருக்கிறது.

நான் சொல்கிறேன், இவ்வளவு பத்திரிகைகளில் ஆணைக்குழுவைப் பற்றி, அது செய்கிற அராஜகம் பற்றி எழுதியிருக்கிறார்கள். அவ்வளவு பத்திரிகைகளும் பொய் செய்தியையா வெளியிட்டு இருக்கிறார்கள் ? பொய் செய்தி வெளியிட்டு இருக்கிறார்கள் என்றே வைத்துக்கொள்ளுங்கள், ஒரு அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலனை செய்து, உண்மை இருக்குமானால், நடவடிக்கை எடுத்து இருக்க வேண்டும் அல்லவா ? நடவடிக்கை எடுத்து இருக்கிறீர்களா ? ஏற்கனவே நாமினேட் உறுப்பினர்கள், நியமனம் செய்யப்பட்டவர்கள் 3 பேர் பதவி இழந்து இருக்கிறார்கள். இன்னும் 6 பேர் பதவியை ராசினாமா செய்து இருக்கிறார்கள். அந்தத் தலைவருக்குக் கீழே வேலை செய்ய மனம் இல்லாமல் 6 பேர் ராசினாமா செய்து இருக்கிறார்கள். இத்தனைச் சூழ்நிலைக்குப் பிறகு, இவ்வளவு குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு, நிர்வாக ஆணைக்குழுவை அரசாங்கம் கலைப்பதற்கு ஏன் தயக்கம் ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகள் அரசுக்கும் வந்து இருக்கின்றன. அதுபற்றி அரசு பரிசீலித்துக் கொண்டு இருக்கிறது. என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்பதைப் பற்றி சட்டத் துறையைக் கலந்து கொண்டு ஆலோசித்து வருகிறது. 1948-ல் ஏற்படுத்தப்பட்ட சட்டமாக இருப்பதால், நடவடிக்கை எடுப்பதில் சில சிக்கல்கள் இருக்கின்றன. அதனுடைய அடிப்படையில்தான் அரசு முறைப்படி நடவடிக்கை எடுக்கும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு அமைச்சர் அவர்களின் உறுதிமொழிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆனால் என்னுடைய வேண்டுகோள் இத்தனைக் குற்றச்சாட்டுகளுக்குப் பிறகு..................

**You try to find out if there is a prima facie case and put him under temporary suspension until definite action is taken against him.** அலுவலகத்திலிருந்து புத்தகத்தைத் தூக்கிக் கொண்டு போகிறார்கள். புத்தகத்திலிருந்து குறிப்பிட்ட பகுதிகள் மாத்திரம கொண்டு போகிறார்கள். இப்படி எல்லாம் குற்றச் சாட்டு இருக்கின்றது.

[1975 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதன் தலைவர்கூட தன்மீது இப்படிப்பட்ட புகார்கள் வருகின்றன அவை மீது விசாரணை நடத்தி தீர்ப்பு அளியுங்கள் என்று கேட்டு விண்ணப்பம் தந்து இருக்கிறார்கள். அதன்மீது சட்டத் துறை மூலம் ஆராய்ந்து கொண்டு இருக்கிறோம். எந்தவிதமான நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி முடிவு செய்து விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. க. உரொ. எட்மண்ட் : தனியார் துறை பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, அரசாங்கப் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, பஞ்சாயத்து யூனியன் பள்ளிக்கூடமாக இருந்தாலும் சரி, இதைப் போல நகரசபைகளில் இருக்கின்ற பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி இவைகளின் கட்டடங்களுக்கு உள்ளாட்சித் துறை வரி கிடையாது. ஹவுஸ் டாக்ஸ் கிடையாது. சென்னை மாநகராட்சி சட்டத்தில் பள்ளிக்கூட கட்டடங்களுக்கு, தனியார் அரசாங்கம் பள்ளிக்கூடங்களாக இருந்தாலும் சரி, அவைகளுக்கு பில்டிங் டாக்ஸ் போடுவது இல்லை.

சமீபத்தில் நம்முடைய மதுரைநகராட்சி மாநகராட்சியாக உயர்த்தப்பட்டது அதற்கு முன்னால் நகராட்சியாக மாத்திரம் இருந்தது, அப்போது அங்கே இருக்கின்ற பள்ளிக்கூடங்களுக்கு வரி விதி விலக்கு உண்டு.

(திரு குப்பல் கே. எஸ். ராமகிருஷ்ணன் குறுக்கீடு).

I know the facts.

Thiru KUPPAL K. S. RAMAKRISHNAN : I know correctly.

Thiru G. R. EDMUND : I know more correctly, rather most correctly,

தலைவர் அவர்களே, இன்றைய தினம் மதுரை மாநகராட்சியான பிறகு அந்த கட்டிடங்களுக்கு எல்லாம் ஹவுஸ் டாக்ஸ் வாங்குகிறார்கள். சாதாரண எலிமண்டரி ஸ்கூலுக்கு ஒரு ஆண்டுக்கு 4 ஆயிரம் ரூபாய் கட்டிடத்திற்கு பில்டிங் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று கேட்டு இருக்கின்றார்கள். இந்த நேரத்தில் அமைச்சர் கவனத்திற்குக் கொண்டு வருவது எல்லாம் ஒரு பள்ளிக்கூடத்திற்கு 4,000 ரூபாய் பில்டிங் டாக்ஸ் கட்ட வேண்டுமென்று சொன்னால் யாருமே பள்ளிக்கூடம் நடத்த முடியாது. இந்த அளவுக்கு இதை எல்லாம் பரிசீலனை செய்து மதுரை மாநகராட்சிச் சட்டங்களை அதற்கு எற்ற வகையில் திருத்தி மாநகராட்சிப் பள்ளிக்கூடங்களுக்கு வரி விலக்கு கொடுப்பதற்கான திருத்தத்தை மாநகராட்சிச் சட்டத்தில் நீங்கள் கொண்டு வருவதற்கு எற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டு இந்த மானிய கோரிக்கையை நான் எதிர்த்து அமருகிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, கல்வித் துறை ஆற்றியுள்ள பணிகளை, இனி ஆற்ற இருக்கின்ற பணிகளையும் வரவேற்று பாராட்டுரைகள் நல்கிய இந்த மன்றத்தினுடைய உறுப்பினர்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கின்றேன்.



1975 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

இந்த கல்வித்துறை பணிகள் மேலும், சிறப்பாக, சீராக நடைபெற வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் இந்தத்துறையில் இருந்து வருகின்ற பல்வேறு குறைகளைச் சுட்டிக்காட்டி அவற்றை நீக்க வேண்டுமென்பதற்கான வழிவகைகளைக்கூறி நல்ல பல கருத்துக்களை எடுத்துச் சொல்லிய உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

குற்றம் சுமத்த வேண்டுமென்ற அடிப்படையில் எதேனும் ஒரு குற்றம் சுமத்தித் தீர்ப்பது, அப்படி சுமத்தியதின் மூலம் மகிழ்ச்சி எற்படும் என்ற கருத்தோடு சுமத்தி இருப்பார்களேயானால் அப்படிப்பட்ட ஒரு மகிழ்ச்சி இந்த அவையின் மூலம் பெறுகிறார்கள் என்றால் அதிலேயும் நமக்கு மகிழ்ச்சிதான் என்பதை நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இந்தக் கல்வித் துறை மான்யத்தை பற்றிப் பலரும் பல்வேறு கருத்துக்களை எடுத்து தெரிவித்து இருக்கின்றனர். இதனுடைய சிறப்பு பாராட்டுவதிலே இருக்கின்ற தன்மையைவிட என்னால் பரராட்டாமல் இருக்க முடியவில்லை என்பதிலேதான் அதிகமான முக்கியத்துவம் இருக்கின்றது என்பதை நான் நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த வகையிலே மாண்புமிகு அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய துணைத் தலைவர் திரு. எட்மண்ட் அவர்கள் என்னால் பாராட்டாமல் இருக்க முடியவில்லை என்று கூறினார். பாராட்டாமல் அவர்கள் இருக்க முடியாது என்ற நிலையில் எதிர்கட்சியை வைத்துத்தான் ஆளும் கட்சி சிறப்பு பெறும். இந்த வகையிலே ஓரளவிலே இந்தப் பாராட்டுதலைத் தெரிவித்ததற்கு இந்த அளவில் மீண்டும் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கல்வித் துறையைப்பற்றி ஆண்டுக்கு ஆண்டு பேசி வருகிறோம். கல்வித் துறை எந்த வகையில் வளர்ச்சி பெற வேண்டும் என்று விளக்கங்கள் எடுத்துச் சொன்னார்கள். வேறு எந்தத் துறைக்கும் செலவழிக்காத அளவில் அரசு மட்டுமல்லாமல், பொதுமக்களும், மற்றவர்களும் சேர்ந்து செலவழிக்கிற தொகையைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே ரூ. 118 கோடி செலவழிக்கிறோம். மொத்தத்தில் எராளமான பணம் செலவழித்து கல்வியைப் போற்றி வளர்க்கிறோம். கட்டடங்கள் கடன் முதலியவற்றிற்குக் கிட்டத்தட்ட 5 கோடி 52 லட்சம், ரூபாய் தொழில் கல்வித்திட்டத்தில் செலவு, கடன்கள் முதலியவற்றிற்கு 5 கோடி 79 லட்சம் ரூபாய் அது மட்டுமல்லாமால் ஹரிஜனங்கள், பின் தங்கிய வகுப்பினர், பழங்குடி மக்கள், விடுதிகள், நலப்பள்ளிகள், கடன்கள் போன்ற துணைத் கணக்கில் 17 கோடி ரூபாய் மருத்துவக்கல்வி, வேளாண்மை கால்நடை, கணக்கின் பேரில் 7 கோடி ரூபாய், உள்ளாட்சித்துறை சார்பில் 7 கோடி ரூபாய், தனியார்துறை சார்பாக செலவழிப்பது மாநிலம் முழுவதும் துவக்கப்பட்ட பள்ளிகள் பல்வேறு கணக்கில் 5 கோடி ரூபாயும் பெற்றோர்கள் சார்பாக ரூ. 80 லட்சமும் மாணவர்களுக்கு சராசரி கணக்கிட்டு ரூ. 50 என்று செலவழிப்பதில் குறைந்த மதிப்பீடு ரூ 40 கோடி வரும். எல்லாவற்றையும் எடுத்தால் ரூ. 205 கோடி 1975–76 ஆண்டு வரவு—செலவில் எல்லா வகையிலும் கல்வித்துறையில் கல்வியை வளர்க்க செலவிடுகிறோம். இப்படி இருந்தும், கல்வியின் தரம் வளரவில்லை,

கல்வியின் தரம் வளர வேண்டுமென்று எல்லோரும் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். அதற்கான வழிவகைகளை மேற்கொள்ளுதல் கல்வித் துறையில் பல்வேறு வகையான மாற்றங்களைக் கொண்டு வருகின்ற பாங்கைக் காணலாம். அதற்கான முழு முயற்சியையும் இந்த அரசு செய்யவில்லை என்று குறிப்பிட்டார்கள். 90 ஆண்டுகளுக்கு முன்னால் விவேகானந்தர் இந்நாட்டில் இருந்து வந்த கல்விமுறையைக் குறித்து ஓர் அரிய கருத்தைத் தெரிவித்து இருக்கிறார். அன்றைய நிலையில் அந்த கருத்தை எடுத்துச் சொல்லியபோது

"Getting by heart the thoughts of others in a foreign language and stuffing your brain with them and taking some university degrees, you consider yourself educated. Is this education? What is the goal of your education? Either a clerkship, or being a lawyer, or at the most a Deputy Magistrate, which is another form of clerkship—isn't that all? What good will it do you or the country at large? Open your eyes and see what a piteous cry for food rising in the land of Bharata, proverbial for its food? Will your educaion fulfil this want? The education that does not help the common mass of people to equip themselves for the struggle for life, which does not bring out strength of character, a spirit of philanthropy and the courage of a lion—is it worth the name?

என்று 90 ஆண்டுகளுக்கு முன்பே அவர்கள் கேட்டார்கள். இடையிலே வந்த பல்வேறு கல்வி அமைச்சர்கள், பல்வேறு துறையினர், வல்லுனர்கள் பல்கலைக் கழகத் துணை வேந்தர்கள் ஆகிய அத்தனை பேரும் செயலாற்றிய தற்கு பிறகும் இதே நிலைதான் என்றால்.........................

திருமதி த. ந. அனந்தநாயகி : பாயின்ட் ஆப் ஆர்டர். கனம் அமைச்சர் அவர்கள் விவேகானந்தர் அறிவுரையை எடுத்துப் படித்ததைக் கேட்க மகிழ்ச்சியாக இருந்தது. மாரல் இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் டு தி ஸ்டூடென்ட்ஸ் கொடுத்தால் உண்மையிலேயே எடுகேஷன் வில் பி பெனிபிஷியல்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே சட்ட மன்ற உறுப்பினர்களே பாடம் கற்றுக்கொள்வார்களானால் மற்றவர்களுக்குப் பிறகு பாடம் சொல்லிக்கொடுக்கலாம். என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

குறைபாடுகள் பற்றிச் சொல்லிக்கொண்டு இருக்கிறார்கள். இந்தத் துறையிலே எடுக்க வேண்டிய மாற்றங்களைக் கூடுமான வரையில் அவ்வப்பொழுது எடுத்து வருகிறோம்.

கல்வியின் தரம் குறைந்து விட்டது என்கிறார்கள். அதிலே பல்வேறு கேள்விகள் எழுகின்றன. 20, 30 ஆண்டுகளுக்கு முன்னால் ஆங்கிலத்திலே இருந்த புலமை அம்மொழியில் பேசக்கூடிய ஆற்றல் இவற்றுடன் ஒப்பிட்டால் இன்று அதிலே சற்றுத் தரக் குறைவு ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. அதே நேரத்தில் 20, 25 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்துவந்த தமிழ் அறிவுடன் ஒப்பிட்டால் இப்போது தரம் உயர்ந்து இருக்கிறது என்றுதான் சொல்ல வேண்டும். ஆகவே தரம் எந்த வகையில் வீழ்ந்து விட்டது என்பது வினாவாக இருக்கின்றது. தரம்



உடையவர்கள் வளரவில்லை என்று நாம் மதிப்பிட்டுவிட முடியாது. 100-க்கு 75 பேர் தரம் உடையவர்கள். இது பரவலான முறையில் இல்லை என்று கூறப்படுகிறது. 25 சத விகிதம் உயர்கின்ற அளவுக்கு சாத்தியக்கூறுகள் இருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.

இந்தியாவிலே 20, 30 ஆண்டுகளுக்குள் மாற்றங்கள் ஏற்படவில்லை என்று யாரும் சொல்லிவிட முடியாது. இந்த நாட்டிலே படித்தவர்களை வைத்துக் கொண்டுதான் கல்பாக்கம் அணு மின்சார நிலையம் ஏற்படுத்தி இருக்கிறோம். உலகத்திலே ஆறுவது நாடாக அணுகுண்டு தயாரித்த நாடாக நம்நாடு இருந்து வருகிறது.

[பிற்பகல் 1.00]

அண்மையில் இரண்டாண்டு காலத்திற்கு முன்பு டில்லியில் நடைபெற்ற அகில ஆசிய பொருட்காட்சியில் பல்வேறு மாநிலங்களிலிருந்தும் வந்த பொருட்கள் வைக்கப்பட்டன. 20 ஆண்டு காலத்திற்கு முன்பு வைக்கப்பட்ட பொருட்களை விட இவை பல்வேறு வகைகளில் மாறுபட்டு முன்னேற்றமடைந்திருந்ததைக் காண முடிந்தது. எல்லா மாநிலங்களிலிருந்தும் வந்த தொழில் துறைக் கருவிகள், அறிவியல் கருவிகள், பொறியியல் கருவிகள், உற்பத்தித் துறையில் பயன்படுத்தப்படும் பல்வேறு கருவிகள் எல்லாம் பார்வையிடப்பட்ட போது, இந்தியா எந்த அளவுக்கு இன்றைக்கு முன்னேறியிருக்கிறது என்பதை எல்லோரும் கண்கூடாகக் காண முடிந்தது.

ஆக, நம் நாடு முன்னேறவில்லை; நாம் முன்னேறவில்லை என்று சொல்ல முடியாது; ஆனால் நாம் எதிர்பார்க்கின்ற அளவுக்கு இன்னும் முன்னேறவில்லை. நாம் நூற்றுக்கு நூறு முன்னேற வேண்டுமென்று எதிர்பார்க்கிறோம். அந்த அளவுக்கு இன்னும் முன்னேறாமல் இருக்கலாமே தவிர முன்னேறவே இல்லை என்று சொல்ல முடியாது.

மாணவர்கள் எந்த அளவுக்குப் பயனடைந்திருக்கிறார்கள், அறிவாற்றலைப்பெற எந்த அளவுக்கு மாணவர்கள் முனைந்திருக்கிறார்கள், ஆசிரியர்கள் எந்த அளவுக்குப் ஒத்துழைப்புத் தந்துகொண்டிருக்கிறார்கள், பெற்றோர்கள் எந்த அளவுக்கு தங்கள் பிள்ளைகளின் படிப்பிலே அக்கறைப் படுகிறார்கள், கவலைப் படுகிறார்கள் என்பதை எல்லாம் இன்றைக்குப் பார்க்கிறோம். அந்த வகையிலே பல்வேறு வகைகளிலே கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கு, கல்வியை வளர்ப்பதற்கு நாம் வழிவகைகளைக் கண்டிருக்கிறோம்.

பள்ளிக் கல்வியைப் பொறுத்த வரையில் எந்த எந்த வகைகளிலே தரத்தை உயர்த்த முடியுமோ அந்தந்த வழிமுறைகளைக் கையாண்டு வருகிறோம். அதற்கான வழிமுறைகளைப் பல்வேறு முறைகளில் இந்த மன்றத்திலே வினாக்களுக்கு விடையளிக்கும் போது சொல்லியிருக்கிறேன்.

பல்வேறு புதிய பாடங்களை எல்லாம் இன்றையதினம் புகுத்தியிருக்கிறோம். அந்தவகையில் புகுத்தப்பட்ட புதிய கணக்கியல் முறையை ஆசிரியர்களால் எளிதில் சொல்லிக்கொடுக்க முடியவில்லை. ஆகவே, அதற்கென்று

ஆசிரியர்களுக்குத் தனிப் பயிற்சி அளிப்பதற்காக பணியிடைப் பயிற்சித்திட்டம் ஒன்றை உருவாக்கி, அதற்காக 50 லட்சம் ரூபாய்க்குமேல் செலவிடுகிறோம். இந்தத் திட்டத்தின் கீழ் சுமார் ஒரு லட்சம் கணிதம், அறிவியல் ஆசிரியர்களுக்கு பணியிடை பயிற்சி அளித்திருக்கிறோம். அறிவியலிலும் கணிதவியலிலும் புதிய முறைகளைப் புகுத்தி, தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகவே கடந்த 2, 3 ஆண்டுகளாக இந்த முறையை ஏற்படுத்தியிருக்கிறோம்.

ஒன்று முதல் ஏழாம் வகுப்பு வரையில் பல்வேறு பாடத் திட்டங்களை, நாட்டுக்கேற்ற கருத்துக்களைப் புகுத்த வேண்டுமென்ற அடிப்படையில் புகுத்தியிருக்கிறோம். அதைப்போலவே 8, 9, 10 வகுப்புகளில் சில பல பாடத் திட்டங்களைப் புகுத்தியிருக்கிறோம். இவை எல்லாம் கல்வியின் தரத்தை உயர்த்த வேண்டுமென்பதற்காகத்தான் செய்திருக்கிறோம்.

அறிவியல் கருவிகள் வாங்க தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு 300 ரூபாயும், உயர் தொடக்கப் பள்ளிக்கு 1,000 ரூபாயும் மானியமாக அளிக்கப்படுகிறது. தொடக்கக் கல்வியிலிருந்தே அறிவியல் கருவிகளைப் பயன்படுத்தி, அறிவியல் கல்வியைப் பெற்றுக்கொண்டால் மாணவர்கள் கல்லூரிகளுக்குச் செல்லும்போதும் தொழில் கல்வி பயிற்சி பெறும்போதும் பெரும் பயனடைவார்கள் என்ற காரணத்தால் இந்த ஏற்பாட்டைச் செய்திருக்கிறோம். அந்தவகையில் இதுவரை 12,720 தொடக்கப் பள்ளிகளும், 3,334 உயர் தொடக்கப் பள்ளிகளும் இந்த 300 ரூபாய் வீதமும் 1,000 ரூபாய் வீதமும் பெற்று பயனடைந்திருக்கின்றன.

அதுமட்டுமல்ல, அறிவியல் ஆய்வுக்கூடம் கட்ட அரசாங்கமே முழு மானியம் தந்துவருகிறது. அரசாங்கப் பள்ளிகளாக இருந்தால் 40,000 ரூபாய் மானியமும் தனியார் பள்ளிகளாக இருந்தால் 30,000 ரூபாய் —10,000 ரூபாய் அவர்கள் தரவேண்டும்—மானியமும் தந்து கொண்டிருக்கிறோம். அந்த வகையில் இதுவரையில் 867 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 40,000 ரூபாய் வீதம் மானியத் தொகை அளித்து அறிவியல் ஆய்வுக் கூடங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறோம். இந்த மானியத் தொகையும் 1974–75-லிருந்து 55,000 ரூபாயாகத் தரப்படுகிறது. கட்டடத்துக்கு 37,000 ரூபாய், அறிவியல் கருவிகளுக்கு 18,000 ரூபாய்—ஆக 55,000 ரூபாய் மானியமாகத்தரப்படுகிறது.

கிராமப்புறங்களில் உள்ள பல பள்ளிகளில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் உடனடியாக ஏற்படுத்த வசதி இல்லாவிட்டாலும், அந்தப் பள்ளிகள் எல்லாம் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் வரும்வரை காத்திருக்காமல் ஒவ்வொரு கல்வி மாவட்டத்திற்கும் ஒரு இயங்கும் அறிவியல் ஆய்வுக் கூடம் ஏற்படுத்தி, சீரிய முறையில் செயல்படுத்தக் கருதியுள்ளோம். அந்த வகையில் 15 உயர்நிலைப் பள்ளிகளுக்கு ஒரு இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூடம் என்று வைத்து, மாதத்திற்கு இரண்டு தடவை அந்தக் குறிப்பிட்ட பள்ளிகளுக்கு அறிவியல் இயங்கும் ஊர்தி சென்று வரவும், அந்தக் கருவிகளைப் பயன்படுத்தி ஆசிரியர்கள் பாடங்கள் போதிப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிட்டதட்டத் 17 கல்வி மாவட்டங்களுக்கு இப்போது அறிவியல் ஆய்வுக் கூடங்கள் தந்திருக்கிறோம். விரைவிலே மேலும் 8 இயங்கும் அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் வர இருக்



கின்றன. அடுத்தாண்டு பட்ஜெட்டிலே மேலும் 5 இயங்கும் ஆய்வுக் கூட ஊர்திகள் வாங்க முயற்சிகள் எடுத்திருக்கிறோம். ஆக 30 அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் செயல்படும் நிலைமை விரைவில் ஏற்படும். அதோடு நின்றுவிடாமல் படிப்படியாக 48 கல்வி மாவட்டங்களிலும் இந்த அறிவியல் ஆய்வுக்கூட ஊர்திகள் வாங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

யூனிசெப் உதவி பெற்று அறிவியல் கருவிகள் வாங்க வேண்டுமென்று முடிவு செய்து, அவர்களைக் கேட்டோம். அவர்கள் 1,550 தொடக்கப் பள்ளிகளுக்கு 3 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அறிவியல் கருவிகளும், 1,800 உயர் தொடக்கப்பள்ளிகளுக்கு 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள அறிவியல் கருவிகளும் வழங்கியிருக்கிறார்கள். இந்த அறிவியல் கருவிகளைப் பெற்றுக்கொண்ட பள்ளிகளில் அறிவியல் பயிற்றும் பி.டி. ஆசிரியர்கள் 5,150 பேருக்கு 10 லட்சம் ரூபாய் செலவில் பயிற்சி அளித்து, மாணவர்களையும் ஆசிரியர்களையும் ஊக்குவிக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, மாணவர்கள் படிக்கின்ற நேரத்திலேயே அவர்களுக்கு வேலைவாய்ப்பு பயிற்சி அளிக்கும் வகையில் (ஜாப் ஓரியன்டட் கோர்ஸ்) 2,800 உயர்நிலைப் பள்ளிகளில் பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. படிப்படியாக மேலும் சில பல பள்ளிகளில் இத்திட்டத்தைக் கொண்டுவர ஏற்பாடுகள் செய்துக்கொண்டிருக்கிறோம்.

வசதி வாய்ப்புள்ள சில பல உயர்நிலைப் பள்ளிகளை "முழு நிறைவுள்ள உயர்நிலைப் பள்ளிகளாக (காம்பிரிஹென்சிவ் ஹைஸ்கூல்ஸ்)" ஆக்கும் முயற்சியில் பாடங்களைச் சென்ற ஆண்டுமுதல் புகுத்தியிருக்கிறோம். 296 பள்ளிகளில் தட்டச்சு வகுப்பும், 96 பள்ளிகளில் வேளாண்மை வகுப்பும் நடத்தப்படுகிறது. மேலும் 208 உயர்நிலைப் பள்ளிகளில் பொறியில் விருப்பப்பாடமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. 11 பள்ளிகளில் ரேடியோ பொறியியல் (ரேடியோ எஞ்சினீயரிங்), மின்சார இயக்கிகள் பின்னுதல் (எலக்ட்ரிக்கல் மோட்டார் வைன்டிங்) விருப்பப்பாடமாகச் சொல்லிக்கொடுக்கப்படுகிறது. 5 உயர்நிலைப் பள்ளிகளில் மோட்டார் கார் மெக்கானிக் பயிற்சி வகுப்புகள் (மோட்டார் மெக்கானிக் கோர்ஸ்) நடத்தப்படுகின்றன. 3 உயர்நிலைப் பள்ளிகளில் வேளாண்மை பொறியியல் பயிற்சி (அக்ரிகல்சுரல் எஞ்சினீயரிங் கோர்ஸ்) தொடங்கியிருக்கிறோம். வேறு சில பல பள்ளிகளிலும் இப்படிப்பட்ட பயிற்சிகளைக் கொண்டுவர வேண்டுமென்று எண்ணம் இருக்கிறது. உயர்நிலைப் பள்ளிகள் மட்டுமல்லாமல் இதுபோன்ற பயிற்சிகளைத் தொடக்கப்பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் கொண்டுவர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கட்டாயக் கல்வி இருக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். நம்முடைய அரசியல் சட்டத்தின்படி கூடக் கட்டாயக் கல்வி தரவேண்டுமென்று இருக்கிறது. அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி 1 முதல் 8 வகுப்பு வரை கட்டாயக் கல்வி தரவேண்டும்; நாம் 1 முதல் 5 வகுப்புவரையில் கட்டாயக் கல்வி தரவேண்டுமென்று முயற்சி செய்திருக்கிறோம். கட்டாயமாகத் தங்கள் பிள்ளைகளைப் பள்ளிக்கு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] 1975 மார்ச் 21

அனுப்பாமல் இருந்தால் அந்தப் பெற்றோர்கள்மீது வழக்குத் தொடர்ந்து சிறைக்கு அனுப்பலாம் என்று சட்டம் கூட போட்டிருக்கிறோம். ஆனால் யாரைப் பிடிப்பது, யாரை அனுப்புவது என்பதுதான் கேள்வி.

கட்டாயக் கல்வியின் மூலம் நாம் ஏறத்தாழ 90 சதவிகிதம் பிள்ளைகளைப் பள்ளிகளில் சேர்த்து படிக்கச் செய்திருக்கிறோம். மற்றவர்களையும் கொண்டு வந்து சேர்க்கும் முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல்வேறு பாடத் திட்டங்களை கொண்டுவந்து, புகுமுக வகுப்பு, பட்டப்படிப்பு, பட்ட மேல் படிப்பு, பட்டயப் படிப்பு போன்றவைகளில் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் வேலைக்குப் பயன்படும் பிரிவுகளை எல்லாம் பல்கலைக் கழகத்தில் புகுத்தி, எந்தெந்தக் கல்லூரிகளில் வாய்ப்பு இருக்கிறதோ அங்கே பயிற்றுவிக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. அந்த வகையில் புதிதாக 8 பாடங்கள் பி.ஏ., பி.எஸ்ஸி. பட்டப் படிப்புக்கு புகுத்தப் பட்டிருக்கின்றன. பி.ஏ.யில் Book Industry, Public Relations, Tourism, Corporate Secretaryship.

என்ற பாடங்களையும், பி.எஸ்ஸியில்

Nutrition and Dietitics, Child, Family and Social Welfare, Food Preservation, Interior Design and Environment

என்ற பாடங்களையும் புகுத்தியிருக்கிறோம்.

அதேமாதிரி கல்லூரி ஆசிரியர்கள் நியமனம் செய்யும்போது, எம்.ஏ., எம்.எஸ்ஸி. போன்ற பட்ட மேல் படிப்பு படித்தவர்களைத்தான் நியமனம் செய்கிறோம். பி.ஏ., பி.எஸ்ஸி. போன்ற பட்டப் படிப்பு படித்தவர்கள் இப்போது கல்லூரி ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுவதில்லை. கல்லூரி ஆசிரியர்களில் டாக்டர் பட்டம் பெற்றவர்களுக்கு ஊக்க உதவித் தொகையாக 100 ரூபாய் அளிக்கப்படுகிறது. அதனால் மேலும் பல்வேறு கல்லூரி ஆசிரியர்கள் டாக்டர் பட்டம் பெற முயற்சி எடுத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது.

அதுமட்டுமல்லாமல் வெளிநாடுகளிலிருந்து வரும் பேராசிரியர்களைக் கொண்டு சிறப்புப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றும் இப்போது இருக்கிறது. அமெரிக்கா, ஜெர்மனி மற்றும் ஐரோப்பிய நாடுகளில் 10 ஆணடு, 15 ஆண்டு காலம் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டிருந்தவர்கள் இந்திய நாட்டுக்கு வரும்போது அவர்களுடைய திறமையைப் பயன் படுத்தி, கல்வியின் தரத்தை மேம்படுத்தும் முறையை இப்போது மேற்கொண்டிருக்கிறோம். அப்படி வருகின்றவர்கள் பெரும் பேராசிரியர்களாக இருந்தால் அவர்களுக்கு மாதம் 1,800 ரூபாய் சம்பளம் கொடுத்து, அவர்கள் 6 மாதம் அல்லது ஓராண்டு காலம் இங்கே தங்கியிருந்து தங்களுடைய அறிவை, ஆற்றலை, திறமையைத் தரவேண்டுமென்ற அடிப்படையில் நாம் பல்வேறு முயற்சிகளைச் செய்திருக்கிறோம்.

அது தவிர, "மாநில ஆசிரியர் கல்விக் கழகம் (ஸ்டேட் போர்டு ஆஃப் டீச்சர் எஜூகேஷன்)" என்ற ஒரு கழகத்தை ஆரம்பித்து, ஆசிரியர்களின் தரத்தை உயர்த்தி, அந்த ஆசிரியர்களை அடிமட்டத்தி



1975 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

லிருந்து கல்லூரிவரை எந்த அடிப்படையில் நியமிப்பது என்பதற்காக யோசனையைச் சொல்ல வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்களின் அறிக்கை விரைவில் எதிர்பார்க்கப்படுகிறது.

தொழில் நுட்பக் கல்லூரிகளிலும் பல்வேறு பயிற்சி முறைகளைக் கொண்டுவரும் தன்மையில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். ஏற்கனவே 1966-67இல் "பாச்சலர்ஸ் டிகிரி கோர்ஸ் (ஃபுல் டைம், பார்ட் டைம்), போஸ்ட் கிராஜூவேட் டிகிரி கோர்ஸ், போஸ்ட் கிராஜூவேட் டிப்ளமா கோர்ஸ்" என்று 19 பிரிவுகள் பொறியியல் கல்லூரிகளில் இருந்தன. 1974ஆம் ஆண்டில் 26 பிரிவுகளாகி இருக்கின்றன. 1974-75 ஆம் ஆண்டில் அது 45 பிரிவுகளாக உயர்த்தப்பட்டு, பல்வேறு கோர்ஸ்களை தொழில் நுட்பக் கல்லூரிகளில் சொல்லிக்கொடுக்கின்ற வாய்ப்பினை நாம் ஏற்படுத்திக்கொடுத்திருக்கிறோம்.

1975-76 ஆம் ஆண்டில் பட்டப்படிப்பு—பாச்சிலர்ஸ் டிக்ரி—டெக்ஸ்டைல் டெக்னாலஜி (சாண்ட்விச்) கோர்சை மதுரை தியாகராஜா காலேஜ் ஆப் என்ஜினியரிங்கில் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம். வேறு எந்தப் பொறியியல் கல்லூரியிலும் இல்லாமல் இங்கேதான் இது முதன் முறையாக மேற்கொள்ளப்பட இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

போஸ்ட் க்ராஜுவேட் டிகிரி கோர்சில்—மேல் பட்டப் படிப்பில்—கம்ப்யூட்டர் சயன்ஸ் என்ற ஒரு பிரிவையும், அப்ளைய்டு சயன்ஸ்—மாதமாடிக்ஸ்—என்ற ஒரு பிரிவையும் கிண்டி என்ஜினியரிங் காலேஜில் கொண்டு வரவும் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறோம்.

போஸ்ட் க்ராஜீவேட் டிப்ளோமா கோர்சில்—மேல் பட்டப்படிப்பு டிப்ளமா கோர்சில்—ஆப்பரேஷன்ஸ் ரிசர்ச் என்ற ஒரு பிரிவை கிண்டி என்ஜினியரிங் கல்லூரியில் கொண்டுவர நாம் முயற்சியை மேற்கொண்டிருக்கிறோம்.

பாலிடெக்னிக்ஸைப் பொறுத்த வரையில் 1966–67 இல் 34 கோர்சுகள் இருந்தன என்றால் 1974–75 வரையில் கிட்டத்தட்ட 84 கோர்சுகள் வரை விரிவுப்படுத்தியிருக்கிறோம்.

மேலும்—தொலைக்காட்சி வர இருப்பதற்கு உதவியாக—டெலிவிஷன் என்ஜினியரிங் என்ற ஒரு புதுப் பிரிவையும் பாலிடெக்னிகில் 1975-76 இல் கொண்டுவருவதற்கு உத்தேசித்து இருக்கிறோம். இதோடு டானரி ஆப்பரேஷன் என்ற ஒரு புதுப் பிரிவையும் கொண்டு வருவதற்கான முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல் பாலிடெக்னிகில் படிக்கிற மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்கள் இல்லாமல் இருக்கிறது. இந்தியாவில் எந்தப் பாலிடெக்னிகிலும் பாடப் புத்தகங்கள் இல்லை. பேராசிரியர்கள் கொடுக்கிற குறிப்புகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் படித்து பரீட்சை எழுதி வேண்டியதாக இருந்து வருகிறது. பாலிடெக்னிக்கிலும் பாட புத்தகங்களை

வைத்துவிடுவோமானால் அவை மாணவர்களுக்கு மிகவும் துணையாக இருக்கும் என்று கருதி—அடுத்த ஆண்டில் இருந்து—பாடப் புத்தகங்களை முறையாக உருவாக்கிக் கொடுப்பதற்கு வேண்டிய எல்லா முயற்சிகளிலும் தொழில் நுட்பக் கல்வித்துறை ஈடுபட்டிருப்பதை நான் இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

கல்லூரிகளைப் பொறுத்தவரையில் பல உறுப்பினர்கள் பேசும்போது மேலும் பல கல்லூரிகள் வேண்டுமென்று எடுத்துககாட்டினார்கள். இப்போது இருக்கிற கல்லூரிகளுக்குத் தேவையான கட்டிடங்கள் கட்டப்பட வேண்டும் என்பதையும் சொன்னார்கள்‘ 1966-67இல் தமிழகத்தில் 105 கலைக்கல்லூரிகள் இருந்தன என்றால் 1974-75 இல் 183 கலைக்கல்லூரிகள் இருக்கின்றன. ஒரு பக்கம் வளர்ந்து வருகிற தேவைக்கு ஏற்ப மேலும் பலயிடங்களில் கல்லூரிகளை ஏற்படுத்துவது அவசியம் என்று உணர்கிறோம், என்றாலும் இதுவரை நாம் ஏற்படுத்தியிருக்கிற கல்லூரிகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்டி இவற்றை ஸ்டபிலைஸ் பண்ணிக்கொண்டாக வேண்டும் என்பதையும் உணர்கிறோம்.

இருக்கிற கல்லூரிகளுக்குத் தேவையான கட்டிடங்களைக் கட்ட வேண்டுமென்றாலும் புதியதாக கல்லூரிகளை ஏற்படுத்த வேண்டுமென்றாலும், அதே சமயத்தில் புதிய புதிய பாடப் பிரிவுகளை ஏற்படுத்தி கல்வியின் தரத்தை மேம்படுத்த வேண்டுமென்றாலும்—இந்த மூன்றுக்குமே அதிகச் செலவாகும்.

கல்வி வசதியைப் பரவலாக்க வேண்டியிருக்கிறது. கல்வியைப் பரவலாக்குவதில் மட்டும் நாம் கவனம் செலுத்தினால் க்வாலிடி ஆப் எஜூகேஷன் பாதிக்கப்பட்டுவிடும். இதையும் நாம் கருத்தில் கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இன்றைக்கு நமது மாநிலத்தில் 183 கலைக்கல்லூரிகள் இருக்கின்றன என்றால் இவற்றுக்கான கட்டிடம் கட்டுவதற்கு, விடுதிகள் அமைத்துக் கொடுப்பதற்கு, ஏராளமான தொகை தேவைப்படுகிறது. நாம் ஏற்படுத்தியிருக்கிற இந்தக் கலைக்கல்லூரிகளில் ஆண்டுக்கு ஆண்டு புது கோர்சுகளைக் கொண்டுவருவதன் மூலம்—அந்தந்த கோர்சுகளுக்கேற்ற கட்டிடங்கள் தேவைப்படுகின்றன. இவற்றை எல்லாம் முறையாக—அரசுக் கல்லூரிகளுக்கு கட்டிடம் கட்ட—விடுதிகள் கட்ட—அறிவியல் பகுதி—கலைப்பகுதி போன்றவற்றைக் கட்ட மட்டும் கிட்டத்தட்ட ரூ. 12·50 இலட்சம் தேவைப்படுகிறது. ஆகவே நாம் இதுவரை ஏற்படுத்தியிருக்கிற கல்லூரிகள் நல்லமுறையில் செயல்பட—அவற்றை ஸ்டபிலைஸ் பண்ணிக் கொள்வதற்கு வேண்டிய காரியங்களில் இந்த ஆண்டு கவனம் செலுத்தினால் போதும், இந்த ஆண்டு புதியதாக எங்கும் கலைக்கல்லூரியை ஏற்படுத்துவதில் கவனம் செலுத்த வேண்டாம் என்ற அளவுக்கு முடிவு செய்யப்பட்டு வரவு செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கிறது.

இன்னும் மாண்புமிகு உறுப்பினர்கள் பேசும்போது ஆங்காங்குள்ள பல துவக்கப்பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லை என்று குறிப்பிட்டார்கள். பல ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கும் கட்டிடம் இல்லை என்று குறிப்



பிட்டார்கள். இந்தத் துவக்கப்பள்ளிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் ஆகியவற்றுக்குக் கட்டிட வசதியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்றால் கிட்டத்தட்ட 11 கோடி ரூபாய் இருந்தால்தான் அந்த வேலைகளை நிறைவேற்ற முடியும். இந்தச் செலவை மேற்கொள்ள ஊராட்சி ஒன்றியங்களின் நிதி நிலையோ, அரசாங்கத்தின் நிதி நிலையோ இடம் தரவில்லை. ஆயுள் காப்புறுதிக் கழகத்திடம் இருந்து நிதி உதவியைப் பெறுவதற்கு இதற்காக தனியாக ஒரு வாரியத்தை ஏற்படுத்தலாம் என்று யோசிக்கப்பட்டது. இதைப்போல வாரியம் என்று அமைத்துக்கொண்டால் அவர்களிடம் இருந்து நிதி உதவி கிடைக்குமா என்று கலந்தாலோசிக்கப்பட்டு—இதற்கு அவர்கள் சரியான முறையில் உதவி செய்ய முன்வராத காரணமாக—இது சம்பந்தமாக நாம் எதையும் செய்ய முடியவில்லை.

நமது மாநிலத்தில் இருக்கிற கல்லூரிகளை எடுத்துக்கொண்டால் நகர்ப்புறங்களில் இருக்கிற கல்லூரிகளில் இட நெருக்கடி இருப்பதை உணர்கிறோம். இவற்றில் மாணவர்கள் அதிகமாகச் சேர விரும்புகிறார்கள். பிற இடங்களில் உள்ள கல்லூரிகளில் மாணவர்கள் சேருவதற்கு அதிகம் விரும்புவதில்லை. 1974-75ஆம் ஆண்டு புகுமுக வகுப்பில் மட்டும் மொத்தமுள்ள 183 கல்லூரிகளுக்கும் அனுமதிக்கப்பட்ட இடங்கள் எவ்வளவு, மாணவர்கள் சேர்ந்த இடங்கள் எவ்வளவு என்று பார்க்கிறபோது, புகுமுக வகுப்பில் மொத்தம் காலியாக உள்ள இடங்கள் 14,728 ஆகும். இதைப்போல 1974-75இல் பட்டப் படிப்பு முதல் வகுப்பில் காலியாக உள்ள மொத்த இடங்கள் 9,562 ஆகும்.

இப்படி நாம் ஏற்படுத்தியுள்ள கலைக் கல்லூரிகளிலேயே புகுமுக வகுப்பாக இருந்தாலும் சரி, பட்டப்படிப்பு முதல் வகுப்பிலும் சரி ஆயிரக்கணக்கான இடங்கள் காலியாக இருக்கின்றன என்றால் புதியதாக மேலும் கலைக்கல்லூரிகளை ஏற்படுத்துவதற்கு முன்—இதையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு ஆராய்ந்தாகவேண்டியவர்களாக இருக்கிறோம்.

டாக்டர் எச். வி. ஹாண்டே: இப்படி ஆயிரக்கணக்கான இடங்கள் காலியாக இருப்பதற்கு என்ன காரணம் என்பதைக் கண்டுபிடித்தாக வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பாகும். என்னைப் பொறுத்தவரை ஒன்றைத் தெரிவித்துக்கொள்வேன். பி.யு.சி. யில் ப்ரீ எஜூகேஷன் என்று பெயர் இருக்கிறதே தவிர மாணவர்களைச் சேர்க்கும்போது 200, 300 ரூபாய் என்று எல்லாக் கல்லூரிகளிலும் மொத்தமாக மிகுந்த அதிகத் தொகையைக் கட்டாயப் படுத்தி வாங்குகிறார்கள் என்று சொல்லப்படுகிறது. அது உண்மையாகவும் இருக்கிறது. In practice there is no free education. இதை நிவர்த்தி செய்தாலேயே இந்தக் காலியிடங்களைப் பூர்த்தி செய்ய வாய்ப்பாக இருக்கும். டொனேஷன் என்று எல்லாக் கல்லூரிகளிலுமே ஆரம்பத்தில் கேட்பது மிக பயங்கரமான பிரச்சனையாகி வருகிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி: பி.யு.சி.இல் 14,728 இடங்கள் காலியாக இருக்கின்றன என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மாணவர்கள் பல கல்லூரிகளுக்கு அப்ளிகேஷன் போடுகிறார்கள். எங்கே இடம் காலியாக இருக்கிறது. என்பது அவர்களுக்குத் தெரிவதே இல்லை. செகண்டுக்ரூப்-க்குப் போட்டு ரிஜெக்ட் பண்ணுகிற கல்லூரிகளில் இருந்தாவது

[திருமதி த. ந. அனந்தநாயகி] [1975 மார்ச் 21

அந்த அப்ளிகேஷனகள் காலியாக இருக்கிற கல்லூரிகளுக்கு மாற்றி அனுப்பப்படவேண்டும். எந்தெந்தக் கல்லூரிகளில் இடம் இருக்கின்றன எனபதையாவது—நாம் எது எதற்கோ பெரிய அளவில் விளம்பரங்கள் செய்துகொண்டிருக்கிறோம்—இவற்றையாவது முறையான வகையில் வரு கிற ஜூன் முதலாவது விளம்பரம் செய்ய ஏற்பாடு செய்வார்களா?

திரு. க. உரொ. எட்மண்ட்: தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்கள் புகுமுக வகுப்பில் நிறைய இடங்கள் காலியாக இருக்கின்றன என்று சொனனார்கள். அரசாங்கம் நடத்துகிற கல்லூரிகளில் இதுபோல இடங்கள் காலியாக இருக்கின்றனவா? தனியார் நடத்துகிற கல்லூரிகளிலும் இடங்கள் காலியாக இருக்கின்றனவா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தனியார் கல்லூரிகளில் மாணவர்களிடம் இருந்து அதிக அளவில் நன் கொடை என்று வாங்கப்படுவதாகச் சொன்னார்கள். அப்படிக் கொடுப்பவர்கள் யாரும் குற்றச்சாட்டாக எழுதித் தருவதில்லை. அவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொள்ள சட்டப்படி எந்த இடமும் இல்லை. நாம் அதுபோல நன்கொடைகள் வாங்கக்கூடாது என்று சொல்லியிருக் கிறோம். அட்மிஷன காலத்தில் மூன்று மாதம் முன்பும், மூன்று மாதம் பின்பும் நனகொடை வாங்கக் கூடாது என்றும் சொல்லியிருக் கிறோம். வாங்குகிற பணம் கணக்கில் கொண்டுவரப்படவேண்டும் என்றும் சொல்லியிருக்கிறோம். முன் அனுமதி பெற்றே வாங்க வேண்டும் எனறும் விதிகள் எல்லாம் இருக்கின்றன. ஆகவே அது மட்டுமல்ல காரணம்.

மேலும் 1974–75ஐ எடுத்துக்கொண்டால் அரசுக் கல்லூரிகளில் தமிழ் பயிற்றுமொழிப்பிரிவில் புகுமுக வகுப்பில் 3,133 இடங்கள் காலியாக இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில் 1,374 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவை எடுத்துக்கொண்டால் அரசுக் கல்லூரிகளில் 2976 இடங்கள் காலியாக இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில் 7,245 இடங்கள் காலியாக இருக்கின்றன.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: பல கல்லூரிகளில் புகுமுக வகுப்பில் சீட்டுகள் நிறைவுபடாமல் இருப்பதைப்பற்றி அமைச்சர் அவர்கள் சொன் னார்கள். அதுபோல இடம் காலியாக இருக்கிற கல்லூரிகளுக்கு மாணவர் கள் போகிறபோது அப்ளிகேஷன் போடாத காரணத்தினால் சிலரை எடுத்துக் கொள்ள இயலாது என்று சொல்லிவிட்டதாகத் தகவல் கிடைத்தது. ஏற்கனவே அப்ளிகேஷன் போட்ட கல்லூரிகளில் இருந்து இவர்களுக்கு ரிஜெக்ட் கார்டை அனுப்பிவிட்டதோடு, இவர்களது அப்ளிகேஷனை இடம் காலியாக உள்ள கல்லூரிக்கு பார்வேட் செய்யவும் முடியாது என்று மறுத்திருக்கிறார்கள். இதுபோல இல்லாது காலியாக உள்ள கல்லூரி களுக்கு இவர்கள் ரிஜெக்ட் செய்கிற அப்ளிகேஷனையாவது அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பார்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, அப்படி இடங்கள் காலியிருக்கிற கல்லூரிகளிலே விளம்பரப்படுத்த வேண்டு மென்றுதான், அங்கங்கே இருக்கிற பொது இடங்களிலும், மாவட்ட ஆட்சி



1975 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யர்கள், மற்றும் பொதுவாக விளம்பரப்படுத்துகின்ற இடங்களில் விளம் பரம் செய்யச் சொன்னோம். கடந்த ஆண்டு, வானொலி மூலமாக கூடச் சொல்லச் சொன்னோம். அவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டுமென்று சொன்னோம். பல்கலைக் கழகத்தினர் விண்ணப்பம் வாங்க ஒரு குறிப்பிட்ட நாள் வைத்திருக்கிறார்கள். பல்கலைக் கழகம் ஜூலை மாதம் 15-ம் தேதிக்குள் விண்ணப்பங்களைச் சேர்க்க வேண்டுமென்று சொல்லு கிறார்கள். நாம் 15 நாள் கேட்டு, 31-ம் தேதி வரையெனறு மாற்றச் செய்தோம். இன்னும் 15 நாள் கேட்டு, அதற்குப் பிறகு, நாளை வைத்தால், டெர்ம் டேஸ் இருக்காது, அட்டென்டன்ஸ் குறையும் என்ற முறையில், அதைப் பல்கலைக்கழகம் மாற்ற இயலவில்லை. அங்கே, எந்த எந்த இடங்கள் காலியாக இருக்கின்றன என்பதனைக் கூடத் தெரிவிக் கிறோம்.

செங்கற்பட்டு அரசினர் ஆண்கள் கல்லூரியில் தமிழ்ப் பயிற்சிமொழி வகுப்புகளில் 72 இடங்கள் புகுமுக வகுப்பில் காலியாக இருக்கின்றன. ஆங்கிலப் பயிற்சி மொழியில் 168 இடங்கள் புகுமுக வகுப்பில் காலியாக இருக்கின்றன. எதற்கு இதைச் சொல்லுகிறேன் எனறால், புதிய கல்லூரிகளுக்கு அவசியமில்லை. இருக்கிற இடங்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். அதற்கான வாய்ப்பு வசதிகளைப் பெருக்க வேண்டுமென் பதற்குத்தான் அதற்கு எல்லோரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். எல்லா கல்லூரிகளிலும் எவ்வளவு இடங்கள் காலியாயிருக்கினறன. என்ற புள்ளி விவரங்களை வைத்திருக்கிறேன். நகர்ப்புறங்களில், செங்கற் பட்டு, பொன்னேரி, திருத்தணி, வாலாசாப்பேட்டை, நாமக்கல், திருப்பூர், கரூர், மேலூர், திருநெல்வேலி, ஈரோடு, தூத்துக்குடி, அரசாங்கக் கல்லூரிகளில் என்று மட்டும் கருதாதீர்கள். பச்சையப்பன் கல்லூரி, காஞ்சிபுரம்—ஆண்கள் பெண்கள் கல்லூரி இரண்டிலும்—அப்துல் ஹக்கீம் கல்லூரி, மேல்விஷாரம் ஆம்பூரில் உள்ள கல்லூரி, எமரால்டு கல்லூரி, நீலகிரி; காதர் மொய்தீன் கல்லூரி, அதிராம்பட்டிணம்; விவேகானந்தா கல்லூரி, சோழவந்தான்; ஆறுமுகம் பிள்ளை—சீதம்மாள் கல்லூரி, திருப்பத்தூர்—இவ்வளவு கல்லூரிகளிலும் இடங்கள் காலியாக இருக்கின் றன. முழுவதையும் சொல்ல நேரமில்லாமல், சிலவற்றை விடுகிறேன். பலரும் உதவி செய்யலாம் என்ற வகையில்தான், இவ்வளவு இடங்கள் காலியாயிருக்கின்றன என்று விளம்பரப்படுத்துகிறோம். அதைப் பயன்படுத்த முன் வரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம். டாக்டர் சர். சி.வி. இராமன் அவர்கள், புதிய புதிய வசதிகள் கிடைக்கவேண்டு மென்ற நிலையிலிருந்தாலும் ஏழ்மை நாட்டிலிருக்கிற வசதிகளைப் பயன் படுத்த முன வருவார்களேயானால் அதுவே சிறப்பாகும் என்று குறிப் பிட்டு இருக்கிறார்கள். இருக்கிற வசதிகளை எடுத்துக்கொள்கிற அள வுக்குச் செய்யவேண்டும். காலியான இடங்களைப் பற்றி, வானொலிக் கூடங்கள் கூட, இரண்டொரு முறை விளம்பரம் செய்தன. இன்னும் தீவிரமாகச் செய்ய வேண்டுமென்று நாம் சொல்லிக் கொண்டு வரு கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: அந்தந்தக் கல்லூரியே அதனைச் செய்யவேண்டும். எல்லா மாணவர்களுக்கும் எல்லா கல்லூரிகளுக்கும் மனுப்போடுவது சாத்தியமல்ல. எந்தெந்தக் கல்லூரியிலே இடம்

[திருமதி ஜோதி வெங்கடாசலம்] [1975 மார்ச் 21

இருக்கிறதோ, அந்தந்தக் கல்லூரி முதல்வர்களுக்கு, இடமில்லாத கல்லூரி முதல்வர்கள் மனுக்களை அனுப்பிவிட்டால் சௌகரியமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, சென்ற ஆண்டு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்களால் கல்லூரிகளுக்கு எழுதி, விளம்பரப்படுத்தி உதவி செய்யமுடியுமா என்று பார்க்கவேண்டுமென்று கூட நாம் குறிப்பிட்டிருக்கிறோம். அதை மிகத் தீவிரமாக, வருகின்ற ஆண்டிலே நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

10—2—3 ஆண்டுகளைப் புகுத்துவதைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் கருத்துத் தெரிவித்துள்ளார்கள். அதற்காகக் கல்வி துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்ட குழு அமைக்கப்பட்டு விரைவிலே அறிக்கை தரும்படியாகக் கேட்டுருக்கிறோம். 10—2—3 என்ற பிரிவை சில மாநிலங்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றன. பல மாநிலங்கள் அதை இன்னும் ஒப்புக்கொள்ளவில்லை. பல மாநிலங்களிலும், நாமும் 15 ஆண்டுகள் எனறு வைத்திருக்கிறோம். இப்பொழுது, இங்கு 11 ஆண்டு பள்ளிப் படிப்பு, புதுமுக வகுப்பு ஓராண்டு, பட்டப் படிப்பு 3 ஆண்டு என்ற அளவில் பல மாநிலங்கள் வைத்திருக்கின்றன. பலமாநிலங்கள் 14 ஆண்டுகள் வைத்திருக்கின்றன. கல்வியமைச்சர்கள் மாநாட்டிலே, எல்லா மாநிலங்களிலும் 10 ஆண்டுகள், 2 ஆண்டுகள், 3 ஆண்டுகள் என்ற முறை கொண்டு வரவேண்டுமென்று வற்புறுத்தப்பட்டிருக்கிறது. கல்வித் துறைச் செயலாளர், நிதித் துறை இணைச் செயலாளர், கல்வித் துறை இணைச் செயலாளர், சென்னைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், தொழில் நுட்பக் கல்வி இயக்குநர், பாடநூல் நிறுவன நிருவாக இயக்குநர், டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா, இளங்கோவன், எம்.எல்.ஏ., சங்கரலிங்கம், எம்.எல்.சி.,ஜி.ஆர்., தாமோதரன், ரெவ. குரியகோஸ், தேர்வு இயக்குநர் ஆகியோர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுது குழுவினர் ஆராய்ந்து, விரைவிலே அறிக்கை தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

அவர்கள் தரவேண்டியது, இப்படி மாற்ற எவ்வளவு செலவாகும்? இரண்டு ஆண்டு படிப்பைப் பள்ளிகளிலே சேர்த்து வைப்பதா? அல்லது கல்லூரிகளிலே சேர்த்து வைப்பதா? கல்லூரிகளிலே இருந்து பிரித்து எடுப்போமானால், பட்டப் படிப்பைச் சரி செய்ய வசதி ஏற்படுமா? உயர் நிலைப் பள்ளியிலே ஹையர் செகன்டரி ஸ்கூல் வைத்தால் சாதகம் ஏற்படுமா? என்பவற்றையெல்லாம் ஆராயவேண்டுமென்று அவர்களுக்குக் குறிக்கோள்களைத் தந்திருக்கிறோம். அவர்கள் விரைவிலே அறிக்கை தருவார்கள் என்று கூறவிரும்புகிறேன்.

திருமதி த.ந. அனந்தநாயகி: ஆன் எ பாய்ண்ட் ஆப் ஆர்டர். 10—2—3 என்று சொல்லுகிறபோது, சில மாநிலங்களிலே 14 வருஷங்கள் தான் வைத்திருக்கிறார்கள். அகில இந்திய அளவில் 15 வருஷங்கள் என்று வைப்பதற்காக, இந் அரசு ஏதாவது முயற்சி எடுத்திருக்கிறதா ?



1975 மார்ச் 21] [திருமதி த. ந. அனந்தநாயகி]

சில இடங்களில் 14 வருஷங்களில் பட்டம் வாங்குகிறார்கள். நீங்கள் 15 வருஷம் என்று வைத்திருக்கிறீர்கள். இப்பொழுதே, அடுத்த வருஷம் 10-வது வரையில் தானிருக்கும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். பி.யு.சியை ஹைஸ்கூலில் சேர்ப்பார்களா? காலேஜிலே சேர்ப்பார்களா என்று தெரியவில்லை என்று சொல்லிக்கொண்டிருக்கிறீர்கள். துரிதமாக நடவடிக்கை எடுத்தால் நல்லது. இல்லாவிட்டால், எதிர்காலம் பாதிக்கப்படும். இதனை அரசு தெரிவிக்குமா?

டாக்டர் எச்.வி. ஹாண்டே: இதுசம்பந்தமாக ஒன்றே ஒன்று. இப்பொழுது சென்ட்ரல் ஸ்கூல்ஸ் இருக்கின்றன. எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளியிலே—சென்ட்ரல் ஸ்கூலில் 14 ஆண்டுகள் படித்தாலே போதும்—கிராஜுவேஷனுக்குப் போகலாம்.

14 years' are sufficient for the students studying in the Central Schools and so, our students are at a disadvantage. Therefore, a national policy should be pursued and either the Central Government should fall in line with us or we should fall in line with them, so that our students will not be at a disadvantage when compared to others.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்தக் கருத்தைத்தான அகில இந்திய கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே, நான் தமிழகத்தின் சார்பாக வற்புறுத்தினேன். மாண்புமிகு உறுப்பினர் அனந்தநாயகி அவர்கள் குறிப்பிட்ட அந்தக் கருத்தைத்தான் நான் வற்புறுத்தினேன். பல மாநிலங்கள் வற்புறுத்தின. அதன்பேரில் நடவடிக்கை எடுக்கவேண்டியது மத்திய அரசுதான். 14 வருடங்கள் என்று வைத்திருக்கிற மாநிலங்கள் எதிர்க்கவில்லை. தாங்களும் 15 ஆண்டுகளுக்குள் வரவேண்டுமென்று, அவர்கள எடுத்துச் சொல்லுயிருக்கிறார்கள். 15 ஆண்டுகள் என்று கொண்டு வரவேண்டுமென்பதை எல்லோரும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். மத்திய அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது. எப்படி பிரிக்கவேண்டுமென்று சொல்லும்போது எல்லோரும் 10—2—3 என்று ஒத்துக்கொண்டார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் 11 ஆண்டு காலத்திலே சொல்லிக் கொடுத்த பாடங்களையெல்லாம் 10 ஆண்டு காலத்திலே சொல்லிக்கொடுத்தால் இந்த மாநிலத்து மாணவர்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய திறமை படைத்தவர்கள் என்ற அளவுக்கு இப்பொழுதே அதற்கான சூழ்நிலையை மேற்கொள்ளவேண்டுமென்று நாம் முயற்சியிலே ஈடுபட்டிருக்கிறோம். குழுவினது அறிக்கை வந்த பிறகு சில காலம் வேண்டும். அதனை 1975-76-லே கொண்டு வருகின்ற நிலைமையிருக்காது. ஓராண்டாவது கொடுத்தால்தான் முடியும். ஆகவே, 1976-77-லே கொண்டுவர முடியும்.

கல்வி நிதி ஆய்வுக் குழு என்று ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அதன் தலைவர். கல்வித் துறைச் செயலாளர், கல்லூரிக் கல்வி இயக்குநர், பள்ளிக் கல்வி இயக்குநர், நிதித் துறை இணைச் செயலாளர், திரு. ஜி.ஆர். தாமோதரன், தேர்வு இயக்குநர் ஆகியோரை உறுப்பினர்களாகக் கொண்டு அந்தக் குழு அமைக்கப்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1975 மார்ச் 21

பட்டுள்ளது. அதனுடைய நோக்கம் பற்றி பல கருத்துக்கள் வந்தன. எட்மண்ட் அவர்கள் கூடக் குறிப்பிட்டுக் காட்டினார்கள். கல்வித் துறைக்காக ஏராளமாகச் செலவழித்து வருகிறோம். நிதி ஆதாயங்களைக் கண்டறிந்து எதற்காகச் செலவழிப்பது நல்லது, எப்படி செலவழிப்பது நல்லது எனறு ஆராயவேண்டுமென்று பல உறுப்பினர்களும் எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். பல வல்லுநர்களும் அந்தத் கருத்தை எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். நீண்ட காலமாக அந்த ஆய்வு செய்யப்படவில்லை. போன ஆண்டுக் கணக்கைப் பார்த்து, அதோடு கூட்டிக்கொண்டிருக்கிறோமே தவிர, இந்த வகையில் ஆராயவில்லை.

ஆகவே, **Educational Finance Review Committee** என்று அதற்காக ஒரு குழுவைப் போட்டிருக்கிறோம். மாநிலத்தினுடைய எல்லா கல்வித் துறைகளைப் பற்றியும் தெரிந்து அறிந்திருப்பதன் காரணமாகத்தான் டாக்டர் மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் தலைமையிலே இந்தக் குழு அமைக்கப் பட்டிருக்கிறது.

அந்தக் குழுவின் நோக்கங்களாவன: பள்ளிக் கல்விக்காகவும், கல்லூரிக் கல்விக்காகவும் ஆகும் திட்டத்தில் வரும் செலவினங்களையும், திட்டத்தின் கீழ் இல்லாத செலவினங்களையும் ஆய்வு செய்தல். திட்டக் குறிக்கோள்களை நிறைவேற்றுவதில் இப்பொழுதுள்ள பொருள் நிலைகளை எவ்வளவு மிகச் சிறப்பாகவும், சிக்கனமாகவும், திறம்படவும் பயன் படுத்த இயலும் என்பதை ஆராய்ந்து பரிந்துரை செய்தல். குறிப்பாக இப்போதைய செலவு நிலையில் எவ்வெவ் வழிகளில் திறமான சிக்கனம் ஏற்படுத்த இயலும் என்பதையும், எதிர்கால வளர்ச்சிக்கு இப்பொழுதுள்ள பொருள் நிலைகளை எவ்வெவ் வழிகளில் முழு அளவிற்குப் பயன்படுத்த இயலும் எனபதையும் ஆராய்ந்து பரிந்துரை செய்தல் ஆகியவை டெர்ம்ஸ் ஆஃப் ரெஃபரன்ஸாகக் கொடுக்கப்பட்டுள்ளன.

(பிற்பகல் 1-30)

The Terms of Reference of the Committee will be —

"To review plan and non-plan expenditure on school and collegiatt education and to recommend the use of existing resources in the mose economical and efficient manner for achieving plan targets with particular reference to—

(*a*) the direction in which economies are possible at current levels of expenditure ; and

(*b*) the ways in which existing resources can be used to the fullest extent for future growth and expansion."

என்பதுதானே தவிர இலவசக் கல்வியை நீக்குவதற்காக அல்ல அந்தக் குழு அமைக்கப்பட்டதற்குக் காரணம்.....

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், மால்கம் ஆதிசேஷய்யா. . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் : அவையின் அனுமதியோடு அலுவல் நேரத்தை சற்று நீடித்துக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து குறுக்கீடுகளைக் கடைசியிலே வைத்துக்கொண்டால் அமைச்சர் அவர்கள் தொடர்ந்து பதில் சொல்வதற்கு வாய்ப்பு இருக்கும்.



1975 மார்ச் 21]

திருமதி த. ந. அனந்தநாயகி: மால்கம் ஆதிசேஷய்யா இந்தியாவிலேயே தமிழகம் தான் அதிகமாகக் கல்விக்குச் செலவு செய்கிறது என்று சொன்னவர், அவரைப் போய் போட்டிருக்கிறீர்கள், அவர் கிரிட்டிசைஸ் பண்ணினார் என்பதற்காகப் போட்டு இருக்கிறீர்களா? இப்படிச் சொன்ன வரை எதற்காகப் போட்டீர்கள்? உண்மையிலேயே நிலைமையைத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றுதான் போட்டீர்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மால்கம் ஆதிசேஷய்யா அவர்கள் யுனெஸ்கோவிலே நீண்ட நாட்களாக இருந்தவர்கள். உலகம் முழுவதும் சரி, அகில இந்தியாவும் சரி, தமிழகமும் சரி அவரை எவ்வளவு மதித்து இருக்கிறது என்பதை நாடு அறியும். மாண்புமிகு உறுப்பினர்தான் அவருடைய திறமையை மதிக்க மறுக்கிறார்கள். அவர் யுனெஸ்கோவிலே 20 ஆண்டுகாலம் பணியாற்றியவர், அதிலேயிருந்து, உலகத்தின் பல்வேறு கல்வி நிலைகளையும் அறிந்தவர். அது மட்டுமல்ல. இரண்டு காலம் திட்டக் குழுவின் தலைவராக இருந்தவர். நம் மாநிலத்தில், உள்ள கல்வி நிலையையும் நன்றாக அறிந்தவர். நம்முடைய மாநிலத்திற்காக 12 ஆண்டு திட்டத்தை கல்வித் துறைக்காகத் தந்திருக்கிறார், நாம் கொடுத்திருக்கிற டெர்ம்ஸ் ஆப் ரெபரன்ஸை நன்கு புரிந்துகொண்டு அறிக்கை தரும் ஆற்றல் படைத்தவர். இப்படியெல்லாம் அவருக்கு இருக்கிற அனுபவத்தை வைத்துக்கொண்டு அவரைப் பயன்படுத்தலாம் என்ற நோக்கத்தின் அடிப்படையிலேதான் அவரைப் போட்டு இருக்கிறோம். அவர்கள் அறிக்கை கொடுத்தால் அதைப்பற்றி ஆராய இந்த அரசுக்கு உரிமை இருக்கிறது. அதைப் பற்றிய கருத்துக்களைத் தெரிவிக்க இந்த அவைக்கு உரிமை இருக்கிறது. அதற்குப் பிறகு முடிவு எடுக்க நமக்கு வாய்ப்பு இருக்கிறது.

நிதி நிலைகளை ஆராயும்போது, அதிலே இரண்டுவிதக் கருத்துக்கள் இருக்கின்றன. அந்தக் குழுவைத் துவக்கி வைக்கிறபோது நான் சொன்ன கருத்து, இலவசக் கல்வி வேண்டும் என்பதுதான் அரசினுடைய நோக்கம். இலவசக் கல்வி ஏழை எளியவர்களுக்கு வேண்டும். இன்னொரு கருத்து, பணக்காரர்களுக்கு இலவசக் கல்வி கொடுக்கக் கூடாது என்ற கருத்தும் நிலவுகிறது. அது சரியா தவறா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று. அந்தக் குழுவைத் துவக்கி வைக்கிறபோது நான் சொன்னது, இப்படி ஒரு கருத்து இருக்கிறது. அப்படிப்பட்ட கருத்தை நாட்டிலே இல்லையென்று சொல்லிவிட முடியாது. ஏழை எளியவர்களுக்கு இலவசக் கல்வி வேண்டும், பணக்காரர்களுக்கு எதற்காக இலவசக் கல்வி ? வறுமையுள்ள நாட்டிலே, ஏழ்மையுள்ள நாட்டிலே வசதி படைத்தவர்களிடத்திலே பணம் வாங்கிக் கொண்டு கல்வி கற்றுக்கொடுக்கப்படலாம் என்ற கருத்து இருக்கிறது. ஆளுநர் அவர்கள் கூட ஏழைகளுக்கு இலவசக் கல்வி தந்து விட்டு பணக்காரர்களிடத்திலே இரண்டு மடங்கு பணம் வாங்கலாம் என்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள். இப்படிப் பலர் பல்வேறு கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். ஆக இரண்டுவிதக் கருத்துக்கள் உண்டு. இந்தக் கருத்தை ஆராயுங்கள் என்று சொன்னேன்.

அரசு இலவசக் கல்வியை விட்டு விடக் கூடாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். பணக்காரர்களுக்கு எதற்காக இலவசக் கல்வி என்ற கருத்தும் இருக்கிறது. கடைசி வரைக்கும் இலவசக் கல்வி கொடுக்கப்பட

வேண்டுமென்றால் அதற்கு நிதி வசதி வேண்டும். நிதி வசதி இருக்கிறது என்றால், அதற்கு வாய்ப்பு இருக்கிறது என்றால் பரவாயில்லை. நிதி வசதி வாய்ப்பு இல்லையென்ற நிலைமை வருகிறது என்றால் அதைப் பற்றி ஆராய்வதற்கு வழி ஏற்படும், அந்த வகையிலேதான் பணக்காரர்களுக்கு எதற்காக இலவசக் கல்வி என்ற கருத்தும் ஆராயப்பட வேண்டியது என்று சொல்லப்பட்டது.

டாக்டர் எச். வி. ஹாண்டே : இரு கருத்துக்கள் இருக்கின்றன என்று சொன்னார்கள். இரு கருத்துக்கள் இல்லை, மூன்றாவது நிலைமையும் இருக்கிறது. இலவசக் கல்வியே இல்லை, நடைமுறையிலே பார்த்தால் எல்லா ஹைஸ்கூல்களிலும் கட்டணத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். முன்பெல்லாம் 2 ரூபாய் 12 அணாவாக இருந்தது, இப்போது ஜாஸ்தியாக வாங்கிக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, 3 வித கருத்துக்கள் இருக்கின்றன. அதற்கு முற்றுப்புள்ளி வைக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதைப்பற்றித்தான் நான் முதலிலேயே சொன்னேன். அதைத் தடுப்பது எப்படியென்று புரியவில்லை. நம்மிடம் இப்படி வாங்குகிறார்கள் என்று சொல்கிறார்களே தவிர யாரும் எழுதித் தருவதில்லை. அவர்கள் எழுதித் தந்தால் விசாரணை செய்து நடவடிக்கை எடுக்க முடியும். ஆனால், எழுதித் தந்தால் தங்கள் பிள்ளைகளுக்குக் கேடு வந்து விடுமோ என்ற காரணத்தினால் சொல்கின்ற அளவோடு நிறுத்திக்கொள்கிறார்கள். ஆகவே, இதிலே அவர்கள் நழுவுவதற்கு வழிவகைகள் இருக்கின்றன. நான் அன்றைக்குச் சொன்னது அதைப்பற்றி ஆராயவேண்டுமென்பதுதானே தவிர இலவசக் கல்வி கூடாது என்று நான் சொல்லிவிட்டேன் என்பதல்ல.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட குறிப்பிடும்போது இலவசக் கல்வி வேண்டாம் என்பது அல்ல என்று சொல்லிவிட்டு ஒரு உதாரணத்தையும் சொன்னார்கள். ஒரு பெண்ணுக்கு பிள்ளை பார் என்று சொன்னால் இந்தப் பையனைப் பார்த்திருக்கலாம், அந்தப் பையனைப் பார்த்திருக்கலாம் அடுத்த வீட்டுப் பையனைப் பார்த்திருக்கலாம். ஒரு குறிப்பிட்ட பையனைப் பார்த்ததாலேயே கல்யாணமும் முடிந்துவிட்டது, எல்லாமும் முடிந்து விட்டது என்று எடுத்துச் சொன்னால் எப்படியிருக்குமோ அப்படிப்பட்ட முறையிலே எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆராயச் சொல்லியிருக்கிறோம். அறிக்கையை அவர்கள் தந்தால் அதைப்பற்றி இந்த அவை கருத்தைத் தெரிவிக்க உரிமை இருக்கிறது. அறிக்கை தருவது வேறு, முடிவு எடுப்பது வேறு. அறிக்கை கொடுத்தாலும் நாம் தான் அதைப்பற்றி முடிவு எடுக்க இருக்கிறோம்.

யு. ஜி. சி. சம்பள விகிதங்களைப்பற்றிப் பலரும் பேசினார்கள். கல்வியமைச்சர்கள் மாநாட்டில் ஒரு நாள் முழுவதும் காரசாரமாக இதைப் பற்றி விவாதித்தார்கள். 1966 ஆம் ஆண்டிலே யு.ஜி.சி. ஒரு சம்பள விகிதத்தை அளித்தார்கள். அந்தச் சம்பளத்தை நாம் தந்தோம். அதற்குப் பிறகு நம்முடைய மாநில அரசு 1970 ஆம் ஆண்டு இரண்டாவது நிதிக் குழு அமைத்து மற்ற எல்லாத் துறைகளுக்கும் உள்ள சம்பள



விகிதங்களை மாற்றியமைக்கும்போது கல்வித் துறையில் உள்ள பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள், மற்றவர்கள் அனைவருக்கும் சேர்த்து சம்பள விகிதங்களை மாற்றியமைத்திருக்கிறோம். யு.ஜி.சி. மாத்திரமல்ல, 1970–ஆம் ஆண்டிலே நாமும் மாற்றியமைத்திருக்கிறோம். 1970 ஆம் ஆண்டிலே நாம் கொடுத்தது, அவர்கள் 1966 ஆம் ஆண்டிலே கொடுத்ததை விட கூடுதலாகக் கொடுத்திருக்கிறோம்.

இப்போது யு.ஜி.சி. ஒரு பரிந்துரை செய்து மத்திய கல்வியமைச்சர் சம்பளவிகிதங்களை மாற்றியமைப்பதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். யு. ஜி. சி. மத்திய அரசையும் மாநில அரசுகளையும் கலந்துகொண்டு இதிலே எந்த அளவிற்குக் கூடுதல் செலவாகும் என்பதைப் பார்த்துச் செய்யவில்லை. திடீரென்று ஒரு நாள் அறிவித்தார்கள். அந்த அறிவிப்புகூட உத்திரப் பிரதேசத் தேர்தலுக்கு முந்தின நாள்தான் செய்தார்கள். முதலிலே உத்திரப் பிரதேசத்திற்கு மட்டும் வழங்கப்படுகிறது என்றுதான் சொன்னார்கள். இதைக் கொண்டுவந்த பிறகு உத்திரப் பிரதேச மாநிலமே இதனால் தவித்துக்கொண்டு இருக்கிற நிலைமைதான் இருக்கிறது. ஒவ்வொரு மாநிலத்திலேயும் இப்படிப்பட்ட நிலைமை இருப்பதை அறிவோம். உத்திரப் பிரதேசத்திலே உள்ளவர்களே சொல்கிறார்கள், பல சங்கடங்களை இது தந்திருக்கிறது என்று. அந்த மாநிலத்து செயலாளர் பல்வேறு சங்கடங்களைத் தந்திருக்கிறது இது என்று சொன்னார்கள்.

அவர்கள் இப்போது சொல்லியிருக்கிற சம்பள விகிதம் யுனிவர்சிடி சம்பந்தப்பட்ட விரிவுரையாளராக இருந்தால் ரூ. 700—40—1,100—50—1,600 என்றும்;

ரீடராக இருந்தால் ரூ. 1,200—50—1,300—60—1,900 என்றும்;

பேராசிரியராக இருந்தால் ரூ. 1,500—60—1,800—100—2,000—125/2—2,500 என்றும்;

சிறந்த பேராசிரியராக இருந்தால், புரபஸர் ஆப் எமினன்ஸ் ஆக இருந்தால் ரூ. 3,000 என்றும் சம்பளத்தைத் தர வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள்;

கல்லூரிகளில் டெமான்ஸ்ட்ரேட்டர்ஸ், டியூட்டர்ஸ் ஆக இருந்தால்—இனி மேல் இல்லை—ஏற்கெனவே இருக்கிறவர்களுக்கு ரூபாய் 500—20—700——25—900 என்றும்,

விரிவுரையாளராக இருந்தால் ரூ. 700—40—1,100—50—1,300—அஸஸ்மெண்ட் 50—1,600 என்றும்;

முதல்வராக இருந்தால் ரூ. 1,200—50—1,300—60—1,900 என்றும், ரூபாய் 1,500—60—1,800—100—2,000—125/2—2,500 என்றும் வைத்திருக்கிறார்கள்.

இப்படிச் சொல்லிவிட்டு இன்னும் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்றால் 1—1—1973 ஆம் நாளில் பணியாற்றுகிறவர்களுக்கு ஏற்கெனவே மாநில அரசு கொடுத்து வந்ததை விட இதனால் ஆகிற கூடுதல் செலவில் 80 சதவீதத்தை மத்திய அரசாங்கம் ஏற்றுக்கொள்ளும் என்றும் 20 சதவீதத்தை மாநில அரசாங்கம்தான் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறார்கள். ஆனால், 1—1—1973-க்குப் பிறகு நியமிக்கப்பட்டவர்களாக இருந்தால் அவர்களுக்கு இதனால் ஆகிற செலவு முழுவதையும் முழுப் பொறுப்பையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். 1—1—1973ஆம் நாளில் பணியாற்றுகிறவர்களைப் பொறுத்த வரையில் ஏற்படுகிற டெபிசிட்டில்தான் மத்திய அரசு 80 சதவிகிதம் தரும் 20 சதவீதத்தைமாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். அதற்குப் பின்னால் வருகிற முழுப் பொறுப்பையும் மாநில அரசே ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று சொல்கிறார்கள். இன்ன இன்ன குவாலிபிகேஷனில் உள்ளவர்களுக்குத்தான் தரவேண்டுமென்று ஒரு குறிப்பு பிப்ரவரி 18 ஆம் தேதி தான் அனுப்பியிருக்கிறார்கள். யார் யாருக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள் என்றால்

" A Doctor's degree or published work of an equally high standard ; and

consistently good academic record with 1st or high 2nd class (B+ Master's degree in a relevant subject or an equivalent degree of a foreign university........".

என்று சொல்லியிருக்கிறார்கள். யுனிவர்சிட்டி, காலேஜ் லெக்சரர்களுக்குத்தான் இப்படி தகுதிகள் இருக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இன்னும் மற்றவர்களுக்கு எல்லாம் என்ன என்ன தகுதிகள் இருக்க வேண்டுமென்பதை அவர்கள் அனுப்பவில்லை. அனுப்பிவைக்கிறோம் என்று சொன்னார்கள். இதன்படி பார்த்தால் பி. ப்ளஸ், அதற்குமேல் வாங்கியவர்கள்தான் அதிலே வருகிறார்கள். இவர்களுக்கு மட்டும் நாங்கள் ஏற்போம் என்று சொல்லும்பொழுது டாக்டர் பட்டம் வாங்கியவர்கள் அல்லது ரிசர்ச் தீசிஸ் சப்மிட் செய்தவர்கள் அந்தச் சம்பளம் கேட்பார்கள். ஒரே கல்லூரியில் வேறுபாடுகள் வந்தால் அது பல்வேறு குழப்பங்களுக்குக் காரணமாகிவிடும். இதிலே ஏற்படுகின்ற வேறு பல விளைவுகளைப் பார்க்கும்பொழுது அந்த நிலைமை மட்டுமல்லாமல், இவர்களுக்கு 3,000 ரூபாய் புரொபசருக்குப் போக வேண்டுமானால், அதற்கு மேல் இருக்கின்ற இயக்குநருக்கு என்ன செய்வது ? இப்பொழுது இயக்குநருக்கு 1,700 ரூபாயில் தொடங்கி 2,000 ரூபாயிலே முடிக்கிறோம். ஆனால் இவர்களுக்கே கிட்டத்தட்ட 3,000 ரூபாய்க்கு மேல் வைத்தால் கீழே உள்ள பேராசிரியர்கள் அல்லது முதல்வர்களுக்கு எவ்வளவு தர வேண்டும் ? அந்த இயக்குநருக்கு மட்டும் ஆக்கினால் மற்ற இயக்குநர்களுக்கும் அதேபோல் ஆக்க வேண்டும். அதேபோல் மற்றத் துறைகளிலே இருப்பவர்களுக்கும் ஆக்க வேண்டும்.

இப்பொழுது உத்தரப் பிரதேசத்தில் அப்படிப்பட்ட சங்கடங்களெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. கல்லூரிகளில் ஆக்கினால் பிறகு பி.ஏ.,பி.டி.,பி.எஸ்ஸி. பி.டி. க்கு ஆக்குகின்ற அந்த நிலைமைகள் வரும். அவர்களும் எங்களுக்குத் தாருங்கள் என்று சொல்லக் கூடிய அத்தகைய நிலைமைகள் வந்தால் அந்தச் செலவை யார் ஏற்பது என்று சங்கடப் படுகிறார்கள். கேரளாவில் அச்சுதமேனன் அவர்கள் கூடச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் கொடுத்த குவாலிபிகேஷனில் வைக்க வேண்டுமென்று சொன்னால், மற்றபடி இருப்பவர்களுக்கு கொடுப்பது பற்றி சங்கடம் ஏற்படும். கல்வித் துறை அமைச்சருக்குக் எழுதியிருக்கிறேன். செலவினங்களும் கூடுதலாகிவிடும். கூடுதல் செலவானால் அதை ஏற்க வேண்டும். மாநிலங்கள் தங்கள் வளர்ச்சியின்படி அந்தச் அளவைச் செலவழிப்பதற்கு ஆயத்தமாக இருக்கிறது. ஆனால் எங்களைக் கேட்காமல் பல்கலைக் கழக மானியக் குழு விதித்த விதிகளை வற்புறுத்தினால் அவர்களேதான் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். என்று நாம் வற்புறுத்தியிருக்கிறோம், கடிதம் எழுதியிருக்கிறோம். ஆனால் பதில் இன்னும் வரவில்லை. மத்தியக் கல்வி அமைச்சருக்குக் கிட்டத்தட்ட எல்லாக் கல்வி அமைச்சர்களும் எழுதியிருக்கிறார்கள். எல்லா மாநிலங்களிலும் அந்தச் சங்கடங்கள் ஏற்படத்தான் செய்யும். ஒரு முடிவை எடுத்தால் அதைச் சங்கடங்கள் இல்லாமல் நிறைவேற்ற வேண்டும். ஆகவே, மறுபடியும் ஒரு மாநாட்டைக் கூட்டுவதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். இரண்டு நாட்களுக்கு முன்னால் மத்திய கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் கூறும்பொழுது கூட





" Central assistance will be available even if they decide, after taking local conditions into consideration, to introduce scales of pay different from, but not higher than those for the Central Universitites. The new scales may be enforced from January 1, 1973.". என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல மாநில அரசு விரும்பினால் செய்யலாம், விரும்பாவிட்டால் செய்யாமல் இருக்கலாம் என்று 13—3—1974-ல்

" The Union Education Ministry will be sending shortly letters to the States on the question of implementation of the revised pay scales announced by the Government for University and College Teachers. The States will have to then inform the Centre of their individual decision to accept or not the scales announced."

என்ற அளவிற்குத்தான் தெரிவித்திருக்கிறார்கள். மறுபடியும் மாநாட்டைக் கூட்டி இந்தக் குழப்பங்களைத் தீர்த்தாலொழிய இதற்கு முடியாது. கடிதப் போக்கு வரத்து வைத்திருக்கிறோம். தெளிவான முடிவு வரும்பொழுது நடைமுறைக்குக் கொண்டு வரலாம். பேராசிரியர்களுக்கு இப்படிப் பட்ட சம்பளத்தைக் கொடுக்கக் கூடாது என்பது அல்ல. சங்கடங்களையும் போக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த அரசு இந்த நிலைமைக்கு வந்திருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக் கொள்ளவிரும்புகிறேன்.

மற்றபடி " ஏ " பிரிவு, " பி " பிரிவு பற்றிப் பேசினார்கள். அடிக்கடி கேள்விகளுக்குப் பதில் சொல்லியிருக்கிறேன். மீண்டும் அதைப்பற்றி விரிவாகச் சொல்ல வேண்டிய அவசியமில்லை என்றுதான் நான் கருதுகிறேன்.

விளையாட்டுகளுக்கு ஊக்கம் தரும் வகைகளையெல்லாம் இங்கே சொன்னால் நீண்ட நேரம் ஆகிவிடும் என்பதால் அதை விட்டு விடுகிறேன்.

லட்சுமிபுரம் கல்லூரியைப்பற்றி ஜேம்ஸ் அவர்கள் குறிப்பிட்டார்கள் மாண்பு மிகு உறுப்பினர் ஹாண்டே அவர்களும் ஒரு வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். அரசாங்கமே கவனம் செலுத்தி கேர் டேக்கர் நியமித்து எடுத்த நாளிலிருந்து சம்பளம் கொடுத்து கல்லூரியைக் கவனித்து வருவது எனறும், அதற்குப் பிறகு பிரச்னைகளைத் தீர்ப்பது என்றும் உத்தரவிட்டு, அதற்காகக் கன்னியாகுமரி மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரியிடத்தில் ஒப்படைத்து ஆணை பிறப்பித்திருக்கிறோம். கேர் டேக்கர் எடுக்க முயற்சித்தபொழுது இப்பொழுது ரிட்டுக்குப் போய் இருக்கிறார்களே அவர்களும் எடுத்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

நாகர்கோவிலுக்கு நான் போயிருந்த பொழுது சுவாமிதாஸ் அவர்களும், மற்றும் ரெசல்ராஜ் அவர்களும், இன்னும் மாவட்டத்தைச் சேர்ந்த பலரும் வந்திருந்தபொழுது, இரண்டு சாராரும் வந்திருந்தார்கள். அவர்களிடத்தில் நான் கேட்டுக் கொண்டேன். இரண்டுபேரும் இணங்கி கல்லூரிக் கட்டிடத்தை அரசாங்கத்திற்கு ஒப்படைக்க எழுதித் தந்தால் அரசாங்கக் கல்லூரியாக மாற்றுவதற்கு ஆயத்தமாக இருக்கிறோம். என்று சொன்னேன். இரண்டுபேரும் இணக்கம் தெரிவித்துத்தான் சென்றார்கள். இணக்கம் தெரிவித்தவர்களில் ரிட்டுக்குப் போனவர்களும் இருக்கிறார்கள் ரிட்டுக்குப் போய் அரசாங்க ஜீ.ஓ.வையும் கேள்விக்குறியாக்கி, கேர் டேக்கர் போட்டதையும் கேள்விக்குறியாக்கி யிருக்கிறார்கள். அரசாங்கம் உடனடியாக அதைப்பற்றி முயற்சியெடுத்து, ரிட்டின்மேல் போட்ட இன்ஜங்ஷன் ஆர்டரை நீக்குவதற்கான முயற்சியை மேற்கொண்டிருக்கிறது. அது வெற்றி பெற்றால் அந்தக் கல்லூரியை தொடர்ந்து நடத்துவதற்கு முயற்சிக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இருக்கிறது என்பதைக் குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

இன்னும் ஒரு கருத்தை மட்டும் கூறிக் கொள்ள விரும்புகிறேன். மற்றைய நிலைமைகள் பலவற்றையும் இங்கே சொல்லியிருக்கிறோம். தமிழ்ப் பாடநூல் பற்றி திரு. அரங்கநாயம் அவர்கள் குறிப்பிட்டார்கள். மற்றும் பலரும் தெரிவித்திருக்கிறார்கள். பாட நூல் நிறுவனத்தைப் பொறுத்த வரையில் தனி சொஸைட்டி என்று நிறுவனமாக்கி அதற்குச் சட்ட திட்டங்கள், விதிமுறைகள் வகுத்து அதன் மூலம் நூல்கள் வெளியிடும் முயற்சியிலே ஈடுபட்டு வருகிறோம். அதன் சார்பாக நூல்கள் பலவற்றை வெளியிடும் வகையிலே பல்வேறு முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டு இதுவரையில் பல பணிகளை ஆற்றி வந்திருக்கிறோம்.

அதுமட்டுமல்ல, பள்ளிகளுக்கான பாடப் புத்தகங்கள் மட்டுமல்லாமல் கல்லூரிகளுக்குத் தேவைப்படும் பாடப்புத்தகங்கள், ரெபஃரன்ஸ் புக்ஸ் வெளியிடும் முயற்சிகளையும் மேற்கொண்டிருக்கிறோம். மத்திய கல்வி அமைச்சரிடத்தில், மாநிலங்கள் தங்கள் மொழியை வளர்ப்பதற்கு நூல்கள் வெளியிட உதவ வேண்டுமென்று கேட்டதற்கிணங்க, மத்திய அரசு ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கோடி ரூபாய் மொழி பாட புத்தகங்களைக் கொண்டுவர உதவி செய்வதாகக் கூறி அவ்வப் பொழுது வாங்கிக் கொள்ளலாம் என்ற திட்டத்தைக் கொண்டு வந்தார்கள். அந்த அடிப்படையிலே நாமே நிதியை வாங்கி இதுவரை



யிலே பயன்படுத்திக் கொண்டுவருகிறோம். அந்த வகையிலே மத்திய அரசாங்கத்திடமிருந்து இதுவரையில் நாம்—1 கோடி ரூபாயில் 53 இலட்சம் ரூபாயைப் பெற்றிருக்கிறோம். நாம் இதுவரையில் 59 இலட்சத்து 95,000 ரூபாய் செலவழித்திருக்கிறோம். செலவழித்ததற்கு இன்னும் கேட்க இருப்பது 6,95,000 ரூபாய். ஒரு கோடி ரூபாயில் இதுவரையில் 53 இலட்சம் ரூபாய்தான் தந்திருக்கிறார்கள். மீதி 47 இலட்சம் ரூபாயை வாங்க வேண்டும். இதுவரையில் நாம் வெளியே கொண்டுவந்துள்ள புத்தகங்கள் கல்லூரிப் பாடங்களுக்கும் பல்வேறு வகைகளிலேயும், பல்வேறு துறைகளிலேயும் 650 புத்தகங்கள் கொண்டு வரப்பட்டிருக்கின்றன. இதைப்பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார் இண்டியன் எக்ஸ்பிரசைச் சேர்ந்த ஒரு நிருபர் என்று மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

> " காணாதான் காட்டுவான் ; தான்காணான் ; காணாதான்
> கண்டானாம் தான்கண்ட வாறு ".

என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார்.

ஆந்திரப் பிரதேசத்தில் அந்த 1 கோடி ரூபாயில் 255 புத்தகங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இங்கே நாம் 53 இலட்சம் ரூபாயில் 650 நூல்களைக் கொண்டு வந்திருக்கிறோம். அதுமட்டுமல்ல, குஜராத்தில் 281 புத்தகங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள், கர்நாடகத்தில் 238 புத்தகங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள், கேரளத்தில் 203 புத்தகங்களைத்தான் கொண்டு வந்திருக்கிறார்கள். எனவே, அகில இந்தியாவிலேகூட மத்திய அரசால் பாராட்டத்தக்க அளவில் தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் அதிகமான புத்தகங்களை வெளியே கொண்டு வந்திருக்கிறது.

புத்தகங்களை எழுதச் சொல்லி அச்சிடும் முயற்சியில் ஈடுபட்டு 650 புத்தகங்களைக் கொண்டு வந்திருக்கிறோம். மேற்கொண்டும் 400, 500 புத்தகங்களைக் கொண்டு வரும் அளவில் மீதியிருப்பதைப் பயன்படுத்தலாம். இனிமேல் மறு பதிப்புகள் போடுவது என்பது எளிது. ஆனால் எழுதி புதிய புத்தகங்களைக் கொண்டு வருவது கடினம். எனவே, 650 புத்தகங்கள் என்ற அளவில் நாம் அதிகமாக வெளியே கொண்டு வந்திருக்கிறோம். இனிமேல் தேவைப்பட தேவைப்பட இது தீர்ந்து விட்டாலும் மறுபதிப்பு போடுவது எளிது.

இவைகளை அச்சிட்டுக் கொடுக்கும் அளவிற்குக் கட்டண விகிதங்கள் அரசு எழுது பொருள் அச்சுத் துறையின் இயக்குநர், நிதித் துறை துணைச் செயலாளர், கல்வித் துறை இணைச் செயலாளர் இவர்கள் அடங்கிய குழுவால் தீர்மானிக்கப்படுகிறது. பொதுவில் தற்பொழுது கொடுக்கப்பட்டு வரும் அச்சுக்கூலி விகிதங்கள் இன்றைய நிலவரப்படி (மார்க்கெட் பிரைஸ்) பிற அச்சகங்கள் வசூலிக்கும் தொகையைவிடக் குறைவுதான். அரசாங்க அச்சகத்திலே நாம் அச்சிட்டோம். அரசாங்க அச்சகம் தாங்கள் அச்சிடும் முறையிலே இவைகளை அச்சடிக்க முடியவில்லை என்று மறுத்து விட்டார்கள். அப்பொழுது ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி புத்தகங்களை வெளி அச்சகங்களுக்குக் கொடுக்க வேண்டிய நெருக்கடி

ஏற்பட்டு, பிறகு பாட நூல் நிறுவனம் ஏற்பட்ட பொழுது பல்வேறு அச்சகங்களிலேயும் பிரித்து இப்படிப்பட்ட புத்தகங்களை அச்சடிக்க வேண்டிய நிலைமையும் ஏற்பட்டதால் நாமே ஒரு கோடி ரூபாய் பெறுமானம் உள்ள அச்சகத்தை நிறுவ வேண்டுமென்ற எண்ணத்தில் இருக்கிறோம். வெளிநாட்டிலிருந்து வரும் அச்சகத்தை ஒரிசாவிற்குத் தந்திருக்கிறார்கள் என்று நினைக்கிறேன், ஆனால் அதுபற்றி எனக்குத் தெளிவாகத் தெரியவில்லை.

பிரச்சினைகளைக் கிளப்பியதன் காரணமாகத்தான் இவற்றையெல்லாம் கூறவேண்டிய நிலைமை ஏற்பட்டது. இதிலே எந்தத் தவறும் நடைபெறவில்லை. என்று குறிப்பிட்டுக் கூற விரும்புகிறேன்.

மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தாலும்கூட மராட்டிய மாநிலத்தில் அச்சுக் கூலி 17 ரூபாய்; நாம் 6 ரூபாய் தான் கொடுத்திருக்கிறோம். கணக்குப் புத்தகத்திற்கு அங்கு 21 ரூபாய்; நாம் 6½ ரூபாய்தான். புள்ளி விவரத்தோடு வாதாடத் தயாராக இருக்கிறேன்.

ஆறு, ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் பாடப் புத்தகங்களை அச்சடிக்க சிவகாசி அச்சகங்களுக்குக் கொடுத்தோம். அப்போது குறிப்பிட்ட நேரத்தில் புத்தகங்கள் வராமல், ஆகஸ்டு மாதம், செப்டம்பர் மாதத்திற்கு மேல் அவர்கள் புத்தகங்களைத் தரக்கூடிய நிலைமை இருந்ததால் சென்னை நகரத்திலேயே அச்சடிப்பது என்று மாற்றிவிட்டோம். கடந்த மூன்று ஆண்டுகளாக ஏப்ரல் திங்களிலேயே பாடப் புத்தகங்கள் எல்லாம் தயாராகி விட்டன. இந்த ஆண்டும் புத்தகங்களை ஏப்ரல் திங்களிலேயே அனுப்பி விடும் அளவுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எல்லா அச்சகங்களுக்கும் அச்சுக் கூலி எல்லாம் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. சாதாரண அச்சுக்கூடத்தில் அச்சுக் கூலி 7 லட்சம் ரூபாய் ஆகிறது என்றால், அரசாங்க அச்சகத்தில் செலவு மற்றவைகளை எல்லாம் கணக்குப் பார்த்தால் 21 லட்சம் ரூபாய் செலவு செய்து அச்சடிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அந்த அளவுக்கு ஓவர்ஹெட் சார்ஜஸ் வருகிறது. அந்தப் புள்ளி விவரங்கள் எல்லாம் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் பரிவோடு இருந்து அவற்றை எல்லாம் கேட்பார்களானால் நான் அந்த விவரங்களை எல்லாம் எடுத்துச் சொல்ல ஆயத்தமாக இருக்கிறேன்.

இந்த அரசு பாடப் புத்தகங்களை அச்சடித்து கொள்ளை லாபம் அடிக்கிறது என்று அரங்கநாயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். அரசுக்கு லாபம் வந்தாலும் அது தனிப்பட்டவர்களுக்குப் போவதில்லை. எந்த மாநிலத்தின் புத்தகங்களையும் கொண்டு வந்து ஒப்பிட்டுப் பார்க்கட்டும். எந்த விகிதத்திலும் நம்முடைய மாநிலத்தில் விலை அதிகமில்லை. அரசுத் துறையில் நிதித் துறைச் செயலாளர் இருக்கிறார், கல்வித் துறைச் செயலாளர் இருக்கிறார். இவர்கள் அடங்கியிருக்கும் குழுதான் இவற்றை ஆராய்கிறார்கள். அதோடு தணிக்கை மற்றவைகளும் இருக்கின்றன.

(புத்தகங்களை அவைக்குக் காட்டிக் கொண்டே. . . . )

முதல் வகுப்புப் பாடப் புத்தகத்தை எடுத்துக் கொள்ளுங்கள். நான்கு வண்ணங்கள் கொண்ட படம் அட்டையில். இந்த அளவுக்குப் போட்டு இதை 80 காசுக்குத் தருகிறோம். இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகையில்



ஏதோ எழுதிவிட்டார்கள் என்பதற்காக அது சரியாகிவிடாது. இரண்டாவது வகுப்புப் பாடப் புத்தகம் 90 காசு; மூன்றாவது வகுப்புப் பாடப் புத்தகம் ஒரு ரூபாய்; நான்காவது வகுப்புப் பாடப் புத்தகம் ஒரு ரூபாய் பத்து காசு. இந்த விலையில் இந்த அளவுக்கு நான்கு வண்ண அட்டையுடன் தனியார் நிறுவனம் யாரும் தர முன் வருவார்களா? இதிலே கொள்ளை லாபம் ஏற்பட எப்படி முடியும்? இப்போது உள்ள பிரச்சினையெல்லாம் முதல் வகுப்பிலிருந்து நோட்ஸ் போட ஆரம்பித்து விட்டார்கள். (சிறு டைரி அளவுள்ள புத்தகத்தைக் காட்டி) இந்த நோட்ஸ் 80 காசு. நியூஸ் பிரிண்டில் போட்டிருக்கிறார்கள்.

திரு. ஆலடி அருணா: மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு புத்தகங்களை இந்த மன்றத்தில் காட்டினார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காட்டுகின்ற புத்தகத்தில் அட்டைக்குப் பயன்படுத்தியிருக்கும் பேப்பரின் அளவு பளப்பளப்புடன் மாணவர்களுக்குக் கிடைக்கின்ற புத்தகங்களில் இல்லை என்பதை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படி எந்தப் புத்தகத்தையாவது கொண்டுவந்து காட்டுவார்களேயானால் நடவடிக்கை எடுக்க ஆயத்தமாக இருக்கிறேன். புத்தகத்திலுள்ள பாடங்களை ஏஷியன் பிரின்டர்ஸ் அச்சடிக்கிறார்கள். “ரேப்பர்” வேறு ஒரு பிரஸ்ஸில் அச்சடிக்கப்படுகிறது. நாம் காகிதத்தை வாங்கி வைத்து ஸ்டாக் செய்து மத்திய அரசிலிருந்து நேரடியாகக் கட்டுபடியாகும் விலையில் வாங்கி வைத்து, ஏஷியன் பிரின்டர்ஸ்க்குக் கொடுத்து அச்சடித்து வாங்குகிறோம். எந்தத் தனியாரும் இதே விலைக்குப் புத்தகத்தைப் போட முடியாது. இதிலே ஏதோ கொள்ளை லாபம் அடிப்பதாகச் சொன்னார்கள். இதிலே ஏதாவது தவறுகள் இருக்குமானால் அதை எனக்கு எடுத்துக் காட்டுவார்களானால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறேன்.

திரு. செ. அரங்கநாயகம்: இரண்டரைக் கோடி ரூபாய்க்கு வியாபாரம் செய்து 75 லட்சம் ரூபாய் அளவு லாபம் வருகிறது என்றால் அது கொள்ளை லாபம் அல்ல என்றால் வேறு என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இரண்டரைக் கோடி ரூபாய்க்கு வியாபாரம். இந்தத் துறை வளரவேண்டும். மற்றவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது எந்த அளவுக்குக் கொள்ளை லாபம் ஆகும் இது. லாபமே இல்லாமல் நடத்த முடியாது. ஒரு கோடி ரூபாய் ரிவால்விங் பண்ட் ஆக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இந்தப் புத்தகங்களை அச்சடித்து கிடங்குகளில் வைத்திருக்கிறோம். அதற்கு 4,800 ரூபாய், 5,000 ரூபாய் வரை வாடகை தரவேண்டியிருக்கிறது. அடுத்த மாதத்திலிருந்து 7,500 ரூபாய் கேட்கிறார்கள். உணவுக் கிடங்குகளில் புத்தகங்களை வைத்திருக்கிறோம். அரிசி வைக்க வேண்டும், கோதுமை வைக்க வேண்டும், புத்தகங்களை எடுங்கள் என்று அவர்கள் சொல்லுகிறார்கள்.

அதற்காக நாம் கட்டடம் கட்டவேண்டும். கொள்ளை லாபம் என்பதற்கும், லாபம் என்பதற்கும் வித்தியாசத்தைப் பார்க்க வேண்டும். இதிலே முடக்கப்பட்டிருக்கும் பொருள் எவ்வளவு ? லாபம் எவ்வளவு ? கடந்த ஆண்டு 25 லட்சம் ரூபாய்க்கு ஏழை மாணவர்களுக்கு ஸ்லேட், புத்தகங்கள் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். 1 முதல் 3-ம் வகுப்பு வரை படிக்கிற மாணவர்களுக்கு மதிய உணவிற்காக 25 லட்சம் ரூபாயை ஒதுக்கியிருக்கிறோம். இந்த ஆண்டு 5 லட்சம் ரூபாய் அதற்காகச் செலவழிக்கப்படுகிறது. ஆசிரியர்களுக்கு மறு பயிற்சி தருவதற்காக இதிலே இருந்து செலவழிக்கப்பட்டிருக்கிறது. ஓரளவு லாபம், மிச்சம் மீதி வந்தால் அது கல்வித் துறைக்காகத் தான் செலவழிக்கப்படுகிறது.

(தனியார் வெளியிட்டுள்ள சில நோட்சுகளைக் காட்டி)

இது ரூ. 1.25 காசு : இது 2 ரூபாய் ; இதையெல்லாம் பார்க்கும் போது அரசு கொள்ளை லாபம் அடையவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். இதிலே எங்காவது தவறு ஏற்பட்டிருக்கிறது என்று சுட்டிக் காட்டுவார்களானால் இந்த அரசு நடவடிக்கை எடுக்கத் தயங்காது என்பதை அழுத்தந்திருத்தமாகக் கூறிக் கொள்ளுகிறேன்.

மேலும் நல்ல முறையில் புத்தகங்களைக் கொண்டு வர அரசு எல்லா வித முயற்சிகளையும் எடுத்துக் கொண்டிருக்கிறது. எந்தத் தவறும் ஏற்படவில்லை. ஏதாவது ஓரிரு தவறுகள் அறியாமல் ஏற்பட்டிருந்தால் அதைச் சுட்டிக்காட்டினால் திருத்திக் கொள்ள முடியும்.

திருமதி. த. ந. அனந்தநாயகி : தவறு இல்லை என்று சொல்லுகிறார்கள். அரசாங்கம் அச்சடித்த புத்தகத்தில் "மறவர்" என்றால் "கொள்ளை அடிப்பவர்கள் ; இவர்களுக்கு வேறு தொழில் கிடையாது" என்று போடப்பட்டிருக்கிறது. இந்த மாதிரி அரசாங்கப் புத்தகங்களிலே அச்சடித்திருக்கிறார்கள். இதிலே கொஞ்சம் கவனம் செலுத்தவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அம்மையார் அவர்கள் இலக்கியம் படித்திருக்கவேண்டும். இலக்கியத்திலே இருப்பதை எழுதினார்கள். குறுந்தொகையில், புறநானூற்றில், அகநானூற்றில், பதிற்றுப் பத்தில் அவ்வாறு கூறியிருக்கிறார்கள். அந்தச் சொல்லும் மனத்தைப் புண்படுத்துகிறது என்பதற்காக அந்தச் சொல்லுக்கு அர்த்தம் சொல்லும்போது வேறு விதமாகச் சொல்லவேண்டுமென்று கூறியிருக்கிறோம். மறவர், மறத்தியர் என்று சங்க இலக்கியங்களில் வருகிறது. அதைப் பற்றி குறிப்பிடும்போது "எயினர்" "எயிற்றியர்" என்று போட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. புதிய பாடத்திட்டத்தில் மாற்றி எழுதப்பட்டிருக்கிறது என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(பிற்பகல் 2-00)

திரு. லத்தீப் அவர்கள் நபி நாயகத்தைக் குறித்து ஒரு குறைபாடு இருப்பதாகக் கூறினார்கள். மகமது நபி அல்லது நபி நாயகம் அவர்களை "முஸ்லீம்களின் கடவுள்" என்று தமிழ் நாட்டுப் பாட நூல் நிறுவனம் வெளியிட்டுள்ள எந்தப் பாடநூலும் குறிப்பிடவில்லை.



மாறாக தமிழ்ப் பாட நூல் 10-அ, பக்கம் 61 குறிப்புரையில் "இஸ்லாமியப் பெரியராகிய மகம்மது நபி" என்று குறிப்பிடப்படுகிறார்.

9ஆம் வகுப்பு வரலாற்று நூலின் 87-வது பக்கத்தில் "மகம்மது நபியை அல்லாவின் தூதர் என்று முஸ்லீம்கள் மதிக்கின்றனர்" எனத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது.

இதே 9-ம் வகுப்பு வரலாற்று நூலின் 88-வது பக்கத்தில் "மகம்மதுவை மக்கள் தீர்க்கதரிசியாக ஏற்றுக் கொண்டனர்" என்றும் கூறப்பட்டிருக்கிறது.

மேலும் தமிழ்த்துணைப் பாட நூல் வல்லுநரும், ஓய்வு பெற்ற பேராசிரியருமான திரு. கே. அப்துல்காதரையும் கல்லூரிப் பாட நூல்கள் எழுதும் பேராசிரியரான திரு. உஸ்மான் செரீப் அவர்களையும் நிறுவனம் இசுலாம் மார்க்கம் சம்பந்தமானவற்றை வெளியிடும்பொழுது அவ்வப்போது கலந்து ஆலோசித்து வருகிறது.

வேறு ஏதேனும் தவறு இருக்குமானால், சுட்டிக் காட்டினால் திருத்திக் கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம்.

திரு. எம். ஏ. லத்தீப் : தலைவரவர்களே, நடந்திருக்கிறது, சுட்டிக் காட்டினோம். இந்தப் பாட நூல் குழுவில் முஸ்லீம்களைப் போடுவதில் என்ன தவறு இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, தவறு இருக் குமானால் சுட்டிக் காட்டினால் திருத்திக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். 4, 5 ஆண்டு காலத்திற்கு முன்னால் இருந்த பாடத்திலே இருஸ்து படம் போட்டு, மகம்மது நபியைப் போட்டிருந்தார்கள். அது எடுக்கப்பட்டு இரண்டு ஆண்டு காலமாகி விட்டது.

இன்னும் ஒரு சிலவற்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சென்ற ஆண்டு இரண்டாம் நிலைத் தமிழாசிரியர்களுக்கு அளிக்கப்பட்ட சலுகைகளை, தமிழ் தவிர பிற மொழிகளை (தெலுங்கு, மலையாளம், உருது போன்றவை) கற்றுத்தரும் இரண்டாம் நிலை மொழியாசிரியர்களுக்கும் கீழே குறிப்பிட்டவாறு 1—4—1975 முதல் அளிக்க அரசு முடிவு எடுத்துள்ளது. 1—4—1975 முதல் அத்தகைய இரண்டாம் நிலை மொழியாசிரியர் பதவிகளுக்கு நியமனம் எந்தப் பள்ளியிலும் எந்த நிர்வாகத்தின் கீழும் செய்யப்படமாட்டாது. அத்தகைய இரண்டாம் நிலை மொழியாசிரியர்களுள், முதல் நிலை மொழியாசிரியர் தகுதிகள் அனைத்தும் (அதாவது (1) வித்துவான் அல்லது முன்ஷி தகுதி (2) குறைந்த அளவு பொதுக் கல்வித் தகுதி (3) மொழியாசிரியர் பயிற்சி அல்லது இடை நிலை ஆசிரியர் (செகண்டரி கிரேடு ஆசிரியர்) பயிற்சி ஆகிய மூன்றும் பெற்றிருந்தும் காலியிடம் இல்லாத காரணத்தினால் முதல் நிலை மொழி ஆசிரியராக நியமனம் ஆகாமல் இருந்தவர்கள் 1—4—1975 முதல், முதல் நிலை மொழியாசிரியர்களாக நியமனம் செய்யப்படுவர்.

1—4—75-க்குப்பின் முதல் நிலை மொழியாசியருக்குரிய முழு தகுதியை பெறும் இரண்டாம் நிலை மொழியாசிரியர்களும் அவ்வாறு அந்தகுதி பெறும் நாள் முதல், முதல் நிலை பதவி பெறுவர்.

**1-4-1975**-ல் குறைந்த அளவு பொதுக்கல்வி தகுதி பெறுமல் வித்துவான் அல்லது முன்ஷி தகுதியும், மொழி ஆசிரியர் பயிற்சி அல்லது இடை நிலை ஆசிரியர் பயிற்சி மட்டுமே உடைய இரண்டாம் நிலை மொழியாசிரியர்கள் 1—4—1975-ல் பத்தாண்டுக் காலம் பணிமுடிந் திருப்பின், 1—4—1975 முதலும் அதற்குப் பின் 10 ஆண்டுக் காலம் பணி முடிந்தால் அவ்வாறு 10 ஆண்டு காலம் பணி முடியும் நாள் முதலும் முதல் நிலை மொழியாசிரியர்களாக நியமிக்கப்படுவர்.

பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்களில் முதல் நிலை, இரண்டாம் நிலை என இரு பிரிவு உள்ளனர். இடை நிலை ஆசிரியர் (செகண்டரி கிரேடு) ஊதிய விகிதத்தில் உள்ள எல்லா ஆசிரியர் பிரிவினருக்கும் தேர்வு நிலை அளிக்க ஏற்கெனவே அரசு ஆணையிட்டுள்ளது. இரண்டாம் நிலை உடற் பயிற்சி ஆசிரியர்களின் ஊதிய விகிதமும் இடை நிலை ஆசிரியர்களின் ஊதிய விகிதமும் ஒன்ருக இருப்பதால், இரண்டாம் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள் இடை நிலை ஆசிரியர்களின் தேர்வு நிலை ஊதியத்தைப் பெறுகின்றனர். முதல் நிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள் தனித்த ஊதிய விகிதம் பெறுவதால் அவர்களுக்கென தனியாகத் தேர்வு நிலை ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்படவேண்டி உள்ளது. எனவே, அவர்களுக்கு 1—4—1975 முதல் ரூ. 275—10—375—15—450 என்ற தேர்வு நிலை ஊதிய விகிதத்தை அளிக்க அரசு முடிவு செய்துள்ளது.

அரசு கல்லூரிகளில் பணி புரியும் ஆசிரியர்களின் தரத்தை உயர்த்துவதற்கென பி.எச்.டி. பட்டம் பெற்றவர்களுக்கு மாதம் ரூ. 100 சிறப்பூதியமாக வழங்கப்பட்டுள்ளது. தனியார் கல்லூரிகளில் பணி புரி கிறவர்களுக்கும் இத்தகைய சலுகை வழங்கவேண்டுமென்ற கோரிக்கையை இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது. இதற்கான ஆணைகள் விரைவில் வெளி யிடப்படுமென்று மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

பல உறுப்பினர்கள் இங்கே பல்கலைக் கழகங்களைப் பற்றிக் குறிப் பிட்டார்கள். வேறுபல மாநிலங்களோடு ஒப்பிட்டால் மேலும் சில பல்கலைக்கழகங்களை வைக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. ஆகவே, மேலும் இரண்டு பல்கலைக் கழகங்களை அமைக்க கொள்கை அளவிலே அரசு ஏற்றுக்கொள்கிறது என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். இப் போது மதுரைப் பல்கலைக் கழகம் மதுரைப் பகுதிக்கும், சென்னைப் பல்கலைக் கழகம் மற்ற பகுதிக்கும் உள்ளது. திருச்சி, தஞ்சை, புதுக் கோட்டை, தென்னுற்காடு ஆகிய 4 மாவடங்களுக்கும் சேர்த்து திருச்சி பல்கலைக் கழகம் என்றும் கோவை, நீலகிரி, சேலம், தர்மபுரி ஆகிய 4 மாவட்டங்களுக்கும் சேர்த்து கோவைப் பல்கலைக் கழகம் என்றும் இரண்டு பல்கலைக் கழகங்களை நிறுவுவதற்குக் கொள்கை அளவில் ஏற்றுக்கொண்டிருக்கிறேம். இதற்கு மத்திய அரசு அனுமதி வேண்டும். மறந்து விடாதீர்கள். பல்கலைக் கழக மானியக் குழு வழிவகை தர





வேண்டும். இதற்கான முயற்சிகளை எடுக்கிறேம். இதற்கான நடவடிக்கை களில் இந்த அரசு முனைந்து செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விவாதத்தில் ஒத்துழைப்பு தந்த உறுப்பினர்கள் அத்தனை பேர்களுக்கும், இந்தத் துறையினுடைய செயலாளர், இணைச் செயலாளர் துணைச் செயலாளர்கள், அலுவலர்கள், அதிகாரிகள், கல்வித்துறை இயக்குறர் ஆகிய அத்தனை பேர்களுக்கும், மன்ற உறுப்பினர்களுக்கும் கல்வித் துறையின் சார்பாக வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். பசி வந்திட பத்தும் பறந்துபோம் என்று இல்லாமல் பொறுமையோடு இருந்த மன்ற உறுப்பினர்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது.

(திரு. ஆலடி அருணு எழுந்தார்)

இடையிடையில் குறுக்கீடு செய்யாதீர்கள்.

திரு. ஆலடி அருணு: தலைவரவர்களே, அமைச்சரவர்கள் இலவசக் கல்வி பற்றி குறிப்பிட்டார்கள். பெருமதிப்பிற்குரிய காமராஜர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது 10 ஆவது வகுப்பு வரை இலவசக் கல்வி கொடுக்கப்பட்டது. டாக்டர் கலைஞர் அவர்கள் இந்த இலவசக் கல்வி போதாது, ஏழை எளிய மக்களுக்குப் பயனளிக்கும் வகையில் பி.யு.சி. வரை இந்த இலவசக் கல்வியை அளிக்கவேண்டுமென்று செய்தார். இப்படி இலவசக் கல்வியை அதிகமாகக் கொடுப்பதில் அக்கறை காட்டிய அரசாங்கத்திற்கு இந்த இலவசக் கல்வியைக் கொடுக்க வேண் டியது அவசியம் தானு என்பதைப் பரிசீலிக்க வேண்டிய அவசியம், நிர்ப்பந்தம் ஏன் ஏற்பட்டது ? ஏழை எளிய மக்களுக்கு கல்வி தேவை யில்லை என்று அரசு கருதுகிறதா ? மீண்டும் பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் ஏன் அரசுக்கு வந்திருக்கிறது என்பதற்கு அமைச்சரவர்கள் விளக்கம் தருவார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, நான் முதலிலேயே குறிப்பிட்டேன். ஏழைகளுக்கு இலவசக் கல்வி வேண்டும். பணக்காரர்களுக்கு வேண்டுமா என்ற கருத்து இருக்கிறது. இந்தக் கருத்தை ஆராயுங்கள், அப்படி ஆராய்ந்து அவர்கள் தெரிவித்ததற்குப் பிறகு அறிக்கை வரும். அறிக்கையை அரசு பரிசீலிக்கும். மன்ற உறுப் பினர்கள் பரிசீலிப்பார்கள். அப்போது முடிவு எடுக்கலாம். இந்த அரசு ஏழை எளியவர்களுக்கு இலவசக் கல்வி எல்லா வகையிலும் இருக்க வேண்டுமென்ற கருந்தை என்றென்றும் கொண்டிருக்கிறது இவ்வளவு கேட்டுவிட்டு, 100 ரூபாயை வெட்டாதீர்கள்.

(THIRU M.A. Latheef rose.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. ஆர். பொன்னப்ப நாடார் அவர்கள் இருக்கையில் இல்லை.

THIRU M.A. LATHEEF : Sir; I am standing for a long time. I am not being allowed. This is being deliberately done by the Chair because the Chair thinks I am most cantankerous. Is it the intention of the Chair ?

MR. DEPUTY SPEAKER : It has never been the intention of the Chair.

THIRU M.A. LATHEEF : In spite of my repeated demands, the Chair is not allowing me.

Mr. DEPUTY SPEAKER : Please resume your seat.

THIRU M. A. LATHEEF : No. I am walking out.

(Thiru M. A. Latheef then walked out of the House.)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்கள் ஆர். பொன்னப்ப நாடார், எம்.ஏ. லத்தீப், என்.கே. பழனிசாமி, ஏ. ஆர் மாரிமுத்து ஆகியோர் இருக்கையில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டனவாகக் கருதப்படுகின்றன.

திருவாளர்கள் கே.எஸ். கோதண்டராமையா, செ. அரங்கநாயகம் ஆகியவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள், பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டன.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"நிதிக் கோரிக்கை எண் 17—கல்வி என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,18,21,03,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும்."

நிதிக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, கோரிய தொகை வழங்கப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுக்குக் கொடுத்த நேரத்திற்குள் முடித்து விட்டால் இப்படி பசியோடு உட்கார்ந்து இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்காது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளைக் காலை 9 மணி அளவில் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 2.08 மணி அளவில் ஒத்திவைக்கப் பட்டது.



## II. பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. *Statutory Rules and Orders.*

145. Notification issued in G.O. Ms. No. 46, Agriculture, dated the 10th January 1975 in regard to an amendment to rule 124 of the Tamil Nadu Agricultural Produce Markets Rules, 1962. [*Laid on the table of the House under section* 29(4) *of the Tamil Nadu Agricultural Produce Markets Act,* 1959 (*Tamil Nadu Act* 23 *of* 1959).]

146. Notification issued in G.O. Ms. No. 287, Co-operation dated the 29th June 1974, in regard to amendments to rules 29 and 30 of the Tamil Nadu Co-operative Societies Rules, 1963. [*Laid on the table of the House under section* 119(4) *of the Tamil Nadu Co-operative Societies Act,* 1961 Tamil Nadu Act 52 of 1961]

### B. *Reports, Notifications and Other Papers.*

*90. Vote on Account for expenditure in 1975-76.

*91. Notice of Demands for Advance Grants during the year 1975-76 (English and Tamil).

†92. The Tamil Nadu Appropriation (Vote on Account) Bill, 1975 (L.A. Bill No. 10 of 1975).

*93. A Review on Industrial Growth in Tamil Nadu-Handloom and Textile, 1974-75 (English and Tamil).

*94. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Textile Corporation Limited, 1974 (English and Tamil).

*95. Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay (English and Tamil).

*96 Policy Note on Demand No. 56—Miscellaneous Capital Outlay-498—Outlay on Co-operation, 1974-75 (English and Tamil).

*97. Review of the Progress made in Co-operative Development Schemes, 1974-75 (English).

*98. Policy Note on Food (Tamil).

---

*Despatched to Members on 19-3-75.
†Despatched to Members on 20-3-75.

*How to use the index.*

The Index is arranged alphabetically. The Main Headings are printed from the margin and the sub-headings are indented from the main headings.

Under every Main Heading including various names, entries pertaining to proceedings other than Questions are indicated by printing immediately after the subject-matter within brackets, e.g., (M) for Motion, (C.A.) for Calling Attention, (R) for Resolution, (St.) for Statement, etc. An entry without any such indication will mean that it pertains to a question, except in the case of Bills and Financial Business, the entry in which cases will be self-explanatory.

All the Bills are alphabetically arranged under the main heading 'Bill (s)'.

Various bodies like Committees, Councils, Boards, Corporations, etc., are consolidated under the said Main Headings, i.e., 'Committee (s)', 'Council (s)', 'Corporation (s)', etc.

Various subjects like Schools, Colleges, Conferences, Ports, Temples and similar other broad subjects are shown in alphabetical order under these very Main Headings.

All the Papers laid on the Table of the House are indexed only under the Main Heading "Papers Laid on the Table".

Rulings and Observations from the Chair are indexed under the Main Heading "Chair".

A list of abbreviations used in the Index is given below :—

| | |
|---|---|
| A.M/Ad. Motion | Adjournment Motion. |
| Ann. | Announcement. |
| B.O.H. | Bssiness of the House. |
| C.A. | Calling Attention to a matter of urgent public importance. |
| C.A. (St.) | Calling Attention Statement. |

| | |
|---|---|
| Consid. | Consideration stage of a Bill. This stage includes—<br>(i) Motion to refer to Select/Joint Select Committee.<br>(ii) Amendment to refer to Select/Joint Select Committee.<br>(iii) Amendment to circulate.<br>(iv) Motion to consider as reported by Select/Joint Select Committee.<br>(v) Amendment to recommit to Select/Joint Select Committee, etc. |
| Consid. Cl. | Consideration of clauses of a Bill. |
| D.E.E. | Demands for Excess Expenditure. |
| Dis. S.D. or D.S.D. | Discussion for Short Duration on an urgent matter of administration. |
| D.S.G. | Demands for Supplementary Grants. |
| G.A. | Governor's Address. |
| G.D. | General Discussion. |
| H.A.H. Dis./H.H.D. | Half-hour Discussion. |
| Int. | Introduction stage of a Bill. |
| L.A. | Legislative Assembly. |
| L.C. | Legislative Council. |
| M. | Motion. |
| P.M. | Privilege Motion. |
| R/Res. | Resolution. |
| St. | Statement. |

# Index to Tamil Nadu Legislative Assembly Debates

*Thirteenth Session of the Fifth Legislative Assembly under the Constitution of India.*

17TH TO 21ST MARCH 1975.

VOLUME LXVI (Nos. 1 to 5)

## A


Pages.

ABDUL JABBAR, THIRU V. M.—

Budget, 1975-76, Voting :
Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars ... ... ... 294-298,
District Administration 333,

Kerala's ban on Coir fibre export and consequent hardships to labourers at Salem (C.A.) ... 560, 561, 562

ADITANAR, THIRU Si. Pa.—

Strike in Pugalur Sugar Mills and consequent loss to agriculturists (C.A. St.) ... ... ... 375-376

AGRICULTURE—

Sprayers, mobile servicing units ... ... 129-132

PAGES.

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1975-76, Voting:

Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars
District Administration ... ... ... 283-285

Milk Supply Schemes
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi ... ... ... ... ... 73-77

ALDA M. FOWLER, THIRUMATHI

Budget 1975-76, Voting:
Education ... ... ... ... ... 533-585

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1975-76, Voting:
Education ... ... ... ... ... 406, 610-611, 620, 627-628, 630-631, 633, 642

Land Revenue Department ... ... ... 181-182,
Stamps-Administration 307, 308,
Compensation to Zamindars 309, 310,
District Administration 311, 323, 331, 332,

Milk Supply Schemes
Administration of Tamil Nadu Hindu Religious 58,
and Charitable Endowments Act, 1959 79-83,
Khadi ... ... ... ... ... ... 91



PAGES.

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—cont.

Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of Order) 22
H.R. and C.E. Demand, consideration without placing Audit Report (Point of Order) ... 45
Moral Instruction periods ... ... ... 239-240
Privilege Matter, Speaker's refusal of consent in his chamber ... ... ... ... ... 148-150, 159

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1975-76, Voting:
Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars
District Administration ... ... ... 308

House Surgeons' strike (A.M.) ... ... ... 557-560

Privilege Matter, Speaker's refusal of consent in his chamber ... ... ... ... ... 159

Speaker's propriety in conducting deliberations when a motion for his removal from office has been given notice of (Point of Order) ... ... 370-371

ARANGANAYAKAM, THIRU S.—

Budget, 1975-76, Voting:
Education ... ... ... ... ... 388, 408, 414, 431-432

Police station for Selvapuram ... ... ... 537-540

ARECANUT—

Plantation, Peddanaickenpalayam ... ... 351-354
Production ... ... ... ... ... 351

A—*cont.*


PAGES.

ALAGARSAMY, THIRU S.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars
District Administration ... ... ... 283-285

Milk Supply Schemes
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi ... ... ... ... ... 73-77

ALDA M. FOWLER, THIRUMATHI

Budget 1975-76, Voting :
Education ... ... ... ... ... 583-585

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—

Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 406, 610-611, 620, 627-628, 630-631, 633, 642

Land Revenue Department ... ... ... 181-182,
Stamps-Administration 307, 308,
Compensation to Zamindars 309, 310,
District Administration 311, 323, 331, 332,

Milk Supply Schemes
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 58, 79-83,
Khadi ... ... ... ... ... 91




A—*cont.*


PAGES.

ANANDANAYAKI, THIRUMATHI T. N.—*cont.*

Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of Order) 22
H.R. and C.E. Demand, consideration without placing Audit Report (Point of Order) ... 45
Moral Instruction periods ... ... ... 239-240
Privilege Matter, Speaker's refusal of consent in his chamber ... ... ... ... ... 148-150, 159

ANBAZHAGAN, THIRU K.—

Budget, 1975-76, Voting :
Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars
District Administration ... ... ... 308

House Surgeons' strike (A.M.) ... ... ... 557-560

Privilege Matter, Speaker's refusal of consent in his chamber ... ... ... ... ... 159

Speaker's propriety in conducting deliberations when a motion for his removal from office has been given notice of (Point of Order) ... ... 370-371

ARANGANAYAKAM, THIRU S.—

Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 388, 408, 414, 431-432

Police station for Selvapuram ... ... ... 537-540

ARECANUT—

Plantation, Peddanaickenpalayam ... ... 351-354

Production ... ... ... ... 351

A—*cont.*

PAGES

ARUMUGAM, THIRU C.—
Budget 1975-76, Voting:
Land Revenue Department
Stamps-Administration
Compensation to Zamindars ... ... ... 195,
District Administration 196-198

ARUNA, THIRU Aladi—
Budget, 1975-76, Voting:
Land Revenue Department
Stamps—Administration ... ... ... 181, 134,
Compensation to Zamindars 186, 187,
District Administration 207

Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... ... 255-258, 265

High schools, opening ... ... ... ... 135-137

Speaker's Removal Resolution, Speaker's propriety in conducting deliberations when a motion for his removal from office has been given notice of (Point of Order) ... ... ... ... 371-372

B

BILL(S)—
Appropriation (Vote on Account) Bill, 1975—
Message from Governor ... ... ... 387

Consid.,
Consid. cl. ... ... ... ... ...
Motion to pass ... ... ... ...
Passed ... ... ... ... ... ... 665

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1975—
Int. ... ... ... 163

Gaming (Amendment) Bill, 1975—
Int. ... ... ... ... ... 40



B—*cont.*

PAGES.

BOMMAN, THIRU K. H.—
Ooty-Madras express bus service ... ... 17-20
Thalaikundah-Sewgar road, widening ... ... 529

BRIDGES AND CULVERTS—
Across Pazhavaru ... ... ... ... 553-554
Across Puliankal Odai ... ... ... ... 343
New bridges, Mayuram Union ... ... ... 552-553
On Madhavaram-Redhills road ... ... 344

C

CALLING ATTENTION—
Handlooms, stock accumulation and hardships to weavers. ... ... ... ... ... 33-40
Kerala's ban on coir fibre export and consequent hardships to labourers at Salem ... ... 560-562
Strike in Pugalur Sugar Mills and consequent loss to agriculturists ... ... ... ... 375-376

CANAL(S)—
Mohanur and Kattuputhur Canals, linking ... 245

CHAIR—
*Announcement*—
Motion for Removal of Speaker ... ... ... 220-221
*Adjournment motions*—
RULINGS AND OBSERVATIONS—
*Chief Minister's statement in the House disowning any aid for drought relief from Centre and consequent suffering of people.*
Consent was withheld after the explanatory statement of the Chief Minister ... ... 255-266

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Adjournment Motions—*cont.*

*Collapse of Korakkavadi Angalamman temple compound wall and mandapam and consequent loss of lives.*

Consent was withheld on the ground that there was no need for the adjournment of the other business of the House to discuss the matter after the explanatory statement given by the Minister ... ... ... ... ... 33

*Strike by House-Surgeons in Government Hospitals.* Consent was withheld on the ground that there was no need to adjourn the other business of the House to discuss the problem after the statement given by the Minister ... ... ... 560

*Calling attention*—

Clarifications can be sought only on the points mentioned in the statement made by the Minister and there is no place for new supplementary questions ... ... ... ... ... ... 80

*Debate*—

Without being called upon by the Speaker, if a member spoke anything, it would not find a place in the proceedings of the House and the Press also should not publish the same ... ... ... 369

*Decorum*—

It is not in order to throw challenge in the House 615

It is not proper for two members to rise and be standing at a time ... ... ... ... 619



PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Decorum*—cont.

There are certain duties and responsibilities cast on the Speaker and he has to follow the rules and regulations. When the Chair discharges its duties and responsibilities in accordance with the rules and regulations, the members should obey and respect the Chair. If the members think that they can rise as they choose at any time and speak whatever they want and the Speaker should keep quiet, there is no need at all for the Speaker ... ... ... ... ... 26

The Chair cannot be questioned ... ... ... 26

MODE OF ADDRESSING THE CHAIR—

Whoever is occupying the Chair is the Chairman and therefore, he should be addressed as 'Mr. Chairman' and not as 'Mr. Temporary Chairman' ... ... ... ... ... 191

*Mode of addressing a member*—

When a Member who is a doctor referred to a lawyer Member as 'my learned friend and Advocates friend', the Deputy Speaker observed thus:

"The privilege of calling another person as 'learned friend' belongs only to the class of lawyers and nobody else. Being a doctor, you should not call him a learned friend." ... ... ... ... 425

*Expressions used in the House*—

"*Cantankerous*" *in the sentence 'I demand that he should be transferred......he is the most cantankerous............*" Held to be not a proper word to be used in the House ... ... ... ... 422

PAGES

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

Member rights—

In the course of the discussion on the Education Demand, when there was an exchange between two Members about the rights of Members, another Member enquired whether the Panchayat Union Chairman had any right to prosecute any M.L.A. Thereupon, the Deputy Speaker observed—

"Before the eyes of law all are equal. Whether he is an M.L.A .or a Minister or an ordinary citizen, all are held as equal before law. So, if an M.L.A. breaks the law, he has no protection, except that during the meeting days he can come and take shelter in the House or in the precincts of the House. Otherwise, he would be certainly taken to task. There is no doubt about it.

Action can be taken against any legislator (if he commits any offence), but that should be communicated to the Speaker and the Speaker will, in turn, intimate to the House." ... 424, 425

*Personal explanation*—

Should not be made like a speech, but should be confined to personal references, if any ... ... 432

*Point of clarification*—

Can be sought only with the permission of the Chair ... ... ... ... ... ... 26





PAGES.

CHAIR—*cont.*

*Rulings and observations*—cont.

Points of order—

A Member, rising on a point of order and quoting Articles 149 and 151 (2) of the Constitution, objected to the moving of the Demand for Grant relating to Hindu Religious and Charitable Endowments by the Minister concerned inasmuch as the Report of the Auditor-General on the administration of Hindu Religious and Charitable Endowments had not been placed on the Table of the House.

The Minister replied that he was moving the Demand on the recommendation of the Governor and all the accounts had been placed along with the Land Revenue Accounts.

The Speaker ruled that the question was not whether the Report of the Auditor-General had been placed on the Table of the House or not, and that there could not be any objection for moving the Demand for Grant in the absence of any specific provision in the Rules that Demands for Grants should not be moved, if the Report of the Auditor-General had not been placed on the Table of the House ... ... ... ... 42-46

Rising on a point of order, a Member enquired whether there was any provision in the Constitution for a Central Minister to supervise or comment upon the works executed by the State Government or the rules of procedure relating to the same.

The Deputy Speaker observed thus:

"It is a quasi-federation. We have got sovereignty to a certain extent and the Centre has got sovereignty to a certain extent.........The Executive is responsible to the State Legislature. The State Legislature has got the

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

Assurances Committee, the Public Accounts Committee and the Estimates Committee to see that the monies are spent properly and to condemn the Government if there is any extravagance or any improper expenditure. So, there is no authority on the part of any Central Minister to question the expenditure of the State Government."

He further observed that only the State Assembly had the power to discuss the State Budget and no other person had the authority to question whether monies were spent properly.

With reference to some other views expressed by some Members, the Deputy Speaker observed :

"I would like to say that in the Bengal Coal Company case, it was decided on the issue about the federation of the Constitution and the view expressed in that case is that it is a quasi-federation. The question arose whether the property belonging to the State Government can be acquired by the Central Government. Then the learned Judges of the Supreme Court discussed the question and came to the conclusion that our Constitution is a quasi-federation". 304, 305–307

Should be in accordance with the rules; and points of clarifications should not be raised as points of order ... ... ... ... ... ... 28

Should not be raised during question hour ... 355



CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

*Propriety of the Speaker conducting the deliberations of the House when notice of a Motion for his removal from Officer had been tabled.*

With reference to points of order raised whether it was in order for the Speaker to preside over the deliberations of the House when five parties had given notice of a Motion for his removal from office, the Speaker observed that immediately after the receipt of the notice, the Chief Minister and himself examined the possibility of taking up the Motion the next day itself relaxing the rules. But for the specific Constitutional provision requiring fourteen days' notice, steps would have been taken to bring the Motion before the House the next minute itself ... ... 369–373

*Publication of Chief Minister's speech on an Adjournment Motion regarding Vellore Christian Medical College Hospital issue in the newspapers as an advertisement.*

On 17th March 1975 a Member raised a point of order questioning the propriety of publication of the Chief Minister's speech on an Adjournment Motion as an advertisement by the Information Department with a wrong caption. He stated that it was not a 'reply' by the Chief Minister as advertised, but was only his explanation. Further, what the Opposition Members had spoken did not find a place in the advertisement. It was without any precedent in the whole of India including Parliament and contrary to the established procedure and earlier rulings. Some Members endorsed the point of order.

PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

The Chief Minister stated that with a view to explain the true state of affairs to the public in the country the full facts were published.

The Chair reserved its ruling for the next day. 20–26

On 18th March 1975, the Speaker rejected the point of order with the following observations:

"As it was usual to state that after the 'reply' of the concerned Minister, consent was withheld", though it was only an explanation, there was nothing wrong in the caption.

It was not possible to insist on the publication of all the speeches, and the publication of a particular speech alone, withholding speeches of others, could not be deemed to be wrong, so long as the publication was not distorted so as to create a wrong impression in the minds of the readers. Hence, there was nothing wrong in not advertising the entire proceedings, but only the Chief Minister's reply.

There were many precedents for the publication of the Chief Minister's speeches in the House on various matters by the Information and Publicity Department of the Government

As regards the point whether Speaker's permission was obtained for such a publication under Rules 234 and 237, the Speaker stated that these rules related to the Official Report of Proceedings published by the Legislative Assembly Department, and not for other publications by Members themselves of their speeches which did not enjoy immunity.



PAGES

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

Points of Order—*cont.*

The House or the Speaker has, however, no powers to order individual Members not to publish their speeches in the House ... 161–163

*Publication of proceedings in the Press contrary to the rulings and directions by the Speaker.*

On 20th March 1975, a Member pointed out that in spite of the repeated rulings and directions by the Speaker that anything spoken or uttered without the permission of the Speaker should not be published in the Press, certain newspapers indulged in the publication of utterances or speeches made without the permission of the Speaker.

The Speaker observed that appropriate action would certainly be taken under the rules against erring newspapers, if such things happened in future ... ... .. 373–374

*Presence of C.I.D. Officers in the lobby:*

A Member rose on a point of order and complained about the presence of C.I.D. Officers in the lobbies where the Press reporters collected news, thus causing difficulties and anneyance to them. He requested the Chair to take action to keep the C.I.D. Officers away from the lobbies. The Deputy Speaker observed that such a situation did not exist, but he would take necessary action as and when individual cases, if any, were brought to his notice. 555

CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Privilege matter.*

*Withholding consent to raise a matter of privilege in the Speaker's Chamber and informing the Member of the Speaker's decision by letter:*

On 18th March 1975 a Member raised a point stating that he had received a communication to the effect that the Speaker had withheld consent to a privilege matter given notice of by him. He contended that while such a communication could be sent in regard to an adjournment motion, it was not in order for the Speaker to withhold consent to a privilege matter in his Chamber. Moreover, he should give his reasons for withholding his consent. As the Motion satisfied the relevant rules governing privilege matters, the Speaker could not withhold his consent in his Chamber and should give an opportunity to the Member concerned to explain how there was a *prima facie* case. The Member also quoted the precedents in the Lok Sabha and the House of Commons in support of his contention.

After hearing some other Members and also the Leader of the House, the Speaker quoting the relevant rules ruled that even before giving consent to raise the matter of privilege in the House he could withhold his consent in the Chamber itself after satisfying himself that there was no *prima facie* case, and it was for him to decide whether the matter was fit enough to be raised in the House or not. He further observed :



CHAIR—*cont.*

*Rulings and Observations*—cont.

*Privilege Matter*—cont.

"For some time it was the practice to inform the Members of the reasons for which consent was withheld by the Speaker. But, it was however found that Members tried to argue with the Speaker in the House on the reasons. The practice of stating the grounds on which a notice was disallowed was, therefore, discontinued.

Only in the absence of a specific provision in the Assembly Rules with reference to a particular procedure or matter, recourse must be had to British Parliamentary Practice. As their rules of procedure in the matter were clear, they need not follow the procedure adopted in the House of Commons."

In the end, the Speaker held that his decision was in accordance with the existing rules framed by the House and it was always open to the House to change the rules that privilege matters should be disposed of only after they were brought before the House. He added that, however, if the Member requested in writing for reconsideration of his earlier orders, he would consider the same. 138–160

CHEZHIAN, THIRU KOVAI—

Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... 266

Central aid for drought, Chief Minister's statement elsewhere during Assembly session (Point of Information) ... ... ... ... ... 26, 27

Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of Order) 25, 26

C.I.Ds in lobby (Point of Order) ... ... 555

Privilege Matter, Speaker's consent ... ... 147–148

Question hour, utilisation (Point of Order) ... 254–255

PAGES.

COIR—
Kerala's ban on coir fibre export and consequent hardships to labourers at Salem (C.A.) ... 560–562

COLLEGE(S)—
College of Indian System of Medicine ... ... 240–242

COMMITTEES—
Estimates, election ... ... ... ... 563
House, election (M) ... ... ... ... 164
Privileges, election (M) ... ... ... ... 163
Public Accounts, election ... ... ... 564
Public Undertakings, election (M) ... ... ... 565

CO-OPERATIVES—
Cold storage plant at Salt Cotaurs ... ... 532
Kattabomman Weavers' Co-operative Society, starting at Chatrapatti ... ... ... ... 8

D

DAMS—
Across Chandranadhi ... ... ... 344
Check dams, Gudalur area ... ... ... 529–531

DENNIS, THIRU N.—
Budget 1975–76, Voting:
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... 48
Milk Supply Schemes ... ... ... ...
Khadi ... ... ... ... ... ...
Emergency Risks Insurance Scheme, implementation in Public Undertakings ... ... 249–250
Rubber production ... ... ... ... ... 345–349
Thengapattinam-Kollengode Boat Service ... ... 241
Yarn stock, particulars ... ... ... ... 4–5



PAGES

DEVENDIRAN, THIRU A.—
Budget, 1975–76, Voting:
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 66–69
Milk Supply Schemes ... ... ...
Khadi ... ... ... ...

DHARMALINGAM, THIRU A. P.—
Budget, 1975–76, Voting: 165, 167, 168,
Land Revenue Department ... ... 169–174,
Stamps—Administration ... ... 177, 178,
Compensation to Zamindars ... ... 182, 183,
District Administration ... ... ... 184, 186, 321–329, 330–331, 332–334, 335

Cultivating Tenants Protection and Payment of Fair Rent (Amendment) Bill, 1975 ... ... ... 165

E

EDMUND, THIRU G. R.—
Budget, 1975–76, Voting:
Education ... ... ... ... 605–618
Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of Order) 22–23
Emergency Risks Insurance Scheme, implementation in Public Undertakings ... ... ... 249–250
Privilege Matter, Speaker's consent ... ... 154–157, 159

PAGES

EDUCATION—

B.T. course, admission of graduate teachers ... 237

Institute of Management, starting ... ... 127

EMPLOYMENT—

Rural Employment Scheme, Kariyapatti ... 134

EXPORTS—

Kerala's ban on coir fibre export and consequent hardships to labourers at Salem (C.A.) ... ... 560–562

EXPUNCTIONS—

Budget, 1975–76, Voting:
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ...
Milk Supply Schemes ... ... ... . [illegible]
Khadi ... ... ... ... ...
Resolution for Speaker's Removal ... ... 379

F

FACTORIES—

Alangulam Cement Factory, land acquisition ... 344–345

FINANCIAL BUSINESS—

Budget, 1975–76, Voting:
Education ... ... ... ... ... 387–453, 566–646

Land Revenue Department ... ... ...
Stamp—Administration ... ... .. 165–220,
Compensation to Zamindars ... ... ... 267–337
District Administration ... ... ... ...





PAGES

FINANCIAL BUSINESS—*cont.*

Budget, 1975–76, Voting—*cont.*

Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ...
Milk Supply schemes 40–41,
Khadi ... ... ... ... ... 46–102

Budget (Vote on Account) 1975–76, Voting:
Land Revenue Department ... ... ...
State Excise Department ... ... ... 279

Motor Vehicles Acts—Administration ... ...
General Sales Tax and the Other Taxes and Duties—Administration ... ... ...
Stamps—Administration ... ... ...
Registration ... ... ... ... ...
State Legislature ... ... ... ...
Election ... ... ... ... ...
Head of State, Ministers and Headquarters Staff
Milk Supply Schemes ... ... ... .. 380

District Administration ... ... ...
Administration of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...
Administration of Justice ... ... ...
Jails ... ... ... ... ...
Police ... ... ... ... ... ...
Fire Services ... ... ... ...
Education ... ... ... ... ...
Medical ... ... ... ... ... 381

F—con't

PAGES

FINANCIAL BUSINESS—*cont.*

Budget (Vote on Account) 1975-76, Voting—*cont.*

Public Health ... ... ... ... ...
Agriculture ... ... ... ... ...
Fisheries ... ... ... ... ...
Animal Husbandry ... ... ... ...
Co-operation ... ... ... ... ...
Industries ... ... ... ... ...
Cinchona ... ... ... ... ...
Handlooms and Textiles ... ... ... ...
Khadi ... ... ... ... ...
Community Development Project, etc. ... ... 382

Labour including Factories ... ... ...
Social Welfare ... ... ... ... ...
Welfare of the Scheduled Tribes and Castes, etc.
Welfare of the Backward Classes, etc. ...
Housing ... ... ... ... ...
Urban Development ... ... ... ...
Civil Supplies ... ... ... ... ...
Irrigation ... ... ... ... ... 383

Public Works—Buildings ... ... ...
Public Works—Establishment and Tools and Plant ... ... ... ... ...
Roads and Bridges ... ... ... ...
Road Transport Services ... ... ... ...
Relief on account of Natural Calamities ...
Pensions and Other Retirement Benefits ...
Miscellaneous ... ... ... ... ... 384

Stationery and Printing ... ... ...
Forest Department ... ... ... ...
Compensation and Assignments ... ...
Compensation to Zamindars ... ... ...
Capital Outlay on Public Health, Sanitation and Water Supply ... ... ... ...
Capital Outlay on Agriculture ... ... ...
Capital Outlay on Industrial Development
Capital Outlay on Irrigation ... ... ... 385



F—*cont.*

PAGES

Capital Outlay on Public Works—Building ...
Capital Outlay on Roads and Bridges ...
Capital Outlay on Road Transport Services ...
Capital Outlay on Forest ... ... ...
Miscellaneous Capital Oultay ... ... ...
Loans and advances by the State Government

FIRE—

Gudiyatham, relief measures ... ... ... 532-534

FISHERIES—

Fishing Trawlers Project, Mandapam ... ... 510

FOODGRAINS—

Rice smuggling cases ... ... ... ... 118-122
Test Laboratories, opening, ... ... ... ... 242-243
Wheat import ... ... ... ... ... 245-248

FUNDS—

Chief Minister's Public Relief Fund ... ... 122-127

G

GANAPATHY, THIRU T.—

Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 438-444
New Municipal Corporations ... ... ... 134-135

GANESAN, THIRU L.—

Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... 426-431, 432
Youth Service Corps, employment opportunities. ... 546

GOPAL, THIRU K. P.—

Budget, 1975-76, Voting :
Education 601-604

PAGES

Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ...
District Administration ... ... ... 166, 169

Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ...
Milk Supply Scheme ... ... ... ...
Khadi ... ... ... ... ... 47

GOPAL, THIRU M.—
Budget, 1975–76, Voting:
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ...
District Administration ... ... ... 269–271

GURUSWAMI, THIRU N. V.—
Budget, 1975–76, Voting:
Education ... ... ... ... 574–576
Hostel for teachers of Government College for women (Dindigul) ... ... ... ... 138
Theppampatti Kanmoi, formation ... ... 113

## H

HANDE, DR. H. V.—
Budget Estimates, discrepancies ... ... 377–378
Budget, 1975–76, Voting:
Education ... ... ... ... ... 425

HANDE, DR. H. V.—*cont.*
Budget, 1975–76, Voting—*cont.*
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ...
District Administration ... ... ... 184, 185



PAGES

Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... 48, 50–54,
Milk Supply Schemes ... ... ... ... 55–56, 58,
Khadi ... ... ... ... ... 99, 100

Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... 265

Central aid for drought, Chief Minister's statement outside the House during Assembly session (Point of information) ... ... ... ... 27

Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of order) 20–22

Deaths due to collapse of Kerakkavadi Angalamman Koil mandapam (A.M.) ... ... ... 31

Handlooms, stock accumulation and hardships to weavers (C.A.) ... ... ... ... 38, 39

Hindu Religious and Charitable Endowments Demand, Consideration without placing Audit Report (Point of order) ... ... ... 42–43, 44, 45

Houses for municipal employees, Pollachi ... 10

Privilege Matter, Speaker's Consent ... ... 145–147

Publication of expunged portions (Point of order) 374

Slum Board tenements, rent ... ... ... ... 10–13

Propriety of Speaker's conducting deliberations of the House when a Resolution for his removal from office had been given notice of (Point of order) 369–370

Youth Service Corps, number suspended ... 347–351

## H—*cont.*

PAGES

HANDLOOMS—

Stock accumulation and hardships to weavers (C.A.) ... 33–40

HOSTELS—

For teachers of Government College for Women, Dindigul ... ... ... ... ... 138

HOUSING—

New housing colonies, Coimbatore ... 362–369

Police personnel, houses through Slum Board ... 13

Schemes ... ... ... ... ... 361–362

Slum Board's tenements, rent ... ... ... 10–13

## I

ILANGOVAN, THIRU G.—

Budget, 1975–76, Voting :
Education ... ... ... ... 577–580

Perambalur—Manamadurai Road link with bridge on Vennaru ... ... ... ... 359

INDUSTRIES—

Carpentry unit at Muthuppettai, theft ... ... 359–361

Emergency Risks Insurance Scheme, implementation in Public Undertakings, ... ... ... 249–250

Pugalur Sugar Mills, strike and consequent loss to agriculturists (C.A.) ... ... ... 375–376

Scooter factory, Madurai district ... ... ... 541–546

INSTITUTES—

Institute of Management, starting ... ... 127



## J

PAGES

JAPAMALAI, THIRU G.—

Budget, 1975–76, Voting :
Education ... ... ... ... ... 599–601

JAILS—

Open Air Jails ... ... ... ... ... 248–249

JAMES, THIRU J.—

Budget, 1975–76, Voting :
Education ... ... ... ... ... 599–601
Milk Supply Scheme ... ... ... 566–570
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ...
Khadi ... ... ... ... ...

House Surgeons' strike (A.M.) ... ... ... 552–557

Indian Hockey Team, felicitations ... ... 554

JOTHI VENKATACHELLUM, THIRUMATHI—

Budget, 1975–76, Voting :
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ...
Compensation to Zamindars ... ... 334–335
District Administration ... ...
Milk Supply Schemes ... ...
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... 86–90
Khadi ... ... ... ...

## K

KAMATCHI, THIRU K.—

Budget, 1975–76, Voting :
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ...
Compensation to Zamindars ... ... 295, 304,
District Administration ... ...

PAGES

KANDASAMI, THIRU MANALI C.—
Carpentry unit at Muthuppettai, theft ... ... 359-361

KANDASAMY, K.—
Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 425
585-590
Land Revenue Department, ...
Stamps—Administration ... ... 217-220
Compensation to Zamindars ... ... 328
District Administration ... ...

KANDASAMY, THIRU K. P.—
Craft Instructors for Higher Elementary Schools 238

KANNAPPAN, THIRU M.—
Budget, 1975-76, Voting : 40, 46, 47
Milk Supply Schemes ... ... ... ... 48-50, 54
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... 74-75, 80, 82, 83,
Khadi ... ... ... ... ... 90-102
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ...
Compensation to Zamindars ... ...
District Administration ... ...
Deaths due to collapse of Korakkavadi Angalamman koil Mandapam (A.M.) ... ... ... ... 32-33
H.R. and C.E. Demand, consideration without placing Audit Report (Point of Order) ... 42, 45

KARUNANIDHI, DR. M.—
Appropriation (Vote on Account) Bill, 1975 ... 565
Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 607, 609, 610, 612



PAGES

Land Revenue Department ... ... .. 301,
Stamps—Administration ... ... . 302-303,
304, 305,
Compensation to Zamindars ... ... ... 308-309,
District Administration ... ... . 310
Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... ... 253-263
264, 265
266
Central aid for drought, Chief Minister's statement outside the House during the Assembly session (Point of Information) ... ... ... 28, 29, 30
Chief Minister's reply to an Adjournment Motion, Advertisement by Government (Point of Order). 24-25
Indian Hockey Team, felicitations ... ... 554

KARUNANIDHI, THIRU THAZHAI M.—
Dam across Chandranadhi ... ... ... 344

KAVERIMANIAM, THIRU C.—
Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 447-450

KITTAPPA, THIRU N.—
Bridge across Pazhavaru ... ... ... 553-554
Budget, 1975-76, Voting :
Land Revenue Department ... ... ...
Stamps Administration ... ... ... 275-279
Compensation to Zamindars ... ...
District Administration ... ... ...
Chief Minister's Public Relief Fund ... ... 122-127
Food Testing Laboratories, opening ... ... 242-243
Hoarding of essential commodities, arrests ... 117-118
New bridges, Mayuram union ... ... ... 552-553

K—*cont.*

PAGES

KITTAPPA, THIRU N.—

Open-air jails ... ... ... ... ... 248–249

Police personnel, houses through Slum Board ... 13

Schooter factory, Madurai district ... ... ... 541–546

KOTHANDARAMIAH, THIRU K. S.—

Budget, 1975–76, Voting :

Education ... ... ... ... ... ... 388, 444–447

Land Revenue Department ... ...
Stamps Administration ... ...
Compensation to Zamindars ...
District Administration ... ... 166, 167, 168, 279–283

Milk Supply Schemes ... ...
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ...
Khadi ... ... ... ... ... .. 40, 46

KRISHNAMOORTHY, THIRU V. (Nellikuppam)—

Budget, 1975–76, Voting :

Education ... ... ... ... ... 417, 418, 423–424, 415

Milk Supply Schemes .. .. ...
Administration of Hindu Religious and Charitable Endowments Act 1959 ... ... ...
Khadi ... ... ... ... ... . 56–63

KUMARASAMI, THIRU K. N.—

Budget, 1975–76, Voting :

Milk Supply Schemes
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959
Khadi 47



L

PAGES

LABOUR—

Agricultural labourers, wages ... ... ... 355–358

Kerala's ban on Coir fibre export and consequent hardships to labourers at Salem (C.A.) ... 560–562

Plantation Labour, wages revision ... ... 251–253

Strike in Sathya Studios ... ... ... ... 13–16

LANDS—

Acquisition for Alangulam cement factory ... 344–345

Dry farming, research ... ... ... ... 349–351

Inam lands, Ambasamudram taluk ... ... ... 358–359

LATHEEF, THIRU M. A.—

Budget, 1975–76, Voting :

Education ... ... . ... ... 388, 414–426

Land Revenue Department
Stamps Administration
Compensation to Zamindars
District Administration 301

Propriety of Speaker's /conducting deliberations of the House when a resolution for his removal has been given notice of (Point of Order) ... ... 371

LOCAL BODIES—

Houses for Municipal employees, Pollachi ... ... 10

New Municipal Corporations ... ... .. 134–135

M

MADHAVAN, THIRU S.—

Gaming Amendment Bill, 1975 ... ... ... 40

Handlooms, stock accumulation and hardships to weavers (C.A. St.) ... ... ... ... 33–38, 39–40

PAGES

MARIMUTHU, THIRU A. R.—

Budget, 1975-76, Voting :

Education ... ... ... ... ... 388

Land Revenue Department 166, 169,
Stamps Administration 182, 183,
Compensation to Zamindars 198-204
District Administration ... ...

Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... 263, 264, 265

Privilege Matter, Speaker's consent ... ... 160

MARUDHACHALAM, THIRU N.—

Budget, 1975-76, Voting :

Education ... ... ... ... ... 597-599

Milk Supply Schemes ... ... ..
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... 41, 47
Khadi ... ... ... ...

MEDICAL—

Drugs Control Order, enforcement ... ... ... 243-244

MOHIDEEN, THIRU Thiruppur A. M.—

Budget, 1975-76, Voting :

Education ... ... ... ... ... 611-612

Land Revenue Department
Stamps Administration 311
Compensation to Zamindars
District Administration ... ... ...

MOTION (S)—

*Ad. Motions.*

Central aid for drought, Chief Minister's statement and consequent hardships ... ... 255-267

Deaths due to collapse of Korakkavadi Angalamman Koil, Mandapam ... ... ... ... 30-33



PAGES.

MOTION (S)—*cont.*

Ad. Motions—*cont.*

House Surgeons' strike ... ... ... ... 556-560
Estimates Committee, election ... ... ... 563
House Committee, election ... ... ... 164
Privilege Committee, election ... ... ... 163
Public Accounts Committee, election ... ... 564
Public Undertakings Committee, election ... 565

MUNU ADHI, THIRU—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department
Stamps Administration 191-196
Compensation to Zamindars 183,
District Administration ... ...

MUTHAMILSELVAN, THIRU V. N.—

Budget, 1975-76, Voting :

Milk Supply Schemes ... ... ...
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... ... 71-73
Khadi ... ... ... ... ... ...

MUTHIAH, THIRU M.—

New tank near Kalampatti ... ... ... 116-117
Silk rearing farms, Tirunelveli district ... ... 251

MUTHUSAMY, THIRU P.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department
Stamps Administration 207-209
Compensation to Zamindars
District Administration ... ...

PAGES

MUTHUSELVAN, THIRU P. S.—
Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 571-574

MUTHUVEL, THIRU N.—
Bridge across Puliankal Odai ... ... ... 343

N

NARAYANASAMY, THIRU M. V.—
Bridge on Madhavaram-Red Hills Road ... ... 344

NEDUNCHEZHIAN, DR. V. R.—
Appropriation (Vote on Account) Bill, 1975 ... 387
Budget, 1975-76, Voting :
Education ... ... ... ... ... 387
383-389,
421, 426,
595, 617,
618-645
Estimates Committee, election (M) ... ... 563
House Committee, election (M) ... ... ... 164
Privilege Matter, Speaker's consent ... ... 153, 154
Privileges Committee, election (M) ... ... 163
Public Accounts Committee, election (M) ... ... 564
Public undertakings Committee, election (M) ... 564-565
Speaker's propriety in conducting deliberations of the House when a Resolution for his removal from office has been given notice of (Point of Order) 371, 372

P

PALANISAMY, THIRU N. K.—
Adyar river, beautification ... ... ... 113-116
Agricultural labourers, wages ... ... ... 355-358

PAGES

PAPERS LAID ON THE TABLE—*cont.*

Co-operative Societies Act, 1961, notification ... 647
Dairy Development Department, Policy note 1975-76 ... ... ... ... ... 103
Demands for Advance Grants, 1975-76, notice ... 647
District Municipalities Act, 1920, notification ... 337
Education, Performance Budgets ... ... 453
Education, Progress ... ... ... ... 338
Food, policy note ... ... ... ... ... 647
General Sales Tax Act 1959, notification ... ... 337
Indian Ports (Amendment) Bill, 1975 ... 103
Indian Stamp Act, 1899, notification ... ... 338
Industrial growth, Handloom and textiles, 1974-75, review ... ... ... ... 647
Khadi and Village Industries Board, Policy note ... 1975-76 ... ... ... ... ... 103
Miscellaneous capital outlay-Demand, note ... 647
Port Department, Performance Budget ... ... 103
Perspective Plan, 1974-84 ... ... ... 338
Textile Corporation, review. 1974 ... ... 647
Vote on Account for expenditure, 1975-76 ... ... 647

PARANDHAMAN, THIRU A.—

Budget, 1975-76, Voting:
Education ... ... ... ... 394-399
Sathya Studios, strike ... ... ... ... 13-16

POLICE—

Crime branch, Sub-Inspectors, recruitment ... 535-537
Forensic Science Laboratory, Coimbatore ... 1-2
Hoarding of essential commodities, arrests ... 117-118
Houses through Slum Board ... ... ... 13
Station for Selvapuram ... ... ... ... 537-540
Strength in Madras City ... ... ... 2-4



PAGES

PONNAPPA NADAR, THIRU R.—

Budget, 1975-76, Voting:
Education ... ... ... ... 388-423, 440-441, 442
Land Revenue Department .. ... 168,
Stamps—Administration ... ... 307-308,
Compensation to Zamindars ... ... 310
District Administration ... ... 314-321
Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (point of order) ... 24
Deaths due to collapse of Korakkavadi Angalaman Koil Mandapam (A.M.) ... ... ... ... 30-31
Drinking water supply, Puthukadai ... ... 8-10
Hindu Religious and Charitable Endowments Demand, consideration without placing Audit Report (point of order) ... ... ... ... 43
Privilege Matter, Speaker's consent ... 144-145, 159
Speaker's Removal Resolution, Speaker's propriety in conducting deliberations of the House when a Resolution for his removal from office has been given notice of (Point of Order) ... ... 370

PONNUMALAI, THIRU T.—

Budget, 1975-76, Voting:
Land Revenue Department ... ...
Stamps—Administration ... ... 298-300,
Compensation to Zamindars ... ... 329
District Administration ... ...

PRIVILEGE MATTER—

Speaker's consent, procedure ... ... ... 158-160

## R.

PAGES

**RAJA, Thiru A. M.—**
Budget, 1975–76, Voting–
Milk Supply Schemes ... ... ... 83-86
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...
Khadi ... ... ... ... ...

**RAJAGOPAL, Thiru K. M.—**
Budget, 1975–76, Voting:
Milk Supply Schemes ... ... ... ...
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...
Khadi ... ... ... ... ... 57, 58

**RAJAH PILLAY, Thiru V. K.—**
Youth service corps, employment in Panchayats 546-547

**RAJAMANICKAM, Thiru A.—**
Velangapni road, Conversion into Concrete road ... 241-245

**RAJANGAM, Thiru K.—**
Budget, 1975–76, Voting:
Education ... ... ... ... ... 609

**RAJARAM, Thiru K.—**
Budget, 1975–76, Voting:
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ... 184
District Administration ...
Strike in Pugalur Sugar Mills and consequent loss to agriculturists (C.A. St.) ... 375-376

**RAMAKRISHNAN, Thiru Kuppal K. S.—**
Budget, 1975–76, Voting:
Milk Supply Schemes ... ... ... ... 77-79
Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...
Khadi ... ... ...



PAGES.

**RAMASAMY, Thiru G.—**
College of Indian Systems of Medicine, ... ... 240-242

**RAMASWAMY, Thiru E.—**
Kottur-Pongalliyur road, black-topping ... ... 10

**RANGANATHAN, Thiru K.—**
New housing colonies, Coimbatore ... ... ... 362-369

**ROADS—**
Kottur-Pongalliyur road, black-topping ... ... 10
Perambalur-Manamadurai road, link with bridge on Vennaru ... ... ... ... ... 359
Thalaikundah-Seegur road, widening ... ... 529
Velanganni road, conversion into Concrete road ... 244-245

**RUBBER—**
Production ... ... ... ... ... ... 345-349

## S.

**SADASIVAM, Thiru S.—**
B.T. Course, admission of graduate teachers ... 237

**SADIQ PASHA, Thiru S. J.—**
Kerala's ban on Coir fibre export and Consequent hardships to labourers at Salem (C.A. St.) ... 560-561, 562

**SANGUMUTHU THEVAR, Thiru S.—**
Budget, 1975–76, Voting:
Land Revenue Department, ... ...
Stamps—Administration ... ...
Compensation to Zamindars ... 204-206
District Administration ... ... ...
Cold storage plant, Salt Cotaurs ... ... ... 532
Inam lands, Ambasamudram taluk ... ... 358-359

**SATHIAVANIMUTHU, Thirumathi—**
Budget, 1975–76, Voting:
Land Revenue Department, ...
Stamps—Administration ... ...
Compensation to Zamindars ... ... 187, 188
District Administration ... ...
Privilege Matter, Speaker's consent ... ... 360

S—*cont.*


| | Pages |
|---|---|
| **SCHOOLS—** | |
| High School for Pazhayanur ... ... ... | 137–138 |
| High Schools, opening ... ... ... ... | 135–137 |
| Moral Instruction classes ... ... ... | 239–240 |
| **SEENIVASAN, Thiru P.—** | |
| Drinking water facilities to opposition party Members ... ... ... ... | 555–556 |
| **SERVICES—** | |
| Maistries in Agriculture Department, pay revision | 132–133 |
| **SHANMUGAM, Thiru Peri—** | |
| Budget, 1975–76, Voting— | |
| Land Revenue Department ... ... ... | |
| Compensation to Zamindars ... ... ... | 285–287 |
| District Administration ... ... ... | |
| Stamps—Administration ... ... ... | |
| **SOCIAL WELFARE—** | |
| Youth service Corps, employment in Panchayats. | 546–547 |
| Youth Service Corps, employment opportunities. | 546 |
| Youth Service Corps, number suspended ... | 547–551 |
| **SONIAH Thiru T.—** | |
| Drinking water supply scheme, Periakottai ... | 552 |
| High school for Pazhayanur ... ... | 137–138 |
| **SOUNDARAPANDIAN, Thiru P.—** | |
| Arecanut production ... ... ... ... | 351 |
| Budget, 1975–76, Voting : | |
| Land Revenue Department ... ... ... | 166 |
| Stamps—Administration ... ... ... | 287–29[illegible] |
| Compensation to Zamindars ... ... ... | |
| District Administration ... ... ... ... | |




S—*cont.*


| | Pages |
|---|---|
| **SOUNDARAPANDIAN, Thiru P.—** | |
| Budget, 1975–76, Voting—*cont.* | |
| Milk Supply Schemes | |
| Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 | 41, 46–47 |
| Khadi ... ... ... ... ... ... | |
| Check dams, Gudalur area ... ... ... ... | 520–531 |
| Correction to answers by Ministers (point of order) | 374–375 |
| Handlooms, stock accumulation and hardships to weavers (C.A.) ... ... ... ... | 33, 38, 39 |
| Mohanur and Kattuputhur Canals, linking ... | 245 |
| Police force, Madras City ... ... ... ... | 2–4 |
| Strike in Pugalur Sugar Mills and consequent loss to agriculturists (C.A.) ... ... ... ... | 375–376 |
| **SPORTS—** | |
| Indian Hockey Team, felicitations ... ... | 554–555 |
| **SUBBIAH, Thiru A. K.—** | |
| Budget, 1975–76, Voting : | |
| Education ... ... ... ... | 580–583 |
| Land Revenue Department ... ... ... | |
| Stamps—Administration ... ... ... | |
| Compensation to Zamindars ... ... ... | 271–275 |
| District Administration ... ... ... | |
| **SUBBIAH, Thiru K. V.—** | |
| Budget, 1975–76, Voting : | |
| Land Revenue Department ... ... ... | |
| Stamps—Administration ... ... .. | 214–217 |
| Compensation to Zamindars ... ... ... | |
| District Administration ... ... ... | |

S—*cont.*

PAGES

SUBRAMANIAM, THIRU A.—
Budget, 1975–76, Voting :
Land Revenue Department ... ... ... 180,
Stamps—Administration ... ... 181, 184,
Compensation to Zamindars ... ... 187–188
District Administration ... ... 253–254
Handloom Weavers' Wages, enhancement ... 556
House Surgeons' strike (A.M.) ... ... ...

SUBRAMANIAM, THIRU K. M.—
Budget, 1975–76, Voting :
Education ... ... ... ... ... 435–438
Milk Supply Schemes ... ... ...
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 ... ... ... 63–66
Khadi ... ... ... ... ...

SUPPU, THIRU K.—
Bus permits, Salem and Coimbatore districts ... 16–17
Rural Employment Scheme, Kariyapatti ... 134
Veerapandia Kattabomman Weavers' Co-operative Society, starting at Chatrapatti ... ... ... 8

SURENDRAN, THIRU M.—
Budget 1975–76, Voting :
Land Revenue Department ... ... 167, 300,
Stamps—Administration ... ... 301, 302,
Compensation to Zamindars ... ... 303, 305,
District Administration ... ... 311, 312–314, 826

Milk Supply schemes
Administration of Hindu Religious and Charitable Endowments Act, 1959 41
Khadi ... ... ... ... ...



S—*cont.*

PAGES

SURENDRAN, THIRU M.—
Central aid for drought, Chief Minister's statement and consequent hardships (A.M.) ... ... 267
New tank, Pilparuthi village ... ... ... 531–532

SWAMIDHAS, THIRU A.—
Budget, 1975–76, Voting :
Education ... ... ... ... 389–394

T

TANGAMANI, THIRU K. T. K.—
Budget, 1975–76, Voting :
Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ... 183
District Administration ... ... ...
Fire accident at Gudiatham relief measures ... 532–534
Maistries in Agriculture Department, pay revision 132–133
Privilege matter, Speaker's consent ... ... 138–144, 150–153, 157–159

TANKS—
New tank near Kalampatti ... ... ... ... 116–117
New tank, Pilparuthi village ... ... ... 531–532
Ponds, maintenance ... ... ... ... 127–129
Theppampatti Kanmoi, formation ... ... ... 113

TEACHERS—
Craft Instructors for Higher Elementary schools 238
Graduate Teachers, admission in B.T. Course ... 237

TEXTILES—
Silk Rearing Farms, Tirunelveli district ... 251

T—*cont*.

PAGES

THIAGARAJAN, THIRU E. S.—

Budget, 1975-76, Voting :

Education ... ... ... ... 433-435

Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ... 292-294, 329
District Administration ... ... ... ...

TOWN PLANNING—

Adayar river, beautification ... ... ... 113-116

TRANSPORT AND COMMUNICATIONS—

Boat Service, Thengapattinam to Kollengode ... 244
Bus permits, Salem and Coimbatore districts ... 16-17
Ooty-Madras express bus service ... ... 17-20

V

VADIVEL, THIRU S.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department ... ... .. 166, 167, 168,
Stamps—Administration ... ... ... 174-179
Compensation to Zamindars ... ... ..
District Administration ... ... ..

VEERASAMI, THIRU N.—

Budget 1975-76, Voting :

Education ... ... ... ... ... 590-597



V—*cont*.

PAGES

VEERASAMI, THIRU N.—*cont*.

Budget, 1975-76, Voting—*cont*.

Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ...
Compensation to Zamindars ... ... ... 18, 186
District Administration ... ... ...

Chief Minister's reply to an Adjournment Motion, advertisement by Government (Point of Order). 23

Publication of expunged portions (Point of Order). 373-374

VENKATASWAMY, THIRU B.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department ... ... ... 166, 167
Stamps—Administration ... ... .. 166-168
Compensation to Zamindars ... ... ... 267-269
District Administration ... ... ...

Milk Supply Schemes ... ... ... ...

Administration of Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 ...

Khadi ... ... ... ... ... 41, 48, 69-71

VEZHAVENDAN, THIRU K.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department ... ... ...
Stamps—Administration ... ... ..
Compensation to Zamindars ... ... .. 176-190
District Administration ... ... ...

## W


PAGES

WAHAB, THIRU K. A.—

Budget, 1975-76, Voting :

Land Revenue Department ... ... ...

Stamps—Administration ... ... ...

Compensation to Zamindars ... ... ...

District Administration ... ... ... 166, 167

168

166, 167

169

209–213

535–537

Crmie branch Sub-Inspectors, recruitment ...

WATER-SUPPLY— 552

Periakottai ... ... ... ... 8–10

Puthukadai ... ... ... ...

WEAVERS— 253–254

Wages enhancement ... ... ... ... ...

YARN— 5–8

Distribution ... ... ... ... 4–5

Stock, particulars ... ... ... ...



Y2 11, 31 N75

31 N75 . 6632

61697